1958

Madras Legislative Assembly debates Vol X No 1 -- 6 within March 1958.

5 sets for binding.

14, c
1

V2ii.31'N58
N59 40;2
61233

V211, 31 NS?
M59.1052



Provided that the prohibition in this sub-clause shall not apply in respect of any such director for a temporary period not exceeding three months or such further period not exceeding nine months as the Reserve Bank may allow; or ";

(b) for sub-section (3), the following sub-sections shall be substituted, namely :—

"(3) Where a person holding the office of a chairman or director or manager or chief executive officer (by whatever name called) of a banking company is, or has been found by any tribunal or other authority (other than a criminal court) to have contravened the provision of any law and the Reserve Bank is satisfied that the contravention is of such a nature that the association of such person with the banking company is or will be detrimental to the interests of the banking company or its depositors or otherwise undesirable, the Reserve Bank may make an order that that person shall cease to hold the office with effect from such date as may be specified therein and thereupon, that office shall, with effect from the said date, become vacant.

(4) Any order made under sub-section (3) in respect of any person may also provide that he shall not, without the previous permission of the Reserve Bank in writing, in any way, directly or indirectly, be concerned with, or take part in the management of, the banking company or any other banking company for such period not exceeding five years as may be specified in the order.

(5) No order under sub-section (3) shall be made in respect of any person unless he has been given an opportunity of making a representation to the Reserve Bank against the proposed order:

Provided that it shall not be necessary to give any such opportunity if, in the opinion of the Reserve Bank, any delay would be detrimental to the interests of the banking company or its depositors.

(6) Any decision or order of the Reserve Bank made under this section shall be final for all purposes.".

61233

7. *Amendment of section* 11.—In section 11 of the principal Act,—

(i) in sub-section (1), for the words "unless it has paid-up capital and reserves of such aggregate value as is hereinafter required by this section", the words "unless it complies with such of the requirements of this section as are applicable to it" shall be substituted;

(ii) for sub-section (2), the following sub-section shall be substituted, namely :—

"(2) In the case of a banking company incorporated outside India—

(a) the aggregate value of its paid-up capital and reserves shall not be less than fifteen lakhs of rupees and if

779

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

**THIRD SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.**

10th to 15th March 1958.

**Volume X (Nos. 1 to 6).**

## TABLE OF CONTENTS.

### *Monday, the 10th March 1958.*


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 1–15 |
| II Announcements by the Hon. the Speaker— | |
| (1) Message from the Governor .. .. .. .. .. | 15–16 |
| (2) Message from the President .. .. .. .. .. .. | 16 |
| III Adjournment Motion *re* dispute between Electricity workers and the Electricity Board .. .. .. .. .. .. | 16 |
| IV Government Bills— | |
| (1) The Madras Entertainments Tax (Amendment) Bill, 1958 .. .. .. .. .. .. .. .. .. | 16 |
| (2) The Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 .. | 16–17 |
| V Government Motion *re* discussion on the memorandum submitted by the Government of Madras on the Report of the Official Language Commission .. .. .. .. .. .. | 17–76 |
| VI Papers laid on the table of the House .. .. .. .. .. | 76 |


### *Tuesday, the 11th March 1958.*


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 77–92 |
| II Announcements by the Hon. the Speaker— | |
| (1) Message from the Governor .. .. .. .. .. .. | 92 |
| (2) Message from the Legislative Council .. .. .. .. | 92 |
| III Calling attention to a matter of urgent public importance under rule 40 of the Assembly Rules *re* harassment caused to ryots in the collection of revenue arrears in erstwhile Ramanathapuram of Sivaganga Zamindari areas .. .. .. | 93–95 |
| IV Adjournment Motion *re* death of two Dravida Kazhagam members in Central Jail, Tiruchirappalli .. .. .. | 95–96 |

## *Tuesday, the 11th March 1958*—cont.


| | PAGES |
|---|---|
| V Government Bill—The Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) .. .. .. .. .. | 153-170 |
| VI Discussion on the memorandum submitted by the Government of Madras on the Report of the Official Language Commission —*cont.* .. .. .. .. .. | 97-150 |
| VII Papers laid on the table of the House .. .. .. .. | 150 |


## *Wednesday, the 12th March 1958.*


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 171-192 |
| II Privilege Motion *re* incorrect publication of the speech of a Member of the House .. .. .. .. .. .. | 192-196 |
| III Government Bills— | |
| (1) The Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 .. .. .. .. .. .. | 196 |
| (2) The Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958) .. .. .. .. .. | 197-238 |
| (3) The Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958) .. .. .. .. .. | 238-241 |
| (4) The Madras Co-operative Societies (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 4 of 1958) .. .. .. .. | 255-256 |
| IV Papers laid on the table of the House .. .. .. .. | 255-256 |


## *Thursday, the 13th March 1958.*


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 267-289 |
| II Announcement by the Hon. the Speaker *re* message from the Governor .. .. .. .. .. .. .. | 289 |
| III Government Bills— | |
| (1) The Madras Children (Amendment) Bill, 1958 .. .. | 289 |
| (2) The Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) .. .. .. .. .. | 290-343 |


## *Friday, the 14th March 1958.*


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 345-364 |
| II Announcement by the Hon. the Speaker *re* message from the Governor .. .. .. .. .. .. .. | 364-367 |
| III Voting on Demands for Advance Grants for the year 1958-59. | 365-367 |
| IV Government Bills— | |
| (1) The Madras Appropriation (Vote on Account) Bill, 1958 .. .. .. .. .. .. .. | 367 |
| (2) The Indian Stamps (Madras Amendment) Bill, 1958 .. | 367 |
| (3) The Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) .. .. .. .. .. | 411-428 |
| (4) The Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) .. .. | 411-428 |
| V Motion *re* change in the order of business .. .. .. | 367-368 |
| VI Paper laid on the table of the House .. .. .. .. | 428 |




## *Saturday, the 15th March 1958.*


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 431-454 |
| II Government Bills— | |
| (1) The Madras Appropriation (Vote on Account) Bill, 1958 (L.A. Bill No. 11 of 1958) .. .. .. .. .. | 455-456 |
| (2) The Madras Entertainments Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 7 of 1958) .. .. .. .. .. | 457-502 |
| (3) The Madras General Sales Tax (Emergency Provisions) Bill, 1958 (L.A. Bill No. 5 of 1958) .. .. .. | 502-506 |
| III Motion *re* change in the order of business .. .. .. | 456 |
| IV Papers laid on the table of the House .. .. .. .. | 506 |
| V Index .. .. .. .. .. .. .. .. | 509-535 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, the 10th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Arrest under section* 144 (2), *Criminal Procedure Code*

* 258 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the number of persons arrested in connection with the issue of an *ex parte* order under section 144 (2), Criminal Procedure Code, on 9th October 1957 by the Taluk Magistrate, Periakulam, Madurai district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Thirty-nine, Sir. But the order of the Taluk Magistrate was not passed *ex parte.*

SRI V. K. KOTHANDARAMAN : *நீண்ட நாட்களாக விவசாயம் செய்துகொண்டிருந்த குத்தகைதாரர்களை வெளியேற்றிவிட்டு புதிய ஆட்களை நியமித்ததின் விளைவாக இதுபோன்ற நிலை ஏற்பட்டது. நிலத்தை உழுதுகொண்டிருந்தவர்கள் குத்தகைதாரர்களா இல்லையா என்பதை விசாரித்துத் தெரிந்துகொள்ளாமல், இதுபோல் ஒரு தலைப்பட்சமாக "எக்ஸ் பார்ட்டி" உத்தரவிட்டு, நெற்பயிரும், பருத்திப் பயிரும் போலீஸ் உதவிகொண்டு அழிக்கப்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா? தெரிந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *நான் அளித்த பதிலிலேயே கூறினேன். ஒரு தலைப்பட்சமாக இந்தத் தடை உத்தரவு விதிக்கப்படவில்லை. இரு சாராரையும் கேட்டுத்தான் பிறகு தீர்ப்பு அளிக்கப்பட்டது என்ற வகையிலே சொன்னேன். முப்பத்தொன்பது பேர்கள் கைது செய்யப்பட்டவர்கள் தடை உத்தரவை மீறியதற்காக மட்டும் அல்ல.* **Rioting, criminal trespass, wrongful restraint** *இம்மாதிரி குற்றங்களுக்காக, இந்தியன் பீனல் கோட் 147, 447, 341 பிரிவுகளின்படி அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டு, அந்த 39 பேர்கள் மீதும் போடப்பட்ட கேஸ் விசாரணையில் இருக்கின்றன. ஆகையால், அதைப்பற்றி மேலும் விசாரிப்பது* ***sub judice*** *என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.*

MR. SPEAKER : If the matter is *sub judice*, I cannot allow any further supplementaries. I pass on to the next question.

### *Karnataka Gurukulam, Tiruvonmiyur*

* 259 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received recently any ...tition from the Tiruvonmiyur Karanataka Gurukulam requesting ...gnition and financial aid; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

### *House-sites for Harijans*

*260 Q.—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Works be pleased to state whether any house-sites have been assigned to the Harijans of Anumanthai village, Merkanam firka, Tindivanam taluk, South Arcot district, in 1957?

THE HON. SRI P. KAKKAN : No, Sir. The award was passed on 6th December 1957 and the Tahsildar has been directed to take possession of the lands. Further action to assign the sites will be taken up as soon as the layout sketch for the lands is got approved by the Director of Town-Planning, Madras.

*261 Q.—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Works be pleased to state the action taken on the petition, dated 1st April 1957, from the Harijans of Mudaliarpet Harijan Colony in Kanthadu village, Merkanam firka, Tindivanam taluk in South Arcot district, regarding assignment of house-sites to them?

THE HON. SRI P. KAKKAN : No such petition was received.

### *Courts*

*262 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the reasons for the delay in the disposal of cases in courts and the steps taken to reduce it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member means, whether there is avoidable delay, the answer is 'Yes' in some cases, and 'No' in a large number of cases, so far as civil side is concerned. As regards criminal cases, there has been no avoidable delay. It is impossible to give reasons for the delay as the nature and circumstances of each case are bound to vary with every court. The High Court has however taken every possible step to ensure fair and quicker disposal of cases.

SRI M. D. THIAGARAJA PILLAI : சிவில் கேஸ்களைப் பொறுத்த வரையில் தினமொன்றுக்கு 15 முதல் 20 கேஸ்கள் வரையில் போட்டு, ஒரு கேஸ் எடுத்து முடித்தவுடன், மாலையில்தான் மற்றவைகளை ஒத்திப்போடுகிறார்கள். அதனால் கட்சிக்காரர்களுக்குப் பெரிய கஷ்டமும் சிரமும் ஏற்படுவதால், எடுத்துக்கொள்ள வேண்டிய கேஸ்களை மட்டும் ஒரு தினத்திற்கு என்று குறிப்பிடுவதோடு, ஒத்திப்போடும் கேஸ்களை காலையிலேயே ஒத்திப் போடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு கூடிய வரையில் கவனம் செலுத்திக்கொண்டு தான் வருகிறார்கள். சில சமயங்களில் எதிர்பாராத விதமாக சில கேஸ்கள் சீக்கிரம் முடியும். சில



கேஸ்கள் எதிர்பாராதவிதமாக தாமதமும் ஆகும். அந்த வகையில் ஒரு தினத்தில் போடப்பட்ட இதர கேஸ்கள் விஷயத்தில் எதிர்பாராத விதமாக தாமதமும் ஏற்படலாம்.

SRI V. S. MANICKASUNDARAM : Is it likely that the quality of disposal will suffer in the name of increasing the quantity of disposal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member need not have any such fear.

SRI M. P. SUBRAMANIAM : சென்னைக்கு வெளியே உள்ள நீதி மன்றங்களைப் பொறுத்தவரையில், "மொபைல் கோர்ட்டு" என்ற வகையில், ஒவ்வொரு இடத்திற்கும் சென்று ஆங்காங்கே விசாரணை செய்யும் யோசனை அரசாங்கத்தினிடம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி ஒன்றும் இல்லை.

SRI A. VEDARATHNAM : எத்தனை ஆண்டுகளுக்கு முந்திய வழக்குகள் இன்னும் முடிவு பெறாமல் இருக்கின்றன என்பதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹைகோர்ட் கேஸ்களைப் பொறுத்தமட்டில், முதல் அப்பீல்கள் 1953-54-ம் வருஷத்தியவை இப்பொழுது நடக்கின்றன. அதற்கு முந்தியவைகளெல்லாம் முடிந்து விட்டன. குறிப்பிட்ட சில கேஸ்கள் விஷயத்தில் இரண்டு மூன்று ஆண்டுகளாக காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். சாதாரணமாக கேஸ்கள் தீர்க்கப்படுவதிலே காலதாமதத்திற்குக் காரணம் :

(1) Cases of a complicated nature or which involved matters touching the constitutional aspect entail delay in the disposal;

(2) trial of suits is often stayed under section 10, Civil Procedure Code, or by the Appellate Courts; and

(3) the volume of legislation including the passing of Acts for the stay of proceedings is also partly responsible.

இந்த வகையிலே பல காரணங்களையொட்டி சில கேஸ்களில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI : பல கோர்ட்டுகளிலே அதிகப்படியான கேஸ்கள் இருப்பதால், அவைகளுக்கென்று ஸ்பெஷலாக மாஜிஸ்டிரேட் போட்டு விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கிரிமினல் கேஸ்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். கிரிமினல் கேஸ்கள் விஷயத்தில் அம்மாதிரியான நிலைமை இல்லை. அப்படி ஏதாவது விசேஷ சம்பவம் ஏற்பட்டு, ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுகள் போடுவது அவசியம் என்றால், அதுவும் கவனிக்கப்படுகிறது.

சிவில் கேஸ்களைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது ஹைகோர்ட் கவனித்து அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்கிறார்கள். அந்தச் சிபார்சுகள் அனேகமாக அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடிஷனல் கோர்ட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

SRI M. KALYANASUNDARAM : 1953-54-ம் வருஷத்திய முதல் அப்பீல்கள் கூட இப்பொழுதுதான் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன என்பது அவ்வளவு திருப்திகரமான நிலைமையாக கருதப்பட முடியாது ஆகையால், இப்பொழுது இருக்கும் நீதிபதிகள் போதுமான அளவு இருக்கிறார்களா அல்லது அதிகப்படியானவர்கள் நியமிக்கப்படுவதற்கு அவசியம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1953-54-ம் வருஷத்திய கேஸ்கள் முடிந்து அதற்குப் பின்னால் இருக்கும் கேஸ்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது என்பது திருப்திகரமான அளவுதான். ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களால் சில கேஸ்களில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஹைகோர்ட் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதா என்ற விஷயமும் அவ்வப்போது கவனிக்கப்பட்டு, வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI M. C. MUTHUKUMARASWAMY : நீதி மன்றங்களில் கிரிமினல் கேஸ்களை எவ்வளவு காலம்வரைதான் நீடிக்கலாம் என்ற வரையறை குறிப்பிடப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி வரம்பு ஒன்றும் இல்லை. ஆனால் நான் முன்பே சொன்னேன், கிரிமினல் கேஸ்களைப் பொறுத்தமட்டில், தாமதமே கிடையாது என்று.

SRI M. P. SUBRAMANIAM : சென்னை உயர் நீதி மன்றத்தில் இரண்டு ஜட்ஜுகள் நியமிக்கப்பட வேண்டுமென்று செய்தி வந்தது. ஏற்கெனவே நியமிக்கப்பட்டவர்களை அது குறிப்பிடுகிறதா ? அல்லது இனி நியமிக்கப்பட போகிறவர்களைக் குறிப்பிடுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நியமிக்கப்பட்டதைத்தான் அது குறிப்பிடுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : வழக்குகள் தாலுகா ரீதியில் ஆரம்பமாகி, ஜில்லாக் கோர்ட்டுகளுக்குச் சென்று, அங்கிருந்து சென்னை உயர் நீதி மன்றத்திற்கும், அதிலிருந்து டில்லி சுப்ரீம் கோர்ட்டு வரையில் அப்பீல் போகும் நிலைமை எந்த விதத்திலேயாவது மாறி, கீழ் கோர்ட்டிலேயே நிரந்தரமான முடிவு காண வகை செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்பீல் செய்ய வேண்டிய அவசியம் இருந்தால், அதைத் தடுப்பது சரியல்ல. இருந்தாலும், கனம் அங்கத்தினர் குறிப்பிடும் யோசனை இந்தச் சட்ட மன்றத்தின் யோசனையாக இருந்தால் நிலைமை மாற்றப்படலாம்.

SRI M. KALYANASUNDARAM : பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது உள்ள அதிகாரங்களுக்கு மேல் அதிக அதிகாரங்களைப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்குக் கொடுப்பதாக இப்பொழுது யோசனை ஒன்றும் இல்லை.

*White Paper on Education*

*263 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House a statement containing the decisions taken by the Government of the various recommendations of the Legislature Committee made in its report on the White Paper on Education as adopted by the House during the last session; and to state when they will be implemented?



THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have accepted the recommendations of the Legislature Committee and have made arrangements for their implementation from the next school year. The change-over to the new pattern will commence in the first three standards in the next year as per revised syllabus already published.

SRI N. K. PALANISAMI : வெள்ளை அறிக்கையின் மீது விவாதம் நடந்த காலத்தில், நிதி அமைச்சர் அவர்கள் ' அதில் இருக்கும் குற்றங் குறைகளையெல்லாம் நாங்கள் ஆலோசித்து மறுபடியும் இந்தச் சபை முன் வரும், அப்பொழுது பார்த்துக்சொள்ளலாம் ' என்று சொன்னார்கள். ஆனால், சபைக்கு இன்னும் வராமலேயே சிபார்சுகள் உடனடியாக அமுலாக்கப்படுவதற்கு ஏன் உத்தரவு செய்யப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. சட்டசபைக் கமிட்டியின் அறிக்கை இங்கே விவாதிக்கப்பட்டு, அதை சபை ஒப்புக்கொண்டதற்குப் பிறகுதான் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

*Burial grounds*

*264 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state the action taken so far to provide the Harijans of Karnavoor village, Tindivanam firka, Nadukkupam village, Akshikadu village and Thirukkanoor village of Merkanam firka, Devanandal village of Kiliyannur firka of Tindivanam taluk, South Arcot district, with pathways to burial grounds?

THE HON. SRI P. KAKKAN : Administrative sanction has been accorded for acquisition of land to an extent of 0·66 acre in Akshikadu village for provision of pathway from the Harijan colony to the burial ground and the Collector is taking up proceedings for acquiring the site.

In respect of other Harijan colonies the question of acquisition of land required for providing pathway is under the consideration of the Collector of South Arcot.

SRI S. NAGARAJA MONIGAR : தற்போதைய நிலையில் ஹரிஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும் தனித்தனி சுடுகாடுகள் இல்லாமல் பொது சுடுகாடு ஏற்படுத்தக்கூடிய நிலைமையில் நாம் இருக்கிறோமா ? அப்படி முன்னேற முடியுமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது இருக்கிற விதிப்படி ஒருவர் சுடுகாட்டில் இன்னொருவர் புதைக்கக் கூடாது என்று கிடையாது. ஆகையால் அப்படிச் செய்யலாம்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : உழைத்து உருக்குலைந்து போகும் ஆதி-திராவிட மக்களுக்கு சுடுகாடு இல்லை, சுடுகாட்டுக்குப் போகும் பாதை இல்லை என்று சொல்வது நமது அரசியலுக்கு கேவலத்தை உண்டு பண்ணாதா? இதை உடனடியாக நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை ஒரு சர்வே செய்து எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதை நான் நன்றாக உணர்கிறேன். அதனால்தான் எங்கே

[10th March 1958

உடனடியாக சுடுகாடோ, சுடுகாட்டுக்குப் போகக் கூடிய பாதை தேவையோ அங்கு எல்லாம் செய்து கொடுக்க ஏற்பாடுசெய்யப்பட்டு வருகிறது.

### *Pathways to Harijan Colonies*

* 265 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state the action taken so far to provide pathways to the Harijans of the following colonies in Tindivanam taluk, South Arcot district—

(1) Kanthadu village;

(2) Pudupakkam village;

(3) Ozhundiapet village;

(4) Vannipair village;

(5) Pangulatur village; and

(6) Kilpasar village?

The Hon. Sri P. KAKKAN : The information is furnished below for each village in seriatim—

**1.** ***Kanthadu village*** : The draft notification under section 4 (1) of the Land Acquisition Act and draft declaration under section 6 of the Land Acquisition Act relating to the acquisition of lands for the provision of pathway from old and new Harijan quarters to Tindivanam-Merkanam road have been published in the *Fort St. George Gazette.*

**2.** ***Pudupakkam*** : The land acquisition proposals for provision of pathway to connect the Harijan colony with caste-Hindu quarters are under the consideration of Government.

3. *Ozhundiapet* : The award has been passed and the Collector is taking steps to take possession of the lands acquired for provision of pathway to Harijan Colony.

**4.** ***Vannipair*** : Proposals are pending with the Collector and he has promised to speed up further action.

**5.** ***Pangulatur*** : The Collector has called for proposals from his subordinates and has promised to take further action on receipt of proposals.

6. *Kilpasar* : The Collector has called for proposals from his subordinates and has promised to take futher action on receipt of proposals.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : முக்கியமாக ஹரிஜனங்களுடைய காலனி இருக்கும் இடத்தில் புறம்போக்கு நிலங்கள் உள்ள இடங்கள் இருக்கின்றன. புறம்போக்கு வழியாகப் போகவும் சர்க்கார் அனுமதித்திருப்பதாகவும் தெரியவில்லை. உதாரணமாக எங்கள் பிராந்தியத்தில் இது பற்றி மிகவும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது மற்ற இந்துக்களும் துன்பப்படுகிறார்கள். போலீஸ்காரர்களும் கேஸ் போட்டு கஷ்டப்படுத்துகிறார்கள். ஆகவே உடனடியாக புறம்போக்கு நிலங்கள் இருந்தால் இதிலாவது அவர்கள் போவதற்குப் பாட்டை அனுமதித்து கொடுக்க அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்திரவு போடுவார்களா?



10th March 1958]

The Hon. Sri P. KAKKAN : புறம் போக்கு நிலங்கள் இருந்தால் அங்கே இலகுவாகப் பாட்டை போட்டுக் கொடுக்கப்படும். அதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. கலெக்டர்களுக்கு ஏற்கெனவே நாங்கள் எழுதியிருக்கிறோம்.

### *Mobile Veterinary Unit*

* 266 *Q.*—Sri M. P. SUBRAMANIAM (on behalf of Sri A. Govindasamy) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether the Government have any proposal to set up a Mobile Veterinary Unit in Valavanur rfika; and

(*b*) if so, when and where it is proposed to be set up?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri M. P. SUBRAMANIAM : கிராமப்புறங்களில் விவசாயிகள் கால்நடைகளுக்கு நோய் உண்டாகிற நேரத்தில் பத்து மைல், பதினைந்து மைல் தள்ளி நகரங்களில் உள்ள வைத்தியசாலைக்கு அவைகளை ஓட்டிப் போவது மிகவும் கஷ்டமாக இருப்பதனால் ஆங்காங்கே விவசாயிகளுக்கு அதிகப் பயன் தரும் வகையில் மொபைல் யூனிட்டை ஏற்படுத்துவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கூடிய வரையில் எங்கெங்கே கால்நடைக்கு நோய் அதிகமாக உண்டாகின்றதோ அங்கெல்லாம் இந்த வசதியை அரசாங்கம் செய்து வருகிறது. குறிப்பாக இப்போது நான்கு யூனிட்டுகள், திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, செங்கற்பட்டு முதலிய ஜில்லாக்களில் அமைத்திருக்கிறோம். இன்னும் மூன்று யூனிட்டுகள் இந்த ஆண்டில் அமைக்கப்படும். ஒன்று கன்யாகுமரியில் இருக்கும். இந்தக் கேள்வி வளவனூரைப் பற்றியது. அங்கிருந்து 6 மைல் தூரத்திலுள்ள விழுப்புரத்தில் கால்நடை ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆகவே, அங்கே அவசியம் இல்லை என்று சொன்னேன்.

Sri A. VEDARATHNAM : குறைந்த பட்சம் கால்நடை யூனிட்டுகளை ஜில்லாவிற்கு ஒன்றுவது ஏற்படுத்த அரசாங்கத்தார் முயற்சிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் கால்நடை நோய்கள் அதிகமாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது.

Sri K. G. PALANISWAMY GOUNDER : கால்நடைகளில் காளைகளுக்கு காஸ்ட்ரேட் பண்ணவேண்டுமென்றல் டாக்டர்கள் பணம் கேட்பது இல்லை. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுல் பணம் கேட்கிறார்கள். இதைப் பற்றிச் சர்க்கார் கவனிக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் நான் கவனிக்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal to extend the mobile units to all districts and if so, how many units per district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have just stated that four units have been set up in four districts and that there are proposals for three more such units in three districts. Wherever cattle disease is prevelant, such units will be established. Of

[10th March 1958

the three districts, there is a proposal to open one in the Kanyakumari district. In regard to the other two districts, I don't have information.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that veterinary hospitals were closed for want of doctors?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is, of course, very serious shortage of veterinary personnel, Sir.

SRI R. SWAMINATHA MERKONDAR : நீர் வளம் இல்லாத வறண்ட பிரதேசங்களில் வறட்சி காரணமாக கால்நடைகளுக்கு வெக்கை நோய் அதிகமாகப் பரவி வருகிறது. ஆகவே வறண்ட பிரதேசங்களில் இந்த யூனிட்டுகளை ஏற்படுத்த முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எங்கெங்கே வியாதிகள் வருகின்றனவோ அங்கெல்லாம் ஏற்படுத்த கூடுமானவரையில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

SRI T. T. DANIEL : Sir, may I know when the unit in the Kanyakumari district will be started?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just stated that there is a proposal for Kanyakumari district and it is for the year 1958-59.

SRI A. VEDARATHNAM : இன்னும் எத்தனை கால்நடை ஆஸ்பத்திரிகள் டாக்டர்கள் இல்லாமல் காலியாக இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன்.

### *Disciplinary action against teachers*

* 267 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. Viswanathan) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of cases where no charge-sheet has been issued to School Assistants, Headmasters and Deputy Inspectors of Schools under suspension even two weeks after the issue of orders of suspension; and

(*b*) the reasons for the delay?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) In six cases, officers in the category of Deputy Inspectors, School Assistants, Headmasters and Headmistresses were not served with charge-sheets by the Director of Public Instruction soon after their suspension.

(*b*) In all these cases, the officers were suspended on the charge that there was unaccountable shortage in the moneys entrusted to them. Against four of the six officers, charges could be framed only after the police investigation revealed that there was no ground for criminal proceedings. In one case, the charge memo. could not be despatched to the Officer in time, as his correct address was not known. In the sixth case, the officer did not reply to a departmental reference promptly and hence there was delay.



10th March 1958]

SRI K. VINAYAKAM : Sir, there is a slight printer's devil in the question. Instead of " two weeks ", it must be " two years ". May I know, Sir, whether the department would take the inordinate time of two years to frame charges or to locate the persons concerned —whether they are absconding or missing? Is it due to the want of necessary action from the Department or that the Police Department is lagging in filing these charge-sheets?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I am aware that in some of the serious cases the persons concerned could not be apprehended. Particularly, educated persons, when they abscond, do not leave any trace of their address and that is the real difficulty in apprehending these persons. But apart from that, the Government are aware that there is some delay in filing charge-sheets and in the disposal of the disciplinary cases. Steps have been taken to correct this.

SRI N. K. PALANISAMI : டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களை அபேலட் ட்ரிப்யூனல் ஆக்கப்போட்டிருப்பதால் தீர்ப்பு ஒரு தலைப்பட்சமாக செய்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. இதை மாற்றி டி.பி.ஐ. அவர்களையே போடுவதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் ஒரு தலைப்பட்சமாக ஏன் தீர்ப்புக் கொடுக்கவேண்டுமென்று தோன்றவில்லை. அவர்களும் பொறுப்புள்ள அதிகாரிகள் தாம். எல்லாவற்றையும் டி.பி.ஐ. அவர்களிடமே விடுவது என்றால் முடியாத காரியம். அத்தனை கேஸ்கள் இருக்கின்றன.

SRI M. KALYANASUNDARAM : ஒரு அதிகாரியின் மேல் சார்ஜ் ஷீட் செய்ய அவர்களின் விலாசம் தெரியவில்லை என்று கூறினார்கள். ஸஸ்பென்ஷன் காலத்தில்கூட விலாசத்தை தெரிவித்துத்தான் ஒரு இடத்தில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு போக வேண்டுமென்று விதி இருந்தும் அந்த விலாசத்திற்கு ஏன் இவர்கள் தபாலை அனுப்பியிருக்கக் கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விலாசத்திற்கு அனுப்பி திரும்பி வந்துவிட்டது, ஆள் இல்லையென்று. ஆகவே மறுபடியும் அவர்கள் விலாசத்தைக் கண்டு பிடித்து அனுப்ப வேண்டியிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, arising out of the answer given by the Hon. the Minister for Education, may I know the steps that are now taken to correct these delays?

THE HON. SRI C. SUBRAMANIAM : A Special Deputy Director has been posted with the necessary staff, and I have also fixed a time-limit within which all these cases should be disposed of.

SRI K. VINAYAKAM : Sir, is it not the practice that officers who were under suspension are paid some subsistence allowance, say, 25 per cent of their salary? If the concerned officer had been under suspension he must have been drawing his subsistence allowance. Is it not possible to trace his address at least when he comes up for drawing the subsistence allowance?

THE HON. SRI C. SUBRAMANIAM : They would rather prefer to run away than come to take their salary and be subject to the punishments which may be inflicted on them. But I do not know whether in this case the individual was drawing his subsistence allowance.

[10th March 1958

SRI M. K. SOMASUNDARAM : கிரிமினல் கேஸ் குற்றவாளிகளை எங்கிருந்தாலும் கண்டுபிடிக்க போலீஸார் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறார்களே. அதுமாதிரி இந்த ஸஸ்பென்ஷனில் இருக்கும் ஆட்களையும் கண்டுபிடிக்க என் போலீஸார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் ஆங்கிலத்தில் சொன்னேன். சில பேர்களை கண்டுபிடிப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுத்தும் முடியாத நிலையில் இருப்பதை நான் அறிகிறேன்.

*Irrigation tanks*

* 268 *Q.*—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Public Works be pleased to state the action taken so far for the formation of irrigation tanks for the villages of Kanthadu and Kottikuppam in Tindivanam taluk, South Arcot district?

THE HON. SRI P. KAKKAN : Preliminary proposals for the formation of tanks in Kanthadu and Kottikuppam villages in Tindivanam taluk, South Arcot district, are under scrutiny by the Executive Engineer, South Arcot Division.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I know this area. These are all drought-affected places. I understand that the vilagers have been making representations for a very long time. May I know when exactly this question will be finalised and action taken?

THE HON. SRI P. KAKKAN : I cannot say that now, Sir.

*Study tour*

* 269 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government permitted the Secretary of Food and Agriculture Department to visit foreign countries for study;

(*b*) how long he stayed abroad;

(*c*) the countries visited by him; and

(*d*) the expenditure incurred by the Government in respect of his study tour?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Officer stayed abroad for two months and sixteen days from 26th September to 11th December 1957.

(*c*) (1) Italy,

(2) United Kingdom,

(3) United States of America,

(4) Japan,

(5) Phillipines, and

(6) Peoples' Republic of China.

(*d*) Nil



10th March 1958]

SRI M. KALYANASUNDARAM : அவர் போய்விட்டு வந்ததின் நோக்கம் என்ன? அவர் சர்க்காருக்கு ஏதாவது அறிக்கை கொடுத்திருக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது நம் ராஜ்யத்தில் விவசாய படிப்பை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று யோசனை இருந்துவருகிறது. அதுபற்றி கவனிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்தக் காரியதரிசியும் ஒரு அங்கத்தினர். எக்ஸ்பார்ட் பார்க்கர் அவர்கள், சீப் ஆப் தி ஆக்ரிகல்சுரல் டெக்னிகல் கோவாப்பரேட்டிவ் மிஷன், அவரும் இந்தக் கமிட்டியில் அங்கத்தினராய் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. இந்தப் பார்க்கர் அவர்களே குறிப்பிட்டார்கள். இதை நாம் முடிவு செய்வதற்கு முன்பு அமெரிக்காவிற்குச் சென்று விவசாயக் கல்லூரி பற்றி தெரிந்துகொண்டு வந்தால் நலம் என்று சொன்னார்கள். அதற்கு, ராக்பெல்லர் பௌண்டேஷன் உதவியும் கிடைத்தது. இந்த சர்க்காருக்கு செலவு ஒன்றும் இல்லை. ஆகவே அவர்கள் சென்றார்கள். அப்படி போய்வரும்படி, சீன தேசத்தின் அமைச்சர், இங்கு நம் நாட்டிற்கு வந்த அமைச்சர், பீப்பிள்ஸ் ரிப்பப்ளிக் ஆப் சைனா அமைச்சர் அவர்களும் அழைத்தார்கள். அவர்கள் செலவில்தான் போனோம். இவைகளைப் பார்த்துவிட்டு வந்தவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்கிறது.

*Law College hostel*

* 270 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the students of the Law College in December 1957 for the construction of hostel for them in the City of Madras; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes Sir.

(*b*) The President of the Madras Law College Students' Representative Council, who submitted the memorandum signed by certain students of the Law College, has been informed that the question of locating the hostel for the students of the College in the building which is now used as the hostel for the men students of the Madras Medical College will be considered as soon as the men students of the Medical College vacate the premises and occupy the new hostel now under construction for them.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் எப்பொழுது நடவடிக்கை எடுப்பதாக உத்தேசித்திருக்கிறது. அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில், ஆரம்ப நடவடிக்கை, மெட்ராஸ் மெடிகல் காலேஜுக்கு வேண்டிய ஒரு புதிய ஹாஸ்டல் கட்டுவது. அது துரிதமாக கட்டப்பட்டுவருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, whereas it is necessary to have the hostel attached to the college nearby and whereas the Madras Medical College Men's hostel is now in Kilpauk, will the Government think of the possibility of putting up a hostel in Esplanade grounds next to Madras Medical College Women's hostel that is now under construction?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no such proposal and there will be never any such proposal.

[10th March 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு உத்தரவு ஒன்றும் வேண்டியதில்லை. இந்த சட்டத்தை பிரயோகித்துத்தான் வருகிறது. மேலும், அவர்களைப் பிடித்து வொர்க் ஹவுஸ்ஸில் சேர்த்து அவர்களுக்கு வேலையும் கற்பிக்கப்பட்டு அதற்கு வேண்டிய கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI K. RAMASUBBU : பிச்சைக்கார 'விடுதியில் வயோதிக பிச்சைக்காரர்களையும், குஷ்டரோகிகள் போன்றவர்களையும் வெவ்வேருகப் பிரித்து வைப்பது நல்லதாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இரண்டு முறை என் பதிலில் சொன்னேன். வியாதியஸ்தர்களையும் வேலை செய்யக்கூடியவர்களையும் தனியாகவைத்து, வேலை செய்யக்கூடியவர்களுக்கு மேலும் கற்றுக்கொடுப்பதற்கும், அவர்களை வேலை செய்யும்படி செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

*Payment of salary to the Leader of the Opposition.*

* 272 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government propose to bring in Legislation for the payment of salary to the Leader of the Opposition of the Madras State Assembly?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no such porposal at present.

SRI M. P. SUBRAMANIAM : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இப்போது இல்லை என்று சொன்ஞர்கள். இதைப்பற்றி எல்லா எதிர்கட்சியிலிருந்து அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வருவதாலும், அதே நேரத்தில் எதிர்கட்சித் தலைவருக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற முறையில் எதிர்கட்சித் தலைவருக்கு ஒரு சம்பளத்தை கொடுப்பதற்கு இனிமேலாவது அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சம்பளம் பெற்ருல்தான் முக்கியத்துவம் உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்ள தயாரில்லை.

SRI N. R. THYAGARAJAN : சமீபத்தில் எதிர் கட்சியில் பிளவு பட்டிருக்கிறது என்றும், அதிலுள்ள உபதலைவர் அந்த கட்சி அழிந்து வருகிறது என்றும், செத்து வருகிறது என்றும் குறிப்பிட்டதாக ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. . .

MR. SPEAKER : That question does not arise out of the main question. I ruled it out of order.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதன் காரணத்திஞல்தானே என்னவோ இப்போது இந்த சம்பள பிரச்னை கிளம்பியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : ஏதோ ஒரு மாகாணத்தில் எதிர்கட்சித் தலைவருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. ஆகவே இந்த சம்பளம் கொடுப்பது அந்தந்த ராஜ்யத்தின் முடிவுப்படி கொடுக்கிருர்களா அல்லது எல்லா ராஜ்யங்களுக்கும் இதில் பொதுவாக ஒப்பந்தம் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் ஒப்பந்தம் ஒன்றுமில்லை.

SRI K. VINAYAKAM : Is the Hon. the Leader of the House aware of the fact that in the Mother of Parliaments, the Leader of the Opposition is paid as much as the Leader of the House. He is also paid House Allowances and other allowances. In Parliamentary procedure, since we are following the Mother of Parliaments, will the Government consider the desirability of following the Mother of Parliaments in this respect also by paying honorarium to the Leader of the Opposition?



10th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : In the present context daughters do not follow what the mothers do. Therefore I do not think that we should simply copy some people because they are doing that.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்த சம்பளப் பிரச்னை நமது அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்களால் எழுப்பப்பட்ட பிரச்னை. ஆனல் எதிர்கட்சியைப்பற்றி கனம் அங்கத்தினர் தியாகராஜன் பிள்ளை அவர்கள் பலவிதமாக சொன்ஞர்கள். . . .

MR. SPEAKER : I have ruled that question out of order.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : But the Hon. Minister has replied to that question. I will come to the point, Sir.

MR. SPEAKER : The Minister has not replied.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : He has replied, Sir. அது எப்படி இருந்தபோதிலும் அந்த சம்பள விஷயத்தைப் பற்றி நான் வற்புறுத்தவில்லை. வேறு ரயில் சார்ஜ்கள், மற்றும் பல விதமான சலுகைகள் கொடுக்கும்படியாக பல அங்கத்தினர்கள் கேட்டிருந்தார்கள். இதைப்பற்றி சர்க்கார் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது எதிர்கட்சி அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல, எல்லா அங்கத்தினர்களுக்கும் உண்டு. இதைப்பற்றி இந்த கேள்வியில் இடமில்லை.

MR. SPEAKER : The hon. Member Sri K. Vinayakam in putting question No. 267 made a remark that the word ' two weeks ' should be ' two years '. I have looked into all the relevant papers and do not find the words ' two years ' there in the original question, in the renewal letter or in the subsequent letters. I find in all the papers the words ' two weeks '. There seems to be no justification for the view of the hon. Member that the words should be ' two years '.

SRI K. VINAYAKAM : On a point of personal explanation, Sir. I was told by the author of the question that he has written as ' two years ' and it was subsequently changed by somebody to ' two weeks '. On that basis I made my remarks. I am sorry for having done so, Sir.

MR. SPEAKER : I may assure the hon. Member that so far as the Speaker is concerned there is no benefit in changing the words ' two years ' to ' two weeks '. If there is any procedural error, the Speaker will alter the question. Otherwise he will not.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ANNOUNCEMENTS BY THE HON. THE SPEAKER.

### (1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House that in pursuance of Article 207, Clause (1), read with Article 199,

clause (1), sub-clauses (*a*) and (*g*) of the Constitution of India, the Governor of Madras has given his recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958.

### (2) MESSAGE FROM THE PRESIDENT.

MR. SPEAKER : I have also received a telegram announcing the previous sanction of the President according permission to the introduction of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958, in the State Legislature.

## III.—ADJOURNMENT MOTION *RE* DISPUTE BETWEEN ELECTRICITY WORKERS AND THE ELECTRICITY BOARD.

MR. SPEAKER : I have received from the Hon. Member Sri M. Kalyanasundaram notice of an adjournment motion for discussing a matter of urgent public importance, namely, 'the failure of the Government to settle the dispute regarding wages and service conditions, etc., between the electricity workers and the Electricity Board, which has led to a threat of strike in a public utility service, such as electricity system'.

I have to inform the House that matters which are raised by adjournment motions should satisfy two conditions (1) the matter should be a primary concern of the Government and (2) it should not bring in a subject anticipating a possible strike. The strike has not taken place. Whether it will take place or not is another matter. But we should not, by discussing it at this stage, prejudice any settlement of the dispute which may arise later.

Under these circumstances, I rule the motion out of order.

## IV.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS ENTERTAINMENTS TAX (AMENDMENT) BILL, 1958.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, I introduce the Bill.

### (2) THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1958.

THE HON. SRI V. RAMIAH : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958.



MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958'.

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMIAH : Sir, I introduce the Bill.

## V.—GOVERNMENT MOTION.

### DISCUSSION ON THE MEMORANDUM SUBMITTED BY THE GOVERNMENT OF MADRAS ON THE REPORT OF THE OFFICIAL LANGUAGE COMMISSION.

MR. SPEAKER : To-day we are going to discuss the memorandum submitted by the Madras Government on the report of the Official Language Commission. The Hon. Minister for Finance will move the motion. 9-00 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கீழ் கண்ட தீர்மானத்தை இந்த சபை முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

"That the memorandum submitted by the Government of Madras on the Report of the Official Language Commission be taken into consideration".

இந்தத் தீர்மானத்தை இந்த சபை முன் வைக்கின்ற முறையில் இதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லவேண்டிய அவசியம் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். இந்த மொழிப்பிரச்னையானது சமீபத்தில் ஏற்பட்ட ஒரு பிரச்னை அல்ல. பல வருஷங்களாக இந்த பிரச்னை நம் நாட்டில் இருந்துகொண்டு வந்திருக்கின்றது. சுதந்திர இயக்கம் ஆரம்பித்த காலத்திலேயே நம் நாட்டுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்கின்ற கருத்து எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து. அதிலும் முக்கியமாக மகாத்மா காந்தியடிகள் நம் நாட்டினுடைய சுதந்திர இயக்கத்தில் பங்கெடுக்க ஆரம்பித்த பிறகு இந்த மொழி பிரச்னை ஒரு நாட்டுப்பிரச்னையாகி அதை பல சந்தர்ப்பங்களிலும், அதாவது ஒவ்வொரு சமயத்திலும் விளக்கி அதை எப்படி தீர்க்கவேண்டும் என்பதைப்பற்றியும் நமது தலைவர்கள் ஆலோசனை கூறினது மட்டுமல்ல, பல சமயங்களிலும் பிரதிநிதித்துவம் வாய்ந்த பல கட்சி கூட்டங்களிலும், பல மகாசபைகளிலும் அதைப்பற்றி தீர்மானிக்கப்பட்டும் வந்திருக்கின்றன. மகாத்மா காந்தியடிகள் சுதந்திர இயக்கத்திற்குப் பாடுபட்ட காலத்தில் அவர்கள் தீவிரமாக நம்பினார்கள். அந்த நம்பிக்கையை மக்களுக்கும் எடுத்துச் சொன்னார்கள். நம் சுதந்திரத்திற்கு ஒரு அடையாளம் உண்மையிலேயே ஏற்படவேண்டுமானால், நம் நாட்டு மொழியொன்று தேசிய மொழியாக ஆக வேண்டுமென்பதைப்பற்றி எடுத்துரைத்து வந்திருக்கிறார்கள். மகாத்மா காந்திஜியோடு தோளோடு தோள் கொடுத்து, அன்று சேவை செய்து வந்த எல்லோரும் அதை ஒப்புக்கொண்டு, இந்த தேசிய மொழிப் பிரச்னையில் போராதரவு கொடுத்து வந்திருக்கிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே, இந்த தேசிய மொழிப்

பிரச்னையானது—இப்போது எழுப்பப்பட்ட பிரச்னையல்ல—அதிக காலமாக, நம் நாட்டுக்கு சுதந்திரம் வேண்டுமென்று கூறிய நாள் முதலாக, இந்தப் பிரச்னை நாட்டின் முன் இருந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட எல்லாக் கட்சிகளும் இந்த தேசீய மொழிப் பிரச்னையில் ஒன்றுபட்ட கருத்தைக்கொண்டு வந்திருக்கின்றார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். இந்த தேசீய மொழி எந்த மொழியாக இருக்கவேண்டுமென்பதைப் பற்றி நல்ல முறையிலே பரிசீலனை செய்து பார்த்து, ஆராய்ச்சி செய்து பார்த்து, சர்ச்சை செய்து, கடைசியாக ஹிந்தி மொழியைத்தான் நம் தேசீய மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று—காங்கிரஸ் மகாசபையின் தீர்மானம் மட்டுமல்ல—எனக்குத் தெரிந்த வரையில் மற்ற, சுதந்திரத்திற்காக பாடுபட்ட, எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அந்த அடிப்படையில்தான் இதைப் பரிசீலனை செய்ய வேண்டி வந்தது என்பதை நான் இந்தச் சபையின முன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசியல் நிர்ணய சபையிலே இந்த மொழிப் பிரச்னையின் மீது விவாதம் வந்த போது—அந்த சமயத்திலே நானும் ஒரு அங்கத்தினராக இருந்த காரணத்தினால் அங்கு நடந்த விவாதத்திலே நானும் பங்கு எடுத்துக்கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது—அன்றைக்கு இரு அபிப்பிராயங்கள் நிலவி வந்தன. ஒன்று, ஒரு அடிப்படையான அபிப்பிராயம்—எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அபிப்பிராயம்—எந்த விதமான மாறுதலும் அந்தக் கருத்துக்குச் சொல்லப்படாத அபிப்பிராயம்—ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் ஹிந்தி தேசீய மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்கிற கருத்தை, அந்த சமயத்தில் யாரும் மறுத்துச் சொல்லவில்லை. ஆனால், இந்த ஹிந்தி மொழி எப்போது அகில இந்திய மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்ற முறையிலேதான் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தது. நான் என் வார்த்தையை உபயோகிக்கும்போது தேசீய மொழி என்று வேண்டுமென்றே உபயோகித்து வந்திருக்கிறேன். அந்த சமயத்திலே அந்த மாதிரி ஒரு கருத்து நிலவி வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னொன்று, ஒரு சாரார், இந்த ஹிந்தியை—நமக்கு சுயராஜ்யம் வந்தாகிவிட்டது—நமக்கு சுயராஜ்யம் வந்தவுடனே, அன்னிய ஆதிக்கத்திற்கு அடையாளமாக இருந்த ஆங்கிலத்தை உடனடியாக நீக்கிவிட்டு, ஹிந்தியை தேசீய மொழியாகச் செய்யவேண்டுமென்று ஒரு சிலர் பிடிவாதமாக அங்கு சொல்லி வந்தார்கள். அன்றைக்கு அதற்கு எதிர்கட்சி—ஹிந்தியை தேசீய மொழியாகக்கொண்டு வரக் கூடாது என்கிற எதிர் கட்சியல்ல—ஆனால் உடனடியாக ஹிந்தியை தேசீய மொழியாக ஏற்றுக்கொள்வதால் கஷ்டம்தான் ஏற்படும், ஆகவே ஹிந்தியை உடனடியாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்வது இப்போதைக்கு நடக்கக் கூடிய காரியம் இல்லை என்பதுதான். இந்த இரண்டு கட்சிகளுக்குந்தான் அந்த சமயத்திலே மோதல் ஏற்பட்டது. அந்த மாதிரியான ஒரு மோதல் ஏற்பட்டதன் காரணமாக ஒரு சமயம் அரசியல் நிர்ணய சபையிலே இது தீர்க்கப்படாத ஒரு பிரச்னையாக வந்துவிடுமோ என்று நினைக்கக்கூடிய ஒரு கட்டம் ஏற்பட்டது என்பதை நான் இந்த சபையின் முன் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த சமயத்தில்தான் நம்முடையமதிப்பிற்குரிய காலம்சென்ற கோபாலசுவாமி அய்யங்கார் அவர்கள் இந்தப் பிரச்னையில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு சமாதானத்தைச் செய்யவேண்டுமென்கிற அடிப்படையில், அவர்கள் இப்போது அரசியல் சட்டத்திலே கண்டிருக்கிற பகுதிகளை உருக்கொடுக்க அதை எல்லோரும் விவாதிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த அடிப்படையில் முதன் முதல் ஏற்பட்ட ஒன்று நம் நாட்டிலே பல மொழிகள் இருக்கின்றன, அந்த எல்லா மொழிகளும் தேசீய மொழிகள் என்கிற ஒரு அடிப்படையான நிலைமையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று அதிலே போடப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக, அந்த மொழிகளையெல்லாம் தேசீய மொழியாக ஒப்புக்கொண்ட பிறகு—எந்த ஒரு தனிப்பட்ட மொழிக்கும் தேசீய மொழி என்ற அந்தஸ்து கொடுக்கவேண்டியதில்லை என்ற



முடிவு எடுக்கப்பட்டு—அந்த முடிவிற்குப் பிற்பாடு, அரசாங்க நிர்வாகம்—மத்திய அரசாங்கத்தின் நிர்வாகம் ஏதோ ஒரு மொழியில்தான் நடக்கவேண்டும்—எந்த ஒரு மொழியில் நடக்கவேண்டும்—இதைப்போல் இரண்டு மொழிப் பிரச்னை அன்று எழவில்லை—ஏனென்றால், ஆங்கிலம் அன்றைக்கு நிர்வாகத்திலே இருந்து வந்த ஒரு மொழி, அந்த ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி பெறவேண்டுமென்பது இன்னொரு பிரச்னை—ஆக, அந்தப் பிரச்னையையும் ஆலோசித்துப் பார்த்து அன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையிலே ஹிந்தியை நிர்வாக மொழியாக "யூனியன் அபிஷியல் லாங்குவேஜ்" என்ற அளவிற்கு அதை ஒப்புக்கொள்ளலாம் என்கிற முடிவும் அவர்கள் கூறிய யோசனையில் ஒரு அடிப்படையான கருத்தாக அமைந்திருந்தது. அப்படி ஒப்புக்கொண்ட பிறகு, இப்போது உடனடியாக அபிஷியல் லாங்குவேஜ் ஆக ஹிந்தியை நாம் ஏற்றுக்கொள்வோமானால், நிர்வாகம் தொடர்ந்து நடைபெற பல சிக்கல்கள் ஏற்படும் என்கிற காரணத்தினால், இந்த முடிவு 15 வருஷங்கள் கழித்து அமுலுக்கு வரவேண்டுமென்ற கருத்து அவர்கள் சொன்னதின் அடிப்படைக் கருத்து. அவைகளை யொட்டித்தான் இப்போது இந்த அரசியல் சட்டத்திலே கண்டிருக்கிற பகுதி முடிவு செய்யப்பட்டது என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன், இப்போது இந்த அரசியல் சட்டத்தில் கண்டிருக்கக்கூடிய விதி ஒரு அங்கத்தினருடைய மெஜாரிட்டியில்—ஒரே வோட் மெஜாரிட்டியில்—பாஸ் செய்யப்பட்டது என்று சொல்வதை நான் கேட்டிருக்கிறேன், அதைப்பற்றிப் படித்தும் இருக்கிறேன். வாஸ்தவம் தான். ஆனால் அன்றைக்கு இருந்தது எந்த இரண்டு பிரச்னை என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு வோட்டில் வெற்றி பெற்றது உண்மைதான். அந்தப் பிரச்னைக்கு எதிராக இருந்தது என்ன ? எதை எதிர்த்து வெற்றி பெற்றது என்பதைச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். இது வெற்றி பெற்றிராவிட்டால் வெற்றி பெறக்கூடிய இன்னொரு பிரச்னை என்ன ? அன்றைக்கு அரசியல் நிர்ணய சபையின் முன் இருந்தது, ஹிந்தி உடனடியாக அமுலுக்கு வரவேண்டுமா அல்லது கோபாலசுவாமி அய்யங்கார் அவர்களுடைய சமாதானம் போல 15 வருஷங்கள் கழித்து வரவேண்டுமா, என்ற இந்த இரண்டு பிரச்னைகள் தான் அரசியல் நிர்ணய சபையின் முன் இருந்தது. ஒன்று உடனடியாக வருவது, இன்னொன்று 15 வருஷங்கள் கழித்து எடுத்துக் கொள்ளலாம் என்பது. ஒரு வோட்டில் ஜெயித்தது அன்று ஜெயிக்காமல் இருந்திருந்தால் தீர்மானம் செய்திருக்கக் கூடியது உடனடியாக ஹிந்தி வரவேண்டும் என்பதுதான் என்பதை நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். அப்போது ஹிந்தியை ஒப்புக் கொள்ளக்கூடாது என்ற பிரச்னை எழவில்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். அந்த அடிப்படையில் இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த அரசியல் விதி ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை நன்றாக நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஆகையால் இது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்னை ஆகயிருந்து எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய வகையில் சமாதானத்தை ஏற்படுத்தி, இந்த ஒரு வோட்டு வித்தியாசத்திலே, காங்கிரஸ் கட்சியிலே ஏற்பட்ட முடிவு என்பதைத் தான் சொல்லுகிறேன். அரசியல் நிர்ணய சபைக்கு வந்தபோது எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். ஒருவர்தான் மனச்சாட்சி இடம் தரவில்லை என்று கலந்து கொள்ளாமல் ஒதுங்கி விட்டார். அவர் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. தீவிர ஹிந்தி வாதியாக அவர் இருந்ததினால், 15 வருஷம் வரையிலும் ஒத்திப் போடுவது பாபம், அந்தப் பாபத்தைச் செய்ய தயாராய் இல்லை என்று ஒதுங்கிவிட்டார்கள். அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. அந்த முறையில்தான் இந்தச் சட்டம் மொழியைப் பொறுத்த வரையில் செய்யப்பட்டது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். விதிகளில் இருக்கக்கூடிய முக்கியமான பகுதிகளை அங்கத்தினர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம் என்பதைத் தெரிவிக்கிறேன்.

[Sri C. Subramaniam] [10th March 1958

இப்பொழுது, 17-வது பகுதியின் கீழ் " **Official language** " என்ற தலைப்பின் கீழ், மொழிப் பிரச்னை கொடுக்கப்பட்டிருக்கிறது; முடிவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே, மூன்று விதிகள் இருக்கின்றன. முதலாவது விதி : **The Official language shall be Hindi in Devanagari script.** பலபேர் நினைக்கலாம் " **Devanagari script** " என்று சொல்வதற்குக் காரணம் என்ன என்று. இதற்கு முன்பெல்லாம் இரண்டு எழுத்துக்களாக இருக்கலாம் என்று இருந்தது. அதாவது, உருது எழுத்திலும் தேவநாகரி எழுத்திலும் என்று. இந்த இரண்டு எழுத்துக்களில் தேவநாகரி **script** ஒப்புக்கொள்ளப்பட்டது. **The form of numerals shall be the international form of Indian numerals.** இந்த எண்ணை எப்படி எழுத வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் விதிப் பதற்குக் காரணம், ஒரு சிலர் தீவிரமாக ஹிந்தியைத்தான் உபயோகிக்க வேண்டுமென்று வாதாடி வந்தார்கள். இதற்கு ஒரு முற்று புள்ளி வைக்கவேண்டுமென்பதற்காக, ஒரு முடிவையும் ஏற்பாடு செய்தார்கள்.

இதற்குப் பிறகு இரண்டாவது விதி : **Notwithstanding anything in clause (1), for a period of fifteen years from the commencement of this Constitution, the English language shall continue to be used for all the official purposes of the Union for which it was being used immediately before such commencement:**

உப விதியில், இந்த இந்தியை " அபீஷியல் லாங்குவேஜாக " ஒப்புக் கொண்டு இருந்தாலும், 15 வருடத்திற்குத் தொடர்ந்து, ஆங்கிலமே எல்லா வழிகளிலும் உபயோகிக்கப்படும் என்று சொன்னார்கள். **Provided that the President may authorize the use of the Hindi language in addition to the English language, etc.** என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதிலே, ஜனாதிபதி அவர்கள், இந்தியை ஆங்கிலத்துடன் சேர்ந்து உபயோகிக்கலாம் என்று ஒரு உத்திரவு இடலாம் என்பது ஒரு பகுதி. தேவநாகரி எண்களை இந்த **International form of Indian numerals** உடன் சேர்ந்து என்கிற உத்திரவும் போட இடம் உண்டு.

மூன்றாவது பகுதி: **Notwithstanding anything in this article, Parliament may by law provide for the use after the said period of fifteen years of the English language or the Devanagari form of numerals.** இதுதான் மிக முக்கியமானது. அரசியல் சட்ட 343-வது பிரிவு உப விதி களின்படி ஆங்கிலமும் உபயோகிக்கலாம். ஜனாதிபதி இந்தியை உபயோ கிக்கலாம் என்று உத்திரவு போடலாம். 15 வருடத்திற்குள்ளே ஆங்கிலம் போல் இந்தியும் இந்தி ஆங்கிலத்துடன் சேர்ந்தும் உபயோகிக்கலாம் என்று முடிவு கட்டினார்கள். 15 வருடங்களுக்குப் பிறகும் இந்தியேதான் உப யோகிக்கவேண்டும் என்பதில்லை. மறுபடியும் பார்லிமெண்டு பரிசீலித்து, சட்டம் செய்தால் அந்த சட்ட அடிப்படையில் ஆங்கிலம் தொடர்ந்து அவ சியம் வரையில் உபயோகிக்கலாம் என்பதுதான் சுருக்கமாக இருக்கக் கூடிய முடிவு. மாற்று விதிகள் ஒவ்வொரு பகுதிகளிலும் எப்படி ஆங் கிலத்தை உபயோகிக்கவேண்டும் என்பது யோசிக்க வேண்டும், யோசனை செய்யக்கூடிய விஷயம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையி னால், மொழிப் பிரச்னையைப் பற்றிப் பேசும்போது, இதற்கு முன்பு என்ன நடந்தது என்பதை மறந்துவிட்டுப் பேச முடியாது. சரித்திரம் ஒரு முறையிலே ஓடி வந்து இருக்கிறது. ஒருபோக்கிலே வந்து சேர்ந்திருக்கிற அந்த நதியை திரும்ப ஆரம்பித்த இடத்திற்கு " போ " என்று சொல்ல யாருக்கு சக்தி இருக்கிறது. யாருக்கும் கிடையாது. என்னைப் பொருத்த மட்டில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு நதியைத் திருப்பலாம். ஆனால் ஆரம்பித்த இடத்திற்குப் போகச்செய்ய யாரும் முயற்சி செய்ய முடியாது. முயற்சி செய்யலாம், ஆனால் அது வீணானது. போகின்ற போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால், திருப்பி ஒரு பள்ளத்தாக்கில் போகச்செய்யலாம். ஆனால் தண்ணீரை எத்தத்தில் ஏற்ற முடியுமா ?



10th March 1958] [Sri C. Subramaniam]

பம்பு செட்டை வைத்து வேண்டுமானால் செய்யலாம். ஆனால் அந்த மாதிரிச் செய்ய வேண்டியது அவசியம் இல்லை. ஆகவே அந்த அடிப்படையில் பார்க்கவேண்டும்.

சுதந்திர கிளர்ச்சி காலத்திலே விவாதிக்கப்பட்ட விஷயம் இது. சுதந்திரம் வந்த பிறகும், எல்லோராலும், பலத்தரப்பட்ட அரசியல் வாதிகளாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமாதான முடிவு செய்யப்பட்டது. ஆனால் கேட்கலாம். முடிவு எடுத்து விட்டால், அதை மாற்றக்கூடாதா என்று. மாற்றலாம். எல்லோராலும் சமாதான முறையில் முடிவு செய்ததற்குப் பிறகு, முடிவை மாற்ற வேண்டுமானால், மாற்றக்கூடாது என்று அர்த்தம் இல்லை. எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு செய்கிறோம். ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவு. கஷ்டங்கள் ஏற்பட்டால், திருத்தி அமைக்க வேண்டுமானால், நியாயமான அடிப்படையில், எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய முறையில் மாற்றுவதில் ஆட்சேபணை இல்லை. பெரும் பகுதியினராக உள்ளவர்கள் அப்படிக் கருதினால் அது வேறு விஷயம். ஆனால் சாதாரணமாக முடிவை மாற்றாமலேயே அதை அர்த்தம் புரிந்து கொள்ளலாம். 100-க்கு 90 பேர் ஒப்புக்கொண்டு, 10 பேர் மட்டும் ஏகமனதாக செய்த முடிவை, " நாங்கள் மைனாரிடிகள் " ஆகவே, நாம் சேர்ந்து இந்த முடிவை சிறு பான்மையோர் என்ற காரணத்தால் முடிவுகளை மாற்ற வேண்டும் என்பது, நியாயத்திற்கு விரோதமானது, என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றவர்களுக்கும் அப்படித் தோன்றலாம். ஆனால் வேறு சிலருக்கு வேறு விதமாகத் தோன்றலாம். ஆனால் எனக்கும், என்னுடன் சேர்ந்தவர்களுக்கும், ஏன், பெரும்பாலான மக்களுக்கும் அப்படியே தோன்றும். மாற்றம் செய்ய வேண்டுமானால், எல்லாரும் ஒப்புக்கொண்டுள்ளக்கூடிய முறையிலே செய்தால் தான் மாற்றம் செய்யலாம். இல்லாவிட்டால் ஒப்புகொண்ட முடிவை மாற்ற இடம் இல்லாமல் போய் விடும். இதையெல்லாம் ஆலோசித்துத்தான், ஒரு 5 வருஷத்திற்கு ஒரு முறை ஒரு கமிஷன் ஏற்படவேண்டும், ஆராய்ச்சி செய்த பிறகு, அமுலுக்கு கொண்டு வருவதில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறது. அதற்காகவே கமிஷன் நியமிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் இரண்டு வருஷங்களுக்கு முன், 1955-ல் ஒரு கமிஷனை நியமித்தார்கள். இந்த மொழிக் கமிஷன் வந்ததற்குப் பிற்பாடு நமக்கு 5 வருஷ அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. 5 வருஷ அனுபவம் மட்டும் அல்ல. நம்முடைய நாட்டில் ராஜீய அமைப்பில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறன என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மொழி அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்ட பிரச்னை ஒருவாறு எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட பிரச்னையாகவும் இருந்தது. 1955-ம் வருஷத்திலேயே அந்த அடிப்படையில் நாம் பார்க்க வேண்டியதாக இருந்தது. ஆயினும், 1955-ம் வருஷம் மொழிக் கமிஷன் நியமிக்கப்பட்டு, இந்தப் பிரச்னையை அவர்கள் விவாதிப்பதற்காக வந்தபோது, அப்போது இருக்கின்ற நிலைமையை அடிப்படையாக வைத்துக் கொண்டு முன்பு சில முடிவுகள் செய்திருந்தாலும், அந்த முடிவு பூராவும் ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியமா, சில மாறுதல்கள் செய்ய வேண்டுமா என்பது பற்றி சர்க்கார் ஆலோசிக்க வேண்டிய கட்டம் ஏற்ப்பட்டது. அப்படி ஒரு கட்டம் ஏற்பட்டபோது அன்றைக்கும் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் இருந்தது. இருந்த போதிலும் இது ஏதோ ஒரு தனிக் கட்சி விவகாரம் அல்ல, எல்லா மக்களையும் இது பொறுத்தது என்கின்ற அடிப்படையிலே, சட்ட சபையிலிருந்த எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, ஆலோசனை கேட்டு, நம்மைப் பொறுத்த வரையில் இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்கின்ற முறையிலே, ஆலோசனை செய்யப்பட்டது என்பதை அங்கத்தினர்கள் எல்லோரும் அறிந்திருப்பார்கள். அப்படி எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு ஆலோசனை கேட்டபோது, நாம் விவாதித்து, ஏகோபித்த முடிவுக்கு வந்து, மொழிக் கமிஷனுக்கு சர்க்கார் எந்த விதமான ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்பதை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டார்கள். அப்படி ஒப்புக்

கொண்ட அடிப்படையில் தான் மொழிக் கமிஷனுக்கு அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக, அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிற்பாடு எந்த விதமான சர்ச்சையும் எழவில்லை. கட்சித் தலைவர்கள் ஒப்புக் கொண்டார்களா ஒப்புக் கொள்ளவில்லையா என்கிற சர்ச்சை நல்ல வேளையாக அப்போது எழவில்லை. கட்சித் தலைவர்களை கலந்து ஆலோசனை கேட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவின் அடிப்படையில் தான் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்பது பற்றி எந்த விதமான சர்ச்சையும் எப்போதும் இடையாது. மொழிக் கமிஷனுக்குத் தந்த ஆலோசனைகளை கனம் அங்கத்தினர்கள் படித்திருப்பார்கள் என்றும் நினைக்கிறேன். அதற்குப் பிற்பாடு, மொழி கமிஷன், எல்லா பகுதிகளுக்கும் சென்று, அங்கு இருக்கக்கூடிய மக்களையும், தலைவர்களையும், அரசியல் கட்சிகளையும், எல்லோரையும் கலந்து ஆலோசித்து அவர்களுடைய அறிக்கையை தயார் செய்து பார்லிமெண்டுக்கு சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே நாம் சொன்ன பல யோசனைகள் பூராவும் ஒப்புக் கொள்ளப்படவில்லை. சில யோசனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில யோசனைகள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. கமிஷன் சொல்வதே ஒரு முடிவு அல்ல. பார்லிமெண்டரி கமிட்டி ஏற்படுத்தி, அந்தக் கமிட்டி பரிசீலனை செய்தபிறகு, அவர்கள் அதை ஜனாதிபதிக்கு அனுப்பி, ஜனாதிபதிதான் முடிவாக அதன் பேரில் உத்திரவு போடவேண்டியது. அது தான் முறை என்பது அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. மறு முறையும் இந்தப் பார்லிமெண்டரி கமிட்டி இந்தப் பிரச்னையை, அறிக்கை அடிப்படையில் பரிசீலனை செய்தபோது நம்மைப் பொறுத்த வரையிலே என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி சென்னை சர்க்கார் தீவிரமாக ஆலோசனை செய்தது. ஆலோசனை செய்த பிற்பாடு, முதல் தடவையாக, அதாவது மொழிக் கமிஷன் வருகின்ற காலத்தில் எப்படி இதை ஒரு கட்சிப் பிரச்னையாகப் பார்க்காமல், ஆளும் கட்சிப் பிரச்னையாகப் பார்க்காமல், எல்லோருடைய பொதுப் பிரச்னையாக வைத்து, இதில் ஒன்றுபட்ட முடிவு காணவேண்டும் என்ற அடிப்படையில் இப்போதும் ஆலோசனை செய்ய வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்தோம்—நானாக இந்த முடிவை எடுத்துக் கொள்ளவில்லை, நான் சட்ட சபையிலே தெரிவித்தேன். அப்போது அதற்கு ஏகோபித்த ஆதரவு இருந்தது, உற்சாகம் இருந்தது. இதுதான் வரவேற்கத்தக்கது என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட. அந்த அடிப் படையில்தான் எல்லா கட்சித் தலைவர்களும் கூப்பிடப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பங்கெடுத்துக் கொண்டது தனிப்பட்ட முறை யில் அல்ல, ரகசியமாக அல்ல. அந்தக் கட்சிக்குத் தெரிவித்து, அதன் தலைவருக்குச் சொல்லி அந்த முறையில் தான் அழைக்கப்பட்டார்கள். விவாதத்தில் கலந்து கொண்டார்கள். கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே என்ன நடந்தது, என்ன நடக்கவில்லை என்பதைப் பற்றி நான் இப்போது பேசப்போவது இல்லை. அதை அப்படியே விட்டுவிடுகிறேன். கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே நடந்ததை அடிப்படையாகக் கொண்டு இப்போது பார்லிமெண்டரி கமிட்டிக்கு ஆலோசனை சொல்வதற்கு இந்த மெமோ ராண்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்சிக் கூட்டத்திலே எல்லோ ரும் ஒப்புக்கொண்டது ஒரு புறம் இருக்க, "தலைவர்கள் மட்டும் ஒப்புக் கொண்டால் போதுமா, அரசியல் கட்சிகள் மட்டும் ஒப்புக்கொண்டால் போதுமா, நியாயம் என்ன என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டாமா", என்று சிலர் சொல்லுகின்றனர். ஆனால், எல்லோரும் ஒப்புக் கொண்டது ஒருபுறம் இருக்க, நாம் சொல்லியிருக்கக்கூடிய யோசனைகள் சரியானதா, இல்லையா என்பதைப் பற்றியும் இந்த சபை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் தீர்வு காணவேண்டியது அவசியம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், நாம் ஒன்று கூடிப் பேசினாலும், சில சமயம், தவறான முடிவுகளை எடுத்து விடலாம். இங்கு உட்கார்ந்து யோசித்துப் பார்த்து, எங்களுடைய முடிவுகளை மாற்ற வேண்டிய நிலைமை, அவசியம், ஏற்பட்டிருக்கிறது என்று யாராவது சொல்வார்களானால்,



அவர்களுடைய மாறுதலான அபிப்பிராயங்களைச் சொன்னால், அவைகளைப் பற்றி ஆலோசிக்கலாம், அவைகளைப்பற்றி விவாதிக்கலாம். அந்த முறையில் தான் இது சபையின் முன்பு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் தற்சமயம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நடந்த சர்ச்சை பற்றி பேசப்பட்டால், நான் கடைசியில் பதில் சொல்லும்போது குறிப்பிடுகிறேன். இப்போது அதைப்பற்றி ஒன்றும் சொல்லப் போவது இல்லை.

(ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி குறுக்கீடு.)

ஸ்ரீ கோவிந்தசாமி எந்தெந்த ஆலோசனைகள் ஒப்புக் கொள்ளப் பட்டன, எந்தெந்த ஆலோசனைகள் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்பதைப் பற்றி விளக்கப்படவேண்டும் என்று சொல்கிறார். அவர் இந்த மெமோராண்டத்தைப் படிக்கவில்லைபோல் தெரிகிறது.

ஆகையினால், இந்த மெமோராண்டத்தில் சொல்லியிருக்கக்கூடிய ஆலோசனைகள் சரியானவையா, தவறான முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியதற்காக, இந்த சபை முன்பு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மெமோராண்டம் ஆங்கிலத்தில் இருக்கிறது—தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு எல்லா அங்கத்தினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அதில் தமிழ் எப்படி இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதற்கு நான் தயாராக இல்லை. நான் அதைப் படித்துப் பார்க்கவில்லை. நன்றாக இருக்கும் என்றே நினைக்கிறேன். படித்துப் பார்க்கவில்லை என்பதினால், நன்றாக இல்லை என்று சொல்வதாக நினைக்கவேண்டாம். ஆனால், அங்கத் தினர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த மெமோராண்டம் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பகுதி பூர்வாங்கப் பகுதி. இந்த மெமோராண்டம் பார்லிமெண்டரி கமிட்டிக்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் என்ன, எந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டிருக் கிறது என்பது இந்தப் பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும் நான் இங்கு விளக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அதிலே ஒரு குறிப்பிடத்தக்க ஒரு வாக்கியம் இருக்கிறது. அதை தெளிவாக்க வேண்டியது மிகவும் அவசியம். எந்தக் காரணத்தினால் என்று சொல்லி விட்டு, "**Hence the present Memorandum which like its predecessor, has been prepared after discussion with the leaders of all the parties in the State Legislature and in general agreement with them**". என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாசகமானது நாங்களாகப் போட்டுக் கொண்ட வாசகம் அல்ல. கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த வாசகம் வைக்கப்பட்டபோது ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்போது எந்த விதமான ஆட்சேபணையும் எழுப்பவில்லை. ஒருவரையும் கேட்காமல் போடப்பட்ட வாசகம் அல்ல இது என்பதை தெளிவுபடுத்திக் கூற வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது.

அது ஒருபுறம் இருக்க, அதற்கு அடுத்தபடியாக பல பக்கங்களில் மொழி பிரச்னையைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது பிரிவில் அதாவது பூர்வாங்கப் பகுதிக்கு அடுத்தபடியாக உள்ள பகுதியில் நமது பள்ளிகளில் என்ன மொழி கற்பிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்போல பிரதேச மொழி எதுவோ அதுவும் கற்பிக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றிய பிரச்னை. எந்த மொழி கற்பிக்கப்பட வேண்டும், போதனா மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி மாறுபட்ட அபிப்பிராயம் இந்த சபையில் ஏற்படவில்லை. கல்வித் திட்டத்தைப்பற்றி இங்கு பரிசீலனை செய்தபோது அதைப்பற்றி முடிவு எடுக்கப்பட்டது: ஆகவே அதில் இருக்கக்கூடிய முடிவுகளை யாரும் ஆட்சேபனை செய்ய முடியாது. அவை ஆட்சேபிக்கக்கூடிய முடிவுகளும் இல்லை. அதைப்பற்றி இதுவரையிலும் யாரும் ஆட்சேபணை செய்யவில்லை. அதற்குப் பிறகு ஆட்சேபணை வந்தாலும் அதைப்பற்றி எந்த விதமான முடிவும் எடுத்துக்கொள்ள முடியாது. பள்ளிக் கூடங்களில் போதனா மொழி

[Sri C. Subramaniam] [10th March 1958

எதுவாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் எந்த மொழியில் போதிக்கப்
பட வேண்டும் என்பதைப் பற்றியும் எல்லோரும் ஒப்புக்கொண்டே
முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எல்லோராலும் முடிவாக்கி அமைந்திருக்
கிறது. அதனால் அதைப்பற்றி அதிகமாக பேச வேண்டிய அவசியமில்லை.
கல்வித்திட்டத்தைப்பற்றி இங்கே ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட
போது அதைப்பற்றி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக கல்லூரிகளில் எந்த மொழியில் போதிக்க
வேண்டும் என்பதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில்தான் முக்
கியமாக மொழி கமிஷன் பெரும் தவறு செய்திருப்பதாக என்னுடைய
அபிப்பிராயம். என்னுடைய அபிப்பிராயத்தை மற்றவர்கள் ஏற்றுக்
கொள்ளவேண்டும் என்பது அல்ல. அது என்னுடைய அபிப்பிராயம்
தான். அவர்கள் இந்தப் பிரச்னையை அலசிப் பார்த்து அவர்களுக்கு
தங்களுடைய மனதில் என்ன தோன்றுகிறதோ அதையே எடுத்துக்
கொள்ள வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அவர்கள்
தங்கள் மனதில் தோன்றியது முழுவதையும் அந்த மொழி கமிஷன்
அறிக்கையில் தெரிவிக்காவிட்டாலும் தங்கள் மனதில் எப்படி இருக்கிறது
என்பதை ஓர் அளவு காண்பித்திருக்கிறார்கள். அவர்கள் நினைத்தது
இப்பொழுது ஆங்கிலம் எப்படி இந்தியா முழுவதிலும் பரவி எல்லா
கல்லூரிகளிலும் போதனா மொழியாக அமைந்திருக்கிறதோ அந்த இடத்
தில் ஹிந்தி அமையவேண்டும். அப்படி அமைந்தால் தான் நல்லது என்ற
கருத்தை அதில் தெரிவித்திருக்கிறார்கள். ஆங்கிலம் வேண்டுமா
வேண்டாமா என்பதை அவர்கள் புத்திசாலித்தனமாக சொல்லாமல் விட்டு
விட்டார்கள். அவர்களுடைய கருத்து எல்லா ராஜ்யங்களிலும், எல்லா மொழிப்
பகுதிகளிலும் கல்லூரிகளிலும் ஹிந்தி போதனா மொழியாக ஏற்றுக்
கொண்டால் பல சங்கடங்கள் தீரும், அதனால் நல்ல பலன்கள் ஏற்படும்
என்கிற கருத்தை சூசகமாக தெரிவித்திருக்கிறார்கள். அது தவறான
கருத்து என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் என்னவென்றால்
இன்றைக்கு போதனா மொழியின் காரணமாக கல்லூரிகளில் மேல்படிப்பு
களில் இருக்கும் பெரும் பிரச்னைகள், தீராத பிரச்னையாக இருந்து
வருகிறது என்பதை நாம் அறிகிறோம். இந்த நாலைந்து வருஷ காலமாக
நான் கல்வித் துறையில் செய்த சேவையின் காரணமாக இன்றைக்கு
என்ன அறிந்து கொண்டேன் என்றால் மாணவர்களுக்கு சிந்தனா சக்தி
பெரிய அளவில் பெருகவில்லை என்றும் அதற்குக் காரணம் அந்நிய
மொழி ஒன்றையே அவர்கள் கற்று வந்து அது அவர்களுக்குப் பெரும்
பாரமாக இடையூறாக இருந்து வந்திருக்கிறது என்றும். நீந்தத் தெரிவ
தற்கு முன்னதாக தண்ணீரில் இறங்குவது மாதிரி அது அமைந்திருக்கிறது.
அவர்களுடைய சிந்தனா சக்தியை தூண்டுவதற்கு முடியாமல்
அந்த அந்நிய மொழி அமைந்திருந்தது. அந்த மொழி எப்படி இருக்கிறது,
இலக்கனம் எப்படி இருக்கிறது, வார்த்தைகளின் அமைப்பு எப்படி
இருக்கிறது என்று அந்த மொழியை சரிப்படுத்துவதிலேயே அவர்கள்
காலத்தை கடத்தி விடுகிறார்கள். உலகத்திலுள்ள ஆயிரத்தில் 999 பேர்
களுக்கு அது பெரும் பாரமாக ஏற்பட்டு, அதன் காரணமாக சிந்தனா
சக்தி சிதைந்து போய் ஒரு சில விஷயங்கள் மட்டில் ஆங்கிலம் மூலமாக
தகுதி ஏற்படுத்துவதுதான் இன்றைக்கு நல்ல கல்வி என்கிற அடிப்படையில்
வந்து நிற்கிறோம். ஆகையினால் நல்ல விஷயங்களை நல்ல கருத்துக்களை
அவர்கள் உணர வேண்டும் என்பது மட்டும் அல்ல, புதிய புதிய
கருத்துக்களை அவர்கள் மனதில் தோன்றியதை சொல்வதற்கு அந்த
அந்நிய மொழிதான் பெரும் பாரமாக இருந்தது என்பதை தெரிவித்துக்
கொள்ளுகிறேன். அதில் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை இதற்கு முன்
இருந்ததை விட பெரும் பாரமாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்
கொள்ளுகிறேன். இன்றைக்கு பள்ளிக்கூடங்களில் போதனா மொழி
பிரதேச மொழியாக அமைந்து இருக்கிறது. கல்லூரிக்குச் சென்றவுடன்
ஆங்கிலத்திலேயே எல்லா பாடங்களையும் கற்க வேண்டியதாக இருக்கிறது.
முன்பு உயர் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலம் படித்து வந்தார்கள்.
அதன் காரணமாக அவர்கள் கல்லூரிக்கு வந்தால் ஓரளவு ஆங்கில



10th March 1958] [Sri C. Subramaniam]

மொழி பாண்டித்தியம் ஏற்பட்டிருந்ததால் கல்லூரிகளில் படிக்கும் பாடங்களை ஓரளவு சுலபமாக கற்றுக்கொள்ள முடிந்தது. சிறு வயதிலிருந்தே ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டு வந்ததால் கல்லூரிகளில் அழகாக சுலபமாக பாடங்களை அவர்கள் கற்றுக்கொள்ள முடிந்தது. ஓரளவு சாதாரண மாணவர்கள் கூட பாடங்களை கற்றுக்கொள்ள முடிந்தது. இன்றைக்கு அந்த நிலைமைகூட இல்லை. இப்பொழுது பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூட படிப்பு வரைக்கும் தாய் மொழியில் படித்து விட்டு திடீரென்று கல்லூரிகளுக்கு வந்தவுடன் திடீரென்று ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும் என்று சொல்லும்போது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாம் பார்க்கிறோம். அதனால்தான் தரம் குறைந்து விட்டது, தரம் குறைந்து விட்டது என்று சொல்லுகிறார்கள். அப்படி பல பெரியோர்கள் பேசி வருகிறார்கள். அதற்கு முக்கியமான காரணம் மொழி பாரம்தான் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அது அந்த பாரத்தை ஏற்கின்றவர்களுடைய அபிப்பிராயமும், அந்த பாரத்தை நீக்க வேண்டும் என்று பாடுபடுகின்ற ஆசிரியர்களுடைய அபிப்பிராயமும். ஆனால் ஒரு சிலர் ஆங்கிலத்தில் பெரும் பாண்டித்தியம் பெற்றவர்கள் ஆங்கிலம் தொடர்ந்து இருப்பதுதான் நம்முடைய நாட்டிற்கு நல்லது, கல்வி அபிவிருத்திக்கு நல்லது, இல்லாவிட்டால் அபிவிருத்தி குன்றி விடும் என்றுகூட நினைக்கிறார்கள். ஆனால் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால் கருத்துக்களை வெளியில் பெறுவது மட்டும் அல்ல, சிந்தனா சக்தியைத் தூண்டுவதுதான் உண்மையான கல்வி. அந்நிய மொழியில் படிக்கும்போது அந்த சிந்தனா சக்தி தூண்டப்படுகிறதா என்று பார்த்தால் எனக்குத் தெரிந்த வரையில் இருக்கக்கூடிய சிந்தனா சக்தி சிதைந்து விடுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஏதோ படிக்கக் கூடாது என்பதற்காகவே ஆங்கிலத்தைத் தவிர்த்து விட்டு பிரதேச மொழி போதனாமொழியாக வேண்டும் என்று சொல்லவில்லை, அறிவை குறைப்பதற்கு, கல்வித்திறனை குறைப்பதற்கு அல்ல. அறிவுத் திறனை இன்னும் செம்மைப்படுத்துவதற்கு. உண்மையிலேயே நமது குழந்தைகளுக்கு ஏதோ எழுதப் படிக்க வைத்து விட்டு 45 மார்க்குகள் வாங்கினால் போதும் என்று இல்லாமல் இயற்கையிலேயே சிந்தனா சக்தி பெற்று அதன் மூலமாக மற்றவர்கள் எழுதிய பாடத்தைப் படிக்கக்கூடிய, மற்றவர்கள் எழுதிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள, புதிய கருத்துக்களை எண்ணுகிறவர்களாக, போதிய அறிவை சிருஷ்டிக்க வேண்டியவர்களாக அவர்கள் வர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. 150 வருஷங்களாக நாம் ஆங்கிலப் படிப்பு படித்து வந்திருக்கிறோம். அப்படிப் படித்து விட்டு எத்தனை நிபுணர்கள் வந்திருக்கிறார்கள் என்பதையும் கொஞ்சம் யோசனை செய்து பார்க்கவேண்டும். ஆங்கிலக் கவிகள் எத்தனை பேர்கள் நம்மிடத்தில் தோன்றியிருக்கிறார்கள் என்றும் பார்க்கவேண்டும். சாதாரணமாகச் சொல்லுவார்கள் ஒரிஜினல் புக்ஸ் என்று. அதன்படி அவர் அவர்களாகவே அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லக்கூடிய அளவில் எத்தனை வெளி வந்திருக்கின்றன என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் அது நூற்றுக்கணக்காக இருக்காது; ஏதோ சிறிய எண்ணிக்கையாகத்தான் இருக்கும். நமது இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால் பல லட்சக்கணக்கான மக்கள் படித்து பாண்டித்தியம் பெற்றிருக்கிறார்கள். புதிய கருத்துக்களை ஆங்கிலத்தில் வெளியிட முடிந்திருக்கிறதா என்று பாருங்கள். அதே மாதிரி சிறு சிறு நாடுகளை எடுத்துக்கொண்டால், அப்படி முன்னேறி வருகிற நாடுகளை எடுத்துக் கொண்டால், அவைகள் புதிய கருத்துக்களை, புதிய நூல்களை புதிய முறையில் விஞ்ஞானக் கருத்துக்கள் புதிய தத்துவக் கருத்துக்கள் எல்லாம் வெளியிடுகின்றன. இங்கே நமக்கு அறிவுக்குக் குறைவு இல்லை, அதிலும் தமிழ் நாட்டில் அறிவுக்குக் குறைவா ? என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன். குறைவில்லை. ஆனால் வேறு ஒரு பயம் நம்மை அமுக்கிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு நீச்சல் கற்றுக்கொண்டாலும்கூட பாரத்தைக் கட்டிக்கொண்டு நீந்த வேண்டும் என்பது முடியாத காரியம். அதைத்தான் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம். இன்றைக்கு ஆங்கிலம் தான் நம்முடைய கல்வித் தரத்தை உயர்த்தும் என்று நினைக்கிறவர்கள்

தயவு செய்து கொஞ்சம் பார்க்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் தைர்யமாக குழந்தைப் பருவத்திலிருந்தே, ஆரம்பப் பள்ளியிலிருந்தே ஆங்கிலம் படிக்கும்படியான ஒரு முடிவுக்கு வருவதற்கு தயாராக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அப்படிச் சொல்ல முடியுமே தவிர, அதைச் சொல்வதற்குதைர்யம் இல்லாதபோது கல்லூரியில் மட்டும் ஆங்கிலத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது ஓரளவு கோழைத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையினால் தான் இன்றைக்கு ஆங்கிலம் இருந்தாலும் கல்வி அறிவைப் பெற முடியும் என்று சொல்லுகிறவர்கள் தமிழைப் பற்றியும் அப்படித்தான் சொல்லுவார்கள். ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்தால் போதும் என்று சொல்லி ஆரம்பப் பள்ளியிலிருந்தே ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும் என்றால்தான் ஓரளவு மொழிப் பிரச்னையைத் தீர்க்க முடியும். அப்படி யாராவது, அவர் அரசியல் தலைவராக இருந்தாலும் சரி அல்லது கல்வித் தலைவராக இருந்தாலும் சரி அல்லது எந்தத் தலைவராக இருந்தாலும் சரி, அவர்கள் இன்றைக்கு மக்களிடத்தில் சென்று இதற்கு ஆதரவு பெற்றுவிடுவார்களேயானால் அவருக்கு நான் அடி பணிந்து வணங்குகிறேன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். நானும் அவரை பெரிய மகான் என்று போற்றுகிறேன். அது காலப் போக்குக்கு எதிராக செல்லக்கூடியதாக இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இது மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தே அல்ல. ஆகையினால்தான் அதன் மூலமாக நம்முடைய பண்பை மாற்றி அமைக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

வெறும் மொழி படிப்பது மட்டுமல்ல. நம்முடைய பண்பே மாறி வரக்கூடிய நிலைமையைப் பாருங்கள். இந்த நிலைமை நீடிக்கவேண்டுமென்று யாரும் விரும்பமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு நல்ல அளவு மாறுதல் ஏற்படும் வரையில் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டும். ஆனால் ஆங்கிலம்தான் தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்று சொன்னால், என்னைப் பொறுத்த வரையிலே அது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. இங்கு இருக்கக்கூடிய அங்கத்தினர்களும் அவ்வாறே நினைப்பார்கள் என்று நம்புகிறேன். ஆங்கிலத்திற்குப் பதிலாக இன்னொரு மொழியை ஏற்றுக்கொள்ளுவதாயிருந்தால், அதற்கு ஆங்கிலமே இருந்துவிடலாம். ஏனென்றால் ஆங்கில மொழியில் வளம் இருக்கிறது, உலகம் பூராவும் வியாபித்து இருக்கக்கூடிய மொழியாக இருக்கிறது. நம்முடைய கல்வி பயனுள்ளதாக இருக்கவேண்டும், ஒரு மொழியை பயன்படக்கூடியமுறையில் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லும்பொழுது அன்னிய மொழி இருக்கிற வரையிலே, தாய் மொழி இல்லாத ஒரு மொழி இருக்கிற வரையிலே, கருத்துக்களை புரிந்துகொள்ள முடியாது. சிந்தனை சக்தியின் வளர்ச்சி சரியான முறையிலே ஏற்படாது என்ற அடிப்படையிலே பார்க்கும்பொழுது ஆங்கிலத்திற்கு இடமில்லை, இந்திக்கும் இடமில்லை. அந்தந்த பகுதியிலே தாய் மொழி எதுவாக இருக்கிறதோ அதுதான் போதனை மொழியாக அமையவேண்டுமென்பதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இருப்பதற்கு இடமில்லை என்பது என்னுடைய கருத்து. இதை உடனடியாகச் செய்துவிடமுடியுமா என்றால், அவ்வாறும் செய்ய முடியாது. இந்த மாறுதலை எந்த விதத்திலே செய்யவேண்டுமென்பது பற்றி பின்னாலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். கல்லூரியிலே எந்த மொழி போதனை மொழியாக இருக்கவேண்டுமென்பது பற்றி கமிஷன் செய்திருக்கக்கூடிய சிபார்சுகளை நாம் ஏற்றுக்கொள்ளுவதற்கு தயாராக இல்லை. அவர்கள் அதை வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், சூசகமாகச் சொல்லியிருப்பது, இப்பொழுது இருக்கக்கூடிய போக்கிற்கு விரோதமானது. அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றைக்கு போதனை மொழி ஆங்கிலத்தில் இருப்பதிலிருந்து மாறுதல் ஏற்படவேண்டுமானால், அது தாய் மொழியாகத்தான் இருக்கமுடியும், பிராந்திய மொழியாகத் தான் இருக்க முடியும் என்கின்ற கருத்தை நாம் இந்தப் பகுதியில் வற்புறுத்தியிருக்கிறோம். அதுபற்றி இந்தச் சபையில் இருப்பவர்களுக்கு மாறுபட்ட கருத்து இருப்பதற்கு இடமில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மேல் சபையிலே இதற்கும் மேலான கருத்துகள்





தோன்றலாம். இந்தச் சபையை பொறுத்தவரையிலே் நாம் சாதாரண மக்கள், சாதாரண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சாதாரண அறிவுதான் • நமக்கு உள்ளது. ஆனால் எனக்குத் தெரிந்தவரையிலே இதுதான் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியது, நியாயமானது, சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையினாலே இதுபற்றி அதிகமாக விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

**Sri A. GOVINDASAMY : He is insulting the House, Sir.**

**The Hon. Sri C. SUBRAMANIAM : This is the age of the common man. I am proud of it. I am not insulting this House, when I say, I am representative of the common man.**—அடுத்த 4-வது பகுதி—**Language in offices and institutions under the control of the State Governments,**

நம்முடைய நிர்வாகம், அதாவது ராஜ்ய சர்க்காரைப் பொறுத்த வரையில் எந்த மொழியில் இருக்கவேண்டுமென்பது பற்றி முடிவு செய்யக்கூடிய பொறுப்பு ராஜ்ய சட்ட சபைக்குத்தான் விடப்பட்டிருக்கிறது நமது அரசியல் சட்டத்திலே. இதைப் பொறுத்தவரையில் யாரும் இந்த மொழி தான் இருக்கவேண்டுமென்று எந்த ராஜ்ய சர்க்காரையும் நிர்பந்திக்க முடியாது. அந்த முறையிலே நாம் ஒரு முடிவு எடுத்துவிட்டோம். சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பே இங்கு ஒரு சட்டம் இயற்றி விட்டோம். தமிழ் மொழிதான் சென்னை ராாஜ்யத்தின் நிர்வாக மொழியாக இருக்கவேண்டுமென்பதுபற்றி யாருக்கும் சந்தேகம் வந்து விடக்கூடாது. ஒரு சமயம் வேறு மொழியை இங்கே கொண்டுவரலாம் என்று யாராவது ஆசைப்பட்டுக்கொண்டிருந்தால், அதனால் வேறு மொழி இங்கு வந்து விடுமோ என்று சிலர் பயப்படக்கூடும். வேறு யாராவது அம்மாதிரி ஆசைப்பட்டுக்கொண்டிருந்தால் அதை நீக்கக்கூடிய முறையிலே, இங்கு இருப்பவர்களின் பயத்தைப் போக்கக்கூடிய முறையிலே இது பற்றி சட்டம் இயற்றிவிட்டோம். தமிழை நிர்வாக மொழியாகக் கொண்டுவருவதற்கு பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்பதை இந்தச் சபையிலே எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையிலே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக தமிழ் மொழி நிர்வாக மொழியாக வரும் என்பதை வலியுறுத்துகின்ற முறையிலே பொங்கல் திருநாள் அன்று 1,000 அலுவலகங்களில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தோம். அவைகளில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இன்றைக்கு இயங்கி வருகிறது. இதேமாதிரி தொடர்ந்து மேலும் பல்வேறு நிர்வாகத் துறைகளிலே தமிழ் இடம் பெறும் என்பது பற்றி யாரும் சந்தேகப்படவேண்டியதில்லை நாம் இந்தச் சபையிலே இருக்கும்வரையில்.

அடுத்தபடியாக இருக்கக்கூடிய பகுதி—**Language in State Legislatures** அதைப் பொறுத்தவரையிலே முடிவு செய்யக்கூடியது நாம்தான். இங்கே எந்த மொழியிலே நிர்வாகத்தை நடத்தவேண்டும், நடவடிக்கைகளை நடத்த வேண்டுமென்று முடிவு செய்யக்கூடிய பொறுப்பு நமக்குத் தான் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கமிஷன் கொஞ்சம் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்திருக்கிறது. **"We consider that it is essential when the time comes for this changeover that the entire Statute Book of the country should be in one language which of course cannot be other than Hindi. Therefore, the language of the Legislatures of the States as well as the Parliament and also, of course, consequently the language of Statutory orders, rules, etc., issued under any law, should be the Hindi language."** என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய கருத்து இங்கே செய்யப்படும் சட்டங்களெல்லாம் தமிழிலேயே செய்யப்படவேண்டும். அதற்கேற்ற காலம் வரும்பொழுது, உத்தரவுகள் போடும்பொழுது தமிழிலேயே போடப்படவேண்டும். அவை

மட்டுமோ பொறுத்தது அல்ல. இந்தப் பிரச்னை இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களையும் பொறுத்தது. ஆகையால் இந்தப் பிரச்னை சம்பந்தமாக எடுக்கபடக்கூடிய முடிவு நமக்குச் சாதகமாக இருக்கிறதா என்று மட்டும் பார்க்கக்கூடாது. அதே மாதிரி மற்ற ராஜ்யத்தினரும் எடுக்கப்படக்கூடிய முடிவு அவரவர்களுக்குச் சாதகமாக இருக்கிறதா என்று பார்க்கக்கூடாது. கொஞ்சம்கூட கஷ்டத்தைப் பிறருக்கு கொடுக்காத ஏற்பாட்டை செய்ய இயலாது என்றால், குறைந்த பட்ச கஷ்டத்தையே கொடுக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்வதற்கான முடிவை எடுக்க வேண்டும். ஆகவே, செய்யப்படக்கூடிய ஏற்பாடு நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் ஏறக்குறைய ஒரே பலனையோ பிரதி பலனையோ அளிக்க வேண்டும் என்பதை மனதிற்கொண்டு இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும். அந்தக் கண்ணோட்டத்துடன்தான் பிரச்னையைப் பரிசீலிக்க வேண்டும். நம் நாட்டில் இப்போது 14 மொழிகள் இருக்கின்றன, அவைகளுள் ஒன்றாகிய சமஸ்கிருதம் பேச்சு வழக்கில் இல்லை. அதன் காரணமாக, இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், சமஸ்கிருதத்தை ஒதுக்கினாலும் 13 மொழிகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த 13 மொழிகளையும் நிர்வாக மொழிகளாக எடுத்துக்கொள்ள முடியுமா? அப்படிச் செய்தால் அது ரொம்ப சௌகரியமாக இருக்கும். ஆனால் அது முடியாத காரியம். விஷயம் தெரிந்தவர்களும் அனுபவம் பெற்றவர்களும் 13 மொழிகளையும் நிர்வாக மொழிகளாக வைத்துக்கொள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். இந்த நிலையில், மற்ற மொழிகளை ஒதுக்கிவிட்டு ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று மொழிகளுக்கு இடம் கொடுக்க முடியுமே தவிர எல்லா மொழிகளுக்கும் இடம் கொடுக்க முடியாது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், எல்லா மொழிகளையும் நிர்வாக மொழிகளாக வைத்துக் கொள்ள முடியாததால், இப்பிரச்னை சிக்கலானதாக இருக்கிறது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டியதுதான் முக்கியமானதாக இருக்கிறது. நான் முன்பு சொன்னது போல், ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு எந்த மொழி நல்லது என்ற கண்ணோட்டத்துடன் பிரச்னையை அணுகினால், இப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது ; அப்படிச் செய்வது சண்டையைத் தான் கிளப்பும், ஆகவே நாடு பிரிய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இந்தக் கண்ணோட்டத்துடன் இப்பிரச்னையை அணுகி அதற்கான சண்டையைக் கிளப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். " நாம் சண்டையைக் கிளப்பும் நோக்கத்துடன் பிரச்னையை அணுகினால் மற்ற ராஜ்யத்தினரும் அவ்வாறு பிரச்னையை அணுகி சண்டையைக் கிளப்புவார்கள். நாம் நாட்டைப் பிரிக்கலாம் " என்ற கருத்துடன் அவர்கள் பிரச்னையை அணுகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு பிரச்னையை அணுகக்கூடாது. பிரச்னைக்குச் சரியான தீர்வு காண வேண்டுமென்று விரும்பும்போது நாம் அவ்வாறு பிரச்னையை அணுகினால் ஒருவருக்கொருவர் தூரத்தில்தான் சென்று கொண்டிருப்போம். இந்தக் கண்ணோட்டத்துடன்தான் சர்க்கார் மட்டுமின்றி ஸ்ரீ அண்ணாதுரை உட்பட எல்லா அரசியல்கட்சித் தலைவர்களும் பிரஸ்தாப கூட்டத்தில் இப்பிரச்னையை அணுகி ஆலோசனை செய்தார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**[Sri K. Sattanatha Karayalar (Temporary chairman) in the Chair).]**

**" Language in offices and institutions under the control of the Government of India "** என்பதுபற்றி பிரச்னையை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக, ரெயில்வே இலாகாவும் தபால் இலாகாவும் அகில இந்திய அடிப்படையில் இயங்கினாலும் அந்தந்தப் பிராந்திய மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. ரெயில்வே பிரிவுகள் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவையாக இருந்தாலும் அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள ரெயில்வேப் பிரிவுகள் அந்தந்தப் பிராந்திய மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. அதே மாதிரி அந்தந்தப் பகுதிகளிலுள்ள தபால் ஆபீஸ்கள் அந்தந்தப் பகுதி மக்களுடனும் அகில இந்தியாவுடனும் தொடர்பு கொண்டிருக்கின்றன. வரி வசூலிக்கும் இலாகாக்களான கஸ்டம்ஸ் இலாகா, எக்ஸைஸ் இலாகா போன்ற இலாகாக்களும் இதே நிலையில் இருக்கின்றன. மொழிப்



பிரச்னையில் இந்தப் பகுதியைப் பொறுத்த வரையிலும், அவைகள் தாங்கள் இருக்கும் அந்த அந்தப் பிராந்தியங்களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டும்; அதே சமயத்தில் அகில இந்தியாவிற்கும் அனுசரணையாக இருக்க வேண்டும். வேறு சில இலாகாக்கள் இருக்கின்றன. அவைகள் டெல்லியில் இருக்கின்றன. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், அவை மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமின்றி எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவாக அனுசரணையாக இருக்க வேண்டும். (மிஸ்டர் ஸ்பீகர் தலைமையில்). ஆகவே இந்தப் பிரச்னையை நாம் அகில இந்திய அடிப்படையில் அணுக வேண்டும்.

அந்தந்தப் பிராந்தியத்தின் நிர்வாக மொழி அந்தந்தப் பிராந்திய மொழியாகத்தான் இருக்க வேண்டும், பிராந்திய மொழிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஒரு சிபார்சு செய்திருப்பதை நாம் வரவேற்கவேண்டும். அதேசமயத்தில் அகில இந்தியாவுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய, தொடர்பு இருக்க வேண்டிய காரணத்தால், அப்படித் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய ஒரு மொழி அவர்களுக்குத் தெரிந்து இருக்க வேண்டுமென்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்தத் தொடர்பு மொழி ஒன்றும் அவசியம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அம்மொழி ஹிந்தியா, தமிழா, வேறு எந்த மொழியா என்பதை நாம் பின்னால் யோசித்துக் கொள்ளலாம். அதைப்பற்றியும் கமிஷன் சொல்லியிருக்கும் விஷயங்களிலே நாம் மாறுபட்ட கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியமே கிடையாது. அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையிலே நாமே ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

அகில இந்திய ரீதியாக அமைந்திருக்கும் நிர்வாகமொழி என்ன மொழியாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றித்தான் இன்றைக்கும் பெரும் பிரச்னையாக இருக்கிறது. அதிலே ஒரு சிலருடைய கருத்து, சட்டத்திலே போட்டிருக்கும் பிரகாரம் 15 வருஷம் முடிந்தவுடனே, அதாவது 1965-ம் வருஷத்திலிருந்து ஆங்கிலத்தையே பூராவும் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஹிந்தி நிர்வாக மொழியாக அமையவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் ஒரு சிலர். இன்னொரு சிலர், இன்னொரு கோடியிலே நின்றுகொண்டு, ஹிந்தி இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கக்கூடாது, ஆங்கிலம் தான் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லக்கூடியவர்கள் இன்னொரு பக்கம். ஹிந்திதான் இருக்கவேண்டுமென்று ஒரு கோடியிலே நின்றுகொண்டு சொல்லுகிறவர்கள் ஒரு பக்கம். ஆங்கிலம்தான் இருக்கவேண்டுமென்று இன்னொரு கோடியிலே நின்றுகொண்டு சொல்லுகிறவர்கள் இன்னொரு பக்கம். **Hindi never, English ever,** என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் ஒரு புறமும், **English never, Hindi ever** என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இன்னொரு புறமும் அணி வகுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இந்த அடிப்படையிலே இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியுமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்: எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இரண்டு உச்சாணிக் கொம்பிலே நின்று இருப்பவர்களுடைய இரண்டு பேருக்கும் மத்தியிலே ஒரு தீர்வு காணவேண்டும் என்பதைப்பற்றி எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்த மத்தியஸ்தத்தை யார் செய்கிறது என்ற தகராறு வந்துவிடுகிறது. "இதை எப்படிச் சென்னை அரசாங்கம் செய்யலாம் ? அதுவும் சென்னை அரசாங்கத்திலே இருக்கக்கூடிய, சட்டசபையில் இருக்கக்கூடிய அரசியல் கட்சித் தலைவர்கள் எப்படி சமாதானத்தைச் சொல்ல வரலாம் " என்ற முறையிலே வாதிக்கப்படுகிறது. யார் சொன்னால் மதிப்பு என்ற முறையிலே பல வாதங்கள் இன்றைக்கு நிகழ்வதைப் பார்க்கிறோம். யார் சொன்னால் மதிப்பு ஏற்படுகிறது என்ற வாதம் ஒருபுறம் இருக்கட்டும்.

இதில் சொல்லக்கூடிய யோசனைக்கு உள்ளிட்ட மதிப்பு இல்லையென்றால், யார் சொன்னாலும் புது மதிப்பு வராது. இதில் சொல்லக்கூடிய யோசனைக்கு உள்ளிட்ட மதிப்பு இல்லையென்றால், என்போன்ற சிறியவர்கள் .

மட்டுமோ பொறுத்தது அல்ல. இந்தப் பிரச்னை இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களையும் பொறுத்தது. ஆகையால் இந்தப் பிரச்னை சம்பந்தமாக எடுக்கபடக்கூடிய முடிவு நமக்குச் சாதகமாக இருக்கிறதா என்று மட்டும் பார்க்கக்கூடாது. அதே மாதிரி மற்ற ராஜ்யத்தினரும் எடுக்கப்படக்கூடிய முடிவு அவரவர்களுக்குச் சாதகமாக இருக்கிறதா என்று பார்க்கக்கூடாது. கொஞ்சம்கூட கஷ்டத்தைப் பிறருக்கு கொடுக்காத ஏற்பாட்டை செய்ய இயலாது என்றால், குறைந்த பட்ச கஷ்டத்தையே கொடுக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்வதற்கான முடிவை எடுக்க வேண்டும். ஆகவே, செய்யப்படக்கூடிய ஏற்பாடு நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் ஏறக்குறைய ஒரே பலனையோ பிரதி பலனையோ அளிக்க வேண்டும் என்பதை மனதிற்கொண்டு இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும். அந்தக் கண்ணோட்டத்துடன்தான் பிரச்னையைப் பரிசீலிக்க வேண்டும். நம் நாட்டில் இப்போது 14 மொழிகள் இருக்கின்றன, அவைகளுள் ஒன்றாகிய சமஸ்கிருதம் பேச்சு வழக்கில் இல்லை. அதன் காரணமாக, இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், சமஸ்கிருதத்தை ஒதுக்கினாலும் 13 மொழிகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த 13 மொழிகளையும் நிர்வாக மொழிகளாக எடுத்துக்கொள்ள முடியுமா? அப்படிச் செய்தால் அது ரொம்ப சௌகரியமாக இருக்கும். ஆனால் அது முடியாத காரியம். விஷயம் தெரிந்தவர்களும் அனுபவம் பெற்றவர்களும் 13 மொழிகளையும் நிர்வாக மொழிகளாக வைத்துக்கொள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். இந்த நிலையில், மற்ற மொழிகளை ஒதுக்கிவிட்டு ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று மொழிகளுக்கு இடம் கொடுக்க முடியுமே தவிர எல்லா மொழிகளுக்கும் இடம் கொடுக்க முடியாது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், எல்லா மொழிகளையும் நிர்வாக மொழிகளாக வைத்துக் கொள்ள முடியாததால், இப்பிரச்னை சிக்கலானதாக இருக்கிறது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டியதுதான் முக்கியமானதாக இருக்கிறது. நான் முன்பு சொன்னது போல், ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு எந்த மொழி நல்லது என்ற கண்ணோட்டத்துடன் பிரச்னையை அணுகினால், இப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது ; அப்படிச் செய்வது சண்டையைத் தான் கிளப்பும், ஆகவே நாடு பிரிய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இந்தக் கண்ணோட்டத்துடன் இப்பிரச்னையை அணுகி அதற்கான சண்டையைக் கிளப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். " நாம் சண்டையைக் கிளப்பும் நோக்கத்துடன் பிரச்னையை அணுகினால் மற்ற ராஜ்யத்தினரும் அவ்வாறு பிரச்னையை அணுகி சண்டையைக் கிளப்புவார்கள். நாம் நாட்டைப் பிரிக்கலாம் " என்ற கருத்துடன் அவர்கள் பிரச்னையை அணுகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு பிரச்னையை அணுகக் கூடாது. பிரச்னைக்குச் சரியான தீர்வு காண வேண்டுமென்று விரும்பும்போது நாம் அவ்வாறு பிரச்னையை அணுகினால் ஒருவருக்கொருவர் தூரத்தில்தான் சென்று கொண்டிருப்போம். இந்தக் கண்ணோட்டத்துடன்தான் சர்க்கார் மட்டுமின்றி ஸ்ரீ அண்ணாதுரை உட்பட எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் பிரஸ்தாப கூட்டத்தில் இப்பிரச்னையை அணுகி ஆலோசனை செய்தார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**[Sri K. Sattanatha Karayalar (Temporary chairman) in the Chair).]**

**"Language in offices and institutions under the control of the Government of India"** என்பதுபற்றி பிரச்னையை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக, ரெயில்வே இலாகாவும் தபால் இலாகாவும் அகில இந்திய அடிப்படையில் இயங்கினாலும் அந்தந்தப் பிராந்திய மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. ரெயில்வே பிரிவுகள் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவையாக இருந்தாலும் அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள ரெயில்வேப் பிரிவுகள் அந்தந்தப் பிராந்திய மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. அதே மாதிரி அந்தந்தப் பகுதிகளிலுள்ள தபால் ஆபீஸ்கள் அந்தந்தப் பகுதி மக்களுடனும் அகில இந்தியாவுடனும் தொடர்பு கொண்டிருக்கின்றன. வரி வசூலிக்கும் இலாகாக்களான கஸ்டம்ஸ் இலாகா, எக்ஸைஸ் இலாகா போன்ற இலாகாக்களும் இதே நிலையில் இருக்கின்றன. மொழிப்



பிரச்னையில் இந்தப் பகுதியைப் பொறுத்த வரையிலும், அவைகள் தாங்கள் இருக்கும் அந்த அந்தப் பிராந்தியங்களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டும்; அதே சமயத்தில் அகில இந்தியாவிற்கும் அனுசரணையாக இருக்க வேண்டும். வேறு சில இலாகாக்கள் இருக்கின்றன. அவைகள் டெல்லியில் இருக்கின்றன. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், அவை மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமின்றி எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவாக அனுசரணையாக இருக்க வேண்டும். (மீண்டும் ஸ்பீகர் தலைமையில்). ஆகவே இந்தப் பிரச்னையை நாம் அகில இந்திய அடிப்படையில் அணுக வேண்டும்.

அந்தந்தப் பிராந்தியத்தின் நிர்வாக மொழி அந்தந்தப் பிராந்திய மொழியாகத்தான் இருக்க வேண்டும், பிராந்திய மொழிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஒரு சிபார்சு செய்திருப்பதை நாம் வரவேற்கவேண்டும். அதே சமயத்தில் அகில இந்தியாவுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய, தொடர்பு இருக்க வேண்டிய காரணத்தால், அப்படித் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய ஒரு மொழி அவர்களுக்குத் தெரிந்து இருக்க வேண்டுமென்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்தத் தொடர்பு மொழி ஒன்றும் அவசியம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அம்மொழி ஹிந்தியா, தமிழா, வேறு எந்த மொழியா என்பதை நாம் பின்னால் யோசித்துக் கொள்ளலாம். அதைப்பற்றியும் கமிஷன் சொல்லியிருக்கும் விஷயங்களிலே நாம் மாறுபட்ட கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியமே கிடையாது. அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொள்ளக்கூடிய முறையிலே நாமே ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

அகில இந்திய ரீதியாக அமைந்திருக்கும் நிர்வாகமொழி என்ன மொழியாக இருக்கவேண்டும் என்பதைபற்றித்தான் இன்றைக்கும் பெரும் பிரச்னையாக இருக்கிறது. அதிலே ஒரு சிலருடைய கருத்து, சட்டத்திலே போட்டிருக்கும் பிரகாரம் 15 வருஷம் முடிந்தவுடனே, அதாவது 1965-ம் வருஷத்திலிருந்து ஆங்கிலத்தையே பூராவும் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஹிந்தி நிர்வாக மொழியாக அமையவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் ஒரு சிலர். இன்னொரு சிலர், இன்னொரு கோடியிலே நின்று கொண்டு, ஹிந்தி இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கக்கூடாது, ஆங்கிலம் தான் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லக்கூடியவர்கள் இன்னொரு பக்கம். ஹிந்திதான் இருக்கவேண்டுமென்று ஒரு கோடியிலே நின்றுகொண்டு சொல்லுகிறவர்கள் ஒரு பக்கம். ஆங்கிலம்தான் இருக்கவேண்டுமென்று இன்னொரு கோடியிலே நின்றுகொண்டு சொல்லுகிறவர்கள் இன்னொரு பக்கம். **Hindi never, English ever,** என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் ஒரு புறமும், **English never, Hindi ever** என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் இன்னொரு புறமும் அணி வகுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இந்த அடிப்படையிலே இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியுமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இரண்டு உச்சாணிக் கொம்பிலே நின்று இருப்பவர்களுடைய இரண்டு பேருக்கும் மத்தியிலே ஒரு தீர்வு காணவேண்டும் என்பதைப்பற்றி எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்த மத்தியஸ்தத்தை யார் செய்கிறது என்ற தகராறு வந்துவிடுகிறது. "இதை எப்படிச் சென்னை அரசாங்கம் செய்யலாம் ? அதுவும் சென்னை அரசாங்கத்திலே இருக்கக்கூடிய, சட்டசபையில் இருக்கக்கூடிய அரசியல் கட்சித் தலைவர்கள் எப்படி சமாதானத்தைச் சொல்ல வரலாம்" என்ற முறையிலே வாதிக்கப்படுகிறது. யார் சொன்னால் மதிப்பு என்ற முறையிலே பல வாதங்கள் இன்றைக்கு நிகழ்வதைப் பார்க்கிறோம். யார் சொன்னால் மதிப்பு ஏற்படுகிறது என்ற வாதம் ஒருபுறம் இருக்கட்டும்.

இதில் சொல்லக்கூடிய யோசனைக்கு உள்ளிட்ட மதிப்பு இல்லையென்றால், யார் சொன்னாலும் புது மதிப்பு வராது. இதில் சொல்லக்கூடிய யோசனைக்கு உள்ளிட்ட மதிப்பு இல்லையென்றால், என்போன்ற சிறியவர்கள்

சொன்னதினுலும் மதிப்பு குறைந்துவிடாது. ஆகவே, யார் சொன்னுர்
கள் என்பதைப்பற்றி பிரச்னே வேண்டியதில்லே. எந்த ஆள் சொன்னுர்
என்ற அடிப்படையில் போனுல் பிரச்னேயைத் தீர்த்துக்கொள்ள முடி
யாது. ஆகையால், எது நியாயம் என்பதைப்பற்றி யோசித்துப் பார்க்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அப்படிப் பார்க்கும்போது, இன்றைக்குப் பதினைந்து வருஷம் கழித்து
ஹிந்தி நிர்வாக மொழியாக அமைந்து, இதிலே நம்முடைய நிர்வாகத்தை
நடத்த முடியுமா என்று பார்க்கும்போது, நம்முடைய மொழிக் கமிஷ
னுக்குக் கொடுத்த அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.
இப்பொழுது இந்த மெமொராண்டத்திலும் தெளிவாக குறிப்பிட்டி
ருக்கிறோம். ஹிந்தி மட்டும் நிர்வாக மொழியாக அமைந்து, ஆங்கிலத்
திற்குப் பதிலாக ஹிந்தி ஏற்றதாக எடுத்துக் கொண்டதிலிருந்து நம்
முடைய நிர்வாகத்தை நடத்தலாம் என்பது இப்பொழுது இருக்கும் நிலே
மையிலே முடியாத காரியம் என்று தெளிவாகக் கூறியிருக்கிறோம்.
அப்படி ஹிந்தியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வோமே
யாஞல், என்ன செய்வது? என்று நாம் முடிவுசெய்ய வேண்டிய அவ
சியத்திலே இருக்கிறோம். "முடியாது இருக்குமேயானுல்" எப்பொழுதுமே
ஹிந்தியை தள்ளிவிடலாமா என்பதையும் இன்றைக்கு நாம் யோசித்துப்
பார்க்கவேண்டும். ஒரு சிலர் சொல்லக்கூடிய கருத்து அதுதான். 1965-லே
ஹிந்தி தயாராக இருந்து, நிர்வாகத்திற்குத் தகுந்த மொழியாக வளர்ச்சி
பெறப் போவதில்லே என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். மற்ற
வர்களும் சொல்லுகிறுர்கள், வளர்ச்சி பெறவில்லே என்பதனுல் பூராவும்
நீக்கிவிடலாமா, இல்லாவிட்டால் வேறு ஏதாவது ஒரு காரியம் செய்யலாமா
என்பதுதான் பிரச்னே.

நாம் இன்றைக்கு நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று நினேக்கி
றோம். நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டுமாஞல், தண்ணீரில் இறங்கித்தான்
நீந்தக் கற்றுக்கொள்ள முடியும். தண்ணீரில் இறங்க வேண்டுமென்பதற்
காக, அதற்கு வேண்டிய உதவிகள் எல்லாம் செய்து கொள்ளாமல்
திடீரென்று தண்ணீரில் இறங்கினுல் மூழ்கிப் போய்விடுவோம். நீந்தக்
கற்றுக்கொள்ளவேண்டுமென்று நினேத்து தண்ணீரில் இறங்கி, மூழ்கிப்
போய்விடுவோம். அதற்காக என்ன செய்கிறோம்? அதற்காக வேறு
ஒன்றை நாம் உதவியாக வைத்துக்கொள்ளுகிறோம். சுரைக்காய் அல்லது
கட்டை போன்றவற்றை கட்டிக்கொண்டு தண்ணீரில் இறங்குகிறோம். எதற்
காக? நீந்தக் கற்றுக்கொள்வதற்காக. எதையாவது உதவியாக வைத்
துக்கொண்டுதான் தண்ணீரில் மிதக்க முடியும்; பிறகு நீந்தவும் கற்றுக்
கொள்ள முடியும். அப்படி தண்ணீரில் இறங்காமலேயே நீந்தக் கற்றுக்
கொள்ளவேண்டுமென்றுல் அது முடியாத காரியம். வேறு எந்த
விதமான உதவியும் இல்லாமல் தண்ணீரில் இறங்கினுல் ஆபத்துத்தான்
ஏற்படும். அதுமாதிரிதான் நாம் சொல்லக்கூடிய யோசனே என்ன
வென்றுல், இப்பொழுது நிர்வாக மொழியாக இல்லாத எந்த ஒரு
மொழியையும் அதற்கேற்ற வளர்ச்சி பெறுவதற்கு முன்னுல் ஏற்றுக்
கொண்டாலும், உடனே தண்ணீரில் இறங்குகிறவருக்கு ஏற்படக்கூடிய
ஆபத்துதான் நிர்வாக விஷயத்திலும் ஏற்படும். இது ஹிந்திக்கும்
பொருந்தும், தமிழுக்கும் பொருந்தும். அதைத்தான் யோசித்துப்
பார்க்க வேண்டும்.

ஹிந்தி போன்ற மொழி நிர்வாக மொழியானுல், நிர்வாகத்தின்
தரம் குறைந்துவிடும் என்று சொல்லுகிறவர்கள் தமிழ் இங்கு ஆட்சி
மொழியாகவும், தெலுங்கு ஆந்திராவிலும் மலேயாளம் கேரளத்திலும்,
கன்னடம் கர்நாடகத்திலும் ஆட்சி மொழியாக இருந்தால் இந்தத்தரம்
குறைந்துவிடும் என்று எண்ணுகிறுர்கள். ஆனுல், சொல்லப் பயப்
படுகிறுர்கள்.

ஹிந்தி நிர்வாக மொழியாக வரக்கூடாது, ஆங்கிலம்தான் நீடித்திருக்க
வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் அந்த முதல் சண்டையில் வெற்றி
பெற்றதற்குப் பிறகு பிராந்திய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வரத்





தகுதியில்லே என்ற அடுத்த சண்டையையும் ஆரம்பிக்கலாம். ஹிந்திக்குப் பதிலாக அங்கேயே ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்கள், அதுபோல் இங்கேயும் ஆங்கிலம் தொடர்ந்து இருந்தால்தான் நிர்வாகம் நடை பெறும் என்று சொல்லலாம். முதல் சண்டையில் ஜயித்ததற்குப் பிறகு அடுத்ததையும் ஆரம்பிக்கக்கூடும். இது ஏதோ பிரித்து வைத்து தாக்குவது போல் தெரிகிறது. இவர்களுடைய எண்ணப்படி அங்கே ஆங்கிலத்தை நீடித்து வைத்து விடுவார்களாஞல், அங்கே ஆங்கிலம் முடிவாகி விட்ட பிறகு, நாம் அங்கேயும் ஆங்கிலத்தில் பங்கு கொள்ளவேண்டியவர்களாகி றேம். ஆகவே இங்கேயும் ஆங்கிலம்தான் தொடர்ந்து இருக்கவேண்டும் என்ற நிலேமை ஏற்பட்டுவிடும். அகில இந்திய ரீதியிலே முடிவு ஏற் பட்டதற்குப்பிறகு வேறு வழியில்லே என்ற கட்டம்தான் வந்து சேரும்.

அப்படி ஆங்கிலம் நிர்வாக மொழியாக நீடிக்க வேண்டுமென்ற நிலேமை வர அனுமதித்தோமாஞல் அதைத் தொடர்ந்து எல்லாத் துறையிலும் அதுவே இருக்க வேண்டியதாகிவிடும். நிர்வாக மொழி ஆங்கிலமாக இருக்கும் பட்சத்தில் அதுவே போதனு மொழியாகவும் இருக்க வேண்டி வந்துவிடும். படிப்படியாக நர்ஸரி ஸ்கூல் முதல் உயர் படிப்பு வரையில் ஆங்கிலமாக இருப்பதோடு வீட்டிலேயும் குழந்தைகள் ஆங்கிலத்தில் பேசினுல் தான் முடியும் என்ற நிலேமைக்கு வந்து விடுவோம். இத்தகைய ஒரு முடிவை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமா ? ஆங்கிலம் தான் வேண்டும், மற்ற எந்த மொழியும் பக்கத்திலேகூட வரக்கூடாது என்று சொல்லு கிறவர்கள் தமிழைப்பற்றி, தெலுங்கைப் பற்றி, மலேயாளத்தைப் பற்றி, கன்னடத்தைப் பற்றி, என்ன சொல்லப்போகிறுர்கள் ? இன்றைக்கு நிர்வாகத்துறையிலே இருக்கும் இந்த மொழிகள் நிர்வாக மொழிகளாக அமைய முடியுமாஞல், அவைகள் வளர்ச்சியுள்ள வளம் பெற்ற மொழி களாக அமைய முடியுமாஞல் ஏன் அம்மாதிரி ஹிந்தி மொழியும் நிர்வாக மொழியாக வராது என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஆகவே ஒரு மொழிக்கு இன்றைக்குத் தகுதியில்லேயென்றுல் எப்போதைக்குமே தகுதியேற்படாது என்று சொல்லமுடியாது. எல்லா மொழிகளேயும் ஒரு பக்கம் தவிர்த்து விடவேண்டும், இன்றைக்கு இருக்கும் ஆங்கிலம் தான் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்று சொல்லமுடியுமா என்று கேட்கிறேன். நம்முடைய பொருளாதாரத்தை எடுத்துக் கொள் ளுங்கள். பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அதற்குப் பல்வேறு இயந்திர சாதனங்கள் நமக்கு வேண்டியதாக இருக்கின்றன. அந்த இயந்திரங்களே நாம் இன்றைக்குச் செய்யக்கூடிய நிலேமையிலில்லே. நம்முடைய தொழிற்சாலேகளும் அவை களேச் செய்யக் கூடிய நிலேமையில் இல்லே. வெளியிலிருந்து இயந்திர சாதனங்களே வரவழைத்து, அவைகளே வைத்துக்கொண்டு உற்பத்தியை பெருக்குகிறோம். ஹிந்திதான் வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் நம்முடைய பொருளாதாரத்தை பெருக்கவேண்டுமென்று நம்மூரிலே இல்லா தது ஒன்றும் வேண்டியதில்லே, என்று வெளியிலே இருந்து வரவழைக் கும் இயந்திர சாதனங்களேப் புறக்கணித்தால் பொருளாதார நிலேயிலே நாம் முன்னேற முடியுமா ? அல்லது வெளியிலே இருந்துதான் நாம் இப்பொழுது இயந்திரத்தை வாங்கிக் கொண்டிருக்கிறோம், அவைகள் தாம் திறமையாகவும் நுட்பதிறனுடனும் செய்யப்பட்டிருக்கின்றன, நம்மூரிலே எப்போதுமே இயந்திரங்களேச் செய்யக்கூடாது, வெளி நாட்டு இயந்திரங் களேத்தான் நாம் இன்றைக்கு உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கவேண்டு மென்றுல், அதுவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் இல்லே. இயந்தி ரத்திற்கு நாம் என்ன செய்யலாம் என்று யோசனே செய்து நாம் இங்கேயே ஏற்பாடு செய்கிறோம். அந்த இயந்திரங்களே கட்டுவதிலே எந்த எந்த பாகங்களே உடனடியாகச் செய்ய முடியும் என்பதை யோசித்து அவைகளே இங்கேயே செய்யலாம். மற்றவைகளே வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதுகூட நலம் என்று கருதியிருக்கிறோம்.

ஆகையால் இன்றைக்கு தமிழிலேயே நிர்வாகம் பூராவையும் நடத்த முடியவில்லே என்றுல் ஆங்கிலத்தைக் கூடவே உபயோகித்துக் கொள்ளு கிறோம். ஒரு பெரிய இயந்திரத்தை இந்நாட்டில் உற்பத்தி செய்ய

முடியவில்லை என்றாலும், அந்த இயந்திரத்தோடு பொறுத்தக்கூடிய பல
சிறு சிறு கருவிகளை இந் நாட்டிலேயே உற்பத்தி செய்துகொண்டு அந்தப்
பெரிய மூல இயந்திரத்தோடு பொறுத்திக் கொள்வது போலத்தான்
இதுவும். எப்படி நம்முடைய பொருளாதாரத்துறையில் வளம் பெற
வேண்டும் என்பதற்காக எவ்வளவு கருவிகளை நம்மால் உற்பத்தி செய்து
கொள்ள முடியுமோ அவ்வளவையும் இங்கேயே உற்பத்தி செய்து கொள்
வதைப்போலவே, நிர்வாக விஷயத்தில் எவ்வளவு தூரம் நம்முடைய
மொழியை உபயோகப்படுத்திக்கொள்ளமுடியுமோ அவ்வளவையும்
உபயோகப்படுத்திக்கொள்ள விரும்புகிறோம். முடியாத நிலையைச் சமாளிக்க
சிறிது காலம் ஆங்கிலத்தை வைத்திருந்தால் பிறகு தானே நம்முடைய
மொழி வளம் பெற்றவுடனேயே ஆங்கிலம் விலகிவிடும். இன்றையதினம்
பொருளாதாரத் துறையில் நாம் முன்னேற வேண்டும் என்பதற்காக
அந்நிய சாதனங்களை வாங்கும்போது, அந்நிய சாதனங்கள் எதையுமே
வாங்கக் கூடாது என்று சொல்பவர்கள் நம்முடைய விரோதிகளாவார்கள்.
அதே போல எல்லாச் சாதனங்களையும் வெளிநாட்டில் இருந்து தான்
வாங்கவேண்டும். இங்கே செய்யக்கூடிய சிறிய நீடில் கூட வெளிநாட்டில்
இருந்து வருவதற்குச் சமமாக இல்லை என்று சொல்பவர்களும், நாம்
செய்யக்கூடிய முயற்சியில் எதுவும் கூடாது என்று சொல்பவர்களும்
தேச விரோதிகளாகிவிடுகிறார்கள். இவர்களுடைய பேச்சு எல்லாம் நாட்
டினுடைய முன்னேற்றத்திற்குத் தடையாகத்தான் இருக்கின்றன.
ஆனால் நம்முடைய முயற்சி பொருளாதாரத் துறையிலும் சரி, மொழிச்
பிரச்னையிலும் சரி நம்முடைய நாட்டின் எதிர்கால முன்னேற்றம் ஒன்
றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அப்படிப் பார்க்கும்போதுதான்
நம்முடைய நாட்டின் தேசிய மொழியாக எந்த மொழி இருக்கவேண்டும்
எனத் தீர்மானிப்பதில் நாம் சரியான முடிவுக்கு வர இயலும். இந்தி
தான் பொது மொழி என்று இன்றையதினம் பேசப்பட்டு வந்தாலும்
நாம் இந்தி மொழியை பொது மொழியாக ஒப்புக்கொள்ளவேண்டாம்.
வேறு எந்த மொழியையாவது பொது மொழியாக ஒப்புக்கொள்ளவேண்டும்
என்று வற்புறுத்த முடியுமா என்றும் யோசித்துப் பார்க்கவேண்டும்.
இதுபற்றி அந்நியநாட்டில் இருந்து இங்கே வந்திருக்கிற நிபுணர்களிடமும்
பேசியிருக்கிறேன். எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள், "மூன்று மொழியை
நிர்வாக மொழியாக வைத்துக் கொள்ள முடியும்" என்பதாக.
நான்காக இருந்தால் கொஞ்சம் கஷ்டம் ஏற்படும். ஆகவே மூன்று மொழியை
தேசீய நிர்வாக மொழியாக வைத்துக்கொள்ள முடியுமா என்பதையும்
யோசித்துப் பார்க்கலாம்.

இந்தி மொழி வடக்கே இருக்கக்கூடியவர்கள் பேசக்கூடிய மொழி.
கிழக்கே இருக்கக் கூடியவர்களுடைய மொழி வங்காளம். ஆகவே இந்தி,
வங்காளம், தெற்கே இருக்கக் கூடியவர்களுடைய மொழி தமிழ் ஆகிய
இந்த மூன்று மொழியையும் நிர்வாக மொழியாகப் போட்டால் என்ன
என்பதும் யோசிக்கப்பட்டது. அப்படிச் செய்தால் ரொம்ப நன்றாக
இருக்கும். ஆனால் இங்கே இருக்கக்கூடியவர்கள் குறிப்பாக ஆந்திரர்கள்,
கன்னடியர்கள், மலையாளிகள் ஆகியவர்கள் தமிழை ஒப்புக்கொள்வார்களா?
தென்னாட்டில் பொது மொழியாக இவர்கள் எல்லோரும் தமிழை ஒப்புக்
கொண்டால் நம்முடைய எண்ணம் ஈடேறிவிடும். இது சாத்தியமில்லாத
பிரச்னை என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆகவே இருக்கக்கூடிய
நிலைமை என்ன ? (ஸ்ரீ எ.வி.பி. ஆசைத்தம்பி : ஆங்கிலமே இருக்கட்டும்.)
ஆங்கில மோகம் படைத்த ஆசைத்தம்பி அவர்கள் விடியவிடிய ராமாய
ணம் கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பா என்பது போல, ஆங்கிலமே
இருக்கட்டும் என்கிறார்கள். இத்தனை நேரம் நான் பேசிய பேச்சு, செவிடன்
காதில் ஊதிய சங்குபோல ஆகிவிட்டதே என்று நான் வருத்தப்படுகிறேன்.

நாம் இன்றைக்கு இருக்கக்கூடிய உண்மையான நிலவரத்தை
நன்றாகப் புரிந்து கொண்டாக வேண்டும். இப்போது இருக்கக்கூடிய சூழ்
நிலையில் எந்த வகையில் நாட்டின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக்
கொண்டு தீர்வு காண வேண்டும் என்பதைப் பற்றியும் சிந்தித்தாக வேண்டும்.
தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சிலர் ஆங்கிலம் இருக்கவேண்டும்





என்று சொல்கிறார்கள். வங்காளத்திலும் சிலர் சொல்கிறார்கள்,
இவர்கள் எல்லோரும் சொல்கிறார்களே என்று ஒப்புக்கொள்வதைவிட
இவர்கள் சொன்னாலும் இவ்விஷயத்தில் உண்மை நிலவரம் என்ன
என்பதை உணரவேண்டும். இங்கு இருக்கக்கூடியவர்களில் யாரும் இந்தி
யாவின் பொதுமொழியாக தமிழ் தான் இருக்கவேண்டும் என்று சொல்ல
வில்லை. (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் : இனிமேல் வரலாம்.) இனிமேல்
வரலாம் என்கிற தைரியத்தோடு சொல்வதற்கு எனக்கு வார்த்தை வர
வில்லை. வங்காளத்தில் இருக்கக் கூடியவர்களிலும் யாரும் வங்காளம்
தான் பொது மொழியாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்திக்
கொண்டு முன்வரவில்லை. ஆகையால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை
மையில் நம் பகுதியில் இருக்கக்கூடியவர்களில் இந்தியே வேண்டாம்
என்று சொல்லக்கூடிய ஆசைத்தம்பி போன்றவர்களும் சரி, அவர்களது
கட்சியும்கூட திராவிட நாட்டை அமைத்தாலும் திராவிட மொழி தான்
இந்தியாவில் பொதுமொழியாக இருக்கவேண்டும் என்று சொல்ல முன்
வரவில்லை. அவர்களுடைய பேச்சு ஆங்கிலம்தான் இருக்கவேண்டும்.
ஆங்கிலம் இல்லாவிட்டால் நாம் எப்படி வாழ்வது என்கிற ரீதியில்தான்
போகிறது. இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆங்கிலேயர்கள்
இல்லாவிட்டால் நாம் எப்படி வாழ முடியும், அவர்களுடைய துப்பாக்கி
இல்லாவிட்டால் நாட்டில் ரணகளம்தான் ஏற்படும் என்று அவர்கள் எப்படி
எதிர்பார்த்தார்களோ அப்படித்தான் இந்தப் பிரச்னையிலும் ஆங்கிலம்
இல்லாவிட்டால் எப்படி வாழ்வது, ஆங்கிலம் ஒழிக்கப்பட்டுவிட்டால் நாட்டில்
பலவிதமான சிக்கல்கள் தாம் உண்டாகும் என்று நினைக்கிறார்கள். அவர்
களுடைய நினைப்பு ஒரே வகையில்தான் போகிறது.

ஆகையால் இன்றைக்கு இரண்டு கட்சி உண்டாயிருக்கிறது. ஆங்கிலம்
தான் வேண்டும் என்று சொல்கிற கட்சி ஒன்று—இதில் நானும்
சேர்ந்து கொள்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். இன்னொரு
கட்சி இந்தி தான் வேண்டும் என்று சொல்லக்கூடியது. இந்த இரண்டுக்
கும் பொதுவாக ஒரு தீர்ப்பு காணமுடியுமா என்று பார்க்கவேண்டும்.
அது நாமும் ஒத்துக் கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும். அவர்களும்
ஒத்துக்கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும். நமக்கு மாத்திரம் சம்மத
மானதாக இருந்தால் போதாது. அவர்களுடைய எண்ணத்தை நிறை
வேற்றக்கூடிய தீர்வாக இருந்தாலும் போதாது. இந்த இரண்டு
கட்சியினருடைய மனத்திற்கும் பூர்ண திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்க
வேண்டும்.

ஆகையால்தான் இதைப்பற்றி நாங்கள் எல்லோரும் யோசித்து, பிறகு
கட்சித் தலைவர்கள் எல்லோருடனும் யோசித்து, அவர்களது சிறந்த
அறிவின் பயனாக ஒரு தீர்வை ஏற்படுத்தினோம். இரண்டு மொழியை
வைத்துக் கொண்டு நிர்வாகம் செய்வது என்பது கொஞ்சமும் கடினமா
னது இல்லை. ஆகவே இந்தியும், ஆங்கிலமும் இருக்கலாம் என்று சொல்லி
யிருக்கிறோம். உலகத்தினுடைய அனுபவத்தை—குறிப்பாக பல நாடு
களுடைய அனுபவத்தைப் பார்க்கும்போது இரண்டு மொழியை வைத்துக்
கொண்டு நடத்துவது மிகவும் எளிதாகும். சமீபத்தில் ஸ்விட்ஜர்லாந்து
தேசத்தின் உப ஜனாதிபதி அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். அடுத்த
படியாக அவர்தான் ஜனாதிபதியாக வர இருக்கிறார்—அங்கே முறை
போட்டுக்கொள்வது வழக்கம்—அவருடைய நாட்டிலே மூன்று பாஷை,
மூன்று இனங்களும் கூட, அந்த மூன்று இனங்களும் எப்படி ? சென்ற
மகாயுத்தத்தில் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றுக்கு எதிராக சண்டை போட்
டுக்கொண்ட ஜனங்கள். அவர்கள் இன்றைக்கு ஒரே நாட்டினராக இருந்து,
அந்த மூன்று மொழியையும் பொது நிர்வாக மொழியாக உபயோகப்படுத்
திக்கொண்டு உலகத்திலேயே தலைசிறந்த நாடு என்ற பெயரைப் பெற்
றிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நாட்டில் இருந்து வந்த உப ஜனாதிபதி
அவர்கள் மூன்று மொழியை கஷ்டம் இல்லாமல் நிர்வாக மொழியாக
வைத்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறார். ஆகவே இரண்டு
மொழியை நிர்வாக மொழியாக வைப்பதில் கஷ்டம் நிச்சயமாக ஏற்படாது.
ஆகவே நாம் சொல்லியிருக்கக்கூடிய யோசனை எல்லாத் தரப்பாருக்கும்

சம்மதமானதாக, ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இந்த அடிப் படையில் இப்பிரச்னைக்கு ஒரு முடிவைக் கண்டால் நிச்சயமாக சமாதான முறையில் தேசம் முன்னேறுவதற்கு வழி ஏற்படும். இதற்கு ஒத்து கொள்ளாமல் இரண்டு கட்சிக்காரர்களும் அவர் அவர்கள் கட்சியையே விடாப் பிடியாக பிடித்துக் கொண்டு உச்சாணிக் கிளையில் உட்கார்ந்திருந்தால் பய னில்லை. இன்றைக்கு ரஷியாவும், அமெரிக்காவும் கூடிப் பேசுகிறார் களே அப்படியாகும். இவர்கள் ஒன்று சொல்வது, அவர்கள் ஒன்று சொல்வது, இரண்டு பேருக்கும் சமாதானம் வரக்கூடிய காலத்தில் வேறு ஒன்றைப் புதிதாக எழுப்புவது என்கிற முறையில் கூட்டுப் பேச்சுக்கு என்றைக்குமே முடிவு இல்லாததாகிவிடும். இன்றைக்கு நாம் காண வேண்டியது எல்லாத் தரப்பாராலும் ஒத்துக்கொள்ளத்தக்க ஒரு முடிவு தான். இரண்டு முடிவோ, பதினாறு முடிவுகளோ அல்ல. ஒரு சமாதான முடிவை ஏற்படுத்த வேண்டிய பொறுப்புள்ளவர்களாக நாம் இருப்பதால் இந்தத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இதை ஒப்புக் கொள்வதில் யாரும் வெட்கப்படவேண்டிய அவசியம் இல்லை. பின்வாங்கவேண்டிய அவசியமும் இல்லை. இந்தச் சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இங்கே இல்லையே என்று வருத்தப்படுகிறேன். அவருடைய சார் பாக இருக்கிற ஸ்ரீ கோவிந்தசாமி அவர்களிடத்திலும் தெரிவித்துக் கொள் கிறேன். அவர்களுடைய கொள்கையை விட்டுக்கொடுத்ததாக இல்லை. தமிழ் தான் நம்முடைய ராஜ்ய நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க இந்தி, ஆங்கிலம் இரண்டும் மத்திய நிர்வாக மொழியாக இருக்கலாம் என்பது நம்முடைய கொள்கை எதற்கும் முரண் பட்டதல்ல. மற்றவர்கள் கேலி செய்கிறார்களே என்பதற்கும் முரண் முடைய முடிவையும் நாம் மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதற்காக நம் அப்படி மாற்றிக்கொள்வது என்றால் யாராவது ஒருவர் கேலி செய்து கொண்டேதான் இருப்பார்கள். கேலி செய்கிறார்களே என்பதற்காக நாம் எடுத்த ஒரு முடிவை மாற்றிக்கொள்வது என்றால் அது அரசியல் நியாயத்திற்கு சரி அல்ல. அரசியல் நிர்வாகத்திற்கும் சரி அல்ல என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அடிப்படையில், நாம் சொல்லக் கூடிய யோசனைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவையே. உங்கள் யோசனையை அவர்கள் ஏற்றுக் வார்களா என்று சிலர் கேட்டார்கள். ஆமாம். ஏற்றுக் கொள் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏற்றுக் கொள்ளச் செய்ய என்ற அளவில் நான் சொல்லவில்லை, தெரிந்து தான் சொல்கி றேன். எப்பொழுது, நாம் ஒன்றாக இருக்கிறோம் நம்பிக்கை சொன்னால் அப்பொழுது நம் பலம் அதிகரிக்கிறது. நாங்கள் என்று செய்தது மட்டுமல்ல, எல்லாக் கட்சித் தலைவர்களும், திராவிடமுன்னேற்றக் முடிவு கட்சித் தலைவரும் சேர்ந்து செய்த முடிவு என்று சொல்லும்போது அதற்கு ஒரு தனி பலம் ஏற்படுகிறது. ஆயிரம் முடிச்சுப் போட்டால் யானை பலம் என்று சொல்வார்கள். தனி முடிச்சுக்கு பலம் இருக்கலாம். ஆனால் ஆயிரம் முடிச்சு போடும்போது அதற்கு யானை பலம் வருகிறது என்று சொல்வார்கள். அதில் ஒரு சின்னப் பகுதி ஒதுங்கியிருந்தாலும் கூட அந்த அளவு பலம் அதற்கு குறைகிறது. பலம் இருந்தாலும் இல்லா விட்டாலும், நம் கோரிக்கை நியாயமானதாகும். கௌகாத்தி காங்கிரஸ் செஷனில் நடந்ததை வைத்துச் சொல்கிறேன். நம் யோசனையை ஏற்றுக் கொள்ளச் செய்யமுடியும். ஆகவே, இந்த சபை, ஏகமனதாக இந்த தீர்மானத்தை நிறைவேற்றினால் அதற்கு இன்னும் அதிக பலம் ஏற்படு கிறது. இது நியாயம், இது வந்தால் பரவாயில்லை என்று நினைக்கிறவர்கள் இது ஏற்றுக்கொள்ளப்படுமா என்று சந்தேகித்து இதை ஏற்றுக் கொள்ளா விட்டால் அதன் மூலம் இது ஏற்றுக் கொள்ளப்படுவதை தடை செய்வது போலாகும். ஆகவே இதை இந்த சபை ஏகமனதாக, தலைவர்கள் கூட்டத்தில் ஏகோபித்த அபிப்பிராயத்தோடு நிறைவேற்றியது போல் இந்த சபையிலும் ஏகமனதான அபிப்பிராயத்தோடு இதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் உங்கள் எல்லாரையும் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இது, எங்கள் பக்கத்தில் இருந்து வந்தது என்று



நினைக்காமல், இதன் சிறப்போ, மதிப்போ தனிப்பட்டவர்களுக்கு வந்துவிடும் என்று நினைக்காமல் இதை ஏகமனதாக இந்தசபை நிறைவேற்ற வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் உள்ளவர்களின், அவர்கள் ஒற்றுமை காரணமாக, அவர்களின் அறிவுச் சிறப்பின் காரண மாக ஒரு பெரிய பிரச்னைக்கு தீர்ப்பு கண்ட பெருமை நம்மைச் சேரவேண்டு மென்று சொல்லிக் கொண்டு, இந்த சபை தன் ஏகோபித்த அபிப்பிரா யத்தைக் காட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் இந்தப் பிரேரணையை இச்சபைக்கு முன்னால் வைக்கிறேன்.

**Mr. SPEAKER** : இப்பொழுது கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை இச்சபையின் முன்பு விவாதத்திற்கு வைக்கிறேன். இதற்கு ஏதாவது திருத்தம் கொடுக்கவேண்டுமென்றால், நாளை காலை 8-30-க்குள் ளாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூன்று மணி நேரம் விவாதத்திற்கு சமயம் இருப்பதைக் கண்டு, ஒரு இண்டிப்பெண்டண்ட்டும், திராவிட முன்னேற்றக் கட்சி சார்பில் ஒருவரும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒருவரும், ஐ.என்.டி யூ.சி. கட்சி சார்பில் ஒருவரும், பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி சார்பில் ஒருவரும் பின் பாக்கியுள்ள சமயத்தில் காங்கிரஸ் அங்கத் தினர்களையும் கூப்பிடவேண்டுமென்று நான் நினைத்தேன். ஆனால் கம் யூனிஸ்ட் கட்சித் தலைவரும், பிரஜா சோஷியலிஸ்ட் கட்சித் தலைவரும் சொன்னார்கள், இன்றையதினம் அவர்கள் கட்சி சார்பாக யாரும் பேசப் போவதில்லை, அவர்களுக்குள்ள கால் மணி நேரம், அல்லது 10 நிமிஷ நேரத்தை நாளை அவர்களின் தலைவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நான் சம்மதித்திருக்கிறேன். ஆகவே, இன்றையதினம் அங்கத்தினர்கள் 15, 20 நிமிஷத்திற்குள்ளாக அவர் களது பேச்சை முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஆதித்தன் அவர்களை பேசுமாறு அழைக்கிறேன்.

**Sri S. B. ADITYAN** : மதிப்பிற்குறிய சட்டமன்றத் தலைவர் 10-30 a.m.
அவர்களே, நம் தமிழ் நாட்டின் பழைய முதன் மந்திரியாக இருந்த ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், இந்தியைப் பற்றி பலயிடங்களிலும் பேசி வருவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். தமிழ் நாட்டிற்குள்ளே இந்தி வெகு வேகமாகத்திணிக்கப்பட்டு வருகிறது என்று அவர்கள் சொல்லி வருகிறார்கள். மேலும், இந்தியானது தமிழ் நாட்டிற்குள்ளே ஒரு திருடனை போன்று ஓசைப்படாமல், இந்த நாட்டை கண்காணிப்பவர்கள் உறங்கும் நேரம் பார்த்து இந்த இந்தி நுழைந்து விட்டது என்று ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கும் இந்த அறிக்கையை வாசித்த பிறகு, அதன் மீது நிதியமைச்சர் அவர்கள் சொன்ன விளக் கத்தையும் கேட்ட பிறகு ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சொல்லியது எவ்வளவு உண்மையானது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் சொல்லியது சரி என்பதற்காக, சான்றுகள் வேண்டுமென்றால், அவைகள் இந்த அறிக்கையிலேயே காணப்படுகிறது. இந்த அறிக்கையின் முதல் பாகத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், "பள்ளிகளிலே தமிழ் கையாளப்படுகிறது, கல்லூரிகளில் தமிழ் கையாளப்படுகிறது, சில அரசாங்க அலுவலகங்களில் தமிழ் கையாளப்படுகிறது, சட்ட மன்றத்தில் தமிழ் கையாளப்படுகிறது, நீதி மன்றத்தில் தமிழ் கையாளப்படுகிறது" என்றெல்லாம் சொன்னார்கள். அது ஒரு புறமிருக்க, 'Language of offices and institutions under the control of the Government of India"— தமிழ் நாட்டில் இருக்கும் மத்திய அரசாங்கத்தின் அலுவலகங்களைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது குறிப்பிடப்பட்டிருக்கும் இடத்தில், எட்டாவது பாகத்தில், 'The transition from English to Hindi as the language for use in all the offices and institutions under the control of the Government of India was to be carried out during a fifteen-year period. . . ' என்று இருக்கிறது. அதாவது, தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசாங்க அலுவலகங்களில் 15 வருஷத்திற்குள் புகுத்தப்படும் என்று. ஆங்கிலத்திற்குப் பதிலான இந்தி

நுழைக்கப்பட வேண்டிய வேலை இன்னும் ஆரம்பமாகவில்லை என்று,
'At the present moment, the first half of the fifteen-year period has
been already completed. The transition process has not yet begun.'
நான் தமிழ் படுத்துவதில் பிசகு இருந்தால் மந்திரியவர்கள் சொல்ல
வேண்டும். இந்த அறிக்கையை அச்சிட்டு நம்மிடம் கொடுத்துள்ளார்கள்.
தமிழ் நாட்டில் இந்தி புகுத்தப்படக்கூடிய காரியம் இன்னும் ஆரம்ப
மாகவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிச் சொன்னால், என்
ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் அவர்கள், "அரசாங்கம் உறங்குவதைப்
பார்த்து இந்தி நுழைந்து விட்டது" என்று அவர்கள் ஏன் சொல்ல
மாட்டார்கள் என்று கேட்கிறேன். இந்த அறிக்கையில் எழுதப்பட்டிருப்பது
மெய் என்றால், நாம் அன்றாடம் அஞ்சல் நிலையங்களில் வாங்கும் அஞ்சல்
அட்டையில் இந்தி இருப்பது, அதாவது, இந்தியில் எழுதப்பட்டிருப்பது,
பொய்யாக இருக்கவேண்டும், தபால் தலைகளில் இந்தி இருப்பது என்பது
பொய்யாக இருக்கவேண்டும், தபால் முத்திரைகளில் இந்தி நுழைந்
திருப்பது பொய்யாக இருக்கவேண்டும், இந்த அறிக்கை உண்மையாக
இருந்தால், சமீபத்தில் திருவல்லிக்கேணியில் இருந்து மைலாப்
பூருக்கு எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. தமிழ் நாட்டின் மத்தியில் சென்னை
நகரம் இருக்கிறது. திருவல்லிக்கேணியும், மைலாப்பூரும் சென்னை
நகரத்தில், தமிழ் நாட்டின் மத்தியில்தான் இருக்கிறது. சென்னை
திருவல்லிக்கேணியில் இருந்து போடப்படும் அஞ்சல் அட்டையில் அப்படி
எழுத்து இருக்க வேண்டும். அதுவும், உள்நாட்டு அஞ்சல் என்ன
சென்னை நகரத்திற்கு வெளியே போகமுடியாத அஞ்சல் அட்டையில் அட்டை.
எழுத்து காணப்படுகிறது. இந்தி எழுத்துதான் காணப்படுகிறது. என்ன
வல்லிக்கேணியில் இருந்து மைலாப்பூருக்கு வருகிற அஞ்சல் அட்டையில் திரு
இந்தி எழுத்துதான் இருக்கிறது. அதை அரசாங்கம் பார்க்கவில்லையா?
எனக்கு இலங்கையில் இருந்து ஒரு தபால் வந்தது. அந்த தபால்
அட்டையின் மேல் இ, ல, ங், கை, "இலங்கை" என்று தமிழில் எழுதி
யிருக்கிறது. இதையெல்லாம் பார்க்காமல் இருந்தால், நான் கேட்கிறேன்
ஏன் ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அப்படி சொல்லமாட்டார்கள் என்று,
கண் விழிக்கவில்லையே என்று அவர் சொல்கிறார்.
சொல்கிறார், அவர். தூங்கும் சமயம் பார்த்து ஓசைப்படாமல் சுடச்சுடத்
நுழைகிற மாதிரி இந்தி நுழைந்துவிட்டது என்று அவர்கள் திருடன்
போது அவரைக் கடிந்து கொள்வதில் என்ன பயன் இருக்கிறது என்று சொல்லும்
நான் கேட்கிறேன். சில தினங்களுக்கு முன் இச்சபையில் பேசிய
அம்மையார் ஒருவர், அவர் கிழவனார், ஆகவே சொல்கிறார் என்று
சொன்னார்கள்.

**Mr. SPEAKER :** அந்த அம்மையாரிடம் நான் சொல்லிவிட்டேன்,
வீணாக சபையின் விவாதத்தில் ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் அவர்களைக்கொண்டு
வரக்கூடாது என்று. அந்த அம்மையாரிடம் சொன்னதைத்தான் நான்
உங்களிடமும் சொல்லப் போகிறேன்.

**Sri S. B. ADITYAN :** ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இந்த
நாட்டின் முதன் மந்திரியாக இருந்தவர்கள். அவரது கருத்தை நாம்
இங்கு சொல்வதில் தவறு எதுவும் இல்லையென்று நான் கருதுகிறேன்.
அவர் சொல்வதின் கருத்திற்கு நாம் பதில் சொல்லவேண்டும்.
சொல்லாமல் அவர் பிராமணராகையால் சொல்கிறார், அல்லது கருப்புக்
கண்ணாடி போட்டிருக்கிறார், ஆகவே அப்படி சொல்கிறார் என்று சொல்வது அப்படிச்
பந்தை ஆடுவதை விட்டுவிட்டு ஆளை ஆடுவது போல்தான் இருக்கிறது.
கால் பந்தாட்டத்தில் தோல்வி அடைகிற கட்சி, பந்தை விளையாடாமல் ஆளை
விளையாடுவது மாதிரித்தான், பதில் சொல்லப்படுகிறது.
தமிழ் நாட்டில் நுழைக்கப்படவில்லை என்று இன்னும் இந்தி
'The process of transition has not yet begun'. சொல்லுகிறார்கள்.
ப்படுவதற்குள்ள ஏற்பாடு செய்யவில்லை என்று இந்தி நுழைக்கப்
பிறகு சொன்னால் மற்றவர்கள் இதைப்பற்றி மாறுபட்ட இத்தனைக்கும்
ஏன் சொல்லமாட்டார்கள். இந்தியை தபால் கருத்துக்களை
நிலையங்களில்



எல்லாம் நுழைக்கப்பட்ட பிறகு, ரயில் நிலையங்களில் எல்லாம் நுழைக்கப்பட்ட பிறகு, இன்ஷூரன்ஸ் நிலையங்களில் எல்லாம் நுழைக்கப்பட்ட பிறகு இந்தியை தமிழ் நாட்டில் இன்னும் நுழைக்க ஆரம்பிக்கவில்லை என்று சொன்னால் மற்றவர்கள் சொல்லுவதில் நியாயம் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். '**Not only there is no plan of action, the Government of India had not trained one**' என்று சொல்லியிருக்கிறார்கள். நான் பேசுவது தமிழ் நாட்டிலுள்ள தபால் நிலையங்களை மட்டும் பேசுகின்றேன். இவ்விதமாக தமிழ் நாட்டிலுள்ள தபால் நிலையங்களில் எல்லாம் இந்தி நுழைக்கப்பட்ட பிறகு இன்னும் நுழைக்க ஆரம்பிக்கவில்லை என்று இந்த அறிக்கையில் எழுதியிருக்கிறீர்கள். '**There is no plan of action**' என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிறது. இன்றைக்கு அஞ்சல் அட்டையில் எல்லாம் இந்தி நுழைக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் திட்டமிட்டு வேலை செய்யப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். **There is no plan of action.** நான் கேட்கிறேன், இவைகளெல்லாம் திட்டம் இல்லாமலா தபால் நிலையங்களிலும் ரயில் நிலையங்களிலும் நுழைத்திருக்கிறார்கள். இன்றைய தினம் நாட்டில் வழங்கப்படுகிற நாணயதாளில் முன்புறத்தில் இருந்து வந்த தமிழ் எழுத்து இன்றைக்கு பின் புறத்தில் போய்விட்டது. உண்மையில் இது திட்டமில்லாமலா நடந்திருக்கிறது. ஆகவே இவைகள் எல்லாம் திட்டத்தின் அடிப்படையில்தான் நடைபெற்று வருகிறது. இவைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக நடைபெற்று வருகிறது. இதை சற்று ஆராய்ந்து பார்த்தால் தெரியும். திட்டமிட்டுகொண்டு வரப்படவில்லை என்று இவர்கள் சொன்னால் இதைப்பற்றி மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவராமல் இருந்திருக்கலாம். அல்லது மத்திய அரசாங்கத்தின் திட்டத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றுதானே அர்த்தம். இவ்விதம் இருந்தால், மற்றவர்கள் இந்த அரசாங்கம் டெல்லி அரசாங்கத்திற்கு சரணாகதி அடைந்திருக்கிறது என்று ஏன் இந்த அரசாங்கத்தை கடிந்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் சொல்லுகிற கருத்தை எடுத்து நாம் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு இடத்திலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். அது எது என்றால் இந்த தொடர்பு மொழியைப்பற்றியது. அதாவது 11-வது பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது, மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் எழுதக்கூடிய கடிதங்கள் எல்லாம் எந்த மொழியில் எழுத வேண்டும் என்று வரும்பொழுது அது ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும், அல்லது ஹிந்தியில் எழுதப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும்கூட இப்போது தற்காலிகமாக இன்று ஆங்கிலமாக இருக்கலாம், நாள் செல்ல செல்ல, அதுவும் இந்தியாகவேண்டியிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது ஏன் தமிழில் இருக்கக்கூடாது. இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதக்கூடிய கடிதங்கள், அறிக்கைகள் எல்லாம் ஏன் தமிழில் எழுதக்கூடாது? தமிழ் மொழி தேசிய மொழி என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற 14 மொழிகளில் ஒன்று தானே? அந்த முறையில் மத்திய அரசாங்கம் இங்கிருந்து போகும் கடிதங்களை ஏன் தமிழில் எழுதுவதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதை நாம் பார்க்கவேண்டும். அகில இந்தியாவுக்கும், அனைத்திந்தியாவுக்கும் ஒரே மொழிதான் இருக்கவேண்டும் என்று சொல்லும்பொழுது அது ஒரு குறிப்பிட்ட விசேஷமாக இருக்கிறது. இந்தியா என்பது 14 மொழிகளும் கொண்ட நாடு. அது 14 தலையுள்ள ஒரு உருவமாகத்தான் இருக்கவேண்டும். அப்படியிருக்கும்பொழுது தமிழ் நாட்டிலிருந்து எழுதும் கடிதங்களை ஏன் தமிழில் எழுதக்கூடாது என்று நான் கேட்கிறேன். அங்கே தமிழில் எழுதப்பட்ட கடிதங்களை தெரிந்துகொள்ளக்கூடியவர்கள் போதுமானவர்கள் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் முன்பு ஒரு நாள் நண்பர் மாதா கவுடர் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், பம்பாய் காரியாலயங்களில் எல்லாம் தமிழர்கள் ஏராளமாக இருக்கிறார்கள், லட்சக்கணக்கான தமிழர்கள் டெல்லியிலும், கல்கத்தாவிலுமுள்ள

காரியாலயங்களில் இருக்கிறார்கள் என்று பேசினார்கள். அவ்விதமென்றால் இங்கே இருந்து போகக்கூடிய கடிதங்களை புரிந்துகொள்ளுவதற்கு என்ன கஷ்டம் ? இவ்விதம் லட்சக் கணக்கில் தமிழர்கள் அங்கு இருக்கிறார்கள் என்றால் தமிழில் உள்ள கடிதங்களை புரிந்துகொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? அப்படியே இல்லை யென்றாலும்கூட அங்கிருக்கின்றவர்கள் ஏன் தமிழைக் கற்றுக்கொள்ளக்கூடாது ? இங்குள்ளவர்கள் இந்தியை கற்றுக்கொள்ளலாம் என்றால் அவர்கள் ஏன் தமிழை கற்றுக்கொள்ளக்கூடாது ? செக்கோஸ்லேவியாவிலிருந்து வந்திருக்கின்ற ஒருவர் நன்றாக தமிழை கற்றுக்கொண்டிருக்கிறார், அப்படியென்றால் இவர்கள் ஏன் தமிழை படித்துக்கொள்ளக்கூடாது ? ஆகவே இங்கிருந்து இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பும் கடிதங்கள், அறிக்கைகள் முதலியவைகள் தமிழில் இருக்கவேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது இந்தி வந்தாக வேண்டியதுதான் என்று குறிப்பிட்டார்கள். அதாவது ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று சொல்லுபவர்களுக்கு வேண்டுமானால் ஆங்கிலம் இருக்கட்டும், அதே போல் இந்தியும் இருக்கட்டும், இவ்விதமாக 15 ஆண்டுகள் தள்ளிப்போட வேண்டும், இன்னும் கொஞ்ச நாளைக்கு இப்படியே போகட்டும் என்று சொல்லுகிற முறையைப்பார்த்தால் என்றைக்காவது ஒரு நாள் மனிதன் செத்தாக வேண்டியதுதான் என்று சொல்லுவது போலத்தான், என்றைக்காவது இந்தி வந்தாக வேண்டியது தான் என்று சொல்லுவதும் இருக்கிறது. தமிழ் நாட்டினுடைய தலைவிதி இந்தி மொழியிலா எழுதியிருக்கிறது ? இந்தி வேண்டாம் ஆங்கிலம் இருக்கட்டும் என்று சிலர் கூறுகிறார்கள், சிலர் ஆங்கிலம் வேண்டாம் இந்தி இருக்கட்டும் என்று சொல்லுகிறார்கள். நான் சொல்வது ஆங்கிலமும் வேண்டாம், இந்தியும் வேண்டாம், தமிழ் மொழியே இருக்கட்டும் என்றுள்ள கருத்தைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அதற்காக செயல்படுவதற்கு தமிழன் என்ற உணர்ச்சியுள்ள நிதி அமைச்சர் அவர்கள், தமிழ் நாடு என்று ஆர்வமுள்ள நிதி அமைச்சர் அவர்கள், இந்த அடிப்படையில் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**Sri A. V. P. ASAITHAMBI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக்கண்டத்தின் . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM :** பாரதத் துணைக்கண்டம் என்று சொல்லுங்கள்.

**Sri A. V. P. ASAITHAMBI :** இந்தியத் துணைக்கண்டம் என்று சொல்லுவதில் தவறொன்றுமில்லை. இந்திய துணைகண்டத்தின் ஆட்சி மொழி பற்றி சட்டமன்ற அரசியல் கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களை மாத்திரம் வைத்துக்கொண்டு கவனிப்பதை விட வெளியே உள்ள கருத்துகளையும் கவனித்து ஆராய்ந்து பார்த்து இதற்கு ஒரு முடிவு செய்ய வேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்கள் அவர்களது முன்மொழியில் எடுத்துச்சொன்னார்கள். உள்ளபடியே அது வரவேற்கத்தக்கதுதான். இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிமொழியாக ஒன்று இந்தி இருப்பதா அல்லது ஆங்கிலம் இருப்பதா அல்லது இரண்டும் இருப்பதா என்பதைப் பற்றியுள்ள கருத்து வேறுபாடுகள் ஒருபுறத்தில் இருக்கிறது. இன்னொரு புறத்தில் இந்திய துணைக்கண்டத்திற்கு பொதுமொழியாக ஒன்று இருக்க வேண்டியது அவசியம்தானா என்கின்ற பிரச்னையும் இருந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இதை எந்த அடிப்படையில் அணுகி வருகின்றது என்று கேட்டால் எங்களுக்கும் இந்த பொதுமொழிப் பிரச்னைக்கும் சம்பந்தம் இல்லவே இல்லை என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இன்றைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு, இதைப்பற்றியுள்ள கால கெடுவு வேண்டுமானால் பலருக்கு



பலவிதமாக இருக்கலாம், இந்திய துணைகண்டத்திலிருந்து இந்த பகுதி தனியாக பிரிந்து போகத்தான் போகிறது. அந்த நிலைமையில் இந்த லட்சியத்தைக் கொண்டிருக்கின்ற நாங்கள் இந்த பொதுமொழிப் பிரச்னையை எந்த முறையில் அணுகுகிறோம் என்று சொன்னால் இந்திய துணைகண்டத்தோடு இந்த பகுதி சேர்ந்திருப்பது வரையிலும் இந்த நாட்டு மக்களுக்கு எந்த விதமான ஒரு ஏற்பாடு இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்த்துத்தான் அதுவரைக்கும் இந்தியோடு ஆங்கிலம் இருக்கட்டும் என்கிற ஒரு பொது முடிவுக்கு ஆட்சிமொழி மகாநாட்டில் கலந்துகொண்ட எங்கள் கட்சித்தலைவர் அவர்கள் பேசினார்களே தவிர உண்மையாகவே இந்தியை ஏற்றுக்கொண்டதாகவோ அல்லது பொது மொழிப் பிரச்னையில் உடன்பாட்டுக்கு வந்தார்கள் என்று கருதுவதோ தவறானது ஆகும். நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த மொழிப் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டதல்ல, காந்தியடிகள் வெகு நாட்களுக்கு முன்னதாகவே இதை சொல்லி வந்திருக்கிறார் என்றும் இந்தியாவுக்கு ஒரு பொது மொழி தேவை என்பதை பலர் பல சமயங்களிலும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அரசியல் கட்சிகள் அனைத்துமே ஒப்புக்கொண்டன என்பதைக் குறிப்பிட்டார்கள். காந்தியடிகள் சொன்னார்கள் என்பதற்காக வேண்டி இந்தியை இந்தியாவினுடைய பொதுமொழியாக ஆக்க வேண்டுமென்று சொல்லியிருக்கலாம். தங்களுடைய கருத்துக்கு ஆதரவாக காந்திஜியின் பெயரை காட்டுகிறார்கள். காந்திஜி இதை மட்டும் சொல்லவில்லை. இன்னும் எவ்வளவோ சொல்லியிருக்கிறார், சுதந்திரம் வந்த பிறகு காங்கிரஸே தேவை இல்லை, அதைக் கலைத்து விடவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். அதற்காக நீங்கள் காங்கிரஸைக் கலைத்து விடவில்லையே ? அவர் தேவையில்லையென்று சொல்லியிருந்தும் இதை வைத்துக்கொண்டுதானே இருக்கிறீர்கள் ? ஆகையால் காந்தியடிகள் கூறியதற்காக நாம் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்பது இல்லை. அந்த சமயத்திலே நாடு எந்த நிலைமையிலே இருந்தது ? இந்த சமயத்தில் எந்த முடிவு ஏற்றது என்பதைத்தான் நாம் பார்க்கவேண்டுமே தவிர காந்தி சொன்னார் என்பதற்காக நாம் ஒரு முடிவைச் செய்துவிட முடியாது.

மேலும், அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்திய அரசியல் சட்டம் அமைக்கப்படும்போது 15 வருஷ தவணை கொடுப்பதென்று ஒப்புக்கொள்ளபட்டது என்று. ஒரு காலத்திலே இந்த நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஒரு பொது மொழி தேவை என்று ஒப்புக் கொண்டிருக்கலாம். அதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், சுயராஜ்யம் வந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கலாம். கட்டாயம் ஒரு பொது மொழி தேவை என்று மனதார ஒப்புக்கொண்டிருக்க மாட்டார்கள். அதேமாதிரி 15 ஆண்டுகள் தவணை கொடுப்பதை அங்கு இருந்தவர் ஒப்புக்கொண்டிருக்கலாம். அதுவும் மனதார ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்கள். அப்படி மனதார ஒப்புக் கொண்டிருந்தால் இன்றையதினம் இந்தியாவினுடைய பொது மொழியாக ஹிந்தி இருப்பதற்கு நாடெங்கிலும் எதிர்ப்பு ஏற்பட்டிருக்காது. நேற்று கல்கத்தாவில் இந்தி நிர்வாக மொழியாக இருக்கக்கூடாது என்று ஒரு மாபெரும் மாநாடு நடைபெற்றிருக்க நேர்ந்திருக்காது. இன்றையதினம் நாடெங்கிலும், அந்தக் காலத்திலே ஒப்புக்கொண்டார்கள் என்று சொல்லக்கூடிய தலைவர்கள் முதற்கொண்டு இந்தியாவின் பொது மொழியாக ஹிந்தி இருக்கக் கூடாது என்ற கருத்தை ஆணித்தரமாக ஒவ்வொரு இடத்திலும் சொல்லி வருகிறார்கள். இந்த ஹிந்தி ஒன்றைத்தான் தேசீய மொழியாக ஆக்கவேண்டும் என்ற முயற்சியை—இன்று நேற்றல்ல—20, 25 வருஷங்களாக இந்த நாட்டிலே வட நாட்டு ஆதிக்கக் காரர்கள் புகுத்த முயற்சித்து வந்திருக்கிறார்கள். குறிப்பாக, சென்னை மாகாணத்திலே, 1937-ம் வருஷத்திலிருந்து ஹிந்தி மொழி கட்டாயமாகப் புகுத்தப்பட்டது. பல தடவைகளில் புகுத்தப்பட்டது. அப்படிப் புகுத்தப்பட்ட காலங்களில், எதிர்த்துப் போராடி, அதை ஒழித்துக் கட்டிய பெருமை

[Sri A. V. P. Asaithambi] [10th March 1958

திராவிட இயக்கம் ஒன்றைத் தான் சாருமே தவிர, அந்தப் பெருமை வேறு
யாரையும் சாராது என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். இந்த சமயத்திலேயும் இந்தியத் துணைக் கண்ட அரசிய
லார் என்ற வட நாட்டினர் ஹிந்தியைப் பல வழிகளில் புகுத்துகிறார்கள்.
தபால் தந்தி இலாகா மூலமாகப் புகுத்துகிறார்கள், ரெயில்வே ஸ்டேஷன்
களில் உள்ள பெயர்ப் பலகைகள் மூலமாகப் புகுத்துகிறார்கள், நாணயங்
களின் மூலமாகப் புகுத்துகிறார்கள், இப்படி எந்தெந்த துறைகளில்
ஹிந்தியைப் புகுத்த வழிகள் இருக்கின்றனவோ, அத்தனையிலும் வட
நாட்டு ஆதிக்கக் காரர்கள் புகுத்தி வருகின்றார்கள். இந்த நிலைமையிலே
நாட்டில் இருக்கின்ற நிலைமையை நாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து
பார்க்கவேண்டும். அதை விட்டு, கேலி செய்வதன் மூலமாக, சுதந்திரத்
திற்கு விரோதிகள் என்று சொல்லி விடுவதின் மூலமாக தட்டிக்கழிக்க
ஆளும் வர்க்கம் நினைத்தால், அது ஆபத்தைத் தானாகவே வரவழைப்
பதாக ஆகுமே தவிர, சிக்கலுக்குத்தீர்வு காண்பதாக ஆகாது. இப்போது
இந்த ஹிந்தியைப் புகுத்துவதின் மூலமாக இன்றைக்கு இருக்கிற ஒற்றுமை
குறையுமே தவிர, அதனால் உயராது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.
இதைத் தான் ராஜாஜி அவர்கள் பல கூட்டங்களில் எடுத்துச் சொல்லி வரு
கிறார்கள். ஹிந்தி மொழியைப் பொறுத்த வரையில் இந்திய துணைக்
கண்டம் பூராவுக்கும் ஒரு பொது மொழி—ஏதாவது ஒரு பொது மொழி—
தேவையா என்று பார்த்தால், பொது மொழியே தேவையில்லை. அமைச்
சர் அவர்கள் குறிப்பிட்டது போல் 14 ராஜ்யங்கள் இன்றைக்கு இருக்கின்
றன. அந்தந்த ராஜ்யத்திற்கு அந்தந்த ராஜ்ய மொழி தேசீய மொழி
யாக இருக்கலாம். மத்திய சர்க்கார் தேவையென்று சொன்னால், தொட
ர்பு மொழியாக ஏன் ஆங்கிலமே இருக்கக்கூடாது ? ஆங்கிலம் இருப்பதில்
என்ன தவறு ? இந்தச் சட்ட மன்றத்திலே நமது தொழில் அமைச்சர்
வெங்கட்ராமன் அவர்களுக்கு "முன் மொழிகிறேன்" என்ற வார்த்தை
இன்னும் சரியாகப் புரியவில்லை, "பிரேரணை," என்ற வார்த்தைதான்
நடை முறையில் இருக்கிறது என்று சொன்னார்கள். நடைமுறையில்
அக்கரையுள்ள அமைச்சர் இருக்கும்பொது, நடைமுறையில் இருக்கும்
ஆங்கிலத்தை தொடர்பு மொழியாக—ஆட்சி மொழியாக அல்ல—ஏன்
வைத்துக் கொள்ளக்கூடாது ? அதில் என்ன தவறு இருக்கிறது ? அமைச்
சர் அவர்கள் "ஏதோ, எங்களுக்கு ஆங்கிலத்தில் மோகம் இருப்பது போல"
குறிப்பிட்டார்கள். அப்படி மோகம் ஒன்றும் கிடையாது. நாங்கள் ஆங்கி
லத்தில் பாண்டித்தியம் பெற்றவர்கள் அல்ல. காங்கிரஸ்காரர்களுக்குத்
தான் இந்த மோகம் இருக்கிறது. அன்று ஆங்கிலேயரிடத்தில் மோகம்
கொண்ட எத்தனையோ ஸர்கள் இன்றைக்கு காங்கிரஸிற்குள் புகுந்து
கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அந்த மாதிரி நிலையில் இல்லை. வேண்டு
மானால் பல உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். அப்படி சுற்றி வளைத்துச்
சொல்லவேண்டியதில்லை. நேற்று கனம் சுப்பிரமணியம் அவர்கள் பல
முறை நாங்கள் வெள்ளைக்காரர்களுக்கு தாஸானுதாஸர்களாக இருந்தோம்
என்றெல்லாம் சுற்றி வளைத்துக்கொண்டு சொன்னார். அதற்காக "லட்சிய
வரலாறு" என்ற புத்தகத்திலிருந்து எடுத்துப் படித்துக் காண்பித்தார்
கள். சுயமரியாதை மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையெல்
லாம் எடுத்துச் சொன்னார்கள். சுற்றி வளைத்து அந்தக் காலத்தில் வெள்
ளைக்காரர்களுக்கு தாஸானுதாஸர்களாக இருந்தோம் என்று சொன்னார்
கள். உண்மையில் அதுவல்ல. முதலில் எ. ஒ. ஹியூம் என்ற வெள்ளைக்
காரரால் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி, தாதாபாய் நௌரோஜி, காந்தி
யடிகள் போன்றவர்கள் புகுந்து, அந்தக் கட்சியை ஒரு சுயராஜ்ய ஸ்தாபன
மாக எப்படி மாற்றியமைத்தார்களோ அது போல் 1917-ம் வருஷம் டாக்
டர் நாயர் போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி, 1924-ம்
வருஷம் சுயமரியாதைக் கட்சி புகுந்து அதைப் புனிதப்படுத்தி, 1944-ல்
நாங்கள் அதற்குள் புகுந்து திராவிடக் கழகமாக அதை மாற்றி, 1949-ல்
திராவிட முன்னேற்ற கழகமாக நல்லதொரு கழகமாகமாற்றினோம்.
இதைப்பற்றி யார் குற்றம் சொல்ல முடியும். கனம் சுப்பிரமணியம்
அவர்கள் எந்த விதமான குற்றமும் சொல்லமுடியாது.



10th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : உங்கள் கழகம் திராவிட கழகம் பெரியாரை தலைவர் என்று சொல்லிக்கொண்டு உறவு கொண்டாடிக் கொண்டிருக்கும்போது என்ன சொல்வது என்று தெரியவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : 1949-ம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பெரியார் அவர்கள் அதற்கு முன்பு எங்கள் தலைவராக இருந்தார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 1948-ல் ஆரம்பிக்கப்பட்டது.

SRI A. V. P. ASAITHAMBI : பெரியார் அவர்களுடைய சீரிய தொண்டின் கீழ் பணியாற்றி வந்தோம். அவர்களுக்கும் எங்களுக்குமிடையே ஏற்பட்ட அபிப்பிராயபேதம் காரணமாக வெளியே வந்தோம். தி.மு.க. அமைத்தோம். அதற்குப் பிறகு பல மாநாடுகள் நடத்தியிருக்கிறோம். எங்கள் மாநாட்டுத் தீர்மானங்களை கனம் மந்திரி அவர்கள் எடுத்துப் பார்க்கட்டும். எங்கள் திட்டத்திலே, எங்கள் போக்கிலே ஏதாவது குறையிருக்கிறது என்று எடுத்துக் காட்ட முடிந்தால் அவர்கள சொல்வதற்கு கட்டுப்படத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறேன். அதையெல்லாம் விட்டு விட்டு, 1917-ம் வருஷத்திலேயும், 1924-ம் வருஷத்திலேயும் நிறைவேற்றிய தீர்மானங்களை எடுத்துக்காட்டினால், அந்தத் தீர்மானங்களைப் போட்ட அந்த ஆட்களைப் பார்த்தால், அவர்கள் இப்போது எங்களிடத்தில் இல்லை, அவர்களெல்லாம் இப்போது உங்களிடத்தில்தான் இருக்கிறார்கள். 1944-ல் விருதுநகரில் நடந்த மாநாட்டில் மூன்று ஸர்களை வெளியேற்றினோம். அந்த மூன்று ஸர்களில் ஒருவர் இப்போது உங்களிடத்தில் இருக்கிறார். காரியவாதிகளை விரட்டி விட்டுப் பிரசித்தம் அடைந்த கட்சி எங்கள் கட்சி. திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமென்பது எங்கள் லட்சியம். பொது மொழி தேவை என்பது கிடையாது. தமிழ் நாட்டுக்குத் தமிழ் ஆட்சி மொழி, கேரள நாட்டுக்கு மலையாளம் ஆட்சி மொழி, ஆந்திரத்திற்கு தெலுங்கு ஆட்சி மொழி, கர்னாடகத்திற்கு கன்னடம் ஆட்சி மொழி. இந்த நான்குக்கும் தொடர்புக்கு ஒரு மொழி தேவை என்று சொன்னால், அதற்கு ஆங்கிலத்தை வைத்து கொள்ளலாம் என்று தீர்மானித்திருக்கிறோம். இதுதான் எங்கள் கட்சித் திட்டம் இதனால் ஆங்கிலேயர் மீது மோகம் என்றோ, ஆங்கிலேயர் எங்களுக்கு வேண்டியவர்கள் என்றோ சொன்னால் அது சரியல்ல. நீங்கள் ஆங்கிலேயரை எப்படி அன்னியர் என்று கருதுகிறீர்களோ, அதே மாதிரித்தான் நாங்கள் ஹிந்தி வெறியர்களைக் கருதுகிறோம். ஆங்கிலேயரை விட ஹிந்தி மொழியர் எப்படி சிறந்தவர் என்று கருதுகிறீர்கள் ? வித்தியாசம் என்ன இருக்கிறது ?

ஆங்கிலேயன் அன்னியன் என்பதுபோலத் தான், இந்திக்காரனும் அன்னியன். அன்னியன் என்று எந்த விதத்தில் தீர்மானிப்பது ? மொழி, கலாசாரம், நடை, உடை பாவனை இவைகளை வைத்துத்தான் பார்க்கவேண்டும். அந்த விதத்தில், வெள்ளைக்காரன் அன்னியன் என்றால், இந்திக்காரன் கூடப்பிறந்தவனா ? இருவரும் வேற்று மொழிக்காரர்கள் தான். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இந்த நான்கும் ஒரே மொழியிலிருந்து பிறந்தவைகள். இவை சகோதர மொழிகள். அந்த அளவிலே, இந்த நாட்டைப் பொறுத்தவரை, ஒரு பொது மொழி தேவையில்லை. தனித்தனி இராச்சியங்களாக இருந்து கொண்டு இயங்கும் வரை மத்திய சர்க்காரே தேவை இல்லை என்பது என் அபிப்பிராயம். ஏனென்றால், மாகாண சர்க்கார்கள் பொறுத்தவரை, அவைகளுக்கு முழு அதிகாரம் மொழிவாரியாக அளித்துவிட்டால், மத்திய சர்க்காருக்கு என்ன தேவை ? ஒரு சில விவகாரங்களுக்கு மாத்திரம் மத்திய சர்க்கார் தேவை என்றால், தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை உபயோகித்தால் என்ன தவறு ? இராச்சியங்களில் எந்த எந்த மொழி வழங்குகிறதோ, அந்த அந்த மொழிதான் இருக்கவேண்டும் என்று நாங்கள்கருதுகிறோம். அதை ஒப்புக் கொள்ளுகிறோம். அப்பொழுது சுப்ரீம் கோர்ட்டுக்கு என்ன மொழி இருக்கவேண்டும் ? எது நமக்கு தொடர்பு மொழியோ அதுவே சுப்ரீம் கோர்ட்டு மொழியாக அமையவேண்டும். அந்த அளவிலே இந்த

பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கட்சி அணுகுகிறதே தவிர, அதனால் எங்களுக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் உறவு இருக்கிறது என்றோ, நாங்கள் அவர்களைத் திரும்ப அழைக்கிறோம் என்றோ மந்திரி அவர்கள் சொன்னால், அதற்கு ஆதாரம் கிடையாது. அம்மாதிரி கருதிக்கொண்டு பிரச்சினையைத் தட்டிக்கழித்தால் அது பெரிய ஆபத்தில் முடியும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். எங்கள் விதை முளைக்காது அது அழுகிய விதை, முளைக் காத விதை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆனால், பட்ஜெட் விவாதத்திற்கு பதிலளிக்க அவர்கள் எடுத்துக்கொண்ட $2\frac{1}{4}$ மணி நேரத் தில், திராவிட முன்னேற்றக் கட்சியைப்பற்றி பேசுவதற்கு எடுத்துக்கொண்ட நேரம் $1\frac{3}{4}$ மணி நேரம். இதுவே முளைக்காது என்று சொன்ன விதை முளைத்த விதை தான் என்பதை குறிக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கணக்கு மாதிரிதான் மற்றவைகளும். நான் எடுத்துக்கொண்டது $1\frac{3}{4}$ மணி நேரம், அதில் 40 நிமிஷங்கள் திராவிட முன்னேற்ற கட்சியைப்பற்றி. இந்த மாதிரிதான் எல்லாக் கணக்கும் போடுவீர்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : எப்படி இருந்தாலும் சரி. அதிக காலம் செலவழித்ததனால், எங்கள் விதை முளைத்து வளர்ந்து இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. 1952-க்கு முன்பு இருந்த நிலைமை என்ன? எங்கள் இயக்கத்தைபற்றி, ஆளும் வர்க்கமோ, சகோதரக் கட்சிகளோ எங்கள் கருத்துக்களைப்பற்றி கவனித்தது உண்டா? கிடையாது. 1952-ல் இதே சட்ட மன்றத்தில் திராவிட பார்லிமெண்டு கட்சி உதயமாயிற்று. பல உதிரிகள் சேர்ந்து ஆரம்பித்த கட்சி. 1957-ல் ஒரே லட்சியமுள்ள, 15 மெம்பர்கள் இந்த சட்ட மன்றத்திற்கு வரக்கூடிய அளவுக்கு வளர்ந்து இருக்கிறோம். எங்கள் கருத்து வளர்ந்து வருகிறது என்பதற்கு ஆதாரங் கள் இருக்கின்றன.

இப்பொழுது நாட்டில் பொது மொழி பற்றி சர்ச்சைகள் ஏற்பட்டு இரு கின்றன. ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஹிந்தி ஆட்சி மொழியாக வந்தால், இந்த நாடு நிச்சயமாக ஒன்றாக இருக்க முடியாது என்று ராஜாஜி முதலியவர்களும் பேசுகிறார்கள் என்றால், அது எங்கள் விதை செய்யும் வேலையே தவிர வேறெதுவும் இல்லை. இன்று நேற்று அல்ல, 1937-ல் இருந்து நாங்கள் இந்தியை எதிர்த்து வந்து இருக்கிறோம். பள்ளி மாணவர்கள் கண்டன ஊர்வலங்கள் நடத்தினார்கள். இதற்கெல்லாம் காரணம் யார்? நாங்கள் தான். நாங்கள் போட்ட விதை முளைத்ததால் தான். அது யாரோ செய்த முயற்சி என்று மந்திரி கருதவேண்டாம். இன்று ராஜாஜி அந்த அளவுக்கு தீவிரமாக எதிர்க்கிறார்கள் என்றால், அதில் எங்கள் துணையை நாடுகிறார்கள் என்றால் அவர்கள் எங்கள் அரசியல் கொள்கையை ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம்—இந்தியை எதிர்க்க இணை யத் தயாராக இருக்கிறார் என்று சொன்னால், நினைக்கலாம் அது இந்தியை ஒழிக்க மட்டும் என்று. ஆனால் இந்தியை ஒழிக்க ஆரம்பிக்கும் அந்த போராட்டத்தின் முடிவு திராவிட நாடு பிரிவினை என்பதை மறந்து விட வேண்டாம். அப்படி ராஜாஜி வந்தால் கனம் சுப்பிரமணியம் என்ன செய் வாரோ தெரியாது. அந்த மாதிரி செய்வதில் நாங்கள் வளர்ந்து வரு கிறோம்.

மந்திரி பயப்படுகிறார்கள். வெளிநாட்டிலிருந்து எங்களுக்குப் பணம் வருகிறதோ என்று. இது எங்கள் வளர்ச்சியைக் காட்டுகிறதா? தளர்ச்சி யைக் காட்டுகிறதா? ஆனால் ஒரு பொறுப்பில் இருக்கும் மந்திரி, நிதி இலாகா மந்திரி, வெளி நாட்டிலிருந்து பணம் வருகிறதாகச் சந்தேகப்பட் டால், அது அவருக்குத் தெரியாமலாபோகும். தெரியவில்லையென்றால், அவர் தூங்கிக்கொண்டா இருக்கிறார்? அப்படி யென்றால் அவர் பொறுப்பில் இருப்பதே தவறு. ராஜீனாமா செய்யவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: உங்கள் தலைவர் வேறு விதமாகப் பேசுகிறார். நீங்கள் வேறு விதமாகப் பேசுகிறீர்களே என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.





SRI A. V. P. ASAITHAMBI : வெளி நாட்டிலிருந்து பணம் வரு கிறது என்றால் மந்திரியின் திறமை, தகுதியைக் காட்டும், திறமையாக இயங்கும் அரசாங்க இயந்திரத்தைக் கொண்டு ஏன் கண்டு பிடிக்கக் கூடாது?

THE HON. SRI C. SUBRAMANIAM : திருடர்கள் சாமர்த்தியமாகத் திருடினால் அதிகாரிகள் என்ன செய்ய முடியும்?

SRI A. V. P. ASAITHAMBI : போலீஸ் நாய்கள் இருக்கின்றனவே. மோப்பம் பிடிக்கச் சொல்லித் திருடர்களைப் பிடிக்கலாமே?

ஆட்சி மொழியைப்பற்றிப் பேசும் போது, நாட்டில் இருக்கும் நிலைமை யை நன்கு பரிசீலித்து இந்தி ஒன்றுதான் தேசீய மொழி என்று அஞ்சக் கூடாது. இந்தத் துணைக்கண்டத்தில் இருக்கும் 14 ராஜ்யங்களிலும் அந்தந்த ராஜ்ய மொழியே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று பிரியப்படுகிறது. கல்லூரிவரையில் அந்தந்த ராஜ்ய மொழியே இருக்க வேண்டுமென்ற விருப்பம் அந்த அளவுக்கு தமிழ் முன்னேறவேண்டும். மந்திரியவர்கள் "ஒருவர் போனாள்" என்று சொன்னார்கள். அவர் எங்கு இலக்கணம் படித்தார்களோ? அவர்கள் ஒருத்தி என்று சொல்லியிருக்க வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் தமிழ் நல்ல முறையிலே வளரவேண்டும், தழைக்கவேண்டும் என்பதற்காக அந்தந்த ராஜ்யங்களில் அந்தந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டு மென்பதில் எங்களுக்கு அபிப்பிராய பேதம் கிடையாது. ஆனால் தொடர்பு மொழி வரும் போது, ஆங்கிலம் போதும். ஆங்கிலம் நல்ல மொழி என்பதால் ஒத்துக்கொள்ளுகி றோமே தவிர ஆங்கிலேயனை அல்ல. அதற்குக் காரணம் ஆங்கிலம் ஏற் கனவே அறிந்தவர்களுக்கு பழக்கப்பட்டிருக்கிற மொழி. எல்லா நாடு களிலும் வழங்கும் மொழி. ஆங்கிலேயர்களுக்கும் ரஷியர்களுக்கும் உறவு எப்படி இருந்தாலும் ரஷியர்கள் ஆங்கில மொழியிடத்தில் நல்ல எண்ணம் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கர்களுக்கு அவர்கள் அங்கிருந்தே போனவர் கள். ஆங்கிலம் உலகத்திலே இருக்கும் மொழிகளில் எல்லாம் சிறந்த மொழி; விஞ்ஞான மொழி; அறிவு வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் மொழி ஆங்கிலம் என்று எல்லோரும் படிக்கிறார்கள். அமைச்சருக்கு மாறுபட்ட கருத்து இருக்கலாம். ஆனால் ஆங்கில மொழி விஞ்ஞான உலகுக்கு ஏற்ற மொழி என்று எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். அந்த நிலைமை இருந்து வருகிறது. அந்த மொழியே தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ளலாம்.

திரு ஆதித்தன் சொன்னது போல் இன்று ஆங்கிலத்தில் தபால் எழுது கிறோம். நமக்கு தபால் வருகிறது. அந்த மாதிரி அளவில் தொடர்புக்கு மாத்திரம் ஆங்கிலத்தை உபயோகிப்பதால் ஒரு தகராறும் வராது. இதைத்தான் ராஜாஜி அவர்களும் சொல்லுகிறார்கள். இதற்கு ஆதரவாக பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், காந்தியார் ஒப்புக் கொண்டார்கள் என்றும் அதை ஒப்புக்கொண்டு அரசியல் சட்டம் இயற்றப் பட்டது என்றும் சொல்கிறார்கள். ஆனால் அப்பொழுது அவர்கள் காலம் வரும் மாற்றி விடலாம் என்று இருந்தார்களே தவிர மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தால் மாஸ்டர் தாராஸிங் போன்றவர்கள் தங்கள் மாறுபட்ட அபிப்பிராயத்தில் இருக்கமாட்டார்கள். பலதரப்பட்ட பகுதிகளிலும் இருப்பவர்கள் மாறுபட்ட அபிப்பிராயத்தில் இருக்கமாட்டார்கள் எனவே நல்ல முறையிலே ஆராய்ச்சி செய்து அந்தந்த ராஜ்ய மொழிதான் அங்கங்கே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். ஹைகோர்ட்டு வரை இருக்கவேண்டும். கல்லூரியிலும் இருக்கவேண்டும். சுப்ரீம் கோர்ட்டுக்கும் மத்ய சர்க்காருக்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை வற்புறுத்தவேண்டும். இந்த மாதிரி செய்ய வில்லை என்றால் நாட்டில் முதல் எதிர்ப்பு தமிழ் நாட்டிலிருந்து வரும். அதிலும் திராவிட முன்னேற்ற கழகத்திலிருந்து வரும். அந்தப் படையில் ராஜாஜி ஒரு தளபதியாக இருப்பார்கள். அப்பொழுது கனம் சுப்பிரமணியம் எப்படி அவரை எதிர்ப்பாரோ தெரியாது.

SRI R. KRISHNASAMI NAIDU : தெலுங்கு, கன்னடம்,
மலையாளம், முதலிய மொழிகள் அந்த நிலையில் இந்த ராஜ்யத்தில்
என்னவாகும் ?

SRI A. V. P. ASAITHAMBI : அவைகள் சகோதர மொழிகள்,
ஒரே இனத்தைச் சேர்ந்ததுதான் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன்.

11-10 a.m. *SRI R. SRINIVASA IYER : சட்ட மன்றத் தலைவர் அவர்களே,
ஆட்சி மொழிக் கமிஷன் அறிக்கை மீது சென்னை அரசாங்கம் சமர்ப்பித்த
யாதாஸ்தை எந்தவிதமான வெறி இல்லாமலும், வேறு விஷயங்களை
மனதில் வைத்துக் கொள்ளாமலும், நடுநிலைமை வகித்து, இன்னும் 20,
30 வருஷங்களுக்குப் பின்னால் வரக் கூடிய பிரஜைகளின் நன்மைகளைக்
கருதி, ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். காந்தி அடி
களின் அடிப்படையில் வேலை செய்பவர்கள், ஹிந்தியை ஆட்சி மொழி
யாகப் புகுத்த வேண்டும் என்று நினைத்திருப்பார்களானால், நம் அரசாங்கம்,
மற்றக் கட்சித் தலைவர்களை ஆலோசனைக்குக் கூப்பிட்டிருக்க மாட்டார்கள்.
காங்கிரஸ் கொள்கைகளை கைக்கொண்டவர்கள், காந்தி அடிகளின்
அடிப்படையில் வேலை செய்கின்றவர்கள் அவர்களே இதை மேற்கொண்டு ஒரு
முடிவு செய்திருப்பார்கள். எல்லோரும் ஒப்புக்கொண்டு முடிவு செய்த
யாதாஸ்தை, என்ன காரணத்தினாலோ, சில கட்சித் தலைவர்கள் ஆட்சேபிக்
கிறார்கள் என்பதைக் கண்டு நான் வியப்படைகிறேன். இந்த விஷயத்தைப்
பற்றி சட்ட மன்றத்திலே விவாதிக்கப்படுகின்ற பொழுது, இந்த விஷயத்
தைத் தவிர்த்து, கட்சிப் பிரசாரத்திற்காக சம்பந்தமில்லாத பிரச்னைகளை
எடுத்து பேசிக் கொண்டு வருவதைப் பார்த்து நான் வியப்பு அடைகிறேன்.
இந்த விஷயத்தில், முக்கியமாக, தென் நாட்டில், அதுவும், குறிப்பாக
தமிழ் நாட்டில் இந்தியை தீவிரமாக, உடனடியாக புகுத்தினால், நமக்கு,
கஷ்டம், நஷ்டம், தீங்கு ஏற்படும் என்பதை கௌஹத்தி காங்கிரசில்
நமது நிதி அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும்
வற்புறுத்தி, தீவிரமாக வாதித்து, 1965-ம் வருஷத்தை முற்றுப்புள்ளியாக
இருந்ததை மாற்றுவதற்காக காங்கிரசையும், காங்கிரஸ் கமிட்டியையும்,
அதைச் சேர்ந்த மெம்பர்களின் மனத்தை மாற்றியதைக் குறித்துநான்,
தமிழ் நாட்டின் சார்பாக, நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தியை தீவிரமாக, திடீர் என்று புகுத்தி விட்டார்கள், அதனால்
சிலருக்கு வெறி ஏற்பட்டு இருக்கிறது, இடைஞ்சல் ஏற்பட்டு இருக்கிறது.
ஆகவே இந்தி கூடவே கூடாது என்று சிலர் வெறியுடன் வாதிக்கிறார்கள்.
இந்தி நமது தமிழ் நாட்டிலே, போஸ்ட் கார்டு, கவர், மணியார்டர்
பாரம்கள்—இவைகளில் புகுத்தப்பட்டது எப்போது ? அப்போது முதல்
அமைச்சராக இருந்தவர் யார் ? மதிப்பிற்குரிய ராஜாஜி முதல்
அமைச்சராக இருந்தபோது போஸ்ட் கார்டுகளிலும், மணியார்டர் பாரம்
களிலும் இந்தி புகுத்தப்பட்டது. அவர் அப்போது அதை ஏன் ஆட்சே
பிக்கவில்லை. அவரும் கூட இருந்து "கான்ஸ்டிடியூஷன்" ஏற்படுத்திய
ஒரு காரணத்தால், அவர் காங்கிரஸ் கட்சியின் முதல் அமைச்சராக
இருந்த காரணத்தால் அவர் அப்போது எதிர்க்க வேண்டும் என்று
நினைக்க வில்லை போலும். நாமும் சில விஷயங்களில் தீவிரமான ஆலோ
சனைக்குப் பிறகு முதலில் ஏற்பட்ட முடிவு மாறி வேறுவிதமான
முடிவுக்கு வருகிறோம். இது மனித சுபாவம்தான். பல காரணங்களுக்
காக, இங்கிலீஷ்தான் வேண்டும் என்று சொன்னால் சரியாகாது. ஸ்ரீமான்
ராஜாஜி அவர்கள் ஒரு பெரிய அரசியல் வாதி, பெரிய **leader**, அவர்
நமக்கு செய்துள்ள சேவைகளை நாம் மறக்க முடியாது. இந்த விஷயத்
திலே, சுமுகமாக, நடு நிலைமையாக, தென் நாடுகளுக்கெல்லாம்,—
ஆந்திரம், கேரளம், தமிழ் நாடு என்று வைத்துக் கொள்ளலாம்,—
விரோதமாக இல்லாத வகையிலேயே, இரண்டு பாஷைகளும் வெகு
நாள் நீடித்து நடக்க வேண்டும், தொடர்பு இருக்க வேண்டும் என்ற
அடிப்படையில் தயாரித்த யாதாஸ்தை நாம் வரவேற்க வேண்டுமே
தவிர, வேறு ஒன்றும் செய்வதற்கு இல்லை. மொரார்ஜி தேசாயைப்
போல் இருக்கும் இந்தி தீவிரவாதிகள் "புரோடோகனிஸ்ட்ஸ்" இந்தியே





இருக்க வேண்டும், இப்பொழுதே இருக்க வேண்டும் என்று சொன்ன போது நமது அமைச்சர்கள் அதை மாற்ற வேண்டும் என்று சொன்னார் கள். எத்தனை காலத்திற்கு ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று அவர் கேட்ட போது எத்தனை காலத்திற்கு அவசியமாக இருக்கிறதோ அத்தனை காலத்திற்கு இருக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னதை நான் பாராட்டுகிறேன். 1965 என்று இருப்பதை 1995 என்று மாற்றலாம், 2095 என்று மாற்றலாம். அப்போதைக்கப்போது இருக்கக்கூடிய நிலைமைக்குத் தகுந்தவாறு நமது பிரதிநிதிகள் முடிவு செய்வார்கள். இப்போது இருக்கக்கூடிய "கான்ஸ்டிடியூஷன்" (**Constitution**) அதன் பிரிவுகள் எல்லாம், "நெபுலஸ்" (**Nebulous**) ஆகவும், "மாலியபில்" (**Malleable**) ஆகவும் இருக்கின்றன. எப்பொழுதுமே திருத்திக் கொள்ளக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆங்கிலமும் நீடித் திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தயாரித்திருக்கிற யாதாஸ்தை நாம் வரவேற்க வேண்டும். வெறும் "பிரைட் அல்லது பிரஜூடிஸ்" (**pride or prejudice**) வைத்துக்கொண்டு அந்த அடிப்படையில் இங்கிலீஷ் தான் வேண்டும், இந்தி அறவே கூடாது என்றும், இங்கிலீஷ் அறவே கூடாது, இந்தி தான் வேண்டும் என்று சொல்வது பிசகு. நாம் இப்போது ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றிருக்கிறோம் ; 150 வருஷங்களாக ஆங் கிலம் ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது ; இனியும் அப்படியே இருக்க வேண்டும் என்று சொன்னால் எத்தனை சத விகிதத்தினருக்கு ஆங்கிலம் தெரியும். எத்தனை சத விகிதத்தினர் ஆங்கிலத்தை நுட்பமாக படித்திருக் கின்றனர். ஆங்கிலத்தில் உள்ள நுணுக்கங்களை எத்தனை சத விகிதத்தினர் அறிந்திருக்கின்றனர். இன்றைக்கு இருக்கும் குழந்தைகள், 20 வருஷங் களுக்குப் பிறகு எந்த பாஷையில் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும், வாதிக்க வேண்டும், அரசியல் சட்ட சபைகளை நடத்த வேண்டும் என்பதை யெல்லாம் நாம் யோசிக்க வேண்டும். இன்று இருக்கும் நிலையை நீடித்துக் கொண்டு போக வேண்டும் என்று சொல்வது முறையல்ல.

சிறு குழந்தைகள், 10 வயதிலிருந்து 15 வயது வரை உள்ளவர்கள், 3 பாஷைகளை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம் என்பது நிபுணர்களின் கருத்து.

ஆங்கிலத்தில் பல வருஷ காலமாகப் பேசிப் பழகியதினால், ஒரு சில ஆங்கில வார்த்தைகளை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. 1965, 1975 வரை நான் இருப்பேனானால் தமிழிலேயே பேசுவேன். இதற் காக என்னை மன்னிக்க கேட்டுக்கொள்கிறேன்.

"எடுகேஷன் ஒயிட் பேபர்" (**White Paper on Education**) பற்றி விவாதம் நடந்தது. அந்த அடிப்படையில் ஒரு "ஸிலபஸ்" (**Syllabus**) வகுக்கப் பட்டது. கல்லூரி உபாத்தியாயர்கள், பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இவர் களை கலந்து ஆலோசிக்க ஒரு கமிட்டி ஏற்படுததி, "ஸிலபஸ்" (**Syllabus**) வகுக்கப்பட்டது. அது எல்லா மெம்பர்களுக்கும் கொடுக்கப்பட்டது. அதை எல்லோரும் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதன்படி 5-வது கிளாஸ் வரை தமிழிலேயே போதனை, வேறு பாஷையில் இல்லை. 5-வது கிளாஸிலிருந்து இங்கிலீஷும் கற்றுக்கொடுக்கப்படும். நமது பிரஜை களுக்கு இங்கிலீஷ் நன்றாக தெரியவும் அத்துடன் ஹிந்தியும் தெரிய வேண்டும் என்பதற்காக 8-ம் கிளாஸிலிருந்து 11-ம் கிளாஸ் வரை இந்தி யும் இங்கிலீஷும் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. 20 வருஷங்களுக்குப் பிறகு, நமது குழந்தைகள் (**Central Government**) ஸெண்டருக்கு உத்தியோகத்திற்கு போக வேண்டும் என்று நினைக்கும்போது நமது தாய், தகப்பன், அரசியல் வாதிகள், இந்தியை கற்றுக் கொள்ளு வதற்கு வழி செய்யவில்லையே என்று நினைக்காமலிருக்க வேண்டும். ஸெகண்டரி ஸ்கூல் ஸ்டாண்டர்ட் வரை "ஸிலபஸ்" நல்ல முறையில் வகுக்கப் பட்டிருக்கிறது. "ஸயன்ஸ்", டெக்னலஜி, மெடிஸின், இம்மாதிரி முக் கியமான விஷயங்களில் தமிழில் போதனை மொழி ஏற்படுத்துவதற்கு சிறிது காலம் ஆகும் என்பதை உணர்ந்தும், ஹை ஸ்கூலிலிருந்து காலேஜுக்குப்

போகும்போது, திணறுமலிருக்கும் பொருட்டும் ஹை ஸ்கூல்களில் சில வகுப்புகளில் இங்கிலீஷை கட்டாயப் பாடமாக்கியிருக்கிறார்கள். சில இடங்களில் பரீட்சைப் பாடமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது.

நமது ராஜ்யத்தில் ராஜ்ய மொழி, பிரதேச மொழி, தமிழ்தான், இருக்க வேண்டும் என்று இயற்றிய சட்டத்தை அமுலாக்குவதற்கு வழி செய்ய வேண்டும். அந்த சட்டத்தை மாற்றி, ஆங்கிலம் தான் இருக்க வேண்டும் என்று நாம் வாதிக்க முடியுமா என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டம் இயற்றியாகி விட்டது. ஆட்சி மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும், எல்லா நடவடிக்கைகளும் தமிழில் தான் நடக்க வேண்டும், சகலமான உத்யோக அலுவலகங்களில் எல்லாம் தமிழிலேயே நடத்த வேண்டும் என்று சட்டம் இயற்றி வற்புறுத்தி வந்திருக்கிறோம். இந்த அளவில் செண்ட்ரல் மொழி அதாவது யூனியன் மொழி எதாக இருக்க வேண்டும் என்று விதிக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது வகுத்திருக்கிற நடு நிலைமையைப் பார்த்தால் ஹிந்தியைக் கற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இதை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கத்துடன் நாம் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காக நம் நாட்டில் வழங்கப்பட்டு வருகிற ரயில்வே டிக்கட்டுகளில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடிக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே ஒவ்வொரு இடங்களிலும் அந்தந்த பிரதேச மொழியிலும் ஆங்கிலத்திலும் அச்சடித்துக் கொடுக்கிறார்கள். ஆந்திர தேசத்தில் வழங்கப்படும் டிக்கட்டுகளில் தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் அச்சடித்துக் கொடுக்கப்படுகிறது. அதைப் போலவே ஒவ்வொரு பிரதேசத்திலும் அங்குள்ள மொழியிலும் ஆங்கிலத்திலும் அச்சடித்துக்கொடுக்கப்பட்டு வருகிறது. ஹிந்தி தெரியாத இடங்களில் இடைஞ்சல் ஏற்படாமல் இருப்பதற்காக இந்த திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கண்டு நாம் பாராட்டக்கூடியதாக இருக்கிறது.

கோர்ட்டுகளை எடுத்துக்கொண்டால் தற்காலம் எல்லா கோர்ட்டு நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் தான் நடைபெற்று வருகின்றன. இன்னும் ஆங்கிலத்திலேயே தான் நடைபெற வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. இதை நான் ஆமோதிக்கவில்லை. தமிழ் நாட்டில் தாய் மொழியாகிய தமிழ் மொழி வளர வேண்டும் என்கிற காலத்தில், பிற மொழி வர வேண்டும் என்று சொல்வது சரியல்ல. தமிழ் நாட்டின் அனுபவத்தில் 1816, 1829, 1836-ம் வருஷங்களில் எழுதப்பட்ட தமிழ் ஜட்ஜுமெண்டுகள் இருக்கின்றன. பட்டுக்கோட்டை முன்சீப் கோர்ட்டிலும், தஞ்சை, கும்பகோணம் ஜில்லா கோர்ட்டுகளிலும் அன்று தமிழில் எழுதப்பட்ட ஜட்ஜுமெண்டுகள் எவ்வளவோ மேலானதாக இருக்கின்றன. அவைகள் எவ்வளவு அழகாக எழுதப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கலாம். இப்பொழுது ஆங்கிலத்தில் எழுதப்படுகின்ற ஜட்ஜுமெண்டுகளையும் பார்க்கலாம். அதனால் தமிழ் பாஷை அங்கு வரவேண்டுமானால் அது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வரவேண்டும். இது சம்பந்தமாக இப்பொழுது ஹை கோர்ட்டில் போட்டிருக்கிற ஒரு உத்தரவை நான் வரவேற்கிறேன். அதை நான் பாராட்டுகிறேன். ஏற்கெனவே நடந்து வந்தது என்னவென்றால் தமிழ் மொழியில் இருக்கும் தஸ்தாவேஜுகளை ஆங்கிலத்தில் தர்ஜமா செய்து வந்ததால் அதில் பல விதமான தப்புகள் ஏற்பட்டு அதன் விளைவு அந்தந்த கட்சிக்காரர்கள் தலையில் விழுவதோடு அவர்கள் தங்களுடைய தாவாவையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அதற்குள்ள செலவையும் அந்தக் கட்சிக்காரர்களே பொறுத்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது. அதனால் கட்சிக்காரர்களுக்கு ஏராளமான செலவும் ஏற்படுவதை தவிர்க்கவும், நீதி வழங்குவதில் தாமதம் ஏற்படுவதை குறைப்பதற்கும் இனிமேல் தமிழ் தஸ்தாவேஜுகளை தர்ஜமா செய்ய வேண்டியதில்லை என்றும் அந்தந்த பாஷையிலேயே அச்சடிக்க வேண்டும் என்றும் ஹை கோர்ட்டில் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அச்சடிக்க வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும் அந்த தஸ்தாவேஜுகளில் ஒரிஜினலையே எடுத்துக்கொண்டு



உபயோகிக்கலாம் என்றும் ஒரு உத்தரவு போட்டால் நல்லது. இப்படிச் செய்திருப்பது பொது ஜனங்களுடைய சௌகரியத்திற்கு என்பதையும் அது ஒரு வசதியாகவும் இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சுப்ரீம் கோர்ட்டைப்பற்றி சொல்லுகிறார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்கு இங்குள்ள முன்சீப் கோர்ட்டிலிருந்து எவ்வளவு கேஸ்கள் போகின்றன என்பதைப் பார்க்கவேண்டும். இங்குள்ள கேஸ்கள் அநேகமாக அங்கு போவதில்லை. அப்படிப் போவதாக இருந்தாலும் 10,000க்கு ஒரு கேஸ் போகலாம். அப்படி கேஸ் நடக்கும்போது ஹிந்திதான் சுப்ரீம் கோர்ட்டில் இருக்க வேண்டுமே தவிர ஆங்கிலம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஏற்படாமல் தஸ்தாவேஜுகளை இந்தியில் அங்கு மொழிகளை தர்ஜமா செய்து கொள்ளலாம். அதற்கு அங்கு ஆங்கிலம் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இங்கிலீஷை அறவே ஒழித்து விடலாமா என்ற பிரச்னை வரும்போது ஹிந்தி பேசாத மற்ற பிரதேசங்களிலுள்ள பிரஜைகளுக்குச் சாதகமாக மத்திய அரசாங்க உத்யோகங்களுக்குப் போகிறவர்களுக்கு எவ்விதமான இடையூறும் (handicap) இருக்கக்கூடாது என்கிற அடிப்படையை மட்டும் நாம் வற்புறுத்தி, தமிழ் நாடு சம்பந்தப்பட்ட வரையில் ஹிந்தியை கற்றுக்கொண்டோ அல்லது ஹிந்தியை பாஸ் செய்தோதான் மத்திய அரசாங்க உத்யோகங்களுக்குப் போகலாம் என்று இருக்கும் கட்டுப்பாட்டை நிவர்த்திக்க வேண்டும் என்ற ஒரு உத்தரவைப் போடுவதற்கு நாம் வற்புறுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது.

யூனியன் மொழி என்று சொல்லுகிற காலத்தில் நேஷனல் மொழியாகிய தேசீய மொழிக்கும் ராஜாங்க மொழிக்கும் ஒரு வித்யாசம் காட்ட வேண்டியது அவசியம். மொழி என்பது நாம் மற்ற பிரதேசங்களுக்குப் போகும் காலத்தில் ஏதோ ஒரு பொது மொழி தெரிய வேண்டியது தான். இப்பொழுது நெல்லூரைத் தாண்டிப் போனால் அப்பொழுது ஹிந்தி தெரியாவிட்டால் பிரயாணம் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. அதைப் போக்க இப்பொழுதுள்ள பிரஜைகளுக்கு அந்த மாதிரி 1958–59 முதல் எட்டாவது க்ளாஸ் முதல் ஹிந்தி சொல்லிக்கொடுக்கப் போகிறோம். இது சரியான வழி விஷயம் என்பதை எல்லோருக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றும் ஹிந்தி பிரசார சபையின் மூலமாக ஹிந்தி பாஷையில் ஜாஸ்தியான நபர்கள் பரிட்சையில் தேரியிருக்கிறார்கள், அதிலும் தமிழ் நாட்டில் ஜாஸ்தியாக தேறியிருக்கிறார்கள் என்று நேற்று பேப்பரில் பிரசுரமாகி இருக்கிறது. எவ்வித வற்புறுத்தலும் இல்லாமல் யாரும் சொல்லாமல் தமிழ் நாட்டு ஜனங்கள் முற்போக்கை அறிந்து ஹிந்தியைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள். இந்தியாவுக்கு ஒரு பொது பாஷை இருக்க வேண்டும், அது ஹிந்தியாகத்தான் இருக்க வேண்டும் என்று கற்றுக்கொண்டு வருகிறார்கள். தமிழ் நாட்டிற்கு ஒரு இதர பாஷை அதாவது **foreign** பாஷை இருக்க வேண்டியது அவசியம். அது ஆங்கிலமாக இருக்க வேண்டுமா அல்லது ஹிந்தியாக இருக்க வேண்டுமா என்பதை யோசித்து அது ஹிந்தியாக இருக்கும் என்று முடிவு செய்து தமிழ் 'நாட்டில் ஹிந்தியை அதிகமாகக் கற்றுக்கொண்டு படித்து பாஸ் செய்து கொண்டும் வருகிறார்கள். ஹிந்தியை சுலபமாகக் கற்றுக்கொண்டு பரிட்சையிலும் தேறி வருகிறார்கள். அவர்கள் எங்கே இருந்தாலும் நல்லவிதமாக வேலை செய்வார்கள். தமிழ் நாட்டவர்கள் சென்ட்ரல் அரசாங்கத்தில்தான் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். பல உத்யோகங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். பல தமிழ் நிபுணர்கள் உயர்ந்த பதவியில் இருக்கிறார்கள். கட்டாயமாக ஹிந்தி வந்தாலும் கூட அவர்கள் பின் வாங்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஹிந்தி சம்பந்தப்பட்டவரையில் போதனுமுறையைத்தவிர நாமாகவே கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஒன்று உண்டு. அது என்ன காரணம் என்றால் நமது தேச சரித்திரத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் ஏற்கெனவே இங்கு மொகலாய ராஜ்யம் நடந்தபோதும் அதற்கு முன்னால் அந்நியர்களால் படையெடுத்து ஆட்சி நடந்த போதும், பிறகு தமிழ் நாட்டில்

[Sri R. Srinivasa Iyer] [10th March 1958

பலவிதமான அரசர்கள் வந்தபோதும், பல விதமான மொழிகளில்தான் அரசாங்க நடவடிக்கைகள் நடந்துவந்திருக்கின்றன. அப்படி நடந்து வந்து பிறகு மாறுபட்டிருக்கின்றன. (இந்த சமயத்தில் கனம் சட்டநாத கரையாளர் தலைமை வகித்தார்.) தஞ்சை சம்பந்தப்பட்ட மட்டில் அங்கு மராட்டி, மோடி என்ற இரண்டு பாஷைகளில் பல தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. மோடி பாஷையை மொழி பெயர்க்க பம்பாயில் ஒருவர் தான் இருக்கிறார். அவர் பணத்தை வாங்கிக்கொண்டு தப்பு அர்த்தம் செய்து கொண்டு அதன்படி மொழி பெயர்த்தாலும் அது நமக்கு சட்டமாகிறது. அந்த அடிப்படையில் நமக்கு ஒரு பொது மொழி எப்பொழுதும் அவசியம்தான். அது ஆங்கிலமாக இருப்பானேன். ஆங்கில அரசாட்சி வந்ததால் அவர்களிடம் நாம் அடி வணங்கி பிழைப்பதற்காக ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டோம். அந்த ஆங்கிலம் பிற்பட்டு சாசுவதமாக இருக்க வேண்டுமா ?

நமக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்று சொல்லுகிற காலத்தில் 100-க்கு 42 பேர்கள் ஹிந்தி பேசுகிறார்கள். அப்படிப்பட்ட ஹிந்தி தெரிந்தவர்களுடன் நாம் தொடர்பு கொண்டு ஹிந்தி பாஷையை நாம் ஒருவாறு கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்தான். நம்முடைய பிரஜைகள் இப்பொழுது இன்டர்நேஷனல் உத்யோகங்களுக்குப் போகிறார்கள். அப்படிப் போகிறவர்கள் இண்டர் நேஷனல் மொழி கற்றுக்கொள்ள வேண்டியதுதான். பிற நாடுகளுக்கு (Ambassadors) அம்பாஸடர்களாகப் போகிறார்கள். ரஷ்யாவுக்குப் சென்றால் அங்குள்ள ரஷ்ய பாஷையைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஜெர்மனிக்குச் சென்றால் ஜெர்மன் பாஷை கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப் போகிறவர்களுக்கு அந்தந்த பாஷைகளைக் கற்றுத் தெரிந்து கொள்வது சுலபம். அதை சுலபமாகவும் கற்றுக் கொள்ளுவார்கள்.

சாதாரணமாக இப்பொழுது மத்திய அரசாங்கத்தில் பார்க்கலாம், போன வருஷம் இருந்ததை விட இந்த வருஷம் ஐந்து சத விகிதம் அதிகமாக ஹிந்தி கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அந்த பாஷையை வெறியுடன் எதிர்க்க வேண்டாம். அப்படிக் கற்றுக்கொண்டது பிசகு என்றும் சொல்ல வேண்டாம். அது அவசியம் என்றுதான் சொல்ல வேண்டும். இதை வெறியுடன் தீர்க்காமல் சுமுகமான முறையில் தீர்க்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மூன்று பாஷைகளை சுலபமாக கற்றுக்கொள்ளலாம் என்றும் நமது தேசத்திற்கு அது வேண்டியதுதான் என்றும் இதர தேசங்களில் இருப்பதைப் பற்றியும் நமது நிதி மந்திரி அவர்கள் விளக்கிக்காட்டினார்கள். அதனால் இப்பொழுது இருக்கிற (syllabus) ஸிலபஸ்ஸைப் பார்க்கலாம். ஏற்கெனவே ஐந்தாவது முதல் ஆங்கிலம், தமிழ் இது தவிர இரண்டாவது மொழி என்று வைத்திருந்தார்கள். அப்படி குழந்தைகளும் கற்றுக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது கட்டாய பாடமாக தமிழும் சில க்ளாசில் ஹிந்தியும் கட்டாயமாக 8 முதல் 11 ஆவது க்ளாஸ் வரையிலும் ஆங்கிலம் 5 முதல் 11 வரையிலும் என்று ஏற்படுத்தப்பட்டிருப்பது நமது தமிழ் நாட்டு ஜனங்கள் அதை பொதுவாக வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. அதனால் நமது கல்வி மந்திரி அவர்களுடைய யாதாஸ்தை பூர்ணமாக வரவேற்று அதை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI A. VEDARATHNAM : சட்ட மன்றச் சட்டநாத தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் இந்த மொழி விஷயமாக எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியை நான் மனமார வரவேற்கிறேன். இந்த ஒரு சிறந்த முடிவை அவர்கள் கொண்டு வருவதற்கு எடுத்துக்கொண்டிருக்கிற அந்த முயற்சிகளை நான் மனமார பாராட்டுகிறேன். இந்த அவையில் சான்று எடுத்துக்கூறப்படுகிற ராஜாஜி கூறியிருக்கிறார், இந்த மொழி விஷயம் அரசியலுக்கு அப்பாற்பட்டது, அரசியல் வேறு மொழி விஷயம் வேறு என்று. அந்த அடிப்படையில் காங்கிரஸ் கட்சியினுடைய லட்சியம்,



10th March 1958] [Sri A. Vedarathnam]

கொள்கை, என்று தேசீய பாஷையாக அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்றுக்கொண்டது ஹிந்தியாக இருந்தபோதிலும் கூட இதை அந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடாது என்று இந்த அவையின் கண் இருக்கிற எல்லா கட்சியினரும் சேர்ந்து ஏகமனதான ஒரு முடிவை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று அவர்கள் எடுத்துக்கொண்ட ஒரு முயற்சியை நான் மாத்திரம் அல்ல, இந்த அவையிலுள்ளவர்கள் மாத்திரம் அல்ல, இதற்கு புறம்பானவர்கள் எல்லோரும் கூட ஒரு மனதாகப் பாராட்டத்தகுந்த விஷயம் இந்த மொழி விஷயம், அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற முடிவு. இன்றையதினம், இந்த அவையின் கண் இந்த மொழி விஷயத்தைப்பற்றி இவ்வளவு விவாதம் நடப்பதற்கு காரணமாக இருந்தது எது என்று சொல்லச் சொன்னால் எந்த ராஜாஜியை எதிர்க்கட்சிக்காரர்கள் இப்பொழுது தங்களுக்குச் சான்றாக எடுத்துக் கூறுகின்றார்களோ, தங்களுடைய போராட்டத்திற்கு அவர்கள் தளபதியாக வரப்போகிறார்கள் என்று கூறுகிறார்களோ அவர்கள் எடுத்த முயற்சிகளுக்கும் இவர்களுடைய அரசியல் தந்தை ஈ. வெ. ரா. போட்ட முட்டுக்கட்டைதான் இன்று இந்த நிலைக்குக் காரணம் என்று நான் கூறினால், அதை யாரும் மறுக்க முடியாது. 1937-ம் ஆண்டில் ராஜாஜி அவர்கள் இந்த அவையில் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் 1965-ம் ஆண்டிலே இந்தி இந்த நாட்டினுடைய அரசியல் மொழியாக, தேசீய மொழியாக வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றும் போது, அந்த அரசியல் நிர்ணய சபையை இயற்றிய அந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு ஒரு திருத்தம் அந்தக் காலத்திலே கொண்டுவரவேண்டிய நிலையில் இந்த நாட்டை வைத்திருக்கக்கூடாது என்று அப்பொழுதே அதற்கான அடிப்படையிலே முயற்சிகளை அன்றைக்கே எடுத்துக்கொண்டார்கள். இந்த நாட்டிலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களிலும், ஆரம்பப் பள்ளிக்கூடம், உயர்தர பள்ளிக்கூடம் முதலிய எல்லா பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்கள் இந்தி மொழியை கட்டாயமாக பயிலவேண்டும் என்று அவர்கள்தான் அந்த முயற்சியை எடுத்துக் கொண்டார் என்பதை என்னுடைய அருமை தம்பி ஆசைத்தம்பி அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அன்றைக்கு இவர்களுடைய அரசியல் தந்தை என்ன செய்தார்கள், அவர்களுடைய ஞாபகத்தை 1937-ம் ஆண்டுக்கு தயவு செய்து திருப்பும்படி கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுது அவர்கள்தான் இந்தி வேண்டுமானால் இருந்துகொண்டு போகட்டும், கட்டாயம் என்ற வார்த்தை அதில் இருக்கக் கூடாது, கட்டாயத்தை எடுத்துவிடுவார்களேயானால், எனக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது என்று தார் சட்டிகளை தூக்கிக்கொண்டு ரயில்வே ஸ்டேஷன்கள் தோறும் பலகைகளில் எழுதப்பட்டிருந்த இந்தி எழுத்துக்களை அழிக்க முன்வந்தார்கள். அந்தத் தொண்டர்களில் ஆசைத்தம்பியும் ஒருவரோ என்பது எனக்குத் தெரியாது (ஒரு குரல்—இல்லை). அன்று ராஜாஜி போட்டிருந்த அந்த திட்டத்தை இவர்கள் தடை செய்தார்கள். இந்தத் தடை தேசீயத்திற்கே தடை. தேசீயத்திற்கே தடை அவர்களுடைய இயக்கம் என்று நான் சொன்னால் அதை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். நாடு முழுவதும் ஒன்று, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று, அதில் நாமும் ஒருவர் என்ற அந்த விசால நோக்கு அவர்களுக்கு இல்லாத காரணத்தினால், பாகுபாடு செய்து வேற்றுமை உணர்ச்சிகளை தூண்டி, சாதியினால் வேற்றுமை, மதத்தினால் வேற்றுமை, அது போதாதது என்று இன்றைக்கு மொழியினால் வேற்றுமை, எந்தத் துறையிலும் மக்களுடைய வேற்றுமை உணர்ச்சிகளை தூண்டிவிட்டு வேற்றுமை கனலை, வேற்றுமை விஷத்தை, அந்த உணர்ச்சிகளையெல்லாம் தேசத்திற்கு விரோதமாக பரப்பிவருகிற அவர்கள், அன்றைக்கு அந்த மொழி துவேஷத்தை கிளப்பிவிட்டு, அதற்கு ஊறு செய்ய முன் வந்திராவிட்டால், இன்றைக்கு இந்தப் பிரச்னைக்கு அவசியமே இருந்திருக்காது. இன்றையதினம் இந்த நாட்டினுடைய பொது மொழி எதுவாக இருக்க வேண்டுமென்பதுபற்றி இந்த சட்டசபையில் இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. ராஜாஜி அவர்கள் என்ன சொன்னார்

பலவிதமான அரசர்கள் வந்தபோதும், பல விதமான மொழிகளில்தான் அரசாங்க நடவடிக்கைகள் நடந்துவந்திருக்கின்றன. அப்படி நடந்து வந்து பிறகு மாறுபட்டிருக்கின்றன. (இந்த சமயத்தில் கனம் சட்டநாத கரையாளர் தலைமை வகித்தார்.) தஞ்சை சம்பந்தப்பட்ட மட்டில் அங்கு மராட்டி, மோடி என்ற இரண்டு பாஷைகளில் பல தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. மோடி பாஷையை மொழி பெயர்க்க பம்பாயில் ஒருவர் தான் இருக்கிறார். அவர் பணத்தை வாங்கிக்கொண்டு தப்பு அர்த்தம் செய்து கொண்டு அதன்படி மொழி பெயர்த்தாலும் அது நமக்கு சட்ட மாகிறது. அந்த அடிப்படையில் நமக்கு ஒரு பொது மொழி எப்பொழுதும் அவசியம்தான். அது ஆங்கிலமாக இருப்பானேன். ஆங்கில அரசாட்சி வந்ததால் அவர்களிடம் நாம் அடி வணங்கி பிழைப்பதற்காக ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டோம். அந்த ஆங்கிலம் பிற்பட்டு சாசுவதமாக இருக்க வேண்டுமா ?

நமக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்று சொல்லுகிற காலத்தில் 100-க்கு 42 பேர்கள் ஹிந்தி பேசுகிறார்கள். அப்படிப்பட்ட ஹிந்தி தெரிந்தவர்களுடன் நாம் தொடர்பு கொண்டு ஹிந்தி பாஷையை நாம் ஒருவாறு கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்தான். நம்முடைய பிரஜைகள் இப்பொழுது இன்டர்நேஷனல் உத்யோகங்களுக்குப் போகிறார்கள். அப்படிப் போகிறவர்கள் இண்டர் நேஷனல் மொழி கற்றுக்கொள்ள வேண்டியதுதான். பிற நாடுகளுக்கு (Ambassadors) அம்பாஸடர்களாகப் போகிறார்கள். ரஷ்யாவுக்குப் சென்றால் அங்குள்ள ரஷ்ய பாஷையைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஜெர்மனிக்குச் சென்றால் ஜெர்மன் பாஷை கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப் போகிறவர்களுக்கு அந்தந்த பாஷைகளைக் கற்றுத் தெரிந்து கொள்வது சுலபம். அதை சுலபமாகவும் கற்றுக் கொள்ளுவார்கள்.

சாதாரணமாக இப்பொழுது மத்திய அரசாங்கத்தில் பார்க்கலாம், போன வருஷம் இருந்ததை விட இந்த வருஷம் ஐந்து சத விகிதம் அதிகமாக ஹிந்தி கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அந்த பாஷையை வெறியுடன் எதிர்க்க வேண்டாம். அப்படிக் கற்றுக்கொண்டது பிசகு என்றும் சொல்ல வேண்டாம். அது அவசியம் என்றுதான் சொல்ல வேண்டும். இதை வெறியுடன் தீர்க்காமல் சுமுகமான முறையில் தீர்க்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மூன்று பாஷைகளை சுலபமாக கற்றுக்கொள்ளலாம் என்றும் நமது தேசத்திற்கு அது வேண்டியதுதான் என்றும் இதர தேசங்களில் இருப்பதைப் பற்றியும் நமது நிதி மந்திரி அவர்கள் விளக்கிக்காட்டினார்கள். அதனால் இப்பொழுது இருக்கிற (syllabus) ஸிலபஸ்ஸைப் பார்க்கலாம். ஏற்கெனவே ஐந்தாவது முதல் ஆங்கிலம், தமிழ் இது தவிர இரண்டாவது மொழி என்று வைத்திருந்தார்கள். அப்படி குழந்தைகளும் கற்றுக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது கட்டாய பாடமாக தமிழும் சில க்ளாசில் ஹிந்தியும் கட்டாயமாக 8 முதல் 11 ஆவது க்ளாஸ் வரையிலும் ஆங்கிலம் 5 முதல் 11 வரையிலும் என்று ஏற்படுத்தப்பட்டிருப்பது நமது தமிழ் நாட்டு ஜனங்கள் அதை பொதுவாக வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. அதனால் நமது கல்வி மந்திரி அவர்களுடைய யாதாஸ்தை பூர்ணமாக வரவேற்று அதை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*Sri A. VEDARATHNAM : சட்ட மன்றச் சட்டநாத தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் இந்த மொழி விஷயமாக எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியை நான் மனமார வரவேற்கிறேன். இந்த ஒரு சிறந்த முடிவை அவர்கள் கொண்டு வருவதற்கு எடுத்துக்கொண்டிருக்கிற அந்த முயற்சிகளை நான் மனமார பாராட்டுகிறேன். இந்த அவையில் சான்று எடுத்துக்கூறப்படுகிற ராஜாஜி கூறியிருக்கிறார், இந்த மொழி விஷயம் அரசியலுக்கு அப்பாற்பட்டது, அரசியல் வேறு மொழி விஷயம் வேறு என்று. அந்த அடிப்படையில் காங்கிரஸ் கட்சியினுடைய லட்சியம்,





கொள்கை, என்று தேசீய பாஷையாக அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்றுக்கொண்டது ஹிந்தியாக இருந்தபோதிலும் கூட இதை அந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடாது என்று இந்த அவையின் கண் இருக்கிற எல்லா கட்சியினரும் சேர்ந்து ஏகமனதான ஒரு முடிவை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று அவர்கள் எடுத்துக்கொண்ட ஒரு முயற்சியை நான் மாத்திரம் அல்ல, இந்த அவையிலுள்ளவர்கள் மாத்திரம் அல்ல, இதற்கு புறம்பானவர்கள் எல்லோரும் கூட ஒரு மனதாகப் பாராட்டத்தகுந்த விஷயம் இந்த மொழி விஷயம், அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற முடிவு. இன்றையதினம், இந்த அவையின் கண் இந்த மொழி விஷயத்தைப்பற்றி இவ்வளவு விவாதம் நடப்பதற்கு காரணமாக இருந்தது எது என்று சொல்லச் சொன்னால் எந்த ராஜாஜியை எதிர்க்கட்சிக்காரர்கள் இப்பொழுது தங்களுக்குச் சான்றாக எடுத்துக் கூறுகின்றார்களோ, தங்களுடைய போராட்டத்திற்கு அவர்கள் தளபதியாக வரப்போகிறார்கள் என்று கூறுகிறார்களோ அவர்கள் எடுத்த முயற்சிகளுக்கும் இவர்களுடைய அரசியல் தந்தை ஈ. வெ. ரா. போட்ட முட்டுக்கட்டைதான் இன்று இந்த நிலைக்குக் காரணம் என்று நான் கூறினால், அதை யாரும் மறுக்க முடியாது. 1937-ம் ஆண்டில் ராஜாஜி அவர்கள் இந்த அவையில் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் 1965-ம் ஆண்டிலே இந்தி இந்த நாட்டினுடைய அரசியல் மொழியாக, தேசீய மொழியாக வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றும் போது, அந்த அரசியல் நிர்ணய சபையை இயற்றிய அந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு ஒரு திருத்தம் அந்தக் காலத்திலே கொண்டுவரவேண்டிய நிலையில் இந்த நாட்டை வைத்திருக்கக்கூடாது என்று அப்பொழுதே அதற்கான அடிப்படையிலே முயற்சிகளை அன்றைக்கே எடுத்துக்கொண்டார்கள். இந்த நாட்டிலுள்ள எல்லா பள்ளிக் கூடங்களிலும், ஆரம்பப் பள்ளிக்கூடம், உயர்தர பள்ளிக்கூடம் முதலிய எல்லா பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்கள் இந்தி மொழியை கட்டாயமாக பயிலவேண்டும் என்று அவர்கள்தான் அந்த முயற்சியை எடுத்துக் கொண்டார் என்பதை என்னுடைய அருமை தம்பி ஆசைத்தம்பி அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அன்றைக்கு இவர்களுடைய அரசியல் தந்தை என்ன செய்தார்கள், அவர்களுடைய ஞாபகத்தை 1937-ம் ஆண்டுக்கு தயவு செய்து திருப்பும்படி கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுது அவர்கள்தான் இந்தி வேண்டுமானால் இருந்துகொண்டு போகட்டும், கட்டாயம் என்ற வார்த்தை அதில் இருக்கக் கூடாது, கட்டாயத்தை எடுத்துவிடுவார்களேயானால், எனக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது என்று தார் சட்டிகளை தூக்கிக்கொண்டு ரயில்வே ஸ்டேஷன்கள் தோறும் பலகைகளில் எழுதப்பட்டிருந்த இந்தி எழுத்துக்களை அழிக்க முன்வந்தார்கள். அந்தத் தொண்டர்களில் ஆசைத்தம்பியும் ஒருவரோ என்பது எனக்குத் தெரியாது (ஒரு குரல்—இல்லை). அன்று ராஜாஜி போட்டிருந்த அந்த திட்டத்தை இவர்கள் தடை செய்தார்கள். இந்தத் தடை தேசீயத்திற்கே தடை. தேசீயத்திற்கே தடை அவர்களுடைய இயக்கம் என்று நான் சொன்னால் அதை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். நாடு முழுவதும் ஒன்று, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று, அதில் நாமும் ஒருவர் என்ற அந்த விசால நோக்கு அவர்களுக்கு இல்லாத காரணத்தினால், பாகுபாடு செய்து வேற்றுமை உணர்ச்சிகளை தூண்டி, சாதியினால் வேற்றுமை, மதத்தினால் வேற்றுமை, அது போதாதது என்று இன்றைக்கு மொழியினால் வேற்றுமை, எந்தத் துறையிலும் மக்களுடைய வேற்றுமை உணர்ச்சிகளை தூண்டிவிட்டு வேற்றுமை கனலை, வேற்றுமை விஷத்தை, அந்த உணர்ச்சிகளையெல்லாம் தேசத்திற்கு விரோதமாக பரப்பிவருகிற அவர்கள், அன்றைக்கு அந்த மொழி துவேஷத்தை கிளப்பிவிட்டு, அதற்கு ஊறு செய்ய முன் வந்திராவிட்டால், இன்றைக்கு இந்தப் பிரச்னைக்கு அவசியமே இருந்திருக்காது. இன்றையதினம் இந்த நாட்டினுடைய பொது மொழி எதுவாக இருக்க வேண்டுமென்பதுபற்றி இந்த சட்டசபையில் இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. ராஜாஜி அவர்கள் என்ன சொ[illegible]

[Sri A. Vedarathnam] [10th March 1958

இருர்கள் என்பதை புரிந்துகொள்ளுவதற்கு ஆசைத்தம்பி அவர்களுக்கு
மாத்திரமல்ல, அவர்களுடைய தளபதி அவர்களுக்கு மாத்திரமல்ல, அந்தக்
கட்சியைச் சேர்ந்திருக்கிற அத்தனை பேர்கள் சேர்ந்தாலும் கூட அவர்க
ளுடைய கருத்து என்ன, யோசனை என்ன, அவர்கள் என்ன சொல்லு
கிருர்கள் என்பதை புரிந்துகொள்ளுவதற்கு அவர்கள் இன்னும் 20 ஆண்டு
காத்திருக்கவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
11-30 a.m. ராஜாஜி அவர்கள் இவர்கள் நடத்தப் போகின்ற போராட்டத்திற்கு தலைமை
தாங்கப் போகிருர்கள் என்று இவர்கள் ஆசையோடு இருப்பார்களேயாளுல்,
அந்த ஆசை நிராசையாகிவிடும் என்று என்னுடைய ஆசைத்தம்பி அவர்
களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். நேற்று ராஜாஜி அவர்கள் கல்
கத்தா பிரசங்கத்தில் என்ன சொல்லியிருக்கிருர்கள் என்பதை அவர்கள்
இன்னெரு முறை படித்துப் பார்க்கவேண்டுமென்று நான் அவர்களை
கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கே பல மேடைகளில் அவர் பேசியதை அன்று
ஒரு நாள் நினைவூட்டினேன். அதை இன்று நான் மீண்டும்
ஞாபகப்படுத்துகிறேன். 1965-ம் வருஷத்தில் அல்லது 1970-ம் வரு
ஷத்தில் இந்தி தேசீய மொழியாக வர வேண்டுமாளுல், அதற்கு இன்
றைக்கே அஸ்திவாரம் போட்டு வேலை செய்தாக வேண்டும். அப்படிக்கு
அந்த ஏற்பாடுகள் ஒன்றும் செய்யாமல் இன்றைக்கு இந்தி மொழி
தேசீய மொழியாகவேண்டுமென்று நாம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சி
பயனற்றது என்ற உண்மையை அவர்கள் விளக்கிக் காட்டுகிருர்கள்.
அடுத்தபடியாக நேற்று அவர் கூறியிருக்கும் விஷயம் தேசீய மொழி
எல்லாவற்றிற்கும் சம சந்தர்ப்பம் இருக்கவேண்டும். இந்தியை நாம்
தேசீய மொழி என்று ஏற்றுக்கொண்டுவிட்டால், மற்ற மொழிகளுக்கு
அது ஒரு இளப்பத்தை உண்டாக்குகின்றதாகிவிடுகிறது, அது எல்லாவற்றிற்
கும் சம சந்தர்ப்பம் அளிப்பதாக ஆகாது என்பதை அவர்கள் நேற்று
கல்கத்தாவில் சுட்டிக்காட்டியிருக்கிருர்கள். அதை இந்த நாட்டிற்கு ஒரு
பொது மொழி வேண்டும் என்ற கருத்தை ஒத்துக்கொள்ளுபவர்கள்,
இந்த நாட்டில் தேசீய கருத்தை ஆதரிப்பவர்கள் யாரும் மறுக்க முடியாது.
பல மொழி பேசுகின்ற இந்த நாடு ஒரே நாடாக இருக்க வேண்டுமாளுல்,
இத்தனை மொழிகளுக்கும் பொதுவான ஒரு மொழி இருந்துதான் ஆக
வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது என்பதை நான் கூற
விரும்புகிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI**: பாயிண்டு ஆப் ஆர்டர், கல்கத்தா மகா
நாட்டில் ராஜகோபாலாச்சாரியார் இந்தியை எதிர்த்துப் பேசியிருக்கிருர்களா,
ஆதரித்து பேசியிருக்கிருர்களா என்பதை விளக்குவதாக சொல்லிவிட்டு,
விளக்காமல் மேலே போய்விட்டார்.

**Sri K. SATTANATHA KARAYALAR (TEMPORARY CHAIRMAN)**: That is not a point of order. It is only a point of information.

**Sri A. VEDARATHNAM**: அதை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு ரொம்ப
காலமாகும். (ஒரு குரல்—நீங்கள் சொல்லவேண்டும்). அதைத்தான் இப்
பொழுது கூறுகிறேன். அதற்கான திட்டத்தை இப்பொழுதிருந்தே செய்ய
வேண்டும். அவர்கள் போட்ட திட்டத்தை உங்கள் தார் சட்டி மூலமாக
தொடர்ந்து நடைபெருமல் செய்துவிட்டீர்கள். நம்முடைய அரசாங்கம்
இதை பொருட்படுத்தாமல் அவர்களுடைய காரியங்களை நடத்திக்கொண்டு
போகலாம். ஆளுல், அவர்கள் நம்முடைய வள்ளுவர் பெருந்தகையார்
மேற்கோளை மதித்து,

" இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாங் கேடு "

என்பதை கருத்தில் கொண்டு எதிர்க்கட்சி எவ்வளவு சிறிய கட்சியாக
இருந்த போதிலும்கூட, அவர்களுக்கு உரிய ஒரு மரியாதையை கொடுத்து
அவர்களையும் அனுசரித்து அழைத்துக்கொண்டு செல்லவேண்டும் என்ற
ஒரு பெரிய விசால கண்ணேட்டத்தோடு, விசால கொள்கையோடு அதற்கு



10th March 1958] [Sri A. Vedarathnam]

கொஞ்சம் மரியாதை கொடுத்து, அவர்கள் கட்டாயம் என்ற வார்த்தை வேண்டாம் என்று சொல்லுகிருர்களே, அதற்கு ஒரு மரியாதை கொடுப்போம் என்பதற்காக விட்டுவைத்திருக்கிருர்களே அல்லாமல், அவர்களுக்கு இருக்கிற பலம், அவர்களுக்கு இருக்கிற சக்தி இந்த நாட்டிலே அவர்கள் எதை எப்படி நடத்திக்கொண்டு போகவேண்டுமென்று நினைத்தாலும், அதை இப்பொழுது இருக்கிற எதிர்க்கட்சிகள் ஒன்றும் செய்துவிடமுடியாது என்பது அவர்களுக்கு நன்ருக தெரிந்திருந்தபோதிலும், அது " மெஜாரிடி டிரனி " என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே அந்த குற்றச்சாட்டிற்கு இலக்கு ஆகிவிடக்கூடாது என்று ஒரு பெரிய உள்ளம் படைத்த காரணத்திளுலே இன்றைக்குக் கூட சர்வ கட்சி மகாநாட்டைக் கூட்டி, அவர்கள் மனதிற்கு திருப்தி இல்லாத விஷயமாக இருந்தபோதிலும்கூட, எதிர்க்கட்சிக்குரிய மரியாதையை கொடுத்து, கௌரவத்தை கொடுத்து அவர்களும் சேர்ந்து ஒரு முடிவு தெரிவிக்கவேண்டுமென்று அவர்கள் முன் வந்தார்கள். 1937-ம் ஆண்டு ஹிந்திப்பிரசாரம் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1937-ம் ஆண்டிலிருந்து இதுவரையில் தமிழ் நாட்டில் அதற்கு எதிர்ப்பு ஏற்படாமல் இருந்திருந்தால், வடநாட்டாருக்கு ஹிந்தி போதிப்பதற்கானதிறமையை தமிழ் அன்பர்கள் இன்று பெற்றிருப்பார்கள். இதற்கு சில ஆதாரங்களை நான் குறிப்பிட்டால் ஆச்சரியகரமாக இருக்கும். இத்தனை எதிர்ப்புகள் இருந்தும் தமிழ் நாட்டில் ஏராளமான பேர் ஹிந்தி படித்து வருகிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலுக்கு வந்தபிறகு, இப்போது தமிழ் நாட்டில் ஹிந்தி ஞானம் எவ்வாறு இருக்கிறது என்பதை அக்கழகத்தவர்கள் அறிந்துகொள்ள விரும்புவார்களேயாளுல் நான் சில விவரங்களைக் கூறுவேன். இதற்கு முன்பெல்லாம, ஆந்திரம், கன்னடம், கேரளம், முதலிய ராஜ்யங்களிலிருந்து ஹிந்திப் பரீட்சை எழுதும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது எனக்குக் கொஞ்சம் மனக்கஷ்டம ஏற்படும். ஏனென்ருல், அவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாகவும் தமிழ் நாட்டு மாணவர்களின் தொகை மிகக் குறைவாகவும் இருக்கும். இதைக் கண்டு நான் வருத்தப்படுவது உண்டு. ஆளுல், கடந்த ஒரு ஆண்டில், இதற்கு முன் என்றும் காணுத அளவுக்கு, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏராளமான பேர்கள் ஹிந்தி பரீட்சை எழுதியிருக்கிருர்கள். இதற்கு முன்பு ஆண்டுதோறும் எத்தனை பேர் பரீட்சை எழுதிளுர்களோ, அதைப் போல் இரண்டு மடங்கு பேர்கள் இந்த ஒரு ஆண்டில் எழுதியிருக்கிருர்கள். இதற்கு முன்பு 10,000 பேர்கள் பரீட்சை எழுதிளுர்கள் என்ருல், இந்த ஒரு ஆண்டில் 20,000 பேர்கள் தமிழ் நாட்டிலிருந்து பரீட்சை எழுத முன் வந்திருக்கிருர்கள் என்பதை என் அருமை நண்பர் ஸ்ரீ ஆசைத்தம்பி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைப் பார்க்கும் போது ஹிந்தி எதிர்ப்பு பலமாளுல்தான் ஹிந்தி படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று தெரிகிறது. நேற்றைய தினம் ஆந்திரம், கேரளம், கர்ளுடகம் முதலிய பிரதேசங்களிலிருந்து வந்த அன்பர்களுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் " இப்போது தமிழ் நாட்டில் ஹிந்தி கற்பதில் காட்டப்படும் ஆர்வத்தைப் பார்த்தால் எங்களுக்கே பயமாக இருக்கிறதே. எங்களுடைய எண்ணிக்கையைத் தோற்கடித்ததுடன் முன்பிருந்ததைப்போல் இரண்டு மடங்கு எண்ணிக்கை தமிழ் நாட்டிற்கு வந்துவிட்டதே ! இவ்வளவு பெரிய எண்ணிக்கையை நீங்கள் எப்படிக் கொண்டுவந்தீர்கள் ? " என்று என்னிடம் கேட்டனர். சென்னை ராஜ்யத்தில் 25 லட்சம் பேர் ஹிந்திப் பரீட்சை தேறியிருக்கிருர்கள். ஹிந்தி போதிக்கும் விஷாரத் ஆசிரியர்களுள் பி.ஏ. கிரேடுக்குக் சமமானவர்கள் 3,000 பேர்கள் இருக்கிருர்கள். ஆகவே, ஹிந்தி பிரசாரத்திற்கு தமிழ் நாட்டில் உற்சாகமும் ஊக்கமும் அளிக்கப்படாத போதிலும், அது இங்கே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. தமிழ் நாட்டில் ஹிந்தி ஞான வளர்ச்சியை, ஸ்ரீ ஆசைத்தம்பியோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது வேறு எத்தனை கழகங்கள் சேர்ந்தாலும் அத்தனை கழகங்களுமோ, ஒரு " கமா " அல்லது " புல் ஸ்டாப் " போட்டுக்கூட நிறுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னெரு விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகக் காரியதரிசியான அன்பர் ஸ்ரீ நெடுஞ்செழியன் அவர்களுடைய துணைவியார் ஹிந்தி மொழி பிரசார வளர்ச்சிக்காக பாடுபட்டுவருகிறார்கள். சென்னை ராஜ்யம் பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்த மண்டலங்களில் ஹிந்தி மொழி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஸ்ரீ நெடுஞ்செழியன் அவர்களுடைய மனைவியார் அந்த மண்டலங்களில் ஒன்றிற்குத் தலைவியாக இருக்கிறார்கள்.

ஹிந்தியைத் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் எளிதில் கற்றுக்கொள்ள முடியாது என்று சிலரால் சொல்லப்படுகிறது. கற்றுக்கொள்வதற்கு, அது ஆங்கிலத்தைக் காட்டிலும் பன்மடங்கு எளிதானது. ஆங்கிலத்தில் பத்து வருஷங்கள் பரிச்சயமான பிறகுதான் அதில் எளிதில் பேச முடியும். எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த மாணவர்களால் ஆங்கிலத்தில் ஒரு பாரா கூட பிழையின்றி எழுதமுடிவதில்லை. அவர்களால் சில வாக்கியங்கள் கூடப் பேசமுடிவதில்லை. ஹிந்தியிலோ என்றால், இரண்டே ஆண்டு பயிற்சியில், இந்த சபையில் ஒரு பிரசங்கம் செய்யக்கூடிய அளவிற்கு ஆற்றல் பெற முடியும். ஹிந்தி அவ்வளவு எளிய பாஷை. மேலும், நான் முன்பே சொன்னதுபோல், ராஜாஜி ஹிந்திப் பிரசாரத்தை ஆரம்பித்த ஆண்டாகிய 1937-லிருந்து இன்றுவரை அப்பிரசாரத்தை எதிர்க்காமல் அப்படியே விட்டிருந்தால், இன்று தமிழ் நாடு ஹிந்தி ஞானத்தில் எவ்வளவோ முன்னேறியிருந்திருக்கும். அப்படிச் செய்திருந்தால், ஹிந்தியை தாய்மொழியாகக் கொண்டுள்ள வடநாட்டவர்கள் உயர்ந்த சித்தாந்தங்களையும் இலக்கியங்களையும் கற்றுக்கொள்வதற்கு தமிழ் நாட்டிற்கு வரக்கூடிய நிலை இன்று ஏற்பட்டிருக்கும். இதை நான் வெறுமனே விளையாட்டாகச் சொல்லவில்லை. வடநாட்டில் இன்று இருக்கும் சகல கலாசாரமும் தென் நாட்டினால் அள்ளிக்கொடுக்கப்பட்டதே ஆகும். தென்னாட்டிடமிருந்துதான் வடநாட்டவர்கள் ஆத்மீகத் துறை வளர்ச்சி, மொழி வளர்ச்சி ஆகிய எல்லாவற்றையும் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆசைதம்பிக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். தென்னாட்டில் தோன்றிய ஸ்ரீ சங்கரர், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீ மாத்வர் ஆகிய பெரியோர்கள் அருளிய தத்துவங்களைத்தான் இன்றைக்கும் வடநாட்டார் பின்பற்றி வருகிறார்கள். பண்டைக்காலத்தில் நம் நாட்டுப் பெரியவர்கள் படைத்த இலக்கியங்கள்தான் இன்றைக்கும் இலக்கியங்களாக இருக்கின்றன என்றும், ஹிந்தியில் புராதன இலக்கியங்கள் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஹிந்தியில் புராதன இலக்கியங்கள் இல்லாமலிருப்பதற்குக் காரணம், நாம் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள முன்வராததுதான். நாம் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள முன்வந்தால், வடநாட்டவர்களை, சிறந்த ஹிந்தி இலக்கியங்களை நம்மிடமிருந்து பெறும்படி நாம் செய்யமுடியும். இதற்கு ஆதாரமாக ஒரு சிறு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு பிரதேசத்திலும் நடத்தப்பட்டுவரும் ஹிந்திப் பரீட்சைகளில் விஷாரத், பிரசாரக், ப்ரவின் ஆகியவைகள் மிக உயர்ந்த பரீட்சைகள். ஹிந்தி தாய்மொழியாக உள்ள ராஜ்யங்களில் கூட ப்ரவினுக்கு மேல் எந்தப் பரீட்சையும் கிடையாது. இப்போது 7–8 வருஷங்களாக ஆக்ராவில் அதற்குமேல் பாராங்கத் என்ற ஒரு பரீட்சை நடத்தப்பட்டு வருகிறது. அந்தப் படிப்பு மிக உயர்தரப் படிப்பு. அவ்வளவு உயர்ந்த படிப்பும் போதிக்கப்பட வேண்டுமென்பதற்காக அது ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான வித்யாலயம் ஆக்ராவில் ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் படிப் பிற்கு எல்லா ராஜ்யங்களிலிருந்தும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். அந்தப் படிப்பிற்கு ப்ரவின் பரீட்சை தேறியவர்களையும் ஹிந்தி தாய் மொழியாக உள்ள ராஜ்ய மாணவர்களையும் பரீட்சையைத் தேறியிருந்தால்தான் சேர்த்துக்கொள்கிறார்கள். அந்தப் பரீட்சை நடத்துவது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை, அந்தப் ஆண்டிலும் அகில இந்தியாவிலும் முதன்மையாக அந்தப் பரீட்சையில் தேறுபவன் தமிழனாகத்தான் இருக்கிறான் என்பதையும் ஸ்ரீ ஆசைத்தம்பி அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ் நாட்டில் ஹிந்திப் பிரசாரம் ராஜாஜியால் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டாகிய 1937-லிருந்து இன்றுவரை ஹிந்தி கற்பதை யாரும் எதிர்க்காமல் இருந்திருந்தால்,



ஹிந்தி ஞானத்தில் வடநாட்டிற்கு மட்டுமின்றி இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் இன்று நாம் வழிகாட்டியாக ஆகியிருக்கமுடியும். ஹிந்தி கற்பதை எதிர்த்த பழியும் பாவமும் அவர்களைச் சேர்ந்தவை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவின் தேசிய மொழிகள் 14 என்று குறிப்பிடப்பட்டது. அவைகளுடன் சமீபத்தில் இன்னொரு மொழியும் சேர்ந்திருக்கிறது. அது காஷ்மீரி ஆகும். காஷ்மீரி மொழியும் சேர்க்கப்பட்டு தேசிய மொழிகளின் எண்ணிக்கை 15-ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. பதினைந்து மொழிகள் பேசப்படும் இந்த நாட்டில் ஒரு பொது மொழி இல்லாமலிருக்க முடியாது. ரஷியாவில் 132 மொழிகள் பேசப்படுகின்றன. அந்த 132 மொழிகளும் அந்த நாட்டில் அந்த அந்தப் பிராந்தியத்தில் தேசிய மொழிகளாக இருந்தாலும் அங்கே ரஷ்ய மொழி அரசாங்க மொழியாக இருக்கிறது. அரசாங்க மொழியாகிய ரஷிய மொழியை எல்லா ரஷ்யர்களும் கற்கிறார்கள். அதே மாதிரி நம் நாட்டிற்கும் அரசாங்க மொழியாக இருப்பதற்கு ஒரு பொது தேசிய மொழி வேண்டும். ஹிந்திதான் அந்த மொழியாக இருக்க வேண்டுமென்று வெகு காலத்திற்கு முன்பே தீர்மானிக்கப்பட்டுவிட்டது ; ஆகவே அதைப்பற்றி நாம் குறைவாகப் பேசவேண்டியதில்லை ; 48 சத விகித மக்கள் ஹிந்தி பேசுகிறவர்கள் என்று சொல்லுகிறார்கள் ; 48 சத விகிதம்தான் இந்தியாவிலேயே ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்றாலுங்கூட ஹிந்தியை தாய் மொழியாகக் கொள்ளாத வங்காளம், அஸ்ஸாம், பீகார், பஞ்சாப், மகாராஷ்டிரா போன்ற பகுதிகளில் எந்த மொழி பேசுகிறவர்களாக இருந்தபோதிலுங்கூட தென்னாட்டு பகுதிகளில் சிலவற்றில் தவிர, பாக்கி அத்தனை பேருக்கும் ஹிந்தி பேசத் தெரியும், பேசினால் புரிந்துகொள்ளத் தெரியும்.

ஆகையால், இந்த நாட்டிலே மிகப் பெரும்பான்மையான, தென்னிந்தியாவில் இருக்கிற ஒருசிலரைத் தவிர, இந்திய நாட்டிலே இருக்கும் பாக்கி அத்தனை பேருக்கும் ஹிந்தி பேசத் தெரியும், அல்லது பேசினால் புரிந்து கொள்ள முடியும். மலைவாசிகள் (**hill tribes**), காட்டுவாசிகள் போன்றவர்களுக்கும் ஹிந்தி பேசத் தெரியும். அல்லது பேசினால் புரிந்துகொள்ளத் தெரியும். ஆகையால், இந்த நாட்டின் தேசீய மொழியாக ஹிந்தி இருக்கவேண்டுமென்று காந்தியடிகள் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நிஷ்பட்சபாதமாக, நடு நிலையில் நின்று, விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் தீர்ப்பு சொல்லக்கூடிய மகத்தான ஒரு பெரியவர் மகாத்மா காந்தியடிகள். அவருடைய வார்த்தைக்கு நாம் இன்றைக்கு மதிப்புக் கொடுக்கிறோம். உலகம் என்றுமே கண்டிராத புதுமையிலே இந்த நாட்டின் விடுதலையைத் தேடித் தந்தவர் மகாத்மா காந்தியடிகள். அவர் போட்ட அஸ்திவாரத்தை நிறைவேற்றவேண்டிய கடமை என்று கருதுகிறதினால் அவர் பெயரைக் கூறுகிறோமே அல்லாது, அவர் பெயரைச் சொல்லி ஆசைத்தம்பி அவர்களுடைய தயவைப் பெற்றுவிடவேண்டுமென்ற அந்தக் காரணத்திற்காகச் சொல்லவில்லை. அவர் வகுத்த திட்டம், ராமசாமிப் பெரியார் அவர்கள்கூட இருந்து வகுத்த திட்டம், முதன் முதலில் ஹிந்திப் பிரசார சபைக் கூட்டம் ராமசாமிப் பெரியார் வீட்டுத் திண்ணையிலே நடந்தது என்ற விஷயத்தை அவர்களுக்கு நான் நினைவூட்டுகிறேன். அவர்களும் இருந்து, ஹிந்தி மொழி தேசீய மொழியாக வேண்டுமென்று போட்ட திட்டத்தை நான் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். அவர்களுடைய அரசியல் தந்தைக்கு ஹிந்தியிலே எவ்வளவு பங்கு இருந்திருக்கிறது என்பதை அவர்கள் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அப்படி வகுக்கப்பட்ட திட்டம் அது ; 48 சத விகிதத்தினர் ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுகிறார்கள். ஆனால், ஹிந்தி பேசினால் புரிந்துகொள்ளுகிறவர்களும் , பேசத் தெரிந்தவர்களும் நாட்டிலே ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் இருக்கும் ஒரு சிறு பகுதியினரைத் தவிர, பாக்கி அத்தனைபேருக்கும், நாட்டிலே இருக்கும் பாக்கி பத்துமொழி பேசுகிறவர்களுக்கும் ஹிந்தி தெரியும் என்ற விஷயத்தை இங்கே கூற விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல. இன்றைக்கு நம்முடைய சென்னை ராஜ்யம் தவிர, நம்மிடத்திலிருந்து பிரிந்த கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஒரு அவர்கள் எல்லாம்கூட, இன்றைக்கு அவர்களுடைய பள்ளியிலே மாணவர் களுக்கு ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கி, அதை அனேகம் பிராந் தியங்களிலே பரீட்சைப் பாடமாக ஆக்கி, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக, தேசீய மொழியைக் கற்கச் செய்வதில் அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வருகிறார்கள். நம்மிடத்திலிருந்து பிரிந்து போன கேரளம் என்ன செய்திருக்கிறது என்பதை அவர்கள் கொஞ்சம் யோசிக்கவேண்டும். கேரளத்தையும் கர்நாடகத்தையும் ஆந்திரத்தையும் சேர்த்துத்தான் திராவிட நாடு என்ற பெயரை உச்சரிக்கிறார்கள். அப்படிப் பட்ட கேரளத்தில் ஒரு நபர், ஆந்திரத்திலே ஒரு நபர், கர்நாடகத்தில் ஒரு நபர் கூட ஹிந்தியை எதிர்ப்பதாகத் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா என்று என்னுடைய தம்பி அவர்களை நான் கேட்கிறேன்.

(Sri A. V. P. Asaithambi rose)

**Sri R. SRINIVASA IYER** : Is it proper that Members should pass remarks across the House ? When a Member is on his legs, can another Member ask him questions and get answers across the table ?

**Sri K. SATTANATHA KARAYALAR (TEMPORARY CHAIRMAN)** : அது ஏற்கெனவே கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்த விஷயம்த்தான்.

**Sri A. VEDARATHNAM** : இந்தியாவில் இருக்கும் பதினைந்து மொழிகள் பேசுகிறவர்களிலே, தமிழ்மொழி பேசும் இந்த ஒரு மாகாணம் தவிர, மற்ற எந்த மாகாணத்திலும் ஒரு எதிர்ப்புக் குரல்கூட இல்லை. எதிர்ப்பு என்று சொன்னால், தேசீய மொழியாக அனுஷ்டானத்தில் வரவேண்டுமென்ற விஷயத்தில்தான். புதியதாகக் கிளப்பப்பட்டிருக்கும் பிரச்னை 1965-ம் வருஷம் அண்மையில் நெருங்கிக் கொண்டிருக்கும் காரணத்தால் அந்தப் பிரச்னை எழுப்பப்படுகிறது. தேசீய மொழி என்று ஹிந்தியை ஒத்துக்கொள்வதிலே எந்த மாகா ணத்திலும் அபிப்பிராய பேதமே கிடையாது. அவர்கள் அதை ஒத்துக் கொண்டாய்விட்டது. கட்டாய பாடமாக ஆக்கப்பட்டு, தாய் மொழியாக இல்லாத பிரதேசத்திலும் மாணவர்கள் இன்றைக்குப் பயின்று வரு கிறார்கள். கேரளத்தில் இன்னும் ஒரு படி அதிகமாக ஹிந்தி முன்னேறி வருகிறது. தட்சிண பாரத ஹிந்தி பிரசார சபை நடத்துகிற பரீட்சைக்கு மாத்திரம் அல்லாமல், அரசாங்கக் கல்லூரிகளிலும் பி.ஏ., எம்.ஏ., பட்டம் வாங்குகிற பட்டதாரிகள் ஹிந்தியிலேயும் ஒரு பட்டம் பெறவேண்டு மென்ற முறையில் கல்லூரிகளிலேயே இதைப் பாடமாக வைத்து பரீட்சை நடத்துகிறார்கள். அந்தக் காரணத்தால் டெல்லியில் அரசாங்கப் பணி புரிகிறவர்கள் பெரும்பான்மையாக மலையாளிகளாக இருக்கிறார்கள். மலையாளிகள் மிகப் பெரும்பான்மையான எண்ணிக்கையில் சிறந்த பதவிகளை டெல்லியில் வகிப்பதற்கு ஹிந்திப் படிப்பு சாத்தியம் ஆக்குகிறது என்ற உண்மையை அவர்கள் கொஞ்சம் உணரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆக, இத்யாதி காரணங்களைக்கொண்டு நாம் இன்று ஹிந்தியை ஏற்கத் தவறுவோமேயானால், எதிர்காலத்தில் என்றைக்கு தமிழர்கள் மத்திய அரசாங்கத்திலே எத்தனை செல்வாக்கு வாய்ந்த பதவிகளை அடைய முடியும் என்று அவர்கள் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கவேண்டுகிறேன். ஹிந்தி தேசீய மொழி என்பதை நாம் ஆதரிக்காமல் விட்டால், அரசாங்க மொழி என்பதை ஆதரிக்காமல் விட்டால், அதனால் மத்திய அரசாங்கத்திலே இருப்பவர் களுக்கும் வேறு எந்த மாகாணத்தில் இருப்பவர்களுக்கும் எந்த நஷ்டமும் கிடையாது. அதனால்தான் "ஹிந்தியை திணிக்கக்கூடாது" என்று நாம் ஒரு தடவை சொன்னால், "திணிக்க விரும்பவில்லை,



உங்கள் இஷ்டப்படி, வேண்டுமானால் படிக்கலாம், இல்லாவிட்டால் விட்டு விடலாம்" என்று தாராளமாக ஒரு தடவைக்குப் பத்து தடவையாக சொல்கிறார்கள். நம் ஒரு மாகாணத்தில் உள்ளவர்கள் ஹிந்தியை ஏற்றுக் கொள்ளாது போனால், அதனாலே அகில இந்தியாவில் இருக்கும் மற்ற மாகாணங்களுக்கு எந்த விதமான நஷ்டம் இல்லை. கொஞ்சம் லாபமாக இருக்குமேயொழிய, அவர்களுக்கு நஷ்டம் இல்லை. இப்பொழுது சிறந்த பதவிகளை வகிக்கும் தமிழர்களுடைய ஸ்தானங்களும் அவர் களுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்ற அந்த எண்ணம் அந்தரங்கமாக வாவது அவர்களுக்கு இருக்கக் கூடும். ஆகையால், இந்த மொழி விஷயத்தில் நாம் யாராவது முட்டுக்கட்டை போடுவோமானால், எதிர் கால சந்ததிகளுடைய வாழ்கைக்கு போடக்கூடிய முட்டுக்கட்டையாகும், என்ற விஷயத்தை நான் நினைவூட்ட விரும்புகிறேன். தி.மு.க. அவர்கள் தங்க ளுடைய கட்சியின் கொள்கைகளைப்பற்றி எவ்வளவு வேண்டுமானால் புகழ லாம். காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு. அதுபோல் அவர்களுடைய சிறந்த கொள்கைகளைப்பற்றி நமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், அவர்கள் கனவு காண்கிறார்களே, அது ஒரு நாளும் இந்த நாட்டிலே தங்களுடைய கட்சி வென்று, இந்த நாடு தனி நாடாக விளங்கப்போகிறது என்று அவர்கள் காணக்கூடிய அந்தக் கனவு ஒரு நாளும் பலிக்கப் போவதில்லை என்று உண்மையாகச் சொல்கிறேன். இதை அவர்கள் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஏதோ சென்னையில் சில பேரும், வடாற்காடு ஜில்லாவிலே சில பேரும், அடுத்தாற் போல் இருக்கும் ஒரு சிலர் மாத்திரம் சேர்ந்துவிட்டால், அது தமிழ்நாடு ஆகாது. அதிலிருந்து சில பிரதிநிதிகள் மாத்திரம் வந்துவிட்டால், அது அவர்களுடைய கட்சி வளர்வதற்கு அறிகுறியாக இருக்கும் என்று அவர்கள் நினைப்பார்களானால், இது பல பாஷைகள் மிக்சர், தனித் தமிழ் நாட்டி னுடைய பெருமையை அவர்கள் பார்க்கவேண்டுமென்றால் சோழ மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய அந்த இடங்களை அவர்கள் பார்க்க வேண்டும். அவர்களுக்கு அங்கே என்ன செல்வாக்கு இருக்கிறது ? எத்தனை பிரதிநிதிகள் அங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் இந்தப் பிரிவினைக் கொள்கைகளை, துவேஷக் கனலை வளர்க்கும் இந்தக் கட்சியைக் கனவிலும் நினைக்கமாட்டார்கள் என்ற விஷயத்தை அவர்களுக்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்தக் காரணங்களைக்கொண்டு இம்மாதிரி ஒரு பகற் கனவை மனதிலே வைத்துக்கொண்டு, இங்கே பேசுகிறவர்கள், அன்றைக்கு ஆந்திரம், கேரளம், மலையாளம், தமிழ் நாடு ஆகிய பகுதிகள் சேர்ந்தவை திராவிட நாடு என்று சொல்லிக்கொண்டுவந்தார்கள். அதே அடிப்படையில் திராவிட நாடு அவர்களுக்கு வேண்டும் என்ற முறையில் ஆசைத்தம்பி அவர்கள் இங்கு பேசுவது போல், விஜயவாடாவிலோ, கள்ளிக்கோட்டை யிலோ, திருவாங்கூரிலோ, மைசூரிலோ, ஒரு கூட்டத்தில் பேசுவரானால், அவர் பிழைத்து வெளியே வர முடியுமா என்று கேட்கிறேன். ஆகவே, இங்கே வேண்டுமானால், "குண்டு சட்டியில் குதிரை ஓட்டுவது போல்" அந்த மாதிரி பேசி, மக்களிடம் வெறியைக் கிளப்பி அதன் மூலமாக சிலருடைய ஆதரவைப் பெற முடியுமே அல்லாமல் மற்ற இடங்களிலே இதை அவர்கள் பேசமுடியாது என்ற விஷயத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்டி, இப்பொழுது செய்திருக்கிறது மிகச் சிறந்த தீர்மானம். இதைக் காட்டிலும் சிறந்த தீர்மானத்தை யாரும் செய்திருக்க முடியாது. இந்த நாட்டிலே ஆரம்பக் கல்வி மாத்திரம் அல்ல, அதற்கு முந்தி இருக்கும் பூர்வாதாரப் பள்ளி என்று சொல்லக்கூடியதிலிருந்து, கிண்டர் கார்டன் ஸ்கூலிலிருந்து, ஹைஸ்கூல் மாத்திரம் அல்ல, கல்லூரி, சர்வ கலாசாலை வரையில் போதனாமொழி நம்முடைய தமிழாகத்தான் இருக்க வேண்டும். கல்லூரியில் போதனா மொழிபற்றி நிர்ணயிக்கக்கூடிய அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள், கல்லூரியில் பாடங்கள் ஆங்கிலம் மூலமாகத்தான் போதிக்கப்படவேண்டு மென்று வற்புறுத்தினார்கள். அவர்கள் அந்த நேரத்தில் அவர்கள் அந்தக் காலத்து மனிதர். ஆகையால் அதை வற்புறுத்தினார்கள். நல்ல

அறிஞர். ஆற்றல் படைத்தவர். ஆகையால் அவரைக் குறைக்கூற நான்
விரும்பவில்லை. எதிர்கால இந்தியாவின் தொடர்பு அவர்களுக்குக் குறைவு.
அவர்களுக்கு ஒரு விஷயம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த 150
வருஷங்களாக வெள்ளையர் ஆட்சியில் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கி,
ஆங்கிலத்தில் தான் பள்ளிக்கூடத்தில் பேசவேண்டும் என்று வைத்து
ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்கி, ஆங்கிலம் கற்றவர்களுக்குத் தான்
வேலை என்றெல்லாம் வைத்திருந்த போதிலும் கூட நமது சென்னை
ராஜ்யத்தில் எழுத்தறிவு பெற்றவர்களுள் ஆங்கிலத்தில் எழுத்தறிவு
பெற்றவர்கள் 7 சதவிகிதம் தான் என்பதை உணரவேண்டும்.
வங்காளத்தில் 10 சதவிகிம் இருப்பார்கள். இன்றைக்கு இந்த
இரு ராஜ்யத்திலும் தான் ஆங்கிலமே நிர்வாக மொழியாக இருக்க
வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது. ஆனால் ஆங்கிலத்தை நிர்வாக
மொழியாக ஆங்கிலேயர்கள் வைத்திருந்த காரணத்தினால் நம் தேசத்தவர்
கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்று சொல்ல முடியாது. பரீட்சையில்
எத்தனை மாணவர்கள் தேருது போயிருக்கிறார்கள் என்பதற்குப் புள்ளி
விவரங்களை எடுத்துப்பார்த்தால் தெரியும். குறிப்பாக எஸ்.எஸ்.எல்.சி.
பரிட்சையில் தேறியவர்கள் போக, தேருதவர்களுடைய எண்ணிக்கையை
ஆராய்ந்து பார்த்தால் நூற்றுக்கு 90 பேர்கள் ஆங்கிலத்தில் தான் தேருது
போயிருப்பார்கள் என்பது தெரியும். அதுவும் தவிர தேறியவர்கள்
கல்லூரிகளுக்குப் போகும்போது ஆங்கிலம் போதனா மொழியாக இருந்த
காரணத்தினால் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்பதும் பார்த்தால்
தெரியும். நான் அதைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை.
ஆங்கிலம் தான் கல்லூரிகளில் போதனா மொழியாக இருக்கவேண்டும்
என்று பேசுபவர்கள் அடுத்த தலைமுறையில் நம் நாட்டில் ஆங்கிலம்
தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருக்க முடியும் என்பதைப்பற்றி யோசித்த
தாகத் தெரியவில்லை. தமிழ் என்றைக்கு நம்முடைய ராஜ்ய நிர்வாக
மொழி என்பதாக தீர்மானித்துவிட்டோமோ அன்றைக்கே பாட போதனைகள்
எல்லாம் எல்லா வகுப்புகளிலும் தமிழில் தான் இருக்கவேண்டும் என்பதில்
என்ன ஆட்சேபணை இருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் இவ்வாறே அவரவர்களுடைய மொழியை
நிர்வாக மொழியாக ஆக்கிவிட்டார்கள். அதை நாம் ஆட்சேபிப்பதற்கில்லை.
அப்படியிருக்கையில் இந்தியாவின் பொது மொழியாக, ஒவ்வொரு ராஜ்யத்
திற்கும் இடையே இனி நடக்கவேண்டிய விவகாரங்கள், மத்திய அரசாங்கத்
தோடு கொண்டுள்ள தொடர்புகள் எந்த மொழியில் இருக்கவேண்டும்
என்பதை நாம் தீர்மானித்தாகவேண்டும். அவையெல்லாம் தமிழில்தான்
இருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிற அளவுக்கு நாம் யாரும் போக
வில்லை. அது சாத்தியமற்ற விஷயம் என்பதும் நமக்குத் தெரியும்.
நாம் அப்படிச் சொல்கிறோம் என்று வைத்துக்கொண்டால்—இந்தியாவில்
உள்ள மொழிகள் 14 இருக்கின்றன—அத்தனை மொழிக்காரர்களும் அவ
ரவர்களுடைய மொழியை நிச்சயமாக வற்புறுத்துவார்கள். அது ஆகிற
காரியமும் அல்ல. ஆகவே, இன்றைக்கு நாம் எது சாத்தியமோ அதைப்
பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நிச்சயமாக ஆங்கிலம் இந்த நாட்டில்
அதிக நாள் இருக்காது. நாளடைவில் அழிந்துபோய்விடும் என்பது நிச்சயம்.
இதற்கு ஒரு உதாரணம் கூடச் சொல்லலாம். ஸ்ரீ சீனுவாசய்யர் குறிப்பிட்ட
அவ்வுதாரணத்தையே நானும் குறிப்பிட விரும்புகிறேன்.

மகராஷ்டிரரர்கள் தஞ்சாவூரில் ஆண்ட காலத்தில் அவர்களுடைய நிர்
வாக மொழியாக மோடி என்ற மொழி இருந்திருக்கிறது. இன்றைக்கும்
அங்கே உள்ள தஸ்தாவேஜிகள், இதர ரெக்கார்டுகள் எல்லாவற்றையும்
பாரத்தால் தெரியும் அவை எல்லாம் மோடி என்ற பாஷையில் தான்
எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து அன்றைக்கு அந்தப்பக்கத்தில்
அதிகமான பேர்கள் மோடி மொழியைக் கற்றறிந்தவர்களாக இருந்திருக்
கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் இன்றைக்கு மோடி தெரிந்தவர்கள்
பம்பாயில்தான் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கிறார்கள் என்பதாக ஸ்ரீ சீனு
வாசய்யர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். இங்கும் ஒன்றிரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள்.



ஆனால் பெரும்பாலான பேர்களுக்கு மோடி ஒரு பாஷை என்றால்கூடத் தெரியாது. ஒரு காலத்தில் அரசாங்க மொழியாக இருந்தது, அத்தனை பேரும் அறிந்த மொழியாக இருந்தது, இன்றைக்கு மறைந்த மோடி மொழியாகிவிட்டது. அப்படி ஆங்கிலமும் இங்கு ஒரு காலத்தில் மோடியாகத்தான் போகப்போகிறது. அதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் அந்தச் சமயத்தில் நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் தமிழ் நிர்வாக மொழியாகச் சிறப்பாக விளங்கப்போகிறது என்பதைப் பற்றி சந்தேகமில்லை. ஆனால் இதர ராஜ்யங்களுடனும், மத்திய அரசாங்கத்துடனும் தொடர்பு கொள்வதற்கு எந்த மொழி சாதனமாக இருக்கப் போகிறது என்பது தான் பிரச்னை. அந்தக்காலத்திலிருந்து ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சிபெற்று வந்திருக்கிறவர்களுக்கு இன்றைய தினம் இந்தி நிர்வாக மொழியாக வந்துவிட்டால் எல்லா விவகாரங்களையும் இந்தியில் செய்யும் படியாக வந்துவிடுமே, இனிமேல் இந்தியைக் கற்றுக்கொள்வது சாத்தியமாகுமா என்கிற மனக்கவலையும், அதனால் உண்டாகிற கஷ்டமும் அவர்களுக்கு அதிகமாக இருக்கலாம். அவர்களுடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கவேண்டியது தான். ஆனால் அதற்காக நாம் செய்யவேண்டிய கடமைகளை மறந்து, எதிர்காலச் சந்ததியார்களுக்குப் பெரிய தீங்கை விளைவிக்கும் ஒரு யோசனையைச் சொன்னால் இந்த நாட்டு மக்கள் யாரும் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். சிலர் என்ன என்னவோ சொல்லிக்கொண்டிருக்கிறார்களே என்றால் அது கவைக்கு ஆகாத பேச்சு என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு வடக்கே போனால் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருந்தாலும் கூட நாம் ஏதாவது ஆங்கிலத்தில் கேட்டால் அவர்கள் இந்தியிலேயே பதில் சொல்கிறார்கள். அவ்வளவுதூரம் அவர்கள் ஆங்கிலத்தையே விட்டு விட்டார்கள். இனி அவர்களை ஆங்கிலம் தான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினால் அது சாத்தியமில்லாத காரியம். நாளாவட்டத்தில் இந்தி தான் எல்லா ராஜ்யங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிர்வாக மொழியாக இயங்கப்போகிறது. நம் ராஜ்யம் மட்டும் பின்தங்கிவிடாமல் இருக்க வேண்டும் என்றால் இன்றைக்கு அறிவோடு தீர்க்கமாக ஆலோசனை செய்து வருங்கால சந்ததியார்களுக்கு நன்மை பயக்கும் ஒரு தீர்மானத்திற்கு வந்தாக வேண்டும். இந்தி வேண்டாம் என்றால் அதனால் பிறருக்கு நஷ்டம் ஒன்றும் கிடையாது. அதனால் பின்னால் கஷ்டப்படவேண்டியவர்கள் நாம் தான். ஆங்கிலம் அறவே ஒழிந்துவிட்டது. நாளைக்கு கன்னம்பாடி அணையைக் கட்டிவிட்டால் காவேரியில் தண்ணீர் விடுங்கள், தஞ்சைப் பயிர் வாடுகிறதே என்கிற விஷயத்தை கன்னடியர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமானால் எந்த மொழியில் அவர்களோடு தொடர்பு கொள்வது என்பதை **நாம்** யோசித்துப்பார்க்க வேண்டும்.

ஆகவே பகல் கனவு காணாமல் பிரத்தியட்ச நிலைமையை உணர்ந்து நாட்டில் நடப்பது எதுவோ அதை அறிந்துகொண்டு அதற்கான முறையிலே, அவர்களின் கட்சிக்காக வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம். ஆனால் இந்த நாட்டின் எதிர்கால மன்னர்களின் வாழ்வை பாழாக்காமல், அவர்களின் நல் வாழ்வைக் கெடுக்காமல், மாணவர்களிடம் போய் இந்த விஷத்தீயை கொளுத்திவிடாமல் இந்த நாட்டின் எதிர்காலம் நல்ல முறையில் அமையவேண்டுமென்று அவர்கள் விரும்புவார்களேயானால் இந்தமாதிரி மொழி விஷயத்தில் முட்டுக்கட்டை போடாமல் இருக்கவேண்டும். அவர்கள் தனித் தமிழ்நாடு வாங்கிக்கொண்டு வருவார்களேயானால் அதற்காக நாங்கள் இந்த நாட்டை விட்டு ஓடிவிடப்போவதில்லை. ஆனால் இடைக்காலம் என்று ஒன்று இருக்கிறதே அதை அவர்கள் நினைத்துப்பார்க்க வேண்டும். நம் பேரன் காலத்திலோ, பேத்தி காலத்திலோ, கொள் பேரன் காலத்திலோ கூட தனித்தமிழ் நாடு வரப்போவதில்லை, அப்படி தனித்தமிழ் நாடு வரும் என்று நாங்கள் கிஞ்சித்தேனும் நம்பவில்லை. அழுகல் விதை என்று அவர்கள் சொன்னார்கள். நல்ல விதையாக இருந்து அழுகிப் போனால்தான் முளைக்காது என்று சொல்லலாம். ஆனால் அதை விதை என்றே சொல்வதற்கில்லை. **(Mr. Speaker in the chair)** கொஞ்ச காலத்திற்காவது ஒரு கட்சி என்ற பெயரை வைத்துக்கொண்டு இந்த

யிடத்தில் இருப்பதற்கு வியாஜ்யமாகத்தான் இருக்கிறது, அவர்களின்
கூற்றுக்கள். அதற்காக மொழி வெறியைக் கிளப்பி ஒரு சிலரை தங்கள்
பக்கம் வைத்துக்கொள்ள, அதற்கு வேண்டிச் சொல்லும் கூற்றேத் தவிர
சாதிக்கக்கூடிய விஷயமல்ல, என்று எங்களுக்கும் தெரியும், நாட்டு
மக்களும் அதை உணர்ந்திருக்கிறார்கள். எதிர்கால மன்னர்களாகிய நம்
குழந்தைகளை கெடுத்துவிடாதீர்கள். ஆக, நம் தேசிய மொழி பற்றி,
நம் அரசாங்கம் தயாரித்திருக்கும் இந்த ரிப்போர்ட்டானது, மிகச்சிறந்தது,
மிகவும் உன்னதமானது, அதை நீங்கள் எல்லோரும் ஆதரிப்பீர்கள்
என்று நம்பி நான் என்னுடைய மனமொழி மெய்களால் இதை ஆதரித்து
கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Dr. Srimathi SATHIYAVANIMUTHU :** ஆன் எ பாயின்டு
ஆப் இன்பர்மெஷன். சட்டமன்ற தலைவர் அவர்களே, சற்று முன்னால்
பேசிய தோழர், வேதரத்தனம் அவர்கள், பேசும்போது கேரளத்தில்
எங்கள் கிளைகள் இருக்கவில்லை என்றும் அங்கு எங்கள் கழகக்காரர்கள்
ஒரு வார்த்தை பேசிவிட்டு உயிரோடு திரும்பமுடியாது என்றும் அவர்கள்
வெளியே தள்ளப்படுவார்கள் என்றும் சொல்வதும் தவறாகும். அங்கு எங்க
ளுக்கு 64 கிளைக்கழகங்கள் இருக்கின்றன. திராவிட நாடு என்ற பெயரால்
ஒரு மலையாளப் பத்திரிகையும் சுபேர் என்றவரை ஆசிரியராகக் கொண்டு
பணியாற்றிவருகிறது. நான்கூட எப்ரல் மாத இறுதியில் அங்கு செல்ல
இருக்கிறேன். நான் செல்லும் தேதியை வேதரத்னம் அவர்களுக்கு
சொல்கிறேன். அவர் வேண்டுமானால் அங்கு அவரது ரதகஜதுரகபதாதிகளைக்
கொண்டு வரட்டும். ஆனால் அங்கு எங்கள் கிளைக்கழகங்கள் இல்லை என்று
தவறாக சொல்லக்கூடாது, காரியங்களைப் புரிந்து கொள்ளாமல் பேச
நேரம் கிடைக்கிறது என்று தவறாக கருத்துக்களைக் கூற வேண்டாமென்று
அவரிடம் சொல்லிக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** I was about to tell this to hon. Member.
அம்மையார் அவர்கள் கூறியதை தவறாக எடுத்துக் கொண்டால்தான்
பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் எழுப்பலாம். அப்படியில்லாமல் இருந்தால்
எல்லோரும் பாய்ண்ட் ஆப் இன்பர்மேஷன் என்று கேட்க ஆரம்பித்து
விடுவார்கள். இனிமேல் யாரும் அப்படி கேட்கவேண்டாம். அடுத்தபடி
யாக கோவிந்தசாமி அவர்கள் பேசலாம்.

12-10 p.m. **Sri A. GOVINDASAMY :** சட்டமன்ற தலைவர் அவர்களே, இந்தி
யாவின் பொது மொழியாக எந்த மொழி இருக்க வேண்டும், அரசியல்
மொழியாக எந்த மொழி இருக்கவேண்டும், என்பதை நிர்ணயிப்பதற்காக
மொழி கமிஷன் போடப்பட்டது. ஆனால் அக்கமிஷன் எந்த மொழியை
பொது மொழியாக, அரசியல் மொழியாக வைத்துக் கொள்ளலாம் என்று
பிரச்னையை அணுகாமல் இந்தியை எந்தெந்தத் துறையில் நிர்பந்தமான
வழியில் நிர்வாகத்தில் புகுத்தலாம் என்று ஆராய்ச்சியில் மொழி கமிஷன்
ஈடுபட்டது முதல் குற்றமாகும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.
ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியை எவ்வளவு துரிதமாக கொண்டு வர
லாம் என்றுதான் மொழிக் கமிஷன் பரிசீலனையில் ஈடுபட்டுள்ளது.
அதோடில்லாமல் ரோமன் அராபிக் எண் எழுத்துக்களை, "I, II, III, IV",
அல்லது "1, 2, 3, 4" போன்ற எண்களை நீக்கிவிட்டு அதற்குப் பதி
லாக எப்படி இந்தியைப் புகுத்தலாம் என்ற முறையில் அவர்கள்
பிரச்னையை அணுகியிருக்கிறார்கள். எது பொது மொழியாக இருக்கவேண்
டும், இன்று நடைமுறையில் இருக்கும் ஆங்கிலத்தை வைத்துக் கொள்
வதா அல்லது நாம் சுதந்திரம் பெற்று விட்டோம், என்ற காரணத்திற்காக
இந்தியாவில், இந்தியைப் பொது மொழியாக கொண்டு வருவதா என்
பதை பற்றிய பிரச்னையை அணுகாமல் நேரடியாகவே இந்தியை எவ்வளவு
துரிதமாக எந்தெந்த துறைகளில் எந்தெந்த வழிகளில் புகுத்தலாம்
என்ற நோக்கத்துடன் அதற்கு வேண்டிய காரண காரியங்களைத் தேடி
அலைந்திருக்கிறார்கள் என்பது அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையைப்
பார்த்தால் தெரியும். இது பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே,
கேள்விகள் வந்ததாக, அதாவது questionnaire "க்வஸ்டினயர்," வந்ததாக





அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். **Questionnaire** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வந்த அறிக்கையைப் பரிசீலிப்பதற்கு ஏன் இவ்வளவு காலதாமதமாயிற்று என்று நான் கேட்க விரும்புகிறேன். **The Official Language Commission sent its Questionnaire to the Madras Government two years ago.**

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அங்கத்தினர் அவர்களுக்கு தெரியாது என்று இருந்தால் நான் சொல்கிறேன். க்வஸ்டினயர் அனுப்பினார்கள். அதை கன்ஸிடர் செய்து அதற்கு என்ன பதில் சொல்வது என்பதற்காக 55-ல் சர்வ கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு ஆலோசனை செய்து அப்பொழுது அனுப்பப்பட்டது. அதோடு ஒரு மெமோராண்டமும் அனுப்பப்பட்டது. **Questionnaire** வாங்கி வைத்துக்கொண்டு சும்மாயிருக்கவில்லை. அதற்கு பதில் அனுப்பத்தான் அந்த மகாநாடு கூட்டப்பட்டது. அத்துடன் விஷயங்களை விளக்க அந்த மெமோராண்டமும் அனுப்பப்பட்டது.

**Sri A. GOVINDASAMY :** இப்பொழுது தந்துள்ள அறிக்கையை தயாரித்து அனுப்புகிற நேரத்தில் சட்ட சபையின் அனுமதியைப் பெற்று, சட்டசபையில் அதை வைத்து விவாதிக்கப்பட்டபின்தான் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. சர்வ கட்சித் தலைவர்களை கலந்து கொண்டுதான் அனுப்பினோம் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதை ஏன் சட்டசபையில் வைத்து விவாதிக்கவில்லை என்று கேட்கிறேன். கட்சித் தலைவர்களை கலந்து கொண்டு அனுப்பப்பட்ட அந்த முடிவுகளை, அதை அனுப்புவதற்கு முன் சட்ட சபையில் வைத்து விவாதித்திருக்க வேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அதை உடனடியாக சட்ட சபையில் விவாதிக்க வேண்டுமா என்று அவர்கள் கட்சித் தலைவர்களைக் கேட்டோம். அவர்கள் சொன்னார்கள், இப்பொழுது அவசியமில்லை என்று.

**Sri A. GOVINDASAMY :** அதைப்பற்றி இந்த மெமோராண்டத்தில் குறிப்பிடாததால் இதை கூற வேண்டி வந்தது. ஸ்டேட்ஸ் ரிஆர்கனைசேஷன் கமிஷனும் இதே முறையில் தான் தவறு செய்தது. மொழி வழி ராஜ்யம் அமைக்கத் திட்டம் தீட்டாமல் ராஜ்யப் புனருத்தாரணம் என்ற முறையில் ராஜ்யங்களைப் பிரிக்கும்போது, இரண்டு மூன்று மொழிகள் பேசும் ராஜ்யங்களை ஏற்படுத்தி தகராறு உண்டு பண்ணினார்கள். அதே போன்று, இப்பொழுது இந்தியை வைத்துக்கொள்வதா அல்லது இப்பொழுது ஆட்சிமொழியாக இருக்கும் ஆங்கிலத்தையே ஆட்சி மொழியாக வைத்துக்கொள்வதா என்ற பிரச்னையை அணுகாமல் நேரடியாகவே இந்தியின்மேல் கவனம் செலுத்தியது, அந்த மொழியின் மீது அவர்களுக்குள்ள உணர்ச்சி என்று அவர்கள் சொன்னாலும் அல்லது அவர்களுக்கு அந்த மொழியின்பேரில் உள்ள மோகம் என்று சொன்னாலும் அதை நாங்கள் வெறியுணர்ச்சி என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தியைத் திணிக்க வேண்டுமென்று சொல்கிறவர்கள் மிக மோசமான விதத்தில் பேசுகிறார்கள் என்பதை நாம் கவனிக்கும்போது இந்தி மொழி எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ் நாட்டில், திராவிடத்தில் வரக்கூடாது என்று நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்லி வருகிறோம். எனக்கு முன் பேசிய பெரியார், எல்லோராலும் மிகவும் மதிப்போடு போற்றிப் புகழப்படுகிற சர்தார் வேதரத்தினம் அவர்களே அந்த மொழியின் மேல் உள்ள உணர்ச்சி காரணமாக எத்தகைய ஆவேசமான வார்த்தைகளைப் பேசினார்கள் என்று பார்க்கும்போது இங்குள்ளவர்களுக்கே அப்படிப்பட்ட உணர்ச்சி இருக்கிறது என்று சொன்னால் வட நாட்டில் இந்தியைப் பரப்ப வேண்டுமென்று முழு மூச்சுடன் வேலை செய்பவர்களுக்கு எவ்வளவு உணர்ச்சி இருக்கும் என்றுதான் யோசித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் கன்னடப் பகுதியில் போய்ப் பேசி விட்டு உயிரோடு திரும்புவீர்களா என்று கேட்டார்கள்.

நாங்கள் அங்கே பெங்களூருக்கு போகத்தான் போகிறோம். அங்கு
போனால் ஆபத்துதான் என்று சொன்னார்கள். வேண்டுமானால் இவர்கள்
அங்குள்ள ஆட்களை தூண்டிவிட்டு எங்களது பேச்சைக் கேட்க முடியாதபடி
செய்யக்கருதலாம். எப்படியும் நாங்கள் போகத்தான் போகிறோம். அங்கு
கஷ்டங்கள் ஏற்படுமாயினும் அவற்றைச் சமாளித்துக் கொண்டு வர
முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதையும் நாங்கள் அங்கு
போகத்தான் போகிறோம் என்ற செய்தியை இந்த சபையின்கண் சொல்ல
விரும்புகிறேன். இவர்களுக்குக் கேரளத்தில் ஆதரவு இருக்கிறதா என்று
கேட்டார்கள், அதோடு எனது கழகத்தைப் பற்றி பல தவறான கருத்துக்
களையும் கூறினார்கள். நான் சொல்லுகிறேன், கேரளத்தில் எங்களுக்கு
64 கிளைக் கழகங்கள் இருக்கின்றன. அது மாத்திரமல்ல, கேரளப் பகுதியில்
"திராவிட நாடு" என்ற ஒரு மலையாள பத்திரிகையை சுபேர் என்பவர்
நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
சர்க்காருடைய சி.ஐ.டி. ரிப்போர்ட்டர்கள் இதை எழுதியனுப்பியிருப்பார்கள்.
கேரள பகுதியிலுள்ள சுபேர் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகங்கள்
கூட்டுகின்ற மகா நாட்டில் எல்லாம் கலந்து கொண்டு பேசி வருவதை
நமது போலீஸ் அமைச்சர் அவர்களும் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்
களும் நிச்சயமாக அறிந்து இருப்பார்கள். 1917-ல் நடந்த மகாநாட்டு
அறிக்கைகளை எல்லாம் தேடி எடுத்துப் பார்த்து, துருவித்துருவி படிக்கின்
றவர் கேரள பகுதியிலுள்ள சுபேர் அவர்கள் என்ன பேசுகின்றார்கள்
என்பதை மீண்டும் துருவித்துருவி படித்து அங்கு எங்களுக்கு ஆதரவு
இருக்கிறதா இல்லையா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இந்தியைப் பரப்ப வேண்டும் என்பதில் ஆர்வம்
கொண்ட மதிப்பிற்குரிய சர்தார் வேதாத்தினம் பிள்ளை அவர்கள் சொன்
னதில் சில தவறுனவை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
என்னுடைய கட்சியைச் சேர்ந்த பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன்
அவர்களுடைய மனைவி இந்தி வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற மண்
டல கமிட்டியில் உறுப்பினராக இருந்து பணியாற்றி வருகிறார்கள் என்று
சொன்னது தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர் டாக்ட
ராகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் எந்த அரசியல் துறை வேலை
களிலும் பணியாற்றவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் : இது அரசியல் வேலையில்
சேர்ந்தது அல்ல.) அரசியல் காரணத்திற்காக இல்லையென்றாலும்கூட
அவர்கள் குறிப்பிட்டது உண்மைக்கு மாறானது என்பதை இந்தச் சபையில்
தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக இந்த ராஜ்யத்தில் இந்தி பேசு
கின்றவர்களின் சதவிகிதம் 48 என்பது, இந்தி பேசாதவர்களின் சதவிகிதம்
52 என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இதை கூறும்போது,
இவைகள் எல்லாம் தவறு என்று அமைச்சர் அவர்கள் கூறமாட்டார்கள்
என்று நம்புகிறேன். ஆனால் இதிலுள்ள வித்தியாசம் நான்கு விழுக்காடு
எண்ணிக்கைதானே என்று வாதாட தயாராகலாம். ஆனால் இந்தியை
வெறுக்கின்றவர்களின் எண்ணிக்கை 52 சதவிகிதம் என்று இருக்கும் போது
இந்தி ஆட்சி மொழியாக இருப்பதை இந்தியா பூராவும் ஒப்புக் கொள்ளு
கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது என்பதை நாம் ஏற்றுக்
கொள்ள வேண்டும். இந்தியை நாம் மாத்திரம்தானே எதிர்த்து வரு
கிறோம், ஆந்திரத்திலுள்ளவர்கள், கேரளத்திலுள்ளவர்கள், கன்னடத்தி
லுள்ளவர்கள் எதிர்க்கிறார்களா என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான்
பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் கல்கத்தாவில்
நடைபெற்றிருக்கக்கூடிய மகா நாட்டில் எந்தெந்த பிராந்தியங்களிலிருந்
தெல்லாம் எந்தெந்த ராஜ்யங்களிலிருந்தெல்லாம் பிரதிநிதிகள் சென்று
பேசியிருக்கிறார்கள் என்பதை ஊன்றி கவனிக்க வேண்டும். எங்களுக்கு
தென்மண்டலத்தில் செல்வாக்கு இருக்கிறதா என்று கேட்டார்கள்,
ஏதோ தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, திருச்சி, சென்னை
போன்ற பகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றுவிட்டு, மற்ற தென் மண்
டலப் பகுதிகளில் வெற்றி பெறாத காரணத்தால் எங்களுடைய கட்சிக்கு
அங்கு செல்வாக்கு இல்லை என்று சொல்லிவிட முடியாது. திராவிட



முன்னேற்ற கழகம் கடந்த தேர்தலில் மொத்தமாக வாங்கிய வோட்டுகள் 17 லட்சம் என்பதை அவர்கள் உணரவேண்டும். நாங்கள் தேர்தலுக்கு நிற்பதற்கு முன்னால் எங்களுக்கு தனிச்சின்னம் கிடையாது. எங்களுக்கு பலவிதமான சின்னங்களை எல்லாம் கொடுத்து குழப்பினார்கள். இந்த நாட்டில் இவ்வளவு வோட்டு பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு காரணம் எங்களுக்கு பொது மக்களிடையே இருக்கின்ற செல்வாக்குத் தான். திராவிட நாடு பிரிய வேண்டும் என்று நாங்கள் சொல்வதினால் பொது மக்கள் எங்களுக்கு வாக்களிக்காமல் இருக்கவில்லை. தனித்தனி சின்னங்களினால் நின்றபோதிலும் தி.மு.க. உறுப்பினர்களுக்கு ஏராளமாக வாக்களித்திருக்கிறார்கள். அதிகமாக வாக்குகள் பெற்றிருப்பதால்மட்டும் ஒரு கட்சி நாட்டில் செல்வாக்கு பெற்றிருப்பதாக சொல்ல முடியாது என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் கேரளத்தில் போய் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். கேரளத்தில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற முடியவில்லை, அதனால் காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு இல்லை என்று அர்த்தமல்ல, கம்யூனிஸ்டு கட்சி ஆதிக்கத்தில் இருப்பதால் மாத்திரம் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுவிட்டதாக சொல்ல முடியாது என்றும் அங்கே போய் பேசியிருக்கிறார்கள். அங்கே பேசுவது இங்கே எப்படிப் போய் எட்டப்போகிறது என்று நினைத்துக் கொண்டு பேசினார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை, அல்லது அங்கேயுள்ள நிலைமை அப்படி இருக்கிறது என்பதால் நிலைமைக்கேற்ப அப்படி பேசினார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அடுத்ததாக இந்தியினுடைய வளர்ச்சியைப்பற்றி சொல்லும் பொழுது இந்தி மொழி தோன்றி 300 ஆண்டுகள்தான் ஆகின்றது என்று இந்தி ஆதரவாளர்களே சொல்லுகிறார்கள். இந்தி மொழியில் வளப்பம் இல்லை, இலக்கியம் இல்லை, இலக்கணம் இல்லை என்ற கருத்தை இந்தியை ஆதரிக்கின்றவர்களே தெரிவிக்கின்றார்கள். உதாரணமாக ஒரு ஆங்கில வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள், "டை" (Tie)என்பது கழுத்தில் கட்டக்கூடிய ஒரு பட்டைத்துணி. அதற்கு இந்தியில் "காண்ட கௌபீனம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (இச்சமயத்தில் சபையில் சில அங்கத்தினர்கள் காண்ட கௌபீனம் அல்ல, கண்ட கௌபீனம் என்று சொன்னார்கள்.) .சரி, "கண்ட கௌபீனம்" என்று வைத்துக் கொள்ளுங்கள், இதில் எது சரி என்பதைப்பற்றி வாதம் தேவையில்லை, அதைப்பற்றி முடிவு செய்ய அவர்களுக்கே விட்டு விடுகிறேன். ஆனால் இந்த வார்த்தை எவ்வளவு ஆபாசமாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். கௌபீனம் என்பது கோவணத்தை குறிக்கக்கூடியது. அதாவது கழுத்தில் கட்டக்கூடிய கோவணம் என்றுதான் இதைக் குறிப்பதாக ஆகிறது. இவ்விதமாக எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த விதமாகத்தான் இந்தியின் சொல் வளப்பம் இருக்கிறது. மேலும் இந்தி மொழியை வளப்படுத்துவதற்காக மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அதாவது முதல் ஐந்தாண்டு திட்டத்தில் சரியான சொற்களை கண்டு பிடிப்பது என்பதாகும். இதற்கெல்லாம் பல கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. நாம் கொடுக்கின்ற வரிப்பணம் எல்லாம், பொது மக்களுடைய பணம் எல்லாம் இந்த திட்டத்திற்காக செலவு செய்யப்படுகிறது. அடுத்தபடியாக இதற்கென்று போடப்பட்டிருக்கிற இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வார்த்தைகளை எங்கெங்கே எப்படிப் புகுத்துவது என்பது ஆராயப்படுகிறது திட்டம். மூன்றாவது ஐந்தாண்டு காலத்தில் அதை எழுதுவது எப்படி என்பதற்கு திட்டம் போடுகிறார்கள். இவ்விதமாகத் திட்டங்கள் வகுத்து கண்டு பிடிக்கப்போகிறார்கள். இவ்விதமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற மொழியை ஒரு நாட்டின் பொது மொழியாக, அரசியல் மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இவ்விதமாக வளர்ச்சியடையாத மொழி வேண்டாம் என்றுதான் நாம் சொல்லுகின்றோம். நமது நிதி மந்திரி அவர்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் போற்றிப் புகழ்ந்திருக்கிற டி.டி.கே. அவர்கள் இந்தியா என்பது பாரதம், பாரதம் என்றால் மத்திய பாரதமும் உத்திர பிரதேசமும் ஆகும், பாரத் என்றாலே இந்தி பேசுபவர்கள் என்றுதான் கருத்து என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தி பேசுகின்றவர்

களுக்குத்தான் பாராளு மன்றத்தில், மத்திய சர்க்காரில் அதிக அதிகாரம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கும்கூட நேரு அவர்கள் பேசுகின்ற இந்தி தாண்டன் அவர்களுக்கு புரியாது, தாண்டன் பேசுகின்ற இந்தி நேரு அவர்களுக்குப் புரியாது. அதே மாதிரிதான் பந்த் அவர்கள் பேசுகின்ற இந்தி இவர்களுக்குத் தெரியாது. இவ்விதம் இந்தி யில் பல ரகங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஒரு சமயத்தில் நேரு அவர் களைப் பார்த்து பாராளுமன்றத்தில் இந்தியில் ஒரு அங்கத்தினர் கேள்வி கேட்ட நேரத்தில், அந்த அங்கத்தினர் பேசின இந்தி நேரு அவர்களுக்கே புரியாமல் தவித்திருக்கிருர்கள், அதோடு அந்த மொழியில் என்ன சொன் ஞர்கள் என்பதை உணர முடியவில்லை என்ற கருத்தையும் வெளியிட் டிருக்கிருர்கள். சமீபத்தில் எஸ்டிமேட் கமிட்டி சார்பாக எனக்கு டெல்லி பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. அப்போது மலையாள தேசத்தை சேர்ந்த ஒரு அமைச்சர் அவர்களைப் பார்தது, இந்தியில் ஆர்வம் கொண்ட ஒரு அங்கத்தினர் இந்தியில் கேள்வி கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் இந்தி தெரியாது என்று கூறிஞர்கள். தான் கேரளத்தை சார்ந்தவர் ஆதலால் ஆங்கிலத்தில் கேட்டால் பதில் சொல்லுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். ஆங்கிலம் தெரிந்த அதே அங்கத்தினர் வேண்டும் என்றே இந்தியில் இருக்கின்றதை ஆங்கிலத்தில் கேட்க முடியாது, இந்தியில் தான் கேட்பேன் என்றும் அதற்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்றும் வற்புறுத்திஞர். பின்னர் அமைச்சர் தத்தார் அவர்கள் அதை மொழி பெயர்த்துக் கொடுத்த பின்னர் கேரளத்தைச் சேர்ந்த அமைச்சர் பதில் சொன்ஞர்கள். நம்முடைய நாட் டைச் சேர்ந்தவர்கள், திராவிட நாட்டை சேர்ந்தவர்கள், டெல்லியில் பாராளு மன்றத்தில் இருக்கினறவர்கள் இந்தி தெரியாத காரணத்தால் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிருர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். 1938-ல் நடந்த காங்கிரஸிலிருந்து இந்தியாவுக்கு ஒரு தேசீய மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனல் பின்னர் அது முடியாது என்ற முடிவுக்கு வந்த பிறகு 14 மொழி களையும் தேசீய மொழியாக எற்றுக் கொண்டு வந்தார்கள். இதன் பின்னல் 1946-ல் இந்தி மொழியை கொண்டு வரவேண்டும் என்று நினைத்து அந்த முயற்சியில் தோல்வியும் அடைந்தார்கள்.

மேலும் இந்த நேரத்தில் 1937-ல் நடந்த பல சம்பவங்களை மதிப்பிற்குரிய சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் எடுத்துச் சொன்ஞர்கள். ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்தில்கூட, ஹிந்தியைப் புகுத்திய நேரத்தில் அதை எதிர்த்து திராவிட இயக்கத்தினர் பள்ளிகள் முன்பு மறியல் செய்து, பெரியார் அவர்களும், எங்கள் கட்சித் தலைவர் அண்ணு அவர்களும் பல மாதங்கள் சிறைபட்டிருந்தார்கள். அப்போரில் வீர இந்துக்கள் தாளமுத்துவும், நடராஜனும் சிறையிலே இறக்க நேரிட்டது. அதனல் நாட்டிலே கிளர்ச்சி ஏற்பட்டது. அப்போது ராஜாஜி அவர்கள் அதை உணரவில்லை, இப்போதுதான் இந்தியினல் ஏற்படும் கேடு அவருக்கு புரிகிறது. நாளடைவில் அவர்களையே பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. வங்காள கவர்னராக இருந்த போது ஹிந்தி தொல்லையாக விளங்கியதை ஞாபகத்திலே நினைத்துப் பார்த்து, இந்த ஹிந்தி வருவதால் தொல்லைதான் என்று இப்போது எடுத்துக் கொண்டி ருக்கிருர்கள். ஹிந்தி போர்டுகள் ரெயில்வே ஸ்டேஷனில் அழிக்கப்பட்டது, ஆசைத்தம்பி அழித்தாரோ இல்லையோ என்று சர்தார் வேதரத்தினம் பிள்ளை கேட்டார். ஆசைத்தம்பி மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத் தவர் எல்லோருமே சேர்ந்து அழித்தார்கள். கோவிந்தசாமி அழித்தாரோ என்று அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள், நானும் 1952–53-ல் அழித்தேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** 1949-க்குப் பிற்பாடு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிடக் கழகத்திற்கும் தொடர்பு இருக்கிறதா பாருங்கள் என்று சொல்லிவிட்டு, இப்போது அவர்களே தொடர்பைச் சுட்டிக் காண்பிக்கிருர்கள்.



* **Sri A. GOVINDASAMY :** நான் பெருமையாகச் சொல்லுகிறேன் ஹிந்தியை நாங்கள் அழித்தோம். அதில் வெற்றி கண்டோம். முதலிலே ஹிந்தியிலே எழுதி, இரண்டாவது ஆங்கிலத்திலே எழுதி, மூன்ருவதாக தமிழிலே எழுதியிருந்தது. இன்றைய நிலைமை என்ன ? நிதி அமைச் சர் அவர்கள் ரயிலில் போவதில்லை போலிருக்கிறது, காரில் போகிருர்களோ என்னவோ, அவர் எழும்பூர் ஸ்டேஷனுக்குக் போய்ப் பார்த்துச் சொல்லட்டும். இன்றைய தினம் ஹிந்தி முதலிடம் பெறவில்லை. ஹிந்தி கீழே இறங்கிவிட்டது. இது எங்கள் போராட்டத்தின் "வெற்றி வெற்றி" என்று சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஹிந்தியை அழிக்கப் போனேம். மொழி ஆர்வம் காரணமாக ஹிந்தியை அழிக்கப் போகிருேம் என்று சொல்லி ரயில் நிலை யங்களில் உள்ள பெயர்ப்பலகைகளில் உள்ள ஹிந்திப் பெயரை அழியாமல் காப்பாற்ற எங்கள் பின்னல் கெரோஸீன் ஆயிலை எடுத்துக்கொண்டு நாங்கள் பூசிச்சென்ற தாரைத் திரும்ப அழிக்கும் நல்ல காரியததில் ஈடு பட்டார்கள் சிலர். நாங்கள் எந்த இடத்தில் தாரைப் பூசினேமோ அந்த இடங் களிலெல்லாம் தமிழிலேயிருப்பதைக் காங்கிரஸ்காரர் தார்கொண்டு அழித் தார்கள். இது கனம் சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடந்ததோ என்னவோ எனக்குத் தெரியாது. எதிர்வாதம் செய்பவர்கள் இன்றைக்கு அட்சியாளர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். எங்கள் போராட்டம் வீண் போகவில்லை. வெற்றி பெற்ருேம். அதே மாதிரி 1950-ல் ஹிந்தியை ராஜ்யம் முழுவதற்கும் நிர்வாக மொழியாகத் திணிக்கவேண்டுமென்று நினைத்தார்கள். 1965-க்குப் பிறகு ஆங்கிலத்தை அறவே நீக்கி விட்டு, ஹிந்தியாக மாற்றிவிடவேண்டுமென்று முயற்சித்து வருகிருர்கள். 1965-க்குப் பிறகு ஆங்கிலம் இப்பொழுது இருக்கும் இடத் தில் ஹிந்தியைப் புகுத்தி அறவே ஹிந்தி புகுத்தவேண்டுமா என்பதற்கு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இப்போது விவாதத்தில் இருக்கிறது.

* * * * * ஹிந்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிக மாகப் புகுத்தபடுகிறதோ. அவ்வளவுக்கவ்வளவு நாடு துண்டிக்கப்படும் என்று ராஜகோபாலாச்சாரி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நேற்று கூட ராஜாஜி அவர்கள் பேசிய பேச்சை மதிப்பிற்குறிய அங்கத்தினர் வேதரத்தி னம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஹிந்தி வலுக் கட்டாயமாக திணிக்கப்பட்டால் நாட்டில் பிளவு ஏற்படும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்கும், திரா விட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை யில் ஒற்றுமை கிடையாது. பிரிவினைக் கொள்கையை எதிர்ப்பவர் ராஜாஜி. ஹிந்தி விஷயத்திலே மட்டும் பிரசாரம் செய்து வருகிருர்கள். ராஜகோபா லாச்சாரியாரும் ஹிந்தியை எதிர்க்கிருர். நாங்களும் ஹிந்தியை எதிர்க்கி ருேம். அந்த விஷயத்தில் அந்தப் பெரிய மனிதர் மீது சந்தேகப்பட்டு தவருன முறையில் பிரசாரம் செய்து வருகிறீர்கள். இன்றைக்கு நம் முன்னல் அவருடைய படத்தை வைத்திருக்கிருேம். அதற்குக் கீழே "கிரேட் ஆர் ஹிஸ் ஹெட் அண்ட் ஹார்ட்" (Great are his head and heart) என்று எழுதியிருக்கிறது. அவருடைய அறிவுத் திறமை பெரியது. அவருடைய நேர்மை ஹிருதயம் பெரியது என்று பெருமையோடு எழுதிவிட்டு இன்றைக்கு அவர்களைக் சந்தேகிக்கும் முறையில் பேசு கிருர்கள் . . .

**Mr. SPEAKER :** கனம் ஆதித்தன் பேசும்போது சொன்னேன். ராஜாஜி அவர்களின் பெயரை அனுவசியமாக இங்கே இழுக்காமல் பேசும்படி சொன்னேன். அதைத் திரும்பவும் சொல்லும்படியாக கனம் அங்கத்தி னர் வைத்து விட்டார்.

**Sri A. GOVINDASAMY :** சபைத் தலைவர் அவர்களே ! நீங்கள் சொன்ன நேரத்தில் நான் இங்கே இல்லை. கனம் வேதரத்தினம் பிள்ளை சொன்னதால் நான் இதைச் சொன்னேன். இனிமேல் சொல்லவில்லை.

இன்றைக்கு ஜப்பானில் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக வைத் துக்கொண்டு கற்றுவருகிருர்கள். வெள்ளைக்காரர்களையும், அமெரிக்கர்

---

* Expunged as ordered by the chair—vide page 71 infra.

களையும் வெறுக்கிறவர்கள் ரஷ்யர்கள். ஆனால் இன்றைக்கு ரஷ்ய நாட்டிலே
அதிகமாக ஆங்கிலத்தைப் போற்றிப் படிக்கிறார்கள். நாமும் போற
றிப் படிக்கிறோம் இதுவரையில். அமைச்சர் அவர்கள் தங்களுடைய முன்
னுரையில் சொன்னார்கள். "ஆங்கிலம் படிப்பதால் சிந்தனை சக்தி குறை
யும்" என்று. அப்படி சிந்தனை சக்தி குறையும் என்று சொன்ன நேரத்
தில் நான் கவலைப்பட்டேன். சிந்தனைத் தெளிவோடு பேசுகிற நிதி
அமைச்சர், ஆங்கிலம் படித்து நல்ல வல்லுவராக இருக்கும் காரணத்தால்
ஆங்கிலத்தில் பேசும்போது திறமையாகப் பேசுகிறார்கள். திறமையான
வழக்கறிஞர் என்றெல்லாம் ஆங்கிலம் தெரிந்ததால் சொல்லப்படுவதால்,
அவர் சிந்தனை சக்தி குறையும் என்று சொன்ன நேரத்தில் நான் வருத்தப்
பட்டேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் விளக்கம் சொன்னேன்
திடீரென்று கல்லூரிகளில் போய்மட்டும் ஆங்கிலம் படிக்கும்போது பெரும்
பாரமாகி விடும். அதனால் சிந்திக்கும் சக்தி சிதைந்து விடும். கல்லூரி
களில் போதனை மொழி ஆங்கிலமாக இருக்கவேண்டுமானால், பள்ளிக்கூடங்
களிலும் போதனை மொழி ஆங்கிலமாக இருக்கவேண்டும். நான் பள்ளிக்
கூடத்தில் படித்தபோதும் ஆங்கிலம்தான். இதைத் தவிர என்னுடைய
தனிப்பட்ட அறிவுச் சிறப்பினால் அல்ல.

SRI A. GOVINDASAMY : ஆங்கிலத்தைப் படிப்பவர்கள் சிறந்த
அறிஞர்களாக இருப்பார்களா என்று. பொருள் படச் சில வார்த்தைகள்
சொன்னார்கள். அந்த நேரத்தில் அவைகளை நான் பொறுப்போடு எழுதி
வைத்திருக்கிறேன். அதை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் கவனத்
திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். இன்றையதினம் அவருடைய குரு
வானவர் ஆங்கிலம் படித்தவர்—அறிவிர் சிறந்தவர், ராஜ தந்திரி, உலக
சாணக்கியர் என்றெல்லாம் போற்றப்படுபவர்—அந்த ராஜகோபாலாச்சாரி
யார் ஆங்கிலத்தில் படித்தவர்கள்.

SRI R. SRINIVASA IYER : On a point of information from my hon. friend, Sir . . .

MR. SPEAKER : I cannot allow any hon. member to rise on a point of information when another hon. Member is speaking. If he is rising to a point of order he may please mention it as point of order.

கனம் அங்கத்தினர் பேசி அரைமணி நேரம் ஆகிவிட்டது.
இன்னும் 6 அங்கத்தினர்கள் பேசவேண்டும். திரும்பத் திரும்பச்
சொல்லியும் மெமோராண்டத்தைப் பற்றிப் பேசமாட்டேன் என்கிறார்கள்.
இன்னும் 5 நிமிடத்தில் முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : மெமோராண்டத்தின் முன்னறிக்கையிலே
இருப்பதை எடுத்துச் சொல்வதற்காகத் நான் இதையெல்லாம் பற்றிப்
பேசினேன். இன்னும் ஐந்து நிமிடத்தில் என்னுடைய பேச்சை முடித்துக்
கொள்கிறேன். சபைத் தலைவர் ஆணையை நான் ஒருபொழுதும் மீறமாட்
டேன். அப்படித்தான் நான் இதுவரையிலும் நடந்திருக்கிறேன்.

MR. SPEAKER : மிகவும் நன்றி.

SRI A. GOVINDASAMY : பொருளாதாரத் துறையில் அதிக நிபுண
ராக விளங்கிய ஸ்ரீ ஆர். கெ. ஷண்முகம் செட்டியார் அவர்கள் நன்றாக
ஆங்கிலம் படித்தவர். இன்றையதினம் அவர் நம்மிடையே இல்லாவிட்டா
லும், அவர் ஒரு பெரிய பொருளாதார நிபுணர் என்பதை நிதி அமைச்சர்
அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அதைப் போலவே
தான் அரசியல் நிபுணரான ஸர். வி. பி. ராஸ்வாமி அய்யரும், ஆட்சி
யாளர் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் என்பதைப்
பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். Silver tongued orator என்று
ஆங்கிலத்திலே வன்மையாகவும், தெளிவாகவும் பேசக்கூடியவர் என்ற



பட்டம் அவருக்குக்கிடைத்தது. இன்றையதினம் கல்வித்துறையிலே இருக்கின்ற ஸ்ரீ ஏ. லட்சுமணசாமி முதலியாரும், ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாரும் ஆங்கிலத்திலே சிறந்தவர்கள் என்று உலகம் பூராவும் ஒத்துக் கொள்கிறது. மற்ற நாட்டிலுள்ளவர்கள் கூட அவர்களைப் போற்றிப் புகழக் கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, ஆங்கிலம் வேண்டாம் என்ற வாதத்திற்காக, ஆங்கிலத்தைக் குறைகூறவேண்டியது அவசியம் இல்லை என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

அடுத்தபடியாக, சுப்ரீம் கோர்ட்டுகளில் ஹிந்திமொழி எதற்காக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தை ஒரு தொடர்பு மொழியாக வைத்துக்கொள்ளலாமென்பதில் ஆட்சேபனை கிடையாது. திராவிட நாட்டிலே எந்த மொழி ஆட்சிமொழியாக இருக்குமென்று கேட்டார்கள். என்னுடைய திராவிட நாட்டிலே, தமிழ் பேசப்படுகின்ற பகுதிகளிலே தமிழும், தெலுங்கு பேசப்படுகின்ற பகுதிகளிலே தெலுங்கும், கன்னடம் பேசப்படுகின்ற பகுதிகளிலே கன்னடமும், மலையாளம் பேசப்படுகின்ற பகுதி களிலே மலையாளமும் ஆட்சிமொழியாக இருக்கும். தொடர்புமொழி ஆக ஆங்கிலம் இருக்கும். இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். திராவிட மொழியிலே எங்களுக்குப் பற்றுக்கிடையாது. ஆங்கிலத்திலே மோகம் இருக்கிறது என்று வீண் பழி சுமத்தவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி என்னும் நதி ஓடிக்கொண்டு வருகின்றது, அப்படி வருகின்ற நதியை எப்படித் தடுப்பது என்ற வினாவை எழுப்பினார்கள். வெள்ளம் வருகின்ற அந்த நதியிலே அணைக்கட்டைக் கட்டி அதைத் தேவையான பகுதி களுக்குத் திருப்பிவிடலாம். அந்த நதியை நாங்கள் "நச்சு" என்று கருதுகிறோம். அந்த நதியை இங்கே வரவிடமாட்டோம். பாய அனுமதிக்க மாட்டோம். இந்திக்கு எதிராக பெரிய அணிவகுப்புத் திரள்கின்றது என் பதை கனம் நிதி அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அகில இந்தியாவி லும் படை திரள்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் கட்சியின் சார்பாக திரு ஈ. வி. கே. சம்பத் அவர்கள் போய் இருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்களுடைய "குருஜியும்" போயிருக் கிறார்கள். பாரதத்தைப் பாருங்கள் என்று உதாரணம் காட்டினார்கள் நிதி அமைச்சர். அதே பாரதத்தைத்தான் நான் இப்பொழுது திருப்பிப் படிக்கிறேன். பாரதத்தின் எண்ணிக்கையில் சிறிதாக இருந்த ஐந்து பேர்கள் கொண்ட பாண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். எண்ணிக்கையில் அதிகமான கௌரவர்கள் தோல்வி அடைந்தார்கள். ஆகவே, உங்களுக்கு எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதற்காக நீங்கள் வெற்றி பெற முடியாது என்பதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். புதிய கல்வி முறை திட்டம், தட்சிணப் பிரதேசம் போன்ற பிரச்னைகளில் நிதி அமைச்சர் அவர்கள் காட்டிவந்த ஆர்வம் என்ன ஆனது என்பது எங்களுக்குத் தெரியும். பதவிக்காக அவைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டுத்தான் அவர் இங்கே வந்திருக்கிறார். அப்படி இந்தி வருமேயானால், ரத்தத்தை சிந்தி அதை எதிர்த்துப் போராடுவோம். திரு. சுப்ரமணியம் அவர்களே அணிவகுத்து எதிரே வந்தாலும்கூட அவரை எதிர்த்துப் போராடுவோம் என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, மொழி 12-50 p.m.
சம்பந்தமாக இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கை பிரத்யட்சக் கண்ணோட்டத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய அபிப் பிராயம். கடந்த 19-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் தேசம், தேசீயம் என்ற எண்ணம் உருவாகி, அது ஒரு லட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 19-ம் நூற்றாண்டுவரை ஏற்பட்ட சச்சரவுகள், போராட்டங்களின் விளைவாக, ஒரு முடிவு ஏற்பட்டு, தேசத்திற்கு ஒரு எல்லையை நிர்ணயித்து, அந்த லட்சியத்தின் அடிப்படையில், வழக்கத்தில் இருந்து வந்த மொழிகளில் சிந்தனையும், ஆற்றலும் உருவாகித் தொடர்ந்துவந்தது. கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை 2,500 மைல் நீளம், 2,500 மைல் அகலமுள்ள இந்தப் பாரத தேசத்தை தங்கள் தேசம் என்று எண்ணாதவர்களுக்கும், 6,000 மைலுக்கு அப்பால் இருக்கக்கூடியவர்களின் குடை நிழலில்தான் நாம் செயலாற்றவேண்டுமென்று எண்ணுகிறவர்களுக்கும் இந்த தேசமும்,

தேச மொழியும் புறம்பானதாக இருக்கலாம். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, நமது சிந்தனைகளும் கருத்துக்களும் உருவாகும் வகையில், தேசத்தில் வழங்கி வந்த உயிருள்ள அத்தனை மொழிகளுக்கும் உறுதியான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உயிருள்ள மொழிகள் அத்தனைக்கும் தனித் தனியாக அரியணையில் அமரக்கூடிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு அறிகுறியாகத்தான், தேசீய மொழிகளில் ஒன்றாகிய தமிழ், நமது அரசாங்க மொழியாக அலங்கரிக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் மாத்திரமில்லாமல் உயர்தரக் கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும், நுணுக்கமான தொழில் கற்றுக்கொள்வதற்கு உரிய விஷயங்களிலும் தமிழ் மொழி ஆட்சி செய்யவேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. 10-வது வகுப்புக்குப் பிறகு மொழிகளைக் கற்க வேண்டியதில்லை. ஆனால், கலாசாலைக் கல்வியின் முடிவுவரையிலும் நுணுக்கமான விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கும் நாம் எண்ணுகிற எண்ணங்களுக்கு உகந்த முறையில் எந்த பாஷையில் அணுகினால், விஷயங்களை நல்லவிதமாக, அதற்குரிய லட்சணங்களோடு, கருத்துக்களோடு புரிந்துகொள்ளமுடியும் என்கிற சிந்தனையோடுதான், கல்லூரிப்படிப்பிலும் தொழில் நுணுக்கப் படிப்புகளிலும் புரியக்கூடிய மொழியிலே புரிந்துகொள்வதற்கு இடம் அளிக்கவேண்டுமென்ற உறுதி நமது ராஜ்யத்தில் அரசாங்கத்தை நடத்துகின்றவர்களுக்கு இருப்பது ஒரு நல்ல அறிகுறி. நமது கருத்துக்களை எந்த மொழியில் சுலபமாக எண்ணமுடியுமோ, அந்த மொழியிலே தெரிந்துகொள்வதுதான் நல்லது. எல்லாக் கல்லூரிகளிலும் கூட போதனைமொழி தமிழாக இருக்கவேண்டுமென்ற உறுதிப்பாடு தெரிகிறது. தமிழுக்கு உறுதியான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறபொழுது, தமிழைச் சார்ந்த மற்ற திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற இதர மொழிகளை சகோதரி மொழிகளாக பாவிக்கவேண்டுமென்கிறபொழுது தேசத்தில் வழங்கும் மற்ற மொழிகள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சகோதர மொழிகள் என்பதை மறந்துவிடக்கூடாது. நமது தேசத்தில் வழங்கிவரும் 14 அல்லது 15 மொழிகள், இன்று நேற்றல்ல, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முடிவு செய்யப்பட்ட விஷயமாகும். அந்தந்தப் பிரதேசத்தில் வழங்கி வரும் மொழி ஆட்சிமொழியாக இயங்கவேண்டும் என்பதில் சந்தேகம் கிடையாது. ஆனால் எல்லாப் பிரதேசங்களுக்கும் தொடர்பு மொழியாக எது இருக்க வேண்டும், எது இருப்பதற்குத் தகுந்தது என்ற பிரச்னைதான் எல்லோரையும் கவர்ந்திருக்கிறது. ஆங்கிலமொழியானது, **Greek, Roman** முதலிய பாஷைகளிலிருந்தும் பிறமொழிகளிலிருந்தும் சிந்தினதுகளையும் சிதறினதுகளையும் எடுத்துக்கொண்டு வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது. அப்படி வளம் பெறுவதற்கு பல நூற்றாண்டுகளாயிருக்கிறது. ஆனால் கீழ் திசையில் உள்ள நாடுகள் சுதந்திரம்பெற்று, அங்கங்கே இருக்கக்கூடிய அரசியல் அமைப்புகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் பார்க்கும்பொழுது, நாம் எண்ணுகிற எண்ணங்களும், கருத்துக்களும் வேறுதிசையில் நடமாடுவதைப் பார்க்கிறோம். பிரிட்டன் தனக்கு ஒரு அரசு வேண்டுமென்ற அளவுக்குதான் சிந்தனை செலுத்திவருகிறது. ஆனால் நாம் எண்ணும் எண்ணங்கள் வேறு. நமது போக்கு வேறு. நமது லட்சியம் கூட வேறாக இருக்கிறது. அந்த அளவுக்கு, இந்த தேசத்துக்கு உரிய அளவுக்கு, உலகத்தின் பெரிய மொழியாகிய ஆங்கிலத்தை, ஏன் தடை செய்யவேண்டும்? தேசிய மொழியாக இருக்கக்கூடிய அத்தனை மொழிகளும் அமைப்பிலே சம்பந்தப்பட்டு இருக்கின்றன. ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன.

எழுத்துக்கள் அதிகம் இல்லாத ஆங்கிலத்தை கற்றுக்கொள்வதற்கு கஷ்டமாக இருப்பதாக பலர் உணர்ந்து சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். இனிமையாக இருந்தாலும், கவர்ச்சி உள்ள மொழியாக இருந்தாலும் கூட, தமிழ்மொழியை கற்றுக்கொள்வதில் இருக்கும் கஷ்டம் இந்தி மொழியை கற்றுக்கொள்வதில் இடையாது என்று ஆங்கிலேயரே சொல்லக் கேட்டிருக்கிறேன். அதிக எழுத்துக்கள் கொண்ட காரணத்தால் இந்தியை கற்றுக்கொள்வதற்கு சுலபமாக இருக்கிறது என்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். நான் சிறையிலிருக்கும்போது என்னுடன் மலையாளிகள்,



தெலுங்கர்கள், கன்னடியர்கள் முதலியவர்களும் இருந்தனர். இந்தி பாஷை கற்றுக்கொள்வதில் யாதொரு கஷ்டமும் ஏற்படவில்லை என்று அவர்கள் சொன்னதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மலையாளம், சென்னை ராஜ்யத்தைப்போலவே கல்வியில் முன்னுக்கு வந்துள்ளது. மற்றெல்லாப் பிரதேசங்களையும்விட ஆங்கிலம் படித்தவர்கள் தொகை அங்கே அதிகம். அதாவது 100-க்கு 40 பேர். அவர்கள்கூட இந்தியை தொடர்பு மொழியாகக் கொள்ள ஆட்சேபனை இல்லை என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். பின்னர் நாம் ஏன் எதிர்க்கவேண்டும்? என்னுடைய ஜில்லாவில், நெற்கட்டும் செவ்வல் என்ற கிராமத்தில் ராஜா என்கிற ஒரு அரிஜன மாணவன் இந்தியில் 100-க்கு 100 மார்க்குகள் வாங்கி, இந்தியை சுலபமாக கற்றுக்கொண்டு நல்ல தேர்ச்சியும் அடைய முடியும் என்று காண்பித்திருக்கிறான். இந்திமொழி எந்த அளவுக்கு ராஜ்யத்தின் மொழியாக வரவேண்டும் என்ற அவசர உணர்ச்சியை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நமது தேசியத்தை உருவாக்கியவர்கள் அதுதான் தேசிய பாஷையாக இருக்கமுடியும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். (இப்பொழுது உதவி சபாநாயகர் தலைமை வகித்தார்). மற்றெல்லா மொழிகளைவிட இந்தி கற்றுக்கொள்வதற்கு சுலபமாக இருக்கும்போது அதை கற்றுக்கொள்ள என்ன தடை இருக்கிறது. இந்த பாஷை பிரச்னையில் தேசத்துக்கு என்று ஒரு கொள்கையை அமைப்பதில் கௌஹாத்தி காங்கிரஸில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியால் எவ்வாறு தன் தீர்மானத்தை ஏற்கச் செய்யமுடிந்ததோ அதுபோன்று, இந்த சர்ச்சையான பிரச்னையில் சென்னையின் யோசனை, புது யோசனையாக, நவீன யோசனையாக எல்லோரும் தேசம் முழுமையும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இப்பொழுது இந்தியைப் படிப்பவர்களில் அறிவு நிறைந்த தமிழர்களும் இருக்கிறார்கள். தமிழர்களுடைய அறிவு தலை சிறந்தது. அப்படியிருக்கும்போது இந்தி படிப்பதில் எந்தவிதமான தயக்கமும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய பணிவான அபிப்பிராயம்.

ஆங்கிலத்தைப்பற்றி சில நாட்களுக்கு முன் விநோபாஜி குறிப்பாக "ஆங்கிலம் தெரிந்திருக்கும் பகுதியைவிட உலகம் பெரியது" என்று அபிப்பிராயம் தெரிவித்தார். நல்ல கருத்தும்கூட ஆங்கிலம் தெரியாத பெரிய பெரிய நாடுகள் இருக்கின்றன. ஆங்கிலம் தெரியாத ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். ஆட்சி செய்வதற்கு ஆங்கிலம் அவசியம் என்று கருத முடியாது. "**God save our Gracious king ...... long to reign over us.**" என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆங்கிலம் இருந்தது.

ஆங்கிலம் தெரிந்து இருந்ததனால், ஆங்கிலேயர்களை விரட்டியடிக்க முடிந்தது; அப்படி இருக்கும்போது அது ஏன். நீடித்திருக்கக்கூடாது என்று சிலர் சொல்லுகின்றனர். காலில் தைத்த ஒரு முள்ளை எடுப்பதற்கு வேறொரு முள்ளை உபயோகப்படுத்துகிறோம் என்ற காரணத்தால் அந்த முள்ளை காலிலேயே வைத்துக்கொள்ளவேண்டும், மடியில் வைத்துப் பாதுகாக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. நம் நாட்டின் பொது பாஷையில் சிந்தனை செலுத்தி, அதை உலக பாஷைகளில் ஒன்றாக செய்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

இந்திமொழியை கற்காத ஒரு குற்றத்தால், அதனுடைய நுணுக்கங்களையெல்லாம் தெரிந்துகொள்ளவில்லை என்ற குற்றத்திற்காக அரசாங்க உத்தியோகங்களிலும், மற்றும் பல துறைகளிலும், ஒதுக்கப்படாமல் இருப்பதற்கு, பாதுகாப்பு தேடிக்கொள்ளவேண்டியது அவசியம். அரசாங்கம் இதற்கு தயாரித்துக் கொள்ள வேண்டும் என்றும், இந்த அபிப்பிராயத்தைத் தைரியமாகச் சொல்லி வெளிப்படுத்த வேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை நிறுத்திக்கொள்கிறேன்.

A 10-3-58—10

**Sri S. NAGARAJA MONIGAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன்பு விவாதத்திற்கு இருக்கும் மொழிப் பிரச்னை மிகப் பெரிய கஷ்டமான பிரச்னையில் ஒன்று என்பதை நான் உணர் 12–58 p.m. கிறேன். எளிதில் அவ்வளவு நன்ருகப் புரிந்துகொள்ளக்கூடியது கூட அல்ல. ஆகவே, நான் சொல்லப்படும் வார்த்தைகளில் கருத்து வேற்றுமை இருக்குமானுல், தவறுகள் இருக்குமானுல், திருத்திக் கொள்ளக்கூடியவன் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது இருக்கும் நிலையில் எனக்கு ஒன்றே ஒன்றுதான் தோன்று கிறது. நாம் மொழிப் பிரச்னையைப்பற்றி எதற்காகப் பேசுகிருேம் என்ற கேள்வியை கேட்டுக்கொள்ளவேண்டும். நாம் யார் ? இந்த மாகாண சட்ட சபையில் ஒரு வரம்புக்குள் உட்பட்டு இந்தப் பிரச்னையை பேசுகிருேம் என்ருல், நமக்கு ஒரு தேசம் இருக்கிறது, அது சுயராஜ்யம் அடைந்து 10 ஆண்டுகள் ஆகின்றன, இது ஒரு தனி தேசம், அதற்கு ஒரு சட்ட திட்டம் இருக்கிறது, அதற்கு எல்லாம் உட்பட்டு பேசுகின்ருேம் என்பது சொல்லா மலே வெளிப்படையாக இருக்கிறது. இப்படி இருக்கின்றபொழுது, நாம் இந்தப் பிரச்னையில் ஒரு இறுதியான முடிவு எடுக்கும்போது, முதலில் நாடு ஒன்றல்லவா என்பதை நிச்சயித்துக்கொள்ளவேண்டும்.

அப்படி இல்லாமல் ஏதோ ஒரு சாரார் சரியான காரணம் இல்லை என்று சொல்லுகிருர்கள். மிகமிக முக்கியமான காரணம் என்று இதை வைத்துக்கொள்ளலாம். ஒன்று அல்லது இரண்டு நாடுகள்தான் பாஷை அடிப்படையில் பிரிந்திருக்கின்றன. ஜாதி, குலம், மொழி, பாஷை, ரத்தம், காற்று எல்லாம் வேறு, எங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒத்து வராது, உலகத்திலேயே நாங்கள் தனியாகத்தான் வாழ்வோம் என்று சொல்லுகிருர்கள். உள்ளபடியே தென்னுடு என்று பேசுவதற்கு அவ் வளவு அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். இந்நாடு சுதந்திரம் பெற்று இந்தச் சபை அமைந்திருக்கிறது. உள்ளபடியே நாம் 200 வரு ஷங்கள் அடிமையாக இருந்தோம். பலர் உழைத்து சுதந்தரம் பெற் ருேம். நம்மை நாமே ஆண்டுகொள்ளவேண்டும் என்ருல் நம்முடைய மந்திரிகளே நமக்கு இருக்கவேண்டும் என்றும் வெள்ளைக்காரப் பிடி யிலிருந்து நாம் விடுதலை அடைந்தோம். அந்த நிலைமையில் அவர்கள் திராவிடம் கேட்கிருர்கள். அவர்களுக்கு ஒருவரும் துரோகம் செய்யவில்லை. அவ்விதம் சுதந்திரத்தை அடைந்த இந்நாட்டிற்கு ஒரு பொது மொழி வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை யோசிக்க வேண்டும். இந்த தேசத்திற்கு ஒரு பொது மொழி அவசியம் வேண்டுமா இல்லையா என்பதுதான் பிரச்னை. இந்நாட்டில் பல உறுப்புகளை அமைத்து அவைகளை நிர்வகிப்பதற்கு இப்படி ஜில்லாக்கள் என்றும் தாலுகாக்கள் என்றும் ஏற்படுத்தப்பட்டது. அதேபோல்தான் இந்த மாகாணங்களையெல்லாம் ஏதோ சில காரணங்களால் பிராந்திய மொழிவாரியாக பின்னுல் ராஜ் யங்கள் அமைக்கப்பட்டன. ஒன்றிரண்டு ராஜ்யங்கள் தனி மொழி வாரியாக அமைந்துவிட்டன. அந்தந்த இடங்களுக்கு மொழிகளை தோரமாகக்கொண்டு இது தனி தேசம் என்று பேசுவது சரியல்ல, அதை விட்டுவிடலாம். ஆனுல் ஒரு ராஜ்யத்திற்கு ஒரு மொழி வேண்டும் என்ருல் அது தாய் மொழியாகத்தான் இருக்கவேண்டும். விரிந்த மாகாணங்களிலெல்லாம் தலை மொழியிலேயே பிரதானமாகப் பற்று தல் வைத்து இந்த அரசாங்கம் நடப்பதற்கு. . . .

**Mr SPEAKER** : Let the Hon. Member Sri Nagaraja Monigar please resume his seat. Now the Hon. Member Sri Govindasamy will make a statement.

**Sri A. GOVINDASAMY** : கனம் சபாநாயகர் அவர்களே, நான் பேசுகிறபோது கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு செய் தியை நான் வாபஸ் பெற்றுக்கொள்ளுகிறேன். அவர் சொன்னதை நான் தவருகப் புரிந்துகொண்ட காரணத்தால் இப்படி நிதானம் தவறி பேச வேண்டியதாயிற்று. பேசுகின்ற ஆத்திரத்தில் பொறுமை இழந்து





அப்படிப் பேசக்கூடிய நிலைமை ஏற்பட்டது. என்னுடைய சட்டசபை அனுபவத்தில் இப்படி தவறுதலாக நான் பேசியதில்லை. அப்படிப் பேசியதற்கு நான் வருந்துகிறேன் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இந்தத் திருத்தம் அவர் கொண்டு வந்ததற்கு கனம் ஆசைத்தம்பி காரணமாக இருந்ததற்கு அவருக்கு என் நன்றியைச் செலுத்துவது என் கடமையாக இருக்கிறது.

**Mr. SPEAKER** : கனம் கோவிந்தசாமி சொன்ன பிரகாரம் அவர் வாபஸ் பெற்றுக்கொண்ட பாகத்தை அவருடைய பேச்சிலிருந்து " எக்ஸ்பஞ்சு " செய்யுமாறு இங்கிருந்து நான் உத்தரவு போடுகிறேன்[a].

**Sri S. NAGARAJA MONIGAR** : இம்மாதிரி சபையில் ஒரு நல்ல நிகழ்ச்சி ஏற்பட்டதற்கு சந்தோஷம். இப்படி ஒரே சமூகமாக வாழ்வோம் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

ராஜ்யங்களை நிறுவுவதற்காக ஏதோ ஒரு மொழி வேண்டுமென்று சொல்லும்போது இது தாய் மொழி, இதில் கலை அதிகம் இருக்கிறது, அதிலுள்ள மணம் மற்ற மொழிகளில் இல்லை என்று மிகப் பிரமாத மாகப் பேசப்படுகிறது. இதில் சுவை இருக்கிறது, இதில் கலை இருக்கிறது என்ற ரீதியில் தங்களுடைய பாஷையின் ருசியைப் பார்த்து ஆராய்ச்சி செய்து வருகிருர்கள். ஓவியம் நாடகம் முதலியவைகளை கலை முறையில் அமைத்துக்கொள்ளலாம். அதை மொழிப் பிரச்னையில் விட்டுவிடலாம். நடைமுறையில் அரசியலை நடத்துவதற்கு அது சரியல்ல. அதை ஒரு சாதனமாக ஒரு ரீதியில்தான் வைத்துக்கொள்ளவேண்டும். அது ஆங்கில பாஷையாக இருந்தாலும் அல்லது வேறு எந்த வெளி நாட்டு பாஷையாக இருந்தாலும் ஒரு பொது பாஷை வேண்டும் என்பதுதான் கருத்து. பாஷை வேண்டும் என்று சொல்லும்போது அரசாங்க ரீதியில் பார்த்தால் ஆங்கிலம் வேண்டும் என்று சொல்லிக்கொள்ளலாம். ஒரு ஸ்திரமான பாஷை வேண்டுமென்று சொல்வது நிச்சயமாக நல்லது என்று எடுத்துக் கொள்ளவேண்டும். எதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி கவலை இல்லை. நாட்டிற்கு ஒரு பாஷை வேண்டும் என்று சொல்லும் போது தமிழ் நாட்டிற்கு தமிழ் மொழிதான் இருக்கிறது. மாகாண மொழி, தேசப்பற்று, ரத்தப்பற்று என்று சொல்வதனுல் இந்திய நாடு ஒன்று என்று நினைத்து சுதந்தரம் வாங்கி இருக்கிருேம். அப்படி சுதந் தரம் வாங்கிய ஒரு உப கண்டத்திற்கு ஒரு மொழி என்னுடைய மொழி என்று வேண்டுமா அல்லது வேண்டமா என்று பார்க்கவேண்டும். சகோதர மக்களுக்கு அது இந்தியாக இருந்தாலும் அல்லது வேறு ஏதாக இருந்தாலும் அதைப்பற்றி அக்கறை இல்லை. ஆனுல் நமது நாட்டில் இப்பொழுது 100க்கு 42 பேர்கள் இந்திதான் பேசுகிருர்கள், மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு அந்நிய மொழியைப் பேசவில்லை. எதிர் கட்சியிலுள்ள பலர் இதை உணர்ந்திருப்பார்கள் என்றே நினைக் கிறேன். தனித்தனியாக எடுத்துக்கொள்ளாமல் எல்லோரும் ஒன்ருகக் கூடி அந்த பொது மொழி எப்படி இருக்கலாம் என்று யோசித்து 42 சத விகிதமுள்ள பேசக்கூடிய மொழியை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு கட்டினுர்கள். ஏற்கெனவே இந்தி வேண்டும் என்று சொல்லிய வர்கள் அவரை யார் நம்பாவிட்டாலும் அவர்தான் சுயராஜ்யம் வாங்கித் தந்தார். அவரும் மற்ற அறிவாளிகளும் நாட்டில் சேர்ந்து இந்த இந்தி தான் தேசிய மொழி என்று வகுத்தார்கள். அவர் திறமையும் வாய்ந்த வர்தான். என்னுடைய தொகுதிக்கு அடுத்த தொகுதியில் பிறந்தவர். என்னுடைய ஜில்லாவாசி என்ற பெருமைகொள்ள வேண்டியவர். நான் 1946 முதல் 1952 வரையில் ஒரூரைச் சேர்ந்த அங்கத்தினராக இருந்தேன். அவர் எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிருர். அவரிடம் ஏதாவது தாழ்மை இருந்தால் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லக்கூடாது. அடாமிக் கூடாது என்று எழுதிய அவருடைய கட்டுரை மகத்தானது, அது

[a] Vide page 65 supra.

[Sri S. Nagaraja Monigar] [10th March 1958

எந்தக் காலத்திற்கும் எல்லோராலும் போற்றக்கூடியது. அப்படி அவர்
எழுப்பிய கோபுரமானது காலாகாலத்திற்கு நிற்கக்கூடிய கோபுரம்.
ஒரு சமயத்தில் பாகிஸ்தான் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று
காரியக் கமிட்டியில் சொன்னார். அவர் அந்த சமயம் சில பிரச்னைகளை
நாட்டிற்கு அளிக்காமல் இருந்திருந்தால் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள்
வேறு ஏதாவது ஒருவிதமான முடிவை எடுத்திருப்பார்கள். லட்சக்
கணக்கானவர்களை பலியிட்டு ரத்த வெள்ளத்திற்கு நாட்டை உள்ளாக்கித்
தான் சுதந்தரம் அடைய வேண்டும் என்று முடிவு செய்திருக்கக்கூடும்.
இன்னும் பல வருஷங்கள் பொறுத்து சுயாராஜ்யம் பெற்றுக்கொள்ளு
கிறோம் என்று கூட முடிவு செய்திருக்கலாம். பிறகு சுயாராஜ்யம்
கிடைத்த பிறகு என்ன நடந்தது. பாகிஸ்தான் பிரிவினையானவுடன்
என்ன நடந்தது ? அப்படிப்பட்டவரை உங்களுடைய சி. ஆர்., உங்கள்
தலைவர் என்று சொல்லுகிறார்கள். அறிவில் சாணக்கியனை ஒத்தவர்,
அவரே இந்தி வேண்டாம் என்று சொல்லுகிறார் என்று சொல்லுகிறார்கள்.
அவர் எங்களுடைய தலைவர்தான், அது வாஸ்தவம்தான். அவரே
கெடுதல் செய்தால் அவரை நாங்கள் கண்டிக்காமல் இருந்ததில்லை.
திருப்பரங்குன்ற மகாநாட்டில் அவரைக் கண்டித்தோமா இல்லையா,
அவரையும் விட்டுவிடவில்லை. இப்பொழுதும் அப்படி இல்லை. இப்
பொழுது ஓய்வு பெற்றுக்கொண்டிருக்கிறார். ஓய்வு எடுத்துக்கொண்டிருக்
கிறேன் என்று சொல்லி இந்தக் கிளர்ச்சிகளையெல்லாம் கிளப்பிக்கொண்டி
ருக்கிறார். மாளவியாவைப்போல் காயகல்ப சிகிச்சை செய்து கொண்டாரோ
என்னமோ தெரியவில்லை. அந்த அளவில் வேகமாக வேலை செய்து
கொண்டு வருகிறார். கல்கத்தாவில் மகாநாடு கூட்டியிருக்கிறார். ஆனால்
மொழி விஷயமாக அவருக்கு ஒரு பயம் வந்துவிட்டது. தமிழ் நாடு
பிரிந்து விடப்போகிறது என்ற பயம் ஏற்படுகிறது. அப்படிப் பிரிந்து
போனால் போகட்டுமே. அந்த நாட்டில் நாங்கள் எல்லோரும் இருக்கப்
போவதில்லையா. இத்தனை மாறுபட்ட கருத்துடையவர்களும் சும்மா
இருந்து எங்கள் கொள்கைகளை விட்டுவிடுவோமா ? எங்களுடைய சிந்
தனையை விலைக்கு விற்றுவிடுவோமா ? அவா சொல்வது நல்ல காரிய
மாக இருக்கலாம். கனம் ஸ்ரீநிவாசய்யர் கூட " தன் கையில் அதிகாரம்
இருந்தபோது கனம் சி. ஆர். என்ன செய்தார் " என்று கேட்டார். அது
சரியான கேள்விதான். ஆனால் அவர் என்ன நினைக்கிறார் என்றால்,
இன்றைக்கு அவர் நன்மை செய்கிறார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்.
தமிழ் பாஷை ஒரு கலை இனம் என்று சொல்லி அப்படிச்
செய்யக்கூடாது. சமயத்திற்கு அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து
கொண்டிருக்கிறார்கள். அதனால் பயன் வரும் என்று நினைக்கிறார்கள்.
இதற்கு முன் " உச்சிக்குடுமி ஒழிக " என்று சொன்னார்கள், அதை
அவர் இப்பொழுது மறந்துவிட்டார். அவரை இப்பொழுது சேர்த்துக்
கொண்டிருப்பதில் ரொம்பவும் சந்தோஷம். அவர் ஒரு சாணக்கியர் என்
பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும். அவரை நம்பினால் அவர்
இவர்களை நட்டாற்றில் விட்டு விட்டு போய்விடுவார். அவரை நம்பி
உங்களால் கரையேற முடியாது. அவர் உங்களுடைய பெரியாருடன்
சேர்ந்து இந்த மொழி விஷயமாக எவ்வளவு தூரம் செய்யவேண்டும்
என்று நினைத்தாரோ அதைத்தான் சென்னை அரசாங்கம் இப்பொழுது
செய்திருக்கிறது. உங்களையே கேட்டுக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்து அறிக்
கையை தயாரித்திருக்கிறார்கள். ஆகவே இந்த ஏகோபித்தத் தீர்
மானத்தை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று கல்வி மந்திரி
சொல்லுகிறார். கண்டிப்பாக அது நிறைவேறும். அதே நம்பிக்கையுடன்
தான் பத்து வருஷமாக காரியங்களை நடத்திக்கொண்டு வருகிறோம். அதே
நம்பிக்கையுடன்தான் இந்த இருபது வருஷங்களாக சுதந்தர பாதையில்
நடந்துகொண்டிருக்கிறோம். ஏதோ விதை முளைக்காது என்று சொன்னால்
அதை ஒத்துக்கொள்ளமுடியாது. முஸ்லிம் நண்பர்கள் கோபித்துக்
கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படி கோபித்துக்கொண்
டாலும் கோபித்துக்கொள்ளட்டும். லீக் ஜாதி என்று பெயரை சொன்ன
மாத்திரத்திலேயே இந்த நாடு என்ன கதி ஆயிற்று, சிந்தித்துப் பாருங்கள்.



10th March 1958] [Sri S. Nagaraja Monigar]

தூண்டிவிடலாம் ஒரு நிமிஷத்திலே. அந்தந்த ராஜ்யத்திற்கு அந்த ராஜ்யத்தினுடைய மொழி வேண்டும். வங்காளத்திற்கு வங்காள மொழி வேண்டும். தமிழ் நாட்டிற்கு தமிழ் மொழி வேண்டும் என்று நமக்கு எவ்வளவு பற்றுதலாக இருக்கிறதோ அம்மாதிரி தேசத்திற்கு பற்றுதலாக ஒரு பொது மொழி இருந்தாகவேண்டும், அது இந்தி அல்லவா என்பது கேள்வி. தமிழ் நாட்டில் கஷ்டமில்லாமல் அதைக் கொண்டுவர வேண்டுமென்பது அடுத்த கேள்வியல்லவா என்று கேட்கிறேன்.

போக, ஆங்கிலத்தை திடீரென்று மாற்றிவிட முடியாது. " டிரான்ஸிஷன் பீரியட் " ரொம்பவும் அவசியம். நாம் முன்னேறவில்லையே, முன்னேற்றம் காணவில்லையே என்று ஒவ்வொரு பட்ஜெட் விவாதத்தின் போதும் பேசுகிறார்கள். மிகவும் கீழ்த்தட்டில் இருக்கும் நாட்டில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டாலும் அது தெரியவில்லை, வாஸ்தவம்தான். " டிரான்ஸிஷன் பீரியடில் " மாய மந்திரத்தினால் ஒன்றும் செய்துவிட முடியாது. அவர்களுக்கு நம்பிக்கையில்லாத சாஸ்திரத்தினாலேயோ, சாஸ்திரிகளுடைய மந்திரத்தினாலேயோகூட ஒன்றும் செய்துவிட முடியாது. மந்திரத்தில் மாங்காய் விழாது. ஆகவே, இடைக்காலத்தில் ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளுவதற்கும் வழி செய்திருக்கிறார்கள்.

**(Deputy Speaker in the Chair).**

இனி இதைப்பற்றி அதிகம் பேசாமல், இரண்டொரு வார்த்தைகள் சொல்லப்பட்டன, அவைகளைப்பற்றி மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்துக் கொள்ளுகிறேன். இந்திய அரசாங்கத்திற்கு அடிபணிந்து நடக்கிறார்கள் என்று சொன்னார்கள் நாம் எல்லோரும் இந்த சட்டசபை அங்கத்தினர்களாக வந்தபொழுதே இந்திய யூனியனுக்கு விசுவாசமாக இருப்பதாக பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கிறோம் ஆகவே அதில் ஒன்றும் தப்பு கிடையாது.

திராவிட நாடு பற்றி சொன்னார்கள். சந்தோஷம். அதற்கு எது வரையில் எல்லை ? அதற்கு மொழியை ஆங்கிலமாக வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமாகாது. தமிழருடைய கலை என்று சொல்லிக்கொண்டு கிராப்பை விடாமல் வைத்துக் கொண்டிருக்கிறோம். உச்சிக்குடுமி வைத்துக்கொள்ளுவது தமிழ் பண்பல்ல என்று உச்சிக்குடுமியை விட்டுவிட்டு நிறைந்த குடுமி வைத்துக் கொண்டார்கள். அது போயிற்று. இம்மாதிரி தேவைக்குத் தகுந்தபடி வேண்டியதை ஒத்துக்கொள்ளுவது, வேண்டாததை தள்ளிவிடுவது என்பது சுகப்படாது. கௌபீனத்தை உதாரணமாகச் சொன்னார்கள். சுக்குக்கு தமிழிலே என்ன அர்த்தம் என்று பார்க்கட்டும். வார்த்தையில் என்ன இருக்கிறது. இப்படியெல்லாம் பேசுவதில் சுகமில்லை. காங்கிரஸ் காரர்கள் திட்டமிட்டதுதான் என்று சொல்லுகிறார்கள். அந்தக் காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திரநாடு காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி என்று அமைத்து சுதந்திரம் வருவதற்கு முன்னாலேயே மொழியின் பெயரால் இந்த நாடு வளரவேண்டுமென்று எண்ணினார்கள். சற்று எண்ணிப்பார்ப்போமானால் ஒரேகாலத்தில் எல்லா நன்மைகளையும் அடையவேண்டுமென்று மக்கள் எண்ணுவது சகஜம் என்றும், ஆனால் அது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதும் தெளிவாகத் தெரியும். கிடைத்ததை சரியாக உபயோகித்து பயனடையவேண்டியதுதான் சரி. சிலர் இந்தக் கருத்துக்களை சரியாக புரிந்துகொள்ளாமல் மொழிவழியே ராஜ்யங்களைப் பிரிப்பதற்கு தயங்கியவர்களும் உண்டு. பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததாலும், தமிழ் மக்களில் சிலர் தமிழ் நாடு வேண்டுமென்று கூச்சல்போட்டு கத்தியதாலும் மத்திய சர்க்கார் சென்னையின் பிரிவினைக்கு இணங்கவேண்டியதாயிற்று. பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் உண்ணாவிரதம் இல்லாமல் இருந்திருந்தால், ஆந்திர நாடு பிரிந்திருக்கப் போவதில்லை. எல்லாம் ஒன்றாக இருந்திருக்கும். சுயராஜ்யம் கிடைப்பதற்கு முன்னமேயே பெரியார் அவர்கள் திராவிட நாடு வேண்டுமென்று அஸ்திவாரம் போட்டிருந்தும், கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு நாங்கள் போட்ட விதைதான் முளைத்து, காய்த்து பழுத்து அந்தப்

[Sri S. Nagaraja Monigar] [10th March 1958

பழத்தை, பலனை நாங்களும் சாப்பிடுகிறோம். நீங்களும் சாப்பிடுகிறீர்கள்
என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளு
கிறேன். வணக்கம்.

**Sri N. K. PALANISAMI :** கனம் அங்கத்தினர் தமிழ் அகராதியைப்
பார்த்துச்சொன்னாரா அல்லது ஆங்கில அகராதியைப் பார்த்துச்
சொன்னாரா என்பது தெரியவில்லை.

*** Srimathi P. K. R. LAKSHMIKANTHAM :** சட்டமன்றத்
துணைத்தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கும் இந்த யாதாஸ்தை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.
அரசாங்க மொழிக் கமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டு பல பரிசீலனைகள்
செய்தபிறகு, அவர்கள் தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்புகளில்
சிலவற்றை நாம் ஏற்றுக்கொண்டு, சிலவைகள் திருத்தி அமைக்கப்பட
வேண்டுமென்ற ஒரு உயரிய நோக்கத்துடன் இந்த யாதாஸ்து தயாரிக்கப்
பட்டிருப்பதைப் பார்த்தால், நமது நிதி அமைச்சர் அவர்கள் நமது தமிழ்
நாட்டில் இனி வரப்போகின்ற சந்ததிகள் எப்படி இருக்கவேண்டும், எப்படி
நமது தமிழ் நாட்டிலே நமது தாய்மொழி அமைக்கப்படவேண்டும் என்ற
விஷயங்களை மிக நுண்ணிப்பாக கவனித்து பரிசீலனை செய்துதான் இந்த
யாதாஸ்தை தயாரித்து இருக்கிறார்கள் என்பதைக் காண நான் மிகவும்
சந்தோஷப்படுகிறேன். பல்கலைக் கழகம் ஆங்கிலம் கல்லூரியில் போதனு
மொழியாக இருக்கவேண்டுமென்று தீவிரமாக நினைக்கும்காலையில் கூட,
நமது நிதி அமைச்சர் அவர்கள் கல்லூரிகளிலே தமிழ்தான் போதனு
மொழியாக இருக்கவேண்டுமென்பதை இவ்வளவு ஆட்சேபனைக்கிடையிலும்
கூறியிருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய தைரியத்தை பாராட்டாமல்
இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், ஆங்கிலத்
திலே பயிற்சி பெற்று, ஆங்கிலத்திலே வளர்ச்சி அடைந்தவர்கள் பலர்
ஆங்கிலத்தினால்தான் நாம் வளர்ச்சி அடையமுடியும் என்ற ஒரு கண்ணோட்
டத்துடன் இப்பொழுதும் இருப்பதினால், நமது நிதி அமைச்சர்களின்
வாதத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். உண்மையிலேயே அவர்கள்
பெரிய அறிவாளிகள் என்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அவர்களும்
பல பிரச்னைகளை பரிசீலனை செய்தபிறகுதான் இந்த வாதத்தை கிளப்பி
யிருக்கிறார்கள் என்புதையும் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்று இருந்
தாலும், ஒரு மொழியின் வளர்ச்சியானது அது எவ்வளவு கையாளப்படு
கின்றதோ அதைப் பொறுத்துத்தான் இருக்கும், அப்பொழுதுதான் அது
முன்னேற்றம் அடையமுடியும் என்பதை நிதி அமைச்சர் அவர்கள் தனது
பிரசங்கத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் நாள்
போகப்போக சரியாக வந்துவிடும் என்பதை நாம் நினைவில் வைத்துக்
1-20 p.m. கொள்ளவேண்டும். ஆங்கிலம் விஞ்ஞானத்தில் மிகவும் உயர்ந்திருக்கிறது,
ஆங்கில மொழியினால்தான் நாம் நாகரீகம் பெற்றிருக்கிறோம், ஆங்கில
மொழியினால்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறோம் என்ற ஒரு பண்பாடு
இருக்கிறது நமது நாட்டில். அப்படிப்பட்ட அபிப்பிராயம் கொண்டவர்கள்,
கொள்கையுடையவர்கள் இன்னும் இருக்கிறார்கள். எனவேதான் இன்று
ஆங்கிலம்தான் போதனுமொழியாக இருக்கவேண்டும் கல்லூரிகளில்
என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆம், கல்லூரியில் போதனு மொழியாக
வருவதற்கு ஏற்ற அளவு நமது தமிழ் இன்னும் வளர்ச்சி பெறவில்லை
என்பதை ஒப்புக்கொண்டாலும்கூட, அதை நாம் தமிழ் மொழியிலேயே
நடத்த முற்படுவோமானால், அதற்குரிய ஒரு இடம் பெறுவதற்கு அதிக
நாள் செல்லாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.
எனவே நமது நிதி அமைச்சர் கூறியபடி இரண்டு விஷயங்களை நாம் முடிவு
கட்டவேண்டும், கல்லூரியில் போதனுமொழியாக ஆங்கிலம் இருக்கவேண்டு
மென்றால், அதற்கேற்ப உயர்தர கலாசாலைகளிலும் ஆங்கிலம்தான்
போதனுமொழியாக இருக்கவேண்டும். மேலும், எலிமெண்டரி பாடசாலை
களிலும் அந்த மொழியிலேயே கற்றுக்கொடுக்க வேண்டும். அப்படிச்
செய்தால்தான் ஆங்கிலம் கல்லூரிகளிலும் நல்ல வளர்ச்சியைப் பெற



10th March 1958] [Srimathi P. K. R. Lakshmikantham]

முடியும். ஆனால், இன்றுள்ள திட்டத்தின்படி 5-வது வகுப்பிலிருந்து
ஆங்கிலம் போதிக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அதற்குப் பிறகு
உயர்தரக் கலாசாலைகளில் தமிழைப் போதனுமொழியாகக் கொண்டுவரப்
போகிறோம். உயர்தரக் கலாசாலைகளில் தமிழை போதனு மொழியாகக்
கொண்டுவந்துவிட்டு கல்லூரிகளில் ஆங்கிலத்தை போதனுமொழியாக
வைத்துக்கொண்டால், அப்போது கல்லூரிகளில் ஆங்கில பாஷையைப்
போதிப்பதா அல்லது விஷயங்களை போதிப்பதா என்ற பிரச்னை
தோன்றிவிடும். ஆகையால் போதனுமொழி எல்லா இடங்களில்
ஒன்றாக இருக்கவேண்டுமென நிதி அமைச்சர் அவர்களுடைய உயர்ந்த
கருத்தானது இப்போது நமக்குக் கொஞ்சம் கசப்பாகத்தான்
தோன்றும். ஏனென்றால், இப்போது நாம் ஆங்கில பாஷையில் நல்ல
தேர்ச்சிபெற்றவர்களாக இருக்கிறோம். ஆகையால், கல்லூரிகளில் தமிழ்
போதனுமொழியாக வந்துவிட்டால், மாணவர்கள் கல்வியில் உயர்ந்த
தேர்ச்சியைப் பெறமுடியுமா என்ற சந்தேகம் நமக்குத் தோன்றுகிறது.
பல பெரியவர்களும் அறிஞர்களும் கூட இந்த சந்தேகத்தைக் கிளப்பி
யிருக்கிறார்கள். இருப்பினும், கீழ் வகுப்புகளில் எந்த மொழி போதனு
மொழியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அந்த மொழியே கல்லூரிகளில்
போதனுமொழியாக இருந்தால்தான், மாணவர்களுடைய தேர்ச்சியும், அறி
வும், ஆற்றலும் வளரும் என்பதில் சந்தேகமில்லை என்பது என் கருத்து.
இந்த உயர்ந்த கருத்தை கனம் கல்வி அமைச்சர் அவர்கள் பலதரப்பட்ட
வேறுபட்ட கருத்துக்கள் கொண்டவர்கள் மத்தியிலும் தைரியமாகத் தெரி
வித்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

மேலும், இந்த யாதாஸ்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் அதிக
மான வாதத்திற்குரிய விஷயம் ஒன்றுதான். அந்த ஒன்றைத்தவிர மற்ற
யாவும் எல்லாக் கட்சியினராலும் ஒப்புக்கொள்ளப்படும் என்று நான் நம்பு
கிறேன். ஹிந்தி மொழியானது நம் நாட்டின் பொது மொழியாக (தேசீய
மொழியாக) இருக்கவேண்டுமென்பது நம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்
பட்ட விஷயம். அதை ஒரு சிலர்தான் மறுக்கிறார்கள். ஹிந்தியை 8-வது
வகுப்பிலிருந்து கற்றுக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்
கிறது. ஹிந்தியை நாம் பொது மொழியாக ஏற்றுக்கொள்வதற்குத் தடை
கள் இல்லாதபடி இந்த ஏற்பாடு செய்யும். அந்த வகுப்பிலிருந்து ஹிந்தி
போதிக்கப்பட்டால் ஹிந்தியில் ஓரளவு பேசத் தெரியும் அளவிற்கு பிள்ளை
கள் தேர்ச்சிபெற முடியும் என்பதில் சந்தேகமில்லை.

மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி சம்பந்தமாக யாதாஸ்தில்
கண்டுள்ள தீர்மானம் வாதத்திற்குரியது என்று சிலர் கருதுகிறார்கள்.
"ஹிந்தி பாஷை பொது பாஷையாக இருக்கலாம். ஆனால் அது மத்திய
அரசாங்க பாஷையாக இருக்கக்கூடாது" என்று சிலர் சொல்கிறார்கள்.
மத்திய அரசாங்கத்தின் பாஷையும் மத்திய அரசாங்கத்தின் எல்லா
அலுவலகங்களின் பாஷையும் ஆங்கிலமாகத்தான் இருக்கவேண்டுமென்று
சிலர் சொல்கிறார்கள் ; இதுபற்றி நாம் சிந்தித்துப் பார்த்தால், கனம்
நிதி அமைச்சர் இந்தக் கருத்தையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று
தான் நாம் சொல்லவேண்டும். ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இரண்டு மொழி
களும் மத்திய அரசாங்க மொழிகளாக இருக்கட்டும் என்றுதான் அவர்
சொல்கிறாரேயொழிய, ஆங்கிலம் வேண்டாமென்றும் ஹிந்தி மாத்திரம்
தான் வேண்டுமென்றும் அவர் சொல்லவில்லை. எந்த ஒரு காலவரையறை
யும் குறிப்பிடாமல், ஆங்கிலமும் தொடர்ந்து மத்திய அரசாங்க மொழியாக
இருக்கட்டும் என்றும், ஹிந்தியும் மத்திய அரசாங்க மொழியாக இருக்கட்டும்
என்றும் கூறுவது ரொம்பவும் சரியானது. மத்திய அரசாங்கத்துடன்
கடிதப்போக்குவரத்து நடத்துவதைப் பொறுத்தவரையில், ஹிந்தி தெரிந்த
வர்கள் ஹிந்தியை உபயோகிக்கலாம் என்றும், ஹிந்தி தெரியாதவர்கள்
ஆங்கிலத்தை உபயோகிக்கலாம் என்றும் கூறுவது மிகவும் சரியானது.
இந்த ஏற்பாடு யாருக்கும் பாதகமானதாக இல்லை. ஆகையால் இந்த
நிலையை எல்லோரும் அங்கீகரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஹைக்கோர்ட்டுகளில் அந்த அந்தப் பிராந்திய மொழி இருக்கவேண்டுமென்று யாதாஸ்தில் கூறப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் மாத்திரம் ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளும் இருக்கவேண்டுமென்ற நடுநிலைக்கொள்கை யாதாஸ்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் போற்றத்தக்கது என்று நான் கருதுகிறேன்.

இந்த யாதாஸ்தில் உயர்ந்த கருத்துக்கள் இருக்கின்றன. நம் தமிழ் வளர்ச்சியடைய வேண்டுமென்பதையும், தமிழ் மக்கள் கல்வியின் ஒவ்வொரு துறையிலும் நன்குகத் தேர்ச்சிபெற்று, முன்னேறவேண்டும் என்பதையும் கருத்திற்கொண்டு பல நுணுக்கமான பிரச்னைகள் ஆராயப்பட்டு, நல்ல தீர்வுகள் காணப்பட்டு, நல்ல கருத்துக்கள் யாதாஸ்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன ; இதைப்பற்றி நாம் எல்லோருமே பெருமைப்படவேண்டும். கனம் கல்வி அமைச்சர் முதலில் ஒரு விஷயத்தைத் தெரிவித்தார். அதாவது, நமக்கு தாய்மொழியில் எவ்வளவுக்கெவ்வளவு பரிச்சயம் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவுதான் நம் சிந்தனை சக்தி வளரும் என்று குறிப்பிட்டார். சிந்தனை சக்தி உடையவர்களுக்கு புதிய புதிய உயர்ந்த கருத்துகள் தோன்றும். அப்படிக் கருத்துக்கள் தோன்றினல் நல்ல நூல்கள் வெளிவரும். உயர்ந்த கருத்துக்கள் நிறைந்த ஆங்கில நூல்கள் நம் நாட்டு மக்களால் எழுதப்படாததற்குத் காரணம், ஆங்கிலம் அன்னிய பாஷையாக இருப்பதுதான் என்று அவர் குறிப்பிட்டார். இது உண்மையானது. உதாரணமாக, என் தாய் பாஷையாகிய ஸௌராஷ்டிர பாஷையில் நான் எவ்வளவு சிந்தனை செய்யமுடிகிறதோ அவ்வளவு சிந்தனை தமிழில் செய்ய என்னல் முடியவில்லை. தமிழில் நன்குகப் பேசுவதற்கு நான் எவ்வளவு முயன்றலும் தமிழில் நான் நன்குகப் பேச முடியவில்லை. காரணம், சிறிய வயதிலிருந்தே, எனக்கு ஸௌராஷ்டிர மொழியில் ஏற்பட்ட அளவிற்கு தமிழில் ஏற்படவில்லை. அதேபோல நம் நாட்டில் ஆங்கிலத்தில் எவ்வளவோ உயர்ந்த தேர்ச்சி பெற்றவர்களுக்கும் கூட, அந்த மொழியின் மூலம் அவர்களுக்கு உயர்ந்த கருத்துக்கள் அதிகம் தோன்றுவதில்லை. ஆகையால்தான் அவர்கள் சிறந்த கருத்துக்களை சொந்தமாகத் தெரிவிக்க முடிவதில்லை. தமிழ் பாஷை இப்போது விஞ்ஞானம், சரித்திரம் முதலிய துறைகளைப் பொறுத்தவரையில் போதிய வளர்ச்சி பெருததாக இருந்தாலும், அதை கல்வித் துறையில் உய்ர்ந்த ஸ்தானத்தில் வைத்துவிட்டால், நாளடைவில் அது வளர்ந்து அந்த இடத்திற்குத் தகுதியுடையதாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இந்த உயர்ந்த கருத்தை கனம் கல்வி அமைச்சர் பலருடைய எதிர்ப்பிற்குமிடையே தெரிவித்திருப்பது, மிகவும் போற்றத்தக்கது. இதுகுறித்து நாம் எல்லோரும் பெருமைப்படவேண்டும். உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த யாதாஸ்தை மனமார ஆதரித்து, என் உரையைப் முடித்துக் கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER:** The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

**The House then adjourned.**

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

**A. Statutory rules, orders and notifications.**

71. *Notification issued with G.O. No. 4585, Revenue, dated 12th December 1957 exempting certain varieties of cloth (other than cloth woven on handlooms), sugar, raw tobacco and varieties of manufactured tobacco from payment of sales tax.* [*Laid on the Table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939*]

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 11th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Smallpox*

* 14 *S.N.Q.*—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether smallpox is raging in Thuraiyur area in the Tiruchirappalli district;

(*b*) if so, the number of attacks;

(*c*) the number of deaths; and

(*d*) the remedial and preventive steps taken by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Only sporadic infection of smallpox is prevalent in Thuraiyur area;

(*b*) & (*c*) During the period from 12th November 1957 when the infection started to 22nd February 1958 there were 41 attacks and 11 deaths due to small-pox.

(*d*) In addition to the normal small-pox control work in the panchayat, the vaccination campaign in the affected area was intensified and 645 primary vaccinations and 6,873 re-vaccinations have been done. The Range Health Inspector, the Panchayat Sanitary Inspector and one Health Assistant are on small-pox duty. The District Health Officer, Tiruchirappali, had also visited the panchayat and issued instructions for small-pox control work. The situation is now well under control.

SRI M. D. THIAGARAJA PILLAI : இவ்வருஷம் அம்மை நோயானது மற்ற ஜில்லாக்களிலும் அதிகமாகப் பரவியிருப்பதால், அதிகச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களிலும் இந் நோய் பரவுவதைத் தடுக்க தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கு என்ன ஏற்பாடுகள் அரசாங்கம் செய்திருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மை குத்துகிற ஏற்பாடுதான் செய்ய வேண்டும். அம்மை நோய் எங்கெங்கே பரவும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறதோ அங்கெல்லாம் தடுப்பு நடவடிக்கைக்கான ஏற்பாடு செய்யப்படுகிறது.

[11th March 1958

SRI A. VEDARATHNAM : இதர இடங்களில் வைசூரி அதிகமாக ஏற்பட்டு, அதனால் உயிர்ச்சேதமும் ஏற்படுவதாக அரசாங்கத்திற்கு ஏதே னும் ரிபோர்ட் வந்திருக்கிறதா? அப்படியானால், எங்கிருந்து வந்திருக் கிறது? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : திருச்சி ஜில்லா வைப்பற்றிய கேள்வி இது. கனம் அங்கத்தினர் பொதுவாக கேட்கிறார். இருந்தாலும் பதில் சொலகிறேன். சில நாட்களுக்கு முன்னால், கன்யா குமரி ஜில்லாவில் இந்நோய் பரவியதைப்பற்றி கேள்வி வந்து அதற்குப் பதில் சொன்னேன். இன்னொரு நாள் வேறொரு பிராந்தியத்தைப்பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு பதில சொன்னேன். ஆகவே, பொதுவாகக் கேட்டால் சொல்ல முடியாது. குறிப்பாக ஏதாவது கேட்டால் சொல்லலாம்.

SRI K. VINAYAKAM : அம்மை நோயைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், அதைத் தடுக்க திரும்பவும் " அம்மை குத்துவது " என்பதினால், அம்மை நோய் மேலும் பரவிவிடாதா என்று கேடகிறேன். " அம்மை குத்துவது " என்றால் என்ன?

THE HON. SRI. M. A. MANICKAVELU : அதற்குச் சரியான தமிழ் தெரிய வில்லை. " வாக்ஸிநேஷன் " என்றுதான் சொல்லப்படுகிறது.

*Bifurcation of Coimbatore district*

MR. SPEAKER : The Hon. Member is not present. The answer will be printed in the proceedings.

* 15 *S.N.Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to bifurcate Coimbatore into two districts; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*National Extension Service, Lalgudi*

* 273 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount allotted for the Lalgudi National Extension Service Block for granting loans under the heads (1) Short term, (2) Minor Irrigation, (3) Takkavi and (4) Village House Construction and the amount of loan disbursed in 1957;

(*b*) how many applications for such loans have been received in 1957;

(*c*) how many of them have been sanctioned;

(*d*) why the other applications could not be sanctioned; and

(*e*) the steps the Government propose to take to make this scheme useful to the poorer and depressed section of the community?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) A statement [a] is placed on the table of the House.

(*d*) The Block was formed on 1st April 1957. Out of the total number of applications received till 31st December 1957,

[a] Printed as Appendix I on page 151 infra.



11th March 1958]

1,762 applications under the Agricultural Loans and Land Improvement Loans Acts were rejected during the year for various reasons, like want of adequate security, lack of bona fides, withdrawals, etc. Under Rural Housing, 593 applications were rejected for the following reasons :—

Some applicants possessed houses only in Natham porombokes which remain unsubdivided and could not furnish collateral security. In come cases, the applicants did not possess site for construction of houses.

(*e*) The rules governing the grant of loans under Community Development/National Extension Service schemes are being examined with a view to liberalise them to the extent feasible, so that the poorer classes, can also benefit.

SRI A. VEDARATHNAM : வீடு கட்டும் திட்டத்தில் 337 விண்ணப்பங்கள் வந்திருந்தும், அவைகளில் ஒன்று கூட அங்கீகரிக்கப்பட்டு, சாங்ஷன் செய்யப்படவில்லையென்பது ஏன் என்பதை தயவு செய்து மந்திரி அவர்கள் தெரிவிப்பாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry Sir, I don't have the reasons. The hon. Member wants to have the reasons, he may ask for them in a separate question.

*Elagiri and Javadi Hills*

* 274 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of villages in the Elagiri hills and Javadi hills in the North Arcot district;

(*b*) the population of those villages; and

(*c*) the names of the tribes living there?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) One village in Elagiri and 46 villages in Javadi hills;

(*b*) One thousand nine hundred and sixty in Elagiri and 23,130 in Javadi hills; and

(*c*) Kavakkattu Vellans in Elagiri and Malayalis in Javadi hills.

SRI V. K. KOTHANDARAMAN : ஹரிஜன க்ஷேமநல நிதியிலிருந்து மலை ஜாதியினருக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதல் கேள்வியில் எண்ணிக் கையைத்தான் கனம் அங்கத்தினர் கேட்டிருக்கிறார். அதற்குமேல் சொல்ல வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுவதற்கு சௌகரியமாக இருக்கும்.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that the Central Government have given a grant for laying up roads to Elagiri? If so, what is the present stage of the laying of the roads?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not have the information with me now.

SRI V. K. KOTHANDARAMAN : மலை மீது பழத் தோட்டங்களும் காப்பித் தோட்டங்களும் இருக்கின்றன. அந்த மலை மீது போவதற்கு பாதைகள் அமைப்பது மூலமாக மேலும் அந்தத் தோட்டக் காடுகளை அபிவிருத்தி செய்ய முடியும்? ஆகையால், சர்க்கார் அதற்கான ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி சில வகுப்பினர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதைப் பற்றியது. இதை வைத்துக்கொண்டு அந்தப் பகுதியிலே செய்யக்கூடிய எல்லா அபிவிருத்தி வேலைகளைப் பற்றியும் கேள்வி கேட்டால் என்றால் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது.

*Trench rollers*

* 275 Q.—SRI K. ANBAZHAGAN (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the total number of trench rollers with the Highways department;

(b) when they have been purchased and at what prices; and

(c) the number of days each roller has worked?

THE HON. SRI P. KAKKAN : (a) Four.

(b) July 1952 at Rs. 31,000 each.

(c) —

| | | | | |
|---|---|---|---|---|
| Roller number .. | 26-001 | 26-003 | 26-004 | 26-005 |
| Number of days worked. | 76 | 52 | 171½ | 3 |

SRI A. GOVINDASAMY : ஏராளமான தொகை போட்டு வாங்கிய இந்த ரோலர்கள் குறைந்த நாட்களுக்கு வேலை செய்திருக்கின்றன. இப்பொழுது அவைகள் வேலை செய்கின்றனவா அல்லது உடைந்திருக்கின்றனவா ?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு நாட்களுக்கு வேலைக்குத் தேவையாக இருக்கின்றனவோ அவ்வளவு நாட்கள் அவைகள் வேலை செய்கின்றன.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்த ரோலர்கள் வேறு திட்டங்களுக்காக கொடுத்து அதன் மூலமாக அந்த இலாகா மூலமாக ஏதாவது பிரயோஜனப்பட்டு வருகிறதா?

THE HON. SRI P. KAKKAN : இதர மாகாணங்களுக்கோ அல்லது சர்க்காரின் இதர இலாகாவின் வேலைகளுக்கோ தனிப்பட்டவர்களுக்கோ அவைகள் கொடுக்கப்படுவதில்லை. ஹைவேஸ் கண்டிராக்டர்களுக்கு மட்டும் ஹைவேஸ் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

SRI A. GOVINDASAMY : 1952-ம் ஆண்டில் வாங்கிய ரோலர்களில் ஒன்று 76 நாட்களுக்குத்தான் வேலை செய்ததாகச் சொல்கிறார்கள். சுமார் இரண்டரை மாதங்கள் வேலை செய்திருக்கின்றன. பாக்கி நாட்களுக்கு அந்த ரோலருக்கு வேலையே இல்லையா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.



*Tamil Nad Gazette*

* 276 Q.—SRI V. K. KOTHANDARAMAN AND SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to change the name "Fort St. George Gazette" as "Tamil Nad Gazette"?

THE HON. SRI V. RAMIAH : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : கெஜட்டில் வெளிவரும் விஷயங்கள் பூராவையும் தமிழில் கொண்டுவருவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMIAH : The hon. Member may put a separate question.

SRI S. B. ADITYAN : 'தமிழ்நாடு கெஜட்' என்று மாற்றுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லாமலிருந்தாலும் 'கோட்டை அறிக்கை' என்றாவது மாற்றக்கூடாதா ?

THE HON. SRI V. RAMIAH : 'கோட்டை அறிக்கை' என்றாலும், 'போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட்' என்றாலும், அதிகமான வித்தியாசம் இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, if it will not be possible to change the name of the gazette as "Tamil Nad Gazette", will the Government atleast consider the possibility of naming the Fort St. George Gazette as the Madras State Gazette because Madras is famous all over the world as was asserted some time back in the Cabinet?

THE HON. SRI V. RAMIAH : This question was recently considered and owing to the historical significance of the name, as the first gazette was published from the *Fort St. George*. The Gazette continues with the same name. Even now the principal offices of the Government continues to be in the place known as Fort St. George. I do not see any reason why we should change it now unless we shift our office to some other place.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழியாகிவிட்டது என்று கூறுகின்ற அரசாங்கத்தார் கெஜட் என்பதற்குப் பதிவு என்ற சொல்லை வைக்க மனம் இல்லாமல், வெள்ளையர்கள் காலத்தில் வைக்கப்பட்ட பெயரையே தொடர்வதற்கு ஏதேனும் காரணம் காட்ட முடியுமா ?

THE HON. SRI V. RAMIAH : கெஜட் என்ற பெயரைத் தொடர்ந்து வைப்பதற்கு எங்களுக்கு அதிகமான ஆசை கிடையாது. ஆனால் இவை எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அந்தப் பெயரே தொடர்ந்து இருக்கலாம் என முடிவுக்கு வந்திருப்பதால் பிறகு வேண்டுமானால் இதைப் பார்த்துக் கொள்ளலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பெயரும்கூட செயிண்ட் ஜார்ஜ் என்ற புனிதமான பெயராகவே இருக்கிறது. ஆகவே அதை மாற்ற யோசனை வேண்டாம்.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் சொன்ன பதிலிலிருந்து இந்தப் பெயரை ஏன் மாற்ற வேண்டும் என்கிறார்கள். முன்பு கோட்டையில் இருந்து நடந்த சர்க்காராக இருந்ததால் கோட்டையில் இருந்து வெளிவரும் அறிக்கையாக அது இருந்தது. இப்போது

சர்க்காரின் விஸ்தீர்ணம் கோட்டைக்கு அப்பாலே விரிந்துவிட்டது. இப்படி எல்லாம் மாறிவிட்ட பிறகு அந்தப் பெயரையும் மாற்றுவதில் என்ன கஷ்டம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பெயரை வைத்துக்கொள்வதனால் நம்முடைய அந்தஸ்து குறைவதும் இல்லை. அதனால் அந்தஸ்து கூடுவதும் இல்லை. சில பேருக்கு பெயரை மாற்றுவதனால்தான் ஏதோ பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு விடுவதுபோன்ற அபிப்பிராயம் இருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணத்தினால் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறவரையில் பெயர் மாற்றுவதை ஒதுக்கி வைப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : சென்னை ராஜ்யத்திலிருந்து ஆந்திரா, கேரளம், கன்னடம் எல்லாம் மொழிவழியாகப் பிரிந்த பிறகு ஒன்றாக இருந்த காலத்தில் வெள்ளையர்களால் கொடுக்கப்பட்ட போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட் என்று கொடுக்கப்பட்ட பெயரை மாற்றியமைக்க என்ன தயக்கம் என்று கேட்கிறேன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பு சொன்னது போல இந்தப் பெயர் புனிதமான பெயராக இருக்கிறதே தவிர இந்தப் பெயரில் தவறு ஒன்றும் இல்லை.

என்று ஒரு '**provision**' இருப்பதாக நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகையால் நாம் இதை வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் சர்வ கட்சி கூட்டத்தில் சொன்னார்கள். அதனால் நாங்கள் விட்டுவிட்டோம். 344-வது ஆர்டிகலையும் மாற்ற வேண்டும். 10 வருஷத் திற்கு ஒரு முறை ஒரு கமிஷன் ஏற்படுத்தினால் அது நியாயமாகாது. எப்போது இந்தி ஆட்சிமொழியாக வர வேண்டும் என்பதை எதிர்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th March 1958

காலத்தில் சிந்தித்துப் பார்த்து முடிவு செய்யவேண்டும். '**Posterity alone will have to decide.**' கமிஷன் கூடாது என்பதை சர்வ கட்சி மூலமாக சொல்லவில்லை என்பதை நான் இந்த சபை முன்பு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (இப்பொழுது உதவி சபாநாயகர் தலைமை வகித்தார்.) காங்கிரஸ் சீர்த்திருத்தக் கமிட்டி மாகாநாடு நடந்தபோது இதைப்பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது :—

"இந்தியா ஒரே சமுதாயமாக இருக்க சட்ட பூர்வமான ஒரு பொது மொழி இருப்பது அவசியம். அதற்கு இந்தியே உரிய மொழி என்பது உலகமறிந்த உண்மை. ஆனால் நாம் ஏற்கனவே கூறியபடி இன்னும் தேசத்தில் சமுதாய உணர்வு வளரவில்லை. இது மிக நெருக்கமாக வளரும்வரை பிராந்திய நலன்கள்தான் தலைதூக்கி நிற்கும் என்பதை ஏற்கவேண்டும். எனவே தேசிய மொழி என்பது பலதரப்பட்ட பிராந்திய மக்களாக பார்த்துத் தாங்களாகவே ஏற்படுத்தவேண்டும் ஒழிய சர்வ வல்லமை பொருந்தியதாகக் காட்சியளிக்கும் மத்திய சர்க்கார் அதை மக்கள்மீது திணிக்கக்கூடாது. அப்படித் திணித்தால் பரஸ்பர சந்தேகங்களும், ஆச்சரியங்களும்தான் வளர முடியும். எனவே, பிராந்திய மொழிகளே ராஜ்யங்களில் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டும்."

அதே சமயத்தில் மகாநாட்டின் தலைவர் சொல்லியிருப்பதையும் இங்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

"இந்தியாவுக்கு பொது மொழி வேண்டுமென்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. இதற்கு இந்தியே பொது மொழியாக இருப்பதில் எங்களுக்கு விரோதமில்லை. ஆனால் இந்தியை எப்படி புகுத்துவது. சில இந்து வெறியர்கள் உடனடியாக அதை புகுத்தவேண்டும் என்கிறார்கள். அரசியல் அமைப்பிலே 1965-ம் வருஷத்திற்குள் இந்தியை அரசாங்க மொழியாக்க வேண்டுமென்றிருக்கிறது. 1965-ம் ஆண்டென்ன. அதற்கு முன்பே அதை புகுத்திவிடுவோம் என்று ஒரு மந்திரி பார்லிமெண்டில் கூறுகிறார். அந்த மந்திரி நாட்டில் நிலவரத்தை அறியாதவர் என்பதே என் அபிப்பிராயம். எனெனில். அவ்வளவு சுலபமாக இதை செய்யமுடியாது. இதர மொழிக்காரர்களின் உணர்ச்சிகளை மதித்து நடக்க வேண்டும். அதிகாரம் கையிலே இருக்கிறது. ஆகவே நினைத்தபடி செய்ய முடியுமென்றால் அது இந்த நாளில் தமிழ் நாட்டில் நடக்காது என்பதை அவர்களுக்கு எச்சரிக்க விரும்புகிறேன். இந்தியை இன்னும் 50 வருஷத்திற்கு பொது மொழியாக ஏற்பதற்கில்லை. இதற்கு இரண்டு காரணங்கள். முதல் காரணம் இந்தி மொழியே இன்னும் வளரவில்லை. பக்குவமடையவில்லை. அது வளர்ந்து பக்குவம் அடைவதற்கு குறைந்த பட்சம் 50 ஆண்டுகளாவது ஆகும். ஆகவே இன்னும் 50 ஆண்டுகளுக்கு இப்போதுள்ள ஆங்கிலம் அரசாங்க மொழியாக இருக்கலாம்."

சர்க்கார் அனுப்பியிருக்கும் யாதாஸ்தில் concluding paragraph-ல் '**The conclusions and recommendations of the Official Language Commission are unacceptale**' என்று சொல்லப்படுகிறது.

'**Language in schools**' என்பதன் கீழ் '. . . **attention is drawn to the fact that the Commission does not recommend a three-language formula for secondary schools in the Hindi region; and the conclusion is drawn that the Government of India should be guided primarily, if not exclusively, by public opinion in non-Hindi regions in settling the basis of a co-ordinated policy and leave the detailed execution of policy in the educational field to the good sense of the State Governments and Legislatures concerned**' என்று போடப்பட்டிருக்கிறது.



11th March 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

'State Language'—என்ற தலைப்பின் கீழ் 'The Government of Madras consider that it is neither necessary nor proper that the laws of the State should be required to be made in [illegible]nguage which is different from the official languag[illegible] the State' [illegible] குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'**Language in Courts**' என்[illegible]பாரா[illegible]வில் '. . . do not agree and suggest that the Government [illegible] India should make a [illegible]ration of policy to the effect that if and when the language of the H[illegible] Court is changed, the official language [illegible] the State should be als[illegible] official language of the High Court' எ[illegible] கூறப்பட்டிருக்கிறது.

61233

'**Language in offices**' என்[illegible]ம்போது 'The Go[illegible]rnment of Madras take the view that there [illegible] no reas[illegible] doubt in the mind of anyone who has grasped th[illegible] practical [illegible]cations of the transition from English to Hindi that 26th [illegible] 1965 is an utterly impossible date line' . . . என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன் போஸ்ட் அண்டு டெலிகிராப்ஸ் உத்தியோகஸ்தர்களை சந்தித்துப் பேசுகின்றபோது, நான், இந்த மணியார்டர் பாரங்களிலும் கார்டுகளிலும் ஏன் இந்தி புகுத்தப்பட்டிருக்கிறது என்று கேட்ட சமயத்தில் அதற்கு யூனியன் 'மினிஸ்டிரி' காரணம் அல்ல என்றும், இதற்கு முன்பு இருந்த 'டைரக்டர் ஜெனரல் ஆப் போஸ்ட் அண்டு டெலிகிராப்ஸ்' காரணம் என்றும் இதை மாற்றுவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றும், சீக்கிரமே உத்திரவு வந்துவிடும் என்று கூறியதைக்கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டேன் இன்று மணியார்டர் பாரங்களில் இந்தி இருப்பதின் காரணத்தால், பல மணியார்டர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். அதனால் பல கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இந்த விஷயத்தில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

ராஜாஜியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். "இந்தி கற்றுக்கொள்வதில் எந்த விதமான ஆட்சேபனை இல்லை என்றும் அது 'பிஸினஸ் லாங்குவேஜ்' ஆகத்தான் இருக்குமே ஒழிய ஆட்சி மொழியாக இருக்க முடியாது என்றும்" அவர் சொல்கிறார். ஆங்கிலமும் இந்தியும் இரண்டும் ஆட்சிமொழியாக இருக்கலாம் என்று யாதாஸ்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தி மட்டும் ஆட்சி மொழியாக இருக்கக்கூடாது என்று நாங்கள் யாதாஸ்தில் வற்புறுத்தி இருக்கின்றோம். காங்கிரஸ் சீர்த்திருத்த கமிட்டி மகாநாட்டில் நிறைவேறின தீர்மானத்துக்கும், இந்த யாதாஸ்தில் சொல்லியிருப்பதற்கும் அதிக வித்தியாசம் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தி திணிப்பை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் கிளர்ச்சிதான் ஏற்படும். நாம் ஒவ்வொருவரும் மூன்று மொழிகளைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று ராஜேந்திர பிரசாத் கூறியிருக்கிறார்கள், அதாவது, வடக்கே இருப்பவர்கள், தெற்கே உள்ள ஒரு மொழியையும், தெற்கே உள்ளவர்கள் வடக்கே இருக்கும் ஒரு மொழியையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். மொழியை கற்றுக் கொள்வதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் தெற்கே உள்ளவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்திச் சொல்வதைப் போல் அவர் அங்கு இருப்பவர்களுக்கு 'எம்பசைஸ்' செய்யவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

குறைந்தது 50 வருஷமாவது இந்தி திணிப்பதற்கு ஆகும் அந்த மகாநாட்டுக்கும் இதற்கும் வித்யாசம் இல்லை என்பது தான். அந்த வித்யாசம் 1965-ம் வருஷம் வரையில் இருக்கக்கூடாது என்று அந்த அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக பார்லிமெண்டைப்பற்றி சொல்லப்படுகிறது : " **The Commission's views are accepted. The need for legislation under Article 120 (2) of the Constitution is pointed out. One suggestion is repeated that arrangements should be made in Parliament for simultaneous translation from Hindi to English and vice versa.**"
மேல நாட்டில் என்ன செய்திருக்கிருர்கள். உலக ரீதியில் நடக்கும்
நடவடிக்கைகளையெல்லாம் சைமல்டேனியஸ் முறையில் மொழி பெயர்க்கப்
பட்டு வருகிறது. அதைப் போலவே இங்கும் சைமல்டேனியஸ் மொழி
பெயர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதை
யும் நாம் ஒப்புக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கிரேும். இப்பொழுது
இதற்கு ஒரு பார்லிமெண்ட் கமிட்டியை போட்டிருப்பதன் காரணம்
அந்த யாதாஸ்தை அங்கு அனுப்பி வைத்து அங்கு இதை அவர்கள்
பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படி அவர்கள்
இதை பரிசீலனை செய்து நமக்கு ஒரு நல்ல உத்தரவை பிறப்பிப்பார்கள்.
அதன் பிறகு இதை மறுபடியும் பார்லிமெண்டின் முன்னதாக வைப்பார்
கள். அங்கு இதைப்பற்றி விவாதம் நடக்கும். அங்கு இதைப்பற்றி நன்கு
பரிசீலனை செய்வார்கள். கடைசியாக நான் சொல்லிக்கொள்வது என்ன
வென்றால் சர்வ கட்சிக் கூட்டத்தில் போட்ட அந்த ஆட்சி மொழி கமிஷன்
யாதாஸ்தை, அதில் நடந்த விவரம் பூராவையும் நாங்கள் ஒப்புக்கொள்ளு
கிறேம். அதைப்பற்றி வேறுபட்ட அபிப்பிராயம் இல்லை என்பதை
சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

9-42 a.m. *Sri K. ANBAZHAGAN : மதிப்பிற்குரிய மன்றத் துணைத் தலைவர்
அவர்களே, ஆட்சி மொழி பிரச்னையானது இன்றைய தினம் மிக மிகச்
சூடான சூழ் நிலையில் விவாதிக்கப்படுகிறது என்பதை முதன் முதலில்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சூடு குறைந்திருக்கிறது என்று
சிலர் கருதலாம். அவர்களைப்பற்றி என்ன நினைப்பது என்று ஐயுறு
கிறேன். அவர்கள் நிலை எப்படியுள்ளது என்று பார்த்தால் சூடு உள்ள
வர்களுக்குத்தான் நிச்சயமாக அந்தப் பிரச்னையிலுள்ள சூடு தெரியும்;
இல்லாதவர்களுக்குச் சூடு தெரியாது என்பதாகத்தான் சூடு உள்ளது
என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏன் இந்தப் பிரச்னையில்
சூடு இருக்கிறது என்றால் இந்த நாட்டில் இந்தியை நுழைப்பதற்கு
1937-ம் ஆண்டிலிருந்தே ஓர் எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்து வந்து, இன்
றையதினம் அந்த எதிர்ப்பு உணர்ச்சி சுப்பிரமணியம் அவர்களைக்கூட
ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது— தவறாகச் சொல்லி விட்டேன்—மன்
னிக்க வேண்டும்—கனம் சுப்பிரமணியம் அவர்களைக்கூட உள்ளாக்கிக்
கொண்டிருக்கிறது. அப்படி உள்ளாக்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தால்
தான் கனம் சுப்பிரமணியம் அவர்கள் எல்லாக் கட்சியைச் சார்ந்த தலை
வர்களையும் அழைத்து, ஒரு ஆய்வுக் குழு போலக் கூட்டி சில முடிவுகளை
மேற்கொண்டு மத்திய சர்க்காரின் ஆலோசனைக்கு அனுப்புவதற்குத் தயா
ராக முன்வந்தார். தவிர 1957–58-ம் ஆண்டிலுள்ள இதே கனம் சுப்பிர
மணியம் அவர்கள் 1947–48-ல் இந்த உணர்ச்சிக்கு உள்ளானவராக இருக்க
வில்லை; 1937–38-ல் இந்த உணர்ச்சியை உணருவதற்குக் கூட காங்கிர
சுக்கோ, கனம் சுப்பிரமணியத்திற்கோ இந்நாட்டிலே இருந்த போதிலும்;
வல்லமையோ, வாய்ப்போ இல்லை. அந்த அளவுக்கு இந்தப் பிரச்னை
இன்று வளர்ந்திருக்கிறது. வளர்ந்த பிரச்னையாகி எல்லோருடைய கண்
ணையும், கருத்தையும் கவரக்கூடிய நிலைமையைப் பெற்றுவிட்டது. முன்
நாட்களிலேகூட ஆட்சி மொழியாக இந்தி மொழியே கொண்டு வரப்படும்
என்ற கருத்துக்கூட நீண்டகாலம் வரை தெரிவிக்கப்படவில்லை. காந்தி
ஜியின் தலைமையில் காங்கிரஸ் இயக்கம் நடந்த காலத்தில் 1931-ம்
ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி இந்தி, உருது, ஆகிய இரண்டு
மொழிகளுக்கிடையே சமரசமாக இந்துஸ்தானியையே ஆட்சி மொழியாகக்
கொண்டு வரலாம் என்று காந்திஜி கருதினர். அந்தக் கருத்து 1931-ம்





ஆண்டில் தீர்மானமாகவே நிறைவேறியது. அதனால் இந்துஸ்தானியானால்
நான் ஏற்றுக்கொள்வேன் என்பது அல்ல. நான் இளம் வயதில் படித்
துக்கூட இருக்கிறேன், ஆனால் அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.
அதற்குக் காரணம் வட நாட்டிலிருந்து வருகிற எந்த மொழியும் தமி
ழுக்கு தீமையைமட்டுமே விளைவித்திருப்பதாக வரலாறு இருக்கிறது. தவிர
தமிழுக்கு நன்மை செய்ததாக வரலாற்றில் இருப்பதாக மொழி நூல்
ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் மட்டுமல்ல, அரசியலில் உள்ளவர்களேகூட
உண்மையாகவே, மனம் அறிந்து கூற முடியாது. அந்தத் தீமையை
உணர்ந்த தமிழ் அறிஞர்கள்தான் முதன் முதலாக இந்தி புகுத்தப்பட்ட
போதே எதிர்ப்பு தெரிவித்தார்கள். வடநாடு பெற்றிருக்கும் செல்வாக்கால்,
காங்கிரசு கட்சிக்கே வட நாடு தலைமைப் பீடமாக அமைந்திருப்பதால்,
இந்தி மொழி ஆட்சி மொழி என்ற பெயரில் நுழைந்தது. வட நாட்டு
மொழிகள் தமிழர்கள் மீது பல காலங்களில் திணிக்கப்பட்டு தமிழுக்குக்
கேடுகள் விளைவித்து வந்திருக்கின்றன. நமது தமிழ், பல காலமாகவே
வட மொழிக்கு இரையாகி, உருது மொழிக்கும் சிறிதளவு இரையாகி,
இசைத்துறையில் தெலுங்குக்கு இரையாகி, ஆண்டவன் வழிபாட்டுக்கும்
வடமொழிக்கே இடம் விட்டு வெளியேற நேர்ந்துவிட்டது. இப்படிப்பட்ட
வரலாற்றுக் கருத்துக்களை உணர்ந்த காரணத்தால் மறுபடியும் வட நாட்டு
மொழியான இந்திக்கு இடம் தருவது தமிழுக்குக் கேடு பயக்கும் என்று
மொழித் துறை ஆராய்ச்சியாளர்கள் முதன் முதலாக இந்திக்கு எதிர்ப்பு
எழுப்பினர்கள். அந்த எதிர்ப்பு, இந்தியைக் குறித்து மறைமலையடிகள்
முதலான பெரியார்கள் கூறியவாறு, தமிழ் நாட்டில் தோன்றி, அந்த
எதிர்ப்பு இன்று பெரு நெருப்பாக வளர்ந்திருக்கிறது. இந்தி எதிர்ப்பை
நாட்டில் மொழி அறிவு பெற்ற அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளக்
கூடிய நிலைமை வளர்ந்து, எல்லா இயக்கங்களுமே இந்தி மொழி பற்றிய
அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இன்று தோன்றி
இருக்கின்றது. அதனால்தான் அந்த பிரச்னைக் குறித்து, கேர் குழுவினர்
(கமிஷன்) அறிக்கை நமக்குக் கிடைத்த பின்னர் அதனால் ஏற்பட்டுள்ள
நிலைமை, இந்தி எதிர்ப்பைப் பலப்படுத்தும் என்ற காரணத்தால், காங்கிரசு
செல்வாக்கை ஒழித்துவிடும் என்ற காரணத்தால், இந்நாட்டு ஆட்சியாளர்
அந்த எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது என்ற காரணத்தால், அந்த கேர்
கமிஷன் அறிக்கைக்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கவேண்டிய அவசியம்
இந்நாட்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் நல்லெண்
ணத்தைக்கூட நான் மறுக்கமாட்டேன். ஆனால் உண்மை நிலைமையை
விளங்கிக்கொள்ள முடியாமல் செய்வதை ஒரு அரசாங்கத்தினுடைய திற
மைக்கு அடையாளம் என்று நான் கருத மாட்டேன். அரசாங்கத்தி
னுடைய நல்லெண்ணப்படியே, தமிழ் இந்நாட்டில் தகுந்த உயர் நிலை
பெறுவதற்கு இந்தி இடையூறாக இருக்கும் என்று கருதித்தான், முதற்
படியாக கேர் குழுவினர் (கமிஷன்) இங்கு வந்த போதே அதற்கான வேண்டு
கோளை சென்னை அரசாங்கம் அக்குழுவினரிடம் தந்திருக்கிறது. அதற்காக
நன்றி செலுத்துகிறேன்.

தமிழைப் பொறுத்த வரையில் கனம் சுப்பிரமணியம் அவர்கள்
முன்னாள் அமைச்சர் அவனாசிலிங்கம் அவர்கள் சென்ற வழியிலேயே
செல்வதை நான் பாராட்டுகிறேன். அந்தத் தமிழ்ப் பற்றோடு அவர் தெரி
வித்த கருத்து, கேர் கமிஷனால் நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளப்படாத
காரணத்தால், அந்தந்த வட்டார மொழிகள் தலையெடுக்கக்கூடிய அள
வுக்குக்கூட நியாயத்தை இந்தக் கமிஷன் ஏற்க மறுத்த காரணத்தால்,
அக்குழுவினர் வட நாட்டு வல்லரசின் ஏஜெண்டுகளாக இருந்த காரணத்
தால், மத்திய அரசாங்கத்தின் சார்பில் இந்தி திணிக்கப்படுவதைத் தடுக்க
வழிவகை செய்யாத காரணத்தால், கேர் குழு முடிவுகளை எதிர்ப்பதற்கு
ஒரு வழி காணவே கனம் சுப்ரமணியம்—சர்வ கட்சித் தலைவர்களையும் கூட்டி
ஆலோசிக்க முன் வந்தார். அமைச்சர் அவர்கள் தம்முடைய வல்லமை
யைக் கொண்டே குறிக்கோளை எய்த முடியாத நிலையில், காங்கிரசு, ஒரு
தனி கட்சியாக நின்று இதைச் செய்ய முடியாத காரணத்தால், எல்லா
கட்சிகளுடைய ஆதரவையும் பெறுவதற்கான முறையில் சர்வ கட்சித் தலை

வர்கள் கூட்டத்தை நடத்த வேண்டிய அவசியம் கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டது. கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு அப்படிப் பட்ட ஒரு நல்லெண்ணம் தோன்றியது என்பதற்காக நான் மகிழ்கிறேன். அந்த நல்ல நோக்கம் இடையே முறியாமல் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய திறமை கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு இருந்ததா என்பதையே ஐயுறுகிறேன். சர்வக் கட்சிக் கூட்டம் ஏற்படுவதற்கு முன்னால், இதே சட்ட மன்றத்தில் இந்தி மொழிப் பிரச்னையைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டபோது, கனம் நிதி அமைச்சர் அவர்கள், "கட்சிகளுடைய கருத்துக்களை தெரிவித்துக்கொள்வதற்கு அவசரப்படலாகாது. இந்தப் பிரச்னையை ஆளுக்கு ஆள் பேசிக் குழப்பா மல், அமைதியான சூழ்நிலையில் ஒரு பொதுவான உடன்பாடு ஏற்படு வதற்கு முயற்சிப்பேன். அப்பொழுது தலைவர்களிடையே ஏதாவது கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு முடிவான கருத்தைத் தெரிவிப்பதற்கான அளவிற்காவது ஓர் உடன்பாடு காண்பேன்" என்று. தெரிவித்தார். அந்தக் கருத்தின்படியேதான் திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பில், தலைவர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டாரே தவிர அந்தக் கருத்து கனம் நிதி அமைச்சர் அவர்களிட மிருந்து வராமல் இருந்திருக்குமேயானால், இந்த அரசாங்கத்தைச் சார்ந்த வர்களில் எவராயினும் தனிப்பட்ட முறையில் இந்தப் பிரச்னையை தீர்க்க அழைத்திருந்தாலும் "உங்களுடைய பிரச்னையை நீங்களே தீர்த்துக்கொள் ளுங்கள்" என்று தான் சொல்லியிருப்பாரேயொழிய இதில் கலந்து கொள்ள இசைந்திருக்கமாட்டார். அவர் தெரிவித்த நல்லெண்ணத்தை அடிப்படையாக வைத்து, இந்திக்கு எதிர்ப்பு தெரிவிக்கவே கனம் நிதி அமைச்சர் அவர்கள் வழி காண முயற்சிக்கிறார்கள் என்ற கருத்தில் நாங்க ளும் அதில் கலந்து கொண்டோம். வேண்டாத இந்தியைப் புகுத்து வதாகிய, படரும் ஆலமரத்தின் கிளைகளை ஒவ்வொன்றாக வெட்ட வேண்டும் என்பதற்காகத்தான் எல்லா கட்சித் தலைவர்களையும் அழைத்திருப்பதாக நாங்கள் கருதியே அதில் சேர்ந்துகொண்டோம். கிளைகள் பலவும் வெட்டப் பட்ட பின்னர் சமயம் வந்தபோது அதன் வேரையும் வெட்டி வீழ்த்திக் கொள்ளலாம் என்று நினைத்து, இந்த எண்ணத்தில் நாங்கள் சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்க, கனம் நிதி அமைச்சர் அவர்கள் பின்னர் டில்லிக்குச் சென்றபோது எல்லாக் கட்சிகளும் இதற்குத் தங்க ளுடைய ஆதரவைக் கொடுத்திருக்கின்றன, திராவிட முன்னேற்றக் கழகத் தின் ஆதரவும் இதற்குண்டு என்று தெரிவித்திருக்கிறார். அப்பொழுது கூட ஒரு நல்லெண்ணத்துடன் தான் அவர் இதைத் தெரிவித்திருக்கிறார் என்று நினைத்துக்கொண்டு இருந்தோமே தவிர வேறு விதத்தில் நினைக்க எங்களுக்கு எந்த விதத்திலும் சிறு சந்தேகமும் ஏற்படவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் அங்கு தி.மு.க. தலைவர் அண்ணா அவர்க ளுடைய ஆதரவையும் பெற்றிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்.

அப்படித் தெரிவித்ததனாலேயே—நிதி அமைச்சர் அவர்களைப்பற்றி வட நாட்டுத் தலைவர்களும் பிறரும் கொண்டிருந்த சந்தேகம் வலுப்பட லாயிற்று. அவர்கள் சந்தேகம் கொண்டிருந்ததற்குக் காரணம், முன்னர், சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றிய விவாதம் நடைபெற்று— அதற்குப் பதிலளித்தபோது நிதி அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சுத்தான். அப்பொழுது, நிதி அமைச்சர், அண்ணா அவர்களை நோக்கிக் கூறினார், "நீங்கள் திராவிட நாடு கிளர்ச்சியை ஒரு பத்து ஆண்டு காலத்திற்கு ஒத்திவையுங்கள்" என்று. பத்திரிக்கைகளெல்லாம், "தி.மு.க.வுடன் பத்து ஆண்டு கால ஒப்பந்தம்"—"**Ten years truce with D.M.K.**" என்ற தலைப்புடன் அப்பேச்சை வெளியிட்டிருந்தன. அதனால்தான், வட நாட்டவர்க்கு, நிதி அமைச்சர் சுப்ரமணியம் திராவிட நாட்டை மறை முகமாக ஆதரிக்கிறார், தி.மு.க.வுடன் உறவாடுகிறார், பிரிவினையை ஏற் கிறார் என்ற எண்ணமும், அதனால் வெறுப்பும் ஏற்பட்டு, அந்நாட்டுப் பத்திரிகைகள் அவரைக் கண்டித்தே எழுதியிருந்தன. அதே மனப் போக்குடன் நிதி அமைச்சருடன் பேசிய நிருபர்கள், தி.மு.க.-வுடன்



சேர்ந்துதான் நிதி அமைச்சரும் "இந்தியை" எதிர்க்கின்றார் என்று எண்ணலாயினர். இயற்கையும் அதுதான். அந்த நிலைமை ஏற்பட்டதற்கு பின்னர்தான் சென்னை திரும்பிய நிதி அமைச்சர் தென் நாட்டிலே உள்ள பத்திரிகை நிருபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு கேள்விகேட்ட நேரத் திலே, தம்மைப்பற்றிய சந்தேகச் சுழலிலே இருந்து எப்படித் தப்புவது என்று எண்ணிய நிதி அமைச்சர் அவர்கள் "அண்ணாதுரை இந்திக்கு ஆதரவு தெரிவித்தார்" என்று சொல்லிவிட்டார். நடைபெற்றவற்றை அடிப்படையாக வைத்துத்தான் கூறுகின்றேன். இந்திக்கு ஆதரவு அளிக்க வேண்டிய அவசியம் அண்ணாதுரைக்கு ஒருநாளும் ஏற்படவில்லை. இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளருக்கு வேண்டுமெனில் அந்த நிலைமை ஏற்பட் டுள்ளது. இந்தி என்ற கருங்கல் தலையில் சுமத்தப்பட்டது. தலையிலே உள்ள கருங்கல்லைக் கீழே இறக்குவதற்கு அண்ணாதுரை அவர்களை துணைக்கு அழைத்தார்கள். மற்ற எதிர்க்கட்சியினரையும் துணைக்குக் கூப்பிட்டார்கள். அப்படி எல்லோரையும் துணைக்கு கூப்பிட்டுவிட்டு, தலை யிலே உள்ள கல்லைப்பற்றிய உணர்ச்சி இல்லாமல், அண்ணாதுரை இந்திக்கு அந்தக் கல் தலையிலேயே இருக்க ஆதரவு கொடுத்தார் என்று சொல்லி விட்டார்கள். அதுதான் இந்தச் சூடான சூழ்நிலைக்குக் காரணம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் எந்த இடத்திலும் அண்ணாதுரை இந்திக்கு ஆதரவு அளித்தார்களா, எதிர்ப்பு அளித் தார்களா என்பது பற்றி பேசவில்லை. இந்த யாதாஸ்துக்கு அவர்கள் ஆதரவு கொடுத்தார்கள் என்றுதான் சொன்னேன்.

*SRI K. ANBAZHAGAN: நிதி அமைச்சர் அவர்கள் இப்பொழுதே னும் விளக்கம் தந்ததற்கு நான் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரி வித்துக்கொள்ளுகிறேன். இந்த யாதாஸ்திலே இருக்கிற ஒவ்வொரு பகுதி யையும் நான் பின்னர் படித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். அதிலே இருக்கிற ஒவ்வொரு பகுதியும் இந்தி நுழைப்புக்கு சிறிதேனும் எதிர்ப் பைத்தான் தெரிவிக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நிகழ்ச் சியைப் பற்றிச் சொன்னார்கள். அவர் "அய்யம்பேட்டை விவகாரம்" என்று குறிப்பிட்டார்கள். நிதி அமைச்சர் அவர்கள் "கும்பகோணம்" வேலை செய்ததால்தான் அய்யம்பேட்டை வேலை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கும்பகோணமும், அய்யம்பேட்டையும் பக்கம் தான். "கும்ப கோணம்" நிகழ்ந்ததால்தான், "அய்யம்பேட்டைக்குப்" போனால் தான் பிரச்னை தீரக்கூடும் என்ற நிலைமை ஏற்பட்டது.

SRI A. VEDARATHNAM: கும்பகோணம், அய்யம்பேட்டை என்ற பதங்களை இங்கே உபயோகப்படுத்துவது சரிதானா? தலைவர் அவர்கள் தீர்ப்பு அளிக்கவேண்டும்.

DEPUTY SPEAKER: தயவுசெய்து அங்கத்தினர் விளக்கட்டும்.

SRI K. ANBAZHAGAN: தவறுதலாக இருந்தால் நான் வருத்தம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு கருத்தைப்பற்றி "பாயிண்ட் ஆப் ஆர்டர்" எழுப்புவது என்றால் அந்தக் கருத்து முதலிலே கூறப்பட்ட நேரத்திலேயே எழுப்பியிருந்தால் அப்பொழுது நான் அதற்கு நன்றி செலுத்தியிருப்பேன். ஆனாலும் கருத்து விளக்கம் எப்படியோ ஏற்பட்டு விட்டது பற்றி நான் மகிழ்கின்றேன். இந்த யாதாஸ்திற்குத்தான் அண்ணா துரை ஆதரவு கொடுத்திருக்கிறார் என்றுதான் சொன்னதாக அமைச்சர் சொன்னார்கள். அந்த யாதாஸ்து முழுவதையும் ஒவ்வொரு பகுதியாகப் படித்துப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். இந்தியை ஆதரிப்பதாக இந்த யாதாஸ்தில் எந்த இடத்திலாவது கூறப்பட்டுள்ளதா என்பதை, அருள்கூர்ந்து தமது வாதத்தில் எடுத்துக் காட்டவேண்டும் நிதி அமைச்சர் அவர்கள். எந்த இடத்திலும் இந்திக்கு ஆதரவு கொடுப்பதாகச் சொல்லப்படவில்லை. சில இடத்தில் இந்தி நுழைவை எதிர்ப்பதாகவே

தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் படித்துக் காட்டுவேன். பல பகுதியிலும்
ஆங்கிலத்தை தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.
ஒரு இடத்தில் கூட, இந்தியை பரப்புவதற்கு வழி கூறப்படவில்லை, வசதி
செய்யவில்லை, அதை ஏற்றுக்கொள்வது என்ற செய்திக்கு இடமில்லை.
யாதாஸ்தில் முதல் பகுதியிலேயே கேர் கமிஷன் அறிக்கை வெளி வந்த
வுடனேயே இந்த நாட்டிலே பெரிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று
குறிப்பிடப்படுகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அண்ணாதுரை
அவர்கள் இந்திக்கு ஆதரவு அளித்திருக்கிறார்களா, எதிர்ப்பு தெரிவித்
திருக்கிறார்களா என்பது பிரச்னை அல்ல. நான் ஏதாவது தவருகச்
சொல்லியிருந்தால், அதைச் சுட்டிக்காட்டினால் நான் வாபஸ்
வாங்கிக் கொள்ளுவதற்குத் தயார். இந்த யாதாஸ்திற்கு ஆதரவு கொடுத்
ததை அவர்கள் ஒப்புக்கொள்வதாயிருந்தால், வேறு விவாதம் வேண்டிய
தில்லை. நான் ஏதாவது தப்பு அர்த்தம் கொள்ளும்படி பேசியிருந்தால்,
அதை எடுத்துக் காட்டினால் நான் திருத்திக்கொள்ளுகிறேன். இந்திக்கு
அண்ணாதுரை ஆதரவு அளித்தார்கள் என்ற தவருன கருத்து தோன்றி
ணல் அதற்கு விளக்கம் தெரிவிக்கட்டும். இப்பொழுது இந்தியை ஆதரிப்
பதா, எதிர்ப்பதா என்பது பிரச்னை அல்ல. யாதாஸ்தை ஒப்புக்கொள்ளு
வதாகச் சொல்லுகிறார்கள். இந்த யாதாஸ்தை ஒப்புக்கொண்டால் போதும்.
அதற்குமேல் ஒன்றும் வேண்டாம்.

SRI K. ANBAZHAGAN : நிதி அமைச்சர் விளக்கம் கொடுத்தது
பற்றி நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அண்ணாதுரை அவ்வாறு
தெரிவித்ததாக தான் தெரிவிக்கவில்லை என்று இப்பொழுது தரப்படும்
விளக்கம் முன்பே ஏற்பட்டிருக்கவேண்டும். இந்த அறிக்கையை அண்ணா
அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையிலும் எந்த இடத்
திலும் இந்த யாதாஸ்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அண்ணா
அவர்கள் சொல்லியதில்லை. இந்தப் பிரச்னை எப்படி ஏற்பட்டது? ஒருவேளை
யாதாஸ்தை நீ படித்துப் பார்க்கவில்லை என்று நிதி அமைச்சர் அவர்கள்
சொல்லக்கூடும். நான் சிறிது அளவு படித்திருக்கிறேன். நான் படித்த
அளவில் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்ட கருத்துக்களை பொது
உடன்பாடு (ஜெனரல் அக்ரிமெண்டு) என்று சொல்லக்கூடிய அளவுக்கு
அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் ஏற்றுக்
கொண்டிருக்கிறோம். இதிலே சில கருத்துக்களில் ஒவ்வொரு கட்சிக்கும்
சிறு சிறு வேற்றுமைகூட இருக்கலாம், அதனால் தமது கட்சிக் கொள்
கையை விட்டுவிட்டதாகப் பொருளல்ல என்று நிதி அமைச்சர் அவர்கள்
கட்சி கூட்டத்திலேயே தெரிவித்திருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில்,
மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்
பதற்காகவே நடந்த அக்கூட்டத்தில் " அரசியல் சட்டத்தை மாற்றுவது
எளிதல்ல என்பதாலும், நம்மாலே அதை வலியுறுத்த முடியாத
சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேயும், அரசியலமைப்புச் சட்டத்தில்
இடம் பெற்றுள்ள கருத்துக்களையே வைத்துக்கொண்டு, அதற்கு ஒரு
(இன்ஸ்ட்ருமெண்ட்) நிர்வாகச் சட்டம் ஏற்படுத்தி, அந்தச் சட்டத்தின்
மூலம் இதே கருத்துக்களை நிறைவேற்றிக்கொள்ளலாம் " என்று தெரிவித்
துள்ளார். அப்படித் தெரிவித்ததன் நோக்கம் என்னவென்றால்,
இந்தி மட்டும் ஆட்சி மொழியாவதைத் தடுப்பது, ஆங்கிலத்தையும்
அதனோடு நீடிக்கச் செய்வது என்பதுதான். இந்தி ஆங்கிலத்துடன்
இருக்கவேண்டுமென்று சொல்லுவதற்குக் கனம் சுப்பிரமணியம் அவர்கள்
இப்பொழுது முன் வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி இப்பொழுது முன்
வந்திருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியை ஆட்சி
மொழி என்று கொண்டு வந்த அக்காலத்திலேயே (முன்பிருந்தே), ஆங்
கிலமும் இருக்கவேண்டும், ஆங்கிலத்தையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்
கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆங்கிலம்தான் இருக்க
வேண்டுமென்று, ஆங்கில மோகம் பிடித்தவர்கள்தான் சொல்லுகிறார்கள்
என்ற வாதம் ஆங்கில அறிவோடு கூடியவர்கள் பேசக்கூடியது ஆகாது.



ஏன் ஆங்கிலத்தில் இருக்கும் மோகம் இந்தியில் இல்லை என்று கேட்கலாம்.
இந்தியில் மோகம் இருப்பதைவிட, ஆங்கிலத்தில் மோகம் இருக்குமானால்
நல்லதே. இந்தியிலே இருக்கும் மோகத்தின் காரணமாக நம் அனை
வருக்கும் பயன்படக்கூடிய ஆங்கிலத்திற்கு இடம் இல்லாமல் செய்து
இந்தியைப் புகுத்தித் தமிழ்நாட்டில் மட்டுமன்றி, இந்தி பேசப்படாத
மற்ற வட்டாரத்திலுள்ள மக்களுக்கும் தீமை விளைவிக்கப்படும் காரணத்
தினாலேயே, ஆங்கிலத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நிதி
அமைச்சர் அவர்கள் வலியுறுத்திச் சொல்வதற்கு அண்ணா அவர்கள்
உடன்பாடு தெரிவித்தார்கள். அப்படி உடன்பாடு அளித்த கருத்து
எங்கும் மறுக்கப்படவில்லை. நேற்றுகூட நிதி அமைச்சர் அவர்கள்
இங்கே பேசினார்கள், " விடுதலை " கேலிக்குறிப்பைப்பற்றி. அதற்குப்
பிறகுதான் அண்ணா அவர்கள் தம் ஆதரவைப் பின் வாங்கியதாகவும்
சொன்னார்கள். " விடுதலையில் " கேலிக் குறிப்பு வருவதற்குக் காரணம்
என்ன ? அமைச்சர் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்ட காரணத்தினால்
தான் நானும் இதுபற்றி திருப்பி குறிப்பிட வேண்டியிருக்கிறது. எப்படி
இந்த நிலை ஏற்பட்டது ? இந்திக்கு அண்ணாதுரை ஆதரவு அளிக்கிறார்
என்று சொல்லிய காரணத்தினாலேதான் இந்தக் கேலி ஏற்பட்டது.
உண்மையில் இந்த யாதாஸ்தைப் பொறுத்தவரையிலே பெரும் பகுதியும்
இந்தியை எதிர்ப்பதாகத்தானே இருக்கிறது ? ஆண்டவனுக்கு சோறு
சமைத்துப் படைக்கச் சோம்பிய ஒரு பூசாரி, செங்கல்லைச் சுட்டு, ஒரு
தட்டில் வைத்து ஈரத் துணியைப் போட்டு மூடி, ஆண்டவனுக்குப் படைத்
தான். ஆண்டவனுக்கு ஏமாற்றமில்லையெனினும், ஆண்டவன் பக்
தர்கள் அதைச் சோறு என்று நினைத்து ஏமாந்திருப்பர். அதேபோல்
நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் இந்திக்கு எதிர்ப்பு என்ற
சோற்றை இந்திக்கு ஆதரவு என்ற சுட்ட செங்கலாக மாற்றி தட்டில்
வைத்து ஈரத்துணியை போட்டு மூடி மத்திய அரசாங்கத்திற்குப் படைத்து
ஏமாறவைத்தார், அண்ணாதுரை அந்த பூஜையை வெளிப்படுத்தாததால்
இந்திக்கு ஆதரவு அளித்தார் என்று சொல்லுகிறார். இதனால்தான்
இந்தச் சூழ்நிலையும், சிக்கலும் ஏற்பட்டது. அரசாங்கத்தினரைப் பார்த்துக்
கேட்டுக்கொள்ளுகிறேன், நீங்கள் எதைச் செய்தாலும் நேர்மையாகச் செய்
யுங்கள், செய்யும் எதையும் மறைக்காதீர்கள். மறுக்காதீர்கள். கபட
நாடகம் நிகழ இடமளிக்காதீர்கள். அப்படிப்பட்ட சூழலும் சிக்கலும்
ஏற்பட்டுவிட்டால், எப்படிப்பட்ட கனம் காமராஜரும் சுப்பிரமணியமும்
முயற்சித்தால்கூட எந்தப் பிரச்னையிலேயும் தீர்வு காணமுடியாது.
இதுவரையில் இந்தி நுழைவு பிரச்னையை உங்களால் தீர்க்கமுடியவில்லை.
பத்து ஆண்டு காலமாக நீங்கள் ஆட்சி புரிந்திருக்கிறீர்கள். நிதி அமைச்சர்
அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்திருக்கின்றார். அப்
பொழுதே இந்தப் பிரச்னையை தீர்த்திருக்கக்கூடாதா ? அந்தச் சூழ்நிலை
யில் உயர் திரு. கோபாலசுவாமி அய்யங்கார் அவர்களின் உதவியால் ஒரு
ஓட்டு வித்தியாசத்தில் இந்தி 15 ஆண்டுகளுக்கு அப்பொழுது தள்ளிப்
போடப்பட்டது, இல்லாவிட்டால் அப்பொழுதே இந்தி வந்திருக்கும் என்று
கூறியுள்ளீர்கள். அப்பொழுதே இந்தி வந்திருந்தால், நிலைமை மிகவும்
கேவலமாகத்தான் இருந்திருக்கும். அப்பொழுதே அதைத் தள்ளிப்போட
ஒரு வோட்டுதான் அதிகம் கிடைத்தது என்று சொன்னால், அதிலேயே
இந்தி ஆதிக்கம் புலப்படவில்லையா ? இந்தி கட்டாயமாக நுழைக்கப்
பட்டது புலப்படவில்லையா ? இந்தி நுழைக்கப்படுகின்றது ஒரே அரசு,
ஆட்சி என்ற பெயராலே. கௌஹாத்தி மகாநாட்டில் நிதி அமைச்சர்
அவர்கள் இதைப்பற்றி விரிவாக விளக்கம் கொடுத்தும், அவர் கொள்
கைக்கு அழுத்தம், வலிவு ஏற்பட்டதா? எதிர்ப்புதான் புலப்பட்டது. அந்த
மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானத்தின் வாசகத்தைப்
பார்த்தால் அதுவும் வடநாட்டாரின் மனப்பான்மையைக் காட்டுவதாகத்தான்
இருக்கிறது. அதை மாற்றுவதற்குத்தான் கல்கத்தா மகாநாடு இப்பொழுது
நடைபெற்றுமுடிந்தது. மிகப் பெரிய தலைவர்கள் அதில் கலந்து
கொண்டார்கள். அவர்கள் பெயர்களைச் சொல்லுவதுகூட இந்த
அவைக்குப் புறம்பென கூறப்படலாம். அவர்களுடைய கருத்துக்களை

ஆட்சியாளர்கள் புறக்கணிக்க வேண்டாம். அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும், அவர்களது நல்ல கருத்துக்களை நாம் அலட்சியம் செய்துவிடக்கூடாது. இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் அவ்வாறு பேசுவதைப் பார்த்து, அரசியல் சட்டத்தை திருத்தவேண்டிய அவசியம் இல்லை என்று முன்பு கூறிவந்த கனம் அமைச்சர் அவர்கள் அது திருத்தப்படலாம் என்று இப்பொழுது கருத்தறிவிக்க முற்பட்டிருக்கிறார். எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று சொல்வதையும், மத்திய அரசாங்கத்தின் போக்கையும், வடநாட்டுத் தலைவர்களின் நினைப்பையும், கௌஹத்தி தீர்மானம் வலுவிழந்து வருவதையும் கவனிக்கும்போது அரசியல் சட்டம் திருத்தப்பட்டால்தான் நமக்கு எதிர்காலத்தில் இந்தித்திணிப்பினின்றும் பாதுகாப்பு கிடைக்கும் என்பதை எவரும் உணரக்கூடும் என்பது தெரிகிறது. மேலும், கனம் நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கும் கருத்துக்களில் எவ்வளவு இரு மொழி ஏற்பாட்டை மாற்றும் முறையில் சந்தேகங்கள் இருக்கின்றன ? மத்திய ஆட்சியில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமானால், மாநில அரசாங்கங்களின் சம்மதத்தை—மக்களின் சம்மதத்தை—பெற்றுத்தான் அதைச் செய்யவேண்டுமென்று நிதி அமைச்சரே இங்கு சொல்லியிருக்கிறார். எனவே, மக்களின் சம்மதத்தை மத்திய அரசாங்கத்தார் பெறாமல் அரசியல் சட்டத்தைத் திருத்தி இந்தியைத் திணிக்கக்கூடும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களே நினைத்திருக்கிறார் என்று தெரிகிறது. அரசியல் சட்டத்தை இந்த முறையைக் கையாண்டு மாற்றுவதாயிருந்தால்தான் தமிழ்நாட்டிற்கு ஹிந்தித் திணிப்பினின்றும் நிரந்தரப் பாதுகாப்புக் கிடைக்கும் என்றும் அவர் எண்ணியிருக்கிறார். மத்திய அரசாங்கத்தின் இந்தித் திணிப்பினின்றும் தமிழ்நாட்டிற்கு நிரந்தரப் பாதுகாப்பு கிடைக்கவேண்டுமென்று அவர் எண்ணியிருக்கிறார் என்று நான் சொல்லும்போது, ஏக இந்தியாவை நாங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்று அவர் சொல்லமாட்டார் என்று நினைக்கிறேன். இந்தியாவை ஒரு துணைக்கண்டமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. மத்திய அரசாங்கத்தின்கீழ் இருக்கும் காலம் வரையில் கூடத் தமிழ்நாட்டில் ஹிந்தி திணிக்கப்படக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம். இந்திய அரசாங்க மொழியாக ஹிந்தி மொழி ஒன்று தான் இருக்க வேண்டுமென்ற கருத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அரசியல் சட்டத்திலேயே இந்தி மொழி பேசும் வட்டாரம், இந்தி மொழி பேசாத வட்டாரம் என்ற பாகுபாடு ஏன் வந்தது ? அரசியல் சட்டத்தின் மூலமே அந்தப் பிரிவினை ஏற்பட்டிருக்கிறது. ஒரே மொழி தேசீய மொழியாக இருக்கவேண்டுமென்றால், வட்டார மொழிகள் பல ஏன் இருக்கவேண்டும்? அந்தப் பாகுபாடு இருக்கிறது. அரசாங்க மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையில், இந்தி பேசப்படாத வட்டாரங்களில் இந்தியைக் குறித்து அதிருப்தி உணர்ச்சி இருந்தது, இருக்கிறது என்று யாதாஸ்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏன் அவ்வாறு இருக்கவேண்டும்? சென்னை அரசாங்கத்தின் தீர்மானத்தை மத்திய அரசாங்கம் சிந்தித்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று யாதாஸ்தில் கூறப்பட்டிருப்பதேன்? ஹிந்தி நன்றாக வளர்ச்சியடைந்துவிட்டதா என்று பார்த்து அதுமட்டுமே அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கச் சட்டத்தைத் திருத்த எண்ணும் காலத்தில், வட்டார மக்களின் சம்மதம் பெறப்பட்டு அத்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்று யாதாஸ்தில் குறிப்பிடப்பட்டிருப்பதேன்? இவற்றிலெல்லாம் பிளவுபட்ட நிலையும் பாகுபாடும் இல்லையா ? இந்தி அன்னிய மொழி என்ற உணர்வு நமக்கு ஏற்படவில்லையா? இந்தி அன்னிய மொழியாக இருந்தபோதிலும்கூட, அது அன்னிய மொழி அல்ல என்று சொல்லுவது, பொதுமக்களை ஏமாற்ற முயற்சிப்பது ஆகும். முன்பு காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு முரண்படாமல் கருத்தறிவிக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், அதே சமயத்தில் ஹிந்தித் திணிப்பு ஆபத்துக்களை உணர்ந்த மக்களிடமிருந்து காங்கிரசை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், இந்தக் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன.



அடுத்து, பள்ளியில் இடம் பெறும் மொழிகளை நோக்குவோம். மூன்று மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் நம் அரசாங்கம் அத்திட்டத்தால் தவறான கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்டது. கல்வித் திட்ட அறிக்கையின்பேரில் பேசும்போதும் இதை நான் குறிப்பிட்டேன். இப்போது மீண்டும் குறிப்பிடுகிறேன். வடநாட்டில் பள்ளி மாணவர்கள் ஹிந்தியுடன்கூட ஆங்கில மொழி ஒன்றை மட்டும் பயின்றாலே போதும். கேர் குழுவினர் இந்த மாநிலத்திற்கு வந்திருந்தபோது, வடநாட்டில் பள்ளி மாணவர்கள் இந்தியுடன் ஆங்கிலம் ஒன்றை மட்டும் கற்பதற்கே மிகவும் துன்பப்படுகிறார்கள் என்று கூறினார். நமது நிதி அமைச்சர் கனம் திரு. சுப்பிரமணியம் அவர்களோ, இந்த ராஜ்யத்தில் பள்ளி மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்பதுடன் ஆங்கிலத்தையும் இந்தியையும் கற்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அவர் மூன்று மொழி பாரத்தைப் பள்ளி மாணவர்கள் மீது சுமத்த முற்படுகிறார். ஆட்சி மொழியாவதற்குரிய தகுதி இப்பொழுது இந்திக்கு இல்லை என்றால், அந்தத் தகுதி தமிழுக்கும் இல்லை என்று தானே சொல்வார்கள் என்று அவர் வேறொரு இடத்தில் கேட்டிருக்கிறார். வளர்வதும் வளம்பெற்றதும் உயர்ந்ததுமான தமிழ் மொழியுடன் ஹிந்தி மொழியை ஒப்பிடுவதே தமிழைக் கேவலப்படுத்துவதாகும். தமிழும் இந்தியும் ஒன்றா? இந்தி வளர்ச்சியுற்றிராத மொழி என்பதை இந்தி பேசும் பகுதியிலுள்ளவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? தமிழ் அப்படிப்பட்ட மொழியா ? தமிழ் ஆட்சி மொழியாக இருப்பதற்குரிய தகுதியையுடைய மொழி. தெலுங்கிற்கும் கன்னடத்திற்கும்கூட அந்தத் தகுதி இருக்கிறது என்பதை யாராவது மறுக்கமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆட்சி மொழியாக இருப்பதற்குரிய தகுதியையும் வளர்ச்சியையும் தெலுங்கு இன்னும் பெறவில்லை என்று ஆந்திரர்கள் அந்தச் சட்டசபையில் சொல்லியிருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : ஆந்திராவிலும் காங்கிரஸ் கட்சிதான் இப்போது ஆட்சி நடத்துகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், அக்கட்சிக்காரர்களுக்கு இந்திக்கு அடிபணியும் மனப்பான்மை இருக்கிறது. ஆகவே நான் ஆந்திர சட்டசபையில் அப்படிப்பட்ட கருத்து வெளியிடப்பட்டது என்றும் கூற விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் ஸ்ரீ அன்பழகன் அவர்களிடம் ஒன்று கூற விரும்புகிறேன். எங்களை வேண்டுமானால் இந்திக்கு அடிமைகள் என்றோ, டெல்லிக்கு அடிவருடிகள் என்றோ, எது வேண்டுமானாலும் சொல்லுங்கள் ; இப்பிரச்னையில் தெலுங்கர்களையும் இழுத்து அவர்களை இந்திக்கு அடிமைகள் என்று சொல்லி வெவ்வேறு மொழியினரிடையே வீண் விருப்புவெறுப்புக்களை தயவு செய்து கிளப்ப வேண்டாமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : ஆட்சி மொழியாக இருப்பதற்குரிய தகுதி தெலுங்கிற்கு இல்லை என்று ஆந்திரர்கள் சொன்னதைப் போல, தமிழுக்கும் அந்தத் தகுதி இல்லை என்று சொல்ல வேண்டாமென்று கனம் நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். தெலுங்கு மொழியை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்த முடியாது என்று ஒருசில ஆந்திரர்கள் சொன்னாலும், தெலுங்கை வைத்துக்கொண்டு ஆளமுடியும் என்று முற்போக்கான கருத்துக்கொண்ட ஆந்திரர்கள் சொல்கிறார்கள் என்பதையும் அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளி மொழிப் பிரச்னையைப் பொறுத்தவரையில், வடநாட்டுப் பிள்ளைகளுக்கு ஒரு முறை, தென்னாட்டுப் பிள்ளைகளுக்கு வேறொரு முறை என்ற நிலையை நான் காண்கிறேன். வட நாட்டுப் பள்ளிப் பிள்ளைகள் இரண்டு மொழிகள் தான் படிக்கிறார்கள். ஆனால், தென்னாட்டில் பள்ளிப் பிள்ளைகள் மூன்று மொழிகள் கற்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்தார்

தீர்மானித்திருக்கிறார்கள். இங்கேயும் பள்ளிப் பிள்ளைகள் இரண்டு மொழி படித்தால் போதும். மூன்றாவது மொழிப் படிப்பு விருப்பப் பாடமாக இருக்க வேண்டும். அந்த மூன்றாவது மொழி எந்த மொழியாக இருக்க வேண்டுமென்று கனம் கல்வி அமைச்சர் என்னைக் கேட்கலாம். அதை நான் குறிப்பிட விரும்பவில்லை. பாமர மக்களை மூன்று மொழிகள் படிக்கச் சொல்வது, அவர்கள் தலையில் பெரிய சுமையை வைப்பதாகும். கல்லூரி போதனாமொழியில் ஆங்கிலத்தைக் கைவிட்டால் தமிழ் தான் போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று வெளியிடப்படும் கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். அந்தக் கருத்து இப்போது கனம் அமைச்சரால் என் வெளியிடப்படுகிறது? "இந்தி" மொழியைப் புகுத்தும் விஷயத்தில் பல்கலைக் கழகங்களின் உதவியைக்கூட மத்திய அரசாங்கத்தார் பெற்றுவிடுவார்களோ என்று நினைக்கப்பட்டு அந்தக் கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தத் துறையிலும் "இந்தி" புகுத்தப்படக்கூடாது என்ற கருத்தே வெளியிடப்பட்டிருக்கிறது.

யாதாஸ்தில் 4-வது பிரிவில், ராஜ்ய அரசாங்கத்தின் அலுவலக மொழியைப் பொறுத்தவரையில், இந்த ராஜ்யத்தில் வட்டார மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தானத்திலிருந்து அந்த மொழியை நீக்கி அங்கே இந்தியைப் புகுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தார் முற்படுவார்களோ என்று எண்ணியே, அதை அடியுடன் மறுக்க அந்தக் கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

அடுத்து, 5-வது பிரிவை நோக்குவோம். இந்தப் பிரிவு, மாநில சட்டசபை சட்டமியற்றும் மொழி எதுவாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றியது. மாநில சட்டசபைகளில் சட்டங்களை இந்தியில் இயற்றுவது நல்லது என்ற கருத்தும் கெர் கமிஷனால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அந்த வட்டார மொழியோ ஆங்கிலமோ தான் மாநில சட்டசபைகளின் சட்டமியற்றும் மொழியாக இருக்கவேண்டுமென்ற கருத்து நம் அரசாங்கத்தாரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து எல்லா உயர் நீதி மன்றங்களும் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்பதற்காக, அவைகளுடைய நடவடிக்கைகள் மொழி தேசம் முழுவதற்குமான பொது மொழியில் இருக்க வேண்டுமென்று கெர் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. உயர் நீதி மன்றங்களின் மொழி மக்கள் மொழியாகிய வட்டார மொழியாகத் தான் இருக்கவேண்டுமே தவிர, பொது மொழி என்ற பெயரில் இந்தி நுழையக்கூடாது என்று சர்வ கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய சர்க்கார் அலுவலகங்களின் மொழியைப் பொறுத்தவரையில், டெல்லி நகரிலுள்ள அலுவலகங்கள் வேண்டுமானால் இந்தியை வைத்துக் கொள்ளலாம் என்றும், அகில இந்திய ரீதியில் இயங்கும் வட்டார அலுவலகங்கள் உள் அலுவலகங்களுக்கு இந்தியையும், அந்தந்தப் பகுதிகளில் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் வேலைகளுக்கு அந்தப் பிரதேச மொழிகளையும் பயன்படுத்தலாம் என்றும் யாதாஸ்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அகில இந்திய ரீதியில் இயங்கும் மத்திய அரசாங்க அலுவலகங்களைப்பொறுத்தவரையில், பொதுமக்களுடைய வசதிக்கு ஏற்ற மாதிரியில் அவைகளுடைய மொழிக் கொள்கை அமைய வேண்டுமென்றும், பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தி இந்தியைத் திணிப்பதற்குக் கருவியாக இந்த அலுவலகங்களை மத்திய அரசாங்கம் பயன்படுத்தக் கூடாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த அலுவலகங்களில், வட்டார மக்களின் தாய் மொழி உபயோகிக்கப்பட வேண்டுமென்றும், அத்துடன் ஆங்கிலமும் மத்திய-மாநில தொடர்பு மொழியாக உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சையைப் பொறுத்தவரையில் இந்தியிலோ ஆங்கிலத்திலோ மட்டும் பரீட்சை எழுதலாம் என்ற நிலை இல்லாமல் தாய் மொழியிலேயே பரீட்சை எழுதுவதற்கும் இடமளிக்க வேண்டும் என்று யாதாஸ்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. போட்டித் தேர்வில்





தாய் மொழிக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்றும், வேண்டுமானால் இந்தியைத் துணைத் தேர்வு மொழியாக எடுத்துக்கொள்ளலாம் என்றும் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது. வட நாட்டினருக்குச் சாதகமானதும் தென்னாட்டவருக்குப் பாதகமானதுமான ஏற்பாடு செய்யப்படக் கூடாது என்பதற்காக இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**Sri S. NAGARAJA MONIGAR:** **On a point of order, Sir.** நாம் இந்திய யூனியனில் இருக்கிறோம். அப்படியிருக்கும்போது, வடநாடு தென்னாட்டைப் புறக்கணிக்கிறது என்றும், மற்ற பல விஷயங்களைச் சொல்லியும், "வடநாடு தென்னாடு" என்று இந்தச் சபையில் பிரித்துப் பேசப்படுகிறது. இந்த அரசாங்க அரசியல் சட்டப்படி விஸ்வாசப்பிரமாணம் எடுத்துக் கொண்டு விட்டு இந்தச் சபையில் வந்து பேசும்போது, அவ்வாறு பிரித்துப் பேசுவது ராஜத்துவேஷமோ ஒழுங்குக்குப் புறம்பானதோ ஆகாதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இது **point of order** இல்லை என்று என் கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்ரீ. அன்பழகன் அவர்களுடைய பேச்சில் கனம் அங்கத்தினர் குறுக்கிட்டதற்காக அவருடைய சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN:** தலைவர் அவர்களே, ஓய்வு தந்ததற்கு நன்றி. பாராளுமன்றத்தில் வழங்கப்படும் மொழியைப்பற்றிக் குறிப்பிடும்போது, இந்தியினாலே மற்ற மொழிபேசுபவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை விளக்குவதற்காக, இந்தி மொழிக்கும் ஆங்கிலத்திற்கும் ஒரு சமநிலை இருக்கவேண்டுமென்பதற்காக, ஆங்கிலத்திலிருந்து இந்திக்கும் இந்தியிலிருந்து ஆங்கிலத்திற்கும் உடனுக்குடனே மொழி பெயர்க்க வேண்டும் என்ற கருத்து இந்த அறிக்கையில் காணப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

ஆனால், ஆங்கிலம், இந்தி ஆகியவை மட்டுமே ஒன்றிலிருந்து மற்றொன்று மொழிபெயர்க்கப்பட்டால் மட்டும் போதாது. இந்த நாட்டிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தமிழ் மட்டும் தெரிந்து கொண்டிருப்பவர்கள் பாராளுமன்றம் செல்லக்கூடும். தெலுங்கு மட்டும் தெரிந்துகொண்டிருப்பவர்கள் செல்லக்கூடும். ஆகவே, 14 தேசிய மொழிகளிலே முக்கியமான மொழிகள் அத்தனைக்கும் மொழிபெயர்ப்பு ஏற்பாடு செய்வதற்கு இன்று இல்லாவிட்டால் நாளை, பாராளுமன்றம் முன்வரவேண்டும். அதற்கான விஞ்ஞான சாதனங்களைப் பெற முயற்சிக்கவேண்டுமென்ற கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**Languge of inter-Governmental Communication** மாநில மத்திய அரசுகளிடையே தொடர்பு கொள்ளும் மொழியைப்பற்றிக் கூறும்போது, அதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் அந்தக் கமிஷன் தீர்மானித்து விடவில்லை, அதனால் அந்தப் பிரச்னையைத் தள்ளி போடலாம்; பின்னால் அப்படி ஒரு நிலைமை ஏற்படும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற குறிப்பு காணப்படுகிறது. இவற்றிலேயெல்லாம் சிக்கலை ஏற்படுத்துவதற்கு வட நாட்டார் தயாராக இருக்கிறார்கள். மொழிக் கமிஷன் ஏற்படுத்தி ஆதிக்கம் செலுத்தத் தயாராய் இருக்கிறார்கள். வங்காள பிரதிநிதியோ தமிழ்நாட்டுப் பிரதிநிதியோ மொழிக் கமிஷனிலே நல்ல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருந்தாலும், அவை ஏற்றுக்கொள்ளப்படாததால் பெரும்பாலும் இடம் பெறவில்லை. இந்த ஆதிக்க நிலைமையை மாற்ற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் இன்றையதினம் எந்த அரசியல் சட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அந்த அரசியல் சட்டத்தையே திருத்தி ஆக வேண்டும். மாநில மத்திய அரசுகளிடை எழும் பல சிக்கலான பிரச்னைகளை எளிதாக தீர்த்துக் கொள்ளுவதற்கு ஆங்கிலம் நிலையான இடம் பெறும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

[Sri K. Anbazhagan] [11th March 1958

மேலும்—சுப்ரீம் கோர்ட்டில்—ஆங்கிலமே நீடிக்கும் என்ற கருத்துக்கு— இடமுள்ளதால், இந்த விண்ணப்பத்தின் இப்பகுதியில் இந்திக்கு மறுப்பு, எழுப்பப்படாமல் விடப்பட்டுள்ளது. எனினும் "இந்திக்கு" இத்துறையிலும் வரவேற்பில்லை.

அந்த வகையில் இங்கு பல திருத்தப் பிரேரேபணைகளை நாங்கள் தந்திருக்கிறோம். அந்தத் திருத்தங்கள்—இந்த விண்ணப்பத்தை உடைக்க வேண்டும் என்பதற்காக அல்ல, அழிக்கவேண்டும் என்பதற்காகவும் அல்ல, மாறாக வலுப் பெறவேண்டும் என்பதற்காகவே தரப்பட்டுள்ளன. நாங்கள் இந்தி எதிர்ப்பு எந்த அளவு முளைத்தாலும், அதைத் தண்ணீர் விட்டு வளர்ப்போம். அது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களிடத்தில் முளைத்து அரும்பினால், அந்த அரும்பின் மணத்தை உலகத்திற்குச் சொல்வோம். திரு. காமராஜர் அவர்களிடத்தில் முளைத்தாலும் அப்படித் தான். அப்படி முளைக்காதவரையில் கொள்கை எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருப்போம். எங்கள் எதிர்ப்பு ஆலமரம் மாதிரி, மற்றவர்களு டைய எதிர்ப்பு அருகம்புல் மாதிரி என்று கேலியாக குறைத்துப் பேச மாட்டோம். உண்மையில் இந்த அறிக்கையே இந்தி எதிர்ப்பு அறிக்கை. இந்தி கட்டாயமாகப் புகுத்தப்படுவதைத் தடுக்க முனையும் அறிக்கை. "இந்தி" மொழிச் சிக்கலை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் காணும் வழியிலேயும், நம் நாட்டுப் பெரும் தலைவராக விளங்கும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் காணும் வழியிலேயும் சிறு மாறுபாடு இருக்கலாம். எமது கருத்தில் மாறுபாடு இல்லை என்று சில நேரம் சுப்பிரமணியம் அவர்களும், சில நேரம் ராஜாஜி அவர்களும், இன்னும் சில நேரம் இரண்டு பேருமே கூடிச் சொல்கிறார்கள். இரண்டு பேருமே இந்தி புகுத்தப்படக்கூடாது என்று சொல்கிறார்கள். இரண்டு பேர்கள் கூறும் நோக்கத்தையும் நாங்கள் வரவேற்கிறோம். அதை நிறைவேற்று வதற்கு வழிவகை காணவேண்டிய நிலையில் இருக்கும் காங்கிரஸ் கட்சி, யாரை நினைத்து அஞ்சுகிறதோ தெரியவில்லை. அவர்களுடைய யோசனையை அவர்களுக்கு மேல் டில்லியில் இருப்பவர்களை ஏற்றுக் கொள்ளச் செய் வதைக் கைவிட்டு விடக்கூடாது.

தி.மு. கழகத்தவராகிய நாங்கள், இந்திக்கு எதிராகவே ஓர் இயக் கத்தை நடத்தி வரும் நாங்கள்,—கண்ணியம், நேர்மை, உண்மை, தைரியம் கொண்ட நாங்கள் மானமுள்ள மறத் தமிழர் வழியிலே தோன்றிய நாங்கள் இந்தி நுழைவதை எதிர்த்து எந்தக் கட்சி கொடி உயர்த்தினாலும் அதை மனமார ஆதரிப்போம். எவர் கையில் இந்தி எதிர்ப்புக் கொடி இருப்பினும் அவர் கரத்தை வலுப்படுத்துவோம்! அந்த முறையிலேயே— இந்த இந்தி எதிர்ப்பு விண்ணப்பத்தை (Memorandum) ஆதரித் துள்ளோம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

10-13 a.m. SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சபை முன்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக் கும் சென்னை அரசாங்க யாதாஸ்தை, சட்டசபைக் கட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டத்திலே பொதுப்படையாக நான் ஒப்புக்கொண்டேன். அந்தத் தலைவர்கள் கூட்டத்திலே என்னுடைய கருத்துக்களைப் பூர்ணமாக வலியுறுத்திய பிறகு, அங்கே நிலவிய கருத்துக்களை உத்தேசித்து, பொது வாக இந்த அரசாங்கத்தின் முயற்சிகளிலே தடையாக நான் இருக்கவேண்டாம் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆட்சிமொழிக் கமிஷனுக்கு அரசாங்கம் சமர்ப்பித்த யாதாஸ்துக்கு பொதுப் படையான ஆதரவை நான் நல்கினேன்.

அதனாலேயே, இந்த யாதாஸ்தில் கூறப்பட்டிருக்கிறவாறு, இந்தி, ஆங்கிலம் ஆகிய இவ்விரண்டு மொழிகளினையும் இந்த நாட்டு ஆட்சிமொழி யாகக் கொள்ளவேண்டுமென்று கால வரம்பு கூறாமலிருக்கும் கொள்கையை நான் ஏற்றுக்கொண்டேன்.



11th March 1958] [Sri P. S. Chinnadurai]

மொழி என்பது மனிதனுடைய உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்து வதற்கு ஒலி வடிவம் கொடுப்பதாகும். மொழியே அறிவைக் கொண்டு வந்துவிடும் என்ற அந்தக் கொள்கையை நான் ஏற்க முடியாது. மொழி புலமையைத் தரலாம். ஆனால் அதுவே அறிவு அல்ல. அறிவு மனிதனு டைய உள்ளத்திலேயிருந்து அவரவர்களுடைய சிந்திக்கும் தன்மைக் கேற்ப மலர்ச்சி அடைய வேண்டும். அதற்கு மொழி என்பது ஒரு கருவியே தவிர, அதுவே அறிவு அல்ல என்று நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இப்பொழுது நாம் இங்கே விவாதிப்பதும், மொழிப் பிரச்னை சம்பந்தப் பட்டமட்டில், எந்த மொழியிலே நாம் கல்வி கற்றால், எந்த மொழியிலே நம்முடைய ஆட்சியை நடத்தினால் எந்த மொழியிலே நம்முடைய நடவடிக் கைகளை நடத்தினால், அதிகமான அறிவு பெற்றவர்களாக விளங்குவோம் என்பதை குறித்து அல்ல. நம்முடைய நாட்டிலே, இன்றைய தினம் எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், இந்தியாவிலே தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பதினான்கு மொழிகளிலே எந்த மொழியைத் தேசிய பொது மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் இப்பொழுது நமக்கு முன்னால் உள்ள பிரச்னை.

இந்தப் பிரச்னையிலே தேசிய வாதிகளுக்கு "இந்தியா ஒன்று" என்று நினைக்கின்றவர்களாக, இந்தியாவை ஒன்றாக, சுதந்திர நாடாகக் காண வேண்டுமென்று உழைத்தவர்களுக்கு, இனியும் சுதந்திர நாடாக என்றைக்கும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று வைராக்கியம் கொண்டவர்களுக்கு உண்மையிலேயே கருத்து வேற்றுமை இருக்க முடியாது, இருக்கக்கூடாது, இருக்காது. இந்தியாவைப் பிரிக்கவேண்டும் எந்தக் காரணத்தைக் கொண்டாவது என்று நினைக்கின்றவர்கள் சம்பந்தப்பட்ட வரையிலே, நிச்சயமாக கருத்து வேற்றுமைகள் வரலாம். இந்தியா ஒன்று என்று நினைக்கின்றவர்கள் இந்தத் தேசத்தின் சுதந்திரப் போராட் டத்திற்காக உழைத்த காலத்திலே இந்தியாவின் தேசிய பொது மொழி இந்தியாகத்தான் இருக்க முடியும் என்று ஏற்கெனவே பிரகடனப்படுத்தி யிருக்கிறார்கள். அதிலே சலனம் ஏன்? எங்கே வந்து புகுந்தது இந்தச் சலனம் என்பதை ஆராய்ச்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியா ஒன்று என்று நினைக்கின்றவர்கள் மத்தியிலேயும் இந்தியாவை ஒன்றாகத் தான் வைத்திருக்கவேண்டும், அகில இந்தியா, ஏக இந்தியா, ஐக்கிய இந்தியா, என்ற அந்தக் கொள்கைக்கே என்றைக்கும் பாடுபடுவோம் என்று நினைக்கின்றவர்களும் இன்றைய தினம் சலனம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே சிலர் இந்தியாவின் ஆட்சிமொழியாக, தேசிய பொது மொழியாக இந்தி இருக்கக்கூடாது, ஆங்கிலம் தான் இருக்க வேண்டுமென்று சொல்ல முற்பட்டிருக்கிறார்கள். அதனை குறித்து ஆராய் வதற்கு முன்னால் இந்தியாவைப் பிரிக்கவேண்டுமென்று ஏதாவது ஒரு காரணத்தினாலே சொல்கிறவர்கள் சம்பந்தப்பட்டவரையிலே ஒரு சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன்.

பட்ஜெட் உரையின் பேரிலே இங்கே நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளித்த கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசிய போது, "இந்தப் பிரிவினை விதை எத்தகையது" என்று மிக விரிவாக விளக்கிக் கூறினார்கள். நிதி அமைச்சர் கொடுத்த அந்தப் பதிலுக்கு அந்த ஆணித்தரமான கருத்துக் களுக்கு இந்தியாவே பெருமைப்படுவதற்கு முடியும் என்று சொல்கிறார் கள்—குறிப்பாக, கோவை ஜில்லா என்று நான் சொல்வேன். அவர் வாதாடும் திறமையை மெச்சுகிற அதே நேரத்தில், இன்னும் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புவேன். பிரிவினையைக் கோருகின்றவர்கள் அவர்களுடைய சரித்திரம், அவர்களுடைய பழங்கால நடவடிக்கைகள், இவைகளைக் குறித்தெல்லாம் நாம் பேசுவதைக் காட்டிலும், பிரிவினையிலே உள்ள கெடுதியை, ஏன் அந்தப் பிரிவினை கூடாது என்பதை இன்றைய நிலையை வைத்து இன்றைய உலகச் சூழ்நிலையை வைத்து, எதிர்காலத்தை வைத்து நாம் எடுத்துச் சொன்னால்தான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கூறுவேன். ஏனென்றால் இன்றையதினம்

[Sri P. S. Chinnadurai] [11th March 1958

மொழிச் சிக்கலில் மனத்தைப் பறிகொடுத்துப் புதிதாக பல பிரச்னைகளை
உண்டாக்கி மக்களுடைய கவனத்தை வேறு வகையில் திருப்பு
வதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டாம் என்பதாக எல்லோ
ரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே எல்லாத் துறையிலும்
ஏக் போகத்தை உடைத்தெறிய வேண்டும் என்கிற கருத்து உடையவன்
நான். அந்தக் கருத்தும் மக்களுடைய மனதில் வேரூன்றி வருகிறது.
இந்த ஏக போகத்தை நீடித்து வைத்திருக்க வேண்டும் என்று
விரும்புகிறவர்களுடைய கருத்து எந்தத் துறையானாலும் சரி தோல்வி
அடைவது நிச்சயம் என்று உறுதியாகக் கூற விரும்புகிறேன். இனி இந்த
ஏக்போகத்தை வைத்துக்கொண்டிருக்க இயலாது என்று குறிப்பாகக் கூற
விரும்புகிறேன்.

ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால்தான் விஞ்
ஞானத்திலும் சரி, நவீன இயந்திர சாதனங்களைப் பெருக்கிக்கொள்ளும்
வகையிலும் சரி முன்னேற்றம் காண முடியும். ஆகவே ஆங்கிலப் புலமை
மிகவும் அவசியமானது என்று எவரேனும் கருதுவார்களானால்
அவர்களை நான் கேட்டுக்கொள்வேன். தயவு செய்து ஆங்கிலப் புலமை
இல்லாத மற்ற நாடுகளைப் பாருங்கள். ரஷ்யாவைப் பாருங்கள். சீனாவைப்
பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். சீனாவில் உள்ள பல கோடி
மக்கள் இன்றையதினம் சீன மொழியைத்தான் பேசி வருகிறார்கள்.
அதே போல் ரஷ்யாவை எடுத்துக்கொண்டாலும் அங்குள்ள பல கோடி
மக்கள் இன்றைய தினம் ஆங்கிலப் புலமை பெற்றிருக்கவில்லை. இன்றைக்கு
ஆங்கிலப் புலமை அதிகமாகப் பெற்றுள்ள அமெரிக்கா விடுகிற
செயற்கைச் சந்திரன் வான வெளிக்கு மேலேயே போக மாட்டேன்
என்கிறது. ஆங்கிலப் புலமை இல்லாத ரஷ்யா விடுகிற செயற்கைச்
சந்திரன் ஒன்றுக்கு இரண்டாக வான வெளியில் சுற்றிக்கொண்டிருக்கிறது.

ஆகவே, ஆங்கிலப் புலமை விஞ்ஞான அறிவை தந்துவிடுகிறது
என்று எந்த பெரிய முது கிழவர்கள் நம்பிக் கொண்டிருந்தாலும் அவர்
களுக்கு நான் இந்தப் புத்தகத்தை காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்
என்று நான் இந்த நாளில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆங்
கிலம் வேண்டுமென்று கோருகிறவர்கள், அன்பழகன் அவர்கள் கூறியது
போல் நாட்டுப் பிரிவினை கோருகிறவர்கள் மத்தியில் இருந்து இந்தக்
கோறிக்கை வந்திருக்குமானால் இந்த ராஜ்ய அரசாங்கம் அதற்கு சாய்ந்து
கொடுத்திருக்காது என்பதுதான் என் அபிப்பிராயம். ஆனால் என்
சாய்ந்து கொடுக்கிறார்கள் என்றால், இந்த அபிப்பிராயம் தங்கள் பகுதி
யில் உள்ள முதிய அரசியல் வாதிகளிடமிருந்து வந்திருக்கிற காரணத்
தினால்தான். நிதியமைச்சர் அவர்கள் ஆங்கிலமும், இந்தியும் இருக்க
வேண்டுமென்று குறிப்பிடும்போது இந்திக்கு போதிய முக்கியத்துவம்
கொடுத்தாரா என்று நான் கேட்கிறேன். இந்த யாதாஸ்திலும் சரி
அல்லது நம் கல்விக் கொள்கையிலும் சரி நாம் என்ன குறிப்பிட்டிருக்கி
றோம். மூன்று மொழிகளை கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிற
நாம் இந்தியை கட்டாய மொழியாக, கட்டாயம் என்று சொல்லும
போது தவறான அர்த்தத்தை, அதாவது நிர்ப்பந்தமாக திணிப்பதுபோல்
தோன்றுகிறது. ஆகவே நான் சொல்கிறேன், இந்தியை நாம் அவசிய
மொழியாக ஆக்கியிருக்கிறோமோ என்று நான் கேட்கிறேன்? இந்த
யாதாஸ்திலானாலும் சரி, அல்லது இந்த அரசாங்கத்தின் கல்விக்
கொள்கையிலானாலும் சரி, இந்தி ஒரு அவசியமான மொழி, நம் மக்க
ளுக்கு அவசியமான மொழி, நாம் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டிய
மொழி, பாரதத்தில் பிறந்த ஒவ்வொரு மகனும் மகளும் கற்றுக்கொள்ள
வேண்டிய மொழி என்று எங்கேயாவது ஒரு வற்புறுத்தல் இருக்கிறதா
என்று நான் கேட்கிறேன். அப்படி இல்லையானால் அது, நம் சந்ததியாருக்கு
நாம் செய்யும் ஒரு மிகப் பெரிய பாதகமில்லையா என்று நான் கேட்கி
றேன். இந்த யாதாஸ்தின் கடைசிப் பாகத்தில் சொல்லப்படுகிறது,
20-வது பக்கத்திலே "நிறைவேற முடியாத ஆசைகள் நீடிக்காதபடி
செய்யும் அனாவசியமான கவலைகளைத் தீர்க்கவும், யதார்த்தமான உண்
மையை ஒப்புக்கொண்டேயாகவேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது.



11th March 1958] [Sri P. S. Chinnadurai]

எது உண்மை? ஆங்கிலம் இருந்தேயாக வேண்டும் என்பதா? இந்தியையும்
ஆங்கிலத்தையும் நீண்ட காலம் உபயோகிக்க வேண்டிய அவசியம்
இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தை வகுத்த
வர்கள், அதில் 343, 7-வது பிரிவில் இதற்கு வகை செய்திருக்கிறார்கள்.
ஆங்கிலம், இந்தி இரண்டையும் ஆட்சி மொழியாக பார்லிமெண்டும்,
மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சிபாரிசு
செய்யப்பட்டிருக்கிறது. பார்லிமெண்ட் இதற்கு ஒரு சட்டம் நிறைவேற்ற
வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கறது. எல்லா மாநிலங்களும்
அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தையும் இந்தி
யையும் ஆட்சி மொழியாக்கி விட வேண்டும், ஆங்கிலத்தை ஆட்சி மொழி
என்ற அந்த அந்தஸ்திற்கு உயர்த்தி விட வேண்டும், 14 தேசிய மொழி
களில் ஒன்றாக இருக்கிற பாக்கியத்தை ஆங்கிலம் பெறாவிட்டாலும் இந்தி
யாவின் தேசிய பொது மொழி, இந்தியாவின் ஆட்சி மொழி என்ற
அந்தஸ்தை ஆங்கிலம் பெற அதை ஒரே நாளில் அப்படி உயர்த்தி விட
வேண்டுமென்று இந்த யாதாஸ்து கூறுகிறது. அதற்கு காலவரை கிடை
யாது. அந்த காலம் வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டும். எது
வரையில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்றால்,
இந்தி நன்கு வளர்ச்சி அடையும் வரையில், ஆங்கிலம் இருக்க வேண்டும்.
ஆனால் எப்பொழுது இந்தி நன்றாக வளர்ச்சி அடையும் என்றால் அது
யாருக்கும் தெரியாது. அல்லது எப்பொழுது அது வளர்ச்சி அடைந்ததாக
நாம் கருதுகிறோம், நமக்குத் தெரியாது. ஆக, இது தவறான ஒரு கொள்கை
யாகும். இப்பொழுது அரசாங்கப் பீடத்தில் வளமாக இருக்கிறவர்கள்,
இப்பொழுது ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் எப்படியாவது நம் காலத்
தைக் கழித்துக் கொண்டு போய் விடலாம், பின்னால் வருகிறவர்கள் இந்த
மொழி சிக்கலுக்கு பதில் கூறிக் கொள்ளட்டும் என்று சொல்வது தவறான
தாகும். நமக்கு பின்னால் வருகிறவர்களுக்கு சிக்கல்களை வளர்த்துக்
கொடுப்பதல்ல நம் வேலை. அவர்களுக்கு நாம் பாதையை நன்கு செப்ப
னிட்டு தருவதுதான் நம் வேலையாகும். ஆங்கிலம் நீடிப்பது பற்றி
ஒரு வரையறை கொடுக்கப்படவில்லை. இரண்டு மொழிக் கொள்கை
தான் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மொழி கொள்கைக்கு கால
வரை இங்கு குறிக்கப்படவில்லை. இதெல்லாம் இந்தியாவில் இருக்கிற
மக்களுக்கு இழைக்கப்படும் கேடு என்று நான் இங்கு சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். அது, மக்களின் மொழி ஆட்சி மொழியாவதற்கு தடை
யாக இருக்குமென்று என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.
இந்த யாதாஸ்தை உடனே எதிர்த்து அதை நான் ஒப்புக்கொள்ள
மாட்டேன் என்று கூறுவதாக யாரும் கருத வேண்டியதில்லை. இந்த
யாதாஸ்தை நான் இப்போதைக்கு பூர்ணமாக ஒப்புக்கொள்கிறேன். நீங்க
ளும் தேசிய வாதிகள்தான். தேசத்திற்காக உழைத்தவர்கள்தான்.
இந்த தேசத்தின் அபிவிருத்தியில் உங்களுக்கும் அக்கறை இருக்கும்.
ஆனால் சில சலுகைகளுக்காக, தற்கால சில வசதிகள் நீடித்திருக்க
வேண்டும் என்பதற்காக சலனத்திற்கு நீங்கள் இடம் கொடுக்காதீர்கள்
உங்கள் மனதில் என்று ஆட்சியாளர்களை வேண்டிக்கொள்வேன், தங்கள்
மூலமாக. ஒவ்வொரு துறையிலும் நான் இந்தச் சலனத்தைக்
காண்கிறேன். நாட்டில் சோஷலிஸம் வர வேண்டுமென்று தீர்மானம்
கொண்டு வந்திருக்கும்போது தனியார் துறைக்கு ஆக்கம் காட்டும் கொள்
கையை அனுஷ்டிக்கிறோம். ஒவ்வொரு துறையை எடுத்துப் பார்த்தா
லும், எப்படி மக்களின் அபிப்பிராயத்திற்கு எதிரான கொள்கைகளை
அரசாங்கம் கையாள்கிறதோ அதே போன்றுதான் இந்த கல்வி கொள்கை
விஷயத்திலும், ஆட்சி மொழிக் கொள்கை விஷயத்திலும் மக்களை
விடுத்து அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களுக்கு ஆக்கம் கொடுப்பதை
விட்டு விட்டு ஒரு சிலருக்காக, ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஆக்கம் கொடுக்கிற
முறையில்தான் இந்த அரசாங்கம் அதன் கொள்கைகளை வகுத்துக் கொள்
கின்றன. ராஜாஜி அவர்கள் சம்பந்தமாக இந்த சபையில் பேசப்பட்டது.
கனம் ராஜாஜி அவர்களும், அவர்களை ஒத்த எந்த முதுமை அரசியல

பிரிவினையைக் கோருகின்றவர்கள் ஒரு காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்
திற்கு உறுதுணையாக இருந்தார்கள் என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி
நாம் பிரிவினை விஷயத்தை உடைக்கலாம் என்றால் அது இயலாத
காரியம். இன்றையதினம் ஆளும் கட்சியாக இருக்கிற காங்கிரஸ் தரப்
பினர்களிலும்கூட, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அன்றையதினம்
கால் வருடியாக இருந்தவர்கள் இன்றையதினம் தூணாக நிற்கிறார்
கள் என்பதைப் பார்க்கிறோம். நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் அல்லாமல்
மற்ற ராஜ்யங்களிலும்கூட இதே நிலைமைதான். ஆகையால் பழைய
நடவடிக்கைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அந்தப் பிரிவினை
கோஷத்தை எதிர்ப்பது சரியாகாது என்பதை உணர்கிறேன். பிரிவினைக்
கருத்து பற்றி இந்தச் சபையில் நிறைய விவாதம் நடந்தது. அந்த விதை
நல்ல விதையா? அழுகிப் போன விதையா? அந்த விதைக்குத் தண்ணீர்
ஊற்றப்படுகிறதா? ரத்தம் ஊற்றப்படுகிறதா? இப்படிப் பல பல
விஷயங்கள் விவாதத்திலே கொண்டுவரப்பட்டது. என்னைப் பொறுத்த
வரையில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புவேன். அந்த விதையின்
தன்மை எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும் இந்த பாரத நாட்டு
மண்ணிலே நிச்சயமாக அந்த விதை விளையாது என்று மாத்திரம்
சொல்ல விரும்புகிறேன். அது நல்ல விதையாக இருக்கலாம். ஆனாலும்
இந்தப் பாரத நிலத்தில் அது முளைக்காது. பாரதப் பண்பு அந்த
விதைக்குச் சாதகமானது அல்ல என்பதை நான் உணர்வதோடு மாத்திரம்
அல்ல, பிரிவினை வித்தை இந்நாட்டில் தூவிக் கொண்டிருக்கிறவர்களே
விரைவில் உணரும் காலம் வரப்போகிறது என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

இன்றையதினம் ஆங்கிலம்தான் இந்த நாட்டில் தேசீயப் பொது
மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறவர்கள் எப்படிப்பட்ட
கருத்தோடு அதைச் சொன்னாலும் சரி, இந்த நாட்டின் ஒற்றுமையைக்
குலைப்பதற்கு அந்தப் பிரச்னையையே ஆதாரமாகக் கொண்டு செயல்படு
வதற்கு நாம் விரும்பவில்லை. நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்னால்
சுதந்திரம் இடைக்காதா என்கிற ஏக்கத்திலே பல பல போராட்டங்களை
நடத்தினோம். இந்த நாட்டுக்குச் சுதந்திரமே கிடைக்காது எனப் பலர்
நம்பினார்கள். சுதந்திரம் கேட்பதே சரியில்லை என்று பேசியவர்கள்
எத்தனையோ பேர். நாம் இன்றையதினம் சுதந்திரம் அடைந்து விட்டோம்
உலக நாடுகளின் வரிசையில் இன்றையதினம் இந்தியா ஜனத்தொகையை
பொறுத்துப் பார்த்தாலும் சரி, நிலப்பரப்பில் பார்த்தாலும் சரி மிக
உன்னதமான நிலையிலே தலை சிறந்து விளங்குகிறது. இந்தக்
கௌரவத்தையும், மதிப்பையும் நிலை நாட்டிக்கொண்டு நாம் உலகத்தில்
மனிதர்களாக தலை நிமிர்ந்து வாழவேண்டும். நம் பின்னால் வருகின்ற
சந்ததியார்களும் வாழ்வதற்கு வகை செய்யவேண்டும். ஆகவே மொழிப்
பிரச்னையை பிரதானமாக வைத்து நாட்டு மக்களின் கவனத்தை பிரிவினை
மனப்பான்மையில் திருப்பிவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.
இனிமேல் இதனைப் பிரிக்கவேண்டும், அதனைப் பிரிக்கவேண்டும் என்கிற
வாதங்களையெல்லாம் எழுப்ப வேண்டாம். இந்தியாவைப் பொருளாதாரத்
துறையில், சமூகத் துறையில், அரசியல் துறையில்—இப்படி சகல துறைகளிலும்
பலம் உள்ள நாடாக ஆக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்பதாகக்
கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இனி பிரிவினைச் சக்தியில் நம்முடைய
கருத்தைச் செலுத்தி காலத்தை வீணடிக்க வேண்டாம் என்பதாகக் கேட்டுக்
கொள்கிறேன். அவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக்கொள்கிற வரையில்
ஆங்கிலம்தான் வேண்டுமென்று கூறிக்கொண்டிருப்பார்கள். அவர்கள்
தங்கள் கருத்தை மாற்றிக்கொள்வதற்கு அவகாசம் கொடுத்துவிட்டு,
ஐக்கிய இந்தியா வேண்டுமென்று சொல்கிறவர்கள் மத்தியில் ஏன்
இந்திக்கு எதிர்ப்பு வருகின்றது என்பதை ஆராய விரும்புகிறேன்.

ஐக்கிய இந்தியா வேண்டுமென்று கூறுகிறவர்கள் இப்போது ஆங்கிலத்
தையே இந்த நாட்டின் ஆட்சிமொழியாக வைக்க வேண்டுமென்று
விரும்புகிறார்கள். எனக்கு ஒரு விஷயத்தில் சந்தேகமே இல்லை. இன்றைக்கு
ஆங்கிலம்தான் தேசீய மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்



கிறவர்கள் கையிலே நாட்டின் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்
குமேயானால் ஆங்கிலம் படித்தவர்கள்தான் நாட்டை ஆளவேண்டும்,
ஆங்கிலம் படித்தவர்களுக்குத்தான் நாட்டில் வோட்டளிக்கும் உரிமை
இருக்கவேண்டும், ஆங்கிலம் படித்தவர்களுக்கே எல்லா வகையிலும்
தனி உரிமை இருக்கவேண்டும் என்பதாகவெல்லாம் செய்திருப்பார்கள்.
ஆனால் நல்ல வேளையாக அப்போது காந்திஜி அவர்கள் வாழ்ந்து
கொண்டிருந்தார்கள். நல்ல வேளையாக மக்களுடைய மனதில் தேசீய
உணர்ச்சி, ஜனநாயக உணர்ச்சி வேரூன்றி இருந்தது. அந்தக் காரணங்
களினால் இந்த ஏகாதிபத்திய மனப்பான்மை உடையவர்கள் கையிலே, அதி
காரத்தை ஏகபோகமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்ற விருப்பம்
உடையவர்களின் கையிலே அதிகாரம் சிக்கி விடவில்லை. பொது மக்களுடைய
உணர்ச்சியை தேசீய உணர்ச்சியை நன்கு மதிக்கக்கூடியவர்களின் கையில்
அதிகாரம் வந்தது. சர்வஜன வாக்குரிமை கொடுக்கப்பட்டது. சட்ட சபையும்,
மத்திய பாராளும் மன்றமும் நல்ல முறையில் அமைக்கப்பட்டு இன்றைய
தினம் இயங்கி வருகிறது.

ஆனால் உயர் நிலையை தங்கள் கையிலே வைத்துக்கொண்டிருக்க
வேண்டும் என்று விரும்புகிறவர்களைப் போலவே, ஒரு கூட்டத்தினரைப்
போலவே இன்றைக்கு ஆங்கிலத்தை தேசீய பொது மொழியாக வைக்க
வேண்டும் என்று சொல்கிறவர்கள் அதன் மூலமாக ஒரு சிலரின் நன்மை
யையே கருத்தில் கொண்டவர்களாக இந்தக் கூக்குரலை எழுப்பியிருக்கிறார்
கள் என்று நினைக்கிறேன். அவர்கள் எப்படிப்பட்ட காரணத்தைக் காட்டி
ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்று சொன்னாலும், இந்த நாட்டில்
வாழ்கின்ற பல கோடி மக்களிடையே ஆங்கிலம் தெரிந்தவர்கள் எத்தனை
பேர்கள் இருப்பார்கள் என்று பார்த்தால் மிக மிகக் குறைவானவர்களே
இருப்பார்கள். ஆட்சி நாட்டு மக்களுக்காக நடைபெறவேண்டும். இந்த
நாட்டிலே நாட்டு மக்களுக்காக, நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகள்தான் ஆட்சி செலுத்தவேண்டும் என்பது நிர்ணயம்
ஆகிவிட்டது. இனி சர்வாதிகார வாதிகளுக்கு இந்நாட்டில் இடம் கிடை
யாது. மக்களுக்காக ஆட்சி நடைபெற வேண்டுமானால் அந்த ஆட்சி தாய்
மொழியிலேயே நடைபெறவேண்டும். மக்கள் மொழியே ஆட்சி மொழி
யாக இருக்கவேண்டும். முன்பு இதே சபையில் ஆங்கிலத்தில் நடவடிக்கை
பூராவும் இருந்ததும், ஆங்கிலத்தில் பேசுபவர்களுக்குத் தனியாக இருந்த
மதிப்பும், அவர்கள் பேசுவதையே பத்திரிகையில் பிரசுரிப்பதும் நமக்குத்
தெரியாதது அல்ல. இன்றைக்கு ஆங்கிலத்தில் பேசுகின்றவர்களுக்கு
அவ்வளவு உயர்நிலை இருப்பதாகத் தெரியவில்லை. காலம் மாறி விட்டது.
தாய்மொழியில் மிகச் செம்மையாகப் பேசுகின்றவர்களின் மதிப்பு பெருகிக்
கொண்டு வருவதைத்தான் பார்க்கிறோம். இந்தப் பிராந்தியத்தில்
உள்ளவர்கள் பேசுகின்ற மொழி தமிழ் மொழியாக இருப்பதனால்
தமிழுக்கு அதிக மதிப்பு ஏற்பட்டு வருகிறது.

அதுபோல் இந்த நாட்டிலே எல்லா ராஜ்யங்களிலும் உள்ள மக்கள்
மிக அதிகமாகப் பேசுகின்ற மொழி என்ன என்று எடுத்துப் பார்த்தால்
இந்திதான். இந்தியில் பேசினால் அதைப் புரிந்துக்கொள்ளக்கூடியவர்
களின் தொகை மிக ஏராளமாக இருக்கிறது. அதுதான் இந்த நாட்டு
மக்களுடைய மொழி. சத விகிதத்தை எடுத்துப் பார்த்தாலும் இந்திப்
பேசுகின்றவர்களுடைய தொகைதான் இதர மொழி பேசுகின்றவர்களை
விட அதிகமாக இருக்கிறது. ஆகவே இந்த நாட்டு மக்களின் மொழி
நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என்ற விருப்பம் உடையவர்கள்,
இந்த நாட்டு நிர்வாகம் நல்ல ஜனநாயக முறைப்படி நடக்கவேண்டும்
என்கிற விருப்பம் உடையவர்கள் இந்தி மொழி நிர்வாகப் பொது மொழி
யாக இருக்கக்கூடாது, அதை மாற்றவேண்டும் என்று சொல்கிற அளவுக்கு
நெஞ்சத் துணிவு உள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். இதை ஒரு பெரிய
பிரச்னையாக்க ஒரு நாளும் விரும்பமாட்டார்கள்.

நமது நாட்டில் வேறு எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. பொரு
ளாதாரத் துறையில் நாம் அடையவேண்டிய முன்னேற்றம் ஏராளம்.
புரட்சிகரமான மாறுதல் தேவை என்று கூறப்படுகிற இவ்வேளையில் இந்த

[Sri P. S. Chinnadurai] [11th March 1958

மொழிச் சிக்கலில் மனத்தைப் பறிகொடுத்துப் புதிதாக பல பிரச்னைகளை உண்டாக்கி மக்களுடைய கவனத்தை வேறு வகையில் திருப்புவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டாம் என்பதாக எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே எல்லாத் துறையிலும் ஏக போகத்தை உடைத்தெறிய வேண்டும் என்கிற கருத்து உடையவன் நான். அந்தக் கருத்தும் மக்களுடைய மனதில் வேரூன்றி வருகிறது. இந்த ஏக போகத்தை நீடித்து வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களுடைய கருத்து எந்தத் துறையானாலும் சரி தோல்வி அடைவது நிச்சயம் என்று உறுதியாகக் கூற விரும்புகிறேன். இனி இந்த ஏகபோகத்தை வைத்துக்கொண்டிருக்க இயலாது என்று குறிப்பாகக் கூற விரும்புகிறேன்.

ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால்தான் விஞ்ஞானத்திலும் சரி, நவீன இயந்திர சாதனங்களைப் பெருக்கிக்கொள்ளும் வகையிலும் சரி முன்னேற்றம் காண முடியும். ஆகவே ஆங்கிலப் புலமை மிகவும் அவசியமானது என்று எவரேனும் கருதுவார்களானால் அவர்களை நான் கேட்டுக்கொள்வேன். தயவு செய்து ஆங்கிலப் புலமை இல்லாத மற்ற நாடுகளைப் பாருங்கள். ரஷ்யாவைப் பாருங்கள். சீனாவைப் பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். சீனாவில் உள்ள பல கோடி மக்கள் இன்றையதினம் சீன மொழியைத்தான் பேசி வருகிறார்கள். அதே போல் ரஷ்யாவை எடுத்துக்கொண்டாலும் அங்குள்ள பல கோடி மக்கள் இன்றைய தினம் ஆங்கிலப் புலமை பெற்றிருக்கவில்லை. இன்றைக்கு ஆங்கிலப் புலமை அதிகமாகப் பெற்றுள்ள அமெரிக்கா விடுகிற செயற்கைச் சந்திரன் வான வெளிக்கு மேலேயே போக மாட்டேன் என்கிறது. ஆங்கிலப் புலமை இல்லாத ரஷ்யா விடுகிற செயற்கைச் சந்திரன் ஒன்றுக்கு இரண்டாக வான வெளியில் சுற்றிக்கொண்டிருக்கிறது.

ஆகவே, ஆங்கிலப் புலமை விஞ்ஞான அறிவை தந்துவிடுகிறது என்று எந்த பெரிய முது கிழவர்கள் நம்பிக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு நான் இந்தப் புத்தகத்தை காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று நான் இந்த நாளில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலம் வேண்டுமென்று கோருகிறவர்கள், அன்பழகன் அவர்கள் கூறியது போல் நாட்டுப் பிரிவினை கோருகிறவர்கள் மத்தியில் இருந்து இந்தக் கோரிக்கை வந்திருக்குமானால் இந்த ராஜ்ய அரசாங்கம் அதற்கு சாய்ந்து கொடுத்திருக்காது என்பதுதான் என் அபிப்பிராயம். ஆனால் என் சாய்ந்து கொடுக்கிறார்கள் என்றால், இந்த அபிப்பிராயம் தங்கள் பகுதியில் உள்ள முதிய அரசியல் வாதிகளிடமிருந்து வந்திருக்கிற காரணத்தினால்தான். நிதியமைச்சர் அவர்கள் ஆங்கிலமும், இந்தியும் இருக்க வேண்டுமென்று குறிப்பிடும்போது இந்திக்கு போதிய முக்கியத்துவம் கொடுத்தாரா என்று நான் கேட்கிறேன். இந்த யாதாஸ்திலும் சரி அல்லது நம் கல்விக் கொள்கையிலும் சரி நாம் என்ன குறிப்பிட்டிருக்கிறோம். மூன்று மொழிகளை கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிற நாம் இந்தியை கட்டாய மொழியாக, கட்டாயம் என்று சொல்லும போது தவறான அர்த்தத்தை, அதாவது நிர்ப்பந்தமாக திணிப்பதுபோல் தோன்றுகிறது. ஆகவே நான் சொல்கிறேன், இந்தியை நாம் அவசிய மொழியாக ஆக்கியிருக்கிறோமோ என்று நான் கேட்கிறேன்? இந்த யாதாஸ்திலானாலும் சரி, அல்லது இந்த அரசாங்கத்தின் கல்விக் கொள்கையிலானாலும் சரி, இந்தி ஒரு அவசியமான மொழி, நம் மக்களுக்கு அவசியமான மொழி, நாம் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டிய மொழி, பாரதத்தில் பிறந்த ஒவ்வொரு மகனும் மகளும் கற்றுக்கொள்ள வேண்டிய மொழி என்று எங்கேயாவது ஒரு வற்புறுத்தல் இருக்கிறதா என்று நான் கேட்கிறேன். அப்படி இல்லையானால் அது, நம் சந்ததியாருக்கு நாம் செய்யும் ஒரு மிகப் பெரிய பாதகமில்லையா என்று நான் கேட்கிறேன். இந்த யாதாஸ்தின் கடைசிப் பாகத்தில் சொல்லப்படுகிறது, 20-வது பக்கத்திலே .."நிறைவேற முடியாத ஆசைகள் நீடிக்காதபடி செய்யும் அனாவசியமான கவலைகளைத் தீர்க்கவும், யதார்த்தமான உண்மையை ஒப்புக்கொண்டேயாகவேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது.



11th March 1958] [Sri P. S. Chinnadurai]

எது உண்மை? ஆங்கிலம் இருந்தேயாக வேண்டும் என்பதா? இந்தியையும் ஆங்கிலத்தையும் நீண்ட காலம் உபயோகிக்க வேண்டிய அவசியம் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள், அதில் 343, 7-வது பிரிவில் இதற்கு வகை செய்திருக்கிறார்கள். ஆங்கிலம், இந்தி இரண்டையும் ஆட்சி மொழியாக பார்லிமெண்டும், மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. பார்லிமெண்ட் இதற்கு ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கறது. எல்லா மாநிலங்களும் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தையும் இந்தியையும் ஆட்சி மொழியாக்கி விட வேண்டும், ஆங்கிலத்தை ஆட்சி மொழி என்ற அந்த அந்தஸ்திற்கு உயர்த்தி விட வேண்டும், 14 தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்கிற பாக்கியத்தை ஆங்கிலம் பெறாவிட்டாலும் இந்தியாவின் தேசிய பொது மொழி, இந்தியாவின் ஆட்சி மொழி என்ற அந்தஸ்தை ஆங்கிலம் பெற அதை ஒரே நாளில் அப்படி உயர்த்தி விட வேண்டுமென்று இந்த யாதாஸ்து கூறுகிறது. அதற்கு காலவரை கிடையாது. அந்த காலம் வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டும். எது வரையில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருகக வேண்டுமென்றால், இந்தி நன்கு வளர்ச்சி அடையும் வரையில், ஆங்கிலம் இருக்க வேண்டும். ஆனால் எப்பொழுது இந்தி நன்றாக வளர்ச்சி அடையும் என்றால் அது யாருக்கும் தெரியாது. அல்லது எப்பொழுது அது வளர்ச்சி அடைந்ததாக நாம் கருதுகிறோம், நமக்குத் தெரியாது. ஆக, இது தவறான ஒரு கொள்கையாகும். இப்பொழுது அரசாங்கப் பீடத்தில் வளமாக இருக்கிறவர்கள், இப்பொழுது ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் எப்படியாவது நம் காலத்தைக் கழித்துக் கொண்டு போய் விடலாம், பின்னால் வருகிறவர்கள் இந்த மொழி சிக்கலுக்கு பதில் கூறிக் கொள்ளட்டும் என்று சொல்வது தவறானதாகும். நமக்கு பின்னால் வருகிறவர்களுக்கு சிக்கல்களை வளர்த்துக் கொடுப்பதல்ல நம் வேலை. அவர்களுக்கு நாம் பாதையை நன்கு செப்பனிட்டு தருவதுதான் நம் வேலையாகும். ஆங்கிலம் நீடிப்பது பற்றி ஒரு வரையறை கொடுக்கப்படவில்லை. இரண்டு மொழிக் கொள்கைதான் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மொழி கொள்கைக்கு காலவரை இங்கு குறிக்கப்படவில்லை. இதெல்லாம் இந்தியாவில் இருக்கிற மக்களுக்கு இழைக்கப்படும் கேடு என்று நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது, மக்களின் மொழி ஆட்சி மொழியாவதற்கு தடையாக இருக்குமென்று என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இந்த யாதாஸ்தை உடனே எதிர்த்து அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று கூறுவதாக யாரும் கருத வேண்டியதில்லை. இந்த யாதாஸ்தை நான் இப்போதைக்கு பூர்ணமாக ஒப்புக்கொள்கிறேன். நீங்களும் தேசிய வாதிகள்தான். தேசத்திற்காக உழைத்தவர்கள்தான். இந்த தேசத்தின் அபிவிருத்தியில் உங்களுக்கும் அக்கறை இருக்கும். ஆனால் சில சலுகைகளுக்காக, தற்கால சில வசதிகள் நீடித்திருக்க வேண்டும் என்பதற்காக சலனத்திற்கு நீங்கள் இடம் கொடுக்காதீர்கள் உங்கள் மனதில் என்று ஆட்சியாளர்களை வேண்டிக்கொள்வேன், தங்கள் மூலமாக. ஒவ்வொரு துறையிலும் நான் இந்தச் சலனத்தைக் காண்கிறேன். நாட்டில் சோஷலிஸம் வர வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்திருக்கும்போது தனியார் துறைக்கு ஆக்கம் காட்டும் கொள்கையை அனுஷ்டிக்கிறோம். ஒவ்வொரு துறையை எடுத்துப் பார்த்தாலும், எப்படி மக்களின் அபிப்பிராயத்திற்கு எதிரான கொள்கைகளை அரசாங்கம் கையாள்கிறதோ அதே போன்றுதான் இந்த கல்வி கொள்கை விஷயத்திலும், ஆட்சி மொழிக் கொள்கை விஷயத்திலும் மக்களை விடுத்து அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களுக்கு ஆக்கம் கொடுப்பதை விட்டு விட்டு ஒரு சிலருக்காக, ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஆககம் கொடுக்கிற முறையில்தான் இந்த அரசாங்கம் அதன் கொள்கைகளை வகுத்துக் கொள்கின்றன. ராஜாஜி அவர்கள் சம்பந்தமாக இந்த சபையில் பேசப்பட்டது. இனம் ராஜாஜி அவர்களும், அவர்களை ஒத்த எந்த முதுமை அரசியல

[Sri P. S. Chinnadurai] [11th March 1958

வாதிகளாக இருந்தபோதிலும் சரி, ஒரு சிலருக்காக, தனிப்பட்டவர்களுக்காக நாம் நமது கொள்கைகளை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். யார் வேண்டுமென்று நீங்கள் தீர்மானியுங்கள். உங்களுக்கு மக்கள் வேண்டுமா, அல்லது தனிப்பட்ட ஒரு சில நபர் வேண்டுமா, என்று நீங்களே தீர்மானியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆங்கிலத்தை நீடிக்கச் செய்வதற்கும், இந்தியை இந்த நாட்டில் ஏறவொட்டாமல் செய்வதற்கும், இந்தியை இந்த நாட்டின் ஆட்சி மொழியாக செய்யாமலாக்குவதற்கும் ஒரு போராட்டம் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். அப்படி சொல்கிற ராஜாஜி அவர்களை திடீரென்று ஒரு நாள் நமது மதிப்பிற்குறிய ஆசைத்தம்பி அவர்கள் ராஜாஜி அவர்களை அவர்களது தளபதி வரிசையில் சேர்க்கிறார். நான் சொல்லுகிறேன் வேண்டாம் என்று. ராஜாஜி ஒரு புளிய மரம். புளிய மரத்தின் கீழ் எதுவும் தழைக்க முடியாது. ஆகவே அவரை நம்பி அவர் பின்னால் போக நீங்கள் உங்களை தயார் படுத்திக் கொள்வீர்களேயானால் அது மிகவும் தவறானதாகும் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் ராஜாஜி அவர்களின் அத்தியந்த சிட்சியனாகிய கனம் நிதி அமைச்சர் அவர்களிடமும் நான் கூறுவேன். ராஜாஜிக்காக நீங்கள் எதையும் விட்டுக் கொடுத்து விட வேண்டாம் என்று. ராஜாஜி கூறுகிறார்களே என்று நீங்கள் விட்டு கொடுப்பீர்களேயானால் நிச்சயமாக அது நாட்டு மக்களுக்கு, அதிலும் குறிப்பாக கோவை ஜில்லாவிற்கு மிகுந்த அவமானமாகும். கோவை ஜில்லாவில் உள்ளவர்கள், உறுதியானவர்கள். அவர்கள் முரட்டுத்தனமாக போராடக் கூடியவர்கள். (ஆரவாரம்.) அதனால் நான் பெருமைப்படுகிறேன். அந்தப் பெருமையை இந்தியாவில் நிலைநாட்ட நான் ஆசைப்படுகிறேன். இந்தியாவில் வாழ்கிற மக்களுக்கு எது நன்மை என்று நாம் கருதுகிறோமோ அதனை நம் ராஜ்யத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்ய தயக்கம் காட்டாதீர்கள் என்று நான் நிதியமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன். அதற்கு முதற்படியாக என்ன செய்ய வேண்டும். ஏன் சப்தம் போடுகிறீர்கள், 1965-க்கு பிறகுதானே ஹிந்தி வரப் போகிறது, அதற்கு போதிய டைம் இருக்கிறதே என்று கூறுகிறீர்கள். ஏனெனில், 1965-ல் அல்லது அதற்குப் பின் 10, 20 வருஷங்கள் கழிந்த பின்னரோ ஒரு நாள் திடீரென்று நினைத்து வந்து விட முடியாது. அதற்கிடையில் இது இருக்கட்டும் என்று கூறியிருக்கிறீர்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கிடையில் ஹிந்தியை வளர்க்க அதை நம் தேசீய மொழியாக ஆக்குவதற்கு நாம் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா?

**Sri P. S. Chinnadurai then commenced speaking in Hindi.**

**DEPUTY SPEAKER** : There are no Reporters to take down Hindi speeches.

**Sri M. KARUNANITHI** : இந்த சட்ட மன்றத்தில் இந்தி மொழியில் பேசலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER** : அதில் தவறுமொன்றுமில்லை.

**Sri P. S. CHINNADURAI** : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 19 ஆண்டுகளுக்கு முன்பு சிறையில் படித்த இந்தி இன்று வரையிலும் ஞாபகமாக இருக்கிறது என்றால் அதுதான் தமிழனுடைய அறிவையும், திறமையையும் எடுத்துக்காட்டுகிறது. மொழியில் தமிழனுக்கு இருக்கின்ற புலமையில் எவருக்குத்தான் சந்தேகம் இருக்க முடியும். தமிழ் நாட்டில் பிறந்த மக்களுக்கு சரியானபடி மொழி பயிற்சி பெறுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் மூன்று மொழிகளையும், ஏன் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்று அதில் புலமையடைய முடியும் என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். நான் சீனாவுக்கு சென்றிருந்த சமயத்தில் இந்திய ஸ்தானிகர் காரியாலயத்தில்



11th March 1958] [Sri P. S. Chinnadurai]

ஒரு அதிகாரியாக இருக்கக்கூடியவர், அவர் தமிழ் நாட்டை சேர்ந்தவர், அவரும் அவருடைய மனைவியும் சீன மொழியில் அழகாக பேசினார்கள். அதே காரியாலயத்தில் இருக்கின்ற மற்ற நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு சீன மொழி படிக்க முடியவில்லை. தமிழ் நாட்டை சேர்ந்த தம்பதிகளுக்குத்தான் அந்த மொழி படிக்க முடிந்தது. எந்த மொழியாக இருந்த போதிலும் தமிழ் நாட்டு மக்கள் புலமை பெறுவதற்கு தகுதி உடையவர்கள், திறமையுடையவர்கள்தான் என்பதில் சந்தேகம் கிடையாது. நான் கடைசியாக கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே மக்களுடைய மொழிதான் நாட்டின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையில் நாம் உறுதியாக இருக்கவேண்டும். இன்று எல்லாத்துறைகளிலும் பார்க்கப்போனால், எல்லாவற்றிலுமே ஏகபோகம் கொண்டாட விரும்புகின்ற மிக குறைவான ஒருசிலர், அவர்கள் எவ்வளவு மேதைகளாக இருந்தபோதிலும் சரி, எவ்வளவு பெரியவர்களாக இருந்தபோதிலும் சரி, அவர்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்குகாக கொள்கையில் கொண்டிருக்கிற உறுதியை விட்டுக்கொடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆங்கிலத்தை பொறுத்த வரையில் எனக்கு ஆங்கிலத்தினிடத்தில் கோபம் கிடையாது. ஆனால் ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை ஆக்குவதில் நிச்சயமாக என்னால் உடன்பாடு கொள்ள இயலாது. இப்போதைக்கு சிறிது காலத்திற்கு வேண்டுமானால் ஆங்கிலமும் இந்தியோடு ஆட்சி மொழியாக தவிர்க்க முடியாத காரணத்தால், இருப்பதால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நிச்சயமாக ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதிலிருந்து மாறி வெறும் இலக்கிய மொழியாக மாத்திரம் ஆக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு இந்த கொள்கையில் விட்டு கொடுக்கக்கூடாது என்றும் மீண்டும் வற்புறுத்திக்கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Sri C. N. ANNADURAI** : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 10–40 p.m.
மொழிப் பிரச்னை சம்பந்தமாக கருத்துரை வழங்குவதில் நல்ல சூடு பிடித்திருக்கிறது என்பதனை எங்களுடைய தரப்பிலிருக்கின்ற கனம் அன்பழகன் அவர்கள் இந்த சட்ட மன்றத்தின் முன்னால் எடுத்துரைத்தார்கள். நான் இந்தப் பிரச்னையைப் பற்றி முற்றிலும் வேறொரு கோணத்திலிருந்து கவனிக்க விரும்புகிறேன். மொழிப் பிரச்னையில் நாம் இன்றைய தினம் எடுக்கின்ற முடிவுகள் நம்மை மட்டும் கட்டுப்படுத்துமென்று இருக்குமானால் நாம் அவரவர்களுக்கு இருக்கின்ற விருப்பு வெறுப்புகளை முக்கியமாக கருதி ஒரு முடிவினை அவசரப்பட்டு ஆர்வத்தின் காரணமாக எடுத்து விடலாம். ஆனால் நாம் எடுக்கக் கூடிய முடிவுகள் நம்மை மட்டுமல்லாமல் நம்முடைய பிற்கால சந்ததிகளைப் பெரும் அளவுக்குக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஒரு பெரும் பொறுப்பை ஏற்கின்ற நேரத்தில் எல்லையில்லா ஆர்வம் நம்மிடத்தில் இருக்கிறது என்பதால் எழுகிற ஆணவமோ, அல்லது எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடிய எண்ணம் பெற்றிருக்கின்றோம் என்ற அரசியல் உணர்வோ மேலிடுவதை விட்டு விட்டு, நாம் செய்யக் கூடிய காரியம் பிற்கால சந்ததியார்களைப் பாதிக்கக் கூடும் என்ற காரணத்தினால் நாம் மிகுந்த ஜாக்கிரதையோடு இந்தப் பிரச்னையை அணுகவேண்டியிருக்கிறது. அதனால் தான் என்று கருதுகிறேன் இந்த ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்றவர்கள் இந்தப் பிரச்னையில் ஒரு கோடியில் சின்னதுரைகளை பார்க்கிறார்கள். இன்னொரு கோடியில் அண்ணாதுரைகளைப் பார்க்கிறார்கள் (சிரிப்பு.) இரண்டு முனைகளுக்கும் இடையில் இருக்கின்றவர்கள், ஆட்சியாளர்கள், கனம் சின்னதுரை அவர்கள் சொல்லுகிறபடி இந்தி மக்களுடைய மொழி என்று ஏற்றுக் கொள்ளுவதில் தயக்கமடைகிறார்கள். அதே நேரத்தில் அண்ணாதுரை சொல்லுகிறபடி "ஆங்கிலம் இருக்கட்டும், ஹிந்தி தேவையில்லை" என்பதை ஏற்றுக் கொள்வதற்கும் தயக்கமடைகிறார்கள். இந்த இரண்டுக்கும் இடையிலே ஏதாவது ஒரு நல்ல வழி கண்டுபிடிக்க முயலுகிறார்கள். இந்த நல்ல எண்ணத்தைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

இந்த நல்ல எண்ணத்தை இந்திய துணைக்கண்டத்தில் வேறு எந்த ராஜ்யத்திலும் நாம் பார்க்கவில்லை என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். அப்படிப் பெருமையுடன் சொல்லக் கூடிய நேரத்தில், இந்த பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க நல்ல வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று நல்ல முயற்சியெடுத்துக் கொண்டார்கள். அந்த முயற்சியில் எல்லா கட்சிகளிலும் உள்ளவர்கள் தத்தமது கருத்துகளை எடுத்துச் சொல்லவேண்டுமென்று மெத்த பரிவோடு விரும்பினார்கள். அவரவர்கள் தத்தமது கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இதற்கிடையிலே நாட்டிலே முளைத்துவிட்ட சில பிரச்னைகள் ஒவ்வொருவரும் தத்தமது கருத்தை, நாட்டுக்கு விளக்கி கூறவேண்டிய நிர்ப்பந்தத்தில் கொண்டுவந்து வைத்திருக்கிறது. அதே நேரத்தில் எதிர் கட்சித் தலைவர் வி. கே. ராமசுவாமி முதலியார் அவர்கள் "மொழிக் கமிட்டியில் உட்கார்ந்து விட்டு, மற்றொரு கூட்டத்திற்குச் சென்று, இரண்டுக்குமிடையே இருக்கின்ற கருத்தைப் பற்றி வேறு விதமாகச் சொல்லக்கூடும், அதிலும் குறிப்பாக என்னைப் போன்றவர்கள் சொல்லக்கூடும்" என்று குறிப்பிட்டார்கள். என்னை வருந்தி வருந்தி அழைத்தார்கள், நான் சென்றேன், அந்த மொழிக் கமிட்டியில் பேசியதை அங்கே மறுக்கவில்லை என்று சொன்னவர்கள், ஒன்றே ஒன்று சொன்னார்கள். 344-வது பிரிவை மாற்றம் செய்ய வேண்டுமென்று சொன்னேன் என்று சொன்னார்கள். யார் யாரை அழைத்தாலும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுவது மனித சுபாவம். அந்த மனித சுபாவத்தின்படி விட்டுக் கொடுக்கக்கூடிய பிரச்னைகளில், திராவிட முன்னேற்றக் கழகம் விட்டுக் கொடுத்து உண்மையில் பிரச்னைகளைத் தீர்க்க முயலும். அந்த விதத்தில் இந்தப் பிரச்னை நம்மைக் கட்டுப்படுத்துவதோடல்லாமல், எதிர்கால சந்ததியார்களின் வாழ்வையும் கூடக் கட்டுப் படுத்துவதால் சில அடிப்படை உண்மைகளை கசப்பாக இருந்தாலும் கூட ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த நாட்டில்—இந்த நாடு என்று குறிப்பிடும்போது நம்முடைய மாநிலத்தை மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால்—இப்போது ஒரு பழைய தலைமுறை வேகமாக மறைந்து வருகிறது, ஒரு புதிய தலைமுறை வேகமாக எழுந்து வருகிறது—இந்த இரண்டிற்கும் இடையில் நாம் வாழ்ந்து வருகின்றோம். பழைய தலைமுறை, இந்தியா, இந்திய துணைக் கண்டம், இந்தியர், இந்தி என்றும், இந்தியா விடுதலை பெற்றதால் இந்திதான் தேசீய மொழி என்று ஆழ்ந்த நம்பிக்கையோடு கருதுகின்ற ஒரு தலைமுறை இனிவரவிருக்கின்ற தலைமுறையில், இந்தியா என்பது உண்மையில் ஒரு கற்பனை என்று கருத்து கொண்டிருக்கிற நாங்கள் வெற்றி பெறக் கூடுமானால், இந்தியா என்பது ஒரு துணைக் கண்டமாக ஆக்கப்பட்டு பல மாநிலங்களைக் கொண்டதாகக் கருதி தனி நாடுகளாக ஆகப்போகின்ற அத்தகைய நேரம் வரப்போகிறது—இந்தியா, இந்தியர், இந்தி என்று நண்பர் சின்னதுரை அவர்கள் கொண்டிருக்கிற மன எழுச்சி அது வெற்றி பெறப்போவதில்லை—அப்படி சின்னதுரை அவர்கள் வெற்றி பெறுவாரானால் அவருடைய மன எழுச்சி நிரந்தரமானதாக இருக்கும். இந்த இரண்டுக்கும் இடையில் நாம் இருக்கிறோம். நாம் இன்றைக்கு பழைய நினைவுகள் ஒருபுரம் இழுக்க மற்றொரு புரத்தில் எதிர்கால சந்ததியார்களின் வாழ்வின் நினைவுகள் இழுக்க, நாம் இக்கட்டான நிலையில் இருக்கின்ற ஒரு தலைமுறை என்று கருதுகின்றேன். ஆகையால்தான் இங்கே செய்யப்போகின்ற தீர்மானம் பழைய காலத்தில் இருந்து வந்ததை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது. உண்மையிலேயே இத்தீர்மானம் எதிர்கால சந்ததியார்களுக்குக் கேடு பயப்பதாக இருக்கக் கூடாது. ஆகையால்தான் இந்தப் பிரச்னையை உண்மையிலேயே ஒவ்வொருவரும் தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படாமல் அணுகவேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படாமல் பேசவேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் எப்போதும் சாந்தத்தோடும், சமாச நோக்கத்தோடும், கனிவாகப் பேசக் கூடிய நண்பர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள், மலையாள நாட்டுக்கு, கன்னட





நாட்டுக்குச் சென்று பாருங்கள், நீங்கள் உயிரோடு திரும்பி வர மாட்டீர்கள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு, அவரே பேசியிருக்கிறார் என்றால்—இந்தப் பிரச்னை விருப்பு வெறுப்புகளை எவ்வளவு தூரத்திற்குக் கிளப்பி விட்டிருக்கின்றது என்பது நன்றாகத் தெரியும். "ஹிந்தியை எதிர்க்கின்ற இவர்கள், இவர்களுடைய கட்சியைச் சேர்ந்த நெடுஞ்செழியன் அவர்களுடைய துணைவியார், ஹிந்தி வளர்ச்சிக் கமிட்டியில் ஒரு உறுப்பினராக இருந்து வருகிறார்" என்று கேள்விப்பட்டேன் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்னையை ஆராய்ந்து பார்க்கின்ற நேரத்திலே, ஒவ்வொரு கட்சித் தலைவர்களின் மனைவிமார்கள் என்னென்ன செய்கிறார்கள் என்பதை ஆராயத்தக்க அளவுக்கு விருப்பு வெறுப்புகள் சென்று விட்டன. உண்மையிலே அம்மையார் அவர்கள் இந்தி வளர்ச்சிக் கமிட்டியிலே இருப்பதாகச் சொல்லப்பட்டதும், திரு. வேதரத்தினம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக அல்ல, எனக்கே ஏற்பட்ட ஆவலின் காரணத்தால், அதைப் பற்றி விசாரித்தேன். அப்படிப்பட்ட ஒரு கமிட்டியிலே அவர்கள் இல்லையென்று அறிகிறேன். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அவருடைய கணவரே சொல்கிறார். விஷயங்கள் இவ்வளவு தூரம் வளருவதற்குக் காரணம் உண்மையிலேயே நாம் எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சி . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி மனைவி வேறுவிதமான கருத்தைக் கொண்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்த சுதந்திரம் உண்டு.

SRI C. N. ANNADURAI : அமைச்சர் அவர்கள் சொல்லிகின்றபடி கணவன் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய கொள்கையை விட மாறுபட்ட கருத்தைக் கொண்ட ஒருவர் துணைவியாக இருப்பது தவறு அல்ல. இதை முதலில் பேசியவர்கள் உணர்ந்திருந்தால் இதைக் குறித்து பேச்சு வந்திருக்காது. ஆனால் விஷயங்களைப் புரிந்துகொள்ளும் துணைவியாக இருந்தால் நல்லது. நான் குறிப்பிட விரும்பியது என்னவென்றால், அந்தப் பிரச்னையை அணுகுகின்ற நேரத்திலே, "அரண்மனை முதல் அந்தப்புரம் வரை" நுழைந்து பார்க்கிற அளவுக்கு விருப்பு வெறுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது தான். இன்றைய தினம் கிளம்பியிருக்கிற முக்கியமான சட்டம், சென்னை மாநில சர்க்கார் தயாரித்திருக்கிற "ஜெனரல் எக்ரிமெண்ட்", அதாவது அறிக்கையைப் பற்றியதாகும். பொது உடன்பாடு வேண்டுமென்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் அந்தக் கமிட்டியிலே கலந்து கொண்டு, அந்த அறிக்கைக்கு ஒப்பமும் அளித்திருக்கிறேன். ஆனால், அது தவறான முறையில், வியாக்கியானம் செய்யப்பட்டும், தப்பான முறையிலே பயன்படுத்தப்பட்டும் வருவதைப் பார்த்து, என்னுடைய கொள்கையையும், கழகத்தினுடைய கொள்கையையும் விளக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் கழகத்தின் சார்பிலே தரப்பட்டுள்ள திருத்தங்கள், இந்த அறிக்கையை வலியுறுத்துவதற்காகவே அன்றி, வலுவற்றதாக ஆக்குவதற்கல்ல.

சாதாரணமாக, ஒரு பிரச்னையை மூன்று வழிகளில் தீர்க்கலாம். இருக்கின்ற முக்கியமான அடிப்படை உண்மைகளை மறந்துவிட்டு, மேலெழுந்தவாரியாக சமரசத்தை ஏற்படுத்தலாம். இன்னொரு சமரசத்துக்காக அடிப்படை உண்மைகளை மாற்றிக்கொள்ளலாம். மேலும் பிரச்னையில் அடிப்படையைப் புரிந்து கொள்ளாமல்கூட சமரசத்திற்கு வரலாம். சமரசம் என்பது முக்கியமானதாக கருதப்படாமல், இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் எண்ணம் மத்திய சர்க்காருக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்படவேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் கருத்து ஐயம்திரிபுற மத்திய சர்க்காருக்கு அறிவிக்கப்படவேண்டும். இந்த நாட்டிலே இந்த விஷயத்தில் எல்லோரும் ஒருமித்த கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற 1965-ல் வர இருக்கிற ஆபத்திலிருந்து, விபத்திலிருந்து, இந்த நாடு காப்பாற்றப்பட ஆங்கிலம் நீண்டகாலத்திற்குத் தொடர்ந்திருக்கவேண்டுமென்று இந்த நாட்டிலே ஒருமித்த கருத்து இருக்கிறது. மற்ற விவகாரங்களிலே ஒருமித்த கருத்து இல்லையென்பது மட்டுமல்ல. ஒருமித்த கருத்து இருப்பது லாபம் இல்லை. நாம் எல்லோரும் சேர்ந்து இந்த அறிக்கையை ஆதரிப்போம் என்று சொல்லுவது சர்க்காருடைய கரங்களை வலுவாக்கும் என்று நான் கருதியது உண்டு. சர்க்காருடைய கரத்தை வலுவாக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம் என்று நான் அந்தக் கமிட்டியிலே குறிப்பிட்டேன். ஆனால் சர்க்கார் கரத்தை வலுவாக்குவதற்காக அந்தந்தக் கட்சிகள் தங்களுக்கு இருக்கின்ற வலுவை குறைத்துக்கொள்ள வேண்டுமென்பது பொருள் அல்ல. அது மட்டுமல்ல, எல்லாக் கட்சிகளும் இந்த அறிக்கையை ஏக மனதாக ஒத்துக்கொள்வதன் மூலம் மத்திய சர்க்காருடைய பிடிவாதத்தை வடக்கே இருக்கின்ற இந்தி வெறியர்களின் வெறித்தன்மையை குறைத்து விடமுடியுமா என்பதைப் பார்த்தால் குறைப்பதற்கு வழியில்லை. ஒவ்வொரு கட்சிக்காரரும் தத்தமது கருத்தினைக் கொண்டவர்களாக இருந்தபோதிலும், கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும்—இந்தி மட்டும்தான் மக்களுடைய மொழி, அதுதான் தேசிய மொழி என்று தீவிரமாகக் கருதுகின்ற கனம் சின்னதுரையும், இந்தி தமிழ் நாட்டுக்கு தேசியமொழி ஆகாது என்ற கருத்தைக்கொண்ட அண்ணாதுரையும்—இவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டுமென்ற அளவிலே ஒருமைப்பாடு இருக்கிறது. அதிலேதான் ஒருமைப்பாடு இருக்கிறது. மற்றவற்றிலே எங்களுக்கு மாறுபாடு இருக்கிறது. இந்த மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தங்கள் கருத்தினை எடுத்துச் சொல்லும்போது—மாநில சர்க்காரின் கருத்தை மட்டுமல்லாமல் இதனைத் தெளிவாக்கினால், இந்த மாநில மக்களுடைய உண்மையான எண்ணத்தை எடுத்துக்காட்டுவதாகும். பிரச்னையை மூடி மறைப்பதிலே பயன் இல்லை. புண்ணை மூடுவதற்காக புனுகு தடவுவதில் பயன் இல்லை. இந்தப் பிரச்னையிலே ஐயப்பாடு இருக்கிறது என்பதை மறுத்துப் பயன் இல்லை. அடிப்படையில் ஐயப்பாடு இருக்கிற காரணத்தினாலேதான் திராவிட முன்னேற்ற கழகம் இன்றைய தினம் என்னென்ன சொல்லுகிறது, என்னென்ன செய்கிறது என்பதை மட்டும் ஆராய்ந்தால் போதாது என்று கருதி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பூர்வோத்திரங்களை ஆராய ஆரம்பித்தார். கட்சிக் கொள்கைகளை ஆராயும்போது பூர்வோத்திரங்களையும் ஆராயவேண்டுமென்கிற அளவுக்கு விருப்பு வெறுப்புக்கள் இருக்கின்றபொழுது, இந்தப் பிரச்னையிலே நாம் வெறும் சமரசத்தை மட்டும் மத்திய சர்க்காருக்கு அனுப்பினால் பயன் இல்லை. இந்த சமரசம் ஏற்றுக்கொள்ளப்படலாமென்று நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையிலே தைரியமாகச் சொல்லியிருக்கிறார். இந்தியத் துணைக்கண்டத்துக்கே ஒரு வழிகாட்டத்தக்க அளவுக்கு சென்னை சர்க்கார் இருக்கிறது, ஆகவே இதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் நேரத்தில், மத்திய சர்க்கார் மூலமாகவோ, அதற்கு பின்னர் வரக்கூடிய சர்க்கார் மூலமாகவோ தமிழகத்துக்கு எந்த ஆபத்தும் வராமல் இருக்க வேண்டுமானால், அரசியல் சட்டத்துக்கு ஒரு திருத்தம் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுவேன். மொழிக் கமிஷன் பற்றி நடைப்பெற்ற அந்த கமிட்டியில் சட்டத்தை திருத்த வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது, என்பதை நிதி அமைச்சர் அவர்கள் நினைவில் வைத்துக்கொள்வார் என்று கருதுகிறேன். அந்தக் கூட்டத்திற்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ ராமமூர்த்தி "It is bad tactics" என்று தான் சொன்னார். அது இப்போதைக்கு நடைமுறைக்கு ஏற்றதல்ல, நல்ல "tactics" அல்ல என்று சொன்னார். நான் பேசுகின்றபோது ராமமூர்த்தி "tactics" என்று சொல்லுகின்றாரே, நாம் நம்ப வேண்டியிருக்கிறது என்று சொன்னேன். அப்படி நான் சொன்னது, ராமமூர்த்தி சொன்னதை ஆதரிப்பது என்று அர்த்தம் அல்ல. "Tactics" என்பதன்





அர்த்தத்தை கம்யூனிஸ்ட் கட்சி நீண்ட நாட்களாக நம்பிக்கொண்டிருக்கிறது என்பதைக் காட்டித்தான் அப்படிச் சொன்னேன். இந்திய அரசியல் சட்டத்தை திருத்தினால், வலுவாக இருக்குமா, இருக்காதா என்பதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. நான் அதைப்பற்றி இப்போது எடுத்துச் சொல்லப் போவது இல்லை. அதற்குப் பிறகு, நடந்திருக்கிற சம்பவங்களை ஆராய்ந்து பார்க்கிற அளவில், எனக்கு கிடைக்கும் தகவல்களைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கிற அளவில், இப்போது மாநில சர்க்கார் இந்திய அரசியல் சட்டத்தை ஏற்ற முறையில் திருத்த வேண்டும் என்று முயற்சிகள் எடுத்து அதை அறிக்கையில் சேர்ப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்திய துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலே இதற்கு கணிசமான ஆதரவு கிடைக்கும் என்று துணிவாகக் கூறலாம். வங்காளத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சி பாஞ்சாலத்தில் நடைபெறுகிற கிளர்ச்சி, மராட்டி நாட்டில் ஏற்பட்டிருக்கும் குமுறல்—இவைகள் எல்லாம் பிற்போக்கு வாதிகளால் செய்கின்ற கிளர்ச்சி என்று சொல்லி விடுவார்களானால், அவர்களிடமுள்ள அரசியல் அகராதி அந்த ஒரு பதத்தைத்தான் அவர்களுக்கு தருகிறது என்று சொல்ல வேண்டும். உண்மையாக ஆராய்ந்து பார்த்தால், இந்திய அரசியல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு ஒரு "political climate" அரசியல் சூழ்நிலை சரியானபடி ஏற்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். நீடித்து இருக்க வேண்டும் என்கிற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். இதை அறிக்கையில் சேர்க்க வேண்டும் என்று எங்கள் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒரு திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறோம். திருத்தம் தருகிறோம் என்கிற போது, மொத்தத்தில் திருப்தி ஏற்படுத்தான் தருகிறோம் என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன்.

"தலையைச் சீவிக் கொண்டு வா" என்று சொல்லும் நேரத்தில், கவர்ச்சியாக உள்ள மங்கையைப் பார்த்துதான் சொல்லுவோமே தவிர கவர்ச்சியற்றவர்களை அல்ல. இவர்கள் தலை சீவாவிட்டால்தான் என்ன என்று சொல்லி விடக்கூடும். இந்த அறிக்கையிலே உயிரோட்டம் இருக்கவேண்டுமானால், நாங்கள் சொல்லுகின்ற திருத்தத்தை சேர்த்துக்கொண்டால்தான் உயிரோட்டம் பெற முடியும். இதில் ஏதோ ஒரு வகையான சமரசத்திற்கு முயற்சி செய்தோமானால் ஒருவருக்கு ஒருவர் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக இருக்குமே ஒழிய இந்த அறிக்கை வலுவிழந்ததாகப் போய் விடும் என்று அஞ்சுகிறேன். ஆகையினால், சென்னை சர்க்கார் கருத்து வெற்றி பெற வேண்டுமானால், இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். அதைத் திருத்துவதற்கு ஏற்ற ஒரு நல்ல சூழ்நிலை இன்றைய தினம் உருவாகிக்கொண்டு வருகிறது. பலருடைய முயற்சியும் இருக்கிறது. அவர்களைப் பற்றி இந்த மாமன்றத்தில் வெகுவாக விவாதிக்கப்பட்டது. அதைப்பற்றி நான் பேசப் போவது இல்லை. எங்களுக்கு தரப்பட்ட அறிவுரைகளைப்பற்றி மட்டும் இரண்டொரு வார்த்தைகளை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் "ராஜாஜி ஒரு புளிய மரம், அதன் நிழலில் எதுவும் வளராது" என்று சொன்னார்கள். அதே புளிய மரத்தின் நிழலில்தான் நீங்கள் வளர்ந்திருக்கிறீர்கள். ஆகையால் நாங்கள் மட்டும் வளர மாட்டோம் என்று சொல்வதில் பொருள் இல்லை. எப்படி இருந்தாலும், "புளிய மரம், நட்டாற்றில் விட்டு விடுவார்கள்" என்றெல்லாம் இந்தப் பிரச்னையின் போது எடுத்துச் சொன்னார்கள். அவருடைய நேர்மையை ஆராய்வது அவ்வளவு சரியல்ல என்று நான் கருதுகிறேன். அது மட்டும் அல்ல. நான் ஒன்று தெளிவாகச் சொல்லுவேன். இந்தப் பிரச்னையில் யார் யாரோடு சேர்ந்தாலும், ஒருவரைக்காட்டி ஒருவர் வாழ வேண்டும், பிழைக்க வேண்டும் என்ற கருத்து அல்ல என்பதை தெளிவு படுத்த விரும்புகின்றேன். இந்த வகையிலேதான் ராஜகோபாலாச்சாரி அவர்கள் வங்காளத்திற்குச் சென்று அங்கே ஒரு மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். வடக்கே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு காணக்கோரி அவர் அங்கே போகவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம், அவருடைய துணையைக்கொண்டு வங்காளத்தில் 4 இடங்களை பெறப் போவது இல்லை. எந்தப்

பிரச்னையிலும், இரண்டு பேர் கூடிப் பேசினால், சந்தேகம், சந்தோஷம் இவைகள் ஏற்படுவது சகஜம். ஆனால் இந்தப் பிரச்னையில் அது பொருந்தாது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காங்கிரஸ் அங்கத்தினர்கள்தான் இதற்கு முன்னதாக அவருடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத்தான் அவரைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அவர் எங்களை எமாற்றுவார்கள் என்று எங்களுக்கு எச்சரிக்கை விடுவதற்கு நாங்கள் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். அந்த எச்சரிக்கையை எடுத்துக்கொண்டு நாங்களும் ஜாக்கிரதையாகத்தான் இருப்போம். அப்படி இருப்பதற்கும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த பிரச்னை அவ்வளவு முக்கியமானது அல்ல.

ஆளும் கட்சியை ஆதரிக்கிறவர்களாக இருந்தாலும் இந்தப் பிரச்னையில் கருத்தை எடுத்துச் சொல்வது கட்சிக்கு அப்பார்ப்பட்டது என்பதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். கட்சிக்கு அப்பார்ப்பட்ட பிரச்னை மட்டும் அல்ல. நான் துவக்கத்தில் சொல்லிய மாதிரி இந்தத் தலைமுறைக்கு மட்டும் ஏற்பட்ட பிரச்னை அல்ல, இது வருங்காலத்தைப் பற்றிய பிரச்னை. வெறும் சமரசம் மட்டும் கண்டால் போதாது. தக்க பாதுகாப்பு இருக்க வேண்டும். இப்பொழுது பாதுகாப்புகள் உண்டாக்கப்படாவிட்டால் எதிற்காலத்தில் விபத்துகள், ஆபத்துக்கள் அடிக்கடி ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் விபத்துக்களும் ஆபத்துக்களும் வந்தபடி இருக்கும் அவ்வாறு. ஆங்கிலத்தில் "டெமாக்கிள்ஸ் ஸ்வோர்டு" என்று சொல்வது போல் தலைக்கு மேல் ஒரு கத்தி தொங்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் கதைக்கு ஒப்ப நம்முடைய தமிழ் நாட்டில் ஒரு புராண கதை உண்டு. யமதர்ம ராஜா தவறான நீதி வழங்கும்போது அவன் தலையில் விழுவதற்கு என்று ஒரு பெரிய பாராங்கல் கட்டி தொங்க விடப்பட்டிருக்கும் என்று. இப்படி நம்முடைய புராணத்தில் ஒரு கதை உண்டு. அந்தப் பாராங்கல் இருக்கும் வரையில் அவனுக்கு பயம் இருக்கும். ஆனால் நிதி அமைச்சர் சொல்லுவார், அப்படி இருந்தால் தான் அவர் நீதியாக நடப்பார் என்று. பாராங்கல்லை வைத்து விட்டு நீதி எது என்பதை நிர்ணயிப்பது சரியல்ல. இந்த அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு நம்முடைய மாகாண அரசியலார் முற்பட்டால் அது ஏதோ குற்றம் போலும். அதில் ஏதோ தவறு காண்கிறோம் என்றும் அர்த்தம் இல்லை. திரு நாகாராஜ மணிகார் சொன்னார் "பிரமாணம் எடுத்துக் கொண்ட பிறகு இப்படி செய்வதா" என்று. அப்படிச் சொல்வதில் பிரயோசனம் இல்லை. பிரமாணம் எடுத்துக்கொண்டது உண்மைதான். நம்முடைய அரசியல் சட்டத்தில் குற்றம் குறைகள் இருக்குமானால் அவற்றைத் திருத்துவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையினால் அதை திருத்துவதால் எந்த விதமான இழிவும் வராது. அப்படித் திருத்துவதற்கு ஆதரவு கிடைக்கும் என்று எனக்கு பாஞ்சாலத்திலிருந்தும் தகவல் வந்திருக்கிறது. வங்காளத்திலிருந்தும் தகவல் வந்திருக்கிறது. மராட்டி பிரதேசங்களிலிருந்தும் தகவல் வந்திருக்கிறது. இந்த மூன்று வெளி நாடுகளைத் தவிர வேறு எந்த வெளிநாடுகளுடனும் எனக்குத் தொடர்பு இல்லை என்று நான் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படி அங்கிருந்து கிடைக்கும் தகவலிலிருந்து நமக்கு ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அந்த எல்லையைத்தாண்டி அதற்கு மேற்கே போய்க்கொண்டிருக்கிறீர்களோ என்று நான் சந்தேகப் பட்டேன்.

**Sri C. N ANNADURAI :** ஆகையினால் நான் இந்த அறிக்கையின் மூலமாக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கின்ற பகுதியை மிக மிக நம்பிக்கையுடன் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடிப்படைப் பிரச்னையைப்பற்றி இங்கே விவாதிக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பூர்வோத்தரத்தைப்பற்றி அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியது தேவை இல்லை என்றும்



கருதுகிறேன். மற்றப்படி இதற்குப் பிறகு வரப்போகிற விவாதங்களில் இதைப் பற்றி எடுத்துக் கொள்ளலாம் என்று நான் நினைத்து இத்துடன் விட்டு விடுகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் பணிவுடன் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வரலாற்றில் ஆறாவது பக்கத்தில் ஒரு பொருள் கிடைக்கும், பதினாறாவது பக்கத்தைப் பார்த்தால் மற்றொரு பொருள் கிடைக்கும். 1924-ம் ஆண்டில் சுயமரியாதை இயக்கம் துவங்க பொறுப்பாளியாக இருந்த பெரியார் ராமசாமி நிறைவேற்றிய தீர்மானத்திற்கு நான் ஒப்புதல் அளித்ததாக கருதிக்கொண்டு என்னை இணைத்துப் பேசினார்கள். எனக்கு இப்பொழுது வயது 48. 1924-ம் ஆண்டில், அந்தக் காலத்து சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு கட்சியினுடைய தீர்மானத்தை உருவாக்கும் தன்மையோ உருவாக்கும் பொறுப்போ எனக்கு இருந்திருக்கும் என்று நமது நிதி அமைச்சர் எதிர்பார்க்கமாட்டார். அந்த வரலாற்றை அத்துடன் நிறுத்தி விடுவானேன் என்று கனம் நிதி அமைச்சரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். 1924-க்கு மேல் இதே பெரியார் ராமசாமி உங்களுடன் இருந்து வைக்கம் சத்யாக்ரகம் நடத்தி சிறைச்சாலைக்குச் சென்று, காந்தியாருடன் துணைவராக இருந்து, முதல் அமைச்சர் காமராசர் அவர்களே காங்கிரஸ் தொண்டராக உடன் வரக்கூடிய பெருமையையும் பெற்றார். இதைப் பார்க்கும்போது, எங்களுடைய வரலாறு அவ்வளவு கேவலமானது அல்ல என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்வேன்.

இவைகளையெல்லாம் எடுத்துப் பேசுவதற்குக் காரணம் என்னவென்றா பல பிரச்னைகளில் நாம் விருப்பு, வெறுப்பு, உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். விருப்பு, வெறுப்புக்கு ஆளாகாதவன் மனித குலத்திலிருந்து மாறுபடக்கூடும். பலர் விருப்பு, வெறுப்புக்கு ஆளாகிறார்கள். அப்படி ஆளாகும் நேரத்தில் கொஞ்சம் நமக்குள்ளேயே கட்டு திட்டங்களை உள்ளத்தில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

எதிர் தரப்பில் இருக்கிறவர்களை கேவலமாகப் பேசுவது, அப்படி கேவலமாக பேசுகிறவர்களுடைய உள்ளத்துக்கு ஆனந்தம் ஏற்படுவது இயற்கை. உடலில் சிரங்கு இருக்கிறது, அதற்கு மருந்து போடுவதற்கு முன்னால் அதைச் சொரிந்து கொண்டிருந்தால் ரத்தம் வரும் வரையில் ஆனந்தமாகத்தான் இருக்கும். அதுபோல் நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் பேசியபோது ரொம்பவும் சொரிந்துகொண்டார். ரத்தம் வந்தவுடன் எரிச்சல் ஏற்பட்டிருக்கிறது. அவர் எடுத்துப் பேசிய பல விவரங்களை யோசித்துப் பார்த்தால் மன எரிச்சலை ஏற்படுத்த பயன்பட்டதே தவிர ஒளியைத் தர பயன் பட்டிருக்காது என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் ஒத்துழைக்கவேண்டும், எல்லோரையும் சுமுகமாக நடத்திச் செல்ல வேண்டுமென்று பேசுகின்ற நீங்கள் உண்மையிலேயே எதிர் தரப்பிலுள்ளவர்கள் சில குறிப்பிட்ட அடிப்படைக் கொள்கைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதை உணர்ந்துதான் பிரச்னைகளை பார்க்கவேண்டும். இரண்டு தடவைகள் இதே சட்ட மன்றத்தில் எங்களை கேவலமாகப் பேசியதால், இத்தனை ஆண்டுகளாக நாங்கள் சேர்த்து வைத்திருக்கும் உணர்ச்சிகள் அழிந்துவிடும் என்று நீங்கள் நம்பவேண்டாம். அப்படி கேவலமாக பேசுவதால் நாங்கள் எங்கள் கொள்கைகளை விட்டுவிட்டு ஓடிவிடுவோம் என்று கருதத்தக்க பலஹீனர்கள் அல்ல நாங்கள். நாங்கள் பலஹீனர்கள் அல்ல என்பதுமட்டுமல்ல, நாங்கள் வைத்துக்கொண்டிருக்கின்ற கொள்கைகளும் பலஹீனமான கொள்கைகள் அல்ல என்பதை நாங்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையிலே, எதிர் கால சந்ததிகளை கட்டுப்படுத்தக் கூடிய மிக முக்கியமான முடிவில் அவசரப்பட்டு ஏதோ சமரசம் காணவேண்டும் என்பதில் நாட்டம் வைக்காமல், இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கான எங்களுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட நேரத்தில் அது எவ்வளவு அவசரமாக ஆக்கப்பட்டது என்பதனை

உணரவேண்டும். அவ்வாறு யார் மூலமாக உணர்ந்திருக்கிறோம் என்றால், இந்திய அரசியல் சட்ட நிபுணர்களாக இருந்தவர்கள், அரசியல் சட்டம் ஆக்கப்படும்பொழுது உடன் இருந்தவர்கள் இவர்களெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களிலிருந்து நாங்கள் அதைத் தெரிந்துக்கொண்டிருக்கிறோம். அன்றையதினம், வெள்ளைக்கார ஆட்சி நீங்கி இந்த நாட்டிற்கு சுய ஆட்சி கிடைத்த நேரத்தில், வெள்ளைக்காரர் போய்விட்டார்கள் என்ற இயற்கை சந்தோஷத்தில், எதிர் காலத்தில் ஆட்சி எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து, ஒருவருக்கொருவர் எதை வேண்டுமானாலும் பரிமாறிக்கொள்ளலாம் என்ற ஆனந்தத்தில் செய்துகொண்ட காரியம் இது. ஹோலி பண்டிகையன்று வேடிக்கையாக ஒருவருக்கொருவர்மீது வண்ணச் சாயத்தை வீசிக் கொள்ளுவதுபோல, ஒருவருக்கொருவர் மீது வாதங்கள் ஆனந்தமாக வீசிக் கொள்ளப்பட்டன. ஆர அமர ஆராய்ந்து இது செய்யப்படவில்லை என்று அரசியல் சட்டத்தை ஆராய்ந்திருக்கும் பெரிய அரசியல் சட்ட நிபுணர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஸிலோன் நாட்டிலிருக்கிற அரசியல் நிபுணர், நீதித் துறை தலைவர், அரசியல் அறிவாளி ஐவர்ஜெனிங்ஸ் (Ivor Jennings) அவர்கள் இந்திய அரசியல் சட்டம் மிக அவசரமாக ஆக்கப்பட்டது என்றும், மிக அதிகமான அளவு கூட்டப்பட்டது என்றும் கூறியிருக்கிறார். பொதுவாக அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்யவேண்டியது ஏராளமாக இருக்கின்றன என்ற கருத்து மேலோங்கி இருக்கின்ற நேரத்திலே, மொழிப் பிரச்னை சம்பந்தப்பட்ட வரையில் இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்து கொள்ளுவது தான் உண்மையிலேயே நமக்கும் எதிர்காலத்திற்கும் நல்லது, நல்ல பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும். அந்தப் பாதுகாப்பை பெறுவதற்காகத் தான் இந்த அறிக்கையிலே எங்களுடைய திருத்தத்தை இணைத்துக்கொள்ளுவது பொறுத்தம் என்பதை நான் நிதி அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சின்னதுரை அவர்கள் இந்திதான் மக்களுடைய மொழி என்று வலியுறுத்தினார்கள், அவர் காட்டிய மன எழுச்சியை அருள்கூர்ந்து நோக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கொண்டிருக்கும் கருத்தை தெளிவாக துணிவுடன் எடுத்துக்கூறினார்கள். அவர்கள் கொண்டிருக்கும் கருத்தை நான் குறை சொல்லவில்லை. அவருக்கு ஏற்பட்ட துணிவையும், தெளிவையும் நான் பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன். இந்திதான் மக்கள் மொழி என்று தமிழகத்தில், இந்த மாநிலத்தில், இந்த ஆட்சி மன்றத்தில், இன்றையதினம் சொல்லுவதற்கு சின்னதுரை அவர்கள் எந்த அளவுக்கு விருப்பப்படுகிறார்களோ, அதே போல் இந்திய துணைக்கண்டத்திலே, இந்த அறிக்கையோடு இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கான திருத்தம் இணைக்கப்படாமல் இருந்தால், இந்திதான் மக்கள் மொழி என்று சொல்லுவதற்கு 1,000 சின்னதுரைகள் முன்வரக்கூடும், லட்சக்கணக்கான பேர்கள் முன்வரக்கூடும். இந்திதான் மக்கள் மொழி என்று வலியுறுத்தக்கூடும். இந்திதான் மக்களுடைய மொழி என்று வலியுறுத்தப்பட்டால், எது மக்களுடைய மொழி என்ற பிரச்னையும், இந்த மக்களுக்கு ஏற்கெனவே ஒரு மொழி இல்லையா என்ற ஆராய்ச்சியும், அந்த மொழிக்கு இந்தி மொழி ஈடா என்ற பழைய பிரச்னைகள் மறுபடியும் வரும். இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று அவர்கள் பேசுகிறார்கள்.

நமது ஆட்சி மொழி இருக்கிறது, அது தமிழ். ஆட்சி மொழியைப் பற்றி பிரச்னை அல்ல. தேசிய மொழியைப் பற்றி பிரச்னை அல்ல. அபிஷியல் லாங்குவேஜ்—அதிகார மொழி எது என்பது பற்றித் தான் பிரச்னை ஆகும். இந்தி மொழி ஆட்சிமொழி என்று சொல்லுகின்ற காரணத்தினாலே அதற்கு ஒரு பெரிய அந்தஸ்து கிடைத்துவிடும் என்ற அச்சத்தோடு நான் கூறுகின்றேன். இப்போது மூன்று வகையான மொழிப் பிரச்னைகள் நம் முன்னால் இருக்கின்றன. ஒன்று தேசிய மொழிப் பிரச்னை;



தேசிய மொழியைப் பொறுத்தவரையில், 10–15 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்ததெல்லாம், " இந்திதான் தேசிய மொழி " என்பது ஆகும். இந்திதான் தேசிய மொழி என்று எடுத்துக்கூறப்படாத காங்கிரஸ் கூட்டங்கள் அப்போது கிடையாது. இந்திதான் தேசிய மொழி என்று கூறாத காங்கிரஸ்காரர் அப்போது கிடையாது. அவ்வாறு கூறாதவர் காங்கிரஸ்காரர் இல்லை என்ற கருத்து அப்போது நிலவி வந்தது. இன்றோ இந்தி தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், இந்தியுடன் தமிழும் மற்ற பல மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மொத்தம் 14 தேசிய மொழிகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை வருத்தப்பட்டாலும், கோபப்பட்டாலும், அந்த 14 தேசிய மொழிகளுடன் ஆங்கிலமும் தேசிய மொழியாக இணைக்கப்படவேண்டுமென்ற கருத்து இந்தியத் துணைக்கண்டத்தில் இப்போது வலுப்பெற்றுவருகிறது. அந்தக் கருத்து வெற்றியும் அடையும். இப்போது, இந்தி மட்டும் தேசிய மொழியாக இருக்கவில்லை ; தமிழகத்திற்கு தமிழும், தெலுங்கு நாட்டுக்குத் தெலுங்கும், மற்ற ராஜ்ய மாநிலங்களில் அந்த அந்த மொழிகளும் தேசிய மொழிகளாக இருக்கின்றன. ஆகவே, இந்தி மட்டுமின்றி, மொத்தம் 14 மொழிகள் தேசிய மொழி அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன. ஆனால், ஆட்சி மொழி அந்தஸ்தைப் பொறுத்தவரையில், தமிழ்தான் தமிழகத்தில் ஆட்சி மொழி. வேறு சில ராஜ்யங்களிலுள்ள மொழிகள் ஆட்சி மொழி அந்தஸ்தைப் பெறாமல் இருக்கக்கூடும். அவைகளை நாம் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அந்த ராஜ்யங்களைப் பார்த்து நாம் பரிதாபப்படுவோம். நமக்கு இருக்கும் துணிவு அந்த ராஜ்யத்தினருக்கு இல்லையே என்று நாம் பரிதாபப்படுவோம். தமிழை இந்த ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக்குவதற்கான துணிவைப் பெற்ற கனம் நிதி அமைச்சருக்கு நன்றி கூற நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். நம் மாநிலத்தில் எது ஆட்சி மொழி என்பதைப் பொறுத்தவரையில் நம்மிடையே அபிப்பிராயபேதம் இல்லை. நம் ராஜ்யத்தில் தமிழ்தான் ஆட்சி மொழி. இந்தியாவில் நிர்வாக மொழி எதுவாக இருக்கவேண்டும் என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையை மூன்று விதமாக நோக்கலாம். இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில் இப்பிரச்னையைப் பார்ப்பது ஒரு விதம். இரண்டாவது, இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கப்போவதில்லை, அது பிரிந்து பிரியப்போகிறது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு, பிரியும் வரையுள்ள இடைகாலத்தில் எது நிர்வாக மொழியாக இருக்கவேண்டுமென்று பார்ப்பது ஆகும். எங்களைப் பொருத்தவரையில் இந்தியா பிரியப் போகிறது என்ற எண்ணத்துடன்தான் இப்பிரச்னையை நாங்கள் அணுகுகிறோம். நிர்வாகத்தில் மத்திய சர்க்காரிடம் எந்த எந்தப் பொருப்புகளை மாத்திரம் ஒப்படைக்கலாம் என்று பார்த்து அவர்களிடம் இருக்கும் அதிகப்படியான பொறுப்புகளைக் குறைத்து விட்டால், அப்போது மத்திய அரசாங்க நிர்வாக மொழி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன் இப்பிரச்னையை அணுகுவது மூன்றாவது விதம் ஆகும். இந்த மூன்றையும் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கனம் நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் தம்முடைய சாமர்த்தியமான வாதத்தைக் காட்டுவதற்காக இவைகளைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டுமென்று அவரை நான் கேட்டுக்கொள்ளவில்லை ; தம்முடைய இதயத்தை அவர் காட்டுவதற்காக இவைகளைப்பற்றி யோசித்துப்பார்க்கவேண்டுமென்று தான் நான் கூறுகிறேன். அன்றையதினம் அவர் பேசியபோது, " உங்களுடைய இதயத்தைக் கேட்கிறேன், சாமர்த்தியத்தை அல்ல " என்று அவ்விடம் பண்ணிப் பண்ணிக் கூறினேன். இதயத்தில் ஆழ்ந்த கருத்துக்களைப் பதியவைத்துக் கொண்டால்தான் பல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும். நிர்வாக மொழியாக இந்திதான் இருக்கவேண்டும் என்ற கருத்தினை வலியுருத்திச் சொல்லும் வெறிபிடித்த தலைவர்களின் கூட்டம் வட நாட்டில் இருக்கிறதென்பதும், அந்தத் தலைவர்களுக்கு, மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்களிடம் மிகுந்த செல்வாக்கு

இருக்கிறதென்பதும் உலகமறிந்த உண்மை. கௌஹாத்தி காங்கிரஸ் மகாநாட்டில் கனம் திரு. சுப்பிரமணியம் பேசிய பேச்சை “the most reactionary speech” என்று ஒரு வட நாட்டு காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவருக்கும் இந்திக்கும் சம்பந்தம் கிடையாது; ஆகவே ஹிந்தி தெரியாதவர்தான் அவ்வாறு கூறினார்.

SRI C. N. ANNADURAI : இந்திக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லாதபோது, ஹிந்தியின் சார்பாக அவர் பேசியிருப்பதிலிருந்து, ஹிந்திக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அந்தச் செல்வாக்கு வளர்ந்துகொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களும் அவ்வாறு கூறுப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த பிரச்னையில், சமரச மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு விரும்புகிறார் என்பதை அவருடைய வார்த்தைகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. இந்தியை எப்படியும் நிர்வாக மொழியாகப் புகுத்த வேண்டுமென்ற மனப்பான்மை கொண்ட கூட்டத்தினரும், ஹிந்தியைப் பக்குவமாக நிர்வாக மொழியாகப் புகுத்த வேண்டுமென மனப்பான்மைகொண்ட கூட்டத்தினரும் வட நாட்டில் இருக்கிறார்கள். இந்த இரு கூட்டத்தினருள், எந்தக் கூட்டத்தினர் வெற்றி பெறுவார்கள், எந்தக் கூட்டத்தினர் வெற்றிபெற மாட்டார்கள் என்று நாம் இன்று அறுதியிட்டுக்கூற முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறிக்கைக்கு ஒப்புமை அளித்திருக்கிறது என்றும் மற்ற எதிர் கட்சிகளும் ஒப்புதல் அளித்திருக்கிறது என்றும் குறிப்பிட்டு இந்த அறிக்கையை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினால், வட நாட்டு இந்தி வெறியர்கள் இங்கே இந்தியைப் புகுத்துவதற்கு இந்த அறிக்கையைப் பயன்படுத்திக்கொள்வார்கள். அவர்கள், தமிழ் நாட்டில் இந்தியை யாரும் எதிர்க்கவில்லை என்று அறிக்கையிலிருந்து தெரிவதால், தமிழ் நாட்டில் ஹிந்தியைப் புகுத்தலாம் என்று சொல்ல முற்படுவார்கள். ஆகவேதான், இந்தியை எதிர்ப்பவர்களும், இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது என்று சொல்பவர்களும், இந்தி மத்திய அரசாங்க ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்று கூறும் அரசியல் சட்ட பிரிவை எதிர்ப்பவர்களும், அந்த பிரிவை திருத்தவேண்டுமென்று வாதாடுபவர்களும் தமிழ் நாட்டில் ஏராளமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதை மத்திய அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்கு நாங்கள் வகைசெய்கிறோம். நாங்கள் இவ்வாறு செய்வது, இந்தித் திணிப்பை எதிர்த்து மத்திய அரசாங்கத்திடம் வாதாடுவதற்கு இந்த மாநில ஆட்சியாளர்களுக்கு உதவும்படியாக இருக்கும் என்று சொல்வேன்.

“நாங்கள் 150 பேர் இருக்கிறோம், எங்களுக்குக் கிடைக்கும் மதிப்புப் போதும்” என்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சொல்லக்கூடும். அந்த மதிப்பை நான் குறைத்துப் பேசவில்லை. எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் வளரக்கூடியவர்கள் என்பது ஜனநாயக தத்துவம்; அவர்கள் வளரக்கூடியவர்கள் என்பதை எண்ணித்தான் பார்ப்பார்கள். ஆகவே, இங்கே இந்திக்கு எதிரிடையான கருத்து எந்த அளவுக்கு இருக்கிறதென்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும், இந்திய அரசியல் சட்டத்திலே திருத்தம் வேண்டும் என்ற அந்தத் திருத்தத்தையும் அதிலே இணைத்துக் கொண்டால்; அதற்குப் பிறகு இங்கிருந்து ஏகமனதாக இந்த அறிக்கையை அனுப்பியதாகக் கொள்ளலாம். ஏகமனதாக அனுப்பப்படுகிற அறிக்கை ஆனாலும், ஒவ்வொரு கட்சியினுடைய கருத்தும் அதிலே குறிப்பிடத்தக்க அளவு இணைந்திருப்பதை வட நாட்டிலே உள்ளவர்கள் உணருவார்கள்.

“வட நாடு எது? தென்னாடு எது?” என்று கேட்கப்பட்டது. அப்படிக் கேட்கும்போது, சாதாரணமாக படத்தில் ஒரு கோடு போட்டுக் காட்டிவிட முடியாது. இதற்கு மேலே இருப்பது வடக்கு, இதற்குக் கீழே இருப்பது



தெற்கு என்று எடுத்துச் சொல்வதற்கில்லை. அப்படிச் சொல்லக்கூடிய அரசியல் தத்துவம் இல்லை. வட நாடு என்று சொல்லும்போது எல்லா மாநிலங்களுக்கும் முழுப் பொருப்பையும், அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளுகிற மத்திய சர்க்காரையும், அந்த மத்திய சர்க்காரோடு நெருங்கிய தொடர்பு இருக்கிற ராஜ்யங்களையும் மனதிலே வைத்துக்கொண்டுதான் வட நாடு, வட நாடு என்று பேசுகிறோம் என்று குறிப்பிடுகிறேன்.

இந்த மொழிப் பிரச்னையில் நாமெல்லோரும் சமரசத்திற்கு வந்துவிட்டோம் என்று தெரிவிப்பதைவிட, அடிப்படையில் சில மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்காருக்கு உணர்த்துவது மிகப் பொருத்தம் என்று கருதி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தத் திருத்தத்தை நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.

மற்றபடி மொழிப் பிரச்னையிலே, மக்கள் மொழியாக இந்திதான் இருக்கக்கூடும் என்று சொல்கிற அந்த நிலைமையை இந்த நாட்டிலே வளர விடாமல் தடுப்பதற்கு ஏற்ற வகையிலே ஆட்சியாளர் இருப்பதைப் பற்றி நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அளவுக்கு அவர்களுக்கு இன்றைய தினம் வெறி இல்லை. நம்முடைய அமைச்சரவை, அதிலும் குறிப்பாக நமது நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களுக்கு தமிழினிடத்திலே நீங்காத பற்று இருக்கிறதென்பதைப் பார்த்து நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். அது கொங்கு நாட்டுக்கே இருக்கும் தனிச் சிறப்பு. கொங்கு நாட்டுத் தமிழ் ஒன்றுதான் பிற மொழிக் கலப்பு இல்லாத தமிழ்; வட மொழியோ, வேறு எந்த மொழியோ கலப்பு அதிகம் இல்லாத தமிழ். அப்படிப்பட்ட கொங்கு நாட்டுச் செல்வர் தமிழுக்காக பாடுபடுவதைப்போல், எதிர்காலத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு, வருங்காலச் சந்ததிகளுக்கு ஆபத்து வராமல் இருக்கவேண்டுமானால், நாங்கள் சொல்லுகிற திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். பதினைந்து பேர் சொல்லும் திருத்ததை 150 பேர் ஏற்றுக்கொள்ளலாமா என்ற அரசியல் கணக்குப் போடாமல் **“Politics is not mere arithmetic but is a political philosophy”** என்ற கருத்தின்படி, எதிர்க் கட்சிகள் வளரக்கூடியன என்ற தத்துவம் என்ற முறையிலே எங்களுடைய திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்களையும் ஆளும் கட்சியையும் வேண்டிக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, எனது கருத்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிய நான் மிக்க வருத்தப்படுகிறேன். இந்தியாவின் தேசிய மொழிகளாகிய பதினான்கு மொழிகளில் தமிழும் ஒன்று என்பதில் நான் எப்போதும் கருத்து வேறுபாடு கொண்டது இல்லை. இந்த ராஜ்ய நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையில்—நிர்வாகம் மாத்திரம் அல்ல—இந்த ராஜ்யத்தின் எல்லாத் துரைகளிலேயும் தமிழுக்கே முதல் இடம் கொடுக்க வேண்டும் என்பதிலேயும் நான் கருத்து வேற்றுமை கொண்டவனல்ல. ஆரம்பப்பள்ளி முதல் சர்வகலாசாலை உட்பட எல்லாப் பகுதிகளிலும் தமிழுக்கே உயரிய அந்தஸ்து கொடுக்கவேண்டும் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். நான் கூறுவதெல்லாம், இந்தியாவின் தேசியப் பொது மொழியாக ஹிந்தி இருக்கவேண்டுமா, ஆங்கிலம் இருக்கவேண்டுமா என்ற பிரச்னை வரும்போது ஆங்கிலம் அல்ல, ஹிந்திதான் என்று மீண்டும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர் 11.2
களே, இப்போது நடக்கிற விவாதமானது நம் முன்பாக இருக்கக்கூடிய a.m
அறிக்கைக்கு ஆதாரமாக நடைபெறுகிறது. இதைப் பொதுப்படையாகப் பார்க்கும்போது நான் சந்தோஷப்படுகிறேன். ஒவ்வொரு கட்சியும் இப் பிரச்னையில் தங்கள் தங்கள் கொள்கைக்கு ஏற்ப சில சில கருதது வேறுபாடு கொண்டவர்களாக இருந்தபோதிலும், தமிழ் நாட்டின் உண்மை சம்பந்தப்பட்ட மட்டில் அதிகபட்ச அளவு ஒன்றுசேர்ந்தே

[Sri M. Kalyanasundaram] [11th March 1958]

இருக்கவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள்
என்பதை இங்கே நடக்கின்ற விவாதம் காட்டுகிறது. இத்தகைய மனோ
பாவம், சூழ்நிலை வளர்வதற்கும், பெருகுவதற்கும் உதவி செய்தால்
தான் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழ் நாட்டின் உரிமைகளைப் பாது
காக்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். மொழி சம்பந்தப்
பட்ட மட்டில் நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவுகள் எதிர்காலத்தை
நினைவில் கொண்டு மிகவும் கவலையோடு எடுக்கவேண்டும் என்பதுதான்
நியாயம். அதேசமயத்தில் நாம் எடுக்கிற முடிவு நம்முடைய தேசிய
ஒற்றுமையை, ஐக்கியத்தை வளர்க்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.
சமரசமான முடிவு அவசியமானது என்பது போலவே அம்முடிவு நீதி
யானதாகவும் இருக்கவேண்டும். சமரசத்திற்காக நியாயத்தை விட்டுக்
கொடுக்கவேண்டும் என்பதாக யாரும் கூறமாட்டார்கள். நியாயம் என்பதை
வலியுறுத்தினால் சமரசத்திற்கு வருவது கடினமாக போய்விடும் என்று
ஆம் நியாயமில்லாத சமரசம் அதிக நாள் நிலைத்திருக்காது. நீடித்திருக்
காது. நம்முடைய முடிவு நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட
சமரசமாக இருக்கவேண்டும்.

அப்படி பார்க்கும்போது இந்த அறிக்கை சரியான அஸ்திவாரத்தை
கொடுக்கிறது என்பது என்போன்றவர்களுடைய அபிப்பிராயம். மொழியின்
முக்கியத்துவத்தைப்பற்றி நான் புதிதாகச் சொல்லவேண்டிய
கருத்து ஒன்றும் இல்லாவிட்டாலும்கூட மொழியின் மூலமாகத்தான்
மக்களுடைய கலை, அரசியல் அறிவு, பொருளாதார நடவடிக்கை தொழில்
வளர்ச்சி ஆகிய எல்லாமே சாத்தியமாகும். ஒரு தேசம் வளருவதற்கு,
மக்கள் அறிவு வளர்ச்சி பெறுவதற்கு மொழி வளர்ச்சி மிகவும் முக்கிய
மானதாகும். இது என்னுடைய கருத்து. அப்படிப் பார்க்கும்போது
பெரும்பாலான மக்களுடைய மொழி எதுவாக இருக்கிறதோ அதுதான்
பொதுமொழியாக இருக்க முடியும் என்பதில் கருத்துமாறுபாடு இருக்க
முடியாது. மக்கள் பேசுகின்ற மொழியே நிர்வாக மொழியாகவும்,
பள்ளிகளில் எல்லா கட்டங்களிலும் போதனமொழியாகவும் இருந்தால்
தான் மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வின்றி அறிவு வளர்ச்சியைப் பெறுவது
சாத்தியமாகும். அந்த அடிப்படை கண்ணோட்டத்திலிருந்து நாம்
இந்தப் பிரச்னையைப் பார்க்கவேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன். அந்த
அடிப்படையில் இந்த அறிக்கை அமைந்திருப்பதனால்தான் இதை எல்
லோரும் ஆதரிக்கவேண்டும் என்பதாக நான் ஒரு திருத்தம் கொடுத்
திருக்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விவாதிக்க
வேண்டும் என்றுதான் தீர்மானம் கொண்டுவந்தார்கள். அதற்குமேல்
ஒரு படி போய் இந்த அறிக்கையில் கண்டிருக்கக் கூடிய பொதுவான
யோசனையை இந்தச் சபை ஆதரிக்கிறது என்ற தீர்மானத்தை கொடுத்
திருக்கிறேன்.

மொழி விஷயத்தில் சில சிக்கல்கள் இருக்கிறது என்பது உண்மை.
இல்லை என்று சொல்ல முடியாது. அந்தச் சிக்கலை சிலர் அரசியல்
காரணத்திற்காக உபயோகப்படுத்தலாம். அரசியல் காரணத்திற்காக
உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்லி மட்டும் நாம் அதை உதாசீனம்
பண்ணிவிடக்கூடாது. வடக்கே இருக்கக்கூடிய எல்லோரும் இந்தி வெறி
யர்கள் என்று நினைத்தோ, தெற்கே இருக்கக் கூடியவர்கள் எல்லோரும்
இந்தியை எதிர்க்கிறார்கள் என்று நினைத்தோ இந்தப் பிரச்னையை எந்த
விதத்திலும் அணுகக்கூடாது. வடக்கேயும் இந்தியை உடனடியாகப்
புகுத்தக் கூடாது, இந்தி பேசாத பகுதி மக்களிடையே இந்தி திணிக்கப்
படக்கூடாது என்கிற அபிப்பிராயம் உடையவர்கள் இருக்கிறார்கள். இந்தி
இருக்கக்கூடாது, ஆங்கிலம்தான் நீடித்து பொதுமொழியாக இருக்க
வேண்டும் என்கிற அபிப்பிராயம் உடையவர்கள் இந்தப் பக்கத்தில் இருக்
கிறார்கள் என்றாலும் இவர்கள் முயற்சி வெற்றி பெறும் என்று நான்
நினைக்கவில்லை. தமிழ்நாட்டிலோ, கேரளத்திலோ, ஆந்திராவிலோ
அப்பேர்ப்பட்ட போக்கை ஆதரிக்கக்கூடியவர்கள் யாரும் இல்லை. அரசியல்
சட்டம் திருத்தி அமைக்கப்படாவிட்டாலும்கூட இன்றைக்கு நாட்டில்



11th March 1958] [Sri M. Kalyanasundaram]

58 சதவீதம் இந்தி பேசும் மக்களின் தொகைதான் அதிகம். இருந்தும்
இன்றைக்கு அவர்கள் ஒரேயடியாகக் கூக்குரல் போட்டுக்கொண்டிருப்ப
தற்குக் காரணம் மத்திய சர்க்கார் செய்கின்ற சில முயற்சிகள். இந்தியை
நிர்வாக மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்ட பகுதியில்கூட அதற்குத்
தக்க நடவடிக்கையை மத்திய சர்க்கார் சரியான முறையில் எடுத்துக்
கொள்ளாததன் காரணமாகத்தான் அவர்கள் ஒரேயடியாக இந்தி கொண்டு
வரப்படவேண்டும் என்கிற கூக்குரலை எழுப்ப ஆரம்பித்துவிட்டார்கள்.
இப்பேர்ப்பட்டவர்கள் காங்கிரஸ் கட்சியிலும் இருக்கலாம். அதேபோல
தீவிரமாக இந்தி திணிக்கக்கூடாது என்கிற கருத்து உடையவர்களும்
வடக்கே இருக்கிறார்கள். இப்படி பலவிதமான சிக்கல்கள் உள்ள அந்தப்
பிரச்னைக்கு நமது ராஜ்ய சர்க்கார் செய்திருக்கும்படியான தீர்மானம்
சரியான தீர்ப்பாக இருக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. அமைச்சர்
அவர்கள் பேசியபோதும், இதர அங்கத்தினர்கள், கட்சித் தலைவர்கள்
பேசிய போதும் ஓர் உண்மை நன்றாகத் தெரிந்தது. எல்லோருக்கும்
தமிழ்நாட்டின் உரிமையை, அந்தஸ்தைக் காப்பாற்றும் அக்கறை இருக்
கிறது. அதேசமயத்தில் இந்தியாவின் பொதுப்படையான ஐக்கியத்திலும்,
ஒற்றுமையிலும் நமக்கு அக்கறை இருக்கவேண்டும் என்பதை மறுக்க
முடியாது. இந்தி மொழியே கூடாது என்று இன்றைக்குச் சொல்வதும்
தேச நலனைக் கருத்தில் கொண்டவர்கள் சொல்லக்கூடியது அல்ல.
இந்தி இன்னமும் சரியான வளர்ச்சியை அடையாத நிலையில் இருக்கும்
போது உடனடியாக இந்தியைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்று கருது
வதும் தேச நலனில் அக்கறையுள்ளவர்கள், தேச முன்னேற்றத்தில்
அக்கறையுள்ளவர்கள் சொல்லக்கூடிய யோசனையாக இருக்க முடியாது.
இந்த இரண்டு தீவிரமான கருத்துக்களுக்குமிடையே சமரச யோசனையாக,
நீதியை அடிப்படையாகக் கொண்ட யோசனையாக நம்முடைய தீர்மானம்
அமைந்திருக்கிறது.

மக்களுடைய ஆட்சி மக்கள் பேசும் மொழியிலேயே இருக்கவேண்டும்
என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. நம்முடைய ராஜ்யத்தைப்
பொறுத்தவரையிலும் தமிழ் பிரதேச மொழியாதலால் தமிழிலேயே
நிர்வாகத்தை நடத்துவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு
வருகிறது. பம்பாய் ராஜ்யம் தவிர இதர ராஜ்யங்கள் எல்லாம் மொழி
வழியாக அமைந்துவிட்டது. இப்படிப்பட்ட கோணத்திலிருந்து பார்க்கும்
போது இனி ஆங்கிலம் இங்கெல்லாம் நீடிப்பதற்கு வழி இல்லை. ஆகவே
மத்திய நிர்வாகம் எந்த மொழியில் இருக்கவேண்டும், இந்தியாவின் பொது
மொழியாக எது இருக்கவேண்டும் என்பது இப்போதுள்ள பிரச்சனையாக
இருக்கிறது. இந்திதான் இருக்க முடியும் என்பது சொல்லாமலேயே
தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை. ஆனால் அந்த இந்தி மொழியை
வலுக்கட்டாயமாகக் கொண்டுவரக்கூடாது. இந்தி பேசாத மக்களிடையே
திணிக்கக்கூடாது என்பது போன்ற நியாயமான அடிப்படைக் கருத்துக்களை
எல்லாம் உள்ளே கொண்டு பார்க்கும்போது இப்போது நமது ராஜ்ய சர்க்
கார் செய்திருக்கும்படியான முடிவு நேர்மையானது, சமரச மனோபாவத்
தோடு, நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்கிற காரணத்தினால்
இந்தச் சபை அதை ஒருமனதாக ஆதரிக்கவேண்டும் என்பது
என்னுடைய கருத்து.

அதற்குப் பதில் ஆங்கிலம் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்று இருக்
கிற கொள்கை அபாயகரமானதாகும். அதற்கு என்ன அவசியம் இருக்
கிறது என்று எனக்கு புரியவில்லை. சிலர், ஆங்கிலத்தின் பெருமையைப்
பற்றிச் சொன்னார்கள். ஆங்கில மொழிக்கு நாம் விரோதமானவர்கள்
அல்ல. ஆங்கிலம் இந்த நாட்டிலேயே இருக்கக்கூடாது என்று நாங்கள்
சொல்லவில்லை. ஆனால் ஆங்கிலத்தில்தான் விஞ்ஞான அறிவு பெற
முடியும், நவீன காலத்தில் ஆங்கிலத்தில்தான் நிர்வாகம் நடத்த முடியும்
என்பது அதில் பிரதிபலிக்கிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.
எனக்கு முன் பேசிய அங்கத்தினர், இந்தத் திருத்தத்தைக் கொடுத்
திருக்கும் அங்கத்தினர், தமிழிற்கு சக்தியிருக்கிறது என்று கூறியதை நான்
பாராட்டுகிறேன். தமிழிற்கு சக்தியிருக்கிறது என்று சொன்னால் தமிழ்தான்

[Sri M. Kalyanasundaram] [11th March 1958

ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவோம். ஆனால் ஒரு காரியத்தை நாம் நினைவில் கொள்ளவேண்டும். சட்டம் இயற்றுவது முதல் பள்ளிப் படிப்பு வரை, ஒன்றோடொன்று தொடர்புடையதாகும். ஆங்கிலம் மட்டும் ஆட்சிமொழியாக இருக்குமானால், சுப்ரீம் கோர்ட் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும். பார்லிமெண்ட் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும், இப்படி படிப்படியாக யூனிவர்ஸிட்டி ஆங்கிலத்தில் இருக்கவேண்டும், அதிலிருந்து ஹைஸ்கூல், அதிலிருந்து எலிமெண்டரி எட்யூக்கேஷன் வரையில் ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டுமென்ற ஒரு நிலையைக் கொண்டு வருவோம். ஆகவேதான், ஆங்கிலத்தில் இருக்கக்கூடாது என்று நான் சொல்கிறேன். ஆங்கிலத்தின் பெருமையை பற்றிச் சொல்லும்போது ஒரு சில நண்பர்கள் ரஷ்யாவை மேற்கோளாகக் காட்டினார்கள். அந்த அளவு சோவியத் யூனியனை மேற்கோளாகக் காட்டியதற்கு நான் அவர்களை பாராட்டுகிறேன். ஆனால் அப்படி மேற்கோள் காட்டும்போது, விஷயத்தை நன்கு புரிந்து கொண்டு மேற்கோள் காட்ட வேண்டும். ரஷ்யாவில் ஆங்கிலம் கற்க ஆரம்பித்து விட்டார்கள் என்று இங்கு சொல்லப்பட்டது. வெளிநாட்டு பாஷைகளை அங்கு சொல்லிக் கொடுக்க ஆரம்பித்திருப்பது வாஸ்தவமே. அன்னிய மொழிகள் ஐந்தில் கட்டாயம் ஒன்றை கற்றுக்கொள்ளவேண்டும். அப்படி, அந்த ஐந்து அன்னிய மொழிகளில் ஒன்றாகும், ஆங்கிலம். அந்த ஐந்து அன்னிய மொழிகள், ஆங்கிலம், ஜெர்மன், ப்ரெஞ்ச், ஸ்பானிஷ், சைனீஸ், இவைகளாகும். இதில் ஏதாவது ஒன்றைக் கட்டாயம் படிக்கவேண்டும். இப்பொழுது இந்தியையும், உருதுவையும் சேர்த்திருக்கிறார்கள் மாஸ்கோ யூனிவர்ஸிட்டியில். நான் சோவியத் யூனியனிற்கு சென்றிருந்தபோது, தமிழையும் சேர்த்து, தமிழிற்கு ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு தமிழைக் கற்றுக்கொள்ள வசதியிருக்கிறது. ஆனால் எந்தக் கட்டத்தில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்று கேட்டால், கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்குத்தான், இந்த அன்னியமொழிகளில் ஏதாவது ஒன்றை கட்டாயமாக படிக்கவேண்டுமென்று சொல்லி, அது சொல்லித் தரப்படுகிறது. பதினைந்து வயது வரையில் தங்கள் தாய்மொழியில்தான் கல்வி பயின்று வருகிறார்கள் அப்பொழுது, ரஷ்ய மொழி தாய்மொழியாக இல்லாதயிடத்தில் தாய்மொழியோடுகூட ரஷ்ய மொழியும் கற்க வேண்டியிருக்கிறது. ரஷ்ய மொழி தாய்மொழியாக பேசப்படும் இடத்தில் இன்னொரு மொழி கற்கவேண்டியிருக்கிறது. ஆனால் கல்லூரிப் படிப்பிற்கு வரும்பொழுது. நான் மேற்சொன்ன அன்னிய மொழிகளில் ஒன்றை கட்டாயம் படித்தாகவேண்டும். ஆக, அங்குள்ள மக்கள் ஆங்கிலந்தான் அரசியல் மொழியாக இருக்கவேண்டுமென்றோ அல்லது நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என்றோ அங்கு யாரும் சொல்லவில்லை. நிர்வாகத்தில் எந்த இடத்திலும் வெளி நாட்டு மொழி உபயோகப்படுத்தவில்லை. வெளிநாடுகளுடன் உள்ள தொடர்புக்காகவே அந்தந்த மொழிகளை கற்றார்களே தவிர, ஆங்கிலத்தில்தான் விஞ்ஞானமோ, கணிதமோ, சரித்திரமோ, பூகோளமோ கற்றுக்கொண்டு தேர்ச்சி அடையமுடியும் என்று அவர்கள் கருதவில்லை. ஆசிய தேசத்தில் உள்ள ஜப்பானை எடுத்துக்கொண்டால், ஆங்கிலம் மூலந்தான் அவர்கள் தொழில் வளர்ச்சி பெற்றார்களா ? சென்ற இரண்டாம் யுத்தத்தின்போது ஜப்பான் பெரிய வல்லரசின் அந்தஸ்து பெற்றது. ஆங்கிலத்தின் மூலமா என்று நான் கேட்கிறேன் ? சீனாவை எடுத்துக்கொள்வோம். நம்மை விட துரிதமாக முன்னேறி வரும் நாடு சீனா என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். அதன் தலைவரான, மாட்-ஸே-டுங் (Mao-Tse-Tung) அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. ரஷ்ய மொழியும் தெரியாது. சீன மொழிதான் தெரியும். அவர்கள், பிலாஸபி, பொருளாதாரம், நுட்பமான கணிதம் இவைகளில் புலமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆகவே, ஆங்கிலம் தெரியவேண்டுமென்று சொல்வதை என்னால் ஒப்புக் கொள்ளமுடியாது. ஆனால் நம் நாட்டின் சரித்திரம் வேறு. நம் நாட்டில் நாம் ஆங்கில பயிற்சி பெற்றிருக்கிறோம். சுமார் 50 லட்சம் பேர்கள் நம் தேசத்தில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதில் எவ்வளவு பேர்கள் ஆங்கிலத்தில் சிந்தனை செய்து எழுதக்கூடிய சக்தி பெற்றவர்கள் அபூர்வம். ஆங்கிலத்தில் சிந்தனை செய்து எழுதக்கூடிய



11th March 1958] [Sri M. Kalyanasundaram]

சக்தியுள்ளவர்கள், நேருஜியைப் போலவோ அல்லது ராஜாஜியைப் போலவோ வெகு சிலரே இருக்க முடியும். ஆகவே ஆங்கிலம் நிர்வாக மொழியாக இருக்கவேண்டும், ஆங்கிலம் இருந்தால்தான் நாம் நிர்வாகத்தை நன்கு நடத்த முடியும் என்ற கூற்றுக்கு அர்த்தமேயில்லை, அதற்கு அவசியமும் இல்லை. ஆனால் இந்தியன் யூனியனின் ஆட்சிமொழி இந்தியாக இருந்தால் அதன் விளைவு நம் ஜில்லா நிர்வாகம் வரையில் வந்து பாதிக்கும். ஆரம்பப் படிப்பு வரையில் அது வந்து பாதிக்கும் என்பதை உணர்ந்து தான் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தை கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே தான், ஆங்கிலமும் இருக்கட்டும், இந்தியும் இருக்கட்டும் என்று இந்த அறிக்கையில் கொடுத்திருக்கக்கூடிய யோசனையை, டில்லியில் இருக்கக் கூடியவர்களானாலும் சரி, பார்லிமெண்டானாலும் சரி, மத்திய அரசாங்க மந்திரி சபையானாலும் சரி, அங்குள்ள நியாய உணர்ச்சி பெற்றவர்களின் கையைப் பலப்படுத்தும் என்பது என் அபிப்பிராயம். ஆங்கிலம் ஆட்சி மொழியாக இல்லாவிட்டால், அல்லது ஆட்சிமொழியாக்கப்படாவிட்டால், கிளர்ச்சி செய்வோம் என்றும், அதற்காக வேண்டிய அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால் நாடு பிரிந்து போகும், பெரும் ஆபத்து ஏற்படும் என்று சொல்கிறவர்களுக்கு, என்னிடம் ஒரு புத்தகம் இருக்கிறது, அதில் எழுதியிருப்பதை நான் படிக்கிறேன். " **Can the deliberations of the Central Assembly and the transactions of the high offices of State and others exercising authority in the Central Government be permitted to be done in English ? Obviously not. If we desire democracy to be true in fact as well as in form, if we do not want educated men to be appointed to places of power and influence and conduct their affairs apart from the people and the electorate to make popular control real, the State language must be one spoken and understood by large masses of people. Hindi is bound to be the language of the Central Government and the legislature and also of the Provincial Governments in their dealings with each other and with the Government of India** " இது, யார் எழுதியது தெரியுமா ? கோவிந்த் வல்லப பந்த் எழுதியதல்ல, அல்லது டாண்டனும் அல்ல. இந்தியை உடனே கொண்டு வர வேண்டும், இன்றைக்கே வர வேண்டும், எல்லாத் துறைகளிலும் உடனடியாக இந்தி வர வேண்டுமென்று சொல்கிற டாண்டன் எழுதியதல்ல இந்தப் புத்தகம். ஆங்கிலமே நீடித்திருக்க வேண்டும், ஆங்கிலம் போனால் தரம் குறைந்து விடும், ஆகவே அதன் பிரகாரம் அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால் நாடு பிரிந்து போய் விடும் என்று சொல்லும் ராஜாஜி அவர்கள் எழுதியதாகும். **1928**-ம் வருஷத்தில் இந்தி சுபோதனுவின் முகவுரையில் **12-2-28** என்று தேதியிட்டு அவர்கள் எழுதியதாகும். ஆங்கிலம் உடனே அகற்றப்படவேண்டும், இந்தி ஆட்சிமொழியாக வேண்டும் என்று இதை விட யாரும் திறமையாக கூற முடியாது. ராஜாஜி அவர்கள் மத்திய அசெம்பளியிலும், டெல்லி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் விஷயத்திலும் ஆங்கிலத்தை கையாள்வதா ? ஆங்கிலத்தில் நிர்வாகம் நடத்துவதை அனுமதிக்க முடியாது என்று ராஜாஜி அவர்கள் ஆணித்தரமாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி நடத்தினால் ஏற்படும் விளைவுகள் என்ன என்றும் சொன்னார்கள். ஆங்கிலத்தில் நிர்வாகம் நடைபெறுமானால் அது மககளுடன் தொடர்புள்ள நிர்வாகமாக அமைய முடியாது. மக்களை புரிந்து கொண்டு நன்கு பழகக் கூடிய ஒரு மொழியில்தான் ஆட்சி நடைபெற வேண்டும். மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில்தான் நிர்வாகம் நடத்தப்பட வேண்டும். ஆகவே, தேசிய மொழியாக இந்தி மொழிதான் இருக்க முடியும். இப்படிச் சொல்லியிருப்பது, இந்தி வெறியர் அல்ல. ராஜாஜி அவர்கள்தான் இப்படி சொல்லியிருக்கிறார்கள். ராஜாஜி அவர்கள் பதவிக்கு வந்தவுடன் இந்தியை கட்டாய பாடமாக்கினார்கள். **1937-38**-ல் ராஜாஜி அவர்கள்தான் அந்தக் காரியத்தை செய்தார்கள்.

இந்த நிலைமையில் ராஜாஜி அவர்கள் வெளியில் இருக்கிறபோது என்ன சொல்லுகிறார், பதவியில் இருந்த பொழுது என்ன சொன்னார்கள் என்பதை

நாம் பார்க்கவேண்டும். அவர் பெரிய அறிவாளி என்பதை பற்றியோ அல்லது அவர் பெரிய அறிவாளி என்று நாம் பாராட்ட வேண்டிய அவசியமில்லை. அவர் அறிவாளி என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்பேர்பட்டவர்களுடைய அறிவும் ஆலோசனையும் நாட்டில் நியாயம் வழங்குவதற்காக பயன்பட வேண்டுமே அல்லாது கட்சி அரசியலுக்காக அல்லது சுய விருப்பு வெறுப்புக்காக பயன் படக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அவர்களுக்கு வேண்டுமானால் மந்திரிகளிடத்தில் ஏதாவது வெறுப்பு இருக்கலாம். அல்லது சில கட்சிகளிடத்தில் கோபம் இருக்கலாம், அல்லது டெல்லி ஆட்சியாளர்களிடத்தில் வருத்தம் இருக்கலாம், அவை என்னவேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் இந்தியாவினுடைய எதிர்காலத்தினுடைய விஷயம் இது. இப்பேர்ப்பட்ட பிரச்னைக்கு அரசியலில் இடம் கொடுக்கக்கூடாது, அதிலும் கட்சி அரசியலுக்கு இடம் கொடுக்கக் கூடாது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இந்த பிரச்னை இன்று அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்துவேற்றுமைக்கு இடம் ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்க விஷயமாய் இருக்கிறது என்பதைதான் சொல்ல விரும்புகிறேன். இன்னும் அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை பாருங்கள் . . .

**"It is not possible or desirable to impose English for our State and on all and you cannot control all the peoples over the representatives all over India."**

இதைவிட யார் சொல்ல முடியும். தென்னாட்டில் மாத்திரமல்ல, இந்தியா பூராவுக்குமே ஆங்கிலம் ஆட்சி மொழியாக வர முடியாது என்று அன்று சொன்ன ராஜாஜிக்கு அன்றைக்கு இருந்த எண்ணம் இன்றைக்கு எங்கே போய் விட்டது என்று கேட்கலாமல்லவா? நான் இப்படி கேட்கும் போது இதை அவரிடமல்லவா கேட்கவேண்டும் என்று சிலர் சொல்லலாம் . . .

**Sri A. VEDARATHNAM** : ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் ராஜாஜி அவர்கள் அன்றைய தினம் இந்தியை கட்டாயபாடமாக கொண்டு வந்தார்கள். இங்கு வேறு விதமாக அவரைப்பற்றி குறிப்பிடுகிறார்கள். நாளைய தினம் இந்த ஸ்டேட்டில் இந்தி கட்டாய பாடமாக வருகிறது என்று தீர்மானித்தால் அதை வரவேற்று ராஜாஜி அவர்கள் முதல் அறிக்கை விடுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER** : இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லையே.

**Sri M. KALYANASUNDARAM** : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. நான் சொல்லுவதை அவர்களும் ஊர்ஜிதம் செய்கிறார்கள். அவ்வளவு தான். பொதுமக்கள் அரசாங்கத்தை கண்காணித்துக்கொள்ள வேண்டுமென்றால் அந்தந்த மொழியில்தான் ராஜ்ய நிர்வாகம் இருக்க வேண்டும் என்பதை ராஜாஜி அவர்களே சொன்னதை அவர்களுடைய வாக்கியத்திலிருந்தே எடுத்துச் சொன்னால்தான் அதை ஆணித்தரமாக சொல்ல முடியும். ராஜாஜி அவர்களுக்கு எப்போதும் மரியாதை கொடுப்பவன் தான் நான். அவருக்கு கொடுக்கக்கூடிய மரியாதைகளில் ஒன்றும் குறைந்து விடவில்லை. அவருடைய அரசியல் அறிவு எல்லாம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் அவருடைய அறிவு தேசத்தை முன்னுக்கு கொண்டு போவதற்கு பயன்படவேண்டுமே தவிர பின்னுக்கு இழுத்துசெல்வதற்கு பயன் படக் கூடாது என்பதுதான் என் அபிப்பிராயம். இவ்விதம் அவருடைய அறிவு தேசத்தை, பின்னுக்கு இழுத்து செல்வது நமது தேசத்தின் துரதிருஷ்டம் என்பதைதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே இந்த சங்கடத்தை தீர்ப்பதற்கு நம்முடைய இந்த அறிக்கையானது ஒரு சரியான, அடிப்படையான அஸ்திவாரத்தை கொடுக்கிறது என்கிற முறையில் இதை நான் ஆதரிக்கிறேன். அப்படி ஆதரிக்கின்றபொழுது இது எந்த அளவுக்கு இந்தியை கட்டுப்படுத்துகின்றதோ, எந்த அளவு ஆங்கிலத்தை கட்டுப்படுத்துகின்றதோ அதே அளவில் படிப்படியாக இந்தியை கற்றுக்கொள்வதற்கும் அதே சமயத்தில் இந்தியை திணிக்காத முறையில் வழி செய்வதற்கும்



இதில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவே போதுமானது என்று திருப்தி காட்டுவதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. இது ஒரு ஆரம்ப முயற்சி. இந்த முயற்சிக்கு ஒருமித்த ஆதரவை கொடுத்து அதை ஏற்றுக்கொள்ள வைப்போமானால், இந்தி பேசாத ராஜ்யத்திற்கு எல்லாம், நாம் இந்த விஷயத்தில் ஒரே அணி வகுத்து நிற்கக்கூடியவர்கள், இந்த விஷயத்தைப்பற்றி பொறுப்பானவர்கள் நல்ல முடிவை செய்திருக்கிறார்கள் என்று பெருமைப்படுவதற்கும், பின்னால் சரித்திரத்தில் இதைப்பற்றி பெருமையாக குறிப்பிடுவதற்கும் இது ஏதுவாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை யார் வேண்டுமானாலும் தயாரித்து இருக்கலாம். மந்திரி சுப்பிரமணியம்தானே தயாரித்து இருப்பார் என்று சொல்லலாம். அவர்கள் தட்சிண பிரதேசத்தை ஆதரித்தவர்தானே என்று கேட்கலாம். அவர் தட்சிண பிரதேசத்தை ஆதரித்தார் என்பதற்காக அவர் சொல்லக்கூடிய நல்ல யோசனைகளை எதிர்க்கவேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். தமிழன் என்ற உரிமையுடன், தமிழ் நாடு என்ற உரிமையுடன், இதை பார்க்கக்கூடிய சமயத்தில் இந்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இந்திக்கு வரக்கூடிய ஆபத்தை தடுக்கிறோம் என்று நினைப்பது அவ்வளவு சரியல்ல. இந்தி இருக்கவேண்டும் என்பதில், ஆங்கிலத்திற்கு பதிலாக இந்திதான் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்பதல்ல, இந்தியை எந்த அளவில் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதற்கு மேல் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அந்த இடத்தில் இந்தியைத்தான் வைக்கவேண்டும் என்று வருமானால் அந்த சமயத்தில் தமிழை காப்பதற்காக உயிரைக் கொடுக்கிறோம் என்று சொல்லுபவர்களை விட, தமிழை காப்பதற்காக எந்த கம்யூனிஸ்டுகளும் சளைத்திருக்கமாட்டார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தியா ஒன்று என்று கருதக்கூடியவன் நான். தமிழ் நாடு மாத்திரம் என்று நான் குறுக்கி கொள்ளுபவன் அல்ல நான். எங்களுடைய ஆட்சி இன்றைக்கு கேரளாவில் நடக்கிறது, நாளைக்கு டெல்லியில் எங்கள் ஆட்சி நடைபெறும் என்று நினைப்பவன் நான். ஏதோ டென்னிஸ் போன்றவர்கள், மக்களுக்கு அதிகமாக வாக்களித்து விட்டார்கள், ஆகவே அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும் என்று சொல்லுகிறார். நாட்டில் சாதாரணமாக படித்தவர்கள், பணக்காரர்கள், வசதிக்காரர்கள் எப்போதும் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்கின்ற அபிலாஷைகளை கொண்டிருக்கின்ற டென்னிஸ் போன்றவர்கள் அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும் என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் நான் அரசியல் சட்டத்தையே திருத்தவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அரசியல் சட்டத்தில் சில காரியங்களை திருத்தவேண்டியிருக்கிறது. ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரத்தை மாற்றுவதற்காக சில திருத்தங்களை செய்யவேண்டியிருக்கிறது. இதைத்தான் கம்யூனிஸ்டுகள் சொல்லுகிறார்கள். இன்றைக்கு நாட்டுப் பிரிவினையினால்தான் பரிகாரம் காணமுடியும் என்று சொல்லுபவர்கள் 1946–47-ல் இவர்கள் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்தார்களே என்று நைஸாக போடலாம். அப்போது எதற்காக அதை ஒப்புக்கொண்டோம் என்றால் பாகிஸ்தான் நீங்கலாக எஞ்சிய பிரதேசம் சுதந்திரமாக இருக்கட்டும் என்று நினைத்துத்தான் அதை நாங்கள் அப்போது ஆதரித்தோம். இன்று பாகிஸ்தான் அமெரிக்காவிடம் அணுக்குண்டு கேட்கிறார்கள். வெண்ணெயும் சுண்ணாம்பும் பார்ப்பதற்கு ஒன்றாக இருக்கிறது என்பதற்காக சுண்ணாம்பை சாப்பிட முடியுமா? அப்போது இருந்த சங்கடமானது ஒழியட்டும் என்று நினைத்துத்தான் எஞ்சிய பிரதேசம் சுதந்திரம் அடையட்டும் என்று நாங்கள் அன்று ஆதரித்தோம். அதை அன்று காங்கிரஸிலிருந்த சிலரும் ஆதரித்தார்கள். ஆதரித்தவர்கள் கம்யூனிஸ்டுகள் இருக்கலாம். இல்லையென்று சொல்ல வரவில்லை. அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை. சுதந்திரம் கிடைப்பதற்கு எங்களால் ஆனதை செய்தோம் என்று நாங்கள் பெருமைப்படுகிறோம். ஆனால் ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். இன்றைக்கு ஆங்கிலமே இருக்கட்டும் என்று சொன்னால், இன்றைக்கு நாட்டில் செல்வம் குவிந்தவர்கள் ஒரு பக்கத்தில், செல்வமற்ற

வர்கள் ஒரு பக்கத்தில், அறிவு வளர்ச்சியுள்ளவர்கள் ஒரு பக்கத்தில், அறிவு வளர்ச்சி இல்லாதவர்கள் ஒரு பக்கத்தில், என்றிருப்பது மீண்டும் இதே வகுப்புகள் இருந்து கொண்டேயிருக்கும். அதனால்தான் ஆங்கிலம் போகவேண்டும் என்று சொல்லுகிறோம். இன்னும் சிலர் சொன்னார்கள் எல்லோரும் ஆங்கிலம் படிக்கவேண்டும் என்று. அப்படியானால் நான் ஆங்கிலம் படிக்கவேண்டும், என் சம்சாரம் ஆங்கிலம் படிக்கவேண்டும், என் குழந்தைகள் ஆங்கிலம் படிக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் ஆங்கிலம் படிக்க கான்வெண்ட்டுக்குத்தான் அனுப்பவேண்டும். வேண்டுமென்றால் நிதி மந்திரி அவர்களிடத்திலும் கல்வி மந்திரி அவர்களிடத்திலும் இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய சொல்லவேண்டும். ஆகவே ஆங்கிலம் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்கிறயோசனை அபாயகரமானது. ஆனால் ஆங்கிலமும் இருக்கட்டும், இந்தியும் இருக்கட்டும் என்பதுதான் தற்காலமுள்ள யோசனை. இந்தி டெல்லியின் ஆட்சி மொழியாகவே இருக்கவேண்டும். இரண்டு சர்க்காருக்குமிடையே தொடர்புகொள்ள ஹிந்திவேண்டுமா? ஆங்கிலம் வேண்டுமா? என்ற கேள்வி எழலாம். என்னுடைய யோசனை, கூடிய வரையில் ஆங்கிலமே இருக்கலாம்.

(Mr. Speaker in the Chair.)

ஹிந்தி எப்போது சாத்தியமோ அப்போது அது பயன்படட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்குரிய முறையில் டில்லி சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்தால் இந்த இந்தி எதிர்ப்பு வந்திருக்காது. ஆனால் இன்றைக்கு டில்லி சர்க்கார் என்ன செய்கிறார்கள். போஸ்ட் கார்டில் ஹிந்தி போட்டிருக்கிறார்கள். மணியார்டர் பாரங்களை ஹிந்தியில் போட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதால், அவர்கள் ஹிந்திக்குச் சேவை செய்யவில்லை, ஹிந்தி ஒரு காலத்தில் ஆகக்கூடியதற்கே எதிர்ப்பு ஏற்படும். இந்த முறையை அவர்கள் கைவிடவேண்டும். பார்லிமெண்டில் 14 மொழிகளையும் தேசிய மொழியாக ஒப்புக்கொண்ட பிறகு, அங்கு யாராவது தமிழில் பேசினால் அது ரெக்கார்டு ஆவதில்லை. இது ஒரு துரதிருஷ்ட வசமான நிகழ்ச்சி. கொஞ்சம் பணம் செலவானாலும், இந்தப் பதினான்கு மொழிகளில் எதில் வேண்டுமானாலும் பேசினால் அதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படவேண்டும். இதற்கெல்லாம் நடவடிக்கை எடுத்தால் அங்கு இருக்கின்ற தலைவர்களுக்கு ஹிந்தியைப் புகுத்தும் எண்ணம் இல்லை, அவர்களுக்கு நல்லெண்ணம் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள முடியும். ஹிந்தி டில்லியின் ஆட்சி மொழியானால், தமிழுக்கு ஆபத்து கிடையாது, சென்னை ராஜ்யத்திற்கு ஆபத்து கிடையாது என்ற நிலைமை ஏற்படும். ஹிந்தி கற்றுக்கொள்ளவேண்டும் என்று தமிழ் நாட்டிலே சொல்வது கூட சாத்தியமாகும். ஹிந்தி கற்றுக்கொள்ளாததால், உத்தியோகம், கல்வி மற்ற துறைகளில் அது பிரதிகூலமாக இருக்கக்கூடாது என்று மீண்டும் சொல்லிக்கொண்டு, இந்த சபையில் உள்ள எல்லாக் கட்சிக்காரர்களும் யோசித்துத் தயார் செய்த இந்த அறிக்கையை ஆதரிக்கவேண்டும், நிதி அமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை ஆதரிக்கவேண்டும், நான் கொண்டுவந்த திருத்தத்தையும் ஆதரிக்கவேண்டும், அதனால் தமிழ் வளர்ச்சியடையும், ஹிந்தி-தமிழ் முரண்பாடு இல்லாமல் இருக்க ஒரு நியாயமான யோசனையைச் சொல்லுகிறோம், ஆங்கிலத்திற்கு விரோதிகள் அல்ல, மொழி கற்றுகொடுப்பதில் ஆட்சேபனை இல்லை என்று இந்த முறையில் ஏகோபித்து ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** சபாநாயகர் அவர்களே,
11-50 a.m. இந்த விவாதம் முடிவடைகிற நேரத்தில் உண்மையிலேயே எல்லோரும் மனத்திருப்தியும், மகிழ்ச்சியும் அடையக்கூடிய முறையில் முடிகிறது என்பதைப் பார்த்தால் இந்தச் சபை எவ்வளவு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக விளங்குகிறது. பல்வேறு பிரச்னைகள்—சிக்கலான பிரச்னைகள்—விவாதத்திற்குரிய பிரச்னைகள்—நாம் மட்டும் ஒருவரை ஒருவர் தப்பு அர்த்தம் செய்து கொள்ளாமல், உண்மையிலேயே புரிந்துகொள்ளவேண்டும் என்ற அடிப்படையில், நாம்



பல்வேறு பிரச்னைகளையும் பரிசீலிக்க அணுகுவோமானால், இதே முறையில்தான் முடிவுகள் காணமுடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம் கல்விப் பிரச்னையிலும்—இதே மாதிரித்தான் ஒரு சிக்கலான பிரச்னையா எல்லோரும் ஏகோபித்து ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு முடிவை எடுத்து, ஒரு திட்டத்தைத் தயார் செய்து, இப்போது அதை அமுல் நடத்த முற்பட்டிருக்கிறோம். அதை விடச் சிக்கலான பிரச்னை மொழிப் பிரச்னை. ஏனென்றால் இதிலே பல்வேறு உணர்ச்சிகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்வது மட்டுமல்ல, பல்வேறு அரசியல் கருத்துக்கள்—அடிப்படைக் கருத்துக்கள்—இதிலே மோதிக் கொள்ளவேண்டியிருக்கின்றன. அதன் காரணத்தினால் இந்த மொழிப் பிரச்னையிலே முடிவு காண முடியுமா? என்று என்னை அதைரியப்படுத்தியவர்கள் பல பேர் இருக்கின்றார்கள், இந்தச் சிக்கலான பிரச்னையிலே, எல்லாக் கட்சிக்காரர்களையும் கூப்பிட்டு, இப்போது இருப்பதைவிட குழப்பி விடாமல் இருந்தால் அதுவே நலமாக இருக்குமென்று யோசனை சொன்னவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும், தமிழர்களுக்கு இருக்கக்கூடிய பண்பாட்டின்மீது உள்ள நம்பிக்கையின் காரணமாக, கருத்து வேறுபாடு உள்ளவர்களாக இருந்தாலும், நியாயமான அடிப்படையில் ஒரு முடிவு காண்பதில் தடையாக இருக்கமாட்டார்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன்தான் எல்லாக் கட்சித் தலைவர்களையும் இந்தத் தடவையும் கூப்பிட்டு ஆலோசனை கேட்பது என்ற முடிவுக்கு சர்க்கார் வந்தது என்று குறிப்பிட விரும்புகிறேன். அந்த முறையிலே கூடி ஒரு அறிக்கை தயார் செய்து, அந்த அறிக்கையைத்தான் இப்போது சபையின் முன் வைத்திருக்கிறேன். இதிலே இன்னொன்றும் நான் இந்த விவாதத்திற்குப் பிற்பாடு பார்க்கிறேன். தப்பு அபிப்பிராயத்தில் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்துகொள்ளாததால் எத்தகைய விபரீத முடிவுகள் வரக் கூடும் என்றும், அந்தத் தப்பபிப்பிராயம் நீங்கியவுடன் எப்படித் தெளிவு ஏற்படும் என்பதை இங்கு நடந்த விவாதத்திலே நான் பார்க்கிறேன். சில சமயங்களில் தப்பு அர்த்தம் ஏற்பட்டு அதனால் விபரீதம் ஏற்படும். அப்படித் தப்பு அர்த்தம் ஏற்பட்டாலும் இன்றைக்கு நல்ல, சுமுகமான முடிவு ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் பெரு மகிழ்ச்சி கொடுக்கிறது. "காமெடி ஆப் எர்ரர்ஸ்" என்று சொல்வார்கள் அந்த முறையிலே முடிந்திருக்கிறதேயொழிய "டிராஜெடி ஆப் எர்ரர்ஸ்" ஆக முடியவில்லை என்பது புதிய நம்பிக்கையையும், புதிய மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. எதைப் பற்றிக் குறிப்பிடுகிறேன் என்று சபாநாயகருக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். இந்த அறிக்கையைப் பற்றி ஒரு பக்கத்தில் நான் பேசிக்கொண்டிருந்ததும், இன்னொரு பக்கத்தில் கனம் அண்ணாதுரை பேசிக் கொண்டிருந்ததும், அண்ணாதுரை அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசிக் கொண்டிருந்ததும் பத்திரிகையில் வந்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்குமென்று நம்புகிறேன். அதிலே எனக்குப் பெருத்த வருத்தத்தைக் கொடுத்தது என்னவென்றால், அதில் நான் தவறு அல்லது அவர் தவறு என்பது அல்ல—அன்றைக்கு நடந்து வந்த விவாதத்தின் அடிப்படையில், ஒன்று நான் பொய் சொன்னவனாக இருக்கவேண்டும், அல்லது கனம் அண்ணாதுரை பொய் சொன்னவர்களாக இருக்கவேண்டும்.

**Some Hon. MEMBERS:** "பொய்" என்பது அன்பார்லிமெண்டரி வார்த்தை ஆயிற்றே.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** "பொய்" என்று சொல்லவில்லை. "பொய் சொன்னவர்களாக இருக்கவேண்டும்" என்று சொன்னேன். இதில் தவறு இல்லை.

ஆகவே, அது நானாக இருந்தாலும் தமிழர்களுக்கு அவமானம். அல்லது, அண்ணாதுரையாக இருந்தாலும் அது தமிழர்களுக்கு அவமானம், என்று எடுத்துக் கொண்டேன். அதனால்தான் எனக்கு வருத்தம் ஏற்பட்டது. இந்த விவாதம் நடந்த பிறகு ஆறுதல் ஏற்பட்டது என்பதை இன்றைக்குப் பார்க்கிறேன். கனம் அன்பழகன் பேசும்போது குறிப்பிட்டார் "நீங்கள் அறிக்கை கொடுத்ததன் காரணமாகத்தான் அண்ணாதுரை

அறிக்கை கொடுக்க நேர்ந்தது" என்று. நான் ஒரு அறிக்கை கொடுத்ததன் காரணமாக ஏற்பட்ட தப்பு அர்த்தத்தை நீக்கிக் கொள்ளவேண்டு மென்று அண்ணுதுரை அறிக்கை கொடுக்க நேர்ந்தது என்று குறிப் பிட்டார்கள். டிசம்பர் மாதம் 31-ம் தேதி அண்ணுதுரை அவர்கள் "இந்தப் பத்திரிகைகளில் வந்த அறிக்கையைக் குறிப்பிட்டு விளக்கமாக அறிக்கை கொடுத்திருந்தார். 31-ம் தேதி வரையிலும் நான் பேசிய உரைகளையும், கொடுத்த எல்லா அறிக்கைகளையும் என் பார்வைக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டிருந்தேன். விளம்பர இலாகா தன்னுடைய திறமை அத்தனையையும் உபயோகப்படுத்தி எல்லாப் பத்திரி கைகளிலும், அதுவரையில் நான் சொல்லியிருக்கக் கூடியவைகளை—இதைப் பற்றிச் சொல்லியிருக்கக் கூடியவைகளை—பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய எல்லாச் செய்திகளையும் எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். "நம் நாடு"வில் வந்ததை எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒரு சமயம் தவருக ஏதாவது சொல்லியிருப்பேனோ—அண்ணுதுரை ஹிந்திக்கு ஆதரவு கொடுத்து விட்டார்—என்று நான் துருவித் துருவிப் பார்த்தேன். நான் சொன்ன தெல்லாம் "நம் நாடு"வில் வந்திருக்கிறது. "இந்த அறிக்கையானது எல்லோரையும் கலந்து ஆலோசித்து, அவர்கள் ஒப்புக்கொண்ட அடிப்படையில் தயார் செய்யப்பட்டிருக்கிறது" என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லியி ருப்பது பத்திரிகைகளில் பல இடங்களில் வந்திருக்கின்றது. "அண்ணுதுரை தன்னுடைய அடிப்படைக் கொள்கையை விட்டுக் கொடுத்து ஹிந்திக்கு ஆதரவு கொடுத்துவிட்டார்" என்று நான் சொன்னதாக வரவில்லை. நான் முன்பு குறிப்பிட்டது போல் இதற்குச் சிக்கல் "விடுதலை" யால் தான் என்பது இன்னும் ஊர்ஜிதம் ஆகிறது. . . .

**Sri K. ANBAZHAGAN** : அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்து அந்தப் பத்திரிகையில் வந்தவுடனே, ஒரு அறிக்கை மூலமாக விளக்கத்தை தெரி வித்திருந்தால் இந்த மாதிரி ஒரு நிலைமை வந்திருக்காது, அதற்கு மாருக இந்த நாட்டிலே, இந்த நேரத்தில் நல்ல உணர்ச்சிகள் இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : உங்கள் அதிர்ஷ்டமோ, துர திருஷ்டமோ, விடுதலைப் பத்திரிகையை நான் படிக்கிறது இல்லை. வாதம் எல்லாம் வந்த பிறகுதான் அது விடுதலைப் பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆகவே அதற்கு நான் மறுப்புக் கொடுத் திருக்கவேண்டும் என்று அவர்கள் நினைப்பார்களேயானல், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கலாம். இந்த மாதிரி விடுதலைப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்களே, நாமெல்லோரும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசினேமே, ஆகவே இதற்கு விளக்கம் கொடுங்கள் என்று கேட்டு நான் கொடுக்க மறுத்திருந்தால் இந்தக் குற்றச்சாட்டுக்கு அர்த்தம் இருக்கும். விடுதலைப் பத்திரிகையிலோ, அல்லது நான் முன்பு சொன்னதுபோலோ, போட்டியிலே அதை அடிப்படையாகக் கொண்டு, ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வது என்பது பற்றி உங்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியாது. (சிரிப்பு), மொத்தத்திலே என்னை இந்த சங்கடத்திலே இழுத்து விட்டு விட்டீர்களே என்பதைத் தான் தெரி வித்தேன். இப்பொழுது அந்தக் கருத்து ஊர்ஜிதம் ஆகிறது. ஸ்ரீ அன்ப ழகனுக்குச் சொல்லுகிறேன். இந்த மாதிரி தனியாகப் போடுகிற கூட்டங் களிலே அங்கே நடக்கும் விஷயங்களை வெளியிலே சொல்லக்கூடாது என்பது நம்முடைய மரபு. ஆனல் அதற்கு மாருக ஒவ்வொரு சிறிய கருத்தைப் பற்றியும் கூட பேசவேண்டிய கட்டம் ஏற்பட்டுவிட்டது. அந்த அடிப்படையிலே ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பதைக் குறித்து எல்லோரும் வருந்தவேண்டியதே. அதிலே பல்வேறு விவாதங் கள் வேறு ஆரம்பித்துவிட்டன. ஒத்துக்கொண்டோம் என்று சொல்லு கிறீர்களே. அதற்கு கையெழுத்து இருக்கிறதா என்று கேட்டார்கள். ஒத்துக்கொண்ட விஷயத்திற்கு கையெழுத்து இருந்தால் என்ன, இல்லா விட்டால் என்ன. ஸ்ரீ அண்ணுத்துரை அந்த மாதிரிப் பேசினதாக நான் சொல்லவில்லை. அவருடைய கட்சியிலே இருக்கிறவர்கள்—காரியதரிசி தான்



கட்சிக்கு வெளியே முக்கியஸ்தராக இருக்கிறார், அவர் பேசிய பேச்சுக்களை பல இடங்களிலே பார்த்திருக்கிறேன். "சுப்பிரமணியம் அவர்கள் அரசியல் நாணயம் அற்ற முறையிலே "**Political dishonesty**" பேசிவருகிறார்கள் என்று குறிப்பிட்டபொழுது, அவர் என்னைப் பற்றிச் சொல்வதாக இருந்தாலும், நமக்குள்ளே "**Political dishonesty**" என்றால், நமக்கே இழுக்கு ஏற்படக்கூடிய முறையில்தான் இருந்தது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**Sri C. N. ANNADURAI** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்திலே கையாண்ட முறையை "**Political dishonesty**" என்று பத்திரிகையிலே வந்த செய்தியை நான் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியனைக் கேட்டேன். அவர் அந்த முறையிலே சொல்லவில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறார்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நான் மிகவும் மகிழ்ச்சி அடை கிறேன். இதற்காகத்தான் நீங்களே அவர்களிடத்தில் பேசி இதிலே எது நியாயம் என்று தெரிந்துக் கொண்டால் போதும், எனக்குக்கூடச் சொல்ல வேண்டியதில்லை என்று சொன்னேன். நீங்களே விசாரித்துத் தெரிந்து கொண்டதற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே நடந்திருக்கக் கூடிய வாதங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, இந்த வாதப்-பிரதி வாதங்களுக்கு எல்லாம் அவசியம் இருந்ததா என்பதைப் பார்க்கும்போது, தப்பு அர்த்தங்கள் எத்தனையோ காரியங்களிலே ஏற்பட்டுவிடுகின்றன என்பதைப் பார்க்கிறோம்.

இன்றைக்கு நடந்த விவாத அடிப்படையிலே பார்க்கும்பொழுது, இந்த அறிக்கையை இன்னும் பலப்படுத்த வேண்டியது அவசியமா என்ற கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டியிருக்கிறது. சில சமயங்களிலே நாம் பலம் கொடுப்பதாக நினைத்து ஒரு காரியத்தைச் செய்து, அதனாலே பலவீனம் கூட ஏற்படுவதைப் பார்க்கிறோம். அவர்கள் சொல்லக்கூடிய வாதங்களைச் சீர்தூக்கிப்பார்த்து, அந்த அளவிலே நாம் செய்யக்கூடிய முறையிலே பலம் கிடைக்குமா—வெளித் தோற்றத்தில் பலம் அளிக்க கூடியதாக இருக்கலாம், உள்ளபடியே பலம் கிடைக்குமா, அதனால் என்ன நிலைமை ஏற்படும் என்பதைப்பற்றி ஆராயவேண்டும். ஆகவே, மொழிப்பிரச்சினையில் இருக்கக்கூடிய அடிப்படையான கருத்துக்களை சீர் தூக்கிப் பார்க்கவேண்டும். இன்றைக்கு தமிழுக்கு என்று சொல்லும் போது, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பிரதேச மொழிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டுமென்பதில் கருத்து வேற்றுமை கிடையாது. கனம் சின்னதுரை அவர்களும் இந்த நிலையை விளக்கினார்கள். அத னுடைய வளர்ச்சிக்கு எல்லாவிதமான வசதிகளையும், வாய்ப்புக்களையும் கொடுத்தாகவேண்டுமென்பதைப் பற்றியும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் என்னு டைய தாழ்மையான அபிப்பிராயம். அதிலும் கருத்து ஒற்றுமை இருக் கிறது. சில நண்பர்கள் வேண்டுமானல் மாறுபட்ட கருத்தைக் கொண்டி ருக்கலாம். அப்படி வாய்ப்பும், வளர்ச்சியும் கொடுக்கவேண்டுமென்றால், குழந்தைப் பள்ளி முதற்கொண்டு உயர்தரக் கல்வியில் ஆராய்ச்சித் துறை வரையிலும், தமிழ் இடம் பெறவேண்டும். அப்பொழுதுதான் மொழிக்கு வளம் ஏற்படும், வளர்ச்சி ஏற்படும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதற்கான சேவையை என்னால் இயன்ற அளவில் புரிந்து வருகிறேன்.

அடுத்தபடியாக "நம்முடைய தமிழ், நம்முடைய தாய் மொழி" என் பதற்காக, இப்பொழுது அதிலே எல்லாம் இருக்கிறது என்று கருதுவது தவறானது. அது, குழந்தைகளுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுப்பதைப் போல ஆகும். மேலே எடுத்துக் கொள்ளவேண்டிய முயற்சிகளைக் கூடக் கெடுத்துவிடும். ஸ்ரீ அன்பழகன் அவர்களுக்குத் தமிழிலே இருக்கக்கூடிய அன்பும் நம்பிக்கையும் எனக்குத் தெரியும். அந்த அன்பின் காரணமாக,

அந்த நம்பிக்கையின் காரணமாக, இப்பொழுதே நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கே அதை நிர்வாகத்தில் எல்லாத் துறைகளிலும் புகுத்திவிட வேண்டும், கல்வித் துறையில் எல்லாக் கட்டங்களிலும் பாடம் சொல்லிக் கொடுத்து விட முடியும் என்று கருதுவார்களேயானால், அது தவறான கருத்து என்பது ஒருபுறமிருக்க, நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளுக்கும் கெடுதலாக இருக்கும். உண்மையான வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், அதற்கு வேண்டிய வசதிகளையும் முயற்சிகளையும் நாம் செய்யவேண்டும். அந்நிய ஆட்சியின் காரணமாக நமது சமுதாயம் தேங்கிப்போய் விட்டபடியால், நமது கருத்து வளர்ச்சிகள் ஆங்கிலத்தில்தான் ஏற்பட்டிருந்தது, தமிழிலே ஏற்படவில்லை. பேசுகிறவர்கள் ஆங்கிலத்தில் தான் பேசி வந்தார்கள், எண்ணுகிறவர்கள் ஆங்கிலத்தில் தான் எண்ணி வந்தார்கள், எழுதுகிறவர்கள் ஆங்கிலத்தில் தான் எழுதி வந்தார்களேயொழிய, தமிழை உபயோகப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. அதனால்தான் அதன் வளம் குறைந்திருக்கிறது. ஆகவே, அதற்குப் போதிய வளம் கொடுப்பதற்கு எல்லோருடைய ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியமாக இருக்கிறது. சில சமயங்களில் தமிழ் வார்த்தைகளைத்தான் உபயோகிக்கவேண்டுமென்று நினைத்தாலும்கூட, நம்மை மீறி ஆங்கில வார்த்தையைதான் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. பழக்கத்தில் இல்லாத காரணத்தால் சில வார்த்தைகள்—ஒருசமயம் அவைகள் பழைய இலக்கியங்களில் இருக்கலாம்—நமக்கு வரமாட்டேன் என்கிறது. பல கருத்துக்கள் இலக்கியங்களில் கூட இல்லாமல் இருக்கலாம். அவைகளுக்கெல்லாம் புதிய வர்த்தைகள் அமைத்துத்தான் ஆகவேண்டும். புதிய வார்த்தைகள் என்பதனால், அவைகளை ஒதுக்கிவிட வேண்டுமென்ற அடிப்படையில் நாம் போகக்கூடாது. தமிழ் முதலிடம் பெறுவதற்கு வேண்டிய வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், ராஜ்ய கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில், ராஜ்யத்திலே இருக்கக்கூடிய மற்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் தமிழுக்குத்தான் முதலிடம் அளிக்கப்படவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஹிந்தி வெறியர்கள் என்று குறிப்பிட்டார்களே, அவர்களும் இதை ஆட்சேபிக்க முடியாது. நாம் இன்று முடிவுக்கு வரவேண்டிய விஷயம் என்னவென்றால், எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவான ஒரு நிர்வாக அமைப்பு இருக்கிற காரணத்தினாலே அந்த நிர்வாக அமைப்பு எந்த மொழியில் நடைபெறவேண்டும் என்பதற்காக இந்தப் பிரசினையை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தமிழுக்கும் மற்ற எந்த மொழிக்கும் போட்டி கிடையாது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் போட்டி கிடையாது. தமிழுக்கும் ஹிந்திக்கும் போட்டி கிடையாது. ஹிந்திக்கும் ஆங்கிலத்திற்கும் இருக்கக்கூடிய போட்டிதான் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். ஸ்ரீ அன்பழகன் அவர்கள் கூறினார்கள், ஹிந்தியை விரும்பினால் தமிழுக்கு ஆபத்து வந்து விடுமோ, தமிழின் வளர்ச்சிக்கு தடை ஏற்பட்டுவிடுமோ, என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படியானால், ஆங்கிலம் ஹிந்தியை விட அந்நிய மொழி ஆயிற்றே, அது வந்த சமயத்தில் தடை ஏற்படாமல், ஹிந்தி வரும் சமயத்தில் மட்டும் தான் தடை ஏற்பட்டுவிடும் என்று நினைப்பது தவறான கருத்து என்பது தான் என்னுடைய அபிப்பிராயம்.

**Sri K. ANBAZHAGAN**: அமைச்சர் அவர்கள் இப்பொழுது தருகின்ற கருத்தை ஒட்டி நான் விளக்கம் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இங்கே • மாநில ஆட்சி வந்ததில், சட்ட மன்றத்திலும், உயர் நீதி மன்றத்திலும், உயர் தரக் கல்வியிலும், உயரத் தக்க அளவுக்கு தமிழ் இடம் பெறவேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஆனால், மத்திய சர்க்காரை சேர்ந்தவர்களும், மொழி கமிஷனும் அந்த இடங்களிலே ஓர் அளவுக்கு ஹிந்தி இடம்பெறச் செய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற காரணத்தினாலும் இங்கே தந்திருக்கின்ற அறிக்கையிலும் அரசாங்கம் கொடுத்திருக்கிற குறிப்புகளிலேயும் ஹிந்திக்கும் வட்டார மொழிக்கும் போட்டி ஏறபடுகிறது என்பதை நினைவூட்டுகிறேன். ஆங்கிலம் நீக்கப்பட்டு தமிழ் வர வேண்டும் என்ற கருத்தைத்தான் நானும் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் சொல்லுகிறோம். தொடர்பு மொழியாக ஹிந்தி இருக்க வேண்டிய இடத்தில் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். தமிழ் நாட்டை பொறுத்த மட்டில் தமிழ் இருக்க வேண்டும் என்று தான் சொல்லுகிறோம். ஆங்கிலத்திற்கு இடம் தேடவில்லை என்று நினைக்கிறேன்.





**THE HON. SRI C. SUBRAMANIAM**: தமிழின் உபயோகத்தைப் பற்றி கருத்து வேற்றுமை கிடையாது. இப்போது இருக்கும் போட்டி ஹிந்திக்கும் ஆங்கிலத்துக்குமே ஒழிய தமிழுக்கும் ஹிந்திக்கும் அல்ல. தமிழுக்கும் ஹிந்திக்கும் போட்டி வர முடியாது, என்பதை கனம் அங்கத்தினர் அன்பழகனுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரை ராஜ்ய நிர்வாகம், கல்விப் படிப்பு, நீதி மன்றம், ஆராய்ச்சி சாலைகள் உள்பட தமிழ்தான் இருக்க முடியும் என்பதை ஒப்புக் கொண்டாகிவிட்டது. ஒரு சிலர் தொடர்பு வைத்துக்கொள்வதற்காக ரஷ்ய பாஷையோ அல்லது ஜர்மானிய பாஷையோ அல்லது வேறு எந்த பாஷையோ கற்றுக்கொள்ளலாம். அது வேறு விஷயம். ஆகையால் இப்போது இருக்கும் போட்டி ஹிந்திக்கும் ஆங்கிலத்துக்குமே தவிர தமிழுக்கும் ஹிந்திக்கும் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலம் இருந்தால் பாதகம் ஒன்றும் ஏற்படாது, ஹிந்தி இருந்தால் மட்டும் பாதகம் ஏற்படும் என்று சொல்வது தவறான கருத்து.

இந்தியா இருக்கக்கூடிய நிலைமையில் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு அடிப்படை முடிவு காணவேண்டும் என்பதற்காக சர்வ கட்சி மகாநாடு கூட்டி ஆலோசிக்கப்பட்டது. எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய நியாயமாக இருக்கும் என்று சொல்லக்கூடிய ஒரு முறையில் இதை அணுகி ஆலோசித்தோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில், இந்தப் பிரச்சினையில், இரண்டு அடிப்படை கருத்துக்கள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையில் முடிவு எதுவாக இருந்தாலும் சரி, இந்த அடிப்படை கருத்துகளுக்கு முரண்பாடு இருக்க முடியாது. ஒன்று, தமிழ் மொழிக்கு, பிரதேச மொழிக்கு, பிராந்திய மொழிக்கு—அதன் வளர்சிக்கும் வளத்துக்கும் தடை ஏற்படக் கூடிய முறையில் முடிவு ஏற்படக்கூடாது. பிரதேச மொழிக்கு வாய்ப்புகளும் வசதிகளும் கொடுக்கும்படியாக நம்முடைய முடிவு இருக்கவேண்டும். இரண்டாவது, மத்திய அரசாங்கத்துக்கு எந்த மொழி இருக்கவேண்டும் என்ற முடிவு செய்யும்போது ஹிந்தி பேசாத பகுதிகளில் இருக்கின்றவர்களுக்கு கஷ்டம் ஏற்படாத வகையில், கெடுதலான விளைவுகள் ஏற்படாத முறையில் நம்முடைய முடிவுகள் இருக்கவேண்டும். இந்த முறையில் தான் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று என்னுடைய முன்னுரையில் சொன்னேன். இன்றைக்கு நம் தேசம் இருக்கக்கூடிய நிலையில் ஹிந்தி பேசக் கூடியவர்கள் 100க்கு 42 பேர்தான் என்றாலும், மற்ற பாஷைகள் பேசுகின்றவர்களை தனித்தனியாக எடுத்துக்கொண்டால் 7 சதவிதம் 8 சதவிகிதம் அல்லது 10 சதவிகிதம்தான் இருக்கின்றனர். ஹிந்தி மொழியை ஒப்புக்கொண்டு, அரசியல் சட்டத்திலும் அது இடம் பெற்ற பிற்பாடு அதை நீக்கிவிட்டு ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. ஆங்கிலமே வேண்டும் என்று விரும்புகிறவர்களும், ஹிந்தியே வேண்டும் என்று விரும்புகிறவர்களும் இருக்கிறார்கள். இந்த அளவில் ஓர் சமரச அடிப்படையிலேயே இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும் என்று ஆலோசனை செய்து பார்த்தோம். அப்படி பார்க்கும் போது எல்லோரும் ஒப்புக்கொள்ளகூடிய நிலைமையில், இன்றைக்கு ஆங்கிலமும் ஹிந்தியும் இரண்டும், ஆட்சி மொழியாக இருக்கலாம் என்று முடிவு எல்லோராலும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது ஆகையால் நாம் செய்து இருக்கக்கூடிய முடிவை மாற்றி திருத்த வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

மற்றொரு விஷயத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் அண்ணாதுரை அவர்கள் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும் என்கிற அளவுக்குதான் அறிக்கையை ஒப்புக்கொண்டதாக ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதற்குப்பின் நான் வெளியிட்ட அறிக்கையை அவர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இவர்களுக்கு ஏதாவது கஷ்டம் வர வேண்டும் என்பது என் மனதில் இல்லை. அவருக்கு கஷ்டம் வர வேண்டும், சிக்கலில் மாட்டி வைக்க வேண்டும் என்கிற அபிப்பிராயம் எனக்கு இல்லை. இந்த மெமோராண்டம் இனிமேல் அனுப்பக்கூடிய அறிக்கை அல்ல. எல்லோருடைய அனுமதி பெற்று, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியாகிவிட்டது. இதை பரிசீலனை செய்த பார்லிமெண்டரி கமிட்டிக்கும் அனுப்பியாகிவிட்டது.

**Sri M. KALYANASUNDARAM :** வேறு எந்த ராஜ்ய சர்க்காருக்காவது இந்த அறிக்கை அனுப்பப்பட்டதா? அப்படியானால், இந்தி பேசத் தெரிந்த ராஜ்யங்களுக்கா அல்லது பேசத்தெரியாத ராஜ்யங்களுக்கா?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** எல்லா ராஜ்யங்களுக்கும் இந்த அறிக்கையை அனுப்பி வைத்திருக்கிறோம். எல்லோரும் ஒன்றாகக்கூடி செய்யக்கூடிய முடிவு என்பதற்காக எல்லா ராஜ்யங்களுக்கும் அனுப்பப்பட்டது. இந்தி பேசத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்ற அடிப்படையில் அல்ல.

தொடர்ந்து ஆங்கிலமும்கூட இருந்து வர வேண்டும் என்பது நமக்கு மட்டும் நன்மை அல்ல, எல்லோருக்குமே நன்மை என்பது என்னுடைய கருத்து. நிர்வாகம் முறிந்து போகாமல் நடக்க வேண்டுமானால், இந்தி வளர்ச்சி பெறும் வரை, தகுதி பெறுகின்றவரை, ஆங்கிலத்தின் உதவியும் இருந்தால்தான் நிர்வாகம் நடத்த முடியும். இது இந்தியே பேசுகின்றவர்களுக்கும் சாதகமாக இருக்கக்கூடிய முடிவே ஒழிய அவர்களுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய முடிவு அல்ல. உடனே இந்தியைப் புகுத்த வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

நிர்வாகத்திற்கு ஏற்ற முறையில் இந்தி வளர்ச்சி பெறும் வரை, தகுதி பெறும் வரை, ஆங்கிலமும் இருந்துதான் ஆகவேண்டும் என்று கருதுகிறவர்களில் நானும் ஒருவன்.

ஆகையால் நாம் சொல்லுகின்ற இரண்டு மொழிக்கொள்கை, எல்லோருக்கும், இந்தி பிரதேசத்திற்கும்கூட, சரியான முடிவு என்பதில் சந்தேகம் இல்லை. இந்திக்கு எதிர்ப்பாக நான் இதை எடுத்துச் சொல்லவில்லை. ஆகையால் இந்த முடிவு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படையான முடிவு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனதினால் இந்த அடிப்படையில் பார்க்கும்போது இன்றைக்கு யோசித்துப்பார்க்க வேண்டியது ஒன்று இருக்கிறது. இப்பொழுது ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய 17-வது பக்கத்தை எடுத்து விடவேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே கருத்தை தலைவர்களுடைய கூட்டத்திலும் ஆலோசிக்கப்பட்டது. அப்பொழுது கருத்துக்களை தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு அப்படி சர்ச்சை செய்தபிறகு சட்டத்தை மாற்றுவது அவசியம் என்று கருதினால் அப்படிப்பட்ட மாற்றம் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். அதை இரண்டு அடிப்படையில் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. அப்படி இரண்டு விஷயங்களையும் சீர்தூக்கிப் பார்த்து அதன் பிறகு சிபார்சு செய்தால் அதை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன். அப்படி சட்டத்தை மாற்ற வேண்டும் என்று முடிவு செய்தால் அந்த முடிவையும் அந்த அறிக்கையில் போட்டுவிடலாம்.



இன்னொரு கருத்தும் இருக்கிறது, அதையும் நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். கடைசியில் நீங்கள் என்ன முடிவு சொல்லுகிறீர்களோ அதை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன். கருத்துக்களை எல்லோரும் தெரிவித்துவிட்டபடியால் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமென்றால் பிற்பட்டு அரசியல் சட்டத்தை திருத்திக்கொள்வதற்கு இடம் இருக்கிறது. அப்படி நாம் திருத்திக்கொள்வதாக இருந்தால் பார்லிமெண்டில் மெஜாரிட்டி அங்கத்தினர்களை வைத்துக்கொண்டு இதை மாற்றி அமைத்துக்கொள்ளலாம். எல்லா ராஜ்யங்களும் சம்மதித்து, அவர்களுடைய சம்மதம் பெற்றுதான் இந்த சட்டத்தை மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு என்ன பாதுகாப்பு வேண்டுமோ அந்த பாதுகாப்பு அதில் இருக்கிறது. இங்கே பாதுகாப்பு இல்லாமல் சட்டத்தை மட்டும் திருத்திவிட்டால் போதிய பாதுகாப்பு வந்து விடப்போவதில்லை. சட்டத்தை திருத்துவிட்டால் போதிய பலம் வந்துவிடப்போவதில்லை. எது நியாயமானது என்று நமக்குத் தோன்றுகிறதோ அதை நாம் செய்யவேண்டும். நமக்குள் ஒரு ஒற்றுமையான கருத்து இருந்தால் அதை யாரும் எதிர்க்க முடியாது. இதைத்தான் கௌகத்தி காங்கிரஸ் மகாநாட்டிலும் தெரிவித்தேன். மலையாளத்தில் வேறு விதமாக பேசுகிறார்கள், ஆந்திராவில் வேறு விதமாக பேசுகிறார்கள், கன்னடத்திலிருந்து வருகிறவர்கள் வேறு விதமாக பேசுகிறார்கள். நீங்கள் மட்டும் ஒரு கருத்தை ஏன் சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்கள். ஒருவர் என்பது மட்டும் என்பது இன்றைய பிரச்னை அல்ல. ஒவ்வொருவரும் ஒன்றாக இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒற்றுமைக் கருத்துக்கு இடம் ஏற்படவேண்டும் என்று இந்த அடிப்படையில் கர்னாடகத்திலிருந்து வந்த ஆல்வா அவர்கள் சொன்னார். அதற்குப் பிறகு, இந்தி வெறியர்கள் என்று சொல்வது தவறு, இந்தியில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள், சேத் கோவிந்த தாஸ் போன்றவர்கள்கூட நாம் சொல்வதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் இந்தி வேண்டும் என்று ஆவேசமாகப் பேசக்கூடியவர். அவர்கூட என்ன சொல்லி இருக்கிறார் என்றால் இதைப்பற்றி சென்னையிலிருந்து வருகிறவர்களுக்கு விட்டுவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார். ஆவேசமாக பேசினால் நாமும் ஆவேசமாகக் பேசக்கூடியதாக ஏற்படும், அதற்கு பதில் அவர்கள் ஆவேசமாக பேசுவார்கள், அதற்கு பதில் நாமும் ஆவேசமாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப் பேசுவதில் பிரயோசனம் இல்லை. ஆகவே நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு நியாமான முடிவுக்கு வந்து அதன்படி நடக்கவேண்டும். ஆகவே இந்தப் பிரச்னையை நோக்கும்போது ஆவேசப்படுவதில் பிரயோசனம் இல்லை. நியாயம் எது என்கிற முறையில் ஒரு முடிவு காண வேண்டும். நியாயம் என்கிற முறையில் ஒரு முடிவுசெய்யும்போது இதற்கு ஒரு முடிவு காணமுடியும். அதனால் ஒருவருக்கு ஒருவர் ஆவேசமாகப் பேசுவதில் ஒரு முடிவு காணமுடியாது. இம்மாதிரிதான் ஒவ்வொரு பிரச்னையிலும் காணமுடியும். அதனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் இந்தத் திருத்தம் அவசியமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அதனால் எவ்வளவு பலம் ஏற்படுகிறது என்பதையும் பார்க்கவேண்டும். நமக்கு போதிய பலம் ஏற்பட்டிருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். சட்டத்தை மாற்றி விடலாம் என்று வெகு சுலபமாக சொல்லிக்கொண்டு போகலாம். இப்பொழுது போதிய கருத்துக்களைக் கொண்டு வருகிறார்கள் என்ற முறையில், நாம் முன் சொன்னது நியாயம் என்ற கருத்து நமக்கு இருந்தால் அதில் நமக்கு உறுதி இருந்தால் அதை நாம் எப்போதும் ஆதரித்தாக வேண்டும் என்ற அடிப்படையில் வேலை செய்ய வேண்டுமென்றால் அதற்கு நாம் முதலில் தயாராக இருக்க வேண்டும்; அதை எப்படியும் சாதித்தாக வேண்டும் என்ற அடிப்படையில் வேலை செய்யவில்லை. அதற்கு முதலில் நான் தயாராக இருக்கிறேன். இந்தக் கருத்துக்களைத்தான் கௌகத்தி மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகளுடன் பேசும்போது எந்தக் கருத்துக்களை விரும்புகிறோம் என்பதையும் என்ன முடிவுகள் எடுக்க வேண்டும் என்பதையும் தெரிவித்து இருக்கிறேன். அரசியல் சட்டத்தை மாற்றாமலேயே அவைகளுக்கு எல்லாம்

இடம் கொடுக்கலாம். முதலில் நாம் கருத்துக்களை தெரிவித்து விட்டு
அதன் பிறகு சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்வது சரியல்ல.
அப்படி கருத்துக்களைத் தெரிவித்த பிறகு சட்டம் குறுக்கே நின்றால்
அதன் பிறகு அந்தச் சட்டத்தை திருத்துவதற்கு ஏற்பாடு செய்துகொள்ள
லாம். சட்டம் குறுக்கே நிற்கிறது என்று சொன்னால் அந்த சட்டத்தை
மாற்றித்தான் ஆக வேண்டும். இப்பொழுது சட்டம் இருப்பதால்
அதற்கு உட்பட்டுத்தான் செய்ய வேண்டும். இதில் பேரம் செய்வதற்கு
ஒன்றும் இல்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து ஆலோசனை செய்து ஒரு
முடிவுக்கு வந்து அதை முன்னிலையில் வைத்திருக்கிறோம். இது வியா
பாரம் பேசுகிற மாதிரி இல்லை ; கொஞ்சம் விட்டுக்கொடுங்கள் என்ற
முறையில் பேசுவது இல்லை ; அதற்கு இடமும் கிடையாது. கடைசியான
ஒரு முடிவை எடுத்து அவர்கள் முன்னிலையில் வைத்திருக்கிறோம்.
ஒத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறோம். அதை
களை முன்னிலையில் வைத்த பிறகு சட்டத்திற்கு திருத்தம் செய்ய வேண்
டும் என்று சொன்னால் நாம் முடிவு செய்ததிலேயே பலவீனம் இருக்கி
றது என்று நினைக்கக்கூடும். அதற்கு இடம் கொடுத்தால் சட்டத்தை
திருத்த வேண்டும் என்று சொன்னாலும் நமக்கு பலவீனம் இருக்கிறது
என்று நினைக்கக்கூட இடம் ஏற்படும். அதற்கு நாம் இடம் கொடுக்கக்
கூடாது. ஒரு முடிவு எடுத்துக் கொண்டால் அதையே வைத்துக்கொள்ள
வேண்டும். இப்பொழுது நாம் ஒரு முடிவான கருத்தைக் கொண்டு
வந்திருக்கிறோம். அந்த முடிவை ஏற்றுக்கொண்ட பிறகு சட்டம் குறுக்கே
நிற்கிறது எனறு வரும்போது அப்போது அதை திருத்திக்கொள்வதற்கு
நாம் முயற்சிக்கலாம். அப்போது சட்டத்தை திருத்த வேண்டும் என்று
தெரிவித்தால் அதற்கு இன்னும் கொஞ்சம் அதிகமான பலம் ஏற்படும்
என்பது என்னுடைய கருத்து. ஆகவே நான் மிகவும் வற்புறுத்திக்
கொள்கிறேன், இப்போது எடுத்துக்கொண்டிருப்பது சர்க்காருடைய ஒரு
திட்டம் என்ற அடிப்படையில் அல்ல, நாம் எல்லோரும் பொதுவாக
இருந்து ஆலோசனை செய்து அதற்குப் பிறகுதான் இன்றைய தினம்
உள்ள முடிவை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது எடுத்துக்
கொண்டிருக்கக்கூடிய முடிவுதான் நியாயமான முடிவு. அந்த அடிப்ப
டையில்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்ற இறுதியான
நம்பிக்கையை நாம் கொண்டிருக்கிறோம். இதையே வெளியில் தெரிவிக்க
வேண்டுமென்ற அடிப்படையில் இந்த பிரச்னையில் இங்கு பங்கு எடுத்துக்
கொள்ளவேண்டும். கனம் கல்யாணசுந்தரம் மெமோராண்டத்தை ஆத
ரித்துக் கொடுத்திருக்கும் தீர்மானத்தை எடுத்துக்கொண்டால் உண்மையில்
பலம் கிடைக்கும். அதனால் அவர்களுடைய கருத்துக்களை விட்டுவிட்டதாக
அர்த்தம் இல்லை. அந்தக் கருத்துக்கள் அப்படியே இருக்கும் என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன். சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று
சொன்ன கருத்துக்கள் அப்படியே இருக்கும். அப்படி இருக்கும்போது
இந்த திருத்தங்களை வற்புறுத்த வேண்டியது அவசியம் இல்லை. பின்னால்
சரியில்லை என்று சொன்னால் அப்பொழுது இதை எடுத்துக்கொள்ளலாம்.
பின்னால் இதைப்பற்றி சொல்லக்கூடிய சட்டம் வரும். ஆகவே இப்
பொழுது அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று சொல்வதற்கு
இடம் இல்லை. ஆகவே அவர்கள் இதை யோசித்துப் பார்க்கவேண்டும்.
இப்பொழுது இருக்கக்கூடிய தற்கால நிலைமை மட்டும் அல்ல பிற்காலத்தில்
நம்முடைய பலம் எப்படி இருக்கிறது. இந்தப் பிரச்னையைத் எப்படித் தீர்க்க
வேண்டும் என்பதைப்பற்றி யோசித்துக்கொள்ளலாம். தற்போது கட்சிக்கு
ஏற்படக்கூடிய சிறு அனுகூலத்தை மட்டும் பார்க்காமல் பின்னால் எவ்வ
ளவு பிரதிகூலம் இதனால் ஏற்படும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்
டும். இந்த மனதில் வைத்துக்கொண்டு இந்த திருத்தத்தை வற்புறுத்தா
மல் இருக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அது தான் நல்ல "டாக்
டிக்ஸ்" என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய கருத்து
க்களை தெரிவித்த பிறகு கருத்து வேறுபாடுகள் இருக்குமென்று தெரிய
வில்லை. அதை எப்படி அடைவது என்பதைபற்றி நாம் யோசித்துப்
பார்க்கவேண்டியதாக இருக்கிறது. ஆகவே நாம் இன்றைக்கு எடுத்திருக்க



கூடிய முடிவு நாம் சொல்லி இருக்கக்கூடிய பிரச்னை உண்மையிலேயே நியாயமானது. அது நியாயம் என்று நம்புவோமானால் இந்த திருத்தங்களுக்கு இடமே இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

I think the best course to adopt, which will serve the object of protogenists of Prohibition and the opponents thereof, is to dilute drinks like toddy, etc., to such an extent that any amount of drinking would not make a man drunk. This is what is done in Britain, Germany and other countries. Labour classes in these countries enjoy a glass or two of beer. The cost of this drink is kept at a



11th March 1958]

minimum and nobody gets drunk on many glasses of beer for the reason the drink is diluted. This drink may be rationed. I strongly plead for the adoption of this method instead of total Prohibition. Total Prohibition will never be a success.

Coming to the Provisions of the Bill, I am totally opposed to the more regressive enforcement of the Prohibition law.

What is required is the creation of public opinion and a body of persons believing in Prohibition should generate that public opinion and salvage addicts from drink. I am glad the Select Committee has agreed to the constitution of a Central Committee for the State to implement the ideology of Prohibition.

The Legislature takes a very great responsibility in placing in the Statute provisions which will infringe the liberty of the individual and which will be disobeyed by the public. The liberty of the individual should not be touched unless it is inconsistent with the security of the State or for the good of the individual. What is good for the individual is for the individual himself to judge except in extreme cases. The rigour of the law should be reduced if Prohibition is to be successful, it is idle for the Protogenist to say that Prohibition has been successful, but requires more stringent enforcement. The plain fact is that Prohibition is a failure, and protogenists do not want any investigation on the question whether it has been a success or a failure and they want to introduce more stringent provisions for enforcing prohibition. These are objectionable from the point of view of the individual and from the point of view of demoralisation of the public, who will try to evade laws which are too stringent. This Bill may further contribute to the failure of Prohibition than to its success.

It is a pity that our own experience and that in other countries have no effect on us. Perhaps the American writer is right when he said that history teaches us one thing and one thing only and that is it teaches us nothing.

I plead for the constitution of a High Power Committee to assess the effect of Prohibition for the last twenty years and more. I plead for partial Prohibition. I plead for an All-India effort on Prohibition. I plead for decreasing instead of increasing penal provisions in the enforcement of the law of Prohibition.

MADRAS, V. K. JOHN.
*8th March* 1958.

III

There could be no two opinion about the need to put down the evil of drinking. The Prohibition Act has been in force for a considerable length of time in our State and also in some other States in our country. We also hear of this kind of experim[illegible] ...acres.

[11th March 1958

other countries. Based on these experiments, the correct lesson to draw is, that this is not on objective which could be achieved by stringent repressive measures or by efficient administration.

Basically the problem of drinking is social and economic one and should be tackled as such. To the extent the cultural and economic level of the masses is raised, to that extent alone the object of Prohibition could be achieved. True, Prohibition offences are on the increase. It is not due to want of severity in our Prohibition laws.

In the name of enforcing Prohibition laws, there has been excesses by the Police.

Sufficient efforts were not taken to redress the grievances of the ex-toddy tappers and measures for rehabilitating the ex-toddy tappers and ex-addicts have been far from adequate. Rural unemployment is on the increase.

The success of the Prohibition policy would depend more on the tackling of the above problems, rather than giving more powers to the Police, who are already being accused of excesses.

Further, the steps taken by the Government to educate the masses is very weak and ineffective. The consciousness of the people should be raised through persuasion and proper education.

The way in which the already existing provisions of the Prohibition law were enforced, has only resulted in creating a sort of apathy if not antogonism among the people.

In this background, the attempt to give more powers to the Police and to make the punishment more stringent, would result in creating further resistance from the people and thus endanger the popular appeal of Prohibition policy.

MADRAS, N. K. PALANISAMI.
8th March 1958.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 12th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : The hon. Member (Sri Rasheed) is not here. The question and reply will be printed in the proceedings.

*Fire service station*

* 288 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the frequent fires, causing death and destruction to the people living in Ambur and Vaniyambadi Municipalities; and

(*b*) whether the Government have considered the opening of a fire station at Vaniyambadi or Ambur?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The question of opening a fire station at Vaniyambadi has been examined by the Government and it has been decided to take it up as well as the question of opening a new fire station at Ambur in due course in accordance with a programme of priority to be drawn up in the matter of opening of new fire stations in the State.

*Kosavampatti tank*

* 289 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount spent by the Government for repairs to Kosavampatti tank in the Namakkal taluk, Salem district, the ayacut of the tank and the area in the tank now encroached upon by private people?

**THE HON. SRI M. A. MANICKAVELU :**

| | |
|---|---|
| 1 Amount spent by the Government for repairs .. .. .. .. .. | Rs. 8,507· |
| 2 Ayacut of the tank .. .. .. .. | 42·55 acres. |
| 3 Area now encroached upon by private people .. .. .. .. .. | 19·07 acres. |

[12th March 1958

### Beedi factories

* 290 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of beedi factories registered under the Factories Act, 1948, during the period from 1949 to 1957—year-war; and

(*b*) the number of workers in them?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] containing the required information is placed on the Table of the House.

* Sri V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்தில் சுமார் ஒரு லட்சம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த ராஜ்யத்தில் 1957-ல் மொத்தம் 49 பீடித் தொழிற்சாலைகள் இருந்தன என்றும், அவைகளில் வேலை செய்துவந்த பீடித் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 1,458-ஆக இருந்தது என்றும், மேஜையில் வைக்கப்பட்டுள்ள பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக நமது சர்க்காருக்கு, இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், குறைந்த வருமானம் வருகிறது என்று தெரிகிறது அல்லவா ? பீடித் தொழிற் சாலைகளின் எண்ணிக்கையும், பீடித் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் இம்மாதிரி குறைவான கணக்கில் தெரிவிக்கப்படுவதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : 1948-ம் வருஷத்திய பாக்டரிச் சட்டத்தின் கீழ் ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகள் எத்தனை என்று கனம் அங்கத்தினர் கேள்வி போட்டிருக்கிறார். அந்தப் பிரகாரம், 1957-ம் வருஷத்தில் இந்த ராஜ்யத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்த பீடித் தொழிற்சாலைகள் 49 தான். பீடித் தொழிலில் வெவ்வேறு முறைகள் இருக்கின்றன. அவைகள், காண்ட்ராக்டர் முறை, ஏஜெண்ட் முறை, பிராஞ்சு மானேஜர் முறை ஆகியவைகள் ஆகும். அந்த முறைகளில் இயங்கும் தொழிற்சாலைகள் பாக்டரிச் சட்டத்தின்கீழ் வருவதில்லை.

Sri V. K. KOTHANDARAMAN: 1948-ம் வருஷத்திய பாக்டரிச் சட்டம் குறிப்பிட்ட 20 விதமான தொழிலாளர்களுக்குத் தான் எல்லாவிதமான சலுகைகளும் கொடுக்கப்படுவதற்கு வகை செய்திருக்கிறது. அதற்கான 20 தொழில்களும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. சில பீடித் தொழிலாளர்களுக்கு அந்தச் சலுகைகளை கொடுக்காமல் இருப்பதற்காக, பீடித் தொழிற்சாலை முதலாளிகள், சில வேலைகளை அந்தச் சட்டத்திற்கு உட்படுத்தாமல் இருக்கிறார்கள். அதாவது, புகையிலை போன்றவைகள் எல்–2, லைஸென்ஸுக்கு உட்படுத்தப்படாமல் இருப்பது சில வேலைகளை அவர்கள் "அவுட் டோர்" வேலைகளாக வைத்திருக்கிறார்கள். ஆகவே சென்ட்ரல் எக்ஸைஸ் ஆக்டின்படி எல்–2, லைஸென்ஸ் பெற்று வாங்க வேண்டிய பொருள்களுடன் புகையிலை போன்றவைகளையும் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இது சம்பந்தமாக, இருக்கக்கூடிய புகார்களையோ, "ரெப்ரெஸென்டேஷன்"-களையோ கனம் அங்கத்தினர் மத்திய அரசாங்கத்திடம் செய்யலாம்.

Sri M. KALYANASUNDARAM : 1955-ம் ஆண்டில் பீடித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 33-ஆகவும், பீடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,260 ஆகவும் இருந்தது. 1956-ம் ஆண்டில்

[a] Printed as Appendix I on page 257 infra.



12th March 1958]

பீடித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 102 ஆகவும் பீடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,197 ஆகவும் உயர்ந்தன. 1957-ம் ஆண்டில் பீடித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 49-ஆகவும், பீடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,197 ஆகவும் குறைந்தன. அப்போது அவை அவ்வாறு குறைவதற்கு காரணம் என்ன ? முந்தைய வருஷம் ரெஜிஸ்டர் கணக்கில் இருந்து மறு வருஷம் ரெஜிஸ்டர் கணக்கில் இல்லாத தொழிற்சாலைகள் என்னவாயின என்று அரசாங்கத்தார் பரிசீலனை நடத்தினார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : பாக்டரிச் சட்டப்படி ரெஜிஸ்டராகியுள்ள பீடித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை இந்தக் கணக்கில் இருக்கிறது. 1956-ம் வருஷத்தில் 102 பீடித் தொழிற்சாலைகள் இருந்தன என்று கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் 1957-ம் ஆண்டில் 49 பீடித் தொழிற்சாலைகள் இருந்தன என்று கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே என்று சொன்னால், 49 தவிர பாக்கியுள்ள தொழிற்சாலைகள் முந்தைய வருஷத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தபோதிலும் அடுத்த வருஷத்தில் ரெஜிஸ்டர் செய்யப்படவில்லை என்றுதான் அர்த்தம்.

### Coastal Roads

* 291 *Q*.—Sri M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any roads have been constructed along the coast of the Tanjore district ;

(*b*) if so, their total length and cost of construction ; and

(*c*) whether any estimate has been prepared for the construction of new roads ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) No new roads have been constructed.

(*b*) Does not arise.

(*c*) No, Sir.

Sri R. SRINIVASA IYER : சேத்துப்பாடை என்ற கடலோர ரோடு தஞ்சாவூர் ஜில்லாவில் பெயர்பெற்ற ரஸ்தா. அது ராமேஸ்வரத்திற்குச் செல்லக்கூடியதாக இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதை நாஷனல் ஹைவேய்ஸின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் கோரியிருந்தாலும் அது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து மத்திய அரசாங்கத்தாரால் நீக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ? அதை ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கத்தைச் சேர்க்கச் செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ராமனுதபுரத்தையும் நாகப்பட்டினத்தையும் இணைக்கக்கூடிய கடலோரச்சாலைத் திட்டங்கள் 14 தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஆகும் செலவின் மதிப்பீடு ரூ. 50,50,775. மத்திய ரோடு நிதியிலிருந்து பணத்தை எடுத்து இந்தத் திட்டங்களுக்குச் செலவு செய்யவேண்டுமென்று கோரியிருந்தோம். அதற்கு மத்திய அரசாங்கத்தார் நிதி வசதியில்லை என்று மறுத்துவிட்டார்கள். ஆகையால் நிதியில்லாத காரணத்தினால்தான் அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

Sri V. SUBBIAH : தூத்துக்குடி–சேது சமுத்திரம் கடலோர ரோடு எவ்வளவு தூரம் வரையில் போடப்பட்டிருக்கிறது ? அந்தத் திட்டம் எப்போது முடிவடையும் ?

[12th March 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூலக் கேள்வி தஞ்சாவூர் ஜில்லாவைப் பற்றியது ஆகும். கனம் அங்கத்தினர் கேட்கும் தகவலுக்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. VEDARATHNAM : இந்த ரஸ்தா திட்டம் முழுவதையும் ஒரே சமயத்தில் வேலைக்கு எடுத்துக்கொள்ளாவிட்டாலும், துண்டு துண் டாகவாவது நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் இப்போது இத்திட்டத்தின் எந்தப் பகுதியின் வேலைகள் நடக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் அர சாங்கத்தின் யோசனை. மொத்தம் 14 திட்டங்கள் இருக்கின்றன. அவை களுள் ஒன்றுதான் மிமிஸலையும் தஞ்சாவூரையும் இணைக்கக்கூடிய ரோடு. இந்தத் திட்டத்தின் கீழ் "Soil stabilisation, Construction of minor culverts and bridges" ஆகிய வேலைகளும் செய்யப்படும். இந்தத் திட்டங்களின் செலவிற்காக மத்திய ரோடு நிதியிலிருந்து பணம் பெறு வதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : ராஜாமடத்திற்கு அருகே அக்னியாறு என்று ஒரு பெரிய ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் நிறைய மணல் இருக்கிறது. பக்கத்து ஊர்களிலிருந்து ராஜாமடத்திற்கு வருபவர்கள், ஆற்றைக் கடந்து வந்தால் 3 மைல்கள்தான் பிரயாணம் செய்ய வேண்டி யிருக்கும். ஆற்றில் மணல் இருப்பதால் அவர்கள் அவ்வாறு வர முடிவ தில்லை. இதன் காரணமாக அவர்கள் 8 மைல்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அக்னியாற்றில் ஒரு ஓடுபாலத்தையாவது கட்டுவதற்கு இந்த சர்க்கார் முன் வருமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்படிப்பட்ட வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்பதுபற்றி எனக்கு மாறுபட்ட அபிப்பிராயம் இல்லை. ஆனால், நிதி வசதியை அனுசரித்துத்தான் இந்தத் திட்டங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது.

SRI M. D. THIAGARAJA PILLAI : இந்தத் திட்டங்களுக்காக எவ்வளவு பணம் இதுவரையிலும் மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப் பட்டது ? கொடுக்கப்பட்ட தொகைகள் பூராவும் செலவழிக்கப்பட்டனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய ரோடு நிதியிலிருந்து கொடுக்கப்படும் எல்லாப் பணமும் அப்போதைக்கப்போது செலவழிக்கப்பட்டுத்தான் வருகிறது. இந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை.

SRI A. VEDARATHNAM : கடலோரச் சாலைகள் திட்டத்தின் ஒரு பகுதியாகிய நாகப்பட்டிணம்-வேதாரண்யம் பாதைத் திட்டத்திற்கு இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது ? இந்தத் திட்டத்தின்கீழ் கள்ளிக் கோடு ஆற்றுப்பாலத் திட்ட வேலை துவக்கப்பட்டிருக்கிறதா ? இல்லா விட்டால் அது எப்போது துவக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன். ராமனுதபுரத்திலிருந்து நாகப்பட்டினம் வரை கடலோரச் சாலைகள் அமைக்கும் விஷயத்தில், 14 திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக் கின்றன. அந்தத் திட்டங்களில் கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதும் ஒன்று ஆகும். இதுவரையில் அவைகளில் எந்தத் திட்டமும் எடுத்துக் கொள்ளப் படவில்லை.



12th March 1958]

*Temple and private lands, Tiruthuraipoondi.*

* 292 Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state the number of cases of eviction of persons who have built houses on temple and private lands in Tiruthuraipoondi in the 1957?

THE HON. SRI M. BHATAVATSALAM : The particulars regarding the cases of eviction of persons who have built houses on private lands is not available with the Government. As regards temple lands—

the number of cases in which eviction of persons effected in the year 1957 was 2;

the number of cases in which decrees have been obtained but eviction not effected was 2;

the number of cases in which decree has been obtained but execution petitions have not been filed was 4; and

the number of cases in which suits have been filed for recovery of huge arrears of rent and for possession of the manaikats was 5.

SRI A. VEDARATHNAM : திருத்துறைப்பூண்டி தாலூகா தலைநகர மாக இருந்தபோதிலும், அங்கே குடியிருக்கும் இடம் முழுவதும் அந்த ஊர்க் கோயிலுக்கும் இன்னும் இரண்டொரு பெரிய நிலச்சுவாந்தார் களுக்கும் சொந்தமாக இருக்கும் காரணத்தால் அங்கே யாரும் சிறு வீடு கட்டி வாழ முடியாத நிலை இருக்கிறது. எப்பொழுது அவர்களைக் காலி செய்யும்படி நோட்டீஸ் கொடுக்கப்படுமோ என்ற அந்த நிலையி லிருந்து அவர்களைக் காப்பாற்ற அரசாங்கம் ஏதாவது உதவி செய் வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேவஸ்தான மனைக்கட்டு விஷயத்தைப்பற்றி மட்டும் என்னிடம் தகவல்கள் இருக்கின் றன. திருத்துறைப்பூண்டியில் 373 மனைகள் இம்மாதிரி தேவஸ்தானத் தைச் சேர்ந்தவை. அவைகளில் 370 மனைகள் 370 பேர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து வாடகை வாங்கப்பட்டு வருகிறது. ஆனால், 300 பேர்கள் வரையில் வருஷாந்திரம் கொடுக்கவேண்டிய வரியைக் கொடுக்காமல் ஏராளமான தொகை பாக்கி யிருக்கிறது. அந்தப் பாக்கியை வசூலிப்பதற்காக வேறு முயற்சி எல்லாம் செய்யப்பட்டும், இப்பொழுது கோர்ட்டில் தாவா செய்ய வேண்டிய நிலை மையில்தான் இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : திருத்துறைப்பூண்டி தேவாலயத்திற்குச் சொந்தமான மனைகளிலே வீடுகள் கட்டிக்கொண்டிருக்கக் கூடியவர்கள் அதற்குறிய வரியைக்கூட செலுத்தமுடியாத அளவு பரிதாபமான நிலை யில் இருப்பதால், ஆண்டவனுடைய மனையில் குடியிருக்கிறார்கள் என்ற காரணத்தால் கட்டிக் கொண்ட வீடுகட்கு வரி கொடுக்காமலேயே அவர்கள் அந்த மனைகளில் வசிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கொடுக்கவேண் டிய வரிப் பாக்கியை கொடுக்கத் தவறினால், அதைச் சக்தியின்மை என்று ஏற்றுக்கொள்ளமுடியாது.

SRI M. D. THIAGARAJA PILLAI : இம்மாதிரியா தஞ்சை ஜில்லாவில் அநேக கிராமங்களில் கோயில்களுக்குச் சொந்தமான மனைகள் ஏராளமாக இருப்பதால், கிராமத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு

குடியிருக்க இடம் கிடைக்காமல் இருப்பதால், ஹரிஜனங்கள் வீடு கட்டிக் கொள்வதற்கென கோயில் நிலங்களை ஒதுக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் தகுந்த உத்தரவை போடமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிக் கவனம் செலுத்த வேண்டியதிலே கஷ்டம் இராது. ஆனால், குறிப்பிட்ட விவரங்கள் அளிக்கவேண்டுமென்றால், அதற்குத் தனி கேள்வி வேண்டும்.

SRI A. VEDARATHNAM : திருத்துறைப்பூண்டியில் கோயில் மனைகளில் குடியிருக்கிறவர்களிடமிருந்து அந்த மனைக்கட்டுக்கு ஆண்டுதோறும் வாடகைத் தொகையை அதிகரித்துக்கொண்டு போவதால், அந்தக் கூடுதலான தொகையைச் செலுத்த முடியாமல் குடியிருப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியிருந்தால், அவர்களுக்கு நியாயமான வாடகை விகிதத்தை அரசாங்கமே ஏற்படுத்தி, எப்போதும் நிரந்தரமாகக் குடியிருக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்ய முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பாக்கி இருக்கிறது என்பதும், அந்தப் பாக்கி வசூல் செய்யப்படவில்லை என்பதும்தான் எனக்குத் தெரிந்தது. ஆனால், கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிற விவரங்கள் எனக்கு இதுவரையிலும் தெரிவிக்கப்படவில்லை. இப்பொழுது கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது பற்றி விவரமாக சில தகவல்கள் அளித்தால், அவைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தும். ஆனால், நேரடியாக அரசாங்கம் தலையிடுவது முறையல்ல என்றாலும், அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தி வேண்டியதைச் செய்யலாம்.

SRI K. B. S. MANI : தேவஸ்தான நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு பெரிய மிராசுதார்களுடைய நிலங்களிலே குடியிருப்பவர்களும் பெரும்பாலும் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்களாகவோ, ஹரிஜன மக்களாகவோ இருக்கிறார்கள். அவர்கள் அத்தகைய நிலங்களில் குடியிருப்பதற்காக வேண்டி அவர்கள் கோயில்களுக்கும் மிராசுதார்களுக்கும் ஊழியம் செய்கிறார்கள். இந்தக் காரணத்தை முன்னிட்டு, தருமபுரம் மடத்தார் ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில், ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டிய பாக்கியில் 100 முதல் 200 ரூபாய் வரையில் தள்ளுபடி செய்து கொடுத்தார்கள். அதைப்போலவே, திருத்துறைப்பூண்டியில் தேவஸ்தானத்திற்கும், மிராசுதார்களுக்கும் சொந்தமான நிலங்களில் குடியிருப்பவர்களாகிய பிற்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பாக்கிப் பணம் தள்ளுபடி செய்வதோடுகூட, புதியதாக ஒரு விகிதத்தை சர்க்கார் நிர்ணயம் செய்து, குடியிருப்பவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லாமல் செய்வதற்கு சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தருமபுரம் மடத்தில் நடைபெறும் விவரங்கள் கனம் அங்கத்தினருக்குத் தெரியும். தெரிந்ததால், மடாதிபதியை அவர்கள் பாராட்டுகிறார்கள். அதே நிலைமை திருத்துறைப்பூண்டியில் இருக்கிறதா என்று அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியாது. விவரங்கள் தெரிந்தால் நிலைமையை விளக்க முடியும்.

SRI K. ANBAZHAGAN : கோயில் நிலங்களிலே குடியிருக்கிற மக்கள் பொதுவாகவே தாழ்ந்த நிலையினர் என்பதைக் கருதியும், பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து அத்தகைய நிலங்களில் வீடுகட்டிக்கொண்டு குடியிருந்தவர்கள் என்பதற்காகவும், அந்த இடத்தை அவர்களுக்கே உறுதியாக்கி, அவர்களிடமிருந்து வாடகையை வசூல் செய்வதை நிறுத்திவைக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் நிலைமையைப் பரிசீலனை செய்து பதில் சொல்லலாம்.



*Rural dispensary.*

* 293 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the salary and allowances paid to the rural dispensary doctors in the North Arcot district;

(b) whether they are eligible for increment, pension and provident fund;

(c) whether they are eligible for any leave facilities; and

(d) if so, what those facilities are?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) As in other districts, the Rural Medical Practitioners in the North Arcot district are paid only subsidies and not pay and allowances. The rates of subsidy vary from Rs. 65 to Rs. 100 per mensem depending on their qualifications.

(b) No, Sir.

(c) Yes.

(d) They are eligible for earned leave on full subsidy equivalent to 1/11th of the period spent on duty up to a maximum of 90 days and casual leave for 15 days including holidays in a year.

SRI M. JAGANNATHAN : பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், இந்தச் சபையில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் சிலரும் ஆங்கிலம் தெரியாதவர்கள் பலரும் இருக்கிறார்கள். முதல் கேள்விக்குப் பதில் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் அதைத் தமிழிலே சொன்னால், அதைப் புரிந்து கொண்டு உப கேள்விகளைக் கேட்பதற்கு பல அங்கத்தினர்கள் முன் வருவார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் முதல் கேள்விக்குப் பதில் சொல்லும்போதும் தமிழிலேயே சொல்வதற்கு தயவுசெய்து முன் வருவார்களா ?

MR. SPEAKER : How is it a point of order? It is only a suggestion. Sri Vinayakam may now put his question.

SRI K. VINAYAKAM : Sir, as an incentive to attract more doctors to the rural dispensaries, will the Government think of giving a better scale of pay—more monetary remuneration—so that it could be an incentive to people going to serve in villages?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government no doubt is thinking of enhancing the pay. But they have not so far been able to put it into practice.

SRI V. K. KOTHANDARAMAN : பல ஆஸ்பத்திரிகள் இன்று மூடப்பட்டிருப்பதற்கும், பல ஆஸ்பத்திரிகளை புதியதாகத் திறக்கப் பட முடியாதிருப்பதற்கும் காரணம் டாக்டர்கள் கிடைப்பதில்லை என்பது தான். வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரையில், கிராம ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு மாதம் 90 ரூபாய் (65 உடன் 25 ரூபாயைச் சேர்த்து) சம்பளம் கொடுக்கப்படுகிறது. வேறு வீட்டு வாடகை, அலவன்ஸ், இன்க்கிரிமெண்ட் எதுவும் இல்லை. லீவ் வசதி கூட இல்லாமல் ஒரு நாள் கூட நிற்காமல் வருஷம் பூராவும் வேலை

[12th March 1958

செய்தால், வருஷத்திலே ஒரு மாத லீவ் கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையில் வேலை செய்ய எந்த டாக்டராவது கிடைப்பாரா ? அப்படித் தப்பித் தவறி வந்தாலுங்கூட, அவர்கள் ஆஸ்பத்திரியை உபயோகப் படுத்தி பணம் சம்பாதிப்பதில் கவனம் செலுத்துவார்கள். ஆகையால், மற்ற எல்லா ஆஸ்பத்திரிகளிலும் வேலை செய்யக்கூடிய டாக்டர்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படுமா ? அதே சம்பளமும் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இத்தகைய நிலைமை வட ஆற்காடு ஜில்லாவிலே மாத்திரம் அல்ல. எல்லா ஜில்லாக்களிலும் தான் இருக்கிறது. இந்த நிலைமையை எந்த வகையிலே மாற்றியமைக்க லாம் என்பது ஒரு பெரிய பிரச்னை. அதை நன்றாகப் பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய வசதி எல்லாம் தேடித்தான் கொஞ்சம் கொஞ்சமாக இதை நிவர்த்திக்கவேண்டும்.

### *Government Transport employees*

* 294 *Q.*—SRI M. KALYANASUNDARAM AND SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to lay on the table of the House a copy of the Government Order sanctioning bonus to the employees in the Government Bus Transport?

THE HON. SRI R. VENKATARAMAN : A copy[a] each of the latest Orders of Government sanctioning the schemes of bonus to the drivers and the conductors and to the technical workers in the Madras State Transport Department is laid on the table of the House.

SRI M. KALYANASUNDARAM : இந்த உத்தரவு ஒரு வருஷத் திற்கு தான் அமுலில் இருக்கும் என்று இருக்கிறது. அது இப் பொழுது அமுலில் இருக்கிறதா ? வேறு எதாவது மாறுதல் ஏற்பட்டிருக் கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது திருப்திகரமாக இல்லை என்று நினைத்து இதை மாற்றுவதற்காக ஒரு யோசனை இப் பொழுது இருந்துகொண்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : போனஸ் "டெபர்ட் பே" ஆகக் கொடுக்கப்படுகிறதா. அல்லது "ஷேர் இன் ப்ராபிட்" ஆகக் கொடுக்கப் படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது "எபிஷியன்ஸி போனஸ்".

SRI M. KALYANASUNDARAM : மந்திரி அவர்கள் கூறியது மாதிரி, இது வேலைத் திறமையை யொட்டி கொடுக்கக்கூடிய போனஸ் தான். 90 பர்சன்ட் மார்க் வாங்கக்கூடிய தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்த போனஸ் கிடைக்கும். அப்படி அதிகமாக மார்க்க வாங்கக் கூடிய வர்கள் எல்லோருக்குமே கொடுக்கக்கூடிய நிலையில் இல்லாமல் 5,000 ரூபாய்க்கு மேல் தொகை ஒதுக்கப்படாமல் இருக்கிறது. இத் தொகையில் 500 பேர்களுக்குத்தான் கொடுக்க முடியும். இதைவிட்டு, மற்ற தனிப்பட்ட முதலாளிகள் கொடுப்பது போன்று போனஸ் கொடுக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : லாபத்தில் போனஸ் கொடுக்கிற யோசனை இல்லை. ஆனால், கூடுமான அளவில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் "எபிஷியன்ஸி" மூலமாக போனஸ் கொடுப் பதற்கு இப்பொழுது திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

[a] Printed as Appendix II on pages 257–261 infra.



12th March 1958]

SRI T. S. RAMASWAMY PILLAI : 1956-57-ம் நிதி வருஷத்தில் கன்யாகுமரி ஜில்லாவிலுள்ள ட்ரான்ஸ்போர்ட் தொழிலாளர் களுக்கு போனஸ் கொடுக்கப்பட்டதா ? அப்படிக் கொடுக்கப்படவில்லை யென்றால், இப்பொழுதுள்ள கேரள அரசாங்கத்திற்கு இது சம்பந்தமாக கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

MR. SPEAKER : This is a separate question. But if the Hon. Minister is prepared to answer, I have no objection.

SRI K. VINAYAKAM : May I know the *modus operandi* which is adopted by this Government to find out the efficiency of the workers? Does it depend upon the good behaviour, their fitness in disposing of the passengers by issuing tickets at the points where they are made unnecessarily to wait and their general efficiency as far as their work is concerned?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, in the statement placed on the table of the House, every one of the points raised by the hon. Member is included as going to show the efficiency of the conductor and the driver.

### *Police Shorthand Reporters*

* 295 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Home Minister be pleased to state—

(*a*) the number of Police Shorthand Reporters who take down the proceedings of public meetings; and

(*b*) their emoluments?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The number is twenty-six, consisting of 2 Inspectors, 10 Sub-Inspectors and 14 Junior Reporters; and

(*b*) The emoluments drawn by the reporters are as shown below :—

| *Serial number and designation.* (1) | *Scale of pay.* (2) | *Special pay.* (3) | *Dearness allowance.* (4) |
|---|---|---|---|
| 1 Inspectors .. | Rs. 175–10–225–EB–10–275. | Rs. 50. (The Inspector stationed in the City is given City Special Pay of Rs. 15 each per mensem and eligible House Rent Allowance.) | As admissible under the orders in force. |
| 2 Sub-Inspectors. | Rs. 80–3–95–4–115–2–135–EB–3–150. | (2 posts carry a special pay of Rs. 75 each per mensem and the rest a special pay of Rs. 50 each per mensem and eligible House Rent Allowance.) | Do. |
| 3. Junior Reporters. | Rs. 80–3–95–4–115–2–135–EB–3–150. | (2 posts carry a special pay of Rs. 75 each per mensem and the rest a special pay of Rs. 50 each per mensem besides eligible House Rent Allowance.) | Do. |

They are also paid Travelling Allowance for journeys or tour on duty.

[12th March 1958

**Sri V. K. KOTHANDARAMAN** : சுருக்கெழுத்தாளர்களின் செண்டர்கள் எத்தனை ? எங்கெங்கே இருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : வேலூரில் இருக்கிறது. ஷார்ட்ஹாண்டு பீபிரோ போலீஸ் ட்ரெயினிங் காலேஜ் பிரின்சிபால் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது.

**Sri K. B. S. MANI** : இந்தச் சுருக்கெழுத்தாளர்கள் போலீஸ்காரர்களுக்கு உள்ள விதிமுறைப்படி நடக்க வேண்டியவர்களா ? அல்லது சிவிலியனைப் போல இருந்து சுருக்கெழுத்தாளர்கள் உத்தியோகத்தை வகித்து வருகிறார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : எல்லோரும் போலீஸ் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள் தாம்.

**Sri K. ANBAZHAGAN** : போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் தமிழிலேயே சுருக்கெழுத்தில் எடுக்கப் பயிற்சி பெற்றுக்கொண்டு பொதுக்கூட்டங்களில் பேசப்படுவதை எழுதுகிறார்களா ? அல்லது ஆங்கிலத்தில் உள்ள பயிற்சியை வைத்துக் கொண்டு தமிழ் சொற்பொழிவுகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா ? அப்படி எடுப்பதானால் அதில் உள்ள குறைபாடுகளை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : போலீஸ் சுருக்கெழுத்தாளர்களைப் பற்றிய வரையில் அவ்வாறு ஒன்றும் இல்லை. தமிழிலேயே பயிற்சி பெற்று தமிழிலேயே எடுக்கிறார்கள்.

**Sri M. KALYANASUNDARAM** : இந்தச் சுருக்கெழுத்தாளர்கள் பொதுக் கூட்டங்களுக்குச் சென்று எடுக்கிற சொற்பொழிவுகளை யார் யாருக்கு அனுப்பி வைக்கிறார்கள் ? எந்த எந்தக் கட்சியைச்சார்ந்தவர்கள் கூட்டங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகிறார்கள் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இன்ன இன்ன கட்சிக்காரர்களுடைய கூட்டங்களுக்குத்தான் செல்ல வேண்டும் என்ற நிர்ணயம் ஒன்றும் இல்லை. எடுக்கிற சொற்பொழிவுகளின் ரிப்போர்ட்டில் ஒரு காப்பி போலீஸ் ஷார்ட் ஹாண்டு பீரோவுக்கு அனுப்பப்படுகிறது. அந்த அந்த ஜில்லாவில் உள்ள டி.எஸ்.பி.களுக்கு ஒரு காப்பி அனுப்பப்படுகிறது.

**Sri A. V. P. ASAITHAMBI** : இந்தச் சுருகெழுத்தாளர்களுடைய நிலையம் வேலூரில் தான் இருக்கிறது. ஆந்திரா சென்னையோடு சேர்ந்திருக்கிற காலத்தில் வேலூர் மத்திய ஸ்தானமாக இருந்திருக்க முடியும். ஆந்திரா பிரிந்து சென்ற பிற்பாடு வேலூரிலேயே அந்நிலையம் வைக்கப்பட்டிருப்பதால் அங்கிருந்து சுருக்கெழுத்தாளர்களைப் பலயிடங்களுக்கும் அனுப்பி வைப்பது அதிகச் செலவு உடையதாக இருக்கும். இதை திருச்சிக்கு மாற்றுவதற்குச் சர்க்கார் சிக்கனத்தை உத்தேசித்து உத்தேசிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : வேலூரில் போலீஸ் கல்லூரி ஒன்று இருக்கிறது. போலீஸ் பிங்கர்பிரிண்ட் நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கேயே நல்ல அனுபவம் பெற்ற சில ஸ்தாபனங்கள் இருப்பதனால் அவைகளைச் சார்ந்தார்போல இந்தச் சுருக்கெழுத்து நிலையமும் இருக்கிறது. ஏதோ மையமாக இடத்தில் இருக்கவேண்டும் என்கிற காரணத்திற்காக அதை மாற்றுவது அவ்வளவு சௌகரியம் அல்ல.

**Sri M. P. SARATHI** : மையமாக மாற்ற முடியாவிட்டாலும் ஜில்லாவாரியாக ஆங்காங்கே சுருக்கெழுத்தாளர்களை வைத்திருப்பதனால் போலீஸ் செலவு அதிக அளவுக்குக் குறையாதா என்று கேட்கவிரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஜில்லாவாரியாக வைப்பதைவிட எல்லோரையும் ஓரிடத்தில் வைப்பதுதான் சௌகரியமாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது.



12th March 1958]

**Sri M. JAGANNATHAN** : தலைவர் அவர்களே, மேல்நாடுகளில் எதிர்க்கட்சிகளால் நடத்தப்படும் பொதுக்கூட்டங்களுக்குப் பகிரங்கமாக அரசாங்கத்தின் சார்பில் சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பிவைக்கப்படுவதில்லை. அவ்வாறு அனுப்புவது ஜனநாயகப் பண்பாட்டுக்கு முரண்பட்டதாகக் கருதுகிறார்கள். அதை அனுசரித்து நமது சர்க்காரும் இனிமேல் பகிரங்கமாக சுருக்கெழுத்தாளர்களை அனுப்பி வைக்காமல் இருப்பார்களா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : மேல்நாடுகளில் என்ன நடக்கிறது என்கிற விஷயத்தைப்பற்றிய அனுபவம் எனக்கு இல்லை. மேல்நாடுகளில் எவ்வாறு நடக்கிறது என்பதைப் பற்றி அவ்வப்போது அதிகாரிகளும் சென்று பார்த்து வருகிறார்கள். பொதுவாக இவ்வாறு சுருக்கெழுத்தாளர்களை அனுப்பி குறிப்பு எடுப்பதே எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் நலம் என்று நான் கருதுகிறேன். இதனால் நல்ல பயன் இருப்பதனால் இதை நிறுத்துவதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

**Sri K. VINAYAKAM** : சுருக்கெழுத்தாளர்களைப் பயிற்றுவிக்கும் நிலையம் வேலூரில் இருப்பதை மாற்றி, மத்தியமாக திருச்சிக்குக் கொண்டுவரவேண்டும் என்பதாக ஸ்ரீ ஆசைத்தம்பி கூறினார்கள். இன்பத் திராவிடம் வரும்போது வேலூரில் இருப்பதனாலே அதுவே அவர்களுக்கு கேந்தரமாக இருக்கும் அல்லவா?

**The Hon Sri M. BHAKTAVATSALAM** : இந்தக் கேள்வியை கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆசைத்தம்பியிடத்தில் போடவேண்டும்.

**Sri A. GOVINDASAMY** : இந்தப் போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகின்ற கூட்டத்திற்குத் தான் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களே சில ஆட்சேபகரமான பிரசங்கங்களைச் செய்வதால் அவர்களுடைய கூட்டத்திற்கும் அனுப்பி வைக்கப்படுவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் முன்பே பதில் அளித்தேன். எந்த எந்த கட்சிக்காரர்களுடைய கூட்டங்களுக்குப் போகவேண்டும் என்பதாக அவர்களுக்கு ஒன்றும் வரம்பு இல்லை. எந்த எந்தச் சொற்பொழிவுகள் குறிப்பு எடுக்கப்படவேண்டுமென்று அதிகாரிகளுக்குத் தோன்றுகிறதோ அங்கெல்லாம் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

**Sri M. KALYANASUNDARAM** : எதிர்க்கட்சிக்காரர்களுடைய கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பி வைக்கப்படுவதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. அதற்காக எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் பயப்படவில்லை. அவர்கள் எடுக்கிற குறிப்புகள் சர்க்காருக்கு ஏதாவது பயன் அளிக்கிறதா ? அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : சொற்பொழிவுகளில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருந்தால் அவை அவ்வப்போது பரிசீலனை செய்யப்படுகிறது. என்னஎன்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவசியம் என அதிகாரிகள் கருதுகிறார்களோ அந்த அந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

**Sri K. ANBAZHAGAN** : மாநில அரசாங்கத்து அமைச்சர்கள் பேசுகின்ற சொற்பொழிவுகள் மத்திய அரசாங்கத்துப் போலீஸ் சுருக்கெழுத்தாளர்களால் எடுக்கப்பட்டு வருகிறதா ? மாநில சுருக்கெழுத்தாளர்களுக்கும், மத்திய அரசின் சுருக்கெழுத்தாளர்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினரிடம் அதுபற்றி ஏதாவது தகவல் இருந்தால் கொடுக்கலாம். என்னிடம் தகவல் இல்லை.

[12th March 1958

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக்காரர் கள் பேசும் சொற்பொழிவுகளை சுருக்கெழுத்தாளர்களைக் கொண்டு எடுப்பது போலவே, டேப் ரெகார்டு செய்தால் நலமாக இருக்கும் என்று சர்க்காருக்கு யோசனை கூற விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சிறந்த யோசனை. சொற்பொழிவில் எடுத்தாலும் கூட அப்படியே என் பேச்சு எடுக்கப்பட வில்லை என்று சொல்லலாம். டேப் ரெகார்டு எடுத்துவிட்டால் யாரும் மறுக்க முடியாது. ஆனால் அது இன்னும் அதிகமான மன வருத்தத்தை தான் கொடுக்கும்.

SRI A. V. P. ASAITHAMBI : சுருக்கெழுத்தாளர்களை பொதுக்கூட்டங் களுக்கு அனுப்பி ரிப்போர்ட் எடுக்கச் செய்து, ஆட்சேபகரமான விஷயங் களுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? ஆட்சேபகரமாகப் பேசுகின்ற வர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டும் அல்ல. ஆளும் கட்சியினர்களும் பேசலாம். அவர்களுடைய கூட்டங்களுக்கும் இனி அனுப்புவார்களா ? அமைச்சர் அவர்கள் பேசும்போதும் கூட சில சமயங்களில் குறிப்பு எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்களுடைய பிரசங்கம் எதிர்க்கட்சிக் காரர்களுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே இனிமேலாவது எல்லாக் கூட்டங்களுக்கும் ரிப்போர்ட்டர்கள் அனுப்பப்படுவார்களா ?

MR. SPEAKER : The hon. Member has been giving information all the whlie without putting the question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே பதில் அளித்தேன். சுருக்கெழுத்தாளர்களை இன்ன கூட்டங்களுக்குத் தான் அனுப்ப வேண்டும் என்பதற்கு ஒரு நிர்ணயமும் கிடையாது. அமைச்சர்களுடைய சொற்பொழிவுகள் வேண்டுமென்றால் எதிர்க்கட்சிக்காரர்கள் தனியாக ஏற்பாடுகளைச் செய்துக் கொள்ளலாம்.

### *Floods*

* 296 *Q.*—SRI V. M. KRISHNAMURTHY (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how many times Vinicenagar in Tiruchirappalli town was flooded during the past five years;

(*b*) the number of houses and families affected thereby;

(*c*) the number of Harijan families among them; and

(*d*) te permanent measures taken to control such floods in future?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Three times—
During October-November, 1952.
During October-November, 1954.
During November, 1956.

(*b*) During 1952–75.
During 1954—55.
During 1956—95.

(*c*) All the affected families were Harijan families.

(*d*) It is reported that as a temporary measure, the formation of a ring bund in front of the existing culvert in the Tiruchirappalli-Karur Road through which the backwaters of the Cauvery enter the locality will be taken up after April 1958, when the Mettur Dam will be kept closed and observations made by the Public Works Department. The Superintending Engineer, Public Works Department, Tanjore Circle, has also recommended the provision of screw gearing shutters to this culvert as a permanent measure and the question is pending orders of the Chief Engineer (Irrigation).



12th March 1958]

* 297 *Q.*—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of damage caused in Lalgudi taluk by floods in Koolaiyar and Nandiyaru in 1956;

(*b*) whether the breaches and damages caused to lands, roads, etc., have been rectified; and

(*c*) whether the Government have any proposal to construct small dams or reservoirs across these rivers at various points for regulating the waters and also for bringing a large area under wet cultivation?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Floods in Koolaiyar and Nandiyar in October and November 1956 caused damages to houses in low-lying areas and foodgrains as shown below :—

(1) Number of villages affected—17.

(2) Number of houses damaged—302.

(3) Value of damages to houses, foodgrains and household utensils—About Rs. 17,317.

(*b*) There were no damages to lands due to floods either in Koolaiyar or Nandiyar. The breaches and damages caused to roads in Lalgudi taluk due to floods in the two rivers in 1956 have been set right.

(*c*) No, Sir. The Koolaiyar has no ayacut of its own but it joins the Nandiyar above the Nandiyar anicut and the Nandiyar system irrigates 6,300 acres in Lalgudi and Udayarpalayam taluks. A large area is therefore irrigated by these two rivers. It cannot be said therefore that the waters of those two run to waste.

* 298 *Q.*—SRI V. K. KRIISHNAMURTHY (on behalf of SRI S. Lazar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount spent towards flood relief in 1956–57; and

(*b*) the amount given as loans to victims of flood?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is presumed that the Hon. Member wants the particulars for the entire State. It is also presumed that the period, i.e., 1956–57 referred to by him

[12th March 1958

is confined to the financial year, i.e., from 1st April 1956 to 31st March 1957. If so, the answers are :—

(*a*) The amounts spent during the financial year 1956-57 towards flood relief measures are as follows :—

| | Cash grant. Rs. | Other relief measures. |
|---|---|---|
| North Arcot .. .. .. | 4,145·00 | Nil. |
| Coimbatore .. .. .. | 2,470·00 | .... |
| South Arcot .. .. .. | 1,455·00 | Rice supplied to the value of Rs. 1,755·00. |
| Tiruchirappalli .. .. .. | 3,470·00 | 17¾ bags of rice of the value of Rs. 568 ; other cash amount spent on stores Rs. 1,100·64. |

(*b*) A sum of Rs. 5,600 was sanctioned towards agricultural loans in North Arcot district.

**Sri M. P. SARATHI** : *இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டு மக்களுக்கு மத்திய சர்க்காரில் இருந்து ஏதாவது உதவி கிடைத்ததா அது எவ்வளவு ?*

**The Hon. Sri M. A. MANICKAVELU** : *இம்மாதிரியான சேதாரங் களுக்கு மத்திய சர்க்காரும் உதவி தருகிறது. ஆனால் இதில் அந்த மாதிரி உதவி கிடைக்காது. ஏனென்றால், இங்கு சிறிய அளவில்தான் சேதாரம் ஏற்பட்டிருக்கிறது.*

**Sri P. G. MANICKAM** : *வெள்ளப் பிரவாகம் அதிகமாக வரும் சமயத்தில் இந்த ஆற்று நீரை வாய்க்கால் மூலம் குளங்களுக்கு பாய்ச்சுவதற்குள்ள திட்டங்கள் அநேக தாலுக்காக்களில் இருந்தும், ஜில்லாக்களிலிருந்தும் குறிப்பாக கோயம்புத்தூர் பவானி தாலுகாவில் இருந்து சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ? அதை பரிசீலித்து இந்த பட்ஜெட் நிதியில் இருந்தே செய்ய அரசாங்கம் முன் வருமா?*

**The Hon. Sri M. A. MANICKAVELU** : *கோயம்புத்தூர் ஜில்லாவில் அணைகளும் ரிஸர்வாயர்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே வெள்ளம் புரண்டோடுவதற்கு அங்கு வசதியில்லை.*

**Sri A. GOVINDASAMY** : *வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப்படுகிற நிவாரணத் தொகையானது குறுகியயளவு இருப்பதால் அவர்களுக்கு முழு திருப்தி அளிக்காது இருப்பதால், இனியாவது இப்பிரகாரம் நெருக்கடி ஏற்படும் போது கண் துடைப்பு மாதிரி சலுகை கொடுக்காமல் உண்மையாகவே சர்க்கார் அவர் களுக்கு வேண்டிய பரிகாரம் செய்து கொடுக்க முன்வருமா ?*

**The Hon. Sri M. A. MANICKAVELU** : *என்னதான் வாரியளித் தாலும் முழு திருப்தி யாருக்கும் உண்டாகாது. ஆனால் இது வந்து, பாதிக்கப் பட்டவர்களுக்கு ஓரளவு சமாளித்துக் கொள்வதற்காக கொடுக்கப்படுகிறது. முழு திருப்தி அளிக்கும் வகையில் கொடுப்பது சாத்தியமில்லை.*

**Sri K. VINAYAKAM** : Whenever an area is inundated and flood-affected, the Government of India come to the aid of those who are flood-affected. Did the Government of Madras make any representation for aid to the Government of India in this case and if they did, what was the attitude of the Government of India?



12th March 1958]

**The Hon. Sri M. A. MANICKAVELU** : In cases where heavy damage is caused, the Government approach the Centre and they are also generous in giving money handsomely. Here in this case, the damage caused was small, and, therefore, it is not worthwhile approaching the Government of India.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : *இம்மாதிரி வினியோகிக்கப் படும் தொகை கலெக்டர் மூலம் விநியோகிக்கப்படுகிறதா அல்லது இராமகிருஷ்ண மிஷன் போன்ற பொறுப்புள்ள ஸ்தாபனங்கள் மூலம் இத்தொகை செலவு செய்யப்படுகிறதா ?*

**The Hon. Sri M. A. MANICKAVELU** : *சாதாரணமாக கலெக்டர் மூலந்தான் செலவு செய்யப்படுகிறது. ஆனால் எங்கெங்கு பொது ஸ்தாபனங்கள் இருக்கிறதோ குறிப்பாக வேதாரண்யம் போன்ற சேதாரம் ஏற்பட்ட பகுதிகளில் இராமகிருஷ்ண மிஷன் மூலம் செலவு செய்யப்பட்டு இருக்கிறது.*

**Sri K. B. S. MANI** : *இந்த வெள்ள நஷ்டம் ஏற்படுவதில் பெரியது சிறியது என்று கூறுவது விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பது போல். மத்திய அரசாங்க வட்டாரங்களில் பெரிய ஆறுகள் இருக்கின்றன. அங்கு பெரிய வெள்ளம் ஏற்பட்டு அதிக கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம் நாட்டில் சிறிய ஆறுகள் இருக்கிறது, ஆகவே சில கிராமங்கள் பாதிக்கப்படுகிறது, இருந்தாலும் இந்த வட்டாரங்களுக்கு இது பெரிய நஷ்டமாக இருப்பதால் மத்திய சர்க்கார் கட்டாயம் உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்க இந்த அரசாங்கம் முன்வருமா?*

**The Hon. Sri M. A. MANICKAVELU** : *இப்படிப்பட்ட சின்ன சேதாரங்களுக்கெல்லாம் அடிக்கடி மத்திய சர்க்காரின் உதவியைக் கேட் டால் ஏதாவது பெரிய சேதாரம் வரும்போது நாம் கேட்டால் ஏமாந்து போவோம்.*

**Sri N. MARUDACHALAM** : *மந்திரியவர்கள், கோயம் புத்தூரில் வெள்ளம் புரண்டோட வசதியில்லை என்று சொன்னார்கள். ஆனால் வெள்ளம் பெருக்கெடுத்தோடி, வயல்கள், வீடுகள் எல்லாம் நாசம் அடைந்தது மந்திரியவர்களுக்குத் தெரியுமா ?*

**The Hon. Sri M. A. MANICKAVELU** : *எப்போதாவது ஒரு காலத்தில் திடீரென்று வெள்ளம் வந்தால் அதற்காக நிரந்தரமாக அந்தத் தண்ணீரை நீக்குவதற்காக ஏற்பாடு செய்வது அவ்வளவு உசிதமல்ல.*

**Sri M. JAGANNATHAN** : *தென் ஆற்காடு ஜில்லாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணம் அளித்ததாக மந்திரியவர்கள் சொன்னார்கள். தென் ஆற்காடு ஜில்லாவில் எந் தெந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது ? அதனால் பாதிக்கப் பட்ட மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் சொல் வார்களா ?*

**Mr. SPEAKER** : I think the hon. Member must put a separate question. This supplementary has nothing to do with the main question.

### *Neyveli Lignite Project*

* 299 *Q.*—**Sri M. P. SUBRAMANIAM, Sri K. SATTANATHA KARALAYAR and Sri A. GOVINDASAMY** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the progress made so far in the Neyveli Lignite Project; and

[12th March 1958

(*b*) whether there is any prospect of starting of fertilizer factory and a thermal plant at Neyveli?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) A statement[a] showing the progress made so far in the Neyveli Lignite Project is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR: பெர்டிலைஸர் ப்ளாண்டைப் பொறுத்தமட்டில் அது பாரின் க்ரெடிட் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம், சமீபத்தில் வெளியிட்ட "கோர் ஆப் தி ப்ளானில்" இது சேர்க்கப்படவில்லை என்பது உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்பொழுது நமக்கு கிடைத்திருக்கிற தகவல்படி கோர் ஆப் தி ப்ளானில் இருக்கிறது. இதற்கு, பாரின் க்ரெடிட், வெளிநாட்டு செலாவணி எப்போது கிடைக்கும் என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

SRI A. GOVINDASAMY: சர்க்கார் வைத்திருக்கிற இந்த செய்தித் தாளில், **Lands required for the Lignite Project are being acquired by stages** என்று எழுதியிருக்கிறது. ஆனால் பலயிடங்களில் துரிதப்படுத்தி, தேவையில்லாத யிடங்களில் நெய்வேலி ரெயில்வே ஸ்டேஷனிற்கு கீழ் புறத்தில் உள்ள கடைகளையும் வீடுகளையும் இடித்து அங்குள்ள ரெவென்யூ அதிகாரிகள் அங்குள்ள பொதுமக்களுக்கு தொந்தரவு கொடுப்பது பற்றி அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறதா? என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: எங்கு நிலம் தேவை அல்லது தேவையில்லை என்று லிக்னைட் கார்ப்பரேஷன் முடிவு செய்ய வேண்டியது. அவர்கள் நிலம் தேவை என்று முடிவு செய்து அதை அக்வயர் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதை தடுக்க முடியாது.

SRI K. RAMASUBBU: நம் நாட்டில் பூச்சி மருந்தின் தேவை அதிகமாக இருக்கிறது. பூச்சி மருந்தை தயாரிப்பதற்கு அடிப்படையாகவுள்ள, "பேஸிக் மெட்டீரியல் பார் தி மனுபாக்ச்சர் ஆப் இன்ஸெக்டிஸைட்ஸ்", நெய்வேலிப் பிராஜெக்டில் அதிகமாக கிடைக்கிறது என்ற காரணத்தால் அந்தயிடத்திலேயே பூச்சி மருந்து உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா? பூச்சி மருந்து செய்யும் ஆலை நம் நாட்டில் இல்லாத காரணத்தினால் பூச்சி மருந்து ஆலை ஒன்று ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்பொழுதிருக்கிற திட்டத்தில நெய்வேலியில் இன்ஸெக்டிஸைட்ஸ் செய்கிற தொழிற்சாலை வைப்பதற்கான திட்டம் ஒன்றுமில்லை.

SRI A. GOVINDASAMY: நெய்வேலிப் பகுதியில் இதுவரை பல வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது. அவைகளைப் பார்த்தால் சினிமாவில்வரும் மாயாபஜார் வீடுகள் மாதிரியிருக்கின்றன. ரொம்ப மோசமாகயிருக்கிறது அந்த வீடுகள். ஆகவே டௌன்ஷிப் உண்டாகும்போது நல்ல கண்ட்ராக்டர்களைப் பார்த்துக் கொடுத்தோ அல்லது அரசாங்கமே இந்த வீடுகளை நன்கு கட்ட முயற்சிக்குமா? இதுவரை எட்டுகோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறதே இந்தப் பணம் பூராவும் நல்ல முறையில் செலவு செய்ததாகக் கூறமுடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதுபற்றி தனி கேள்வி போட்டால், வீடுகள் எப்படி கட்டப் பட்டிருக்கிறது என்று சொல்கிறேன்.

[a] Printed as Appendix III on pages 261–262 infra.



12th March 1958]

SRI M. KALYANASUNDARAM: ஸார், லிக்னைட் திட்டத்திற்கு தேவையான நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொள்வதை ஆட்சேபிக்கவில்லை. இவ்விதம் நிலத்தை சர்க்கார் எடுக்கும்பொழுது நிலச்சொந்தக்காரர்களுக்கு சரியானபடி பணம் கொடுக்கபடவில்லை. இம்மாதிரி இருப்பதை மாற்றி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற தகவல் என்னிடம் இல்லை. இதைப்பற்றி தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI A. GOVINDASAMY: நெய்வேலி பிரதேசத்தில் சர்க்காரால் எடுக்கப்பட்ட நிலங்களுக்கு அதன் சொந்தக்காரர்களான விவசாயிகளுக்கு நியாயமான நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. அங்கு முதல் அமைச்சர் அவர்கள் போய் அங்குள்ள விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து தருவதாக கூறியிருப்பதாக பத்திரிகையில் தகவல் இருக்கிறது. ஆகவே புதியதாகக் குடியேறி இருக்கிற விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த கேள்வி நெய்வேலி திட்டத்தில் இப்போழுது எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிற கேள்வி.

SRI A. GOVINDASAMY: It is mentioned there in the Statement placed on the table of the House.

SRI M. KALYANASUNDARAM rose—

MR. SPEAKER: The Hon. Minister may continue.

THE HON. SRI R. VENKATARAMAN: **I did not want to speak while they were speaking.** இந்த திட்டத்தில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றித்தான் கேள்வி. இதில் இதற்கு வேண்டிய நிலத்தை சர்க்கார் வாங்கிறார்கள். அவ்வாறு வரும்பொழுது நிலத்தை வாங்குவதைப்பற்றியும் அது சம்பந்தமான கேள்வியும் தனியாக கேள்வி போடவேண்டும் என்று தான் என்னால் சொல்ல முடியும்.

SRI K. ANBAZHAGAN: இந்த நெய்வேலி திட்டத்தில் பர்டிலைஸர் பாக்டரி, மற்றும் பல துணை தொழிற்சாலைகளும் ஏற்படுவது குறித்து பலமான சந்தேகங்கள் ஏற்பட்டு வருவதால், மத்திய சர்க்காரை கொண்டு இதற்கு திட்டவட்டமான ஒரு அறிக்கை (**categorical statement from the Central Government**)-யை வெளியிடுவதற்கு இந்த சர்க்கார் முயற்சி செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: பெரிய திட்டங்களில் பர்த் பாங்க்ஸ் (**birth pangs**) என்று சொல்லுவது போல பல கஷ்டங்கள் இருக்கின்றன. இதில் முடிவாக "கோர் ஆப் தி பிளானில்" நிலக்கரித்திட்டம், மின்சார திட்டம், உர உற்பத்தி திட்டம் போன்ற மூன்று திட்டங்களும் இருக்கின்றன. அவைகளை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி செய்யும்.

SRI K. B. S. MANI: ஸார், இந்த நிலக்கரி சுரங்கத்தில் எத்தனை பேர்கள் கூலிகளாகவும் ஆபீஸர்களாகவும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள், அவர்களை தேர்ந்தெடுப்பது எந்த முறையில் நடத்தப்படுகிறது என்பதை விளக்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: **I want notice for this question, Sir.**

SRI A. GOVINDASAMY : இப்போது திட்டமிட்டிருக்கும் இந்த தொழிலைத்தவிர வேறு எந்த தொழில்களை ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது போட்டிருக்கக் கூடிய மூன்று திட்டங்களும் கார்ப்பரேஷன் அமைக்க முடியும். வேறு முக்கியமாக எலக்ட்ரிக்கல் இன்ஸுலேட்டர்ஸ் செய்யக்கூடிய ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு லைஸென்ஸ் ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கு கிடைக்கின்ற களிமண்ணைக்கொண்டு "போர்ஸலேன் வேர்ஸ்" தயாரிப்பதற்கும் முடியும் என்று நினைக்கிறார்கள்.

*Night trains*

* 300 Q.—SRI V. K. KRISHNAMURTHI (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have recommended to the Centre to run more night trains between Tiruchirappalli and Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI K. VINAYAKAM : The Tiruchi night express which used to start in the night from Tiruchi to Madras was doing considerable good service in relieving congestion of passengers who depended on other trains coming from the south. In view of that, will the Government of Madras make a further representation to the Central Government about the desirability of restoring the old service which was discontinued recently?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there is a Railway Users Committee and I believe a Member of this House is also a member on that Committee. That Committee may make suggestions to the Central Government which would be considered by the General Manager and the Railway Board.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, திருச்சிக்கும் சென்னைக்கும் இடையில் இரவு நேரத்தில் மேலும் துரித வண்டி விடுவதற்கு தைரியமில்லாவிட்டால் பகல் நேரத்திலாவது துரிதவண்டி விடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பகல் நேரத்தில் விட்டால் கொஞ்ச பிரயாணிகள்தான் போக முடியும். இரவில்தான் அதிகமான பிரயாணிகள் போக முடியும். இதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது அல்லாமல் பயப்படவோ அல்லது கவலைப்படவோ இல்லை.

SRI R. SRINIVASA IYER : சென்னைக்கும் திருச்சிக்கும் இடையில் விழுப்புரம் கார்டு லைன் வழியாக 3 துரித வண்டிகள் போகின்றன. ஆனால் திருச்சிக்கும் சென்னைக்கு இடையில் மாயவரம் வழியாக போட் மெயில் மாத்திரம்தான் துரித வண்டியாக போகிறது. ஆகவே புது வண்டிகளை இரவு நேரத்தில் மாயவரம் வழியாக துரித வண்டிகளை விடுவதற்கு சர்க்கார் சிபாரிசு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மற்றொரு புதிய வண்டி விடுவதற்கு பிரயாணிகள் வேண்டும். அவ்வளவு கூடுதலாக பிரயாணிகள் கிடைக்கும் என்று தோன்றவில்லை. இருந்தாலும் இதைப் பற்றி ரயில்வே யூஸர்ஸ் கமிட்டியில் எடுத்துச்சொல்லலாம்.

SRI A. VEDARATHNAM : காரைக்குடிக்கும் அரந்தாங்கிக்கும் மிடையில் லைன் திறந்து பல நாட்கள் ஆகியும் குருக்குபாதையில் போகும் வண்டிகளை அங்கும் போவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தனியாக கேட்க வேண்டும்.



*Iron ore in Salem*

* 301 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given to a supplementary under Question No. 9 on 27th June 1957—

(a) whether any report has been received from the National Metallurgical Laboratory, Jamshedpur, about samples of iron ore from Salem sent to them for testing; and

(b) if so, whether a copy of it will be placed on the table of the House?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir. But it is only a preliminary report.

(b) A copy of the preliminary report * is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : முடிவு அறிக்கை வருவதற்கு எவ்வளவு காலமாகும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : ரிசர்ச் முடிந்த உடன் வந்து விடும்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, முடிவு அறிக்கையை விரைவாக பெறுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு கனிப்பொருளைப்பற்றி விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும்பொழுது சீக்கிரமாக ஏதாவது ஒரு அறிக்கையை கொடுத்து விடுங்கள் என்று சொல்வது சரியாகாது.

SRI A. A. RASHEED : Is there any proposal to start a steel factory at Salem?

THE HON. SRI R. VENKATARAMAN : By whom, Sir?

SRI K. VINAYAKAM : On a point of order. During question time it is the privilege of hon. Members to put questions to the Members sitting on the Treasury Benches. But it is not known whether there is a procedure anywhere in any parliament where Ministers put questions to Members. May I know whether the Hon. Minister's enquiry is in order in asking a question of the Member who wanted to elicit information from him?

MR. SPEAKER : He is entitled to ask what the hon. Member means.

THE HON. SRI R. VENKATARAMAN : To know what the question is.

SRI K. VINAYAKAM rose.

MR. SPEAKER : I rule out the point of order raised by the hon. Member

* Printed as Appendix IV on pages 262–265 infra.

[12th March 1958

**Sri K. ANBAZHAGAN** : நான் கேள்வி கேட்கவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன். இந்த முக்கியமான கேள்விக்கு நாலைந்து பக்கங்கள் அச்சிட்டுள்ள தாள் இன்று காலையில் சபை தொடங்குவதற்கு முன்புதான் தரப்படுகிறது. அந்தப் பக்கங்களில் என்ன இருக்கின்றன என்பதை திருப்பி பார்க்காமல் இது சம்பந்தமாக தொடர்ந்து துணைக் கேள்விகளை கேட்க இயலாமல் போகிறது. ஆகையினால் இம்மாதிரிப்பட்ட பதில்களை எழுத்து மூலமாக முதல் நாளே அங்கத்தினர்களுக்கு கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : முடியாது. கேள்வி சபையில்தான் கேட்கவேண்டும். பதிலும் சபையில்தான் சொல்லவேண்டும். சுருக்கமான கேள்வி கேட்டால் சுருக்கமான பதில் கிடைக்கும்.

**Sri K. ANBAZHAGAN** : இந்த நாலைந்து பக்கங்களில் இருக்கின்ற விடைகளை இரண்டு நிமிட நேரத்தில் பார்த்து முடிக்கமுடியாது. ஆகவே முதல் நாளே தரும்படி செய்வதற்கு தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**Sri S. B. ADITYAN** : இதைப்பற்றி . . ,

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** rose—

**Sri S. B. ADITYAN** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், இதைப் போல விரிவான பதில் இருக்கக்கூடிய கேள்விகளுக்கு முதலில் தரப்படவேண்டியது பதிலைக் கொடுத்துவிட்டு, அதன்மீது சப்ளிமெண்டரி கேள்விகளை மறு நாள் கேட்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**Mr. SPEAKER** : இன்னும் கொஞ்சம் சப்ளிமெண்டரி அதிகமாகக் கேட்க சபாநாயகர் அனுமதி அளிப்பார்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்த பதில்களெல்லாம் சபையில் ½ மணி நேரத்திற்கு முன்பே வைக்கப்படுகிறது. அதைப் பார்த்துப் படித்துக்கொள்ளலாம். அதைப் பார்த்துப் படிக்க அவகாசமில்லையென்றால், அங்கத்தினர்கள் அந்தக் கேள்வியை மறுநாள் வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : அதை நான் பரிசீலிக்கிறேன். இது சட்டத்திற்கு விரோதமாகுமோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அதைப் பரிசீலனை செய்து பதில் கொடுக்கிறேன்.

**Sri S. B. ADITYAN**: மன்றத் தலைவர் அவர்களே, இந்த மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் பதிலைப் பார்த்தால் ஐந்து இடங்களிலிருந்து கனிப்பொருள்கள் தனித்தனியாக எடுத்து ஜம்ஷெட்பூருக்கு அனுப்பப்பட்டதாகவும், அப்போது அதிலுள்ள கோணிப்பைகளிலுள்ள எழுத்து அழிந்து போனதாகவும். அதன் பின் அதை எல்லாம் ஒன்றாக சேர்த்து குழப்பி விஞ்ஞான ரீதியில் சோதனை செய்யப்பட்டதாகவும் சொல்லப் பட்டது. இவ்விதம் ஐந்து இடங்களிலுள்ளதையும் ஒன்றாக சேர்த்து குழப்பி சோதனை செய்தால் அது எப்படி சரியான சோதனையாக இருக்க முடியும்? ஆகையால் தனித்தனியாக சோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சாதாரணமாக ஒரு கனிப் பொருளை சோதனைக்கு எடுக்கும்பொழுது நாலைந்து இடங்களில் கிடைக்கக்கூடியதை தோண்டி எடுத்து, அதன் மூலமாக அதில் எந்த அளவுக்கு இரும்பு இருக்கிறது, அதாவது அதில் இரும்பு எத்தனை சதமானம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கிறார்கள். ஆனால் தனித்



12th March 1958]

தனியாக அனுப்பப்படும்பொழுது ஒவ்வொரு இடத்திலும் கிடைக்கக் கூடிய கனிப் பொருளில் எத்தனை சதமானம் இரும்பு பொருள் கிடைக்கிறது என்பதை கண்டு பிடிக்கிறார்கள். ஆனால் சோதனை செய்யும்போது மொத்தமாக கலந்துதான் சோதனை செய்யப்படுகிறது.

**Sri V. K. RAMASWAMY MUDALYAR** : சற்று முன்பு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விஞ்ஞான ஆராய்ச்சி நடந்துகொண்டிருப்பதாக சொன்னார்கள். அப்படியென்றால் இந்த ஆராய்ச்சி எப்போது முடிவு அடையும் ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இதைப்பற்றி ரிசர்ச் முடிந்த பின்தான் தெரிவிக்க முடியும்.

**Sri A. GOVINDASAMY** : சேலத்தில் இந்த உருக்குத் தொழிற் சாலையை சர்க்கார் நடத்துவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இதைத்தான் ரஷீத் அவர்களிடம் கேட்டேன். சர்க்காரால் இதை நடத்தவேண்டுமென்று இப்போது திட்டமில்லை. மூன்றாவது திட்டத்தில் சேர்த்து நடத்தலாம் என்பது அபிப்பிராயம். தனியார்கள் சிலருக்கும் லைஸென்ஸ் வழங்கப் பட்டிருக்கிறது. கோயம்புத்தூரிலுள்ள டெக்ஸ்டூல் கம்பெனிக்கு லைஸென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அது ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இன்னும் ஓரிரு கம்பெனிகள் தொழிலை நடத்தி தயாரித்து கொள்வார்களானால் அவர்களுக்கும் கொடுக்கலாம் என்று சென்னை சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறது. Sir, may I just bring to your notice the practice in the Lok Sabha in this mattor. When Papers were laid on the table of the House, generally Members put in fresh question on the basis of them by giving notice.

**Mr. SPEAKER** : The practice in respect of this matter varies in different Parliaments. In certain Legislatures, questions and answers are printed and handed over to the Members. For example in Mysore it is so. But that has been challenged because the answer must be given after the question is put, as otherwise it does not become a question and answer. Therefore, the practice followed in this House is that the answer is given after the question is put. Papers are laid on the table of the House half an hour before the House meets and the hon. Member, Sri Anbazhagan can come half an hour earlier and read them. I think the practice now followed is wholesome.

### *Electrification of railway lines.*

* 302 Q.—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Home be pleased to state the present stage of the proposal to electrify Thambaram-Villupuram Railway line?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : Consequent on the decision of the Railway Board that future electrification of main line sections should be on the A.C. System, revised estimates for the electrification of the Tambaram-Villupuram section are being prepared by the Southern Railway Administration. In the meantime the preliminary works such as strengthening of railway track, raising of platforms, etc., are stated to be in progress.

[12th March 1958

SRI N. K. PALANISAMI: இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று பரிசீலிக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: என்னிடம் தகவல் இல்லை, ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் மத்திய சர்க்கார் ரெயில்வே வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்திருந்தால் தெரிந்து கொண்டிருக்கலாம்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR: Can the Hon. Minister tell us the probable time when this scheme is likely to be completed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It has already been taken up and I am sorry I do not have the particulars as to the exact time when it will be completed. But the work has already commenced.

SRI A. GOVINDASAMY: இந்தப் புதிய ரயில் பாதைக்காக விழுப்புரம் போன்ற இடங்களில் சர்க்கார் நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்களா? மத்திய அரசாங்கத்திடமிருந்து போதுமான நஷ்ட ஈடு வாங்கிக் கொடுக்கப் பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

MR. SPEAKER: அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் விஸ்வநாதன் அவர்கள் 40-வது விதிப் பிரகாரம் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அந்த அங்கத்தினர் இப்போது இல்லை. அவருக்கு பதில் இந்தக் கேள்வியை வேறு யாரும் கேட்க முடியாது. இதை நாளைக்கோ, நாளை மறு நாளோ எடுத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கிறேன்.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—PRIVILEGE MOTION *RE* INCORRECT PUBLICATION OF THE SPEECH OF A MEMBER OF THE HOUSE.

MR. SPEAKER: Hon. Members are aware that on the 7th March 1958, the hon. Member, Sri K. Anbazhagan, raised a point of breach of privilege. He has objected to the reporting of his speech in the issue of '*Janasakthi*', dated the 4th March 1958. On a perusal of the Official Report, I find that there is not much difference in the idea expressed, but that the summary is not a correct report of the proceedings of the House and the heading also is not correct.

May's Parliamentary Practice is clear on this point. Although the privilege of freedom of speech protects what is said in debate in either House, this privilege does not protect the publication of debate outside Parliament. But the publication of a fair and accurate account of a debate of either House or Parliament is protected by the same principle as that which protects fair reports of proceedings in Courts of Justice. A report that is not absolutely correct is, therefore, liable to be considered as breach of privilege.

In the speech reported above, in my opinion, there is a slight difference, and I therefore rule that there is a *prima facie* case. According to the rules in force in our Assembly, i.e., Rule 184, which says that if the Speaker holds that a *prima facie* case exists, he may allow a Motion to be made by any Member that the alleged breach of privilege be referred to the Committee of Privileges or in the alternative, that it be dealt with by the House itself.



12th March 1958] [Mr. Speaker]

In pursuance of the alternative given to me by this rule, I place this matter before the House for its decision.

SRI M. KALYANASUNDARAM: Sir, I beg to submit that I have received a letter from the Editor of '*Janasakthi*' addressed to you and to be presented through me. Let me read the letter. It says—

'I hereby bring to your notice an authoritative version of the speech of Sri Anbazhagan published in to-day's '*Janasakthi*' and the regret expressed therein for the incorrect version published earlier.'

I find from the issue that an authorized version is also published and in the end the Editor says—

குறிப்பு.—" ஜனசக்தி, சென்னை, 4—3—1958 இதழில் முதல் பக்கத்தில் வெளியான திரு. அன்பழகன் பேச்சுப் பற்றிய செய்தியும் தலைப்புகளும் மேற்கூறிய அவரது பேச்சின் சரியான வாசகங்களுக்கு மாறானதாகப் பிரசுரமானதற்கு வருந்துகிறோம்."

The regret was also publised in the newspaper yesterday. Therefore, I think that the matter may be dropped at this stage and the precious time of the House need not be taken up further, in respect of this matter. (The hon. Member then presented the relevant issue and the letter of regret from the editor '*Janasakthi*' to the Secretary, Legislature Department.

SRI K. ANBAZHAGAN: மன்றத் தலைவர் அவர்களே, "ஜன சக்தி" இதழில் என்னுடைய பேச்சு வெளியிடப்பட்ட முறையினையும், 9-20 a.m.
அதனால் ஏற்பட்ட விளைவுகளையும், குறிப்பாகத் தங்களிடத்தில் தெரிவித்திருக்கின்றேன். இப்படி குறிப்பாக வெளியிடப்பட்டதில் தவறுகள் குறிப்பிலே காணப்படுகின்றன. இப்போது அவையிலே அந்த இதழ் இருக்கிறது. அதிலே குறிப்பிடப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள், என்னுடைய கருத்தையும், நான் பேசிய கருத்தையும், பொது மக்கள் மிகத் தவறாக உணரக்கூடிய விதத்தில் எனக்கு மிகவும் தீமை செய்துள்ளது என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அந்த இதழிலே, மில் முதலாளிகளுடைய பண்பையும் போக்கையும் எதிர்க்கின்ற நான் மில் முதலாளிகளை ஆதரித்துப் பேசியதாகவும், டி.டி.கே. மத்திய சர்க்காரில் இருந்து ஒரு பெரும் தவறு செய்திருக்கிற நேரத்தில், அவரை நான் ஆதரித்திருப்பதாகவும், தவறுக்கு உடந்தையாக இருப்பது போலக் காட்டி வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு நேற்று வந்த "ஜன சக்தி" இதழையும் பார்த்தேன். இதன் விளைவுகளைத் துடைக்கின்ற முறையிலே குறிப்புகள் எதுவும் அந்த இதழில் இல்லை. என்னுடைய பேச்சு ஏதோ தவறுதலாக வந்துவிட்டதைப் போலவும், அதிலே ஏதோ பிழைத் திருத்தம், எழுத்துத் திருத்தம், தொடர் திருத்தம் இருந்தது போலவும் அதிலே வெளியிடப்பட்டிருக்கிறது. எனக்கு இழைக்கப்பட்ட தீமை, எனக்கு இழைக்கப்பட்ட அநீதி, பொது மக்களை ஏமாற்றுகிற முறையிலே வெளியிடப்பட்ட அந்த நிகழ்ச்சி, எந்த விதத்திலும் மாற்றம் அடைந்து விடவில்லை. அதை முழுவதும் விளக்கவேண்டுமென்றால் எனக்கு அந்த "ஜன சக்தி" ஏடு தேவை. விளக்காமலே நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் எனக்கு இழைக்கப்பட்ட அநீதி துடைக்கப் படாத காரணத்தினால், இதை பிரிவிலெஜஸ் கமிட்டிக்கு விட்டுவிட வேண்டுமென்று தங்கள் மூலமாக தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

SRI A. GOVINDASAMY: நான் இந்த தீர்மானத்தை வழி மொழிகிறேன்.

THE HON. SRI M. BHAKATAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம்

[Sri M. Bhaktavatsalam] [12th March 1958

அவர்கள் பேசியதிலிருந்து, அவர்கள் அளித்த விளக்கத்திலிருந்து, "ஜன சக்தி" யில் பிரசுரிக்கப்பட்டதில் தவறுகள் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அப்படி ஒப்புக் கொள்ளப்பட்டதோடு வருத்தம் தெரிவிக்கப்பட்டும் இருக்கிறது. இதோடு இந்த பிரச்னையை விட்டுவிடலாம் என்று பிரேரேபிக்கிறேன்.

I move that the matter may be dropped.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, inasmuch as the hon. Member who belongs to the Communist Party has produced a letter from the Editor of '*Janasakthi*' expressing regret and offering an unreserved apology, we are also of the opinion that the matter may be dropped without reference to the Committee of Privileges.

MR. SPEAKER: Since Mr. Anbazhagan is involved in this matter, I shall allow him another chance to speak. He will be the last speaker so far as this matter is concerned.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இந்த "ஜன சக்தி" பத்திரிகையிலே வந்த செய்தி விளக்கத்தை நான் இந்த அவையிலே எடுத்துக்கூற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்த அளவோடு இதை விட்டுவிடவேண்டுமென்று அவைத் தலைவர் கருதுவார்களேயானால், எனக்கு இழைக்கப்பட்ட அநீதியை இந்த மன்றத்திலே விளக்குவதற்கு வாய்ப்புத் தரவேண்டும். அந்த விளக்கத்தைப் தந்ததற்குப் பிறகு வேண்டுமானால் தாங்கள் விட்டுவிடவேண்டுமென்று கூறினால் நான் விட்டு விடுகிறேன்.

MR. SPEAKER: I have myself gone through the matter and as there was some difference, I have placed it before the House. If however, Mr. Anbazhagan wants to read the matter contained in the paper, I have absolutely no objection. Let him do so. After Mr. Anbazhagan reads the matter and explains his points, I shall take a vote. There will not be any further discussion.

SRI K. ANBAZHAGAN: மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, "ஜன சக்தி" 4—3—1958 இதழில் வெளியிடப்பட்ட செய்தித் தலைப்பு "மோசடியால் வெளியேறிய டி.டி.கே. நம்மவராம். நல்லவராம். தி.மு.க. அன்பழகன் பேச்சு. வேஷம் கலைகிறது" என்றிருக்கிறது. இதிலே கக்கப்படுகிற விஷத்தை இந்த அவை உணர்ந்துகொள்ளும் என்று நம்புகிறேன். இந்தத் தலைப்பிற்கு அடுத்து தரப்படுகிற செய்தியானது "சென்னை சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் தி.மு.க. உறுப்பினர் க. அன்பழகன் பேசியதாவது. திரு டி. டி. கே. நம்மவர் என்பதை நிதியமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த உணர்வு ஏற்பட்டமைக்காகப் பெருமைப்படுகிறேன். நான் சொல்லவில்லை—இந்த உணர்வு நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடத்தில் இருப்பதினால், ஒரு இனப்பற்று இருக்கிறது என்று குறிப்பிட்டேனே தவிர" இந்த உணர்வு ஏற்பட்டமைக்காகப் பெருமைப்படுகிறேன், டி.டி.கே. நம்மவர். அவர் மத்திய சர்க்காரில் இருந்தால் நமக்கு நல்லது கிடைக்கும் என எதிர்பார்ப்பது நமது இரத்த உறவைவிட மேலானது, இந்த உணர்வு ஏற்பட நாங்கள்தான் காரணம்" என்று நிதி அமைச்சர் அவர்கள் டி.டி.கே. நம்மவர் என்று குறிப்பிட்டதை, நான் வேறொரு கோணத்தில் எடுத்துச் சொன்னதை அவர் எவ்வளவு மோசடியால் வெளியேறியிருந்தாலும், அவர் "நம்மவர்", "நல்லவர்" என்று நான் பேசியதாக வெளியிட்டதானது, அந்தப் பேச்சினுடைய முழுப் போக்குக்கு நேர்மாறானது என்பதைத் தங்கள் மூலமாக இந்த [illegible]



12th March 1958] [Sri K. Anbazhagan]

அதற்கு மேலே "நிதியமைச்சர் குறுக்கிட்டு நான் பிரிவினையை எதிர்ப்பவன் என்றார்" என்று கூறப்பட்டிருக்கிறது.

அடுத்த தலைப்பிலே "மில் முதலாளிகளின் குரல்" என்று—அன்பழகனின் குரல் மில் முதலாளிகளின் குரல் என்ற முறையில் தலைப்பு தந்து—" அன்பழகன் மேலும் பேசுகையில், "கேரளத்திற்கு அரிசி போவதைத் தடுக்க வேண்டுமென்றும், ஆகவே தென் உணவு மண்டல ஏற்பாடுகள் கூடாது என்றும், ஆனால் தென் துணி மண்டலம் வேண்டுமென்றும் கூறினார்" என்று "மில் முதலாளிகளின் குரல்" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, நான் வெளியிலேயுள்ள சுவரொட்டிகளில் பார்த்தேன். அந்தப் பத்திரிகையின் சுவரொட்டியில் "அன்பழகன் பேச்சு: டி. டி. கே. நம்மவராம். நல்லவராம்", என்ற விளம்பரம் காணப்பட்டது. ஆகவே இதிலுள்ள கருத்தை நான் சபாநாயகர் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது நான் பேசிய பேச்சை தலைகீழாகத் திருத்தி அன்றைய தினம் வெளியிடப்பட்டது. இன்றைய தினம் அவர்கள் திருத்தியிருக்கிற "ஜன சக்தியிலே" காணப்படுகின்ற கருத்து ஏதோ சில வார்த்தைகளில் த்வறு ஏற்பட்டு, அதன் காரணமாக வெளியிடப்பட்டதாக இருக்கிறதேயொழிய, அன்பழகன் பேச்சின் நோக்கத்தையும், கருத்தினையும் திருத்தி வெளியிட்டுருக்கிறார்கள் என்று இப்போதும் அவர்கள் ஒப்புக்கொண்டு வெளியிடவில்லை. திருத்தத்தை வெளியிடவேண்டுமென்று—நியாயம் காரணமாக—தலைவர் சொன்ன காரணத்தினால், திருத்தம் என்று பெயரளவுக்கு போட்டிருக்கிறார்களே தவிர அந்தத் திருத்தமானது எனக்கு நீதி செய்வதாக இல்லை—அந்த இதழைத் தருவாரானால் நான் அதைப் படித்துக் காட்ட முடியும். மறுபடியும் இந்த "ஜன சக்தி" இதழ்—தலைவர் மூலமாக நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்—அன்பழகன் பேசிய கருத்தை மாற்றியும், திருத்தியும் பிரசுரித்ததற்கு வருந்துகிறோம் என்று சொல்லவில்லை. இங்கே நடைபெற்றிருக்கின்ற பேச்சை—அதிலே எழுத்துத் திருத்தமல்ல, வெறும் தொடர் திருத்தமல்ல—ஒரு கருத்தை மாற்றி மற்றொரு கருத்தாக வெளியிட்டிருக்கிறார்கள். நாங்கள் திருத்தியும், மாற்றியும் வெளியிட நேர்ந்ததற்கு "ஜனசக்தி" வருத்தம் தெரிவிக்காமல்—இதற்குப் பொறுப்பு, பேசியவர் அல்ல, இந்த மன்றமும் அல்ல, பேசப்பட்ட தொடரும் அல்ல என்று தெரியும் என்று தலைவர் அவர்களுக்குத் தெரியும் என்று சொல்லுவேன்—இந்தத் திருத்தத்தை தராமல், கனம் கல்யாணசுந்திரம் அவர்கள் இப்போது கொடுத்த "ஜன சக்தி" இதழைப் படித்துப் பார்த்தால், அதில் இடப்பட்டிருக்கிற தலைப்பு என்னை கேவலப்படுத்துவதாக இருக்கிறதே தவிர, பெருமைபடுத்துவதாக இல்லை. இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது "டி. டி. கே. "நம்மிலே ஒருவர் என்ற அரிய கருத்து" என்ற தலைப்பு தந்து அன்பழகனுக்கு ஏதோ ஒரு உடன்பாடு இருப்பது போலும், ஏதோ தப்புவிப்பதற்காக இங்கே வந்து மறுத்துப் பேசுவது போலவும் ஒரு கருத்தைத் தந்திருக்கிறது. இரண்டாவது முறையும் "ஜன சக்தி" தவறு செய்திருக்கிறது. திருத்துகின்ற இடத்தில் நேர்மையிருக்கின்றதா என்பதைத் தாங்கள் அருள் கூர்ந்து பார்க்க வேண்டும்—தமிழில் மொழி பெயர்த்துத் தரவேண்டுமானால், தங்கள் நிர்வாகத்திலே இருக்கின்ற நல்ல தமிழ் அறிந்தவர்களைக்கொண்டு மொழி பெயர்த்து, அதைப் படித்துப் பார்க்கலாம். எனக்குத் தரவேண்டிய மன்னிப்பு நீதியான முறையில் தரப்படவில்லை. இந்த "ஜன சக்தி" அருள் கூர்ந்து "அன்பழகன் பேச்சைத் திருத்தி வெளியிட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்" என்று வெளியிடுவார்களேயானால் நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன். இந்த அவையைப் பொருத்த வரையில் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியான கனம் அமைச்சர் அவர்கள் இந்த அளவோடு நிறுத்தி விடலாம் என்று சொல்லிவிட்டார்கள். இந்த அவையிலே கனம் அமைச்சருடைய தீர்மானம் நிறைவேறும் சூழ்நிலை இருக்கிறது—வாய்ப்பு இருக்கிறது—என்று தெரிந்துகொண்டிருக்கிறேன். அவைத் தலைவர் விரும்பினால் இதை இந்த அளவோடு விட்டுவிடுகிறேன். ஜன சக்தியைப் பொருத்த வரையில் "அன்பழகன் பேசியதைத் தவறாக வெளியிட்டதற்கு

[Sri K. Anbazhagan] [12th March 1958

நாங்கள் வருந்துகிறோம்" என்று முதல் பக்கத்தில் எந்த அளவில் கொட்டைத் தலைப்பில் எனது பேச்சை திருத்தி வெளியிட்டிருக்கிறார்களோ, அதே முறையில் வெளியிடுவதாக இருந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்—அதை நல்ல செயலாக எடுத்துக்கொள்வேன். தாங்கள் அளிக்கும் நீதிக்கு கட்டுப்படுவேன் என்று சொல்லி, இந்தத் திருத்தத் தீர்மானத்தை—அவையில் உள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர் தேவையில்லை என்று சொன்ன காரணத்தால் விட்டுவிடத் தயாராயிருக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM rose—

MR. SPEAKER: The hon. Member cannot make a second speech. He is not involved.

SRI M. KALYANASUNDARAM: I have submitted the letter of the Editor and my motion is also there.

MR. SPEAKER: The hon. Member has already spoken. I have already informed the House that Mr. Anbazhagan will be the last speaker and I shall not allow any further speeches.

I shall now put the motion moved by the Hon. the Home Minister to the vote of the House. The question is "That the matter be dropped."

The motion was put and carried and the matter was dropped.

## III.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1958.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, I beg leave to introduce the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958[a].

MR. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, I introduce the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958.

The Bill was introduced.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 12th March 1956.



12th March 1958]

### (2) THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958).

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, I move—

"That the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958)[a] be referred to a Select Committee."

Mr. Speaker, as the hon. Members are aware, the system of taxation of sales of commodities as embodied in the Madras General Sales Tax Act, 1939, has become complicated as a result of the several changes made in the basis of taxation on some commodities, the introduction of additional levies, differences in the rates of tax on different commodities, the manner in which exemptions have been granted and the confusion in respect of important matters like the taxation of inter-State transactions. The structure of the sales tax has been criticised by the public as being complicated and not easily understandable by them. Representations were being made to the Government that the multi-point system of taxation should be abolished and replaced by a single point system that the other provisions of the Act should be made simpler and that the administration of the Act should be made easy. The Government were convinced that the criticisms were genuine and well-founded.

In May 1957 they accordingly invited Dr. P. S. Lokanathan, Director-General, National Council of Applied Economic Research, New Delhi, to examine the scope and working of the sales tax law in this State with a view to simplifying its structure and its administration. Dr. P. S. Lokanathan made exhaustive enquiries between June and August 1957, visited several places in the State and had talks with members of various Chambers of Commerce and Trade Associations, individual businessmen and other interested parties on the present structure of the sales tax in the State and the lines on which it could be improved. In December 1957, he submitted his "Report on the Simplification and Improvement of the Sales Tax System in Madras", a copy of which has already been placed on the table of the House.

The Government have examined the various recommendations of Dr. Lokanathan and taken decisions thereon. To give effect to the decisions of the Government, it has become necessary to replace the existing Madras General Sales Tax Act by a more comprehensive enactment. The Madras General Sales Tax Bill, 1958, already introduced in the House embodies the various decisions of the Government excepting those on certain points which are proposed to be further examined and decided at the Select Committee stage.

Dr. Lokanathan has recommended the levy of single point tax on a large number of commodities specified in Schedule I to his report. He has also recommended the levy of slab rates of tax

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 8th March 1958.

[Sri R. Venkataraman] [12th March 1958

9-40 a.m. on small dealers having turnovers of Rs. 25,000 and less. The other important recommendations made by him are that the general rate of multipoint tax should be reduced to one per cent and that the rate of tax on cereals, pulses, milk and vegetables should be half per cent. The recommendation of Dr. Lokanathan to levy a single point tax on a large number of commodities has been accepted. There are, however, some variations in the rates in respect of certain items, mainly because, this Government and other State Governments have agreed to the levy of a uniform rate of tax of seven per cent single point on certain luxury goods. The principle of levying slab rates of tax on dealers having turnovers Rs. 25,000 and less has also been accepted, but the rates of tax for the various slabs have been fixed so as to conform to the general multipoint tax of two per cent which has been decided upon by the Government.

Since no reliable data is available as to the revenue from the multipoint rates of tax, the Government did not find it possible to accept the recommendation of one per cent multipoint levy made by Dr. Lokanathan. In view of the paramount need for funds to execute the Second Five-Year Plan and the present condition of the State finances, the Government cannot afford to experiment by reducing the rates when there is no guarantee that the yield from these measures will not be below the present yield. The demands of merchants have been met to a very large extent for the introduction of slab rates for small dealers who form 50 to 60 per cent of the dealers assessed to tax and the extension of the single point levy to a very large number of items. The effect of these measures will have to be watched for some time before Government accept the recommendation to reduce the general multipoint levy. As regards the rate on cereals, pulses, milk and vegetables, it is correlated to the general multipoint levy and as the recommendation to reduce the general multipoint rate of two per cent has not been accepted, the proposed reduced rate for cereals, pulses, milk, etc., has not also been accepted. As recommended by Dr. Lokanathan, the Government have decided to withdraw the exemption granted to vegetables and tax them at one per cent as against half per cent recommended by him. Exclusive dealers in vegetables with a turnover of Rs. 25,000 and below will be exempt from tax.

In order to check evasions, Dr. Lokanathan has recommended that power should be granted to departmental officers to check the movements of goods by boats, lorries, etc. He has also recommended that powers should be granted to inspect, search and seize accounts, etc., if necessary. These recommendations have been accepted and the necessary provisions have been made in the Bill. Dr. Lokanathan has recommended the separation of appellate functions and the appointment of separate set of officers for dealing with first appeals against orders of assessment. The Government have accepted this recommendation and propose to appoint



12th March 1958] [Sri R. Venkataraman]

four Appellate Assistant Commissioners for dealing with appeals. The Statement of Objects and Reasons clearly gives the details of the Bill.

Sir, before I conclude I wish to place on record the appreciation of the Madras Government for the very valuable services rendered by Dr. Lokanathan. As the Bill is an important one, it is considered desirable that it should be referred to a Select Committee of the House for detailed scrutiny. Any amendment to the Bill that may be moved by the hon. Members will be considered by the Select Committee. I now request the House to accept the motion for referring this Bill to a Select Committee. Sir, as this Bill contains some very important facts, I had to read a prepared statement. In my reply to the debate, I will answer all the points in Tamil.

MR. SPEAKER: The Business Advisory Committee will meet at 10 o'clock to decide that the Bills are to be taken up and the order in which they will be taken up. Till this is settled by the Business Advisory Committee, I should like hon. Members to have a general discussion on the Bill so that the House will be enlightened on all points.

SRI V. K. KOTHANDARAMAN: சார், இப்போது சபை முன்பு வந்திருக்கக்கூடிய விற்பனை வரி மசோதாவின் பேரில் என்னுடைய அபிப்பிராயத்தை சொல்லுவதற்கு முன்னால் . . . . . .

SRI N. K. PALANISAMI: I have given notice of an amendment, Sir.

MR. SPEAKER: I am sorry. There are two amendments, the first by Sri Palanisamy and the second by Sri K. Sattanatha Karayalar. As both the amendments are the same, I shall ask Sri Palanisamy to move the amendment.

SRI N. K. PALANISAMI: Sir, I move that the Madras General Sales Tax Bill, 1958, be circulated for eliciting public opinion.

SRI V. K. KOTHANDARAMAN: I second the amendment, Sir.

MR. SPEAKER: Sri Kothandaraman may now speak.

SRI V. K. KOTHANDARAMAN: என்னுடைய அபிப்பிராயங்களைச் சொல்வதற்கு முன்னால், ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விற்பனை வரி சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி ஆங்கிலத்தில்தான் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு இருக்கக்கூடிய பலர் ஆங்கிலம் தெரியாதவர்கள், அரை குறை ஆங்கிலம் தெரிந்தவர்கள். இந்த நிலைமையில் அதை படித்துவிட்டு சரியான அபிப்பிராயங்களை கொடுப்பது என்று சொன்னால் அது முடியாத காரியம். இப்பொழுது நான் என்னுடைய அபிப்பிராயங்களை சொல்லுகின்ற போது அதில் ஏதாவது குற்றம் குறைகள் இருக்குமேயானால் அது சர்க்காரைச் 9.47 a.m.

சார்ந்தது, கனம் அமைச்சர்களைச் சார்ந்தது என்பதைச் சொல்லிவிட்டு நான் பேச ஆசைப்படுகிறேன். இனிமேலாவது இங்கு கொடுக்கும் புத்தகங்கள், பேபர்கள், பதில் கொடுக்கக்கூடியவைகள் எல்லாம், தமிழிலேயே இருக்குமானால், உண்மையிலேயே எல்லோருடைய சரியான அபிப்பிராயத்தையும் கனம் அமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்ல முடியுமே தவிர, மற்றபடி அல்ல.

இந்த விற்பனை வரி 1938-ம் ஆண்டு ஆரம்பித்து, அதற்குப் பிறகு 20 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஆண்டிலே, ஒரு முனை வரியாக ஆக்கப்பட்டு, ஓரளவு அது திருத்தப்பட்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன், சந்தோஷப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 20 ஆண்டு காலத்திற்குள்ளாக வியாபாரிகள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டார்கள், பொது மக்கள் பாதிக்கப்பட்டார்கள், கணக்குகள் வைக்க முடியாததால் விற்பனை வரி வசூல் செய்ய முடியாத நிலைமை, இம்மாதிரியான விஷயங்கள் தான் பல முனை விற்பனை வரியை ஒரு முனை வரியாக ஆக்கச் செய்தன. அதிகாரிகளுடைய பலவிதமான தொந்தரவுகள் இருக்கின்றன. அதிகாரிகளுடைய தொந்தரவுகள் எல்லாம் இல்லாத முறையில் இதை மாற்றி திருத்தி அமைக்க வேண்டும் என்றெல்லாம் பலவிதமான ஆலோசனைகளை வியாபாரிகள் கொடுத்திருக்கிறார்கள், கொடுத்துக் கொண்டு வருகிறார்கள், இனிமேலும் கொடுக்கத்தான் போவார்கள். அப்படி இருக்கக்கூடிய நிலைமையில், சர்க்கார் கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதாவில் பலவிதமான குறைபாடுகள் இருக்கின்றன.

ஆகவே இதையெல்லாம் பார்க்கும்போது எதைப் பார்க்கிறோம் என்றால் குளிக்கப்போய் மீண்டும் சேற்றில் விழக்கூடிய நிலைமைக்குப் போகிறது என்றுதான் சொல்ல வேண்டும். இதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அப்படி குறைபாடுகள் இருக்கக்கூடிய நிலைமையில் பெரிய வியாபாரிகளும் சரி, சின்ன வியாபாரிகளும் சரி, பொது மக்களும் சரி, பல தொல்லைகளுக்கு உள்ளாகக்கூடிய நிலைமையில் குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகள் என்ன என்பதை நாம் எடுத்துப் பார்த்தால் இது வரையில் இருந்தது 7,500 ரூபாய் முதற்கொண்டு பத்து ஆயிரம் ரூபாய் வரையில் சேல்ஸ் டாக்ஸ் ரிஜிஸ்ட்ரேஷன் வரி ஆறு ரூபாயாக இருந்தது. அதை இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது 5,000 முதற்கொண்டு பத்தாயிரம் வரையில் ஐந்து ரூபாயும், பத்தாயிரம் முதற்கொண்டு பதினைந்துதாயிரம் வரையில் பத்து ரூபாயும், பதினைந்தாயிரம் முதற்கொண்டு இருபதாயிரம் வரையில் பதினைந்து ரூபாயும், இருபதாயிரம் ரூபாய் முதற்கொண்டு இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் வரையில் இருபது ரூபாயும் வரி போடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில், இப்படி வரி போடப்பட்டிருந்தும் அதே நேரத்தில் அவர்கள் கணக்குகளையும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. கணக்குகள் வைத்துக்கொள்ளவில்லையென்றால், எந்த அளவுக்கு வியாபாரிகள் வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்களோ அதை ஒப்புக்கொண்டாக வேண்டும். அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். அதே நேரத்தில் நாம் ஒன்றைப்பார்க்க வேண்டும். இன்றைக்கு பொது மக்கள் வியாபாரம் செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு அத்தியாவசியமான செலவுகள் பல இருக்கின்றன. தவிர்க்க முடியாத சில செலவுகள் இருக்கின்றன. அவைகளில் குறிப்பாக சிலவற்றை சொல்ல வேண்டுமானால் கட்டட வாடகைக் கொடுக்க வேண்டும், கணக்குகளை எழுதுவதற்கு குமாஸ்தாக்களை வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் கொள் முதல் செய்வதற்கு போகக்கூடிய செலவுகள் வேறு இருக்கின்றன. அதைத் தவிர டாப் வரி என்று சொல்லக்கூடிய கடைகளுக்கு முன்னால் டாப்புகள் போடப்பட்டுக்கொள்வதற்கு கார்போரேஷனுக்கு வரி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, மற்றும் தொழில் வரி போன்ற வரி இருக்கிறது. இப்படி பல விதமான வரிகளைக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இதனால் வியாபாரிகளை பாதிக்கக்கூடிய அளவில் அந்த வரிகள் இருக்கின்றன. இம்மாதிரியான செலவுகள் குறைந்த பட்சம்



வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் முதற்கொண்டு 1,500 அல்லது 1,700 ரூபாய் வரைக்கும் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

(இந்த சமயத்தில் உதவி சபாநாயகர் தலைமை.)

அதற்குமேல் அவருடைய குடும்பத்திற்கு வேறு செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்குக் குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு 100 முதல் 150 வரையில் செலவு ஏற்படுகிறது. ஆகவே வருஷம் ஒன்றுக்கு சுமார் 3,000 வரையில் செலவு ஆகிறது. அப்படிப்பட்ட அத்தியாவசியமான செலவுகள் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதையாரும் மறுக்க முடியாது, அதை தவிர்க்கவும் முடியாது. இது நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு விஷயமாகும். இந்த நிலைமையில் குறைந்த பட்சம் வருஷம் ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் வியாபாரம் நடக்கிறது என்று சொன்னால் சர்க்கார் கணக்குப்படி பத்து சத விகிதம் என்று சொன்னாலும் கூட லாபம் 3,000 ரூபாய் வர வேண்டும். 3,000 ரூபாய் வருவதற்கு பத்து பர்செண்ட் கட்டுமா என்று வேறு சந்தேகம். ஆனால் தற்காலத்தில் ஐந்து முதல் ஆறு பர் செண்ட் வரையில் தான் லாபம் கிடைக்கிறது. பத்து பர் செண்ட் கிடைப்பதாக இருந்தாலும் மூவாயிரம் ரூபாய் கிடைக்க வேண்டும். இந்த நிலைமையில் கிராமங்களில் உள்ள வியாபாரிகளும் நகரங்களிலுள்ள வியாபாரிகளும் இன்றைக்கு கணக்கு வைத்துக்கொள்வது என்பது மிகவும் கடினமான விஷயமாக இருக்கிறது. இதை எதற்குச் சொல்லுகிறேன் என்று சொன்னால் இது வரையிலும் எப்படி இருந்தது என்றால் வியாபாரிகள் இவ்வளவுதான் வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்று அதிகாரி சொன்னால் அதை அந்த அதிகாரிதான் ப்ரூவ் செய்யவேண்டும் என்று இருந்தது. ஆனால் இன்றைக்கு வியாபாரிகள் ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரம் செய்திருக்கிறார் என்று நோட்டீஸ். கொடுத்தால் அதைப் ப்ரூவ் செய்ய வேண்டுமானால் அதை வியாபாரிதான் ப்ரூவ் செய்ய வேண்டுமென்ற அளவுக்கு இருக்கிறது. அந்த வியாபாரி எதைச் சொன்னாலும் இன்றைக்கு அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறதா என்பதைப் பார்த்தால் அப்படி நினைப்பதற்கு இல்லை.

**THE HON. SRI R. VENKATARAMAN**: இது தவறு, இது விவாதத்தில் இருக்க வேண்டாம் என்று குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். சட்டத்தில் அங்கத்தினர் சொல்வதுபோல் இல்லை. 25 ஆயிரம் ரூபாய் வரையில் அவர்கள் ஒரு 'கம்ப்பவுண்ட்' டாக்ஸ் கொடுத்து விடலாம். அப்படி கம்பவுண்ட் வரி கொடுக்க இஷ்டம் இல்லை என்றால் அவர்கள் கணக்குக் காண்பித்து வரியை நிர்ணயம் செய்து கொள்ளலாம். அவர்களுக்கு வரி எவ்வளவு என்பதை வியாபாரிகள் நிரூபிக்க வேண்டும் என்று சொல்வது போல் இல்லை.

**SRI V. K. KOTHANDARAMAN**: இது வரையில் 50 ஆயிரம் ரூபாய் வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரிகள் இனிமேல் இருபது அல்லது முப்பது ஆயிரம் ரூபாய் வியாபரரம் செய்யக்கூடிய அளவு இருக்கும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி ஏற்றுக்கொள்ளுகிறார்களா என்று பார்த்தால் அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதாக இல்லை. போன வருஷம் என்ன வரி கொடுத்து வந்தாரோ அதே வரியைத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வியாபாரிக்கு குறைந்த வியாபாரம் நடந்திருக்கும் என்று கணக்கில் எடுத்துக்கொள்வது இல்லை. இந்த நிலைமையில் வியாபாரிகள் ப்ரூவ் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. என்னதான் வியாபாரிகள் சொன்னாலும் அதை அதிகாரிகள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமை ஏற்படவேண்டும். இல்லாத வரையில் இப்பொழுதுள்ளதை விட அதிகப்படியான ஊழல்கள் வரக்கூடியதாக இருக்கும். அப்படி அதிகப்படியான ஊழலும் வரக்கூடிய நிலைமையும் ஏற்படலாம். இப்படிப்பட்ட ஒரு ஆபத்து இதில் இருக்கிறது என்பதையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஒரு வருஷத்தில் ஒரு வியாபாரி ஒரு அளவு வரி கட்டுகிறார் என்று வைத்துக் கொண்டு அடுத்த வருஷத்திலும் அந்த வியாபாரி அதே வரியைக் கட்ட

[Sri V. K. Kothandaraman] [12th March 1958

வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு, கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு, அந்தத் தன்மையிலேயே இருக்கிறது. ஆகவே இது போன்று இருப்பது சரியல்ல. என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைப் படுகிறேன்.

வியாபாரிகள் கட்ட வேண்டிய விற்பனை வரியை 21நாள் தவணைக்குள் கட்டிவிட வேண்டும் என்று இப்பொழுது இருக்கிறது. ஆனால் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை என்னவென்றால் அந்த 21 நாள் தவணையில் கட்ட வில்லையானால் அந்த வியாபாரியின் பேரில் மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டில் கேஸ் போட்டு எந்த விதமான விசாரணையும் இல்லாமல் அபராதத் தொகையால் பாதிக்கப்பட்ட வியாபாரியின் சொத்தை ஜப்தி செய்வதோடல்லாமல் அவரையும் அரஸ்ட் செய்யப்படும் என்று இது போன்று நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தான் நான் ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். சின்ன வியாபாரிகள் வியாபாரம் இல்லாத காரணத்தால் இன்றைக்கு அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று, அதனால் நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால் அவர்கள் பேரில் சிவில் கோர்ட்டில் கேஸ் போட்டு அதன்மூலம் வசூலிக்க முயற்சி செய்தால் நலமாக இருக்கும். இப்பொழுது ஏற்படுத்தியிருக்கிறபடி இந்த சட்டம் இருக்குமேயானால் அதிகாரிகள் வியாபாரிகளுக்கு பல விதங்களில் தொல்லைகள் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அதனால் வியாபாரிகள் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கெள்ள ஆசைப்படுகிறேன்.

கணக்குளப்படி. வைத்துக் கொள்ள வேண்டும் என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். அப்படி கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு சிறு வியாபாரிகள் அப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அது முடியாத காரியம். கிராமங்களில் இருக்கக்கூடிய சிறு வியாபாரிகள் இப்படி வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே இன்றைக்கு வியாபாரிகள் எதிர் பார்த்ததெல்லாம் அவர்கள் ஆலோசனை செய்து சிங்கிள் டாக்ஸ் எப்படி இருக்க வேண்டும் என்று பல ஆலோசனைகளை கொடுத்திருக்கிறார்கள். கணக்குகள் வைத்துக்கொள்ளும் விஷயங்களில் அதிகாரிகளின் தொல்லைகளுக்கு உள்ளாகாமல் இது போன்ற ஒரு வரி திட்டம் வருமா என்று எதிர் பார்த்தார்கள். அதற்குத்தக்கபடி பல விதமான ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இங்குள்ள வியாபாரிகள் மட்டுமல்லாமல் இந்த ராஜ்யத்திலுள்ள வியாபாரிகளையெல்லாம் அழைத்து அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன். இந்த மசோதாவானது இப்பொழுது செலக்ட் கமிட்டிக்குப் போகப்போகிறது. அங்கு வியாபாரிகளைக்கூட்டி, பல சங்கங்களின் பிரதிநிதிகளை அமைத்து அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு கூடுமான வரையில் ஒரு திருத்தம் இந்த மசோதாவிற்கு செய்வது நலமாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு வருஷத்தில் ஒரு வியாபாரி எந்த அளவுக்கு வியாபாரம் செய்யப்போகிறோம் என்று சொல்லிவிட்டு அந்தத் தொகையின் அடிப்படையில் மாதாமாதம் வரியைச் செலுத்த வேண்டும் அல்லது அப்படி செலுத்தக் கூடிய அந்த நேரத்தில் ஒரு வியாபாரி 50 ஆயிரம் அளவுக்கு விற்பனை வரி செலுத்த வேண்டும் என்று இருந்தால் அந்த வியாபாரியினிடமிருந்து அந்த வரியின் பாதி அளவுக்கு ஜாமீன் (செக்யூரிட்டி) கட்ட வேண்டும் என்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. இன்றைக்கு வியாபாரம் செய்பவர்களுக்கு கடை இருக்கிறது, வீடு இருக்கிறது, சொத்துக்கள் பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதற்கு சட்டங்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும் அந்தத் தொகையிலே பாதி அளவுக்கு செக்யூரிடி கொடுக்க வேண்டுமென்ற புதிய அம்சத்தையும் இந்த மசோதாவில் சேர்த்திருப்பது எதற்காக என்று புரியவில்லை. இதையெல்லாம் நீக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.



12th March 1958]

**THE HON. SRI R. VENKATARAMAN** : பிற மாகாணங்களிலிருந்து, பிற இடங்களிலிருந்து வியாபாரம் செய்பவர்களுக்கு இங்கு ஆபீஸ் ஒன்றும் கிடையாது. அவர்கள் வரி கொடுக்காமல் போய்விட்டால் என்ன செய்கிறது என்பதற்காக அவர்களிடமிருந்து செக்யூரிடி வாங்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**SRI V. K. KOTHANDARAMAN** : இருந்தபோதிலும் கூட, எல்லா வியாபாரிகளையும் பொதுவாக பாதிக்கக்கூடிய அளவுக்கு இந்த அம்சம் வந்திருக்கிறதே ஒழிய, மற்ற மாகாணங்களிலிருந்து இங்கு வந்து வியாபாரம் செய்பவர்களைமட்டும் பாதிக்கும் அளவுக்கு மசோதாவில் இல்லை. ஆகவே, அப்படி பார்க்கும்பொழுது எல்லோரையும் பாதிக்கக்கூடிய தன்மையிலேதான் அது இருக்கிறது. ஆகவே, இது எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போன்று வியாபாரிகள் எந்த அளவுக்கு குறைந்தபட்சம் வியாபாரம் செய்திருந்தாலும் கூட, அதிகாரிகள் அவர்களைப்பார்த்து "நீ 30,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்ததாக கணக்கு இருந்தாலும், ரூ. 50,000-க்கு வியாபாரம் செய்திருக்கிறாய். அந்தத் தொகைக்கு நீ வரி கட்டியாகவேண்டும்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த மசோதா அமைந்திருக்கிறது. அந்த நிலைமையிலே அவர்கள் சிவில் கோர்ட்டுக்கு போவதற்கு உரிமை கிடையாது என்பதும் இந்த மசோதாவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் செய்யக்கூடிய தவறுகள் காரணமாக, அதிகாரிகள் சொல்லுவது சரியல்ல ' என்று வியாபாரிகளுக்கு படுமேயானால், அதை எடுத்துக்கூறி சிவில் கோர்ட்டில் போய் வாதாடுவதற்கு உரிமை இருக்கவேண்டும். அப்படியில்லாமல், விற்பனை வரி இலாகா அதிகாரிகளிடத்திலும், அல்லது ட்ரிபியூனல் கோர்டுகளிலும் போய் தான் வாதாடலாம். டிரிபியூனல் கோர்ட்டுகளிலுள்ள அதிகாரிகளின் பேரிலே எந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அதேபோன்று சிவில் கோர்ட்டு அதிகாரிகளின் பேரிலும் நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இது போன்று திருத்தங்கள் செய்து இந்த மசோதாவை மாற்றி அமைக்கவேண்டுமென்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

72 பொருள்களுக்கு ஒரு முனை வரி என்று கொண்டுவரப்பட்டிருந்தாலும் கூட, இதில்கூட ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. குறிப்பாக இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ளுவது என்னவென்றால், இன்றைக்கு ஆடம்பர வாழ்க்கைக்கு ஏற்ற பொருள்கள் இருக்கின்றன, டாம்பீகத்திற்காக உபயோகப்படுத்தக்கூடிய பொருள்கள் இருக்கின்றன. குறிப்பாக பார்க்கப்போனால் இங்கிலாந்து தேசத்திலே "பர்சேஸ் டாக்ஸ்" என்று இருக்கிறது. ஆடம்பரப் பொருள்களின்மீது அங்கே 27 சத விகிதம் வரி போடப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. அது போன்று இங்கேயும் ஆடம்பரத்திற்கு வேண்டி, டாம்பீகத்திற்கு வேண்டி உபயோகப் படுத்தக்கூடிய பொருள்களின் மீதும் எந்த அளவுக்கு அதிகப்படியான வரிகளை போடமுடியுமோ அந்த அளவுக்கு போடுவதில் ஆட்சேபனை கிடையாது. அது போன்று வரி போட வேண்டும். மற்றபடி அன்றாட வாழ்க்கையில் எல்லா மக்களும் உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களுக்கு, உணவுப் பொருள்களுக்கு, உணவு தான்யங்களுக்கு, மற்றும் அதே போன்று தீப்பெட்டியாக இருந்தாலும் சரி, கெரோஸின் ஆயிலாக இருந்தாலும் சரி, அன்றாட வாழ்க்கையில் உபயோகப்படக்கூடிய பொருள்கள் எல்லாவற்றிற்கும் எந்த அளவுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமோ அந்த அளவுக்கு அளிப்பது தான் சரியாக இருக்குமே தவிர, அத்தியாவசியமான பொருள்களுக்கு வரி போடுவது ஏழை மக்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது ஆகாது. அதுமட்டுமல்ல, ஏற்கனவே விதிவிலக்கு அளிக்கப்பட்ட பொருள்களின் மீதும் இப்பொழுது வரி போடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, காய்கறி, புஷ்பம் இதுபோன்ற அன்றாட வாழ்க்கையில் உபயோகப்படக்கூடிய பொருள்களுக்கு ஏற்கனவே வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவைகளுக்கு இப்பொழுது வரி போடவேண்டுமென்ற தன்மையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்பொழுது புதிய வரிகள் இனிமேல்

போடுவதில்லை என்று ஒரு பக்கத்திலே சொன்னாலும் கூட, ஒரு முனை வரி போட்டுவிட்டோம் என்று சொல்லக்கூடிய பெயரிலே, அதே நேரத்திலே ஏற்கனவே விதி விலக்கு அளிக்கப்பட்ட பொருள்களின்பேரிலும், வரி போடக்கூடிய அளவுக்கு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பது மிகவும் வருந்தக்கூடிய விஷயம் ஆகும். ஆகவே தான் திட்டவட்டமான என்னுடைய அபிப்பிராயத்தை நான் கூறுகின்றேன். ஆடம்பரப் பொருளுக்கு அதிக வரி போடவேண்டும். அத்தியாவசியமான உணவுப் பொருள்களுக்கு வரியிலிருந்து விதி விலக்கு கொடுக்கவேண்டும். இதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த மசோதாவை அந்த அளவுக்கு திருத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரியும். இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடக்கூடிய சந்தர்ப்பத்தில் வியாபார சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்டு, வியர்பாரிகள் பாதிக்கப்படாத தன்மையிலே, பொது மக்கள் பாதிக்கப் படாத தன்மையிலே சரியானபடி ஒரு முடிவு செய்ய வேண்டும். அதே நேரத்தில் லோகநாதன் அவர்கள் தீர்ப்பிலே பல பொருள்களுக்கு குறைவாக வரி போடவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டபோதிலும், அவர்கள் சிபார்சு சரியல்ல, மேலும் அதிக வரி போட வேண்டுமென்ற தன்மையிலும் சில அம்சங்களில் இந்த மசோதாவில் செய்யப்பட்டிருக்கிறது. அவைகளையும் தயவு செய்து திருத்தி அமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கொள்ளுகிறேன். வணக்கம்.

*Sri K. SATTANATHA KARAYALAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நேற்று தான் படிக்க முடிந்தது. இந்த மசோதா 8-ம் தேதி கெஜட்டில் வெளியாகி சட்டசபை அங்கத்தினர்களுக்கு நேற்று இரவுதான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் எந்த அளவுக்கு நாங்கள் இந்த மசோதாவை படித்திருக்க முடியும் என்பதை நீங்களே கவனித்துக்கொள்ளலாம். மேலெழுந்தவாரியாக....

THE HON. SRI R. VENKATARAMAN : If the hon. Member wants more time, I would take up the Catering Establishments Bill. I am not keen on any particular Bill.

10-10 a.m. *Sri K. SATTANATHA KARAYALAR : ஆனால் மேலெழுந்தவாரியாக பார்க்கும்பொழுது இதுவரை செய்யாமல் இப்பொழுது புதிதாக உணவு தான்யத்திற்கு இந்த மசோதாவில் ஒரு வரி சேர்த்து போடப்பட்டிருக்கிறது. டாக்டர் லோகநாதன் அவர்களின் சிபார்சுகளை அப்படியே அங்கீகரிக்கப்பட்டதாகவும் இந்த மசோதாவில் இல்லை. ஆனால் அதிலுள்ள ஒரு சில முக்கியமான கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் முக்கியமாக எடுத்துக்கொண்டுள்ள கருத்து "அஸெஸ்மெண்டு விங், அப்பீல் விங், இன்டெலிஜென்ஸ் விங்" என்பதாக நிர்வாக அமைப்பை மாற்றி அமைக்கும் சிபார்சை அப்படியே அங்கீகரித்திருக்கிறார்கள். அது ஓரளவு நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் நலன் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று தோன்றுகிறது. "டாக்ஸ் இவேஷனை" பொறுத்தவரையில், அது எந்த அளவு சாதகமாக இருக்கும் என்று நிச்சயமாக சொல்லமுடியாது. பக்கத்திலே இருக்கக்கூடிய மாகாணங்களிலிருந்து அங்கு விற்பனை வரி கொடுக்காமல் இங்கு சரக்குகள் கொண்டுவரப்படுவதையும், இங்கு விற்பனை வரி கொடுக்காமல் மற்ற மாகாணங்களுக்கு சரக்குகள் கொண்டுபோகப்படுவதையும் எப்படி கண்காணிப்பது என்பது பற்றி திட்டவட்டமாக ஒன்றுமில்லை. ஆனால் ஓரளவுக்கு இந்த "இன்டெலிஜன்ஸ் விங்" இதற்கு பிரயோஜனமாக இருக்கக் கூடும். தற்சமயம் கேரளத்தில் வாங்கக் கூடிய ஒரு மூட்டை பாக்கு சுமார் ரூ. 200-க்கு விற்பனையாகிறது. அங்குள்ள தீர்வையை கொடுத்து கோட்டயம் முதலிய இடங்களிலிருந்து மதுரையில் விற்பனை செய்வதாக



இருந்தால் அது ரூ. 235 ஆகும். அங்கு தீர்வை கொடுக்காமல் இங்கு கொண்டுவருபவர்களால் அது ரூ. 210-க்கு தற்சமயம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. இதை டாக்டர் லோகநாதன் அவர்களிடம் அங்கு இருக்கும் வியாபாரிகள் சமர்ப்பித்த மகஜரில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து கூறுகிறேன். அப்படி அங்கிருந்து மறைமுகமாக, கள்ளத்தனமாக பாக்கை லாரிகளில் ஏற்றி அதற்கு மேல் ஏதாவது பொருள்களை வைத்து இங்கே கொண்டுவரக்கூடிய நிலைமை சர்வசாதாரணமாக இருக்கிறது. அது மாதிரி "டாக்ஸ் இவேஷனை" தடுப்பதற்கு இந்த "இன்டெலிஜென்ஸ் விங்" உதவியாக இருக்கக்கூடும். பக்கத்திலுள்ள ராஜ்யங்களிலும், நம்முடைய ராஜ்யங்களிலும் இப்படி கள்ளத்தனமாககொண்டு போகக்கூடிய, கொண்டுவரக்கூடிய பண்டங்களுக்கு ஓரளவு தீர்வை விதிகள் ஒரே விகிதத்திலிருந்தால்தான் மிகவும் உதவியாக இருக்கும்.

வரி விகிதத்தில் ஒரு ராஜ்யத்திற்கும் இன்னொரு ராஜ்யத்திற்கும் இடையே அதிகமான ஏற்றத் தாழ்வு இருப்பது, வரி கொடுக்காமல் சர்க்காரை ஏமாற்ற விரும்பும் வியாபாரிகள் ஏராளமான சரக்குகளை லாரிகளின் மூலம் கள்ளத்தனமாக கடத்திச் செல்வதற்கு அடிகோலும். ஆகவே கள்ளக்கடத்தலை தடுப்பதற்காக அண்டை ராஜ்யங்களிலுள்ள வரி விகிதங்களை கவனித்து அதிக வித்தியாசம் இல்லாதவாறு நம் ராஜ்ய வரி விகிதத்தையும் நிர்ணயித்தால் அது மிகவும் நலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

முதலாவது ஷெட்யூலைப் பார்த்தால், அதில் ஒரு முனை விற்பனை வரிக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் பொருள்களில் சிலவற்றிற்கு மிக அதிகமான வரி விகிதமும் சிலவற்றிற்கு மிகக் குறைவான வரிவிகிதமும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சிமெண்டு, சிக்கரி போன்றவைகளுக்கு வரி விகிதம் 5 சதவிகிதமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது மிக அதிகமான விகிதம் என்று சொல்வேன். இவைகள் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்கள். ஆனால், புல்லியனுக்கோ வரி விகிதம் ½ சத விகிதமாகத் தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 1956-57-ம் ஆண்டில் புல்லியன் இனத்தில் விற்பனை வரி வருவாய் ரூபாய் 27,63,139 என்று டாக்டர் லோகநாதன் அவர்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, இதன் மீது வரி விகிதத்தை மேலும் அதிகப்படுத்தினால் அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கும்.

THE HON. SRI R. VENKATARAMAN : புல்லியனைப் பொறுத்த வரையில் இந்த வரி விகிதத்திற்கே எதிர்ப்பு இருக்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த வரி விகிதத்திற்கே எதிர்ப்பு இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அது தெரிந்திருந்தும் தான் இந்த யோசனையை நான் சொல்கிறேன்.

மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்களாகிய உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து அறவே விதிவிலக்கு அளிப்பது மிகவும் நலமாக இருக்கும். இதை முக்கியமாக கவனிக்க வேண்டும்.

இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி முடிவாகப் பரிசீலனை செய்வதைக்காட்டிலும் பொதுமக்களின் கருத்தை அறிவதற்காக அனுப்புவது மிகவும் நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன். அப்படிச் செய்தால், அந்த அந்த இனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி விகிதம் சம்பந்தமாக மக்களின் அபிப்பிராயத்தையும் வியாபாரிகளின் அபிப்பிராயத்தையும் அறிவதற்கு நல்ல சந்தர்ப்பம் இருக்கும்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதை ஒரு வருஷம் "சர்குலேஷனுக்கு" அனுப்பினால், இப்போது கொண்டுவரப்பட வேண்டிய சட்டம் ஒரு வருஷத்திற்கு ஒத்திப்போடப்படும், அவ்வாறு ஒத்திப்போடப்படுவது கனம் அங்கத்தினர்க்கு பிடித்தமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[12th March 1958

SRI K. SATTANATHA KARAYALAR : சட்டத்தை ஒரு வருஷத் திற்கு ஒத்திப்போடுவது சரியல்ல என்று நினைக்கிறேன். பொதுஜன அபிப்பிராயத்தை அறிவதற்காக மசோதாவை மூன்று மாதங்களுக்கு வெளியில் அனுப்பிவிட்டு, அதன் பிறகு மசோதாவை சட்ட சபைக்கு மறுபடியும் கொண்டுவந்துவிட்டு, அதற்கு பிறகு மூன்றே மாதங்கள் காலவரையறை அளித்து பொறுக்குக் கமிட்டிக்கு மசோதாவை அனுப்பினால், ஆறு மாதங்களுக்குள் சட்டத்தைக் கொண்டுவந்துவிடலாம்.

THE HON. SRI R. VENKATARAMAN : அவ்வாறு செய்தால் மூன்று அல்லது ஆறு மாதங்கள் கழித்து புது வரி விகிதங்கள் அமலுக்கு வரும். அப்படிப்பட்ட நிலையில் வியாபாரிகள் நடப்பு வருஷத்தில் இரண்டு விகிதங் களிலும் கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டியிருக்கும். அந்தத் தொல்லை வியாபாரிகளுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், அப்படிச் செய்யவில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : துரதிர்ஷ்டவசமாக, இரண்டு வரி விகிதங்களில் கணக்குகளை வைத்துக்கொள்வதில் உள்ள கஷ்டங்களை விட அதிகமான கஷ்டங்கள், மசோதாவை அவசர அவசரமாக நிறை வேற்றுவதினால் ஏற்படக்கூடும் என்று நான் நினைக்கிறேன்.

கட்டாயம், மூன்றுவது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள சர்க்கரை போன்ற உணவுப்பொருள்களுக்கு வரியிலிருந்து பூரண விலக்கு அளிக்க வேண்டு மென்று கெட்டுக்கொள்கிறேன். முன்பு உணவுப்பொருள்களுக்கு விற் பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டபோது, உணவுப் பொருள் களுக்கு விற்பனை வரியினின்றும் விலக்களிப்பதை ஒரு கொள்கையாகக் கூட வைத்துக்கொள்ளலாம் என்று கனம் மந்திரி அவர்கள் கூறினார்கள். அப்படிச் சொல்லியிருக்கும்போது உணவுப் பொருள்களுக்கு வரி விதிப்பது சரியல்ல என்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

முதல் ஷெட்யூலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒருமுனை விற்பனை வரி விகிதங்கள் சரியான விகிதங்களாக இல்லை. சில பொருள்களுக்கு மிக அதிகமான விகிதமாகவும் சில பொருள்களுக்கு மிகக் குறைவான விகிதமாகவும் அந்த ஷெட்யூலில் விகிதங்கள் இருக்கின்றன. இதைப் பொறுக்குக் கமிட்டியினர் நன்கு கவனித்து அந்தப் பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி விகிதங்களை சரியான முறையில் மாற்றி யமைக்க வேண்டும். மசோதாவானது பொதுமக்களின் கருத்தை அறிவதற்கு அனுப்பப்படாமல் நேரடியாக பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்படும் பட்சத்தில், பொறுக்குக் கமிட்டியினர், பொதுமக்களின் பிரதிநிதிகளையும் வியாபாரிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களுடைய அபிப்பிரா யங்களை அறிந்து, பொதுமக்களின் தொல்லைகளைத் தீர்க்கக்கூடிய முறையில் மசோதாவைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI G. ANNAMALAI MUTHURAJA: கனம் சபாநாயகர் அவர்களே, இநத மசோதாவின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரி சம்பந்தமாக டாக்டர் லோகநாதன் அவர்கள் கொடுத்த சிபாரிசு களைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விவரமாகப் பேசினார்கள். இப்போது அமலில் இருந்துவரும் வரி விகிதங்களும் விதிவிலக்குகளும் அந்த சிபாரிசுகளின் அடிப்படையில் மசோதாவில் மாற்றியமைக்கப்பட் டிருக்கின்றன. இவைகளைப் பொறுத்த வரையில், பொறுக்குக் கமிட்டி யினர் வியாபாரிகளின் அபிப்பிராயங்களையும் கேட்டு, மசோதாவைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அமலில் உள்ள சட்டத்தின்படி, ஏழை ஜனங்கள் அன்றாடம் உபயோகிக்கும் வெற்றிலை, வெங்காயம், வாழைப்பழம் முதலிய பொருள் களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு இருக்கிறது. இப்போது மசோதாவில் அவைகளுக்கு வரி விதித்திருக்கிறார்கள் என்பதும், அப்படி வரி விதித்திருந்தால் கூடுதலாக விதித்திருக்கிறார்களா அல்லது குறைவாக



12th March 1958] [Sri G. Annamalai Muthuraja]

விதித்திருக்கிறார்களா என்பதும் தெரியவில்லை. அந்தப் பொருள்களை விற்கும் சில்லறை வியாபாரிகளிடமிருந்து, பொதுவாக அவர்கள் விற்கும் எல்லாப் பொருள்களுக்கும் ஒரு விகிதத்தில் வரி வசூலிக்கலாம் என்று அபிப்பிராயம் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. உபரியாக பட்ஜெட் இருக்கும்போது வரி போடப்படவில்லை என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார். அப்படி அவர் கூறியிருக்கும்போது இந்தப் பொருள்களுககு வரி விதிப்பது சரியல்ல. ஜனங்கள் அதிகமாக உபயோகிக்கும் இநதப் பொருள்களுக்கு வரி விதிப்பதானது அவர்களை மிகவும் பாதிக்கும். இப்படிப்பட்ட பொருள்களை வியாபாரம் செய்பவர் களில் வருஷத்திற்கு மொத்தம் ரூபாய் 5,000-க்கு மேற்பட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு வரி விதிப்பதற்கு மசோதா வகை செய்கிறது. இந்த ஏழை வியாபாரிகள் கணக்குப்பிள்ளை வைத்துக்கொண்டு அவருக்கு சம்பளம் கொடுக்க முடியுமா? இவர்கள் கணக்குப் பிள்ளை வைத்துக்கொள்ள முடியாது. மேலும், பெண்கள் கூட இந்தப் பொருள்களை வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் எப்படி கணக்கு வைத்துக்கொள்ள முடியும்? இந்தப் . பொருள்களுக்கு இப்போது வரியிலிருந்து விதிவிலக்கு இருந்து வருகிறது. அந்த விதிவிலக்கை நீக்கவேண்டிய அவசிய மில்லை. உபரி பட்ஜெட் வந்திருக்கும்போது இந்த வரிகளைக் கொண்டுவர வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். சீக்கிரத்தில் மசோ தாவைச் சட்டமாக்கினால்தான் இந்த வருடம் மார்ச் 31-ம் தேதிக்குள் இந்த விகிதங்களில் விற்பனை வரியை வசூலிக்க முடியும் என்றும், வியாபாரிகளுக்கும் கணக்குகள் வைத்துக்கொள்வதில் கஷ்டங்கள் ஏற்ப டாது என்றும் சொல்லப்படுகிறது. 1959–60-ம் வருஷ பட்ஜெட்டின்போது இந்த வரிகளைக் கொண்டுவரலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். சிறிய வியாபாரிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டு மென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Sir, I support the motion for reference to the Select Comittee and I oppose the motion for circulating it for public opinion.

Apart from the difficulty in passing a law on taxation in the middle of a financial year and the difficulty in maintaining accounts at a different rate in the middle of a financial year, I desire to state that the present General Sales Tax Act is cumbrous, and its working has often been commented upon as very bad. During the last budget session when a small amendment to the General Sales Tax law was proposed, it was suggested by the Members of this House that this present Act must be superseded and a consolidated and an amending Act to be convenient and wholesome, must be brought forward at a very early date. The appointment of an economic expert was also suggested. It is very good that immediately on that suggestion the Hon. the Minister for Industries took up the matter and appointed Dr. Lokanathan. We are bounden to him and bound to express our gratitude to him for the extraordinary pains that he took to visit several places, examine a number of witnesses, a number of traders, and chambers of commerce, and elicit their opinion. The matter has been before the public for nearly ten months now, and it is now one month after the report of Dr. Lokanathan was placed before the Government and the Members of this House. It is good augury that Government are accepting most of the proposals of Dr. Lokanathan. When Dr. Lokanathan was making this enquiry, associations of

traders, hotel-keepers, and chambers of commerce, published their views in the press, and this has been taken note of by the Government. The present set up, the definition, the rates and the procedure followed for taxation and for appellate authority and discussion and determination by two High Court Judges instead of one on appeal, are all very good and for the benefit of the traders in general.

10-20 a.m. Sir, it was suggested by an hon. Member who spoke on this Bill before I began that provision should be made to take cases to civil courts in the matter of recovery of arrears of tax. I have not heard of such a thing in respect of any taxation measure. Take the Revenue Recovery Act—Act II of 1864. It provides for arrest, attachment of movable property and sale of land without a decree from the court. In any taxation measure, the power to collect the tax otherwise than through a court is provided. If we go to the civil court for such things, then the question of insolvency and also non-payment of tax will arise. We cannot at all hope to execute a decree of a civil court so far as arrears dut to the Government are concerned.

So far as the present Bill is concerned, the definitions have been made far clearer and I do hope that the innumerable cases we have been having in the High Court on Writ Petitions arising out of the working of the General Sales Tax Act will no longer be a regular feature. I also hope that the arrears before the High Court will be cleared soon since much of the work it has to do on Writ Petitions questioning the validity of assessments, etc., will go.

Then, Sir, several traders and trade associations have been agitating for the levy of a single-point tax. The principle has been accepted now and I find there are as many as 72 items in the Schedule in respect of which single-point tax is proposed. The quantum of levy is also different. This is to the benefit of the people. The people also should realise that it is dangerous to evade the tax because it will be disastrous not only to the Government but to the country as a whole.

There is an important provision in Clause 3 which we should welcome. The hotel proprietors are now required to pay a tax of 2½ per cent on the turnover. The clause seeks to make it two per cent. The complaint of the hotel proprietors is that the articles that they use for producing foodstuffs they vend to the public are already taxed once. This point has been taken into account and only two per cent is now sought to be levied. While that is so, I feel that small hotel-keepers will be affected by the limit of turnover fixed—Rs. 25,000. It should be raised to Rs. 50,000. That would be the proper limit. Hotel-keepers are rendering a sort of social service and many people who have got their families elsewhere mess in hotels and carry on their avocations. So, these people have got to be helped for the benefit of



mankind. Again, they are subject to another law—Catering Establishments Act—under which it is obligatory on the part of hotel-keepers to provide for certain amenities to workers like leave, leavy salary, etc. This will make the cost of production go up and, therefore, it is better that in the case of hotel-keepers, the exemption limit is raised to Rs. 50,000.

There is another benefit conferred upon the tax-payer whose turnover is between Rs. 5,000 and Rs. 25,000. The smaller trader is enabled to compound the tax. Under clause 6, one will pay a tax far below what one is now paying. This is the benefit of compounding the tax, notwithstanding the fact that exemption limit has been reduced to Rs. 5,000. I, therefore, suggest that this clause may stand as it is.

There is, however, one provision in the Bill to which I object. Clause 9 throws the burden of proof on the dealer. This may perhaps be a very great instrument of oppression. Anybody may be given a notice and he will have to produce witnesses either before the Commercial Tax Officer or the Court to prove he is not liable to assessment. This will affect his trade very much and, therefore, no such provision is necessary. It will operate as a source of harassment.

Regarding clause 3, I do not know whether it is a printer's error. When the Hon. the Minister in charge of the Bill was speaking, I heard him say—I am subject to correction—that so far as milk, vegetables, betel leaves, etc., were concerned the tax would be half per cent. I do not find any mention about it here. Possibly, it is a misprint. I suggest that these commodities may be given total exemption. They are at present exempted. I know the Government can exempt these under the Rules. But . . .

THE HON. SRI R. VENKATARAMAN : May I just clarify the position? These dealers have been brought under the one per cent levy. But exemption will be given to dealers exclusively dealing in vegetables, etc., at the Rs. 25,000 limit. There is, however, no reason why a turnover of Rs. 50,000 to Rs. 1,00,000 be exempted.

* SRI R. SRINIVASA IYER : I thank the Hon. Minister for the clarification. Even during the debate on the amendment of the General Sales Tax Act, I pointed out that there was large-scale evasion of tax and suggested that sufficient powers should be given to officers to check evasion. I am glad that steps are taken to see that movement of foodgrains and other commodities by boat and lorries is checked. I am aware that even when we taxed the dealers in foodgrains at 1½ per cent, there was evasion of tax by registering the sale in the name of somebody else. A trader who has a mill would book a waggon in the name of some other person who is an agricultural producer and thus escape notice. I have once stated that every citizen should feel his civic responsibility and pay the tax. We should not evade the tax at

[Sri R. Srinivasa Iyer] [12th March 1958

any time. I am glad provision is made to check the movement of foodgrains by boats and lorries which now-a-days serve as a common mode of transport of foodgrains especially because the Railways are not able to supply sufficient number of waggons. I would, therefore, appeal to the dealers who are trading in such commodities to take full advantage of the reduction of tax from 1½ per cent to one per cent and record all their transactions in their accounts so that they may not evade the tax which they have got to pay for the benefit of the people for whom the Government are doing so much to-day.

The other very good provision that we find in the Bill is the setting up of a separate appellate authority. Four Assistant Appellate Commissioners are to be appointed. The same slogan, namely, it is difficult to maintain accounts, was repeated. A trader has got to maintain accounts and maintain them correctly. But we have come across cases where traders maintain two sets of accounts or even three sets of accounts. And not only that, they also maintain accounts in the names of different persons, the names of some not being real at all. Unless sufficient check is provided for the purpose of scrutinising the accounts, namely, the seizure of accounts and scrutiny of transactions entered in those accounts, we cannot prevent evasion of tax.

It is stated that the amount of tax that we could expect under this new enactment cannot yet be gauged. It is so because several provisions have been changed and the change in some cases is a reduction of the rate of tax. In other cases a single-point levy is proposed where multi-point levy has been the rule.

In this connection I hope that at any rate in future after the passing of this Act, the Central Government will not be tinkering with the measures enacted in this State for the purpose of finding out enough means of revenue to make up the loss consequent on the introduction of Prohibition. By the Centre taking away the powers of the State to tax commodities either produced or sold in this State on a large scale, we have got to amend our taxation enactments very often and lose our income thereby though the Central Government have in certain cases like the sale of tobacco, sugar and textiles, guaranteed to make good the loss incurred by us by the introduction of Central taxes.

So far as the rule making powers of the Government are concerned, in every enactment that is being passed at present we find a section to the effect that rules made and all notifications issued under the concerned Acts shall, as soon as possible after they are made, be placed on the table of the Houses of the Legislature and shall be subject to such modifications by way of amendment or repeal as the Legislative Assembly may make within fourteen days on which the House actually sits either in the same session or in more than one session. I feel that the fourteen days time is not sufficient and must be extended to six weeks or eight weeks because



12th March 1958] [Sri R. Srinivasa Iyer]

the rules are made and given effect to and then it takes several months for the rules to be placed on the table of the House. By the time they are placed on the table of the House and we want to make suggestions, the rules had already been acted upon and had come into force. Therefore, it is impossible to go back and amend them if necessary. I therefore request that the provision relating to the placing of the rules framed by Government on the table of the House in this as well as in future enactments may be so framed as to give six or eight weeks' time for suggesting amendments.

Sir, I welcome the general provisions contained in the measure intended to replace the cumbersome—unworkable, I will put it—provisions of the old Sales Tax Act of 1939. I also oppose the amendment for circulating the Bill for eliciting public opinion as that would entail long delay in the passing of the measure into law.

**SRI M. SELVARAJ** : மதிப்பிற்குரிய சட்ட மன்ற உப தலைவர் அவர்களே, இன்றைக்கு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் விற்பனை வரி (திருத்த) மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்பதை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் லோகனாதன் அவர்கள் கொடுத்த யோசனையின் மீது சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டத்தை விரிவான முறையிலேயே பார்க்கும்போது, சில புதிய வரிகள் அவர்கள் சொன்ன யோசனைக்கு மீறிய முறையில் இருக்கின்றன. சில வரிகள் அதிகமாக போடக்கூடிய அளவு இருக்கின்றன.

குறிப்பாக, விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும், உணவு 10-20 a.m.
பற்றுக்குறையைப் போக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே விவசாய உற்பத்திக்காக எரு, அமோணியம் ஸல்பேட், அமோணியம் நைட்ரேட், புண்ணாக்கு போன்றவைகளுக்கும் மூன்று சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. இதைக் கூடுமான அளவு ஒரு சதவிகிதத்துக்கு குறைக்கலாம் என்று நான் அபிப்பபிராயப்படுகிறேன். வரியை அதிகப்படுத்துவது காரணமாக, அவர்கள் வாங்கி உபயோகிக்கும் பொருள்களுக்கு அதிகத் தொகை செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படுமாதலால் இதைக் கூடுமான அளவு ஒரு சதவிகிதத்துக்கு குறைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Milk food excluding fresh milk but including milk powder.** என்பவைகளுக்கு மூன்று சதவிகிதம் வரி விதித்திருக்கிறார்கள். அதை பூராவாக எடுத்து விடலாம் என்று நான் அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்படிக்குறைப்பதன் காரணமாக துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்கு ஆடம்பரம் பொருள்களுக்கும், மோட்டார் கார்களுக்கும், லாரிகளுக்கும் இன்னும் இது போன்றவைகளுக்கும் ஏழு சதவிகிதம் என்று இருப்பதை பத்து சதவிகிதம் ஆக உயர்த்தினால், அதனால் எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டுவிடாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது அதிகப்படியாக நாட்டிலே வியாபாரப் பொருள்களை ஏற்றிச் செல்லும் லாரிகளை 20 ஆயிரம், 25 ஆயிரம் என்று விலைகொடுத்து வாங்கும்போது அத்துடன் மேலும் 200 அல்லது 300 ரூபாய் கொடுத்து விடுவதனால் அவர்களுடைய வியாபாரம் ஸ்தம்பித்துவிடாது. ஆகவே, பால், உணவுகள் சம்மந்தப்பட்டவரையில் வரிகளைக் குறைத்து, மோட்டார் கார், லாரி, மோட்டார் சைக்கிள் போன்ற பொருள்களுக்கு 10 சத விகிதம் வரி வரையில் உயர்த்தலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உணவு தான்யங்களுக்கு வரியை நீக்கிவிடுவது மிகவும் நல்லது. சர்க்கார்த்தரப்பில் சென்ற ஆண்டிலே பட்ஜெட் சமர்ப்பித்தபோது, உணவு தான்யங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று எதிர்கட்சியினர் கேட்டுக்கொண்டபோது, டாக்டர் லோகனாதன் அறிக்கை வந்தபிறகு கவனிப்போம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அதை மனதிலே இறுத்தி, உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று நான் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது வியாபாரிகளுக்கு குறைந்த பட்சம் 25 ஆயிரம் ரூபாய் வரையில் வருமான உள்ளவர்களுக்கு slab rate-இல் வரி விதித்திருக்கிறார்கள். இருந்தாலும், நாம் அந்தத் தொகையை ஓரளவு உயர்த்தலாம் என்று நான் கருதுகிறேன். மற்ற மாகாணங்களிலே உள்ள அவர்கள் விதிக்கும் முறையையும் நாம் விதிக்கும் முறையையும் பார்க்கும்போது வியாபாரிகள் சில நேரங்களில் கூடுதலான விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. குறிப்பாக, மணிலாவைப் பொறுத்த வரையில் ஆந்திரத்தில் அவர்கள் இரண்டு சதவிகிதம் வரி விதித்திருக்கிறார்கள். இப்பொழுது நம் முன்னாலே இருக்கும் வரி விகிதத்தைப் பார்க்கும்போது நாம் மூன்று சதவிகிதம் ஆக உயர்த்தியிருக்கிறோம். ஆகவே, அங்கே மூன்று சத விகிதம், என்றும் அண்டை ராஜ்யங்களில் இரண்டு சதவிகிதம் என்றும் இருப்பதனால் நம் வியாபாரிகளுக்கு மிக்க இடைஞ்சல்களை உண்டு பண்ணும். நம் வியாபாரிகள் அந்த வியாபாரிகளோடு போட்டியிட முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அண்டை ராஜ்யங்களில் மணிலாவுக்கு என்று வரி விதிக்கும் இரண்டு சதவிகிதம் அளவுக்கு நாமும் அதைக் குறைக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரிகள் கணக்குகளைப் பார்வையிடும்போது தொல்லை கொடுக்கிறார்கள். அவர்கள் கூடுமான வரையிலும் சட்டத்திட்டங்களை நல்ல முறையிலே அனுசரித்து, சட்டத்திற்கு உட்பட்டு வியாபாரிகளைத் துன்புறுத்தாத முறையில் வியாபாரிகளுடைய கணக்கைப் பார்வையிடும்படி இருக்கவேண்டிய நிலைமைக்கு அதிகாரிகளை வேலையில் இறுத்திக்கொண்ட பிறகு ஒரு வருஷம் அவர்களுக்கு நல்லதொரு பயிற்சி அளிக்கலாம் எந்தெந்த முறைகளிலே வியாபாரிகளிடத்தில் அணுகி கணக்கைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதையும் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்துகொள்வதற்கும் இத்தகையதொரு பயிற்சி முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

10-40 a.m.] **Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினாலே போதும். பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். லோகனாதன் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு, இதுசம்மந்தப்பட்ட பலபல வியாபார வர்த்தக சங்கங்களுடைய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு, முழு விவரங்களையும் குறிப்பிட்டு, இருக்கிற குறைப்பாடுகளை எல்லாம் நிவர்த்தி செய்து, மிகவும் விளக்கமான முறையில் கொடுத்திருக்கும் யாதாஸ்தின் அடிப்படையில் இந்த மசோதா உருவாக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் இதைப் பழையபடி பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடுவது என்றால் வீணாகக் காலதாமதம் தான் ஆகும். வீணாகக் காலதாமதம் செய்வதில் அர்த்தமில்லை. ஆகவே பொதுஜன அபிப்பிராயத்திற்கு விட வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

முன்பு இருந்த சட்டத்தை எடுத்துக் கொண்டால் ஒரு விஷயத்திற்கு நான்கைந்து சரத்துக்களையும் திருத்தங்களையும் பார்க்க வேண்டியதாக இருக்கும். அந்தச்சட்டத்தில் இருந்துவந்த சிக்கல்களை எல்லாம் நல்லமுறையில் லோகனாதன் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் யாதாஸ்தில் நீக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தையே இவர் மிகவும் எளிதாகச் செய்திருக்கிறார்.





வருமான வரியைப் பற்றித் தெரியாதவர்களுக்குக் கூட அவருடைய யாதாஸ்தை ஒருமுறை பார்த்தால் தெரியும். விற்பனை வரி சம்மந்தமான விளக்கம் நல்லமுறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக வரி இவேஷனை தடுப்பதற்குரிய வகைகள் நன்றாக சொல்லப்பட்டிருக்கிறது. மல்டி பாயின்ட் டாக்ஸ் விகிதத்தை குறைக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். இரண்டாவது சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் என்று எல்லாவற்றுக்கும் போட்டுக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. உதாரணமாக சர்க்கரைக்கு சிங்கிள் பாயின்டு டாக்ஸ் என்று போட்டதால் இவேஷன் அதிகமாயிற்று என்று வியாபாரிகளே முறையிட்டிருக்கிறார்கள். ஆதலின் எவ்வளவு சரக்குகளுக்கு சிங்கிள் பாயின்டு வரி போடப்பட்டு இருக்கிறது. இந்த யோசனைகள் முடிவு அத்தகைக்கு எல்லாம் மிகவும் வரவேற்கத்தக்கவையாகும்.

வரி தத்துவம் என்ன என்பதைப்பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ கோதண்டராமன் சொன்னது சரியல்ல ஸ்லாப் ரேட்டு 25 ஆயிரம் வரை என்று வைத்து இருப்பதால் சிறிய வியாபாரிகளுக்கு அக்கவுண்டு வைக்கும் கஷ்டம் இனி அதிகம் இல்லாமல் இருக்கும். அதே சமயத்தில் நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கும், யோசனை கூறியிருக்கிறார். அபலேட் வசதியும், இன்டலிஜென்ஸ் செக்ஷன் வசதியும் எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றியும் சொல்கிறார்.

லோகனாதன் ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டு பார்த்தால், உணவுப் பொருள்களுக்கு பூரணமாக விற்பனை வரி இருக்கக்கூடாது என்ற கொள்கையை ஏற்கவில்லை. எல்லா மக்களுக்கும் வரி கொடுப்பதில் ஒரு சிறிதளவாவது பங்கு இருந்தால் தான் நல்லது என்பதற்காக அவற்றுக்கு ½ பர்சன்ட்வரி போடலாம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இங்கே 1 பர்சன்ட் என்று போடப்பட்டிருக்கிறது. இதைப் புனராலோசனை செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அவர் சொல்கிற யாதாஸ்தின் படியே நடந்தாலும் நமக்கு வருகின்ற 10½ கோடி ரூபாய் நிச்சயமாக வரும் என்றும் சொல்லியிருக்கிறார்.

அடுத்தபடியாக கமிஷன் ஏஜெண்டுகள் எல்லோரும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது அவ்வளவு சரியில்லை. கமிஷன் ஏஜெண்டுகளுக்கு அதிக லாபம் வருகிறது என்று கருதிவிட முடியாது. இருபது ரூபாய், முப்பது ரூபாய் பெருமான ஒரு மூட்டை விற்றால் அவர்களுக்கு கிடைப்பது மூன்றணா, நான்கணா அவ்வளவுதான் இருக்கும். குறிப்பாக நெல் வியாபாரிகளை எடுத்துக்கொண்டால் கிராமங்களில் இருந்து நெல்லைக்கொண்டு வருபவர்கள் நகரங்களில் உள்ள கமிஷன் ஏஜெண்டுகளிடத்தில் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். கமிஷன் ஏஜெண்டுகள் தான் வியாபாரிகளுக்கும் அரிசி மில் முதலாளிகளுக்கும் சப்ளை செய்வார்கள். இதில் அவருக்கு மூட்டைக்கு இரண்டணா, நான்கணா கிடைக்கலாம். ஆதலால் **Turnover**-ல் 1 பர்சன்ட் வரியை வசூல் செய்துவிட்டால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாய் போய்விடும். இதனால் சரியான கணக்கு வைத்துக்கொள்ளாத நிலைமையும் ஏற்படுகிறது. அரிசி மில் முதலாளிகளுக்கு என்றால் வாங்கும் நெல்லுக்கு கொடுத்த வரியை ரிபேட் கொடுத்துவிடுகிறார்கள். அரிசியாக விற்கும்போது வாங்குபவர்களிடத்திலும் வசூலித்துவிடுகிறார்கள். ஆகவே அந்த வியாபாரிகளுக்கு நஷ்டம் கிடையாது. முதலில் சொல்லப்பட்ட கமிஷன் ஏஜெண்டுகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இதைச் சர்க்கார் கொஞ்சம் பரிசீலனை செய்யவேண்டும் என்பதாக் கேட்டுக்கொள்கிறேன்.

காய்கறி, முட்டை போன்றவைகள் சீக்கிரத்தில் கெட்டுவிடக்கூடியவை. உடனே அவை வியாபாரம் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. முன்பு இவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்போது ½ பர்சன்ட் போடலாம் என்று லோகநாதன் யாதாஸ்தில் கண்டிருந்தும் 1 பர்சன்ட் என்று போட்டிருப்பதும் சற்று ஆலோசனைக்குரிய விஷயம். என்னதான் வரி 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தான் என்றாலும் இந்த வியாபாரத்தில் லாப அளவு குறைவாக இருக்கிறது. ஆதலால் டர்ன்ஓவர் அதிகமாக போய்விடலாம்.

ஆனால் லாபம் அதிகம் வருவதற்கு வசதியில்லை. ஆகவே இதை
பற்றியும் கொஞ்சம் பரிசீலனை செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்
கிறேன். அடுத்தபடியாக முன்பு நாட்டுச் செக்குக்கு விலக்கு அளிக்கப்பட்டி
ருந்ததை இப்போது எடுத்துவிட்டு ஒரு பர்சன்ட் என்று குறித்திருக்கிறார்கள்.
ஒரு பொருளுக்கு விலக்கு, ஒரு ஆளுக்கு விலக்கு என்று இருக்கக்கூடாது
என்பது லோகநாதன் யாதாஸ்தின் தத்துவம். மெஷின் செக்குக்காரர்கள்
நாட்டு செக்கு எண்ணை என்று வரியிலிருந்து டிமிக் கொடுப்பவர் என்று
சொல்லப்படுகிறது. ஏற்கனவே மெஷின் எண்ணையோடு நாட்டுச் செக்கு
எண்ணை போட்டியிட முடியவில்லை. இன்றைக்கு நாட்டுக்குச் செக்குக்கு
வரி விலக்கு கொடுக்கப்பட்டிருந்ததன் காரணமாக கொஞ்ச அளவாவது
அந்த வியாபாரம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்கும் வரிபோட்டால்
அந்தத் தொழிலே அழிந்துவிடும் என்பதாக அவர்கள் பயப்படுகிறார்கள்.
இதையும் பரிசீலிக்கவேண்டும்.

அதேபோல் வறு கடலை வியாபாரம். இங்கே அதிகமான அளவு
வியாபாரம் இரண்டணா நான்கணா வுக்குள் தான் இருக்கும். ஆதலால் வாங்கு
பவர்களிடம் வரிவாங்குவது முடியாத காரியம். இதற்கும் வரி விதிப்பது
என்பது அவ்வளவு பொறுத்தமானதாக இருக்காது. இதையும் சர்க்கார்
பரிசீலிக்கவேண்டும். ஸ்ரீ சீனுவாசய்யர் சொன்னதுபோல ஹோட்டல்களுக்கு
விகிதாசாரத்தைக் குறைப்பதுபற்றி பரிசீலிக்கவேண்டும். லோகநாதன்
யாதாஸ்தின்படி வருமானம் இப்போது நமக்கு வந்து கொண்டி
ருப்பது அவர் யோஜனைகள் ஏற்றுக்கொண்டால் குறையாது என்று குறிப்
பிட்டிருக்கிற காரணத்தினால் நான் சொன்ன கருத்துக்களை எல்லாம்
கவனித்து இந்த மாறுதல்களையும் நிறைவேற்ற வேண்டும் என்பதாகக்
கேட்டுக் கொள்கிறேன். பொது ஜன அபிப்பிராயத்திற்கு மறுபடி
அனுப்பவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி நான் முடித்துக்
கொள்கிறேன்.

10-50 a.m. **Sri P. S. CHINNADURAI**: மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத்
தலைவர் அவர்களே, இந்த சபை முன்பாக சமர்ப்பித்திருக்கக் கூடிய விற்
பனை வரி மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்க இயலாதவனாக
இருக்கிறேன். இந்த மசோதாவில், டாக்டர் லோகநாதன் அவர்களின்
ரிப்போர்ட்டிற்கு பிறகாவது பல நல்ல அம்சங்கள் சேர்க்கப்படும் என்று
இயற்கையாகவே நான் எதிர்பார்த்தேன். அதுவும் குறிப்பாக எனது
மதிப்பிற்குறிய அமைச்சர் கனம் வெங்கட்ராமன் அவர்கள் கொண்டு வருகிற
இந்த மசோதாவில் குறிப்பாக வரிக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம்
கொடுக்கப்படும் என்று நான் உண்மையில் எதிர்பார்த்தேன்.

(Mr. Speaker in the Chair.)

வரிக் கொள்கை என்று நான் குறிப்பிடும்போது, உபயோகப்பொருள்
களுக்கும், சுகப் பொருள்களுக்கும் மத்தியிலே வித்தியாசம் இருக்கவேண்
டும் என்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். உபயோகப் பொருள்
களுக்கு அதிகப்படியான சலுகையும், சுகப் பொருள்கள் என்று கருதப்
படும் "லக்ஷுவரி குட்ஸ்"க்கு அதிகப்படியாக, இன்னொரு வித வரிக்
கொள்கையும் இருப்பது நலமானதாகும் என்றுதான் நான் அபிப்பிரா
யப்படுகிறேன். உபயோகப்பொருள்களுக்கு சலுகை கொடுக்கவேண்டும், சுகப்
பொருள்களுக்கு அதிகப்படி வரி விதித்தாலும் பாதகம் எதுவும் இல்லை
என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மசோதாவில் சேர்க்கப்
பட்டிருக்கிற முதலாவது அனுபந்தத்தில், பல சுகப்பொருள்கள் இடம்
பெற்றிருக்கின்றன. இந்த முதலாவது அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்
கிற பொருள்களின் வரிசையில், அதாவது ஒரு முனை விற்பனை வரிக்காக்
என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிற சுமார் 72 வகைப் பொருள்கள்
சம்பந்தப்பட்ட வகையிலே பல பொருள்களுக்கு பலமுனை விற்பனை வரி
விதிக்கலாம் என்பதுதான் எனது அபிப்பிராயம். எல்லாவிடங்களிலும்
பலமுனை விற்பனை வரி வேண்டாம். ஒரு முனை விற்பனை வரிதான்
வேண்டுமென்ற கோரிக்கையானது இடம் பெற்று வரும் வேளையில், நான்
குறிப்பிட்ட சில பொருள்களுக்கு பல முனை வரி நீடிக்க வேண்டுமென்று



குறிப்பிடும்போது சர்க்கார் எதைச் செய்தாலும் எதிர்ப்பது எங்களது
கொள்கையா என்று கேட்கக் கூடும். ஆனால் சமதர்ம சித்தாந்தத்தை
ஏற்றுக்கொள்கிற எந்த ஒரு நாட்டிலும், அதிலும் குறிப்பாக ஆரம்பக்
கட்டத்தில் இருக்கிற நேரத்தில், நிச்சயமாக சுகப் பொருள்களுக்கு அதிகப்படி
யான வரிதான் விதிப்பார்கள். குறிப்பாக, 3, 4, 5, 6, 7, 8, 12, ஐட்டங்
களில், **Motor vehicles including Motor cars "refrigerators air-condition-
ing plants, component parts of refrigerators or air-conditioning
plants." Wireless reception instruments and apparatus, radios and
radio gramaphones, electrical valves, accumulators, amplifiers,
" cinematographic equipment including cameras projectors, sound
recording and reproducing equipment ", " Photographic and other
cameras and enlargers, lenses ; films," Binoculars, telescopos and opera
glasses ", " All arms including rifles, revolvers, pistols and ammunition
for the same"** என்று எல்லாம் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தப் பொருள்
களுக்கு எல்லாம் பலமுனை விற்பனை வரி போடுவதில் தவறு ஒன்றும் இல்லை
என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கு 7 பர்சன்ட் என்று போட்டி
ருப்பதை 10 பர்சன்ட் ஆக உயர்த்தவேண்டுமென்று செல்வராஜ் அவர்கள்
குறிப்பிட்டார்கள். கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இன்னும்
அதை உயர்த்தி 15 பர்சன்ட் ஆக போடலாம் என்கிறார்கள், இந்தப்
பொருள்களை எல்லாம் விலை உயர்ந்ததாக வைப்பதில் தவறு ஒன்றும்
இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அன்றாடம் சாதாரண
மக்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்கள் அல்ல இவை. ஆகவே. இதன்
பேரில் வரியை அதிகப்படுத்தவேண்டும் என்று கூறுவதைக் காட்டிலும்,
பலமுனை வரி போடுவதின் மூலம் இன்னும் அதிகப்படியான வருமானம்
வந்தால் அதை நாம் ஏற்பதற்கு தயங்கக்கூடாது என்று நான் குறிப்பிட
விரும்புகிறேன். ஒரு முனை விற்பனை வரிவேண்டுமென்ற குரலை மக்கள்
எழுப்பும்போது இந்தப் பொருள்களை மனதில் கொண்டு அந்தக்கோரிக்கை
யை மக்கள் சர்க்கார் முன்னிலையில் வைப்பதில்லை. மக்கள் கூறுவது
எல்லாம், மக்களின் அன்றாடத் தேவைக்கு வேண்டிய பண்டங்கள் பல
இருக்கின்றன, அவைகளுக்கு ஒரு முனை விற்பனை வரி விதிக்க வேண்டும்
என்பதுதான். அல்லது அவற்றில் சிலவற்றிற்கு விதிவிலக்கு வேண்டு
மென்றும் கோருகிறார்கள். உணவு தான்யங்களுக்கு இந்த விற்பனை
வரியிலிருந்து அடியோடு விலக்கு அளிக்கப்பட்டிருக்குமானால் அதை இந்த
சபை முழு மனதோடு, மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கும் என்பதில்
ஐயமில்லை. அவ்வாறு இந்த புது மசோதாகொண்டு வரப்படாதது மிகவும்
வருந்தத் தக்கதாகும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். கனம்
அமைச்சர் அவர்கள் அத்தகைய அறிவிப்பு ஒன்றை கொடுப்பார்கள்
என்று நான் உண்மையிலே எதிர்பார்த்தேன். கனம் அமைச்சர் அவர்கள்
இந்த விற்பனை வரி மசோதா கொண்டு வருவதையோ அல்லது இது
சம்பந்தப்பட்ட இலாகாவை நிர்வகிப்பதில் கூட, நான், சாதாரணமாக
அவர்களின் பேரில் உள்ள அனுதாபத்தால் ஏற்பதில்லை. இதனால் பல
கெட்ட பெயர்கள் அமைச்சரவைக்கு வரக்கூடும். அதைத் தாங்க வேண்டிய
நிலையில் வெங்கட்ராமன் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இதில்
இருந்து நீங்கள் கொஞ்சம் விலகிக் கொள்ளுங்கள் என்று நான் சென்ற
தடவை இந்தசபையில் குறிப்பிட்டேன். அது, அவர்களின் பேரில் எனக்
குள்ள அனுதாபத்தால்தான் என்று நான் மீண்டும் வலியுறுத்திச்
சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில், விரிவான ஒரு மசோதா
கொண்டு வந்திருக்கிற வேளையிலாவது மக்களின் பெருவாரியான
ஆதரவையும் அபிமானத்தையும் பெறக்கூடிய முறையில் அவர்கள்
இந்த ஷரத்துக்களை திருத்தியமைத்திருப்பார்களேயானால் மிகவும் நன்றாக
இருந்திருக்கும். ஆனால் அதைச் செய்யவில்லை என்பது வருந்தக்
கூடியகாரியமாகும். மேலும் இந்த முதலாவது அனுபந்தத்தில்
**" Milk foods including fresh milk but excluding milk powder ".**
என்று 25-வது ஐட்டத்தில் போடப்பட்டிருக்கிறது. அதற்கு மூன்று சதவிகிதம்
வரி போடப்பட்டிருக்கிறது. பால் போதுமான அளவிற்கு நம் நாட்டில்
இல்லாத காரணத்தினால்தான் வெளி நாடுகளில் இருந்து அல்லது வேறு
பகுதிகளில் இருந்து நாம் பால் பௌடரைத் தருவிக்க வேண்டியிருக்கிறது.

[Sri P. S. Chinnadurai] [12th March 1958

பால் போதுமான அளவு இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்காக என்று
வரவழைக்கப்படுகிற இந்த பால் பௌடருக்கு நாம் விதிவிலக்கு
அளித்து விட்டால் என்ன ? அதற்கு ஒரு முனை விற்பனை வரி விதிக்க
வேண்டிய அவசியம் இருக்கிறதா ? என்று இந்த அரசாங்கம் நிச்சயம்
கவனிக்கவேண்டுமென்று நான் கோருகிறேன். பூரணமாக அதற்கு விதி
விலக்கு அளிக்கவேண்டும். அதை 3-வது அனுபந்தத்தில் சேர்க்கவேண்டும்.
அதோடு, "**Cotton waste, Cotton yarn waste**" இவைகளும் சேர்க்
கப்பட்டிருக்கிறது. ஒரு முனை விற்பனை வரி 1 பர்சன்ட் போடப்பட்டிருக்
கிறது. கழிவு நூலிற்கும், பஞ்சுக்கும் இம்மாதிரி வரி விதிக்கவேண்டிய
அவசியமில்லை. உண்மையிலே அவைகள் மூன்ருவது அனுபந்தத்தில்
சேர்க்கப்படவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். மேலும், இந்த
விற்பனை வரியைப் பொறுத்த வரையிலே, சாதாரணமாக வியாபாரிகள்
இந்த விற்பனை வரியை மக்களிடம் இருந்து சர்க்காருக்கு வசூலித்துக்
கொடுக்கும் ஏஜெண்டுகள் போல்தான் இருக்கிருர்கள். நேரடியாக, இந்த
வியாபாரிகள் அந்த வரியைக் கொடுப்பதில்லை என்று நான் அடிக்கடி
சொல்லி வந்திருக்கிறேன். இந்த விற்பனை வரியால் இறுதியில் பாதிக்கப்
படுகிறவர்கள் மக்களே தவிர வியாபாரிகள் அல்ல என்று நான் மீண்டும்
இங்கு ஊர்ஜிதம் செய்கிறேன். இந்த என் கருத்து உண்மையிலேயே, சிறிய
வியாபாரிகளைப் பொறுத்த வரையில் ஓரளவிற்கு பொருந்தாது என்பதை
நான் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். ஏனென்றுல், சந்தையில் வியா
பாரம் செய்யக்கூடியவர்கள், பெரிய கடைகளில் வியாபாரிகள் பில் போட்டு
விற்பனை வரி வசூலிப்பதுபோல், இந்த சந்தையில் வியாபாரம் செய்கிற
வர்கள் பில் போட்டு அந்த வரியை வசூலிப்பதில்லை. சந்தை வியாபாரி
களைப் பொறுத்த வரையிலும் அதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.
நல்ல நேர்மை உள்ளம் படைத்த வியாபாரிகளாக இருந்தால், அவர்கள்
எந்த அளவிற்கு வரி வசூல் செய்கிருர்களோ அந்த அளவிற்குத்தான்
பண்டங்களின் விலையை உயர்த்தி பில் போடாமல் வசூல் செய்கிருர்கள்.
ஆனுல் மனசாட்சி இல்லாத சில வியாபாரிகள் எவ்வளவு வரி வசூல்
செய்கிருர்களோ அதை விட பன்மடங்கு விலையை, அதிகமாக தொகையை,
பண்டங்களின் விலையில் ஏற்றி வைத்து வசூலிக்கத் தொடங்கி விடுகி
ருர்கள். சிறிய சந்தைகளில் நிலை இன்னும் மோசமாக இருக்கும். வியா
பாரிகள் தங்களுக்குள் பேசிக்கொண்டு பண்டங்களின் விலையை ஏற்றிக்
கொண்டு விடுகிருர்கள். ஆகவே செக்ஷன் 6-ல் **where the total
turnover is more than Rs. 5,000 but is less than Rs. 10,000**
என்று போட்டிருக்கிற அந்த ஒரு பகுதியையாவது நீக்கிவிட வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பத்தாயிரம் ரூபாய் வருடம்
ஒன்றுக்கு வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளுக்கு அடியோடு வரியிலி
ருந்து விதிவிலக்கு கொடுத்துவிடுவது மிகவும் பொறுத்தமானதாக இருக்
கும். இதற்கு காரணம் வியாபாரிகளுக்கு நன்மை செய்யவேண்டும்
என்று சொல்லுவது மாத்திரம் அல்ல, மக்களுக்கு உண்மையில் நன்மை
யை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் இதை செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக தொலைவிலுள்ள, நகரத்தின்
வெளியே உள்ள கிராமங்களில் கூடுகின்ற சந்தைகளில் வியாபாரத்தை
நடத்தும் வியாபாரிகளுக்கு இந்த தொல்லைகள் இல்லாமல் இருக்கவேண்டும்
என்ற நோக்கத்தோடு இதை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இந்த மசோதாவானது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட
விருக்கிறது. இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற மந்திரியாருடைய
தீர்மானத்தை நான் ஆதரிக்கின்றேன். செலக்ட் கமிட்டியில் இவைகளைப்பற்றி
யெல்லாம் கவனித்து, இந்த மசோதாவில் அமைச்சர் அவர்கள் எந்த
சில திருத்தங்களை துணிச்சலோடு கொண்டு வர முடியவில்லையோ அதை
செலக்ட் கமிட்டியில் பரிசிலனை செய்து மக்கள் ஆதரிக்கின்ற சில திருத்தங்
களை இதில் கொண்டு வந்து மறுபடியும் இதை இச்சபையில் கொண்டு
வருவார்கள் என்ற நம்பிக்கையோடு, எனது வார்த்தைகளை இதோடு
முடித்துக்கொள்கிறேன்.



12th March 1958] [Sri P. S. Chinnadurai]

MR. SPEAKER: I have to announce to the House that the Business Advisory Committee met at 10 a.m. to-day and its decision will be circulated to hon. Members later. Now I shall give a brief summary of it. To-day the Madras General Sales Tax Bill, 1958 to be referred to a Select Committee will be discussed for two hours. The Hon. Minister will reply at 11-30 a.m. Afterwards there are three small Bills, the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958, the Madras Co-operative Societies (Amendment) Bill, 1958, and the Madras General Sales Tax (Emergency Provisions) Bill, 1958.

To-morrow, the Madras Children (Amendment) Bill, 1958 will be introduced and then the Madras Prohibition (Amendment) Bill, 1958 and the Madras Catering Establishments Bill, 1957 will be discussed for two hours each, one hour for general discussion and one hour for clause-by-clause discussion.

On the 14th instant the first few minutes will be taken up for Voting of Advance Grants for the year 1958–59 and then the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958, the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958, the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 and the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958, will be taken up.

On the 15th instant for a few minutes the Madras Appropriation (Vote on Account) Bill, 1958, will be taken up and then the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958 will be taken up.

Now, the hon. Member, Sri Palanisami wants to make a speech. There is only half an hour left and within that time Messrs. Doraiswami Reddiar, V. K. Ramaswamy Mudaliyar and M. Kalyanasundaram will have to speak. Nowhere it is stated that the Mover of an amendment should be given an opportunity to speak. So, the hon. Member, Sri Palanisami can give all his material to Sri Kalyanasundaram so that he can deal with them when he speaks or Sri Kalyanasundaram should give some of his time to Sri Palanisami.

**SRI B. DORAISAMI REDDIAR**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரியைப்பற்றி ஒரு சிலர் தமிழிலும், ஒரு சிலர் ஆங்கிலத்திலும் புள்ளி விவரங்களோடு பேசினுர்கள். புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு திறமையாக சிலர் பேசினுர்கள். நான் எனக்குத் தெரிந்தவரையில் சில கருத்துக்களை மட்டும் இந்த விற்பனை வரி சம்பந்தமாகக் கூறுவதற்கு முன்வந்துள்ளேன். நான் பட்ஜெட்மீது விவாதம் நடந்தபோதும் சில உணவு தானியங்களின்மீதுள்ள வரியை

விலை அதிகமாக ஏறுகிறது. அந்த முறையில் உள்நாட்டுப் பொருள் களுக்கு பல கட்டங்களில் விற்பனை வரி போடக்கூடிய முறையை எதிர்க் கிறோம். அது மட்டுமல்ல, அவர்களுக்கு இருக்கக் கூடிய "ஹாரஸ் மெண்ட்" ......

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது விவசாயிகளுக்கு உற்பத்தி செய்வதற்கு வரி போடப்போகிறோம் என்று சொல்லுகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

SRI N. K. PALANISAMI : இந்த காஷுவல் ட்ரேடர்ஸுக்குப் போடவில்லையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : காஷுவல் ட்ரேடர் என் பது அவ்வப்போது ஒரு கடை வைத்துக்கொள்ளாமல் கொடுப்பது, வாங்கு வது, விற்பது போன்றதைச் செய்பவர்கள். ஒரு கடை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்பவர் காஷுவல் ட்ரேடர் ஆக மாட்டார்.

11-10 a.m. SRI N. K. PALANISAMI : "டெபனட்" ஆக இருந்திருந் தால் சொல்லியிருக்க மாட்டேன். "வேக்" ஆக இருப்பதால்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. "ஹாரஸ்மெண்டை பொறுத்த வரையில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் "ஸர்ச்" செய்யலாம், "அக்கவுண்ட்ஸ் ஐக்" கொண்டுவரச் சொல்லலாம் என்ற முறையில் இருக்கிறது. "ஹாரஸ்மெண்ட்" அந்த முறையில் இருக்கிறதே ஒழிய, அதில் மாற்றம் இல்லை. இந்த மசோதாவில் அனுகூலம் இல்லை. ஒரு ஆபீஸர், வியா பாரி இல்லாத சமயத்தில் வீட்டுக்குப் போகலாம், "அக்கவுண்ட்புக்ஸ்" களை எடுத்துக்கொண்டு இஷ்டம்போல் போகலாம். எந்தத் தொந்தரவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். அந்த முறை இருக்கக்கூடாது என்று சொன்னோம். ஆனால் அது அப்படியே இருக்கிறது. இன்னொன்று "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" என்று இருக்கிறது. இது மிகவும் கொடுமை யானது, குரூரமானது. பல வருஷங்களாக "பெஸ்ட் ஆப் ஜட்ஜ் மெண்ட்" இருக்கக்கூடாது என்று சொல்லிவருகிறோம். ஏதோ ஒரு கணக்கில் 100 ரூபாய் தவறிவிட்டது என்று வைத்துக்கொண்டால்— 5,000 ரூபாய் வியாபாரத்தில் 100 ரூபாய் தவறி விட்டிருக்கலாம்—ஒரு நாளைக்கு 100 ரூபாய் தவறுதலாக இருக்கலாம்—இப்படித்தான் ஏமாற்றி இருப்பார்கள் என்று சொல்லி பூராவுக்கும் 50,000, 60,000 ரூபாய் என்று கணக்குப் போட்டு, கடைசியில் "டிரிப்யூனலுக்கு" வந்துவிடும். உண்மையிலேயே தவருக இருந்தால் கூட, இப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடியதாக இருக்கிறது. இதைச் சரியாக பரிசீலனை செய்து நல்ல முறை யிலே மாற்ற வேண்டுமென்று சொல்லியிருந்தும், அது அப்படியே இருக் கிறது. "ஹாரஸ்மெண்டைப்" பொறுத்த வகையில், டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட்டுக்கும் சர்க்கார் மசோதாவுக்கும் எந்த விதமான மாற்றமும் கிடையாது.

அடுத்தபடியாக, ஒருமுனை வரி. இன்றையதினம் ஒருமுனை வரி 72 பொருள்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. வரி விலக்களிக்கப்பட்ட பல பொருள்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பல பொருள்களுக்கு இன்னும் ஒரு முனை வரி போட முடியும். அல்லது 2 முனை வரி போடக் கூடிய அனுகூலங்களும், வாய்ப்புகளும் இருக்கின்றன. பல முனை வரியினால் வியாபாரிகளுக்கும், ஜனங்களுக்கும் கஷ்டம் இருக்கிறது என்று அன்றைய தினம் சொன்னோம். வெளி நாட்டிலிருந்து வரக்கூடிய பொருள் களுக்கு—மெஷினரியாக இருந்தாலும்—அது இரண்டு கட்டத்தில் போகும் அதாவது சர்க்காரிடமோ, அல்லது வேறு யாராவது வியாபாரியிடமோ, போகும்—அதாவது ஒரு கட்டத்தில் வசூலிக்க முடியும். இந்தப் பொருள்களுக்கு வேண்டுமானால் இரண்டு கட்டங்களில் போடலாம். பி. அன்ட் ஸி. மில் இருக்கிறது, அங்கு துணி உற்பத்தி செய்வதானது ஒரு பெரிய வியாபாரி, அவருக்குக் கீழே ஒரு சின்ன வியாபாரி, அவருக் குக் கீழே 4, 5 வியாபாரிகள் என்று போகும் காலத்தில், இன்னொரு



ஸ்டெப் சேர்த்து—6 கட்டத்தையும் சேர்த்து—ஒரே இடத்தில் வரி போட வேண்டுமென்று சொன்னோம். அப்படிப் போடப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால்......

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தப் பண்டத்திற்கு ?

SRI N. K. PALANISAMI : எல்லாப் பண்டங்களின் மேலும் போடலாம். வெளி மாகாணங்களிலிருந்து வரக்கூடிய பொருள்களுக்கும் இதே முறையில் போடவேண்டும் என்று சொன்னோம். இதை அரசாங் கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. ஒரு முனை வரி விஷயத்தில் இன்னொரு கஷ்டம், அக்கவுண்ட்ஸ். மூன்று "அக்கவுண்ட்ஸ்" வைக்க வேண்டுமென் றிருக்கிறது. இருக்கக்கூடிய அக்கவுண்ட்ஸையே எழுதமுடிய வில்லை. அதிகக் கஷ்டமாயிருக்கின்ற முறையில் 3 அக்கவுண்ட்ஸ் வைக்க வேண்டுமென்ற முறையில் இருக்கிறது.

அதே சமயத்தில் இன்றைய தினம் ஹோட்டல்களில் செய்யப்படும் வியாபாரத்தின் மீது வரியை 2½ அணுவிலிருந்து 2 அணுவாகக் குறைத் திருக்கிறார்கள். சாதாரணமாக மாடர்ன் கபேயை எடுத்துக்கொண்டால் 9 ஹோட்டல்களை—தாஸப் பிரகாஷ் போன்ற பல ஹோட்டல்களை வைத்து கோடி கோடியாக லாபம் வருகிறது. ஒரு ஆளுக்கு 9 பெரிய ஹோட்டல் கள் இருக்கின்றன. மைசூரில் இருக்கிறது—ஊட்டியில் இருக்கிறது—இப் படி ஹோட்டல்கள் வைத்து, கோடிக் கணக்கில் ரூபாய் சம்பாதிக்கக் கூடிய இடத்தில் ஏன் 2½ அணுவிலிருந்து 2 அணுவிற்குக் குறைக்க வேண்டும் ? 25,000, 20,000 ரூபாய் வியாபாரம் உள்ளவர்களுக்கு வேண்டுமானால் வரி விலக்கு அளிக்கலாம். ஒரு ஸ்வீட் 1½ அணு அடக்கம் ஆகும் போது அதை 4 அணுவிற்கு விற்கிறார்கள். அதில் 2½ அணு லாபம் வருகிறது. இப்படிக் கொள்ளை லாபம் இருப்பதால் அவர்களுக்கு ரூபாய்க்கு 2½ அணு வீதம் போட வேண்டும். அதிகம் போடுவதானாலும், அதைப் பற்றி யோசிக்க வேண்டும்—குறைக்கக் கூடாது—என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சினிமா தியேட்டர்களுக்கு எந்த அளவிலே டிக்கட்டுகளுக்கு சர்க்கார் முத்திரை இட்டுக் கொடுக்கிறார்களோ, அந்த முறையிலே ஹோட்டல்களுக் கும் சர்க்கார் நம்பர் போட்டு, முத்திரை போட்டுக் கொடுத்தால்தான் அவர்கள் வருமானத்தைக் குறைத்துக் காட்ட மாட்டார்கள். ஹோட்டல் களில் பில்களை 3 தடவை, 4 தடவை அடுப்பில் போட்டு எரித்துவிடுகிறார் கள். சரியான நம்பர் கிடையாது. சர்க்காரை ஏமாற்றுகிறார்கள். ஆகவே 2½ அணுவிலிருந்து குறைக்கக் கூடாது—வேண்டுமானால் அதிகம் செய்ய லாம்—என்று மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆகவே, இவைகளை எல்லாம் கவனித்து, சரியான முறையில்— லோகநாதன் ரிப்போர்ட் வந்திருக்கிறது—சமீபத்தில்தான் பப்ளிஷ் செய் தார்கள்—வியாபாரிகள் அபிப்பிராயம் என்ன, அவர்கள் என்ன சொல்லு கிறார்கள், அவர்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன, அவர் களை எந்த அளவுக்கு பாதிக்கிறது என்று விசாரித்து முடிவு செய்யாமல் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததை எதிர்க்கிறேன். ஆகவே, இம் மசோதாவைப் பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு விடவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. P. SARATHI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 11-20 a.m. மசோதாவை முதலாக பொதுமக்களின் அபிப்பிராயத்துக்கு அனுப்பி, அதன் பிறகு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் நலமாய் இருக்கு மென்று நினைக்கிறேன். ஏனென்றால், வியாபாரிகள் முக்கியமாக இதில் சம்பந்தப்பட்டிருப்பதால், அவர்களுடைய யோசனைக்கு இதை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, 25,000 ரூபாய் விற் பனைக்கு உள்பட்ட வியாபாரிகளுக்கு ஒருவிதமாக வரி போடப்பட்டிருக் கிறது. ஏற்கெனவே, 10,000 ரூபாய்க்குத் தான் வரி என்று இருந்ததை,

[Sri M. P. Sarathi] [12th March 1958

இப்பொழுது 5,000 ரூபாய்க்கும் வரி உண்டு என்ற நிலைமையில்தான் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. முன்பு 10,000 ரூபாய்க்கு விற்பனை செய்தால் ஒருமுனை வரியோ அல்லது இருமுனை வரியோ என்றிருந்தது. இப்பொழுது, ரூபாய் 5,000-க்கு மேல் விற்றாலும் ஒரு சத விகிதம் வரி உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்பொழுது சில்லரைக் கடைகள் வைத்துக்கொண்டு, 4 அல்லது 5 ரூபாய் வரை வியாபாரம் செய்யும் சிறிய வியாபாரிகள்கூட கணக்கு இல்லாமல் வியாபாரம் செய்யமுடியாது. ஆகவே, ரூபாய் 25,000-க்குக் குறைவாக வியாபாரம் செய்யும் எந்த வியாபாரிக்கும் வரி கிடையாது என்று கண்டிப்பாக ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு தான்யங்களின் விலை ஏறிக்கொண்டு வருகிற நேரத்திலே, உணவு தான்யங்களுக்கு வரி விதிப்பது கண்டிப்பாக எடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவு தான்யங்களுக்குப் போட்டிருக்கும் இந்த வரியை எடுத்துவிட்டால், எவ்வளவோ மக்கள் இந்த சர்க்காரை வாழ்த்துவார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இதை உத்தேசித்தாவது, ஒரு நல்ல பெயர் வாங்குவதற்காகவாவது, உணவு தானியங்களின் மீதுள்ள வரியை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது, மணிலாவை எடுத்துக்கொண்டால், அதற்கு 3 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஆடிவரும் எண்ணெய்க்கு 3 சதவிகிதம் என்று வரி போடப்பட்டிருக்கிறது. அதிலே கிடைக்கும் பிண்ணாக்குக்கும் 3. சதவிகிதம் என்று வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பொருளை எடுத்துக்கொண்டால், சர்க்காருடைய திட்டப்படி 9 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது என்பது தெரியவருகிறது. அது மாத்திரம் அல்ல. இதிலே முக்கியமாக நமது சர்க்கார் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நாம் ஒரு பொருளுக்கு வரி விதிக்கும்போது மத்திய சர்க்காரும் அதே பொருளுக்கு ஏதாவது வரி விதித்திருக்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும். அதே மாதிரி எள்ளுக்கு 3 சதவிகிதம் வரி. அதிலிருந்து ஆடிவரும் எண்ணெய்க்கு 3 சதவிகிதம் வரி. அதிலிருந்து கிடைக்கும் எள்ளுப் பிண்ணாக்குக்கும் 3 சதவிகிதம் வரி என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பொருளுக்கு 9 சதவிகிதம் வரி போடப்படுகிறது. மத்திய சர்க்கார் சுங்க வரி ஒரு பவுண்டுக்கு 5 நயா பைசா வேறு இருக்கிறது என்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு பவுண்டின் விலை 10 அணா தான் ஆகிறது. கடலை எண்ணெயைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்காரும் வரி விதிக்கிறது என்பதைக் கவனித்து, கடலை எண்ணெய்க்கு 3 சதவிகிதம் என்றிருக்கிறதை மாற்றவேண்டும். உணவுப் பிரச்னை ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், முக்கியமான பொருள்களாக இருந்தால் இந்த 3 சதவிகித வரியையும் எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆடம்பரப் பொருள்களுக்கு வரி அதிகமாக விதித்தால் மக்கள் கவலைப்படமாட்டார்கள் என்றும் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, உணவுப்பொருள்களுக்கு வரியை எடுப்பதோடு அல்லாமல், முக்கியமாக 25,000 ரூபாய் விற்பனை உள்பட்ட வியாபாரிகளுக்கு யாதொரு வரியும் கிடையாது என்று செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **Srimathi T. N. ANANDANAYAKI:** கனம் சபாநாயகர் அவர்களே, பெண்களில் ஒரு பிரதிநிதி தான் பேசலாம் என்ற திட்டம் வந்ததினால் எங்களுக்குள்ளே கொஞ்சம் குழப்பம் வந்துவிட்டது. இருந்தபோதிலும், என்னைப் பேசுங்கள் என்று சொன்னதற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் லோகநாதனை வைத்து நம்முடைய மாகாணத்திலே விற்பனை வரியிலே உள்ள குழப்பங்களை முடிவு கட்டவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. எனக்கு முன் பேசிய என் கட்சியைச் சேர்ந்த



12th March 1958] [Srimathi T. N. Anandanayaki]

அங்கத்தினர்கள் பலர் பேசியது போன்று, டாக்டர் லோகநாதனின் பல யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, வியாபாரிகள் பலமுனை விற்பனை வரியினால் பல தொல்லைகளுக்கு உள்ளாகவேண்டியிருந்ததன் காரணத்தினாலே, ஒருமுனை வரி வேண்டுமென்று பல ஆண்டுகளாக போராடி வந்தார்கள். அவர்கள் வெற்றி கண்டது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருக்கிறது. இதனை அரசாங்கம் ஏற்று ஒருமுனை வரி விதித்துப் பார்க்கலாமென்று ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கது. சில மாகாணங்களிலே, ஒருமுனை வரியை ஏற்று, தோல்வி அடைந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். ஆனால், துணிச்சலாக சென்னை மாகாணத்திலே, டாக்டர் லோகநாதன் அவர்கள் இந்த வரியின் மூலம் $10\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வந்துவிடும் என்று உறுதி கொடுத்திருப்பதனாலும், வியாபாரிகளும் சர்க்காரை ஏமாற்றாமல் ஒருமுனை வரியைக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்று பல மாநாடுகளின் மூலம் தெரிவித்திருப்பதனாலும், அரசாங்கம் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

"ரெப்ரிஜரேட்டர்கள், சினிமாட்டோகிராப் கருவிகள்" இதற்கெல்லாம் 7 சதவிகிதம் தானே வரி போடப்பட்டிருக்கிறது, ஏன் 15 சதவிகிதம் வரி போட்டிருக்கக்கூடாது என்று பல எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கேட்டார்கள். அரசாங்கம் இதை யோசித்து மேலும் வரியை உயர்த்திக் கொண்டு போகலாம். அதற்குத் தடை ஒன்றும் இல்லை. இப்பொழுது 7 சத விகிதம் என்று போட்டிருப்பது போதும், அதற்கு மேல் இவர்களைத் தாக்க வேண்டாம் என்பதனால் தான் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பல கூட்டுறவு சங்கங்களுக்கும், மற்றய துறைகளுக்கும் விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளிப்பதற்காக, பழைய சட்டத்திலே 6-வது செக்ஷன் இருந்தது. புதிய சட்டத்திலே 15-வது பிரிவின்படி விதி விலக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முறை சர்க்காரை ஏமாற்றுவதற்கு இடம் அளிக்கிறது என்பதை டாக்டர் லோகநாதன் அவர்கள் எடுத்துக்காட்டி, விதிவிலக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அவர்களுக்கு "ஸப்ஸிடி" கொடுத்துவிடலாம் என்று கூறியிருக்கிறார். அந்த யோசனையை என் அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. கூட்டுறவு முறையில் பல ஊழல்கள் இருக்கின்றன என்பது நாம் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்துகொண்டு வருகிறோம். அந்த அளவிலே அவைகளை அதிகரிப்பதற்கு ஏற்றவகையில், விதிவிலக்குக் கொடுப்பது நியாயமில்லை என்றுதான் நினைக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்த்து விதிவிலக்கு அளிப்பதை எடுத்துவிட்டு, "ஸப்ஸிடைஸ்" பண்ணும் முறையை ஏற்றுக்கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

28-வது பிரிவின் படி "ரிவிஷன்" செய்யும் அதிகாரத்தை ரெவென்யூ போர்டுக்கு அளித்திருக்கிறார்கள். இதிலே ஒன்று சேர்த்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். அதாவது, "**Parties must be heard**" என்று சேர்க்கவேண்டும். அதல்லாமல் ரெவின்யூ போர்டு யோசித்து எதை முடிவாகக் கூறலாமென்று நினைக்கிறார்களோ அதைக் கூறலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி "**An opportunity of being heard must be given to the parties before the Board of Revenue**" என்று சேர்ப்பார்களேயானால் நன்றாக இருக்கும். தங்களுடைய குறைகளை "ரிவிஷன் அதாரிட்டி"யான ரெவின்யூ போர்டு முன்பு எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கும். அஃதோடு, உத்திரவு சென்ற 60 நாட்களுக்குள் "ரிவிஷன் மனு" செய்துகொள்ளவேண்டுமென்று கண்டிருக்கிறது. இந்த வரம்பை 90 நாட்களாக உயர்த்தினால் அது சற்று நன்றாக இருக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன். உணவுப் பொருளைப் பற்றி பல பேர் பேசினார்கள். 1 சதவிகிதம் என்று இருப்பதை $\frac{1}{2}$ சதவிகிதமாகக் குறைத்தால் மிகச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன். உணவுப் பொருள்களின் மேல் விற்பனை வரியைப் போட்டால் சாதாரண பாட்டாளி மக்கள் தொல்லைப்படுகின்றனர் என்று சிலர் கண்ணீர் விடுகின்றனர். பாட்டாளி மக்களின் மேல் வரியே போடக்

[Srimathi T. N. Anandanayaki] [12th March 1958

கூடாது என்று மற்றொருவர் கூறினார். ஆனால் டாக்டர் லோகநாதன் அவர்கள் தம்முடைய அறிக்கையில் "இதனால் வருகின்ற வருமானம் அதிகமாக இல்லாவிட்டாலும், எல்லா மக்களும், அரசாங்க நடவடிக்கை

11-30 a.m. களில் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்கின்ற அளவுக்கு உணவு விற்பனை வரி இருப்பது நியாயம் தான்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதை ½ சதவிகிதமாக இருந்தால் போதும் என்று சொல்லியிருக் கிறார். 1 சதவிகிதம் என்று போட்டிருப்பதை கனம் அமைச்சர் அவர்கள் செலக்ட் கமிட்டியில் திருத்திக் கொள்வாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. "மில்க் பிராடக்ட்ஸ்"களுக்கு 3 சதவிகிதம் போட்டிருப்பதாக ஒரு சோஷலிஸ்ட் அங்கத்தினர் எடுத்துக் கூறினார். டாக்டர் லோகநாதன் "நம் நாட்டிலே பால் உணவு கிடைப்பது மிக மிக குறைவு. அந்த சத்தை அதிகமாக வழங்க வேண்டுமென்றால், விற்பனை வரியே இருக்கக் கூடாது" என்கிறார். பாலுக்கும், பாலைச் சேர்ந்த உணவுப் பொருளுக்கும் விற்பனை வரியை அடியோடு ரத்து செய்திருந்தால் நலமாக இருக்கும். இதை திருத் தக் கமிட்டி ஏற்றுக் கொள்ளும் என்று நினைக்கிறேன்.

"**Turnover**" தொகையை 25,000 என்று உயர்த்தியிருப்பது வரவேற் கத்தக்கதுதான். இதற்கு கீழ் வியாபாரம் செய்பவர்கள் கணக்குகளை வைத்திருப்பது கஷ்டம் என்று அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். அமைச்சர் அவர்கள் 25,000-க்கு குறைவாக வியாபாரம் செய்கின்றவர்கள் கணக்குகள் வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றும், "**Purchase Bills**" வைத்துக் கொண்டிருந்தால் போதுமானது என்றும் சொன்னார். காய் கறியைப் போன்ற விதி விலக்கு கொடுத்த பொருள் களை வியாபாரம் செய்கின்றவர்களும் கணக்கு வைத்துக் கொள்ளத் தேவை யில்லை என்று சொன்னார்கள். அந்த அளவில் 25,000 ரூபாய் என்று வரம்பு போடப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால் அதிகாரி களுக்கு மிக அதிகமான ஆதிக்கத்தை கொடுத்திருப்பதுதான் சற்று பயமாக இருக்கிறது. கம்யூனிஸ்ட் அங்கத்தினர் கூறியது போல், இந்த "**Best of judgment**" என்பதை நீதி மன்றத்திலும், மற்ற இடங்களிலும் "**should not be questioned**" என்று போடப்பட்டிருக்கிறது. அதற்கான ஒரு அதிகாரத்தை அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்க்கின்றவர்களுக்கு கொ டுக்கப்பட்டிருக்கிறது. "இன்கம் டாக்ஸ்", "சேல்ஸ் டாக்ஸ்" விஷயங்களில் அதிகாரிகள் அன்பு இல்லாமல் பழகி வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். மக்களிடத்தில் அதிகாரிகள் அன்பு இல்லாமலும் பண்பு இல்லா மலும் பழகுவது அரசாங்கத்தை மறைமுகமாகவோ அல்லது நேரிடை யாகவோ தாக்குவதாகும் என்று நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். ஆகையினால், அதிகாரிகளுக்கு குறைந்த அளவில், அன்போடு பழகக் கூடிய அளவில் அதிகாரத்தைக் கொடுப்பார்களேயானால் சாலச் சிறந்ததாக இருக்கும். "**Best of judgment**" என்பதை அரசாங்க அலுவல்களில் வேலை பார்க்கின்றவர்களுக்கு விட்டுவிடாமல் ஏதாவது ஒரு "அட்வைசரி போர்டு" மாதிரி ஏற்படுத்தி பொது மக்களின் பிரதிநிதிகளை அதில் உட்கார வைத்து அதன் மூலமாக "**Best of judgment**" நிர்ணயிக்க முடியும் என்று சொன் னால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

"**Commercial Tax Officers**"களை நியமிக்கும்போது சட்டம் படித்தவர்களை நியமிப்பது நல்லது என்று டாக்டர் லோகநாதன் அவர்கள் சொல்லியிருக் கிறார். நான் சட்டம் படித்தவள் என்ற முறையில் அவர்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுவதாக நினைக்கக் கூடாது. சட்டம் படித்தவர்களை நியமிப்பதுதான் நல்லது என்று நானும் நினைக்கிறேன். சட்டம் படித்தவர்களை அப்படி நியமித்தால், சட்டத்திற்குப் புறம்பாக, சட்டத்தை மீறி நடக்க மனம் இடம் தராது, அப்படி நடக்கவேண்டும் என்ற ஆசை இருந்தால் கூட. ஆகையால் சட்டம் படித்தவர்களை நியமிப் பது மிகவும் வரவேற்கத்தக்கது. அதற்கான விதிகளை சேர்த்து சட்டம் படித்தவர்களையே நியமிப்பது என்ற நிலைமை வந்தால் மிகவும் நல்லதாக இருக்கும்.

"**Appellate Tribunal**"களுக்கு "**District Judge Rank**" உள்ளவர்களை நியமிக்க வேண்டும் என்று சொல்வது வரவேற்கத்தக்க அம்சம். இவ்வளவு



12th March 1958] [Srimathi T. N. Anandanayaki]

வரவேற்கத்தக்க அம்சங்கள் இருந்தாலும், சில சிறு குறைகளை நீக்குவதற்கு, குறிப்பாக உணவு தானியங்களின் மீதுள்ள வரியை ½ சதவிகிதமாக குறைப் பதற்கும் "**milk products**" மீது 3 சதவிகிதம் என்று இருப்பதை விலக்கு வதற்கும், "**Revisional authorities**" இடம் சென்று தங்கள் குறைகளை சொல் லக்கூடியவாறு திருத்தி—இவைகளை எல்லாம் சேர்த்து செலக்ட் கமிட்டி ஒரு நல்ல திட்டத்தை கொண்டு வருவார்களானால் அது வரவேற்கத்தக்க தாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இந்த விதி விலக்குகளில் எவ்வளவோ குறைகள் இருப்பதாக காய் கறி வியாபாரிகள் சொல்லு கின்றனர். என் பக்கத்திலிருக்கும் கனகாம்புஜம்மாளும், "கருணைக்கிழங் கிற்கு விற்பனை வரி இருப்பதாகவும், உருளைக் கிழங்கிற்கு விற்பனை வரியி லிருந்து விலக்கு அளித்திருப்பதாகவும், கருணைக்கிழங்கிற்கும், உருளைக் கிழங்கிற்கும் என்ன வித்தியாசம்" என்றும் சொல்லுகிறார்கள். சில நாட் களுக்கு முன் நடந்த விவாதத்தில், கனம் அங்கத்தினர் அன்பழகனும், "கருணைக் கிழங்கிற்கு காருண்யமுள்ள சர்க்கார் கருணை காட்டவில்லை" என்று சொன்னார்கள். இந்த விஷயங்களை எல்லாம் கவனத்தில் வைத் துக்கொண்டு, எந்த அளவிலே விதி விலக்கு தந்தால் பொது மக்களுக்கு ஒரு நல்ல திட்டம் அளிக்க முடியுமோ அந்த முறையில் செய்தால் மிகவும் நல்லதாக இருக்கும். இந்த மசோதாவை, ஸ்ரீ சங்கரன் சொன்னபடி, பொது மக்களின் அபிப்பிராயம் தெரிந்து கொள்வதற்கு அனுப்ப வேண் டிய அவசியமே இல்லை. டாக்டர் லோகநாதன் அவர்கள் ஊர் ஊராகச் சென்று, இரண்டு மூன்று நாட்கள் தங்கி, அங்கு இருக்கக்கூடிய வியாபாரி களையும், சங்கங்களையும் "**Consumers' Associations**"களையும், சம்பந்தப்பட்ட வர்களையும் சந்தித்து நேரிடையாக எவ்வளவு தகவல்களை சேகரிக்கமுடியுமோ அவ்வளவையும் சேகரித்து ஒரு அருமையான திட்டத்தை நமக்கு கொடுத் திருக்கிறார். அவருடைய சிபாரிசுகளில் 75 சதவிகிதம் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மீதி இருக்கின்ற 25 சதவிகித சிபாரிசுகளையும் ஏற் றுக் கொள்வது நல்லது. ஆகையால் இந்த "**Select Committee**" ஆலோசனை செய்து பார்த்து ஒரு சீரிய முடிவுக்கு வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIAR: Mr. Speaker, in supporting the motion for referring the Bill to a Select Committee, I would like to make a few observations. Dr. Lokanathan is an authority on Economics and the Government were perfectly right in appointing him as an authority to go into the whole question. As pointed out just now by the hon. lady Member, Dr. Lokanathan has been touring the whole State, met so many representatives from different sectors, went into the whole question thoroughly and has submitted an exhaustive report to the Government which has been placed on the table of the House.

Sir, I was rather surprised to see that the Government were able to accept only some of the recommendations and have rejected some others. Though they have accepted most of the recommendations, it is not known on what grounds some of the recommendations of this expert one-man committee have been rejected. I suppose the Government will consider the matter and the Select Committee will go through the report once again and try to implement as many of the recommendations as possible.

With regard to this tax structure, I would like to say one or two things. I should say that the tax levied on foodgrains is highly objectionable, in that it will put up the cost of paddy, rice and other

foodgrains things. Even though the producers may not be taxed directly, the merchants will surely put up the prices, and when the foodgrains, after passing through two or three sources, reach the consumers, they will surely be required to pay higher prices. Therefore, I request the Government to consider this question very seriously.

Again, with regard to the perishable articles, my humble submission is that not even half a per cent should be levied on them. Whether it is potato or any other vegetable there should be no kind of tax on these perishables. Even the merchants, I am sure, do not stand to gain much especially when they import these perishables from North India or the southern corner of the State. Most of the articles perish on the way. They do not get even 50 per cent of these articles all right. I am sure that some of these very small merchants may not keep accounts and there will be a lot of loopholes. So, I request the Government to go into this question also in all earnestness.

With regard to milk products, I wish to state that even on fresh milk there should be no tax. We may perhaps expect big milk supply unions and other registered bodies to keep accounts. But, as far as the small vendors are concerned, they may not be in a position to maintain accounts and so it will not be possible to assess their correct income and collect the tax from them. Probably, they are thinking of some Colonisation Scheme and isolation of animals in a certain place outside the city. Still, according to the latest figures, about 14,000 animals are being kept here and even if some of them are isolated in a far off place, a large number of them will be kept here for many more years. Whatever it is, it may not be possible, Sir, to take a correct view of these things and collect sales tax on all these things. Further, milk is a very essential article and is consumed by children, invalids and so many other people. After all the leakage will not be very much and the amount that we are likely to realise may not be much. My submission, Sir, is the Government should think of abandoning this tax and thereby giving relief to the poor people at any rate.

In regard to the opening of houses and breaking up of locks and seizing accounts from the licensees, my submission is that it will lead to a lot of confusion, corruption and harassment. There are other courses left open to the Government to punish these people. There is, therefore, absolutely no need to resort to this kind of measures as even with these things, there is complaint from minor licensees that there has been a lot of harassment. This is also a question to be seriously looked into by the Government.

Then there is the question of levy of certain taxes on chicory powder and all such things. I find that about five per cent is levied on chicory powder. My submission is, Government should think of enhancing it a little bit because this is used for adulteration of





coffee. I do not know whether it is used for adulterating any other thing. Whatever it is, instead of pure coffee, we get adulterated coffee through this.

With regard to the tax on tapioca, I should say that it is only a poor man's article for consumption even though in certain percentages, he may add it on for preparation of sago and other articles. When it is converted into powder at the factory end, the Government may tax it. But it should not be taxed, especially when it is consumed by very poor people as a substitute for rice. The aim of the Government should be to see that the common man is given all kinds of protection and relief and that the prices of the articles consumed by the common people are not pushed up on account of the extra levies.

The hon. lady Member was saying just now, Sir, and I am glad that she said—that the Appellate Tribunals should not be placed in the hands of the Revenue officials. If not a District Judge, at least a Subordinate Judge, should be appointed for these Appellate Tribunals.

THE HON. SRI R. VENKATARAMAN : The present provision is that there should be a District Judge.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I welcome the idea that Judges alone should be appointed to go into this appellate question.

* SRIMATHI KAMALAMBUJA AMMAL : கனம் சபாநாயகர் அவர் 11-40
களே, எனக்கு இப்பொழுது பேசுவதற்கு ஐந்து நிமிஷங்களாவது கொடுத் a.m.
ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். டாக்டர்
லோகநாதன் அவர்கள் சமர்ப்பித்துள்ள ரிப்போர்ட்டின் மீது சில வார்த்தை
களைச்சொல்ல முற்படுகிறேன். டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட்டில் குறிப்பாக
காய்கறிகளுக்கு ½ பர் செண்ட் வரி விதிக்கலாம் என்ற வகையில் அவருடைய
ரிப்போர்ட்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு பர்செண்ட்டாக அமைக்க
லாம் என்று நமது அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது என்று நினைக்கிறேன்.
சாதாரணமாக காய்கறிகள் ஒரே நாளில் காலையில் புதியதாக இருந்து
மத்தியானம் கொஞ்சம் வாடி வதங்கிப்போகும். பிறகு சாயந்திரம் பார்த்
தால் இன்னும் அதிகமாக வாடி வதங்கி குப்பைத் தொட்டியில் போகக்
கூடிய அளவுக்கு வந்து விடும். அதற்கு அதனபிறகு மதிப்பு என்பது
இடையாது. அப்படி காய்கறிகளை வைத்து வியாபாரம் செய்வதற்கு விற்பனை
வரி அவசியமா என்று கேட்கிறேன். அதற்கு விற்பனை வரி கூடாது
என்பதுதான் என்னுடைய தீர்மானம். குறிப்பாக கொத்தவால்சாவடி
மார்க்கெட்டை எடுத்துக்கொண்டால் அங்குள்ள வியாபாரிகள் கணக்கு
வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களால் முடியாது. கிராமப்
பகுதிகளிலிருந்து விவசாயிகள் இரண்டு மூன்று மூட்டைகளை தனித் தனி
யாக கொண்டு வந்து மார்க்கெட்டிலுள்ள கடைகளுக்கு விற்பனைக்கு
வருகிறது. அப்படி ஒவ்வொருவரும் சரக்கை விற்கும் நேரத்தில் ஒரு
வீசை அல்லது இரண்டு வீசை காய்கறி விற்கக்கூடிய நிலை ஏற்படுகிறது.
அப்படி விற்கக்கூடிய இடத்தில் ஒவ்வொருவரும் விற்கப்பட்டதற்கு பில்
அல்லது ரசீது வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது அவ்வளவு
சரியானது அல்ல. அவர்கள் பர்சேஸ் பில் வைத்துக்கொண்டால் போதும்
என்று சொல்வது அந்த வியாபாரிகள் அப்படி வைத்துக்கொள்ள முடியாத
ஒரு நிலைமை ஏற்படுகிறது. கிராமங்களில் பயிராகும் தானியங்களும் காய்
கறிகளும் நகரங்களுக்கு வந்து விற்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு

[Srimathi Kamalambuja Ammal] [12th March 1958

பர்சேஸ் பில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அந்த சாமான்களை கொத்தவால் மார்க்கெட்டில் வாங்கும் வியாபாரிகள் வெறும் கமிஷன் ஏஜெண்டுகளாகத்தான் இருக்கிறார்கள். அப்படிப் பட்ட கமிஷன் ஏஜெண்டுகள் ஒரு ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கமிஷன் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அப்படி எடுத்துக் கொள்ளக்கூடிய வர்களுடைய வருஷ டர்ன்ஓவரைப் பார்த்தால் அது ஏறக்குறைய 25 ஆயிரம் முதற்கொண்டு 50 ஆயிரம் வரையில் போகக்கூடியநிலை ஏற்படும். ஆகவே அப்படிப்பட்ட கமிஷன் ஏஜெண்டுகளை இந்த வியாபாரத்தில் சிக்கவைத்து காய்கறிகளின் வியாபாரத்தில் ஈடுபடுத்தி அவர்களின் பேரில் வரி விதிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாது என்பது என்னுடைய நோக்கம்.

காய்கறிகளைப் பற்றி சொல்லும்போது உருளைக்கிழங்குகளை வாங்கி வைத் துக் கொண்டு சிலர் வியாபாரம் செய்கிறார்கள். அந்த உருளைக் கிழங்கு கொஞ்சம் நாளைக்கு நீடித்து நிற்கும். பிறகு கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அழுகிப் போய்விடும். ஆகவே, இதையும் காய்கறிகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். மற்ற காய்கறிகளுக்கு வரி விதிவிலக்குக் கொடுக் கும்போது இதற்கும் வரி விதிவிலக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வரி இல்லாமல் தாராளமாக காய்கறிகளை வியாபாரம் செய்யலாம் என்று வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மரவள்ளிக் கிழங்கு சம்பந்தமாக இங்கே குறிப்பிடப்பட்டது. எங்கள் பகுதியில் இந்த மரவள்ளிக் கிழங்கு அதிகமாக பயிரிடப்பட்டிருக்கிறது. இந்த மரவள்ளிக் கிழங்கு மண்ணில் இருந்தால் ஒரு நாளைக்கு இருக்கும். மண்ணை கழித்து விட்டால் மறுநாள் உள்ளே கருப்பாகப் போய்விடும். அதன் பிறகு அது கெட்டுப்போய்விடும். இதையும் கிழங்குடன் சேர்த்து அதற்கும் விற்பனை வரி விலக்குக் கொடுக்க வேண்டும். இதற்கு விற்பனை வரி இருக்க வேண்டுமா என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண் டும். சேலம் முதலிய பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கை அதிகமாக பயி ரிட்டு வருகிறார்கள். அங்கே ஜவ்வரிசி தயார் செய்யப்படுகிறது. அதற்கு வேண்டுமானால் வரி விதிக்கலாம். அதனால் பாதகம் இல்லை. அந்த இடத்தில் அதற்கு வரி விதிக்கலாமே யொழிய மற்ற இடங்களில் விதிக்கக் கூடாது. ஏனென்றால் அங்கு கிழங்கை பிடுங்கி உடனே சுத்தம் செய்து வெய்யிலில் உலர்த்தி விடுவதால் அது கெட்டுப்போவதில்லை. அதற்கு அந்த இடத்தில் வேண்டுமானால் வரி விதித்துக் கொள்ளலாம். சாதாரண மாக வேறு இடங்களில் ஜவ்வரிசி செய்வது கிடையாது. அந்த இடங்களில் அதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். காய்கறிகளைப்பற்றி சொல்லும் போது கருணைக் கிழங்கைப்பற்றி ஸ்ரீமதி அனந்தநாயகி குறிப்பிட்டார். சாதாரணமாக உருளைக் கிழங்கை அதிகமாக உபயோகப்படுத்தினாலும் கருணைக் கிழங்கை அதிகமாக உபயோகப்படுத்துவதற்கு அவசியம் இல்லை. கருணைக் கிழங்கின் தரம் எப்படி என்பது எல்லோருக்கும் சாதாரணமாக தெரியும். கருணைக் கிழங்கும் அழுகிப் போகக் கூடியதுதான். சாதாரண மாக வீடுகளில் உருளைக் கிழங்கை உபயோகிப்பதுபோல் கருணைக் கிழங்கை உபயோகிப்பது கிடையாது. ஆகவே அழுகிப்போகக்கூடிய காய்கறிகளுக்கு இது வரையிலும் வரியினின்றும் விலக்கு அளிக்காமல் இருந்தது வருந்தத்
11-50 a.m. தக்க விஷயம்தான். பழவகைகள் பணக்காரர்கள் வாங்கக்கூடிய பண் டம், ஆகையினால் அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படாமல் ஒரு சத விகிதம் வரிபோடலாம் என்ற அளவிலே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உண்மையி லேயே பணக்காரர்களில் ஒரு சிலர்தான் சாப்பிட்ட உடனே பழம் சாப்பிட வேண்டுமென்ற முறையிலே பழம் வாங்கி சாப்பிடுகிறார்கள். மற்றபடி வியாதியஸ்தர்கள்தான் பழம் வாங்கி சாப்பிடுகிறார்கள். "டாக்டர் அட் வைஸ்" செய்தால் வியாதியஸ்தர்கள் பழம் வாங்கி சாப்பிடுகிறார்கள். ஏழை மக்களாக இருக்கும் வியாதியஸ்தர்கள்தான் பழத்தை அதிகமாக வாங்கி உபயோகப் படுத்துகிறார்கள். ஆகவே, பழவகைகளுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளு கிறேன்.



12th March 1958] [Srimathi Kamalambuja Ammal]

அதே மாதிரி பால் மீதும் வரி போடக்கூடாது. அதற்கும் வரியி லிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும். உடலுக்கு போஷாக்கு அளிக்கக்கூடிய எந்த பண்டமாக இருந்தாலும் அதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். பால்கூட நம் நாட்டில் அதிகமாக கிடைப்பதில்லை. ஏழைகள், குறைந்த வருமானம் உள்ளவர்கள் போஷாக்கு செய்து உடலை நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற காரணத்தினாலே, உடம்பிற்கு வலிவு ஊட்ட வேண்டிய காரணத்தினாலே பால் சாப்பிடுகிறார் கள். ஆகவே பாலுக்கு வரி போடுவது கூடாது என்பதைத்தான் நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றபடி டாக்டர் லோகநாதன் அவர்கள் ஒருமுனை வரி விஷயத்தில் தீர்க்க ஆலோசனை செய்து நன்றாக விசாரித்து தீர்ப்பளித்து இருக்கிறார்கள். மற்ற வகைகளில் அவர்கள் ரிபோர்டு யாரும் ஏற்கக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது. நான் கூறியதுபோல் காய்கறி வகைகளிலும், கமிஷன் ஏஜண்டு சம்பந்தப்பட்டவரையிலும் சில சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளத்தக்க தல்ல. கமிஷன் ஏஜெண்டு என்றால் பல சரக்குகள் போன்றவைகளை வாங்கி விற்பவர்களை நான் சொல்லவில்லை. குறிப்பாக கொத்தவால் சாவடியில் வியாபாரம் செய்யும் கமிஷன் ஏஜெண்டுகளைத் தான் குறிப்பிடு கிறேன். அவர்கள் வெடியற்காலை 3 மணிக்குப் போய் 6 மணிக்குள்ளாக வியாபாரம் முடிந்துவிடவேண்டும். காய்கறிகளை வாங்குகிறவர்களும், விற் பவர்களும் அவர்களை சூழ்ந்து கொண்டு மூட்டைகளை நிறுத்துப் போடுவார் கள். யாருக்கு கொடுத்தோம், யாருக்கு கொடுக்கவில்லை என்று அவர் களுக்கு தெரியாது. யாருக்கு விற்றோம், எதை வாங்கினோம் என்று தெரியாது. அந்த சூழ்நிலையில் அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள். ஆகவே கணக்குவைக் கக்கூடிய நிலைமை அவர்களுக்கு ஏற்படுத்தக் கூடாது. அவர்கள் கணக்கு வைத்துக் கொண்டிருந்தபோதிலும் அதிகம் சிரமப்பட்டிருக்கிறார்கள். அதி காரிகளிடம் கணக்கை காண்பிக்கும்பொழுது, கணக்கு சரியில்லை என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. கொத்தவால் சாவடி மார்க்கட்டை பொறுத்தவரையில், அவர்களை கணக்கு வைக்கும் நிலையில் வைக்கக் கூடாது. மற்றபடி மளிகை சாமான் வியாபாரம் செய்பவர்கள் வேண்டு மானால் கணக்கு வைத்துக் கொள்ள முடியும். காய்கறி வியாபாரம் செய்கிறவர்களை கணக்கு வைக்கும் நிலையில் வைத்திருக்கக்கூடாது. வேண் டுமானால் அவர்கள் லைசென்ஸ் கட்டணத்தை கொஞ்சம் கூடுதலாக்கலாமே தவிர, அவர்களை கணக்கு சிக்கலுக்கு உள்ளாக்கக்கூடாது என்று அரசாங் கத்தை கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு பேசுவதற்கு அவகாசம் கொடுத் ததற்காக கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா வெகு தந்திரமாகவும் சாதுரியமாகவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் இதை ஆதரிக்குமாறு கேட் டால்தான் சங்கடம் ஏற்படுகிறது. இன்று அது இருக்கக்கூடிய நிலையில் நான் அதை ஆதரிக்க முடியாத நிலையிலே இருக்கிறேன் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருப்பினும், இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்கு விடப்படும் என்று மந்திரி அவர்களே திருத் தத்தோடு பிரேரேபித்திருப்பதால் இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துகளை தெரிவிக்க விரும்புகிறேன்.

நீண்ட காலமாக, 4, 5 வருஷ காலமாகவே, வியாபாரிகள் மட்டுமல்ல, இன்னும் மற்றும் சில பொது ஸ்தாபனங்களும், இந்தச் சபையிலுள்ள பல அங்கத்தினர்களும் விற்பனை வரி அமைப்பில் சீர்திருத்தம் செய்ய வேண்டும், அதை மாற்றி அமைக்க வேண்டும், ஒருமுனை விற்பனை வரி கொண்டு வரக்கூடிய பாதையில் போகவேண்டும் என்று வற்புறுத்தி யிருக்கிறோம். அந்த சீர்திருத்தம் கொண்டு வருவதற்காக விசாரணை

நடத்துகிறார்கள் என்ற நம்பிக்கை பொது ஜனங்களிடத்திலும், வியாபாரி
களிடத்திலும் ஏற்படக்கூடிய முறையில் டாக்டர் லோகநாதன் அவர்களை
நியமித்து விசாரணையும் நடைபெற்றது. ஆனால் வந்திருக்கக்கூடிய
இந்த மசோதாவை பார்க்கும்பொழுது டாக்டர் லோகநாதன் அவர்களுடைய
பெயரை உபயோகப்படுத்தியிருக்கிறார்களே தவிர, அவர்கள் செய்து
இருக்கக்கூடிய சிபார்சுகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் நான்
கூறவேண்டியிருக்கிறது. வரி உயர்வு வேண்டுமானால் நேரடியாக வரி
உயர்வை கொண்டுவரவேண்டும். வரி உயர்வை கொண்டுவருவதற்காகத்
தான் டாக்டர் லோகநாதன் போன்ற ஒரு நிபுணரின் உதவியைத் தேடுவ
தற்கு இந்த விசாரணை நடத்தப்பட்டதோ என்று சந்தேகப்பட் வேண்டி
யிருக்கிறது.

முக்கியமாக இரண்டு அம்சங்களுக்காக இந்த விசாரணை நடத்தப்பட்டது.
ஒன்று வரிக்கொடுமையை குறைப்பது, இரண்டாவது வரியை வசூலிப்பதி
லுள்ள கொடுமையை குறைப்பது என்பதுதான் இந்த இரண்டு அம்
சங்களும். ஆனால் வரி அளவும் உயர்த்தப்பட்டிருக்கிறது, வரி வசூலிப்ப
தில் உள்ள கொடுமையும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது இந்த மசோதா
வில். அதுதான் இந்த மசோதாவின் நோக்கமாக இருக்கிறது என்பதை
நான் சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லுகிறேன். எப்படி இந்த
மசோதாவில் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கப்போனால்
டாக்டர் லோகநாதன் அவர்கள் சிபார்சு செய்திருப்பது ஒரு சத விகிதமாக
இருந்தால், இந்த மசோதாவில் 2 சத விகிதம் வரி விதிக்கப்படுகிறது. அதே
மாதிரி தான் விதி விலக்கு விஷயத்திலும். 25,000 ரூபாய்க்கு கீழே
வியாபாரம் செய்பவர்களுக்கு விதிவிலக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது.
ஆனால் ரூபாய் 4,000-க்கு வியாபாரம் நடந்தால் அந்த வியாபாரி பதிவு
செய்துகொள்ளவேண்டும். ரூபாய் 4,000-க்கு மேல் ரூபாய் 25,000 வரை
யில் வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்கு டாக்டர் லோகநாதன் அவர்கள்
சிபார்சு செய்ததற்கு மேல் வரி விகிதாசாரம் விதிக்கப்பட்டிருக்கிறது.
டாக்டர் லோகநாதன் அவர்கள் ரூபாய் 10,000-க்கு மேல் 25,000 வரை
வியாபாரம் செய்பவர்களிடம் ஒட்டு மொத்தமாக வரி வசூலிக்கப்படலாம்
என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அவர்கள் சிபார்சுப்படி ரூபாய் 5
முதல் ரூபாய் 12 வரைதான் வரி விதிக்கப்படும். நம்முடைய மசோதாவில்
ரூபாய் 5,000-க்கு மேல் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் வரி கொடுத்தே
ஆகவேண்டும். இந்த மசோதாவின்படி ஏற்கெனவே விதிவிலக்கு அளித்த
பொருள்களின்மீதும் வரி விழும். இந்த மசோதாவில் இது தெளிவாக
இருக்கிறது. ஏதோ ஒரு அங்கத்தினர் பேசுகையில் சில பொருள்களுக்கு
கணக்கு காட்ட வேண்டியதில்லை என்று அமைச்சர் அவர்கள் பிரைவேட்
டாக குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். ஆனால் மந்திரி அவர்கள் பிரசங்
கத்திலோ அல்லது இந்த மசோதாவிலோ எந்த இடத்திலும் அம்மாதிரி
சொல்லப்படவில்லை.

**THE HON. SRI R. VENKATARAMAN** : தவறு இருக்கவேண்டாம்
என்பதற்காக குறுக்கிட்டு சொல்லுகிறேன். காய்கறி பொருள்களுக்கு ரூபாய்
25,000 வரையிலும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் காய்கறிப்
பொருள்கள் மாத்திரம் வியாபாரம் செய்தால் இந்த விதிவிலக்கு உண்டு.
பல சரக்கு பண்டங்களோடு காய்கறிகள், தேங்காய் இவைகளையும் சேர்த்து
வியாபாரம் செய்தால், அவர்களைப் பொறுத்த வரையில் இந்த " ஸ்லாப்
ஸிஸ்டம் " அமுலுக்கு வரும்.

**SRI M. KALYANASUNDARAM** : நான் மசோதாவின் நோக்கத்தை
சரியாகத்தான் புரிந்துகொண்டிருக்கிறேன், மந்திரி அவர்களின் விளக்
கத்தை கேட்ட பின்பும். அதாவது பூராவும் புஷ்பம், காய்கறி வியாபாரம்
செய்பவர்களுக்கு ரூபாய் 25,000 வரையில் விதி விலக்கு உண்டு என்பதை
நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதே சமயத்தில் அதைவிட
சிறு வியாபாரிகள் ரூபாய் 5,000-க்கு வியாபாரம் செய்யக்கூடியவர்கள்
அரிசி, உப்பு, புளி, மிளகாய் இவைகளோடு காய்கறிகளையும் வைத்துக்
கொண்டு வியாபாரம் செய்தால் அவன் வரி கொடுக்கவேண்டும். முன்பு





விதி விலக்கு அளிக்கப்பட்ட பொருள்களின் மீதும், இப்பொழுது மறை
முகமாக வரி விதிக்கப்படுகிறது என்று சொல்லுவதில் என்ன தவறு
இருக்கிறது ? அதுவும் விதி விலக்கு கொடுக்க வேண்டிய லிமிட்டை
ரூபாய் 5,000-மாக குறைத்திருக்கிறார்கள். ரூபாய் 5,000-க்கு மேல் ரூபாய்
25,000 வரை வியாபாரம் செய்யக்கூடியவர்கள் ஏற்கெனவே கட்டிவந்த
வரியை இன்னும் கட்டிக்கொண்டுதான் வருவார்கள். அவர்களுக்கு எந்த
விதத்திலும் சலுகை என்பது கிடையாது என்பதுதான் இந்த மசோதாவி
லிருந்து தெரியவருகிறது. இதுவரையில் விதி விலக்கு கொடுத்த பொருள்
களுக்கும் சேர்த்து வரி கட்டவேண்டுமென்று இருப்பதனால் ரூபாய் 25,000
லிமிட்டுக்கு உட்பட்ட வியாபாரிகள் அதிகமான வரியை கொடுக்கவேண்டுமே
தவிர, அவர்களுக்கு வரி குறையாது என்று நான் நினைக்கிறேன். விதி
விலக்கு சம்பந்தப்பட்ட வரையில் டாக்டர் லோகநாதன் அவர்கள் சொன்ன
அளவுக்காவது அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளுகிறேன். ரூபாய் 10,000 வரை வியாபாரம் செய்யக் கூடியவர்
களுக்கு எந்த விதத்திலும் வரி இருக்கக்கூடாது. ரூபாய் 10,000-க்கு
மேல் எந்த அளவுக்கு டாக்டர் லோகநாதன் அவர்கள் சிபார்சு செய்திருக்
கிறார்களோ, அந்த அளவுக்கு விதி விலக்கு கொடுக்க வேண்டும். ரூபாய்
20,000, 25,000-க்கு இடையிலே இருப்பவர்களுக்கு வேண்டுமானால் ஏதா
வது உயர்த்திக் கொள்ளலாம். செலக்ட் கமிட்டி கூடும் சமயத்தில் எந்த
விதத்தில் இதை செய்யலாம் என்று யோசனை செய்து அப்பொழுது
சொல்லுகிறேன். மேலும், வரி வசூலிக்கும் முறையில் உள்ள கொடுமை
களை அதிகரிக்கக்கூடிய வகையில் மசோதா அமைந்திருக்கிறது. அந்த
வகையில் வரி வசூலிக்கும் அதிகாரிகளுக்கு எவ்வளவு அதிக அதிகாரத்
தைக் கொடுக்கக்கூடிய முறையில் மசோதா அமைந்திருக்கிறது என்பதை
பல கனம் அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். அது சம்பந்தப்பட்ட
ஷரத்துக்களைப்பற்றி, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசியதைவிட அதிகமாக
மசோதாவை வரவேற்ற ஆளும் கட்சி அங்கத்தினர்களே பேசினார்கள்
என்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கனம் மந்திரி அவர்களைக்
கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த விஷயத்தில், குறிப்பாக, சில வியாபாரி
கள் வரி செலுத்த வேண்டிய தொகையின் ஒரு பகுதியை முன்னதாகவே
செலுத்திவிட வேண்டுமென்று ஒரு விதி கூறுகிறது. இதனால் பல
வியாபாரிகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை யோசித்துப் பார்க்க வேண்டும்.
மேலும், அப்பீல் செய்து கொள்ளும் வியாபாரிகள் ஸெக்யூரிடி கொடுக்க
வேண்டுமென்று ஒரு ஷரத்து கூறுகிறது. ஏராளமான வியாபாரிகளுக்கு
வரிவசூலிக்கும் அதிகாரிகள் தொல்லைகள் கொடுக்கக்கூடிய வகையில்
மசோதா அமைந்திருக்கிறது. ரூபாய் 50-க்கு வியாபாரம் செய்யும் வியா
பாரிகள், ரூபாய் 5,000-க்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகள், 50 லட்சம்
ரூபாய்க்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகள் ஆகிய எல்லா வியாபாரிகள்
மீதும் அதிகாரிகள் அவர்களுடைய கைகளை வைப்பதற்கு மசோதா இட
மளிக்கிறது. வியாபாரிகள் கோரிவந்த சௌகரியங்களில் எதற்கும் மசோதா
வகை செய்யவில்லை. இந்த மசோதாவில் விற்பனை வரியும் உயர்த்தப்
பட்டிருக்கிறது. வரிக் கொடுமைகளும் அதிகரிக்கக்கூடிய வகைகள் ஷரத்து
கள் அமைந்திருக்கின்றன. இந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கான திருத்
தங்களை பொறுக்குக் கமிட்டியிடமிருந்து பெறலாம் என்ற நம்பிக்கை
யுடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே,
இந்த விவாதத்தில் கலந்துகொண்ட கனம் அங்கத்தினர்கள் அனைவரும்
நல்ல யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் பொறுக்குக்
கமிட்டி பரிசீலனை செய்யும். எல்லாப் பிரச்னைகளுக்கும் பொறுக்குக் கமிட்டி
நல்ல முடிவுகள் காணும் என்று முதலில் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த மசோதாவானது வெகு விரைவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சில
கனம் அங்கத்தினர்கள் இந்த மசோதா வெகு அவசரமாக சபைக்குக்
கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னதால் நான் இதைச் சொல்
கிறேன். மசோதாவைத் தயாரித்தவர்கள், அவர்களுக்கு எவ்வளவோ

[Sri R. Venkataraman] [12th March 1958

வேலைகள் இருந்தபோதிலும், இதை இவ்வளவு சீக்கிரமாகத் தயாரித்திருக்கிறார்கள் என்பதை நான் சபையினருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விற்பனை வரி சம்பந்தமாக நமக்கு ஆலோசனைகள் கூறுவதற்கு டாக்டர் லோகநாதன் அவர்களை நியமிக்கலாம் என்ற எண்ணமே நமக்கு சென்ற மே மாதம் தான் தோன்றியது. அவர்கள் தமது ரிப்போர்ட்டைத் தயாரித்துக் கொடுப்பதற்கு டிசம்பர் மாதம் வரை ஆயிற்று. அவருடைய ரிப்போர்ட் வந்த பிறகு, அவர் சொன்ன யோசனைகளை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்து, சென்ற 20 வருஷங்களாக இருந்துவரும் விற்பனை வரிச் சட்டங்களையெல்லாம் சேர்த்தும் திருத்தியும் இந்த விரிவான மசோதாவைத் தயாரித்திருக்கிறது. இது, நிர்வாக அதிகாரிகள் கடமையுணர்ச்சியுடன் செய்துள்ள ஒரு நல்ல காரியம் என்று இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கோரிய வியாபாரிகள், சர்க்காருக்கு விற்பனை வரி மூலம் வரும் வருமானம் குறையாத வகையில் அது திருத்தப்பட வேண்டுமென்பதை முழுமனதுடன் ஒப்புக்கொண்டார்கள். சில சில்லரைச் சாமான்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதித்தால், சர்க்காருக்கு இப்போது விற்பனை வரிமூலம் கிடைக்கும் 14 கோடி ரூபாய் வருமானம் குறையாது என்றும், அதே சமயத்தில் வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் பல நன்மைகள் ஏற்படும் என்றும் வியாபாரிகள் சொன்னார்கள்.

விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்தியமைக்க நாங்கள் தீர்மானித்தபோது, நான்கு முக்கிய நோக்கங்களுடன் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று நினைத்தோம். ஒன்று, திருத்தச் சட்டம் எல்லோராலும் எளிதில் நன்றாகப் புரிந்து கொள்ளப்படக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற நோக்கமாகும். இரண்டாவது நோக்கம், வரி வசூல் அதிகாரிகளாலும், கணக்குகள் வைத்துக் கொள்வதிலும், மற்ற பல வகைகளிலும் இப்போதைய சட்டத்தினால் ஏற்படக்கூடிய தொல்லைகள் திருத்தச் சட்டத்தில் ஓரளவு குறைக்கப்பட வேண்டும் என்பது ஆகும். மூன்றாவது நோக்கம், விற்பனை வரி கொடுக்காமல் சர்க்காரை ஏமாற்றிக் கொண்டிருக்கும் வியாபாரிகள் அவ்வாறு இனிமேல் ஏமாற்ற முடியாதபடி செய்யக்கூடியதாக திருத்தச் சட்டம் அமைய வேண்டும் என்பது ஆகும். நான்காவது நோக்கம், விற்பனை வரியை வசூலிக்கும் விஷயத்தில், நிர்வாகத்தை இரண்டு பகுதியாகப் பிரிக்க வேண்டுமென்பது ஆகும்; அதாவது, விற்பனை வரியை விதிப்பவர்களைக் கொண்ட ஒரு பகுதியாகவும், சட்டப்படி நியாயமானமுறையில் வரி விதிக்கப்படுகிறதா என்று பரிசீலிப்பவர்களைக் கொண்ட மற்றொரு பகுதியாகவும் நிர்வாகத்தைப் பிரிக்க வேண்டும் என்பது ஆகும்; அவை, 'அஸெஸ்மெண்ட் விங்', 'அப்பெலேட் விங்' என்ற இரு பகுதிகள் ஆகும்; "**Separation of powers between the executive and the judiciary**" மாதிரி செய்ய வேண்டும் என்பது ஆகும். இந்த நான்கு நோக்கங்களுடனும் இந்த மசோதாவைத் தயாரிக்க ஆரம்பித்தோம்.

இந்த மசோதாவைப் படித்த எந்த அங்கத்தினரும் இதைப் புரிந்து கொள்ள முடியாத நிலைமையில் இல்லை. ஏனென்றால், இந்த மசோதாவின் ஷரத்துக்களைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கிறது என்று எந்த கனம் அங்கத்தினரும் சொல்லவில்லை. ஆகவே, இப்போதைய சட்டத்தைவிட எளிதிலும் நன்றாகவும் மக்களால் புரிந்துகொள்ளப்படக்கூடிய முறையில் மசோதா அமைந்திருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். இந்த விஷயத்தில், எந்த விதமான குற்றமும் சொல்லப்படாததினால், மசோதா எளிதில் புரிந்துகொள்ளப்படக் கூடியதாக அமைந்திருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது.

கணக்குகள் வைத்துக்கொள்வதிலுள்ள தொல்லைகளை எடுத்துக்கொண்டால், சிறிய வியாபாரிகளுக்கு கணக்குகள் வைத்துக்கொள்ளும் தொல்லைகளைக் கொடுக்கக் கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம்.



12th March 1958] [Sri R. Venkataraman]

பெரிய வியாபாரிகள் கணக்குகள் வைத்துக்கொள்ளும்படி செய்யக்கூடாது என்ற அபிப்பிராயம் பெரிய வியாபாரிகள் எந்த வகையினராக இருந்தாலும் எங்களுக்கு இல்லை. என்னைப் பொறுத்தவரையில், அதிகமாக வியாபாரம் செய்பவர்கள் ஓரிரண்டு அதிகமான பேர்களை வேலைக்கு வைத்துக் கொண்டால் அது நல்லது தான் என்று நினைக்கிறேன். கணக்குகள் எழுதுவதற்காக அவர்கள் ஓரிரண்டு பேர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டால், அந்த அளவிற்கு நாட்டில் சிலருக்கு வேலை கிடைக்கும் என்று தான் அபிப்பிராயப்படுகிறேன். சிறிய வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்காததாக திருத்தச் சட்டம் அமைய வேண்டுமென்பது தான் எங்கள் நோக்கம். அப்படிப் பார்க்கும்போது, மொத்தம் ரூ. 5,000-க்கு மேற்பட்டு, ரூ. 25,000-க்குக் குறைவாக வியாபாரம் செய்பவர்கள் வேண்டுமானால் **Compounded rates**-ல் வரிசெலுத்தலாம் என்றும், அவ்வாறு வரி செலுத்துவதாயிருந்தால் எந்தவிதமான கணக்குகளும் காட்டத் தேவையில்லை என்றும் ஒரு ஷரத்து கூறுகிறது. மேலும், தங்களுக்கு அதிகமான வரி விதிக்கப்பட்டுவிட்டது என்பதற்காக அவர்கள் அப்பீல் செய்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பத்திலும் அவர்கள் கணக்குகளைக் காட்ட வேண்டிய தில்லை. உதாரணமாக, தான் 10,000 ரூபாய்க்குத் தான் வியாபாரம் செய்வதாகவும், 15,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்பவர்களின் "க்ருப்"-பில் தான் சேர்க்கப்பட்டு அதிகமான வரி தனக்கு விதிக்கப்பட்டுவிட்டதாகவும் ஒரு வியாபாரி புகார் செய்தால், அப்போது அவர் கணக்குகளைக் காட்ட வேண்டியதில்லை. அப்போது அவர் தாம் வாங்கிய பில்களைக் காண்பித்தால் போதும். அந்த பில்களைப் பார்த்து, அவர் எவ்வளவு ரூபாய்க்கு வியாபாரம் செய்யக்கூடும் என்பதும், அவருக்கு என்ன விகிதத்தில் வரி போட வேண்டும் என்பதும் நிர்ணயிக்கப்படும். மசோதா சட்டமானால், மொத்தம் 25,000 ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் செய்பவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள். 1956–57-ல் விற்பனை வரி கட்டியவர்களில் 10,000 ரூபாய்க்கு மேற்பட்டு 25,000 ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் செய்தவர்கள் 30,570 பேர்கள். ஆகவே ஏராளமான வியாபாரிகளுக்கு விற்பனை வரிக் கணக்குத் தொல்லையிலிருந்து நிவாரணமளிப்பதற்கு மசோதா வகைசெய்கிறது. 25,000 ரூபாய்க்கு மேற்பட்டு வியாபாரம் செய்பவர்கள் கணக்குகள் காட்டித் தான் ஆகவேண்டும். கணக்குகள் வைத்துக்கொள்வது சங்கடமாக இருக்கிறதென்று அவர்கள் சொன்னால் சர்க்கார் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை.

விற்பனை வரி கொடுக்காமல் சர்க்காரை வியாபாரிகள் ஏமாற்றாமலிருக்கும்படி செய்வதற்கு மசோதாவில் வகைசெய்யப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில், அவ்வாறு ஏமாற்றுபவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டத்தில் வகைசெய்ய வேண்டுமென்று டாக்டர் லோகநாதன் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர், தம்முடைய ரிப்போர்டின் இறுதியில் "**Greater power should be granted to departmental officials to check movement of goods in lorries and boats and to check consignments by Railway. A Special Intelligence and Inspection Section should be created**" என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால் யாராவது வரியே கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டு போக வேண்டும் என்று நினைக்கிறவர்களுக்கு நாம் சாதகமாக சட்டம் செய்ய வேண்டும் என்று சொல்வது சரியாகாது. சட்டத்திலிருந்து ஏமாற்றி வரியே கொடுக்காமல் தப்பித்துக் கொள்கிறவர்கள் மீது நாம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதற்கான அதிகாரங்கள் நாம் சட்டத்தின் மூலமாக கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைப் பிரயோகிப்பதில் தவறு இருந்தால், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமேயல்லாது, அதற்காக சட்டத்திலேயே இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்வது சட்டத்திற்கும் ஒரு நியாயமான நிர்வாகத்திற்கும் உகந்தது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்தபடியாக நீதி நிர்வாகப்பிரிவினை. வரிவிதிப்பு செய்கின்றவர்கள் ஒரு பகுதியாகவும் அப்பீல் முதலியனவைகளைக் கேட்கின்றவர்கள்

மற்றொரு பகுதியாகவும் இருக்கவேண்டும் என்பதை டாக்டர் லோகநாதன் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அவர்கள் சிபார்சை சர்க்காரும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நாம் வைத்திருக்கும் முறைப்படி **Appellate Tribunal**-இல் ஒருவர் ஜில்லா ஜட்ஜாக இருக்க வேண்டும். மற்றொருவர் என்ன தகுதியுடன் இருக்கவேண்டுமென்று சர்க்கார் சொல்லுகிறதோ அத்துடன் இருக்க வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால் ஒருவராவது **Accountant-Member** ஆக இருக்கவேண்டுமென்பது அபிப்பிராயம். அவர்களுக்குத் தகுந்த யோக்கியதாம்சங்களை விதிகள் மூலமாக நிர்ணயித்துவிட்டால் ஒருவர் **Accountant-Member** ஆக இருக்கலாம். நாம் பிரிவினை செய்து கொடுத்து இருப்பதானது நிர்வாகத்தில் இருக்கின்றவர்கள்வேறு, அப்பீல்கள் முதலியன கேட்பவர்கள் வேறு என்ற நிலைமையை உண்டாக்கியிருக்கிறோம்.

எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர், "ஏன் டாக்டர் லோகநாதன் அவர்களுடைய அறிக்கை பூராவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை?" என்று கேட்டார்கள். அவர்களுடைய அறிக்கையை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வதாய் இருந்தால் நான்கூட அதற்குத் தயாராயிருக்கிறேன். ஆனால் டாக்டர் லோகநாதன் அவர்கள் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். கைத்தறி மீது ஒரு சதவிகிதம் வரிவிதிக்கவேண்டும் என்று அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்த அவர்களுடைய சிபார்சை எவ்வளவு பேர்கள் இந்த நாட்டிலே ஆதரிப்பார்கள் என்று புரியவில்லை. இந்தவிதமாக அவர்கள் சிபார்சு செய்திருக்கும் பல திட்டங்கள் சரியான முறையில் மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிற காரணத்தால்தான், அவைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா, ஏற்றுக் கொள்ளமுடியாதா, என்று பரிசீலனை செய்தோம், அப்படிப் பரிசீலனை செய்ததில் டாக்டர் லோகநாதன் அவர்கள் செய்த சிபார்சை ஏற்றுக் கொள்ளாதது இரண்டு அல்லது மூன்று விஷயங்களில் தான். எந்தெந்த இடங்களில் வரி விதிக்கலாம், எந்த மாதிரி போட்டால் நமக்கு வரிப் பணம் குறையாமல் இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ அதைத் தம்முடைய சிபார்சுகளில் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லிய எல்லா விதத்திலும் நாங்கள் வரி விதிப்பதற்குத் தயாராயில்லை. ஏனென்றால் இந்த மாகாணத்தில் இருக்கும் சூழ்நிலையை உத்தேசித்து, அவ்வாறு கைத்தறிக்கு முதற் கொண்டு வரி விதிப்பது சரியானதல்ல என்று கருதி அம்மாதிரி செய்யவில்லை.

இன்றைக்கு எழுபது, எழுபத்தைந்து பண்டங்களுக்கு பலமுனை விற்பனை வரியிலிருந்து ஒருமுனை விற்பனை வரியாக மாற்றுவதன் மூலம் ஓரளவு நமக்கு வருவாய் குறையும். காரணம் என்னவென்றால், இரண்டு சதவிகிதம் என்று இருந்தாலும் பலமுனை விற்பனை வரி மூலம், அந்தப் பண்டம் இரண்டு அல்லது மூன்று கைக்கு மாறுவதனால் நமக்கு கிடைக்கும் வருமானம் ஆறு சதவிகிதமாகும். ஆனால் இன்றைக்கு அவர்கள் பல பண்டங்களுக்குச் சிபார்சு செய்திருப்பது மூன்று சதவிகிதம்தான். அவர்கள் சிபார்சு செய்திருக்கும் முறையிலே நாம் வரி விதித்தால் வந்து கொண்டிருக்கிற வருமானமும் குறைந்து விடும். ஆகவே எந்த அளவு ஒருமுனை வரி விதிப்பு முறையில் அதிகமான பண்டங்களைச் சேர்க்க வேண்டுமென்று அங்கத்தினர்கள் சொன்னார்களோ அதில் எந்த விதமான மாறுதலும் செய்யாமல், எழுபது, எழுபத்தைந்து பண்டங்களுக்கு பலமுனை விற்பனை வரியிலிருந்து ஒரு முனை விற்பனை வரியாக மாற்றி விட்டோம். அம்மாதிரி மாற்றியதின் காரணமாக நம்முடைய வருவாய் ஓரளவு குறையும். அப்படிக் குறையும் தொகையை ஈடு செய்வதற்காக இப்பொழுது இருக்கும் நிலைமையையே நீடித்து வைக்கவேண்டும் என்று 2 சதம் என்று மற்ற பண்டங்களுக்கும் வைத்திருக்கிறோம்.

சென்ற பட்ஜெட் விவாதத்தின்போது 1 சதம் ஆக உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியைக் குறைத்தோம். அவ்வாறு குறைத்தபடியே இன்றைக்கு மீண்டும் இருக்கவேண்டும் என்று தான் சொல்லிவியிருக்கிறோம். எதையும் அதிகப்படுத்த வில்லை.



மூன்றாவதாக, காய் கறியைப் பற்றி. காய் கறிகளை வியாபாரம் செய்கிறவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரையிலும் வரி இல்லை. ஆனால் அதற்குமேல் வியாபாரம் செய்கிறவர்களுக்கு உதாரணமாக கொத்தவால் சாவடியில் வியாபாரம் செய்கிறார்களே அவர்களைப்போல் உள்ளவர்கள் ஆயிரம், பத்தாயிரம், ஐம்பதாயிரம் என்று வியாபாரம் செய்கிறார்களே. அவர்களுக்கும் கருணை காட்டவேண்டும், கருணைக் கிழங்கு விற்கிறார்கள் என்பதற்காக, என்று சொன்னால், அந்த வாதத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்வது சுலபமாக இருக்காது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, **slab rate** ஐயாயிரத்திற்கு ஏன் குறைக்கப்பட்டது என்று கனம் அங்கத்தினர் ஒருவர் கேட்டார். அதற்குக் காரணம், வரி விசாரணைக் கமிஷன் **(Taxation Enquiry Committee)** செய்த சிபார்சுதான். இந்திய நாட்டுக்குப் பூராவும் வரியைப் பற்றி பரிசீலனை செய்து, ஒரு சிறிய அளவு அவர்களுக்கு வரி விதிக்கவேண்டும். என்றுசொன்னார்கள். மாதத்திற்கு ஐந்நூறு என்று சொன்னால், அதிகமாக இருக்காது என்று நான் நினைக்கிறேன். அவர்கள் சிறிய அளவு வரி விதிக்கவேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். அந்த அடிப்படையிலே தான் ஐயாயிரம் ரூபாய்க்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது ஏதோ சர்க்கார் முடிவு என்று கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. பொறுக்குக் கமிட்டியில் நாம் ஆலோசனை செய்யும்போது கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தை நன்றாகக் கலந்துகொள்ளுவோம் என்பதை மாத்திரம் இப்பொழுது நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஆடம்பரப் பொருள்களுக்கு அதிகமாக வரி விதிக்கவேண்டுமென்று நண்பர் சின்னதுரை அவர்கள் சொன்னார்கள். அவர் சொல்லுகிறபடி ஆடம்பரப் பொருள்களுக்கு நாம் மாத்திரம் அதிகமாக வரி விதித்தால், அந்த வியாபாரம் நம் நாட்டைவிட்டு புதுச்சேரி போன்ற இடங்களுக்குத் தஞ்சம் புகுந்துவிடும். இம்மாதிரிதான் சர்க்கரை மீது நாம் சமீபத்தில் விதித்த வரி நமக்குப் பெரிய நஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. சர்க்கரை மீது விதித்த வரியின் காரணமாக சர்க்கரை எல்லாம் புதுச்சேரிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து நமது ராஜ்யத்துக்கு கொண்டு வரப்பட்டு வேண்டிய தஸ்தாவேஜைத் தயார் செய்ததால் நமக்கு கிடைக்க வேண்டிய வரி 33 சதம் முதல் 50 சதம் வரை வராமல் போய்விட்டது என்று கணக்கிடப்பட்டது.

மோட்டார் கார்களோ, ரேடியோக்களோ பிற ராஜ்யங்களிலே குறைவான விலைக்கு விற்றால், நாம் அந்த ராஜ்யங்களிலே போய்தான் வாங்க ஆரம்பிப்போம். உதாரணமாக, நெல்லூரிலோ புதுச்சேரியிலோ ரேடியோக்களுக்கு வரி 7 சதவிகிதம் என்று இருந்து, நம் ராஜ்யத்தில் 15 சதவிகிதம் என்று சொன்னால், எல்லோரும் அந்த கிடங்களுக்குச் சென்றுதான் வாங்கிக் கொள்வார்கள். நம் ராஜ்யத்தில் விற்பனை ஆகாது. அதோடு, நமக்குக் கொஞ்சநஞ்சம் வரும் வரியும் வராமல் போய்விடும்.

ஆடம்பரப் பொருள்களுடைய வியாபாரம் மாகாணத்திலிருந்து மாகாணம் கவ்விக்கொண்டு போவதைத்தடுக்க வேண்டும் என்பதற்காக எல்லா நிதி அமைச்சர்களும் டில்லிக்கு அழைக்கப்பட்டு, அங்கே அவர்கள் கூடிப் பேசி, எல்லா மாகாணங்களிலும் ஒரேவிதமான விகிதாசாரம்தான் வரி விதிக்கப்படவேண்டுமென்று ஏகோபித்து முடிவு செய்து, அந்த முடிவின்படி ஆடம்பர பொருள்கள் விஷயத்தில் 7 சத விகிதம்தான் எல்லா மாகாணங்களும் வரி விதிக்கவேண்டும் என்ற முடிவை நாமும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதன்மூலமாக நம்முடைய ராஜ்யத்திற்கு வர வேண்டிய வருமானம் பிற ராஜ்யங்களுக்கோ, ஒரு ராஜ்யத்தின் வருமானம் இன்னொரு ராஜ்யத்திற்கோ போகாமல் தடுக்கமுடியும். ஆகவேதான் இன்றைக்குச் சில பண்டங்களுக்குப் பொதுவாக எல்லா ராஜ்யங்களிலும் ஒரேவிதமான வரி என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த வரி விதிப்பின்கீழ்தான் நண்பர் சின்னதுரை அவர்கள் சொன்ன பலவிதமான ஆடம்பரப் பொருள்களும் வருகின்றன.

[Sri R. Venkataraman] [12th March 1958

அடுத்தபடியாக, செக்யூரிடி கேட்பதைப்பற்றி நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். இது **non-resident dealers** களிடமிருந்துதான் வசூல் செய்யப்படுகிறது. நம்முடைய ராஜ்யத்தில் இருப்பவர்களிடமிருந்து செக்யூரிடி கேட்பதற்கில்லை. முன்பணம் (அட்வான்ஸ் பேமெண்ட்) எப்போதும் கொடுக்கவேண்டும். வருமான வரியிலே கூட நம்முடைய வருமானத்துக்கு "அட்வான்ஸ் பேமெண்ட்" கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விற்பனை வரியிலும் அட்வான்ஸ் பேமெண்ட் என்பது எப்போதும் உள்ள முறைதான். செக்யூரிடி போன்றவை **non-resident dealers**-ஐப் பொறுத்தவரையில்தான் என்று செய்யப்பட்டிருக்கிறது.

12–20 p.m. அடுத்தபடியாக பால் பவுடரைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பால் பவுடர்கள் சாதாரணமாக தயாரிக்கப்படும் வஸ்துக்களில் ஒன்று. அதை அதிகமாக நம் நாட்டுக்குத் தருவிக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. நம் நாட்டில் இன்னும் அதிகமாக பால் உற்பத்தியைச் செய்வதற்கு நாம் முயற்சித்தாக வேண்டும். ஆகவே இயற்கைப் பாலுக்கு 1 சத விகிதம் வரியும், பால் பவுடர் போன்ற செயற்கைப் பாலுக்கு 3 சத விகிதம் வரியும் போடுவதன் மூலம் இயற்கைப் பால் உற்பத்திக்கு அதிகச் சலுகை ஏற்படும் சந்தர்ப்பம் உண்டாகிறது.

இங்கே சொல்லப்பட்ட மற்ற பல விவரங்களை எல்லாம் நாம் ஆலோசனைக் கமிட்டியில் விவாதித்துக் கொள்ளலாம் என்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக ஒன்று. டாக்டர் லோகநாதன் அறிக்கை வெளிவந்து ஒரு மாதகாலமாகிறது. இந்த ஒரு மாதகாலத்தில் சாதாரணமாக விற்பனை வரி இலாகாவின் அமைச்சர் என்ற முறையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்: இந்த அறிக்கையில் பல குறைபாடுகள் இருந் திருந்தால் இதை மாற்ற வேண்டும், அதை மாற்றவேண்டும் என்பதாகப் பல புகார்கள் எங்களுக்கு வந்திருக்கும். ஆனால் இவ்விஷயமாக எனக்கு வந்த கடிதங்கள் மிகவும் குறைவு. அதனால் இந்த யாதாஸ்தில் கண்டுள்ளவற்றை வியாபாரிகளும் பெருவாரியாக ஏற்றுக்கொள்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். ஏன், இதுவரையிலும் பத்திரிகைகளிலும் சரி, இதர வர்த்தக சங்கங்களும் சரி பெரிய புகார்களாக எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் இந்த வரித் திட்டத்தை நாம் பரிசீலனை செய்யும்போது யார் சாட்சியம் கொடுக்க விரும்புகிறார்களோ அவர்களைச் சாட்சியம் கொடுக்கச் சொல்லலாம்.

அடுத்தபடியாக சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. இந்த ஆலோசனை கமிட்டி கூடுவதற்கு முன்னால் அதுவும் கூடும். அதுவும் இந்த மசோதாவைப் பரிசீலனை செய்யும். இந்த மாதிரியாகப் பல பரிசீலனைக்கு உட்பட்ட பிறகே நாம் தயாரித்து நிறைவேற்றப்படப்போகிற மசோதா நிச்சயமாக அதிக நன்மையை அளிக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அதிக அளவில் இந்த மசோதாவைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று சொல்கிறவர்கள். நம்முடைய வருமானத்தைக் குறைத்துக் கொண்டாலும் பாதகம் இல்லை என்ற முறையில் அப்படி யோசனை சொல்ல முடியுமே தவிர வேறு எந்தமுறையிலும் சொல்வதற்கில்லை. நமது ராஜ்யத்திற்கு இப்போது வருகிற வருமானத்தில் குறைவு ஏற்படக் கூடாது என்பதும், இதனால் அதிகமான மக்களுக்கு நன்மை ஏற்படவேண்டும், சிறிதும் பாதகம் ஏற்படக் கூடாது என்பதையும் கருத்தில் கொண்டு பார்ப்போமேயானால், பெரிய அளவுக்கு எதிர்ப்பைத் தருகின்ற மசோதாவாக இது இல்லை, அதிக அளவுக்கு திருத்தப்படவேண்டிய மசோதாவாகவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கடுமையாக இதைப்பற்றிப் பேசினார்கள். வரி அதிகரித்துவிடுகிறது என்றார்கள். இல்லை, இப்போது இருக்கக் கூடிய மொத்த வருமானம் எவ்வகையிலும் அதிகரிக்காது



12th March 1958] [Sri R. Venkataraman]

என்பதை நான் எடுத்துச் சொன்னேன். முறை கடுமையாகச் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முறை சுலபமாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்பதை பல ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினேன். எனவே சபை ஒருமுகமாக என்னுடைய பிரேரேபணையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

With these words, Sir, I move—

"That the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958) be referred to a Select Committee consisting of the following Members, with instructions to report by the 5th April 1958."

1. The Hon. Sri R. Venkataraman,
2. ,, C. Subramaniam,
3. Sri P. G. Karuthiruman,
4. ,, C. R. Ramaswami,
5. ,, R. Srinivasa Iyer,
6. ,, A. Nesamony,
7. ,, R. Subramaniam,
8. ,, V. Sankaran,
9. ,, G. Annamalai Muthuraja,
10. ,, A. S. Subbaraj,
11. ,, V. S. Manickasundaram,
12. ,, **R. Krishnasami Naidu,**
13. ,, M. Kalyanasundaram,
14. ,, M. P. Subramaniam,
15. ,, P. S. Chinnadurai,
16. ,, M. D. Ramasami,
17 ,, T. S. Ramasami Pillai, and
18. ,, S. B. Adityan.

MR. SPEAKER: Is the hon. Member, Mr. Palanisami withdrawing his amendment?

SRI N. K. PALANISAMI: ஐந்தாம் தேதிய யாதாஸ்து வந்துவிடு மானால் இந்த பட்ஜெட் கூட்டத்திற்குள்ளாக இதை நிறைவேற்றி ஏப்ரல் 1-ந் தேதியில் இருந்தே புது முறையை அமலுக்குக் கொண்டுவரவேண்டு மென்பது எங்கள் நோக்கம். அந்த மாதிரியாகச் செய்வதன் மூலம் வியாபாரிகளுக்குக் கஷ்டம் இல்லாத நிலைமை ஏற்படும். ஓரளவு உடனடியாக நிவாரணம் கிடைக்கும். இதை சீக்கிரமாக இந்த செஷன் கூட்டத்திலேயே நிறைவேற்றும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Is the hon. Member withdrawing his amendment?

SRI N. K. PALANISAMI: கனம் அமைச்சர் அவர்கள் சாட்சியம் எல்லாம் விசாரிக்கப்படும் என்று சொல்கிற காரணத்தினால் நான் என்னுடைய . . . .

MR. SPEAKER : Either say you press or say you withdraw. You cannot add any condition.

SRI N. K. PALANISAMI : I withdraw.

SRI K. S. SATTANATHA KARAYALAR : I also withdraw my motion.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958) be referred to a Select Committee consisting of the following Members, with instructions to report by the 5th April 1958."

1. The Hon. Sri R. Venkataraman,
2. ,, C. Subramaniam,
3. Sri P. G. Karuthiruman,
4. ,, C. R. Ramaswami,
5. ,, R. Srinivasa Iyer,
6. ,, A. Nesamony,
7. ,, R. Subramaniam,
8. ,, V. Sankaran,
9. ,, G. Annamalai Muthuraja,
10. ,, A. S. Subbaraj,
11. ,, V. S. Manickasundaram,
12. ,, R. Krishnasami Naidu,
13. ,, M. Kalyanasundaram,
14. ,, M. P. Subramaniam,
15. ,, P. S. Chinnadurai,
16. ,, M. D. Ramasami,
17. ,, T. S. Ramaswami Pillai; and
18. ,, S. B. Adityan.

The motion was put and carried.

MR. SPEAKER : Under rule 98 of the Assembly Rules, I nominate the Hon. Sri R. Venkataraman to be the Chairman of the Committee.

(3) THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1958 (L.A. BILL NO. 8 OF 1958).

THE HON. SRI V. RAMIAH : Sir, I move—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958) * be taken into consideration at once."

This Bill seeks to replace the Madras Ordinance No. II of 1958, which was promulgated by the Governor on the 25th January 1958, for extending the life of the Madras Essential Articles Control and

* Published in the Fort St. George Gazette, dated 10th March 1958.



Requisitioning (Temporary Powers) Act, 1949, which expired on the 25th January 1958, for a further period of 5 years, i.e., up to the 25th January 1963.

2. The Restriction and Control, Freezing, Surcharge, etc., Orders relating to electricity have been continued in the State under the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, the life of which has been extended from time to time. Although the power schemes included under the First Five-Year Plan have added an additional installed capacity of 1,10,200 K.W. to the State Grid, bringing the total installed capacity to 2,56,700 K.W., the existing power demand in the State is very much ahead of the power supply available in the State. The Government and the Madras State Electricity Board are doing everything in their power to meet this situation as quickly as possible, and it is expected that the generation in our power systems will more or less reach parity with the demand by the time all the power schemes included in the Second Five-Year Plan have been completed and commissioned in a few years' time. It is therefore essential, in the meantime, to continue in force, wherever necessary, the existing controls on electricity supply to ensure the most economic use of the available power in the best interests of the public.

3. The Government have therefore decided to replace the Ordinance No. II of 1958 and keep alive the provisions of the Act for a further period of five years from the 26th January 1958. The Government have also decided for the sake of uniformity to extend the provisions of the Act to the transferred territory, that is, the Kanyakumari district and the Shencottah taluk of Tirunelveli disrtict, and to repeal the corresponding law including the Travancore-Cochin Electricity Supply Surcharge Act, 1955, in force in those areas. The Bill seeks to give effect to this decision also.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958) be taken into consideration at once."

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I am not going to make any speech. For the sake of clarification, I want to raise a point. I want to know from the Hon. Minister on how many occasions extension of the life of the Act was resorted to in the past and whether the same conditions which warranted such extension will continue for five more years. I hope he will answer my point when he replies to the debate.

MR. SPEAKER : I suppose no other hon. Member wants to speak. The Hon. Minister will reply.

[12th March 1958

THE HON. SRI V. RAMIAH: We extended the life of the Act on two occasions in the past. In my introductory speech, I said that a further extension of the life of the Act was required for five years more. Our projects are coming up as scheduled and after this period of five years, we may not require the Act. Further, we are thinking of bringing in a comprehensive Bill covering all matters connected with the supply of electricity and when it comes, all provisions contained in this Bill will merge in that. I do not think we will require this Act beyond five years.

MR. SPEAKER: The question is—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958) be taken into consideration at once."

The motion was put and carried.

Clauses 2, 3 and 4 were separately put and carried.

Clause 1 and Preamble were put and carried.

THE HON. SRI V. RAMIAH: Mr. Speaker, Sir, I move—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958) be passed."

MR. SPEAKER: The motion is—

'That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958) be passed".

12-30 p.m. SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, எலக்ட்ரிஸிட்டி உற்பத்தி இன்னும் அதிகரிக்கும்வரையில் கட்டுப்பாடு இருக்கும் என்று சொல்லியிருக்கிறது. விவசாயிகளுக்கு இரவு காலங்களில் கொடுக்கப்படுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது, மில்களுக்கு கொடுக்கப்படுவதில் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. அவர்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு கொடுக்கப்பட்டு வருகிறது. அதைக் குறைக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதற்குப்பதிலாக, பெரிய மில் முதலாளிகள் வைத்துக்கொண்டிருக்கும் அவர்களின் சொந்த ஜெனரேட்டர்களை ஓட்டி அவர்களது தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதோடு, தங்களுக்கு கிடைக்கும் லாபத்தில் கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டும். சர்க்காருக்கு தேவையான சமயத்தில் பிறர் இடம் இருக்கும் செதிகளைக்கூட எடுத்துக்கொண்டு நமது தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும். இதை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஓரளவு மில் சொந்தக்காரர்கள் மீது கட்டுப்பாடு விதித்து, அவர்களின் தேவை போக, அவர்களிடம் இருந்து எடுத்து விவசாயத்தைக் காப்பாற்ற, இப்போது இருக்கக் கூடியதைத் தகர்க்காமல் பகல் நேரத்திலும் எல்லோருக்கும் மின்சாரம் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, ஐந்து வருஷங்களுக்கு இந்த அதிகாரம் நீடிக்கப்படவேண்டுமென்று இருக்கிற இந்த மசோதாவை நான் ஆட்சேபிக்கவில்லை.



12th March 1958]

THE HON. SRI V. RAMIAH: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது, எப்பொழுது நம் மின்சார நீர் நிலயங்களில் தண்ணீர் குறைகிறதோ அப்பொழுது ஏற்படக்கூடிய நெருக்கடியில் நாம் ஒரு கட்டுப்பாடு வைக்கவேண்டியது அவசியம் என்கிறார்கள். அவர்கள் கூறக்கூடிய யோசனை, முதலாளிகளிடம் இருக்கும் இயந்திரங்களை அவர்களது தேவைக்குப் போக விவசாயத் துறையில் உள்ளவர்களுக்கு கிடைக்கச் செய்யவேண்டும் என்பதாகும். அதை நான் கவனிக்கிறேன். இன்று நம் மின்சார விஸ்தரிப்பு போய் கொண்டிருக்கும் முறையில், நமக்கு வேண்டிய மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. விவசாயத்திற்கு இப்பொழுதும் மின்சாரம் கொடுத்துவரப்படுகிறது. மின்சார குறைவினால் விவசாயத்திற்கு பாதகம் ஏற்படாது என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அங்கத்தினர் சொன்ன யோசனையை நான் கவனிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இந்த மசோதாவை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1958 (L A. Bill No. 8 of 1958) be passed."

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS CO-OPERATIVE SOCIETIES (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 4 OF 1958).

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 4 of 1958) [a] be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த "கோவாபரேட்டிவ் சொஸைட்டீஸ்" அமெண்ட்மெண்ட் பில், 1958 (எல். ஏ. பில் நம்பர் 4 ஆப் 1958) யை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று பிரேரேபிக்கிறேன். கோவாபரேட்டிவ் சொஸைட்டிகளில், இன்று யாராவது சிப்பந்திகள் தங்களுடைய ஊதியத்தில் இருந்து, அல்லது சம்பளத்தில் இருந்து பணம் வசூல் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், அந்த சிப்பந்திகள் கையெழுத்து போட்டு அந்த நிர்வாகத்தில் இருக்கிறவர்கள் ஒத்துக்கொண்டால்தான் அந்தப் பணம் வசூலித்துக் கொடுக்கப்படுகிறது. சிப்பந்திகள் மாத்திரம் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் அங்கத்தினராய் இருந்துகொண்டு அந்த நிர்வாகத்திடமிருந்து தாங்கள் பட்டிருக்கிற கோவாப்பரேட்டிவ் கடனுக்கு மாதாமாதம் வசூலித்துக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் சொன்னால், கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிக்காரர்கள் நிர்வாகத்திலிருந்து அதை வசூலிக்க அதிகாரம் இப்பொழுது இல்லை. இதனால் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளில் அதிகமாக சிப்பந்திகள் சேர பெரிய தடையாயிருக்கிறது. இந்தத் தடை நம் ராஜ்யத்தில்தான் இருக்கிறது. பிற ராஜ்யங்களில் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிஸ் சட்டம் திருத்தப்பட்டு அவ்வாறு சொஸைட்டிகளுக்கு சேரவேண்டிய கடனை கொடுக்க வேண்டுமென்று, அங்கத்தினரின் வருவாயிலிருந்து, என்று கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டால் அவ்வாறு நிர்வாகத்தில் உள்ளவர்கள் கழித்து கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளுக்கு கொடுக்கவேண்டும். அதையொட்டி, நம் ராஜ்யத்தில் இருக்கிற சிப்பந்திகள் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளில் அதிகமாக சேரவும் நாட்டில் பெருவாரியாக சொஸைட்டிகள் வளர்வதற்கும் உதவியாயிருக்கும் என்று கருதி இந்த திருத்த மசோதாவை இந்த சபையின் முன்னால் பிரேரேபிக்கிறேன்.

---

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 15th March 1958.

[12th March 1958

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 4 of 1958) be taken into consideration.".

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே,
இந்த மசோதாவானது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். தொழிலாளர்கள்
தங்கள் விருப்பப்படி கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் வைத்துக்கொள்
வதில் முதலாளிகளின் தலையீடு கொஞ்சம் அதிகரிக்கிறது. தொழில்
சங்கம் வைப்பதில் எப்படி முதலாளிகள் பிளவு ஏற்படுத்துகிறார்களோ
அப்படியே கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் வைப்பதிலும் முதலாளி
கள் தலையிட்டு தொழிலாளர்களை பிளவுபடுத்துவதற்கும் கோவாப்பரேட்
டிவ் சொஸைட்டியில் இருந்து கிடைக்கும் வசதிகளை கொடுப்பதில் பாகுபாடு
செய்து தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்கப் பார்க்கிறார்கள்.
அப்படிப் பார்க்கும்போது, இப்படி கட்டாயம் அவர்கள் வசூலித்தாகக்
வேண்டும் என்று வரக் கூடிய மசோதா தொழிலாளர்களின் உரிமையை
பாதுகாப்பதாக இருக்கும் என்கிற அடிப்படையில் நான் இதை ஆதரிக்கி
றேன். அதே நேரத்தில், இன்னொரு யோசனையும் கூற விரும்புகிறேன்.
சில முதலாளிகள் இரண்டு சொஸைட்டிகளையும் தூண்டி விடுகிறார்கள்,
என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர
விரும்புகிறேன். வேறு சிலர் இதுபற்றிய சம்பவங்கள் அவரது கவனத்
திற்கு கொண்டுவந்திருக்கக்கூடும். இப்போது நம் சென்னை நகரிலே
சில சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கிறது. அதிலும் பத்திரிகை முத
லாளி ஒருவர் செய்வது வருத்தத்தை அளிக்கிறது. தொழிலாளர்கள்
சுதந்திரமாக ஒரு கோவாப்பரேடிவ் சொஸைட்டி வைத்துக் கொள்ள
இடம் கொடுக்காது, 750 சிப்பந்திகள் இருக்கும் இடத்தில், அவர்கள்
தாங்கள் விரும்பும் ஒரு சொஸைட்டியை வைத்துக்கொள்ள முயர்ச்சி
செய்துகொண்டிருக்கும்போது, இவர்கள் ரகசியமாக இன்னொரு சொஸைட்டி
வைத்துக்கொண்டு அதற்கு அங்கீகாரம் கொடுத்துவிட்டோம், அதன் மூலந்
தான் வசூலிப்போம், நீங்கள் அதிகம் பேர்கள் இருந்தாலும் சரி,
உங்களிடமிருந்து வசூலிக்க முடியாது என்று பெரும்பாலான தொழிலாளி
களின் ஆதரவுள்ள சொஸைட்டிக்கு இடையூறு செய்து வருகிறார்கள்.
முதலாளி என்ற அந்தஸ்து இருந்தாலே முதலாளிதான். அவர்களின்
குணம் மாறுவது எவ்வளவு கஷ்டம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.
இரண்டு சொஸைட்டிகள் இருந்தபோதிலும் இரண்டிற்கும் சம அந்தஸ்து
இருக்க வேண்டுமென்ற முறையில் இந்த அதிகாரம் பிரயோகிக்கப்பட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, டிப்பார்டுமெண்ட் அதிகா
ரிகளைக் குறித்தும் ஓரளவு குற்றம் சொல்லாமல் இருக்க முடியாது. எந்த
சொஸைட்டிக்கு தொழிலாளர்களின் ஆதரவு இருக்கிறது என்று பார்க்கா
மல் தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சியில் ஈடுபடு
கிறார்கள் சிலர். இன்னொரு விஷயம். இதுமாதிரி சொஸைட்டிகளில்
ரெயில்வேக்களால் நடத்தப்படக்கூடிய சொஸைட்டிகளால் ஒரு தொந்தரவு
ஏற்படுகிறது. கோவாப்பரேஷன் இந்த ராஜ்ய சர்க்காரின் விஷயம். நாம்
இயற்றக்கூடிய சட்டம், நம் ராஜ்ய எல்லையில் இருக்கிற மத்திய சர்க்கார்
சிப்பந்திகளுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கவேண்டும். ரெயில்வே
அதிகாரிகள் சம்பந்தப்பட்டமட்டில், இம்மாதிரி பாக்கித் தொகையை
வசூலித்துக் கொடுக்க மறுக்கிறார்கள். தொழிலாளர்கள் சம்மதம் தெரி
வித்தாலும் மறுக்கிறார்கள். ஆகவே, ரெயில்வே தொழிலாளர்கள் சொஸை
ட்டிகள் தடுமாறக் கூடிய நிலையில் இருக்கிறது. முன்பு ரெயில்வேயில்
பலவித வசதிகள் கொடுக்கப்பட்டு வந்தது. சாமான் போக்குவரத்துகூட
இலவசமாக கொண்டுவர வசதி செய்யப்பட்டிருந்தது. கோவாப்பரேட்டிவ்
சொசைட்டிகளுக்கு. தொழிலாளர்கள் தாங்கள் வாங்கும் பொருள்களுக்கு
பில் கொடுத்து விட்டால் போதும். அந்தத் தொகையை அவர்கள் சம்ப
ளத்தில் இருந்து பிடித்து சொஸைட்டிக்கு கொடுத்து வந்தார்கள். ஆனால்
இவைகள் எல்லாம் இப்பொழுது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, இது



12th March 1958] [Sri M. Kalyanasundaram]

சம்மந்தமாக நம் அமைச்சர் அவர்கள், கோவாப்பரேஷனோடு, தொழி
லாளர் அமைச்சராகவும் இருப்பதால் மத்திய சர்க்காரில் இருக்கும் அவர்
களின் சகாக்களுக்கு தெரியப்படுத்தி இந்தக் குறைப்பாட்டைப் போக்கினால்
இந்த மசோதாவிற்கு ஒரு தார்மீக ஆதரவு இருக்கும் என்றும் தெரிவித்து
கொள்கிறேன்.

இந்த சர்க்கார் தனிப்பட்ட முதலாளிகள் சரியாக கொடுக்கவேண்டும் என்று
எப்படி நிர்ப்பந்திக்கிறதோ அதே மாதிரி தங்களுடைய ஊழியர்களுக்கும்
இதே சலுகைகள் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும், அதற்காக இந்த ராஜ்ய
சர்க்காரும் மத்திய சர்க்காரும் முயற்சிக்கவேண்டும். இந்த மசோதா
விற்கு எல்லோருடைய தார்மீக ஆதரவு இருக்கவேண்டுமென்றிருந்தால்
இந்த மசோதாவின்படி சர்க்காரின் கீழ் இருக்கின்ற எல்லா ஊழியர்
களுக்கும் கிடைப்பதற்கு அதிகாரத்தை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. S. SUBRAMANIA GOUNDER : கனம் சபாநாயகர்
அவர்களே, இந்த மசோதாவானது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய
தாக இருக்கிறது என்பது நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசினதிலி
ருந்து தெரிகிறது. இப்போது இருக்கக்கூடிய சிப்பந்திகள் கூட்டுறவு சங்கத்
த்தை எடுத்துக்கொண்டால் அவர்கள் கடன் வாங்கும்பொழுது அவர்
களுடைய சம்பளத்திலிருந்து மாதாமாதம் கொடுக்கிறோம் என்ற முறையில்
அவர்கள் கடன் வாங்கி கொள்கிறார்கள். அதற்காக பத்திரங்களும் எழு
திக்கொடுக்கிறார்கள். ஆனால் அதை மாதாமாதம் சரியாக வசூலித்து
கொடுப்பதில்லை. அதற்காக இந்த ஊழியர்களுடைய சம்பள பட்வாடா
அதிகாரிகள் அதை வசூலித்து கொடுப்பதும் இல்லை. அவ்விதம் வசூ
லித்து கொடுப்பதற்கு சட்டம் இல்லாமல் இருந்தது. இதன் காரணமாக
சிப்பந்திகள் கூட்டுறவு சங்கம் வளர்ச்சி யடையாமல் இருக்கிறது என்று
நிச்சயமாக சொல்லலாம். இப்போது இந்த சட்டத்தில் திருத்தம் வந்ததின்
காரணமாக இந்த ராஜ்யத்தில் சிப்பந்திகள் கூட்டுறவு சங்கங்கள் நல்ல
முறையில் வளருவதற்கு நல்ல மார்க்கம் இருக்கிறது. ராஜ்யத்தில் இருக்கக்
க்கூடிய சங்கங்களுக்கு இது ஒரு நல்ல சலுகை என்று சொன்னால் அது
மிகையாகாது. இப்போது இருக்கக்கூடிய சட்டப்பிரகாரம் ஒரு சிப்பந்தி
கடன் வாங்கினால் அவரால் திருப்பிக் கொடுக்கக்கூடிய சக்தியை பார்த்து
அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு கடன் கொடுக்கிறார்கள். சாதாரண
மாக எத்தனை பங்குகள் வைத்திருக்கிறாரோ அதில் ஐந்து மடங்கு கடனாக
ஒருவருக்கு கொடுக்கிறார்கள். அதோடு அவர் வாங்கக்கூடிய சம்பளம்
மற்றுள்ள ஊதியங்கள் எல்லாம் சேர்த்து எவ்வளவு ஆகிறதோ அதைப்
போல ஆறு மடங்கு கொடுக்கிறார்கள். அதை 30 மாதங்களில்
திருப்பிக் கொடுக்கக்கூடிய அளவில் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல
மாதாமாதம் வாங்கக்கூடிய சம்பளத்தில் 75 சதமானம் சம்பள கடன்
கொடுக்கிறார்கள். இதில் எல்லாம் சேர்ந்து மொத்தத்தில் பணம் கொடுக்
கும்பொழுது சம்பளம் அலவன்ஸ் எல்லாம் சேர்ந்து 50 சதமானத்திற்கு
மேல் வசூல் செய்யக்கூடாது என்ற அளவில்தான் இப்போது சட்டம்
இருக்கின்றது. ஆனால் நண்பர் சின்னத்துரை அவர்கள் 70 சதமானத்திற்கு
மேல் வசூலிக்கக்கூடாது என்ற அளவில் திருத்தவேண்டும் என்று கேட்டி
ருக்கின்றார். அது உண்மையில் ஆச்சரியப்படத்தக்க அளவில் இருக்கிறது
என்று தான் சொல்ல முடியும். இப்போது எல்லாம் சேர்த்து 50 சத
மானம் என்றிருப்பதை கூடுதலாக 70 சதமானம் என்று திருத்துவது
எதற்காக என்று தெரியவில்லை. அதை பொறுத்தவரையில் கனம் டி.எ.ம்
நாராயணசுவாமி பிள்ளை அவர்கள் கமிட்டியிலும் 50 சதவிகிதத்துக்கு
மேல் வசூலிக்கக்கூடாது என்ற முறையில் விவரமாக தெரிவித்திருக்கிறார்
கள். அதைத்தான் ரெஜிஸ்டிரார் அவர்களும் அமல் நடத்துகிறார். 50
சதமானம் என்றிருப்பது தான் சிப்பந்திகளுக்கும் சிலாக்
கியம் என்பதை நண்பர் சின்னதுரை அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். ஆகவே இந்த திருத்தம் அவசியமில்லை என்றும் தெரி
வித்துக் கொள்கிறேன். மற்றொரு திருத்தமும் கொடுத்திருக்கிறார்கள்.

[Sri K. S. Subramania Gounder] [12th March 1958

அதாவது ஸப் கிளாஸ் 2-பி பிரிவில் எம்மாதிரி ரெஜிஸ்டர் வைக்கவேண்டும்
என்று ரெஜிஸ்டிரார் சொல்லக்கூடாது. அரசாங்கம்' தான் செய்யவேண்டும்.
என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் நடைமுறைக்கு உகந்தது அல்ல
என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஏற்ற
வாறு இன்னின்ன புஸ்தகங்கள் வைக்கவேண்டும் என்று ரெஜிஸ்டிரார்
தான் சொல்லவேண்டுமே தவிர அரசாங்கம் சொல்வது சாதாரணமாக
நடக்கக்கூடிய காரியமல்ல, அது நடைமுறைக்கும் ஒவ்வாத காரியம் என்
பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக இம்மாதிரி
சட்டத்தை திருத்துவதின் காரணமாக அதிக பயனைசிப்பந்திகள் அடையக்
கூடும். அதன் காரணமாக சட்டத்தை மாத்திரம் திருத்தினால்
போதாது. சிப்பந்திகள் கூட்டுறவு சங்கத்திற்கு அதிகமான பணம் அர
சாங்கத்திலிருந்தோ அல்லது ரிசர்வ் பாங்க் மூலமாகவோ கொடுப்பதற்கு
அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கி
றேன். இதுவரை சிப்பந்திகள் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகமாக பணம்
வாங்கவில்லை யென்றால் அதற்கு காரணம் இம்மாதிரியான சட்டம் இல்லா
ததுதான். இப்போது அதிகமாக சிப்பந்திகள் அங்கத்தினர்களாக சேர்ந்து
பணம் கடன் வாங்குவார்கள். ஆகவே இம்மாதிரிப்பட்ட சங்கங்களுக்கு
அதிக பணத்தை கொடுக்க ஏற்பாடு செய்யாவிட்டால் இம்மாதிரி திருத்தம்
கொண்டுவந்தும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடும், என்பதை தெரி
வித்துக்கொள்கிறேன். மற்றொன்று கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்
போது குறிப்பிட்டார்கள். சில சிப்பந்திகள் இரண்டு சங்கங்களில் மெம்பர்
களாக ஆய்விடலாம். அதோடு சில இடங்களில் ஒரு தொழிலுக்கு இரண்டு
சங்கங்களும் ஆரம்பித்து விடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். இப்
போது இருக்ககூடிய கூட்டுறவு சட்டத்தின் பிராகராம் ஒரு சிப்பந்தி
இரண்டு கூட்டுறவு சங்கத்தில் மெம்பராக இருக்க முடியாது என்று சந்தே
கத்திற்கு இடமில்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது. நில அடமான பாங்குக்
களில்தான் இவ்விதம் அங்கத்தினராக இருக்க முடியும். ஆகவே இதில்
சந்தேகம் இருக்கவேண்டிய தேவையில்லை. இந்த மசோதாவானது எல்
லோரும் வரவேற்கக்கூடிய முறையில் இருப்பதால் நான் இதை ஆதரித்துக்
கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

12-48 p.m. * SRI R. SRINIVASA IYER : கனம் சபாநாயகர் அவர்களே,
இந்த மசோதாவின் Statement of objects and reasons என்ற
குறிப்பில் சிப்பந்திகள் கூட்டுறவு சங்கத்திற்கு என்று குறிப்பிடப்பட்
டிருக்கிறது. ஆனால் இந்த மசோதாவானது எல்லா சொஸைட்டி
களுக்கும் உபயோகப்படக்கூடியதுதான். தற்போதுள்ள நிலைமையில் கடன்
வாங்கும்போது சம்பளத்திலிருந்து மாதா மாதம் கொடுத்துவிடுவதாக
சொல்லி கடன் வாங்குகிறார்கள். ஆனால் கடன் வாங்குகிறவர்கள் சரியாக
மாதாமாதம் கொடுப்பதில்லை. இதனால் அதிகமாக ஓவர்ட்யூஸ் இருப்பதை
நாம் பார்க்கிறோம். இதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அந்த
வகையில் இப்போது இருக்கிற மசோதாவில் "A Member of a registered
society may execute an agreement in favour of that society"
என்றிருக்கிறது. தொழிலாளர்கள் ஸொஸைட்டிகளை ஏற்படுத்திக்கொண்டு
அதன் பலனை அடையலாம் என்று சொல்லும்பொழுது அந்த நபர்
வாங்குகின்ற சம்பளத்தை நம்பி பிறர் போடுகின்ற டிப்பாஸிட் பணத்தை
வாங்கி கடனாக கொடுக்கப்படுகிறது. சம்பளத்திலிருந்து கொடுப்பதாக
சொல்லி வாங்கிவிடுகிறார்கள். இதற்காக மற்றொரு நபரும் செக்யூரிட்டி
கொடுக்கிறார். சில வேளைகளில் இரண்டு பேருக்குமே சொத்து இல்லா
மல் இருக்கிறது. சில கோஆப்பரேட்டிவ் சொஸைட்டியில் ஒருவர் 500 ரூபாய்
கடன் வாங்கினால், அவருக்கு ஸெக்யூரிட்டி நின்ற நபரும் 500 ரூபாய்
கடன் வாங்கியிருந்தால், அவர்களிடமிருந்து வசூல் செய்ய முடியவில்லை
என்றால் ஐவேஜு இல்லையென்றால் இரண்டும் சேர்த்து 1,000 ரூபாய்
செலவு (write off) எழுத வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஸி.பி.ஸி.
ஆர்டர் 21, ரூல் 40-ன் கீழ் சொத்தில்லை என்று கக்ஷியாடுகிறார்கள்.
ஆனதால் வசூலிக்க முடியாமல் போய்விடுகிறது. சிப்பந்திகள் வாங்கின



12th March 1958] [Sri R. Srinivasa Iyer]

கடனை வசூலிக்க முதலாளி ஒத்துழைத்து வசூலித்துக் கொடுத்தால்
நல்லதுதான். ஆனால் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். இதில்
உத்தேச செக்ஷன் 28 (2)ல்

"If so required by the society by a requisition in writing and so long as such debt or demand or any part of it remains unpaid make the deduction in accordance with the agreement and pay the amount so deducted to the society."

என்றிருக்கிறது. வசூலித்து கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. ஆனால் எந்த சட்டத்திலும் ஒரு ஸாங்ஷன் இருக்கவேண்டும்
இந்த முதலாளிகளால் வசூலித்து கொடுக்கப்படாவிட்டால் என்ன செய்
வது என்று சொல்லப்படவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் சிப்பந்தி
எக்ரிமெண்ட் எழுதி கொடுக்கும்பொழுது, அந்த முதலாளியையும்
சேர்த்து அவரையும் மெம்பராக கருதி ஆர்பிட்ரேஷன் (Arbitration)
முறையில் வசூலிக்கக்கூடிய முறையில் வழி இருக்கவேண்டும். "There can
be no decree without sanction" அவர்கள் வசூலிக்கவேண்டுமென்று இருக்
கிறதே தவிர, வசூலித்துக் கொடுக்காவிட்டால் அவர்களுடைய நிதியிலிருந்து
சொஸைடிகள் வசூலிக்க ஒரு மார்க்கம் இருக்கவேண்டுமென்று நான்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தவிர, 'may excuse' என்று கூறும்பொழுது, அந்த அக்ரி
மெண்ட் தொழிலாளருக்கும் முதலாளிக்கும் ஏற்படும் சந்தர்ப்பத்திலே,
கடனைத் திருப்பிக் கொடுக்க, முதலாளியின் சம்மதத்தின் பேரில் கொடுக்க
வேண்டுமென்று இருந்தால் நல்லது. அப்படி இருந்தால் முதலாளி
யிடமிருந்து சர்க்கார் வசூலிக்கும் முறை நல்ல முறையாக இருக்கும்.
இப்போது எஸ்டேட் லாண்ட் ஆக்டிலே, கடன் வாங்குவதாயிருந்தால்,
சர்க்காரிடமிருந்து கடன் வாங்குவதாயிருந்தால், லாண்ட் ஹோல்டர்ஸ்
பர்மிஷன் பேரில்தான் கடன் கொடுப்பது என்று இருப்பது போல முதலாளி
யையும் சம்பந்தப்படுத்தி அக்ரிமெண்ட் வாங்கினால், அவரும் அந்த அக்ரி
மெண்டுக்குக் கட்டுப்பட்டவர் ஆவார். அந்த முதலாளியின் பேரிலும்
நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பம் ஏற்படும்.

கனம் சின்னதுரை அவர்கள் கொண்டுவந்திருக்கும் ஒரு திருத்தத்திலே
அவர்கள் வாங்கும் சம்பளத்தில் 75 சத வீதத்திற்கு மேல் கடனாக வாங்கிக்
கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். அவர் 7 சத வீதம் என்று
நினைத்தாரோ என்று நினைக்கிறேன். சாதாரணமாக சிப்பந்திகள், 100
ரூபாய் சம்பளம் வாங்கக் கூடியவர்கள், குடும்பம் நடத்துவதே கஷ்டமாக
இருக்கிறது. கனம் சுப்பிரமணிய கௌண்டர் அவர்கள் சொன்னதுபோல,
50 சத வீதமே ஜாஸ்தி. இந்த அக்ரிமெண்ட் ஏற்படுத்துவது அமுலில்
இருக்க வேண்டுமானால், கட்ட வேண்டியது குறைவாக இருந்தால்தான்
பிடித்துக் கொடுக்க முடியும். அவர்களும் வேறு இடத்தில் கடன் வாங்கா
மல் நல்ல முறையில் வாழ முடியும். இந்த பர்ஸெண்டேஜ் சம்பந்தப்பட்ட
வரையில் இப்போது விதித்திருப்பதே நியாயமானதாகும். தவிரவும் அவர்
கள் திருப்பி வசூலித்துக் கொடுக்காவிட்டால் அவர்கள் பேரில் வழக்குத்
தொடர்ந்து வசூலிக்க ஒரு விதி இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு
நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே,
சபை முன்பாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த கூட்டுறவு சொஸைட்டி
களின் திருத்த மசோதாவிற்கு நான் சில திருத்தங்களை ஏற்கனவே
கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தங்களை நான் இங்கே....

[12th March 1958

**MR. SPEAKER :** இப்போது ஜெனரல் டிஸ்கஷன். இந்த மசோ தாவின் மீது பொதுவாகப் பேசலாம். கிளாஸ் பை கிளாஸ் டிஸ்கஷன் வரும்போது அவைகளைப் பிரேரேபிக்கலாம்.

**SRI P. S. CHINNADURAI :** ஏற்கனவே அமுலில் இருக்கின்ற கூட்டுறவு சொஸைட்டி சம்பந்தப்பட்ட சட்டம் அதிக காலத்திற்கு முன்னாலேயே ஏற் படுத்தப்பட்டதாகும். இப்போது மக்கள் சமுதாயத்தில் என்ன வளர்ச்சி இருப்பது கூட்டுறவு மசோதாவில் பல அம்சங்களில் மிக விரிவாக தெரிவிக் கப்பட்டு வந்திருக்கிறது. நம்முடைய நாட்டிலே இப்போது சம தர்ம சித்தாந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த சம தர்ம சித்தாந் தத்திற்கு, கூட்டுறவு இயக்கம் அஸ்திவாரம் என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். இந்தக் கூட்டுறவு மசோதாவானது இவைகளை மனதில் கொண்டு மிக விரிவாகத் தயாரிக்கப்பட்டிருக்குமானால், அதனை நிச்சயமாக நாம் பரிசீலிக்க எடுத்துக் கொள்வதிலே மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருக்க லாம். ஆனால் இப்போது இந்தச் சபை முன்பாக சமர்பிக்கப்பட்டிருக்கின்ற திருத்த மசோதாவானது, அங்கங்கே ஒட்டுப் போடுகிற முறையில் இருக் கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். சமுதாயம் வளர்ச்சி அடைந்து, அதன் எண்ணங்களுக்கு ஏற்றவாறு விரி வானதும், பெரியதானதாகவும் இருக்கிற சட்டையாக இல்லை. ஏற்கனவே இருக்கிற பழைய, சிறிய சட்டைக்கு ஒட்டுப் போடுவதாக இருக்கிறது. இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே, மற்ற அம்சங்களிலே எப்படி ஏக போகம் புகுந்து கொண்டிருக்கிறதோ, அதே போல இந்தக் கூட்டுறவு இயக்கத்திலும் ஏக போகம் புகுந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு சொஸைடிகளில் ஏற் கனவே எப்படியோ நிர்வாகப் பொறுப்புக்கு வந்து விட்டார்கள். அதி லேயே தொடர்ந்து அங்கம் வகித்து வருவதால், சமுதாய வளர்ச்சி எண்ணத்தால் தூண்டப்பட்ட புது அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள் வதற்குப் பல விதமான தடைகள் விதிக்கக்கூடிய நிலைமைகளைப் பார்க்கி ரோம். இன்றைக்குப் பல சொஸைடிகளில் ஏக போகம் இருக்கிறது. ஏற்கனவேயுள்ள சொஸைடி டைரக்டர்கள் அதிலே இருந்து கொண்டிருக் கிறார்கள். இந்த ஏக போகத்திற்கு ஒரு வகையிலே இந்த கூட்டுறவு இலாகா கூட மறை முகமாக ஆதரவு அளிக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன். அதற்குக் காரணம் கூட்டுறவு சம்பந்தமாக விரிவான தொரு கண்ணோட்டம் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு அந்தக் கண் ணோட்டம் ஏற்பட ஒரு வசதியும் அரசாங்கத்தினர் செய்யவில்லை. இதன் விளைவாக இன்றைய தினம் கூட்டுறவு சொஸைடிகளானது அங்கங்கே ஊழல்கள் மலிந்ததாகவும், மக்களுடைய புதிய ஆர்வத்தை பாதிக்கின்ற ஒரு முறையிலே இருந்து குறைகளுக்கு இடம் அளிப்பதாகவும் இருந்து வருகிறது என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இப்போது இந்த திருத்த மசோதா தொழிலாளர் சம்பளத்திலிருந்து அவர்கள் சொஸைடி களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை பிடித்தம் செய்து தர வசதி செய்கிறது. இதில் எனக்கு ஒரு சந்தேகம். கனம் அமைச்சர்கள்தான் அதனைத் தீர்க்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு இறுதியிலே, கோயம்புத்தூரிலுள்ள ராஜலெக்ஷ்மி மில் தொழிலாளர் கூட்டுறவு சொஸைடியில், தொழிலாளர்கள் வாங்கிய பணத்தை அங்கே உள்ள முதலாளிகள், தொழிலாளர்களுடைய சம்பளத்திலிருந்து, தொழி லாளர்களுடைய சம்மதம் இல்லாமலே கூட பிடித்தம் செய்து கொடுப்ப தற்கு முன் வந்தார்கள். கூட்டுறவு இலாகாவினுடைய நிர்ப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு, இந்த திருத்த மசோதா இல்லாத நேரத்திலே கூட தொழி லாளர் சம்மதமில்லாமல், தொழிலாளர்களை நிர்ப்பந்தப்படுத்தி, தொழி லாளர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்துக் கொடுத்தார்கள். அதனால் 8 தினங்கள் கூட ஆலை மூடிக் கிடந்தது. அவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தது. முதலாளிகள் பிடித்துக் கொடுத்து விட்டார்கள். அப்போது இந்த திருத்த மசோதா இல்லை. அந்த திருத்த மசோதா இல்லாதபோது கூட ஆலை நிர்வாகிகள், ஆலை முதலாளிகள், இலாகாவிற்குக் கட்டுப்பட்டு, எந்த ஒரு சட்டத்தின் கீழ் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து கொடுத்தார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள



12th March 1958] [Sri P. S. Chinnadurai]

ஆசைப்படுகிறேன். அதைத் தொழிலாளர்கள் ஆட்சேபித்தார்கள். அமைச் சரிடத்தில் கூட வந்து முறையிட்டுக் கொண்டார்கள். அவர்கள் சார்பாக கோவை பஞ்சாலை சங்கம் கூட முறையிட்டுக் கொண்டது. ஆனால் அதற்கு எந்த விதமான நிவாரணமும் அளிக்கப்படவில்லை. அன்றைக்கு சட்ட மில்லாமலேயே முதலாளிகளுடைய ஆதரவில் நிறைவேறியது. இப்போது இந்தத் திருத்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனைப் பார்க்கும்போது இந்தத் திருத்த மசோதாவானது இதற்காகத்தான், சட்டத் திலே ஏற்கனவே இல்லாமல் இருந்தாலும், வெகு வேகமாகச் சேர்க்க வேண்டும் என்று கொண்டுவரப்படுகிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. சில இடங்களில் முதலாளிகள் பிடித்தம் செய்து கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கலாம். அப்படி ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தது கோவையிலே சில ஆண்டுகளுக்கு முன்னால். அது பின்பு சமரசமாகத் தீர்ந்தது. ராஜ லெக்ஷ்மி மில் சம்மந்தப்பட்டதில் ஒரு பக்கத்தில் கூட்டுறவு இலாகா அதி காரிகள், மற்றொரு பக்கத்தில் தொழிலாளர்கள். இதில் சமரசம் ஏற்பட வில்லை. நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால்தான் இப்போது இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இது குறித்து அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலிலே சொல்வார் என்று எதிர் பார்க்கி றேன். கனம் அமைச்சர் அவர்கள், கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு விரிவான மசோதாவைக் கொண்டு வருவதற்கான முயற்சி இருக்கிறதா, இருப்பதானால் அந்த முயற்சி எப்பொழுது நிறைவேறும் என்று, அவர்களுடைய பதிலில் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். என்னுடைய திருத்தங்களைப் பின்பு பிரேரேபிக்கலாம் என்று சொல்வதனால் அவைகளைக் குறித்து இப்பொழுது ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

**THE HON. SRI R. VENKATARAMAN :** கனம் சபாநாயகர் 1-00 p.m. அவர்களே, இந்தத் திருத்தத்தின் நோக்கம் என்னவென்றால், சிப்பந்திகள் தாங்கள் ஒப்பந்தம் எழுதி, கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத் தால், சிப்பந்திகளின் நிர்வாகிகள் அந்தப் பகுதியை சம்பளத்திலிருந்து வசூலித்துக் கொடுக்கவேண்டுமென்பது தான். அதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், கனம் அங்கத் தினர் கல்யாணசுந்தரம் சொன்னதுபோல், பல இடங்களில், நிர்வாகிகள் அந்த விதமாக வசூல் செய்து கொடுக்க மறுக்கிற காரணத்தால், சிப்பந்திகள் எல்லோரும் கூட்டுறவு சொஸைட்டிகளில் சேருவதற்கும், சிப்பந்திகள் அடங்கிய கூட்டுறவு இயக்கம் வளருவதற்கும் பாதகமாக இருக்கிறது, தடையாக இருக்கிறது. ஆகவே அதைப் போக்கவேண்டும் என்பதுதான் நோக்கம் கனம் சின்னதுரை சொன்னது போல, தோ ஒரு காரணத்திற்காக நான் இந்த மசோதாவைக் கொண்டுவருகிறேன் என்று நினைப்பார்களேயானால், நான் சொன்ன விளக்கத்திலிருந்து அதற்காக இல்லை என்பது தெரியவரும். தவிர, அவர்கள் சொன்ன நோக்கம் இந்த மசோதாவின் மூலம் நிரைவேருது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, ஸ்ரீ சுப்ரமணிய கௌண்டர் அவர்கள் சொன்னது போல், இந்த இயக்கத்திலே நாம் இன்றைக்கு நிர்வாகம் மூலமாக விதி களை எல்லாம் அமைத்திருக்கிறோம். அந்த விதிகளின்படி ஒரு தொழி லாளியின் அடிப்படைச் சம்பளத்திலிருந்து 50 சதவிகிதத்துக்கு அதிகமாக வசூல் செய்ய முடியாதபடி செய்திருக்கிறோம். எல்லாப் பணத்தையும் வசூல் செய்து, தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்று கனம் சின்னதுரை சந்தேகிப்பதற்குக் கூட இடமில்லை. மூன்றாவதாக கனம் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், இந்த சட்டத்திலே, நிர்வாகத்திலிருப் பவர்கள் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் விரும்பிய பொழுது வசூலித் துக் கொடுக்காவிட்டால், அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வழி யிருக்கிறது, அவர்களிடத்தில் வசூலிப்பதற்கு என்ன வழியிருக்கிறது என்று கேட்டார்கள். இதற்கு, கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் சட்டத் திலே 52-வது பிரிவில், பி-பகுதியிலே, நியாயமான முறையில் ஒரு கோவாப்பரேடிவ் சொஸைட்டியினுடைய உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, அதை

[Sri R. Venkataraman] [12th March 1958

நிறைவேற்றுவிட்டால் அது தவறு என்று கண்டிருக்கிறோம். சாதாரணமாக, நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் நியாயமாக சட்டப்படி நடப்பார்கள் என்று நினைப்பது தான் ஒரு சட்டம் கொண்டுவருவதன் அடிப்படை. அவ்வாறு சட்டப்படி நடக்கவில்லை என்று சொன்னால், அதற்தான தண்டனை விதிக்கப்படும் என்று ஷரத்தும் இருக்கிறது. இதையும் மீறி, தண்டனை விதித்தாலும்கூட வசூலிக்கமாட்டோம் என்று யாராவது எந்த விதமான நெருக்கடியை ஏற்படுத்தினால், மீண்டும் சட்டசபைக்கு வந்து மாற்றிக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை ஏற்படும். அந்த நிலைமை ஏற்படாது என்று நினைக்கிறேன். இப்பொழுது சட்டத்தில் கட்டுப்படுத்தி வசூலித்துக் கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை. இப்பொழுது நிர்வாகிகளை வசூலித்துக் கொடுங்கள் என்று கேட்பதற்கு உரிமை இல்லையென்றுதான் சொல்லுகிறார்கள். கனம் சின்னதுரை அவர்கள் விரிவான மசோதா கொண்டுவரவேண்டுமென்று கேட்டார்கள். அது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை. எல்லா விஷயங்களையும் ஆலோசனை செய்து கொண்டு வரவேண்டும். உதாரணமாக, விற்பனை வரிச் சட்டம் 1939-ல் நிறைவேறியது. சென்ற 20 வருஷ காலத்திற்குள் பல தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தச் சட்டமோ 1912-ல் ஏற்பட்ட ஒரு சட்டம். அப்புறம் மாறுதல்கள் வந்திருக்கின்றன. ஆகவே இது அவ்வளவு சுலபமாகச் செய்யக் கூடிய விஷயம் அல்ல. ஸ்ரீ நாராயணசுவாமி பிள்ளை அவர்களின் சிபார்சுகள் எல்லாம் இப்பொழுது சர்க்காரின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. (ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை : இதில் வருமானம் இல்லையென்று சட்டம் கொண்டு வராமல்) வருமானம் இல்லையென்றாலும், சட்டம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தால், அரசாங்கம் சட்டத்தைச் செய்து தான் தீரும். எப்பொழுது வரும் என்று எந்தவிதமான ஒரு உறுதியும் சொல்லமுடியாவிட்டாலும், இப்பொழுது ஸ்ரீ நாராயணசாமி பிள்ளை அவர்கள் செய்திருக்கும் சிபார்சுகள் சர்க்காரின் பரிசீலனையிலிருக்கின்றன. எவ்வளவு சீக்கிரமாக சட்டத்தைக் கொண்டு வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அதைக் கொண்டுவருவதற்கு சர்க்கார் முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ராஜலட்சுமி மில்லைப்பற்றிச் சொன்னார்கள். இதைப் பற்றி சபையில் கேள்வி கேட்டால், எல்லாவிதமான விவரங்களையும் கொடுக்கிறேன். இந்த மசோதாவனது, தொழிலாளர்களும், சிப்பந்திகளும் நல்ல முறையில் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கக் கூடிய முறையிலே இருப்பதனால், இதை எல்லா அங்கத்தினர்களும் ஏகமனதாக ஆதரிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 4 of 1958) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause 2.*

SRI P. S. CHINNADURAI: Sir, I move—

"In line 10 of the proposed new section 28, after the words 'such agreement', add the following words: 'but not more than 75 per cent of the salary or wages' and add the following at the end of sub-clause 1 of the new section: "provided that no reduction shall be made from the amount of bonus payable to the employees."



12th March 1958]

SRI M. KALYANASUNDARAM: I second the amendment, Sir.

இந்த செக்ஷன் தான் இந்த மசோதாவிற்கே பிரதானமானது. இந்த மசோதாவையும், இந்த செக்ஷனையும் ஆதரிக்கக்கூடிய பொழுது சில யோசனைகளையும் சொல்ல விரும்புகிறேன். ஆனால் முதலில் மசோதாவை ஆதரித்துப் பேசக்கூடிய சமயத்தில், ஒரே தொழிலாளி இரண்டு சொஸைட்டிகளில் இருக்கலாமென்று சொல்லுவதாக கனம் சுப்ரமணியக் கௌண்டருக்கு அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். என்னுடைய பேச்சில் அதற்கு இடமில்லை முதலாளிகள், இரண்டு ஸொஸைட்டிகளை வைத்துத் தொழிலாளிகளைப் பிளவுபடுத்தக் கூடாது என்று தான் சொன்னேன். ஒரு தொழிலாளி இரண்டு சொஸைட்டிகளில் அங்கத்தினர் ஆக இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி இருக்கக் கூடாது. ஒரு தொழிலாளிக்கு ஒரே சொஸைட்டிதான் இருக்க வேண்டும். கிரெடிட் சொஸைட்டி ஆக இருந்தாலும் சரி, கோவாப்பரேடிவ் ஸ்டோர் ஆக இருந்தாலும் சரி, ஒன்று தான் இருக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சில இடங்களில் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்த்துவதற்காக எடுத்துக் காட்டினேன். இந்தச் சட்டத்திலே எந்த அளவுக்கு சம்பளத்தைப் பிடிக்கலாம் என்பதை தெளிவாகச் சொல்ல முடியாது என்பதை ஒத்துக் கொள்கிறேன். "Payment of Wages Act"-ன்படி சம்பளத்திலிருந்து பிடிக்க முடியுமே தவிர, முதலாளிகள் விரும்பினாலும் கட்டாயமாகப் பிடித்துவிட முடியாது. இந்த மசோதாவிலே ஒரு தனிப்பட்ட தொழிலாளி இதற்காக ஒப்பந்தம் செய்து கொடுக்கவேண்டும் என்று இருக்கக்கூடிய அம்சம் மிகவும் முக்கியமானது. அதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதுதான் இருக்கக்கூடிய பாதுகாப்பு. தோழர் சின்னதுரை அவர்கள் எடுத்துக் காட்டிய மாதிரி சம்பவங்கள் நேராமல் பார்த்துக் கொள்ளலாம். இந்தச் சட்டம் இருக்குமேயானால், ஒரு தொழிலாளி குறிப்பிட்ட ஒப்பந்தம் செய்து கொடுத்திருந்தால் தான் பிடிக்கலாம், அங்கத்தினர் ஆகச் சேர்ந்துவிட்ட காரணத்தினாலே பிடித்துவிட முடியாது என்பது தெளிவாகிறது. மந்திரி அவர்கள் இதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பிடிக்கக்கூடிய அளவு எவ்வளவு இருக்கலாம் என்பதை, "Payment of Wages Act"-க்கு உட்பட்டு, ஒவ்வொரு தொழிலாளியும் குறிப்பிட்டு இருக்கிற அளவுக்கு பிடித்துத் தரும் வகையில் ஒரு "Provision" இருக்கவேண்டும். அதற்காகத் தயாரிக்க க்கூடிய விதிகளிலேயும், "பாரம்" களிலேயும் எத்தனை சதவிகிதம் சம்பளத்திலிருந்து ஒரு தொழிலாளி பிடித்துக்கொள்ள சம்மதிக்கிறார் என்பதையும் எழுதி வாங்கவேண்டும். எப்படி இருந்தாலும், கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிக்கு 25 சத விகிதம், ஸ்டோருக்கு 25 சதவிகிதம், ஆக மொத்தம் 50 சத விகிதத்திற்கு மேற்படாமல் பிடிக்கும் வகையில் இந்த விதி அமல் நடத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சம்பளம், பஞ்சப்படி என்பதுபோன்று ஒவ்வொரு மாதமும் வாங்குகிற சம்பளத்திலிருந்து தான் பிடிக்க வேண்டுமேயொழிய, "போனஸ்" கொடுக்கக் கூடிய சமயத்தில் பாக்கியிருக்கும் பணத்தைப் பிடிக்கக் கூடாது என்ற யோசனையையும் ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் சொஸைட்டிக்கும் பொறுப்பு ஏற்படுகிறது. கடன் கொடுக்கக் கூடிய சமயத்தில் இந்த விதிகளின்படி கடன் கொடுக்கவேண்டும். அதற்கு மேல் கடன் கொடுக்கக் கூடாது என்ற நிலைமை சொஸைட்டிகளிலும் இருக்க வேண்டும். தனிப்பட்ட முதலாளிகளும், வியாபாரிகளும் தொழிலாளிகளை மிகவும் கடுமையாக நடத்துவதால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். சொஸைட்டிகளை நடத்துவதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். தனிப்பட்ட வியாபாரிகள் தொழிலாளிகளுடைய சிரமத்தைக் பயன்படுத்திக்கொண்டு, கடன் கொடுக்கக்கூடிய ஒரு வசதியையும் வைத்துக்கொண்டு, சம்பளம் கொடுக்கக்கூடிய சமயத்தில் வசூல் பண்ணும் கொடுமையைப் பார்க்கும்பொழுது, இந்த சொஸைட்டிகளில் சில கோளாறுகள் இருந்தாலும் பரவாயில்லை, இவைகள் வளரவேண்டுமென்பதுதான் என்னைப் போன்றவர்கள் நோக்கம். தொழி

[Sri M. Kalyanasundaram] [12th March 1958

லாளிகள் பாதிக்கப்படாத வகையில் இந்தத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். அதற்கான முறையில் இந்த விதிகளை திருத்தி அமைக்க வேண்டும். இந்தத் திருத்தம் அவ்வளவு முக்கியமானது அல்ல. விஷ யங்களைத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்டது. கடைசியில் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் அதை வாபஸ் பெறு வார்கள் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும் நாங்கள் எடுத்துச் சொன்ன விஷயங்களை எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து ஆலோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1-10 p.m. **SRI K. S. SUBRAMANIA GOUNDER :** கனம் சபாநாயகர் அவர் களே, ஸ்ரீ கல்யாண சுந்தரம் அவர்கள் "ஒரு சிப்பந்தி இரண்டு சங்கங்களில் இருக்கிறார்" என்று சொன்னதை நான் தவறுதலாக புரிந்து கொண்டேன். ஆகையால் நான் சொன்னது சரியல்ல என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

ஒரு தொழிலுக்காக ஒரு சங்கம்தான் இருக்கவேண்டும், அதன் முதலாளிதான் ஏற்பாடு செய்கிறார் என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. சாதாரணமாக இம்மாதிரி சொஸைடிகள் எல்லாம் ஏதோ சில காரணங்களால், அரசியல் கட்சிகளில் சிக்கிக்கொண்டு இருக் கின்றன என்பதை ஸ்ரீ கல்யாணசுந்தரம் ஒப்புக் கொள்வார் என்று நான் நம்புகிறேன்.

ஒரு தொழிலுக்கு சிப்பந்திகள் கூட்டுறவுசங்கம் ஏற்படுத்துவதன் காரணமாக முதலாளிக்கு ஏகபோக உரிமை வருவது இல்லை. அந்தச் சங்கம் தொழி லில் சம்பந்தப்பட்டிருக்கும் சிப்பந்திகளாலேயே நடத்தப்படுகிறது. அதே சமயத்தில் சிப்பந்திகள்தான் "ஆபீஸ் பேரர்" களாக இருக்கின்றனர். ஆகை யால் அந்தச் சங்கம் பூராவும் அவர்கள் ஆதிக்கத்திலேயேதான் இருக் கிறது. பணம் வேண்டும் என்றால், முதலாளியைக் கேட்கிறார்கள், இல்லா விட்டால் கூட்டுறவு சென்டிரல் பாங்கிலிருந்தோ, அல்லது கூட்டுறவு ராஜ்ய பாங்குகளிலிருந்தோ கடன் வாங்கிக் கொள்கின்றனர். ஆகையினால் முத லாளிக்கு ஏகபோக உரிமை இல்லை என்று சொல்லவிரும்புகிறேன். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் இந்தப் பிரச்னையில் "ஸ்டோர்ஸ்"-ஐக் கொண்டு வந்து நுழைத்தார்கள். இந்த சொஸைட்டிகளுக்கும் ஸ்டோர்ஸு களுக்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். இந்த ஸ்டோர்ஸுகளும் கூட்டுறவுசட்டத்தின் கீழ்தான் ஆரம்பிக்கப்பட்டவை என்றாலும், வாங்கக்கூடிய கடனைப் பொறுத்த வரை, ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தை விளக்கி விட்டால் நன்றாக இருக்கும்.

சாதாரணமாக இம்மாதிரி பிடித்தங்களை போனஸில் செய்வதில்லை. ஆனால் ஒரு சிப்பந்தி ஏதோ பலகாரணங்களால் கடன்களை கொடுக்க முடியாத போது, அது டிக்ரியாகிவிட்டால் போனஸ் வந்தால் அந்த சமயத்தில் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அம்மாதிரி செய் வதும் தவறு அல்ல என்று நான் கருதுகிறேன். சம்பளத்தில் 50 சத விகிதத்திற்குமேல் பிடிக்கக் கூடாது என்று **Executive Instructions** இருக்கிறது. சில எதிர்பாராத காரணங்களால் போனஸிலிருந்து **Recovery** செய்யவேண்டியிருக்கிறது. சாதாரணமாக செய்யப்படுவது இல்லை. ஆகையால் இந்தத் திருத்தம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். எனக்கு மறு முறை பேச சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** சின்னதுரையின் பேரில் இரண்டாவது திருத்தம் இருக்கிறதே, என்ன செய்யப் போகிறார்?



12th March 1958]

**SRI P. S. CHINNADURAI :** Sir, I move—

"In sub-clause 2 (*b*) of the proposed new section 28 delete the words 'or the Registrar'."

**SRI M. KALYANASUNDARAM :** I second the amendment, Sir.

**SRI P. S. CHINNADURAI :** ஏற்கனவே நான் கொடுத்திருக்கிற முதலாவது திருத்தத்தில் போனஸிலிருந்து பிடித்தம் செய்யக்கூடாது என்ற ஒரு சட்டம் வர வேண்டும் என்று கூறிஉள்ளேன். இது மிகவும் அவசியமானது. போனஸ் தொகையை எதிர்பார்த்து தொழிலாளி காத் திருக்கிறான். அவனுடைய அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்பட வேண்டும் என்று திட்டம் போட்டு கொண்டிருக்கிறான். எந்தக் காரண த்தைக் கொண்டும், கூட்டுறவு சங்கத்தின் கடனாக இருந்தாலும் சரி, ஸ்டோர்ஸ் கடனாக இருந்தாலும் சரி, போனஸ் தொகையிலிருந்து பிடித்தம் செய்யக் கூடாது என்பதுதான் திருத்தத்தின் கருத்து. சாதாரணமாக போனஸ் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுவதில்லை என்றாலும் அப்படிச் செய்வது ஒரு வழக்கமாகவே வந்து விட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சட்டத்திற்கு ஒரு திருத்தம் வரும்போது அதை திட்ட வட்டமாக கூறவில்லையானால், அதனால் கஷ்டம் ஏற்படும். **Payment of Wages Act**-ல், '**Wages**' என்பதற்கு விளக்கம் கொடுக்கும்போது போனஸ் அதன் உள்ளே அடங்கியிருப்பதாக கூறப்பட்டு இருக்கிறது. ஆகையினால்தான் இதை வரையறுத்துவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். மேலும் 75 சத விகிதத்திற்கு மேல் சம்பளத்தில் பிடித்தம் செய்யக்கூடாது என்று நான் குறிப்பிட்டிருக் கிறேன். ஏற்கனவே 50 சத விகிதத்திற்கு மேல் பிடித்தம் செய்யக் கூடாது என்று இருப்பதாக சொன்னார்கள். அனுபவத்தில் அப்படி நடப் பதில்லை. கோயமுத்தூரில் உள்ள மில்களைச் சேர்ந்த ஸ்டோர்ஸ்களில் 100-க்கு 100 சத விகிதம் பிடித்தம் செய்து விடுகிறார்கள். சம்பளம் கொடுக் கின்றபோது "நில்" போடப்பட்டுள்ள செக்குகளே அதிகமாக இருக்கின்றன. (கனம். ஸ்ரீ வெங்கடராமன் குறுக்கீடு) ஆனால் உண்மையில் அப்படித் தான் இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. சட்டத்திற்கு புறம்பாக செய்கிறார்களா, தெரிந்து செய்கிறார்களா, தெரியாமல் செய்கிறார்களா என்பதை மந்திரி அவர்கள் விளக்கம் கூறினால் நன்றாக இருக்கும். அனுபவத்தில் 100-க்கு 100 சதவிகிதம் கடன் பிடித்துக்கொண்டிருக்கிற நிலைமைதான் இருக்கிறது. ஆகையினால்தான் சம்பளத்தில் 100-க்கு 75 சத விகிதத்திற்குமேல் பிடித்தம் செய்யக்கூடாது என்று ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன். தொழிலாளியே 100க்கு 100 பிடித்தம் செய்ய வேண்டும் என்று ஒப்புக்கொண்டாலும் அப்படிச் செய்யக்கூடாது என்பதுதான் இந்தத் திருத்தத்தின் கருத்து. கோவாபரேடிவ் ஸ்டோர்ஸில் சாமான்கள் கடன் கொடுப்பதினால், சம்பளம் பூராவும் அங்கேயே செல வழிக்கப்படுகிறது. சம்பளத்தினத்தன்று ஒன்றும் கையில் இருப்பதில்லை. அதற்குப் பதிலாக சம்பளத் தினத்தன்று ஏதாவது கொஞ்சம் தொகை கையில் இருக்கவேண்டும் என்பதற்காக இந்த திருத்தம் கொண்டு வந்தி ருக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள், எந்தக் காரணத்தைக் கொண்டும் சம்பளத்தில் 50 சத விகிதத்திற்கு மேல் பிடிக்கப்படமாட்டாது என்பதை ஏற்றுக்கொண்டு, அதற்கான விதிகளை ஏற்படுத்தினால், நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்த மாட்டேன்.

அடுத்த திருத்தத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு நான் பேசும்போது இந்த கூட்டுறவு இயக்கம் சம்பந்தப் பட்ட பல விஷயங்களை சரியாக கவனிக்கும் பொருட்டு அதற்கு என்று ஒரு தனி அமைச்சரை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டேன். ஆனால் சர்க்கார்கொண்டு வந்திருக்கும் திருத்தத்தைப் பார்க்கும்போது கொஞ்ச மாக இருக்கும் பொறுப்பைக்கூட கூட்டுறவு ரிஜிஸ்டிரார் அவர்களிடம்

[Sri P. S. Chinnadurai] [12th March 1958

தள்ளிவிட்டு, அரசாங்கம் ஒதுங்கி கொள்ளப் பார்க்கிறதோ என்ற ஐயப் பாடு ஏற்படுகிறது. கூட்டுறவு ரிஜிஸ்டிராருக்கு கொடுக்கக்கூடிய பொறுப்பு சிறியதாக இருந்தாலும் அரசாங்கமே அதை நிர்வகிக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

ஆகையினால் அதன்படி **'or the Registrar'** என்று போடப்பட் டிருக்கும் பதத்தை நீக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்

"(b) The employer or the Officer disbursing the salary or wages shall maintain such registers as may be prescribed by the State Government from time to time."

என்று இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது மாத்திரம் இல்லாமல் அரசாங்கத்திற்குக் கொஞ்சம் பொறுப்பு வரும் என்ற ஒரு நுணுக்கமான விஷயமும் அதில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தத் திருத்தத்தைக்கொண்டு வருவதனால் ரிஜிஸ்த ரார் ஆப் கோவாப்ரேடிவ் சொசைட்டியின், பேரில் நம்பிக்கை இல்லை என்ற காரணத்திற்காக இதை நான் கொண்டு வரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER**: இன்னும் பத்து நிமிஷங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த மசோதா முடியும் வரையில் உட்கார்ந்து இதை முடித்து விட்டு சபையை ஒத்தி வைக்கலாம் என்று நினைக்கிறேன். அதற்கு எல் லோரும் ஆதரவு கொடுப்பார்கள் என்றும் நினைக்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, சில சமயங்களில் நண்பர் சின்னதுரை பேசுவது என்னுடைய மூளைக்கு எட்டுவதற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. சாதாரணமாக தொழிலாளர் கள் கூட்டுறவு ஸ்டோர்களில் பண்டங்களை வாங்கும்போது அதை கடனாக வாங்குகிறார்கள். அந்தக் கடனை திருப்பிக்கொடுக்கவேண்டும்போது அவர் களுடைய சம்பளத்தில் 75 சத விகிதம்தான் பிடித்துக்கொள்ளலாம் என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேல் பிடிக்கக் கூடாது என்றும் சொல்லுகிறார். இப்படிப்பட்ட திருத்தத்தை நாம் ஒத்துக் கொண்டால் அந்த ஸ்டோரையே நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஏனென்றால் அப்படி ஒவ்வொருவரும் கொடுக்காமல் பாக்கி வைத்துக்கொள்வ தாக இருந்தால் அந்த ஸ்டோரையே நடத்த முடியாது. ஸ்டோர்களையெல் லாம் தொழிலாளர்களே பணம் போட்டுத்தான் நடத்துகிறார்கள். அதனால் அதிகப்படியாக பிடிக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல.

அடுத்தபடியாக க்ரெடிட் சொஸைட்டி. அதிலும் ஸ்டோர்ஸ்களில் செய் யப்படுவது போலவே இதில் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதிலிருந்து கடன் வாங்கினாலும் அதை, சம்பளம் வாங்கும் போது சம்ப ளபட்டுவாடா செய்யக்கூடிய அதிகாரியாலேயே பிடித்துக்கொள்ளப்பட வேண்டும் என்று திருத்தம்கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படி இருக் கக்கூடாது, சம்பளத்தில் 75 சத விகிதத்திற்கு மேல் பிடிக்கக்கூடாது என்று கனம் சின்னதுரை அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார். இப்படிப் பட்ட திருத்தங்களை கனம் சின்னதுரை அவர்கள் கொண்டு வருவதைப் பார்த்தால் அவர் கூட்டுறவு இயக்கத்தையே புரிந்துகொள்ளவில்லையோ என்று நினைக்கவேண்டியதாக இருக்கிறது. அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்துதான் கூட்டுறவு சொஸைடிகளை ஏற்படுத்தி, அதன் மூலமாக கடன் பெற்று வருகிறார்கள். அப்படி இருக்கும்போது வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது எல்லாவற்றையும் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளக் கூடாது, சம்பளத்தில் 75 சத விகிதம்தான் பிடித்துக்கொள்ளலாம் என்று திருத்தம் செய்யவேண்டும் என்று சொல்வது சரியல்ல. சாதாரணமாக பத்து ரூபாய் கடன் வாங்கியிருந்தால் $7\frac{1}{2}$ ரூபாய்க்கு மேல் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார். அதன் காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. இப்படியே செய்துகொண்டு போனால் அந்த



12th March 1958] [Sri R. Venkataraman]

கூட்டுறவு க்ரெடிட் சொஸைட்டி நடக்குமா என்பதையும் அவர் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவெண்டும். ஸ்டோரின் பணத்தை அவரவர்களுக்கு தனித்தனியாகப் பிரித்துத்தான் கொடுக்கவேண்டும். கூட்டுறவு நடவடிக் கைக்கு இந்த விதி ஒப்பாது. சாதாரணமாக இப்பொழுது ஒரு விதி இருக் கிறது. சம்பளத்தில் பாதிக்கு அதாவது 50 பர்செண்டுக்கு அதிகமாக கடன் கொடுக்கக்கூடாது என்று வலியுறுத்தி இருக்கிறோம். ஆகவே தங்களுடைய சம்பளத்தில் 50 பர் செண்ட்தான் கடன் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதனால் சம்பளத்தில் 75 பர் செண்டுக்குமேல் பிடிக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல.

அடுத்தபடியாக போனஸ் கொடுப்பதைப்பற்றி ஒரு திருத்தம் கொடுத் திருக்கிறார். சாதாரணமாக ஒருவர் கடன் வாங்கியிருந்து அந்தக் கடனை அவர் மாதாமாதம் கொடுக்காமல் இருந்தால் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு சொஸைட்டிக்கு யாதொரு வசதியும் கிடையாது. அந்தக் கடனை வாங்குவதாக இருந்தால் அவருடைய போனஸைத்தான் பிடிக்கவேண்டியதாக இருக்கிறது. அதையும் பிடிக்கக்கூடாது என்று சொன்னால் கொடுத்த கடன் தொகையை வாங்க முடியாமல் போய்விடும். சொஸைட்டிகள் தொழிலாளர்களால் பணம் போட்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒருவர் கடனைக் கொடுக்காமல் போய் அவருடைய போனஸையும் பிடிக்கக் கூடாது என்று சொன்னால் ஒரு தொழிலாளருக்காக மற்ற தொழிலாளர் களும் நஷ்டமடைய வேண்டியதாக இருக்கும். ஏனென்றால் எல்லா தொழிலாளர்களும்தான் பணம் போட்டு அந்த சொஸைடியை ஆரம் பித்திருக்கிறார்கள். ஆகவே ஒரு தொழிலாளர் தான் வாங்கிய கடனை கட்ட முடியாமல் போய் போனஸ் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அந்த போனஸிலிருந்து அந்தக் கடனை வசூல் செய்து கொள்ளலாம். ஆனால் அந்த போனஸிலிருந்து வசூல் செய்து கொள்ளக்கூடாது என்று சொன் னால் சொஸைட்டிக்கு நஷ்டம் ஏற்படும், அதனால் ஒரு தொழிலாளரின் நடத்தையால் மற்ற தொழிலாளர்களும் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதற்காக இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்தபடியாக ரிஜிஸ்தராருக்கு அதிகப்படியான அதிகாரம் கொடுத் திருப்பதைப்பற்றி ஆட்சேபித்து அதற்கும் ஒரு திருத்தம் கொடுத்திருக் கிறார். ஜனநாயக அடிப்படையில் எவ்வளவு தூரம் அதிகாரங்களைப் பிரித்துக்கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் பிரித்துக்கொடுத்து வரு வதற்குத்தான் இப்படி திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் படி ரிஜிஸ்தராருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பிரித்துக் கொடுத்தால்தான் ஜனநாயக கொள்கைப்படி சரியாக நடத்த முடியும். அப்படி இல்லாமல் எல்லா வேலைகளையும் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்றால், சிறிய காரியங்களையும் செக்ரடேரியட்டிலேயே நடத்தவேண்டும் என்று சொல்லிவிட்டால், செக்ரடேரியட்டில் ஏராளாமான பேபர் வந்து குவிந்துபோய்விடும். பேபரைத்தான் பார்க்கலாமே தவிர அங்கு வேறு எந்த வேலைகளும் நடக்காது. மனிதர்கள் நடமாடக் கூட முடியாமல் அவ்வளவு பேபர் வந்து விடும். அதற்காகத்தான் எந்த அளவில் வேலை களையும் அதிகாரங்களையும் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்ற அடிப்படை யில் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. டீசென்ட்ரலைசேஷன் என்று சொல்லும் அடிப்படையில்தான் அப்படி பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி பிரமாதமாக அதிகாரம் ஒன்றும் கொடுத்துவிடவில்லை. ஆகவே சர்க்காரே எல்லா அதிகாரங்களையும் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்வது சரியாகாது. சாதாரண சிப்பந்திகளுக்கு எந்த அளவில் அதி காரத்தைப் பிரித்துக்கொடுக்க வேண்டுமோ அந்த அளவில்தான் பிரித் துக் கொடுக்கப்பட்டு வருகிறது. எந்த அளவில் பிரித்துக் கொடுத்துக் கொண்டு போகிறோமோ அந்த அளவில் போகப் போக ஜனநாயக அடிப் படையில் வேலைகள் நன்றாக நடைபெறும். முக்கியமான அதிகாரத்தை ஒன்றும் இப்பொழுது அவர்களுக்குக் கொடுத்துவிடவில்லை. சதாரணமாக **day to day** அட்மினிஸ்ட்ரேஷன் என்று சொல்வதுபோல் அந்த

[Sri R. Venkataraman] [12th March 1958

அளவில்தான் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாக பிரித்துக்கொடுக்கவேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று நினைக்கும்போது இப்பொழுது செய்திருப்பது தவறு அல்ல என்பதைச் சொல்லிக்கொண்டு இந்த திருத்தங்களை கனம் சின்னதுரை அவர்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளுவார் என்று நினைக்கிறேன்.

**Mr. SPEAKER :** கனம் சின்னத்துரை அவர்கள் தனது திருத்தங்களை வாபஸ் பெற்றுக்கொள்கிறாரா ?

**Sri P. S. CHINNADURAI :** எனது திருத்தங்களை. வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறேன்.

The amendments were, by leave, withdrawn.

**Clause 2 was put and carried.**

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill 1958 (L.A. Bill No. 4 of 1958) be passed."

**Sri M. KALYANASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாகக் கூடிய சமயத்தில் கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு சில விஷயங்களைக்கொண்டு வருவதற்கு எழுந்து நிற்கிறேன். கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது விரிவான சட்டத்தைக்கொண்டு வருவதற்கு அவசரப்படப்போவதில்லை என்று கூறினார். இப்படிச் சொல்லும்போது சிக்கல் இருக்கக்கூடிய ஒரு மசோதாவை சீக்கிரமாககொண்டு வருவதுதான் சர்க்காருடைய கொள்கையா. சாதாரணமாக வருவாய் வரக்கூடிய மசோதாவாக இருந்தால் அது சிக்கலுள்ளவையாக இருந்தாலும் அதை அரசாங்கம் சீக்கிரத்தில் கொண்டு வருகிறது. ஆனால் வருவாய் இல்லாமல் இருந்து சாதாரணமாக சிக்கல் இல்லாமல் இருந்தால் கூட அந்த மசோதாக்களைக்கொண்டுவராமல் இருப்பது சர்க்காருடைய கொள்கையா என்று கூட நினைக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்த மசோதா சம்பந்தப்பட்ட மட்டில் இதில் சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை. சிக்கல் இல்லாத காரணத்தால் தாமதம் ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். வருவாய் வரவில்லை என்பதற்காக இதை ஒத்திப் போட்டுக்கொண்டு போகக்கூடாது. ஆகவே விரிவான ஒரு மசோதாவை சீக்கிரத்தில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விரிவான சட்டம் கொண்டு வராத வரையில் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு பாதுகாப்பு ஏற்படாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த சபையில் பல முறை ஒரு விஷயத்தைப்பற்றி எடுத்துக்கூறப்பட்டு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு நாள் கனம் மந்திரி அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது தவருக ஒரு விஷயத்தைச் சொன்னார். தவறு இருந்தது அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும். சேலம் மார்க்கெட்டில் சொசைட்டி சம்பந்தமாக ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் போது அப்படிச் சொன்னார். அங்கு தேர்தல் நடைபெற்று புது டைரெக்டர்கள் வந்திருகிறார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார். ஆனால் அங்கு தேர்தல் நடைபெற்றதாகவே தெரியவில்லை. புது டைரெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்படடிருக்கிறார்கள். பழைய டைரெக்டர்கள் ரிடயராகி விட்டார்கள் அதனால் நடவடிக்கை ஒன்றும் எடுப்பதற்கு இல்லை என்று



12th March 1958] [Sri M. Kalyanasundaram]

பதில் சொல்லியிருக்கிறார். இது சரியான பதில் அல்ல. 1956-ம் ஆண்டில் நடந்த குறைபாடுகளைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று தோழர் எம். பி. சுப்ரமணியம் அவர்கள் கேட்டதற்கு இப்படி பதில் சொன்னார்.

**Mr. SPEAKER : I think the Hon. Minister is going to make a statement to-morrow about this.**

**THE HON. SRI R. VENKATARAMAN : Yes I will be making a statement to-morrow.**

**Sri M. KALYANASUNDARAM :** கனம் மந்திரி அவர்கள் ஒரு அறிக்கையை விடுகிறேன் என்று சொல்லுகிறபடியால் அதைப்பற்றி அதிகம் சொல்லாமல் விட்டு விடுகிறேன். ஆகவே இது சம்பந்தமாக துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். நாராயணசாமி பிள்ளை கமிட்டி நல்ல சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியவைகளாக இருக்கின்றன. அவைகளை ஏற்றுக்கொண்டு சீக்கிரத்தில் ஒரு மசோதாவைத் தயாரித்து இந்தச் சபையின் முன் கொண்டு வரவேண்டும். அதையும் இந்தக் கூட்டத்தின் முடிவுக்குள் கொண்டு வரவேண்டும். அதற்குள் கொண்டு வரமுடியாவிட்டாலும் இந்த வருஷ முடிவிற் குள்ளாகவாவது கொண்டு •வருவதற்கு ஆலோசனை செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். அப்படிக் கொண்டு வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I cannot commit myself with regard a any time schedule for the Co-operative Societies Act.

Mr. SPEAKER : The question is—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 4 of 1958) be passed."

The motion was put and carried, and the Bill was passed.

Mr. SPEAKER : நான் இந்த சபையை நாளை காலை 8-30 மணி வரை ஒத்திவைக்கிறேன். **1–30 p.m.**

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules, orders and notifications.*

74. *Notification issued with Memorandum No. 114408-N-2/57-2, Revenue, dated 23rd December 1957 amending the Revenue Department notification S.R.O. No. A. 7612/57, dated 12th December 1957. [Laid on the Table of the House under Section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

75. *Notification issued with G.O.Ms. No. 4256, Revenue, dated 11th November 1957 exempting all sales effected by the Students,*

*messes and canteen, excluding the mess run by a contractor, attached to the Agricultural College Hostel, Coimbatore from the Tax payable under Section 3 (1) of the Madras General Sales Tax Act, 1939. [Laid on the Table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

76. *Notification issued with G.O. Ms. No. 140, Home, dated 20th January, 1958 amending Rule 68 of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

77. *The Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 1 of 1958).*





## APPENDIX I.

[Vide answer to the starred question No. 290 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 12th March 1958, page 172 supra.]

| Year. | Number of beedi factories registered under the Factories Act, 1948. | Number of workers employed in those factories. |
|---|---|---|
| 1949 .. .. .. .. | 30 | 384 |
| 1950 .. .. .. .. | 192 | 4,717 |
| 1951 .. .. .. .. | 115 | 2,264 |
| 1952 .. .. .. .. | 72 | 1,171 |
| 1953 .. .. .. .. | 67 | 2,248 |
| 1954 .. .. .. .. | 49 | 1,608 |
| 1955 .. .. .. .. | 33 | 1,260 |
| 1956 .. .. .. .. | 102 | 2,197 |
| 1957 .. .. .. .. | 49 | 1,458 |

## APPENDIX II.

[Vide answer to starred question No. 294 asked by Sri M. Kalyanasundaram and Sri N. K. Palanisami at the meeting of the Legislative Assembly held on 12th March 1958, page 178 supra.]

[SUBJECT.—*Scheme of bonus to drivers and conductors and technical workers in Madras State Transport Department.*]

(*G.O. Ms. No.* 3164, *Home, dated 13th November* 1956, *and G.O. Ms. No.* 3296, *Home, dated 26th November* 1956.)

### I

### G.O. Ms. No. 3164, Home, dated 13th November 1956.

[Motor Vehicles—Madras State Transport Department—Establishment—Drivers and Conductors—Payment of bonus—Orders.]

1. (i) The Government sanction the payment of a bonus of Rs. 10 (rupees ten only) per mensem to drivers and conductors of

the Madras State Transport Department who earn a total of not less than 90 per cent of the marks specified below :—

| DRIVERS. Condition. (1) | Number of marks. (2) | CONDUCTORS. Condition. (3) | Number of marks. (4) |
|---|---|---|---|
| 1 Completion of scheduled mileage prescribed for the route-calculation to be made on the basis of 22 days of duty in a month except in February when the number of days will be 20. | 60 | 1 Completion of scheduled mileage prescribed for the route-calculation to be made on the basis of 22 days of duty in a month except in February when the number of days will be 20. | 60 |
| 2 Freedom from accidents.. | 20 | 2 No cash discrepancy (Cash discrepancy excess or shortage not exceeding Rs. 2 per mensem not taken into account). | 20 |
| 3 Absence of complaints (*Deduct* 5 marks for each complaint). | 20 | 3 Absence of complaints (*Deduct* 5 marks for each complaint). | 20 |

(ii) The scheme of bonus referred to above is sanctioned for a period of one year from the 1st December 1956;

(iii) The total payment of bonus should, however, be limited to Rs. 5,000 (rupees five thousand only) per mensem, awards being made in the priority of marks obtained;

(iv) The Government direct also that if a Driver or a Conductor receives the bonus continuously for a period of 12 months, he should be given an advance increment in the scale of pay applicable to him and that, in the case of a daily-paid worker who receives the bonus continuously for a period of 12 months, he should be brought on to the monthly cadre as soon as a vacancy occurs irrespective of the rank he holds in the seniority list.

2. The Government sanction also the continuance up to the 30th November 1956, of the scheme of payment of efficiency bonus to drivers and conductors in the Madras State Transport Department last continued in G.O. Ms. No. 1020, Public Works, dated 16th March 1955 and G.O. Ms. No. 1679, Public Works, dated 4th April 1956 respectively, on the same conditions as specified in G.O. Ms. No. 467, Home, dated 8th February 1952 and G.O. Ms. No. 3002, Home, dated 22nd September 1953 respectively.

3. The expenditure should be debited to the relevant sub-heads of appropriation under " XLVI-A—Receipts from Road Transport Schemes—*Deduct* Working Expenses ".

4. The Honorary Director of Government Transport is requested to review the position by October 1957 and to submit a report to Government on the need for the continuance of the scheme sanctioned in paragraph 1 above.

J. M. LOBO PRABHU,
*Secretary to Government.*



## II

### G.O. Ms. No. 3296, Home, dated 26th November 1956.

[Motor vehicles—Madras State Transport Department—Establishment—Technical Workers—Incentive bonus scheme—Sanctioned.]

READ—the following paper :—

From the Honorary Director of Government Transport, letters No. 21011/ML/56, dated 9th August 1956 and No. 21011/ML/56, dated 30th October 1956.

*Order—No.* 3296, *Home, dated 26th November* 1956.

The Government sanction the payment of an incentive bonus to the technical workers at the Bodyguard Lines Depot, the Patullo Road Depot, and the Government Transport Central Workshop, Chromepet, in accordance with the scheme outlined in the annexure to this order with effect from the 1st December 1956. The entire body of workers referred to above should be treated as one consolidated group for purposes of the scheme.

2. The Government direct also that if the workers score the bonus for three months continuously, an additional one per cent may be added for every month of scoring the bonus over the three continuous months, subject to a maximum of 3 per cent.

3. For the purpose of implementing the incentive bonus scheme cited sanction is accorded for the employment of the following staff for a period of six months from the date of employment or until the need ceases, whichever is earlier :—

| *Serial number.* (1) | *Designation.* (2) | *Scale of pay.* (3) | *Number of posts.* (4) |
|---|---|---|---|
| 1 | General Foreman .. .. | 150—10—250 | 1 |
| 2 | Works Clerks .. .. | 35— 2— 55 | 2 |

4. The staff sanctioned in paragraph 3 above will, in addition to their pay, draw the dearness allowance and the house-rent allowance admissible under the orders in force.

5. The expenditure should be debited to the relevant sub-heads of appropriation under " XLVI—A. Receipts from Road Transport schemes—*Deduct* Working expenses ".

6. The Honorary Director of Government Transport is requested to send up to the Government a detailed review of the working of the scheme before it is continued beyond six months.

(By order of Governor)

J. M. LOBO PRABHU,
*Secretary to Government.*

## ANNEXURE.

(1) Incentive bonus scheme for technical workers shall apply to all technical workers from the rank of General Foreman down to cleaners, helpers and fitter mazdoors. The Ministerial staff, watch and ward staff and menials paid from contingencies and casual labour shall not be entitled to the bonus.

(2) This scheme shall be in force for a period of six months initially. The Government reserve the right to modify or cancel the scheme at the end of this period of six months.

(3) A minimum attendance of 22 days shall be required to enable a worker to earn bonus in a month. In the month of February the minimum attendance shall be 20 days.

(4) Any worker who is punished during the month as a result of disciplinary action shall be disqualified for bonus for the particular month in question.

(5) The base line for operational efficiency shall be 75 per cent. By operational efficiency is meant the percentage efficiency of the vehicles handed over as fit for the line computed over the entire month to the fleet strength taken over the entire month. For 75 per cent efficiency; there shall not be any bonus.

(6) For every 1 per cent over and above the operational efficiency of 75 per cent, the workers noted in paragraph 1 above shall be eligible for a bonus of 1 per cent of their basic wage, subject to a maximum of 5 per cent, after taking into account the addition or deduction for breakdowns given in paragraph 7 below. Fractions below ½ per cent shall be ignored; ½ per cent and above shall be reckoned as 1.

(7) The number of breakdowns allowed for every 1,000 miles of operation shall be 1·0. This figure shall be worked out over the total mileage performed for the month and the total breakdowns obtained during the month. If the number of breakdowns is less than 1·0 per 1,000 miles during the month, the difference shall be added to the percentage obtained for operational efficiency. If the breakdowns are more than 1·0 per 1,000 miles, the difference shall be deducted from the operational efficiency; for purpose of breakdowns, the following shall be excluded:—

(*a*) Major and minor accidents.

(*b*) Tyre failures.

(*c*) Shortage of fuel.

(*d*) Spring breakage.

(*e*) Failure of electric or bulb horn.

(*f*) Failure of windscreen wiper and similar maintenance defects, which have nothing to do with the maintenance staff and *which defects did not exist when the vehicles were handed over for line in the morning.*



The following shall be classed as breakdowns affecting bonus:—

(*a*) All engine starting troubles due to defective engine, defective battery, defective self-starter, defect in fuel and ignition system, etc.,

(*b*) Transmission troubles due to clutch gear, universal, joint, differential, etc.,

(*c*) Failure of cooling system,

(*d*) Failure of electrical system,

(*e*) Defects in steering,

(*f*) Defects in brakes, and such other defects which are attributable to bad maintenance.

(The Mechanical Engineer shall be the sole judge whether a defect is attributable to maintenance staff or not.)

The following example illustrates the principle:—

| | |
|---|---|
| Operating mileage for the month .. .. | 1,200,000 |
| Total breakdowns during the month .. .. | 2,400 |
| Number of breakdowns per 1,000 miles .. | 2·0 |
| Number of breakdowns allowed . .. | 1·0 |
| Excess .. .. .. .. .. .. | 1·0 |
| Deduction to be made from operational efficiency. | 1·0 |
| Operational efficiency for the month .. .. | 79 per cent. |
| Percentage of efficiency for calculating bonus .. | 79 — 75 — 1 = 3 per cent. |

### APPENDIX III.

[Vide answer to starred question No. 239 asked by Sri M. P. Subramanian, Sri K. Sattanatha Karayalar and Sri A. Govindasamy at the meeting of the Legislative Assembly held on 12th March 1958, page 186 supra.]

[SUBJECT.—*Progress of the Neyveli Lignite Project.*]

Earth-moving operations are in progress and a total quantity of 1·8 million cubic yards of overburden has been removed up to the end of December 1957. Construction of temporary quarters in the existing campus and of a Railway siding are in progress. The construction of workshop sheds and a field machinery service station has been completed, and structures for housing the pilot briquetting and carbonising plant are being erected. Plans for the construction of quarters in the regular township have been finalized.

Lands required for the Lignite Project are being acquired in stages; the persons displaced on account of such acquisition will be rehabilitated in the Reserve Forest areas given by the Government.

[12th March 1958

The rehabilitation scheme in the Kuppanathan Reserve Forest area was inaugurated by the Chief Minister of Madras on 1st December 1957.

The rehabilitation scheme of a capacity of 250 M.W. is to be financed from out of the 500 million Roubles credit offered by the Government of the U.S.S.R. An agreement has been entered into between that Government and the Government of India. The detailed project report has been drawn up and approved. The detailed specifications are being prepared by experts.

The Government of India have also accorded administrative approval and financial sanction for setting up of a fertilizer plant at Neyveli, subject to credit being available in respect of the foreign exchange requirements of the plant.

The pilot briquetting and carbonizing plant obtained under the T.C.M. Aid has arrived. It will be installed at site before the end of June 1958. After experiments have been conducted on briquetting and carbonizing in the atmospheric and other local conditions at Neyveli and the results studied, a specific project report and specifications for a commercial plant will be drawn up.

## APPENDIX IV

[Vide answer to starred question No. 301 asked by Sri K. Sattanatha Karayalar (on behalf of Sri M. P. Subramaniam) at the meeting of the Legislative Assembly held on 12th March 1958, page 189 supra.]

### PRELIMINIARY REPORT ON BENEFICIATION OF LOW GRADE MAGNETITE FROM SALEM.

Five samples of magnetite (marked HB, MB, LB-A, LB-B & LB-C) each weighing 4 tons, from the (i) higher, (ii) middle and (iii) lower belts respectively of the Kanjamalai hills at Salem, Madras, were received for beneficiation and sintering tests in the Ore-dressing division of the laboratory. The identification marks on the various bags had disappeared by the time they reached Jamshedpur. Consequently, all the five samples had to be mixed for investigation purposes One or two bags of four of the samples, viz., LB-A, LB-B, LB-C and MB, could however be identified and they were kept aside for determining the mineralogical compositions. The sample as received consisted of lumps varying from ½ inch to 4 inches in size. A representative sample of the mixed ore was prepared and a portion crushed to—10 mesh for experimental work. Wet screen analysis of the 10 mesh sample and examination of the various fractions showed that quartz was the



12th March 1958]

principal gangue and magnetite was fairly liberated at about—48 mesh size. The sample as received assayed Fe. 36·5; $SiO_2$ 44·2; $Al_2O_3$ 1·92; Cao. 1·8; Mgo. 0·9; P. 0·09 and Tio. 0·2 per cent.

Dry magnetic separation at a low intensity of the sample at—36 mesh produced a concentrate assaying 60·3 per cent Fe and 14·3 per cent Sio2 with a recovery of 71·9 per cent. Magnetic separation at—48 mesh improved the grade to 61·7 per cent Fe for the same recovery. A preliminary wet magnetic separation of the—48 mesh sample yielded a concentrate assaying 61·0 per cent Fe and 13·3 per cent $SiO_2$ with a recovery of 90·0 per cent Fe.

Further tests are in progress to improve the grade of concentrate by reducing the silica content.

Sintering tests will be taken up after determining the best method of concentrating the ore.

### A PRELIMINARY REPORT OF THE REDUCIBILITY OF SALEM MAGNETITE ORE.

The Reducibility test should be regarded as an essential guide in assessing the suitability of any iron ore for its utilisation in blast furnace or in other iron-making units, either directly or after various agglomerating processes such as sintering, nodulizing, pelletizing, briquetting, etc. The test itself is a complex one because of the many factors that have to be considered in the study of the reducibility of the iron ore such as (i) the inherent reducibility of the ore, (ii) porosity, (iii) size of the ore, (iv) size and shape of the furnace, (v) temperature, (vi) pressure and (vii) velocity of the reducing gas, (viii) gangue materials, etc. The reducibility tests as such are by no means the absolute index of the behaviour of the ores in the reduction furnaces but serve as a fair guide in assessing the different ores. The resutls when compared with certain standard ores that had been utilised sucessfully in the production of iron under well-established processes, however, give a fair idea about the reducibility of the ores.

The relative reducibility test makes it possible to eliminate many factors that are common and with this principle, the effect of size of the particles, temperature and gas velocity alone were considered in the study of the reducibility of Salem magnetite ore. Tests were conducted under similar conditions on uncrushed lumps of Salem magnetite ore and crushed but unconcentrated samples of the ore with hydrogen as reducing agent. Further tests are being carried out at different stages of concentration of the ore.

The Salem magnetite ore contained 36·5 per cent Fe and 44·20 per cent $SiO_2$. Specimen of cubical shape of 1 c m, edge weighing approximately the same weight were prepared by cutting and

[12th March 1958

grinding the lumps of Salem magnetite ore and these were reduced at various temperatures and gas velocities. Tables I and II indicate the results of the tests carried out on the uncrushed ore.

TABLE I.—*Effect of temperature on the rate of reduction of iron ore.*

$H_2$ Gas velocity 900 cc. per minute.

Total time of reduction 70 minutes.

| Temperature° C. | Per cent reduction. |
|---|---|
| 1 700 .. .. ... ... | 50·41 |
| 2 800 .. .. .. .. | 68· 6 |
| 3 900 .. .. ... ... | 47·07 |

TABLE II.—*Effect of rate of flow of hydrogen on the reduction of iron ore.*

| Temperature 900° C. Rate of flow. | Total time of reduction 70 minutes. Per cent reduction. |
|---|---|
| 1 800 c.c. per minute .. ... .. ... | 35·4 |
| 2 900 c.c. per minute .. ... .. ... | 47·7 |
| 3 1000 c.c. per minute ... ... .. .. | 53·08 |

It is observed that the reducibility of the ore increased with increase in temperature up to 800°C., while further increase of temperature reduces the reducibility. An increase in gas velocity promotes the reduction rate at 900°C.

It is also observed that even though both the temperature and gas velocity increased the rate of reduction slightly, the overal per cent reduction never exceeded 70 per cent after 120 minutes. It has been found that uncrushed samples do not give very reproducible results as the different lumps may vary in composition.

The next series of experiments were carried out on the crushed and unconcentrated sample in order to get a homogenous sample. The crushed magnetite ore were made into briquettes with dextrine as a binding agent and samples were prepared from these briquettes. The reducibility tests were conducted with these samples at different temperatures and gas velocities. The test was conducted first on—10 mesh size sample because the entire Salem magnetite ore was crushed to—10 mesh and further concentration were being carried out from these crushed sample. Table III indicates the results obtained on different mesh size and uncrushed ore.



12th March 1958]

TABLE III.—*Effect of mesh size on the rate of reduction.*

Rate of flow of Hydrogen=1,000 c.c. per minute.

Temporature of reduction = 900°C.

Total time of reduction = 70 minutes.

| Mesh size. | Per cent reduction. |
|---|---|
| 1 Lump ore .. .. .. .. .. | 53·08 |
| 2—10 mesh .. .. .. .. .. | 62·0 |
| 3—32+72 .. .. .. .. .. | 77·6 |
| 4—100 .. .. .. .. ... | 55·1 |

It is observed that the reducibility has a maximum value for —32 + 72 mesh sample and that—100 mesh sample has poor reducibility. Table IV indicates the effect of temperature on the reducibility of—32 + 72 mesh samples.

TABLE IV.—*Effect of temperature on the rate of reduction.*

Mesh size—32+72, rate of flow of hydrogen 1,000 c.c. per minute.

Total time of reduction 70 minutes.

| Temperature° C. | Per cent reduction. |
|---|---|
| 1 600 .. .. .. ... .. | 48·5 |
| 2 800 .. ... .. ... .. | 59·8 |
| 3 900 .. .. .. ... .. | 77·6 |
| 4 1000 .. ... .. .. .. | 69·5 |

It is observed that a maximum reduction 77·6 per cent is obtainedd at 900°C. and the total reduction decreased at 1000 C.

It is clearly seen that the optimum mesh size, temperature and gas velocity and all of them have the effect of increasing the rate of reduction in the initial period of 20 minutes of reduction only and thereafter no appreciable difference is observed. This may be due to the high silica content of the ore which might combine with iron to form fayalite and making the further reduction a very slow process. Further experiments are being carried out to confirm these findings.

With these preliminary data on unconcentrated samples, the test results at different stages of concentration will be compared and the improvement in the reducibility of this ore will be observed.

A preliminary experiment conducted at 800°C. and 1,000 c.c. per minute hydrogen gas velocity with the concentrated ore of—32 mesh size analysing 65 per cent Fe and 8·5 per cent $SiO_2$ showed a percentage reduction of 71·99 per cent for 70 minutes and 84·14 per cent after 120 minutes respectively.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, the 13th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

MR. SPEAKER : Question No. 303 . . . The hon Member who put the question is not present. The answer will be printed in the proceedings.

*Community Block Development*

* 303 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether Tirumayam and Kolathur taluks in Pudukkottai Division are proposed to be included in the Community Block Development area; and

(*b*) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) It cannot definitely be stated now as to when exactly these taluks will be taken up for development under the National Extension Service Programme; they will get their turn in due course.

*Reforms in the System of Examination*

* 304 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there are any proposals to introduce any reforms in the present system of examination at all stages of education; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Seminar organized under the auspices of the All-India Council for Secondary Education has made certain suggestions regarding the reorganization of examination and evaluation procedure in secondary schools. The suggestions are being considered by the Director of Public Instruction, but no definite proposals have yet been formulated.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to have *viva voce* for all degree courses?

THE HON. SRI C. SUBRAMANIAM : I don't think, Sir, that *viva voce* will be a substitute for written examination. What is contemplated is to take into account the class records also.

[13th March 1958

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether the examination for the E.S.L.C. in Kanyakumari area is still conducted by the Kerala Government?

MR. SPEAKER : This looks like a separate question.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member may put a separate question.

*Rural dispensaries*

* 305 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of rural dispensaries in the North Arcot district, talukwise together with their place of location;

(*b*) the number of dispensaries in which and the period for which there are no doctors; and

(*c*) the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A statement[a] is placed on the Table of the House.

(*b*) (1) Rural dispensary, Kadaladi, from 25th September 1957.

(2) Rural dispensary, Ponnai, from 6th April 1957.

(3) Rural dispensary, Pattuthakku, from 1st June 1956.

(4) Rural dispensary, Thellar, from 7th October 1955.

(5) Rural dispensary, Vengalathur, from 5th January 1957.

(*c*) Medical practitioners are generally unwilling to accept appointment in rural dispensaries at the existing rates of subsidy paid to them.

SRI A. A. RASHEED : Sir, what are the steps taken to get doctors for these rural dispensaries?

THE HON. SRI M. A. MANICKAVELU : Whatever steps that may be taken would not be fruitful unless the scale of pay is increased.

SRI V. K. KOTHANDARAMAN : ரூரல் டிஸ்பென்சரி
என்று சொன்னால், கிராமத்திலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகள்.
கிராமத்திலுள்ள மக்கள் அதி காலையிலிருந்து பகல் நேரம் வரையில் விவ
சாய வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள். அம்மாதிரி நேரத்தில் மட்டிலும்,
அதாவது காலையில் 7 மணி முதல் 12 மணி வரையில் ஆஸ்பத்திரிகள்
திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. பிற்பகலில் ஆஸ்பத்திரிகள் இடையாது.
இந்த நிலைமையில் இருந்தால் எப்படி கிராமத்திலுள்ள மக்கள் சிகிச்சை
பெறமுடியும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நோயாலே பீடிக்கப்பட்டவர்கள் வேலை செய்யமுடியாது. ஆகையால் காலை நேரத்தில் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு போகலாம்.

[a] Printed as Appendix on page 344 infra.



13th March 1958]

SRI M. KALYANASUNDARAM : இந்த ஜில்லாவில் மட்டுமல்ல, இன்னும் பல ஜில்லாக்களிலும் ஆஸ்பத்திரிகள் பூராவும் மூடப்பட்டிருக்கின்றன என்ற புகார்கள் அடிக்கடி இந்த சபையில் தெரிவிக்கப்படுவதை பார்க்கிறோம். ஆகவே, டாக்டர்களின் வருவாயை உயர்த்தி இன்னும் எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் டாக்டர்களை நியமிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எப்படியாவது இந்த ஆஸ்பத்திரிகளிலெல்லாம் டாக்டர்களை நியமித்து அவைகள் வேலை செய்ய வேண்டும் என்றுதான் உத்தேசம். ஆனால் போதுமான சம்பளம் இல்லாததால் டாக்டர்கள் கிராமங்களுக்குப் போவதில்லை. அதற்கு என்ன, எப்படி செய்வது, சம்பளத்தை எப்படி, எவ்வளவு அதிகப்படுத்துவது, இம்மாதிரியான சிக்கலான பிரச்னைகள் இருக்கின்றன.

SRI S. M. ANNAMALAI : போளூர் தாலூகாவில் வீரளூரில் ரூரல் டிஸ்பென்சரி இருப்பதாக இங்கு பதிலில் கண்டிருக்கிறது. அப்படி ஒன்றும் அங்கு ரூரல் டிஸ்பென்சரி இருப்பதாகத் தெரியவில்லை. இந்த விஷயம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லாமல் இருக்கலாம்.

SRI P. S. SANTHANAM : திருவண்ணாமலை தாலூகாவில் வேட்டவலத்தில் ஒரு மருத்துவ மனை இருந்தும் சில காலமாக அங்கு டாக்டர் இல்லாத காரணத்தை அறிய விரும்புகிறேன்?

MR. SPEAKER : இப்பொழுதுதான் அம்மாதிரி கேள்விக்கு மந்திரியவர்கள் பதிலளித்தார்கள்.

SRI A. VEDARATHNAM : இந்த ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்கள் முழு நேர ஊழியர்கள்தானே ? அப்படியிருக்கும் பொழுது அவர்கள் காலை நேரத்தில் போல மாலை நேரத்திலும் ஆஸ்பத்திரியில் வேலை செய்ய வேண்டியது முறைதானே ? அப்படி இல்லாததற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இவர்களுக்கு சம்பளம் என்று கொடுப்பது ஒரு "ஸப்ஸிடி" தான். அவர்கள் "பிரைவேட் பிராக்டிஸ்" செய்து கொள்ளலாம். ஆகையால் ரூரல் டிஸ்பென்சரி ஒரு வேளை, அதாவது காலையில் மாத்திரம்தான், மத்தியானத்தில் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

SRI M. ALAGIRISAMY : மலைப் பகுதியிலுள்ள ஆஸ்பத்திரிகளில் வேலை செய்து வந்த டாக்டர்களுக்கு பிரத்தியேகமாக மலைப் படி கொடுக்கப்பட்டு வந்ததை சமீபத்தில் நிறுத்திவிட்டது வாஸ்தவமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுபற்றி எனக்கு முன் எச்சரிக்கை வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : வியாதிகளிலே பல விதம் உண்டு. வேலை செய்யக்கூடிய வியாதியும் உண்டு. வேலை செய்யமுடியாத நிலைமையில் இருக்கும் வியாதியும் உண்டு. மேலும் வியாதியஸ்தர்கள் தனியாக வருவதற்கு முடியாது. கூட வேறு யாரையாவது அழைத்துக்கொண்டுதான் சிகிச்சைக்கு வரவேண்டும். ஆகையால் இந்த ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களை வைத்து இரண்டு வேளைகளிலும் இவைகள் வேலை செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி ஆஸ்பத்திரிகளின் வேலை நேரத்தை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய சாதகமான ஆதாரங்களுடன் ஒரு குறிப்பு தயார் செய்துகொடுத்தால், அதை கவனிக்கலாம்.

[13th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னை சுகாதார மந்திரிகள் மகாநாட்டில் கவனிக்கப்பட்டது. மெடிகல் ஸ்டோர் ஸிலிருந்து மருந்துகளை வாங்குவதுதான் நல்லது என்று அந்த மகா நாட்டில் முடிவு செய்யப்பட்டது. ஏனென்ருல், சில சமயங்களில் வெளி யில் மருந்து கிடைக்காத போதுகூட இந்த ஸ்டோர்ஸில் மருந்து கிடைக் கும். இந்த ஸ்டோர்ஸில் குறைந்த விலையிலும் மருந்துகள் கிடைக்கும். ஆனுல், சில சமயங்களில் இந்த ஸ்டோர்ஸில் மருந்துகள் அதிக விலை யிலும் விற்கப்படுகிறது. பல விஷயங்களை கவனிக்கும் போது இந்த ஸ்டோர்ஸில் மருந்துகளை வாங்குவது தான் நல்லது. அனேகமாக எல்லா ராஜ்ய மந்திரிகளும் மெடிகல் ஸ்டோர்ஸ் இருக்க வேண்டுமென்றும், அங்கேயிருந்து தான் மருந்துகள் வாங்க வேண்டுமென்றும் ஒத்துக் கொண்டார்கள்.

SRI P. S. SANTHANAM : சட்டமன்ற உறுப்பினர்களுக் காக லெஜிஸ்லேட்டர்ஸ் ஹாஸ்டலில் திறக்கப்பட்டிருக்கும் மருத்துவ விடுதி யில் அவசியமான மருந்துகள் இல்லை என்றும், வெளியிலிருந்து மருந்து களை வாங்குவதற்கு அங்குள்ள மருத்துவ அதிகாரி கட்டளையிடுகிருர் என்றும் தெரிகிறது. இதைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக் குமா?

MR. SPEAKER : மூலக் கேள்வி, வட ஆற்காடு ஜில்லா யிலுள்ள கிராம வைத்திய சாலைகளைப்பற்றியது ஆகும். அங்கத்தினர் சென்னையிலுள்ள ஆஸ்பத்திரியைப் பற்றிக் கேட்கிருர்கள். இதற்கு எப்படி கனம் மந்திரி இப்போது பதில் சொல்ல முடியும் ?

SRI V. SANKARAN : கிராம வைத்தியசாலைகளில் இஞ்ஜெக்ஷன் மருந்துகள் வாங்கப்படுவதில்லை என்று கனம் அமைச்சர் தமது பதிலில் கூறினுர். இந்த நவீன காலத்தில் இஞ்ஜெக்ஷன் கூடத் தேவை யில்லாமல் அவ்வளவு திடகாத்திரர்களாக கிராம மக்கள் இருக்கிருர் களா ? அப்படியில்லாவிட்டால், வேறு ஏதாவது காரணத்திஞல் இன்ஜெக்ஷன் மருந்துகள் வாங்கப்படவில்லையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இஞ்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிற கிராம மக்கள் இஞ்ஜெக்ஷன் மருந்தை வாங்கிக் கொடுத்தால் கிராம வைத்தியசாலைகளிலுள்ள அதி காரிகள் இஞ்செக்ஷன் போடுவார்கள். ஆஸ்பத்திரியிலேயே இஞ்ஜெக்ஷன் மருந்துகளை வாங்கிக் வைத்திருக்கவேண்டியது அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

SRI P. G. MANICKAM : மருந்து சப்ளைக் கடை அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றனவா அல்லது தனிப்பட்டோரால் நடத்தப்படுகின்றனவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவை மத்திய அரசாங் கத்தால் நடத்தப்படுகின்றன.

*Government Hospital, Polur*

* 307 Q.—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether a lady doctor is employed in the Polur Government Hospital; and

(b) if not, for how long?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir, from 10th January 1958.

(b) The post was vacant from May 1956 and it could not be filled up earlier due to dearth of candidates.



13th March 1958]

SRI A. A. RASHEED : Is there any proposal to revive the L.M.P. course for doctors?

MR. SPEAKER : How can the hon. Member ask this question? The present question is about the employment of lady doctor. I disallow the question.

SRI K. VINAYAKAM : What happened to the lady doctor who was holding the post? Why was not suitable arrangement made for the gap that was created after she left the job?

THE HON. SRI M. A. MANICKAVELU : I have no information, Sir, when, she left the job. But somehow the gap took place. Therefore we were trying our best to fill it up. At last we were able to find a medical practitioner.

SRI K. VINAYAKAM : Do the Government take such an unusual time to fill up the lady practitioner's post in a dispensary?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is very difficult to fill up the gap, Sir.

SRI V. SUBBIAH : தாங்கள் எடுத்துக்கொண்ட ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளிளெல்லாம் லேடி டாக்டர்களைப் போடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்கெங்கே லேடி டாக்டர்கள் இல்லையோ அங்கெல்லாம் ஒரு பெண் டாக்டர் நியமிக்கப்படு வார். ஏற்கெனவே ஆண் டாக்டர் ஒருவர் அங்கே இருப்பார். அங்கெல் லாம் ஒரு பெண் டாக்டரும் நியமிக்கப்படுவார். அதற்கான திட்டம் இருக் கிறது. ஆனுல், பெண் டாக்டர்கள் கிடைக்காததால் சில இடங்களில் பெண் டாக்டர்களை நியமிக்க முடியவில்லை.

SRI K. RAMASUBBU : கிராம ஆஸ்பத்திரிகளை அமைக்கும்போது, இரண்டு ஏக்கர் நிலமும், டாக்டர் வசிப்பதற்கு வாடகையில்லாத கட்டி டமும் கொடுக்க முன்வரும் கிராமத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டு மென்று அரசாங்கம் உத்தரவிட்டதாக எனக்கு நினைவு இருக்கிறது. எந்த கிராம மக்களாவது இரண்டு ஏக்கர் நிலமும் டாக்டர் வசிப்பதற்கு வாடகையில்லாத கட்டிடமும் கொடுக்க முன் வந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்வி, போளூரி லுள்ள ஆஸ்பத்திரியில் உள்ள லேடி டாக்டர் ஸ்தானத்தைப் பற்றியது ஆகும். கனம் அங்கத்தினர் பொதுப்படையாகக் கேள்வி போடுகிருர். கனம் அங் கத்தினர் பெற விரும்பும் தகவலுக்கு தனிக் கேள்வி போட வேண்டு மென்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : பிரசவ ஆஸ்பத்திரிகளிலாவது பெண் டாக்டர்களை நியமிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ? அரசாங்கத்தார் இந்த ஆஸ்பத்திரிகளிலாவது பெண் டாக்டர்களுக்குப் பதிலாக ஆண் டாக்டர்களைப் போடாமல் இருப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : பிரசவ ஆஸ்பத்திரிகளில் அனேகமாக பெண் டாக்டர்கள் தான் இருக்கிருர்கள். சில சிக்கலான கேஸ்களை ஆண் டாக்டர்கள் கவனிப்பார்கள் (சிரிப்பு.)

SRI K. SATTANATHA KARAYALAR : சமீபகாலம் வரை செங்கோட்டை பிரசவ ஆஸ்பத்திரியில் பெண் டாக்டர் இல்லாமலிருந்தது சர்க்காருக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

*Graduate-teachers*

* 308 Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to increase the strength of graduate teachers in—

(i) Government institutions;

(ii) private institutions; and

(iii) B.T. Colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : Presumably the hon. Member refers to the paucity of trained graduate-teachers in secondary schools. To overcome this shortage additional Training Colleges, four under Government and four under private managements have been started in recent years. There is no need to increase the number of graduate-teachers in Training Colleges.

SRI A. VEDARATHNAM : பல பள்ளிகளில் பி.டி. பயிற்சி பெற்றிராத
ஆசிரியர்கள் வேலே பார்க்கிறார்கள். பி.டி. பயிற்ச்சி பெற்றுள்ள பலர்
ஆசிரியர் உத்தியோகத்தை விட்டு விட்டு வேறு உத்தியோகங்களுக்குப் போய்
விடுகிறார்கள். இதன் காரணமாக, அரசாங்கம் அவர்களுக்கு அளித்த
பி.டி. பயிற்சி பள்ளி பிள்ளேகளுக்குப் பயன்படாமல் போய்விடுகிறது. இந்த
நிலேயை மாற்ற அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆசிரியர் தொழிலில்
கிடைக்கும் சம்பளத்தைவிட அதிகச் சம்பளம் வேறு தொழில்களில்
கிடைப்பதால்தான் அவர்கள் ஆசிரியர் தொழிலே விட்டு விட்டு வேறு
தொழில்களுக்குப் போய் விடுகிறார்கள். இந்தப் பிரச்னேயைத் தீர்க்க
ஏதாவது முயற்சி செய்துதான் ஆக வேண்டும். இன்றைய நிலேமையில்
பலர் வேறு உத்தியோகம் கிடைக்காதபோது தான் ஆசிரியர் உத்தியோத்
திற்கு வருகிறார்கள். இந்த நிலேமையை மாற்ற வேண்டியது மிகவும்
அவசியம்.

SRI K. RAMASUBBU : இந்த ஆண்டில் பி.டி. காலேஜ்களில்
மாணவர்களின் வருகை குறைந்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆமாம், இருக்கும் ஸ்தானங்
கள் எல்லாவற்றிக்கும் மாணவர்கள் வந்து சேரவில்லே.

SRI S. LAZAR : பி.டி. பயிற்சி பெற்ற ஸயன்ஸ் பட்டதாரிகள்
கிடைப்பது அரிதாக இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா?
ஸயன்ஸ் பட்டதாரிகளுக்கு மற்ற உத்தியோகங்களில் அதிக ஊதியம்
கிடைப்பதால் அவர்கள் அந்த உத்தியோகங்களுக்குப் போய் விடுகிறார்கள்
என்பதும் சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானல், பி.டி. பயிற்சி
பெற்ற ஸயன்ஸ் பட்டதாரிகளாக இருக்கும் ஆசிரியர்களுக்கு அதிகச்
சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டு வருடங்களுக்கு
முன்பு ஆசிரியர் உத்தியோகத்திற்கு ஸயன்ஸ் பட்டதாரிகள் கிடைப்பது
தான் அரிதாக இருந்தது. இப்போது சரித்திரப்பட்டதாரிகள் கிடைப்பதும்
அரிதாக இருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : போதிய மாண
வர்கள் இந்தக் கல்லூரிகளுக்கு வராத காரணத்தை மந்திரி அவர்கள்
விவரமாகக் கூறுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைவிட அதிக ஊதியம்
கிடைக்கும் வேறு வேலே கிடைக்கிறது என்று தெரியவருகிறது.



SRI A. VEDARATHNAM : பி.டி. காலேஜ்களுக்கு மாணவர்
கள் போதிய அளவு வராமலிருப்பதற்குக் காரணம், மற்ற செகண்டரி
கிரேட் ஆசிரியர்களுக்கு பயிற்சிக் காலத்தில் " ஸ்டைபெண்டு " கொடுக்
கப்படுவது தான். ஆகவே, பி.டி. காலேஜ்களிலும் ஸ்டைபெண்டு
கொடுத்தால், போதுமான ஆசிரியர்கள் கிடைப்பார்கள் என்று அரசாங்
கம் கருதுகிறதா ? அப்படியானல், அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்
படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸ்டைபெண்டு
கொடுக்காத காரணத்தால்தான் பி.டி. காலேஜ்களில் ஆசிரியர்கள்
பயிற்சிக்கு போதுமான அளவு வருவது இல்லே என்று சொல்வது தவறு.
இன்ஜினீரிங் காலேஜிலே ஐந்து வருஷப் படிப்பாக இருந்தாலும், பூராச்
செலவையும் மாணவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும்,
ஏராளமானவர்கள் வருகிறார்கள். அதே மாதிரி, மெடிகல் காலேஜ்
களுக்கும் ஏராளமானவர்கள் வருகிறார்கள். அப்படியிருக்க பி.டி.
காலேஜ்களுக்கு மட்டும் வராததற்குக் காரணம், ஆசிரியர்களாக வேலே
செய்யும்போது போதிய அளவு ஊதியம் கிடைக்காது என்பது தான்.
பயிற்சியின் போது ஸ்டைபெண்டு கொடுத்தாலும், ஸ்டைபெண்டை
வாங்கிக் கொண்டு பி.டி. பரீட்சை " பாஸ் " பண்ணலாம். அதற்குப்
பிறகு அதிக ஊதியம் கிடைக்கக்கூடிய வேறு உத்தியோகம் கிடைத்தால்
அதற்குப் போய்விடுவார்கள்—ஆசிரியர்களுக்குக் குறைவாக சம்பளம்
கொடுக்கப்படுவதால்.

SRI K. ANBAZHAGAN : Bachelor of Teaching. என்ற
முறையில் பி.டி. படித்து, அதற்குப் பிறகு ஆசிரியர் வேலேக்குப்
போகிறார்கள். அப்படி ஆசிரியர்களாக இருப்பவர்கள் மறுபடியும் " பேசிக்
ட்ரெயினிங் " என்பதற்காக ஒன்பது அல்லது பத்து மாதங்கள் அளவுக்கு
அனுப்பப்படுகிறார்கள். இப்படி இரண்டாவது முறை பயிற்சிக்கு அனுப்
பப்படுவதினல் அரசாங்கத்திற்கு வீண் செலவும், ஆசிரியர்களுக்கு வீண்
தொல்லேயும் ஏற்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில துறைகளில்
பயிற்சி பெற்றவர்கள் இல்லேயானல், அவர்களுக்கு மறு பயிற்சி
கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. இதைத் தவிற்க்க தான் ஆதாரக்
கல்வியிலே பயிற்சி பெறக்கூடிய பி.டி. கோர்ஸ் ஏற்பாடு செய்திருக்கி
றோம்—ஒரத்தநாட்டில்.

SRI M. ALAGIRISAMY : கொடைக்கானல் மலேப்பகுதியிலே உள்ள
ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த மலேப்படி நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு வேறு கேள்வி
போட்டால் சௌகரியமாக இருக்கும்.

SRI K. B. S. MANI : இப்படி ஆசிரியர்த் துறையிலே உள்ள
வர்களுடைய பிற்கால வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தால்,
அவர்கள் இந்தப் பயிற்சிக்கு வராமையும், பயிற்சி பெற்று ஆசிரியர் வேலே
யில் அமர்ந்தும், வேறு உத்தியோகத்திற்கு அதிக ஊதியத்தைப் பெறு
வதற்கு போகிறார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கி
ஞர்கள். அப்படிப்பட்ட குறையை இந்த ஆண்டிலேயே போக்க, நாட்டு
முன்னேற்றத்திற்கு ஆசிரியர்கள் முதற்படியாக இருக்கிற காரணத்தால்,
அவர்களுக்கு உடனடியாக சகாயம் செய்ய இந்த அரசாங்கம் இந்த
ஆண்டிலேயே நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கல்வி இலாகாவைப்பற்றி
கல்வி மான்யம் வரும்போது இங்கு விவாதிக்கப்போகிறோம். அப்பொழுது
இந்த நல்ல யோசனேகளேயெல்லாம் அந்தச் சமயத்திலே சொன்னல்,
அதைப்பற்றி கவனிக்கலாம்.

[13th March 1958

**Sri A. V. P. ASAITHAMBI** : "எணி, தோணி, உபாத்தியாயர் ஆகியவர்கள் இருந்த இடத்திலேயே இருப்பார்கள்" என்ற பழமொழி இந்த நாட்டில் இருக்கிறது. அதற்குக் காரணம், அவர்களை முன்னேற்றுவதற்கு நாம் ஒரு நடவடிக்கையும் எடுக்காததுதான். ஆகையால், அரசாங்கம் ஆசிரியர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருவதை கனம் அங்கத்தினர் கொஞ்சம் கவனித்திருந்தால், தெரிந்துக்கொண்டிருப்பார். இன்னும் போதிய அளவு இல்லை என்று ஒப்புக்கொள்ளுகிறேன். தொடர்ந்து அதற்காக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதைப் பரிசீலனை செய்து சர்க்கார் எடுத்துக் கொண்டுதான் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Sri K. VINAYAKAM** : Sir, now that it is clear beyond reasonable doubt that the scales of pay allowed to the L.T.s and B.T.s is less attractive when compared to other professions, will the Government think of the possibility of revising their scales of pay at least from the next academic year?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : I hope hon. Members will keep this in mind when they discuss the question of the salaries of the non-gazetted officers. As a matter of fact there is a good deal of complaint that the non-gazetted officers are not receiving adequate salaries. But compared to the teachers, the non-gazetted officers are getting better salaries and they have also better prospects. Therefore, I hope that instead of all parties agitating for increasing the salaries of the non-gazetted officers, they will first take up the cause of teachers.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Before the Government think of revising the scale of officers, will they at least consider the desirability of removing the disparity between the Government teachers and the local board teachers?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : There is bound to be some difference between the teachers working in local body schools and teachers working in Government schools because teachers in Government schools are liable to be transferred from one place to another throughout the State whereas persons serving in local bodies, particularly municipalities and private institutions, have got the advantage of remaining in the same place and get settled there. Therefore, there is bound to be a bit of difference. It is not the disparity which stands in their way now. It is the inadequacy of the scale itself which is the real obstacle.

**Sri A. VEDARTHNAM** : பி.டி. காலேஜ்களில் போய் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் கூட மறுபடியும் "பேஸிக்" துறையிலே மறுபயிற்சி பெறவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறதினால், அந்த நிலையை மாற்ற அரசாங்கம் என்ன முயற்சி எடுக்கும் ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இப்பொழுது "பேஸிக்" ஒரு பகுதியாக வைத்து, இதற்குப் பயிற்சி கொடுப்பதிலே போதுமான அளவு அந்தப்பயிற்சி ஏற்படுவதில்லை என்றுதான் பாடத் திட்டத்தைப் பார்த்ததிலே தெரியவருகிறது. அதன் காரணமாகத்தான் "பேஸிக்" தனியாக ட்ரெயினிங் கொடுப்பதற்கு தனி காலேஜ் ஒன்று ஒரத்தநாட்டில் "கோர்ஸ்"-ல் ஏற்படுத்தப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புறேன்.



13th March 1958]

**Sri M. JAGANNATHAN** : ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் கனிசமான அளவு உயர்த்துவதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் சென்ற அசெம்பிளியிலும் இருந்தார். அப்பொழுது நடந்த விவாதத்தை அவர் கவனித்திருப்பாரானால், தொகை ஒதுக்கப்பட்டதை தெரிந்துகொண்டிருப்பார். இப்பொழுது அந்தத் தொகை ஒதுக்கப்பட்டதற்கு மேலேயே உயர்த்திக் கொடுக்கப்பட்டிருப்பதையும் கனம் அங்கத்தினர் அறிவார்.

**Sri A. R. SUBBIAH MUDALIAR** : ஹைஸ்கூல்களில் "விவசாயப் பகுதி" ஆரம்பிக்கப்பட்டிருந்தும், அந்தப் பகுதிகளுக்குத் தேவையான விவசாயப்பட்டதாரிகள் (அக்ரிகல்ச்சரல் க்ராட்யூவேட்ஸ்) இல்லாமல் வகுப்புகள் நடத்தத் தாமதப்படுகிறது அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நான் இதைப்பற்றி பட்ஜெட் பொது விவாதத்தின் போதே சொன்னேன். இன்றைக்கு நமக்குப் பல விஷயங்களிலே தடையாக இருக்கக்கூடியது நிதி அல்ல, போதுமான அளவு பயிற்சி பெற்ற ஆட்கள் இல்லாததுதான் இன்றைக்கு பெரும் தடையாக இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்கள் கிடைப்பது மட்டும் அல்ல. இன்றைக்குப் பல இடங்களிலே கம்யூனிடி டெவெலப்மென்ட் ப்ளாக்குகள் புதியதாக ஏற்பாடு செய்யவேண்டுமென்றால், இதைப்போன்றிருக்கக் கூடிய பயிற்சிபெற்ற ஆட்கள் இல்லாத குறைதான் பெருந் தடையாக இருக்கிறது.

**Sri M. D. RAMASAMI** : பி.டி. பயிற்சி பெற்ற உயிர் நிலைப் பள்ளிகளிலே வேலை செய்துவரும் ஆசிரியர்களுக்கு கல்வி இலாகாவில் உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்ற நிலை இருக்குமானால், அதிகமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் பயிற்சிபெற பி.ஏ. படித்த வாலிபர்கள் வருவார்கள் என்று நினைக்கிறேன். இந்த உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இவையெல்லாவற்றையும் பரிசீலனை செய்து, இந்தப் பிரச்னையை எப்படிச் தீர்ப்பது என்பதற்காக எல்லாவற்றையும் இணைக்கக் கூடிய திட்டம் ஏற்படச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

**Sri N. MARUDACHALAM** : கிராமங்களிலே பஞ்சாயத்து போர்டு பள்ளிக்கூடங்களிலே மூன்று உபாத்தியார்கள் வந்தால், இரண்டு உபாத்தியார்களை ஆதாரக் கல்வி பயிற்சிக்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்படி ஆசிரியர்கள் இல்லாத அந்த இரண்டு வகுப்புகளையும் சேர்த்து ஒரு ஆசிரியரே கவனித்துக்கொள்ள வேண்டியிருப்பதால், அந்த இரண்டு வகுப்புகளுக்கும் இரண்டு ஆசிரியர்களைப் போடுவதற்கு அனுமதிப்பார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : மூலக் கேள்வியிலிருந்து இக்கேள்வி எழுவது இல்லை. இருந்தாலும், கனம் அங்கத்தினர் இக்கேள்வியைக் கேட்டுவிட்டதால், பதில் சொல்லுகிறேன். மூன்று மாத காலத்திற்கு இப்பொழுது ஆசிரியர்கள் பயிர்ச்சிக்காக அனுப்பப்படுகிறார்கள். இந்த மூன்று மாதத்திற்குள்ளாக இன்னொருவரைப் போட்டு, அவர் பழகி, பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு மூன்றாலே, பயிற்சிக்குச் சென்ற ஆசிரியர்கள் திரும்பி வந்துவிடலாம். ஆகவே, இந்த மூன்று மாதத்திற்காக புது உபாத்தியரைப் போட்டு பண விரயம் செய்வதற்குப் பதிலாக பயிர்ச்சிக்குச் சென்ற உபாத்தியாயர் திரும்பிவரும் வரையில் காத்திருப்பதே நல்லது.

**Mr. SPEAKER** : 309, 310-ம் எண்ணுள்ள கேள்விகள் இரண்டும் ஒரே மாதிரி இருப்பதால், இவ்விரண்டு கேள்விகளையும் சேர்த்தார்போல் எடுத்துக்கொள்ளலாம்.

[13th March 1958

**Sri A. V. P. ASAITHAMBI** : " எணி, தோணி, உபாத்தியாயர் ஆகியவர்கள் இருந்த இடத்திலேயே இருப்பார்கள் " என்ற பழமொழி இந்த நாட்டில் இருக்கிறது. அதற்குக் காரணம், அவர்களை முன்னேற்றுவதற்கு நாம் ஒரு நடவடிக்கையும் எடுக்காததுதான். ஆகையால், அரசாங்கம் ஆசிரியர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருவதை கனம் அங்கத்தினர் கொஞ்சம் கவனித்திருந்தால், தெரிந்துக்கொண்டிருப்பார். இன்னும் போதிய அளவு இல்லை என்று ஒப்புக்கொள்ளுகிறேன். தொடர்ந்து அதற்காக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதைப் பரிசீலனை செய்து சர்க்கார் எடுத்துக் கொண்டுதான் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Sri K. VINAYAKAM** : Sir, now that it is clear beyond reasonable doubt that the scales of pay allowed to the L.T.s and B.T.s is less attractive when compared to other professions, will the Government think of the possibility of revising their scales of pay at least from the next academic year?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : I hope hon. Members will keep this in mind when they discuss the question of the salaries of the non-gazetted officers. As a matter of fact there is a good deal of complaint that the non-gazetted officers are not receiving adequate salaries. But compared to the teachers, the non-gazetted officers are getting better salaries and they have also better prospects. Therefore, I hope that instead of all parties agitating for increasing the salaries of the non-gazetted officers, they will first take up the cause of teachers.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Before the Government think of revising the scale of officers, will they at least consider the desirability of removing the disparity between the Government teachers and the local board teachers?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : There is bound to be some difference between the teachers working in local body schools and teachers working in Government schools because teachers in Government schools are liable to be transferred from one place to another throughout the State whereas persons serving in local bodies, particularly municipalities and private institutions, have got the advantage of remaining in the same place and get settled there. Therefore, there is bound to be a bit of difference. It is not the disparity which stands in their way now. It is the inadequacy of the scale itself which is the real obstacle.

**Sri A. VEDARTHNAM** : பி.டி. காலேஜ்களில் போய் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் கூட மறுபடியும் " பேஸிக் " துறையிலே மறுபயிற்சி பெறவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறதினால், அந்த நிலையை மாற்ற அரசாங்கம் என்ன முயற்சி எடுக்கும் ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இப்பொழுது " பேஸிக் " ஒரு பகுதியாக வைத்து, இதற்குப் பயிற்சி கொடுப்பதிலே போதுமான அளவு அந்தப்பயிற்சி ஏற்படுவதில்லை என்றுதான் பாடத் திட்டத்தைப் பார்த்ததிலே தெரியவருகிறது. அதன் காரணமாகத்தான் " பேஸிக் " கோர்ஸ் "-ல் தனியாக ட்ரெயினிங் கொடுப்பதற்கு தனி காலேஜ் ஒன்று ஒரத்தநாட்டில் ஏற்படுத்தப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புறேன்.



13th March 1958]

**Sri M. JAGANNATHAN** : ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் கனிசமான அளவு உயர்த்துவதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் சென்ற அசெம்பிளியிலும் இருந்தார். அப்பொழுது நடந்த விவாதத்தை அவர் கவனித்திருப்பாரானால், தொகை ஒதுக்கப்பட்டதை தெரிந்துகொண்டிருப்பார். இப்பொழுது அந்தத் தொகை ஒதுக்கப்பட்டதற்கு மேலேயே உயர்த்திக் கொடுக்கப்பட்டிருப்பதையும் கனம் அங்கத்தினர் அறிவார்.

**Sri A. R. SUBBIAH MUDALIAR** : ஹைஸ்கூல்களில் " விவசாயப் பகுதி " ஆரம்பிக்கப்பட்டிருந்தும், அந்தப் பகுதிகளுக்குத் தேவையான விவசாயப்பட்டதாரிகள் (அக்ரிகல்ச்சரல் க்ராட்யூவேட்ஸ்) இல்லாமல் வகுப்புகள் நடத்தத் தாமதப்படுகிறது அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நான் இதைப்பற்றி பட்ஜெட் பொது விவாதத்தின் போதே சொன்னேன். இன்றைக்கு நமக்குப் பல விஷயங்களிலே தடையாக இருக்கக்கூடியது நிதி அல்ல, போதுமான அளவு பயிற்சி பெற்ற ஆட்கள் இல்லாததுதான் இன்றைக்கு பெரும் தடையாக இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்கள் கிடைப்பது மட்டும் அல்ல. இன்றைக்குப் பல இடங்களிலே கம்யூனிடி டெவெலப்மெண்ட் ப்ளாக்குகள் புதியதாக ஏற்பாடு செய்யவேண்டுமென்றால், இதைப்போன்றிருக்கக் கூடிய பயிற்சிபெற்ற ஆட்கள் இல்லாத குறைதான் பெருந் தடையாக இருக்கிறது.

**Sri M. D. RAMASAMI** : பி.டி. பயிற்சி பெற்ற உயர் நிலைப் பள்ளிகளிலே வேலை செய்துவரும் ஆசிரியர்களுக்கு கல்வி இலாகாவில் உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்ற நிலை இருக்குமானால், அதிகமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் பயிற்சிபெற பி.ஏ. படித்த வாலிபர்கள் வருவார்கள் என்று நினைக்கிறேன். இந்த உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இவையெல்லாவற்றையும் பரிசீலனை செய்து, இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்பதற்காக எல்லாவற்றையும் இணைக்கக் கூடிய திட்டம் ஏற்படச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

**Sri N. MARUDACHALAM** : கிராமங்களிலே பஞ்சாயத்து போர்டு பள்ளிக்கூடங்களிலே மூன்று உபாத்தியார்கள் வந்தால், இரண்டு உபாத்தியார்களை ஆதாரக் கல்வி பயிற்சிக்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்படி ஆசிரியர்கள் இல்லாத அந்த இரண்டு வகுப்புகளையும் சேர்த்து ஒரு ஆசிரியரே கவனித்துக்கொள்ள வேண்டியிருப்பதால், அந்த இரண்டு வகுப்புகளுக்கும் இரண்டு ஆசிரியர்களைப் போடுவதற்கு அனுமதிப்பார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : மூலக் கேள்வியிலிருந்து இக்கேள்வி எழுவது இல்லை. இருந்தாலும், கனம் அங்கத்தினர் இக்கேள்வியைக் கேட்டுவிட்டதால், பதில் சொல்லுகிறேன். மூன்று மாத காலத்திற்கு இப்பொழுது ஆசிரியர்கள் பயிர்ச்சிக்காக அனுப்பப்படுகிறார்கள். இந்த மூன்று மாதத்திற்குள்ளாக இன்னொருவரைப் போட்டு, அவர் பழகி, பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு முன்னாலே, பயிற்சிக்குச் சென்ற ஆசிரியர்கள் திரும்பி வந்துவிடலாம். ஆகவே, இந்த மூன்று மாதத்திற்காக புது உபாத்தியரைப் போட்டு பண விரயம் செய்வதற்குப் பதிலாக பயிர்ச்சிக்குச் சென்ற உபாத்தியாயர் திரும்பிவரும் வரையில் காத்திருப்பதே நல்லது.

**Mr. SPEAKER** : 309, 310-ம் எண்ணுள்ள கேள்விகள் இரண்டும் ஒரே மாதிரி இருப்பதால், இவ்விரண்டு கேள்விகளையும் சேர்த்தார்போல் எடுத்துக்கொள்ளலாம்.

[13th March 1958

SRI A. V. P. ASAITHAMBI : சாதிகளை ஒழிப்பது என்பது அவ்வளவு சுலபமானது அல்ல. அதைப்பற்றி நாம் எல்லோருமே சேர்ந்து ஆலோசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறியதை வரவேற்கிறேன். அதற்கு நாங்கள் எல்லாவகையிலும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம். ஆனால் கூடிய சீக்கிரத்திலேயே நாம் எல்லோரும் கூடி ஆலோசித்தால் அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டும் என்றாலும் அதற்குத்தக்க நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இதற்கான நடவடிக்கையை உடனடியாகக் சர்க்கார் மேற்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காகத்தான் மத்தியில் நான் எழுந்திருந்து பதில் சொன்னேன். எவ்வளவு சீக்கிரம் பண்ண முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பண்ணலாம்.

SRI K. RAMASUBBU : ஹோட்டல் பலகையில் சாதியின் பெயரைக் குறிப்பது சாதி மனப்பான்மையைக் காட்டுவதற்காக அல்ல. குறிப்பாக மலையாளி ஹோட்டல் என்றால் அங்கே அவியல் நன்றாக இருக்கும் எனத் தெரிந்து மக்கள் அங்கே போவதற்கு முடியும் என்கிற காரணத்தினால் அந்த அந்த சாதி தங்களுக்கு சமையலில் இருக்கக்கூடிய சாமர்த்தியத்தை விளம்பரப்படுத்திக் கொள்ளவே அவ்வாறு போடுகிறார்கள் என்பது இல்லையா என்று கேட்கவிரும்புகிறேன்?

MR. SPEAKER : The question is out of order.

SRI A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டலை நடத்துகிறவர்கள் முதலியார்களாக இருந்தாலும், நாடார்களாக இருந்தாலும் பிராமணர்களை வேலைக்குப் போட்டுக்கொண்டு பிராமணாள் ஹோட்டல் என்று பலகை போடுகிறார்களே, இப்படி உரிமை கொண்டாடுவதற்கு நியாயம் உண்டா ? அந்த ஹோட்டல் உரிமையாளர் பேரிலேயே பலகை போடவேண்டும் என்று வற்புறுத்த முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹோட்டல் சொந்தக்காரர்களே அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஸ்ரீ கோவிந்தசாமி இவ்வளவு அக்கறை ஏன் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரியவில்லை. இதிலிருந்து இவர்கள் போராட்டத்தின் கொள்கை தெரிந்துவிடுகிறது. ஒருகால் இதற்கு ஸ்ரீ ராமசுப்பு சொன்ன காரணம் உண்மையாக இருக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*Wells for elementary schools*

* 311 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount provided in 1955–56 and 1956–57 for schemes for the construction of wells for elementary schools; and

(*b*) the amount actually spent in those years?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No separate provision was made in the budget for payment of grant for sinking wells in elementary schools. Schemes for sinking of wells are included in the provision under buildings for elementary schools.

(*b*) 1955–56—Rs. 350.

1956–57—Rs. 950.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற அநேக ஆரம்பப் பள்ளிகூடத்து மாணவ மாணவிகள் குடி தண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அரசாங்கம் அதிகமான தொகையை ஒதுக்கி குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முன் வருவார்களா ?

என்று நம்புறேன்.



13th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பள்ளிகள் எல்லாம் கிராமங்களில் இருக்கின்றன. அந்த அந்த கிராமங்களில் குடிதண்ணீர் வசதி இருந்தால் இவர்களுக்கும் கஷ்டமில்லை. கிராமங்களுக்கு ஒதுங்கி பள்ளிக்கூடம் இருக்கக்கூடிய இடங்களில்தான் குடி தண்ணீர் பிரச்சனை எழுகிறது. அதற்காகத்தான் ரூ. 350 செலவு செய்து 1955–56-ல் ஒரு கிணறும் இவ்வாண்டில் இரு கிணறுகளும் வெட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that many of the wells that are found in the elementary schools are in a state of disrepair and if so, will they issue instructions to attend to the repair of these wells?

THE HON. SRI C. SUBRAMANIAM : Many things are in a state of disrepair. I think particularly the elementary schools need much more attention than what we are devoting now.

SRI S. LAZAR : ஆற்றோரங்களில் பல கிராமங்கள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மாணவ மாணவிகள் ஆற்றில் இறங்கி தண்ணீர் குடிக்கச் சென்று தங்கள் உயிரையே மாய்த்துக் கொண்டு விடுகிறார்கள். இதனால் பல உயிர்ச்சேதங்கள் உண்டாவதால் அதற்கு ஏதாவது மாற்று யோசனை, மாற்று உத்தரவு பிறப்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது குடிதண்ணீர் பிரச்சனை அல்ல.

SRI V. SUBBIAH : பேசிக் விவசாயப் பள்ளிக்கூடங்களிலாவது குடி தண்ணீர் காரணமாக கிணறுகள் வெட்டும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது தனியாக பண்ணைகள் ஏற்படுத்தும்போது தனியாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

SRI N. MARUDACHALAM : ஆதாரப் பள்ளிக்கூடங்களில் ஐந்தாவது தேறியவர்கள் உயர்நிலைப்பள்ளிக்குப் போகும்போது தனிப் பரிட்சை வைக்கப்படுகிறது. இப்படிப் பரிட்சை வைக்காமல் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வார்களா ?

MR. SPEAKER : இந்த உபகேள்விக்கும், மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

SRI V. K. KOTHANDARAMAN : கிராமங்களில் இருக்கக்கூடிய பள்ளிகளில் குடி தண்ணீர் கிணறுகளை வெட்டிக்கொடுக்கும்போது சர்க்கார் பணத்திலேயே வெட்டிக் அந்தக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படுமா ? அல்லது அதற்கும் அந்த கிராமத்தில் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கவேண்டுமா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில் கிணறுகளாக இருந்தபோதிலும், கட்டிடமாக இருந்தபோதிலும் எந்த அடிப்படையில் சர்க்கார் உதவியைக் கொடுப்பது என்பதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி உதவி கொடுக்கப்படுகிறது.

*N.G.Os., Kanyakumari district*

* 312 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the enhancement in the dearness allowance sanctioned to non-gazetted officers during 1957 was given to the non-gazetted officers working in the Kanyakumari district?

[13th March 1958

**The Hon. Sri M. A. MANICKAVELU** : (*a*) Acres 10,328·31.

(*b*) Acres 7,020·22.

(*c*) 3,267.

(*d*) 100.

**Sri P. G. MANICKAM** : மேற்படி கவர்ன்மெண்ட் நிலங்களை ஆக்கிர மித்துக் கொண்டிருப்பவர்களும், சிவாஜிமா செலுத்திக்கொண்டு உழுது வருபவர்களும் பெரும்பாலும் ஜாதி ஹிந்துக்கள் ஆவார்கள். அவர் களுக்கு ஏற்கெனவே நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் இருந்தபோதிலும் இப்படி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்குள்ள ஹரி ஜனங்களுக்கு இந்த நிலங்களை இலவசமாக பட்டா செய்து கொடுக்க சர்க் கார் முன்வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இப்படி ஆக்கிரமிப்பு செய்தவர் களில் 100 பேர் ஹரிஜனங்கள். வெகு காலமாக இந்த ஆக்கிரமிப்பு ஏற்பட் டிருக்கிறது. சிவாஜிநாமா என்று சொல்கிறோமோ, அந்தவகையில். ஆத்தூர் தாலூகாவில் எவ்வளவு துரிதமாக ஜாரி செய்யப்பட்டதோ அதே மாதிரி இங்கும் துரிதமாக செய்யவேண்டுமென்று ஒரு ஆலோசனையிருக்கிறது.

**Sri A. V. P. ASAITHAMBI** : இதிலே சிவாஜிமா என்று இருக்கிறது ஆனால் அமைச்சர் அவர்கள் சிவாஜிநாமா என்று சொன்னார்கள். இது எந்த மொழியைச் சேர்ந்தது. அதற்கு என்ன பொருள் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த வார்த்தை செந்தமிழு மில்லை, கோயமுத்தூர் தமிழும் இல்லை.

**Sri P. G. MANICKAM** : ஹரிஜனங்களில் ஒரு சிலர் சிவாஜிமா செலுத்திக் கொண்டு பூமிகளை உழுது வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த நிலங்களையாவது அவர்களுக்கு உடனடியாக பட்டா செய்து கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிடு மா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : நான் முன்பே சொன்னேன், துரிதமாக ஜாரி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

### *Elementary schools*

* 316 *Q*.—**Sri A. R. MARIMUTHU** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have passed any orders that elementary schools should be started only in those villages where the population is over 500; and

(*b*) if so, the reason therefor?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (*a*) & (*b*) The principle of providing elementary schools first in all villages with a population of 500 and over and then in the villages with population of less than 500 was followed in respect of schools to be started by District Boards under the Second Five-Year Plan for the year 1957–58 only, so that one population strata villages may be completely provided with elementary schools.

**Sri A. GOVINDASAMY** : 500 ஜனத்தொகைக்கு மேல் உள்ள கிரா மங்களில் எல்லாம் பள்ளிக்கூடங்கள் திறந்து விட்டதாகச் சொன்னார்கள். ஆனால் 500-க்கு மேற்படி ஜனத்தொகை உள்ள சில கிராமங்களில் அப்படி இன்னும் திறக்கப்படவில்லை. அதற்குக் காரணம், ஒரு மைலிற்குள்



13th March 1958]

பள்ளிக்கூடம் இருக்கிறது என்று தட்டிக் கழிக்கப்படுகிறது. குழந்தைகள் வெகு தூரம் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள எல்லாக் கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் திறக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இது, எந்தப்பகுதியில் எந்தக் கிராமத்தில் இதுமாதிரி இருக்கிறது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பரிசீலனை செய்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்கிறேன்.

**Sri A. R. MARIMUTHU** : ஒரு கிராமத்திலும் சுற்று வட்டாரத்திலும் 500-க்கு மேற்படி ஜனத்தொகை இருந்தால் அங்கு பள்ளிக்கூடம் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : 1958–59-ல் 300-ல் இருந்து 500-க்கு உள்ளாக ஜனத்தொகை உள்ள இடங்கள் கவனிக்கப்படும்.

**Dr. Srimathi SOUNDARAM RAMACHANDRAN** : ஒரு மைல் என்கிற போது, குழந்தைகளை வெகு தூரம் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப மக்கள் தயங்குகிறார்கள். ஆகவே பல குழந்தைகள் பள்ளிகளில் சேர முடியாமல் இருக்கிறது. ஆகவே இந்த ஒரு மைல் என்பதை 4 பர்லாங் என்று குறைக்க அரசாங்கம் முன்வருமா ? அப்படியானால் அதிகம் குழந் தைகள் பள்ளிக்கூடங்களுக்கு செல்ல முடியும், எண்ணிக்கையும் அதிகரிக்கும். ஆகவே ஒரு மைல் என்பதை அரை மைல் என்று குறைக்கமுடியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : முதல் இடம் எதற்கு கொடுக்க வேண்டும் ? பெரிய கிராமங்களில் அதற்குள்ள வசதிகளை செய்து விட்டு, இந்த வருஷத்தில் 300-லிருந்து 500 வரை ஜனத்தொகையுள்ள கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்படும். லெஜிஸ்லேச்சர் கமிட்டி எந்த முறையில் இந்தப் பள்ளிக்கூடங்கள் அமைக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. அடுத்த வருடம் அது அமுலுக்கு வரும்போது அந்தப் பிராந்தியங்களில் எல்லா குழந்தைகளும் சௌகரியமாக பள்ளிக்கூடம் போக ஏற்பாடு செய்யப்படும்.

**Sri K. RAMACHANDRAN** : 1957–58-ல் 500-க்கு குறைந்த ஜனத்தொ கையுள்ள கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி யானால் எவ்வளவு ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கஷ்டமாக உள்ள சிலயிடங்களில் திறந்திருந்தாலும் திறந்திருக்கலாம். என்னிடம் புள்ளிவிவரங்கள் இல்லை.

**Sri M. K. SOMASUNDARAM** : ஜனத்தொகை 500-க்கு குறைவாக உள்ள கிராமங்கள் எவ்வளவு என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறதா ? அந்தயிடங்களில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுவிட்டதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. என் தகவல் எல்லாவிடங்களிலும் ஏற்பாடாகிவிட்டது. ஒரு சில கிராமங்கள் விட்டுப்போயிருந்தால் அதை என் கவனத்திற்கு கொண்டுவந்தால் கவனிக்கிறேன்.

**Sri P. R. SRINIVASA PADAYACHI** : ஒரே கிராமத்தில் கூட்டாக சின்னச் சின்ன கிராமங்கள் அடங்கியிருக்கிறது. அவைகளின் பெயர்கள் அடிக்கடி மாறி வருகிறது. அந்தச் சின்ன கிராமங்களை விஸ்தரித்து அக்கிராமங் களுக்கு பள்ளிக்கூட வசதி செய்துகொடுக்க அரசாங்கம் முன் வருவார் களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இப்பொழுது நாம் கவனிக்கிறது, ரெவன்யூ கிராமங்களின் அடிப்படையில் அல்ல. அப்படி எடுத்துக்கொண்டால் எல்லா கிராமங்களிலும் 500, ஆயிரத்துக்கு மேல் இருக்கும், தனித்தனியாக இருக்கிற குக்கிராமங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு அங்கு 500-க்கு மேல்

ஜனத்தொகை இருக்குமானால் அதற்கு இப்பொழுது பள்ளிக்கூடம் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். அதில் முக்கியமாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது, ஓராசியர் பள்ளிக்கூடங்கள் அமைந்துவிடுமானால், அது தொடர்ந்து நன்றாக நடைபெறாது. குறைந்தது, இரண்டு, மூன்று ஆசிரியர்கள் இருக்கும் அளவில் பிள்ளைகளின் எண்ணிக்கை இருக்கவேண்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடங்கள் ஆரம்பிப்பது மட்டுமல்ல, அவைகள் நன்றாக நடக்க ஏற்பாடு செய்யவேண்டியிருப்பதால் இதையெல்லாம் கவனித்து லெஜிஸ்லேச்சர் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

**SRI A. GOVINDASAMY** : 500 ஜனத்தொகையுள்ள கிராமங்கள் எத்தனை இருக்கிறது என்று நமது சர்க்கார் ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுக்கும்படி ஏற்பாடு செய்வார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இப்போது இருப்பது 1951-ல் எடுக்கப்பட்டது. இனிமேல் 1961-ல் ஜனத்தொகை எடுக்கும்பொழுது இதை சுலபமாக கணக்கு எடுக்க முடியும்.

**SRI P. G. MANICKAM** : 500 பேர்களுக்கு அதிகமாக இருக்கும் சில கிராமங்களில் ஒரு மைலுக்குள் மற்ற கிராமங்களிலே பள்ளிக்கூடம் இருப்பதால் அங்கே பள்ளிக்கூடம் அமைப்பது இயலாமல் இருக்கிறது ஆகவே ஒரு மைலுக்குள் இருக்கும் பள்ளிக்கூடத்தின் ஒரு செக்ஷனாக ஒரு பள்ளிக்கூடத்தை இந்தமாதிரி இடங்களில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் யோசனை செய்வார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இந்த எல்லா யோசனைகளையும் வைத்துக்கொண்டுதான் சட்டசபை கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அந்த சிபாரிசின் அடிப்படையில் பள்ளிக்கூடங்களை அமைக்க வேண்டும் என்றுதான் திட்டமிட்டிருக்கிறது. அதுதான் சபையின் அபிப்பிராயமும் கூட. இந்த திட்டத்தின் அடிப்படையில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யும்.

**SRI M. JAGANNATHAN** : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்கூல்லெஸ் ஸெண்டர் என்று ஏதாவது ஜாபிதா தயாரிக்கப்பட்டிருக்கிறதா? அந்த இடங்களில் பள்ளிகளை ஆரம்பிக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஸெண்டர் என்று குறிப்பது எந்த அர்த்தத்தில் என்று தெரியவில்லை. ஒரு கிராமத்தை தனி யூனிட்டாக வைத்துக்கொண்டு அதில் 500 பேர்கள் ஜனத்தொகையிருந்தால் அங்கே அமைக்கவேண்டும் என்றுதான் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் 10 அல்லது 50 பேர்கள் உள்ள கிராமங்களில் பள்ளிக்கூடம் இல்லாமல்தான் இருக்கும், எல்லா குழந்தைகளுக்கும் எந்த விதத்தில் கல்வி அளிக்க முடியுமோ அந்த முறையில் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கும்.

**SRI R. SRINIVASA IYER** : ரெவின்யூ பதிவில்லாத கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. அதைப் பார்க்கும்பொழுது ஒரு ரெவன்யூ கிராமத்தில் பல (ஹாம்லட்) உப கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் இரண்டு மைல், இரண்டரை மைல் தூரத்தில் இருக்கின்ற காரணத்தால், அந்த இடங்களில், நாங்கள் பள்ளிக்கூட கட்டிடங்கள் வாடகையில்லாமல் கட்டிக்கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு மைல் தூரத்தில் இருக்கவேண்டும் என்ற காரணத்தால் அங்கு வேறு பள்ளிக்கூடங்கள் ஏற்படாமல் இருக்கின்றன. இது சர்க்காருக்குத் தெரியுமா ? ஆகையால் இந்த இடங்களில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : நான் முன்பே சொன்னேன். உப கிராமங்கள் இருப்பதையும் கவனத்தில் எடுத்துத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





**SRI S. KHADER SHERIFF** : சில கிராமங்களில் ஆயிரம் பிள்ளைகளுக்கு மேல் இருந்தாலும் அங்கு சௌகரியமாக கல்விபெற முடியவில்லை. காரணம் அந்த இடங்களில் லேபர் ஸ்கூல் இருப்பதால் ஒரு மைலுக்கு வேறு ஸ்கூல் அமைக்க முடியாத நிலையில் இருக்கிறது. இவ்விதம் தகராறு இருந்து கொண்டிருக்கிறது. வட ஆற்காட்டில் இம்மாதிரி ஒரு காரியத்திற்காக அதிகாரிகளுக்கு தெரிவித்த சமயத்தில் அவர்கள் கோயம்புத்தூருக்கு எழுதியிருப்பதாக சொன்னார்கள். இரண்டாவதாக இது தவிர சில மானேஜ்மெண்ட் ஸ்கூல் பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்காமல் இருப்பதால் தகராறு வருகிறது. இவ்விதம் மானேஜ்மெண்ட் ஸ்கூல் இருப்பதினாலும் வேறு ஸ்கூல்கள் ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER** : It is only a suggestion.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இரண்டாவது கேள்வி சொல்லி முடிப்பதற்குள் முதல் கேள்வி மறந்து விட்டது.

**SRI K. VINAYAKAM** : Is it not a fact that the criterion on which an elementary school is opened is not merely the population of the village and the number of school-going children available in the village but also the distance between two villages so that the school may prove to be an economic unit? In tackling this problem, will the Government think of providing mid-day meals in the schools already existing so that they may attract children from the neighbouring villages even though the population may be less than that required by the rules and regulations?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : Provision of mid-day meals is a completely different problem. As a matter of fact, that is also being tackled. The question is whether young and tender children of the age of five or six will be able to walk a distance of one mile. From my own experience, I can say that we used to cover not one mile but even three miles for the purpose of going to school, but that is quite a different thing. We are living in different conditions. That is why we are taking a different view of the matter and we are trying to solve the problem.

**SRI A. VEDARATHNAM** : ஒரு மைலுக்கு இடையில் உள்ள தூரத்தில் பள்ளிகளை அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் ஒத்துக்கொண்ட போதிலும், சிலர் தனியாக பள்ளிகளை அருகாமையில் நடத்திக்கொண்டிருக்கிறவர்கள் இந்த மாதிரி சர்க்கார் பள்ளிக்கூடங்கள் வருவதை ஆட்சேபித்து வருவதாக தெரிகிறது. ஆகவே அந்த ஆட்சேபணைகளை கவனிக்காமல் அரசாங்கம் பள்ளிகளை ஏற்படுத்த முன் வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இதில் நாம் ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டியிருக்கிறது. கட்டிட வசதிகள் எல்லாம் இருந்து பள்ளிக்கூடம் நடந்து வருகிற சமயத்தில் பக்கத்தில் இன்னொரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிற காரணத்தால் பள்ளிக்கூடங்களில் எண்ணிக்கை குறைந்து கொண்டுதான் வரும். இதனால் வீணாக பணத்தை செலவு செய்வது தேசத்திற்கே நஷ்டமாகிறது. ஆகவே இந்த ஆட்சேபணைகளை கவனிப்பது யாருடைய சொந்த நலத்திற்காகவும் அல்ல. பணத்தை வீணாக செலவு செய்யக் கூடாது என்கின்ற அடிப்படையில் தான் பரிசீலனை செய்யப்படுகிறது.

*Basic Training Schools*

*** 317 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state how many training schools are yet to be converted into basic training schools ?**

[13th March 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : Thirty-five are yet to be converted into Basic Training Schools.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் இம்மாதிரியான பேஸிக் ட்ரெயினிங் காலேஜில் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே பாக்கியிருக்கின்ற 35 பாடசாலைகளையும் பேஸிக் ட்ரெயினிங் பாடசாலைகளாக மாற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மொத்தம் ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் 133 இருக்கின்றன, அவைகளில் 98 பள்ளிகளை ஆதார பள்ளிக்கூடங்களாக மாற்றப்பட்டிருக்கிறது. முப்பத்தைந்து பள்ளிக்கூடங்கள் பாக்கியிருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த வருட திட்டத்தை சரியாகப் பார்த்தால் எல்லா பள்ளிகளையும் மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது தெரியவரும். 1958–59-ல் கூடுதலாக தீர்ந்து விடும், பாக்கியிருந்தால் 1959–60-ல் எல்லாமே முடிவு அடைந்து விடும் என்று நினைக்கிறேன்.

## *Scholarships*

* 16. *SNQ*.—DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in payment of scholarship money to students who were granted scholarships last year till February 1958 ?

THE HON. SRI P. KAKKAN : The delay for the renewal of scholarships was mainly due to the late receipt of renewal applications by the Director of Harijan Welfare from the Headmasters and Principals of educational institutions.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : எத்தனையோ முறை மாணவர்கள் மனு செய்திருக்கிறார்கள். ஹரிஜன நல டயரக்டர் அவர்களும் சர்க்காரில் காலதாமதம் ஏற்படுவதாக சொல்லுகிறார்கள். இவ்விதம் காலதாமதம் ஆகிவருவதை என்னால் நிரூபிக்க முடியும். ஆகவே இந்த காலதாமதம் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நானும் உண்மையிலேயே காலேஜ்களுக்கும் பாடசாலைகளுக்கும் ரிமைண்டர் அனுப்பியிருப்பதை நிரூபிக்க முடியும். சமீபத்தில் 1–3–58-ல் ரிமைண்டர் அனுப்பப்பட்டது. 11–2–1958-ல் சில காலேஜ்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 20–2–1958-லும் 21–2–1958-லும் ரிமைண்டர்கள் காலேஜ்களுக்கும் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவைகளிலிருந்து பதில் கிடைக்காததினால்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கும். இதை தவிர்க்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

SRI V. SANKARAN : பல பள்ளிக்கூடங்களிலுள்ள ஹாஸ்டல்கள் டிவைடிங் ஸிஸ்டத்தில் நடைபெற்று வருவதால் வருட இறுதி வரையில் உபகார சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதினால், இதற்காக மாணவர்களின் டெப்பாஸிட் தொகைகளை உபயோகப்படுத்தியும், அது போதாததால் மாணவர்களை வெளியேறுவதற்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், குறிப்பாக மதுரை காலேஜ், தமிழ்நாடு பாலிடெக்னிக் போன்ற கல்விச்சாலைகளில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாலும், மேலும் இது போன்ற தகவல்கள் தெரிவதாலும் பரீட்சை சமயத்தில் பரீட்சை கவலை போக உண்ண உணவு . . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் கையில் எழுதி வைத்துக்கொண்டு படிப்பதாக தெரிகிறது. அதை அனுமதிக்க முடியாது, தயவு செய்து கேள்வியை போடுங்கள்.



13th March 1958]

SRI V. SANKARAN : உண்ண உணவு, உறைய இடம் போன்ற இதர கவலைகளும் சேர்ந்து கொள்வதால் பரீட்சைக்கு தயார் செய்து கொள்ள முடிவதில்லை என்று அதிகமாக மாணவர்களிடமிருந்து முறையீடுகள் வந்து கொண்டிருப்பதால் இனிமேலாவது வருடத்தில் இரண்டு முறை, அதாவது முதல் இன்ஸ்டால்மெண்ட்டை முதல் டெர்ம்-க்குள்ளும் இரண்டாவது இன்ஸ்ட்டால்மெண்ட்டை பெப்ருவரி மாதத்திற்குள்ளும் உபகார சம்பளத்தை கொடுத்துவிட சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு தூரம் மாணவர்களுடைய குறைகளை போக்க முடியுமோ அந்த அளவிற்கு போக்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. எந்தெந்த பள்ளிக்கூடங்களில் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : மருத்துவ கல்லூரி மாணவர்கள், பொறிஇயல் கல்லூரி மாணவர்கள் நீண்ட நாட்களாக, 7, 8, முறை மனு அனுப்பியிருந்தும் இதுவரையில், இப்போது மார்ச் மாதம் பிறந்தும், அவர்களுக்கு உபகார சம்பளம் கிடைக்கவில்லை என்று புகார்கள் சொல்லுகிறார்கள். அதனால் தான் நாங்களும் கேட்கிறோம். ஆகவே இதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் அப்படிப்பட்ட மாணவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு எனக்கு எழுதி அனுப்பினால் அதை கவனிக்கிறேன்.

MR. SPEAKER : Questions are over. I would remind hon. Members not to shout, 'Sir, Sir.' If they raise their hand, it is quite enough. I can see it.

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce that the Governor of Madras has given his recommendation in pursuance of Article 207, Clause (3) of the Constitution of India for the consideration in the Madras Legislative Assembly of the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958. 9.30 a.m.

## III.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS CHILDREN (AMENDMENT) BILL, 1958.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to move for leave to introduce the Madras Children (Amendment) Bill, 1958.

MR. SPEAKER : The question is—

"That leave be granted to introduce the Madras Children (Amendment) Bill, 1958."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

[13th March 1958

(2) THE MADRAS PROHIBITION (AMENDMENT) BILL, 1958
(L.A. BILL NO. 2 OF 1958).

MR. SPEAKER: Yesterday, we decided to set apart one hour for general discussion and one hour for clause by clause discussion of this Bill. Fifteen minutes will be allowed to the Hon. Minister for final reply.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I beg to move that the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958), as amended by the Joint Select Committee[a] be taken into consideration.

இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விட வேண்டுமென்ற பிரேரணை இந்த மன்றத்திலே கொண்டுவரப் பட்டபோது, பொருத்தமான முறையிலே, விவாதம் இல்லாமலேயே கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏக மனதாக அந்தப் பிரேரணையை ஒப்புக்கொண்டார்கள். அதற்கப்புறம் இரண்டு மன்றங்களின் அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு பொறுக்குக் கமிட்டி, இந்த மசோதாவின் பல பிரிவுகளை பரிசீலனை செய்து சில பிரிவுகளை மாற்றியிருக்கிறார்கள். அந்தப் பொறுக்குக் கமிட்டியினுடைய அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுக்குக் கமிட்டியினுடைய கமிட்டியின் அறிக்கையில் இருக்கும் சிபாரிசுகளுக்குச் சில கனம் அங்கத்தினர்கள் மறுப்பும் தெரிவித்திருக்கிறார்கள். சாதாரணமாக, இம்மாதிரி பொறுக்குக் கமிட்டியில் கலந்து கொள்ளுகின்ற அங்கத்தினர்கள் அங்கே விவாதிக்கப்படுகிற விஷயங்களைப்பற்றி தங்களுடைய மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிப்பது உண்டு. ஆனால் கனம் அங்கத்தினர்கள் கவனித்திருக்கலாம், இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிற மறுப்பிலே பொதுவாக அரசாங்கத்தின் மீது உள்ள குறைகளை, அரசாங்கம் தவறுதலான பாதையில் செல்லுகிறது என்றோ அல்லது மதுவிலக்குத் திட்டம் நிறைவேற்றுவது தவறு என்ற அபிப்பிராயமோ, அல்லது வேறு போலீசார் சரியாக நடத்தவில்லை என்றோ பொதுவான அபிப்பிராயம், தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, இந்த மது விலக்குச் சட்டம் முதன் முதலாக 1937-ம் ஆண்டிலே கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அனுபவத்தின் மேல் ஒரு சட்டத்தைத் திருத்துவதிலே ஒன்றும் தவறில்லை. அனுபவத்தின் மேல் திருத்த முடியும். எல்லாவற்றையும் எதிர்பார்த்து, திருத்துவதற்கு இடமில்லை என்ற முறையில் எந்த மாறுதலும் செய்ய வேண்டியதில்லை என்ற முறையில் சட்டம் செய்ய முடியாது. இப்போது கூட ஒரு பிரிவு முதல் மசோதாவிலே இருந்தது. அதன்படி ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் குற்றங்கள் அதிகமாக நடைபெற்றால், அந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்க போதிய ஒத்துழைப்பு அந்த கிராமத்தில் இல்லை என்றால். "ப்யுனிடி" போலீஸ் அமைப்பது, அப்படி அந்தப் "ப்யுனிடி" போலீஸின் செலவை அந்த கிராமத்திலிருந்தே வசூலிப்பது என்ற ஒரு பிரிவு இருந்தது. அந்தப் பிரிவு பொறுக்குக் கமிட்டியில் விவாதிக்கப்பட்டது. அப்போது இரு வித அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன. பொறுக்குக் கமிட்டியில் அபிப்பிராயம் இரு பாதியாகப் பிரிந்து இருந்தது. ஒரு அபிப்பிராயம் ஒரு சிலராகிலும் நிரபராதிகள் கிராமத்தில் இருக்கலாம். மது விலக்கு நன்கு நடைபெற வேண்டியதற்கு ஒத்துழைக்கத் தயாராயிருக்கலாம். இதனால் அவர்களும் பாதிக்கப்படுவார்கள். இப்போது மது விலக்குக் குற்றங்கள் குறைந்து வருகிறது. அதனால் இப்போது அந்தப் பிரிவு தேவையில்லை, பின்னால் வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, முடிவாகி, அந்தப் பிரிவு மசோதாவிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை

[a] The Report was presented to the House on the 11th March 1958.



13th March 1958] [Sri M. Bhaktavatsalam]

கனம் அங்கத்தினர்கள் கவனிப்பார்கள். முக்கியமாக, இந்த மசோதாவின் அடிப்படையான கருத்து இந்த மது விலக்கு திட்டத்தை நன்கு அமுலுக்குக் கொண்டுவரவேண்டும், நன்கு நிறைவேற்றப்படவேண்டும், அந்தச் சட்டம் நன்கு கையாளப்படவேண்டுமென்றால், குற்றங்களுக்கு இடமில்லாமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், சட்டத்தில் சில கடுமையான பிரிவுகள் இருக்க வேண்டும், குற்றங்களுக்கு தண்டனை கடுமையாக இருக்கவேண்டும் என்பது தான் இந்த மசோதாவின் அடிப்படையான கருத்து. அந்த மது விலக்குச் சட்டம்—பொறுக்குக் கமிட்டியின் யாதாஸ்தில் இருக்கிற மாறுபட்ட கருத்துக்களில் ஒன்று—கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள்—எல்லா ராஜ்யங்களிலும் இல்லையே, மற்ற நாடுகளிலெல்லாம் பார்த்து விட்டு நிறுத்தி விட்டார்கள், இவர்கள் இங்கு மட்டும் எவ்வாறு நிறைவேற்றப்போகிறார்கள்—என்று இருக்கிறது. மிதக் குடி பாதகமில்லை, அதிகக் குடியைத் தான் தடுக்கவேண்டுமென்று பொறுக்குக் கமிட்டி யாதாஸ்தில் மாறுபட்ட குறிப்பில் இருக்கிறது. ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், மது விலக்கு இன்றைய தினம் இந்த ராஜ்யத்திலே அமுலில் இருக்கிறது. இது இப்போது நம் அரசியல் அமைப்புச் சட்டத்திலே டைரக்டிவ் பிரின்சிபிள்களில் ஒன்று என்றிருக்கிறது. ஆகவே டைரக்டிவ் பிரின்சிபிளாக இருப்பதை ஒரு ராஜ்யம் எடுத்துக் கொண்டு நிறைவேற்றி வரும்போது, பின்னால் போகிறது என்பது நடத்த முடியாத காரியம். நிறைவேற்றுவது அசாத்தியமானதாக இருக்கலாம். சிலர் இன்னும் டைரக்டிவ் பிரின்ஸிபிளை எடுத்துக் கொள்ளாமல் இருக்கலாம், அது வேறு விஷயம். அமுலில் இருக்கும்போது ஒரு ராஜ்யம் பின்னால் போவது முடியாது. இவ்வாறு கருதுவது சரியல்ல. அது கான்ஸ்டிடியுஷனுக்கு முரண்பட்டது என்று குறிப்பிட விரும்புகிறேன். அடுத்த படியாக மதுவிலக்கு திட்டம் கடுமையாக, சரிவர நிறைவேற்றுவது, மற்றும் வேறு விஷயங்களைக் குறித்தும், வேறு ராஜ்யங்களில் விசாரணை நடத்திய கமிட்டியின் சிபாரிசுகளையெல்லாம் அந்த மாறுபட்ட கருத்துக் களில் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு நம் ராஜ்யத்திலும் ஒரு விசாரணை கமிட்டி நியமிக்கப்பட்டது. அப்போது எல்லா ஜில்லாக்களுக்கும் போய்ப் பார்த்தார்கள். அந்தக் கமிட்டியின் அங்கத்தினர்களில் சிலர் இன்றும் இந்த மன்றத்திலே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து பார்த்து சிபார்சு செய்திருக்கிறார்கள். 9-40 a.m. அந்த சிபார்சுகளை ஒட்டித்தான் இந்தத் திருத்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமே சமீபத்தில் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியும் நாடு பூராவும் சுற்றிப்பார்த்து விட்டு, விசாரணை செய்து ஒரு அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையிலே நடத்தவேண்டும் என்பது தான் அவர்களுடைய எண்ணம். அதை ரத்து செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கும் இல்லை. ஆனால் இதற்கு ஏன் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும், பிரசாரம் செய்து தான் இதைத் தவிர்க்கவேண்டும் என்ற கருத்து பல அங்கத்தினர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே போகக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ரஷியாவிலே தோழர் குருஷேவ் அவர்கள் குடி அதிகமாகப் போகிறது, இது ஒரு பெரிய பிரச்னை ஆக இருக்கிறது, அதைத் தவிர்க்க வேண்டும் என்று கவலையைத் தெரிவித்திருக்கிறார். பத்திரிகையில் பார்த்தேன். ரஷியாவில் குடி அதிகமாக இருப்பதினாலே அதை தவிர்க்க முடியாத காரணத்தினால் எத்தனையோ கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதை அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். குருஷேவ் அவர்கள் இந்த மாதிரிச் சொல்லும்பொழுது "**Moral principle**" க்காக வேண்டாம், அது ஒரு பஞ்சமா பாதகங்களில் ஒன்று என்ற எண்ணம் கொண்டவர் அல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ரஷியாவில் குடி அதிகமாக இருப்பதைப் பார்த்து, அது விபரீதமாகப் போகிறது, ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது, என்று அவர் சொல்லியிருப்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[Sri M. Bhaktavatsalam] [13th March 1958

இப்பொழுது சில மாதங்களாகக் கடுமையான நடவடிக்கைக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதினால், தவறுகள் செய்து வருவது குறைந்து வருகிறது என்பதை நான் நிச்சயமாகச் சொல்லக்கூடும். ஆராய்ந்துதான் இதைச் சொல்லுகிறேன். சென்னை நகரை எடுத்துக் கொண்டால் அதிகமாகக் குறைந்திருக்கிறது. இன்னும் சில ஜில்லாக்களிலேயும் அதிகமாக் குறைந்திருக்கிறது. இதை நன்றாக உணர்ந்துதான் சொல்லுகிறேன். முக்கால் பங்கு குறைந்திருக்கிறது என்றால் ஏன் கடுமையான சட்டம் கொண்டு வரவேண்டுமென்று சில அங்கத்தினர்கள் கேட்கலாம். அவ்வப்போது கவனித்துக்கொண்டு வருவதனால் தான், நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது, அதைக் கொஞ்சம் தளர்த்தினால், மேலும் குற்றங்கள் தலைதூக்க ஆரம்பித்துவிடும். அப்படி தலைதூக்க விடாமல், நிரந்தரமாகக் குறைவதைப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டங்கள் இருந்தாலும் சில குற்றங்கள் நடக்கலாம். ஆனால் அவற்றை மிகைப்படுத்திச் சொல்லக்கூடாது. இப்பொழுது கொலை செய்தால் தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி இருந்தாலும் சில சமயம் கொலை நடந்துதான் வருகிறது. இது குறைந்துவிட்டதனால், இந்தியன் பீனல் கோடிலுள்ள சம்பந்தப்பட்ட செக்ஷனை எடுத்துவிட வேண்டுமென்று யாரும் சொல்லமாட்டார்கள். 100-க்கு 75 பங்கு குற்றம் குறைந்திருக்கிறது என்று தாராளமாகச் சொல்லலாம். ஆனால் குற்றங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கத் தான் வேண்டும். பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அனுபவத்திலே பார்த்ததில், சட்டத்தை கடுமையாக ஆக்கவேண்டுமென்பது தான் இந்த மசோதாவின் அடிப்படையான கருத்து. ஏன் சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும், அப்படிச் செய்தால் அக்கிரமமாக தவறுகள் ஏற்படலாம் என்று சில அங்கத்தினர்களால் சொல்லப்படுகிறது. அக்கிரமமாகச் சிலர் துன்புறுத்தப் படலாம் என்று சொல்லுகிறார்கள். துன்புறுத்தப்படுவது என்பது எங்கே நடந்தாலும், அதை நான் ஆதரிக்கவில்லை. கடுமையாகத் தவிர்க்கப்படவேண்டும். நான் பார்த்த அளவிலே, எனக்குப் புகார்கள் வருவது எல்லாம், போலீசார் போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பது தான். இந்த மாதிரியாக அதிகமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று புகார்கள் வந்தால், அவைகளை விசாரணை செய்து பார்த்தால், 100-க்கு 80 வரையில் பாதிக்கப்பட்டவர்கள் தான் அப்படிச் சொல்லுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறது.

முன்பு, தண்டனை கொடுப்பதிலே அதிக பட்ச தண்டனை குறிப்பிடப்பட்டு இருந்தது. குறைந்த பட்ச தண்டனை இல்லை. இப்பொழுது குறைந்த பட்ச தண்டனையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதுதான் அதிகமாக ஆட்சே பிக்கப்பட்டது. மதிப்பிற்குறிய கனம் அங்கத்தினர் கூட, சட்ட சரித்திரத்தை உணர்ந்து சட்ட சரித்திரத்திலே இவ்வாறு இல்லை என்று சொல்லியிருக்கி றார்கள். சட்ட சரித்திரத்தைப் பற்றி நான் அதிகம் படித்தவன் அல்ல. வேண்டியதை நாம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்கு இந்த மன்றத்திற்குத் தான் " Sovereign authority " (அதிகாரம்) இருக்கிறது. சட்டத்திலே தவறு இருக்கிறது என்று கோர்ட்டார் சொன்னால், அதைத் திருத்துவதற்கு இந்த மன்றத்திற்குத் தான் " Supreme authority " இருக்கிறது. அனுபவத்திலே பார்த்ததில், குறைந்த பட்ச தண்டனை இல்லை என்பது, சில இடங்களிலே பயன் படுத்தப்பட்டு வருகிறது. தண்டனையைக் கேவலப்படுத்தும் முறையிலே மீண்டும் மீண்டும் குற்றத்தைச் செய்கிறார்கள். கோர்ட்டாரே தண்டனையைக் கட்டுப்படுத்தலாம் என்று கூறப்பட்டது. அப்படிக் கட்டுப்படுத்தவேண்டுமென்று சொன்னால், ஏன் " Maximum sentence " என்று விதிக்கவேண்டும், ஏதா வது தண்டனை விதியுங்கள் என்று சட்டத்தில் சொல்லலாமே ? ஆகவே இது கட்டுப்படுத்தவில்லையா ? சட்ட சரித்திரத்தைத் தெரிந்தவர்கள் இதை மறுக்கமாட்டார்கள். உயர்ந்தபட்ச தண்டனை இருக்கிறது என்றால், அது கட்டுப்படுத்தத்தான் செய்கிறது. குறைந்தபட்ச தண்டனையும் இருக்க வேண்டுமென்று கருதி இந்த திருத்த மசோதாவிலே சேர்க்கப்பட்டிருக்கிறது



13th March 1958] [Sri M. Bhaktavatsalam]

இதுதான் முக்கியமான திருத்தம். இன்னும் " Summary trials " க்கு " புரொவிஷன் " இருக்கிறது. சில சமயங்களில் இதனால் வீணாக சர்க்காருக்கும் குற்றவாளிகளுக்கும் செலவு ஏற்படுகிறது. அந்தமாதிரிச் செலவுக்கு இடம் கொடுக்காமல் " Summary trials " களை நடத்தலாம். மூல மசோதாவிலே 6 மாதம் வரையிலே சிறை தண்டனை கொடுக்கலாமென்று இருந்தது. பொறுக்குக் கமிட்டியிலே பரிசீலனை செய்து சிறை தண்டனை கொடுப்பது சரி அல்ல என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி " Summary trials " நடக்கும் கேஸ்களில் அபராதம் தான் விதிக்கலாம், சிறை தண்டனை விதிக்கக் கூடாது என்று பொறுக்குக் கமிட்டியிலே மாற்றப்பட்டிருக்கிறது. இதுவும் ஒரு முக்கியமான மாறுதல். மேலும், மதுவிலக்குச் சட்டத்தை நன்றாக நிறைவேற்றும் பொருட்டு, ஜில்லா ரீதியிலே " புரொஹிபிஷன் கமிட்டி " அமைக்கலாம் என்று இருந்தது. ராஜ்ய ரீதியிலே ஒரு கமிட்டி யிருந்தால் நல்லது என்று பொறுக்கு கமிட்டியிலே அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இது தான் இந்த மசோதாவிலே இருக்கும் முக்கியமான பிரிவுகள். ஆகவே, கனம் அங்கத்தினர்கள், சட்டமன்றத்தில் இந்த மசோதா சமர்ப்பிக்கப்பட்ட பொழுது எவ்வாறு ஆதரவு தந்தார்களோ, அத்தகைய தொரு ஆதரவை இப்பொழுதும் கொடுப்பார்கள், இது ஒரு சீரிய திட்டம், இது நன்றாக நிறைவேற்றப்படுவதற்கும், மக்களைப் பாதுகாப்பதற்கும் வேண்டிய ஆதரவை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** " இது ஒரு முக்கியமான மசோதா, ஆகவே ஒரு மணி நேரம் பொது விவாதத்திற்குப் போதாது " என்று சொன்னதினால், கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு, இரண்டு மணி நேரம் பொது விவாதத்திற்கு ஒதுக்கலாமென்று உத்தேசித்திருக்கிறேன். பிரிவுகள் மீது விவாதத்திற்கு ஒரு மணி நேரமும், பொது விவாதத்திற்கு இரண்டு மணி நேரமும் ஒதுக்குகிறேன். இரண்டு மணி நேரம் போதவில்லை யென்றால், இன்னும் கொஞ்ச நேரம் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். இன்னும் கால் மணி நேரம் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். இப்பொழுது கனம் வி. கே. கோதண்டராமனும் கனம் சட்டநாதக் கரையாளரும் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தங்களைப் பிரேரேபிக்கலாம்.

**Sri. V. K. KOTHANDARAMAN : Sir, I move—**

**" That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) be taken into consideration after three months."**

Sri N. K. PALANISAMI : **Sir, I second it.**

Sri K. SATTANATHA KARAYALAR : **Sir, I move—**

**" That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) be taken into consideration after six months ".**

**The amendment was duly seconded.**

**Mr. SPEAKER : I allow ten minutes for each hon. Member.**

Sri K. S. **ARDHANAREESWARA GOUNDER :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபையின் முன்பு இருக்கக்கூடிய மசோதாவை ஆதரித்து 9-50 a.m. சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். (இப்பொழுது சபாநாயகர் ஸ்தானத்தில் சேர்மன் ஸ்ரீ கே. சட்டநாத கரையாளர் அமர்ந்தார்.) இந்த மதுவிலக்குச் சட்டம் இன்னும் நல்ல முறையில் திருந்தி இருந்தால் தான், ஏழை மக்கள் திருட்டுத்தனமாக காய்ச்சக்கூடிய தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இன்னும் கடுமையான தண்டனை இருந்தால் தான், இந்த சட்டத்தை நல்ல முறையில் அமுல் செய்ய முடியும் என்பது என்னுடைய

[Sri K. S. Ardhanareeswara Gounder] [13th March 1958

அபிப்பிராயம். அதுவும், குறிப்பாக, சேலம் ஜில்லா இந்த மாகாணத் திலேயே மதுவிலக்கு குற்றங்கள் அதிகமாக இருக்கக்கூடிய ஜில்லாவாக இருக்கிறது. அதற்குக் காரணம் அங்கு இருக்கக்கூடிய ஜில்லாவாக யும், அங்கு 'மலைப் பிரதேசங்கள் அதிகமாக இருப்பதும் தான். அந்த விதத்தில் பார்க்கும் போது அமைச்சர் அவர்கள் மூல மசோதாவிலிருந்து ஷரத்தை எடுத்துவிட்டதைப் பார்க்கும் போது மிகவும் வருந்த வேண்டி யிருக்கிறது. சேலம் ஜில்லாவிலே, சில கிராமங்களில் இதையே தொழிலாக செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஷரத்தை இப்பொழுது கொண்டு வராவிட்டாலும், மறுபடியும் சட்டத்தில் சேர்த்தால்தான், அந்த ஜில்லா வில் நடக்கும் குற்றங்களை இல்லாமல் செய்வதற்கு வழி வகை செய்வதாகும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். "Punitive Police" ஏற்படுத்தினால் அநேக கிராமங்களில் போலீசார் வேண்டுமென்றே அக்கிரமங்கள் செய்கிறார்கள் என்று சில அங்கத்தினர் கள் கருதலாம். என்னைப் பொறுத்த வரை அந்த ஷரத்து இருக்க வேண்டும் என்றும், ஆனால் அதை பிரயோகம் செய்யும் அதிகாரத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தான் சொல்லு வேன். எந்தெந்த கிராமங்களில் அதிகாரத்தைப் பிரயோகம் செய்ய வேண்டுமோ, சர்க்காருடைய அனுமதி பெற்று செய்வார்களேயானால் உண்மையில் எந்தவிதமான பிரதிகூலம் ஏற்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த குற்றங்கள் மக்களின் ஏழ்மை காரணமாக, சில கிராமங்களில் இதை குடிசைத் தொழிலாக வைத்துக் கொண்டிருப்பதினால் ஏற்படுகின்றது. ஆகவே அம்மாதிரி கிராமங்களில் ஷரத்து மூலமாக அமல் செய்யாமலிருந்தாலும் கூட, ஷரத்தை இப்பொழுது எடுத்துவிட்டாலும் கூட, இந்தத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு, சில கைத்தொழில்களை ஏற்படுத்தி கொடுத்தார்களானால் உண்மையில் அந்த மாதிரி குற்றங்கள் ஏற்படாது என்று தான் நான் நினைக்கிறேன். அம்மாதிரி கைத் தொழில் களை ஏற்படுத்திக் கொடுத்தால், அவர்களுடைய வாழ்க்கையில் வருமானம் உயரும், இம்மாதிரிக் குற்றங்களும் குறையும் என்றே நான் நினைக்கிறேன்.

இந்த சட்டமானது நல்ல முறையில் நடக்கவில்லைஎன்று சிலர் சொல்லிக் கொண்டு இருக்கலாம். அமைச்சர் அவர்கள் சொன்னது போல் கொலை குற்றத்துக்கு தண்டனை உண்டு என்று சட்டம் இருந்தாலும்கூட கொலை குற்றங்கள் இல்லாமல் போய்விடவில்லை. கொலைகள் நடக்கின்றன என்ற காரணத்தினால் சட்டத்தை எடுத்துவிடவேண்டும் என்று நாம் நினைக்கவில்லை. அதுபோல்தான், கொலை குற்றத்தைப்பற்றின சட்டத்தைக் கருதுவதுபோல், இந்த மதுவிலக்குச் சட்டத்தையும் கருத வேண்டும். மது விலக்குச் சட்டம் நல்ல முறையில் அமுல் நடத்தப்படு மானால், ஏழை மக்களுடைய நிலையை முன்னுக்கு கொண்டு வரவேண்டும். அந்த விதத்தில் முன்பு இருந்ததைவிட இப்போது குற்றங்களுக்கு அதிகப் படியான தண்டனை இருப்பது வரவேற்கத்தக்கது. அதிகாரிகளும் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டால்தான் நன்றாக இருக்கும்.

அமைச்சர் அவர்கள், ஸ்ரீ பக்தவத்சலம், இந்த இலாகாவை ஏற்றுக் கொண்ட பிறகு, என்னுடைய ஜில்லாவைப் பொறுத்த வரையில் குற்றங் கள் குறைந்துதான் இருக்கின்றன. அவர்கள் இந்த விஷயத்தில் தீவிர மான நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். இப்பொழுது அது குறைந்து விட வில்லை. ஆனால் சற்று கவனம் குறைந்து இருக்கிறது. ஆரம்பத்தில் இந்த குற்றம் செய்தவர்களை மிகவும் தீவிரமாக பிடிக்கவேண்டும் என்று அவர் இருந்தது மிகவும் நன்றாக இருந்தது. சில அதிகாரிகளின் கவனக் குறைவினால் இப்பொழுது மறுபடியும் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அமைச்சர் அவர்கள் இந்த சட்டத்தை அமுல் நடத்துவதில் கொஞ்சம் கண்ணும் கருத்துமாக இருந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டால் இந்த சட்டத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்யலாம். சேலம் ஜில்லாவைப் பொருத்தவரையில் அதிகாரிகள் கவனம் செலுத்தினால் தான் இதை நன்றாக அமுல் நடத்தமுடியும். ஏனென்றால், அங்கு காட்டுப் பிரதேசம் அதிகம். இந்த குற்றங்களை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். அந்த விதத்தில் பார்த்தால், அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய Forest Department அதிகாரிகளுக்கு இன்னும் அதிகாரத்தைக் கொடுத்



13th March 1958] [Sri K. S. Ardhanareeswara Gounder]

தார்களானால் மிகவும் நன்றாக இருக்கும். போலீஸ் டிபார்டுமெண்டு மட்டும் குற்றங்களை கண்டுபிடிக்கவேண்டும் என்றால் அது மிகவும் கடின மாகத்தான் இருக்கும். சேலத்தைப் பொறுத்தவரையிலும் Forest Department-ல், இருக்கக்கூடியவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதையும் தவிர, இப்பொழுது "மொலாஸஸ்" புகளூரிலிருந்து வந்துகொண்டிருக்கிறது. சட்டத்திலே இப்பொழுது அதையும் சேர்த்து "மொளாஸஸ்" வைத்திருந்தால் கூட குற்றம்தான் என்று போடப்பட்டி ருப்பது குற்றங்களை குறைப்பதற்கு வழி வகை செய்வதில் உபயோகமாக இருக்கும் என்று அதை நான் வரவேற்கிறேன். அதுவும் தவிர குற்றம் செய்தவர்களுக்கு தண்டனைகளையும், அபராதத்தையும் அதிகப்படுத்தி யிருப்பது நாம் எல்லோரும் வரவேற்கக் கூடியது, சந்தோஷப்படவேண்டி யதும்தான். ஆனால் குற்றம் செய்யக்கூடிய ஏழைகள் அந்த அபராதத் தைக் கொடுப்பது என்பது மிகவும் கடினம். ஆகையால் சிறைத் தண்டனை தான் அவர்களுக்குக் கொடுக்கக் வேண்டி வரும். தண்டனைக் கொடுப்பவர்களை வைத்து பரிபாலிப்பதற்காக சர்க்காருக்கு அதிக செலவு ஏற்படும். ஆகையால் என்னைப் பொறுத்த வரை, தண்டனை கொடுத்து விடுவது மட்டும் அல்லாமல், அவர்களை சிறையில் வைத்திருப்பது மட்டும் அல்லாமல், சமுதாய அபிவிருத்தி திட்டம், புதிய அணைக்கட்டுத் திட்டம் இவைகளில் வேலை கொடுத்து பயன்படுத்திக்கொண்டால் சர்க்காருக்கு செலவு குறையும். அதுவும் தவிர, அவர்கள் சிறை தண்டனைக்குப் பிறகு அவர்கள் சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு பழையபடி சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபடாமல், நல்ல அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபடுவதற்கும், சிறிய கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கும் தகுந்த முறை யில் திருத்தி அமைத்து, வழி வகை செய்யுமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த குற்றங்களை நல்ல முறையில் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னால் அதிகாரிகளுக்கும் இன்னும் அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். கனம் அமைச்சர் அவர்களும் இன்னும் கொஞ்சம் தீவிரமாக பங்கு கொண்டார்களானால் இந்த சட்டம் வெற்றிபெறும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் மிகவும் சிரத் தை எடுத்துக்கொண்டு இந்த சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்ததற் காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRIMATHI KOLANTHAI AMMAL : கனம் சபைத் தலைவர் அவர்களே 10 a.m. இன்று நமது மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கிற மதுவிலக்கு சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்துவதற்குக் கொண்டு வந்துள்ள மசோ தாவை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச வேண்டும் என்று நினைக் கிறேன். முதற்கண் மது விலக்குச் சட்டத்தினால் அதிக சுகத்தை அடைகிற பெண்களின் சார்பாக இதைக்கொண்டு வந்ததற்கு நான் என் நன்றி யைச் செலுத்துகிறேன். அப்படிச் செலுத்துவதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படிச் சொன்னால் பெண்களும் குடிக்கிறார்களோ என்று நினைக்கலாம். பெரும்பாலும் குடிக்கிறவர்கள் ஆடவர்களாக இருந்தாலும் ஒரு சிலப் பெண்களும் குடிக்கிறார்கள் என்பதை நான் ஒப் புக்கொள்ளுகிறேன். பொருளாதாரத் துறையில் குடும்பங்களுக்கு ஏற்படு கின்ற பல தொல்லைகளாலும், ஏராளமான கஷ்டங்களாலும் சில பெண்கள் தங்களுடைய சுகத்தைக் கெடுத்துக்கொண்டு அவர்கள் செய்யும் காரியங் களுக்கு இவர்கள் உள்ளாகிறார்கள் என்ற காரணத்தாலும் பல அவ மானங்களுக்கு உள்ளாகிறார்கள் என்ற காரணத்தாலும் பல தொல்லை களுக்கு ஆளாகிறார்கள் என்ற காரணத்தாலும், சில பெண்கள் அனு பவித்து வருகிற கஷ்டங்களின் காரணத்தாலும் அவர்களுடைய சார்பாக சில வற்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்குச் சட்டம் தீவிர மாக அமுல் நடத்தப்படாத காரணத்தால் பெரும்பாலும் பாதிக்கப்படக் கூடியவர்கள் பெண்கள் என்பதால் அவர்களுடைய சார்பாக சொல்ல முன்வந்திருக்கிறேன். இதற்கு கனம் மந்திரி அவர்களுக்கு பேருதவி அளிப்பதுடன் பெரும்பாலான அங்கத்தினர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Srimathi Kolanthai Ammal] [13th March 1958

மதுவிலக்குச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கு கடும் தண்டனை விதிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வதற்கு இடம் இருந்தாலும் என்னுடைய தொகுதியில் மதுவிலக்குச் சட்டம் அதிகம் வெற்றி அடைந்திருக்கிறது என்று நான் சொல்லுவேன். இதில் அங்குள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர் பெரும் பங்கெடுத்துக்கொண்டதற்கு அவருக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். சில இடங்களில் வெற்றி அடையவில்லை என்றால் அங்குள்ள போலீஸ்காரர்களுக்கு லஞ்சம் கொடுத்து விடுவதாலும், அவர்களுடைய வறுமையின் காரணமாக அவர்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு, தகவல் கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்து விடுகிறார்கள். அதன் காரணமாக அங்கெல்லாம் மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில் அமுல் செய்யப்படாமல் இருக்கலாம். பல இடங்களில் நல்ல முறையில் வெற்றி கண்டிருக்கிறார்கள். எங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட மட்டில் அங்கு இந்தச் சட்டம் நல்ல முறையில் அமுல் செய்யப்பட்டு வருகிறது என்று சொல்லலாம். அதற்கு எங்கள் தொகுதி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு என் தொகுதியின் சார்பாக நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.. எப்பொழுதாவது வாசனை வருகிறது என்று தகவல் கொடுத்துவிட்டால் அதை கவனிக்க ஒரு முறை சுற்றி வந்து நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு நன்றியைச் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அத்துடன் சில குறைபாடுகளும் இருக்கலாம். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு தக்க நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு சில யோசனைகளையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நமது நாட்டில் பஞ்சமா பாதகமாகிய கொள்ளை, கொலை, கள், காமம், களவு என்று வள்ளுவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். திருவள்ளுவர் நமக்கு நல்ல முறையில் இதை திருக்குறளில் நமக்கு என்று வகுத்து வைத்திருக்கிறார். அவைகளில் ஒன்று கள், குடி. இவைகளில் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக்கொள்ளாமல் நல்ல முறையில் மக்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் திருக்குறளில் வகுத்து இருக்கிறார். அவைகளை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய காலங்களில் போலீஸ்காரர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது தங்களுடைய போலீஸ் உடைகளை அணிந்துகொண்டு போவதால் பலகஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதனால் அவர்கள் தங்களுடைய உடைகளில் செல்லாமல் வேறு உடைகளில் செல்லவேண்டியதாக இருக்கிறது. கிராமங்களில் போலீஸ் அதிகாரிகள் தகவல் தெரிந்து போனவுடன் பார்த்தால் அங்குள்ள அதிகார வர்க்கத்தினர் இதில் ஈடுபடுவதாக தெரிய வருகிறது. அவர்கள் பத்து அல்லது பதினைந்து வருஷங்கள் இதில் ஈடுபட்டு வந்திருப்பதால் அவர்கள் இந்த போலீஸ் அதிகாரிகளை மிரட்டி அனுப்பி விடுகிறார்கள். அவர்களை அப்படி அனுப்பிவைத்து விட்டு மறுபடியும் குடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். போலீஸ்காரர்கள் தங்களுக்கு உத்தியோகம் போய்விடுமோ என்று பயந்து திரும்பி வந்துவிடுகிறார்கள். சில இடங்களில் தங்களுக்குள்ள வறுமையின் காரணமாக லஞ்சம் வாங்கக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இதன் காரணமாக எந்த போலீஸ் அதிகாரி மது விலக்குச் சட்டத்தில் தீவீரமாக பங்கெடுத்துக்கொண்டு வேலை செய்கிறார்களோ அவர்களுக்கு அதிக பட்ச அலவன்ஸோ அல்லது சம்பளமோ கொடுக்கவேண்டும் என்றும் சிபாரிசு செய்கிறேன். மதுவிலக்கு சம்பந்தமாக அதிகமாக ஈடுபடுகின்ற போலீஸ் அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதாக அங்கங்கே காணப்படுகிறது. அவர்களுக்கு போதுமான அளவு சம்பளத்தை நம்முடைய அரசாங்கமே கொடுக்க முன் வந்து கொடுத்தாலேயொழிய அவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்யாமல் இருக்க முடியாது. அத்துடன் அவர்களுக்கு தங்களுடைய ஆடைகளில் போகாமல் மாற்று ஆடைகளில் போய் கண்டு பிடிப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக வேலங்காய்களை ஆடுகள் தின்று வருகின்றன. அந்த மரங்களின் பட்டைகளை சாராயம் காய்ச்சுவதற்கு என்று வெட்டி விட்டால் அந்தக் காய்களின் சத்துக்கள் குறைந்து போவதால் ஆடுகளுக்கு நல்ல சத்துள்ள ஆகாரமாக இல்லாமல் போய் விடுகிறது. அதனால் வேலம்



13th March 1958] [Srimathi Kolanthai Ammal]

பட்டைகளை வெட்டக்கூடாது என்று ஒரு உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அதை வெட்டுவதற்கு தடை விதித்து ஆடுகளுக்கு தீனி கிடைக்கும் வகையில் அதற்குச் சலுகைகள் காட்டவேண்டும் என்பதையும் இந்த இடத்தில் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

வியாதியஸ்தர்கள் என்ற பெயரில் பலர் தீராத வியாதி இருக்கிறது என்ற அடிப்படையில் பர்மிட்டுகள் வாங்கிவைத்துக்கொண்டு பல போதை கொடுக்கக்கூடிய பொருள்களை வாங்கி வைத்துக்கொண்டு உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள். இப்படி கொடுக்கப்படும் லைசென்சுகள் ஓரளவு குறைக்கப்படவேண்டும். உண்மையிலேயே தீராத வியாதியாக இருந்து அதுவும் மதுவினால் உயிர் வாழ முடியும் என்று இருந்தால்தான் அவர்களுக்கு ஓரளவு பர்மிட்டுகள் வழங்கலாம். மது இல்லாவிட்டால் அந்த வியாதி தீராது உயிர் வாழ முடியாது என்று சொன்னால் அவர்களுக்கு வேண்டுமானால் கொடுக்கலாம். இப்பொழுது பல அதிகாரிகள் பர்மிட்டுகள் வாங்கி வைத்துக்கொண்டிருப்பதால்தான் மது விலக்குச் சட்டத்தினுடைய ஒரு பெருமை குறைந்து விடுகிறது. அப்படிப்பட்ட சலுகைகள் காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

வேலம்பட்டைகளை வெட்டுவதால் ஆடுகளுக்கு நல்ல தீனி கிடைப்பதில் சத்து குறைந்து போவதோடு விறகு கிடைப்பதும் குறைந்து போய்விடுகின்றன. இது நமக்கு விவசாய இலாகாவிலிருந்து தெரிய வருகிறது. ஆகவே இம்மாதிரியான மரங்களை வெட்டக்கூடாது என்று ஒரு திட்டம் வகுக்க வேண்டும். இப்படிப்பட்ட மரங்கள் எல்லாம் விலை மதிக்கத்தக்க மரங்களாக இருப்பதால் அவைகளையெல்லாம் வெட்டக்கூடாது என்றும், அந்த மரங்களின் பட்டைகளையும் வெட்டக்கூடாது என்றும் திட்டம் வகுக்க வேண்டும்.

அதற்கு மேல் தென்னந்தோட்டங்கள், பனை தோட்டங்கள் அதிகமாக வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்கள் அதிகமான மரங்களை குத்தகைக்கு விட்டுவிடுகிறார்கள். அம்மாதிரி குத்தகைக்கு விடும் காலங்களில் மரம் ஒன்றுக்கு ஏழு ரூபாய் கிடைக்கிறது. அப்பொழுது அதிலிருந்து அவர்கள் அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். அத்துடன் அவர்கள் இன்னும் பல மரங்களை தெளு கட்டுவதற்கு என்று கொடுக்கிறார்கள். அப்படி தெளு கட்டுவதற்கு என்று சில மரங்களைக் கொடுத்து கள்ளு எடுத்து மற்ற கிராமங்களுக்குக் கொண்டுபோய் விற்றுவருகிறார்கள். இதன் மூலம் அவர்கள் அதிக லாபமடைந்து வருகிறார்கள். நமக்கு சிறந்த உணவு பொருளாகிய தேங்காயை உற்பத்தி செய்ய் முடியாமல் போய் விடுகிறது. இப்படி மரங்களை தெளு கட்டுவதற்கு விட்டு விடுவதால் இப்பொழுது நாம் எவ்வளவோ பெரிய வியாதிகளுக்கு இளநீரை உபயோகப்படுத்துகிறோம். இந்த இளநீர் பெரிய வியாதிகளுக்கு உபயோகப்படுகிறது. இதைப்பற்றி அனுபவம் பெற்றவர்கள் சொல்லுகிறார்கள். அந்த மரங்களை தெளு கட்டுவதற்கு விட்டுவிடுவதால் நமக்கு இளநீர் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே ஒருவாறு யோசனை செய்து இப்படி தெளுகட்டுவதற்கு மரங்களை விடுவதை தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் வட்டாரத்தில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளை எடுத்துச் சொன்னால் எதிர் கட்சி அங்கத்தினர்கள் சீறி விழமாட்டார்கள் என்று கருதுகிறேன். போலீஸ் அதிகாரிகளும் இந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள். மது விலக்கு சட்டத்தை மீறுகிறார்கள் என்று பலர் தகவல் கொடுக்கிறார்கள். அதைப்பற்றி கமிட்டியில் பேசுகிறார்கள். யார் அப்படித் தகவல் கொடுக்கிறார் என்ற தகவல் வெளி வருவதால் பல அடிதடி சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. அந்த துவேஷத்தின் காரணமாக கிராமங்களில் சச்சரவுகள் ஏற்படுகின்றன. அம்மாதிரி இல்லாமல் கமிட்டியில் இருப்பவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை வெளியில் விடாமல் இருக்கவேண்டும். நானே ஒரு தடவை போலீஸ் அதிகாரியை அழைத்துக்கொண்டு போய் மது விலக்குச் சட்டம் மீறப்படுவதைக் காண்பிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. அதனால் பலருக்கு கோபம் ஏற்படுகிறது. ஓரளவு ஏதோ நாட்டிற்கு நன்மை செய்யவேண்டும் என்று கருதும் போது இப்படிப்பட்ட கெடுதல்கள் எல்லாம் வருகின்றன. எங்களுடைய

[Srimathi Kolanthai Ammal] [13th March 1958

தொகுதியின் வரலாற்றைப் பார்த்தால் இது நல்ல முறையில் அமுல் செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்றுதான் நான் சொல்லுகிறேன். ஏனென்றால் எங்கள் தொகுதி போலீஸ் அதிகாரி சுற்றி வரும்போது ஏதாகிலும் வாசனை வந்தாலும் கூட அங்கு சென்று குற்றம் செய்வதை தடுத்து வருகிறார். அதனால் அங்கு இது வெற்றிகரமாகவே நடந்து வருகிறது என்று சொல்லவேண்டும்.

ஒரு சிலர் போலீஸ் அதிகாரிகளின் மீது குறைகளை சொல்லி குற்றங் களைக் கண்டுபிடிக்க முடியாதபடி, சட்டத்தை அமுல் நடத்த முடியாதபடி செய்து விடுகின்றார்கள். அதன் மூலம் ஏழைகளின் கஷ்டத்தை அதிகப் படுத்துகிறார்கள். சில கிராமப்புரங்களில் இருக்கின்ற எதிர்க் கட்சி தோழர் 'கள் தங்களுடைய கட்சியின் பலத்தை அதிகப்படுத்திக்கொள்ளும் முறையில் —சட்டசபையில் பார்த்தால் அவர்கள் இந்த திட்டத்தை ஆதரித்துப் பேசுகிறார்கள்—கிராமங்களில் சென்று பார்த்தால் " காங்கிரஸ்காரர்கள் உங் களுக்கு நன்மைகளைச் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு கொஞ்சம் கூட குடிப்பதற்கு இடம் கொடுக்காமல் இருக்கிறார்கள், உங்களுக்கு குடிக்க உரிமை இல்லையா, அப்படி ஏதாகிலும் குடித்து விட்டால் பார்த்தீர்களா அதற்கு 500 ரூபாய் அபராதம் போடுகிறார்களாம் " என் றெல்லாம் சொல்லி அங்கு குழப்பத்தை உண்டாக்கி வருகிறார்கள். இப்படி அவர்கள் செய்யும் காரியம் பட்சபாதம் அற்றது என்று சொல்ல முடி யாது. பொது மக்களுக்கு நன்மைகளைப் செய்யவேண்டும் என்று நினைக்கும் போது இப்படியெல்லாம் செயல்படக்கூடாது என்பதை இந்த இடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். இத்தகையதோர் மசோதாவை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருப்பதை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன். கடும் தண்டனை என்றுஅமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடும் தண்டனை என்பது மிகமிக கடும் தண்டனையாக இருந்தால் நாங்கள் அதை மேலும் வரவேற்போம். அத்தகைய கடும் தண்டனை இதற்குத் தகும். நாட்டின் வருமையை ஒழிக்கின்ற ஒரு முக்கியமான சட்டம் இது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிகமான தொகையை அபராதமாக விதியுங்கள், நீண்ட கால சிறை தண்டனையை கொடுங்கள், நீண்டநாட்கள் குற்றவாளிகள் சிறையிலே இருக்கும்போழுது அவர்களை நன்றாக தொழில் செய்யும்படி யாக தூண்டிவிட்டு அதன் மூலம் நல்ல லாபத்தை அரசாங்கம் பெறலாம், அவர்களுக்காக செலவு செய்வதற்கேற்ற வருமானத்தையும் பெறலாம் என்று கனம் • அங்கத்தினர் அர்த்தநாரீசுவர கவுண்டர் அவர்கள் சொல்லிய யோசனையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். இத்த கைய குற்றங்களுக்கு மிக கடும் தண்டனை விதிப்பதை பெண்கள் சார்பாக நாங்கள் எல்லோரும் ஆதரிக்கிறோம் என்பதை மறுமுறை சொல்லிக் கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. M. ANNAMALAI :** கனம் தலைவர் அவர்களே, நான் சார்ந் திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் மதுவிலக்கு திட்டத்தை ஆதரிக்கிறோம் என்று சொன்னாலும், இன்றைக்கு
10.12 a.m. கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை உண்மையிலேயே ஆதரிக்க வில்லை என்பதை நாங்கள் சொல்லிக்கொள்ளுகிறோம். இந்த மசோ தாவிலுள்ள சில பகுதிகளை திருத்தவேண்டுமென்று சிலபல திருத்தங்களை கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொண்டால் ஒழிய நாங்கள் இந்த மசோதாவை ஆதரிப்பதற்கில்லை. காரணம் இந்த மதுவிலக்கு மசோதாவானது பாமர மக்களை பாதிக்கக்கூடிய முறையில் அமைந்திருக் கிறது. பாமர மக்கள் என்றால் நாட்டுப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழை மக்களையும் விவசாய மக்களையும், பிற்பட்ட வகுப்பினரையும், தாழ்த்தப் பட்ட வகுப்பினரையும் தான் இது பாதிக்கும். உண்மையிலேயே இவர்கள் பொருளாதாரத் துரையில் முன்னேற்றம் காணவேண்டுமென்ற அடிப் படையிலே மதுவிலக்கு திட்டம் கொண்டுவரப்பட்டிருந்தாலும், இந்த சட்ட மன்றத்தின் முன்னால் தற்சமயம் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா அவர்களுக்கு மிகவும் தீங்கு இழைக்கக்கூடிய விதத்தில் அமைந்திருக் கிறதே தவிர, உண்மையிலேயே இதனால் அவர்கள் நல்ல பயன் அடைய வேண்டுமென்ற நல்ல எண்ணம் சர்க்காருக்கு கிடையாது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



13th March 1958] [Sri S. M. Annamalai]

குறிப்பாக 4-வது பிரிவில் (ஜி) என்ற உபபிரிவில் சாராயம் காய்ச்சக் கூடிய பாத்திரங்கள் வைத்திருந்தாலும் கூட அது குற்றம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் சென்று பார்த்தால் அங்கு மக்கள் வைத்திருக்கக்கூடிய பாத்திரங்கள் எல்லாம் சாராயம் காய்ச்சக் கூடிய பாத்திரங்கள் என்று சொல்லிவிடலாம். சாராயம் காய்ச்சாத குடும்பத்தில் கூட, சாராயம் காய்ச்சக்கூடிய பாத்திரங்கள் இருந்தால் அது குற்றம் என்று சொல்லுவது சரியல்ல. அப்பேர்பட்ட பாத்திரங்களை கிராமப்புற மக்கள் நெல் முதலியவைகளை வைத்துக்கொள்தவற்காக உப யோகப்படுத்துகிறார்கள். ஆகையால், சாராயம் காய்ச்சக்கூடிய பாத்திரங்கள் வைத்திருந்தால் குற்றம் என்று சொல்லப்படுவது கிராமப்புற மக் களுக்கு தீங்கு இழைக்கும்.

அடுத்தபடியாக ஒரு வீட்டில் சாராயம் காய்ச்சக்கூடிய பொருள்கள் வைக்கப்பட்டிருந்தால், அந்த வீட்டுச் சொந்தக்காரன் குற்றவாளியாகிறான். வீட்டுச் சொந்தக்காரன் வீட்டை பூட்டிவிட்டு வெளியில் சென்றிருக்கும் பொழுது மற்றொருவனுக்கு வீட்டுச் சொந்தக்காரன் மீது இருக்கும் விருப்பு வெறுப்பினால் அவன் வீட்டில் மறைமுகமாக சாராயத்தை கொண்டுவந்து வைத்துவிட்டாலும் கூட, வீட்டுச் சொந்தக்காரன்தான் சாராயம் வைத் திருக்கிறான் என்ற அளவு குற்றம் சாட்டக்கூடிய நிலைமை இந்த செக் ஷனில் இருக்கிறது. அதற்குமேல் எந்த சட்டத்திலும் இல்லாத கொடுமை இந்த மசோதாவில் இருக்கிறது. ஐ.பி.ஸி, ஸி.ஆர்.பி. ஸி. முதலிய சட்டங்களிலில்லாத கொடுமை இந்த மசோதாவில் இருக்கிறது. குறைந்தபட்ச தண்டனை அதாவது குறைந்தபட்சமாக 6 மாத தண்டனை விதிக்கவேண்டுமென்று இந்த மசோதாவில் ஒரு ஷரத்து கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதுவும் முதல் குற்றத்திற்கே 6 மாதத்திற்கு குறையா மல் தண்டனை அளிக்கப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எந்த சட்டத்திலும் இல்லாத கொடுமை. அப்படிப்பட்ட தண்டனைகளை குறைக்கவேண்டுமென்று நான் சிலபல திருத்தங்களை கொடுத்திருக்கிறேன்.

அடுத்தபடியாக 41-ஏ பிரிவில், குடித்த ஒருவனை டாக்டரிடம் அழைத்துச் செல்லுவதற்கு போலீஸார் விரும்பினால், அதற்கு அவன் மறுத்தால் 186-வது பிரிவு ஐ.பி.ஸி. பிரகாரம் ஒரு வழக்கு தொடரலாம் என்று ஐ.பி.ஸியை கொண்டு வந்து நடுவிலே புகுத்தியிருக்கிறார்கள்.

இன்று நாட்டிலுள்ள நிலைமை என்னவென்றால், போலீஸார் சட்டங் களை நல்ல முறையில் அமுல் செய்யாமல் துஷ்பிரயோகப்படுத்துகிறார்கள். சட்டங்கள் மக்களுக்கு பயன்படவேண்டுமென்று நல்லெண்ணத்தோடு சட்ட மன்றத்தில் நாம் சட்டங்களை இயற்றுகிறோம். ஆனால் சட்டங்கள் நல்ல முறையிலே பயன்படாமல் கிராமப்புறங்களிலே துஷ்பிரயோபகப்படுத்தப் படுகின்றன. மதுவிலக்கு திட்டத்தை ஆதரிப்பவர்கள் இந்த மசோதாவை வெறுக்கின்றார்களே என்று அமைச்சர்கூட சிந்திக்கலாம்.

2, 3 கிராமங்களுக்குச் சென்று ஆங்காங்கு கிராமக் கமிட்டிகளை நிய மித்து அவர்களின் உதவியால் யாரும் குடிக்கக்கூடாது என்று சில கட்டுப் பாடுகளை விதித்து பிரசாரம் செய்துகொண்டுவருகிறேன் நான். போலீஸ் உதவி இல்லாமலே நான் இம்மாதிரி செய்துகொண்டுவருகிறேன். ஆனால் சில சமயங்களில் போலிஸ்காரர்களே குடிப்பவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். மதுவிலக்கு சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டுமென்று நல்லெண்ணம் குறிப்பாக 100-க்கு 10 போலிஸ் தோழர் களிடத்தில் கூட கிடையாது. இந்த அளவிலே இருக்கிற போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு இவ்வளவு கடுமையான சட்டத்தை கிராமப்புற மக்கள் மீது புகுத்துவது உண்மையிலேயே கேடு விளைவிக்கும். இம்மாதிரி சட்டங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதால் கிராம மக்கள் மிகவும் கஷ் டப்படுகிறார்கள். போலீஸ்காரர்களுக்கு யார் மீது வஞ்சம் இருக்கிறதோ இந்த வஞ்சத்தை தீர்த்துக்கொள்ளுவதற்காக பலவித சதி வழக்குகள் இந்த சட்டத்தின் மூலமாக தொடுக்கலாம். அம்மையார் அவர்கள் சொன் னார்கள் மாற்றுக்கட்சித் தோழர்கள் ஒத்துழைக்கவில்லை என்று. உண் மையிலேயே சொல்லுகின்றேன். இந்த சட்டத்தின் மூலமாக மாற்றுக் கட்சித் தோழர்கள் மீது கூட சதி வழக்குகளை தொடுக்க ஏது இருக்கிறது.

[Sri S. M. Annamalai] [13th March 1958

நான், போளூர் மாவட்டத்தைச் சேர்ந்த அண்ணாமலை. அங்கு இருக்கும் காங்கிரஸ் கட்சி தோழருக்கு ஆகவில்லையென்றால் மறைமுகமாக என்னுடைய தோட்டத்தில் சாராயத்தை வைத்துவிட்டு, அண்ணாமலை குடிக்கிறார், சாராயம் வைத்திருக்கிறார், சாராயம் விற்கிறார் என்று சதி வழக்குகள் போடக்கூடும். அம்மாதிரி மாற்றுக் கட்சி தோழர்கள்மீது கூட சதிவழக்குகள் தொடரப்படலாம். சட்டமன்றத்திற்கு முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா அந்த வகையிலே அமைந்திருக்கிறது. உண்மையாகவே இந்த மசோதா பாமர மக்களுக்கு பயன் தரவேண்டுமென்றால், பாமர மக்களுடைய கஷ்டத்தையும், துயரத்தையும் போக்கவேண்டுமென்று சொன்னால், இதுசம்பந்தமாக நான் கொடுத்திருக்கும் சில பல திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். உண்மையிலேயே மதுவிலக்கு திட்டம் வெற்றி பெறவேண்டுமானால், இம்மாதிரி கொடுமையான சட்டங்களை போட்டு போலீஸ்காரர்கள் கிராமபுறங்களிலே அட்டூழியம் செய்யாமல், கிராமத்திலுள்ள பாமர மக்களை வாட்டி வதைக்காமல் இருக்கவேண்டும். அதற்காகத் தான் நான் சில பல திருத்தங்களை கொடுத்திருக்கிறேன். கிராமப்புறங்களிலே கிராம மக்களுடன் அடிக்கடி பழக்கப்பட்ட நான் சொல்லுகிறேன். இம்மாதிரி போலீஸ்கர்ரர்கள் சதி வழக்குகளை போடுகிறார்கள். தற்சமயம் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா மேலும் போலீஸார் அம்மாதிரி சதிவழக்குகளை தொடருவதற்கு ஏதுவாக இருக்குமே ஒழிய, இது பாமர மக்களுக்கு நல்ல பலன் தரக்கூடிய மசோதா அல்ல- ஆகவே, நாங்கள் கொண்டுவந்திருக்கும் சில பல திருத்தங்களை சர்க்கார் ஏற்றுக்கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் இந்த மசோதாவை மனப்பூர்வமாக ஆதரிப்போம் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI M. WILLIAM**: Mr. Chairman, Sir, it is nearly two decades since Prohibition has been introduced in this State. It is a known fact that the expected measure of success has not been achieved. It is due to several factors. As suggested by a few hon. Members, poverty and unemployment are the most important factors that have contributed to the failure of this scheme. In addition to this, the indifference on the part of the authorities, that is the lowest officers in the Excise Department and in the Police Department who are also victims to this evil, is also responsible for the failure of this scheme. Even during the first year when Prohibition was introduced, there had been a lot of propaganda work among the people to do away with this evil pointing out to them the several evil effects. But later on the effort was relaxed and that also contributed to the failure of the scheme. Of course if the authorities who are responsible for the administration of this Department are free from this evil and if adequate steps are taken to give intensive propaganda especially in the villages, I am sure that this evil will be eradicated. But what do we find now? It is spreading like a cottage industry. That apparently is due to the poverty and the unemployment among the people. Steps in this direction should be taken to ameliorate the conditions of the poor.

Then, Sir, there is the question of licensing system about which I must say a few words. The tappers and owners have to take licence. I think that system is highly objectionable because it is a denial of the fundamental right of individual. The owner or the tapper has got the right to tap for sweet toddy which is the staple food especially among the climbers and other poor sections of the people. Sweet toddy is purchased by several thousands for food.



13th March 1958] [Sri M. William]

In the case of other things like jack trees, mango trees, cashewnut trees, there is no such licensing system. Why should the tappers or the owners be asked to take out a licence for the purpose of taping sweet toddy? It is their fundamental right. I am sure that it is also an act opposed to the principles of natural justice. So, I think that the licensing system must not be insisted upon in the case of tapping sweet toddy. Of course in the Kanyakumari district wherein Prohibition Act is in force, there was a lot of opposition for it. When the licensing system was sought to be introduced there were lot of protests. The Government had to give it up. Government also came to know later on that the people are rather law abiding and that they tap sweet toddy for their domestic use. There are cases of offences committed by tappers also but there are provisions to deal with them in regard to intoxicating liquors. Similary action can be taken against the tapper for offences committed. There are also deterrent measures for punishing the offenders. But the licensing system should not be insisted upon in the case of people who engage themselves in the tapping of sweet toddy because most of them are very poor and use it only for domestic use. This is my [illegible], Sir.

**SRI S. THANGAVELU**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்விவகார அமைச்சர் கொண்டுவந்துள்ள மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் மதுபானப் பழக்கத்தை ஒழித்துக் கட்டுவதற்காகத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதைப் பாராட்[illegible]திர் கட்சியிலுள்ள ஒரு கனம் அங்கத்தினர், மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் விஷயத்தில் வேலியே பயிரை மேய்கிறது என்று சொன்னார். அவர் சொன்னது உண்மையாக இருக்கலாம். எத்தனையோ வருஷங்களாக நம் நாட்டில் இருந்துவந்துள்ள மது பானபழக்கத்தை திடிரென்று ஒழித்துக்கட்ட முடியாது. அதை ஒழித்துக்கட்டுவதில் பல கஷ்ட நஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. 10-25 a.m.

போலீசார் எடுத்துவரும் நடவடிக்கைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டது. போலீசார் உண்மையிலேயே போற்றத்தக்க நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். சட்டத்தை அமல்நடத்த அவர்கள் எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பதுபற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். காடாம்புளியூர், வண்டிப்பாளையம் ஆகிய பகுதிகள் காடுகள் நிறைந்தவை. கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒரு தொழிலாக ஆகிவிட்டது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தக் காடுகளில் அந்தத் தொழிலைச் செய்பவர்களைப் போலீசார் சென்று பிடிக்கிறார்கள். பகலில் சாராயம் காய்ச்சினால் போலீசார் வந்து பிடித்துவிடுவார்கள் என்று பயந்து சாராயம் காய்ச்சுபவர்கள் இரவில் அந்த வேலையைச் செய்கிறார்கள். சாராயம் காய்ச்சுபவர்கள் பகலில் காட்டுக்குச் சென்றுவிடுகிறார்கள். அவர்கள் தகுந்த ஏற்பாடுகளுடன் காட்டுக்குச் செல்கிறார்கள். அவர்கள் இரவிற்கு வேண்டிய சாப்பாட்டையும் மறுநாள் மத்தியான்னத்திற்கு வேண்டிய சாப்பாட்டையும் கட்டுசாதமாகக் கட்டிக்கொண்டு காட்டுக்குச் செல்கிறார்கள். இதை சிலர் அறிந்து போலீஸாருக்குத் தெரிவிக்கிறார்கள். அதாவது, " கோபாலனும் கிருஷ்ணனும் வண்டிப்பாளையம் காட்டிற்குள் சாராயம் காய்ச்சுகிறார்கள் " என்று ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரிடம் யாராவது அறிவித்தால், அவர் உடனே மேலதிகாரிகளின் உத்தரவைப் பெற்றுக் கொண்டு இரண்டு மூன்று கான்ஸ்டபில்களுடன் காட்டுக்குச் செல்வார். அவர் காட்டுக்குள் செல்லும் நேரம் இரவு நேரம். அப்போது காட்டில் சாராயம் காய்ச்சுபவர்கள் எங்கே இருக்கிறார்கள் ? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடிப்பது மிக மிகக் கஷ்டம். ஒன்றும் தெரியாது. இருந்தாலும், சாராயம் காய்ச்சும் இடத்திற்கு அருகே

[Sri S. Thangavelu] [13th March 1958

சென்றல் ஒருவித நாற்றம் அடிக்கும். அந்த நாற்றம் எங்கிருந்து வரு கிறதோ அந்த இடத்திற்கு அவர்கள் போவார்கள். அங்கே சென்றல் சாராயம் காய்ச்சப்படுவதைப் பார்ப்பார்கள். சாராயம் காய்ச்சுபவர்கள் அதை எப்படிக் காய்ச்சிக்கொண்டிருப்பார்கள் என்று சொல்ல விரும்பு கிறேன். ஒரு சட்டிக்குள் ஒரு பித்தளைப் பாத்திரம் இருக்கும். அந்தப் பித்தளைப் பாத்திரத்திற்குள் 5-10 நாட்களாக ஊறவைக்கப்பட்ட வாழை பழம், வைக்கோல், வேலம்பட்டை முதலியவைகள் இருக்கும். சட்டியின் மத்தியில் ஒரு துவாரம் இருக்கும். அந்தச் சட்டியை அடுப்பின் மேல் வைத்து அடுப்பிற்குத் தீ மூட்டிஞல், நெருப்பு ஜ்வாலை சட்டியிலுள்ள துவாரத்தின் வழியாக பித்தளைப் பாத்திரத்தைத் தாக்கும். அப்போது பித்தளைப் பாத்திரத்திலுள்ள பொருள்கள் கொதித்து சாராயமாக மாறும். இம்மாதிரி அவர்கள் சாராயம் காய்ச்சுவார்கள். இன்றைக்குப் போலீஸ்காரர்கள் என்ன செய்வார்கள் ? தங்களால் இயன்ற வரைக்கும் இரவிலே கேஸ் பிடிக்கப் போகிருர்கள். இம்மாதிரி எத்தனையோ கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. நான் திருநாவலூர் போலீஸ் ஸ்டேஷனில் ட்யூட் டியில் இருந்தபோது 75 கேஸ்கள் போட்டிருக்கிறேன். அப்படிப் பிடித்த 75 கேஸுகளிலேயும் பத்து, பத்து ரூபாயாக ரிவார்டுகள் வாங்கியிருக்கிறேன். நாமும் ரிவார்டு வாங்கவேண்டும், நாமும் நல்ல பெயர் வாங்க வேண்டும் சர்க்காரிலே என்ற மனஆர்வம் கொண்ட போலீஸ் சிப்பந்திகள் இருக் கிருர்கள். தோழர் அண்ணுமலை அவர்கள் சொன்னது போல், ஒரு சிலர் பக்கத்து வீட்டுக்காரன் "கெட்டிக்காரன்" என்ற பெயரை வாங்கிக் கொண்டு விட்டானே என்ற பொருமையினுல், பக்கத்து வீட்டுக்காரனுடைய தோட்டத்து குப்பையிலே ஒரு பாட்டில் சாராயம் வைத்து விடுவான். தனக்கு வேண்டிய போலீஸ் சிப்பந்திகளைக் கூப்பிட்டு, "கிருஷ்ணன் இன்னுர் வீட்டுக் குப்பையிலே சாராய பாட்டில் வைத்திருக்கிருன்" என்று இன்பர் மேஷன் கொடுத்ததை நிரபராதியான போலீஸ் சிப்பந்தி உடனே நம்பி, மகஜர், சாட்சி தயார் செய்து, கோர்ட்டில் கேஸ் போட சாட்சிகள் சொல் வதின் பேரில் நீதிபதி 6 மாதம் தண்டனை கொடுக்கிருர்கள். பொய் சாட்சி சொல்வதனுல் எந்த அளவுக்கு ஒரு நிரபராதி தண்டனைக்கு உள்ளா கிருன் என்பதை சில பொதுமக்கள் உணருவதில்லை. தண்டிக்கப்படு பவனும் சகோதரன்தானே என்பதை உணரக்கூடிய சக்தி அவருக்கு இல்லை. நாம் அத்தனை பேரும் சட்டசபையில் சட்டத்தைப் போட்டு விடு கிறேம். அந்தச் சட்டம் பொது மக்களிடம் போய்ச் சேரும்போது பொது மக்கள் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கிருர்கள். ஆனல் அந்தச் சட்டத்தை தகர்த்து எறிவதற்கு இல்லை. என் இந்தச்சட்டம் வந்தது என்று கூடப் பொதுமக்கள் நினைக்கக்கூடிய அளவுக்கு வந்துவிடுகிறது. பொய்ச் சாட்சி சொல்லக்கூடாது என்பது அப்படிப்பட்டவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனல் இப்படிப் பொய்யான தகவல் கொடுக்கும் ஒரு நபரைப் போலீஸ் அதிகாரிகளும், போலீஸ் சிப்பந்திகளும் விசாரிக்காமல் அவர்கள் சொல்வது சரியாக இருக்கலாம், என்று நினைப்பதால் நிரபராதி யான மனிதன் சட்டம், சாட்சி, மகஜர் முதலியவைகளினுல் கோர்ட்டில் தண்டிக்கப்படுகிருன். பொய் சொல்லும் மனிதன் இல்லையென்றல் இந்தச் சட்டம் நல்லமுறையில் அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்பதில் எனக்கு ஐயமில்லை. இதைக் கொண்டுதான் நமது தோழர் போலீஸ் என்னும் வேலியே பயிரை மேய்கிறது என்று சொல்லியிருக்கிருர். இம்மாதிரி மக்கள் பொய் மகஜர், பொய்ச்சாட்சி முதலியவைகளைத் தயார் செய்வதனுல் நிரபராதிகள் தண்டிக்கப்படவேண்டி ஏற்படும்போது, போலீஸ்காரர்களைப் பார்த்து "அவர்கள் பிரிட்டிஷார் ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்தது போலவே இன்னும் இருக்கிருர்கள்" என்று கருதுவது சரியல்ல. அவர்களும் நாளடைவில் நல்ல முறையிலே மாறி, தாங்களும் நாட்டு மக்களுக்கு நல்ல சேவை செய்யவேண்டும், இந்த நாட்டு மக்களுடைய சுபீட்சத்திற்குப் பாடுபடவேண்டும் என்று உண்மையி லேயே நினைக்கும் அந்தத் தொழிலாளர்கள் மீது மீண்டும் மீண்டும் கெட்ட பெயரைச் சுமத்திஞல், அவர்கள் என்னநினைக்கக் கூடும் ? நல்லவேலை செய்து கொண்டிருக்கும் தங்களைச் சர்க்காரும், எதிர்க் கட்சித் தோழர்களும் வெறுத்துக் கொள்கிருர்களே என்று மனம் உடைந்து போய், நல்லவேலை செய்து என்ன பயன் என்று நினைக்கக் கூடும். யாராவது கள்ளச் சாராயம் காய்ச்சுவதாகத் தகவல் கிடைத்தாலும்



13th March 1958] [Sri S. Thangavelu]

காய்ச்சிக் கொண்டு போகட்டும் என்று உற்சாகமற்று இருந்து விடுவார்கள். ஆகவே, நாம் போலீஸ் சிப்பந்திகளையும், அதிகாரிகளையும் நல்ல முறையில் நடத்தி, அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைக் கொடுத்து, ஆதரவு காட்டிஞல், அவர்களும் தீவிரமாக, உற்சாகமாக, மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் வகையில் பணியாற்றக் கடமைப்பட்டவர்களா வார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வேலியே பயிரை மேய்கிறது என்ற அந்த விஷயத்தில் சர்க்கார் எத்தனையோ போலீஸ் சிப்பந்திகளை வேலையிலிருந்து சஸ்பண்டு செய்தும், டிஸ்மிஸ் செய்தும் இருக்கிருர்கள். இப்படி சில போலீஸ் சிப்பந்திகள் செய்தது குற்றம் என்று சர்க்காருக்குத் தெரிந்த பிறகு, போதுமான தண்டனை கொடுப்பதோடு, போலீஸ் இலாகாவிற்கே தகுதிஅற்றவர்களாக கருதி வேலையிலிருந்து விலக்கி இருக்கிருர்கள்.

கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி, குடிக்கக்கூடியவன், கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடியவன் இவர்கள் பேரில் கேஸ் போடுவது பற்றிய உண்மைகளை தகுந்த அதிகாரிகளைக் கொண்டு விசாரணை செய்வது அவசியம். போலீஸ் சிப்பந்திகள் பொய்க் கேசுகள் போட்டிருக்கிருர் களா ? என்பதை யெல்லாம் ஆங்காங்கே விசாரணை செய்வதற்கு எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் முதலியவர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்தால் என் போன்றவர்களுக்கு அது ஒரு சாதனமாக இருக்கும். அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டால் மதுவிலக்குச் சட்டத்தை நல்ல முறையிலே அமுலுக்குக் கொண்டுவர நாங்கள் தீவிரமாக ஒத்துழைத்து பாடுபடுவோம் என்பதில் ஐயமில்லை.

குடிப்பவர்களுக்கும், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கும், ஒன்றி ரண்டு வாரங்கள் சிறைத் தண்டனையோ 25 அல்லது 30 ரூபாய் அப ராதமோ விதித்தால் போதாது. குடிக்கிறவர்களுக்கு 50 முதல் 100 ரூபாய் வரை அபராதமும், காய்ச்சுகிறவர்களுக்கு 200 முதல் 250 ரூபாய் வரைக்கும் அபராதமும் போடலாம். இத்தகைய அதிகமான தண்டனை கொடுத்தாலொழிய குற்றம் செய்கிறவர்களுடைய எண்ணிக்கையை குறைக்க முடியாது. குடிப்பவர்களுக்கு உடந்தையாகவும், காய்ச்சக் கூடியவர்களுக்கு உடந்தையாகவும், இருக்கக் கூடிய போலீஸ் சிப்பந்திகளுக்கும், மற்றவர் களுக்கும் தகுந்த தண்டனைகொடுக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏதோ ஒரு சில பணம் உள்ளவர்கள் குடிப்பதெற்கென்றே பர்மிட் வாங்கிக் கொள்கின்ருர்கள். வயிற்று வலி, மார்வலி, கால் இழுப்பு, என்று ஏதாவது காரணம் காட்டி விண்ணப்பம் போட்டு குடிப்பதெற்கென்று பர்மிட் வாங்கி வைத்துக் கொள்கின்ருர்கள். குடிப்பதற்குப் பர்மிட் கொடுத்தால் தான் காக்காய் வலிப்பு நிற்குமென்றும் சொல்லி பணவசதி யுள்ளவர்கள் பர்மிட் வாங்கிக் கொள்ளுகிருர்களேயொழிய, சாதாரண ஏழை விவசாயியோ, ஹரிஜனங்களோ, தாழ்த்தப் பட்டவர்களோ, இப்படிப் பட்ட உண்மையான காரணங்களுக்கு பர்மிட் வேண்டுமென்று பல தடவை களில் மனுச் செய்து கொண்டாலும், அவர்களுக்குப்பர்மிட் கொடுக்கப் படுவதில்லை. இம்மாதிரி பர்மிட் கொடுப்பதையே நாம் நிறுத்திவிட்டால் ரொம்ப நல்லதாக இருக்கும். குடிக்கக்கூடாது என்று சட்டம் செய்து விட்டு ஒரேவித காரணங்களுக்காக ஒரு சிலருக்கு கொடுத்துவிட்டு மற்றும் சிலருக்கு அதே காரணங்களுக்காக கொடுக்காமலிருப்பதால் பொது மக் களிடத்தில் என்ன கருத்து நிலவக்கூடும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ்காரர்கள் போட்ட சட்டம் ஆதலால் காங்கிரஸ் காரர்களுக்கு மட்டும் பர்மிட் கொடுப்பார்கள், மற்றவர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள், என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லக்கூடும். ஆகை யால் யாருக்குமே இத்தகைய பர்மிட்டுகள் கொடுக்ககூடாது என்று நான் இந்த நேரத்தில் செல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இம்மாதிரி அலுவலகங்களில் சென்னை அரசாங்கம் போதுமான அளவில் எத்தனையோ சிப்பந்திகளைப் போட்டு மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக முடிய நல்ல சேவை செய்து வருகிறது என்பதைச் சொல்லிக்கொண்டு இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

10-40 a.m. **SRI A. V. P. PERIYAVALAGURUVA REDDI :** கனம் தலைவர் அவர்களே, இப்போது மதுவிலக்கு திட்டமானது மக்களுக்கு மிகவும் முக்கியமானதுதான். மக்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான திட்டம்தான். ஆனால் தொன்று தொட்டு ஆகாரத்தோடு ஆகாரமாக மது குடிப்பது பலகாலமாகப் பழகி போய்விட்டதன் காரணமாக, என்ன தான் அரசாங்கம் தீவிரமான சட்டத்தைக் கொண்டு வந்து குடிப்பதை அடியோடு நிறுத்தி விடவேண்டுமென்று முயற்சி செய்தாலும் நடைமுறையில் சிரமமாக இருக்கிறது. சட்டபூர்வமாக குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றால் அது மிகவும் கஷ்டமான காரியம்தான். சட்டம் இயற்றி இருக்கிறோம். குடிப்பவர்களை போலீஸ்காரர்கள் பிடிக்கிறார்கள். கேஸ் போடுகிறார்கள். ஆனாலும் நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதும், குடிப்பதும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது நம் இராஜ்ஜியத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் குறைந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார். அநேக ஜில்லாக்களில் இந்தப் பழக்கம் குறைந்து வருகிறது என்றார். அதாவது போலீஸ்காரர்கள் கேஸ் போடுவது குறைந்து விட்டதன் காரணமாக மதுவிலக்குக் குற்றங்கள் குறைந்துவிட்டதாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார். உண்மையில் நாட்டில் நூற்றுக்கு 80 பேர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** குற்றம் குறைந்திருக்கிறது என்ற காரணத்தினால் மட்டும் சொல்லவில்லை. கள்ளச் சாராயத்தின் விலையும் அதிகமாகப் போய் இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் நான் சொல்கிறேன்.

**SRI A. V. P. PERIYAVALAGURUVA REDDI :** என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் குடிசைத்தொழில் போல இன்றைக்குச் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். அதிகமான மக்களும் குடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். சாதாரணமாக கிராமங்களில் பார்த்தால் பொங்கல் போன்ற விசேஷ பண்டிகை காலங்களில் சாதாரணமாக இருப்பதைவிட அதிக உற்சாகமாக இருக்க வேண்டும் என்பதற்காக எங்கேயோ போய் கள்ளச் சாராயம் காய்ச்சுகிற இடத்திலிருந்து வாங்கி குடித்துவிட்டுத்தான் அதிகமாக மக்கள் வந்துவிடுகிறார்கள். போலீஸார் கள்ளச் சாராயம் குடிப்பதைத்தடுக்க முயற்சி செய்து வருகிறார்கள் என்றாலும் நூற்றுக்கு 80 பேர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மேலும் எல்லாப் போலீஸ்காரர்களும் இதைத் தடுப்பதற்கு தீவிரமான முயற்சி செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களிலும் அநேகம் பேர் இதில் சம்பந்தப்பட்டுத் தான் இருக்கிறார்கள். இதைத் தடுப்பது அதனால் மிகவும் சிரமமாகவே இருக்கிறது.

இப்போது இதைத் தடுப்பதற்காக மரம் வைத்து இருக்கிற சொந்தக்காரர்களையும் கூட இந்த சட்டத்தின்கீழ் தண்டிப்பதற்கு வசதி செய்யப்படுகிறது என்று தெரிகிறது. நூறு தென்னை மரமோ, பனை மரமோ உடைய சொந்தக்காரர் அந்தத் தோப்பை அப்படியே குத்தகைக்குவிட்டு விடுகிறார். குத்தகைக்கு எடுத்துக்கொண்டவன் அந்தத் தோப்பில் தோப்பு சொந்தக்காரருக்குத் தெரியாமலேயே கள் கட்டினால் அதற்கு இவர் என்ன செய்வார் ? தோப்பு எங்கே இருக்கிறது என்பதுகூடத்தெரியாமல் பல சொந்தக்காரர்கள் இருக்கலாம். அப்பேர்ப்பட்டவர்களை கேசில் சம்பந்தப்படுத்துவது பொருத்தமாக இருக்காது. இந்தமாதிரியாகச் சட்டத்தைப் போடுவதால் எவ்வித பயனும் இருக்காது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

என்னுடைய சொந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு நான் சில உண்மைகளை சொல்ல முடியும். கிராமப்புறங்களில் சாராயம் காய்ச்சுகிறவர்கள் உள்ளூரில் உள்ள பெரிய மனிதர்களுடைய ஆதரவு இல்லாமல் அதைச் செய்வதில்லை. சட்டம் இருக்கிறது. போலீஸ்காரர்கள் வந்து பிடித்துக் கொள்வார்கள். தண்டனை கிடைக்கும் என்பதை எல்லாம் தெரிந்து கொண்டு உள்ளூரில் உள்ள பெரியவர்களுடைய உதவி இருந்தால் தான் போலீஸ்காரர்களிடம் இருந்து தப்ப முடியும் என்பதை நன்றாக



அவர்கள் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். கேஸ் போடப்படுவது ஏழை பாழை, அப்ராணிகள் மேல்தான். பணக்காரர்கள் குடிக்கிறார்கள். போலிஸ்காரர்கள் போய் பிடிக்கக் கூட முயற்சி செய்வதில்லை. அப்படியே பிடித்தாலும் டாக்டரிடம் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. போகும் போதே அவன் சட்டென வெள்ளைப் பூண்டை வாயில் போட்டுக்கொண்டு விடுகிறான். டாக்டரிடம் உப் என ஊதினால் இந்த சாராயம் இல்லை. உள்ளிப்பூண்டு வாசனை என்று டாக்டர் சொல்லிவிடுகிறார். அவன் தப்பித்துக் கொள்கிறான். ஆகவே என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் எத்தனை சட்டங்களைக் கொண்டுவந்தாலும், ஏழு மாதம், ஏழு வருஷம் தண்டனை அளித்தாலும் கூட குடிப்பழக்கத்தை நிறுத்த முடியாது. சட்டத்தினால் அதைச் செய்வது சாத்தியமல்ல. இன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்களும் கூட குடிக்கக் கூடாது என்றுதான் சொல்கிறார்கள். ஆகவே நான் சொல்கிற யோசனை என்னவென்றால் சர்க்கார் எல்லா அங்கத்தினர்களையும் ஒன்றாக வைத்து நாட்டில் குடிப்பழக்கம் இல்லாமல் செய்வதற்கு நான் பூர்ணமாக உழைக்கிறேன் என்பதாக விஸ்வாசப் பிரமாணம் வாங்கிக் கொண்டு அவர்களுடைய ஒத்துழைப்பின் பேரில் இதைச் செய்தால் நிச்சயமாக நாட்டில் குடிப்பழக்கமே இல்லாமல் செய்துவிட முடியும். இதுதான் இப்போது முக்கியமாகச் செய்யவேண்டியக் காரியமாகும்.

**SRI P. S. K. LAKSHMIPATHI RAJ :** கனம் அங்கத்தினர் பேசுகின்றபோது சட்டசபையில் உள்ளவர்கள் பலர் குடிப்பதாக பேசுகின்றார். அது சரியா ?

**MR. SPEAKER :** அவர் அப்படிக் குறிப்பிடவில்லை.

**SRI A. V. P. PERIYAVALAGURUVA REDDI :** நான் சபையில் உள்ளவர்கள் குடிப்பதாகச் சொல்ல வில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் கட்சிப் பாகுபாடின்றி குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு முயற்சிப்பதாக உறுதி எடுத்துக்கொண்டால் நாட்டில் யாரும் குடிக்காமல் செய்துவிடலாம் என்பதாகத் தான் சொன்னேன். அதைத் தவிர சட்டத்தினால் அதைச் செய்ய முடியாது என்று குறிப்பிட்டேன். காரணம் நாம் தான் வோட்டு வாங்கப் போகவேண்டியிருக்கிறது. கிராமத் தலைவனே கள்ளச் சாராயம் காய்ச்சுகிறான். அகப்பட்டுக்கொள்ளும்போது நம்மிடத்தில் வந்து கெஞ்சுகிறான். அவனுக்காக போலிஸிடத்தில் நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. காரணம் அடுத்த தேர்தலில் அவனால் தான் நமக்கு 500 வோட்டுகளுக்கு மேல் வரவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் தான் நாம் இருக்கிறோம் என்பதை உள்ளபடியே நான் சொல்கிறேன். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேச எனக்குத் தெரியாது. நடைமுறையில் நடக்கிறதைத் தான் நான் சொல்கிறேன். இதில் ஏதாவது குற்றங்குறை இருந்தாலும் சபையில் உள்ளவர்கள் மன்னிக்க வேண்டும்.

குடிக்கக் கூடாது என்று நம் தந்தை, மகாத்மா சொன்னார் என்று நாக்களவோடு சொல்லிக் கொண்டிருக்காமல் உள்ளன்போடு, ஒரு விரதம் எடுத்துக் கொண்டு குடிக்காமல் இருப்பதற்கு உழைத்தால் நிச்சயமாக நம் நாட்டில் யாருமே குடிக்காமல் இருக்கும்படிச் செய்துவிடலாம். அப்படிச் செய்யாது சட்டத்தை மட்டும் கொண்டுவந்து பயன் இல்லை. இன்றைக்கு நிச்சயமாக சொல்வேன், பணக்காரர்கள் தான் குடிக்கிறார்கள். ஏழை பாழை வாங்கிக் குடிக்கலாம் என்றாலும் புட்டி 6 ரூபாய்க்கு மேல் ஏறிப் போச்சு. நான்கணா, ஐந்தணா வித்தபோது ஏதோ ரெண்டு செட்டு வாங்கியிருக்கலாம். இப்போது அப்படியில்லை. பணக்காரர்களுக்கு வாங்கிக் கொடுக்கிறபோது நடுவில் கிடைத்தால் இரண்டு சொட்டை நாக்கில் விட்டுக் கொள்ளலாம். பணக்காரர்கள் தப்பிச்சுக்கிடுகிறார்கள். ஆனால் இந்த ஏழை பாழைகள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஆகையால் இந்தச் சட்டத்தை இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒத்திப்போட்டு விட்டு நான் சொன்னபடி எல்லா எம். எல் ஏ.-க்களுடைய ஒத்துழைப்பையும் நாடி இந்தத் திட்டம் வெற்றிபெறும்படியாகச் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[13th March 1958

10-40 a.m. **Sri A. V. P. PERIYAVALAGURUVA REDDI :** கனம் தலைவர் அவர்களே, இப்போது மதுவிலக்கு திட்டமானது மக்களுக்கு மிகவும் முக்கியமானதுதான். மக்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான திட்டம்தான். ஆனால் தொன்று தொட்டு ஆகாரத்தோடு ஆகாரமாக மது குடிப்பது பலகாலமாகப் பழகி போய்விட்டதன் காரணமாக, என்ன தான் அரசாங்கம் தீவிரமான சட்டத்தைக் கொண்டு வந்து குடிப்பதை அடியோடு நிறுத்தி விடவேண்டுமென்று முயற்சி செய்தாலும் நடைமுறையில் சிரமமாக இருக்கிறது. சட்டபூர்வமாக குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றால் அது மிகவும் கஷ்டமான காரியம்தான். சட்டம் இயற்றி இருக்கிறோம். குடிப்பவர்களை போலீஸ்காரர்கள் பிடிக்கிறார்கள். கேஸ் போடுகிறார்கள். ஆனாலும் நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதும், குடிப்பதும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது நம் இராஜ்ஜியத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் குறைந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார். அநேக ஜில்லாக்களில் இந்தப் பழக்கம் குறைந்து வருகிறது என்றார். அதாவது போலீஸ்காரர்கள் கேஸ் போடுவது குறைந்து விட்டதன் காரணமாக மதுவிலக்குக் குற்றங்கள் குறைந்துவிட்டதாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார். உண்மையில் நாட்டில் நூற்றுக்கு 80 பேர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** குற்றம் குறைந்திருக்கிறது என்ற காரணத்தினால் மட்டும் சொல்லவில்லை. கள்ளச் சாராயத்தின் விலையும் அதிகமாகப் போய் இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் நான் சொல்கிறேன்.

**Sri A. V. P. PERIYAVALAGURUVA REDDI :** என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் குடிசைத்தொழில் போல இன்றைக்குச் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். அதிகமான மக்களும் குடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். சாதாரணமாக கிராமங்களில் பார்த்தால் பொங்கல் போன்ற விசேஷ பண்டிகை காலங்களில் சாதாரணமாக இருப்பதைவிட அதிக உற்சாகமாக இருக்க வேண்டும் என்பதற்காக எங்கேயோ போய் கள்ளச் சாராயம் காய்ச்சுகிற இடத்திலிருந்து வாங்கி குடித்துவிட்டுத்தான் அதிகமாக மக்கள் வந்துவிடுகிறார்கள். போலீஸார் கள்ளச் சாராயம் குடிப்பதைத்தடுக்க முயற்சி செய்து வருகிறார்கள் என்றாலும் நூற்றுக்கு 80 பேர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மேலும் எல்லாப் போலீஸ்காரர்களும் இதைத் தடுப்பதற்கு தீவிரமான முயற்சி செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களிலும் அநேகம் பேர் இதில் சம்பந்தப் பட்டுத் தான் இருக்கிறார்கள். இதைத் தடுப்பது அதனால் மிகவும் சிரமமாகவே இருக்கிறது.

இப்போது இதைத் தடுப்பதற்காக மரம் வைத்து இருக்கிற சொந்தக் காரர்களையும் கூட இந்த சட்டத்தின்கீழ் தண்டிப்பதற்கு வசதி செய்யப் படுகிறது என்று தெரிகிறது. நூறு தென்னை மரமோ, பனை மரமோ உடைய சொந்தக்காரர் அந்தத் தோப்பை அப்படியே குத்தகைக்குவிட்டு விடுகிறார். குத்தகைக்கு எடுத்துக்கொண்டவன் அந்தத் தோப்பில் தோப்பு சொந்தக்காரருக்குத் தெரியாமலேயே கள் கட்டினால் அதற்கு இவர் என்ன செய்வார் ? தோப்பு எங்கே இருக்கிறது என்பதுகூடத்தெரியாமல் பல சொந்தக்காரர்கள் இருக்கலாம். அப்பேர்ப்பட்டவர்களை கேசில் சம்பந்தப் படுத்துவது பொருத்தமாக இருக்காது. இந்தமாதிரியாகச் சட்டத்தைப் போடுவதால் எவ்வித பயனும் இருக்காது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

என்னுடைய சொந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு நான் சில உண்மைகளை சொல்ல முடியும். கிராமப்புறங்களில் சாராயம் காய்ச்சுகிறவர்கள் உள்ளூரில் உள்ள பெரிய மனிதர்களுடைய ஆதரவு இல்லாமல் அதைச் செய்வதில்லை. சட்டம் இருக்கிறது. போலீஸ்காரர்கள் வந்து பிடித்துக் கொள்வார்கள். தண்டனை கிடைக்கும் என்பதை எல்லாம் தெரிந்து கொண்டு உள்ளூரில் உள்ள பெரியவர்களுடைய உதவி இருந்தால் தான் போலீஸ்காரர்களிடம் இருந்து தப்ப முடியும் என்பதை நன்றாக



13th March 1958] [Sri A. V. P. Periyavalaguruva Reddi]

அவர்கள் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். கேஸ் போடப்படுவது ஏழை பாழை, அப்ராணிகள் மேல்தான். பணக்காரர்கள் குடிக்கிறார்கள். போலிஸ்காரர்கள் போய் பிடிக்கக் கூட முயற்சி செய்வதில்லை. அப்படியே பிடித்தாலும் டாக்டரிடம் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. போகும் போதே அவன் சட்டென வெள்ளைப் பூண்டை வாயில் போட்டுக்கொண்டு விடுகிறான். டாக்டரிடம் உப் என ஊதினால் இந்த சாராயம் இல்லை. உள்ளிப்பூண்டு வாசனை என்று டாக்டர் சொல்லிவிடுகிறார். அவன் தப்பித்துக் கொள்கிறான். ஆகவே என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் எத்தனை சட்டங்களைக் கொண்டுவந்தாலும், ஏழு மாதம், ஏழு வருஷம் தண்டனை அளித்தாலும் கூட குடிப்பழக்கத்தை நிறுத்த முடியாது. சட்டத்தினால் அதைச் செய்வது சாத்தியமல்ல. இன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்களும் கூட குடிக்கக் கூடாது என்றுதான் சொல்கிறார்கள். ஆகவே நான் சொல்கிற யோசனை என்னவென்றால் சர்க்கார் எல்லா அங்கத்தினர்களையும் ஒன்றாக வைத்து நாட்டில் குடிப்பழக்கம் இல்லாமல் செய்வதற்கு நான் பூர்ணமாக உழைக்கிறேன் என்பதாக விஸ்வாசப் பிரமாணம் வாங்கிக் கொண்டு அவர்களுடைய ஒத்துழைப்பின் பேரில் இதைச் செய்தால் நிச்சயமாக நாட்டில் குடிப்பழக்கமே இல்லாமல் செய்துவிட முடியும். இதுதான் இப்போது முக்கியமாகச் செய்யவேண்டியக் காரியமாகும்.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ :** கனம் அங்கத்தினர் பேசுகின்றபோது சட்டசபையில் உள்ளவர்கள் பலர் குடிப்பதாக பேசுகின்றார். அது சரியா ?

**Mr. SPEAKER :** அவர் அப்படிக் குறிப்பிடவில்லை.

**Sri A. V. P. PERIYAVALAGURUVA REDDI :** நான் சபையில் உள்ளவர்கள் குடிப்பதாகச் சொல்லவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் கட்சிப் பாகுபாடின்றி குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு முயற்சிப்பதாக உறுதி எடுத்துக்கொண்டால் நாட்டில் யாரும் குடிக்காமல் செய்துவிடலாம் என்பதாகத் தான் சொன்னேன். அதைத் தவிர சட்டத்தினால் அதைச் செய்ய முடியாது என்று குறிப்பிட்டேன். காரணம் நாம் தான் வோட்டு வாங்கப் போகவேண்டியிருக்கிறது. கிராமத் தலைவனே கள்ளச் சாராயம் காய்ச்சுகிறான். அகப்பட்டுக்கொள்ளும்போது நம்மிடத்தில் வந்து கெஞ்சுகிறான். அவனுக்காக போலிஸீடத்தில் நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. காரணம் அடுத்த தேர்தலில் அவனால் தான் நமக்கு 500 வோட்டுகளுக்கு மேல் வரவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் தான் நாம் இருக்கிறோம் என்பதை உள்ளபடியே நான் சொல்கிறேன். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேச எனக்குத் தெரியாது. நடைமுறையில் நடக்கிறதைத் தான் நான் சொல்கிறேன். இதில் ஏதாவது குற்றங்குறை இருந்தாலும் சபையில் உள்ளவர்கள் மன்னிக்க வேண்டும்.

குடிக்கக் கூடாது என்று நம் தந்தை, மகாத்மா சொன்னார் என்று நாக்களவோடு சொல்லிக் கொண்டிருக்காமல் உள்ளன்போடு, ஒரு விரதம் எடுத்துக் கொண்டு குடிக்காமல் இருப்பதற்கு உழைத்தால் நிச்சயமாக நம் நாட்டில் யாருமே குடிக்காமல் இருக்கும்படிச் செய்துவிடலாம். அப்படிச் செய்யாது சட்டத்தை மட்டும் கொண்டுவந்து பயன் இல்லை. இன்றைக்கு நிச்சயமாக சொல்வேன், பணக்காரர்கள் தான் குடிக்கிறார்கள். ஏழை பாழை வாங்கிக் குடிக்கலாம் என்றாலும் புட்டி 6 ரூபாய்க்கு மேல் ஏறிப் போச்சு. நாலணா, ஐந்தணா வித்தபோது ஏதோ ரெண்டு செட்டு வாங்கியிருக்கலாம். இப்போது அப்படியில்லை. பணக்காரர்களுக்கு வாங்கிக் கொடுக்கிறபோது நடுவில் கிடைத்தால் இரண்டு சொட்டை நாக்கில் விட்டுக் கொள்ளலாம். பணக்காரர்கள் தப்பிச்சுக்கிடுகிறார்கள். ஆனால் இந்த ஏழை பாழைகள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஆகையால் இந்தச் சட்டத்தை இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒத்திப்போட்டு விட்டு நான் சொன்னபடி எல்லா எம். எல் ஏ.-க்களுடைய ஒத்துழைப்பையும் நாடி இந்தத் திட்டம் வெற்றிபெறும்படியாகச் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[13th March 1958

10.50 a.m. **SRI M. P. PERIASAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மதுவிலக்கு சம்பந்தமாக பலபல சட்டங்களைப் போட்டு சர்க்கார் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் திட்டத்திலேயே, காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கையாகவே தீண்டாமை, மதுவில்க்கு, சுதந்திரம் ஆகிய இந்த மூன்றும்தான் முக்கிய மாக வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அந்த மூன்று கொள்கையையும் நிறைவேற்றிவிட்டோம், காங்கிரஸ அரசாங்கம் இந்த மாகாணத்தில் முதன் முதலில் ஏற்பட்டவுடனேயே சேலத்தில் மதுவிலக்குத் திட்டமானது கொண்டுவரப்பட்டது. அப்படிக் கொண்டுவந்த காலத்தில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. முதன் முதலில் கொண்டு வந்த காரணமாக அதிகாரிகள் அதை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்ற மிகவும் ஒத்துழைத்தார்கள். அதனால் அப்போது வெற்றிகரமாகவும் நடந்தது. ஸ்ரீ தங்கவேலு சொன்னது மாதிரியாக அப்போது கள்ளச்சாராயம் காய்ச்சுவது எப்படி என்கிற முறையும் மக்களுக்குத் தெரியாமல் இருந்தது.

இப்பொழுது சாராயம் காய்ச்சும் முறையை ஆங்காங்கு பழகி விட்டார்கள். எனக்கு முன் பேசிய அங்கத்தினர் சொன்னார், எல்லா எம்.எல்.ஏ.க்களும் சேர்ந்து சத்திய பிரமாணம் எடுத்துக்கொண்டால், நின்றுவிடும் என்று சொன்னார்கள். எல்லோருமே குடியை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தச் சட்டம் இப்பொழுது புதிதாக வருவதல்ல. வருஷாவருஷம் நாம் இதைப் பற்றி பேசிக் கொண்டு வருகிறோம். என்னைப் பொறுத்தவரையில் நான் நீண்ட காலமாக இந்த சட்ட சபையில் இருந்து வருகிறேன். மேலும், இந்த மதுவிலக்குச் சட்டத்தில் நான் தீவிரமாக அக்கரை எடுத்துக் கொண்டு போலீஸுக்கு உதவியாக இருந்து பல காரியங்களை செய்து வந்திருக்கிறேன். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், எல்லா எம்.எல்.ஏ.க்களும் ஒன்று சேர்ந்துகொண்டு சத்தியம் செய்துகொள்வதால் இது அடியோடு நின்றுவிடாது. இப்பொழுது கூட எல்லோரும் இந்த மதுவிலக்குச் சட்டம் நன்கு அமுல் செய்யப்பட்டு, குடி ஒழிக்கப்படவேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் சட்டத்தை மீறிச் செய்பவர்களும் இருக்கிறார்கள். நான் இந்த குடியை ஒழிக்க, மதுவிலக்குச் சட்டத்தை நன்கு அமுல் நடத்துவதற்கு வேண்டி போலீஸுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறேன். அதனால் என் வாழை முதலியவைகளை எல்லாம் வெட்டி எனக்கு பல தொந்தரவுகள், துன்பம் கொடுத்தார்கள். போலீஸில் உள்ள சிலரே, இன்னார் தான் தகவல் கொடுக்கிறார், யார் தகவல் சொன்னார் என்பதை வெளியாக்கி விடுகிறார்கள். அந்த முறையில் கொஞ்சம் கஷ்டம் வருகிறது. ஆனால் மதுவிலக்கு தோல்வி அடைந்துவிட்டது என்றாலும் நூற்றுக்கு 80 பேர்கள் குடிக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வது தவறாகும். நாங்கள் காவேரிக் கரை ஓரமாக இருக்கக் கூடியவர்கள். படுகைகள் இருக்கின்றன. பல ஐலண்ட்கள் இருக்கின்றன. அதில் பல கோயமுத்தூருக்கும், சேலத்திற்கும் சேருகிற ஐலண்ட்கள் அந்த ஆற்று ஓரம் இருக்கிறது. அங்கு எந்த இடத்து போலீஸ் போய் பிடிப்பது என்று அதை விட்டுக் கொண்டேயிருந்தார்கள். பின், அதுபற்றி யோசனை செய்து அவைகளை "ரைட்" செய்தார்கள். குழந்தையம்மாள் அவர்கள் சொன்னது போல், போலீஸ் இதில் அக்கரையோடு இருந்தால் கள்ளக் காய்ச்சல் குற்றம் மிகக் குறையும். போலீஸ்காரர்கள் பிடிக்காததால் தான் இக்குற்றங்கள் குறையவில்லை என்று சொன்னார்கள் சிலர். அது சரியல்ல. குற்றங்கள் குறைந்து கொண்டுதான் இருக்கிறது. என் தொகுதியை எடுத்துக் கொண்டால், வேலூர் என்றால் அந்தப் பக்கத்தில் சாராயம் காய்ச்சுகிறவர்களை பிடிக்க ஒருவரும் போக மாட்டார்கள். எல்லா அதிகாரிகளும் அப்படி சாராயம் காய்ச்சுகிறவர்களைக் கண்டு பயந்துகொண்டு தான் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது வேலூரில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார், அவர் வெகு மும்முரமாக வேலை செய்து, பெரிய பராக்கிரமசாலிகளாக இருந்தவர்களையும், அட்டகாசம் செய்து கொண்டிருந்தவர்களையும் பிடித்து கேஸாக்கி விட்டார்கள். அதற்குப் பிறகு அந்தப் பக்கத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் எல்லோருமே அடங்கி விட்டார்கள் இன்னும் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கலாம். மேலும் இன்ஸ்பெக்டருக்கு



13th March 1958] [Sri M. P. Periasami]

தகுந்தபடி மாஜிஸ்ட்ரேட்டும் இருக்கவேண்டும். ரெவின்யூ தரப்பில் இருந்த மாஜிஸ்ட்ரேட் இருக்கும்போது அபராதம் அதிகமாக இருந்தது. ஆனால் இப்பொழுது ஜுடீஷியல் மாஜிஸ்ட்ரேட் இருப்பதால் அவர்கள் ரெவின்யூ அதிகாரிகளுடன் கலந்து வேலை செய்ய முடியவில்லை. தங்கவேலு அவர்கள் சொன்னது மாதிரி, அவர்கள் சாட்சிகள் சொல்வதை நம்பிவிடுகிறார்கள். ஏதோ ஐந்து, பத்து, இருபது என்று அபராதம் போடுகிறார்கள். சில சமயங்களில் ஆதாரம் இல்லை என்று விடுதலையும் செய்து விடுகிறார்கள். ஆகவே என்ன நடக்கிறது என்று பார்த்தால், போலீஸ்காரர்கள் உண்மையான கேஸ்களைக்கண்டு பிடித்தும்கூட, அவர்கள் மனம் சலித்துப்போய் விடுகிறார்கள். அப்படி கள்ளக் காய்ச்சல் செய்யக்கூடியவர்கள் ஹோல்சேல் வியாபாரிகளாக மாறி அவர்களுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. நான் எல்லா போலீஸ் அதிகாரிகளையும் சொல்லவில்லை. அப்படி நூற்றுக்கு பத்து பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த ஹோல்சேல் வியாபாரிகளுக்கும் தொடர்பு ஏற்பட்டு மாமூல் பிரகாரம். வாங்கிக்கொண்டு அந்த வியாபாரியைக் காட்டிக் கொடுக்காமல், வேறு சிலரைப் பிடித்து நீ தான் குற்றம் செய்தாய் ஏற்றுக்கொள் என்று சொல்லி 10, 20 ரூபாய் கொடுத்து அவர்களை ஜெயிலிற்கு அனுப்பி விடுகிறார்கள். சில மாஜிஸ்ட்ரேட்ஸ் இருக்கிறார்கள். பிடித்தவுடன் 100, 200, 400 என்று போட்டு விடுகிறார்கள். எனது தொகுதியை எடுத்துக் கொண்டால், இந்த கள்ளக் காய்ச்சல் மிகவும் குறைந்திருக்கிறது. எங்கள் இடத்தில் ஒரு மாஜிஸ்ட்ரேட் இருக்கிறார். அவர்கள் 200, 300 என்று அபராதம் போட்டு விடுகிறார்கள். அதைக்கண்டு இந்த கள்ளக் காய்ச்சல்காரர்களே சொல்கிறார்கள், இந்த நாசமாகப் போகிற மாஜிஸ்ட்ரேட் இங்கு இருக்கிற வரையில் நாம் இப்படி காய்ச்சுவதை விட்டுவிட வேண்டியதுதான் என்று சொல்கிறார்கள். அதை நான் என் காதால் கேட்டிருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். அதாவது, சாதாரண மக்கள் குடித்தால் அபராதம் போடவேண்டும். ஆனால் பெரிய பணக்காரர்கள் குடித்தால், அவர்களுக்கு 500 ரூபாயோ அல்லது ஆயிரமோ அபராதம் போட்டால் அவர்கள் அதை கொடுக்கத் தயங்க மாட்டார்கள். ஆகவே நான் சொல்வது என்னவென்றால், அப்படிப்பட்ட பெரிய பணக்காரர்களுக்கு அபராதம் போடக்கூடாது. அவர்களுக்கு ஆறு மாதம் என்றோ அல்லது ஒரு வருஷம் என்றோ தண்டனை விதிக்க வேண்டும். அவர்களுக்கு அபராதம் போடாமல் ஜெயில் தண்டனை கொடுக்க வேண்டும். மேலும், ஒரு தடவை காய்ச்சியவனுக்கு 100 ரூபாய் அபராதம் என்று போட்டால் அதற்கு மேல் காய்ச்ச காய்ச்ச அவனுக்கு தண்டனையை அதிகரிக்க வேண்டும். அதாவது, முதலாவதாக காய்ச்சினால் 100 ரூபாய் என்றால், இரண்டாவது தடவை காய்ச்சும் போது 200 ரூபாய் என்றும், மூன்றாவது தடவை அப்படிச் செய்தால் 300 என்றோ 500 ரூபாய் என்றோ இப்படி அபராதம் போட வேண்டும். அடுத்தபடியாக இந்த போலிஸ்காரர்களை நாம் பார்க்க வேண்டும். அவர்களில் சிலர் குடிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அந்த டிப்பார்ட்மெண்டிலேயே இருப்பதற்கு லாயக்கில்லை என்று அவர்களை அங்கிருந்து தள்ளிவிட வேண்டும். இப்பொழுது எங்கள் ஜில்லாவில், சேலம் ஜில்லாவில் இருக்கும் டி.எஸ்.பி. அவர்கள் ஏராளமாக "ரெயிட்" செய்து கேஸ்களை மும்முரமாக கண்டு பிடித்து வருகிறார்கள். எங்கள் பிரதேசம் மலைப்பிரதேசமாகும். அங்கெல்லாம் ரெயிட் செய்து சாமான்களை எல்லாம் உடைத்து நாசம் செய்து விடுகிறார்கள். ஆகவே, இந்தக் கள்ளக் காய்ச்சல் குற்றம் இப்பொழுது ரொம்பவும் குறைந்திருக்கிறது. வேளம்பட்டை போட்டுக் காய்ச்ச பத்து நாட்களாகும். ஆனால், இப்பொழுது, நாளை ஊறப்போட்டு மறுநாள் காய்ச்சி எடுக்க அம்மோனியம் சல்பேட் உபயோகிக்கிறார்கள். இப்படி சுருக்கமாக ஒரு வழியைக்கண்டு பிடித்து இருக்கிறார்கள். அதனால், அதைக் குடித்து விட்டு ஏராளமான பேர்கள் செத்துவிடுகிறார்கள். ஆகவே, இதற்கெல்லாம் இடம் கொடுக்கக்கூடாது. மதுவிலக்கு தோல்வி அடைந்துவிட்டது என்று சொல்வது தவறு. என் தொகுதியை எடுத்துக் கொண்டால், 100-க்கு 50-க்கு மேல் காய்ச்சும் இடத்தில் இப்பொழுது நூற்றுக்கு ஒன்றுதான் காய்ச்சுகிறார்கள். அதற்குக் காரணம் அங்குள்ள போலீஸின் திறமை, அங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டின் திறமை

இவைகளாகும். இந்த இரண்டும் ஒத்துக்கொண்டதால் அங்கு கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு வசதி இல்லாமல் போய்விட்டது. இந்த மதுவிலக்குச் சட்டத்தை நாம் எவ்வளவுக்கெவ்வளவு வெற்றிகரமாக நடத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம் தேசம் சீக்கிரத்தில் முன்னேறும். எதிர்க்கட்சிக்காரர்கள் ஹரிஜனங்கள் இதனால் அவஸ்தைப்படுகிறார்கள், அவர்களைப் பிடித்து கேஸ் போடுகிறார்கள் என்று சொல்வதை என்னால் ஆதரிக்கமுடியாது.

ஹரிஜனமக்கள் அதிகமாக குடிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு எல்லோரும் குடிக்கிறார்கள். ஆனால் ஏழை ஹரிஜன மக்கள் அதிகமாக குடித்துக்கொண்டு கனம் அம்மையார் அவர்கள் சொன்னது மாதிரி தன்னுடைய சிறிய வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தமுடியாமல், அதைக்கொண்டு குடித்துவிட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஹரிஜன மக்கள் பொதுவாக ஏழை மக்களாக இருந்து வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே இந்த சட்டத்தைக்கொண்டுவருவதற்கு இன்னும் மூன்று மாதங்கள் காத்திராமல் இப்போதே, அங்கத்தினர்கள் எல்லோரும் இங்கே இருக்கிறோம், இங்கேயே ஆலோசித்து இதை தீவிரமாககொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த சட்டத்தை ஆதரித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

11 a.m. **MR. SPEAKER** : இப்பொழுது 7 அங்கத்தினர்கள் பேசிவிட்டார்கள். கனம் மந்திரியை இதில் சேர்க்கவில்லை. ஐந்து பேர் காங்கிரஸ், ஒரு திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு என்.டி.வி. இந்த மசோதாவில் 29 பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் இரண்டு மூன்று திருத்தங்கள் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு பிரிவின்மீதும் பேச ஒரு மணி நேரம்ஆகும். அதற்குமேல் எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசவேண்டும். ஒவ்வொரு கட்சித் தலைவர்களுக்கும் 10 நிமிடங்களாவது கொடுக்கவேண்டும். மந்திரி அவர்கள் இதில் கால் மணிநேரம் எடுத்துக்கொள்வார்கள். இவைபோக அரை மணி நேரம்தான் இருக்கிறது. இதில் 5 நிமிடம் நேரம் பேசினால் 6 அங்கத்தினர்கள் பேசலாம். பத்து நிமிடநேரம் பேசினால் மூன்று அங்கத்தினர்கள்தான் பேச முடியும். இதில் அதிகமான அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்று விரும்புவதால் ஒவ்வொரு அங்கத்தினர்களும் ஐந்து நிமிடம் நேரம் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பதினொன்றை மணிக்கு எதிர்கட்சித் தலைவர்களை அழைக்கிறேன்.

**SRI S. LAZAR** : கனம் தலைவர் அவர்களே, பொதுவாக இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தத்தின் அடிப்படையைப் பார்த்தால் இப்போது இருக்கக்கூடிய தண்டனை போதாது என்றும் லட்சிய அடிப்படையில் இந்த குற்றங்கள் குறையும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் திருத்தங்களை பார்க்கின்ற காலத்தில் ஒரு சில பிரிவில் அதிகப்படியான தண்டனை கொடுத்து அதே சமயத்தில் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக அந்த குற்றங்களை இல்லை என்று நிரூபித்தால் குறைந்த தண்டனையை கொடுக்கலாம் என்று ஒரு சில பிரிவுகளில் இருக்கின்றன. அந்த முறையில் பார்க்கும்பொழுது நம்முடைய லட்சியம் நிறைவேறாமல் போய்விடும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அடுத்தபடியாக 3, 4 பிரிவுகளில் பார்க்கும் போது ஒரு சில குற்றங்களை வேண்டுமென்று செய்தாலும் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. உதாரணமாக 4-வது செக்ஷனில் " whoever imports, transports or possesses liquor or any intoxicating drug " என்றிருக்கிறது. யாரோ ஒருவர் வேண்டுமென்றே கொல்லைப் புறத்தில் மதுவை வைத்துக்கொண்டு யாருடைய கொல்லைப்புறத்தில் இருக்கிறதோ அவர் பேரில் குற்றம் சுமத்தக்கூடிய முறையில் இருக்கிறது. இன்னும் மற்றொரு பிரிவில் செக்ஷன் " டி " யில் " taps any toddy producing tree or permits or suffers to be tapped any toddy producing tree belonging to him or in his possession " என்றிருக்கிறது. இவ்விதம் கொல்லைப்புரித்தில் வைத்து விட்டாலும் கூட



தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றிருக்கிறது. இது அடிப்படை கொள்கைக்கு முரணானதாக இருக்கிறது. ஆகவே இந்தமாதிரி இருக்கின்ற திருத்தங்களை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைவிட முக்கியமாக சட்ட ரீதியாக பார்க்கும்பொழுது " It is all against known forms of jurisprudence " குற்றம் சாட்டப்பட்ட ஆசாமி பேரில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தான் தண்டனை கொடுக்கலாம் என்று இருந்து வருகிறது. அதற்கு மாறாக ஒருவன் குற்றம் சாட்டப்பட்டு, அதே சமயத்தில் குற்றவாளி ஆவான் என்ற முறையில் 4-வது பிரிவு இரண்டாவது ஸப் கிளாஸ் அமைந்திருப்பது பொருத்தமானது அல்ல என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

" It shall be presumed until the contrary is shown—that a person accused of any offence under clauses (*a*) to (*j*) of sub-section (1) has committed such offence " அதுவும் தான் குற்றவாளி அல்ல என்று குற்றவாளிக் கூண்டில் நிற்கக் கூடியவன் நிரூபிக்க வேண்டும் என்றிருப்பது மிகவும் பொருத்தமற்றது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் முக்கியமாக போலீஸ் துறையில் இருக்கக்கூடியவர்கள் அவர்களுக்கு விரோதமாக இருக்கக்கூடியவர்கள் யாராவது இருப்பார்களேயானால் அவர்கள் மீது சுலபமாக குற்றங்கள் சாட்ட முடியும். ஆகவே இந்த விதமான ஒரு பிரிவு இருப்பது போலீஸ் அதிகாரிகளுக்கும், மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகமான அதிகாரத்தை கொடுப்பதாக இருக்கிறது. எந்த குற்றமானாலும் நிரூபிக்கப்பட்ட பிறகு தண்டனை கொடுக்கலாம். ஆகவே இவ்விதம் அமைத்திருப்பது பொருத்தமற்றது என்பதை சொல்லிக்கொள்கிறேன். பொதுவாக நூறு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாலும்கூட, ஒரு நிரபராதி கூட தண்டனைக்கு ஆளாகக்கூடாது என்ற முறையில் குற்றவாளிக்கூண்டில் நிற்கக்கூடியவன்தான் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்கப்பட்டால் ஒழிய அவன் தண்டனைக்குரியவன் என்று முடிவு செய்வது பொருத்தமற்றது என்று சொல்லிக்கொண்டு இதை சரியான முறையில் திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR** : கனம் சபாநாயகர் அவர்களே, மதுவிலக்கு நல்ல முறையில் அமுல் நடத்தப்படவேண்டும் என்று நினைப்பவர்களில் நானும் ஒருவன். இந்த முறையில் சட்டம் கொண்டுவருவதால் மதுவிலக்கு செம்மையாக நடைபெறாது என்று வருத்தமுறுகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் லாஸர் அவர்கள் குறிப்பட்டதுபோல எந்த விதமான குற்றமும் செய்யாதவன் கோர்ட்டில் சிட்சிப்பது வரையிலும் நிரபராதியாகவே கருதப்படவேண்டும். ஆனால் தான் குற்றவாளி அல்ல என்று கோர்ட்டில் தானே நிரூபிக்கவேண்டும் என்றிருப்பது நீதி வரம்புக்கும், நியாய வரம்புக்கும் உள்பட்ட ஒழுங்காகாது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சட்டத்தில் கொண்டுவரப்படுகின்ற திருத்தத்தின் மூலமாக ஒருவனை குற்றவாளியாக்குவதற்கு ஒரு பிரஸம்ஷன் இருக்கிறது. நியாயமாக எந்த சட்டத்திலும் இல்லாத ஒரு விதியாக இருக்கிறது. பிரஞ்சு சட்டத்தில்தான் இருப்பதாக அறிகிறேன். வேறு எந்த காண்டினெண்டிலும் இல்லை என்று நினைக்கிறேன். இந்த முறையில் சட்டமியற்றப்பட்டிருப்பது ஒரு ட்ரகோணியன் ஆக்ட் என்ற முறையில் தான் இது அமைந்திருக்கிறது. இதை நாம் அவசியம் எதிர்த்துதான் ஆகவேண்டும். இதற்கு எல்லா அங்கத்தினர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்று நான் கருதவில்லை. இதுபோன்ற சட்டத்தை இயற்றினால் நமக்கு ஒரு நல்ல பாரம்பரியத்தையும் திறமையையும் விளைவிக்கக்கூடிய நிலைமையை உண்டுபண்ணாது என்று குறிப்பிட விரும்புகிறேன். இதில் இந்த சட்டத்தை கடுமையாக பிரயோகிப்பதற்காக பல ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் மதுபானம் அருந்தக்கூடிய பழக்கம் ஒழிந்து விடும் என்று கருதுகிறார்கள். அது உண்மையல்ல. இன்றைக்கு எங்கு வேண்டுமானாலும் மதுபானம் கிடைக்கும் என்றுள்ள அபிப்பிராயம் நாட்டில் எங்கும் இருந்துவருகிறது. இது வாஸ்தவம். மதுபானம் இருந்துக் கொண்டுதான் வருகிறது. இதைப்பற்றி நண்பர்கள் பலர் குறிப்பிடும்

விடுகிறார்கள். வக்கீல்கள் யாராவது இங்கு இருந்தால் அவர்கள் மன்னித்துக் கொள்ளவேண்டும். வக்கீல்களுக்கு இதனால் நல்ல தொழில் நடக்கிறது. இன்றைய தினம் எடுத்துக் கொண்டு பார்த்தால் அதில் புரொஹிபிஷன் கேஸ்தான் ரொம்ப இருக்கிறது. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதையும் அவர்கள் வரவேற்கவேண்டும். கடுமையான சட்டமாக இருக்கிறது, மரம் கொடுத்தவர்களுக்கு இரண்டு வருஷம் தண்டனை என்றிருக்கிறது. இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதில் பல தரப்பட்ட நண்பர்கள் சொன்னார்கள், கட்சி பாகுபாடு இல்லாமல் ஒத்துழைக்க வேண்டுமென்று. மரம் கொடுத்தவர்களைக் கூட சட்டத்தினால் கட்டுப்படுத்துவதாக இருப்பதால், அதைப் பற்றி வாதாட வாய்ப்புகள் கிடைக்கும். ஆகவே இந்த சட்டத்தை இப்படியே அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒரு கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் இதில் வெற்றி காண முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். மதுரை ஜில்லாவிலிருந்தும், கோயமுத்தூர் ஜில்லாவின் ஒரு பகுதியிலிருந்தும் எங்கள் ஜில்லாவிற்கு பட்டை இறக்குமதி ஆகிறது. எப்படி ஸௌத் ஆப்ரிகாவிலிருந்து தோல் பதனிடுவதற்காக பட்டை இறக்குமதியாகிறதோ, அதே மாதிரி, இந்த வெள்ளை வேலம்பட்டை இறக்குமதியாகிறது. இது போலீசாருக்குத் தெரிந்தது. அதன் பிறகு போலீஸார்கள் தீவிரமாக முனைந்தார்கள். இப்போது இந்த வெள்ளை வேலம்பட்டை இறக்குமதி நிறுத்தப்பட்டு விட்டது. அம்மோனியம் ஸல்பேட்டிலிருந்து சாராயம் காய்ச்சுவதாகத் சொன்னார்கள். பெரும்பாலும் எங்கள் ஜில்லாவிலே எவ்வளவு அம்மோனியம் ஸல்பேட் இறக்குமதியாகிறதோ, அவ்வளவும் சாராயம் காய்ச்சுவதற்குத்தான் உபயோகமாகிறதே தவிர விவசாயத்திற்குப் பயன்படுவதில்லை. இரண்டு இலாகாவும் ஒரே அமைச்சரிடத்தில் இருப்பதால் ரொம்ப சௌகரியமாக இருக்கும். அம்மோனியம் ஸல்பேட் கொடுக்கிற விவசாய இலாகாவிற்கும் அவர்தான் அமைச்சர், போலீஸ் இலாகாவிற்கும் அவர்தான் அமைச்சர். நான் முன்பே சொன்னது போல அம்மோனியம் ஸல்பேட்டுக்கு போலீஸ் பாதுகாப்புக் கொடுத்து, அது சாராயம் காய்ச்சுவதற்கு உபயோகிக்கப்படாமல் விவசாயத்திற்கு உபயோகப்படும்படியாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். பெரும்பாலான அம்மோனியம் ஸல்பேட் சாராயம் காய்ச்சுவதற்கு உபயோகிக்கப்படுகிறது. அதனால் விவசாய அபிவிருத்தியும் குறைகிறது, என்பதை அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவைத் தீவிரமாக ஆக்குவதிலே இன்னும் தீவிரமாக ஆக்கவேண்டு' மென்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஸார், இந்த மதுவிலக்குச் சட்டம் இப்போது நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் மது விலக்கை ஆதரிக்கக் கூடியவன் நான். **1942**-ம் வருஷம் வரையில் மது விலக்குப் பிரசாரகராக இருந்தேன்—சம்பளம் வாங்கிக் கொண்டல்ல, ஆனரரி. இப்போது **10** வருஷ காலமாக இந்த மதுவிலக்கு எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது, சாராயம் காய்ச்சுவது இப்போது ஒரு குடிசைத் தொழிலாக மாறிப் போயிருக்கிறது. இது எல்லோரும் சொன்னதுதான். அப்படி குடிசைத் தொழிலாக மாறியது மாத்திரமல்ல. நிலப் பிரபுத்துவப் பிடிப்பு சிறிது சிறிதாகத் தகர்ந்து வருகிற முறையில் இப்போது அதிகமாகாமல் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த மது விலக்கு ஒரு கருவியாக உபயோகப் படுத்தப்படுகிறது. போலீஸார், மது விலக்கைக் காரணமாக வைத்துக் கொண்டு, அவர்கள் செய்யக் கூடிய அட்டகாசம் இவ்வளவு, அவ்வளவு என்று சொல்ல முடியாது. பல இடங்களிலே அவர்களைப் போலீஸ் லாக்காப்பில் வைத்து கொலை செய்யக்கூடிய அளவுக்கும் கூடப் போகிறது. இதை நிரூபிக்க முடியுமா என்று கேட்கலாம். நாங்கள் நிரூபிக்க தயாராயிருக்கிறோம். அந்த அளவுக்கு போலிசார் மிகவும் மோசமான முறையிலே நடந்து வருகிறார்கள். ஆண்கள் என்றும் பார்ப்பதில்லை, பெண்கள் என்றும் பார்ப்பதில்லை. இவர்களது தாக்குதலுக்கு உள்ளாகிறவர்கள் கிராமத்திலே இருக்கக்கூடிய நிரபராதியான மக்கள் சேரிகளிலே இருக்கக்கூடிய மக்கள். இன்னும் அப்பாவிக



ளாக இருக்கக்கூடிய உபாத்தியாயர்கள். இரண்டு மூன்று மாத காலத் திற்குள்ளே, குடியாத்தத்தை எடுத்துக்கொண்டால், மதுவிலக்கு சோதனை என்ற பெயரால், செகண்டரி பள்ளி உபாத்தியாயர்களையும், கர்ப்பமாக இருந்த பெண்களையும், இன்னும் இது போன்ற பலரையும் பிடித்துக் கொண்டு போனதிலே, நானே போய் நேரிலே சொல்லி, ஒரு சிலரை விடுவித்திருக்கிறார்கள். ஒரு சிலர் பேரில் "கேஸ்" போட்டிருக்கிறார்கள். புருஷன் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறான் என்ற காரணத்திற்காக, அவர்களுடைய மனைவிமார்களையும் ஈடுபடுத்தக் கூடிய அளவுக்கு நிலைமை மோசமாக யிருக்கிறது. இந்த நிலையிலேதான் இந்தக் கடுமையான சட்டம் கொண்டுவரப்படுகிறது. சாராயம் காய்ச்சினாலும், கள்ளு இறக்கு வதற்கு மரம் விட்டு இருந்தாலும், சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய சட்டிபானைகள் வைத்திருந்தாலும், இன்னும் அவர்களுக்கு உதவி செய் வதாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் இன்னும் கடுமையாக சிறை தண்டனை விதிக்கவேண்டும், அபராதமும் விதிக்கவேண்டும் என்று சொன் னால், முதலிலே சிறைகளை யெல்லாம் இன்னும் பெரிதாக கட்டிப் போட்டு விட்டுத்தான் இந்த சட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். "நான் கூட நிறைய கேஸ்களைப் . பிடித்துக் கொடுத்திருக்கிறேன், பத்துரூபாய் "ரிவார்டு" வாங்கியிருக்கிறேன்" என்று பல நண்பர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். யாரா வது "இளிச்சவாயன்களாக இருந்திருப்பார்கள், பிடித்துக் கொடுத்திருப்பார் கள். இப்பொழுது இருக்கின்ற நிலைமையிலே, பக்கத்துக்காரன் வீட்டிலே கள்ளச் சாராயத்தைப் புதைத்துவிட்டு, போலீசுக்கு தகவல் கொடுத்து, பொய் சாட்சி சொல்லி கேஸ் போடுகிறதினால், பல நிரபராதிகள் துன்பத்துக் குள்ளாக வேண்டியிருக்கிறது. ரிவார்டு கிடைக்கிறதே என்று பக்கத்து வீட்டுக்காரன் இம் மாதிரி செய்து பொய் 'சாட்சி சொன்னால் அவனையும் தண்டிப்பதற்கு விதி இருக்கவேண்டும். இன்றைக்கு கொலைகள் குறைந்து விட்டன, திருடுகள் குறைந்து விட்டன கிரிமினல் கேஸ்கள் குறைந்து விட்டன என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். இன்றைய தினம் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, பலர் இதை ஒரு தொழிலாக நினைத்து இதிலே ஈடுபட்டிருக் கிறார்கள். இதையெல்லாம் நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதற்குப் பதிலாக கனம் அமைச்சர் அவர்கள் குருஷேவைக் காரணம் காட்டி, ரஷியாவிலே குடி அதிகரித்திருக்கிறது என்று அவர் வேதனைப் படுகிறார், அதைத் தடுக்கவேண்டும் என்று நினைக்கிறார் என்று சொல்லப் பட்டது. குருஷேவ் என்ன திட்டங்களைச் சாதிக்கிறாரோ, அதையெல்லாம் பின்பற்றுவார்களேயானால், அதை மனதார வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அவர் ஒரு சர்வாதிகாரி, சர்வாதிகார ஆட்சியை நடத்து கிறவர் என்று சொன்னால், அவர் சர்வாதிகாரியாக இருந்தால் அங்கே இப்பொழுது மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் அங்கே ஜனநாயகம் இருக்கிற காரணத்தினாலே மக்களிடத்தில் போய்ச் சொல்லிக்கொண்டு வருகிறார். இங்கே மக்களின் நிலைமை மோச மாக இருக்கிறது. அடுத்த தேர்தலில் வோட்டு வருமோ, வராதோ என் பதற்காக அல்ல. மக்களுடைய நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கி றது என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்காமல் ஒரு சட்டத்தைக்கொண்டு வரு வோமேயானால், மொத்தத்தில் சென்ற பத்து வருஷ காலத்தில் எவ்வளவு தூரம் நாம் இதை அடக்க முடிந்திருக்கிறது என்று பார்ப்போமேயானால் கொஞ்சமும் கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். தஞ்சை ஜில்லா விலே ஒரு சில இடங்களில் இதைத் தடுத்து இருக்கலாம். ஆனால், இன்றை க்குப்பல ஜில்லாக்களிலே இது மிகவும் அதிகப்படியான அளவுக்கு ஒரு குடிசைத் தொழிலாக மாறி வருகிறது. ஆகவே இதை எல்லாம் சிந் தித்துப் பார்த்துச் செய்யவேண்டியதனால், 3 மாதங்களுக்கு இதை ஒத்திப் போடவேண்டும். மக்களுடைய அபிப்பிராயத்தை நன்கு உணரவேண்டும். மொழிப் பிரச்னைக்காக எத்தனையோ கூட்டங்கள் போடப்பட்டன. எவ்வ ளவோ விவாதம் நடைபெற்றது. மக்களுடைய நலனைக் கருதி சட்டம் கொண்டுவந்தால் தான் நலமாக இருக்கும். ஒத்துக்கொள்ளக் கூடிய தன்மையிலே இருக்கும். "நாங்கள் கொண்டு வரக்கூடிய சட்டத்தை

[Sri T. Karia Gounder] [13th March 1958

விடுகிறார்கள். வக்கீல்கள் யாராவது இங்கு இருந்தால் அவர்கள் மன்னித்துக் கொள்ளவேண்டும். வக்கீல்களுக்கு இதனால் நல்ல தொழில் நடக்கிறது. இன்றைய தினம் எடுத்துக் கொண்டு பார்த்தால் அதில் புரொஹிபிஷன் கேஸ்தான் ரொம்ப இருக்கிறது. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதையும் அவர்கள் வரவேற்கவேண்டும். கடுமையான சட்டமாக இருக்கிறது, மரம் கொடுத்தவர்களுக்கு இரண்டு வருஷம் தண்டனை என்றிருக்கிறது. இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதில் பல தரப்பட்ட நண்பர்கள் சொன்னார்கள், கட்சி பாகுபாடு இல்லாமல் ஒத்துழைக்க வேண்டுமென்று. மரம் கொடுத்தவர்களைக் கூட சட்டத்தினால் கட்டுப்படுத்துவதாக இருப்பதால், அதைப் பற்றி வாதாட வாய்ப்புகள் கிடைக்கும். ஆகவே இந்த சட்டத்தை இப்படியே அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒரு கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் இதில் வெற்றி காண முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். மதுரை ஜில்லாவிலிருந்தும், கோயமுத்தூர் ஜில்லாவின் ஒரு பகுதியிலிருந்தும் எங்கள் ஜில்லாவிற்கு பட்டை இறக்குமதி ஆகிறது. எப்படி ஸௌத் ஆப்ரிகாவிலிருந்து தோல் பதனிடுவதற்காக பட்டை இறக்குமதியாகிறதோ, அதே மாதிரி, இந்த வெள்ளை வேலம்பட்டை இறக்குமதியாகிறது. இது போலீசாருக்குத் தெரிந்தது. அதன் பிறகு போலீஸார்கள் தீவிரமாக முனைந்தார்கள். இப்போது இந்த வெள்ளை வேலம்பட்டை இறக்குமதி நிறுத்தப்பட்டு விட்டது. அம்மோனியம் ஸல்பேட்டிலிருந்து சாராயம் காய்ச்சுவதாகச் சொன்னார்கள். பெரும்பாலும் எங்கள் ஜில்லாவிலே எவ்வளவு அம்மோனியம் ஸல்பேட் இறக்குமதியாகிறதோ, அவ்வளவும் சாராயம் காய்ச்சுவதற்குத்தான் உபயோகமாகிறதே தவிர விவசாயத்திற்குப் பயன்படுவதில்லை. இரண்டு இலாகாவும் ஒரே அமைச்சரிடத்தில் இருப்பதால் ரொம்ப சௌகரியமாக இருக்கும். அம்மோனியம் ஸல்பேட் கொடுக்கிற விவசாய இலாகாவிற்கும் அவர்தான் அமைச்சர், போலீஸ் இலாகாவிற்கும் அவர்தான் அமைச்சர். நான் முன்பே சொன்னது போல அம்மோனியம் ஸல்பேட்டுக்கு போலீஸ் பாதுகாப்புக் கொடுத்து, அது சாராயம் காய்ச்சுவதற்கு உபயோகிக்கப்படாமல் விவசாயத்திற்கு உபயோகப்படும்படியாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். பெரும்பாலான அம்மோனியம் ஸல்பேட் சாராயம் காய்ச்சுவதற்கு உபயோகிக்கப்படுகிறது. அதனால் விவசாய அபிவிருத்தியும் குறைகிறது, என்பதை அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவைத் தீவிரமாக ஆக்குவதிலே இன்னும் தீவிரமாக ஆக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஸார், இந்த மதுவிலக்குச் சட்டம் இப்போது நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் மது விலக்கை ஆதரிக்கக் கூடியவன் நான். 1942-ம் வருஷம் வரையில் மது விலக்குப் பிரசாரகராக இருந்தேன்—சம்பளம் வாங்கிக் கொண்டல்ல, ஆனரரி. இப்போது 10 வருஷ காலமாக இந்த மதுவிலக்கு எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, சாராயம் காய்ச்சுவது இப்போது ஒரு குடிசைத் தொழிலாக மாறிப் போயிருக்கிறது. இது எல்லோரும் சொன்னதுதான். அப்படி குடிசைத் தொழிலாக மாறியது மாத்திரமல்ல. நிலப் பிரபுத்துவப் பிடிப்பு சிறிது சிறிதாகத் தகர்ந்து வருகிற முறையில் இப்போது அதிகமாகாமல் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த மது விலக்கு ஒரு கருவியாக உபயோகப் படுத்தப்படுகிறது. போலீஸார், மது விலக்கைக் காரணமாக வைத்துக் கொண்டு, அவர்கள் செய்யக் கூடிய அட்டகாசம் இவ்வளவு, அவ்வளவு என்று சொல்ல முடியாது. பல இடங்களிலே அவர்களைப் போலீஸ் லாக்காப்பில் வைத்து கொலை செய்யக்கூடிய அளவுக்கும் கூடப் போகிறது. இதை நிரூபிக்க முடியுமா என்று கேட்கலாம். நாங்கள் நிரூபிக்க தயாராயிருக்கிறோம். அந்த அளவுக்கு போலிசார் மிகவும் மோசமான முறையிலே நடந்து வருகிறார்கள். ஆண்கள் என்றும் பார்ப்பதில்லை, பெண்கள் என்றும் பார்ப்பதில்லை. இவர்களது தாக்குதலுக்கு உள்ளாகிறவர்கள் கிராமத்திலே இருக்கக்கூடிய நிரபராதியான மக்கள், சேரிகளிலே இருக்கக்கூடிய மக்கள், இன்னும் அப்பாவிக



13th March 1958] [Sri V. K. Kothandaraman]

ளாக இருக்கக்கூடிய உபாத்தியாயர்கள். இரண்டு மூன்று மாத காலத்திற்குள்ளே, குடியாத்தத்தை எடுத்துக்கொண்டால், மதுவிலக்கு சோதனை என்ற பெயரால், செகண்டரி பள்ளி உபாத்தியாயர்களையும், கர்ப்பமாக இருந்த பெண்களையும், இன்னும் இது போன்ற பலரையும் பிடித்துக் கொண்டு போனதிலே, நானே போய் நேரிலே சொல்லி, ஒரு சிலரை விடுவித்திருக்கிறார்கள். ஒரு சிலர் பேரில் "கேஸ்" போட்டிருக்கிறார்கள். புருஷன் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறான் என்ற காரணத்திற்காக, அவர்களுடைய மனைவிமார்களையும் ஈடுபடுத்தக் கூடிய அளவுக்கு நிலைமை மோசமாக யிருக்கிறது. இந்த நிலையிலேதான் இந்தக் கடுமையான சட்டம் கொண்டுவரப்படுகிறது. சாராயம் காய்ச்சினாலும், கள்ளு இறக்குவதற்கு மரம் விட்டு இருந்தாலும், சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய சட்டிபானைகள் வைத்திருந்தாலும், இன்னும் அவர்களுக்கு உதவி செய்வதாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் இன்னும் கடுமையாக சிறை தண்டனை விதிக்கவேண்டும், அபராதமும் விதிக்கவேண்டும் என்று சொன்னால், முதலிலே சிறைகளை யெல்லாம் இன்னும் பெரிதாக கட்டிப் போட்டுவிட்டுத்தான் இந்த சட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். "நான் கூட நிறைய கேஸ்களைப் பிடித்துக் கொடுத்திருக்கிறேன், பத்துரூபாய் "ரிவார்டு" வாங்கியிருக்கிறேன்" என்று பல நண்பர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். யாராவது "இளிச்சவாயன்களாக இருந்திருப்பார்கள், பிடித்துக் கொடுத்திருப்பார்கள். இப்பொழுது இருக்கின்ற நிலைமையிலே, பக்கத்துக்காரன் வீட்டிலே கள்ளச் சாராயத்தைப் புதைத்துவிட்டு, போலீசுக்கு தகவல் கொடுத்து, பொய் சாட்சி சொல்லி கேஸ் போடுகிறதினால், பல நிரபராதிகள் துன்பத்துக்குள்ளாக வேண்டியிருக்கிறது. ரிவார்டு கிடைக்கிறதே என்று பக்கத்து வீட்டுக்காரன் இம் மாதிரி செய்து பொய் 'சாட்சி சொன்னால் அவனையும் தண்டிப்பதற்கு விதி இருக்கவேண்டும். இன்றைக்கு கொலைகள் குறைந்து விட்டன, திருடுகள் குறைந்து விட்டன கிரிமினல் கேஸ்கள் குறைந்து விட்டன என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, பலர் இதை ஒரு தொழிலாக நினைத்து இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதற்குப் பதிலாக கனம் அமைச்சர் அவர்கள் குருஷேவைக் காரணம் காட்டி, ரஷியாவிலே குடி அதிகரித்திருக்கிறது என்று அவர் வேதனைப்படுகிறார், அதைத் தடுக்கவேண்டும் என்று நினைக்கிறார் என்று சொல்லப்பட்டது. குருஷேவ் என்ன திட்டங்களைச் சாதிக்கிறாரோ, அதையெல்லாம் பின்பற்றுவார்களேயானால், அதை மனதார வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அவர் ஒரு சர்வாதிகாரி, சர்வாதிகார ஆட்சியை நடத்துகிறவர் என்று சொன்னால், அவர் சர்வாதிகாரியாக இருந்தால் அங்கே இப்பொழுது மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் அங்கே ஜனநாயகம் இருக்கிற காரணத்தினாலே மக்களிடத்தில் போய்ச் சொல்லிக்கொண்டு வருகிறார். இங்கே மக்களின் நிலைமை மோசமாக இருக்கிறது. அடுத்த தேர்தலில் வோட்டு வருமோ, வராதோ என்பதற்காக அல்ல. மக்களுடைய நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்காமல் ஒரு சட்டத்தைக்கொண்டு வருவோமேயானால், மொத்தத்தில் சென்ற பத்து வருஷ காலத்தில் எவ்வளவு தூரம் நாம் இதை அடக்க முடிந்திருக்கிறது என்று பார்ப்போமேயானால் கொஞ்சமும் கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். தஞ்சை ஜில்லாவிலே ஒரு சில இடங்களில் இதைத் தடுத்து இருக்கலாம். ஆனால், இன்றைக்குப்பல ஜில்லாக்களிலே இது மிகவும் அதிகப்படியான அளவுக்கு ஒரு குடிசைத் தொழிலாக மாறி வருகிறது. ஆகவே இதை எல்லாம் சிந்தித்துப் பார்த்துச் செய்யவேண்டியதனால், 3 மாதங்களுக்கு இதை ஒத்திப் போடவேண்டும். மக்களுடைய அபிப்பிராயத்தை நன்கு உணரவேண்டும். மொழிப் பிரச்னைக்காக எத்தனையோ கூட்டங்கள் போடப்பட்டன. எவ்வளவோ விவாதம் நடைபெற்றது. மக்களுடைய நலனைக் கருதி சட்டம் கொண்டுவந்தால் தான் நலமாக இருக்கும். ஒத்துக்கொள்ளக் கூடிய தன்மையிலே இருக்கும். "நாங்கள் கொண்டு வரக்கூடிய சட்டத்தை

ஆதரிக்கவேண்டும். எல்லோரும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று சொன்னால், நாங்கள் சொல்வதையும் நீங்கள் ஆதரிக்கவேண்டும் என்று பிரதிக்ஞை எடுதுத்க்கொள்ளுங்கள் என்று தான் சொல்லமுடியும்.

இதிலே இன்னொரு மாறுதல் என்ன என்று சொன்னால், கோர்ட்டிலேயும், மற்றும் போலீஸ் ஸ்டேஷனிலேயும் "நாற்றம்" ஏற்படுகிறது என்ற காரணத்திற்காக, இந்த கள்ளச் சாராயம், "சொன்டி சோறு" முதலியவைகளை கைப்பற்றும் இடத்திலேயே அழித்துவிடலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்கள் இன்னும் கொஞ்சம் சம்பளம் அதிகமாகக் கேட்கிறார்களே, எப்படியாவது "கொஞ்சம் வாங்கி" பிழைத்துக் கொண்டு போகட்டுமே என்று நினைத்துத்தான் கடுமையாக இந்த சட்டம் கொண்டுவரப்படுகிறதோ என்று கூட நினைக்கவேண்டியிருக்கிறது. இதுவரையிலும் போலீசார் இந்தமாதிரி கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களை பிடித்தார்கள் என்று சொன்னால், போலூஸ்காரர்கள்தான் "prove" பண்ணவேண்டும். ஆனால் இந்தப் புதிய சட்டத்தின் படி ஒருவர் மீது அபாண்டமாக கேஸ் போட்டால் அவர்கள் தான் prove பண்ணவேண்டும். ஆகவே, போலீஸ்காரர் ஒருவரைப் பிடித்து "1 அல்லது 2 ரூபாய் தான் அபராதம் போடுவார்கள். குற்றத்தை ஒப்புக்கொண்டு விடு, இல்லையானால் 6 மாதம் சிறைக்குப் போகவேண்டியிருக்கும்" என்று சொன்னால், அதை அவர் ஒப்புக் கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது. இன்னும் போலீஸ்காரர்கள் குறிப்பிட்ட கேஸ்களைப் பிடித்து ஆகவேண்டும். "இளிச்சன்வாயன்கள்" தலைமேல் கைவைத்தோ, அல்லது அவர்கள் தலைமேல் கள்ளுப் பானையை வைத்தோ பிடித்து விடுவார்கள். இன்றைக்கு கம்யூனிஸ்டுகளுடைய நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு "ஸி.ஐ.டி." வைத்திருக்கிறார்கள். இந்தக் கள்ளச்சாராயம் காய்ச்சுவதை கண்டுபிடிப்பதற்கு "ஸி.ஐ.டி." அந்த அளவுக்கு இருந்தாலும், அவர்களும் அதிலே சேர்ந்து கூட்டு வியாபாரம்தான் செய்கிறார்கள். இதை நிரூபிக்க நான் தயார், இதைப் பற்றி எல்லாம் எழுதியிருக்கிறீர்களா, சொல்லியிருக்கிறீர்களா என்று கேட்கலாம். போலீஸ்காரர்கள் பேரில் எத்தனையோ எல்லாம் எழுதியிருக்கிறோம். இதுவரையிலும் தீர்க்கப்படவில்லை. அந்த அளவுக்கு நிலைமை இருக்கும்போது, மேலும் மேலும் எழுதி என்ன பிரயோசனம்? ஆகவே இந்த மசோதாவை 3 மாதங்களுக்கு ஒத்திப்போட்டு, மக்களுடைய பிரச்னைகளையெல்லாம் தெரிந்துகொண்டு, ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, விவாதம் செய்து ஏகோபித்த முடிவுக்கு வந்தால் நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri P. U. SHANMUGAM:** சட்டமன்றத் தலைவர் அவர்களே மதுவிலக்கு மசோதாவை ஒட்டி நடைபெறும் விவாதத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான் எனது கருத்துக்களைச் சொல்ல துவக்குவதற்கு முன்பாக, தெள்ளத் தெளிய ஆளும்கட்சி அமைச்சர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றும், எப்பொழுதும் மதுவிலக்குத் திட்டத்தை எதிர்த்தது கிடையாது, முழு மனதோடு ஆதரித்தவர்கள், ஆளும் கட்சியைத் சார்ந்தவர்களிடத்திலிருந்து அழைப்பு வரும் என்று எதிர்பார்த்தது கிடையாது, மதுவிலக்குப் பிரசாரத்தில் ஈடுபாடு கொண்டு பல துறையிலும் மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெருவதற்காக பெரும் முயற்சி செய்திருக்கிறது, பணி ஆற்றி இருக்கிறது என்பதை தங்கள் மூலம் அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது வருகிற கடுமையான சட்டத்தைப் பார்க்கும்போது, இதன் மூலம் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க முடியுமா என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றுகிறது. இந்தக் கடுமையான சட்டம் இல்லாமல் இருப்பதனால் தான் இம்மாதிரி நடைபெறுகிறதா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டால் ஒருவேளை "ஆம்" என்று சொல்லக்கூடும். என்னைப் பொறுத்த வரையில் கடுமையான சட்டம் இல்லாததினால் தான் மட்டும் இது போல் நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. பொதுவாக நமது நாட்டில் மது விலக்கு குற்றத்திற்காக தண்டனை பெறுகிறவர்கள் அப்படி தண்டனை பெறுவது தேசத் துரோகம்,



சமூகத் துரோகம், இழிவான காரியம் என்று எண்ணுவது கிடையாது. இப்படி கருதாத காரணத்தால் நமது நாட்டில் ஆபத்து வளர்ந்துகொண்டேவருகிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த ஆபத்தான நிலைமையை வளரவிடக்கூடாது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதை தேசத் துரோகம், சமூகத் துரோகம், இழிவான காரியம் என்று பிரசாரம் செய்வதற்கு போதுமான வசதிகளை எல்லா கட்சியினருக்கும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்ட திருத்தத்தில் குறைந்த பட்ச தண்டனை போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக சட்டங்களில் உயர்ந்த பட்ச தண்டனை என்று குறிப்பிடுவது வழக்கம். இதுவரை வந்த சட்டங்களில் இம்மாதிரி குறைந்த பட்ச தண்டனை போடப்படவேண்டும் என்று குறிப்பிடவில்லை. எனக்கு சட்டம் அதிகம் தெரியாது. என்றாலும், மெகாலே அவர்கள் சொல்லியிருப்பது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. "99 குற்றவாளிகள் தண்டனையில்லாமல் தப்பித்துக்கொண்டாலும் பரவாயில்லை, ஆனால் ஒரு நிரபராதி தண்டனையடையக்கூடாது" என்று அவர் சொல்லியிருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் ஏன் அம்மாதிரி சொல்லவேண்டும். நீதிக்குப் புறம்பாக ஒன்றும் செய்யக்கூடாது, நீதி பாதுகாக்கப்பட்டவேண்டும் என்பதற்காகவே அவர் அவ்விதம் சொல்லியிருக்க வேண்டும். அந்த முறையை நாமும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் தாழ்மையாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடுமையான சட்டம் கொண்டுவருவதற்குமுன், 6 மாதத்திற்கு இந்த சட்டத்தை ஒத்தி வைத்து, இந்த சட்டத்தின் நிலைமையை பொது ஜனங்களுக்கு எடுத்துக் கூறி, சாராயம் காய்ச்சுவது, தேசத் துரோகம் சமூகத் துரோகம் என்று பிரசாரம் செய்யவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகின்றது. அந்த வகையில் கனம் சட்டநாத கரையாளர் கொடுத்த திருத்தத்தை திராவிட முன்னேற்றக் கழகம் மனப்பூர்வமாக வரவேற்கிறது.

பொதுவாக, போலீஸ்காரர்களால் இந்தச் சட்டம் அமுலாக்கப்படுவதற்கு விட்டுவிட்டால், பல சிக்கல்கள் ஏற்படும், பல வழக்குகள் ஏற்படும். இதை சாதாரணமாக நாம் பார்க்கின்றோம். என்னுடைய தொகுதியில் மதுவிலக்கைப் பற்றிய ஒரு வழக்கு நடைபெற்றது. வழக்கில் சம்பந்தப்பட்ட கிராமத்தையும் போலீஸ் அதிகாரியின் பெயரையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. கிராமத்தில் உள்ளவர்களுக்கும், போலீஸ் அதிகாரிக்கும் தகராறு இருந்ததன் காரணமாக மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு தொடரப்பட்டு அது நீதி மன்றத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டது. நீதிபதி தனது தீர்ப்பில் அநியாயமாக இந்த வழக்கு தொடரப்பட்டது என்று குறிப்பிட்டிருப்பதை நான் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டத்தினால் அவதூறுகள் நடைபெறுகின்றன என்று சொன்னால், ஏதோ ஒரு சில இடங்களில் நடக்கலாம் என்று சொல்லி தள்ளிவிடக்கூடாது. நீதி எங்கெங்கெ புறக்கணிக்கப்படுகிறதோ, அங்கே அணை போடவேண்டும், தடுக்கவேண்டும்.

ஒரு குற்றவாளியை, தான் குற்றவாளி அல்ல என்று அவனையே நிரூபிக்கச் சொல்வதானது, நீதி மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. நீதிக்கு வரம்பு கட்டுவதும் சரியல்ல. குறைந்த பட்சம் தண்டனை விதிக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. உயர்ந்த பட்ச தண்டனையை வேண்டுமானாலும் அதிகமாக செய்யலாமே தவிர குறைந்த பட்ச தண்டனை விதிக்கவேண்டும் என்று விதி இருக்கக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவை 6 மாதத்திற்கு ஒத்திவைக்க வேண்டும் என்று கோருவதற்குக் காரணம், இந்த மதுவிலக்கைப்பற்றி நல்ல முறையில் பிரசாரம் செய்யவேண்டும் என்பதற்காகத்தான், என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

[13th March 1958

11 30 a.m. **Sri T. S. RAMASWAMY PILLAI**: சபாநாயகர் அவர்களே, இந்த
மசோதாவைப் பற்றினவரையில் அரசாங்க கட்சிக்கும், எதிர் கட்சிகளுக்கும்,
எதிரான கொள்கை கிடையாது, என்பதைப் பார்த்து சந்தோஷப்படுகிறேன்.
இதை நல்லமுறையில் அமல் நடத்தவேண்டும் என்பதற்காக சில திருத்
தங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த திருத்தங்களை பரிசீலனை செய்து
கொண்டுவரவேண்டும். இந்த மசோதாவில் சில அபாயகரமான ஓட்டை
கள் இருக்கின்றன. அவைகளை நன்றாக பரிசீலித்து அதன் பிறகுதான்
இந்த மசோதாவை கொண்டு வர வேண்டும். என்று சொல்ல விரும்பு
கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிப் பேசும்போது அதிக
பட்ச தண்டனை, குறைந்த பட்ச தண்டனை என்றெல்லாம் குறிப்பிட்டார்.
இதுவரை நம்முடைய தேசத்திலே, பம்பாய் ராஜ்யத்தைத்தவிர, இம்மாதிரி
குறைந்த பட்ச தண்டனை விதிக்கவேண்டும் என்று போட்டதில்லை. ஆர்
வத்தினால் இப்படிச் செய்யலாம். ஆர்வம் எல்லோருக்கும் இருக்கவேண்
டும். மதுவிலக்குச் சட்டம் 100-க்கு 100 பங்கு வெற்றிபெறவேண்டும்.
என்ற அக்கறை இருக்கவேண்டும். அந்த அக்கறையின் காரணமாக
நம்முடைய ராஜியத்திலே இது வரை நடந்து வரக்கூடிய நீதி அடிப்படையை
மாற்ற முயற்சி செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அதனால் வேறு
விளைவுகள் ஏற்படும். கோர்ட்டில் உள்ள அதிகாரிகளைக் பார்த்து நிச்சய
மாக இவ்வளவு தண்டனை விதிக்கவேண்டும் என்று சொல்வது
சரியல்ல. இந்த விஷயத்தில் அவர்களுக்கு **Discretionary powers** கொடுத்
தாக வேண்டும்.

இந்த மசோதாவில் நிறைய **presumptions** இருப்பதாக பல அங்
கத்தினர்கள் சொன்னார்கள். எதிர் கட்சி அங்கத்தினர்கள் மட்டும் அல்ல,
காங்கிரஸ் கட்சியில் உள்ள ஸ்ரீ லாஸர், ஸ்ரீ வில்லியம்ஸ், ஸ்ரீ தங்கவேலு
போன்றவர்களும், இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் நிறைய ஆபத்துக்
கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நிரபராதிகள் தண்டிக்கப்
படுவார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். பனை மரத்தில் ஏறி கள்
இறக்கினால் 6 மாதம் தண்டனை என்று 4-வது கிளாசில் சொல்லபபட்
டிருக்கிறது. பனை மரத்தில் ஏறினால், கள் இறக்குவதற்கு மட்டும் அல்ல.
நமக்குத் நன்றாகத் தெரியும், பதனி, மற்றும் வேறு பொருள்கள்
தயார் செய்யவேண்டியும் மரத்தில் ஏறலாம். அதிலிருந்து கருப்பட்டி,
பனை வெல்லம் முதலியன தயார் செய்கிறார்கள். இவைகள் எல்லாம்
குடிசைத் தொழில்கள். இந்தக் குடிசைத் தொழில்களில் எத்தனையோ
லட்சம் பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மரம் ஏறுகின்ற ஒரு காரணத்தைக்
கொண்டே தண்டனை விதிப்பது ஆபத்தானது. ஒருவருக்கு ஒருவர் ஏதா
வது விரோதம் இருந்தால், இந்த மசோதாவின் பிரகாரம் மரம் ஏறின
தாகச் சொல்லி, சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு இடம் இருக்கிறது.
அம்மாதிரி மரம் ஏறுகின்றவர்களுக்கு 6 மாதம் தண்டனை கொடுத்தாக
வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகையால் இந்த மசோதாவில்
நிறைய **presumptions** இருக்கிறது என்பதே என்னுடைய எளிமை
யான கருத்து.

நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரை நாம் நிச்சயமாகப் பெரு
மைப்படலாம். ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது
இந்த மது விலக்கு மசோதா கொண்டுவரப்பட்டது. மற்ற ராஜ்யங்களுக்கு
எல்லாம் இது வழி காட்டியாக இருந்தது. தேசம் எங்கும் சென்னை ராஜ்
யத்தைப் பார்த்து பெருமிதம் அடைந்தது.

நாம் எல்லோரும் இந்த மது விலக்குச் சட்டம் வெற்றி பெறவேண்டும்
என்று அக்கறை கொண்டிருந்தாலும், நீதிக்குப் 'புறம்பாக, நீதியின்
அடிப்படைத் தத்துவததிற்கு விரோதமாக **Fundamentals of Juris-
prudence, Justice** எந்தவிதமான மாற்றத்தையும் செய்யக்கூடாது.

இந்த மசோதாவில் பல தவறுகள் இருக்கின்றன. மது விலக்குச்
சட்ட குற்றங்கள் குறைந்துகொண்டுவருகின்றன என்று கனம் அமைச்
சர் அவர்கள் கூறினார்கள். அகில இந்திய மது விலக்கு விசாரணை அறிக்
கையில் நாளுக்கு நாள் மது விலக்கு குற்றங்கள் அதிகமாகிக் கொண்டி



13th March 1958] [Sri T. S. Ramaswamy Pillai]

ருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்தக் குற்றங்கள் குறைந்த
தாக காணப்படவில்லை என்று சில புத்தகங்களும், புள்ளி விவரங்களும்
நமக்குத் தெரிவிக்கின்றன.

இந்த மதுவிலக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய நிர்வாகம் சீர்கேடாக
இருக்கிறதே தவிர, சட்டத்தில் சீர்கேடு ஒன்றும் இல்லை என்பது
என்னுடைய கருத்து. நிர்வாகம் நடத்தக்கூடிய உத்தியோகஸ்தர்கள்,
சிப்பந்திகள் சரியான முறையில் நடக்கவில்லை என்றாலும், அல்லது தவ
றான வழிகளில் சென்றாலும், அவர்களுக்கு கடுமையான தண்டனை விதித்
தால் ஒழிய இந்த சட்டத்தை சரியானபடி அமல் நடத்த முடியாது.
ஆகையால் இந்தச் சட்டத்தை வளைத்து திருத்த முயற்சிக்கக்கூடாது என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri P. S. CHINNADURAI**: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்
களே, மதுவிலக்குச் சட்டம் முதன் முதலாக நமது ராஜ்யத்தில் அமுலுக்கு
வந்து 21 வருஷங்களாயிற்று. அதற்கு ஒரு திருத்த மசோதாவை இப்பொ
ழுது இங்கு பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் இதற்கு முன்
பல தடவை திருத்தப்பட்ட போதிலும் இப்பொழுது திருத்தப்படுகிற முறை
யானது மிகவும் கடுமையாக இருக்கிறது. 21 வருஷங்களுக்குப் பிறகு
இவ்வளவு கடுமையாக இந்தத் திருத்தம் கொண்டு வரவேண்டுமா என்று
நினைத்தால் இதுவரையிலும் அந்தச் சட்டம் வெற்றிகரமாக நடைபெற 11·40 a.m.
வில்லையோ என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. இதற்கு கனம்
அமைச்சர் அவர்கள் இங்கே சமாதானம் சொன்னாலும் கூட மற்ற
ராஜ்யங்களில் இதைப்பற்றி கவனிப்பார்கள். இப்படிப்பட்ட கடுமையான
தண்டனை விதிக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட மசோதாவைப்
பார்த்து என்ன நினைப்பார்கள் என்றால் நடைமுறையில் இது அவ்வளவாக
வெற்றிகரமாக நடைபெறவில்லையோ என்றுதான் கருதுவார்கள். இங்கு
நடைபெற்ற விவாதத்தைப் பார்த்தாலும் அப்படித்தான் வெளி ராஜ்
யங்களிலுள்ளவர்கள் நினைப்பார்கள். மது விலக்குச் சட்டம் உண்மை
யிலேயே தோல்வி அடைந்திருக்கிறது என்றுதான் அவர்கள் கருதுவார்
கள்.

இந்த திருத்த மசோதாவை நான் எதிர்க்கிறேன் என்ற காரணத்தால்
இந்த மதுவிலக்குத் திட்டத்தையே நான் எதிர்க்கிறேன் என்று யாரும்
நினைத்துவிடக்கூடாது. மது விலக்கு அமுலில் இருக்கக்கூடிய காலத்திலும்
கூட சில நபர்கள் பர்மிட் வாங்கிக்கொண்டு குடித்துக்கொண்டு வந்திருக்கி
றார்கள். அவர்கள் எல்லோரும் கனம் மந்திரி அவர்களுடைய அகராதி
யில் பெரிய மனிதருடைய வரிசையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட
பெரிய மனிதர்களுடைய வரிசையில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்
யாரும் இல்லை. அதைப்போலவே ப்ராஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த
அங்கத்தினர்கள் எவரும் இப்படிப்பட்ட பெரிய மனிதர்களுடைய வரிசை
யில் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்காக நான்
பெருமைப்படவும் முடியும். ஆகையினால் இந்த மது விலக்கு திட்டத்தைப்
பொறுத்தவரையில் அந்த திட்டம் நல்லதுதான். ஆனால் அது சரியான
முறையில் அமுல் நடத்தப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்
பிராயம். இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றும்போது இது குறிப்பாக
ஒரு சமூக சீர்திருத்தச்சட்டம் என்று எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தச்
சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் எல்லோரும் சமம் என்று கருத
வேண்டும். சட்டத்தின் முன்பாக எல்லோரும் சமம் என்ற நிலை வரவேண்
டும். 1937-ம் வருஷம் முதற்கொண்டு இந்தச் சட்டத்தை ஆட்சியாளர்கள்
அமுல் நடத்திக்கொண்டுவருகிறார்கள். அது முதற்கொண்டு ஒவ்வொரு
மனிதனுடைய எண்ணத்திலும் சிந்தனையிலும் வேகமாக அபிவிருத்தி
ஏற்பட்டுக்கொண்டுவருகிறது. ஏற்கெனவே சட்டத்திலுள்ள குறைபாடுகளை
பலமுறை திருத்தியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் பெரிய மனிதர்களுக்கு
குடிக்க வசதி கொடுக்கப்படுவதைப்பற்றிய ஷரத்து திருத்தப்படா
மலே இருப்பது வருந்ததக்க விஷயமாக இருக்கிறது. இன்னும் அத்த
கையவர்கள் பெரிய மனிதர்களாகக் கருதப்படவேண்டுமா என்பதையும்

கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சட்டத்தின் மூலமாக எல்லோரும்
சமம் என்று பாவிக்கக்கூடிய நிலையில் சட்டத்தைக்கொண்டு வருவதை
மட்டுமே நான் வரவேற்க முடியும்.

அது மாத்திரம் அல்ல, இப்பொழுது நமது ராஜ்யத்தில் மது விலக்கு
அமுலில் இருந்துவருகிறது. அதே நேரத்தில் பக்கத்திலுள்ள ராஜ்
யங்களாகிய பாண்டிச்சேரி, முதலிய இடங்களில் குடிக்கலாம் என்று
இருக்கிறது. மற்றும் கேரளாவில் சில பகுதிகளில் குடிக்கலாம் என்றும்
இருக்கிறது. அதைப்போலவே ஆந்தராவில் சில பகுதிகளில் குடிக்கலாம்
என்று இருக்கிறது. இப்படி பல் வேறு ராஜ்யங்களில் மது விலக்குச்
சட்டம் தீவிரமாக அமுலுக்கு வரவில்லை. கேரளாவை எடுத்துக்கொள்ளா
விட்டாலும் மற்ற ராஜ்யங்களில் காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்று
வருகிறது. அப்படி இருந்தும் இந்த ராஜ்யத்தில்தான் நாம் மது
விலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்த வேண்டும் என்று சொல்லு
கிறோம். காந்தியடிகளின் கொள்கைப்படி இந்தியா பூராவும்
பெரும்பாலான ராஜ்யங்களில் மதுவிலக்குச் சட்டத்தை காங்
கிரஸ் கட்சியினர் தீவிரமாக அமுல் நடத்தத் தவறிவிட்டார்கள். இதைப்
பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இரண்டு வருஷங்களுக்கு
முன்னதாக நான் சைனாவுக்குச் சென்று நமது இந்திய தூதராலயத்
திற்குச் சென்றிருந்தேன். தூதருடைய துணைத் தூதர் அலுவலகத்
திற்கும் சென்றிருந்தேன். அங்குள்ள அதிகாரிகள் அத்தனை பேரும்
அங்குள்ள மிக உயர்ந்த மது வகைகளை அங்கு வந்த விருந்தினர்களுக்கு
பரிமாறினார்கள். தாங்களும் தங்கள் துணைவிமார்களுடன் அவைகளை
அருந்தினார்கள். அதைக் காண உண்மையில் நான் கண்ணீர் விட வேண்டி
யதாயிற்று. ஆகவே காங்கிரஸ் ஆட்சியில் இருக்கக்கூடிய தலைவர்
களுக்கு இதைப்பற்றி பொறுப்பு இல்லையா ? அவர்கள் இதைப்பற்றி
உணரவில்லையா என்று கேட்கிறேன். மதுவிலக்குத் திட்டத்தை பரி பூரண
மாக அமுல் நடத்துவதற்கு இந்த சர்க்கார் ஏன் மத்திய சர்க்காருக்கு
வலியுறுத்திக் கூற முடியவில்லை. இங்கு இப்படி தீவிரமாக அமுல் நடத்த
வேண்டும் என்று சொல்லும்போது அங்குமட்டும் ஏன் அப்படி நடத்தப்பட
வில்லை ? அங்கும் அப்படியே நடத்தப்படவேண்டும் என்று சொல்லக்
கூடிய எண்ணம் ஏன் இங்குள்ள மந்திரிகளுக்கு ஏற்படவில்லை.
இப்பொழுதுள்ள சட்டத்தில் எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன.
அந்தக் குறைபாடுகளைப் போக்காமல் மக்களின் மீது தண்டனையை அதிக
மாக விதிக்கவேண்டுமா ? குறைகளை நீக்கிவிட்டால் திட்டம் சரிவர
நடைபெறுவதற்கு இடம் ஏற்படலாமேயொழிய தீவிரமான தண்டனை
விதிக்கப்படுவதால் குற்றங்கள் குறைந்து போகப்போவதில்லை. ஸ்ரீமதி
குழந்தை அம்மாள் சொல்லியபடி மதுவிலக்குச் சட்ட அட்வைசரி கமிட்டி
யில் இருக்கக்கூடியவர்கள் தகவல் கொடுத்தவர்களைப்பற்றி வெளியில்
சொல்லக்கூடாது. கமிட்டியில் என்ன நடக்கின்றன என்பதையும் வெளி
யில் சொல்லிவிடக்கூடாது. இதை நான் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். இப்பொழுதுள்ள மதுவிலக்குச் சட்டத்திலுள்ள முக்கிய
குறைபாடுகளை மட்டும் திருத்தி அமைத்துவிட்டால் போதும். மற்றும்,
இதை அமுல் நடத்துகிற அங்கத்தினர்களுக்கே இதில் நம்பிக்கை இருப்ப
தாகத் தெரியவில்லை. இதற்கு ஒரு உதாரணம் கூற வேண்டும் என்று
பிரியப்படுகிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்னதாக கோவை ஜில்லா
மதுவிலக்கு போர்டு கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதிலுள்ள முப்பது
அங்கத்தினர்களில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இந்த சட்டசபை அங்கத்
தினர்களும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். ஆனால்
அந்தக் கூட்டத்திற்கு அவ்வளவு பேர்களும் வரவில்லை. ஒருவர் மட்டும்
தான் அதாவது கே. பி. பழனிசாமி அவர்கள் மட்டும்தான் வந்திருந்
தார். நான் போயிருந்தேன். மற்றவர்கள் எங்கு போய்விட்டார்கள்
என்பது தெரியாது. அவர்களுக்கு இந்த திட்டத்தில் நம்பிக்கை இல்லையா
என்று கேட்கிறேன். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே ஏன் வரவில்லை,
வர தவறிவிட்டார்கள் என்பதை அறிவதற்கும் விரும்புகிறேன். மது
விலக்குத் திட்டத்தில் பூர்ண நம்பிக்கை வைத்து இருக்கிற காங்கிரஸ்
உறுப்பினர்களை போட்டிருந்தால் அவர்கள் நல்ல முறையில் அந்தச்





சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முற்படுவார்கள். அதன் மேல் அந்தச் சட்டம்
வெற்றிகரமாக நடைபெறும். நம்பிக்கை இல்லாதவர்களை அதில்
வைத்திருந்தால் வெற்றிகரமாக நடைபெற இயலாது என்பதைக்
குறிப்பிடவேண்டும். இதனால் தான் பரிபூரணமான அளவுக்கு வெற்றி
காண முடியவில்லை.

இன்னும் பல இடங்களில் மது விலக்குத் திட்டம் சரியானபடி அமு
லுக்கு வராத காரணம் பெரிய காங்கிரஸ் தலைவர்கள் மத்தியில் இது
பூரணமாக அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது என்ற எண்ணம் நிலவு
வதுதான் அப்படிப்பட்ட ஒரு கொள்கையை அவர்கள் அங்கங்கே சொல்லி
வருகிறார்கள். இதன் விளைவு என்ன ஆகும் என்பதை நினைத்துப்
பார்த்தால் பயமாக இருக்கிறது. " **Let is die a natural death** " இயற்
கையாகவே இது மரணமடைந்து விடும் என்று அவர்கள் நினைத்துக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்குத் திட்டம் மரணமடைய விடாமல்
பூரணமாக வெற்றி அடையவேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக குறைந்த பட்ச தண்டனை விதிக்கப்போவதைப்பற்றி
குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது. எனக்கு போதிய சட்டமும் தெரி
யாது, நான் சட்ட கல்லூரியிலும் படித்து வரவில்லை. .எனக்கு பூராச்
சட்டங்களும் தெரியும் என்று நான் சொல்லிக்கொள்ளமுடியாது.
எனக்கு சட்ட ஞானம் வந்ததெல்லாம் அனுபவ ரீதியாக வந்ததுதான்.
கேள்வி ஞானம் மூலமாக வந்த சட்டம்தான் எனக்குத் தெரியும். நாம்
எவ்வளவோ சட்டங்களை இந்த சட்ட சபையில் கொண்டு வந்து நிறை வேற்றி
யிருக்கிறோம். அவைகளில் எதிலும் குறைந்த பட்ச தண்டனையைப் பற்றி
குறிப்பிடவே இல்லை. இதற்கு முன்பு எவ்வளவோ சட்டங்கள் இருக்
கின்றன. அவைகளில் ஒன்றிலாவது, இந்த மசோதாவில் கண்டுள்ளபடி
குறைந்த பட்ச தண்டனையைக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை.
ஆனால் மந்திரி அவர்கள் சொல்லுவார்கள் பம்பாயில் ஒரே ஒரு சட்டத்தில்
இம்மாதிரி சேர்க்கப்பட்டிருக்கிறது என்று. அதை நாம் பின்பற்ற வேண்
டியது அவசியமா என்பதைக் கேட்கிறேன். இதைப்பற்றி ஒரு தடவை
அல்ல நூறு தடவை யோசித்துப் பார்த்துச் செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொள்ளுகிறேன். குறைந்த தண்டனை விதிப்பது என்பது சரியல்ல.
குறைந்த பட்ச தண்டனையை நாம் கொண்டு வருவதால் நீதிபதிகள்
செய்யும் நீதியில் தலையிடுவதாக ஆகும். தண்டனை கொடுக்கும் விஷயத்
தில் நீதிபதிகளுடைய நீதியில் தலையிடுவது சரியல்ல. இப்படி நாம்
குறைந்த பட்ச தண்டனை இவ்வளவு என்று நிர்ணயம் செய்துவிட்டால்
அவர்களை நாம் கட்டுப்படுத்துவதாக ஆகும். சாதாரணமாகப் பார்த்தால்
எவ்வளவோ நீதிபதிகள் குறைந்த தண்டனைகளைக் கொடுத்துக்கொண்டு
வருகிறார்கள். அதனால் இப்படி நாம் குறைந்த பட்ச தண்டனை என்று
விதித்துவிட்டோமானால் அவர்களை நாம் கட்டுப்படுத்துவதாக ஆகும்.
இப்பொழுதுள்ள சட்டத்தின்படியே நீதிபதிகள் தண்டனை கொடுப்பது
இல்லை. குறைவாகத்தான் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்
கள் ஏன் அப்படிக் கொடுத்து வருகிறார்கள் என்பதை கொஞ்சம் நாம்
யோசனை செய்து பார்க்க வேண்டும். ஒருக்கால் சட்டத்தில் ஏதாகிலும்
குறைகள் இருக்கின்றனவோ என்னவோ ? அதற்கு ஏதாவது காரணம்
இல்லாமல் இருக்காது.

**MR. SPEAKER** : நீதிபதிகளைப்பற்றி இந்த சட்டசபையில்
கூறுவது சரியல்ல என்று நான் சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர்
சைனாவில் நடந்த விருந்தைப்பற்றி குறிப்பிட்டபோதே அதை தடை
செய்திருப்பேன். ஏதோ தவறுதலாக விட்டு விட்டேன். ஆகவே இந்த
சட்டசபையில் நீதிபதிகளைப்பற்றி கூறுவது சரியல்ல.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : நான் குறுக்
கிட்டு தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர்
அவர்கள் நீதிபதிகளை குறை கூறும் வகையில் சொல்லவில்லை. நீதிபதிகள்
சரியாக' வேண்டிய` தண்டனை கொடுக்கிறார்கள். அதிலே ஏன் அரசாங்
கம் தடை செய்யவேண்டுமென்று, அரசாங்கத்தைத்தான் குறை கூறு
கிறார்கள்.

[13th March 1958

**MR. SPEAKER** : நான் கேட்டவரைக்கும் நீதிபதிகள் பரிபூர்ணமான தண்டனையை கொடுக்கவில்லை என்று சொன்னதாக எண் எனக்குத் தெரிந்தது.

**SRI P. S. CHINNADURAI** : நான் ஒரு போதும் நீதிபதியை குறை சொல்ல மாட்டேன். இந்தத் திருத்தத்தை புகுத்துவதின் மூலம் நீதிபதிகள் இஷ்டப்படி தண்டனை கொடுப்பதற்கு முரணுக இருக்குமே, அவர்களை இது கட்டுப்படுத்துமே என்ற கவலையைத் தான் நான் தெரிவித் தேன். இந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இந்தத் திருத்த மசோதா வருகிறது. என்னைப் பொறுத்தவரையிலே, மது விலக்கு என்பது உண்மையிலேயே ஒரு சமூக சீர்திருத்தம். மனிதனின் தன்மை யும் சம்பந்தப்பட்ட சட்டம் இது. ஆனுல் மனிதன் திருந்துவதற்கு போதிய அவகாசம் கொடுக்கவேண்டும். ஆகையால் அவர்களுக்கு போதிய அளவு சலுகை கொடுக்க வேண்டும், அவர்களுக்கு தயை காட்டவேண்டும் என்ற காரணத்திற்காக நீதிபதிகள் பரிபூரணமான தண்டனையைக் கொடுக்காமல் விட்டு வைத்திருக்கலாம். ஆகையால், நீதிபதிகளின் கையை சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்துவது சரியாகாது, ஆகவே இந்தத் திருத்தத்தை கைவிடவேண்டுமென்று நான் அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உள்நாட்டிலாகா அமைச்சர் நிச்சயமாக என்னைவிட அரசாங்க அனுபவம் பெற்றவர். சட்ட ஞானம் பெற்றவர். அப்படியிருக்கும்பொழுது அவர் இம்மாதிரி ஒரு மசோதா கொண்டு வருவது அவர் மனதுக்கே இனிக்காது என்று அவருக்கே தெரியும். இருந்தும், எந்தக் காரணத்தை கொண்டோ இம்மாதிரி ஒரு மசோதாவை அவரே கொண்டு வந்திருக்கிருர். ஏதோ அப்படி வந்து விட்டது என்று சொல்வது நல்லதல்ல. அப்படியில்லாமல் இம்மாதிரி ஷரத்துக்களை கைவிடும்படி அமைச்சர் அவர்களை மிக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மது விலக்கு திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் பரிபூர்ண ஆதரவை என்றைக்கும் கொடுப்போம் என்று அமைச்சர் அவர்களுக்கு உறுதி கூறுகிறேன். மதுவிலக்கு திட்டத்தை பரிபூர்ணமாக அமுல் நடத்துங்கள், தீவிரமாக அமுல் நடத்துங்கள், மற்ற ராஜ்யங்களிலும் அதை அமுல் நடத்த உதவுங்கள்; அந்த வகையில் நாங்கள் பரிபூர்ணமாக ஆதரவு கொடுக்கிறேம், அதன் மூலம் மக்களுக்கு கொடுமை செய்வதை கைவிடுங் கள், நீதிபதிகளின் கையைக் கட்டாதீர்கள் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

11-52 a.m. **SRI M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை இன்னும் 6 மாதத்திற்கு பிறகு நாம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று நண்பர் சட்டநாதக் கரையாளர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக் கிறேன். அதனுல் மதுவிலக்கு கொள்கைக்கு விரோதம் என்று அர்த்த மல்ல. மதுவிலக்கை பரிபூர்ணமாக வெற்றிகரமாக நடத்தவேண்டு மென்பதுதான் என்னுடைய அபிப்பிராயமும். கம்யூனிஸ்டு கட்சியின் அபிப்பிராயமும் அதுதான். ஆனுல் இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக் கும் மசோதா இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு உதவியாக இருக்குமா என்பதுதான் சந்தேகம். அது அப்படி உதவியாக இருக்கும் என்பது நிச்சயமானுல் நான் அதை ஆதரிக்கத் தயங்கமாட்டேன். என்னுடைய அபிப்பிராயத்தில் இத்தகைய மசோதாவின் மூலம் அந்த நோக்கம் வெற்றி பெற முடியுமா என்பதுதான் சந்தேகத்தில் இருக்கிறது. இது விஷயமாக பரிபூர்ணமாக ஆராய்ச்சியும், விசாரணையும் நடத்தப்படவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

1937-ல் நம்முடைய ராஜ்யத்தில் முதல் முதலாக சேலம் ஜில்லாவில் மது விலக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது காங்கிரஸ் காரர்களில் ஒருவனுக இருந்த நானும் வெகு ஆர்வத்தோடு, உற்சாகத் தோடு சேலம் ஜில்லாவை மட்டுமல்லாமல் மற்ற ஜில்லாக்களிலும் மது விலக்கை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கருதி, மது ஒழிந்தது, தேன் சுரந்தது என்று கோஷம் போட்டவர்களில் ஒருவன்.



13th March 1958] [Sri M. Kalyanasundaram]

அந்த ஆர்வமும், உற்சாகமும் இன்றும் எனக்குக் குறைந்துவிடவில்லை. இன்றும் அந்த ஆவல் எனக்கு இருந்துவருகிறது. மக்களிடத்திலும் பெரிய ஆர்வம் இருந்தது. பொது மக்கள் அதை ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டு மற்ற ஜில்லாக்களிலும் அமுலுக்குக் கொண்டுவர முன் வந்தார் கள். மது விலக்கு அவசியம் நன்மை பயக்கும் என்ற அடிப்படையில் அவர்கள் ஒத்துழைக்க முன் வந்தார்கள். ஆனுல் அத்தகைய உணர்ச்சி அத்தகைய ஆர்வம் இன்று மக்களிடத்தில் காண முடியவில்லை. இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கும் சிலரிடத்திலும் காணமுடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் நாம் மதுவிலக்கை எப்படி அமுல் நடத்துவது? இது ஒரு கட்சிக்குறிய பிரச்னை அல்ல. ஆளும் கட்சிக்குறிய பிரச்னையல்ல. எல்லாக் கட்சிகளுக்கும் நம் தேசத்திற்கும் பொதுவான பிரச்னை, மொழி சீர்திருத்தம், நில உடமை சீர்திருத்தம் எவ்வளவு அவசியமோ அதே போன்று மதுவிலக்கு அவசியம். அது சுதந்திர ஆட்சிக்கு முன்னதாகவே நம்முடைய இயக்கத்தின் ஒரு லட்சியமாக இருந்து கொண்டு வருகிறது. இது ஒரு பொதுவான பிரச்னை. எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்துழை த்து அமுல் நடத்தினுல்தான் இது வெற்றிகரமாக நடைபெறும். ஆகவே இது விஷயமாக எல்லோருடைய யோசனைகளையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்கு சர்க்கார் கண்டிப்பாக முயற்சி எடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அத்தகைய முயற்சி எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. துரதிர்ஷ்டவசமாக நான் அன்று இந்தச் சபை யில் இல்லை, வேறு முக்கிய அலுவல் இருந்த காரணத்தினுலே. அன்று இந்தச் சபையில் இதைப்பற்றி பொது விவாதம் கூட நடைபெற வில்லை. அவ்வளவு அவசரமாக இதை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விட வேண்டிய அவசியமில்லை. அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு வற்புறுத்தியிருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : நான் எப்படி வற்புறுத்துவது? அங்கத்தினர்கள் பேசுவதற்கு முன் வரவில்லை.

**MR. SPEAKER** : அங்கத்தினர்கள் பேசவில்லை யென்றுல் அமைச்சர் என்ன செய்ய முடியும்?

**SRI M. KALYANASUNDARAM** : ஒத்துக் கொள்ளுகிறேன் எப்படியோ துர்திருஷ்டவசமாக விரிவான விவாதம் இல்லாமலேயே இந்த மசோதா செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டு விட்டது என்பதை நாம் உணரவேண்டும். இதை தக்க முறையிலே பரி சீலனை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. என் சொந்த விருப்பு வெறுப்பிற்கு இடம் கொடுப்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இது என் தோல்வி அடைந்தது என்பதை நன்ருக பரிசீலனை செய்ய வேண்டி யது மிக அவசியம். தோல்வி அடைந்தது என்று நான் தைரியமாகச் சொல்லுவேன். சர்க்காரின் அறிக்கையில் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களைக் கொண்டு சொல்லுகிறேன். 1955–56-ம் வருஷத்திய மது விலக்கு இலாகாவின் அறிக்கை என் கையில் இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவாக எடுத்துப் பார்த்தாலும் சரி, ஒட்டுமொத்தமாக எடுத்துப் பார்த் தாலும் சரி, 1954–55-ம் ஆண்டைவிட 1955–56-ல் குற்றங்கள் அதிகரித் திருக்கிறது. 1954–55-ல், 95,867 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 1955–56-ல் 1,25,715 குற்றங்களாக அது உயர்ந்திருக்கிறது. இதில் என்ன விபரீதம் என்ருல் அடுத்த பாராவில் அவர்களே எடுத்துக் காட்டியிருப்பதை பாருங்கள். அதாவது

**The heavy rise in the number of cases of drunkenness and of possession of illicitly distilled liquor only suggests that there should be corresponding increase in the incidence of illicit distillation. However when compared with the total figures of detection, cases under illicit distillation have dropped during the year by 3·4 per cent**

என்று கூறப்பட்டிருக்கிறது. குடிக்கும் குற்றங்கள் அதிகமாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சக்கூடிய குற்றங்கள் குறைந்திருக்கின்றன. இதை இரண்டுவிதமாக அமைச்சர் அவர்கள் விவாதிக்கலாம். குற்றம் என் குரறைந்து இருக்கிறது என்று கேட்டால் நம்முடைய நிர்வாகம் திறமையாக நடந்து

[Sri M. Kalyanasundaram] [13th March 1958

கொண்டிருக்கிறது என்று சொல்லுவார்கள். குற்றம் என் அதி
கரித்திருக்கிறது என்றால் குற்றங்கள் கண்டுபிடிப்பதில் போலீஸ்காரர்களின்
திறமை அதிகரித்திருக்கிறது என்று இரண்டு விதத்திலும் வாதாடலாம்.
ஆனால் அம்மாதிரி இது வக்கீல் வாதத்திற்குரிய ஒரு பிரச்னை அல்ல.
போலீஸ்காரர்கள் நடந்துகொள்ளக்கூடிய முறை என்ன என்பதைப்
பார்க்கவேண்டும் ? எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்து சட்டங்கள்
கொண்டுவந்தால்கூட, இங்கிருந்துகொண்டு மந்திரிகள் உத்தரவு போட்டு
அவைகளை அமுல் நடத்திவிடமுடியாது. இலாகாவில் இருக்கக்கூடிய சாதா
ரண கான்ஸ்டேபிள் வரை ஒத்துழைப்பு கொடுத்தால்தான் சட்டத்தை
வெற்றிகரமாக அமுல் நடத்த முடியும். இந்த மதுவிலக்கைப் பொறுத்த
வரையில் போலீஸ் நிர்வாகத்தைப் பற்றி பல அங்கத்தினர்கள் பொறுத்த
கூறினார்கள். காங்கிரஸ் கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் குறை
ருக்கும் திருத்தங்களை பார்க்கும்பொழுது, இம்மாதிரி ஒரு கொண்டுவந்தி
மசோதா கொண்டுவருவதற்கு பொறுப்பாளி போலீஸ் கொடுமையான
மக்கள் அல்ல என்பது நன்றாகத் தெரிகிறது. நிர்வாகம்தான்,
அபிப்பிராயமும். கனம் அங்கத்தினர் டேனியல் அதுதான் என்னுடைய
ஷரத்துகளை கைவிட்டுவிடவேண்டுமென்று அவைகளை அவர்கள் முக்கியமான
கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலைமைக்கு ஆட்சேபித்து திருத்தம்
என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்பேர்ப்பட்ட பொறுப்பாளி போலிஸ்தான்
12 noon. அதிகமான அதிகாரத்தைக் கொடுத்தால் சட்டம் போலீசாருக்கு இன்னும்
நடத்தப்படுமா என்று, விருப்பு வெறுப்பு இல்லாமல் வெற்றிகரமாக அமல்
வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். சிந்தித்துப் பார்க்க
நான் . சொன்னால், நான் போலீஸ் இலாகாவைப்பற்றி இவ்வாறு
கனம் அமைச்சர் சொல்லக்கூடும். ஆதாரங்கள் குறைகூறுவதாக
லீஸ் இலாகாவின் பேரில் குறை கூறுகிறேன். இருப்பதால்தான் போ
றங்கள் அதிகரித்திருப்பதற்கு காரணம், மதுவிலக்கை மீறும் குற்
காரங்கள் அல்லாதது அல்ல ; போலீஸாரிடம் அதிகமான அதி
யிருக்கிறார்கள் ; இச் சுழலில் போலீசாரும் இந்த தீச் சுழலில் சிக்கி
காய்ச்சுபவர்கள் ஆகிய எல்லோரும் சிக்கிய போலீசார் கள்ளச் சாராயம்
மதுவிலக்குச் சட்டம்' வெற்றியடைய சேர்ந்து குழப்பத்தை உண்டுபண்ணி,
இதன் காரணமாக, மதுவிலக்குச் சட்டம் முடியாதபடி செய்துவிட்டார்கள்.
நம்பிக்கை மக்களுக்கு இல்லாமல் நன்கு அமல் நடத்தப்படும் என்ற
நீக்கவேண்டும் என்று அரசாங்கம் போய்விட்டது. "குடிப் பழக்கத்தை
தேசம் போல் இருக்கிறது. சொல்வது நமக்கு மட்டும்தான் உப
இறது." என்று மக்கள் பெரிய அதிகாரிகள் குடிக்கலாம் போலிருக்
ணிய மக்களுக்கு எண்ண ஆரம்பித்துவிட்டனர். அவ்வாறு எண்
"எல்லோரும் "குடிப்பது கெட்ட பழக்கம்" என்ற உணர்வு போய்
பட்டது. திருட்டுத்தனமாகக் குடிக்கலாம்" என்ற உணர்வு ஏற்
படிப்பட்ட அதன் விளைவாக மதுவிலக்குத் திட்டம் தோல்வியுற்றது. இப்
பாளியாக நிலைமை ஏற்பட்டதற்கு போலீஸ் இலாகாதான் பெரிதும் பொறுப்
யாகக் இருக்கிறது. நான் கூறும் குற்றச்சாட்டுகளைப் பொதுப்படை
அமைச்சர் கூறக்கூடாது என்றும், குறிப்பாகக் கூற வேண்டுமென்றும் கனம்
வங்களுக்குப் சொல்லக்கூடும். எந்த போலீஸ் ஸ்டேஷன் இப்படிப்பட்ட சம்ப
வேண்டுமென்று பொறுப்பாளியாக இருந்தது என்று நான் குறிப்பாகக் கூற
அமைச்சருக்கு அவர் சொல்லக்கூடும். அப்படிப்பட்ட தகவல் கனம்
வரவில்லையா ?

கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி குழந்தை அம்மாள் ஒரு ஸப்-இன்ஸ்பெக்
டரைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்ட மாதிரி அந்த ஸப்-
இன்ஸ்பெக்டர் பணியாற்றியிருந்தால், அவர் இன்னும் நிலைத்திருக்கிறாரா
என்று கேட்க விரும்புகிறேன். மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக
அமல் நடத்துவதற்கு உற்சாகமாகப் பணியாற்றிய ஒரு ஸப்-இன்ஸ்பெக்டரை
எனக்குத் தெரியும். அவர் இலாகாவை விட்டே மாற்றப்பட்டார். போலீஸ்
டிமாண்டு வரும்போது ஒரு ஸப்-இன்ஸ்பெக்டரைப்பற்றி விவரமாகக் கூறு
கிறேன் ; அப்போது கனம் அமைச்சர் நான் கூறும் விஷயங்களுக்கு பதில்
அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் ஜில்லாவில் மொபைல் பார்டியில் இருந்த ஸ்ரீ கோதண்டபாணி
முதலியார் என்ற ஸப்-இன்ஸ்பெக்டர் உயர்தர அதிகாரிகளிடம் பலவிதமாக
உறவுகொண்டாடிக் கொண்டிருந்ததுபற்றி அமைச்சரவைக்குத் தகவல்



13th March 1958] [Sri M. Kalyanasundaram]

தெரிவிக்கப்பட்டது. அவர்பேரில் பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருக்
கின்றன. அவர் 1956-ம் வருஷத்தில் ஜனவரி பண்டிகையின்
போது டி.எஸ்.பி. ஸ்ரீ வெங்கடராம ஐயருக்கு சன்மானம் கொடுத்த
தாகக் குற்றச்சாட்டு. டி.எஸ்.பி.-யோ ஒரு ஐயர். ஸப்-இன்ஸ்பெக்டரோ
ஒரு முதலியார். ஜனவரிப் பண்டிகைக்கும் இவர்களுக்கும் என்ன சம்
பந்தம் ? ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர் இன்னொரு அதிகாரிக்கு எப்படி 56
சவரன் சன்மானம் கொடுத்திருக்க முடியும் ? இது மிகவும் ஆச்சரியப்
படத்தக்க விஷயம். இந்தக் குற்றச்சாட்டுகள் அமைச்சரவைக்கு வந்திருக்
கிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் போலீஸ் இலாகாவிஸ் ஸ்பெஷல்
ப்ராஞ்சுக்கு விசாரணைக்கு விடப்பட்டது. என்ன விசாரணை இது
வரையில் நடந்திருக்கிறது ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?
அந்த அதிகாரியின்பேரில் பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருக்கின்றன.
அவைகளில் இது ஒன்று. இது குறித்து அவர் விசாரிக்கப்பட்டாரா ?
அவர் இப்போது எங்கே இருக்கிறார் ? அவர் இப்போது சௌக்கியமாக
இருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமை எல்லா ஜில்லாக்களிலும் இருக்கிறது.
இந்த விஷயம் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குக்கூடத் தெரியும். குற்றச்
சாட்டுகள் கூறப்பட்டால் நடவடிக்கை எடுப்பதில் இவ்வளவு தயக்கம் இருப்
பதால் தான், சாதாரண கான்ஸ்டபில்கள்கூட கடமையுணர்ச்சியுடன் இல்
லாமல் இருக்கிறார்கள். அவர்கள் "சட்டசபையில் யார் என்ன பேசினால்
என்ன ? மேலதிகாரிகளை என்ன செய்துவிட்டார்கள் ? நாமும் நமக்கு
ஏதாவது 4–5 ரூபாய் கிடைத்தால் அதை வாங்கிக்கொண்டு பேசாமல்
இருப்போம்" என்ற மனப்பான்மையுடன் தங்கள் கடமையைச் சரிவரச்
செய்யாமல் இருக்கிறார்கள். போலீசாருக்கு இந்த மனப்பான்மை இருந்
தால் நாட்டில் மதுவிலக்குச் சீர்திருத்தம் எப்படி ஏற்படும் ? தவறுசெய்த
டி.எஸ்.பி.-யின் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், கனம்
போலீஸ் அமைச்சர் போலீஸ் இலாகாவிற்குப் பாதுகாப்பாக இருக்கிறார்
என்று அவர் மீது குற்றம் சாட்ட நான் முன்வரவில்லை. கனம் அமைச்ச
ரின் பேரில் குற்றம் சாட்டுவதற்காக இந்த விஷயங்களை நான் கூற
வில்லை. நாட்டில் மதுவிலக்குச் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு போலீஸ்
இலாகாவினர் உதவியாக இல்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்
தான் இந்த விஷயங்களைக் கூறினேன். வெறும் அடக்கு முறையின்
மூலம் எந்தச் சீர்திருத்தத்தையும் கொண்டுவரமுடியாது. எந்த நாட்டி
லும் அடக்குமுறையின் மூலம் எந்த சீர்திருத்தமும் ஏற்படவில்லை. கனம்
அமைச்சர் ரஷியாவைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே நடக்கும் விஷ
யங்களையும் நாங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று அவர் கூறினார்.
ரஷ்யாவில் நடக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள நான் முயற்சி
செய்துகொண்டுதான் இருக்கிறேன். முதலில், நம் நாட்டில் நடக்கும்
விஷயங்களைப் பார்ப்போம். நாம் நியமித்த மதுவிலக்கு விசாரணைக் கமிட்டி
யினர் கொடுத்த யோசனைகளையாவது அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்குச் சட்டத்தை அமல் நடத்தும் விஷயத்
தில் இரண்டு பிரிவாக இலாகாவைச் செயல்படச் செய்யவேண்டுமென்று
அந்தக் கமிட்டி யோசனை கூறியிருக்கிறது. அதாவது, "டிடெக்டிவ் விங்",
"என்போர்ஸ்மென்ட் விங்" என்ற இரு பிரிவுகளாக இலாகா செயல்பட
வேண்டுமென்று கூறியிருக்கிறது. மதுவிலக்கு விசாரணைக் கமிட்டி கொடுத்
திருக்கும் யோசனைகளில் இது ஒன்று. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும்
குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும் மட்டுமே கவனம் செலுத்திக்கொண்
டிராமல், மக்களின் மனப்பான்மையை மாற்றுவதற்காக அவர்களுக்கு
புத்திமதிகள் கூறும் பிரசாரத்திற்கான நடவடிக்கைகளை எடுப்பதிலும் கவ
னம் செலுத்தவேண்டுமென்றும், இரண்டாவது காரியத்திற்கு முன்னதை
விட அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்றும் அந்தக் கமிட்டி
யினர் கூறியிருக்கிறார்கள். இதையாவது கனம் அமைச்சர் மனதில்
கொள்ளவேண்டாமா என்று கேட்கவிரும்புகிறேன்.

எந்த நோக்கத்துடன் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்த
நோக்கம் வெற்றியடைவதற்கு மசோதா உதவக்கூடியதாக அமையவில்லை.
தண்டனை முறைகள் மசோதாவில் இன்னும் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன.
மசோதாவிலுள்ள இன்னொரு குறை என்னவென்றால், ஒருவன் பேரில்
குற்றம் சாட்டி போலீசார் அவனை கோர்ட்டில் விசாரணைக்குக் கொண்டு

[Sri M. Kalyanasundaram] [13th March 1958

வந்துவிட்டால், அவன் உண்மையில் குற்றம் செய்தான் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு போலீசாருக்குக் கிடையாது. போலீசாருக்கு அந்தப் பொறுப்பு இல்லாமலிருந்தால், அவர்களுடைய அதிகாரம் துஷ்பிரயோகப் படுத்தப்படாது என்று நம்பமுடியுமா ? அவர்களுக்குக் கொடுக்கப்படும் அதிகாரங்கள் நியாயமான முறையில் உபயோகப்படுத்தப்படும் என்று நம்பமுடியுமா ? அந்த அதிகாரங்கள் மது விலக்குத் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காகத்தான் உபயோகப்படுத்தப்படும் என்று நம்பமுடியுமா ? அவர்களிடம் இவ்வளவு அதிகாரங்களையும் கொடுத்து அவர்களுடைய பொறுப்பையும் குறைத்தால் மதுவிலக்குத் திட்டம் வெற்றியடையாது—நம் நோக்கம் நிறைவேருது—என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

கனம் அமைச்சர் பேசியபோது தோழர் குருஷ்சேவைக் குறித்து உணர்ச்சிவசப்பட்டுப் பேசினுர். அவருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். ரஷியாவில் என்ன செய்திருக்கிருர்கள் ? குடிப் பழக்கத்தை நிறுத்துவதற்கு இப்பேர்பட்ட சட்டத்தை அந்த நாட்டில் கொண்டுவந்திருக்கிருர்களா என்று கனம் அமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டும். நானும் ரஷியாவைப்பற்றி தெரிந்துகொள்வதற்கு முயற்சி செய்துகொண்டுதான் இருக்கிறேன். ரஷியாவிற்குச் சென்று அங்கே நடக்கும் விஷயங்களை நேரில் பார்த்துவிட்டும் வந்தேன். அவர்கள் குடியை அறவே வெறுக்கிருர்கள். குடிப்பழக்கத்தை அறவே கைவிட முடியாவிட்டாலும் அதைக் கூடியவரை குறைக்க வேண்டுமென்று அவர்கள் முயற்சி செய்கிருர்கள், வெற்றியும் அடைந்திருக்கிருர்கள். குளிர் நாடுகளில் குடிப்பழக்கம் ஜாஸ்தியாக இருக்கும். ஏனென்ருல், குடித்தால்தான் குளிரைத் தாங்கமுடியும் என்ற எண்ணத்தில் குளிர் நாடுகளிலுள்ளவர்கள் குடிப்பார்கள். அப்படிப்பட்ட குளிர் நாடாகிய ரஷ்யாவில் குடிப்பதுகூடாது என்ற மனப்பான்மை நிலவுகிறது. அந்த நாட்டில் ம்க்கள் வாட்கா என்ற விசேஷ பானத்தைக் குடிக்கிருர்கள். “ வாட்கா குடிக்கக்கூடாது. போதையோடு இருக்கக்கூடாது ” என்று பெரும் பிரசாரம் இப்போது அந்த நாட்டில் நடந்துவருகிறது. சகஜமாக எல்லா மக்களும் குடித்துக்கொண்டு வந்திருக்கும் நாட்டில் இப்போது குடிப்பது கூடாது என்ற மனப்பான்மை நிலவிவருகிறது. ஆனுல், குடிப்பது சமூக விரோதமானது என்று கருதப்பட்டுவரும் இந்த நாட்டில் என் குடிப்பழக்கம் அதிகரித்திருக்கிறது ? அங்கே என் குடிப்பழக்கம் குறைந்து வருகிறது என்றும் இங்கே என் குடிப்பழக்கம் அதிகரித்து வருகிறது என்றும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு சிந்தித்துப் பார்க்கும்போது சாதாரண அடக்குமுறையினுல் குடிப்பழக்கத்தை தீர்க்கமுடியாது என்பது தெரிகிறது. குடிப்பழக்கம் நீங்க வேண்டுமானுல், குடிப்பது தவறு என்ற உணர்வு மக்களிடையே வளரவேண்டும் ; மக்களின் பொருளாதார நிலையும் சாதகமாக இருக்கவேண்டும் ; வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்க வேண்டும். “ கூலி வேலை செய்தால் தினம் 1 ரூபாய்கூடக் கிடைக்காதே. கள்ளச் சாராயம் காய்ச்சி விற்ருல் தினம் 2–3 ரூபாய் கிடைக்கிறதே ” என்ற எண்ணத்தில் பல ஏழை மக்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுகிருர்கள். எனவேதான் வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதார வசதிக் குறைவும் சட்டம் வெற்றியடையாமலிருப்பதற்கான காரணங்களில் சில என்று சொல்கிறேன்.

சட்டசபை அங்கத்தினர்களையும் வெளியிலுள்ள பலரையும் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக அமல்நடத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அதற்காக மசோதாவை சட்டமாக்குவதை 4 மாதங்களுக்கு ஒத்திவைக்கலாம். மதுவிலக்குத் திட்டம் முதன்முதலாக இந்த ராஜ்யத்தில் கொண்டுவரப்பட்டதிலிருந்து இன்றுவரை இருந்துவந்த நிலைமையை அந்தக் கமிட்டியின் மூலம் ஆராய்ந்தறிந்து, சட்டத்தை வெற்றிகரமாக அமல் நடத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை அமைத்து அதன் யோசனைகளைப் பெற்று அந்த யோசனைகளின்படி மசோதாவைத் திருத்தியமைத்து சட்டமாக நிறைவேற்றினுல், மக்களின் நன்னம்பிக்கையுடனும், எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்புடனும் மதுவிலக்குத் திட்டம் வெற்றியடையும். அவசர அவசரமாக இப்போதுள்ளபடியே மசோதா சட்டமாக்கப்பட்டால் மதுவிலக்குத் திட்டம் வெற்றியடையாது என்று



13th March 1958] [Sri M. Kalyanasundaram]

சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri C. N. ANNADURAI** : கனம் சபாநாயகர் அவர்களே, 12–10 p.m. மதுவிலக்குச் சட்டம் நம் நாட்டில் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ அந்த அளவிற்கு நாம் பெருமைப்படவேண்டும். எந்த அளவிற்கு அது தோல்வியடைந்திருக்கிறதோ அந்த அளவிற்கு நம்மைப்பற்றிக் கேவலமான ஒரு கருத்து நமக்குள்ளேயே எல்லாக் கட்சியினரிடத்திலும் இருந்துவருகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட கொள்கையில் எல்லாக் கட்சிகளும் ஒருமித்த கருத்துக்கொண்டிருக்கின்றன என்ருல், அது மதுவிலக்குத் திட்டம் நம் நாட்டில் வெற்றிகரமாக நிறைவேற்றப்படவேண்டும் என்ற கொள்கைதான் ஆகும். இந்த கொள்கை குறித்து எல்லாக் கட்சிகளும் ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கும்போது, சில கடுமையான தண்டனைகளை விதிப்பதற்கான ஷரத்துக்கள் ஆளும் கட்சியினரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவில் புகுத்தப்பட்டிருப்பது சரிதானு என்பதுபற்றியும், அந்த ஷரத்துக்கள் கொண்ட மதுவிலக்குச் சட்டம் வெற்றியடையுமா என்பதுபற்றியும் நாட்டு மக்கள் என்ன கருதுகிருர்கள் என்பதை அறிவதற்காக, சில காலத்திற்கு மசோதாவை சட்டமாக்குவதை ஒத்திவைக்கவேண்டுமென்று கோரி எதிர்க்கட்சியினர் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொண்டால், அது மதுவிலக்குத் திட்டம் குறித்து இந்நாட்டில் எல்லாக் கட்சியினரும் ஒருமித்த கருத்துக்கொண்டிருக்கிருர்கள் என்பதை உலகம் அறிவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை உண்டுபண்ணும்.

மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக்குவதற்குக் கடுமையான தண்டனைகள் தரப்படவேண்டுமென்று பல மேடைகளிலே பேசப்படும் நேரத்தில், அந்தக் கடுமையான தண்டனை மதுவிலக்குக் குற்றத்தைத் துணிந்து செய்கின்ற பெரிய மனிதர் பேரிலேயே வீசப்படவேண்டுமென்ற கருத்திலே பேசப்பட்டு வருகிறது. “ கடுமையான தண்டனை ” என்று சட்டத்திலே மட்டும் குறிப்பிட்டுவிட்டு, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்போ, கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு மன்றங்களிலே எடுத்துச் சொல்லும் தன்மையோ, அதற்கு தரப்படும் கடுமையான தண்டனையை வாங்கித்தரும் பொறுப்போ போலீஸ் இலாகாவினருக்கோ மற்றவர்களுக்கோ விட்டு விடுவதால் நாட்டிலே ஏற்படும் சில பல தொல்லைகளை எதிர்க் கட்சியினர் சொன்னுல், அவைகள் அத்தனையும் தவறு என்று ஆளும் கட்சியினர் தள்ளிவிட முடியாது.

நாட்டிலே கட்சி மாச்சரியங்கள் இருக்கின்றன. கிராமத்திலே ஜாதிக்கு ஜாதி மாச்சரியங்கள் இருக்கின்றன. கிராமத்திற்குக் கிராமம் மாச்சரியங்கள் இருக்கின்றன. இந்த மாச்சரியங்களைக் காரணமாக வைத்து, சட்டத்திலே கடுமையான தன்மைகளைப் புகுத்தினுல், ஒரு கிராமத்திலே ஒரு ஜாதியார் இன்னொரு ஜாதியார்பேரிலும், ஒரு கிராமம் இன்னொரு கிராமத்தின் பேரிலும் பொய் வழக்குகள் ஜோடிப்பதற்கும், தவருன வழக்குகளை ஜோடிப்பதற்கும் இந்தச் சட்டம் இடம் தந்துவிடும் என்ற அச்சம் நாட்டிலே இருக்கிறது. அந்த அச்சத்தை நீக்கும் தன்மையில் எல்லாக் கட்சிகளும் கூடி, மதுவிலக்குச் சட்டம் வெற்றி பெற்றிருக்கிற அளவுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்து, இனி வெற்றி பெறவேண்டியதன் அவசியத்தையும் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அது எவ்வளவு சமூக விரோதமானது என்பதையும் நாட்டு மக்கள் உணரும்படி செய்து, அதற்குக் காலம் அளித்து, அதற்குப் பிறகு சட்டத்தை நிபுணர்களுடைய ஆலோசனைக்குக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் திருத்தத்திலே நம்முடைய நண்பர்கள் வலியுறுத்துவது என்று ஆளும் கட்சியினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இன்றையதினம் மதுவிலக்குச் சட்டம் வெற்றிகரமாக நடத்தப்படவேண்டும் என்பதை எதிர்த்தரப்பிலே இருக்கும் யாரும் சந்தேகப்படவில்லை. ஆனுல், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களிலே மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்கள், சென்ற கிழமையேகூட, ராஜ்ய சபையில் பேசிய மாஜி மந்திரி ராஜ்குமாரி அம்மையார் அவர்கள் மறுபடியும் தம்முடைய வேறு

[Sri C. N. Annadurai] [13th March 1958

பாட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலே இவ்வளவு உயர்ந்த பதவியிலே உள்ளவர்கள், அடிக்கடி "மதுவிலக்குச் சட்டம் தவறானது, தோற்றுவிட்டது, தோற்றுவிட்டது" என்று சொல்லுகிற நேரத்தில், அது நாட்டிலே பரவினால் அது மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகிறவர்களுக்கு எவ்வளவு பெரிய சங்கடத்தை விளைவிக்கும் என்று உணராமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துக்கள் பரவாமல் தடுப்பதற்கு நாட்டிலுள்ள அமைச்சர் பெருமக்கள் துணை நிற்கவேண்டும்; அப்படிச் சொல்வது தவறு என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

எதிர்த்தரப்பில் உள்ளவர்கள் மதுவிலக்குச் சட்டம் நிச்சயமாக வெற்றி பெறவேண்டும் என்பதிலே ஒத்துழைக்கச் சித்தமாக இருக்கிறார்கள். அதற்கு வெளிநாட்டு நிலைமைகளைப்பற்றியும், நம் நாட்டின் நிலைமைகளைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருப்பதில் பயன் இல்லை. என்னைப் பொறுத்த வரையில், இந்த நாட்டில் 100-க்கு 60 பேர்கள் கல்வி அறிவு பெற்று, நல்ல நாகரீகமான மனப்பான்மையையும், நாகரீகமான வாழ்க்கையையும் பெற்றான பிறகு, மதுவிலக்கு தேவையா இல்லையா என்று அப்பொழுது தீர்மானித்துக் கொள்வதிலேகூட சிக்கல் அதிகம் இருக்காது. மேனாடுகளிலே "குடிப்பது" என்பதற்கும், "குடிகாரன்" என்பதற்கும் பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. "**Drinking**" என்பதற்கும் "**Drunkard**" என்பதற்கும் எழுத்திலே மட்டும் அல்ல. பொருளிலேயும் வித்தியாசம் இருக்கிறது. அந்த அளவு வித்தியாசம் நம் நாட்டில் இல்லை. ஆகையால், இந்த மது விலக்குச் சட்டம் இந்த நாட்டிலே மிகவும் தேவை.

இந்தச் சர்க்காருக்கு நான் குறிப்பாகச் சொல்வேன் – மதுவிலக்குச் சட்டத்தில் அவர்கள் பெற்றிருக்கிற வெற்றியை ஒருவகையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்குச் சட்டம் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிற காரணத்தால்தான் இன்றையதினம் நாம் வீதிகளில் குடிகாரர்களைக் காணமுடியவில்லை. குடித்துவிட்டுச் செய்யும் சில்லரைக் கலவரங்களும் நாட்டிலே பெருவாரியாக அடங்கிவிட்டன. குடித்தால் என்ன குதூகலம் பெறலாம் என்று கருதி அவர்கள் குடித்தாலும், வீட்டிலே முட்டாக்கு போட்டுக்கொண்டு மூலையிலே படுத்துத்தான் உரங்கவேண்டுமேயல்லாது, தெருவிலே நின்று, குடித்துவிட்ட அருமை பெருமையைப் பேசிக்கொள்வதற்கு இல்லை. முன்னால் அத்தகைய துர்ப்பாக்கியமான காட்சிகளெல்லாம் தமிழ்நாட்டில் இருந்தன. ஆனால், இப்பொழுது அவை வெகுவாகக் குறைந்ததற்கு அமைச்சரவையைமட்டுமல்ல, நாட்டு மக்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நல்ல காரியங்களை அனைவரும் ஒன்றுகூடிச் செய்கிறார்கள் என்றால், அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலே இந்த நாடு வழக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, நாட்டிலே மறுபடியும் அந்த நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவும், கட்சி மாச்சரியங்களை மனதிலே வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தைத் தவறான விதத்தில் மக்கள் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்வதற்காகவும் எல்லோரும்கூடி ஆலோசித்துச் செய்யவேண்டும் என்ற அந்த நோக்கத்திலேதான் கனம் அங்கத்தினர் திரு. சட்டநாதக் கரையாளர் அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார் என்ற நம்பிக்கையில் நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

12-15 p.m.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக எல்லாக் கட்சி அங்கத்தினர்களும், மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் ஆதரவு தெரிவித்தார்கள். முக்கியமாக, எதிர்க் கட்சியில் வீற்றிருக்கும் கனம் அங்கத்தினர்கள், விசேஷமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், கனம் ஸ்ரீ சின்னதுரை அவர்களுடைய கட்சியின் சார்பாகவும், கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் சார்பாகவும், மற்றக் கட்சிகளின் சார்பாகவும் எல்லோரும் மதுவிலக்குத் திட்டத்தை, "நாங்கள் ஆதரிக்கிறோம், அதற்கு எதிர்ப்பு யாரும் இல்லை" என்று தெரிவித்தார்கள். அதற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



13th March 1958] [Sri M. Bhaktavatsalam]

இந்த விவாதத்தை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் அளவிலே பத்திரிகையில் நாளைக்கு வரும்போது—பத்திரிகையில் தவறாகப் போடக்கூடும் என்று நான் சொல்லவில்லை—மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் அளவில் ஒரு தவறுதலான அபிப்பிராயம் ஏற்படக்கூடும். அந்த அபிப்பிராயம் ஏற்படுவதற்கு இடமில்லாத வகையில், இந்த விவாதத்திலே கலந்துகொண்ட கனம் அங்கத்தினர்கள் எவ்வளவு பலமாக சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்றாலும் மதுவிலக்குச் சட்டத்தைத் தாங்களெல்லோரும் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டதை நான் முக்கியமாகக் குறிப்பிட்டேன்.

காங்கிரஸ் கட்சியிலே இருக்கிறவர்கள், காங்கிரஸ் ஆட்சியிலே பெரும் பதவி வகித்தவர்கள் எல்லாம்கூட மாறுபட்ட சில அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைக் கடைசியாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையொட்டியே, நான் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், எதிர்க் கட்சியிலே இருக்கும் கனம் அங்கத்தினர்கள்கூட இந்த மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், இதைச் சரிவர அமுல் நடத்தவேண்டும் என்பதில் அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிற நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், கட்சி ரீதியில் பார்க்க வேண்டாம் என்பதுதான். காங்கிரஸ் கட்சியிலேயே ஒரு சிலர் வேறு அபிப்பிராயங்களைச் சொல்லுகிறார்கள் என்றால், அதே வகையிலே எதிர்க் கட்சியினரும் கட்சி ரீதியில் பார்க்காமல், ஏதோ ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும், எல்லோரும் சேர்ந்து வோட்டு எடுத்து நிறைவேற்றவேண்டும், அதோடு நாமெல்லோரும் சேர்ந்து வோட்டு செய்யவேண்டுமென்று பார்க்காமல், இப்பொழுது வோட்டுக்குப் விடப்போகிற பிரேரபணையைப் பற்றிய நல்லது கெட்டதை மட்டும் அவர்கள் யோசித்து அவைகளுக்கு ஆதரவு அளித்தோ, அவைகளை எதிர்த்தோ, அந்த வகையில் நடந்து கொள்ளுவார்கள் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்.

நான் முன்பே குறிப்பிட்டேன்—இதன் மூல மசோதா முதலிலே இங்கே "இன்ட்ரட்யூஸ்" செய்யப்பட்டது. அதற்குப் பிறகு பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதற்கும் பிறகு, மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு விடப்படவேண்டும் என்ற பிரேரபணை சென்ற சில நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டது. துரதிருஷ்டவசமாக, அந்தச் சமயத்தில் கனம் அங்கத்தினர்கள் சிலர் இங்கே இருக்க முடியாமல் போய்விட்டது—அதற்காக நான் அவர்களைக் குறைகூறவில்லை. இந்தச் சபையிலே அது பிரேரேபிக்கப்பட்டபொழுது பழைய சட்டத்திலின்று இந்த மசோதா எந்த அளவு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது, என்னென்ன திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை விளக்கிக் கூறினேன். விளக்கிக் கூறித்தான் பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடவேண்டும் என்ற பிரேரபணையை நான் பிரேரேபித்தேன். அப்படி பிரேரேபித்து உட்கார்ந்த பிறகு—தங்களுக்கு கவனம் இருக்கும் சில நிமிஷங்கள் பார்த்தீர்கள். யாரும் பேச முன்வரவில்லை. எனக்கே ஆச்சரியமாக இருந்தது. ஆகவே, அதற்குப் பிறகுதான் தாங்கள் அதை வோட்டுக்கு விட்டீர்கள். அதற்குப் பிறகுதான் இரண்டு சபைகளிலிருந்தும் பிரதிநிதிகள் பொறுக்கியெடுக்கப்பட்டு பொறுக்குக் கமிட்டி அமைக்கப்பட்டது. அதிலே எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் இருந்தார்கள். அது நம்முடைய சம்பிரதாயம். ஏதோ மெஜாரிடி இருக்கிறது என்று ஒரு கட்சியிலிருந்து மட்டும் அங்கத்தினர்களை எடுத்து பொறுக்குக் கமிட்டியிலே போடுவதில்லை. மற்றக் கட்சித் தலைவர்களையும் கேட்டுத்தான் பொறுக்குக் கமிட்டியில் அங்கத்தினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதிலே எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் இருந்தார்கள். அந்தப் பொறுக்குக் கமிட்டி—எனக்கு நினைவு இருக்கும் வரை—நான்கு நாட்கள், பல மணி நேரம், மணிக்கணக்காக பரிசீலனை செய்தது. முதலிலே பொதுவாக விவாதித்து பிறகு பிரிவு பிரிவாக எடுத்துக்கொள்வோம் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவ்வாறே பொது விவாதம் முதலில் நடந்தது. அதற்குப் பிறகு தனித்தனியாக எடுத்துக்கொண்டோம். அங்கேயும் இந்தச் சட்டம் கொண்டுவருவதற்குத் தேவையில்லை என்கிற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதாக எனக்கு நினைவு இல்லை. சில பிரிவுகளுக்குத்தான் ஆட்சேபனை தெரிவித்தார்கள். சில

பிரிவுகளை அப்புறம் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். சில பிரிவுகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டு, பெரும்பாலோரால் அந்த் ஆட்சேபம் நிராகரிக்கப்பட்டது. ஒரு பிரிவைப் பொறுத்தவரையில்—பீனிடிவ் போலிஸ் இருக்கிற பிரிவு—நானும் என் அபிப்பிராயத்தைத் தெரிவித்தேன். இப்போது இருக்கிற நிலைமையில் அது தேவையில்லை, இது அனாவசியம், இப்போது நிலைமை வரம்புக்குட்பட்டு வருகிறது, அந்த மசோதாவை தயாரித்த போது இருந்த நிலைமை வேறு, இப்போது அது தேவையில்லை என்று நானும் நினைக்கிறேன் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. வோட்டுக்கு விடப்பட்டது. அதில் எழு பேர் சாதகமாகவும், எழு பேர் பாதகமாகவும் வோட்டு செய்தார்கள், . நான் எனக்கு இருந்த காஸ்டிங் வோட்டைப் போட்டு அது வேண்டாம் என்று நிராகரித்தேன். அப்படி நல்லமுறையில் இந்த மசோதா பலவகையில் பரிசீலிக்கப்பட்டு இப்போது சபை முன்பு வந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் இந்த மசோதாவை ஆறு மாதம், தள்ளிவைக்கவேண்டும், அதற்குள் எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து பரிசீலனை செய்யலாம் என்ற பிரேரணை வந்திருக்கிறது. அதுவும் எதிர்க்கட்சியில் இருந்து இது வந்திருப்பது எனக்கு வியப்பை அளிக்கிறது. இது சரியா ? ஆறு மாதம் ஒத்திப் போடவேண்டும், இடையில் பல கட்சிகளும் சேர்ந்து பரிசீலிக்கவேண்டும் என்று இப்போது சொல்பவர்கள் எதற்காக பொறுக்குக் கமிட்டியில் பரிசீலித்திருக்கவேண்டும் : பொறுக்குக் கமிட்டி எந்த நிலையில் பரிசீலிப்பது. அப்போது இந்த யோசனை சொல்லியிருந்தால் எல்லாக் கட்சியும் சேர்ந்து பேசி மசோதாவைத் தயாரித்து அதற்கப்புறம் பொறுக்குக் கமிட்டியில் பரிசீலித்திருக்கலாம். அப்போது இதைப்பற்றிய பேச்சே இல்லை. பொறுக்குக் கமிட்டி நான்கு முறை உட்கார்ந்தது. இதைப் பரிசீலித்தது. இப்போது ஆறுமாதம் ஒத்திப்போடவேண்டும் என்றால் இந்த ஆறு மாதங்கள் என்ன செய்வது ? பொறுக்குக் கமிட்டி எடுத்துக்கொண்ட சிரமம் எல்லாம் வியர்த்தமாகிவிடாதா ? இதில் எத்தனை சிரமம் ? இந்த மாதிரியாக நம்முடைய வேலை விரயமாகப் போவதற்கு நாம் இடம் கொடுக்கலாகாது. தண்டனை விதிக்கக்கூடிய கடுமையான பிரிவுகளை எல்லாம் கொண்டதாக இந்த மசோதா இருக்கிறது. இது வேண்டவே வேண்டாம் என்றால் என்னால் புரிந்து கொள்ள முடியும். பழைய சட்டமே இருக்கட்டும். அதைத் திருத்த வேண்டியதில்லை என்றால் புரிந்து கொள்ளக்கூடும். ஆறு மாதங்கள் தள்ளிப்போடவேண்டும் என்றால் என்ன அர்த்தம் ? இந்த ஆறு மாதங்களில் எந்த நிபுணர்களைக் கலக்கப் போகிறோம் ? என்ன பிரசாரம் செய்யப் போகிறோம் ?

பிரசாரம் எல்லாம் அங்கத்தினர்களுக்குப் புதிது அல்ல. நாம் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே காந்தீஜி அவர்களின் தலைமையில் மதுவிலக்குத் திட்டத்தை ஒரு நிர்மாணத் திட்டமாகவே ஏற்றுக்கொண்டோம். அதை ஏற்றுக்கொண்டு அஹிம்சா முறையில் பிரசாரத்தில் ஈடுபட்டோம். மறியல் செய்தோம். அதற்காக உரிமை கோரப்பட்டு பெறப்பட்டது. ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல எதிர்க்கட்சியில் உள்ளவர்களில் சிலர்கூட இந்த சாத்வீக மறியல் இயக்கத்தில் ஈடுபட்டு பல இன்னல்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். பலர் சிறை சென்றார்கள். அப்படி பல்லாயிரக்கணக்கானவர்கள் இன்னலுற்றது எதற்காக ? சிறந்த பிரசாரங்களை எல்லாம் செய்தது எதற்காக ? எத்தனை ஆண்டுகளாக இதைச் செய்துவந்திருக்கிறோம். 1937-ம் ஆண்டு சட்டத்தைக் கொண்டுவந்தபோதுகூட அமிலியரேடிவ் மெஷராக இதைத்தான் செய்தோம். ஆகவே என்னுடைய அபிப்பிராயத்தைத் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரசாரத்தைக் குறை கூறுவது என்பதாக அல்ல. பிரசாரத்திற்கும் ஓர் அளவு உண்டு. மதுவிலக்குத் திட்டமானது நல்லதா கெட்டதா என்பதைப்பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. அதுவும் தொன்றுதொட்டு நம் நாட்டில் குடிப் பழக்கத்தை வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறார்கள். காந்தியடிகளின் தலைமையில் நடந்த போராட்டங்களும் இன்னும் மக்கள் மனதில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும் சட்டத்தை மீறி குற்றம் செய்கின்ற மனப்பான்மை ஒரு சிலருக்கு இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு தண்டனை விதிக்காமல் என்ன செய்வது ? சட்டமே



வேண்டாம், அரசாங்கமே வேண்டாம், மக்கள் தாங்களே தங்கள் காரியங்களைச் செய்துகொள்வார்கள் என்று சொல்லலாம். அது நல்ல கொள்கைதான். காரியாம்சத்தில் அது சாத்தியமா என்று பார்க்கவேண்டும்.

பொதுவாக மதுவிலக்குத் திட்டமானது வெற்றி பெற்றிருக்கிறது என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். கடைசியில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேசும்போது இதையே வற்புறுத்தி, முன்போல நம் நாட்டில் தெருக்களில் குடித்துவிட்டுப் போடும் சண்டைகள் இல்லை, மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள், என்பதாகக் குறிப்பிட்டார்கள். அவர் கூறியதைவிட நான் வேறு சான்று எடுத்துக்கூற வேண்டியதில்லை. இன்றையதினம் ஒரு சில இடங்களில் குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் இருக்கிறார்கள் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் முன்பு குடித்தவர்களில் 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் அந்தக் குடிப்பழக்கத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. இந்தச் சட்டத்தைச் செய்தால் நம்மைப் பற்றியேகூட தீங்கான அபிப்பிராயம் ஏற்படும் என்று சின்னதுரை சொன்னார்கள். அதற்கு இடமேயில்லை. அப்படி பயப்படவேண்டாம். கொலை செய்பவர்கள் குறைந்துவிட்டார்கள் என்பதற்காக அதற்கென போட்டிருக்கும் கடுமையான தண்டனைகளை எடுத்துவிடலாம் என்று சொல்ல முடியுமா ? அப்படியே மதுவிலக்குக் குற்றங்களைப் புரிபவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்பதற்காகச் சட்டம் வேண்டாம் என்று சொல்லக்கூடாது. சட்டம் இருந்தால்தான் இன்னும் பூர்ணமாக வெற்றி பெற முடியும்.

சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். முதன் முதலில் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் குற்றங்கள் குறைந்தது என்றும், இப்போது மறுபடியும் கொஞ்சம் அதிகப்படுகிறது என்றும் சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். நானும் அதை கவனிக்கிறேன். ஆகையால்தான் இந்தமாதிரிச் சட்டம் வேண்டியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் "ட்ரிங்கிங்," "ட்ரங்கன்னஸ்" என்பதற்குள்ள வேறுபாட்டைச் சொன்னார்கள். அதுவும் நாம் கவனிக்கவேண்டிய விஷயம்தான். அதுபற்றித்தான் நான் குருஷேவ் அவர்கள் குறிப்பிட்டதைச் சொன்னேன். உடனே சில அங்கத்தினர்களுக்கு "இவன் யார் சொல்வது ?" என்று கோபம் உண்டாகிவிடுகிறது. அதுவும் கனம் அங்கத்தினர் கோதண்டராமன் ஆத்திரத்தோடு பேசினார்கள். அப்படி ஆத்திரம் வரும்படியாக நான் தப்பாக பேசியிருந்தால் வருந்துகிறேன். நான் குறிப்பிடவந்தது இதுதான். ரஷியாவிலேயே அதைக் கட்டுப்படுத்த முடியவில்லையே, பலபல விஷயங்கள் நமக்குத் தெரியாமலேயே போகும்போது, இந்த விஷயம் நம்முடைய பத்திரிகையில் வரும் அளவுக்கு ஸ்ரீ குருஷேவ் வருத்தத்தோடு பேசியிருப்பதைப் பாருங்கள். அவராலேயே முடியாதது நமக்கு சாத்தியமாகிவிடுமா ? ஆகாரத்தோடு குடிப்பது என்பது ஆரம்பத் தொடக்கம். இந்தத் தொடக்கம்தான் முழு குடிபோதையில் கடைசியில் போய் முடிகிறது. ஆகவே ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு சட்டம் அவசியம்தான் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

ஸ்ரீ சின்னதுரை அவர்கள் பேசும்போது கடுமையான தண்டனையை எதிர்த்தார்கள். இதில் அபிப்பிராய பேதம் இருக்கலாம். பழைய சட்டமே இருந்துவிட்டுப் போகட்டும் என்று இருக்கலாம். ஆனால் நம்முடைய நோக்கம் என்ன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். எதற்காக இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி நான்குமுறை கூடி விவாதித்தோம் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். ஸ்ரீ சின்னதுரை அவர்கள் உணர்ச்சியோடு பேசினார்கள். உணர்ச்சி கோபமாகவும், ஆத்திரமாகவும் மாறிப்போகிறது. நிதானம் தவறிவிடுகிறது.

நாம் இம்மாதிரி ஒரு சட்டம், குறைந்தபட்ச தண்டனை விதிக்கிற சட்டத்தைத் திருத்தினால் அது, எந்த விதத்தில் நீதியில் தலையிடுவதாகும்? சட்டப்படி தண்டனை கொடுக்கப்படுகிறது, அல்லது விடுதலை அளிக்கப்படுகிறது. சட்டம் என்ன சொல்கிறது, சாட்சிகள் என்ன சொல்கிறார்கள்

[Sri M. Bhaktavatsalam] [13th March 1958

என்பவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு நீதிமன்றத்தில் பாரபட்சமில்லா
மல் தீர்ப்புக் கூறுகிறார்கள். நீதிமன்றம், நம் சட்டத்தில் இருக்கிறதைப் பற்றித்
தான் சொல்லும். அதாவது, சட்டத்தில் என்ன சொல்லப்படுகிறதோ
அதுபடிதான் நீதிமன்றம் தீர்ப்புக் கொடுக்கிறது. நாம் இயற்றும் சட்டத்தி
ற்கு அவர்கள் அர்த்தம் சொல்வார்கள். நீ ஏதோ நினைத்து சட்டம்
செய்தாய், ஆனால் அதன் அர்த்தம் அதுவல்ல என்று நீதிமன்றம்
சொல்லலாம். அதைப் பார்த்து, சட்டத்தை திருத்துவதற்குள்ள ஏக
போக உரிமை இம்மன்றத்திற்கு உண்டு. கனம் அங்கத்தினர் சின்ன
துரை அவர்கள் பேசும்பொழுது, அதைச் சொல்ல எனக்கு உரிமையுண்டு,
காங்கிரஸைப்பற்றிச் சொல்ல எனக்கு உரிமையுண்டு என்றெல்லாம்
சொன்னார்கள். இந்த மன்றத்தின் உரிமைக்கு குறைவே இல்லை. குறைந்
தபட்ச தண்டனை விதிப்பதற்கு என்று சட்டம்செய்யும்போது அது நீதியில்
தலையிடுவதாகும் என்று சொல்லுவது இந்த மன்றத்தையே குறைத்துப்
பேசுவதாகும். இந்த மன்றத்திற்கு சுப்ரீம் சாவரின் அத்தாரிட்டி இருக்கி
றது. அந்த அத்தாரிட்டி இந்த மன்றத்திற்குத்தான் உண்டு. ஒரு
சட்டம் நன்றாக இல்லை என்றால் மறுபடியும் அதைத் திருத்துகிறோம்.
எந்த சட்டத்தையும் திருத்துவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமையுண்டு.
ஆகவே, ஒரு சட்டத்தைத் திருத்துவது என்பது நீதியில் தலையிடுவதாகும்
என்று சொல்லுவது, தவறானதாகும். அது, நம் நிலையை உணராது
பேசுவதாகும். கனம் அங்கத்தினர் இராமஸ்வாமி பிள்ளை அவர்கள்
சொன்னார்கள், நீதிபதிகளின் டிஸ்க்ரீஷனுக்கு விட்டு விடலாம் என்று.
அவர்களுக்கு டிஸ்க்ரீஷன் இருக்கிறது. நாம் மாக்ஸிமம் இவ்வளவு
என்று போட்டால், அவர்கள் அவர்களது டிஸ்க்ரீஷன்படி போடலாம்.
அதிகப்படி சிறைத்தண்டனை என்பது எல்லாச் சட்டங்களிலும் இருக்கிறது.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : கொலை பாதகக் குற்றம் உள்பட
வேறு எந்தக் குற்றத்திற்காவது குறைந்தபட்ச தண்டனை குறிக்கப்பட்டிரு
க்கிறதா, நம் சட்டங்களில்?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் இப்பொழுது சட்ட
ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கவில்லை. எனக்கு அதெல்லாம் தெரியாது. இதற்கு
அவசியம் இருக்கிறது என்று நாம் கருதுகிறோம். சட்டத்தில் இருப்பதை
வைத்துத்தான் நீதிமன்றம் தீர்ப்புக் கொடுக்கிறது மாக்ஸிமம் சென்டன்ஸ்
என்ன என்று பார்த்துக்கொள்கிறது. அவர்கள் எவ்வளவு வேண்டு
மானாலும் கொடுக்கலாம். ஒரே குற்றம், ஒரே மாதிரி விசாரணை, ஆனால்
ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு தண்டனை கொடுக்கிறார், வேறு ஒரு மாஜிஸ்ட்ரேட்
வேறு ஒரு தண்டனை கொடுக்கிறார். நான் அவர்களை குறைத்துக் கூறவோ
அல்லது நீதிபரிபாலனத்தை குறைத்துக் கூறவோ இல்லை. சட்டத்தில்
என்ன சொல்லியிருக்கிறது என்று பார்க்கிறார்கள், அவர்கள் சரி என்று
தோன்றியதை கொடுக்கிறார்கள். ஒரு அங்கத்தினர் சொன்னது போல்
நிறைய சம்பாதிக்கிறவனுக்கு 10 ரூபாய் போட்டால் அது அவனுக்கு
பெரிதல்ல. மறுபடியும் மறுபடியும் அவன் குற்றம் செய்கிறான். ஆனால்
அதற்காக நீதிபதிகளின் பேரில் குற்றம் சொல்லமுடியாது. இப்பொழுது
நாம் பார்த்ததில் குறைந்த பட்சம் தண்டனை போடுவது அவசியம் என்று
கருதி இந்தத் திருத்தத்தைச் செய்ய முற்பட்டிருக்கிறோம். இந்தச்
சட்டம் தூயதானது. இதைப்பற்றி நன்கு ஆராயவேண்டும், எல்லாக்
கட்சிகளும் சேர்ந்து ஆராயவேண்டும், நிபுணர்களை வைத்து ஆராய
வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள், இது, புதிதல்ல. மத்திய
சர்க்கார் கமிட்டி ஒன்று நியமித்து அவர்கள் விசாரணை செய்தார்கள்.
அதற்கு முன்பு இந்த இராஜ்ஜியத்தின் சார்பாக, அப்பொழுது இந்த
மன்றத்தில் இருந்த அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்
பட்டு அது பழைய சென்னை இராஜ்யம் பூராவும் சுற்றிப் பார்த்து விசாரணை
செய்து, சிபாரிசுகள் செய்து பல்லாண்டுகள் அது மக்களுக்கு முன்பு இருந்
தது. சட்டசபையின் முன்பும் இருந்தது. அதற்குப் பின் இரண்டு மூன்று
வருஷங்களுக்கு முன்பு அரசாங்கம் நிபுணர்கள் கமிட்டி ஒன்றை நியமித்
தது. புகார்கள் ஏராளமாக வருகிறது, இது சரிவர அமுலாக்கப்படவில்லை
யா, அதிலுள்ள குறைபாடுகள் என்ன, எவ்வாறு இச்சட்டத்தை திருத்தி



13th March 1958] [Sri M. Bhaktavatsalam]

அமைக்க வேண்டும் என்றெல்லாம் பார்க்க, 2, 3 வருடங்களுக்கு முன்பு
ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அவர்கள் அறிக்கையும் தயாரித்தார்கள்,
சென்ற பொது தேர்தலுக்கு முன்பு, அதுவும் பரிசீலனையில் இருந்தது.
அதற்கப்புறம் இது சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.
பம்பாயில் உள்ள சட்டத்தையும் பார்த்து பரிசீலனை செய்தார்கள். இவை
களையெல்லாம் பார்த்து நீண்ட காலம் பரிசீலனை செய்த பிறகுதான்
இந்த மசோதா உருவாகியது. இது உருவாகியது, ஒரு ஆண்டிற்கு முன்பு
என்று சொல்லலாம். பத்து மாதங்களுக்கு முன்பு என்று சொல்லலாம்.
இதை, மீண்டும் மீண்டும் பரிசீலனை செய்து இந்த சபையின் முன் சமர்ப்
பிக்க இவ்வளவு காலமாகிறது. அதற்கு மேல் ஐந்து நாளுக்கு குறைவு
இல்லாமல் எல்லாக் கட்சியினரையும் கொண்ட ஒரு பொறுக்குக் கமிட்டி,
இந்த மன்றம், மற்ற மன்றம் இரண்டிலும் உள்ள பிரதிநிதிகள்
அடங்கிய ஒரு பொறுக்குக் கமிட்டி ஐந்து நாட்கள் இதை பரிசீலனை செய்து
அவர்களும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்த நிலையில் இன்னும் ஒரு
மாதத்திற்கு தள்ளிப் போடலாம் என்று சொல்வது கொஞ்சம்கூட நியாய
மில்லை, அது ஆதரிக்கத் தக்கதுமல்ல என்று நான் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் கரயாளர் அவர்கள்
சொன்னார்கள், இது ட்ரக்கோனியன் என்று, வார்த்தைகளை உபயோகிப்பது
சுலபந்தான். உண்மையில் நேரடியாக குற்றம் செய்யாமல் இருக்கலாம்,
அவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்கலாம், ஒரு மரத்தின் சொந்தக்
காரர் அவர்தானே பெர்மிஷன் கொடுக்காமல் இருந்திருக்கலாம், அதில்
வேறு யாரோ கள் இறக்கினால் அதற்குக் கூட அவர் பேரில் குற்றமா என்று
கேட்டார்கள். " ஸபேர்ஸ் " என்றால் " நாலெட்ஜ்" இருக்க வேண்டும்.
" ஸபேர்ஸ்" என்றால் "நாலெட்ஜ்" இல்லாமல் இருக்க முடியாது. அது
தான் அதன் அர்த்தம். தனக்குத் தெரியாமல் "டாப் " பண்ணியிருந்தால்
அது " ஸ்பேர்ஸ்" ல் வராது. பலமாக ஆட்சேபிக்கப்பட்ட இந்தப் பிரிவு
புதிதாக இந்த திருத்த மசோதாவில் சேர்க்கப்பட்டதல்ல. இது, 1937–ம்
வருடச் சட்டத்தில் உள்ளது. பழைய சட்டத்தில் 4–வது செக்ஷனில்,
**This is the expression used—' draws toddy from any tree or permits
or suffers toddy to be drawn from any tree belonging to him or in
his possession '** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது, இன்று நம் மசோ
தாவில் சேர்த்ததல்ல. இது, 21 வருஷங்களாக இருக்கிறது. இது,
ட்ரக்கோனியன் என்று தெரிந்திருந்தால், அதற்கு அவர்களே ஒரு
திருத்தம் கொண்டு வந்திருக்கலாமே. 21 வருஷங்களாக அமுலில்
இருக்கிற பிரிவு, இது.—" **It shall be presumed until the contrary is
shown.**"

இப்பொழுது எதை ஆட்சேபித்தார்களோ, அதுவும் 37–ம் ஆண்டுச்
சட்டத்தில் உள்ளது, இவ்வளவு வருஷங்களாக நடைமுறையில் இருப்பது
தான். அதைத் திருத்திக்கொள்ள வழி சொல்லலாம். ஆனால் மது
விலக்குச் சட்டத்தை உதைக்க வேண்டாமென்று நான் தாழ்மையுடன்
போலீஸ் மீது குறையுள்ள அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
இந்த மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்துவதில் போலீஸ்காரர்கள்
தவறுதலாக நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை.
ஒரு சிலர் அப்படி நடந்து கொண்டு வருகிறார்கள். ஆனால் எனக்குத்
தெரிந்து பத்து மாதங்களாக, நான் நேரடியாக ஈடுபட்டிருக்கும் இந்த
பத்து மாதங்களில் கடுமையான நடவடிக்கைகள் பல போலீஸார் மீதும்
எடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய குற்றங்களில் அவர்கள் ஈடுபடுவார்களே
யானால் அவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்க வற்புறுத்திக்
கொண்டு வருகிறோம். அவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்டும் வருகிறது.
கள் இறக்குவது, பதனீர் இறக்குவது இவைகள் எல்லாம் கூடாது என்று
சொல்வது "பண்டமெண்ட்டல் ரைட்ஸ்" ஸை பாதிக்கக் கூடியதாகும் என்று
கனம் அங்கத்தினர் வில்லியம் அவர்கள் கூறினார்கள். பண்டமென்ட்டல்
ரைட்ஸ் என்று சொல்லுவது வேறு விஷயம். அவைகள், எவை என்று
ஹைகோர்ட்தான் சொல்ல வேண்டும். நான் பண்டமென்டல் ரைட்ஸைப்
பற்றி குறை கூறிப் பேசவில்லை. அதை நான் மிகவும் மதிக்கிறேன்.

[Sri M. Bhaktavatsalam] [13th March 1958

ஆனால் தவறு செய்ய யாருக்கும் பண்டமெண்டல் ரைட்ஸ் கிடையாது. பதனி இறக்குவது என்பதற்கு விதிகள் இருக்கின்றன. அது மட்டும் செய்யலாம், வேறு ஒன்றும் செய்யக்கூடாது என்றும் தடையிருக்கிறது. இதை ரெகுலேட் செய்ய வேண்டியிருக்கிறது. சாதாரணமாக நீராவும் பதனீரும் புளித்துவிட்டால் கள் ஆகிவிடுகிறது. இதைப்பற்றி definition-ல் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற ஒரு விஷயத்தைப் பற்றியும் பெரிதாக
2-40 p.m. பேசினார்கள். அதாவது பெர்மிட் கொடுப்பதைப்பற்றி. நான் கனம் சின்னதுரை அவர்களிடம் சொன்னது என்னவென்றால், சில பெரிய மனிதர்கள் அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளால் அவர்களுக்கு இருக்கின்ற சூழ்நிலைகளால் குடிக்கின்றார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. என்னுடைய கவலையெல்லாம் ஏழை மக்களை பாதுகாக்கவேண்டும் என்பதுதான். அதற்காக பெரிய மனிதர்கள் குடிக்கலாம் என்று சொல்லவில்லை. அதற்காக அவர்களுக்கு சலுகை உண்டு என்று சொல்லவில்லை. பெர்மிட் கொடுப்பதைப்பற்றி 1937–வது வருட சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் வைத்திய பரிட்சையின்பேரில், வைத்திய அதிகாரியின் அத்தாட்சியின்பேரில் ஒருவருக்கு மதுவை மருந்து என்ற முறையில் வேண்டியிருக்கிறது என்று சொன்னால் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி நன்றாக ஆலோசனை செய்து பார்த்ததில் இதை தவிர்க்க முடியாத காரியமாக, fundamental உரிமைக்கு மாறாக இருக்கக்கூடாது என்றுதான் இந்த விதமான பெர்மிட் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இது எல்லோருக்கும், பெரிய மனிதர்களாய் இருந்தாலும் சரி, சிறிய மனிதர்களாக இருந்தாலும் சரி எல்லோருக்கும் இந்த சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் சொன்னேனே தவிர பெரிய மனிதர்களுக்கு குடிப்பதற்கு சலுகை கொடுக்கிறோம் என்று சொல்லுவது சரியல்ல. மற்றொன்றும் இங்கு கூறப்பட்டது. ரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்கள், சட்டம் செய்து என்ன பிரயோசனம்? பிரச்சாரம் முக்கியமாக அதிகமாக செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தீவிரமாக பிரச்சாரம் செய்தோம், இப்போதும் செய்துகொண்டு தான் இருக்கிறோம். சுதந்திரம் அடைவதற்கு முன்பே பிரச்சாரம் செய்யப்பட்டுவந்திருக்கிறது. பிரச்சாரம் எல்லாம் ஒரு அளவுக்குத்தான் பலனை கொடுக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி இருந்தபொழுது பிரச்சாரகராக இருந்தேன் என்று குறிப்பிட்டார்கள். எவ்வளவுதான் பிரச்சாரம் இருந்தாலும் அதற்கு மேல் சட்டம் வேண்டியிருக்கிறது. அதிலும் இயற்றப்பட்ட சட்டத்தை சிறந்த முறையில் அமுல் செய்வதற்கு அப்போதைக்கப்போது சில திருத்தங்கள் வேண்டியிருக்கிறது. அந்த முறையில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொறுக்கு கமிட்டியில் சொல்லப்பட்ட சில அபிப்பிராயங்களை இதில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பாதி அளவுக்கு தான் திருத்தங்கள் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் இது சிறந்த வகையில் அமைந்திருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த சட்டத்தினால் அரசாங்கத்திற்கு தோல்வி தான் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், கல்யாணசுந்தரம் அவர்களுக்கும், திராவிட முன்னேற்ற கழகத தலைவர் அவர்களுக்கும் சொல்லுகிறேன், அரசாங்கத்திற்கு தோல்வியே அல்ல, என்பதை வற்புறுத்தி கூற ஆசைப்படுகிறேன். ஆனால் இன்னும் சிறந்த முறையில் இதை நடத்துவதற்கு இந்த பிரிவுகள் வேண்டியிருக்கிறது. ஆகவே இதை இன்னும் ஆறு மாதத்திற்கு அல்லது மூன்று மாதத்திற்கு ஒத்திப்போடவேண்டும் என்கின்ற பிரேரணையை நான் ஆட்சேபிக்கின்றேன். இதை உடனேயே ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வோம். கனம் அங்கத்தினர்கள் இதற்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri C. N. ANNADURAI**: செலக்ட் கமிட்டியில் விவாதிக்கப்பட்ட பிறகு இந்த கருத்து வேறுபாடுகளை எடுத்துச்சொல்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். செலக்ட் கமிட்டியில் டிஸெண்டிங் மினிட்ஸில் இவைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இதை (கிளாஸ் பை கிளாஸ்) ஷரத்து வாரியாக எடுத்துக்கொள்ளும்போது இந்த டிஸெண்டிங் மினிட்ஸ்க்கு மதிப்பு அளிப்பதாய் இருந்தால், அல்லது மதிப்பு அளிக்கப்படும் என்று



13th March 1958] [Sri C. N. Annadurai]

அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தால், இந்த மசோதாவை ஒத்திப் போடவேண்டும் என்கின்ற இந்தப் பிரச்சினையை, திராவிட முன்னேற்ற கழகத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் புனராலோசனை செய்ய முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER**: டிஸெண்டிங் மினிட்ஸிலில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் கருத்துக்களை மூலமாக நோட்டீஸ் கொடுக்காமல் எப்படி எடுத்துக்கொள்ள முடியும். இப்போது நோட்டீஸ் கொடுக்க முடியாது. இப்போது கொடுத்தால் அதை அனுமதிக்க முடியாது.

Some amendments have been given notice of. New amendments cannot be moved now. I shall accept the amendments of which notice had already been given. If the Government move fresh amendments, I shall allow them but not others.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: கனம் திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் இதில் தெரிவித்த போக்குக்கு நான் அவரை ப் பாராட்டுகிறேன். ஆனால் டிஸென்டிங் மினிட்ஸ் எல்லாம் பொறுக்குக் கமிட்டியில் விவாதிக்கப்பட்டது அல்ல. சில பிரிவுகளுக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இதைப்பற்றி இப்போதும் திருத்தங்கள் வந்திருக்கிறது. ஆகவே பின்னால் இதை ஒத்துக்கொள்ள முடியும் என்று ஒப்புக்கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Mr SPEAKER**: The motion is—

"That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958), as amended by the Joint Select Committee, be taken into consideration."

There are two amendments , one by Sri K. Sattanatha Karayalar, namely,

"That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958), be taken into consideration after six months"

and another by Sri V. K. Kothandaraman, namely,

"That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958), be taken into consideration after three months."

I give preference to the amendment moved by Sri K. Sattanatha Karayalar. However, before I put it to vote, I would like to know whether he is withdrawing his amendment.

**Sri K. SATTANATHA KARAYALAR**: I am pressing my amendment, Sir.

**Mr. SPEAKER**: The question is—

"That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958), be taken into consideraiton after six months."

The amendment was put and declared lost.

[13th March 1958

Sri M. Kalyanasundaram demanded a poll and the House divided thus :

*Ayes.*

1 Sri P. S. Chinnadurai.
2 „ A. R. Marimuthu.
3 „ V. K. Ramaswamy Mudaliyar.
4 „ T. S. Ramaswamy Pillai.
5 „ C. N. Annadurai.
6 „ A. Govindasamy.
7 „ M. Kalyanasundram.
8 „ K. Ramachandran.
9 „ M. Jagannathan.
10 „ M. P. Subramaniam.
11 „ K. Anbazhagan.
12 „ N. K. Palanisami.
13 „ M. D. Ramasami.
14 „ M. Karunanidhi.
15 „ N. Marudachalam.
16 „ S. A. M. Annamalai Odayar.
17 Sri A. V. P. Asaithambi.
18 „ M. Anandan.
19 „ V. K. Kothandaraman.
20 „ M. Selvaraj.
21 „ M. P. Sarathi.
22 „ S. M. Annamalai.
23 „ Irusappan
24 „ P. U. Shanmugam.
25 „ P. S. Santhanam.
26 „ K Sattanatha Karayalar.
27 „ A. V. P. Periavalaguruva Reddi.
28 „ A. Perumal.
29 „ S. Ramasami Thevar.
30 „ V. Subbiah.
31 „ P. Veerappa Kounder.

*Noes.*

1 Sri B. Bhaktavatsalu Naidu.
2 „ M. Alagirisamy.
3 „ G. Annamalai Muthuraja.
4 „ P. Appavu.
5 „ K. S. Ardhanareeswara Gounder.
6 „ M. A. B. Arumughasami.
7 „ V. S. Arunachalam.
8 „ W. P. A. R. Chandrasekharan.
9 „ A. E. Chandrasekhara Nayagar.
10 „ S. Chinnakaruppa Thevar.
11 „ A. Chinnasami.
12 „ T. T. Daniel.
13 The Hon. Sri C. Subramaniam.
14 „ M. Bhaktavatsalam.
15 „ P. Kakkan.
16 Sri P. G. Karuthiruman.
17 „ N. Ekambara Mudali.
18 „ T. P. Elumalai.
19 „ G. Gomathisankara Dikshitar.
20 „ V. Govindaswami Naidu.
21 „ P. Jayaraj.
22 „ R. Kandasami.
23 „ T. Karia Gounder.
24 „ S. Khadar Sheriff.
25 „ V. K. Krishnamurthy.
26 „ P. S. K. Lakshmipathiraj.
27 „ S. Lazar.
28 „ K. B. S. Mani.
29 „ P. G. Manickam.
30 The Hon. Sri V. Ramiah.
31 The Hon. Srimathi Lourdhammal Simon.
32 Srimathi T. N. Anandanayaki.
33 „ Hemalatha Devi.
34 „ Kamalambuja Ammal.
35 „ Kolanthai Ammal.
36 Srimathi P. K. R. Lakshmikantam.
37 „ A. S. Ponnammal.
38 „ Savithri Shanmugam.
39 Sri J. Matha Gowder.
40 „ C. Muthiah Pillai.
41 „ M. C. Muthukumaraswamy.
42 „ A. Nesamony.
43 „ K. P. Palaniswami.
44 „ P. M. Periakaruppan Ambalam.
45 „ M. P. Periasami.
46 „ K. Ponnian.
47 „ A. Raja Gounder.
48 „ P. Ramachandran.
49 „ M. Ramachandra Reddi.
50 „ K. Ramasubbu.
51 „ A. Chidambaranatha Nadar.
52 Dr. Srimathi T.S. Soundaram Ramachandran.
53 Sri K. L. Ramaswami.
54 „ S. Sadasivam.
55 „ S. C. Sadayappa Mudaliar.
56 „ T. Sampath.
57 „ S. Sangili.
58 „ V. Sankaran.
59 „ P. R. Sreenivasa Padayachi.
60 „ M. S. Selvaraj.
61 „ R. Srinivasa Iyer.
62 „ A. S. Subbaraj.
63 „ A. R. Subbiah Mudaliar.
64 „ R. Subramaniam.
65 „ K. S. Subramania Gounder.
66 „ S. Thangavelu.
67 „ N. R. Thiagarajan.
68 „ G. Vagheesam Pillai.
69 „ A. Vedarathnam.
70 „ V. Vedayyan.
71 „ M. William.

*Neutral.*

**Nil.**

*Ayes* : 31 ; *Noes* : 71 ; *Neutral* ; Nil.

The amendment was lost.



13th March 1958]

MR. SPEAKER : Is the hon. Member Sri V. K. Kothandaraman pressing his amendment?

SRI V. K. KOTHANDARAMAN : I am not pressing it, Sir.

The amendment of Sri V. K. Kothandaraman was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

" That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958), as amended by the Joint Select Committee, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER : At this stage, I want to say that according to Mary's Parliamentary Practice amendments to delete a clause are not in order, as the proper course is to vote against the clause standing part of the Bill. Therefore, all amendments to delete a clause given notice of by hon. Members are out of order.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

*Clause* 4.

MR. SPEAKER : The motion is—

' That clause 4 do stand part of the Bill '.

The amendment given notice of by hon. Members Sri T. S. Ramaswamy Pillai and Sri P. S. Chinnadurai is out of order.

SRI T. T. DANIEL : Sir, I move the following amendment :—

' In the proposed new section 4, sub-section (1) (*a*) *after* the words " transports or " *insert* the word " intentionally ".'

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

' In the proposed section 4, sub-section (1) (*c*) *delete* the following :—

" or collects any portion . . . or "

and in (1) (*d*) *delete* the following :—

" or permits or suffers . . . possession; or "

and in (1) (*e*) *delete* the following :—

" or permits or suffers . . . possession; or " and *Delete* sub-section (1) (*g*), (*h*) and (*j*).'

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I move the following amendments:—

'In the proposed section 4, sub-section (1) (*d*) *for* the words "or suffers to be tapped" *insert* the word "tapping".

'In sub-section (1) (*k*) (i) *for* the words "two years", *substitute* the words "one year" and in line 21 *for* the word "five" *substitute* the word "one" and *delete* the following:—

"but in the . . . aforesaid."

'In sub-section (1) (*k*) (*ii*) in line 30 *for* the words "one year" *substitute* the words "six months" and in line 31 *for* the word "two" *substitute* the word "one" and *delete* sub-section (2).'

The amendments were duly seconded.

SRI S. M. ANNAMALAI: Sir, I move the following amendment:—

'In the proposed new section 4, *omit* sub-sections (1) (*g*), (1) (*k*), and (2) (*a*) and (*b*).'

The amendment was duly seconded.

SRI T. T. DANIEL: Sir, I move the following amendment:—

'In the proposed new section 4, sub-section (1) (*k*) *for* the word "allows" *substitute* the word "abets".'

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, I move the following amendment:—

'In the proposed section 4, sub-section (1) (*k*) (*i*) *omit* the words "but . . . aforesaid" and in sub-section (1) (*k*) (ii) *omit* the words "but to purposes".'

The amendment was duly seconded.

SRI T. T. DANIEL: Sir, I move the following amendment:—

'In the proposed new section 4, sub-section (1) (*k*) (*i*) *for* the word "and" occurring in line 20, *substitute* the word "or" and *omit* the portion in the sub-section after the words "extend to five thousand rupees".'

The amendment was duly seconded.

SRI T. T. DANIEL: Sir, I move the following amendment:—

'In the proposed new section 4, sub-section (1) (*k*) (*ii*) *for* the word "and" occurring in line 30, *substitute* the word "or" and *omit* the portion after the words "extend to two thousand rupees".'

The amendment was duly seconded



SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, I move the following amendment:—

'In the proposed section 4, *delete* sub-section (2) (*b*).'

The amendment was duly seconded.

MR. SPEAKER: The amendments and the clause are before the House for discussion.

* SRI N. K. PALANISAMI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்திலே இருக்கக் கூடிய கிளாஸ்களில் முக்கியமானது இந்தக் கிளாஸ். கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லக் கூடிய நேரத்தில் இன்றைய தினம் மதுவிலக்கு ஓரளவுக்கு வெற்றிகரமாக நடந்து வருகிறது, குற்றம் குறைந்து வருகிறது என்று சொன்னார்கள். அவர் இன்னொன்றும் சொன்னார்கள், மது விலக்கைக் கொண்டுவருவதற்கு எவ்வளவோ போராட்டம் நடத்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அது ஒரு கட்சிக்கு மட்டும் அல்ல, அந்தப் போராட்டம் நடத்தியவர்கள் இன்றைய தினம் வேறு கட்சியிலே இருக்கலாம், அன்றைய தினம் எல்லோரும் ஒரே கட்சியில் இருந்தார்கள் என்பதை மறுக்க முடியாது. குடிப்பது பாபம் என்று சொல்லப்படுகிறது. சென்னையில் குடிக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. குடிப்பவர்கள் பக்கத்திலிருக்கிற மைசூரில், பெங்களூரில் போய் குடித்து விட்டு வருகிறார்கள். இங்கு பாவமாக இருக்கக் கூடியது—கெடுதலாக இருக்கக் கூடியது—வேறு இடத்தில் போய் குடித்தால் எப்படி நல்லதாக இருக்கும் என்று தெரியவில்லை. அங்கே இந்த மது விலக்கு இல்லை. எல்லா இடங்களிலும் சமமாக இருக்கவேண்டும். இந்த மாதிரி . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது 4-வது பிரிவைப் பற்றியும், அதற்கான திருத்தங்களைப் பற்றியும் விவாதம் நடக்கிறது. பொதுவாக மது விலக்கு சட்டம் வேண்டுமா ?. வேண்டாமா ? என்று அல்ல.

MR. SPEAKER: **I was myself thinking about it. I was about to ask the hon. Member on what clause he was speaking.**

SRI N. K. PALANISAMI: இந்த சட்டம் 20 வருஷகாலமாக. . .

MR. SPEAKER: தயவு செய்து இந்த கிளாஸைப் பற்றி பேசுங்கள்.

SRI N. K. PALANISAMI: இந்தத் திருத்தம் எதற்காக என்றுதான் கேட்கிறேன். இன்றைய தினம் சாதராணமாக நீரா இறக்கி கருப்புபட்டி செய்கிறவர்கள் இந்த மரமேறும் தொழிலாளர்கள். தோட்டக்காரனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அந்த மரத்தின் மேல் பானை போட்டிருக்கலாம். அந்த தோட்டத்திற்குடையவன் கள்ளுக்குப் போட்டிருக்கிறானா, அல்லது பதனீர்க்குப் போட்டிருக்கிறானா என்று எப்படி கண்டுபிடிக்க முடியும். போன வருஷம் சேலம் ஜில்லாவிலே கேஸ் போட்டதில் அங்கு பதனீர் இறக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதனால் 2,000 தொழிலாளர் களுக்கு வேலையில்லாமல் போயிற்று. ஏதோ பதனீர் புளித்து விட்டால் கள்ளு என்று கேஸ் போடுகிறார்கள். பல இடத்தில் இப்படி இருக்கிறது. அதற்கும் தண்டனை கொடுக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டம் இருக்கிறது. அது மட்டுமல்ல. இன்னும் எதாவது வேல மர விறகு கொண்டு வந்து வைத்திருக்கலாம். அதனுடைய பட்டை கழன்றிருக்கலாம். சாராயம் காய்ச்சுவதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கைது செய்யப்படக் கூடும். அதற்காக அவர்களை கஷ்டப்படுத்த முடியும். அது மாத்திரமல்ல. இன்னும் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு குறைந்த பட்சம் இவ்வளவு—500 ரூபாய் அபராதம், 3 மாதம் ஜெயில்—தண்டனை கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருப்பது, நீதியில் தலையிடுவதாக ஆகாது என்றாலும் நீதியை எடுத்துக் கொள்வதாக இருக்கும். ஈரோட் டில் ஒரு பாம்பாட்டி "தண்ணீர்" போட்டு விட்டு வந்துவிட்டான். அவனைப்

[Sri N. K. Palanisami] [13th March 1958

பிடித்து கோர்ட்டுக்குக் கொண்டு போனார்கள். மாஜிஸ்டிரேட்டுக்கு என்ன
தண்டனை கொடுப்பது என்று புரியவில்லை. பாம்பைக் கொல்லுவதற்குச்
சட்டம் இல்லை. அவனை கோர்ட்டு முடியும் வரை வைத்துக்கொண்டிருந்து
விட்டு விட்டு விட்டார்கள். இது இப்போது இருக்கக்கூடிய சட்டத்திற்கு
விரோதம். கேஸ் எப்படி இருக்கிறதோ, சமய சந்தர்ப்பம் எப்படி இருக்கி
றதோ அதற்குத் தகுந்தபடி ஒரு தண்டனை கொடுக்கவேண்டுமேயொழிய
இவ்வளவு தண்டனை கொடுக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல.
ஆகவே, இப்படிப்பட்ட முறையினால் மட்டும் இந்த மது விலக்கை அமுல்
செய்ய முடியாது—இப்படிப் பட்ட சட்டத்தைப் பார்த்து நம் நாட்டில் மட்டு
மல்ல, பாக்கி நாடுகளிலும் கேலி செய்வார்கள். இப்படிப்பட்ட விஷயத்தில்
பொது ஜன அபிப்பிராயம் மூலமாக அமுலாக்குவதை விட்டு கடுமையான
சட்டத்தைச் செய்கிறார்கள் என்ற காரணத்தினால் இதை எதிர்த்து, இதை
டிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM:** ஸார், இந்த செக்ஷன், எற்கனவே
இருப்பதிலே, முக்கியமான அம்சத்தில் மாறுதல் செய்யப்படுகிறது. குறைந்த
பட்ச தண்டனை விதிக்கவேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. குறைந்த
பட்ச தண்டனை கொடுக்காவிட்டால் என்ன காரணத்திற்காகக் கொடுக்க
வில்லை என்ற காரணத்தை மாஜிஸ்டிரேட் கொடுக்கவேண்டுமென்றிருக்கி
றது. இதுவே போதுமான பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகிறார்கள்
என்று நினைக்கிறேன். இதற்கு முன் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்
கூடிய சமயத்தில் இந்தச் சட்டத்திலே, தோழர் சட்டநாதன் அவர்கள்
சொன்னது "குற்றம் சாட்டப்பட்டு கோர்ட்டில் நிறுத்தப்பட்டால் அந்தக்
குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் குற்றவாளியாகக் கருதப்படமாட்டார்
கள், ஆனால் இப்போது அவர் குற்றவாளியல்ல என்று நிரூபிக்கும்
பொறுப்பு அவரிடம் வந்து விடுகிறது" என்று சொன்னார்கள். அப்போது
இருந்தது வாஸ்தவம். அப்போது குறைந்த பட்ச தண்டனை விதிக்க
வேண்டும் என்று இல்லை. சிறை தண்டனை விதிக்கலாம், அல்லது அபரா
தம் விதிக்கலாம், அல்லது இரண்டும் விதிக்கலாம் என்று இருந்தது.
குறைந்த பட்ச தண்டனையாக, அபராதம், சிறை தண்டனை இரண்டையும் கட்டா
யமாக விதிக்கப்படுகிறது. மாஜிஸ்டிரேட்டுக்கு ஓரளவுக்கு புத்தியை உபயோகிக்க
சுதந்திரம் இருக்கிறது. அதாவது குறைந்த பட்ச தண்டனைக்குக் குறைந்த
தண்டனை விதித்தால் அதற்கு காரணம் காட்டக் கூடிய அளவுக்கு சுதந்
திரம் இருக்கிறது. இப்போது கோர்ட்டுகளில் நாம் பார்க்கக்கூடிய சமயத்
தில் எவ்வளவு வேலை அதிகமாயிருக்கிறது, எவ்வளவு கேஸ்கள் அதிக
மாயிருக்கிறது என்பதைப் பற்றி பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்டிருக்கிறது.
நம்முடைய நீதிக்கொள்கை என்னவென்றால், ஒரு மனிதன் குற்றம்
சாட்டப்பட்டு குற்றவாளி என்று நிரூபிக்கப்படும் வரையில் அவன் நிரபராதி
என்று கருதப்படுவார் என்பதுதான். இந்த அடிப்படைக் கொள்கையையே
விட்டுக் கொடுக்கக்கூடிய முறையில் இந்த விதி அமைக்கப்படுகிறது. நான்
இதை ஆட்சேபித்திருக்க மாட்டேன். குறைந்த பட்ச தண்டனை என்று
இல்லாமலிருந்தால் அது மிகவும் கடுமையான தண்டனை.

அடுத்தபடியாக மரங்களுக்குச் சொந்தக்காரன் குத்தகைக்காரனிடம்
கொடுத்தால் "ஸபர்" ஆகலாம். "ஸபர்" என்றிருக்கிறது. உணர்வு பூர்வ
மாக இருந்தால்தான் அவரை பாதிக்கும் என்று அமைச்சர் விளக்கம்
கொடுக்கலாம். அதனுடைய அர்த்தமும் அதுதான். இருந்தாலும் மரத்
துக்குச் சொந்தக்காரன் மரத்தில் ஏறுகிறவன் சுண்ணாம்பு தடவிய பானையை
வைத்திருக்கிறானா, அல்லது சுண்ணாம்புத் தடவாத பானையை வைத்தானா
என்பதை எப்படி பார்க்க முடியும். பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.
பதனீர் இறக்குவதற்காக பானைகளைக் கட்டக் கூடிய மரமேறிகள் சுண்ணாம்பு
தடவாமல் கட்டிவிட்டால் அது புளித்து விடுகிறது. இந்த மாதிரி புளித்
தால் அது கள்ளாகி விடுகிறது. ஆகவே அந்த மரச் சொந்தக்காரன்
மரம் ஏறப்பழகியாக வேண்டும். போலீஸார் வந்து குடத்தை இறக்கிப்
பார்க்கும்போது சுண்ணாம்பு தடவாமல் புளித்திருந்தால், மரமேறியோடு
இந்த மரச் சொந்தக்காரனும் கோர்ட்டில் நிறுத்தப்பட்டு, "எனக்குத்
தெரியாது, எனக்குத் தெரியாமல் நடந்திருக்கிறது" என்று நிரூபிக்க
வேண்டிய நிர்ப்பந்தம் இந்த மர சொந்தக்காரர்களுக்கு ஏற்படுகிற க



13th March 1958] [Sri M. Kalyanasundaram]

இவ்வளவு பெரிய அதிகாரத்தை நம் போலீஸுக்குக் கொடுத்தால், நம் போலீஸார் எவ்வளவு நிதானமாக அதை உபயோகிப்பார்கள், எந்த அளவுக்கு நம்முடைய கொள்கை நிறைவேறப்போகிறது என்பதைப்பற்றி சந்தேகமாயிருக்கிறது. இந்தக் கொள்கை தோற்கடிக்கப்படவேண்டும் என் பதில் அவர்களுக்கு அக்கறை ஜாஸ்தி. தோற்கடிக்க உபயோகிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படி கடுமையாக மாற்றுவதை கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

**Sri P. S. CHINNADURAI:** கனம் சபாநாயகர் அவர்களே! இந்த 4-வது பிரிவிலுள்ள (b), (f), (g), (h), (i), (k) என்ற உப விதிக 1-10 p.m.
ளில் சொல்லியிருக்கிற குற்றங்களைச் செய்தால், அதற்குக் குறைந்தபட்ச தண்டனை இவ்வளவு தான் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆறுமாத சிறை தண்டனைக்குக் குறைவாக இருக்கக்கூடாது, ஆயிரம் ரூபாய் அபராதத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனைக் குறித்து பொது விவாதத்திலே கூறியுள்ளேன். கனம் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலே திருப்திகரமாக எதையும் சொல்லவில்லை. தன்னைப் பொறுத்த வரையில், இத்தகைய குறைந்த பட்ச தண்டனை கொடுக்கவேண்டும் என்ற விதியைப் போடாமலே இருப்பதை விரும்புவார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து, இது சம்மந்தமாக இந்த சபையிலே பல அங்கத்தினர்கள் என்ன அபிப்பிராயத்தோடு கருத்துக் களை எடுத்துச்சொன்னார்களோ, அதே கருத்தைத்தான் அவர்களும் உள்ளூறக் கொண்டுள்ளார்கள் என்பது புலனாகிறது. அப்படியிருந்தும் கூட, இந்த 4-வது பிரிவை இவ்வளவு கடுமையாக நாம் ஆக்க வேண்டும் என்று இங்கே கோரத்துணிகிறார் என்பது எனக்குப் புரியவில்லை. (h) உப விதியில் "bottle any liquor for purposes of sale" என்று கூறப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, இம்மாதிரி கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் அடியோடு இல்லை என்று சொல்ல முடியாது. கிராமப் பகுதிகளிலே நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் துணையாக அவர்கள் சம்பளத்திற்கு ஆள் வைத்துக்கொள்வதில்லை. குறிப்பாக, ஒருவர் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார் என்றால், அவரது மனைவியை பாட்டிலிலே ஊத்தச்சொல்லாலம். ஸைக்கிள் டியூபிலே ஊத்திக்கொண்டு போகிறவர்களும் இருக்கிறார்கள். மனைவிக்கு விருப்பம் இல்லாவிட்டாலும், கணவன் சொல்வதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும். இன்றைக்கு இருக்கிற சமுதாய கட்டுக்கோப்பில் எந்த மனைவியும் மறுக்கமுடியாது. ஆனால், இந்த உப விதி அந்த அம்மையாரைப் பிடித்து தண்டித்துவிடும். ஆறு மாத சிறை தண்டனைக்கும் 1,000 ரூபாய் அபராதத்திற்கும் உள்ளாக்கிவிடும். இதையெல்லாம் கவனித்து நீதிபதிகள் தீர்ப்பில் எழுதலாம் என்று கூறப்படுகிறது. "Specia reasoas" கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இதில் எவ்வளவோ சிரமங்கள் இருக்கும் என்பதை தோழர் கல்யாண சுந்தரம் எடுத்துச் சொன்னார்கள். விதிகளைக் கடுமையாக்கி, குறைந்தபட்ச தண்டனை கொடுத்தாகவேண்டுமென்று கூறுவது பொருத்தமானது அல்ல. நம்முடைய சட்ட பரம்பரையிலே இம்மாதிரியான புதுமையை, கடுமையை, புகுத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri T. T. DANIEL:** Sir, the clause as it stands, I am afraid, will cause some difficulty in its application. The word 'possesses' in clause 4 (1) (*a*) gives occasion to cause some mischief to innocent persons. In the case of a joint Hindu family the members of which live in a joint family house, every member is considered in law to be in possession of the whole house and its contents. Co-owners who are in possession of property are also said to be in possession of the whole property. If one of the members of the family secretly keeps some intoxicating drug in some part of the house, under this clause he can also be booked. 'Possession' may be either actual or constructive. Under constructive possession, he can be brought within the ambit of this offence. I would suggest that it would be

[13th March 1958

1-20 p.m. **SRI K. SATTANATHA KARAYALAR** : சபாநாயகர் அவர் களே, இந்த மசோதாவில் 4-வது பிரிவில் உட்பிரிவுகளான, (b), (f), (g), (h), (i), (k) பிரிவுகளில் இரண்டு வருஷம் சிறைத்தண்டனையும், 5,000 ரூபாய் அபராதமும் என்று இருப்பதை ஒரு வருஷ சிறைத் தண்டனையும், 1,000 ரூபாய் அபராதம் என்றும் குறைக்கவேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தண்டனையை விதிக்கவேண்டும் என்கிற ஷரத்தை விலக்க வேண்டும் என்றும் நான் ஒரு திருத்தம் கொடுத்திருக் கிறேன்.

இரண்டாவது உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கிற, ஒரு வருஷம் சிறைத் தண்டனையும் 2,000 ரூபாய் அபராதமும் என்று இருப்பதை ஆறு மாதம் சிறைத் தண்டனையும், 1,000 ரூபாய் அபராதமும் என்று குறைக்க வேண் டும் என்றும், அதில் குறிப்பிட்டிருக்கிற "குறைந்த பட்ச தண்டனையை விதிக்க வேண்டும்" என்கிற ஷரத்தை விலக்க வேண்டும் என்றும் என்னு டைய திருத்தத்தில் கூறி உள்ளேன். இந்த திருத்தங்கள் "Parent Act" ல் இருக்கக்கூடிய விகிதத்தை விட குறைவாக அமைந்திருக்கலாம். தற் சமயம் இதற்கு விதிக்கப்பட்டிருக்கிற தண்டனை மிகவும் கடுமையாக இருக்கிறது என்று கருதுவதால்தான் இந்தத் திருத்தங்களை கொண்டுவர வேண்டியிருக்கிறது.

சாதாரணமாக, ரத்தம் தோய்ந்த கத்தியை ஒருவர் வைத்திருந்தால் அதன் காரணமாக அவன் கொலை செய்திருப்பான் என்று முடிவு செய்ய முடியாது. அந்தக் கத்தி அவனிடம் எப்படி வந்தது என்பதை நிரூபிக்க வேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தில் ஒருவனிடம் சாராயம் காய்ச்சும்படி யான பொருள் எதாவது ஒன்று இருந்தாலும் அவன் தண்டனைக்குள்ளா கிறான். அது எப்படி வந்தது என்பதை அவன் நிரூபிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. கத்தியில் ரத்தம் தோய்ந்த கை ரேகை காணப்பட் டாலும் கொலை செய்யப்பட்டதாக சொல்லமுடியாது. போலீசார் சாட்சிக ளின் மூலமாகவும் அதை நிரூபிக்க வேண்டும். 1937-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தில், உற்பத்தி சாதனங்களும், இதர பொருள்களும் எப்படி கண்டுபிடிக்கப்பட்டன என்பதை நிரூபிக்க வேண்டும் என்ற ஷரத்து இருக்கிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டத்திலுள்ள ஷரத்துக்களை சரி யாக அமல் நடத்தப்படமுடியவில்லை என்றால், மேலும் மேலும் கடுமை யான ஷரத்துக்களைப் போட்டு தண்டனைகளை அதிகப்படுத்திக் கொண்டு போவதால் நாம் வெற்றி பெற முடியாது. ஆகையால் நான் கொடுத்திருக் கும் திருத்தத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **SRI T. S. RAMASWAMY PILLAI** : இந்த திருத்தம் குடி காரர்களைக் காப்பாற்றுவதற்காக அல்ல. நிரபராதிகளை காப்பாற்றுவதற்கா கத்தான் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாராயம் சம்பந்த மான சாதனங்களையோ அல்லது பொருள்களையோ வைத்திருந்தால் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே நிரபரா திகள் மீது தண்டனை விதிப்பது நீதிக்கு புறம்பான விஷயமாகும்.

நம் நாட்டில் எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இதுவரை எந்தச் சட்டத்திலும் குறைந்த பட்ச தண்டனை விதிக்கப்படவில்லை.

**SRI T. T. DANIEL** : On sections 397 and 398 of the Indian Penal Code minimum punishment is prescribed for the offences of robbery and dacoity when armed with deadly weapons.

**SRI T. S. RAMASWAMY PILLAI** : I am thankful for the kind information. இந்த சட்டத்தில் அரசாங்கத்தின் கொள்கை தெளிவாக இருக்கவேண்டும். ஒரு பக்கத்தில் குறைந்தபட்ச தண்டனை கொடுக்கவேண்டும் என்று சொல்லும்போது, பர்மிட்டுகள் அதிகமாக கொடுக்கப்பட்டுவருகின்றன. அது மட்டும் அல்ல, அறிந்திருந்தாலும், அறியாவிட்டாலும், பார்த்தாலும், பார்க்காவிட்டாலும், இந்த சட்டம் சம்மந்தப்பட்டவரை ஆறு மாதம் தண்டனை விதிக்கப்படும். அப்படி இருக்கும்போது பெர்மிட் ஹோல்டர்களுக்கு அதிக



13th March 1958] [Sri T. S. Ramaswamy Pillai]

பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் இரண்டு விதமான கொள்கைகளை அனுஷ்டிக்கிறது. பணக்காரர்களுக்கும், சௌகரியம் உள்ள வர்களுக்கும் ஒரு கொள்கை, ஏழைகளுக்கு மற்றொரு கொள்கை என்று இருக்கிறது. மதுவிலக்கு விசாரணை நடத்திய கமிட்டி அதனுடைய அறிக் கையில் இந்த பர்மிட்டுகள் கொடுப்பதை கண்டிப்பாக நிறுத்திவிடவேண் டும் என்று கூறியிருக்கிறது. அப்படி இருக்கும் போது சர்க்கார் அந்த பர்மிட்டுகளை மாத்திரம் நிறுத்துவதற்கு ஏன் தயங்கவேண்டும் என்று நான் கேட்கிறேன். ஆகையால் இந்த விஷயத்தில் சர்க்கார் "டபிள்" கொள்கை கடைப்பிடிக்கிறார்கள். ஆகையால் நிரபராதியான ஏழைகளை பாதிக்கும் வகையில் மசோதா இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**MR. SPEAKER** : There is only one minute more. Two or three hon. Members have expressed their desire to continue the discus- sion. I shall adjourn the House now. We will meet at half past eight to-morrow and the Members may continue the discussion then. Before I adjourn, I would like to inform the hon Members that there are four Bills to be taken up in the course of to-morrow. They are the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958, the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958, the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958, and the Madras Catering Establishments Bill. Unless hon. Members give notice of amendments sufficiently early, it will be impossible for the Secretariat to roneo the copies and supply them. For example, to-day I had great difficulty in finding out what exactly the relevant amendments were. Therefore, I fix 5 p.m. to-day as the last hour for the receipt of amendments to these four Bills.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

[13th March 1958

APPENDIX.

[Vide answer to clause (a) of starred question No. 305 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 13th March 1958, page 268 supra.]

(a) The number and names of Rural Dispensaries in the North Arcot district are—

| | |
|---|---|
| Arkonam taluk .. .. .. .. | 1 Banavaram.<br>2 Minnal R.S.<br>3 Panapakkam.<br>4 Thakkolam. |
| Arni taluk .. .. .. .. .. | 5 Devikapuram.<br>6 Kannamangalam.<br>7 Mullandram. |
| Chengam taluk .. .. .. | 8 Thandrampet.<br>9 Thanipadi (since provincialised).<br>10 Vanapuram. |
| Cheyyar taluk .. .. .. .. | 11 Brammadesam.<br>12 Kovilur.<br>13 Mamamdur.<br>14 Parungattur.<br>15 Purisai.<br>16 Vengalathur. |
| Gudiyattam taluk .. .. .. .. | 17 Mailpatti (since provincialised.)<br>18 K. V. Kuppam.<br>19 Kylasagiri. |
| Polur taluk .. .. .. .. .. | 20 Kadaladi.<br>21 Kalasapakkam.<br>22 Santhavasal.<br>23 Veeralur. |
| Tirupathur taluk .. .. .. .. | 24 Kandili.<br>25 Natrampalli.<br>26 Vishamangalam. |
| Vellore taluk .. .. .. .. | 27 Anaicut.<br>28 Pallikonda. |
| Wallajah taluk .. .. .. .. | 29 Chakramallur.<br>30 Kalavai.<br>31 Ponnai.<br>32 Puttuthakku.<br>33 Thimiri.<br>34 Valapandal. |
| Wandiwash taluk .. .. .. .. | 35 Kilkodungalur.<br>36 Malaiyur.<br>37 Nallur.<br>38 Pernamallur.<br>39 Thellar. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Friday, the 14th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAO) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

MR. SPEAKER : The Hon. the Minister for Industries has made a request that he may be permitted to make a statement correcting an answer given on the 4th March 1958. He has made another request that I may take up his question in the beginning. I have allowed that.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, while answering the Legislative Assembly Question No. 187 relating to the Salem Co-operative Marketing Society on 4th March 1958, I had stated in reply to a supplementary that the Board of Directors who were charged with malpractices had been replaced by a different set of Directors and that therefore the Government considered that the Board of Directors need not be superseded. This statement was based on the averment made in a petition by the Committee of the Society itself to Government. I have verified the facts of the case again and I find that it is the present Board of Directors in office from 1st April 1955 that had been charged with malpractices. This Board of Directors is still in office and its term will expire only on 31st March 1958. The Registrar of Co-operative Societies who issued the notice of supersession to the Committee of the Salem Co-operative Marketing Society has not passed final orders under section 43 (1) of the Madras Co-operative Societies Act. The Registrar of Co-operative Societies has been asked to expedite orders thereon.

MR. SPEAKER : Obviously no supplementaries can be allowed now.

## STARRED QUESTIONS.

*Factory Owners*

*319 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of owners of factories prosecuted during 1956–57 (districtwise);

(b) the various offences committed by them;

(c) the number of those fined and the amount of fine; and

(d) the names of persons convicted with imprisonment?

THE HON. SRI R. VENKATARAMAN : (a), (b), (c) & (d) A statement * containing the information is placed on the table of the House.

*Printed as Appendix I on page 429 infra.

[14th March 1958

SRI V. K. KOTHANDARAMAN : கோர்ட்டு தீர்ப்புகளை அமுல் நடத்த வேண்டும் என்று கூறக்கூடிய தொழிலாளர்கள் பேரில் தடியடி பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்து வருவதோடு அவர்களை சிறையில் வைக்கக்கூடிய அளவுக்கு சர்க்கார் தீர்ப்புகளை . . .

THE HON. SRI R. VENKATARAMAN : **Sir, this is quite different from the question. He made allegations of violence, beating, etc., which has nothing to do with the question.**

SRI V. K. KOTHANDARAMAN : அதைப்போலவே அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்காமல் தொழிலாளர்கள் பேரில் பழி வாங்கக் கூடிய தன்மையில் இருக்கக்கூடாது. கோர்ட்டு தீர்ப்புகளை அமுல் நடத்தா மல் இருக்கிற முதலாளிகளின் பேரில் என் நடவடிக்கை எடுக்கக்கூடாது ?

MR. SPEAKER : இந்தக் கேள்வியை எப்படிக் கேட்க முடியும் என்பது தெரியவில்லை. ஏற்கெனவே கேட்ட கேள்வி என்னவென்றல் என்ன தப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பணம் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கின்றன, என்பதுதான். முதலாளிகளைப்பற்றி அதில் கேட்கப்படவில்லை. இதற்கு தனிகேள்வி போடவேண்டும்.

*Co-operative Stores, Gudiyatham*

* 323 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) when the Gudiyatham Co-operative Stores was closed;

(*b*) the reason for such closure;

(*c*) the amount that was misappropriated;

(*d*) the persons responsible for such misappropriation; and

(*e*) the action taken on them?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த ஊழலின் காரணமாக சார்ஜ் ஷீட் போட்டு வருஷக் கணக்கில் ஆகியும்கூட, இதுவரையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது போன்ற நிலைமை இருப்பதினால் இந்த கேஸ் ஒன்றுமே இல்லாத அளவுக்கு போகமுடியும். ஆகவே, தயவு செய்து இனிமேலாவது இதுபோன்று ஊழல் சம்பந்தப்பட்ட கேஸ்களை உடனு க்குடன் விசாரணை செய்து பைசல் செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் கொடுக்கின்ற தகவல் சரியல்ல. இதற்காக மானேஜர் பிராஸிகியூஷன் செய்யப்பட்டு, அவருக்குக் கீழ்கோர்ட்டார் 18 மாத தண்டனை விதித்தார்கள். அவர்கள் அப்பீல் செய்ததில் அது மூன்று மாத தண்டனையாக குறைக்கப் பட்டது. ஆகவே, நடவடிக்கை எடுக்கவில்லை, தாமதம் ஆகிக்கொண்டிருக் கிறது என்று சொல்லுவது சரியல்ல.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கூட்டுறவு சங்கங்களின் நிர் வாகஸ்தர்கள் மூலமாகத் தான் இந்த ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அவர்களுக்கு தகுந்த அல வன்ஸ் கொடுக்கப்படாததால் தப்பிதமான கணக்குகளை சிருஷ்டிக்கிருர்கள். அவர்களுக்கு ஏதாவது அலவன்ஸ் கொடுப்பதற்கு சர்க்கார் சட்டத்தில் ஏதாவது வகை செய்வார்களா ?

**MR. SPEAKER : I think it is a separate question. But I have no objection if the hon. Minister is prepared to answer.**

[a] **Printed as Appendix II on page 430 infra.**



14th March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : கேள்வி கேட்கப்பட்டுவிட்ட தால் நான் பதில் சொல்லிவிடுகிறேன். இம்மாதிரி அலவன்ஸ் கொடுப் பதன் மூலமாக தவறுகளை குறைக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். சம்பளம் வாங்கக்கூடியவர்கள் கூட இவ்விதமான தவறுகள் செய்வதனுல், அலவன்ஸ் கொடுக்கப்படாததால் இம்மாதிரி தவறுகள் நடக்கின்றன என்று சொல்லுவதற்கில்லை.

MR. SPEAKER : Hon. Members seem to feel that everybody must ask supplementary questions. Even in Parliament not more than two or three supplementary questions are permitted on any one question. But even if I allow twenty or more, hon. Members like Sri Lazar are getting angry. I completely deprecate this attitude on the part of hon. Members.

SRI S. LAZAR : Sir, I only request that the hon. Speaker turns his eyes on our side and that it is not necessary that the member should be allowed to speak.

MR. SPEAKER : The hon. Member may realise that I have short-sight. (Laughter.) I will do my best to allow hon. Members to ask supplementaries.

SRI K. RAMASUBBU : It depends upon the nature of the question. If it is an important question, all of us may like to ask supplementary questions.

MR. SPEAKER : I would make it clear that every member has not got the right to ask supplementaries. Only the hon. Member who puts the question, has the right to ask supplementaries. Such questions may be one, two or three but not more than that. But even if I allow twenty supplementaries, hon. Members are not satisfied. I have to say this because the hon. Member, Sri Viswa-nathan, expressed this grievance orally. I do not like this.

*Sulphur and Sulphuric Acid*

* 326 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri K. R. Viswanathan) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government are aware that a foreign firm has set up a plant for manufacturing sulphur and sulphuric acid at Ariyalur?

THE HON. SRI R. VENKATARAMAN : No foreign firm has set up a plant for manufacturing sulphur and sulphuric acid at Ariyalur.

*Marketing Society*

* 330 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any mahazar, dated 1st November 1957, from the ryots of Udayarpalayam taluk, Tiru-chirappalli district, regarding the opening of a marketing society; and

(*b*) if so, the action taken thereon?

[14th March 1958

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) There are at present two marketing societies in the Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, one at Ariyalur and the other at Jayamkondan. There is, therefore, no need to organize a third marketing society in the taluk.

*National Building Council*

* 332 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the National Building Council have suggested to the Government any special types of buildings to be constructed in this State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The National Building Council recommended to the State Government, that experimental buildings in adequate numbers be constructed in each State, covering rural as well as urban areas, full advantage being taken in the matter of the finance available under the Subsidized Industrial Housing Scheme of the Government of India. One of the Pilot projects of the Experimental Housing cell has been the construction of eight experimental 'F' type flats, using traditional materials and methods, at Vinay Nagar, New Delhi, for Central Government Servants in the pay group Rs. 150—249 per month. In this project, the basic plan of the Central Public Works Department for 'F' type flats was adopted with small reductions in the floor areas of bath, W.C., and staircase block. The saving effected thereby was utilized for the structural and other improvements such as smooth bearing and expansion joints for R.C.C. slabs, bitumen painting of roof slabs, addition of soap solution in plaster and provision of shelves on a liberal scale in the kitchen. In addition, a saving of about 16 per cent was effected in the building cost, in items of wood work, brickwork, R.C.C. work and foundations, without introducing drastic changes in the design and specifications. The cost of a block of eight experimental type flats is Rs. 37,000 approximately or Rs. 4,625 per flat.

SRI V. K. KOTHANDARAMAN : ஊழலின் காரணமாக அந்த சொசைட்டியினுடைய காரியதரிசியாக இருந்த எம். வி. துரைசாமி முதலி யார் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டதன் காரணமாக அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தெரியாது.

SRI M. JAGANNATHAN : What is the nature of the action that is being contemplated for the recovery of the misappropriated amount?

THE HON. SRI R. VENKATARAMAN : Proceedings under section 51 of the Co-operative Societies have been launched against the Directors.



14th March 1958]

SRI V. K. KOTHANDARAMAN : பல ஊழல்கள் காரணமாக பல சொசைட்டிகள் மூடப்பட்டுள்ளன என்பதை கனம் மந்திரி அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார், பல சமயங்களில். ஆகவே இதைத் தடுப்பதற்கு வேண்டி சமீப காலமாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I do not agree that I ever stated that there is an increase in the misappropriation or malpractices in the co-operative societies. But wherever there is any malpractice, certainly the Government take action on it. To say that the " Government have accepted that there is an increase " is not a correct statement.

SRI A. VEDARATHNAM : கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்பது ஒரு நல்ல இயக்கம். அவைகளில் இம்மாதிரியான ஊழல்கள் நடப்பதற்கு இடம் இல்லாமல் சட்ட திட்டங்களை மாற்றி அமைத்து அந்த ஊழல்களுக்கு சந்தர்ப்பம் அளிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சட்ட திட்டங்கள் மூலமாக தவறுகளை தடுப்பது என்பது முடியாது. மனித இயல்பு தவறாக இருக்கிற வரையில் ஏதாவது குற்றங்களை மனிதர்கள் செய்துகொண்டுதான் இருப் பார்கள். அவைகளை சட்டத்தின் மூலமாக தடுத்து விட முடியும் என்பது சாத்தியமில்லை. சட்டத்தின் மூலமாக அவர்களை தண்டிக்கத்தான் முடியும்.

SRI K. B. S. MANI : ஊழல்கள் நடவாமல் இருப்பதற்கு அரசாங் கம் முன் கூட்டியே அவர்களை தண்டிக்கக்கூடிய அளவில் சட்டங்கள் இயற்றி யிருக்கிறார்களே அந்தச் சட்டம் போதுமானது அல்லவா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இருக்கிற சட் டத்தின்படியே தவறுகள் செய்கிறவர்களைத் தண்டிக்க முடியும். அதன் படியே தண்டனையையும் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

SRI P. S. CHINNADURAI : இந்த ஸ்டோர்ஸில் கையாடப்பட்ட தொகை ரூ. 39,229-3-5 என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை திரும்பப்பெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை எக்ஸ் மானேஜர் அவர்களிடத் திலிருந்து மாத்திரம் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகிறதா, அல்லது பழைய பிரசிடெண்ட், காரியதரிசி, டைரெக்டர்கள், அனைவரிடத்திலிருந்தும் பெறு வதற்கு முயற்சிக்கப்பட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். ஏதாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு பக்கத்தில் கொடுத் திருக்கிற பதிலில் Civil proceedings were also taken against the x-Directors என்று கண்டிருக்கிறது. எல்லாருடைய பேரிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பணம் வசூல் ஆகுமோ ஆகாதோ என்பதைத் தெரிந்து கொள்வதற்கு ஜோசியரைத்தான் கேட்க வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : இந்த சொசைட்டியை லிக்விடேட் செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் ஷேர்ஹோல்டர்களுக்கு எந்த விகி தாச்சாரத்தில் டிவிடெண்ட் கிடைக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது லிக்விடேட் செய்யப் பட்டுதான் இருக்கிறது. எவ்வளவு தொகை வசூல் செய்யப்படுமோ அதை வைத்துக்கொண்டுதான் டிவிடெண்டாக கொடுக்கப்படும். தனிக் கேள்வி போட்டால் தான் புள்ளி விவரங்களை சேகரித்து பதில் கொடுக்க முடியும்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, குடியாத்தம் கூட்டுறவு நிலையத்தைப்போல சேலம் நாகை கூட்டுறவு நிலையங்கள் மற்றும் இதர நிலையங்கள் சம்பந்தமான ஊழல்கள் இந்த அளவுக்கு வளர்கின்ற

காரணத்தால், அப்படிப்பட்ட கூட்டுறவு நிலையங்கள் அரசாங்க ஆதரவு பெற்று பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றி வருகின்ற காரணத்தால், இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருக்க வழக்கம்போல் அதாவது **Usual method** என்று சொல்வார்களே அதைப் போல அவைகளை பரிசீலனை செய்வதுடன் நில்லாது எதிர் பாராத முறையில் திடீர் இன்ஸ்பெக்ஷன் என்ற முறையில் அவைகளை கவனிப்பதற்கு திட்டம் வகுப்பார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : நமது ராஜ்யத்தில் சுமார் பத்தாயிரம் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. பல வருஷங்களாக அவைகளைப்பற்றி கேள்விகள் கேட்கப்பட்டு வருகின்றன. சாதாரணமாக இந்த சொசைட்டிகளில் நடந்த தவறு 1951–52-ல் நடந்ததுதான். இப்படி ஏராளமாக கூட்டுறவு சங்கங்கள் நடைபெற்று வரும்போது இந்த இயக்கத்தில் தவருன அபிப்பிராயம் பொது மக்கள் பெருவது கூடாது என்பதற்காகத் தான் நான் இதை வற்புறுத்திச் சொல்லுகிறேன். இதில் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பொது மக்கள், **non-official** என்று சொல்லக்கூடிய உத்யோக பற்றற்றவர்களும் இதில் பங்கெடுத்துக்கொள்ளுகிருர்கள். அவ்வாறு பங்கெடுத்துக்கொள்ளும்போது ஒன்றிரண்டு இடங்களில் தவறுகள் ஏற்படுகின்றன. அவைகளைக் கண்டிக்க முடியும். இதைவிட அதிகமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள திடீர் இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டும் என்று சொன்னுல் சாதாரணமாக தினம் தினம் நடைபெறுகிற நிர்வாகத்தில் தலையிடுவதாக கருதப்படும். அவர்களுடைய நிர்வாகத்தில் குறுக்கிடுவதாக கருதப்படும். சமீபத்தில் கூட்டுறவு டிமாண்ட் வரப்போகிறது. அப்பொழுது அங்கத்தினர்கள் பேசுவார்கள். அப்பொழுது இதைப்பற்றியும் தங்களுடைய பேச்சில் சொன்னுல் அந்த யோசனைகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்.

**SRI N. K. PALANISAMI** : நம்முடைய சர்க்கார் இவைகளை பரிசீலனை செய்து எந்தவிதமான டைப் வீடுகள் குறைந்த விலையில் டியூரபிளாக கட்ட முடியும் என்று எதாவது பதில் சொல்லியிருக்கிருர்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : மத்திய சர்க்கார் பரிசீலனை கமிட்டியினுடைய சிபார்சுகளை நாம் வீடுகள் கட்டுகின்றபொழுது எந்த அளவுக்கு அதை உபயோகப்படுத்த முடியும் என்று பார்த்து செய்யலாம் என்பது சர்க்கார் யோசனை.

**SRI A. A. RASHEED** : Sir, is there any proposal to construct Government buildings with ancient architecture—South Indian architecture?

**THE HON. SRI R. VENKATARAMAN** : Sir, these buildings are for working class or low income people. We are not going to build architectural monuments.

**SRI K. ANBAZHAGAN** : தேசீய வீடு கட்டும் திட்டத்தின் முறைப்படி மத்திய சர்க்கார் ஆராய்ச்சி செய்கின்ற பல திட்டங்களில் தென்னுட்டிற்கே உரிய சில முறைகள் பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. மெட்ருஸ் டெரேஸ் என்று குறிப்பிடுகின்ருர்களே அதே போன்று தென்னுட்டிற்குரிய பழக்கத்திலுள்ள முறைகளையும் தேசீய திட்டத்தில் சேர்ப்பதற்கு சென்னை அரசாங்கம் முயற்சிக்குமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : குறைந்த விலைக்கு எப்படி வீடுகள் கட்டுவது என்பதற்காக பரிசீலனை நடக்கிறது. "மெட்ருஸ் டெரேஸ்" விலை ஜாஸ்தியாக இருப்பதால் அதை பரிசீலனை செய்யவில்லை.

**SRI K. B. S. MANI** : இப்பொழுது ஹரிஜன காலனி வீடுகள் கட்டுகின்ருர்களே, அது தேசீய கட்டிட கவுன்சில் ஆதாரம் பெற்றதா, அல்லது அவர்களே போடுகின்ற எஸ்டிமேட்டா என்பதை அறியவிரும்புகிறேன்.



**THE HON. SRI R. VENKATARAMAN**: நம்முடைய நல்ல பி.டபிள்யூ.டி. எஸ்டிமேட் பிரகாரம் கட்டப்படுகின்றது.

**SRI S. LAZAR** : மத்திய சர்க்கார் கட்டிட கவுன்சில் சொல்லக்கூடிய பிளான்கள் நமது மாகாணத்திற்கு பொருந்துவதில்லை என்பது உண்மைதானு ? டோபி கானு கட்டப்படும்பொழுது மாடியில் குடியிருப்பவர்களின் நிலைமையிலே கட்டப்படுகின்றன என்பது உண்மைதானு ? இதை மாற்றி அமைப்பதற்கு நமது அரசாங்கம் எதாவது திட்டம் போட்டிருக்கிறதா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : சாதாரணமாக ஒரு பரந்த தேசத்திலே அந்தந்த பிராந்தியங்களுக்கு தகுந்தபடி வீடுகளை திருத்தி அமைத்துக்கொள்ளுவதுதான் சரி. இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற பரிசீலனை கமிட்டி எவ்வளவு குறைந்த விலையில் வீடுகள் கட்ட முடியும் என்று சிபார்சு செய்திருக்கிருர்கள். நாம் அவைகளை அப்படியே ஒப்புக்கொண்டு அதன்படி கட்டவேண்டுமென்பது அவசியமில்லை. விலையை குறைப்பதற்காக அவர்கள் சொல்லியிருக்கிற ஆலோசனைகளை நாம் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளலாம்.

## *Small Irrigation Schemes*

* 318 *Q.*—**SRI S. LAZAR** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount allotted for small irrigation schemes in 1957–58;

(*b*) the number of schemes executed for 1957–58; and

(*c*) whether any grant has been received recently for these schemes from the Central Government?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : (*a*) A sum of Rs. 56 lakhs has been provided for in the budget for Special Minor Irrigation Programme works and Rs. 2 lakhs for Desiltation-*cum*-Reclamation works in 1957–58.

**Sri T. KARIA GOUNDER** : ஹரிஜனங்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம் அந்தச் சமூகத்தாரிடமிருந்து விண்ணப்பம் வராத காரணமா ? மற்ற வகுப்பினருக்கும் ஹரிஜனங்களுக்குக் கொடுப்பது போல அங்கீகாரம் கொடுக்கப்படுமா ?

**The Hon. Sri P. KAKKAN** : விண்ணப்பங்கள் வந்தாலும் தகுதி உடையவர்கள் பொறுக்கி எடுக்கப்படுவார்கள்.

**Sri P. G. MANICKAM** : எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிற ஹரிஜன மாணவர்கள் மிக அதிக மானவர்கள் இருக்கிறார்கள். இனிமேலாவது அவர்களுக்கு முதலிடம் கொடுத்து வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படியாக சர்க்கார் ஒரு உத்தரவை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[14th March 1958

9-30 a.m. *THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்
களே, இந்த திருத்த மசோதாவில் 4-வது பிரிவுதான் முக்கியமானது, அடிப்
படையானது என்று கூட சொல்லலாம். இந்த மசோதா நிறைவேற்றப்படு
வதற்குரிய வகையில் 4-வது பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பல
கனம் அங்கத்தினர்கள் இதைப்பற்றி கூர்ந்து கவனித்து பல யோசனை
களையும் திருத்தங்களையும் இங்கே பிரேரேபித்து நீண்டநேரம் இதிலே
விவாதித்து இதில் கலந்து கொண்டார்கள் என்ருல் அதில் ஆச்சரியம்
ஒன்றுமில்லை. இதுதான் இந்த மசோதாவின் மிக்கியமான பிரிவு.
ஆனுல் இந்த மசோதா கொண்டு வரப்பட்டதின் லட்சியமே இந்த மாதிரி
கடுமையான தண்டனைகள் விதிக்கவேண்டும் என்ற நோக்கம்தான்
என்று நான் முன்பே சொன்னேன். ஆகவே இப்பொது பிரேரேபிக்கப்
பட்ட திருத்தங்களை ஒப்புக்கொள்ள முடியவில்லை என்ருல் அது எங்களுடைய
பிடிவாதத்திஞல் ஒப்புக்கொள்ள வில்லை என்று யாரும் எடுத்துக்
கொள்ளமாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன். (Suffers) என்ற
வார்த்தையைப்பற்றியும் **presumption** என்ற வார்த்தையைப் பற்றியும்
சொல்லப்பட்டது. வீடுகளில் பாத்திரங்கள் சாப்பிடுவதற்கு, சமைப்பதற்கு
வைத்துக்கொண்டிருக்கலாம். ஆகவே இதஞல் ஏழை மக்கள் பாதிக்கப்
படுவார்கள் என்று சொன்ஞர்கள். **Suffers** என்ற வார்த்தை இப்பொது
கடுமையாக தண்டனையை ஆக்குவதற்காக சேர்க்கப்பட்டது அல்லது.
1937-ம் வருஷத்திய சட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. **" taps
any toddy producing tree or permits or suffers to be tapped
any toddy producing tree belonging to him or in his possession**
என்று பழமையான ஒரு பிரிவு இருந்து வருகிறது. அதே மாதிரிதான்
4-வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதும் பழைய சட்டத்திலும் சொல்லப்பட்
டிருக்கிறது.

**" (2) It shall be presumed until the country is shown—**

**(a) that a person accused of any offence under clauses (a) to (j) of sub-section (1) has committed such offence in respect of any liquor or intoxicating drug or any still, utensil, implement or apparatus whatsoever for the tapping of toddy or the manufacture of liquor or any into xicating drug, or any such materials as are ordinarily used in the tapping of toddy or the manufacture of liquor or any intoxicating drug, for the possession of which he is unable to account satisfactorily, and"**

நான் வாசித்தது பழைய சட்டத்திலிருந்துதான். ஏனென்ருல் இப்பொது
புதிதாக கடுமையாக ஆக்குவதற்காக சில பிரிவுகள் சேர்க்கப்பட்டிருக்கிறது.
ஆனுல் இந்த வார்த்தைகளை புதிதாக சேர்க்கப்படவில்லை. பாத்திரங்கள்
வைத்துக்கொண்டிருந்தால், சாராயம் காய்ச்சுவதற்கு அல்லது கள் இறக்கு
வதற்கு அல்ல என்று நிரூபிக்கப்படவேண்டுமென்று இருப்பது பழைய
சட்டம். ஏழைகள் இதஞல் பாதிக்கப்படுவார்கள். சமைப்பதற்குகூட பாத்திரம்
வைத்திருந்தால், அதிகாரிகள் ஏழைகள் மீது பொய் கேஸ் போட்டு, அவர்கள்
மேல் சாத்திரம் இருந்தால் அவர்களை துன்புறுத்துவதற்கு இது ஏதுவாக
இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஏழைகள் சமையல் செய்யக்கூடிய
பாத்திரங்கள் எத்தகையது என்பதை நாம் எல்லாம் அறியாதவர்கள்
அல்ல. ஆனுல் சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய பாத்திரங்கள்,
அதற்கு வேண்டிய பட்டைகள், விவசாயிகள் அல்லாதவர்களின் வீட்டில்
அமோனியம் சல்பெட்டை போன்ற பொருள்கள் வைத்திருந்தால், இவைகள்
இருப்பதாக பிரஸம்ஷன் இருந்தால் இதில் என்ன தவறு இருக்கிறது
என்றுதான் எனக்கு புரியவில்லை. முக்கியமாக ஏழைகள் சிலபேர்கள்
குடிக்கலாம். ஆனுல் இந்த திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சும் விஷயத்
தில் ஏழைகளைவிட வசதி படைத்தவர்கள், பணக்காரர்கள் மேலும் சம்
பாதிக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள் இதில் ஈடுபடுகிருர்கள்.
அவர்கள் இந்த ஏழைகளை பயன்படுத்திக்கொள்ளுகிருர்கள். ஏழைகள்
அகப்பட்டு கொள்ளட்டும், தாங்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணிக்
கொண்டிருக்கிருர்கள். இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் ஏழைகளை
ஈடுபடுத்திக்கொண்டு அதற்கு பின்ஞல் இருக்கின்றவர்களை பிடிக்க



14th March 1958] [Sri M. Bhaktavatsalam]

வேண்டும் என்பதுதான். அம்மாதிரிப்பட்ட பணக்காரர்களை, வசதி உள்ள
வர்களை கண்டு பிடித்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்
கொள்ளவேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் முக்கிய நோக்கம்.
ஆகவே இத்தகைய பழைமையான சட்டத்தை இப்போது இத்தனை ஆண்டு
களுக்கு பின்ஞல் கொண்டு வந்திருக்கிருேம் என்ருல், இதை, எந்த
பக்கத்திலிருந்து சொன்ஞலும் சரி, வழக்கறிஞர்களாக இருக்கக்கூடிய
வர்கள் சொன்ஞலும் சரி, இதஞல் நிரபராதிகள் யாரும் பாதிக்கப்பட மாட்
டார்கள். கோர்ட் இருக்கிறது. நீதி மன்றத்தில் எனக்கு நம்பிக்கை
இருக்கிறது. அதன் மூலம் நிரபராதிகள் யாரும் தண்டிக்கப்படமாட்டார்கள்
என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே இந்த கடுமையான
சட்டம் வேண்டாம், வேறு வழிகளை சொல்லுகின்ருேம் என்று வெறும்
பேச்சு பேசுவதில் ஒன்றும் பயனில்லை. இது உருப்படியான வகை
யிலே நிறைவேற்றப்படவேண்டுமென்ருல், கடுமையான தண்டனை கொடுக்கக்
கூடிய கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய இந்தச் சட்டம் நிறைவேற்
றப்படவேண்டும். அந்த வகையிலே இந்த மசோதா அமைந்திருக்கிறது
என்று சொல்லிக்கொள்கிறேன். நான் திருப்பித் திருப்பிச் சொல்லி
வருகிறேன். போலீஸார் தவறுதல் செய்யவில்லை என்று சொல்லமுடியாது.
போலீஸார்கள் தவறு செய்கிருர்கள் என்பதை மறுக்கவில்லை. அதற்கு
வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம். அதைப்பற்றி பேசும்போது
இங்கே சொன்ஞர்கள் " போலீஸார் லஞ்சம் வாங்கிஞர்கள். இன்னும் நட
வடிக்கை எடுக்கவில்லை " என்றெல்லாம் சொன்ஞர்கள். லஞ்சப் புகார்கள்
ஏற்பட்டால் அவ்வப்போது கவனம் செலுத்தி வருகிருர்கள். அவ்
வப்போது நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். இன்று நீதி செலுத்துவ
திலே, தண்டனை விதிப்பதிலே, நேராக கவனம் செலுத்தி, தகுந்தவாறு
விசாரணை நடத்தி, நீதி விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தான்
வருகிறது. எத்தகைய புகார்கள் வந்தாலும், அரசாங்கத்தாருக்கு எத்தகைய
அபிப்பிராயம் இருந்தாலும், தீர விசாரித்து, தகுந்த முறையில் நடவடிக்கை
எடுக்க வேண்டுமே தவிர, நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டால்,
அதைக் குறித்து " இம்மாதிரிச் சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறீர்களே,
லஞ்சப் புகார்கள் மீது ஒன்றும் செய்யவில்லை, போலீஸ் மீது நடவடிக்கை
எடுக்கவில்லை, இன்னும் ஒன்றும் செய்யவில்லை " என்று சொல்வது சரி
யல்ல என்று சொல்லுகிறேன். இன்று அதிகமாக ஆட்சேபம் தெரிவிக்கப்
பட்டது இந்தக் குறைந்த பட்ச தண்டனை விதிக்கப்படுவதைப் பற்றி. குறைந்த
பட்ச தண்டனை விதிக்கவேண்டுமென்று இருந்தபோதிலும், தகுந்த
காரணங்கள் இருந்தால், விசாரணை செய்கிற மாஜிஸ்டிரேட்டுகள்—விசாரணை
செய்கிற நீதிபதிகள்—அதைக் குறிப்பிட்டு அதை விடக் குறைந்த தண்டனை
கொடுக்கலாம் என்று இந்தப் பிரிவில் இருக்கிறது. குறைந்தபட்ச தண்
டனை கொடுக்கவேண்டும் என்று இருக்கும்போது மாஜிஸ்டிரேட்டுகள்
எவ்வாறு செய்வார்கள் ? இது மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரியுமா ? தகுந்த
காரணங்கள் காட்டவேண்டுமென்று இருக்கும்போது எவ்வாறு நேரம்
இருக்கப்போகிறது ? என்றெல்லாம் சொன்ஞர்கள். இப்படிக் கூறுவது
நம்முடைய மாஜிஸ்டிரேட்டுகளின் திறமையைக் குறைத்துக் கூறுவதாகும்.
நான் வாதத்திற்காகச் சொல்லவில்லை. நமது மாஜிஸ்டிரேட்டுகள், ஸப்-
மாஜிஸ்டிரேட்டுகள், திறமையில் குறைவில்லை. நல்ல திறமை இருக்கிறது.
இந்தப் பிரிவு இருக்கிறதென்ருல், அதைப் பார்த்து, இந்த தண்டனை
வேண்டாம்—குறைந்தபட்ச தண்டனை வேண்டாம்—அதற்குக் குறைந்த
தண்டனை கொடுத்தால்போதும் என்று அவர்கள் கருதிஞல், அவர்கள்
கொடுக்கக்கூடும். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஆற்றல் இருக்கிறது.
அது மட்டுமல்ல. இப்படி ஏதோ ஒரு கேஸ் சரியாக திருப்திகரமாக நிரூ
பிக்கப்படவில்லையென்ருல், அந்தக் கேஸைத் தள்ளி விடலாம். குற்ற
வாளிகளை அக்விட்செய்து விடலாம். அக்விட் செய்வதைச் சட்டம் தடுக்க
வில்லை. மாஜிஸ்டிரேட் குற்றம் நிரூபிக்கப்படவில்லை—இந்தக் குற்றத்
திற்கு அவர்கள் காரணம் என்று தெரியவில்லை—என்று எண்ணிஞல்
அக்விட் செய்யலாம். இன்றைக்கு எவ்வளவோ கொலைக் குற்றங்களில் குற்றம்
சாட்டப்பட்டவர்கள், குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக
அக்விட் செய்யாமலா இருக்கிருர்கள். ஆகவே, [illegible]தைப்பற்றி அச்சப்பட
வேண்டிய அவசியமில்லை.

[Sri M. Bhaktavatsalam] [14th March 1958

ஆனல், இம்மாதிரி சட்டப் புத்தகத்தில் குறைந்தபட்ச தண்டனை என்று
குறிப்பிடுவார்களா என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள்.
சரித்திரத்திலேயே எங்கும் காணவில்லை என்று சொன்னார்கள். சட்ட
சொன்னேன் "சட்டசரித்திரம் தெரியாது" என்று. நான்
மற்றொரு அங்கத்தினர் சொன்னார், "பம்பாயில் சட்டம் தெரியாது எனக்கு.
அவர்களுக்குத் தெரியாது, அதை நாம் என் பின்பற்றவேண்டும்" செய்தார்கள்,
சரி, பம்பாய் சட்டம் வேண்டாம். ஆனல் எதிரிலே வீற்றிருக்கிற என்று.
தினர் ராமசுவாமி பிள்ளை அவர்கள் "எங்கே இம்மாதிரி சட்டம்—குறைந்த அங்கத்
பட்ச தண்டனை என்ற சட்டம்—இருக்கிறது" என்று சொன்னார்கள். இண்
டியன் பீனல் கோடில் 397-வது செக்ஷனில் "section 397 of the Indian
Penal Code says: If at the time of commtting robbery or dacoity,
offender uses any deadly weapon, or causes grievous hurt to any
person, or attempts to cause death or grievous hurt to any person, the
imprisonment with which such offender shall be punished, shall not be
less than seven years" 7 வருஷம் குறைந்தபட்ச தண்டனை என்றிருக்கிறது.
நம்முடைய இண்டியன் பினல் கோடிலேயே இருக்கிறது.
ரொம்ப நாளாக இருக்கிறது. இது ஒன்று தான் என்று நினைக்கவேண்டாம்,
302-வது செக்ஷன் கொலையைப் பற்றிய செக்ஷன். அதுவும்
என்ன? தூக்கு அல்லது டிரான்ஸ்போர்டேஷன்—தீவாந்திரம்—இதற்குக்
குறைந்த தண்டனை கொடுக்க முடியாது. குறைந்த தண்டனை
5 வருஷம் கொடுக்கலாம், 2 வருஷம் கொடுக்கலாம்—
ஏற்படுவதைப்பற்றிப் புரியவில்லை. குறைந்த தண்டனை கொடுக்கலாம். இதிலே அச்சம்
303-வது செக்ஷனிலே, லைப் கான்விக்ட்—தீவாந்திர சிட்சை அடைந்த
ஒருவர்—திரும்ப ஒரு கொலை செய்தால், அவருக்கு தண்டனை தூக்குதான்,
தீவாந்திரம் கிடையாது. கொலைக்குக் கொலைதான் தண்டனை. அதே மாதிரி
121-வது செக்ஷனிலேயும்.

section 311 prescribes punishment for transportation of life"
"section 302 and 303 prescribe the punishment for murder. The
punishment prescribed is death or transportation for life" என்று
இருக்கிறது. ஒரு செக்ஷனில் அல்ல, இரண்டு செக்ஷனில் அல்ல. இன்னும்
உணவு கலப்படத்தைக் தடுக்கும் சட்டம் இருக்கிறது. அந்தத் சட்டத்திலே
ஒருவர் 2-வது முறையாக அந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்தால்
"In the Food Adulteration Act also it is stated that the
offender shall be punished with imprisonment" பைன் போட
முடியாது, இம்பிரிஸன்மெண்ட் தான். இம்மாதிரி இருப்பது புதிதல்ல.
அமுலில் இருக்கும் சட்டத்திலேயே இருக்கிறது. ஆனல் விசாரிக்கிற
மாஜிஸ்டிரேட் இந்தச் சட்டங்களின் கீழ் குறைந்த தண்டனை கொடுத்திருக்
கிறார். இண்டியன் பினல் கோடின் கீழ் குறைத்துக் கொடுத்திருக்கிறார்.
விசாரிக்கும் மாஜிஸ்டிரேட் தகுந்த காரணங்கள் இருந்தால், குறைந்த
பட்ச தண்டனையைக் குறைத்துக் கொடுக்கலாம். அதற்கு இடம் இருக்கிறது
இப்போது இருக்கக்கூடிய. மசோதாவில். ஆகவே இந்தப் பிரிவிற்கு கனம்
அங்கத்தினர்கள் பிரேரேபித்த திருத்தங்கள் ஒன்றையும் ஏற்றுக்கொள்ள
முடியாமல் இருக்கிறது என்று சொல்லவேண்டியிருக்கிறது. இந்த மசோதா
இப்படியே நிறைவேற்றப்படுவதினால் பாதகம் ஏற்படாது. பாதகம் ஏற்
படும்—யாருக்கு? இதையை வேலையாகக் கொண்டிருப்பவர்களுக்கு, சாராயம்
காய்ச்சுகிறவர்களுக்கு, சாராயம் காய்ச்சி பணம் சம்பாதிப்பவர்களுக்கு,
அதிலே அக்கரையுள்ளவர்களுக்கு. அதிலே பங்குள்ளவர்களுக்கு—அவர்
களுக்கு பாதகம் தான். அந்த பாதகத்தை நாங்கள் பொருட்படுத்த
வில்லை. சமுதாயத்திலே இருக்கிற பாதகங்களைத் தீர்க்கவேண்டியது, அவை
களைத் தவிர்க்கவேண்டும். என்ற நோக்கத்தோடு ஏற்பட்ட அனுபவங்களை
கொண்டு, மசோதா வெகு காலமாக நன்கு பரிசீலிக்கப்பட்டு தயாரிக்கப்
பட்டிருக்கிறது. நான் இப்பொழுது பிரேரேபிக்கப்பட்ட திருத்தங்களை
எதிர்க்கவேண்டியிருக்கிறது என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை
முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I shall now put the amendments to vote unless the hon. Members concerned withdraw them.



14th March 1958] [Mr. Speaker]

The question is—

'In the proposed new section 4, *omit* sub-sections 1 (*g*), 1(*k*), and 2 (*a*) and (*b*).'

The amendment was put and lost.

SRI T. T. DANIEL: Sir, I beg leave to withdraw the following amendments:—

'In the proposed new section 4, sub-section (1) (*a*) after the words "transports or" *insert* the word "intentionally".'

'In the proposed new section 4, sub-section (1) (*k*) *for* the word "allows" *substitute* the word "abets".'

'In the proposed new section 4, sub-section (1) (*k*) (i) *for* the word "and" occurring in line 20, *substitute* the word "or" and *omit* the portion in the sub-section *after* the words "extend to five thousand rupees".'

The amendments were, by leave, withdrawn.

SRI T. T. DANIEL: Sir, I beg leave to withdraw the following amendment:—

'In the proposed new section 4, sub-section (1) (*k*) (ii) *for* the word "and" occurring in line 30 *substitute* the word "or" and *omit* the portion after the words "extend to two thousand rupees".'

MR. SPEAKER: Has the hon. Member the leave of the House to withdraw the amendment?

SRI M. KALYANASUNDARAM: No, Sir.

MR. SPEAKER: The hon. Member must realize that if he says, 'No', I will have to put the amendment to vote. The rules clearly state that if a Member objects to the withdrawal of an amendment, it should be put to vote.

SRI M. KALYANASUNDARAM: It may be put to voice vote, Sir.

MR. SPEAKER: The question is—

'In the proposed new section 4, sub-section (1) (*k*) (ii), *for* the word "and" occurring in line 30 *substitute* the word "or" and *omit* the portion after the words "extend to two thousand rupees".'

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

'In the proposed section 4, sub-section (1) (*c*), *delete* the following:—

"or collects any portion . . . or".'

and in (1) (*d*) *delete* the following:—

"or permits or suffers . . . possession; or" and in (1) (*e*) *delete* the following:—

"or permits or suffer . . . possession; or" and

'*Delete* sub-sections (1) (*g*), (*h*) and (*j*).'

[14th March 1958

The amendments were put and lost.

MR. SPEAKER : The question is—

'In the proposed section 4, sub-section (1) (*d*), *for* the words " or suffers to be tapped " *insert* the word " tapping ".'

'In sub-section (1) (*k*) (i) *for* the words " two years " *substitute* the words " one year " and in line 21, for the word " five " *substitute* the word " one " and *delete* the following :—

" but in the . . . aforesaid." '

'In sub-section (1) (*k*) (ii) in line 30, *for* the words " one year " *substitute* the words " six months " and in line 31 for the word " two " *substitute* the word " one " and delete sub-section (2).

The amendments were put and lost.

MR. SPEAKER : The question is—

'In the proposed section 4, sub-section (1) (*k*) (i), *omit* the words " but . . . aforesaid " and in sub-section (1) (*k*) (ii), *omit* the words " but to purposes ".'

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

'In the proposed section 4, *delete* sub-section (2) (*b*).'

The amendment was put and lost.

Clause 4 was put and carried.

### *Clause 5.*

MR. SPEAKER : The motion is—

'That clause 5 do stand part of the Bill '.

MR. SPEAKER : The amendment given notice of by Messrs. T. S. Ramaswamy Pillai, P. S. Chinnadurai and T. T. Daniel to omit the clause is out of order. The other amendments are in order.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendments :—

'*For* the word " six " occurring in line 35 *substitute* the word " three ".

'*For* the word " seven " occurring in line 36 *substitute* the word " two ".'

'*For* the word " nine " occurring in line 38 *substitute* the word " six ".'

'*For* the words " one thousand " occurring in line 39 *substitute* the words " seven hundred ".'

The amendments were duly seconded.



14th March 1958]

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following amendment :—

'In the proposed section 5 (i), *for* the word " six " *substitute* the word " two " and *for* the word " seven " in line 36 *substitute* the word " two " and *delete* 5 (ii) and (iii).'

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, 9-50 a.m.
இந்த 5-வது பிரிவானது அசல் சட்டத்தில் இருக்கக் கூடிய 5-வது பிரிவுக்கே திருத்தம் ஆக இருக்கிறது. இந்தப் பிரிவின் நோக்கம் என்னவென்றால், **"denatured spirits, methylated spirits"** போன்ற வகையராக்களை மனிதர்கள் உபயோகப்படுத்தும் முறையில் மாற்றி வைத்திருக்கக் கூடியவர்களுக்கு தண்டனை கடுமையாகக் கொடுக்கவேண்டும் என்பது. இது விஷயத்தில் நான் அதிகமாக ஆட்சேபித்திருக்க மாட்டேன். ஆனால், இப்பொழுது சென்னை நகரம் சம்பந்தப்பட்ட மட்டில் நடந்து கொண்டிருக்கக் கூடிய முறையைப் பார்க்கும்பொழுது, இதுவும் ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு பிரிவு என்றே எனக்குத் தோன்றுகிறது. மதுவிலக்குக் கொள்கையானது நிச்சயமாக சென்னை நகரம் உள்பட அமல் நடத்தப்படவேண்டுமென்று இப்பொழுது அமைச்சர் அவர்களுக்கு இருக்கக் கூடிய ஆர்வம் மாதிரி அல்ல, 1937-ம் வருஷத்துக்கு முன்பே தேசீய இயக்கத்தில் ஈடுபட்ட அத்தனை பேருக்கும் இருந்த ஆர்வம் இன்றும் எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட 3 லட்சம் காலன் "ஸ்பிரிட்" வகையராக்களை நம்முடைய ராஜ்யத்தில் விநியோகம் செய்வதற்கு சட்டபூர்வமாக, பெர்மிட் மூலமாக அனுமதிக்கப்படுகிறது. இந்த 3 லட்சம் காலனில், கிட்டத்தட்ட 125,000 காலன் சென்னை நகரத்தில் மட்டும் பெர்மிட் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. இந்தப் பெர்மிட்டுகளை வழங்குகிறவர்கள், ஜில்லா கலெக்டர், ரெவென்யூ போர்டார், அதற்கு மேற்பட்டால் சர்க்கார். இந்த **"denatured spirits, methylated spirits"** உற்பத்தி செய்வது பூராவும், நெல்லிக்குப்பம் பாரி **(Parry)** கம்புனி நிர்வாகத்திலிருக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையில் செய்யப்பட்டு, சென்னை நகரம் பூராவும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. சிறிய அளவுக்கு ஆந்திரப் பகுதியிலிருந்தும் வரலாம். சட்டபூர்வமாக சென்னை நகரத்திற்கு அனுமதிக்கப்பட்டு விநியோகிக்கப்படக்கூடிய பொருளை மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த பெர்மிட் கொடுப்பதிலே ஏன் இவ்வளவு அதிகமாகக் கொடுக்கவேண்டும், அதிலே என்னென்ன பிரச்னைகள் ஏற்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்தார்களா. என்று அறியவிரும்புகிறேன். அப்படி அவர்களுக்கு ஆராய்ச்சி செய்ய அவகாசம் இல்லாவிட்டாலும், சில விவரங்களை நான் கொடுக்கிறேன். இந்த விவரங்களின் மீதாவது பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரம் சம்பந்தப்பட்ட மட்டில் இவ்வளவு அதிகமாக பெர்மிட் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றே நான் கருதுகிறேன். பெட்ரமாக்ஸ் லைட், ஸ்டவ் போன்றவைகளை வைத்திருப்பவர்களுக்கும், வார்னிஷ் போன்ற பொருள்களைத் தயார் செய்கிறவர்களுக்கும்தான் இது நியாயமாகத் தேவைப்படும். இதற்கு 25 லட்சம் காலன் போதுமானது. அதிகபட்சமாக வைத்துக்கொண்டாலும் கூட, 50 லட்சம் காலன் போதும். இதற்கு மேல் இன்னும் அதிகமாக கிட்டத்தட்ட 1 லட்சம் காலன் அளவுக்கு சென்னை நகரத்தில் பெர்மிட் கொடுக்கப்படுகிறது என்றால், அது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இன்றைக்கு அரசியல் சட்டத்தின்படி பெர்மிட் கொடுப்பதை மறுக்கமுடியாது என்று சொல்லலாம். இதை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருள் என்ன ? பாரி கம்பெனியார் சர்க்கரையைச் செய்துவிட்டு குப்பையில் போடவேண்டிய **"மொலாஸஸ்"**

என்ற பொருளைக் கொண்டு இதை உற்பத்தி செய்கிறார்கள். காலன் ஒன்றுக்கு 8 அணாதான் உற்பத்திச் செலவாகும். காலன் ஒன்றுக்கு 2 ரூபாய் விலையில் மொத்த வியாபாரிகளுக்குக் கொடுக்கிறார்கள். சில்லரை வியாபாரிகள் காலன் ஒன்று ரூ. 30 அல்லது 35 விலைக்கு ஏழைமக்கள் தலையில் சுமத்தி, இது மதுபானத்திற்கு உபயோகப்பட்டு வருகிறது. இதிலே பாரிக் கம்பெனிக்கு லாபம், மொத்த வியாபாரிகளுக்கு லாபம், இன்னும் சில்லரை வியாபாரிகளுக்கும் லாபம் ஏற்படுகிறது. சில்லரை வியாபாரிகள் பாட்டில் ஒன்றுக்கு ரூபாய் 4 வீதம் வரையிலும் விற்கிறார்கள். கடைசியில் ஏழைமக்கள், பாட்டாளிமக்கள், தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். திடீரென்று போய் அவர்களைக் கைது செய்கிறார்கள். மொத்த வியாபாரிகளோ, சில்லரை வியாபாரிகளோ பாதிக்கப்படவில்லை. மதுவிலக்குச் சட்டம் இருந்தும் கூட, மொத்த வியாபாரிகள் லாபம் அடைகிறார்கள், சில்லரை வியாபாரிகள் லாபம் அடைகிறார்கள், பாரிக் கம்பெனி லாபம் அடைகிறது, ஆனால் ஏழைத் தொழிலாளி பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறான்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், பெரிய போலீஸ் அதிகாரிகள் இதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று யோசனை கூறி இருப்பதாகவும் அறிகிறேன். இதிலே எவ்வளவு தூரம் உண்மையிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. இவ்வளவு அதிகமான அளவுக்கு பெர்மிட் கொடுக்கக் கூடாது என்று அவர்கள் சொல்லியிருந்தும் கூட, என்னுடைய விபரப்படி பார்த்தால், ஒரு வாரத்திற்கு முன்பு இந்த ஸ்பிரிட் வகையறாக்கள் கிட்டத்தட்ட 3,500 காலன் அளவுக்கு ஒரு புதிய லைசென்ஸுதாருக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலை இருக்கக்கூடிய பிரதேசத்திற்கோ, அல்லது இம்மாதிரி சாமான்கள் தயாரிக்கக்கூடிய பிரதேசத்திற்கோ கொடுக்கப்படவில்லை. நுங்கம்பாக்கம், மாம்பலத்தில் இரண்டு நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். ரெவென்யூ போர்டோ அல்லது ரெவென்யூ இலாக்காவோ இதை ஏன் அனுமதிக்கவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ரொம்பவும் அபாயகரமானது. திருட்டுத்தனமாக பனைமரத்திலிருந்தோ அல்லது தென்னை மரத்திலிருந்தோ கள்ளை இறக்கிக் குடித்துவிட்டாலும் கூட சமுதாயத்திற்கு அவ்வளவு ஆபத்து ஏற்படாது. எந்த மக்களை நம்பி நமது திட்டங்கள் வெற்றிபெறவேண்டும் என்று நினைக்கிறோமோ, அவர்கள் குடித்து அவர்களுடைய சுகாதாரத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. மொத்த வியாபாரிகளும் கொழுத்துக் கொண்டு வருகிறார்கள்.

இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். இதற்குச் சில போலீஸ் அதிகாரிகளும் உடந்தை என்று விவரம் கிடைத்திருக்கிறது. எந்தெந்த போலீஸ் ஸ்டேஷன்களிலே இதற்கு அனுசரணையாக இருக்கிறார்கள், எந்தெந்த முறையிலே வியாபாரிகளைக் கொடுமைப்படுத்துகிறார்கள், வியாபாரிகள் பணம் கொடுத்தால் எவ்வளவு தூரம் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. இந்த விஷயங்களை ஆராய "ஸ்பெஷல் பிராஞ்சு" அதிகாரிகளை அனுப்பட்டும். நானே அவர்களிடம் நேரில் பேசுகிறேன். நேரே கடிதம் எழுதி டிபார்ட்மெண்டுக்கு தெரிவித்தால் சம்பந்தப்பட்டவர்கள் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வழிசெய்து கொள்வார்கள் என்ற காரணத்தினால், பொறுப்புள்ள அதிகாரிகளை அனுப்பினால் அவர்களிடத்திலே கூறுவதற்குத் தயாராய் இருக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் போலீசாரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் வைக்காமல், குற்றச்சாட்டில் உண்மையிருக்குமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. பாரிக் கம்பெனி இவ்வளவு காலனுக்கு மேல் உற்பத்தி செய்யக்கூடாது, அவசியமான தேவைகளுக்கு மட்டும் இவ்வளவு காலன் தான் விற்கலாம் என்று கட்டுப்படுத்தலாம். ஏற்றுமதி வேண்டுமானாலும்





செய்யலாம். உற்பத்தியைத் தடைசெய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஏற்றுமதியினால் நமக்கு லாபம் ஏற்படுமேயானால், நம்முடைய ராஜ்யத்திற்கு அந்நிய செலாவணி வசதி கிடைக்குமென்று நினைத்தால், ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்ய—பாரிக் கம்பெனி ஆக இருந்தாலும்—அனுமதியுங்கள் என்றுதான் சொல்லுகிறேன். இது சம்பந்தமாகத் தவறு இருந்தால் திருத்திக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன். வருஷம் ஒன்றுக்கு மூன்று லட்சம் காலன்கள் வினியோகம் செய்வதற்கு அனுமதித்ததை பரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதில் போலீஸ்காரர்களுடைய நடவடிக்கை இந்த விநியோகத்தை தடை செய்வதாகவே இல்லை. இதில் தங்களுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் போலீஸ் அதிகாரிகள் இதில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இது ஒரு "ஸிஸ்டம்" ஆகவே ஆகிக் கொண்டு வருகிறது. "புரொஹிபிஷன் ஆக்ட்" இல்லாமல் இருந்தாலே இந்த மாதிரி நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்காமலிருந்திருக்கலாம். இந்த "புரொஹிபிஷன் ஆக்ட்" இருப்பதினால், வியாபாரிகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும், "பாரி" கம்பனிக்கும் லாபம் ஏற்படுகிற நிலைமையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் "பிரிஸம்ஷன்" ஒன்று இருக்கிறது. அப்படி இருந்தும் கூட குறைந்த பட்ச தண்டனை விதித்தே ஆக வேண்டும் என்று போடப்படவில்லை. ஆனால் இப்பொழுது குறைந்தபட்ச தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கும் சட்டத்தின் மூலம், போலீஸ்காரர்கள், தங்களுடன் ஒத்துழைக்காதவர்கள், தங்களுக்கு சகாயம் செய்யாதவர்கள்—இவர்களைப் போலுள்ள வியாபாரிகளின் மேல் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க முடியும், என்ற நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது.

உதாரணமாக 1957-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஒரு இடத்தில் "ஸர்ச்" நடந்தது. ஆனால் 1957-ம் வருஷம் அக்டோபர் மாதம் 11-ம் தேதியில் தான் சார்ஜ் ஷீட் தாக்கல் செய்யப்பட்டது. சார்ஜ் ஷீட் பைல் செய்வதற்கு ஆறு மாதகாலம் தாமதம் ஆகியிருக்கிறது. அது விசாரணைக்கு வந்தபோது . . . . .

MR. SPEAKER : I am sorry I have to interrupt the hon. Member. I feel that all that the hon. Member is saying has nothing to do with clause 5, which is now under discussion. The question of charge-sheet or the question of issuing extra licences seems to be slightly irrelevant. What we are discussing is the punishment that should be given to the offender. Although very reliable information may be given, I think it is not quite relevant to this clause. I request the hon. Member to speak on the clause.

**SRI M. KALYANASUNDARAM**: இந்த குறைந்த பட்ச தண்டனை விதிப்பதில் கூட சில கஷ்டங்கள் இருக்கின்றன. இப்பொழுதே போலீசாரின் இம்சை அதிகமாக இருக்கிறது. ஒன்றிரண்டு உதாரணங்களைக் கொடுத்து குறைந்த பட்ச தண்டனை இருக்கக்கூடாது என்று விளக்கலாம் என்று எண்ணினேன். தாங்கள் அது சம்பந்தம் இல்லை என்று சொல்வதனால் நான் அதை விட்டு விடுகிறேன்.

ஒரு இடத்தில் போலீஸ் அதிகாரி ஒரு வியாபாரியை "ஸர்ச்" செய்தபோது இரண்டு சாட்சிகள் அப்பொழுது இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த இரண்டு சாட்சிகளும் விசாரிக்கப்படவே இல்லை. இந்த மாதிரி சமயங்களில் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு சங்கடம் ஏற்படுகின்றன.. ஒரு போலீஸ் அதிகாரி சொன்னார் என்பதற்காகவே தண்டனை விதிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் நான் இதை குறிப்பிட்டேன்.

14th March 1958] [Sri M. Kalyanasundaram]

செய்யலாம். உற்பத்தியைத் தடைசெய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஏற்றுமதியினால் நமக்கு லாபம் ஏற்படுமேயானால், நம்முடைய ராஜ்யத்திற்கு அந்நிய செலாவணி வசதி கிடைக்குமென்று நினைத்தால், ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்ய—பாரிக் கம்பெனி ஆக இருந்தாலும்—அனுமதியுங்கள் என்றுதான் சொல்லுகிறேன். இது சம்பந்தமாகத் தவறு இருந்தால் திருத்திக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன். வருஷம் ஒன்றுக்கு மூன்று லட்சம் காலன்கள் வினியோகம செய்வதற்கு அனுமதித்ததை பரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதில் போலீஸ்காரர்களுடைய நடவடிக்கை இந்த விநியோகத்தை தடை செய்வதாகவே இல்லை. இதில் தங்களுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் போலீஸ் அதிகாரிகள் இதில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இது ஒரு "ஸிஸ்டம்" ஆகவே ஆகிக் கொண்டு வருகிறது. "புரொஹிபிஷன் ஆக்ட்" இல்லாமல் இருந்தாலே இந்த மாதிரி நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்காமலிருந்திருக்கலாம். இந்த "புரொஹிபிஷன் ஆக்ட்" இருப்பதினால், வியாபாரிகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும், "பாரி" கம்பனிக்கும் லாபம் ஏற்படுகிற நிலைமையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் "பிரிஸம்ஷன்" ஒன்று இருக்கிறது. அப்படி இருந்தும் கூட குறைந்த பட்ச தண்டனை விதித்தே ஆக வேண்டும் என்று போடப்படவில்லை. ஆனால் இப்பொழுது குறைந்தபட்ச தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கும் சட்டத்தின் மூலம், போலீஸ்காரர்கள், தங்களுடன் ஒத்துழைக்காதவர்கள், தங்களுக்கு சகாயம் செய்யாதவர்கள்—இவர்களைப் போலுள்ள வியாபாரிகளின் மேல் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க முடியும், என்ற நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது.

உதாரணமாக 1957-ம் வருஷம் எப்ரல் மாதம் ஒரு இடத்தில் "ஸர்ச்" நடந்தது. ஆனால் 1957-ம் வருஷம் அக்டோபர் மாதம் 11-ம் தேதியில் தான் சார்ஜ் ஷீட் தாக்கல் செய்யப்பட்டது. சார்ஜ் ஷீட் பைல் செய்வதற்கு ஆறு மாதகாலம் தாமதம் ஆகியிருக்கிறது. அது விசாரணைக்கு வந்தபோது . . . . .

Mr. SPEAKER : I am sorry I have to interrupt the hon. Member. I feel that all that the hon. Member is saying has nothing to do with clause 5, which is now under discussion. The question of charge-sheet or the question of issuing extra licences seems to be slightly irrelevant. What we are discussing is the punishment that should be given to the offender. Although very reliable information may be given, I think it is not quite relevant to this clause. I request the hon. Member to speak on the clause.

**Sri M. KALYANASUNDARAM**: இந்த குறைந்த பட்ச தண்டனை விதிப்பதில் கூட சில கஷ்டங்கள் இருக்கின்றன. இப்பொழுதே போலீசாரின் இம்சை அதிகமாக இருக்கிறது. ஒன்றிரண்டு உதாரணங்களைக் கொடுத்து குறைந்த பட்ச தண்டனை இருக்கக்கூடாது என்று விளக்கலாம் என்று எண்ணினேன். தாங்கள் அது சம்பந்தம் இல்லை என்று சொல்வதனால் நான் அதை விட்டு விடுகிறேன்.

ஒரு இடத்தில் போலீஸ் அதிகாரி ஒரு வியாபாரியை "ஸர்ச்" செய்தபோது இரண்டு சாட்சிகள் அப்பொழுது இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த இரண்டு சாட்சிகளும் விசாரிக்கப்படவே இல்லை. இந்த மாதிரி சமயங்களில் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு சங்கடம் ஏற்படுகின்றன. ஒரு போலீஸ் அதிகாரி சொன்னார் என்பதற்காகவே தண்டனை விதிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் நான் இதை குறிப்பிட்டேன்.

[Sri M. Kalyanasundaram] [14th March 1958

குறைந்த பட்ச தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்டத்தில் இருந் தாலும்கூட ஸ்பிரிட் வந்து கொண்டுதான் இருக்கும், அதோடு எலுமிச்சம் பழத்தையோ சர்க்கரையோ சேர்த்து விற்பதற்கு ஜனங்கள் முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். கடைசியில் அதைக் குடிக்கக்கூடிய ஏழை ஜனங்கள் தான் இந்த சட்டத்தால் பாதிக்கப்படுகிறார்கள். புரொஹிபிஷன் ஆக்ட் சம்பந்தப்பட்ட வரையில் இம்மாதிரி சந்தேகத்திற்கிடமான பிரிவுகளே இருக்கக்கூடாது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நாங்கள் குறை கூறுகிறோம் என்பதற்காக இதை புறக் கணிக்க வேண்டாம். இந்த சட்டம் சரியாக அமல் நடத்தப்படவேண்டும் என்று அக்கரையிருப்பதால்தான் இவைகளை எடுத்துச் சொல்ல வேண்டி யிருக்கிறது.

**Sri S. M. ANNAMALAI** : சார், இந்த மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் முதல் முதலாக தண்டனை பெறுகின்றவர்களுக்கு, இந்த குறைந்த பட்ச தண்டனை 6 மாதம் ஆக இருப்பதை 3 மாதம் ஆக்கவும், 750 ரூபாய் அபராதம் என்று இருப்பதை 250 ரூபாயாகவும் ஆக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

இரண்டாம் முறையாக தண்டனை விதிப்பவர்களுக்கு 9 மாத சிறைத் தண்டனைக்குப் பதிலாக 6 மாதம் என்று இருக்கவேண்டும் என்றும், அபராதம் 1,000 ரூபாய் என்று இருப்பதை 700 ரூபாயாக குறைக்க வேண்டும் என்றும் திருத்தம் கொடுத்திருக்கிறேன். பாமர மக்கள் நீதி மன்றங்களுக்குச் சென்று பணம் செலவழிக்க முடியாத நிலையில் இருக் கிறார்கள். ஆகையால் அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவே இந்த திருத்தங்களை கொடுத்திருக்கிறேன். இந்தக் காரணங்களை உத்தேசித்தே முதல் தடவையாக தண்டிக்கப்பட்டால் 3 மாத சிறைத் தண்டனையும் 250 ரூபாய் அபராதமும் போதும் என்றும், இரண்டாம் முறையாக தண்டிக் கப்பட்டால் 6 மாத சிறைத் தண்டனையும் 700 ரூபாய் அபராதமும் போதும் என்று என்னுடைய திருத்தத்தில் சொல்லியிருக்கிறேன். தயவு செய்து அமைச்சர் அவர்க்ள் என்னுடைத திருத்தத்தை அங்கீகரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

10-00 a.m. **Sri P. S. CHINNADURAI** : கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்பி ரிட் போன்ற வஸ்துக்களை, போதை தரும் பானங்களாக மாற்றுவதை தடை செய்வதையும் அப்படி மாற்றுகிறவர்களுக்கு தண்டனை கொடுப்பதற் கும் ஏற்பாடு செய்யும் முறையில் இந்த ஷரத்தின் நோக்கம் இருக்கிறது.

ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் லைஸன்ஸ்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சென்னை நகரத்தில் மாத்திரம் அல்ல. மதுராந்தகம் அதை அடுத்த பகுதிகளிலே, அளவுக்கு தேவை இல்லாத அளவுக்கு லைஸன்ஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது.

**Mr. SPEAKER** : கல்யாணசுந்தரம் பேசும்போதே நான் லைஸன்ஸ் கொடுப்பதைப் பற்றி பேசக் கூடாது என்று சொன்னேன். என்ன தண் டனை விதிக்க வேண்டும் என்று தான் இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆகையால் தண்டனையைப் பற்றித்தான் பேச வேண்டும். அங்கத்தினர் அதைப்பற்றி மட்டும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** rose—

**Mr. SPEAKER** : Why should the hon. Member object? He has already spoken on this clause. If he has anything else to say he can speak at the third reading stage. This clause is concerned with punishment only. Therefore let the discussion be confined to that point.

**Sri P. S. CHINNADURAI** : இந்த தண்டனையைப் பொறுத்த வரையிலும்கூட நான் ஒன்று சொல்வேன். தண்டனையை கடுமையாக ஆக்குவதை விட ஸ்பிரிட் போன்ற வஸ்துக்களை போதை தரும் பானங்களாக



14th March 1958] [Sri P. S. Chinnadurai]

மாற்ற வகை இல்லாமல் செய்துவிட முடியுமானால் மிகவும் நன்றாக இருக்காதா என்று அரசாங்கம் ஆலோசனை செய்து இருக்கலாம். அவ் விதம் செய்து விட்டால் சட்டத்தில் கடுமையான தண்டனைகளை விதிப்பதை விட அதிகமான அனுகூலங்கள் இருக்கும். இந்தச் தொழிலைச் செய்கிற வர்கள் மிகவும் இழிவானவர்கள். எவ்வளவு கடுமையான தண்டனை விதித்தாலும், அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு இழிவான முறைகளை கையாள்வார்கள். சட்டத்தில் மட்டும் கடுமையான தண்டனை என்று இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டுவிடும்.

குறைந்த பட்ச தண்டனை விதிப்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சில எடுத்துக்காட்டுகளை விவரித்தார்கள். நான் செலக்ட் கமிட்டி ரிபோர்ட் டில் சில ஆட்சேபகரமான குறிப்பு கொடுத்திருப்பதை அவர்கள் எடுத்துக் குறிப்பிட்டார்கள். பொதுவாக சட்டத்தில் குறைந்தபட்ச தண்டனை என்கிற ஷரத்தைப் போடுவதில்லை என்று சொன்னேன். அதனால் உலகத்திலேயே இருக்கும் எல்லா சட்டங்களையும் ஆராய்ந்து பார்த்து அப்படி சொன்ன தாகவோ அல்லது எந்தச் சட்டத்திலேயும் அம்மாதிரி இல்லை என்று சொல்வதோ சரியாகாது. பொதுவாக பாமர மனிதன் என்கிற வரையில் நமக்குத் தெரிந்திருக்கும் சட்டங்களில் அம்மாதிரி ஒரு ஷரத்து இல்லை என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும். "**it is not common**" என்று தான் அர்த்தம். ஒன்றிரண்டு சட்டங்களில் அம்மாதிரி குறைந்த பட்ச தண்டனை விதிக்கப்பட்டிருக்கலாம். எப்படி இருப்பினும், குறைந்த பட்ச தண்டனை என்று இருக்கக்கூடிய சட்டங்களை அதிகப்படுத்திக் கொண்டு போகக்கூடாது என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன். ஆகையால் இந்தத் திருத்தத்தை கைவிடுமாறு அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் சபாநாயகர் அவர் களே, கடைசியாக பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்பிரிட்டை போதை பொருள் என்று ஆகாதபடி செய்ய வேண்டும் என்று சில யோசனைகளைச் சொன்னார். அவைகளை வழங்குவதில், கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் குறிப்பிட்டபோது வேறு சில உபயோகங்களுக்கும் பர் மிட்டுகள் கொடுக்கப்படுவதைப்பற்றி குறிப்பிட்டார். அம்மாதிரி கொடுக்கப் படுவதில் அது போதை பொருளாக இல்லாமல் மாற்றி விட்டால் அந்தப் பயன் ஏற்படுமா என்பது கவனிக்கப்படவேண்டிய விஷயம். அதில் தொல்லை ஒன்று இருக்கிறது. அதனால் பாதகம் இல்லை என்றாலும் அது பரிசீலனை செய்யக்கூடிய விஷயம்தான். இப்பொழுது நாங்கள் பர்மிட்டுகள் அதிகமாக வழங்குகிறோம். அளவுக்கு மேல் வழங்குகிறோம் என்று சொல்லுகிறார். என்னிடம் இப்பொழுது உற்பத்தியைப்பற்றிய விவ ரம் இல்லை. அதனால் அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கு இல்லை. அதிக மாக பர்மிட்டுகள் வழங்குவதைப்பற்றி கனம் கலியாணசுந்தரம் சொன்ன தால் அதைப்பற்றி சொல்லுகிறேன். அவர் சொன்னார் : புதிது புதிதாக அநேகம் கொடுக்கப்படுகிறது என்று. எனக்குத் தெரிந்த வரையில் லைசென்ஸ்காரர்கள் தான் அடிக்கடி வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். சாதாரணமாக இவை அரசாங்கம் ஒத்துக் கொள்வது இல்லை. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் புதியதாகக் கொடுக்கப்படுகிறது என்று விவரம் தெரிந்து சொன்னால் அதைப்பற்றி மேலும் பரிசீலனை செய்ய முடியும். ஆனால் இதில் தவறுகள் அதிகமாக இருக்கின்றன அதனால் போலீஸ்காரர்களை எதிர்த்துப் பேச வேண்டும்—சாதாரணமாக எப்பொழுதுமே போலீஸ்காரர்களை எதிர்த்துப் பேசுவதுபோல் இல்லமால் அது வேறு விஷயம்—குறிப்பாக கனம் அங்கத்தினர் சொன் னால் அதாவது போலீஸ்காரர்கள் இதில் தவறாக நடந்து கொண்டிருக்கிறார் கள் என்று சொன்னால் அதைப்பற்றி கவனிக்கப்படும். அப்படிச் சொன் னால் சொல்லுகிறவர்களுக்கு பாதகம் ஏற்படும் அதனால் சொல்ல முடிய வில்லை என்று சொன்னார், அதற்கு நாங்கள் பாதகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுகிறோம். என்னிடத்தில் சொன்னால் அவர்களுக்கு பாதகம் ஏற் படாத வகையில் பார்த்துக்கொள்ளுகிறேன். ஆனால் அவர்கள் கொடுக்கும்

[Sri M. Bhaktavatsalam] [14th March 1958

தகவல் உண்மைக்கு மாருக இருந்தால் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது. 100-க்கு 70 வீதம் கொடுக்கப்படும் தகவல்கள் உண்மையாக இல்லை. எம்மாதிரியான விவரங்கள் கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுத்தால் அதிலெல்லாம் கவனம் செலுத்தி கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

இந்தப் பிரிவு நீங்கள் குறிப்பிட்டபடி தண்டனையைக் குறித்தது. தண்டனையைப்பற்றியும் குறைந்த பட்ச தண்டனையைப்பற்றியும் கனம் அங்கத்தினர்கள் பேசிஞர்கள். அவர்களுடைய கருத்தை சர்க்காருக்கு விளக்கிக் கூறிஞர்கள். இன்னும் அதிகப்படியான தண்டனை கொடுக்க வேண்டுமா என்பதைப்பற்றி அந்தக் காலத்தில் எடுத்துக்கொள்ளலாம். அதஞல் இட்பொழுது பிரேரேபிக்கப்பட்ட திருத்தங்கள், அதாவது தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று கொடுத்த திருத்தங்களையெல்லாம் எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I shall now put the amendments to vote. The question is—

'*For* the word "six" occurring in line 35 *substitute* the word "three".'

'*For* the word "seven" occurring in line 36 *substitute* the word "two".'

'*For* the word "nine" occurring in line 38 *substitute* the word "six".'

'*For* the words "one thousand" occurring in line 39 *substitute* the words "seven hundred".'

The amendments were put and lost.

MR. SPEAKER : The question is—

'In the proposed section 5 (i) *for* the word "six" *substitute* the word "two" and *for* the word "seven" in line 36 *substitute* the word "two" and *delete* 5 (ii) and (iii).'.

The amendment was put and lost.

Clause 5 was put and carried.

*Clause* 6.

MR. SPEAKER : The motion is—

'That clause 6 do stand part of the Bill.'

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following amendment :—

'In sub-clause (*b*) for the words "six months" *substitute* the words "one month" and in line 8 for the words "one thousand" *substitute* the words "two hundred and fifty."

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : இது விளம்பரம் செய்யக் கூடிய பகுதி. 6-வது ஷரத்தில் விளம்பரம் செய்திருந்தால் அதற்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் குறைந்த பட்ச தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அதற்குத் திருத்தம்



14th March 1958] [Sri K. Sattanatha Karayalar]

6 மாதம் என்றிருப்பதை ஒரு மாதம் என்றும் 1,000 ரூபாய் என்றிருப்பதை 250 ரூபாய் என்றும் திருத்திக்கொள்ள வேண்டும் என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். பொதுவாக தண்டனை அதிகம் என்ற எண்ணத்தில் இந்த திருத்தத்தைக் கொடுக்கவில்லை. குறைந்த பட்ச தண்டனை இருக்கவேண்டும் என்ற அளவில்தான் இதைக் கொடுத்திருக்கிறேன். குறைந்த பட்ச தண்டனையை போட்டிருந்தால் போதும், அதிகம் வேண்டாம் என்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த திருத்தங்களை ஒத்துக்கொள்வதற்கு இல்லை. இப்பொழுது செக்ஷனில் என்ன இருக்கிறது என்ருல்—

(*b*) for the words "with fine which may extend to one thousand rupees", the following shall be substituted, namely :—

"With imprisonment which may extend to six months or with fine which may extend to one thousand rupees or with both."

இதில் குறைந்த பட்ச தண்டனை ஒன்றும் இல்லை. ஆகவே இதை என் ஆட்சேபிக்கிருர்கள் என்பது புரியவில்லை.

MR. SPEAKER : I shall now put the amendment to vote. The question is—

'In sub-clause (*b*) for words "six months" *substitute* the words "one month", and in line 8 for the words "one thousand" *substitute* the words "two hundred and fifty".'

The amendment was put and lost.

Clause 6 was put and carried.

*Clause* 7.

MR. SPEAKER : The motion is—

'That clause 7 do stand part of the Bill'.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்தப் பிரிவைப்பற்றி பேச எழுந்திருப்பதால் அதை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கம் அல்ல. சாதாரணமாக நான் பேச எழுந்தால் அதை எதிர்ப்பதற்குத்தான் என்று கனம் மந்திரி அவர்கள் எதிர்பார்ப்பார்கள். சென்ற சட்டசபையில் மோலாஸஸ் எப்படிப்பட்ட உபயோகமான காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. அதை டின்களில் அடைத்து விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டுமா என்று கேட்டுக்கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். டின்களில் வைத்து விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இது பல விதங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. மாட்டுக்கு தீனியாக உபயோகப்படுத்தப்படுகிறது, எருவாக உபயோகப்படுத்தப்படுகிறது, மற்றும் கிராமங்களில் சாராயம் காய்ச்சுவதற்கும் இதை உபயோகிக்கிருர்கள். பாக்டரிகளில் இதை உபயோகப்படுத்துகிருர்கள். டின்களில் வைத்து அதைக் கொண்டு போய் விநியோகம் செய்வதை தடை செய்ய வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இப்பொழுது சில பாக்டரி ஏரியாவில் இது கிடைக்கிறது. அதை விவசாயிகள் வாங்கிக்கொண்டு போய் நல்ல விதமாக உபயோகப்படுத்துகிருர்கள். விவசாயம் செய்வதற்கு எருவாகவும் உபயோகிக்கிருர்கள். மோலாஸஸை விவசாயிகள் எருக்குழிகளில் போட்டு வைத்து அதன் பிறகு அதை எருவாக உபயோகித்து வருகிருர்கள். அதையும் இந்தச் சட்டம் கட்டுப்படுத்துமா ? ஆகவே விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்தச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டும். அவர்களுக்கு பர்மிட்டுகள் கொடுக்க முன் வரவேண்டும், அல்லது டின்களில் கொண்டு போவதற்கு பர்மிட்டுகள் தேவையில்லை என்று கருதப்படவேண்டும்.

[14th March 1958

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக குடியானவர்கள் இந்த மோலாஸஸை வைத்துக்கொண்டு கிராமங்களில் சக்கரை உற்பத்தி செய்கிறார்கள். வெல்லம் காய்ச்சுகிறார்கள். பழுப்புச் சர்க்கரை செய்கிறார்கள். அது நல்ல உபயோகமாக இருக்கிறது. இதைத் தவிர வெல்லமும் காய்ச்சுகிறார்கள். இந்த மாதிரியெல்லாம் இந்த மோலாஸஸ் உபயோகப்படுத்தப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்தி நிர்ப்பந்தம் செய்யாமல் அவர்களுக்கு ஒரு பர்மிட்டு கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, யாரும் மேலாஸஸை துஷ்ப்பிரயோகம் செய்யக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விதியைக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது தான் அரசாங்கத்தினுடைய கவலை. இது சம்பந்தமாக இது வரையில் எந்த விதமான சட்டமும் இல்லாததால் அந்தச் சட்டத்தை எங்கே கொண்டு வரலாம் என்பதற்காகத்தான் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. பல இடங்களில் அதை துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள். அதைத் தடுக்கவேண்டும் என்பதற்காக்த்தான் இதில் அதை சேர்க்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கரும்பு ஆலைகள் இருக்கக்கூடிய இடங்களில் மோலாஸஸ் சாதாரணமாகக் கிடைக்கிறது. மோலாஸஸை எருவாக உபயோகப்படுத்தலாம். மாட்டுக்குத் தீனியாக உபயோகப்படுத்தலாம். அது மட்டும் அல்ல அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய இடங்களில் பேபர் தொழிற்சாலையையும் ஆரம்பிக்கலாம். பேபர் தொழிற்சாலையை ஆரம்பிப்பதோடு இன்னொரு உபயோகமும் அதற்கு உண்டு. கரும்பு ஆலைகள் இருக்கக்கூடிய இடங்களில் சக்கரை உற்பத்தி செய்வதற்கு பதிலாக ஏதோ ஒன்றிரண்டு ஆலைகளில் மற்ற ஆலைகளை சர்க்கரை உற்பத்தி செய்வதற்கு விட்டு விட்டு வெல்லம் காய்ச்சுகிறார்கள். இப்பொழுது வெல்லத்திற்கு விலை அதிகமாக இல்லை. அதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். வட ஆற்காடு, சேலம் ஜில்லாக்களில் சில நிபுணர்களை அனுப்பி வைத்து அங்கே இதை வைத்துக் கொண்டு எப்படி பழுப்புச் சர்க்கரை செய்வது என்று ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள். யந்திரங்கள் போன்ற சாதனங்கள் இல்லாமல் சாதாரண முறையில் சர்க்கரைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறார்கள். ஏற்கனவே ஒரு இடத்தில் அப்படிச் செய்து வந்து, அந்த சர்க்கரையை ருசி பார்த்தபோது ரொம்பவும் ருசியாக இருந்தது. கரும்பிலிருந்து ஆலைகள் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரையை விட இதற்கு அதிகப்படியான ருசி இருந்தது. அதை நான் நேரில் பார்த்தேன். ஆகவே அதற்கு நமக்கு நல்ல உபயோகம் இருக்கிறது. ஆனால் சில இடங்களில் இதை வைத்துக்கொண்டு சாராயம் காய்ச்சுகிறார்கள். அதற்கும் இது பயன்படுகிறது. எண்ணைக் கூட ஆட்டலாம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே மோலாஸஸை துஷ்ப்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கு இப்பொழுது சட்டம் இல்லை. அப்படி உபயோகப்படுத்துவதாக பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க சட்டம் இல்லாததால் இந்தச் சட்டத்தின் மூலமாக அதைக் கொண்டு வரப்படுகிறது. அதைக் கண்ட்ரோல் செய்ய வேண்டும். அதற்காகத்தான் 'Control and regulation of molasses' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை யார் வைத்திருந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கும் ரெகுலேட் பண்ணுவதற்கும் பர்மிட் வாங்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவு வைத்திருந்தால் அதற்கு ஒரு லைசென்சு வேண்டுமா என்ற பிரச்னை செலெக்ட் கமிட்டியில் வந்து விவாதிக்கப்பட்டது. தோன்றிய அளவு அனுமதிக்கலாம் என்று யோசனை செய்யப்பட்டது. அந்த அளவை எப்படி நிர்ணயிப்பது என்று முடிவு செய்ய முடியாமல் போனதால் அப்படிச் செய்ய முடியவில்லை. அதனால் அதை விட்டுவிடப்பட்டது. கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சொல்லும்போது விவசாயிகளை பாதிக்காத அளவில் இருக்கவேண்டும் என்று சொன்னார். எருவுக்கு என்று வாங்கினாலும் அதற்கு பர்மிட்டு வாங்கினால் அல்லது லைசென்ஸ் வாங்கினால் எந்தந்த இடங்களில் அவர்கள் வாங்கி இருக்கிறார்களோ அந்தந்த இடங்களில் சென்று பரிசீலனை செய்வதற்குச் சுலபமாக இருக்கும். அதே மாதிரி இதை மாட்டுக்கு போடுவதாயிருந்



14th March 1958] [Sri M. Bhaktavatsalam]

தாலும் அதற்கு லைசென்ஸ் வாங்கிக் கொள்ளலாம். விதிகளில் இது பற்றி கவனிக்கலாம். அம்மாதிரி ஒரு கட்டுப்பாடு இருந்தால் தான் துஷ்ப்பிரயோகம் செய்யாமல் இருப்பதற்கு அனுசரணையாக இருக்கும். அந்த நோக்கத்தோடு தான் இந்த பிரிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : திருச்சி, தென் ஆற்காடு ஜில்லாக்களில் சிறு சிறு குடியானவர்கள் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் கரும்பு சாகுபடி செய்பவர்கள் அவர்களே சர்க்கரை காய்ச்சி எடுக்கிறார்கள். சர்க்கரையிலிருந்து மோலாஸெஸை தனியாக பிரித்து வைக்கிறார்கள். முதல் நாள் காய்ச்சினால் அதிலிருந்து மோலாஸெஸை எடுத்து வைக்கிறார்கள். மறுநாள் தான் அதை குப்பையிலோ வேறு இடத்திலே கொண்டுபோய் போடுவார்கள். அதுவரையில் அது அவர்கள் பொஸெஷனில்தான் இருக்கும். 'கஸ்டடியில்' தான் இருக்கும். செக்ஷன் 6-ஏ-யில் பார்க்கும்போழுது the expression ' or have in his possession any quantity of molasses, is used. Even if a person happens to possess a small quantity, it will amount to an offence under proposed section 6 (a). Therefore how far are the a small land-owners who cultivate and who manufacture cane sugar on a cottage industry basis going to be affected and how are they going to be exempted from the provisions of this Bill?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதை நல்ல உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளுவது என்றாலும் அதற்கும் பெர்மிட் வாங்கிக் கொள்ளலாம். சிறு விவசாயிகளாக இருந்தாலும்கூட கிட்டத்திலேயே உள்ள உள்ளூர் அதிகாரிகளிடம் பெர்மிட் வாங்கிக்கொள்வதற்கு வசதி அளிக்கப்படும். 'மொலாஸெஸை' இப்படிப்பட்ட உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளுபவர்கள் லைசென்ஸ் வாங்குவதில் ஒன்றும் கஷ்டம் இருக்காது. சிறு விவசாயிகள் மொலாஸெஸை வைத்து அங்கே சாராயம் காய்ச்சினால் அதைக் கண்டுபிடித்து கட்டுப்பாடு செய்வதற்குத்தான் இந்த லைசென்ஸ் முறை இந்த பிரிவிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்ப அளவு வைத்துக்கொள்ளுவதற்கு லைசென்ஸ் இல்லாமல் அனுமதிக்கலாமா என்பதைப் பற்றி செலக் கமிட்டியில் பரிசீலனை நடந்தது. ஆனால் இதில் ஒன்றும் முடிவு செய்ய முடியவில்லை. அதனால் அனுபவத்தை ஒட்டி அதற்கு வேண்டியதை விதிகளில் அமைத்துக் கொள்ளலாம் எனறு நினைத்தோம்.

Clause 7 was put and carried.

*Clause 8.*

MR. SPEAKER : The motion is—

' That clause 8 do stand part of the Bill.'

The amendment of the hon. Member Sri T. T. Daniel is out of order.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following amendment :—

' In line 26 *for* the word " months ". *substitute* the word " weeks " and in line 27 *for* the word " five " *substitute* the word " three ".'

The amendment was duly seconded.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not accept the amendment.

[14th March 1958

MR. SPEAKER : The question is—

'In line 26 *for* the word "months" *substitute* the word "weeks" and in line 27 *for* the word "five" *substitute* the word "three".'

The amendment was put and lost.

Clause 8 was put and carried.

Clause 9 was put and carried.

*Clause* 10.

MR. SPEAKER : The motion is—

'That clause 10 do stand part of the Bill.'

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

'In the proposed section 15-c (2) (*a*) after the words "or any intoxicating drug" *insert* the following words "if the quantity is large".'

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சாதாரண கொலை குற்றங்களுக்குக்கூட ஜாமீன் வாங்கிவிடுகிறார்கள். செக்ஷன் 15—ஸியிலே ஏற்றுமதி, இறக்குமதி என்று இருக்கிறது. ஒரு சிறிய பாட்டிலை கொண்டுபோவது கூட பெரிய குற்றமாகக் கருதப்பட்டு, குற்றவாளியை ஜாமீனில் விடக்கூடாது என்ற நிலைமையில் இந்த பிரிவு அமைந்திருக்கிறது. ஒரு அளவுக்கு மேல் வைத்திருந்தால், அந்த குற்றத்திற்கு வேண்டுமானால் ஜாமீன் மறுக்கப்படாலமே ஒழிய மற்ற சமயங்களில் ஜாமீனில் விடுதலை செய்யவேண்டுமென்பது தான் என்னுடைய கோரிக்கை.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following amendment :—

'*Omit* the proposed new section 15-C'.

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : பிரிவு 15(C)-யை விட்டுவிட வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். மதுபானம் வைத்திருந்தாலோ அல்லது விநியோகித்தாலோ அந்தக் குற்றவாளிகளுக்கு ஜாமீன் அனுமதிக்க முடியாது என்ற ஷர்த்து இதிலே இருக்கிறது. இந்த மாதிரி குற்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில், குற்றவாளிகளை ஜாமீனில் விடவேண்டும் என்று ஒரு நோக்கத்தோடு தான் இந்தப் பிரிவையே கைவிடவேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இந்த 15—ஸி மிகவும் ஆட்சேபகரமான பிரிவு. இம்மாதிரி குற்றங்களுக்கு, அதாவது தடைசெய்யப்பட்ட பொருள்களை திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லுவதோ. அவ்வாறு உற்பத்தி செய்வதற்கான கட்டிடங்கள் அமைப்பதோ ஆகிய குற்றங்களுக்காக பிடிப்பட்டவர்கள் ஜாமீனில் வெளிவர முடியாது என்ற ஒரு நிலைமை மிகவும் அபாயகரமானது. இந்த அதிகாரம் ரொம்ப துஷ்பிரயோகத்திற்கு இடமளிக்கும் என்பதை மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டு



14th March 1958] [Sri M. Kalyanasundaram]

மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கொலை குற்றங்களுக்கு, அம்மாதிரி கடுமையான சமூக விரோதமான குற்றங்களுக்கு இம்மாதிரி இருப்பது நியாயம். தோழர் ஸ்ரீ என். கே. பழனிசுவாமி 'சாதாரண கொலை குற்றங்கள்' என்று அஜாக்கிரதையினால் சொன்ன வார்த்தைகளை பெரிதுபடுத்த வேண்டாம். அதனால் அவர்கள் கொலை குற்றம் சாதாரண விஷயம் என்று சொன்னதாக அர்த்தமில்லை. பெரிய கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய அப்பேர்ப்பட்ட குற்றங்களுக்கே இப்பொழுது உயர்நீதி மன்றத்தில் ஜாமீன் வாஙகி விடலாம். இப்பொழுது 'பைலபிள்' 'நான்-பைலபிள்' என்பதில் வித்தியாசம் வரவர குறைந்துக்கொண்டு வருகிறது. சாதாரணமாக பணம் இல்லாதவர்கள் தான் ஜாமீனில் வெளி வர முடியாது. பணம் செலவழிப்பதற்கு வசதி இருக்கக்கூடியவர்கள் ஜாமீனில் வெளிவந்து விடலாம். இதைவிட கடுமையான குற்றங்களுக்குக் கூட ஜாமீன் கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்கும்பொழுது இந்தக் குற்றங்களுக்கு ஜாமீன் மறுப்பது நியாயமல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். இதனால் சர்க்காருக்கு சிறைச் சாலை வசதிகூட இல்லாமல் போய் விடலாம். இதை எதிர்பார்த்து சிறை இலாகாவிற்கு அதிக மான்யம் ஒதுக்கியிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'பைலபிள்', 'நான்-பைலபிள்' இந்த இரண்டிற்கும் வித்தியாசம் அதிகமில்லை என்று நான் சொல்லுகிறேன். கொலை குற்றம் சாதாரணமானது அல்ல என்று சொன்னதைப் பற்றி மகிழ்ச்சி. கொலைக் குற்றத்திற்கு ஜாமீனில் விடுதலை கிடைப்பது போல் இந்தக் குற்றங்களுக்கும் அம்மாதிரி விடுதலை கிடைக்கும் என்பதை உறுதியாக கனம் அங்கத்தினருக்கு கூறுகிறேன். 'பைலபிள்', என்று சொன்னால் ஆடோமாடிக்காக கையெழுத்து வாங்கிக்கொண்டு விட்டு விடுவார்கள். அம்மாதிரி விட்டுவிட்டால் சில கேஸ்களில் 'புரூப்' சரியானபடி கிடைப்பதில்லை 'நான்-பைலபிள்' என்று சொன்னால், நீதிபதியிடம் போய் ஜாமீன் வாங்கிக்கொள்ளலாம். அந்த அளவுக்கு வித்தியாசம் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் 'நான்-பைலபிள்' என்று போடப்பட்டிருக்கிறது. நான் மறுபடியும் சொல்லுகிறேன். கொலை குற்றத்திற்கு எத்தகைய ஜாமீன் கிடைக்குமோ அம்மாதிரி இந்தக் குற்றங்களுக்கும் ஜாமீன் கிடைக்கும். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஒப்புக் கொள்ளுவதற்கு இல்லை.

MR. SPEAKER : The question is—

'In the proposed section 15-C (2) (*a*) *after* the words "or any intoxicating drug" *insert* the following words "if the quantity is large".'

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

'*Delete* the proposed new section 15-C.'

The amendment was put and lost.

Clause 10 was put and carried.

Clauses 11, 12 and 13 were put and carried.

*Clause* 14.

SRI T. T. DANIEL : I am not moving my amendment, Sir.

Clause 14 was put and carried.

Clause 15 was put and carried.

[14th March 1958

SRI N. K. PALANISAMI : மசோதாவில் உள்ள இந்த விதி ஒருவன் குடித்திருக்கிறான் என்று நம்பப்படக்கூடிய நிலையில் இருந்தால் அவனை போலீசார் அரெஸ்ட் செய்வதற்கு உதவும். இந்த விதிப்படி, ஒருவன் குடித்திருந்தாலும் சரி அல்லது குடித்தமாதிரித் தோன்றினாலும் சரி அவனைப் போலீசார் அரெஸ்ட் பண்ண முடியும். இப்போது எவ்வாறு 'ப்ராஸிக்யூஷன்' நடந்துவருகிறது? " Instead of the prosecution proving the case, it is left to the accused to prove his case. " இது ப்ரெஞ்சு முறை. ஆகவே, இந்த விதியினால், ஜனங்கள் அவர்களாகத் தனியாக நியாயத்திற்காகப் போராட வேண்டிய நிலைமை இன்னும் கடுமையாக்கப் பட்டிருக்கிறது. உண்மையாகவே குடித்திருப்பவர்களைத் எங்கே வேண்டுமானாலும் கைது செய்வதை நான் எதிர்க்கவில்லை. மசோதாவில் அனுமதிக்கப்பட்டுள்ள முறையினால் போலீசாருக்கு விரோதமாக உள்ள ஏழை எளிய மக்கள் துன்பப்படக்கூடும்.

மேலும், பெண்கள் குடித்திருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டால், அவர்கள் குடித்திருக்கிறார்களா என்று சோதனை செய்யப்படுவதற்கு பெண் டாக்டர்களிடம் அனுப்பப்படுவதற்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரி அவர்களைக் கைது செய்யும்போதும் ஏன் பெண் டாக்டர்களைக் கொண்டு கைது செய்யக்கூடாது? (சிரிப்பு.) இல்லை, அவர்களை ஏன் பெண் போலீசாரைக் கொண்டு கைது செய்யக்கூடாது? 'ப்ரொஹிபிஷன் ரெய்ட்' என்ற பெயரில், சென்னையிலும் மற்ற இடங்களிலும் பல பெண்கள் பலவந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்ற புகார் கனம் அமைச்சருக்கு வந்திருக்கிறது. அவர்களை ஆண் போலீசார் கைது செய்யக் கூடாது. இந்தக் காரணங்களுக்காக நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். என் திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, (6)-வது உப பிரிவு இருந்தால் ஒருவனுக்கெதிராக இரண்டு வழக்குகள் தொடரலாம். அவன் குடிக்காமல் இருந்தாலும்கூட, அவனுக்கு எதிராக ஒரு வழக்கை எளிதில் போடமுடியும். அதாவது, அவன் வைத்தியப்பரிசோதனைக்கு அழைக்கப்பட்டபோது வர மறுத்தான் என்று ஒரு வழக்குப் போடலாம். இந்தியன் பீனல் கோடின் 186-வது பிரிவைப் பயன்படுத்தி இதைப் போடலாம். அவ்வாறு செய்வதற்கு (6)-வது பிரிவு உதவியாக இருக்கிறது. இது தவிர, (7)-வது (ஜிஜி) உப பிரிவைப் பயன்படுத்தி மதுவிலக்கு சட்டத்தின் கீழ் மற்றொரு வழக்கு போடலாம். பாமரமக்கள் மீது வழக்கைத் தொடர முடியும். அதாவது, டாக்டரின் முன்னிலையில் அவன் வைத்தியப் பரிசோதனை செய்யப்படுவதற்கு மறுத்தான் என்றோ அவன் வைத்தியப் பரிசோதனை செய்யப்படுவதை தடுத்துத்தான் என்றோ அந்த இரண்டாவது வழக்கைப் போடுவதற்கு (7)–வது உப பிரிவு உதவி செய்கிறது. இந்த உப பிரிவுகளில் போலீசாருக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடும். ஆகவே 6-வது, 7-வது உப பிரிவுகளை மசோதாவிலிருந்து நீக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, ஒருவன் குடித்திருக்கிறான் என்று போலீசாரால் சந்தேகிக்கப்பட்டு, டாக்டரிடம் வைத்தியப் பரிசோதனைக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும்போது, தான் பரிசோதனை செய்யப்படுவதற்கு மறுத்தான் என்றால், அப்படி மறுத்ததிலிருந்தே அவன் குடித்திருக்கிறான் என்று தீர்மானித்துக்கொள்வதற்கு (7)-வது உப பிரிவு போலீசாருக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடும். ஆகவே (7)-வது உப பிரிவை நீக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : Sir, what I am going to point out may be a point of order also.



14th March 1958]

MR. SPEAKER : The hon. Member may treat it as such.

SRI S. LAZAR : The present amendment seems to empower the Police officers to produce the accused before a doctor to get a medical certificate. That will amount to compelling the accused to get a document of evidence against himself. Clause (3) of Article 20 of the Constitution of India says that no person accused of offence shall be compelled to be a witness against himself. If I remember correctly, there were three decisions of our own High Court in the year 1956. In that instant, if I remember correctly the accused was asked to give his own thumb-impression for the purpose of using it against him. The High Court held that this could not be done and that it would be against the very spirit of Article 20 of the Constitution. Therefore, I would like to know whether this House will be in order in passing an amendment which will be against the very principle and spirit of the provision of the Constitution in Article 20.

MR. SPEAKER : Is it a new section or is it existing in the old section itself?

SRI S. LAZAR : It is a new section proposed.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may at once submit to you, Sir, that in this case it is not the man who is found to be drunk or whom the Police suspect to be drunk that is compelled to give evidence. It is the doctor that gives evidence.

THE HON. SRI C. SUBRAMANIAM : At that rate, if a person is produced before a doctor for a wound certificate, then it will be against the spirit of the Constitution. I think it is not so absurd as that.

MR. SPEAKER : Is the hon. Member Sri Lazar pressing his point of order?

SRI S. LAZAR : I am pressing it, Sir.

MR. SPEAKER : I rule it out of order. (Laughter.) I rule that the proposed section is in order.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே. 10-40 a.m.
41-A (2) " **Any medical officer before whom such person is produced shall be bound to examine such person and furnish to the officer by whom such person has been produced a certificate as to the state of such person, and if any form has been prescribed, for the purpose in such form,**" என்று 41–ஏ (2) செக்ஷனிலே போடப்பட்டிருக்கிறது. எந்த வைத்திய அதிகாரியிடத்தில் கொண்டுபோய் நிறுத்தினாலும் அவர்கள் பரிசோதனை செய்யவேண்டுமென்று கட்டாயம் இருக்கிறது. சர்க்கார் டாக்டர் இல்லாத சில இடங்கள் இருக்கின்றன. அங்கு போலீஸ்காரகள் குடித்தவர்களைக் கொண்டு போய் பரிசோதனை செய்யச் சொல்லுகிறார்கள். இதற்காக சன்மானம் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தச் சன்மானம் எப்பொழுது அந்த டாக்டருக்கு கிடைக்கிறது என்றால் போலீசாரால் கொண்டு வரப்பட்ட நபர் குடித்திருப்பதாக சர்டிபிகேட் கொடுத்தால்தான். இல்லா

[Sri M. Kalyanasundaram] [14th March 1958

விட்டால் கிடையாது. யாரைப் பரிசோதனைக்குக் கொண்டு வந்தாலும், அந்த நபர் குடித்திருப்பதாக சர்டிபிகேட் கொடுத்து விட்டு, அதற்குறிய பணத்தை வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. டாக்டரிடம் போலீசாரால் கோண்டுவரப்படும் நபர் உண்மையிலேயே குடிக்காத நிலைமையில் இருந்து அந்த நபர் டாக்டரால் பரிசோதனை செய்யப்பட்டால், அப்பொழுது டாக்டருக்குச் சன்மானம் உண்டா, இல்லையா என்பது இதிலிருந்து தெளிவாகவில்லை. சர்க்கார் டாக்டர் இல்லாமல் ரூரல் டிஸ்பென்சரி டாக்டராக இருந்தாலும் கூட அவர் சர்க்கார் அதிகாரி அல்ல. அப்படிப்பட்டவருக்கு இதுவரை கொடுத்து வந்திருந்த பணம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறேன். " **41-A (5) . . . . it shall be lawful to use all means necessary to secure the production and examination of such person.**" என்று போடப்பட்டிருப்பதானது அளவுக்கு மீறிய அதிகாரமாக இருக்கிறது. எது வேண்டுமானுல் செய்யலாம், அது சட்ட பூர்வமாகும் என்ருல் என்ன செய்வது என்று விளக்கப்படவில்லை. பொதுவாக என்ன என்று தெளிவு இல்லாமல் அதிகாரம் கொடுக்கலாமா ? கைது செய்யப்படுபவர் டாக்டரிடம் அழைத்துச் செல்லப்படும்போது வர மறுத்தால் அப்பொழுது நடவடிக்க்கை எடுப்பதற்கு ' இந்தியன் பீனல் கோட் ' இதிலேயே இடம் இருக்கிறது. சர்க்கார் ஊழியராக வேலை செய்வதற்கு இடையூறு செய்தால் அது குற்றம் என்று கருதப்பட்டு அதற்காக தண்டனை விதிக்கப்பட்டு இருக்கிறது. அதன்படி நடவடிக்கை எடுத்து தண்டிக்க முடியும். அப்படியிருக்கும்போது இம்மாதிரி அதிகாரம் கொடுக்க வேண்டியதின் அவசியம் புரியவில்லை. என்ன அடி அடித்தாலும், கை காலை முறித்தாலும், அது சட்டபூர்வமாகிவிடும் **(Lawful)** என்று வியாக்கியானம் செய்யக்கூடிய இவ்வளவு மோசமான முறையிலே இது இருக்கலாமா என்பதை ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னதைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். **41-எ (5)-வது** செக்ஷனை எடுத்துவிட்டால் நலமாக இருக்கும். ஏனென்ருல் **41-எ (6)-வது** செக்ஷனே தெளிவாக இருக்கிறது, அதாவது : " **(6) Resistance to production or refusal to allow examination under this section shall be deemed to be an offence under section 186 of the Indian Penal Code (Central Act XLV of 1860)** " மேற்படி (6) வது செக்ஷனே போதுமான அளவு போலீசாருக்கு வேண்டிய அதிகாரங்களைக் கொடுக்கிறபடியால் **(5)-வது** செக்ஷனை எடுத்துவிடலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் சபாநாயகர் அவர்களே, வைத்தியப் பரிசோதனை என்ருல் குறிப்பிட்ட காலத்திற்குள் பரிசோதனை செய்தால்தான் குற்றத்தை நிரூபிக்க முடியும். நேரம் கழித்துவிட்டால் பரிசோதனை செய்து நிரூபிக்க முடியாது. "**Time is the essence**" என்று சொல்ல வேண்டும். காலம் கடத்த வேண்டும் என்று அந்த முறையில் நடந்துகொண்டால் அதைத் தவிர்ப்பதற்குத்தான் இந்த 5-வது செக்ஷன் இருக்கிறது. அவர்கள் எப்படியும் டாக்டரிடம் கொண்டுபோய் பரீட்சை செய்வதற்கு ஏற்பட்டால், **unlawful restraint** என்ற புகாரோ குற்றமோ போலீசார் மீது வரக்கூடாது என்பதற்காகதத்தான் இந்த ஷரத்து. வேறு ஒன்றும் இல்லை. இதில் மோசம் ஒன்றும் இல்லை. முன்பே இருக்கிறது. குடித்ததாகத் தோன்றினுல் அதற்கு வைத்தியப் பரிசோதனை வேண்டியிருக்கிறது. பரிசோதனை செய்யும் டாக்டர்கள் எல்லோரும் பொய் சர்டிபிகேட் கொடுத்து விடுவார்கள் என்று ஏன் நினைக்க வேண்டும் ? நம்மைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பொய்தான் சொல்வார்கள் என்று நினைப்பது தவறு. டாக்டர்கள் எப்பொழுதும் உள்ளதைத்தான் சொல்வார்களே தவிர, இல்லாததைச் சொல்லமாட்டார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய சர்டிபிகேட்டைப் பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



14th March 1958] [Sri M. Bhaktavatsalam]

பெண் குற்றவாளிகளை பெண் டாக்டர்கள் பரிசோதனை செய்யக்கூடிய முறை இருக்கிறது. பெண்களைப்பற்றி கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் சொன்ஞர்கள். சில மாதங்களுக்கு முன்பாக பெண்களுக்காக இருக்கும் சிறையிலே சென்று நான் பார்த்தபோது அங்கே எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது என்று நான் பெருமையோடு சொன்னேன். இப்பொழுது பாதிக்கு மேலே மதுவிலக்குக் குற்றவாளிகள் வந்திருக்கிருர்கள். எப்படி ஏழைமக்களை ஒரு சிலர் இம்மாதிரி குற்றங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளுகிருர்களோ அதைப் போலவே பெண்களையும் பயன்படுத்துகிருர்கள். சிலர் அதிலே ஈடுபடுகிருர்கள்.

இம்மாதிரி சந்தேகம் ஏற்பட்டால் பெண் டாக்டர்களிடம் அவர்களைக் கொண்டு போவதற்கு பெண் போலீஸ் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது பெண்களுக்கு என்று சிறை தனியாக இருக்கிறது. அது இன்னும் காலியாகவே இருக்கின்றது. பெண்கள் போலீஸ் எல்லாம் வருகிற காலம் இன்னும் வரவில்லை. அது பொது விஷயம். ஆகையால் இந்தத் திருத்தங்களை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஆகவே இந்தத் திருத்தங்கள் எதையும் நான் ஒப்புக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன்.

MR. SPEAKER : The question is—

' In the proposed section 41-A *delete* the words " who has reason to believe that any person has consumed liquor or any intoxicating drug " and *add* a new proviso after 41-A (i), namely, " provided Women Police are deputed to produce the person before medical officer in case the offender is a woman ".'

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

' *Delete* sub-section 41-A (7).'

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

' In the proposed new section 41-A *omit* sub-sections (6) and (7).'

The amendment was put and lost.

Clause 17 was put and carried.

*Clause* 18.

MR. SPEAKER : The motion is—

' That clause 18 do stand part of the Bill.'

The amendment given notice of by Sri Daniel is out of order.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following amendment :—

' In lines 28 and 29 *for* the words " three years " *substitute* the words " six months ".'

The amendment was duly seconded.

[14th March 1958

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendments :—

'*Delete* proposed section 52-A.'

'*Delete* proposed section 52-B.'

'*Delete* proposed section 52-C.'

The amendments were duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

'In the proposed new section 52-B, sub-section 1 (*b*), *omit* the words "or abetment of the commission of" and "or abetment" that occur in the sub-section.'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, உட்பிரிவு 1 (பி)-யில் "**abetment**" என்ற வார்த்தை இருக்கிறது. அந்த வார்த்தையை எப்படி வேண்டுமானாலும் பிரயோகப் படுத்தலாம். சாதாரணமாக ஒரு ஆள் பேரிலே மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் வழக்குப் போட்டால், அந்த ஆளுக்கு நான்கைந்து பேர்கள் உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்லி அவர்கள் பேரிலும் வழக்குப் போடலாம், என்ற முறையில் அந்த செக்ஷன் இடம் தருவதால் "**or abetment of the commission of**" என்ற வார்த்தைகளையும், "**or abetment**" என்ற வார்த்தைகளையும் தயவு செய்து நீக்கவேண்டும் என்று நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை எற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, ஒருவன் குற்றம் செய்தால், அவன் மூன்று ஆண்டுகளுக்கு நன்னடத்தை ஜாமீன் கொடுக்கவேண்டும் என்று செக்ஷன் 52-எ (1) குறிப்பிடுகிறது. இது மிகக் கடுமையானதும், மிகக் கூடுதலான கால வரம்பும் ஆகும். அந்த செக்ஷனில் "மூன்று வருஷங்கள்" என்று இருக்கும் வார்த்தைகளுக்கு பதிலாக "ஆறு மாதங்கள்" என்று போட்டுக்கொள்ள வேண்டும் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஆறு மாத காலத்திற்கு வேண்டிய நன்னடத்தை ஜாமீன் வாங்கினால் போதும் என்பது என்னுடைய திருத்தத்தின் நோக்கம்.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, பரம்பரையாகக் குற்றம் செய்திருந்தால் இம்மாதிரி பாண்டு முறை சரிதான். ஆனால், "குற்றம் செய்வான்" என்ற முறையில் இம்மாதிரி பாண்டு முறையை வைப்பதினால் யார் மீது வேண்டுமானாலும் இந்த முறையைச் சுமத்தக்கூடிய சந்தர்ப்பத்தைத்தான் இது கொடுக்கிறது.

அது மட்டும் அல்ல. யாராவது ஒருவனுக்கு ஜாமீன் கொடுத்தாலும் கூட, அப்படி ஜாமீன் கொடுத்தவனையும் தண்டனைக்கு உட்படுத்த அதிகாரம் கொடுக்கப்படுகிறது. அதைக் கடுமையாக எதிர்க்கவேண்டியிருக்கிறது. பாண்டு எழுதிக்கொடுத்த மூன்று வருஷ காலவரை வரையிலும் வேறு இடத்தில் போகக்கூடாது, வேறு தொழிலும் செய்யக்கூடாது, அப்படித் தொழில் செய்தால் போலீசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இருப்பது மிகவும் கடுமையானது. மூன்று வருஷம் அல்லது ஐந்து வருஷம் கழித்துத் தவறு செய்தால் அதை விசாரித்து, குற்றம் செய்திருப்பதாக "ப்ரூவ்" ஆனால், பழைய குற்றத்திற்கு தண்டனை கொடுப்பது என்பது விநோதமாக இருக்கிறது. க்ரிமினல் சட்டத்தின்கீழ் வரும் குற்றங்களுக்கு விதிக்கப்படும் தண்டனையே போதுமானது. ஐந்து



14th March 1958] [Sri N. K. Palanisami]

வருஷங்களுக்குமுன் நடந்த குற்றங்களுக்கு இப்பொழுது தண்டனை கொடுப்பது என்பது வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே, செக்ஷன்கள் 52, எ,பி,ஸி. இவைகளை நீக்கவேண்டும என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, நன்னடத்தை ஜாமீன்பற்றி கனம் அங்கத்தினர் திரு. கரையாளர் அவர்கள் காலத்தைக் குறைக்கவேண்டும் என்று சொன்னார்கள். மூன்று வருஷங்களுக்குப் பதில் ஆறு மாதங்கள் என்று இருந்தால் போதும் என்று சொல்வது நன்றாக இல்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு கெட்ட நடத்தையாகப் போகலாம் என்று யாரும் நினைக்கமாட்டார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. அண்ணாமலை அவர்கள் "**abetment**" என்ற வார்தைனய எடுத்துவிடவேண்டுமென்று சொன்னார்கள். பின்னாலே இருந்துகொண்டு யாரையாவது குற்றம் செய்யும்படித் தூண்டி அதனால் பலன் அடையக்கூடியவர்கள் அப்படிப் பலன் அடையவிடாமல் தவிர்க்கவேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம். அதனால்தான் "**abetment**" என்ற வார்த்தை சேர்க்கப்பட்டிருக்கிறது.

கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி அவர்கள் உயர்ந்த கருத்துக்களைத் தெரிவித்தார்கள். செக்யுரிடி வாங்குவதைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். **What is stated in this is "whenever any person is convicted of an offence punishable under clause (b) or clause (d) or clause (e) or clause (i) of section 4 (1) and the court convicting him is of opinion that such person habitually commits or attempts to commit, or abets the commission of any such offence the court may at the time of passing sentence on such person, order him to execute a bond . . .** அதனால் நீதிபதிகளைப்பற்றி, அவர்கள் தலையிடக்கூடாதென்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். குறிப்பாக ஒருவன் இந்தக் குற்றத்தைப் பழக்கமாகச் செய்கிறான் என்றால்தான் இந்த ஷரத்து. இந்த மதுவிலக்குத் திட்டத்தைப்பற்றி குறைகூறுகிற பத்திரிகைகூட இந்த ஷரத்தைப்பற்றி மிகவும் நல்லமுறையில் பாராட்டியிருக்கிறது. குற்றம் செய்பவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்து, இனி நல்லமுறையில் நடப்பதாகச் சொன்னால் நன்னடத்தை ஜாமின்பேரில் விடுவது, திரும்பவும் அந்தக் குற்றத்தைச் செய்தான் என்றால் செய்த குற்றத்திற்கும் தண்டனை, முன் குற்றத்திற்கும் தண்டனை என்பதாக விதிப்பதுதான் நியாயம். யோக்கியமாக நடந்துகொள்கிறேன் என்று சொல்லிவிட்டு திரும்பவும் அந்தக் குற்றத்தைச் செய்தால் தண்டனை அநுபவிக்கத்தான் வேண்டும். ஆகையால் இந்தத் திருத்தங்கள் எதையும் நான் ஒப்புக்கொள்வதற்கில்லை.

MR. SPEAKER : The question is—

'In lines 28 and 29 *for* the words "three years" *substitute* the words "six months".'

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

'*Delete* proposed section 52-A'.

'*Delete* proposed section 52-B'.

'*Delete* proposed section 52-C'.

The amendmets were put and lost.

MR. SPEAKER : The question is—

'In the proposed new section 52-B, sub-section 1 (*b*), *omit* the words "or abetment of the commission of" and "or abetment" that occur in the sub-section.'

The amendment was put and lost.

Clause 18 was put and carried.

Clauses 19 to 21 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTHAVATHSALAM : Sir, I move—

'That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) be passed.'

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Prohibition (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 2 of 1958) be passed.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா முக்கியமான மசோதா ஆகும். இதில் கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய திருத்தங்கள் அடங்கியிருக்கிறது. ஆகையால்தான் நேற்றே' இந்த மசோதா முடிந்துவிடும் என்று எதிர்பார்த்ததற்குப் பதிலாக இன்றும் நடந்தது. பல அங்கத்தினர்கள் தங்களுடைய அச்சத்திற்குக் காரணமான விஷயங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தங்கள் கவலைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் சர்க்காரை பொறுத்தமட்டில் கடுமையான சட்டத்தை உருவாக்க வேண்டும், மதுவிலக்குத் திட்டத்தை பூர்ண வெற்றியுடையதாக்கவேண்டும் என்பது தான் கருத்து. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் குறுக்கே நிற்கக்கூடியவர்களை தண்டிக்க வேண்டும். ஏழை எளிய மக்களை அகப்பட்டுக்கொள்ளச் செய்கிறவர்களைத் தண்டிக்கவேண்டும் என்பது தான் நோக்கம். அதற்காக வெகுகாலமாக ஆலோசனை செய்து நல்ல அநுபவம் உடையவர்களின் யோசனைப்படி இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்படுகிறது. அதனால்தான் இங்கே பல அங்கத்தினர்களால் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஏதோ அரசாங்கத்தின் சார்பாக பிடிவாதமாக இருந்து அந்தத் திருத்தங்களை ஒப்புக் கொள்ளவில்லை என்பதல்ல. இதையெல்லாம் நன்கு பரிசீலனை செய்தோம், ஆட்சேபங்கள் தெரிவிக்கப்பட்டன. அதையெல்லாம் கவனித்துப் பரிசீலனை செய்த பிறகே அதற்குமேல் இந்தக் குறைக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் கருத்து. இந்த மசோதா இப்போது சட்டமாகப்படப் போகிறது. இந்தச் சட்டதகை வைத்துக்கொண்டு, கடுமையான தண்டனை அளிக்கும் பிரிவுகளை வைத்துக்கொண்டு மட்டும் மதுவிலக்குத் திட்டத்தை பூர்ணமாக வெற்றிகரமாகச் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். முடியும் என்று நான் கருதவும் இல்லை. மக்களுடைய ஆதரவு வேண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பொதுமக்களுடைய ஆதரவு பூர்ணமாக இருக்கிறது. அதை நான் நன்றாக அறிவேன். அவ்வாறே சட்டமன்றத்தின் ஆதரவும் வேண்டும். எல்லோரும் ஒத்துழைத்தாலன்றி இதை நிறைவேற்றிவிடமுடியாது. ஆனால் எனக்கு ஒரே ஒரு விஷயம்தான் ஆச்சரியமாக இருந்தது. இந்த மசோதாவை ஆறு மாதம் தள்ளிப்போடவேண்டும் என்ற திருத்தத்திற்கு வோட்டு எடுக்கும்படியாகச் செய்துவிட்டார்கள். தண்டனையைக் குறைக்கவேண்டும் என்பதற்குச் சொல்லியிருந்தாலும என்னால் புரிந்துகொள்ள முடியும். மக்களிடத்திலும் போய்ச் சொல்லலாம். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி நடத்தியபோது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 40 பேர் இருந்தார்கள். அப்போது இவர்கள் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்வார்கள். வெளியில் போய் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்பதாக சபையில் சொன்னதாகச்



சொல்லிக்கொள்ளலாம். அப்படிச் சொல்லிக்கொள்வதற்குக்கூட இதில் இடமில்லை. ஆறு மாதம் தள்ளிப்போடவேண்டும் என்பதன் பொருள் என் சிற்றறிவுக்குப் புரியவில்லை. பேரறிவுக்குப் புலப்பட்டு இருக்கலாம். இந்தத் திட்டம் வேண்டும், இது அவசியமானது என்பதை ஒப்புக் கொள்கிறபோது இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக எப்படி நிறைவேற்று வது என்பதுதான் கவனிக்கவேண்டிய விஷயம். அதனால்தான் அந்தத் திருத்தத்திற்கு அரசாங்கம் எதிராக இருந்தது. போலீஸ்காரர் கள் அத்துமீறி பல நடவடிக்கைகளை எடுததுக் கொள்வார்கள் என்றார்கள். அப்படி இருந்தால் அதை என் கவனத்துக்குக் கொண்டுவந்து அந்த மாதிரியான அத்துமீறிய செய்கைகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள முடியும். நேரடியாக வேறு நடவடிக்கை அதற்கு எடுக்கலாம். நானும் கவனம் செலுத்துகிறேன். ஆகவே இப்போது இந்தச் சட்டத்தை எல்லா அங்கத்தினர்களும் ஏற்றுக்கொண்டு மதுவிலக்குத் திட்டமானது நமது ராஜ்யத்தில் பூர்ணமாக நிறைவேற்றப்படுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Sir, it is excellent to have a giant strength, but it is tyrannous to use it like a giant. But yet we have to consider that this is an ameliorative measure for the benefit of mankind and particularly in this State for the benefit of the poorer classes, Prohibition has been introduced. We have had a report in 1948 on the working of the Prohibition Act, and another report; the enforcement of Prohibition Act was changed from the former Excise Department to the Police Department. After that in 1954—after the change over had been experienced for about six years—Sri S. V. Ramamurthy Committee was appointed by Government. The Government got his report also. Though he has also reported that prohibition has not been a total success, it has been successful on a very great measure. But yet we find that increased punishment is necessary for enforcing this good measure. Even from last year, many hon. Members of this House have been agitating that we must amend the law with increased punishment. It is true that a departure has been made from the general rule of minimum punishment in a few cases. In the interest of the good working of this Act, minimum punishment has been provided. At the same time, with reference to the proverb that I cited in the beginning, magistrates are all judicial officers now. They have been separated from the Executive and we do hope that magistrates will exercise their discretion and apply this Act in as lenient a way as possible. But they should not forget that this minimum punishment and the excessive punishments have been provided for the purposes of the successful working of this Act. Several poor families have been benefited and several women are happier. As has already been illustrated by the hon. Lady Member the fact that several women are benefited by this great measure cannot be gainsaid. Those who are addicted to the drink evil and the middle class people who are now helping the illicit distillation will be properly dealt with. 11-00 a.m.

I desire to draw attention to a point referred by hon. Members that in some cases the Police are not behaving properly. If only policemen who are found drunk are summarily dismissed and some severe punishment is meted out to some of them who admit the crime

it will illustrate to the entire police force that the Hon. the Home Minister is intent upon the successful working of the Prohibition Act. I therefore appeal that stricter steps may be taken to impress upon the police officers that they should not in any way commit any offence. In a place where there was only one licensed toddy shop, now there are 10 or more. The police are collecting "mamools" which is referred to in the Ramamurthy Committee Report. It is hoped that it will no longer happen. This stigma on public administration when it happens will be the responsibility of the Police. I appeal to the hon. Members in this House and to every public citizen to co-operate with the Government—with the officers—to work this Act successfully. Without public co-operation, no ameliorative measure can work successfully and that is ever and anon impressed upon the public. But people do not realize their responsibility and are really abetting the commission of such crimes and in some cases they go away as if they do not notice. That is why in the proposed amendment it is made the duty of the public and of the Members of the Prohibition Committee which would be appointed that they should bring to the notice of the police the commission of such offences. The police are also bound to take action in the matter. People are arrested, searches are made, money is collected and they are released. That is the complaint which I have found in the original report. This is continuing even to-day. The Government may therefore take very serious steps against such officers who are preventing the successful working of the Act. I appeal to the hon. Members of this House to accept the Bill without any more division.

11.05 a.m. **SRI K. ANBAZHAGAN**: அவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திருத்தச் சட்டத்தை இங்கே இந்த அவையில் இப்பொழுது கொண்டு வந்து நிறைவேற்றுகிற கட்டத்தில் நிறுத்தியிருக்கிறார்கள். உண்மையாகவே இந்தச் சட்டத்தைப் பற்றிய கவனம் ஏற்படுகிறபோது, இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட வேண்டிய நிலைமைக்கு ஆளாகிற குற்றவாளிகளின் சூழ்நிலையை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. அக்குற்றத்திற்கு ஆளாகிறவர்கள், பரம்பரைக் குற்றவாளிகள் என்று கருதப்படுகிறவர்கள் அல்ல. ஏனெனில், பரம்பரைக் குற்றவாளிகள் என்று கருதப்படுவது, ஒரு சமுதாயத்திற்கு இழுக்கே தவிர அது நியாயமாகாது என்ற வாதம் இந்நாட்டு அரசியலிலேயே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்தக் குற்றத்திற்கு ஆளாகிறவர்கள், இச்சமுதாயத்தில் அப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள் நீண்ட நாட்களாக ஊறிப்போன ஒரு கெட்ட மனப்பான்மையால் ஏற்பட்டு வருகிற ஒரு குற்றமாகும். எனவே, அப்படிப்பட்ட பழக்க வழக்கங்களினால் ஏற்பட்ட குற்றங்களில் இருந்து இந்த சமுதாயத்தை திருப்புவதற்கான சிறந்த வழி அவர்களுடைய மனதை திருத்துவதே தவிர அவர்களை கடுமையாக தண்டிப்பதல்ல என்பதை இந்த நாட்டை ஆளுகிற, அரசாங்கத்தில் இருக்கிற கட்சியாளர்கள் பல காலத்திற்கு முன்னாலேயே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சி நாட்டை ஆண்ட நேரத்தில் பலதடவை காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்குத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டதாகவும், அவர்கள் அதை ஒத்தி போட்டதையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்பொழுதே காங்கிரஸ்காரர்களுக்கு மதுவிலக்கின் அவசியம் தெரிந்திருக்கிறது என்பதை நான் உணர்ந்து அதற்காக காங்கிரஸை பாராட்டுவேன். ஆனால் இன்றிருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களுக்கு குதிரைப்பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று எதி-



ர்கட்சிகாரர்கள் சொல்லும்போது அதை உணராமல் காங்கிரஸ்காரர்கள் இருப்பது போல்தான் அன்றும் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் இருந்திருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். எப்படியும் இந்தக் கருத்து எடுத்துச் சொல்லப்பட்டு, ஏறத்தாழ 1937ம் ஆண்டில் சட்டமாக கொண்டுவரப்பட்டதாகும், இந்த மதுவிலக்குச் சட்டம். இன்றைய தினம் வரையில் அது, ஓரளவுக்குதான் நிறைவேறியிருக்கிறதே தவிர முழு அளவு வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு பெறாமல் இருப்பதைப் பார்க்கும்போது சட்டத்தைக் கடுமையாக ஆக்குவதினாலும், பொது மக்களை அதிகமாக பாதிக்கக் கூடியதாக இருப்பதாலும் நேற்றையதினம், எதிர்க்கட்சி சார்ந்தவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை ஒரு ஆறு மாதத்திற்கு ஒத்தி வைத்து, நல்ல முறையில் அதுபற்றி பிரசாரம் செய்த பிறகு கொண்டு வரலாம் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்தச் சட்டம் மிக்க கடுமையாக இருப்பதை எளிய மக்கள் உணரமாட்டார்கள். சட்டமன்றத்தில் இருப்பவர்களும், படித்தவர்களும் வேண்டுமானால் உணர்வார்களாயிருக்கலாம். இந்தச் சட்டத்தின் தன்மை பற்றியும், கடுமையான தண்டனை பற்றியும், பொதுமக்கள் தவறான வழியில் செல்லாமல் இருக்கவேண்டுமானால் இச்சட்டத்தைப் பற்றி நாட்டு மக்களுக்கு போதிக்க வேண்டும். மது குடிக்க கூடாது என்று விளக்குவது ஒன்று, மதுவிற்கு ஆட்பட்டு அதனால் தவறான காரியத்தில் ஈடுபடக் கூடாது என்று எடுத்துச் சொல்வது ஒன்று, சட்டம் கடுமையாக இருக்கிறது ; ஆகவே நீங்கள் இந்த தவறான காரியத்தை செய்துவிட்டு ஆபத்திற்கு ஆளாகாதீர்கள் என்று விளக்குவது மற்றொன்று அந்த முறையில் அரசாங்கம் கடுமையான சட்டம் கொண்டுவரும்போது அதை மக்களுக்கு விளக்க கடமைப் பட்டிருக்கிறது. அப்படி விளக்கினால் தான் அதன் கஷ்டங்களை, நஷ்டங்களை தெரிந்துகொண்டு மக்கள் திருந்த முடியும். ஏனெனில் இக்குற்றம், சாயந்திரத்தில் தோன்றுகிற எண்ணத்தில், மாலை ஐந்து அல்லது ஆறு மணிக்கு செய்துவிடுகிற குற்றம் அல்ல. இதை பலர் தொழிலாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் இந்த நாட்டிலுள்ள வறுமைச் சூழ்நிலையும், எப்படி வயிற்றை நிரப்பிக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையற்ற தன்மையுந்தான். ஆகவே, இந்தச் சட்டம் கொண்டுவரும்போது, அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால் பொதுமக்களிடையே இதுபற்றி பிரசாரம் செய்தாக வேண்டும். மற்றொன்று சொல்வேன், கடுமையான சட்டங்கள் நிறைவேற்றும்போது அதை நிறைவேற்றுவதில் பொறுப்பு அதிகம் இருக்க வேண்டும். சட்டம் எளிதாக இருக்குமானால், அதை நிறைவேற்றுவதில் ஏதாவது தவறு ஏற்படுமானால் அதை கொஞ்சம் சகித்துக் கொள்ளலாம். ஆனால் கடுமையான சட்டங்கள் நிறைவேற்றும்போது, அதிகப் பொறுப்பு ஆளும் கட்சியினருக்கும் அந்தத் துறையில் இருக்கும் அமைச்சருக்கும் ஏற்படுகிறது. ஆனால் நல்லவேளையாக இந்த மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ள அமைச்சர் அவர்களே போலீஸ் அமைச்சராகவும் இருக்கிறார்கள். இந்தச் சட்டப்படி குற்றம் செய்கிறவர்களும், அதைப்பற்றி விசாரணைசெய்து முடிவு சொல்கிற நீதிபதியும், இவர்கள் இரண்டு பேர்களையும் சந்திக்கவைக்கிற போலீஸ்காரர்களும், ஆக இம்மூன்று பேர்களில் இப்படிப்பட்ட குற்றத்தை வளர்க்கவோ அல்லது தடுக்கவோ கூடிய வாய்ப்பு போலீஸினிடம்தான் இருக்கிறது. இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில், இதை போலீஸ் சட்டம் என்று கூறலாம். அதன் நிலைமையை மட்டும் பார்க்கின்றபோது போலீஸ் சட்டம் என்று சொன்னால், இது நன்கு வெற்றிபெறுவது போலீஸின் கையில்தான் இருக்கிறது. இது, எவ்வளவு கடுமையாக இருந்தபோதிலும், இதை பயனற்றதாக ஆக்கவேண்டுமானால் அதுவும் போலீஸின் கையில்தான் இருக்கிறது.

ஏனென்றால் இங்கே நாட்டிலே சூழ்நிலையில் எனக்கு முன்பு பேசிய சில காங்கிரஸ் நண்பர்கள் எடுத்துச் சொன்னதுபோல் போலீஸ்காரர்களும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். இம்மாதிரி இதில் உடந்தையாக இருக்கக்கூடிய போலீஸ்காரர்களில் பெரும்பாலோர் தங்களை தண்டிக்கக் கூடிய வாய்ப்பிலிருந்து தப்பித்துகொள்ளுகிறார்கள். சாதாரணமாக பெருங்குற்றங்களையும் போலீஸ்காரர்கள் செய்கிற

[Sri K. Anbazhagan] [14th March 1958

பொழுது, அவை கடைசியில் நீதியாகிவிடுகிறது. ஆகவே நான் இதில் வலியுறுத்தி கேட்டுக்கொள்வது, இந்த சட்டத்தை கொண்டு வருவதற்கு எவ்வளவு ஆர்வம் காட்டப்படுகிறதோ அந்த அளவிற்கு அதிக பொறுப்பும் இதை கையாளுகிறபொழுது, போலீஸ்காரர்கள் கைக் கொள்ள வேண்டும். அதற்கு தகுந்தவாறு போலீஸ் அதிகாரத்தை ஒழுங்குபடுத்தவேண்டும். நான் வருத்தத்தோடு சொல்லுவேன் ; வேலியே பயிரை மேய்கிறது என்கிற கதையைப்போல் யார் குற்றம் செய்தாலும் சரி, யார் தவறு செய்தாலும் சரி, இவ்விதம் தவறுகள் செய்வதற்கு போலீஸ்காரர்கள் தூண்டுதலாக இருக்கக்கூடாது. பழங்காலத்து கதைகளை நாம் கேட்டிருக்கிறோம். ஒரு சிறு உயிருக்கு சேதம் நேர்ந்தால், அதற்கு காரணமாயிருந்த உயிரை போக்குவது என்றுள்ள நீதியை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்துவந்திருக்கிறது. அந்த காரணத்தினால்தான் கன்றின் மீது குதிரையின் வேகத்தினால் தனது தேரை ஏற்றினதற்காக மன்னன் தனது மகனை தேர் காலில் கிடத்த வேண்டியிருந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குற்றம் செய்வதற்கு எது காரணமாக இருக்கிறதோ அதை செய்யாமல் இருப்பதற்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் கடினமான சட்டம் வருகின்றபொழுது குற்றம் சாட்டுகின்றவர்களுக்கு அதிகமான பொறுப்பு இருக்கவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவன்தான் குற்றவாளி அல்ல என்று சொல்லவேண்டிய நிலைமையை ஏற்படுத்தக்கூடாது. சட்டம் எளிதாக இருந்தால் குற்றம் சாட்டப்பட்டவன் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும் என்று சொல்லலாம். ஆனால் குற்றம் கடுமையாக, கடுமையாக குற்றம் சாட்டுகின்றவர்களுக்குத்தான் அதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு அதிகமாக இருக்கவேண்டும். எனவே இந்த சட்டத்தை கொண்டுவருகின்றபொழுது, ஜனநாயகம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், இது நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால் இவை களில் அதிக கவனம் செலுத்தியாக வேண்டும். ஆகவேதான் ஆறு மாத காலத்திற்கு இதை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டது. ஆனால் அமைச்சர் அவர்கள் அவர்களுக்கே உரிய காரணத்திற்காக இதை ஏற்றுகொள்ள முடியாது என்று தெரிவித்துவிட்டார். இன்றைய தினம் இந்த கடுமையான சட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது, ஏழை மக்கள் துன்பப்படாமல் வாழ்ந்து வருவதற்குள்ள ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திகொள்வதற்கு, போலீஸ் நிர்வாகத்தை நல்ல முறையில் திருத்தியாக வேண்டும். மற்றொன்றையும் சொல்வேன், செல்வாக்கு பெற்றவர்கள் மேலிடத்திலுள்ளவர்கள் குற்றம் செய்யும்பொழுது தண்டனை பெறுவதிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி நடத்தியபோது இவ்விதம் நடந்திருக்கக்கூடும். எனக்கு அதில் அனுபவமில்லை. நான் ஜஸ்டீஸ் கட்சியில் இருந்ததில்லை, எனக்கு வயது குறைவாக இருந்ததால் இவைகளைப்பற்றி எனக்கு அதிகமாக தெரி யாது. அன்றைக்கு ஜஸ்டீஸ் கட்சியில் இருந்தவர்கள் இன்றைக்கு காங்கி ரஸ் கட்சியில் அனேகம் பேர்கள் இருக்கிறார்கள். அன்றைக்கு எல்லாம் பெரியவர்களுக்கு அந்த கட்சி உடந்தையாக இருந்திருக்கலாம். இன் றைக்கு காங்கிரஸ் கட்சியும் அந்த நிலையில் தான் போய்க்கொண்டிருக்கி றது என்பதை நான் உணருகிறேன். செல்வாக்குப் பெற்றவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தவறுகள் செய்வார்களானால் அவர்களையும் நீதி மன்றத்தில் கொண்டுவந்து தண்டிக்கவேண்டும் என்பதை ஆளும் கட்சி உணரவேண்டும். இதில் கட்சி பற்று இல்லாமல் குற்றம் செய்தவர்களை தண்டிக்கக்கூடிய நிலைமையில், சட்டங்களை கொண்டுவந்தால் அது பொது மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கும். சட்டத்தை எங்கு சரியாக நிறைவேற்ற முடியவில்லையோ, அங்கு குற்றவாளிகள் தோன்றிக் கொண்டேதான் இருப்பார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த சட்டத்தை கொண்டு வருகிற இந்த சமயத்தில் இதை நல்ல முறையில் கவனித்து ஆவனவற்றை செய்து, தீமையில்லாது நன்மையை விளைவிக்கக் கூடிய முறையில் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சட்டத்தினுடைய நோக்கத்தை ஏற்றுக்கொள்ளுகிறது, ஆனால் நிறைவேற்றுகின்ற முறையில்



14th March 1958] [Sri K. Anbazhagan]

இருக்கின்ற சில மாறுபாடுகளை செயல் முறையில் கொண்டுவருகின்றபோது கவனித்துக்கொள்வதாக போலீஸ் அமைச்சர் அவர்கள் உறுதி தரவேண் டும் என்று கேட்டுக்கொண்டு இதில் ஏற்பட்டிருக்கிற குறைப்பாடுகளை நீக்கி விட்டு இதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri A. R. SUBBIAH MUDALIAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவை ஆளும் கட்சியை சேர்ந்த நான் மிக பெருமை யுடன் வரவேற்றுக்கொள்கிறேன். எதிர்கட்சிகள் இதை ஆறு மாதங்க ளுக்கு ஒத்திவைக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஏனென்றால் ஆளும் கட்சிக்கு எங்கே மதிப்பு வந்துவிடப் போகிறதோ, அல்லது நிர்வாகம் எங்கே நல்ல நிலைமையில் வந்துவிடுமோ என்கிற வருத்தமே தவிர வேறு ஒரு காரணமும் இல்லை. (இச்சமயத்தில் டெப்யூட்டி ஸ்பீக்கர் தலைமை வகித்தார்.) இந்த சட்டத்தினால் ஏழை எளியவர்களுக்கு நல்ல நன்மை ஏற்பட்டுவிடுமோ என்றும் நினைத்துதான் இதை ஒத்திப்போட நினைப்பதாக தெரிகிறது. சட்டம் வந்ததினால் கிராமப் பகுதிகளில் நான் அறிந்திருக்கிறேன், எவ்வளவோ ஹரிஜன குடும்பங்கள் இன்றைக்கு நல்ல நிலைமையில் இருந்து வருகின்றன என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியும். சட்டம் வருவதற்கு முன் 10 வருட கணக்கை எடுத்துப் பார்த் தால் ஹரிஜன மக்கள் எவ்வளவோ இந்த மதுவினால் கஷ்டப்பட்டிருக்கி றார்கள். இன்றைக்கு இந்த சட்டம் வந்தபிறகு ஹரிஜன குடும்பங்களில் ஆறாவது பாரம் வரை படித்த பிள்ளைகள் அதிகமாக பார்க்க முடிகிறது. இதனால் ஏழை ஹரிஜன மக்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு இருந்தும் இன்னும் சில இடங்களில் மறைமுகமான குடிப் பழக்கம் இருந்து கொண்டுதான் வருகிறது. அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியை எடுத்துப்பார்த்தால் இன்றைக்கு ஒவ்வொரு ஹரிஜன குடும்பங்களிலும் ரொக்கத்தொகை இருக்கக்கூடிய அளவில் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. இந்த மதுவிலக்கை சரியாக அமுல் நடத்துவதற்கு அதிகமான தண்டனை அவசியம் என்பதை நாம் உணருகின்றோம். இந்த மதுவிலக்கு சட்டத்தை இன்றைக்கு ஏழை எளியவர்கள் மீறவில்லை. நாட்டிலுள்ள படித்தவர்களும் நடுத்தரத்திலுள்ளவர்களும்தான் இதற்கு தூண்டுக்கோலாக இருந்துகொண்டு இதை ஒரு காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் முறையில் நடத்தி வருகிறார்கள். இதற்கு கடும் தண்டனை கொடுத் தால்தான் மதுவிலக்கை சரியாக அமல் நடத்த முடியும். இது தவிர ட்ரக் ஆக்ட் முறையில் அனலைஸ் செய்யப்பட்டு டிங்சர் என்ற ஒருவகை மருந்துகள் கடைகளிலும் விற்றுவருகிறார்கள். இந்த ட்ரக் ஆக்ட் நம் முடைய கையில் இல்லை. மத்திய சர்க்காருடைய கையில் இருக்கிறது. இந்த சட்டத்தை வைத்துக்கொண்டு ஏதோ விதத்தில் அனலைஸ் பண்ணி மது சம்மந்தப்பட்டது அல்ல என்று சொல்லி இந்த டிங்சர்கள் விற்று வருகிறார்கள். இதைத்தான் ஏழைகள் வாங்குகிறார்கள். இதை வெளிப் படையாகவே ஜனங்கள் வாங்குகிறார்கள். எட்டு அணா, பன்னிரண்டு அணா என்று விலை கொடுத்து இந்த டிங்சரை வாங்கி குடிக்கிறார்கள். இதனால் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது. இதை அருந்துபவர்கள் இன்றைக்கு ஜாஸ்தியாக இருந்துகொண்டு வருகிறார்கள். சில மாகாணங்களில் மது விலக்கு இல்லாமல் இருக்கிறது. அதனால் மத்திய சர்க்கார் இந்த ட்ரக் ஆக்ட்டை வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே மதுவிலக்கு எந்தெந்த மாகாணங்களில் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்தந்த மாகாண சர்க்கார் களுக்கு இந்த ட்ரக் ஆக்டை மத்திய சர்க்கார் ஒப்படைத்துவிட வேண்டும். அப்போதுதான் மதுவிலக்கு சரியான முறையில் அமுல் நடத்த முடியும். நாட்டிலுள்ள மக்களில் முக்கால்வாசி பேர்கள் இந்த டிங்சர் (மதுவை) உபயோகிப்பதால் கஷ்டப்படுகிறார்கள். இதனால் குடும்பமே பாழாகிவிடுகிறது. ஆகவே இந்த ட்ரக் கண்ட்ரோலை அந்தந்த மாகாண சர்க்கார் பொறுப்பில் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை கொண்டுவருவதில் ஆளும் கட்சியை சேர்ந்த நான் பெருமைப்படுவதோடு, இந்த மசோதாவை ஆதரித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

11-15 a.m.

11-20 a.m.

[14th March 1958

* **Sri A. R. MARIMUTHU** : கனம் சபாநாயகர் அவர் களே, மது விலக்கு சம்பந்தமாக, இந்தச் சபையிலேயுள்ள யாருக்கும் எந்த விதமான ஆட்சேப மனப் பான்மை இல்லை என்பதை இரண்டு நாட்களாக நடக்கும் விவாதத்திலிருந்து அறிந்துகொண்டிருக்கிறோம். சர்க் காரிலே மது விலக்குத் திருத்த மசோதாவைக் கொண்டுவரும்போது, எதிர்க் கட்சியினர் பல திருத்தங்களைக் கொடுத்தார்கள் என்றால், அவர்கள் மது விலக்குத் திட்டத்தை எதிர்த்தார்கள் என்று அர்த்தமல்ல. ஆகவே சர்க்காரினால் எதிர்த் தரப்பிலிருந்து கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது, இந்த மசோதா நிறைவேறக் கூடிய நிலையில் இருக்கிறது. எதிர்க் கட்சியினருடைய அபிப்பிராயமெல்லாம், இந்தச் சட்டம் கடுமையாக்கப் படுவதன் மூலம், நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாதே என்றுதானேயொழிய, வேறு ஒன்றுமல்ல. ஏற்கெனவேயுள்ள சட்டத் தின் மூலம் மது விலக்கு நல்ல முறையில் அமுலாக்க முடியும். அதனால் நல்ல பலன் அடைய முடியும். ஆனால் சட்டத்தை அமுல் நடத்துவதில் தான் குறை இருக்கிறது. கடுமையாக இல்லாதது குறையில்லை என்பதை உணர்ந்துதான் கையாளுவதில் குறையிருக்கிறது, நல்ல முறையில் கை யாண்டால் இந்த திட்டத்தை நல்ல முறையில் வெற்றி பெறச் செய்ய முடியும் என்றுதான் சில திருத்தங்களைக் கொடுத்தார்களே தவிர, வேறு ஒன்றுமல்ல.

அரசாங்கம் இன்றைக்கு இருக்கிற நிலையில் மது விலக்குக் கொண்டு வந்ததன் மூலமாக என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தால், ஒரு பக்கத்தில் மது விலக்கு நன்மையாக இருக்கிறது, மறு பக்கத்தில் சட்டத் திற்குப் புறம்பாக சாராயம் காய்ச்சுவது போன்ற பல சமூகக் கேடான வேலை செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. இப்போது உள்ள சட்டத்தின் கீழ் நட வடிக்கை எடுப்பதில் குறைந்த பட்ச தண்டனை என்று இருப்பதால்தான் தக்க நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று சொல்வது உண்மையல்ல என்பதைத்தான் நான் இப்போது சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆகவே, இன்றைக்கு என்ன இருக்கிறது. எங்கு பார்த்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் நடைபெறுகிறது. இப்போது இருக்கும் சட்டத்தை அமுல் நடத்துவதிலே பல தவறுகள் இருக்கின்றன. போலீஸார்களே இந்தத் தவறான செயல்களைச் செய்ய முற்படுகிறார்கள். அவர்களே ஆதர வாக இருக்கிறார்கள் என்று பல புகார்கள் வருகின்றன. அநேக இடங் களில், அநேக கிராமங்களில் சாராயம் காய்ச்சுகின்றவர்களுக்கும் இந்தப் போலீஸ்காரர்களுக்கும் ஏதோ ஒரு ஒப்பந்தம் இருப்பதாகக் கூடக் கேள்விப் படுகிறோம். அதோடு கூட போலீஸ்காரர்கள் இத்தனை கேஸ் ஒரு மாதத்திற்குப் போடவேண்டும் என்று ஒரு விதி இருப்பதால், இந்தப் போலீஸ்காரர்களை தாராளமாக கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு அனுமதி கொடுப் பதோடு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒவ்வொரு மாதத்திற்கும் எத்தனை கேஸ் வரவேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் வைத்துக்கொண்டு, அந்த ஒப்பந்தத்தின் பேரில் கேஸ் போடுவதாகக் கூட கேள்விப் படுகிறோம். ஒரு கதையிலே கேள்விப் பட்டிருக்கிறோம். பகாசுரன் என்று ஒருவன் இருந் தான். அவனுக்கு நாள் தோறும் ஒவ்வொரு வீட்டிலிருந்து ஆகாரத் திற்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படவேண்டும் என்று இருந்தது என்று கேள்விப் பட்டிருக்கிறோம். அதே போல இத்தனை கேஸ் வர வேண்டுமென்று வகுத்துக் கொண்டிருப்பதாகக் கேள்வி. இதையெல்லாம் பார்க்கும்போது சர்க்கார் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது இந்த நாட்டுக்கு தீமை உண்டாக்க என்று கூறவில்லை, மது விலக்கு நல்ல முறையில் வெற்றிகரமாக ஆக்கப்படவேண்டுமென்ற எண்ணத்தால்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இதன் மூலம் நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றி விட்டோம், அதனால் மது விலக்கு குற்றங்கள் குறைந்து விடும் என்று எண்ணிவிடாமல், நிர்வாகத் திலுள்ள குறையை போக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.



14th March 1958]

* **Sri A. VEDARATHNAM** : கனம் உபசபாநாயகர் அவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டம் இந்த மாகாணத்தில் 20 ஆண்டுகளுக்கு அதிக மாக அமுலில் இருந்த போதிலும், அதைத் தீவிரமாக நடத்தவேண்டு மென்று 10 ஆண்டுகளுக்கு முன் ஒரு மதுவிலக்கு விசாரணைக் கமிட்டி ஒன்றை இந்தச் சபை அமைத்து, அதன் மூலமாகப் பல ஜில்லாக்களில் சென்று அந்தச் சட்டத்தை தீவிரமாக எப்படி நடத்தவேண்டும் என்று அவர் கள் அறிந்து, காலம் சென்ற ஸ்ரீ நாச்சியப்ப கௌண்டர் அவர்கள் தலைமையில் அந்தக் கமிட்டி ஒரு நல்ல அழகிய ரிப்போர்டைச் சமர்ப்பித்திரு ந்தபோதிலும் கூட 10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த ரிப்போர்டை இன்றைய தினம் செயலுக்குக் கொண்டு வர முன்வந்த கனம் அமைச்சர் அவர்களை நான் மனமாறப் பாராட்டுகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். 11-24 a.m.

இந்தச் சட்டத்தைத் திருத்துவதோடு மாத்திரமல்லாமல், இப்போது அவர்கள் இந்தப் பொருப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இந்த மாகாணத்தில் மது விலக்குக் குற்றங்கள் வெகுவாகக் குறைந்து, இந்தச் சட்டம் மிக நல்ல முறையில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டு, அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். இந்த சென்னை நகரத்திலே ரொம்ப மோசமாக மது விலக்கு குற்றங்கள் நடைபெறுகின்றன என்று சில காலத்திற்கு முன் இருந்தது. அதற்கு வெகு தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குற்றங்கள் அடக்கப்பட்டு, நல்ல முறையில் அந்தச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது என்ற விஷயத்தை இங்கே மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறேன். அதற்காக மந்திரி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற அக்கரையை வரவேற்கிறேன். அவர்களைப் பாராட்டுகிறேன்.

இந்தச் சட்டத்தை 6 மாத காலத்திற்கு தள்ளி வைக்க வேண்டும். அவர்களை மாற்றுவதற்காக பிரசாரம் செய்யவேண்டும்—உபதேசம் செய்ய வேண்டும்—என்று கனம் அன்பழகன் போன்ற அறிஞர்கள் கூறியது ஆச் சரியமாக இருந்தது. மற்ற எந்த விஷயத்தைப் பற்றி அவர்களிடத்திலே நல்ல சன்மார்க்க உபதேசம் செய்தாலும் ஏறும். சன்மார்க்க உப தேசம் செய்து அவர்கள் மனதை மாற்ற முடியும். ஆனால் இந்த மதுப் பழக்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு எந்த விதமான சன்மார்க்க உபதேசமும் ஏறாது என்ற விஷயத்தை, 2,000 ஆண்டுகளுக்கு முன்னேயே நம்முடைய வள்ளுவர் பெருமான். . .

**Sri T. S. RAMASWAMY PILLAI** : ஆன் எ பாயிண்ட் ஆப் இன் பர்மேஷன், அந்த ரிப்போர்ட்டிலேயுள்ள சிபாரிசுகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கூறினார்கள். அதிலே பெர்மிட் பற்றி அவர்கள் என்ன சிபாரிசு கொடுத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றினார்களா ? அதை நிறைவேற்றவில்லை என்பதைக் கனம் அங்கத்தினருடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**Sri A. VEDARATHNAM** : எல்லாம் என்று சொல்லியிருந்தால் அநேகமாக எல்லாம் என்றுதான் அர்த்தமே தவிர, அந்த ரிப்போர்ட்டை அப்படியே அங்கீகாரம் செய்யவேண்டும் என்ற அவசியமில்லை. அரசாங்கம் அதிலே எது உசிதம் என்று தோன்றியதோ, எது சரி என்று தோன்றி யதோ, அவைகளை எல்லாம் அநேகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு விட்டுப் போயிருக்கலாம். 10 ஆண்டுகளுக்கு முன் சமர்ப் பித்த ரிப்போர்ட், இப்போது இந்த கால மாறுபாட்டினால், சில திருத்தங்கள் அவசியமில்லாமல் போயிருக்கலாம், அவைகளை விட்டு விடுவதில் தவறில்லை என்று நான் கூறுவேன்.

எனவே, இந்த 6 மாத காலம் பிரசாரம் செய்தவதற்கு வேண்டும் என்று சொல்லும்போது, இந்த 20 ஆண்டுகளிலே செய்த பிரசாரத்திலே ஒன்றும் நடக்காதது, இதற்கிடையிலே ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் மிதக் குடிப் பிர சாரகாரர்கள் வைத்து பிரசாரம் நடத்தினார்கள், அப்படியிருந்தும் ஒன்றும் நடக்காத காலத்தில், இப்போது 6 மாதத்தில் பிரசாரம் செய்து தீர்த்து

விடுவார்கள் என்று கூறுவது சாத்தியமில்லை. " களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ அற்று " என்று நம் பொய்யா மொழிப் புலவர் கூறியதை கனம் அன்பழகன் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மதுபானத்தில் குளித்திருக்கிற ஒருவனுக்கு ஹிதோபதேசம் செய்து, சன்மார்க்க உபதேசம் செய்து, நீதி போதித்து, அவனைத் திருத்த முயலுவது, எப்படியிருக்கிறது என்று சொன்னால், தண்ணீருக் குள்ளே மூழ்கியிருக்கிறவனை, தீவட்டியைக் கொண்டு தேடுவது என்று சொல்லுவது போல் இருக்கிறது. ஹிதோபதேச, சன்மார்க்கப் பிரசாரத்தால் 20 ஆண்டுகளில் செய்ய முடியாத ஒன்றை 6 மாதத்தில் செய்ய முடியும் என்று நினைத்தால் அது. . .

**SRI K. ANBAZHAGAN** : நான் பேசிய கருத்து ஒன்றைக் குறிப் பிட்டு இப்போது பேசுகிற கனம் வேதரத்தினம் அவர்கள், வள்ளுவர் சொன்ன கருத்தை எடுத்துச் சொல்லி மறுப்பு சொன்னார்கள். வள்ளுவர் சொன்ன கருத்து, குடித்து இருக்கிற ஒருவனுக்கு உபதேசம் செய்வது தண்ணீரில் மூழ்கிய ஒருவனை தீவட்டியைக்கொண்டு தேடுவது போலாகும் என்று சொன்னாரே தவிர, குடிக்காத நேரத்தில் புதிதாகக் குடிக்கப் பழ கிய ஒருவனிடம் எடுத்துச் சொல்வதைப் பற்றி வள்ளுவர் கூறவில்லை. கனம் வேதரத்தினம் அவர்கள் திருக்குறள் உரையை மனதிற்கொண்டு கூறியிருந்தால் நான் இங்கே குறுக்கிட்டிருக்கமாட்டேன்.

**SRI A. VEDARATHNAM** : கனம் அன்பழகன் இப்போது சொன்னது அவருடைய அறிவுத் திறனைப் புகுத்திச் சொல்லலாமே தவிர, குறளில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

தலைவர் அவர்களே, அதோடு இந்த மது விலக்குச் சட்டத்திலே போலீஸார் பேரிலே பல அங்கத்தினர்கள் குறை சொன்னார்கள். போலீ ஸார் இந்த மாகாணத்திலே மிக நல்ல காரியங்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் பல அறிஞர்களினாலேயும், பல பெரியார்களினாலும் போற்றப் பட்டு வருகிறார்கள் என்பதை பாராட்டுகிறேன். அவர்கள் ஆவடி காங்கிர ஸில் நல்ல வேலை செய்தார்கள். புயல், வெள்ளம் போன்றவைகள் இந்த மாகாணத்தில் வந்த காலத்தில் அவர்கள் செய்திருக்கிற மகத்தான சேவைகளையெல்லாம் பாராட்ட வேண்டியிருக்கிறது. போலீஸார் நல்ல காரி யங்கள் செய்து வருகிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனால் இந்த மது விலக்கு விஷயத்தில் அந்த அளவுக்கு அவர்களுக்கு அந்தப் பாராட்டு இல்லை என்று சொன்னால் அதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. ஸ்ரீ நாச்சியப்ப கௌண்டர் அவர்கள் கமிட்டி அறிக்கையிலே இதற்குச் சான்றாக ஒரு விஷயத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதற்கு முன்பு இந்த மது விலக்குத் திட்டத்தை சில ஜில்லாக்களிலே போலீஸ் இலாக்காவினரும், சில ஜில்லாக் களிலே அப்காரி போலீசாரும், ஆக இரண்டு இலாகாவினரும் அமல் நடத்திக்கொண்டு வந்தார்கள். அவர்கள் விசாரணை மூலம் அப்காரி இலாகாவிடம் இந்த மதுவிலக்குத் திட்டத்தை ஒப்படைத்தால் ஊறு விளையும் என்பதைக் கண்டறிந்த காரணத்தினாலே, அப்காரி இலாகாவிடம் ஒப்புவித்திருந்த இந்தத் திட்டத்தை போலீஸ் இலாகாவினிடம் மாற்றி னார்கள். அப்காரி இலாகாவிடமிருந்து அதிகாரத்தை மாற்றினார்களே யொழிய, அந்த இலாகாவிலிருந்த உத்தியோகஸ்தர்களை ஒன்றும் செய்ய வில்லை. போலீஸ் இலாகாவிலே அவர்களை எடுத்துக் கொண்டுவிட்டார் கள். இதன் காரணமாக அப்காரி இலாகாவும் போலீஸ் இலாகாவும் இரண்டறக் கலந்துவிட்டது. அப்காரி இலாகாவில் இருந்தவர்கள் எல் லாம் மது விலக்குச் சட்டம் இல்லாத காலத்திலே, செலவேயில்லாமல் அவர்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைத்ததாலே அதில் மூழ்கி இருந் தார்கள். அவர்கள் இப்பொழுது போலீஸ் இலாகாவிற்கு வந்திருக்கிற காரணத்தினாலே ஒரு சில இடங்களிலே குற்றம் கூறுவதற்கு இடமிருக்க லாம். ஆகவே நான் கண்ணை மூடிக்கொண்டு பேசவில்லை. இந்த மது விலக்குத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவரக் கூடிய காலத்தில் ராஜாஜி



அவர்கள் கையாண்ட முறையை கனம் அமைச்சர் அவர்கள் நினைவுக்குக் கொண்டுவருவார்களேயானால், இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்து வதற்கு உதவியாயிருக்கும். முதன் முதலில் சேலம் ஜில்லாவில் இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவரும்பொழுது, போலீஸ் இலாகாவில் மதுபானத்திற்கு அடிமையானவர்களை முன்னதாகவே கணக்கெடுத்து, அவர்களை எல்லாம் சேலம் ஜில்லாவை விட்டு வேறு ஜில்லாக்களுக்கு மாற்றி, அப்பால் இந்த திட்டத்தை அமலுக்குக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது மாகாணம் முழுவதும் மதுவிலக்குத் திட்டம் அமலில் இருப்ப தால் அவர்களை வேறு ஜில்லாகளுக்கு மாற்றுவது அசாத்தியம். இம் மாதிரிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள் ஓரிருவர் இருப்பார்களே யானால், அவர்களை போலீஸ் இலாகாவை விட்டு வேறு இலாகாக்களுக்கு மாற்றி விடுவார்களேயானால், சில அங்கத்தினர்கள் சொன்ன ஒரு சில குறைபாடுகளுக்குகூட இடமிருக்காது என்பதை கனம் அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இப்பொழுது படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகமாக இருக்கிற காரணத்தினாலே,போலீசாருக்குக் கொடுக்கக்கூடிய இந்த சம்பளத்துக்கே எஸ்.எஸ்.எல்.ஸி. வரையிலும் படித்துவிட்டு இருக்கும் பல வாலிபர்கள், வேறு துறைகளில் வேலை கிடைக்காமல் இருக்கும் காரணத்தினால் போலீஸ் இலாகாவிலே கான்ஸ்டேபிள்களாகக்கூட வேலை பார்க்கத் தயாராய் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் இந்த வேலைக்கு தேர்ந்தெடுத்தால், மேலும் அவர்களுக்கு உத்தியோகத்திலே " பிரமோ ஷனுக்கு " வாய்ப்பு இருக்கிறது என்ற நம்பிக்கையிலே, தவறுகளுக்கு, இடமில்லாமல் நல்ல முறையில் வேலை செய்வதற்கு முன் வருவார்கள். இன்னும், போலீஸ் இலாகாவில் கையெழுத்துக்கூட போடத் தெரி யாதவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படி இருக்கிறவர்களுக்கும் கூட ஊக்கம் அளிக்கும் வகையிலே, மதுவிலக்குக் குற்றங்களை கண்டு பிடிக்கிற தினாலே, ஒரு சன்மானம் அளிக்கும் முறையை ஏற்படுத்தினால் ஊக்கம் அளிப்பதாக இருக்கும். இதை எல்லாம் மந்திரி அவர்கள் கண்டுபிடித்துச் செய்வார்களேயானால் போலீசார்மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு இடம் இல்லாமல் நல்ல முறையில் இந்தத் திட்டம் நடைபெறும்.

மதுவிலக்குக் குற்றம் புரிகிறவர்கள் யார் என்று தேடிப் பார்த்து கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் கிடையாது. " உள்ளொற்றி உள்ளூர் நகப் படுவர் எஞ்ஞான்றும் கள்ளொற்றிக் கண்சாய் பவர் " என்று திருவள்ளு வர் சொல்லியிருக்கிறார். ரகசியமாக குடிப்பவர்களாய் இருந்தாலும் வெளியிலே தெரிந்துவிடும். " களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத் தொளித்ததாகவும் ஆங்கே மிகும் " என்பது போல, எவ்வளவுதான் ரகசியமாகக் குடித்தாலும், அந்த கிராமத்திலுள்ளவர்கள் அத்தனை பேருக்கும் யார் குடிகாரன் என்பது தெரியும். இதை மறைத்து வைத் திருக்க முடியாது. மேலும், குற்றம் செய்த பிறகு கண்டுபிடித்து தண்டிப் பதைக் காட்டிலும், குற்றத்தையே புரியாமல் தடுப்பது முக்கியமான வேலை. இம்மாதிரிப் பழக்கத்திலுள்ளவர்களின் மீது கொஞ்சம் கண்காணிப்பு இருந்தால் குற்றங்கள் குறையும். அடுத்தபடியாக பொய்க் குற்றம், சாட்டு வதாகக் குறை கூறினார்கள். இப்பொழுது அநேகம் பேர் இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒரு தொழிலாக வைத்துக் கொண்டிருந்தாலும் கூட, போலீஸார் அந்நியாயமாக அவர்களைப் பிடித்துவிடுகிறார்கள் என்று தான் சொன்னார்கள். போலீசார் பேரில் குற்றம் சாட்டுவது சுலபமாக இருக்கிற காரணத்தினாலே அதை முழுவதும் உண்மை என்று எடுத்துக் கொண்டு, அவர்கள் பேரில் குற்றம் சாட்டுவது நீதி என்று நான் சொல்ல மாட்டேன். போலீஸ்காரர்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான், அப்படி அக்கிரமமாகச் செய்ய மாட்டார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களும் பொறுப்பை உணர்ந்திருப்பதால்தான் இப் பொழுது இந்தக் குற்றம் பாதி அளவுக்குக் குறைந்து விட்டது. பழைய குடிகாரர்கள் மாண்டு மறைந்து போய்விட்டார்கள். எதிர்காலத்திலும் இளைஞர்களுக்கு இந்தப் பழக்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண் டியது அவசியம். அவர்களுக்கும் இதைக் கற்றுக்கொடுத்து விடாமல்,

இந்தத் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றுவோமேயானல், அடுத்த தலைமுறையில் மதுபானம் என்பது என்று ஒன்று இருந்ததா என்று சொல்லும் அளவுக்கு அது ஒரு சரித்திர விஷயமாகிவிடும். ராமராஜ்யத்தி லும் நடக்காத விஷயம், தர்மர் ராஜ்யத்திலும் நடக்காத விஷயம், இப் பொழுது காந்தி ராஜ்யத்தில் நடந்து வருகிறது என்பதை வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆறு மாத காலத்திற்கு எதற்காகத் தள்ளிப் போடவேண்டும் என்று தெரியவில்லை. எதிர்க் கட்சிக்காரர்கள் செய்யப் போகும் பிரசாரத்தை, இன்றைக்கே எல்லாலோரும் ஒருமித்து செய்து திட்டம் பூரணமாக வெற்றி பெறுவதற்கு துணை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை அமல் நடத்துவதற்கு எல்லோரு டைய ஒத்துழைப்பையும் கோரக்கூடிய அதே மூச்சிலே, கனம் அமைச்சர் அவர்கள் "இதை என் ஒத்திப் போடவேண்டுமென்று, கூறினர்கள். அவர் களுடைய பேரார்வத்தை என்னல் புரிந்துக்கொள்ள முடியவில்லை" என்று அவர்களுக்கே உரிய சாதுர்யத்தோடு பேசினர்கள். எதிர்க் கட்சியிலிருப்பவர் களின் கொள்கை தெரியாதது அல்ல. அதைப் பழைய ஜஸ்டிஸ் கட்சி யின் கொள்கையோடு ஒப்பிடவேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. ஜஸ்டிஸ் கட்சியினர் மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எல்லோரும் சட்ட பூர்வமாகக் குடிக்கவேண்டும் என்ற கொள்கையை உடையவர்கள். அவர்கள் அப்படிச் சொல்லியதற்கும், இன்று மது விலக்கை நன்ருக அமல் நடத்தவேண்டும், அதற்குரிய முறையில் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அன்று காங்கிரஸ் எந்தக் கொள்கையைக் கடைப்பிடித்ததோ அந்தக் கொள்கைக்கு நாங்கள் நிற் கிறேம். ஆனல் அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கைக்கு நிற்கிறர்கள் அதிகாரவர்க்கத்தையும் போலிசையும் நம்பி எப்படி ஜஸ்டிஸ் கட்சி நடந்ததோ அதே கொள்கையைதான் அமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிறர்கள். அன்று காங்கிரஸ் மக்களை நம்பி இருந்தது. அதே மாதிரி மக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும் அந்த ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இன்று விசாரணை நடத்த வேண்டும் என்று சொல்லுகிறேன். அமைச்சர் அவர்கள் சரியானபடி சிந்தித்துப் பார்ப்பார்களேயானல், 1937-வது வருஷத்துக்கு முன்பு மதுவிலக்குக் கொள்கையில் எவ்வளவு ஆர்வம் காட்டினர்களோ, அதே ஆர்வத்தைத் தான் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் காட்டுகிறர்கள் என்பதை, அவர் களுக்கு இருக்கக்கூடிய அரசியல் திரை மறைக்காமல் இருந்தால், உணர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம் கடுமையாக ஆக்கப்பட்டு விட்டது. போலீசுக்கு அதிகாரம் வேண்டுமென்று கேட்டார்கள். இந்த சபை கொடுத்துவிட்டது. இனிமேல் எப்படி அமல் நடத்தப்படுகிறது என்பதை நாம் பொருத்திருந்து பார்க்க லாம். இந்த சட்டத்தை அமல் நடத்துவதற்கு எதிர்கட்சியில் இருந்து இடைஞ்சல் மட்டும் வராது. மதுவிலக்குக் கொள்கை வெற்றி அடைய வேண்டுமென்பதில் அமைச்சருக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ, அத்தகைய ஆர்வம் எங்களுக்கும் உண்டு. இப்பொழுது சர்க்காருக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இதே போலீசை வைத்துக்கொண்டு, அவர்களுடைய மனேபாவம் மாருதவரையில் ஒன்றும் செய்ய முடியாது. போலீஸ் ஆட்களை மாற்ற முடியும் என்று நான் நினைக்கவில்லை. அந்த முறையில் ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை அவர்கள் யோசனை கூறினர்கள். அப்படிப் பார்த்தால் இன்றைக்கு கான்ஸ்டேபிள்களிலிருந்து பெரிய அதி காரிகள் வரைக்கும் எவ்வளவோ பேரை மாற்றவேண்டியிருக்கும். 1943-ம் வருஷம் இந்தச் சட்டம் "அட்வைசர்கள் ஆட்சியில்" ரத்து செய்யப்பட்டது. மறுபடியும் 1946-ம் வருஷம் தான் அமுல் நடத்தப் பட்டது. அப்பொழுது இருக்கின்ற நிலைமைக்குத் தகுந்தவாறு என்ன சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று பரிசீலனை செய்யாமலே 1946-ம் ஆண்டு இந்தச் சட்டம் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. ஒரு கமிட்டியை



ஏற்படுத்தி விசாரணை செய்தார்கள் என்பது வாஸ்தவம். ஆனல் 1937-ம் வருஷம் இந்த சட்டம் ஏற்படுத்தியபோது இருந்த நிலைமையை வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று யோசித்தார்களே தவிர அப்பொழுது இருக்கக்கூடிய சூழ் நிலையை வைத்துக் கொண்டு ஆராய வில்லை. மதுவிலக்கு சட்டம் அமல் நடத்துவதை பெரும் வியாபாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் விரும்புவதற்குக் காரணம் அதனல் அவர்களுக்கு லாபம் இருப்பதனல்தான். பொது மக்கள் குடிப் பழக்கத்திலிருந்து விடு படவேண்டும் என்றே, ஏழை மக்கள், ஹரிஜனங்கள் இந்த தொழிலைவிட வேண்டும் என்றே அவர்கள் நோக்கம் அல்ல. இந்த கள்ள மார்க்கட் பெரும் தொழிலாக இருப்பதில் பெரும் அளவுக்கு போலிஸ் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறர்கள். நான் இப்படிச் சொல்லும்போது போலீசை சுபாவ மாகவே எதிர்ப்பதுதான் என் வேலை என்று சொல்வார்கள். எதிர் கட்சிக்காரர்கள் சொல்வதில் 100-க்கு 75 ஆதாரம் இல்லை என்று சொல் கிறர்கள். ஆனல் 25 பங்காவது ஆதாரம் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டதற்கு நான் நன்றி செலுத்துகிறேன். நாங்கள் எதைச் சொன் ஞலும், சம்பிரதாயமாக "ஆதாரம் இல்லை" என்ற ஒரு பதில் வருகிறது. ஆனல் தக்க விசாரணை செய்து ஆதாரம் இல்லை என்று சொல்லுவதே இல்லை.

கிராமப்புறங்களிலும், நகர சுற்றுப்புறங்களிலும், இந்த வியாபாரம் நடைபெறுகிறது. இதில் போலீஸ் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர். அந்த கள்ள மார்க்கட் வியாபாரிகளுக்கும், இவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. சர்க்கார் கொடுக்கும் சம்பளம் தவறினலும், இவர் களுக்குக் கொடுக்கப்படும் காணிக்கை தவறுவது இல்லை.

குடிப்பழக்கம் இருக்கிறவர்களுக்கு அதனுடைய கெட்ட குணங்களைப் பற்றிச் சொன்னல் ஏருது, சட்டம் தான் இயற்ற வேண்டும் என்று சொல்லுகிறர்கள். குடிக்காரர்கள் கூட குடிக்காமல் இருக்கும் சமயத்தில் நல்ல புத்தியில் இருப்பது எனக்குத் தெரியும். சர்க்கார் அதிகாரிகளில் கூட "பர்மிட் குடிகாரர்கள்" இருக்கிறர்கள். இந்த சர்க்கார் அதிகாரி களிடம் பெரிய திட்டங்களை போட நம்பி விடுவதில்லையா. ஆகையால் குடிகாரர்களிடம் இதைப் பற்றி பிரசாரம் செய்தாலும் அவர்களுக்கு ஏருது என்று சொல்வது சரியாகாது. அப்படி இல்லாவிட்டால் ஏன் இந்த அதி காரிகளுக்கு பர்மிட் கொடுக்க வேண்டும். ஆகையால் குடிப்பவர்கள் எல் லோரும் அறிவீனர்கள், அவர்கள் புத்தியில் ஒன்றும் ஏருது என்று சொல்வது சரியல்ல. அவர்களை திருத்த முடியும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். இது கெட்ட பழக்கம், இதனல் பல கெடுதல்கள் விளைகின்றன என்று பிரசாரம் செய்யவேண்டும். போலீஸை நம்பி இதை செய்ய முடியாது என்பதை நான் கனம் அமைச்சர் அவர்கள் கவ னத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மதுவிலக்கு கொள்கை வெற்றி அடைய வேண்டுமானல் அது போலீஸ் அதிகாரிகளின் கைகளிலிருந்து விடுபடவேண்டும். இந்த மதுவிலக்கு சட்டம் சரியானபடி அமல் நடத்தப் பட்டு வெற்றி அடைய வேண்டும் என்பதே எல்லா எதிர் கட்சிகளின் நோக்கமுமாகும். அதற்காக பொது மக்களிடம் தகுந்த பிரசாரம் செய்யப் படவேண்டும். மதுவிலக்குச் சட்டம் நிச்சயமாக அமல் நடத்தப்படும், அதை மீறினல் கடும் தண்டனை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும்படி செய்ய வேண்டும்.

1937-ம் ஆண்டில் இதற்கு இருந்த மரியாதை, கௌரவம் இப்போது கிடையாது. அப்போது இது தேசீய கருத்தோடு சேர்ந்து இருந்தது. அந்த கௌரவம், மரியாதை மறுபடியும் ஏற்படவேண்டும். ஆகையால் விசாரணை நடத்த வேண்டும் என்று அடிக்கடி சொல்லி வருகிறேன். மந்திரிக்கு அறிவு இருக்கிறதா, எதிர்கட்சியிலிருப்பவர்களுக்கு அறிவு இருக்கிறதா என்று எடை போடுவதற்காக அல்ல. அதற்கு அவசியமும் இல்லை.

இந்த சட்டத்தில் குறைபாடுகள் இருக்கின்றன. உண்மையில் அமைச்சர் அவர்கள் இவைகளை கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கு மானல், ஒரு அதிகாரியை தனியாக நியமித்து, இந்த 12 ஆண்டுகளில்

[Sri M. Kalyanasundaram] [14th March 1958

இந்த மதுவிலக்கு சட்டத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன என்ன என்று ஆராய்ந்து, பரிசீலனை செய்து அதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே என்னுடைய அபிப்பிராயம். விசாரணை கமிட்டிக்கு அவசியம் இருக்கிறது என்பதே என்னுடைய அபிப்பிராயம்.

**SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM** : கனம் சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இன்று நாம் மதுவிலக்கு சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றியிருக்கிறோம். அதில் நாம் பெருமை கொள்ளவேண்டும். குறிப்பாக பெண்கள் சார்பாக நான், இந்த திருத்த மசோதாவை நிறைவேற்றியதற்காக, நம் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம் நாட்டிற்கு பெருமை பெண்களாலேயே ஏற்பட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள நான் பயப்படவில்லை. பெண்களிடத்திலிருக்கும் அன்பிலிருந்தும், பண்பிலிருந்தும் தான் இன்று நமது தேசமானது ஒரு புனிதமான தேசமாக தலை தூக்கி நிற்பதற்கு முடிகின்றது. முன்னால் நமது நாட்டில் பெண்களுக்கு இருந்த பண்புகள் இப்பொழுதும் அவர்களிடத்தில் இருந்து வருகின்றன. அந்த பண்பு இருப்பதனால்தான் நாட்டிற்கே ஒரு பெருமை என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப்பட்ட பெண்கள், இந்த மதுவிலக்கு சட்டத்திற்கு ஆளாகிறார்கள் என்று சொன்னால் நாம் வருந்தாமல் இருக்க முடியாது. சட்டத்தைக் கொண்டு வந்தாலும் பரவாயில்லை, கடுமையான தண்டனைகள் இருந்தாலும் பரவாயில்லை, கெட்ட குணங்கள் எல்லாம் பெண்களிடத்திலிருந்து நீங்க வேண்டும் என்பதே என்னுடைய ஆவல். பெண்கள் இந்தச் சட்டத்திற்கு உட்படுவதா, அவர்களுக்கு விதி விலக்கு இல்லையா, என்ற பேச்சுக்களை கேட்கும்போது மிகவும் இனிமையாக இருக்கலாம். ஆனாலும், பெண்களுக்கு இந்த சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிப்பதானது நம்முடைய பாரத தேச பண்பாட்டுக்கே உகந்தது அல்ல. சட்டம் கடுமையாக இருந்தாலும், தண்டனை கடுமையாக இருந்தாலும், நம்முடைய பண்பர்ட்டுக்கு ஏற்ப, எல்லோருக்கும் ஒரே விதமான தண்டனையை கொடுக்க வேண்டும் என்று சொன்னால்தான் நாட்டின் பெருமையை காப்பாற்ற முடியும்.

எதிர்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இந்த மசோதாவை 6 மாதத்திற்கு ஒத்திப் போட வேண்டும் என்று சொன்னார்கள். இந்த மசோதாவானது நமது நாட்டினுடைய பெரும் பண்புகளை உயர்த்துவதாக இருக்கும்போது 6 மாதத்திற்கு ஒத்திப் போட வேண்டும் என்று சொல்வது எனக்கு ஒரு விந்தையாகவே இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் சொன்னதுபோல், இந்த சட்டம் இயற்றப்படுவதனால், அரசாங்கத்திற்கு பெருமை வந்து விடுமே என்ற பயத்தினால், இதை 6 மாதத்திற்கு ஒத்திப்போட்டு அந்தப் பெருமையை அவர்கள் அடையலாம் என்ற நோக்கமாக இருக்குமோ என்னமோ, எனக்குத் தெரியாது.

இந்த கடுமையான சட்டத்தை பாமர மக்கள் தெரிந்து கொள்ளாமலே குற்றங்களை செய்து கொண்டிருப்பார்கள். ஆகையினால், 6 மாதம் வரை இதைப்பற்றி பிரசாரம் செய்தபிறகு இந்த திருத்த மசோதாவை கொண்டு வரலாம் என்று எதிர் கட்சியிலிருப்பவர்கள் தெரிவித்தார்கள். உண்மையில், ஜனநாயக ஆட்சியில் நாம் இப்படி நினைத்துவிட முடியாது. கிராமங்களுக்கு எல்லாம் பேப்பர் போகிறது. கிராமவாசிகள் அவைகளை படிக்கிறார்கள். இந்த சட்டத்தைப்பற்றியும், குற்றங்களுக்கு அதில் போட்டிருக்கும் தண்டனைகளைப்பற்றியும் அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

மேலும் சாராயம் காய்ச்சுகிறவர்கள் இதைப்பற்றி அவசியம் தெரிந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் இந்த தண்டனைக்கு ஆளாகாமல் இருப்பதற்கு அவர்கள் தகுந்தபடி நடந்துகொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். ஆகையினால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால் ஒரு கை தட்டினால் ஓசை ஏற்படாது, இரண்டு கைகளைத் தட்டினால்தான் ஓசை ஏற்படும். ஆகையினால் நான் என்ன சொல்கிறேன் என்றால் நாம் சட்டத்தைச் செய்து விடுகிறோம். அதனால் அதில் நம்முடைய கவனம் இருக்க வேண்டும்.



14th March 1958] [Srimathi P. K. R. Lakshmikantham]

நாம் சட்டத்தை இயற்றி விட்டோம் என்று இராமல் பிரசாரம் செய்ய வேண்டும். சட்டத்தால் மட்டும் நாம் ஒரு காரியத்தைச் சாதித்து விட முடியாது. பிரசாரமும் நமக்கு தேவையாக இருக்கிறது. ஆகவே இந்த இரண்டும் நமக்குத் தேவையாக இருக்கிறது. நாம சட்டத்தை நிறைவேற்றி விட்டு சும்மா இராமல் அரசாங்க அதிகாரிகளும், காங்கிரஸ் அங்கத்தினர்களும், மற்றும் எல்லா கட்சி அங்கத்தினர்களும் சேர்ந்து இதில் ஈடுபட்டு பிரசாரம் செய்தால்தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய பலனை அனுபவிக்க முடியும்.

மூன்றாவதாக போலீஸ்காரர்களைப்பற்றி பல புகார்கள் சொல்லப்படுகின்றன. அவர்களின் பேரில் லஞ்சப் புகார்களும் சொல்லப்படுகின்றன. அவர்களும் மனிதர்கள் தான் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவர்களும் நல்ல பண்பாடுடையவர்கள்தான். பண்பாடு வளர்ந்த தமிழர்கள் தான் அவர்களும். அவர்களுக்கு அதிகமான ஊதியம் கிடைக்காத காரணத்தால் (சிரிப்பு) தங்களுடைய வருமானத்தை சற்று உயர்த்திக் கொள்வதற்கு அவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆகவே இந்த மதுவிலக்குச் சட்டத்தில் எந்த போலீஸ்காரர்கள் ஈடுபட்டு உழைக்கிறார்களோ அவர்களுக்கு, வசூலிக்கப்படும் அபராதத் தொகையிலிருந்து, கொஞ்சம் அலவன்ஸ் கொடுத்தும் அவர்களுக்கு மற்றும் போககுவரத்துச் செலவுகள் கொடுத்தும் வசதி செய்து கொடுத்தால அவர்கள் இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இரண்டு கைகளையும் சேர்ந்து தட்டினால்தான் ஓசை ஏற்படும் என்பது போன்று சட்டத்தை நிறைவேற்றுவதோடு பிரசாரமும் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த திருத்தச் சட்டத்தை நாம் எல்லோரும் சேர்ந்து அமுலாக்குவோமாக என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: Mr. Deputy Speaker, Sir, we are now in the last stage of passing of the Bill and it will soon find a place in the Statute Book. But nobody on the Opposition side objected to the passing of this Bill. Hon. Members on the other side said that some of us were indulging in tactics of delaying the passing of this and so on. It is never so. We will be the last people to indulge in such kind of tactics. On the other hand, what we felt was that the Bill as passed by the Select Committee contained some stringent provisions which, if implemented, will lead to lot of abuses. That is what we all felt. All of us in this side were of the unanimous opinion that an assessment of the results of this Prohibition Act should be made by a High Power Committee and then their recommendations considered by this Government. For that it will take about six months. It is only with that view we requested Government to defer the Bill for six months. It is not with a view to resorting to any delaying tactics. This is my humble submission.

Both the Government at the Centre and in the State have appointed two committees to go into the question of this Prohibition Act. The Madras Government's recommendations are here and in one of the paragraphs it is said " The issue of permits for consumption of foreign liquor to the Indians (including Anglo-Indians, Parsees and Jews) and Domiciled Europeans is recommended to be stopped at least in five years. The annual licensing fee on such permits should be fixed at Rs. 200 ". This was a recommendation made in the year 1948 and one of the hon. Members of this House

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [14th March 1958

(Sri A. Vedarathnam Pillai) also happened to be one of the Members of this Committee. The report on the working of the Enquiry Committee appointed by the Planning Commission of the Government of India is also there. I will read only one sentence : " The Surgeon-General with the Government of Madras has noted that the Madras Prohibition Enquiry Committee has asserted that "alcoholic beverages as such are not essential for treatment. But the medical view of late is that alcohol is unnecessary and often harmful in the routine treatment of disease " where are the recommendations of these two committees? It is not known why even after such a long time, the recommendations of these committees have not been implemented by our Government.

Another point I wish to emphasise is that if we continue this permit system there will be large abuses. The privileged classes —the doctors--influence the Government and get some permits for reasons of health. But what happens to other people who are not in a position to get them on any health condition. So why this permit system should be continued? I am of the opinion that the entire permit system should be abolished. Or if it should be continued, as was pointed out on some other occasion, the whole question will have to be reviewed once again by appointing a Health Board consisting of some eminent doctors—two or three top-ranking doctors. They should form a committee and invite persons having permits to appear before the Committee. If then they are of the opinion that permits should be given, the Government can consider such cases even if they are indispensable.

There is no prohibition in the border areas such as Pondicherry and Bangalore. There are also abuses. In army also there are abuses. Unless these things are put an end to severely, I do not think that Prohibition Act can be worked out successfully. Even in the issue of permits to doctors, the Government must adopt very very strict control and only in bona fide cases, licences should be given.

When framing the rules, I am sure, Sir, the Government will give due weight and consider all the aspects which were put forth by the hon. Members of this House. They will also see that they are framed in such a way that in the enforcement of the Act there will be no kind of abuses. There are abuses on the part of the officers, especially the police officers with a view to wreak personal vengeance they may have on somebody. The Government should therefore see that some conditions are introduced in the rules to be framed to prevent such abuses. Once again I assure the entire co-operation of this side for the successful working of this Act. Thank you, Sir.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** சபா நாயகர் அவர்களே, ஜஸ்டிஸ் கட்சி இருந்த காலத்திலே கனம் உதவி சட்டசபையில் மதுவிலக்கு விஷயமாக நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைப் பற்றி நான் குறிப்பிட்டதை கனம் அங்கத்தினர் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தவறுதலாக எடுத்துக்கொண்டார்கள்.



14th March 1958] [Sri M. Bhaktavatsalam]

நான் குறிப்பிட்டதை அவர் சரியாக புரிந்துக்கொள்ளவில்லை. அப்படி சரியாக புரிந்துக்கொள்ளாத காரணத்தினாலே நான் ஏதோ அவரை நேரடியாக தாக்க முற்பட்டேன் என்று நினைத்து—இதை அடிக்கடி நாம் கவனித்திருக்கிறோம்—ஆவேசம் வந்துவிட்டது.. அதற்குப் பிறகு அவர்களும் தாக்க முற்பட்டார்கள். அந்த அவசியத்திற்கு இடம் கொடுக்கும் வகையிலே நான் அதை குறிப்பிடவில்லை. அன்று ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் மதுவிலக்கு திட்டத்தை எதிர்த்ததுபோல, இன்று எதிர்க் கட்சியினர் யாராகிலும் மதுவிலக்கு திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. நான் கூறியதெல்லாம், திருஷ்டாந்தம் கூறியதெல்லாம், 6 மாத காலத்திற்கு இந்த மசோதாவை தள்ளிப்போடவேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்ததைப்பற்றிதான் சொன்னேன். அம்மாதிரி ஒரு திருத்தம் கொண்டுவந்து அதை ஆதரித்தது மட்டுமல்ல, அதில் டிவிஷன் எடுத்தார்கள். அதில் என்ன விசேஷம் இருக்கிறது ? டிவிஷன் பிரெஸ் செய்ததினால் என்ன பயன் ? இதனால் எப்படிமக்கள் பாராட்டுதலை பெறக்கூடும் ? பிறகு சொன்னார்கள், 6 மாதத்திற்குள்ளே ஒரு ஹைபவர் கமிட்டி போடலாம் என்று சில அங்கத்தினர்கள் " ஆல்பார்டி கமிட்டி" போடலாம் என்று சொன்னார்கள். அந்தத் திருத்தத்தில் இந்தக் காரணங்களையெல்லாம் கூட சொல்லவில்லை. ஆறு மாதத்திற்கு தள்ளிப்போடலாம் என்று மட்டும்தான் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டது. அம்மாதிரி ஒரு திருத்தத்தை பிரேரேபித்து ஆதரித்தது மட்டுமல்லாமல், அதிலே டிவிஷனுக்கு பிரெஸ் செய்து " நாங்களெல்லாம் திருத்தத்திற்கு ஆதரவாக வோட்டு செய்தோம் " என்று சொல்லிக்கொள்வதில் என்ன பயன் என்பது என் சிற்றறிவிற்கு புலப்படவில்லை. நான் ஒரு திருஷ்டாந்தம் சொன்னேன். ஜஸ்டிஸ் கட்சி ஆண்ட காலத்தில் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாக இயங்கிற்று. நாங்கள் 40, 42 பேர்கள் இருந்தாலும், தோல்வி அடையும் என்று தெரிந்தாலும், மது விலக்கு திட்டத்தை நாங்கள் ஆதரித்தோம். ஆளும் கட்சியினர் ஆதரிக்கவில்லை, எதிர்த்தார்கள் என்று மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக டிவிஷன் கேட்டது உண்டு. டிவிஷன் கேட்டு, அதை அவரவர்கள் கண்ணோட்டத்திற்கு தகுந்தபடி பயன்படுத்திக்கொள்ளலாம், பொது மக்களிடத்தில் போய் சொல்லலாம். இதைத்தான் நான் குறிப்பிட்டேனே தவிர, மதுவிலக்கு திட்டத்திற்கு ஏதோ எதிர்ப்பு இருக்கிறது, எதிர்க்கின்ற மனோபாவத்தை உடையவர்களாக இருக்கிறார்கள் என்று நான் கூறவில்லை. இப்பொழுது பல கட்சிகள் சார்பாக அங்கத்தினர்கள், தலைவர்கள், இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஆதரவு அளிப்பதாக கூறியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் திரு கலியாணசுந்திரம் அவர்கள் தன் கட்சியின் சார்பிலும், பொதுவாக எதிர்க் கட்சிகளின் சார்பிலும்—அவர்களுக்கு மற்ற எதிர்கட்சிகளிடத்திலுள்ள செல்வாக்கு எனக்கு தெரியாதது அல்ல—மது விலக்கு திட்டத்தை எதிர்க்கப்போவதில்லை, அதற்கு ஆதரவு தருகிறோம் என்று சொன்னார்கள். அது நான் எதிர்பாராதது அல்ல. அதற்காக நான் சம்பிரதாயமுறைப்படி என்னுடைய நன்றியை மீண்டும் எல்லா கட்சியினருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு திட்டத்தை சீரிய முறையில் நிறைவேற்றுவதற்கு ஆதரவு அளிப்பதாக அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள்.

போலீஸ்காரர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தவறுதல்கள் செய்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை என்று திரும்பவும் சொல்லுகிறேன். ஆனால் அவர்களுடைய தவறுதல்களை மிகைப்படுத்தி சொல்வதில் யாருக்கும் பயன் அளிக்காது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே இப்போதைய போலீஸ் மனோபாவத்தில் ஒரு குறைவும் இல்லை. மனோபாவம் இப்படி இருக்கிறவரையிலே இதை நிறைவேற்ற முடியாது, கடுமையான தண்டனை விதித்து என்ன பயன் என்று எதிர்க்கட்சியினர் பேசினார்கள். நான் சொல்லுகிறேன். இப்பொழுது அவர்களுடைய மனோபாவத்தில் குறைவு ஒன்றுமில்லை, அது சரியாகத்தான் இருக்கிறது. அதுமட்டுமல்ல. புதிதாக சட்டம் செய்தால் அந்த சட்டம் சரியாக அமுல் நடத்தப்படவேண்டுமென்ற கவலை எனக்கு உண்டு. அதிலே தவறுதல்கள் நேரக்கூடாது.

[Sri M. Bhaktavatsalam] [14th March 1958

நிரபராதிகள் பாதிக்கப்படாத வண்ணம் சட்டம் அமுலாக்கப்படவேண்டும், பிரயோகிக்கப்படவேண்டும் என்ற கவலை எனக்கு உண்டு. சீக்கிரத்திலே ஜில்லா போலீஸ் அதிகாரிகள், அதற்கு மேற் பட்டஅதிகாரிகள் இவர்களையெல்லாம் அழைத்து, அவர்களோடு வேறு பல விஷயங்கள் பேசுவதோடு புதியதாக நிறைவேற்றப்பட்ட மதுவிலக்கு சட்டத்தை வெற்றிகரமாக அமுல் செய்வதில் எவ்வாறு கவனம் செலுத்துவது, இருக்கும் குறைபாடுகளை நிரந்தரமாக எப்படி தீர்ப்பது என்பதைப் பற்றியெல்லாம் அவர்களோடு கலந்து பேசி அதற்கு மேல் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று உத்தேசம் செய்திருக்கிறேன்.

முன்பு ஏதோ விசாரணை கமிட்டியினர் சிபார்சு செய்தார்கள், அதற்குப் பிறகு காலம் மாறியிருக்கிறது, ஆகவே காலத்துக்கு ஏற்றவாறு இல்லாத பழைய சிபார்சுகளை வைத்துக்கொண்டு இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது, மாறிய காலத்திற்கு ஏற்றவாறு மசோதா அமையவில்லை என்று ஒரு புகார் சொல்லப்பட்டது. நான் விளக்கிக் கூற விரும்புகிறேன். இன்றுவரை காலத்தின் போக்கு காலத்தின் மாறுதல் எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டியிருக்கிறது. காலத்திற்கேற்ற மசோதாதான், காலத்திற்கு அவசியமான மசோதாதான் இது. மதுவிலக்கு திட்டம் வெற்றிகரமாக சீரிய முறையில் நிறைவேறுவதற்கு ஹேதுவாக இந்த மசோதா அமைந்திருக்கிறது. இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால், இதை அமுலாக்குவதற்கு போலீஸார் ஒழுங்கான வகையில் இதில் கவனம் செலுத்துவதோடு, பொது மக்களுடைய ஆதரவும் வேண்டும். அந்த ஆதரவு பரிபூரணமாக உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இந்த சட்டத்தை அவர்கள் வரவேற்பார்கள். அதோடு இந்த மன்றத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் குறிப்பாக எதிர்கட்சி அங்கத்தினர்களுக்கு சொல்லுகிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இந்தச் சட்டத்திலே கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று பொது மக்களிடம் எடுத்துச்சொல்லும்பொழுது, அரசாங்கம் அவ்வளவு கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய பிரிவுகளை இதில் சேர்த்துவிட்டார்கள் என்று சொல்லட்டும். அப்படி சொல்வது கூடாது என்று நான் சொல்லமாட்டேன். இம்மாதிரி கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன, அதற்கு நீங்கள் உட்பட வேண்டாம், ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும்" எனறு சொன்னால் போதும். அவ்வாறு சொல்லும்போது அரசாங்கத்தையும், போலீஸ்காரர்களையும் எவ்வளவு வேண்டுமானாலும் தாக்கட்டும், அதுபற்றி கவலைப்படவில்லை. மக்களுக்கு விவரங்கள் விளக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். மக்களுக்கு இந்த சட்டத்தின் விவரங்களை விளக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவதற்கு அரசாங்கம் தயங்காது. ஆனால் எதிர்க்கட்சியினரும் இதை எடுத்துச் சொல்லலாம், சொல்லவேண்டும் என்று நான் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு இரண்டு கமிட்டிகள் நியமிக்கப்பட்டன, அவர்கள் சிபார்சு செய்தார்கள், எல்லா சிபார்சுகளையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்பதைப்பற்றி கனம் எதிர்க்கட்சி தலைவர் சொன்னார்கள். ஒன்று பர்மிட்டைப் பற்றியது. மற்றொன்று வைத்திய ரீதியிலே மதுபானம் வேண்டாம் என்ற ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்டது. அப்படி அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டாலும் அது முடிவானது அல்ல. வைத்திய காரணத்திற்காக மதுபானம் வேண்டுமென்றால் அதை தவிர்ப்பது முறையாகாது. இருக்கும் சட்டத்திற்கு அது விரோதமாக கருதக்கூடும் என்ற அபிப்பிராயத்தை நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். அந்த வகையில் இதிலே பெர்மிட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்பிரிட் முதலியவை விற்பதற்கு லைசென்ஸ் வழங்குவதுபற்றி கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் முன்பே குறிப்பிட்டேன். இதிலே முக்கியமாக வார்னிஷ், பைண்டு போன்றவை ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய அளவு ஸ்பிரிட் கொடுக்கவேண்டும். மருந்து வகைகளுக்கும், டாக்டர் தேவைக்கும்



14th March 1958] [Sri M. Bhaktavatsalam]

மற்றும் தொழில் துறையிலும் கூட இவைகள் வேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. என்றாலும் இதிலே தவறுதல்கள் எவ்வளவோ நடைபெறுகின்றன. இந்த மாதிரி தவறுதல்கள் நடப்பது கனம் அங்கத்தினர் யாருக்காவது, எதிர்க்கட்சி அங்கத்தினராக இருந்தாலும் சரி, தெரிய வந்தால் தயங்காமல் அவர்கள் என்னிடம் விவரங்களை நேரிடையாக தெரிவித்தால், அதை நான் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கத் தயங்கமாட்டேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிறிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, பெரிய மனிதர்களாக இருந்தாலும் சரி, சிறிய மனிதர்களாக இருந்தாலும் சரி, அதுபற்றி கவலை இல்லை. குற்றம் செய்பவர்கள் யாராயிருந்தாலும், தவறு செய்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயங்காது. ஆகவே, இந்த சட்டத்தைப்பற்றி குறை கூற வேண்டுமானால் குறை கூறட்டும். அதை வேண்டாம் என்று நான் சொல்லக்கூடாது. நான் சொல்லமாட்டேன். மது விலக்குத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமென்றால், கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டிருப்பதால் மக்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டுமென்று சொல்லும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஏதோ பழைய குடிக்கிற பழக்கம் இன்றும் இருக்கிறது. எப்படி திடீரென்று அதை விட்டு விடும்படி சொல்லுவது என்று சொன்னார்கள். குடிப்பது தவறு, குடிக்கக்கூடாது என்று சொல்லி பல பேர்கள் அதிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டம் திடீரென்று வந்து விடவில்லை. இருந்தாலும் பிரசாரம் செய்யவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். சட்டம் அம்மாதிரி இருக்கிறது, அதில் விதிக்கப்பட்டிருக்கிற கடுமையான தண்டனைக்கு நீங்கள் உட்படக்கூடாது, அதைத் தவிர்க்கவேண்டுமென்ற ஒரு எண்ணத்தை மக்களிடத்திலே, இதனால் பாதிக்கப்படக்கூடியவர்களிடத்திலே, உண்டாக்குவதற்கு இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். இந்த மசோதா சட்ட மாக்கவேண்டுமென்ற பிரேரேபணையை இந்த மன்றம் ஏகமனதாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Prohibition (Amendment) Bill ,1958 (L.A. Bill No. 2 of 1958), be passed ".

The motion was put and carried and the Bill was passed.

## (4) THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 9 OF 1958) *

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to move—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) be taken into consideration ". 12-15 p.m.

இந்த மசோதாவில் மூன்று முக்கியமான திருத்தங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று, டீஸல் எண்ணைக்கு இப்போதுள்ள வரியாகிய 10 நயா பைஸாவை 35 நயா பைஸாவாக உயர்த்துவதற்கான திருத்தம். இரண்டாவது, மோட்டார் ஸ்பிரிட்டின் பேரில் விற்பனை வரி வசூலிக்கும்போது சில்லரை வியாபாரிகளிடமிருந்து (ரிடெய்ல் டீலர்ஸ்) வசூலிக்கும் இப்போதைய முறையை மாற்றி மொத்த வியாபாரிகளிடமிருந்தும் இறக்குமதி செய்பவர்களிடமிருந்தும் (இம்போர்ட்டர்ஸ்) அதை வசூலிக்கும் முறையை கொண்டுவருவதற்கான திருத்தம். இந்தத் திருத்தம் செய்யப்

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 12th March 1958.

பட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்றால், சில்லறை வியாபாரிகளிடம் வரி வசூலிக்கும்போது பலரை அணுக வேண்டியிருக்கிறது பல கணக்குகளைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தொல்லையை நீக்குவதற்காக, அதை இறக்குமதி செய்யும் வியாபாரிகளிடமிருந்தும் மொத்த வியாபாரிகளிடமிருந்தும் வசூலித்து விடுவதற்கான இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதா சட்டமாகி எப்ரல் மாதம் முதல் தேதியன்று அமலுக்கு வருமானால், அதற்கு முன்னதாக சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடமிருந்தும் ஏராளமான சரக்குகளை வாங்கி வைத்துக்கொண்டு விடுவார்கள். அப்படி அவர்கள் செய்துவிட்டால் அந்தச் சரக்குகளின் பேரில் வரி வசூலிக்க முடியாமல் போய்விடும். அந்த சரக்குகளுக்கும் வரி வசூலிப்பதற்கான திருத்தம் மூன்றாவது திருத்தம் ஆகும்.

டீஸல் எண்ணைக்கு இப்போதுள்ள வரி விகிதமாகிய 10 நயா பைசாவை 30 நயா பைசாவாக உயர்த்துவதுதான் இந்தத் திருத்தங்களில் உள்ள மிக முக்கியமான அம்சம். இந்த வரி உயர்வைப் பற்றி பட்ஜெட் விவாத்தின் போது பெரிய சர்ச்சை நடந்தது. இந்த வரி உயர்வு விவசாயிகளை மிகவும் பாதிக்கும் என்று கூறப்பட்டது. நம் ராஜ்யத்தில் டீஸல் எண்ணை இப்போது என்ன விலைக்கு விற்கிறது என்பதையும் மசோதாவிலுள்ள வரி உயர்வு அமலுக்கு வந்தால், அது என்ன விலைக்கு விற்கக்கூடும் என்பதையும் நான் விளக்கினால், கனம் அங்கத்தினர்கள் தாங்கள் கொண்டுள்ள தவறான அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இப்போது ஒரு காலன் டீஸல் எண்ணை நம் ராஜ்யத்தில் விற்பனை வரி நீங்கலாக 1 ரூபாய் 62 நயா பைசாவிற்கு விற்கிறது. அந்த ஒரு காலனுக்கு இப்போது நம் ராஜ்யத்தில் வசூலிக்கப்படும் வரி 10 நயா பைசா. ஆகவே நம் ராஜ்யத்தில் இப்போது ஒரு காலன் டீஸல் எண்ணை விற்பனை வரி உள்பட 1 ரூபாய் 72 நயா பைசாவிற்கு விற்கிறது. மைசூர் ராஜ்யத்தில் இப்போது டீஸல் எண்ணை காலன் ஒன்று விற்பனை வரி நீங்கலாக 1 ரூபாய் 77 நயா பைசாவிற்கு விற்கிறது. அந்த ராஜ்யத்தில் இப்போது அதற்கு காலன் ஒன்றுக்கு 19 நயா பைசா விற்பனை வரி விதிக்கப்படுகிறது. ஆகவே இப்போது அந்த ராஜ்யத்தில் ஒரு காலன் டீஸல் எண்ணையின் விலை 1 ரூபாய் 96 நயா பைசா. ஆந்திரப் பிரதேசத்தில் இப்போது டீஸல் எண்ணையின் விலை விற்பனை வரி நீங்கலாக 1 ரூபாய் 68 நயா பைசா. அங்கே இப்போது ஒரு காலன் டீஸல் எண்ணைக்கு விற்பனை வரி 19 நயா பைசா. ஆகவே இப்போது அங்கே ஒரு காலன் டீஸல் எண்ணை ரூபாய் 87 நயா பைசாவிற்கு விற்கிறது. நம் ராஜ்யத்தில் டீஸல் எண்ணைக்கு விற்பனை வரியை 25 நயா பைசா தான் உயர்த்துகிறோம். இந்த மசோதா அமலுக்கு வந்தவுடன், விற்பனை வரி உட்பட டீஸல் எண்ணையின் விலை நம்ராஜ்யத்தில் 1 ரூபாய் 97 நயா பைசாவாகவும், மைசூர் ராஜ்யத்தில் 1 ரூபாய் 96 நயா பைசாவாகவும், ஆந்திரப் பிரதேசத்தில் 1 ரூபாய் 87 நயா பைசாவாகவும் இருக்கும். ஆதலால் மற்ற ராஜ்யங்களில் உள்ள வரியை விட அதிக வரியை நம் ராஜ்யத்தில் டீஸல் எண்ணைக்கு விதித்து விவசாயிகளுக்கு நாங்கள் அதிகக் கஷ்டத்தை கொடுப்பதாக நினைப்பது சரியல்ல. ஆந்திரப் பிரதேசத்திலும் மைசூரிலும் டீஸல் எண்ணை விற்பனை வரி சம்பந்தமாக விவசாயிகளுக்கு எந்த விதமான சலுகையும் காட்டப்பட வில்லை. இப்போதைய விலைவாசிகளை கவனித்தால், விவசாயிகளுக்கு இதனால் அதிகமான தொந்தரவு ஏற்பட்டுவிடாது என்று -சர்க்கார் நினைக்கிறார்கள். இருந்தாலும்கூட, இந்த மசோதா இப்படியே அமுலுக்கு வந்த பிறகு, நடை முறையில் விவசாயிகளுக்கும் கஷ்டம் ஏற்பட்டால் சர்க்கார் இதைப் பரிசீலனை செய்யும் என்று இப்போது உறுதிமொழியும் அளிக்கிறேன். அப்படிப் பரிசீலனை செய்யும்போது வரியைக்குறைக்கலாம் என்று சர்க்கார் தீர்மானித்தால், அவ்வாறு வரியைக் குறைப்பதற்கு சர்க்கார் சட்டமியற்றும் அதிகாரத்தை பிரயோகிக்க வேண்டியதில்லை. ஏனென்றால், வரியை உயர்த்துவதற்குத்தான் சட்டமியற்ற வேண்டும். வரியைக் குறைப்பதற்கு நிர்வாக உத்தரவுகள் (எக்ஸிக்யூடிவ் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்) போட்டால் போதும். ஆகையால் மசோதாவிற்கு எந்தவித மான திருத்தமும் கொடுக்காமல், இதை ஏகமனதாக அங்கீகரிக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Sales of Motor Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) be taken into consideration".

**The motion is before the House for discussion.**

**SRI A. R. MARIMUTHU**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவை நாங்கள் மனப்பூர்வமாக எதிர்க்க வில்லை. டீஸல் எண்ணை வரி உயர்வைப் பொறுத்தவரையில், விவசாயிக்கு டீஸல் எண்ணை விற்கப்படும்போது விலக்களிக்க வேண்டுமென்றுதான் நாங்கள் கோருகிறோம். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தாம் பேசியபோது, நம் மாநிலத்தில் இந்த வரி உயர்வையும் சேர்த்து டீஸல் எண்ணையின் விலை, இதர மாநிலங்களில் டீஸல் எண்ணை விற்கும் விலையை விட மிக அதிகமாக உயர்ந்து விடக்கூடாது என்று கூறினார். கனம் நிதி அமைச்சர், இதர மாநிலங்களில் உணவுப் பொருள்கள் விற்கும் விலையை விடக் குறைந்த விலையில் நம் மாநிலத்தில் உணவுப் பொருள்கள் விற்கின்றன என்று இந்தச் சபையில் கூறியிருக்கிறார். விவசாயக் காரியங்களுக்காகத்தான் விவசாயிகள் டீஸல் என்ஜின்களை உபயோகிக்கிறார்கள்; ஆகவே விவசாய காரியங்களுக்காகத்தான் அவர்கள் டீஸல் எண்ணை வாங்குகிறார்கள். உணவுப் பொருள்கள் இந்த ராஜ்யத்தில் குறைந்த விலையில் விற்கும்போது, இந்த ராஜ்ய விவசாயிகளின் பொருளாதார நிலைமை இதர ராஜ்ய விவசாயிகளின் பொருளாதார நிலைமையை விடத் தாழ்ந்ததாகத் தான் இருக்கும். ஆகவே, இதர ராஜ்யங்களில் டீஸல் எண்ணை என்ன விலைக்கு விற்கிறதோ அந்த விலைக்கு அது இங்கேயும் விற்கக்கூடியவாறு டீஸல் எண்ணை மீதுள்ள விற்பனை வரியை உயர்த்துவதில் தவறில்லை என்று கனம் அமைச்சர் கூறுவதை நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இந்த வரி உயர்வால் விவசாயிகளுக்கு ஓரளவு அதிக பாரம்தான் ஏற்படும் என்று நாங்கள் கருதுகிறோம்.

சரியான நீர்ப்பாசன வசதிகள் இல்லாத பிரதேசங்களில்தான், மழையையும் கிணறுகளையும் நம்பி வாழும் பிரதேசங்களில்தான், விவசாய காரியங்களுக்காக டீஸல் என்ஜின் உபயோகிக்கப்படுகிறது. ஆகவே அந்த பகுதிகளிலுள்ள விவசாயிகள்தான் டீஸல் எண்ணையை வாங்குவார்கள். அந்தப் பகுதிகளில் மழையில்லாத காரணத்தினாலும், இன்னும் வேறு பல காரணங்களாலும் விவசாயத்தில் அடிக்கடி கஷ்ட நஷ்டங்கள் ஏற்படகூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் மீதுள்ள பாரத்தை, டீஸல் எண்ணை விற்பனை வரியை உயர்த்துவதன் மூலம் அதிகரிக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம். ஆகவே விவசாயிகளுக்கு இந்த வரி உயர்விலிருந்து விலக்களிக்கவேண்டியது மிக மிக அவசியம் என்பதை கனம் அமைச்சருக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படாதவகையில் வரியைக் குறைப்பதற்கு மசோதாவில் வகை செய்யவேண்டியது அவசியமில்லை என்றும், அந்தக் குறைப்பு தேவைப்படுமானால் பின்னர் உத்தரவு போட முடியும் என்றும் கனம் அமைச்சர் கூறினார். பின்னர் உத்தரவு போடுவதை விட இப்போது மசோதாவில் வகை செய்வதே மேலானது. இந்த வரியை விவசாயிகளைப் பொறுத்தவரையில் குறைப்பதால் சர்க்காருக்கு அதிகமாக நஷ்டம் ஏற்பட்டு விடாது. விவசாயிகள் டீஸல் எண்ணை வாங்கும்போது இப்போதுள்ளபடி 10 நயா பைசா வரியையே இனியும் விதிக்கலாம் என்றும், அதற்குமேல் வரி விதிக்கவேண்டாம் என்றும்தான் சொல்கிறோமே தவிர, விவசாயிகளுக்கு வரியினின்றும் பரிபூர்ணமாக விலக்கு அளிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. விவசாயிகளுக்கு புதிதாக வரி போடவேண்டாமென்றுதான் நாங்கள் சொல்கிறோம். கனம் அமைச்சர்

[Sri A. R. Marimuthu] [14th March 1958

இதைக் கருத்திற்கொண்டு விவசாயிகளுக்கு வரி உயர்வினின்றும் விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri T. S. RAMASWAMY PILLAI:** கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயிகளைப் பாதிக்காமல், பெரிய மோட்டார் தொழிற்சாலைகளை நடத்துபவர்களைப் பாதிக்கும்வகையில், மோட்டார் ஸ்பிரீட்டுகளின் மீதுள்ள வரியை உயர்த்துவதற்கான விதிகள் இந்த மசோதாவில் வகுக்கப்பட்டிருந்தால், எதிர்க் கட்சியிலிருந்து இந்த மசோதாவிற்குத் திருத்தங்கள் நிச்சயமாக வந்திருக்காது என்று சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், மோட்டார் தொழிலை நடத்துகிறவர்கள் இந்த வரியைக் கொடுப்பார்கள். இன்னும் மேலும் கொடுக்க சௌகர்யமாக இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய ஐந்தாண்டுத் திட்டத்திலே, அதிலும் உணவுப் பற்றாக் குறையாக இருக்கும் இந்தச் சிக்கலான நிலைமையிலே, ஏழை விவசாயிகள் உற்சாகமாக உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று முயற்சி செய்யக்கூடிய, **initiative** உள்ள அவர்கள்தான் இந்த இஞ்சினை வைத்து, நீர்ப்பாசன வசதி இல்லாத இடங்களிலும் கூட விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கிறார்கள். அத்தகைய சிறிய விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய டீஸல் எண்ணெயின் மீதும் மற்ற எண்ணெகள் மீதும் வரி விதித்ததால் நிச்சயமாக இந்த நாட்டில் விவசாயமும் உணவு உற்பத்தியும் பாதிக்கும் என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து. ஆகையால் முதன் முதலில் பட்ஜெட் கூட்டத்திலும் நாங்கள் கூறினோம், அதன் பின்னால் மசோதா வந்திருக்கிற போதும் நாங்கள் திருத்தம் கொடுத்துள்ளோம். இதை அந்தப் பக்கத்தில் இருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் நிச்சயமாக ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

வரியைப் பொறுத்த அளவில் யார் மீது போட்டால் தாங்குவார்களோ, யார் கொடுக்க சக்தியுள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மீது விதிக்கவேண்டும் என்றும், யார் மீது விதிக்கக்கூடாதோ யார் பாமரர்களாகவும், ஏழைகளாகவும் இருக்கிறார்களோ அவர்கள் மீது வரியே விதிக்காமலிருக்கவேண்டும், என்பது தான் நியதி. அதுதான் வரி விதிப்பு முறை (**Taxation policy**) ஆக இருக்க வேண்டும், அதுபோலவே தான் சமதர்ம அடிப்படையிலே நம்முடைய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையே ஏற்றுக்கொண்டிருக்கிற அரசாங்கம், நிச்சயமாக பெரிய நிலச்சுவான்தார்கள் மீதோ, பெரிய முதலாளிகள் மீதோ வரியை விதித்து ஏழை பாமர விவசாயிகள் மீது வரியைக் குறைக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

ஆகையால் விவசாய வருமான வரியைக் குறிப்பிட்டுக் கூறும்போது விவசாய வருமான வரியை உயர்த்தினாலும், ஏழை விவசாயியினுடைய நில வரியை ரத்து செய்யவேண்டும் என்று கூறினோம். அதேமாதிரிதான் இங்கு புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டன. கனம் மந்திரி அவர்கள் கூறினார்கள், ஏறக்குறைய மைசூரிலும், ஆந்திரத்திலும் டீஸல் எண்ணெய் பொறுத்தவரையில் நம்முடைய வரியைப் போட்டாலும் இதே நிலைமைதான் வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அது மட்டுமல்ல, சிறு விவசாயிகளுக்கு குறைகள் ஏற்பட்டால் நிச்சயமாக அவைகளைத் தவிர்க்கிறோம் என்று பெருந்தன்மையாகக் குறிப்பிட்டார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் எதிர்க்கட்சியில் இருப்பவர்களாகிய நாங்கள் சொல்வது என்ன? ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டதற்குப் பின்னால் அந்த வரியை எடுக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. இந்த வரி மூலம் நிச்சயமாக அவர்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்துகிறீர்கள் என்பதுதான் எங்களுடைய கருத்து. நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டு வரியை எடுப்பதை விட இப்போதே அதற்கு மாத்திரம் விதி விலக்கு—(**exemption**) கொடுத்து விட்டால் நிச்சயமாக வருமானம் குறைந்துவிடாது. காங்கிரஸ் மெம்பர்களிடத்தில் நான் கேட்டபோது அவர்கள் சொல்லுகிறார்கள் 5 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரை நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள், தினசரி 5 குதிரை வேகமுள்ள என்ஜினை



14th March 1958] [Sri T. S. Ramaswamy Pillai]

உபயோகிக்க இரண்டு காலன் டீஸல் எண்ணெய் செலவழிக்கக்கூடும் என்று கூறினார்கள். அமைச்சர் அவர்கள் கொடுத்த கணக்குப்படி காலன் ஒன்று 1 ரூபாய் 14 அணா ஆகிறது என்றார்கள். இந்த வரியை விதிக்கும்போது ரூ. 2–2–0 ஆகிறது. ஆக ஒரு காலன் எண்ணெய்க்கு நான்கணா வித்தியாசம் இருக்கிறது. 10 நயா பைசா வரி இப்பொழுது 35 நயா பைசாவாகிறது. ஆகையால் 25 நயா பைசா ஒரு காலனுக்குக் கூடும்போது ஒரு வருஷத்தில் 500 காலன் உபயோகிக்கிறார்கள்.

ஒரு வருஷத்திலே 8 மாதங்கள் என்ஜின் ஓட வேண்டியிருக்கிறது. ஆகையால் அவர்கள் 500 காலன் உபயோகிப்பதாகக் கூறினார்கள். பொறுப்பான காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் கூறியதை நான் நிச்சயமாக சந்தேகிக்க விரும்பவில்லை. 500 காலன் டீஸல் எண்ணெய்க்கு 120 ரூபாய் வரியை 5 முதல் 10 ஏக்கரா வரை நிலமுள்ள விவசாயி கொடுப்பதென்றால் அதை மிகவும் கடுமையான ஒரு பளு என்று நாங்கள் கருதுகின்றோம். அதுவும் உணவுப் பற்றாக்குறையாக இருக்கும் இந்த நேரத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய சௌகர்யமும், ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கவேண்டிய இந்த நேரத்தில் ஏழை, எளிய பாமர விவசாயிகள் மீது இந்த வரி விதித்தால் அவர்களுடைய ஊக்கமும் ஆர்வமும் கெட்டு விடலாம் என்று நான் இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் மீதுள்ள இந்த வரியை எடுத்து விட வேண்டுமென்று நாங்கள் மிகவும் வன்மையாகக் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri S. LAZAR:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபை முன்பாக வைத்திருக்கும் திருத்த மசோதாவை நான் பரிபூரணமாக வரவேற்கிறேன். வரவேற்கிறேன் என்று சொல்லும் நேரத்தில் எதிர்க்கட்சியிலிருந்து பேசிய நபர்கள் இருவர், ஏதோ அவர்கள் மட்டுமே விவசாயிகளிடத்திலே அக்கறை கொண்டவர்கள் போலவும், அவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை அவர்கள் மட்டுமே எடுத்துச் சொல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலையிலும், ஆனால், காங்கிரஸ் அரசாங்கத்திலோ அல்லது அரசாங்கத்தைச் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களோ விவசாயிகள் மீது வரி விதிக்க வேண்டும் என்று சொல்வதாக எண்ணிப் பேசுவதைப் பார்க்கும்போது மிகவும் வருந்த வேண்டியதாக இருக்கிறது. விவசாயத் துறையிலே எந்த அளவு எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு அக்கறை இருக்கிறதோ அதைவிட ஒரு மடங்கு அதிகமாகத்தான் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுக்கு இருக்கிறதே தவிர, அதைவிட எந்த அளவும் குறைவு இல்லை என்பதை பட்ஜெட் பிரசங்கத்தில் பேசுகிறபோது காங்கிரஸ் சார்பில் பேசிய அங்கத்தினர்கள் அனேகம் பேர் எடுத்துரைத்திருக்கிறார்கள். எனக்கு ஞாபகம் இருக்கிறவரையில் முதன் முதலாக எடுத்துச் சுட்டிக்காட்டியது காங்கிரஸ் அங்கத்தினர்தான் என்பதை இந்தச் சபைக்கு நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

12–2[illegible] p.m.

இந்தக் காரியத்தை விவரமாக எடுத்துப் பேசும்பொழுது, அதையும் கனம் மந்திரி அவர்கள் முன்னால் நிகழ்த்திய உரையிலேயே, " விவசாயம் பெருகவேண்டும், விவசாய மக்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படக்கூடாது என்று நிலையை அறிகிறோம். அதற்கு வழி செய்வதற்கு இடம் இருக்கிறது. இந்தச் சட்டத்திலேயே கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை " என்று எடுத்துரைத்துப் பேசினார். அவர் அப்படிப் பேசியிருந்தும் கூட, தங்களுடைய பெயர் பத்திரிகையில் வெளிவர வேண்டும் என்ற நோக்கத்தோடு, விவசாய மக்களுக்குத் தாங்கள்தான் பேசுவதாக வெளிவர வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு சில அங்கத்தினர்கள் இந்தச் சபையில் பேசுவது என்றால் அது சரியான முறை அல்ல என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன். கனம் மந்திரி அவர்கள் விவரமாகச் சொன்னார்கள். விவசாயத் துறையிலே இருக்கும் மக்களுக்கு உள்ளபடியே இதில் கஷ்டம் ஏற்படுமானால் அவர்களுக்கு உற்பத்திச் செலவு அதிகமாக ஏற்படுமானால், அதைக் கண்டிப்பாக கவனிப்போம், அதற்குத் தக்க

[Sri S. Lazar] [14th March 1958

விதிகள் மூலமாக உத்தரவிடுவோம் என்று சொன்ன பிறகு கூட, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் திருத்தங்கள் கொடுப்பதோ அல்லது திருத்தங்களை வற்புறுத்திப் பேசுவதோ சரியாகாது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதைப்பற்றி ஒரு சில குறிப்புக்கள் சொல்லும்போது, கனம் அங்கத்தினர் ஒருவர், 500 காலன் டீசல் எண்ணெய்க்கு உள்ள விலையைக் குறிப்பிட்டு சொன்னார்கள். நான் குறிப்பாகச் சொல்ல முடியும், சராசரி ஒரு ஏக்கர் இறைப்புப் புஞ்சை நிலம் வைத்துக்கொண்டு, அதில் ஒரு போகம் சாகுபடி செய்ய வேண்டுமென்றால், அவனுக்கு இரண்டு பாரல் டீசல் எண்ணெய் தேவைப்படுகிறது. இப்பொழுதிருக்கும் விலையைப் பார்க்கும் போது பாரல் ஒன்று 80 ரூபாய் வீதம், 2 பாரல்கள் எண்ணெய் விலை 160 ரூபாய் செலவாகிறது என்று கணக்கிட்டுச் சொல்ல முடியும். ஆனால், இப்பொழுது வரி விகிதம் அதிகமாகப் போடும் நேரத்தில் விவசாய மக்களுக்கும் அது பிரயோகிக்கப்படுத்துவோமேயானால் பாரல் ஒன்றுக்கு பன்னிரண்டரை ரூபாய் விலை அதிகமாகி, ஒரு ஏக்கருக்கு 25 ரூபாய் மட்டுமே விலை ஏறக்கூடும் என்பதை நான் இந்தச் சபையில் சொல்ல விரும்புகிறேன்.

மற்றொரு குறிப்பையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நமது மாகாணத்திலே விற்பனை ஆகக்கூடிய டீசல் எண்ணெயை நான்கில் ஒரு பாகம் விவசாயத் துறையிலே இருக்கும் மக்கள் வாங்கி விவசாயத்திற்கு உபயோகப் படுத்துகிறார்கள் என்பதையும் சபையின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

ஆகவே, இந்தத் துறையிலே பார்க்கும்போது விவசாய மக்களுக்கு பாதகம் ஏற்படாத விதத்தில், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஆணித்தரமாக பேசும் நேரத்தில் விவசாய மக்களுக்குக் கண்டிப்பாக விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்பதை எல்லோரும் உணருகிறார்கள். அதிலும் அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக எடுத்துச் சொன்ன பிற்பாடு கூட, அதை வற்புறுத்திப் பேசுவதோ அதற்குத் திருத்தங்கள் கொண்டுவந்து பேசுவதோ, அரசியல் கட்சியின் சார்பாகப் பேசுவது போலவும், அரசியல் நோக்கத்தோடு பேசுவது போலவும் ஆகுமே தவிர, அதற்கு எந்த விதமான அவசியமும் இல்லை என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

12-30 *SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர்
p.m. அவர்களே, டீசல் ஆயிலின் மேலே 25 நையா பைசா அதிகப்படுத்துவதைக் குறித்து, விவசாயிகளுக்கு இந்த வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதாக எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், ஆளும் கட்சி அங்கத்தினர்களும் பேசினார்கள். ஸ்ரீ லாசர் சொன்ன மாதிரி எதிர்க்கட்சிக்காரர்கள் விவசாயிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று நினைப்பதற்கு முன்பே, அதிகமான விவசாயிகளைப் பெற்றிருக்கிற ஆளும் கட்சி, ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள், முதன் முதலிலேயே விவசாயிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்பதாகக் கூறினார்கள். கட்டாயமாக விலக்கு அளிக்க வேண்டும் என்று அவர்கள் கூறியதை யாரும் மறுக்க முடியாது. விவசாயத்தைப் பலதுறையிலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காக நாம் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒரு புறத்தில் செலவு செய்துகொண்டு வரும்போது டீசல் எண்ணெக்காக 25 நையா பைசா வரி போட்டுத்தான் நம்முடைய விவசாயிகளுக்கு மன வருத்தத்தை உண்டு பண்ண வேண்டும் என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்லலாம். ஆந்திர மாகாணத்திலும் போடப்படுகிறது, மைசூரிலும் போடப்படுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். நமது ராஜ்யத்தில் போட்டாலும் விவசாயிகளை அது அதிகம் பாதிக்கிறது என்று தெரிந்தால் விவசாயிகளுக்கு விலக்கு அளித்து விடலாம். அதற்காக இந்தச் சபைக்கு வர வேண்டியதே இல்லை என்று



14th March 1958] [Srimathi T. N. Anandanayaki]

கனம் அமைச்சர் அவர்கள் இங்கே கூறப்பட்ட விஷயங்களை கவனத்தில் கொண்டு உறுதி தர முன் வந்ததற்காக பாராட்ட வேண்டும். இதிலுள்ள சங்கடத்தைத் தான் புரிந்து கொண்டு விட்டதை அவர் பெருந்தன்மையோடு எடுத்துச் சொன்னது ஜனநாயகத் தத்துவத்திற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்னையில் ஏதாவது சங்கடங்கள் வந்தால் அதைப் பற்றிக் கவனித்து இந்த வரிவிதிப்புக்கு விலக்கு அளிக்கலாம் என பெருந்தன்மையோடு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே நாளைக்கு வேண்டுமென்றே எதிர்க்கட்சிக்காரர்களால் பல சங்கடங்கள் உற்பத்தி செய்யப்படும். வரி விலக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக தூது கோஷ்டி அமைப்பதும், பத்து விவசாயிகளாக ஒன்று சேர்ந்து கொண்டு கிளர்ச்சியை நடத்த செய்வதும், இவற்றையெல்லாம் பார்த்து சர்க்கார் வரி விலக்கு அளித்தவுடனே தங்களால் தான் இந்த அரிய சாதனை ஏற்பட்டது என்பதாகப் பிரசாரம் செய்து கொள்வதாகவும் ஆகிவிடுமோ என்று நான் ஐயுறுகிறேன். நாம் செய்கிற நல்ல காரியத்தின் பயனை அவர்கள் தட்டிக் கொண்டு போய்விடாமல் இருக்க அவர்களுக்கு ஒரு சங்கடத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பமும், கிளர்ச்சியைத் தூண்டிவிடும் வாய்ப்பும் இல்லாமலேயே இப்போதே இங்கே வரி விலக்கு விவசாயிகளுக்குக் கொடுத்து விடலாம் என்று நான் நினைக்கிறேன்.

பொதுவாக டீசல் எண்ணையை எந்தப் பிராந்தியத்தில் மின்சாரம் கொடுக்காமல் இருக்கிறார்களோ அங்கே உபயோகப்படுத்துகிறார்கள். நீர்வளம் இல்லாத பகுதியில் உபயோகப்படுத்துகிறார்கள். நீர்வளம், நில வளம் இல்லாத பகுதியில் உள்ள விவசாயிகள் தங்கள் மண்ணை பொன்னாக்க வேண்டுமென்று பம்பு குழாய்கள் எல்லாம் வைத்து ரத்தத்தை வியர்வையாக வடித்து உழைக்கிற போது, நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழ பாடுபடும்போது அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்க நாம் டீசல் எண்ணைக்காவது அவர்களைப் பொறுத்த வரையில் வரி விலக்கு அளிக்க வேண்டியது தான் நல்லதாகும். இல்லாவிட்டால் அவர்களது உள்ளம் உடைந்து போகும் என்று சொல்ல விரும்புகிறேன். இல்லாவிட்டால் இந்த வரியானது விவசாயின் தலையில் "லாஸ்ட் ஸ்ட்ரா ஆன் த காமல்ஸ் பாக் " என்பது போல அவனுடைய முதுகு எலும்பை உடைக்கக்கூடிய அளவுக்குப் போய்விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இன்று இந்த எண்ணை மூலமாக அவர்களிடத்தில் இருந்து வரப் போகும் பணத்தின் மதிப்பும் வெகு குறைவாகத் தான் இருக்கப் போகிறது. போட்டார்கள் என்ற அவச் சொல்லைத் தவிற அதனால் நமக்கு பெருத்த நன்மை ஏற்பட்டுவிடப்போவதில்லை.

அதோடு இன்னொரு விஷயம் ஆந்திராவில் ஒரு காலன் டீசல் எண்ணை ரூ. 1·87 என்றும், மைசூரில் 1·96 என்றும், நம்முடைய ராஜ்யத்தில் ரூ. 1·72 தான் எண்ணை வரி உள்படி இருக்கும் என்பதாகவும் குறிப்பிட்டார்கள். இதில் தான் நாம் ஒரு விஷயம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. லாரி வியாபாரம் சரியாக இல்லாத காரணத்தினாலே லாரிகளைப் பலர் விற்பதற்கு முன் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். இன்றைக்கு லாரிகள் ஒரு ராஜ்யத்திலிருந்து இன்னொரு ராஜ்யத்திற்குப் போய் வர அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக இந்த டீசல் வரி விதிப்பு வந்தவுடன் நம்முடைய ராஜ்யத்திற்கும், அண்டை ராஜ்யங்களுக்கும் ஒரு காலனுக்கு 10 நையா பைசாவுக்கு மேல் வித்தியாசம் இருப்பதன் காரணமாக இங்கிருந்து எண்ணைகளை காலன் காலனாகக் கொண்டுபோகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதனால் இங்கே நடக்கும் வியாபாரத்தின் மூலமாக நமக்குக் கிடைக்கும் சிறிய வரி கூடக் கிடைக்காமல் போய்விடுவதற்கு வாய்ப்பு உண்டாகி விடுகிறது. ஆகவே இவற்றையெல்லாம் கவனித்து நாம் இப்போது வரி போடுவதை யோசிப்பதோடு விவசாயிகளுக்கு நிச்சயமாக

[Srimathi T. N. Anandanayaki] [14th March 1958

விலக்கு இப்போதே அளிப்பதற்கு சாத்தியமானால் அதையும் அமைச்சர் அவர்கள் கவனித்துச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **SRI C. NATARAJA ODAYAR** : கனம் சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இப்போது நமது அமைச்சர் அவர்கள் டீசல் எண்ணையின் மீது போட உத்தேசித்திருக்கிற வரியை மட்டிலும் ஆதரிக்காமல் பேச முன் வந்திருக்கிறேன். மற்ற வரிகள் விவசாயிகளை அவ்வளவாகப் பாதிக்க வில்லை. ஆனால், இந்த விவசாய நாட்டில், டீசல் எண்ணையின் மீது போடப்படும் வரியானது எவ்வகையில் விவசாயிகளைப் பாதிக்கும் என்பதை இங்கே எதிர்க்கட்சியில் இருந்து மட்டும் அல்ல, ஆளும் கட்சியில் உள்ளவர்கள் பேசியதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று நான் நினைக்கிறேன். நானும் என்னுடைய கட்சியின் சார்பில் இந்த வரியைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாய உற்பத்திப் பொருள்கள் நாட்டில் பெருகி வருகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். இந்த வரி விதிப்பினால் பொருளாதார புள்ளி விவரங்களையே மாற்றியமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். இன்றைக்கே விளை பொருள்களின் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. அப்போது இன்னும் அதிகமாக ஏறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே டீசல் எண்ணைக்கு வரி போட்டாலும் விவசாயிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்கிற நல்ல கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டால் அது அவருக்கு நல்ல புகழை வாங்கித் தரும். பக்கத்து ராஜ்யங்களில் போடுகிறார்கள். இங்கும் போடுகிறோம் என்று சொல்லாமல், பக்கத்து ராஜ்யங்களில் போட்டாலும் விவசாய அபிவிருத்தியை உத்தேசித்து நமது ராஜ்யத்தில் டீசல் எண்ணைக்கு விவசாயத்தைப் பொறுத்த வரையில் வரி இல்லை என்று நமது அமைச்சர் அவர்கள் செய்தால் இது இதர ராஜ்யங்களுக்கு வழி காட்டியாகவும் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நல்ல பெயர் தமிழ் நாட்டுக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. சாதாரணமாக 25 நையா பைசா போடுவதனால் நம்முடைய வருமானம் பெருகிவிடப் போவதில்லை. ஜமீன்தார்களுக்காக இன்னமும் நாம் அதிக தொகை நஷ்ட ஈடாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி பணம் வீணாக விரயமாகாமல் செய்தால் இந்த வரியைப் போட வேண்டிய அவசியமே ஏற்படாது. எப்படியிருந்தாலும் அமைச்சர் அவர்கள் விவசாயத்தைப் பொறுத்த வரையில் டீசல் எண்ணைக்கு வரி விலக்கு அளித்தார்களானால் அமைச்சர் ஓர் நல்ல காரியத்தைச் செய்தார் என்பதாக தமிழ்நாடு முழுவதும் அவரைப்பாராட்டும் என்பதாக நான் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRI A. R. SUBBIAH MUDALIAR** : கனம் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் பேசும்போது டீசல் எண்ணையின் விலை பற்றி சில புள்ளி விவரங்களைக் கொடுத்தார்கள். வரி உள்படி ஆந்திர ராஜ்யத்தில் ஒரு காலன் ரூ. 1·87 என்றும், மைசூரில் ரூ. 1·96 என்றும், நம்முடைய ராஜ்யத்தில் ரூ. 1·72 தான் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் புதிதாகப் போடப்படுகிற வரியை கவனிக்கும்போது மைசூர் ராஜ்யத்தில் ஒரு காலனுக்கு 19 நையா பைசா விதிக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் முன் விதித்தது 25 நையா பைசா, இப்பொழுது 10 நையா பைசா ஆக 35 நையா பைசா விதிக்கிறோம். இது அதிகச் சுமையாக ஏற்படுகிறது. இதனால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

சாதாரணமாக ஐந்து ஹார்ஸ் பவர் உள்ள டீசல் என்ஜின் வைத்திருப்பவர் ஒரு காலன் எண்ணை கொண்டு மூன்று மணி நேரம் அடிக்கலாம். ஆக, மாதம் 90 அல்லது 100 காலனுக்கு மேல் வராது. அவர் இப்பொழுது 25 ரூபாய் வரி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.



14th March 1958] [Sri A. R. Subbiah Mudaliar]

ஆக, வருஷம் ஒன்றுக்கு 300 ரூபாய் ஆகிறது. இந்த 300 ரூபாயை ஒரு ஏழை விவசாயி சுமக்க ஏற்படுகிறது. மொத்தத்தில் இந்த டீசல் எண்ணையை கூடுதலாக உபயோகப்படுத்துகிறவர்கள், லாரி சொந்தக்காரர்களும், பஸ் சொந்தக்காரர்களுந்தான். விவசாயிகள் உபயோகிக்கவில்லை. பல கிராமங்களிலும் விவசாயத்திற்கு மின்சாரத்தை உபயோகித்து வருகிறார்கள். மின்சார வசதியில்லாத இடங்களில், இந்த டீஸல் எண்ணையை உபயோகிக்கிறார்கள். அதோடு இப்பொழுது கரண்ட் கட் ஏற்பட்டிருக்கிறது. விடியற்காலம் ஆறு மணி நேரம் தான் ஓட்டலாம் என்று விதியிருக்கிறது. பகல் நேரங்களுக்கு விவசாயத்திற்கு கொடுக்கப்படும் கரெண்ட் காணமல் அவர்கள் இந்த ஆயில் என்ஜினை உபயோகிக்க வேண்டி வருகிறது. இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கும்போது விவசாயிகளுக்கு மட்டும் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்பது தான் என் வேண்டுகோள். அதை, பலமுறை சொல்லியும், அதை ரூலில் செய்கிறேன் என்கிறார்கள். அப்படி ரூல் வருவதற்கு முன் கட்சிகளின் துஷ்பிரசாரம் ஆரம்பமாகி விடும். விவசாயிகளுக்கு நன்மையே செய்யவில்லை, அவர்களின் மேல் அதிக வரி போடுகிறார்கள் என்றெல்லாம் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இதற்கு கூப்பன் ஸிஸ்டம் வைக்கலாம். ஒரு என்ஜின் வைத்திருப்பவர்களுக்கு மாதம் 100 காலன் கொடுக்கலாம் என்று வைக்கலாம். 100 காலன் என்று வரும்போது விவசாயிகளுக்கு மாதம் 25 ரூபாய் நன்மை கிடைக்கிறது. அப்படி வைத்து விவசாயிகளுக்கு விதி விலக்கு கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். உணவு உற்பத்தியை விருத்தி செய்ய மூலதனம் ஜாஸ்திசெலவழிக்க வேண்டியிருப்பதால் இந்த விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும். விவசாயிகளுக்கு விதி விலக்கு அளிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI M. P. SUBRAMANIAM** : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் இந்த வரியினால் பெரும் பகுதி பாதிக்கக்கூடியவர்கள் லாரி, பஸ் சொந்தக்காரர்கள் என்பதை நாங்கள் உணருகிறோம். கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குள்ளாக பெட்ரோல் உபயோகித்து வந்த லாரி, பஸ் சொந்தக்காரர்கள் இப்பொழுது பெரும்பகுதி டீஸல் ஆயிலை உபயோகித்து வருகிறார்கள். இந்த டீஸல் ஆயிலுக்கு வரி, 10 காசு என்றிருந்ததை 25 காசு உயர்த்தி 35 காசாக ஆக்கியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 6 அணாவாகிறது. நான், பஸ், லாரி சொந்தக்காரர்களுக்கு வரி போடுவதை எதிர்க்க வில்லை. ஒவ்வொரு பஸ் சொந்தக்காரர்களுக்கும், நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய எல்லாச் செலவினங்களும் போக 50, 60 ரூபாய் லாபம் பெறுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில், விவசாயிகளையும் இந்த வரி பாதிக்கிறது என்பதை இச்சபையில் இருக்கும் பலதரப்பட்ட அங்கத்தினர்களும் எடுத்துக்கூறி, இந்த வரி விவசாயிகளைப் பாதிக்கக் கூடியதாக இருக்கக்கூடாது என்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார்கள். உணவு பொருள்களின் விலை, இப்பொழுது 512 புள்ளியாக ஏறியிருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்கள் அவர்களது உரையில் கூறியுள்ளார். இந்த விலையேற்றத்தைக் குறைக்க வேண்டுமென்று நாம் எல்லோரும் சொல்கிறோம். உணவுப் பொருள் உற்பத்தி செய்யாத பாட்டாளி வர்க்கத்தில் உள்ள மக்கள் இந்த உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் இதில் செலவு செய்ய வேண்டியிருப்பதால், உணவுப் பொருள்களின் விலை குறைய வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் விவசாயிகளின் பிரச்னையை தனியாக எடுத்துக் கொள்வோமேயானால், விவசாயத்திற்கு மிக அவசியமான பொருள்களின் விலை ஏற்றத்தை தடுத்து நிறுத்துவதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. உணவுப் பொருள்களின் விலை இறங்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களின் விலை ஏறிக் கொண்டேயிருக்கிறது. பத்து காசில் இருந்து 35 காசாக உயர்த்தப்பட்டிருக்கும் இந்த வரி விவசாயிகளின் செலவினங்களை நிச்சயமாக அதிகப் படுத்தும். ஆனால், பலர் கூறலாம், எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி வந்து விட்டபடியால், டீஸல் எண்ணையை உபயோகிப்பவர்கள் குறைவு என்று சொல்லலாம். விவ

12-40 p.m.

[Sri M. P. Subramaniam] [14th March 1958

சாயத்திற்காக மின்சார வசதி பல ஆயிரம் கிராமங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். அது, தெருக்களில் விளக்குகள் போட பயன் பட்டிருக்கலாம், அல்லது ஒரு சில விவசாயிகளுக்கு அது பயன் பட்டிருக்கலாம். மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கும் கிராமங்களில் கூட இன்னும் கூடுதல் மின்சாரம் வேண்டுமென்று கூறுகிறார்கள். இன்று இரண்டு மூன்று ஏக்கர்கள் உள்ள விவசாயிகள் கூட ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுத்து என்ஜின் வைத்துக்கொண்டு உற்பத்தியைப் பெருக்க முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். கனம் சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னது போல், இந்த சிறிய விவசாயிகளும் கூட ஆண்டு ஒன்றுக்கு அதிகமாக மாதம் 300 வரை வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. உணவுப் பொருள்களின் விலை குறைய வேண்டுமென்றால், விவசாய உற்பத்திச் செலவு குறைய வேண்டும். இப்போதைய நிலையைக் கொண்டு பார்த்தால், விவசாய உற்பத்திச் செலவிற்கும், உணவுப் பொருள்களின் விலைக்கும் அதிகமாக வித்தியாசம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். உணவுப் பொருள்களின் விலை அதிகமாகியிருக்கலாம். அதே நேரத்தில் விவசாய உற்பத்தி செலவும் அதிகமானால் அவர்களுக்கும் கிடைக்க கூடிய நெட்இன்கம் குறைவாக இருக்கிறது. ஆகவே, விவசாயம் நன்மையடைய, விவசாய உற்பத்தி பொருள்களின் விலை குறைய வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்கு இந்த வரியில் இருந்து விலக்கு அளிக்கவேண்டும். அதனால் சர்க்காருக்கு சிறிது நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அடுத்தபடியாக இதற்காக கூப்பன் ஸிஸ்டம் வைப்பதினால் சில தொந்தரவுகள் ஏற்படலாம். அதை, விவசாயிகளிடம் இருந்து லாரி, பஸ் சொந்தக்காரர்கள் வாங்கி பயன் படுத்திக்கொள்வார்களே அதை எப்படி தவிர்க்கலாம் என்று அரசாங்கம் யோசிக்கலாம். கொள்கை அடிப்படையில் விவசாயிகளுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டால் பின் அதை லாரி அல்லது பஸ் சொந்தக்காரர்கள் வாங்கி உபயோகிக்காமல் இருக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். ஆகவே, விவசாயிகள் டீஸல் ஆயிலை பயன் படுத்தும் வகையில் இந்த 25 காசை அதிகப்படுத்தக்கூடாது என்று அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: உதவி சபாநாயகர் அவர்களே, நான், இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. அதற்குப் பதிலாக அதில் கோரக் கூடிய வரி உயர்வை கொடுப்பதற்கு என் கட்சி சார்பில் ஏற்கனவே பட்ஜெட் மீது பேசும் சமயத்தில் என் சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறேன். நாம் கோருவது, விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடிய எண்ணைக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று கோரியிருந்தோம். இப்பொழுதும் அதே அடிப்படையில் தான் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் எங்களுடைய வாதத்தை எதிர்பார்த்தோ என்னவோ, அந்த மாதிரி விதி விலக்கு கொடுக்க வேண்டிய அவசியமில்லை, என்று எடுத்துக் காட்டினார். இருந்தாலும், சம்பிராதயத்திற்காக கடைசியில், அப்படி பாதகம் ஏற்படுமாயின் விதிவிலக்கு கொடுப்பதுபற்றி பின்னால் ஆலோசிக்கப்படும். இப்பொழுது இந்த மசோதா அப்படியே இருக்க வேண்டுமென்று கூறினார்கள். அதோடு ஆந்திராவிலும், மைசூரிலும் கிட்டத்தட்ட நம்மை விட அதிகமாகவோ அல்லது அதே அளவிற்கு இருக்கும் சமயத்தில் நாம் நம் ராஜ்யத்தில் மட்டும் விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று அவர்கள் வாதித்ததில் இருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க சம்மதம் இல்லை என்று தெரிகிறது. இரண்டு பாகங்களில் இருந்தும் அங்கத்தினர்கள் அப்படி விதி விலக்கு வேண்டுமென்று சொல்லியிருப்பதால் பின்னர் வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மந்திரியவர்களின் தயவினால் மட்டும் விட்டு விடக் கூடாது. விவசாயத்திற்கு உண்மையில் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். ஆகவே, பம்ப் செட்களுக்காக உபயோகப்படுத்தும் எண்ணைக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும். ஆகவே, இந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், இந்த சபை இந்த மசோதாவை ஏகமனதாக ஆமோதிக்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலையை சிருஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



14th March 1958]

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பட்ஜெட் விவாதத்தின் போதும் இதைப்பற்றி நான் 10 நிமிடம் பேசினேன். அதாவது விவசாயிகளுக்கு இது சம்பந்தமாக விலக்கு கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி சொன்னேன். இப்பொழுது இருக்கும் சந்தர்ப்பத்தில் விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகிறார்கள் என்பதை நான் அதிகமாக சொல்ல வேண்டியதில்லை. முக்கியமாக பஞ்சப்பிரதேசங்களாகிய எங்கள் ஜில்லாவில், வட ஆற்காடு ஜில்லா, சேலம், ராமநாதபுரம் போன்ற முக்கியமான பகுதிகளில் உள்ள விவசாயிகள் மழையில்லாத காரணத்தினால் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அது தவிர இரண்டு மூன்று வருடங்களாக பூச்சியின் தொல்லை, இம்மாதிரியான பல விதமான கஷ்டங்கள் அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதோடு விலைவாசி ஏறியதின் காரணமாகவும் இரும்பு போன்ற சாமான்கள் சரியாக கிடைப்பதில்லை. மாடு, உழவுக்கு வேண்டிய முக்கியமான கருவிகள் இவைகளின் விலை ஏறிக் கொண்டே போகிறது. இத்தனை கஷ்டங்களும் இருக்கின்றன. விவசாயிகளுக்காக மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. அதனால் அனேகம் பேர்கள் சௌகரியம் அடைந்து வருகிறார்கள் என்று பேசி வருகிறார்கள். ஆனால் இப்போது மின்சாரம் சரியாக கிடைப்பதில்லை. மின்சார வெட்டு வந்ததின் காரணமாக எங்கள் ஜில்லாவிலுள்ள அனேகம் பேர்கள் இரண்டாவது சாகுபடிக்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நல்ல தருணத்தில் மின்சாரம் போதிய அளவு உபயோகப்படுத்த முடியாமல் போய்விட்டது. இவ்விதம் மின்சாரம் போதிய அளவு கிடைக்காத காரணத்தால் டீஸல் எண்ணெயை உபயோகித்து சாகுபடி செய்து வருகிறார்கள். அதற்காகத்தான் அவர்களுக்கு விலக்கு கண்டிப்பாக அளிக்க வேண்டுமென்று கேட்கிறேன். நம்முடைய ராஜ்யத்தில் மட்டுமல்ல ஆந்திராவிலும் கேரளாவிலும் இவ்விதம் டீசலுக்கு வரி போட்டு வசூலித்து வருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்படியிருந்தபோதிலும் நம் ராஜ்யத்தில் விவசாயிகளை பொறுத்த மட்டில் கண்டிப்பாக விலக்கு அளிக்கவேண்டும். முக்கியமாக அவர்களுடைய நெல், எரு போன்ற தான்யங்களை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு கொண்டு போவதற்கும், மற்றபடி தான்யங்களை விற்பனை செய்வதற்கும் ட்ராக்டர்களை உபயோகப்படுத்துகிறார்கள். அதற்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும். இதை ஆளும் கட்சியில் இருக்கின்ற அங்கத்தினர்களும் ஆதரிக்கின்றார்கள். விவசாயிகளுக்கு விதிவிலக்கு வேண்டாம் என்று ஒரு அங்கத்தினராவது சொன்னதில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் நாங்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் கட்சி சம்பந்தம் ஒன்றுமில்லை. ஆகவே இதை ஆதரிக்காதவர்கள் விவசாயிகளுக்கு துரோகம் செய்தவர்கள் ஆவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இதை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 12–[illegible] p.m.

**THE HON. SRI R. VENKATARAMAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுவாக எல்லோருமே விவசாயிகள் என்றால் பெரிய ஒரு அன்பு வைத்து, அனுதாபம் காட்டி எந்த விதமாக அவர்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வது ஒரு கட்சி மட்டுமல்ல, எல்லா கட்சிகளும் கேட்டுக்கொள்ளுகிறது. இன்றைக்கு எத்தனை ஏழை விவசாயிகள் பம்பு செட்டுகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை பார்க்கவேண்டும். மொத்தமாக என்னிடம் புள்ளி விவரம் இல்லை. கடந்த ஐந்து ஆண்டுகளாக டீஸல் எண்ணெயை உபயோகித்து வருகிற பம்பு செட்டுகள் 1,000 என்று என்னிடத்தில் கணக்கு இருக்கிறது. இதனால் இன்றைக்கு ஏராளமான விவசாயிகள் எல்லோரும் பாதிக்கப்பட்டு விட்டார்கள். விலைவாசி இதனால் ஏறிவிடும் என்றும் சொல்லப்பட்டது. இந்த நாட்டில் இருக்கக்கூடிய லட்சோபலட்ச விவசாயிகள் டீஸல் எண்ணெயை உபயோகிக்காமல் இருக்கிறார்கள். இன்றைக்கு ஆயிரம் அல்லது அதிகமாக சொன்னால் சுமார் இரண்டாயிரம் பேர்கள்தான் இந்த எண்ணெய் வரி கொடுக்கவேண்டிவரும். அதன் மூலமாக விவசாயிகளுக்கு

[Sri R. Venkataraman] [14th March 1958

அதிகமான கஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று சொன்னால் அந்த வாதம் சரியானது அல்ல என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவதாக பம்புசெட்டுகள் விஷயத்தில் எந்த முறையில் விதிவிலக்கு அளிப்பது என்று பார்ப்போமானால் விதிவிலக்கு அளிப்பதற்கு பெரிய அளவில் இந்த சட்டத்தை மாற்றவேண்டும். அதன் மூலமாக் சட்டத்தை ஏமாற்றுவதற்கு வழி அதிகமாக ஏற்பட்டு விடும் எனபதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எண்ணெயை பொறுத்தவரையில் விவசாயத்திற்கு மாத்திரம் விதிவிலக்கு அளித்துவிட்டு லாரிகளில் உபயோகித்தால் விதிவிலக்கு இல்லை என்று பிரித்து வைக்கமுடியாது. ஆனால் இதில் மற்ற மாகாணங்களை ஒப்பிட்டு பார்க்கும்பொழுது விவசாயிகளுக்காக ஒரு குறையும் செய்து கொடுக்கவில்லை. மைசூர் ராஜ்யத்திலாகட்டும், அல்லது ஆந்திர மாகாணத்திலாகட்டும், இதற்கென்று விலை குறைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லையென்றே நினைக்கிறேன். டீஸெல் எண்ணெய் விலை குறைவாக எங்கும் இருப்பதாக தெரியவில்லை. எந்த துறையிலாவது பம்பு வைத்திருப்பவர்களுக்கு இதன் மூலம் ஏதாவது சலுகை கிடைக்காதா என்று எதிர்பார்ப்பது போல் எனக்கு தோன்றுகிறது. இந்த வாதத்தின் முடிவும் அப்படிதான் இருக்கிறது. ஆகவே இம்மாதிரி சட்டத்தில் ஏமாற்றுகின்ற முறை இருந்தால் அதனால் பல தொல்லைகள் ஏற்படுகிறது. இதனால் பல கேஸ்கள் போட வேண்டிய நிலைமைகள் ஏற்படும். ஆகவே இதனால் சட்டபூர்வமாக இதை மாற்றம் செய்வதற்கில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உண்மையிலேயே விவசாயம் பாதிக்குமானால் அதை நிர்வாக முறையில் பரிசீலனை செய்யமுடியும். நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், நிர்வாகத்துறையில் பரிசீலிக்கலாம் என்று மந்திரி சொல்லுவது வெறும் கண்துடைப்பு மாதிரி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். சட்ட பூர்வமாக சலுகை கொடுக்க முடியாவிட்டாலும் நிர்வாக முறையில் கொடுக்கலாம் என்றுதான் சொல்லுகிறேன். அதாவது குறைவாக ஹார்ஸ் பவர் வைத்திருக்கின்றவர்களுக்கு ரிபேட் கொடுக்கின்ற முறையில் ஏதாவது சலுகைகள் கொடுக்கலாம். இதை சட்டபூர்வமாக செய்யமுடியாது. எக்ஸிக்யூட்டீவ் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மூலமாக செய்யமுடியும். இதைதான் நான் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த சட்டத்தினால் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை. மற்ற ராஜ்யங்களிலும் இதே மாதிரிதான் அமுல் நடத்தப்படுகிறது. கேரள ராஜ்யத்திலும் டீஸெல் எண்ணெயின் மீது வரி விதித்து இருக்கிறார்கள். அங்கே இதன் விலையும் குறைவாக இல்லை என்றுதான் தெரிகிறது.

**Sri M. KALYANASUNDARAM :** அங்கே என்ன விலை என்பதை தெரிவிக்க முடியுமா?

**The Hon. Sri R. VENKATARAMAN :** அந்த புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. எப்படியிருந்தபோதிலும் இதைவிட குறைவாக இருக்காது, இருக்க முடியாது என்று என்னால் சொல்லமுடியும். ஆகவே இந்த முறையில் வரிகள் எல்லாம் சற்றேறக்குறைய ஓரளவு சமமாகத்தான் இருக்கிறது. அடுத்தபடியாக கனம் அம்மையார் அவர்கள் சொன்னார்கள் அடுத்த ராஜ்யத்தில் அதாவது வரி இல்லாத இடங்களுக்கு லாரியை கொண்டு போய் அதில் எண்ணெயை நிரப்பிக்கொண்டு வந்து விடுவார்கள் என்று சொன்னார்கள். சாதாரணமாக லாரிகளில் அதிகமாக 10 காலன் அல்லது 12 காலன் கூடிப்போனால் 14 காலன் போட்டுக்கொண்டு வரமுடியும். ஆகவே இவ்விதமாக ஏமாற்றுதல் நடக்கும் என்று சொல்லுவது மிகைப்படுத்தி சொல்லுவதாகும். அதிலும் லாரிகள் எல்லாம் அதிகமாக அடுத்த தேசத்திற்கு போய்க்கொண்டு இருக்காது. ஆகவே அந்த விதமாக கஷ்டங்கள் ஏற்படுவதற்கில்லை. ஆகவே இந்த சட்டத்தில் இப்போது இருக்கின்றபடியே ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் கஷ்டங்கள் அல்லது குறைகள் ஏதாவது ஏற்படுமானால் அதை நிர்வாக முறையில் தீர்ப்பதற்கு பரிசீலனை செய்யலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



14th March 1958]

DEPUTY SPEAKER : I shall now put the motion to the vote of the House. The question is—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) be taken into consideration ".

The motion was put and carried, and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

### *Clause* 4.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 4 do stand part of the Bill."

**Sri T. S. RAMASWAMY PILLAI :** Sir, I move—

" In the proposed new section 3 to sub-section (1), *add* the following proviso namely :

' Provided that this tax will not be levied on the sale of diesel oil or motor spirit other than petrol or diesel oil to agriculturists for bona fide agricultural purposes ' ".

The amendment was duly seconded.

**Sri A. R. MARIMUTHU :** Sir, I move—

" In the proposed new section 3, to sub-section (1), *add* the following proviso namely :

' Provided that in case of sale of diesel oil to the agriculturists for agricultural purposes, the tax shall be at the rate of 10 naye paise per gallon ' ".

The amendment was duly seconded.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** Sir, I move—

" In the proposed new section 3, to sub-section (1), *add* the following proviso namely :

' Provided that the authorized sale of diesel oil to agriculturists shall be exempted from the levy of tax mentioned in subsection ' ".

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : Clause 4 and the amendments are before the House for discussion.

**Sri P. S. CHINNADURAI :** மதிப்புக்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, ஜனங்களுடைய பொதுவான வெறுப்புக்கு ஆளாகக் கூடிய வரிகளையெல்லாம் நமது மதிப்பிற்குரிய அமைச்சர் கனம் வெங்கடராமன் அவர்களே கொண்டு வரவேண்டிய சூழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பது மிகவும் வருந்துதற்குரியதாக இருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.

SRI P. S. CHINNADURAI : இந்த வரி விஷயத்திலே கூட அவ்வாறு நேர்ந்திருக்கிறது. விவசாயிகளுக்கு உபயோகமாகக் கூடிய எண்ணெய்க்கு அடியோடு வரி விலக்கு அளித்துவிட வேண்டுமென்றும், அவர்கள் எந்த விதமான வரியும் செலுத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் சலுகை அளிக்க வேண்டும் என்று இந்தத் திருத்தம் கூறவில்லை. இப்போது இந்தச் சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற திருத்தம், ஏற்கனவே எந்த அளவுக்கு விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் எண்ணெய்க்கு வரி இருந்ததோ, அதுவே இருக்கட்டும், அதிகப் படுத்தப் போகிற வரியை மாத்திரம் விவசாயிகளுக்குப் போடவேண்டாம் என்று கூறுகிறது. கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். 1,000, 2,000 பேர் தான் இந்த டீஸெல் ஆயிலால் ஓடக்கூடிய என்ஜின்களை வைத்திருப்பார்கள் என்று குறிப்பிட்டார்கள். எத்தனை பேர்கள் என்பது முக்கியமல்ல, இது யாரை பாதிக்கிறது, தொழில் எந்த அளவு பாதிக்கப்படும் என்பதுதான் முக்கியம். இந்த வரியினால் விவசாயப் பண்டங்களின் விலை உயர்ந்து போய்விடும் என்று சொல்வது ஒரு பேச்சல்ல. இந்த வரி இல்லாமலேயே ஏதோ ஒரு வகையிலே விலைவாசிகள் உயர்ந்து போகிறது. விலைவாசிகள் ஏறிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த விலைவாசி உயர்வினால் ஏற்படக்கூடிய பலன் விவசாயிக்குக் கிடைப்பதில்லை. அந்தப்பலன் யாருக்கோ போய்விடுகிறது. ஆனால் விவசாயினுடைய உற்பத்தி செய்கிற செலவு—பண்டங்களை உற்பத்தி செய்கிற செலவு—அதனால் அதிகரித்து விடும் என்று அடிக்கடி இந்த சபையிலே கூறப்படுவதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் ஆந்திராவைக் குறிப்பிட்டார்கள், கேரளாவைக் குறிப்பிட்டார்கள். அங்கே ஆயில் என்ஜின் வைத்து எத்தனைப் பகுதிகளில் விவசாயம் நடத்தப்படுகிறது என்று விளங்கவில்லை. கேரளத்திலும், ஆந்திராவிலும் ஆயில் என்ஜின் இருந்தால் கூட நம் தமிழ்நாட்டில் இருக்கிற அளவுக்கு இருக்கிறதா என்று கேட்கிறேன். குறிப்பாக தென் ஆற்காடு, கோயம்புத்தூர் ஜில்லா ..

THE HON. SRI R. VENKATARAMAN : ராயலசீமைப் பகுதி ஹைதராபாத் பகுதி எல்லாவற்றிலும் பூராவாக ஆறு இல்லை என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : ஆகையால், தமிழ் நாட்டில் இருக்கின்ற நிலைமை எப்படியும் ஆந்திரத்தின் நிலைமையை விட மோசமானது. ஆந்திரத்திலே கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, பெண்ணார் எல்லாம் இருக்கிறது. இங்கே பார்த்தால் காவேரி ஒன்றுதான் இருக்கிறது. அதே போல கேரளாவின் நிலைமையும் அப்படித்தான். ஆகவே, தமிழ் நாட்டின் நிலைமையை ஆந்திராவோடோ கேரளாவோடோ ஒப்பிட்டு பார்க்கக் கூடாது—சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இங்கே டீஸெல் ஆயிலில் ஓடுகிற என்ஜினை வைத்து விவசாயம் செய்வதானது அதிகமாகி வருகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். சமீபத்திலே சென்னை சர்க்கார் ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். மின்சார வினியோகம் சம்பந்தப்பட்ட வரையில், மின்சார வெட்டு இருக்கிற காலத்தில் மின்சார பற்றுக்குறை அதிகமாக இருக்கிற காலத்தில் யாருக்கு இதில் முதலிடம் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவு என்ன? தொழிலுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும். விவசாயத்திற்கு இரண்டாம் பட்சமாகத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று புதியதாக முடிவு செய்திருக்கிறார்கள். விவசாய அபிவிருத்திக்குப் பிரசாரம் செய்து வருகிறோம். ஆனால் மின்சாரம் கொடுக்க மாட்டோம், புதியதாக மின்சாரம் கொடுக்க இயலாது என்று சொல்லிவிட்டார்கள். மின்சாரம் இல்லாவிட்டாலும் டீஸெல் ஆயில் என்ஜின் வைத்து கொள்ளலாம் என்றால் அதற்கு வரி விதிக்கிறோம். விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற—விவசாயத்தையே பெருமளவுக்கு நம்பியிருக்கிறவர்களுடைய கதி என்ன என்று கேட்கவிரும்புகிறேன். எப்போதுமே அதிக பாசன வசதியில்லாத பகுதிகள் மிகமோசமாக, பாரபட்சமாக கவனிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதை நீடிக்க வகை செய்கிறது என்று நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.



தஞ்சை ஜில்லா, திருச்சி ஜில்லாப் பகுதிகளைப் போலவே மற்ற ஜில்லாக்களில் விவசாயம் நடைபெறவில்லை. ஏற்றக் கிணறை நம்பித் தான் விவசாயம் நடைபெறுகிறது. அப்படிப்பட்ட பகுதிகளில் சிறிய விவசாயிகளும் பெரிய விவசாயிகளும் என்ஜின் வைத்து பாசனத்திற்கு ஏற்பாடு செய்வது என்பது சமீப காலத்திலே அதிகரித்து வருகிறது. கடன் வாங்கியாவது என்ஜின் வைத்து விவசாயம் செய்யவேண்டும் என்ற உணர்வு அதிகரித்து வருகிறது. சில இடங்களில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்கூட இந்த என்ஜின் வாங்கப் பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது இந்த வரியிலிருந்து விவசாயிகளுக்கு விலக்குக் கொடுப்பது முற்றிலும் நியாயமானது என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் பெரிய மனதோடு ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணினேன். அதற்காகத்தான் நான் ஆரம்பத்தில் பேசாமல் காங்கிரஸ் பக்கத்திலிருப்பவர்கள் பேசினால் விட்டுக்கொடுத்து விடுவார் என்று நினைத்தேன். ஆனால் ஏமாற்றமடைந்தேன். அந்த ஏமாற்றத்தின் விளைவாக இப்போது நான் பேச எழுந்தேன். இந்த வரிப் பிரேரணையை எதிர்த்துப் பேசுவதினால் எனக்கு அவரிடம் இருக்கின்ற அன்பு குறையாது, அந்த அன்பு வளர்ந்திருக்கிறது. இப்போது அவரது வரிப்பிரேரணையை எதிர்க்கவேண்டிய நிலைமை வந்திருக்கிறது. இப்போதாவது இதை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நண்பர் சின்னதுரை அவர்கள் நான் சொன்ன எந்த வாதத்திற்கும் பதில் சொல்லவில்லை. நான் சொனனேன், 2,000 பம்ப் செட்டுகள்தான் இருக்கும் என்று. 1,000 போன வருஷத்தில் இருந்தது என்று சொன்னேன். கடந்த அதாவது முதல் ஐந்தாண்டு திட்டத்திலே 1,000 ஆயில் என்ஜின்கள் என்று சொன்னேன. . . . . . .

SRI M. P. SUBRAMANIAM : யார் கொடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : கவர்ன்மெண்ட் சப்ளை செய்திருக்கிறார்கள். I will meet all the points. I do not want to make any mistake. But we should not differ on facts. ஐந்து ஆண்டு திட்டம் மூலமாக கொடுக்கப்பட்ட ஆயில் என்ஜின்கள், சர்க்காரினால் கொடுக்கப்பட்ட ஆயில் என்ஜின்கள். தனியாக பணம் கொடுத்து வாங்கியிருப்பவர்கள் பெரிய பணக்காரர்கள் இருக்கலாம். இது எந்த விதத்திலும் ஏழை விவசாயிகளை பாதிக்காது, அவர்களைக் காரணமாகக் காட்டி பணக்காரர்கள் சலுகை பெறப் பார்க்கிறார்கள் என்று சொன்னேன். அதைத்தான் நீங்களும் வலியுறுத்துகிறீர்கள் . . . .

SRI M. P. SUBRAMANIAM : அமைச்சர் அவர்கள் கூறுவது 1,000 என்ஜின்கள் பணக்காரர்கள்தான் வாங்கியிருக்க முடியும் என்று சாதாரண ஏழைகள் 2,500 ரூபாய்க்கு வாங்கியிருக்க முடியாது.

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படியுமிருக்கலாம். ஆனால், இன்றைக்கு எந்த ஒரு காரணத்தைக் காட்டுகிறார்களோ அது சரியல்ல என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த டீசல் எண்ணெய் வரி அதிகரிப்பதன் காரணமாக விலைவாசி ஏறிவிடும் என்பதை முதல் காரணமாகச் சொன்னார்கள். இந்த விவசாய பம்பு செட்டுகளை வைத்திருப்பவர்கள் பெருவாரியாக பணக்காரர்கள்தான் என்று நீங்களே சொல்லுகிறீர்கள். சர்க்கார் இந்த 1,000 பம்பு செட்டுகளையும் பணக்காரர்களுக்கு வழங்கினார்கள் என்றும் சொன்னீர்கள். பணக்காரர்களாய் இருந்தால் இந்த வரியை அவர்கள் கொடுக்கலாம்.

[Sri R. Venkataraman] [14th March 1958

இந்த வரி அவர்களுக்கு அவ்வளவு பளு இல்லை. நீங்கள் சொன்ன பதிலிலிருந்தே திருப்பிச் சொல்ல முடியும் என்பதற்காக இதைக் கூறுகிறேன். இந்த வரி விதிப்பு இப்படி அதிகமாக இருப்பதால் பல தொல்லைகளைக் கொடுக்கும் என்று சொன்னார்கள். பக்கத்து மாகாணங்களிலே ஏதாவது செய்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். அவ்வாறு மைசூரிலும், ஆந்திராவிலும் செய்யவில்லை. இதே விலைக்கு அங்கே விற்கும்போது அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. ஏதாவது தொல்லைகள் ஏற்படுமானால் பரிசீலனை செய்யலாம் என்று சொன்னேன். சட்டமூலமாகச் செய்வதில் என்னென்ன தொல்லைகள் இருக்கின்றன என்பதையும் முதலில் எடுத்துச் சொன்னேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்த ஒரு திருத்தத்திலாவது கட்சியில் இருக்கிறவர்களுக்கு சுதந்திரம் கொடுத்து வோட்டுப்போட அனுமதியுங்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, this is not a proper statement to make on the floor of the House.

DEPUTY SPEAKER : Yes, it is not.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் எம். பி. சுப்ரமணியம் அவர்கள் பேசும்பொழுது பணக்காரர்களுக்குத்தான் பம்பு செட்டுகளை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மந்திரிகளிடத்தில் சலுகையுள்ளவர்களுக்குத்தான் வழங்கியிருக்கிறார்கள். பணக்காரர்களும் இருக்கலாம், ஏழைகளும் இருக்கலாம். அநேகம் பேர் வெளியிலே மார்வாடிகளிடமிருந்துகூட கடன் பெற்று வாங்கியிருக்கிறார்கள். இன்று விவசாயம் செய்வதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே தீர்க்க ஆலோசனை பண்ணிச் செய்யவேண்டும். பெர்மிட் முறையை ஏற்படுத்தலாம். இப்பொழுது " லிக்கர் " பெர்மிட்டுகள் வழங்குகிறார்கள். ஒன்று இரண்டு " abuse " கள் இருந்தாலும் பரவாயில்லை. விவசாயிகள் முன்னேற்றம் அடைவதற்கு பம்பு செட்டுகள் வரையிலுமாவது இந்த வரி விதிப்புக்கு விதி விலக்குக் கொடுத்தால், அரசாங்கத்திற்கு நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. அப்படிக் கொடுப்பதாயிருந்தால் விதிகளிலாவது போட்டுவிடலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த உறுதியும் கிடையாது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : அந்த உறுதியும் கிடையாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே கட்சி பேதம் இல்லாமல் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கவேண்டுமென்று எல்லா அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : I shall now put the amendment of Sri V. K. Ramaswamy Mudaliyar to the vote of the House. The question is—

1-13 p.m. " In the proposed new section 3, to sub-section (1), *add* the following proviso, namely :

' Provided that the authorized sale of diesel oil to agriculturists shall be exempted from the levy of tax mentioned in sub-section ' ".

The amendment was put and the House divided thus :



14th March 1958]

*Ayes.*

1 Sri P. S. Chinnadurai.
2 „ A. R. Marimuthu.
3 „ V. K. Ramaswamy Mudaliyar.
4 „ T. S. Ramaswamy Pillai.
5 „ C. N. Annadurai.
6 „ M. Kalyanasundaram.
7 „ K. Ramachandran.
8 „ M. Jagannathan.
9 „ M. P. Subramaniam.
10 „ K. Anbazhagan.
11 „ N K. Palanisami.
12 Srimathi Dr. Sathiyavanimuthu.
13 Sri N. Marudachalam.
14 Sri S. A. M. Annamalai Odayar.
15 „ M. Ana dan.
16 „ V. K. Kothandaraman.
17 „ P. S. Ellappan.
18 „ M Selvaraj.
19 „ C. Nataraja Odayar.
20 „ S. M. Annamalai.
21 „ T. Irusappan.
22 „ P. U. Shanmugam.
23 „ K Sattanatha Karayalar.
24 „ V. Subbiah.
25 „ P. Veerappa Kounder.

*Noes.*

1 Sri P. Appavu.
2 „ K. S. Ardhanareeswara Gounder.
3 „ V. S. Arunachalam.
4 „ A. E. Chandrasekhara Nayagar.
5 „ A Chinnasami.
6 The Hon. Sri M. Bhaktavatsalam.
7 „ M. A. Manickavelu.
8 „ P. Kakkan.
9 Sri T. P. Elumalai.
10 „ G. Gomathisankara Dikshitar.
11 „ P. Jayaraj.
12 „ R. Kandasami.
13 „ M. R. Kandaswami Mudaliyar.
14 „ T Karia Gounder.
15 „ S. Khadar Sheriff.
16 „ V. K. Krishnamurthy.
17 „ P. S. K Lakshmipathiraj.
18 „ T. Manavalan.
19 „ P. G. Manickam.
20 „ A. Mariappan.
21 The Hon. Sri V. Ramiah.
22 „ Srimathi Lourdhammal Simon.
23 Srimathi Hemalatha Devi.
24 „ Kamalambuja Ammal.
25 „ Kolanthai Ammal.
26 „ P. K. R. Lakshmikantham.
27 Srimathi A. S. Ponnammal.
28 Sri C. Muthiah Pillai.
29 „ V. A. Muthaiya.
30 „ M. C. Muthukumaraswamy.
31 „ K. P. Palaniswamy.
32 „ K. Ponnian
33 „ A. Raja Gounder.
34 Srimathi Dr. Soundaram Ramachandran.
35 Sri K. L Ramaswami.
36 „ S. C. Sadayappa Mudaliar.
37 „ T. Sampath.
38 „ S. Sangili.
39 „ V. Sankaran.
40 „ M. S. Selvarajan.
41 „ T. Sivagnanam Pillai.
42 „ R. Srinivasa Iyer.
43 „ T. K. Subbiah.
44 „ A. R Subbiah Mudaliar.
45 „ R. Subramaniam.
46 „ N. S. Sundararajan.
47 „ A. Vedarathnam.
48 „ V. Vedayyan.
49 „ K. Vinayakam.
50 „ O Venkatasubba Reddi.
51 „ S. R. Munusami.

*Neutral*—Nil.

*Ayes*—25. *Noes*—51. *Neutral*—Nil.

The amendment of Sri V. K. Ramaswamy Mudaliyar was lost.

The amendments of Sri T. S. Ramaswamy Pillai and Sri A. R. Marimuhu were by leave, withdrawn.

Clause 4 was put and carried.

Clauses 5, 6, 7 and 8 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

DEPUTY SPEAKER : The Hon. Minister may now move that the Bill be passed.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) be passed ".

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) be passed".

The motion is before the House for discussion.

SRI R. SRINIVASA IYER : Sir, Agriculture is the main stay of our country. We find that taxation measures are necessary for the administration of the State and yet agriculture and land has been taxed enough and plea for exempting pumpsets for agricultural purposes has been made in the House by all parties. It will not be possible to defeat the taxation measure by these agricultural pumpsets. I appeal to the Government to note that a lorry owner or anybody else who uses diesel oil for other purposes will not purchase a pumpset for three thousand rupees. After all, if a coupon is given for the minimum quantity required by a diesel oil engine owner, a lorry owner will not be able to purchase another diesel oil engine and waste money on it. I appeal to the Government that in using the taxation measure, they use only such methods as to avoid the agriculturists being affected by this legislation.

1-25 p.m. SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே இவ்வளவு தகராறு வேண்டாம், கனம் அமைச்சர் அவர்கள் ஒரு சுமுகமான வேறுவிதமான ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். சாதாரணமாக பணக்கார விவசாயிகளுக்காக விலக்கு கொடுக்கவேண்டாம். மத்தியதர விவசாயிகள், ஏழை விவசாயிகள் இவர்கள் மாதம் ஒன்றுக்கு ஒரு பாரல், அல்லது இரண்டு பாரல் வாங்கினால் அவர்களுக்கு இந்த வரியை கழித்து கொடுக்குமாறு, பர்மிட்டில் ஒரு "எக்ஸெம்ஷன்" கொடுத்தால் இவ்வளவு தகராறு இருக்காது. அதை எல்லோரும் வரவேற்பார்கள், என்றே நினைக்கிறேன். அந்த விலக்கு அவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The Hon. Minister may now reply.

THE HON. SRI R. VENKATARAMAN : I have nothing to add, Sir.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 9 of 1958) be passed".

The motion was put and carried and the Bill was passed.

1-29 p.m. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow, the 15th March 1958.

The House then adjourned.

## VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules, orders and notifications.

78. *Notification issued with G.O. Ms. No. 4013, Public Works (General), dated 23rd December 1957, appointing Sri Thimmana Gounder, son of Ramayya Gounder of Begaduthorai village, as a non-official member of the Bhavanisagar Township Committee for a period of three years.* [Laid on the Table of the House under section 6 (2) of the Bhavanisagar Township Act, 1954 (Madras Act XX of 1954.]



## APPENDIX I.

[Vide answer to clauses (*a*), (*b*), (*c*) and (*d*) of starred question No. 319 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 14th March 1958, page 345 supra.]

(*a*) The number of owners (occupiers or managers) of factories prosecuted during the year 1956 and 1957—

*District wise.*

| *Serial number and name of district.* (1) | *Factories Act.* (2) | | *Payment of Wages Act.* (3) | | *Madras Maternity Benefit Act.* (4) | | *Workmens' Compensation Act.* (5) | | *Minimum Wages Act.* (6) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1956. | 1957. | 1956. | 1957. | 1956. | 1957. | 1956. | 1957. | 1956. | 1957. |
| 1 Madras .. .. | 4 | 4 | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. |
| 2 Chingleput .. .. | 6 | 7 | .. | 1 | .. | .. | .. | 1 | .. | .. |
| 3 North Arcot .. | 52 | 69 | .. | 1 | 3 | .. | 3 | 3 | .. | .. |
| 4 South Arcot .. | 19 | 6 | 2 | 3 | 5 | 1 | 6 | 1 | .. | .. |
| 5 Tanjore .. .. | 28 | 39 | 1 | 1 | 1 | .. | 2 | .. | 4 | 1 |
| 6 Tiruchirappalli .. | 37 | 29 | 9 | .. | 8 | .. | .. | .. | .. | .. |
| 7 Madurai .. .. | 56 | 48 | 1 | 1 | 2 | 5 | .. | .. | 1 | .. |
| 8 Ramanathapuram .. | 28 | 11 | 5 | 1 | 5 | 1 | .. | .. | 1 | 3 |
| 9 Tirunelveli .. .. | 35 | 14 | 8 | 2 | 1 | 1 | 5 | .. | 3 | 2 |
| 10 Coimbatore .. .. | 77 | 80 | 2 | 1 | .. | .. | 1 | .. | .. | .. |
| 11 Salem .. .. | 22 | 33 | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12 The Nilgiris .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 13 Kanyakumari .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Total .. .. | 364 | 340 | 29 | 11 | 25 | 9 | 17 | 5 | 9 | 6 |

(*b*) The various offences committed by them—

Most of the prosecutions relate to the non-observance of the working hours, non-maintenance of registers and non-exhibition of notices, etc. Some prosecutions relate to machinery not being guarded. Some relate to the contravention of the provisions of section 6 of the Factories Act, 1948, regarding approval, licensing and registration of factories.

(*c*) The number of those fined and the amount of fine—

| *Number of persons fined under the* | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *Factories Act.* (1) | | *Payment of Wages Act.* (2) | | *Madras Maternity Benefit Act.* (3) | | *Workmens' Compensation Act.* (4) | | *Minimum Wages Act.* (5) | |
| 1956. | 1957. | 1956. | 1957. | 1956. | 1957 | 1956. | 1957. | 1956. | 1957. |
| 359 | 337 | 29 | 11 | 25 | 9 | 17 | 5 | 9 | 4 |

RS.

**Amount of fine—**

| | | |
|---|---|---|
| 1956 | .. | 18,348·50 |
| 1957 | .. | 16,325·00 |

(*d*) The names of persons convicted with imprisonment—Nil.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 323 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 24th March 1958, page 346 supra.]

(a) The registration of the Gudiyatham Co-operative Stores was cancelled on 31st October 1954 and the cancellation came into effect on 31st December 1954.

(b) The stores sustained a loss of Rs. 3,237-9-0 for the year 1951-52. The financial position of the stores was further crippled on account of the misappropriation committed by the ex-Manager who misappropriated in all about Rs. 40,000 in cash and stocks during 1951-52. Its financial position thus became too bad and there was no scope for getting the Board reconstituted and reviving the society.

(c) The amount involved in the misappropriation was Rs. 39,229-3-5.

(d) The misappropriation was committed by Sri S. Srinivasa Iyer, ex-Manager. The following office bearers and the ex-Accountant were found negligent in the discharge of their duties as Directors and Accountants respectively and they were held responsible for the loss sustained by the stores :—

1. Sri K. Manicka Mudaliar, ex-President of the Stores.
2. Sri M. V. Duraiswamy Mudaliar, ex Secretary of the stores.
3. Sri N. Krishnaswamy Mudaliar, ex-Vice President of the stores.
4. Sri A. J. Muniswamy Mudaliar, Director.
5. Sri K. G. Duraiswamy Chetty, Director.
6. Sri V. M. Murugesa Mudaliar, Director.
7. Sri V. K. Krishnamurthy, ex-Accountant of the stores.

(e) Criminal prosecution was launched against the ex-Manager, Sri S. Srinivasa Iyer and he was sentenced by the Additional First-class Magistrate under sections 409 and 477-A of Indian Penal Code to undergo rigorous imprisonment for 18 months, the sentences to run concurrently. But on appeal to District Sessions Court, the sentence was reduced to one of three months rigorous imprisonment.

Civil proceedings were also taken against the ex-Directors by the Board of Management under section 51 of the Madras Co-operative Societies Act. This action was pursued by the Co-operative Sub-Registrar (Liquidator) who assumed charge of the stores after its liquidation. The proceedings under section 51 were reversed by the High Court as there were several legal objections to the proceedings and it was ordered that the Deputy Registrar was at liberty to make the claim under section 49. Further action is therefore being pursued to recover the amount misappropriated.



## APPENDIX III.

[Vide answer to starred question No. 321 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 14th March 1958, page 358 supra.]

(a) & (d) The statement below furnishes the information :—

| | Paddy. | Sugarcane. |
|---|---|---|
| | RS. | RS. |
| Amount allotted .. .. .. | 80,000 | 1,50,000 |
| Amount surrendered .. | 50,000 | 1,20,000 |

(b) & (c)—

| Serial number and taluk. | Paddy. Number of agriculturists who applied for loan. | Paddy. Number of agriculturists who were granted loan. | Sugarcane. Number of agriculturists who applied for loan. | Sugarcane. Number of agriculturists who were granted loan. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 Arni .. .. | 78 | 20 | 1 | 1 |
| 2 Arkonam .. .. | 55 | 13 | .. | .. |
| 3 Chengam .. .. | 2 | 1 | 4 | .. |
| 4 Cheyyar .. .. | 32 | 18 | .. | .. |
| 5 Gudiyatham .. .. | 327 | 114 | 242 | 96 |
| 6 Tirupathur .. .. | 42 | 32 | 95 | 27 |
| 7 Tiruvannamalai .. | 91 | .. | .. | .. |
| 8 Vellore .. .. | 18 | 28 | 62 | 28 |
| 9 Wallajah .. .. | 38 | 12 | 6 | 1 |
| 10 Wandiwash .. .. | 83 | 9 | 10 | 1 |
| 11 Polur .. .. .. | 11 | 1 | .. | .. |
| Total .. | 777 | 248 | 420 | 154 |

(e) The surrender of the balance amount was due to want of bona fide applications.

## APPENDIX IV.

[Vide answer to started question No. 322 asked by Sri S. Lazar at the meeting of the Legislative Assembly held on 14th March 1958, page 360 supra.]

(a) Yes, Sir.

(b) Urea is a concentrated nitrogenous fettilizer containing 45 per cent nitrogen as compared to 20·5 per cent nitrogen for ammonium sulphate. Where two bags of ammonium sulphate are required less than one bag of Urea will do and this results in a considerable saving in transport charges. As Urea is a

concentrated fertilized, it should not come into contract with seed or foliage at the time of application. Hence the mixing of it with an equal quantity of sand or soil before application is recommended.

Like ammonium sulphate, Urea is also physological acid (i.e.) it tends to deplete the soil of lime; but the acidity of Urea is only a third of that of ammonium sulphate so that it will not be necessary to apply in the case of acid soils as much lime as is required in the case of ammonium sulphate to counteract the acidity resulting from the use of fertilizers.

Urea requires for its manufacture only nitrogen of the air and coal. No sulpher or gypsum is required. It is, therefore, cheaper to produce than ammonium sulphate. At present, this fertilizer is largely imported and the production of this fertilizer will be undertaken in due course in the Fertilizer Factories in the country.

(c) In addition to the propaganda carried on by the staff of the Agricultural Department, demonstrations have also been carried out with the aid of the fertilizer supplied free of cost by the Indian Council of Agricultural Research. A pamphlet on Urea in English published by the Indian Council of Agricultural Research has been translated into Tamil and distributed free of cost among the cultivators.

(d) No, Sir.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, the 15th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Takkavi loans*

* 17 *S.N.Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any representation has been received requesting waiver of the collection of takkavi loans obtained before 1952; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir. One Sri Kamalanathan Pillai has made a suggestion in this matter.

(b) This suggestion is being examined departmentally.

SRI S. M. ANNAMALAI : சமீபத்திலுள்ள ஆந்தர மாகாணத்தில் 1952-க்குப் பிறகு கொடுக்கப்பட்ட ரூ. 400-க்குக் குறைவான தக்காவி கடன்களையெல்லாம் தள்ளி விட்டிருக்கிறார்கள். அப்படியே நம்முடைய மாகாணத்திலும் தக்காவிக் கடன்களைத் தள்ளிக்கொடுக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆந்தராவில் என்ன விஷயம் என்பது எனக்குத் தெரியாது. ஆகையினால் தான் இதைப்பற்றி டிபார்ட்மெண்ட் விசாரித்து வருகிறார்கள் என்பதாகச் சொன்னேன்.

SRI K. VINAYAKAM : Before the Government take a decision in regard to the collection of takkavi loans, would they issue instructions for the abeyance of collection so that if the Government decide that they should not be collected, it would be in favour of the agriculturists?

THE HON. SRI M. A. MANICKAVELU : No such step has been taken or is contemplated.

SRI V. SUBBIAH : 60-க்கு முன்னதாக பசலிகளில் வாங்கிய தக்காவிக் கடன்களை அரசாங்கம் தள்ளிவிடுவதற்கு தீர்மானித்து சட்டளைப் பிறப்பித்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் அதை ஆராய்ந்து பதில் சொல்ல முடியும்.

SRI S. NAGARAJA MONIGAR : If waiver is made in this connection, will it not create a precedent and give the impression that all loans given by the Government will be waived in due course?

[15th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, that is also true, Sir.

SRI M. JAGANNATHAN : Is it a fact that when the takkavi loans are not repaid or when there is some delay in the repayment of takkavi loans, the officials distrain the properties of the loanees?

THE HON. SRI M.A. MANICKAVELU : All steps necessary to recover the loans are taken. Probably, this is one of the modes of recovery.

SRI T. T. DANIEL : I have given notice of a short notice question regarding the unfortunate incident that took place in the transport bus which was plying from Trivandrum to Monday Market as a result of which two persons died and 85 persons were injured. Notice of the question was given to the Speaker on the 11th March 1958. You have admitted it as a short notice question. I want to know whether the Government can take their own time to furnish the answer while you have admitted it as a short notice question.

MR. SPEAKER : The hon. Member must realize that three things are necessary for a question to become a short notice question. The first point is that the hon. Member must give notice of it. The second point is that the Hon. Speaker must admit it. The third point is that the Hon. Minister must waive notice. If the question has not come up for being answered, it means that one of these three things has not been done. In this case, the Hon. Minister has not waived notice. I am as helpless as the hon. Member is.

*Teachers' Training Schools*

* 333 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Basic and non-Basic Teachers' Training Schools for (1) boys and (2) girls in the Coimbatore district;

(*b*) the number of (i) boys and (ii) girls admitted in those schools in 1957; and

(*c*) the number of Harijan boys and girls that applied for admission and the number admitted.

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) A statement[a] giving the information is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களில் பத்து சத விகிதம் ஹரிஜனங்களைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று ஜி.ஓ. இருக்கிறது. அந்தப் பிரகாரம் சில பள்ளிகளில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. சில பள்ளிகளில் அப்படித் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அப்படி வித்தியாசமில்லாமலிருப்பதற்கு ஒரே செலக்ஷன் கமிட்டியை அமைத்து மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி ஆசிரியர் பயிர்ச்சி பள்ளிகளுக்கு மாணவர்களையும் மாணவிகளையும் தேர்ந்தெடுக்கும்போது மற்றப் பள்ளிகளில் இருப்பது போல் ஒரே செலக்ஷன் கமிட்டியை அமைக்க ஆலோசனை செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[a] Printed as Appendix on page 507 infra.



15th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு தனியான கமிட்டியை நியமிப்பதன் மூலம் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளை ஒரு கமிட்டித் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் ஏறக்குறைய மூன்று மாதங்களாகும்.

SRI M. S. SELVARAJAN : : ஏற்கெனவே போதனா முறை பயிற்சிப் பள்ளிகளாக இருப்பவைகளை 1958-59-ல் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றுவதுடன் 1958-59-ல் புதிதாக போதனாமுறை பயிற்சிப் பள்ளி திறப்பதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது உத்தேசம் இருக்கிறதா? ஆசிரியராக இருக்க செகண்டரி கிரேடு குறைந்த பாக்ஷத்துக்கென கருதுகிறபோது ஜூனியர் பேசிக் ஸ்கூல்களைத் திறப்பதன் அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 1958-59-ல் போதனா பயிற்சி பள்ளிகளைத் திறப்பதாக உத்தேசம் இல்லை. ஜூனியர் பேசிக் ஸ்கூல்களைத் சீனியர் பேசிக் ஸ்கூல்களாகப் பண்ணும் விஷயம் லெஜிஸ்லேசர் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையைக் கொண்டு முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது.

SRI P. G. MANICKAM : மாணவர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு செலக்ஷன் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த செலக்ஷன் கமிட்டியில் யார் யார் மெம்பர்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களாக ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கவர்ன்மெண்ட் நடத்தக் கூடிய பள்ளிகளுக்கு செலக்ஷன் கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அதில் யார் யார் மெம்பர்கள் என்பதை உடனடியாகச் சொல்ல முடியாது.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்தப் பயிற்சிப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு தனியாக எவ்வளவு சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ? அப்படி ஒதுக்கப்பட்டபடி அவர்களுக்கு சீட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம். ஒவ்வொரு ஷெடியூல் காஸ்டுக்கும் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பேர்களை எடுத்திருக்கிறார்கள் என்பது அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிலவற்றில் குறைவாக இருக்கும். ஏன் குறைவாக இருக்கிறது என்பதற்கு விவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. B. S. MANI : மதுரை போன்ற இடங்களில் மாணவர்களுக்கு இடங்கள் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனால் பயிற்சி துறைகளில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே பயிற்சி துறைகளில் இருக்கின்ற கஷ்டங்களை நீக்குவதற்கும் இட வசதி அளிப்பதற்கும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம். நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது.

SRI M. JAGANNATHAN : From the statement placed on the table of the House, I find that there is one non-basic training school for men at Coimbatore. May I know when the Government propose to convert this non-basic training school for men into a basic one?

THE HON. SRI C. SUBRAMANIAM : I think I yesterday mentioned about the programme of conversion of non-basic training schools into basic training schools. As I have already stated, all the training schools should be converted into basic training schools before the end of the Second Plan period.

[15th March 1958

SRI K. VINAYAKAM : Would the Government think of the possibility of including the local Assembly Member in the Committee that is to sit for selection of candidates for the basic training schools and other training schools in the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : That question does not arise out of this. But, certainly, the suggestion of the hon. Member will be borne in mind.

SRI N. K. PALANISAMI : May I know whether there is a proposal to integrate the basic system with non-basic system in these schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : This question is with reference to training schools. The training schools are either basic training schools or non-basic training schools. As I have already stated, the intention is to convert all the training schools into basic training schools. The programme has made considerable progress and only about 30 or 35 more remain to be converted.

SRI M. D. THIAGARAJA PILLAI : ஆதார பள்ளிகளில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினாலும், அதிகமாக மாணவ மாணவிகள் சேரு வதற்கு பிரியப்படுவதாலும், ஹைஸ்கூலில் முதல் வருஷத்தில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு சில ஹைஸ்கூல்களில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே போன்று மற்ற ஹைஸ்கூல்களிலும் அரசாங்கம் ஏற்பாடு செய்வார் களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இம்மாதிரி உயர்நிலை பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சிக்கேற்ற ஒரு படிப்பை கொடுப்பது என்பது சரியாக நடந்துவரவில்லை என்பது எல்லோருடைய அபிப்பிராயம். ஆகை யினால் அதை எடுத்துவிடுவதாக உத்தேசம்.

SRI P. G. MANICKAM : நான்-பேஸிக் பயிற்சி பள்ளிகளில் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட செலக்‌ஷன் கமிட்டி நிறுவுவது பற்றி அரசாங்கத்தார் ஏதாவது உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா என் பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பு சொன்னது போல பொதுவாக சர்க்கார் நடத்தக்கூடிய பள்ளிகளுக்கெல்லாம் தேர்ந் தெடுப்பதற்கு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. தனியார் நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கு இம்மாதிரி ஷெட்டியூல்டு வகுப்பினருக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்பது மட்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுப்பது அவர்களுக்கே விடப்பட்டிருக் கிறது.

SRI M. S. SELVARAJAN : சில ஜில்லாக்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டே பாடசாலைகள் நடத்தப்பட வேண்டியிருப்பதா லும், சில ஜில்லாக்களில் ஆசிரியர் பயிற்சிபள்ளி ஒன்றுக்கு 10 மடங்கு மாணவர்களின் விண்ணப்பங்கள் வந்து குவிவதாலும், இந்த நிலைமையிலே ஏன் அடுத்தவருஷம் பயிற்சி பாடசாலைகள் திறப்பதை அரசாங்கம் தடை செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலை கொடுப்பதற்கே போதுமான வசதி இல்லாமல் இருக்கிறது. இன்னும் அதிகமாக பணம் செலவழித்து, ஆசிரியர்களுக்கு



15th March 1958]

பயிற்சி கொடுத்த பிறபாடு அவர்களிடையே வேலையில்லா திண்டாட்டம் ஏற்பட்டு அது ஒரு புதிய பிரச்சனையாகிவிடும். செலவும் செய்து அவர் களுக்கு வேலை கொடுக்காமல், அவர்கள் கஷ்டப்படும் நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது. இப்பொழுது பயிற்சி பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்களோ, அவர்களே இன்றைக்கு தேவைக்கு மேல் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*District Board Schools*

* 334 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of schools that were opened in the South Arcot district by the District Boards in 1955–56 and 1956–57 in pursuance of G.O. Ms. No. 57, Education, dated 28th January 1951;

(b) the number since closed; and

(c) the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Nil.

(b) & (c) Do not arise.

SRI V. K. KOTHANDARAMAN : 1951-ம் ஆண்டு ஜனவரி 28-ம் தேதியுள்ள 57 எண்ணுள்ள அரசாங்க உத்தரவுப்படி தென் ஆற்காடு ஜில்லாவில் செகண்டரி கிரேட் உபாத்தியாயர்களாக நியமிக்கப்பட்டவர்கள் சுமார் 4, 5 வருஷங்கள் சர்வீஸ் ஆகியும்கூட, இதுவரையில் அவர்கள் பர்மனெண்ட் செய்யப்படவில்லை, அவர்களுக்கு சம்பள உயர்வும் கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருந்துவருகிறது. அதற்கு என்ன காரணம் ? அது சம்பந்தமாக மந்திரி அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். ஆகவே, அதை தயவுசெய்து உடனடியாக கவனிக்கவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : புதிய பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்ததைப் பொறுத்தது இந்த கேள்வி. இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு பள்ளிக்கூடம்கூட ஆரம்பிக்கப்படவில்லை என்று பதில் சொன்னேன்.

SRI M. JAGANNATHAN : May I know the reasons for not opening any fresh schools in pursuance of this Government Order?

THE HON. SRI C. SUBRAMANIAM : That was left to the district boards concerned. They did not open any school but later on under the scheme of opening single teacher schools for giving relief to unemployed persons, they have opened a few schools, namely, 81 schools during 1955–56 and 35 schools during 1956–57.

SRI M. S. SELVARAJAN : சில இடங்களில் ஜில்லா போர்டுகள் பள் ளிக்கூடங்கள் திறப்பதற்கு முன்வந்தும், 'எய்டட் ஸ்கூல்கள்' தான் தேவை, ஜில்லா போர்டு ஸ்கூல்கள் தேவை இல்லை என்ற முறையில் அவ்வூருக்கு தண்டனை கொடுப்பது போல பிரைவேட் ஸ்கூலுக்கு அனுமதி மறுத்திருப்பது அரசாங்கத்தாரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அக்கஷ்டத்தை நிவர்திப்பதற்கு அரசாங்கம் முன்வருவார் களா ?

MR. SPEAKER : இது தென் ஆற்காடு ஜில்லா பற்றிய கேள்வி. நீங்கள் அதற்கு தனி கேள்வி கேட்க வேண்டும்.

[15th March 1958

*Employees in the Rural Dispensaries*

* 335 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the salaries and allowances paid to compounders, midwives, wardboys, etc., employed in the rural dispensaries in the North Arcot district;

(*b*) whether they are eligible for increment, pension and provident fund;

(*c*) whether they are eligible for any leave facilities; and

(*d*) if so, what those facilities are?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 1. Pharmacists (Compounders)—Salary Rs. 30, Dearness Allowance Rs. 31 per mensem.

2. Maternity Assistants—Subsidy Rs. 40 per mensem, no allowances.

3. Dispensary servants (ward boys)—Salary Rs. 10 per mensem, dearness allowance Rs. 30 per mensem.

(*b*) No, Sir.

(*c*) Yes.

(*d*) The Maternity Assistants are granted casual leave for 12 days and earned leave for 18 days in a year. The Pharmacists and dispensary servants are eligible only for 15 days casual leave in a year.

SRI V. K. KOTHANDARAMAN : கம்பவுண்டர், மருத்தவச்சி, வார்டுபாய்கள் இவர்களின் சம்பளம் மிக குறைவாக இருக்கும் காரணத்திஞல் ஆஸ்பத்திரிகளில் ரொம்பவும் ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : நேற்று டாக்டர்களின் சம்பளக் குறைவைப் பற்றி விவாதித்தோம். இப்பொழுது டாக்டர் இல்லாமல் போஞல் கூட கம்பவுண்டர்கள் இருந்து சில ஆஸ்பத்திரிகள் ருடீஞக நடந்துகொண்டிருக்கின்றன. டாக்டர் விஷயம் கவனிக்கப்படும்பொழுது இந்த விஷயத்தையும் கவனிக்கலாம்.

SRI M. S. SELVARAJAN : டாக்டர்கள் குறைவை சமாளிப்பதற்கு கிராமத்திலுள்ள ஆஸ்பத்திரிகளில் ஹோமியோபதிக் டாக்டர்களை போடுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா? தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளில் இப்பொழுது இருக்கும் டாக்டரோடு கூட ஒரு நிரந்தர ஓரிங் டாக்டரை நியமித்து பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு அவர் முறையாக போய் வருவதற்கு வசதி செய்வதை அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் இந்தக் கேள்வியை நேற்று கேட்டிருக்க வேண்டும். இந்த உபகேள்வி இந்தக் கேள்வியில் எழவில்லை.

MR. SPEAKER : The hon. Member may make the suggestion during the discussion on the Demand relating to Public Health.



15th March 1958]

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மருத்துவ விடுதிகளில், கிராமத்திலுள்ள மருத்துவ விடுதிகளில் வேலை செய்யும் மிட்வைப், கம்பவுண்டர், வார்டுபாய்கள் இவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியில்லை என்ருல், காரணம் சொல்ல முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்விக்கு தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் தனி கேள்வி கேட்கலாம்.

*Bathing Ghats in the Cauvery River*

* 336 *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether Government have received any proposal from the Tiruchirappalli Municipality to construct some bathing ghats provided with safety rails in the Cauvery river?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Municipal Council, Tiruchirappalli, has sanctioned the provision of Jay wire fencing and a parapet wall at two bathing ghats on the Cauvery.

*Anglo-Indian Primary Schools*

* 337 *Q*.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Anglo-Indian Primary Schools in 1956–57; and

(*b*) the total amount of grant given to them in that year?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Five, Sir.

(*b*) Rs. 26,162.

SRI M. JAGANNATHAN : In view of the fact that the grant given by the Government to the Anglo-Indian primary schools is too late and is quite incommensurate with the needs of the community, will the Government consider the desirability of increasing the grant?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am glad the hon. Member is taking so much interest in the Anglo-Indian community. But the hon. Member may be aware that they have got constitutional protection with regard to this grant and I do not think that there is any room for grievance in this case.

SRI K. VINAYAKAM : May I know whether the children studying in these Anglo-Indian primary schools are made to study a regional language, namely, Tamil in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to have notice, Sir.

[15th March 1958

### *Elementary Schools*

* 338 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of elementary schools in the South Arcot district under public management in 1956–57;

(*b*) the number of schools under aided management; and

(*c*) the number of such schools which have since been closed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Basic schools 214.
Elementary schools 1,258.

(*b*) Basic schools 118.
Elementary schools 660.

(*c*) Two schools, Sir.

SRI M. JAGANNATHAN : In view of the fact that most of the schools which are now being run under private management are not satisfactorily run, will the Government consider the desirability of taking them over and making them into public schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not prepared to accept this general statement that all the aided schools are not being run properly : As a matter of fact, there are many schools run efficiently by the aided managements. But if there are any particular instances where they are not being managed properly, certainly I shall consider the matter.

SRI J. MATHA GOWDER : ஸ்தலஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களை விட நன்றாக தனியாரால் நடத்தப்படும் பள்ளிக் கூடங்கள் நடக்கின்றன என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

MR. SPEAKER : கனம் அமைச்சர் இதற்கு இப்போது தானே பதில் அளித்தார். நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

SRI K. RAMACHANDRAN : கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தில் பேஸிக் பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவும், நான்-பேஸிக் பள்ளிகளில் எண்ணிக்கை மிக அதிகமாகவும் இருக்கின்றன. நான்-பேஸிக் பள்ளிகள் பேஸிக் பள்ளிகளாக மாற்றப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படியானால், வருஷத்திற்கு எவ்வளவு நான்-பேஸிக் பள்ளிகள் பேஸிக் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன ?

THE HON SRI C. SUBRAMANIAM : இந்த வருஷம் ஆயிரம் நான்-பேஸிக் பள்ளிகள் பேஸிக் பள்ளிகளாக மாற்றப்பட்டன. அடுத்த வருஷத்தில் அத்தனை பள்ளிகளையே மாற்றுவதா அல்லது அதைவிடக் குறைவான பள்ளிகளை மாற்றுவதா என்பது பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : தனியாரால் நடத்தப்படும் சில பள்ளிகள் வெகு நன்றாக நடத்தப்படுவதாக கனம் அமைச்சர் அவர்களே கூறினார். ஆகவே பள்ளிக்கூடங்களை நன்றாக நடத்தும் தனியாரை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு சர்க்காரால் ஏதாவது சலுகைகள் அளிக்கப்படுமா.

THE HON SRI C. SUBRAMANIAM : பள்ளிக்கூடங்களை நன்றாக நடத்துபவர்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டுவரும் சலுகைகளே போதும். நன்றாக நடத்தாதவர்களுக்கு மேலும் சலுகைகள் கொடுப்பது வீண் செலவாகத்தான் போகும்.



15th March 1958]

### *Javathu Hill Tribes*

* 339 *Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any application has been received from the Javvathu Hill Tribes for the assignment of the forest poramboke lands cultivated by them for the past 10 or 15 years;

(*b*) if so (i) the number of such applications received, and (ii) the number of persons to whom lands have been assigned; and

(*c*) the number of applications rejected and the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) (i) 1,208.

(ii) 372.

(*c*) 833.

*The main reasons for rejections are*—

The area contains a large number of sandal wood trees.

The area is slopy hill with high gradient detrimental to soil conservation.

The area has rocky soil unfit for cultivation.

The growth in the area is of semi-shola type with thick growth of evergreen trees.

The area is of perennial stream land.

Some of the applicants were already in possession of enough lands for cultivation.

Some of the applicants applied for land which is a thick forest with good growth.

Some of the applicants applied for assignment of land set apart for communal purposes and path porambokes.

Some of the applicants applied for the assignment of buffer area (forest margin) which adjoins reserved forest boundary line.

There is already about 25,740 acres of reserved forest area under cultivation by the Malayalees (hill tribes) in Javavthu Hills. Out of this an extent of 25,175·15 acres has been given on patta in 1913 and an extent of 565 acres of reserved forest area encroached upon has been given on annual lease since 1939.

SRI S. M. ANNAMALAI : சுமார் 10—15 ஆண்டுகளாக உழப்பட்டு வந்த நிலங்களையாகிலும் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்குத் தர சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மனுக்கள் நிராகரிக்கப் பட்டதற்குகான காரணங்களை நான் இப்போது தெரிவித்தேன். அந்தக் காரணங்களுக்கான நிலைமைகளுக்கு உட்படிராத நிலங்கள் கோரப் பட்டிருந்தால் அவைகளைக் கொடுக்கலாம். இல்லாவிட்டால் கொடுக்க முடியாது. உதாரணமாக, ரிசெர்வ் காட்டுப் புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க முடியாது.

[15th March 1958

**Sri V. K. KOTHANDARAMAN:** சிவாஜி நாமாவின் கீழ் 20, 30 ஆண்டுகளாக அவர்களால் உழுது பயிரிட்டு அனுபவிக்கப்பட்டு வந்த காட்டுப் புறம்போக்கு நிலங்களிலிருந்து மலைஜாதியார் வெளியேற்றப்படுகிறார்கள். காட்டுப் புறம்போக்கு நிலங்கள் "பாரெஸ்ட் ரிசர்வ்—ஆக மாற்றப்படுகிறது என்று கேள்விப்படுகிறேன். இது உண்மையா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** அது உண்மையாக இருக்காது. ஏனென்றால், 25, 740 ஏக்கர் காட்டுப் புறம்போக்கு நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று இப்போதுதான் சொன்னேன்.

**Sri S. M. ANNAMALAI:** ரிசர்வ் காட்டுப் புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க முடியாது என்று கனம் அமைச்சர் கூறினார். ஜவ்வாது மலையில், வெள்ளையர்கள் காலத்திலிருந்தே, 10, 15 ஆண்டுகளாக, இவர்களால் உழப்பட்டுவரும் நிலங்கள் இருக்கின்றன. இவைகளை ரெவின்யூ புறம்போக்கு நிலங்களாக மாற்றி இவர்களுக்கு தர்க்காஸ்து செய்து கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** வெள்ளையர்களுக்கு காட்டு அபிவிருத்தியிலோ நாட்டு அபிவிருத்தியிலோ அக்கறை இல்லாமலிருந்தது. நாம் அவ்வாறு இல்லை. காடுகளை அபிவிருத்தி செய்வதில் நாம் அக்கறை காட்டி வருகிறோம். காடுகளை அழிக்கக்கூடாது என்பதால் சில இடங்களிலுள்ள நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

**Sri K. B. S. MANI:** கடந்த இரண்டு—மூன்று நாட்களாக இந்த சபையில் வட ஆற்காட்டிலுள்ள நிலங்களைப்பற்றிப் பேசும்போது கனம் அங்கத்தினர்கள் "சிவாஜிநாமா" என்ற வார்த்தையை உபயோகித்து வருகிறார்கள். சிவாஜிநாமா என்றால் என்ன அர்த்தம் என்று கனம் அமைச்சர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER:** The question is out of order.

**Sri S. M. ANNAMALAI:** ஜவ்வாது மலையிலுள்ள மலைஜாதியினர் அங்குள்ள காட்டுப் புறம்போக்கு நிலங்களில் உழுது பயிர் செய்துதான் வாழ்ந்து வருகிறார்கள். அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டால் அவர்கள் வாழ முடியாது. அவைகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டால், அவர்கள் மலைவாசத்தை விட்டு விட்டு, மலையிலிருந்து கீழே இறங்கி வந்து பிச்சை எடுக்க வேண்டியதுதான். ஆகையால் அந்த நிலங்களை அவர்களுக்கு தர்காஸ்து செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** அவர்கள் பிச்சை எடுக்கக் வேண்டிய நிலைமை ஏற்படாது. ஜவ்வாது மலையிலுள்ளவர்களைப்பற்றி எனக்கும் தெரியும்.

**Sri T. KARIA GOUNDER:** காட்டிலாகாவிற்குத் தேவைப் படாமல் விடப்பட்டிருக்கும் மலையடிவாரப் புறம்போக்கு நிலங்களையாவது இவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** மூலக் கேள்வி மலையடிவாரத்தில் உள்ள நிலங்களைப்பற்றியது அல்ல.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ:** மலையடிவார நிலங்களைப் பற்றிப் பேசப்படும் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று கேட்க விரும்புகிறேன். சில மிராசுதார்கள் மலை ஜாதியினரின் பேரில் நிலங்களை அனுபவித்துக் கொண்டிருப்பது கனம் அமைச்சருக்கு தெரியுமா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** மூலக் கேள்வி ஜவ்வாது மலையைப்பற்றியது. கனம் அங்கத்தினர் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றி கேட்கிறார்.



15th March 1958]

**Sri P. S. SANTHANAM:** ஜவ்வாது மலையில் இருக்கும் மலையாள கிராமங்களுக்குக் கீழே ஒரு பிரதேசத்தை நிர்ணயித்து அந்தப் பிரதேசத்தில் உள்ள நிலங்களை நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மலை ஜாதியினருக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** அதற்கு முன் வந்துதான் சர்க்கார் நான் முன்பு குறிப்பிட்ட அளவு நிலங்களை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. அவர்களுக்கு இன்னும் நிலங்கள் கொடுக்க முடிந்திருந்தால், அவர்களுக்கு பாதகமில்லாத முறையில் எவ்வளவு நிலங்களைக் கொடுக்கலாமோ அவ்வளவு நிலங்களைக் கொடுக்கமுடியும். ஏனென்றால், அதிக நிலங்கள் கொடுக்கப்பட்டால் பயிரிடுபவர்களுக்கும் அசௌகரியம் ஏற்படும்.

**Sri M. D. THIAGARAJA PILLAI:** நிலங்களை அடமானம் செய்யும் விஷயத்தில் காட்டு ஆறு, வாய்க்கால் குளம், மேய்ச்சல் தரை, போன்றவைகளை புறம்போக்கு என்று சொல்லி அடமானம் செய்ய மறுக்கிறார்கள் கிளாஸிபிகேஷனை மாற்ற நிலங்களை அடமானம் செய்யும்படி உத்தியோகஸ்தர்களுக்கு சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்களா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** மூலக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்னையைப் பொறுத்த வரையில், எவை சமநிலங்கள் என்ற கண்ணோட்டத்துடன் பிரச்னை அணுகப்படுகிறது. மூலக் கேள்வியில் ஜவ்வாது மலையின்மேலே உள்ள நிலங்கள் மலை ஜாதியினருக்கு ஏன் கொடுக்கப்படவில்லை என்பதுபற்றி கேட்கப்பட்டிருக்கிறது. அவை ஏன் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை 7–8 காரணங்களுடன் தெரிவித்தேன்.

**Sri R. SRINIVASA IYER:** சாதாரணமாக, சிவாஜிநாமா சாகுபடி நிலங்களை விட்டு விவசாயிகளை வெளியேற்றுவதில்லையே, மலைகளிலுள்ள சிவாஜிநாமா சாகுபடி நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்களா? அப்படி அவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தால் அவர்களுக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கவேண்டிய அவசியம் என்ன? பட்டா செய்து கொடுக்காவிட்டாலும், அப்படிப்பட்ட நிலங்கள் சர்க்கார் பாத்தியதையில் இருந்துவரும். அவர்களிடமிருந்து தீர்வையை சர்க்கார் வசூலிப்பார்களா?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** சிவாஜிநாமா அனுபவத்திலிருந்த நிலங்களைத்தான் சர்க்கார் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. சில நிலங்களைக் கொடுக்கமுடியவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், மலையில் 'ஸ்லோப்' அதிகமாக உள்ள இடங்களில் பயிர் செய்தால் மண் சரிந்து போய்விடும். மேலும், அங்கே சில இடங்களில் சந்தனக் காடுகள் இருக்கின்றன. சந்தனம் உபயோகமான பொருளாதலால், சந்தனக் காடுகளை அழிக்கமுடியாது. ஆகவே நிலங்களின் தன்மைகளைப் பார்த்து, எவ்வளவு நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படமுடியுமோ அவ்வளவு நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### *Panchayats in Nannilam taluk*

* 340 *Q.*—**Sri M. D. THIAGARAJA PILLAI:** Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of villages in the Nannilam taluk with a population of over 500 persons;

(*b*) whether panchayats have not so far been constituted in any of them; and

(*c*) if so, their number and the reasons therefor?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) 175;

(b) & (c) Panchayats have not yet been constituted for twenty-eight villages. The Regional Inspector of Municipal Councils and Local Boards have issued notifications for constituting panchayats for 10 villages out of the said 28 villages. Orders in respect of the other villages will be issued by the Regional Inspector in due course.

SRI M. D. THIAGARAJA PILLAI : பஞ்சாயத்துக்களை அதிகரிக்க வேண்டுமென்பது சர்க்காரின் கொள்கையாக இருக்கிறது. ஆனால், நன்னிலம் தாலூகாவிலும் மற்ற ஜில்லாக்களில் பல தாலுகாக்களிலும் 500க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள பல இடங்களில் பஞ்சாயத்துக்கள் இல்லை. பஞ்சாயத்துக்களை ஏற்படுத்துவதற்கு ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு மனுக்கள் அனுப்பினால் அவரிடமிருந்து அனுமதி வர தாமதமாகிறது. ஆகவே இந்த அதிகாரத்தைக் கலெக்டருக்குக் கொடுத்து 500-க்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள எல்லா கிராமங்களிலும் சீக்கிரம் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போது உள்ள கணக்குப் பிரகாரம், 175 பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட வேண்டிய நிலைமையில் 28 பஞ்சாயத்துக்கள்தான் அமைக்கப்படவில்லை. 10 பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கு இப்போது உத்திரவிடப்பட்டிருக்கிறது. இன்னும், மற்ற பஞ்சாயத்துக்களையும் அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### *Posts of clerks*

* 341 Q.—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. Viswanathan) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of permanent posts of clerks in Tiruchirappalli district;

(b) the number of temporary clerks acting in these posts; and

(c) the reasons for not filling these posts by Service Commission candidates?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) 747. In addition there are 567 temporary posts.

(b) 248 non-Madras Public Service Commission candidates in both permanent and temporary posts.

(c) Several posts in some departments are purely temporary, the continuance of which is for short periods only, while some establishments like the Survey and the Women Welfare Departments are also purely temporary and so temporary candidates only can be appointed. If the Commission candidates are appointed in these posts or establishments, they will be thrown out of employment at the time of abolition of the posts or establishments. In certain cases temporary candidates have been appointed in view of the urgency. In certain others, the Madras Public Service Commission has been addressed to allot candidates to replace the temporary candidates. Some candidates are employed in short leave vacancies only. Allotment of candidates by the Madras Public Service Commission is awaited in certain offices or departments. In the Police Department the Commission candidates got themselves transferred to other units and so temporary appointments had to be made in that department.





SRI S. LAZAR : இதுபோன்று வேலைக்கு அமர்த்தப்படும்போது, டெம்பரரி போஸ்டுகள் வருஷா வருஷம் புதுப்பிக்கப்பட்டு, இப்படியே பல வருஷங்கள்கூட சில போஸ்டுகள் டெம்பரவரியாக நிரந்தரமாக்கப்படாமல் இருந்துவருகின்றன. சர்வீஸ் கமிஷனால் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களைப் போடாமல் டெம்பரரி கேண்டிடேட்டுகளைப் போடும்போது, அப்படிப்பட்டவர்கள் வேலையைக் கற்றுக்கொள்ளுவதில் காலதாமதம் ஆகிறது. அப்படி அவர்கள் வேலையைக் கற்றுக்கொண்டு வேலைக்குத் தகுதியாக இருக்கும் நேரத்தில் சர்வீஸ் கமிஷன் காண்டிடேட்டுகள் நுழைகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுவதோடுகூட வேலையும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதுபோன்ற போஸ்டுகளுக்கு சர்வீஸ் கமிஷன் கேண்டிடேட்டுகளைப் போடுவதற்கு சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : தொடர்ந்து இருக்கக்கூடிய அலுவலங்களில், வருஷா வருஷம் மாற்றுவதற்காக இருந்தாலுங்கூட, டெம்பரரி கேண்டிடேட்டுகளுக்குப் பதிலாக கமிஷன் காண்டிடேட்டுகளைத்தான் போடவேண்டுமென்று இப்பொழுது எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன அந்த அடிப்படையில்தான் இந்த அலுவலகங்களுக்கெல்லாம் புதியதாக கமிஷன் கேண்டிடேட்டுகள் போடப்படவேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கை.

SRI S. LAZAR : டெம்பரரி போஸ்டுகளுக்கு கேண்டிடேட்டுகளை ரெக்ரூட் செய்யக்கூடிய அதிகாரம் யாருக்கு வழங்கப்படுகிறது? அதற்காக முன்னாலேயே காலி ஏற்பட்டிருப்பதைப் பற்றி பிரசுரிக்கப்படுகிறதா ? அப்ளிகேஷன்கள் வரவழைக்கப்படுகின்றனவா?

THE HON. SRI C. SUBRAMANIAM : எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ் மூலமாக ஆட்கள் எடுத்து நியமனம் செய்யப்படுகிறார்கள். அப்படி நியமனம் செய்யக்கூடியவர்கள் யார் யார் என்பதை அந்த அந்த உத்தியோகத்திற்குத் தகுந்த மாதிரி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் அங்கே இருக்கும் உத்தியோகஸ்தரோ நியமிக்கலாம். மற்ற இடங்களில் அவருக்கு மேல் உத்தியோகஸ்தர் நியமிக்கவேண்டும் என்று ஏற்பாடாயிருக்கிறது.

### *Rural Water-supply Scheme*

* 342 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) when the combined Rural Water-supply Scheme for Kayalpatnam and certain other villages was

(i) sanctioned; and

(ii) taken up for execution;

(b) the present stage of the scheme;

(c) whether street water-supply is given in all the villages covered by the scheme, and if not, the reasons therefor; and

(d) whether the scheme covers the entire area of the villages concerned?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) (i) The composite water-supply scheme for Tiruchendur, Kayalpatnam, etc., villages was sanctioned in September, 1949.

(ii) The scheme was taken up for execution in 1950.

[15th March 1958

(b) About seventy-five per cent of the work has been completed.

(c) Street supply of water has been given in the villages of Arumuganeri, Kandasamipuram, Kayalpatnam, Adaikalapuram, Lakshmimangapuram, Veerapandianpatnam and Tiruchendur. In view of the limited population to be served, only distribution reservoirs have been proposed for other villages.

(d) The scheme does not cover all the hamlets coming under each panchayat.

SRI M. S. SELVARAJAN : இந்தத் திட்டத்தில் நிர்ணயிக்கப் பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களிலுள்ள சில பெரிய குக்கிராமங்கள்கூட திட்டத்தின் பலனை அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. தொடர்ந்து பல வருஷங்களாகவே மற்ற பகுதிகளைப்போலவே நூற்றுக்கு நூறு கூட தண்ணீர்த் தீர்வை செலுத்தி வந்த அந்தக் கிராமங்களும் கஷ்டத்தில் இருக்கின்றன. அவர்களுடைய கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு அதிகச் செலவானாலும்கூட, ஒரு பஞ்சாயத்தின் பகுதிகள் விடுபடாத அளவுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் யோசிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் திட்டம் ஐந்து கட்டங்களாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. 1, 2-வது கட்டங்கள் முடிந்து விட்டன. மூன்றாவது கட்டம் : **Completed except for a few connections to reservoirs which are being given.** நான்காவது கட்டம் : **Completed except for some gaps in Tiruchendur.** ஐந்தாவது கட்டம் : **Pumpsets have yet to be supplied and erected.** திருச்செந்தூர் பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட 9 குக்கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று இப்பொழுதுதான் உத்தரவாயிருக்கிறது. ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் குக்கிராமங்கள் எல்லாவற்றுக்கும் கொடுக்கமுடியாது. ஆனால், இன்னும் சில, திருச்செந்தூரின் சுற்றுப்புறம் உள்ள, கிராமங்களுக்கும் தண்ணீர் வசதி ஏற்பாடாகிக்கொண்டிருக்கிறது.

SRI S. LAZAR : "கம்பைண்ட் வாட்டர் ஸப்ளை திட்டத்தைப்" பொறுத்தவரையில் மாகாணத்தின் எல்லா இடங்களிலேயும் இதற்கு இடம் உண்டு. அதிலும் குறிப்பாக, வறண்ட பகுதிகளுக்கு, நரம்பு சிலந்தி வியாதி இருக்கும் வட்டாரங்களுககு, ஆற்றுத் தண்ணீரைக் கொண்டுபோகக் கூடிய திட்டம் வைத்து, பல கிராமங்களை இணைத்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா ? அப்படி நிறைவேற்றப்பட்டால், உயர்ந்த பட்சச் செலவு எவ்வளவு வரை சர்க்கார் சாங்ஷன் செய்யக்கூடும் என்பதைத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கேள்வி பெரிய கேள்வி. எல்லாவற்றுக்கும் இப்பொழுது பதில் சொல்ல முடியாது. ஆனால், ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் அனேகமாக கிராமங்களுக்குத்தான் பயன்படுகிறது. நோயினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களிலே நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம் சில ஜில்லாக்களில்தான் குறித்திருக்கிறார்கள். அதற்காக நாஷனல் வாட்டர் ஸப்ளை ஸ்கீமின்கீழ் அவர்களுக்கு வசதி கொடுக்கப்படுகிறது.

SRI M. JAGANNATHAN : If the information is available with the Hon. Minister, may I know the estimated cost of this combined rural water-supply scheme? Is it a fact that the actuals are already exceeding the estimates?

THE HON. SRI M. A. MANICKAVELU : **I am sorry it is a general question. I had collected information only about this particular thing.**



15th March 1958]

SRI M. K. SOMASUNDARAM : இம்மாதிரி தண்ணீர் சப்ளை விஷயத்தில் மெயின் ரோடைக் கடந்து அடுத்த பக்கத்தில் தண்ணீரைக் கொண்டு போவதில் தடை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ரோடைக் கடந்து கொண்டு போவதற்கு சீக்கிரத்தில் அரசாங்கம் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ரோடைக் கடந்து தண்ணீரை எடுத்துக்கொண்டு போகவேண்டியதாக இருந்தால், சாத்தியமான வரை அப்படியும் தண்ணீர் எடுத்துக்கொண்டு போகப்படுகிறது.

SRI K. B. S. MANI : ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமில், அதிகமாக குடி தண்ணீருக்குக் கஷ்டப்படும் செம்படவர்களுடைய குறைபாட்டை நீக்குவதற்காக அவர்களுடைய பகுதிகளையும் சேர்த்துக்கொள்ளும் உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கடல் செம்படவரா ? நல்லத் தண்ணீர் செம்படவரா ?

SRI K. B. S. MANI : கடல் தண்ணீர் செம்படவர்கள்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கடல்நீர் பக்கத்தில் இருக்கிறது. ஆனால், அவர்களுக்குக் குடி தண்ணீர் தேவைக்காக கிணறுகள் வெட்டி அவர்களுக்கு நல்ல தண்ணீர் வழங்கவேண்டியதுதான்.

SRI M. S. SELVARAJAN : இத்திட்டத்தின் மூலதனச் செலவை அரசாங்கம் பொறுத்துக்கொள்ளுகிறது. பராமரிப்புச் செலவை ஒவ்வொரு பஞ்சாயத்தும், குறிப்பிட்ட அளவு, பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பது திட்டம். திட்டத்தில் விடுபட்டதுவாக இருக்கிற பகுதிகளிலும், பஞ்சாயத்தின் இதர பகுதிகளைப் போலவே, தொடர்ந்து பல வருஷங்களாக சில பகுதிகள் வீட்டுத் தீர்வையைப் போல் நூற்றுக்கு நூறு தண்ணீர்த் தீர்வையைச் செலுத்திவருகின்றன. பஞ்சாயத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மற்ற பகுதிகளில் வசூலிக்கப்படும் வரியினின்றும் வரி விலக்கு பெற முடியாத நிலைமையில் விடுபடக்கூடிய பகுதிகளுக்கும், செலவு ஆனாலும்கூட, இந்தத் திட்டத்தின் பல எட்டக்கூடிய அளவுக்கு வழி செய்து, அரசாங்கம் திருச்செந்தூரில் விடுபட்ட பகுதிகளை எப்படி இணைக்க ஏற்பாடு செய்திருக்கிறதோ, அதுபோல் ஏற்பாடு செய்வதற்கு முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினர் பொதுக் கேள்வியாக கேட்டு, சாதுரியமாக திருச்செந்தூரையும் சேர்த்து விட்டார். அதனால் நான் அதற்கு பதில் கொடுக்கவேண்டும் என்று வழி காட்டுகிறார். அதற்கும் என்னிடம் இப்போது தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI S. LAZAR : நாஷனல் வாட்டர் ஸப்ளை திட்டம் காவேரி போன்ற நதி ஓடும் பகுதிகளுக்குப் பிரயோகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகிறது. ஆனால், வறண்ட பகுதிகளில் அந்தத் திட்டம் அவ்வளவாக வெற்றி பெறுவதில்லை. அந்த இடங்களுக்கு ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம்தான் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது. அப்படி நிறைவேற்றப் படக்கூடிய ஏற்பாட்டின்படி பல கிராமங்களைச் சேர்த்து அதற்கு கம்பைண்ட் திட்டம் ஒன்று கொடுத்து அதற்கு உயர்ந்தபட்சமாக எவ்வளவு தொகை ஒதுக்க சர்க்கார் முன்வரும் என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : திருச்செந்தூர் தண்ணீர் திட்டம் அம்மாதிரியான கம்பைண்ட் சிஸ்டம்தான். மற்றப்படி பொதுவாக மனதிலே என்ன வைத்து கேட்கிறார் என்று எனக்கு நன்றாக விளங்கவில்லை. . விளக்கமாகக் கேட்டால் நான் சொல்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் உதவி எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

[15th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : உதவி இருக்கிறது. அதைப் பார்த்துத் தான் சொல்ல வேண்டும்.

SRI M. S. SELVARAJAN : இப்போது பைலட் சப்ளை கொடுக்கப்படுகிறது. பூர்ண சப்ளை சொடுப்பதற்கு 40 குதிரை பவர் கொண்ட இயந்திரம் வெளி நாட்டிலிருந்து வரவேண்டியிருப்பதால் அது சாத்தியமாகவில்லை என்றும் இதற்காக 15, 25 குதிரை பவர் உடைய இரண்டு இயந்திரங்களைக் கொண்டு கொடுப்பதற்கு முயற்சிக்கலாம் என்பதாகவும் அதிகாரிகள் கருதுகிற விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிச் செய்ய முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதிகாரிகள் என்ன கருதுகிறார்கள், அதுபற்றிய விவரம் என்ன என்பது எனக்குத் தெரியாது.

### *Officers of the Education Department on foreign tour*

* 343 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of officers of the Education Department who went abroad on study leave in 1955–56; and

(*b*) how many among them were Harijans?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) During 1955–56 and 1956–57, three of the Officers of the Education Department who went abroad for higher studies, were granted study leave. They were not Harijans.

SRI M. JAGANNATHAN : Sir, I wish to know who exactly bears the expenses of these officers when they go abroad for research or higher studies and to what extent.

THE HON. SRI C. SUBRAMANIAM : This overseas training is given under the foreign aid schemes, for example, the United Nations Technical Assistant Scheme and the Colombo Plan. In these cases, we meet what is called the ' local cost ', and the expenditure in foreign countries is met by those authorities who sponsor those schemes.

SRI K. VINAYAKAM : Are the Government aware of the fact that such officers who are deputed for higher studies in foreign countries like the U.S.A., are not properly utilised on their return to this country and that the knowledge that they have acquired in those foreign countries is not fully made use of? For instance, the Headmistress of the Lady Willingdon High School on her return from abroad was shunted back as a Headmistress of some other school. My point is that the knowledge and experience acquired by her after laborious study in foreign countries have not been properly used.

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member has any grievance with regard to any particular case, he may bring it to my notice. I cannot answer it now.



15th March 1958]

### *Receipt books*

* 344 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether printed receipt books, serially numbered, have been supplied to Village Officers; and

(*b*) if not, when such books will be supplied to them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The receipt books are being printed in private presses in the districts and will be supplied to the Village Officers shortly.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : There have been a lot of complaints about defalcations, misappropriations and all those things and these have been repeatedly pointed out by the Public Accounts Committee and also on the floor of the House and may I know when exactly the Government will be made to implement their proposal to prevent such things?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரியாகச் செய்யப்படுகிற மோசடியை தவிர்ப்பதற்காகத் தான் ட்ரிப்லிகேட்டில் ரசீது வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது. அதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். ஆனால் அதற்கு மூன்று லட்சம் புஸ்தகங்கள் வேண்டியிருக்கிறது. சர்க்கார் அச்சகத்தில் அச்சிட முடியவில்லையாதலால் தனிப்பட்ட அச்சகங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலேயே அது உபயோகத்திற்கு வரும் என்று நினைக்கிறேன் ?

SRI M. D. THIAGARAJA PILLAI : அநேக கிராமங்களில் இப்போது அந்தமாதிரியாக ரசீது இல்லாத காரணத்தினால் மோசடி நடைபெறுகிறது. அச்சிடுவதற்கு தாமதமானாலும் கொடுக்கப்படுகிற ரசீதில் தொடர்ச்சியாக நம்பர் கொடுக்க வசதி செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ரசீது இந்தப் பசலியில் இருந்தே கொடுப்பதற்கு தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI K. B. S. MANI : பஞ்சாயத்து போர்டு முதலிய இடங்களில் தேவைப்படும் பாரங்கள் ஹோப் அண்டு கோ கம்பெனியில் கொடுக்கப்படுகிறது. இதனால் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே சர்க்கார் அதற்குப் பல தனியார் அச்சகங்களில் அடிக்கச் செய்வதற்கு உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தது. ஸ்தல ஸ்தாபன சம்பந்தமான கேள்வியை அந்த இலாகாவை நிர்வகித்து வரும் அம்மையாரிடம் போட வேண்டும்.

SRI A. R. MARIMUTHU : இப்போது வழங்கப்பட்டிருக்கும் ரசீது புஸ்தகம் மூலம் இவர்கள் கொடுக்கிற பணம் மோசடியாகாமல் தான் செய்ய முடியும். அதில் பட்டா நம்பர் தான் இருக்கும். ஆனால் விவசாயிகளுக்கு என் எதற்காக இவ்வளவு தொகை என்கிற விவரத்தைப் பார்க்க முடியாது. ஆகவே எந்த எந்த நிலங்களுக்கு எவ்வளவு வரி, எவ்வளவு நீர் தீர்வை என்பதைக் குறித்து முன் கூட்டியே அவர்களுக்கு நோட்டீஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் சொல்கிற விஷயம் வேறு. கொடுத்த பணம் மோசடியாகாமல் இருப்பதற்குத் தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Whereas it has been decided that the forms should be printed not in the Government Press, but by

[15th March 1958

private agencies, may I know who are those people whose services are indented upon to print these forms? May I know whether they have accepted to take up the entire order which seems to be a very huge one and whether they will be in a position to execute the order right before the fasli year?

THE HON. SRI M. A. MANICKAVELU : They are spread all over. Even in the districts, orders have been given. If the hon. Member is very curious to know the names of the printers, he may put a separate question.

SRI M. JAGANNATHAN : May I know whether the supply of receipt books to Village Officers will make the revenue collection fool-proof and knave-proof?

THE HON. SRI M. A. MANICKAVELU : It will be made as fool-proof as possible, but still there will be some fools.

SRI S. M. ANNAMALAI : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இந்த வருஷப் பசலியில் இருந்தே ரசீது வழங்கப்படும் என்றார். கடந்த இரண்டுமாத காலமாக பணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆகவே வசூலிக்கப்படுகிற பணத்திற்கும் பின்பாவது இந்த ரசீது தரப்படுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பசலியில் என்று சொன்னேன். இந்த பசலி ஜூன் வரையிலும் இருக்கிறது.

## *Pension-cum-Provident Fund Scheme*

* 345 *Q.*—SRI M. S. SELVERAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the newly introduced Pension-*cum*-Provident Fund Scheme has been made applicable to all classes of teachers and the non-teaching staff in secondary schools; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The matter is under consideration.

SRI N. K. PALANISAMI : Since the teachers are given only one-fourth of their salary as pension and since the teachers have represented to the Government that they should raise their pension to 'half of their salary', will the Government consider their request favourably?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have not received any such representation. Perhaps the hon. Member has been approached in this matter.

SRI T. T. DANIEL : In view of the fact that this Pension-*cum*-Provident Fund scheme is really of very great benefit to the teachers, will the Government be pleased to extend the scheme to the teachers in the Kanyakumari district also so that they may also benefit by the scheme?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is the intention of the Government, Sir.



15th March 1958]

## *Cholera and Plague*

* 346 *Q.*—SRI M. P. SARATHI AND SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the places now infected with cholera and plague;

(*b*) the number of deaths caused thereby during 1957; and

(*c*) the preventive measures taken?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The districts of South Arcot, Tiruchirappalli, Tanjore, Madurai, Ramanathapuram, Tirunelveli, North Arcot, Salem and Coimbatore are now infected with Cholera. All the districts are free from Plague.

(*b*) Cholera was prevalent in all the districts in the year 1957 except the Nilgiris district. The number of deaths due to cholera and plague during the year 1957, districtwise is as follows :—

*Cholera*

| *District.* | *Number of deaths.* |
|---|---|
| 1. Chingleput ... ... ... | 211 |
| 2. South Arcot ... ... ... | 264 |
| 3. Tanjore ... ... ... | 1,079 |
| 4. Tiruchirappalli ... ... | 761 |
| 5. Madurai ... ... ... | 106 |
| 6. Ramanathapuram ... ... | 12 |
| 7. Tirunelveli ... ... ... | 495 |
| 8. North Arcot ... ... ... | 99 |
| 9. Salem ... ... ... ... | 245 |
| 10. Coimbatore ... ... ... | 184 |
| 11. Kanyakumari ... ... ... | 3 |
| 12. Madras City ... ... ... | 379 |
| Total ... | 3,838 |

*Plague*

| | |
|---|---|
| Salem ... ... ... ... | One. |

(*c*) Mass anti-cholera inoculation campaigns, chlorination of water sources, disinfection of infected houses and materials, educative propaganda among the public, free distribution of sulphaguanidine tablets to cases and contacts, isolation and treatment of cases, appointment of necessary cholera inspectors, cholera overseers, cycle orderlies, chlorination maistries, disinfection mazdoors, and other staff by local bodies, concentration of the entire epidemic reserve of Health Inspectors, Mobile Epidemic Unit and Epidemic Control vans and jeeps in the affected areas, were the measures taken to prevent and control the spread of cholera infection.

As regards Plague, the anti-plague measures were intensified by DDT treatment in the villages, fumigation of grain shops, inoculations, etc.

[15th March 1958

**Sri P. G. MANICKAM** : கடந்த சில வருஷங்களாக காலரா நம் ராஜ்யத்தில் மிகவும் குறைந்து கொண்டிருந்தது. ஆனால் இந்த வருஷம் காலரா வெகு வேகமாக எல்லா ஜில்லாக்களிலும் பரவி வருகிறது. வெயில் காலத்தில் கூட அநேக இடங்களில் காலரா பரவி வருகிறது. சாவும் மும்முரமாக இருக்கிறது. ஆகவே நிபுணர்களை வைத்து இதைப் பற்றி பரிசீலனை செய்ய சர்க்கார் யோசனை செய்து கொண்டிருக்கிறார்களா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : காலரா அநேகமாக குடிதண்ணீர் மூலமதான் வருகிறது. மேல் நாடுகளில் இந்த நோயை அறவே ஒழித்திருக்கிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சி உச்சநிலையில் இருக்கும் இந்தக் காலத்தில் காலராவினால் ஜனங்கள் இறப்பது விசனிக்கத் தக்கது. ஆனால் இதை ஒழிக்க சர்க்கார் என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதையெல்லாம் எடுத்து வருகிறார்கள். மற்ற நாடுகளில் இந்த காலரா, வைசூரி, இவைகளை ஒழித்திருப்பதைப் போல் நாமும் அவைகளை ஒழிக்க முயலவேண்டும்.

**Sri S. B. ADITYAN** : ஒரே வருடத்தில் நம் நாட்டில் 3,800 சொச்சம் பேர்கள் காலராவிற்கு பலியாகியிருக்கிறார்கள். மேலை நாடுகளில் இந்த வியாதி ஒழிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலை நாடுகள் மட்டுமில்லாமல், இலங்கை, சிங்கப்பூர், மலேயா போன்ற இடங்களில் இந்த வியாதி பூராவாக ஒழிக்கப்பட்டு விட்டது. அப்படி அதை ஒழிப்பதற்கு என்னென்ன முறைகள் கையாளப்பட்டன என்று தெரிந்து அவைகளை நம் நாட்டிலும் கையாண்டு இந்த வியாதியை அறவே ஒழிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : 10, 15 வருஷங்களுக்கு முன்பு ஆயிரக்கணக்கில் சாவு இதனால் ஏற்பட்டது. இப்பொழுது எவ்வளவோ குறைந்திருக்கின்றது. கூடிய சீக்கிரம் அதை ஒழித்துக் கட்ட முயற்சி செய்கிறோம்.

**Sri T. T. DANIEL** : May I know from the Hon. Minister whether actually the death rate due to cholera has increased or decreased?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : It has very very much decreased.

**Sri K. ANBAZHAGAN** : ப்ரொட்டக்டட் வாட்டர் சப்ளை, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதியில்லாத இடங்களில் மக்கள் ஏராளமாக கூடுவதால் இந்தக் காலாரா நோய் திடீரென்று கிளம்புவதால், அப்படி பாதுகாக்கப் பட்ட தண்ணீர் வசதியில்லாத இடங்களில் நடக்கும் திருவிழாக்களை நிறுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இதற்காக திரு விழாக்களை நிறுத்த வேண்டிய தில்லை. மக்களின் மனப்பான்மையும் சுகாதார வழிகளும் மாற வேண்டும். குறிப்பாக சில கிராமங்களில் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இருந்தாலும் அதை விட்டு விட்டு அசுத்தமான தண்ணீரைக் குடிக்கிறார்கள். கேட்டால் அது ருசியாயிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

**Sri S. LAZAR** : அமைச்சர் அவர்களின் புள்ளிவிவரத்தில் இருந்து 3,800 வரை மக்கள் இதனால் இறந்து விட்டதாகவும், திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் கிட்டத்தட்ட 2,000 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. இதுபோன்று வருடாவருடம் நடந்து வருகிறது. ஆகவே அதைத் தடுப்பதற்கு நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம் என்று இருக்கிறதே, அதை இந்த இரண்டு ஜில்லாக்களிலும் தீவிரமாக நடத்துவதற்கு இந்த இரண்டு ஜில்லாக்களுக்கு முதலிடம் கொடுத்து விட்டு பின்பு மற்ற ஜில்லாக்களுக்கு நீடிக்க சர்க்கார் முன்வருமா ?



15th March 1958]

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த தடுப்பை எல்லா ஜில்லாக்களிலும் ஒரேயடியாக கையாளவேண்டும். இரண்டு ஜில்லாக்களில் மாத்திரம் கையாண்டால் மற்ற ஜில்லாக்களுக்கு புகுந்துவிடும்.

**Sri A. VEDARATHNAM** : காலரா இருக்கும் பிரதேசத்தில் தண்ணீரை காய்ச்சிச் சாப்பிடச் செய்தால் அது பரவாமல் இருக்கும். அந்த முயற்சியை அரசாங்கம் கையாளக்கூடாதா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : வடிகட்டிச் சாப்பிடுங்கள் என்றாலும் மாட்டேன் என்கிறார்களே.

**Sri K. B. S. MANI** : மந்திரியவர்களின் புள்ளி விவரத்தில் இருந்து மூன்றில் ஒரு பாகத்திற்குமேல் தஞ்சாவூரில் காலராவினால் இறந்திருக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள பிரதானமான ஜில்லா தஞ்சையாகும். குடிதண்ணீரினால்தான் இந்த வியாதி ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உலகப்பிரசித்திபெற்ற திருவிழாக்கள் அங்கு நடக்கின்றன. ஆகவே மக்கள் அங்கு அதிகம் கூடுகிறார்கள். அப்படி கூடுகிற காலத்திலாவது, அங்கு ஸ்பெஷல் வாட்டர் சப்ளை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**Mr. SPEAKER** : அதற்கு பதில் கொடுத்தாகிவிட்டது.

**Sri M. K. SOMASUNDARAM** : சில இடங்களில் காலரா அதிகமாகயிருப்பது, சரியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாத காரணத்தினால்தான் என்பது மந்திரியவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே அதிகப்படியான இன்ஸ்பெக்டர்களைப் போட்டு தீவிர நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் அதிகமாக ஏற்படுகிறது என்று சொல்வது, நாட் சாரிட்டபிள் ; அவ்வளவு நல்லதல்ல, நம் நாட்டின் சூழ்நிலையில் மக்கள் மனப்பான்மையையும் ஒட்டி, கூடுமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு தான் வருகிறோம்.

**Sri R. SRINIVASA PADAYACHI** : கடலூர் தாலூகாவில் காலரா பரவப்பட்டபோது அங்கு ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி இருந்தும் அங்கு டெம்பரரி ஷெட்டில் அதிகமாக இடம் இல்லாததால் மரத்தின்கீழ் கூட காலரா கண்டவர்களைப் போட்டிருந்தார்கள். ஏன் கூடுதல் டெம்பரரி ஷெட் போடவில்லை என்று கேட்கிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : ஷெட் இல்லை என்று அவர்களை விட்டுவிடமுடியாது. எப்படியாவது சிகிச்சை செய்யவேண்டுமென்ற முறையில் சிகிச்சை செய்திருக்கலாம். பிற்பாடு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** : காலராவின் நிலை இப்படியிருந்தபோதிலும் கூட அதை விடக் கொடிய வியாதியான ப்ளேக் இந்த மாகாணத்தில் இல்லை. அதிலும் குறிப்பாக ஹோசூரில் தனி, பேரிகை போன்றவிடங்களில் வருடத்தில் 12 மாதங்களுக்கு அதற்கு உறைவிடமகயிருந்தயிடத்தில் இப்பொழுது அது அடியோடு போனதற்காக குறிப்பாக சுகாதார அமைச்சர் அவர்களையும், சர்க்காரையும் இந்த சபை பாராட்டுமா ?

**Mr. SPEAKER** : The question need not be answered

**Sri K. RAMACHANDRAN** : காலராவினால் வருஷாவருஷம் சாவுகள் அதிகமாக ஏற்படுகிறது. அதற்குள்ள ப்ரெவென்டிவ் மெஷர்ஸ் குறித்து மந்திரியவர்கள் ஒரு பட்டியலை வாசித்தார்கள். அந்த மெஷர்ஸ்

எல்லாம் காலரா நடந்தபிறகுதான் இந்த இடத்திற்கு போய் சேருகிறது. ஆகவே அதை நிறுத்த முடியவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே துரிதமாக ப்ரெவன்டிவ் மெஷர்ஸ் மக்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அறிகுறி ஏற்பட்டால் தான் ப்ரெவன்டிவ் நடவடிக்கை எடுக்கலாம். நல்லபடியாக இருப்பவர்களிடம் இந்தத் தடுப்பு நடவடிக்கை எடுக்க முடியுமா ?

SRI K. VINAYAKAM : ஐயா, காலரா நோய் பரவாமல் இருக்க சில நடவடிக்கைகள் முன்னதாகவே எடுத்துக்கொண்டால் அது பரவாது என்று மந்திரியவர்கள் சில ஜாபிதாக்களை படித்தார்கள். கிராமங்களில் மாரியம்மன் பூஜை போட்டும், கங்கையம்மன் மனம் குளிர உற்சவம் நடத்தினால் காலரா வராது என்றும் கிராம மக்கள் இன்னும் நம்புகிறார்கள். அப்படிச் செய்வதினால் அது பரவாமல் இருப்பதை நானும் பார்த்திருக்கிறேன். ஆகவே, திட்டங்களில் ஒன்றாக அதையும் அரசாங்கம் எடுத்துக்கொள்வார்களா ?

MR. SPEAKER : இந்தக் கேள்விக்கு அனுமதி கிடையாது.

SRIMATHI KOLANTHAI AMMAL : கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் காலரா நோய் பரவுவதற்குக் காரணம் நிலக்கடலை ஸீஸன் காலத்தில் அதை எப்பொழுதும் உண்பதும், ஒரு சில நாட்களில் மேற்குத் தொடர்ச்சி மலையில் இருந்து வரக்கூடிய காற்றும் ஒரு காரணமாகும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, திருவிழாக்களைப் பற்றிய பேச்சு எங்கள் ஊரில் இல்லாதபோதிலும், இந்த வேர்க்கடலை ஸீஸனும் மேற்குத்தொடர்ச்சி மலையில் இருந்து வரும் காற்றும்தான் காரணம் என்று சொல்லப்படுகிற எங்கள் வட்டாரப் பேச்சிற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வேர்க்கடலை அதிகமாகத் தின்னாமல் இருப்பதற்கு அங்கத்தினர்கள் போன்றவர்கள் பிரசாரம் செய்யலாம். ஆனால் மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து வருகிற காற்றை நிறுத்த முடியாது.

*Separation of Treasury and Accounts work from Revenue work*

* 347 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of M. P. Sarathi) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether orders have been issued for the separation of Treasury and Accounts work from Revenue work; and

(b) whether there are any special rules regarding the promotion of persons in the Accounts section?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Yes, Sir. The rules are those specified in rule 30 (b) of the Special rules for the Madras Ministerial Service read with Annexure IV referred to therein (in the Madras Services Manual, 1954—Volume III).

MR. SPEAKER : Questions are over.



## II.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS APPROPRIATION (VOTE ON ACCOUNT) BILL, 1958 (L.A. BILL NO. 11 OF 1958)[a].

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to move—

'That the Madras Appropriation (Vote on Account Bill, 1958 (L.A. Bill No. 11 of 1958) be taken into consideration.'

இதன்பேரில் விளக்கம் கூறவேண்டிய தேவையில்லை. இதன்பேரில் விவாதமும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே சபை இதை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Appropriation (Vote on Account) Bill, 1958 (L.A. Bill No. 11 of 1958) be taken into consideration.'

Hon. Members may discuss it if they want.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இப்போது நமக்கு முன்னால் இருக்கக்கூடிய இந்த ஒதுக்குக் கணக்கின்பேரில் ஒரு சில அபிப்பிராயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்....

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I think it should be our convention that we do not have a discussion on this. Otherwise, it would not be possible to have a Vote on Account if we go on discussing the entire Budget Demands. In order that we may discuss the Budget Demands even after the 31st March, we have to adopt this procedure. I find that even in the Lok Sabha the same procedure is followed, that is to say, this motion is approved without any discussion. So, I would respectfully submit that we may adopt this procedure.

MR. SPEAKER : I think it is a wholesome procedure. I think hon. Members will appreciate the suggestion made by the Hon. the Finance Minister.

The question is—

'That the Madras Appropriation (Vote on Account) Bill, 1958 (L.A. Bill No. 11 of 1958) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That the Madras Appropriation (Vote on Account) Bill, 1958 (L.A. Bill No. 11 of 1958) be passed.'

MR. SPEAKER : The question is—

'That the Madras Appropriation (Vote on Account) Bill, 1958 (L.A. Bill No. 11 of 1958) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

---

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 14th March 1958.

[15th March 1958

Mr. SPEAKER : The next item on the agenda is the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1958. I understand that the Joint Select Committee has not finalized its Report. Therefore, we may pass on to the next item.

Sri M. KALYANASUNDARAM : ஸார், இந்த குத்தகை சாகுபடியாளர்கள் பாதுகாப்பு சட்டமும் நியாயவார சட்டமும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினது ஞாபகம் இருக்கும். அதை ஒரு அவசர சட்டமாக கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறது. அந்த சட்டம் இந்த கூட்ட இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என்று தெரிகிறது. அந்த சட்டம் பற்றி எந்த முறையில் செலக்ட் கமிட்டியில் விவாதம் நடந்தது என்பதை விளக்கிவிட்டு அடுத்த அஜண்டாவை எடுத்துக்கொள்ளலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : No speech can be allowed because there is no item on which the hon. Member can speak. But still I shall allow him to do so as a special case.

The Hon. Sri C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, இந்த செலக்ட் கமிட்டியில் என்ன விவாதம் நடந்தது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். ஆனல் இதைப்பற்றி ஒரு தப்பபிப்பிராயம் வெளியிலிருந்து வருகிறது. அதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். பலர் நினைப்பது சர்க்கார் அந்த சட்டத்தை இதோடு எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிடுவார்கள் என்று நினைக்கிருர்கள். அவ்வாறு ஒன்றும் இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த மாட்டு ஏர் வாரம், கையேர் வாரம், இந்த இரு வாரங்களையும் எப்படி திருத்தி அமைப்பது என்பதைப்பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சபை கலைவதற்குள் இதைப்பற்றியுள்ள முடிவைகொண்டு வரலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தத்தில் இதன்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் விடபோவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : If the Hon. the Leader of the House wants a change in the order of business, he should make a motion because I find in the list of items of business left over from the agenda for 14th March 1958 that the Madras General Sales Tax (Emergency Provisions) Bill, 1958 has to be taken up first, and then the Madras Catering Establishments Bill, 1957, the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958 and the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958.

## III.—MOTION *RE* CHANGE IN THE ORDER OF BUSINESS.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I move—

'That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958, be taken up first and after that, the Madras General Sales Tax (Emergency Provisions) Bill, 1958.'

Mr. SPEAKER : The question is—

'That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958, be taken up first and after that, the Madras General Sales Tax (Emergency Provisions) Bill, 1958.'

The motion was put and carried.



## II.—GOVERNMENT BILLS—*cont.*

## (2) THE MADRAS ENTERTAINMENTS TAX (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 7 OF 1958)[a]

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I beg to move—

'That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 7 of 1958), be taken into consideration.'

சபாநாயகர் அவர்களே, பட்ஜெட் உரையிலே இதைப்பற்றி (அதாவது 9-30 a.m.
தமாஷா வரி அல்லது பொழுது போக்கு வரி அல்லது கேளிக்கை வரி
என்று வேண்டுமானல் வைத்துக்கொள்ளலாம்) குறிப்பிட்டேன். அந்த
வரி கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்கின்ற கருத்தை பட்ஜெட்
உரையிலும் தெரிவித்தேன். அந்த அடிப்படையில்தான் இந்த மசோதா
சபையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்போது 5-ல் ஒரு பங்கு,
30 நயா பைஸாவுக்கு மேல் இருந்தால் ஐந்தில் ஒரு பங்கு இருக்கவேண்டும்
என்பது இப்போதுள்ள சட்டம். நாலில் ஒரு பங்கு 30 நயா பைஸாவுக்கு
மேல் ஒன்றரை ரூபாய்வரையிலும், மூன்றில் ஒரு பங்கு ஒன்றரை ரூபாய்க்கு
மேற்பட்ட கட்டணங்களுக்கும் என்று இப்போது இருப்பதை மாற்றி உயர்த்தப்
பட்டிருக்கிறது. ஆனல் இதில் ஒரு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.
அதாவது, இதுவரையிலும் எல்லா கலை நிகழ்ச்சிகளுக்கும், கேளிக்கை
களுக்கும், வரி போடக்கூடிய சட்டம் இருந்து வந்தது. அதிலும் சில
நிகழ்ச்சிகளுக்கு வரி விதி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது. உதாரணமாக
சங்கீத சபையின் கலை நிகழ்ச்சிகளுக்கும், அதேமாதிரி தொழில் முறையில்
இல்லாமல் (அமெச்சூர் முறையில்) நடத்தக்கூடிய நாடகங்களுக்கும் நாம்
விதி விலக்கு கொடுத்து வந்திருக்கிறோம். இது தவிர சில விளையாட்டு
பந்தயங்களுக்கும் தனித்தனியாக கணக்கெடுத்து வந்திருக்கிறோம். அதே
மாதிரி இருக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு வரியில் ஒரு கணிசமான வருமான
மும் கிடையாது. இருந்தாலும் இதனல் தொந்தரவு அதிகம். ஆகவே
தான் இப்போது சினிமாவிற்கும், குதிரைப் பந்தயத்திற்கும் தவிர, மற்ற
எல்லா நிகழ்ச்சிகளுக்கும்—கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கும்—வரி விலக்கு
அளிக்கவேண்டும் என்ற முறையில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்
கிறது. இந்தக் கட்டண உயர்வு சினிமாக்களுக்கும், குதிரைப் பந்தயங்களுக்கும்
தான் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று
நினைக்கிறேன். அதிலே ஒரு சிலர் — கனம் நாராயணசாமி நாயுடு என்று
நினைக்கிறேன்—நாடகங்களுக்கு இந்த வரி விலக்கு ஏன் கொடுக்க
வேண்டும் என்று கேட்டார்கள். இப்படிப் பலர் நினைக்கலாம். ஆனல்,
இன்றைக்கு நாட்டிலே பொருளாதார அபிவிருத்தி வேண்டும் என்பது
மட்டுமல்ல—அதுவும் அவசியம்—அதோடு மக்கள் இன்பகரமான வாழ்க்கை
நடத்த வசதிகள் இருக்க வேண்டியதும் அவசியம். பொருளாதார அபி
விருத்தி அடைவதனல், கலை போன்ற இன்ப மூட்டக்கூடிய சாதனைகள்
உயராமல் போனல், பொருளாதார அபிவிருத்தியினல் மட்டும் மக்களுக்கு
இன்ப வாழ்க்கை—சுகவாழ்க்கை—அமைந்துவிடாது. பொருளாதார அபி
விருத்தி முக்கியம் என்று ஒருவிதத்தில் கருதலாம். எவ்வளவுக்கெவ்வளவு
திறமையோடு உழைக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு உற்சாகத்தோடு
உழைக்காவிட்டால் பொருளாதாரத் துறையில் கூட முன்னேற முடியாது.
ஆர்வத்துடன் உழைக்க, என்றைக்குமே உழைத்துக்கொண்டு, உழைப்பைத்
தவிர வேறுவிதியில்லை என்ற நிலை ஏற்பட்டால், அந்த உழைப்பின் தரம்
கூடக் குறைந்துவிடும். உழைப்பிற்குப் பிறகு வேடிக்கைகள், கேளிக்
கைகள், விநோதங்கள், மனதுக்கு மாற்ருக கலை, கதைகள் போன்ற
நிகழ்ச்சிகள் அவசியம் என்பதை எல்லோரும் உணர்ந்திருப்பார்கள்.

கலைகள் வளரவேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம்
கிடையாது, அத்துடன் வாழ்க்கைக்கு வளம் கொடுக்கக்கூடிய வகையில்
கலைகள் வளருகிறது. வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற மட்டுமல்ல—வாழ்க்
கையை உயர்த்தி வளர் பெறச் செய்ய கலைகள் தொன்றுதொட்டுப்
பயன்பட்டு வருகிறது. கலைகளை வளர்ப்பது அவசியம். இதற்குமுன்பெல்
லாம் மன்னர்கள் இருந்த காலத்திலே—ஜமீந்தார்கள் இருந்த காலத்திலே

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 10th March 1958.

[Sri C. Subramaniam] [15th March 1958

—கொஞ்சம் கலை உணர்ச்சி பெற்றவர்கள்—பணம் செலவழித்து முயற்சி யெடுத்துக் கொள்ள முன் வந்ததால், நம் நாட்டுக் கலை வளர்ந்திருக்கிறது. இப்போது அந்தக் கட்டம் நீங்கி, குடியாட்சி ஏற்பட்டிருக்கக் கூடிய காலம்—குடியாட்சி மட்டுமல்ல, சோஷலிஸ தத்துவத்தை மேற்கொண்டு, பணக்காரர்களுக்கு எவ்வளவு அதிகமாக வரி போடலாமோ அவ்வளவு போடுவது— என்று இருக்கக் கூடிய காலம்—மன்னர்கள் இல்லை—ஜமீந்தார்களும் கிடையாது. ஆகவே, இன்றைக்கு கலைகள் வளருவதற்கு, பொது மக்களின் ஸ்தாபனமாகிய இந்த சர்க்காருக்கு—அந்த சர்க்காரை இயக்குகிற இந்த சபைக்கும்—பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில் இந்தக் கலையை வளர்க்க முன் வரவேண்டும். கலைகள் வளரவேண்டும்—நல்ல வகையிலே வளரவேண்டும்—என்று பேசுகிறவர்களே கலையின் பெயரால் கொலை செய்கிறார்கள்—யாராவது கொலை செய்யப்படுகிறார்கள் என்று சொல்லவில்லை—வாழ்க்கை கொலை செய்யப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகையால் இன்றைக்கு கலைஞர்கள்—முக்கியமாக கலையிலே ஆர்வமுள்ளவர்கள்—கலையை வளர்க்க சந்தர்ப்பத்தை அடைந்திருப்பவர்கள்—அதிலே கொஞ்சம் அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிலர் நினைக்கலாம், இந்தக் கலையிலே ஈடுபட்டிருக்கிறதின் முதற் குறிக்கோள், இதன் மூலமாக அவ்வளவு அதிகமாக பணம் சம்பாதிக்கலாம் என்று. பணம் சம்பாதிப்பதுதான் குறிக்கோள் என்று நினைக்கலாம். பணம் தான் முதல் குறிகோளாக இருக்கவேண்டுமென்பது எல்லாத் துறைகளிலும் தவறு பொருளாதாரத் துறையிலும்—வேறு எந்தத் துறையிலும்—இது தவறு. கலையிலேயும் அப்படித்தான். இப்படித்தான் கலையை வளர்த்துக் கொண்டு போவோம் என்று சொன்னால், வாழ்க்கை வளம் பெறுவதற்கு பதிலாக, வாழ்க்கை இன்பகரமாக இருப்பதற்கு பதிலாக, வாழ்க்கை சீர்குலைந்து விடும். இன்றைக்கு இதைப் பல இடங்களில் பார்க்கிறோம். நம் நாட்டிலே பத்திரிகை போடுவதைப் பார்க்கலாம். பத்திரிகை போடுவதிலே, மிருக உணர்ச்சியைத் தூண்டக் கூடிய தலைப்புகள் கொடுத்து, அதற்கு முதலிடம் கொடுத்து, இந்தச் சிற்றின்ப விஷயங்களைப் பற்றி வரும் பத்திரிகைகளை—அநேகம் பேர் வாங்கிப் படிக்க முன் வருகிறார்கள்—அதற்காக, இந்தப் பத்திரிகையை இவ்வளவு அதிகமாக முன் வருகிறார்கள், இதற்கு மக்களிடம் இவ்வளவு ஆதரவு இருக்கிறது—என்று சொல்வதானது, தவறான முறையில் பத்திரிகைத் தொழிலைப் பயன்படுத்துவதாக ஆகும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதே மாதிரித் தான் சினிமாவும் இருக்கிறது. படத்தைப் பார்க்க இத்தனை பேர் வருகிறார்கள் என்றால்—மிருக உணர்ச்சியைத் தூண்டக் கூடிய முறையில் இருக்கிறது என்றால் அதைப் பார்க்க அதிகமான பேர்கள், ஏராளமான ஜனங்கள் வரலாம். ஆனால், அதன் மூலமாக அவர்களுடைய மனமும் பாழ்படுத்தப்படுகிறது என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இதே போலத்தான் டிராமா—மற்ற நிகழ்ச்சிகளும கூட. ஆகவே, மற்றவைகளை விட கலைத் துறையில் சேவை செய்கிறவர்கள், இந்தப் பண்பைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்தப் பொறுப்பை உணர்ந்து எல்லோரும் நடக்கிறார்களா என்பது சந்தேகம். ஆனால் அது போகப் போகத் திருந்தும் என்று நினைக்கிறேன். நம் கலைகள் எல்லாம் நல்ல முறையில்—புனிதத் தன்மை பெற்று—வளரும் என்று நம்புகிறோம். அந்த நம்பிக்கையில் எல்லாக் கலைகளையும் வளர்க்க ராஜ்ய அரசாங்கத்தால் மட்டுமல்ல, மத்திய அரசாங்கத்தாலும் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இதைச் சட்டம் மூலமாகச் செய்யமுடியாது, பிரசாரம் மூலமாகச் செய்யமுடியாது. இந்தப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள், அந்த பொறுப்பை உணர்ந்து—கடமையை உணர்ந்து—பணியாற்றினால்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை நம் ராஜ்யத்திலே—நல்ல நிலைமை—ஏற்படவேண்டும் என்ற அடிப்படையில், அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



15th March 1958] [Sri C. Subramaniam]

இன்றைய தினம் சினிமாவானது எல்லா இடங்களிலும் பரவிக்கொண்டு வருகிறது. சினிமா பார்க்காதவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று கேட்டால், ஏதோ பெரிய துறவிகளாக இருப்பவர்கள் வேண்டுமானால் இருக்கலாம். அவர்களும் கூடப் பார்த்திருக்கலாம். மகாத்மா காந்தி அவர்களும்கூட பார்த்திருக்கிறார்கள். இதனாலே, எல்லோரும் பார்க்கக்கூடிய ஒன்றாக சினிமா அமைந்திருப்பது மட்டுமல்லாமல், ஓரளவு பார்ப்பது மட்டுமல்ல, அன்றாட வாழ்க்கைக்கு வாரத்திற்கு இரண்டு மூன்று தடவைகள் போனால் தான் சந்தோஷம் ஏற்படுகிறது என்ற நிலைமை ஏற்பட்டு—நகர் புறங்களில் மட்டுமல்ல—நாட்டுப் புறங்களிலும் பரவி வருகிறது. பரவலாக இன்றைக்கு இந்த சினிமா இருப்பதால், அதனால் கெடுதல் ஏற்படுமானால், அந்தக் கெடுதல் பரவலாக ஏற்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகையால் தான் சினிமாத் துறையில் சேவை செய்கிறவர்கள், இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதன் சக்தியை உணர்ந்து, நம் நாட்டைப் பாழ்படுத்தி விடாமல் கதை எழுதுகிறவர்கள், நடிக்கிறவர்கள், படம் எடுப்பவர்கள் எல்லோருக்கும்— பார்த்துக் கொள்ளவேண்டிய சிறப்பான பொறுப்பு இருக்கிறது—தனிப்பட்ட ஒரு பொறுப்பு இருக்கிறது—என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையாளருக்கும் இந்தப் பொறுப்பு இருக்கிறது. பத்திரிகைகளையாவது எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மட்டும் தான் படிக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு சினிமாவானது குழந்தைகள் முதல் வயோதிகர்கள்வரை பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அதிலும் தமிழ்ப் படம் எல்லோரும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. நான் சினிமா படம் பார்த்து ரொம்ப நாளாகி விட்டது. அப்படி ஒரு சில படங்களுக்குப் போனாலும் அரை மணி பார்த்து விட்டு வந்து விடுவேன். அதற்குமேல் பார்க்க முடிவதில்லை (ஒரு அங்கத்தினர்: ஏன் அவ்வளவு சகிக்க முடியாமல் இருக்கிறதா ?) ஆமாம், அவ்வளவு சகிக்க முடியாமல் இருக்கிறது. மற்றப் பேருக்கு எப்படி இருக்கிறதோ எனக்குத் தெரியாது. என்னுடைய முடிவைச் சொல்ல வரவில்லை. இப்போது ஒவ்வொரு வருஷமும் தமிழ் நாட்டிலே தயாரிக்கக்கூடிய தமிழ்ப் படங்கள், தெலுங்குப் படங்கள், கன்னடப் படங்கள், மலையாளப் படங்கள் எல்லாவற்றையும் பார்த்து, நல்ல படமாக இருக்கக் கூடியவைகளுக்குப் பரிசு கொடுக்க குழுக்கள் நியமிக்கப்பட்டு பரிசோதனை செய்கிறார்கள். அநேக இடங்களில் பரிசு விழாக்களில் கலந்து கொண்டிருக்கிறேன். இப்போதும் அது நடந்துகொண்டிருக்கிறது. நான் அவர்களை விசாரித்தேன். நான் போய்ப் படம் பார்க்காவிட்டாலும் கூட, நம் படங்களின் தரம் உயர்ந்து வருகிறதா என்று விசாரித்து வருகிறேன். நம்முடைய வாழ்க்கையிலே இவ்வளவு சக்தி பெற்ற இந்த சினிமாத் தொழில் எந்த முறையிலே வளருகிறது என்பதில் அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டும். பணம் இப்போதும் வரலாம். வளர்ச்சியைப் பொறுத்த வரையில், மற்றப் படங்கள்—தெலுங்குப் படங்கள், கன்னடப் படங்கள், ஹிந்திப் படங்கள், இவைகளெல்லாம்—துரிதமாக முன்னேறி வரும்போது, தமிழ்ப் படங்களில் முன்னேற்றம் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் சொன்னதாக நினைத்துக் கொள்ளவேண்டாம். தராதரம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். நான் சினிமாக்கள் பார்க்காததினாலே, பார்க்காதவர் எப்படிச் சொல்லமுடியும் என்று கேட்கலாம். இந்தத் துறையிலே அக்கரை எடுத்துக் கொள்ளக் கூடியவர்கள், தீர்ப்புச் சொல்லக் கூடியவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள். தமிழர் கலையைப் பற்றிப் பேசுகிறவர்கள், தமிழ்மொழியைப் பற்றிப் பேசுகிறவர்கள், தமிழரின் பண்பாட்டைப் பற்றிப் பேசுகிறவர்கள், இந்தத் துறையிலே நம்முடைய தரம் குறைகிறது என்ற இழுக்கு ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அவசியம். இப்பொழுதுள்ள தமிழ் படங்களை எடுத்துக் கொண்டால் எல்லாவற்றிலும் மூன்று அல்லது நான்கு அம்சங்கள் பொதுவாக இருக்கின்றன. என்று சொன்னார்கள். எந்தத் தமிழ்ப் படமாகயிருந்தாலும்—அது "காமெடி" ஆக இருந்தாலும், "டிராஜெடி" ஆக இருந்தாலும் அல்லது சரித்திரப் படமாக இருந்தாலும்—ஒவ்வொரு படத்திலும் ஒரு நடனம், ஏன் ஒரு நடனம், பல நடனங்கள், இருந்தாக வேண்டும். நடனம் இல்லாவிட்டால் படம் எடுக்காது. (சிரிப்பு.) அதோடு ஒரு கத்திச் சண்டையையும் எங்கேயாவது நுழைத்துவிட வேண்டும்,

[Sri C. Subramaniam] [15th March 1958

9-50 a.m. "காமிக்" அதாவது கேலி கதா பாத்திரங்களை மத்தியிலே புகுத்தித் தான் ஆகவேண்டும். கதைக்கு சம்பந்தம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மத்தியிலே இது வந்தே தீரவேண்டும். இன்னும் 4-வது அம்சம் என்ன வென்றால், காதல் இல்லையென்றால் கதையில்லை என்பது. (சிரிப்பு.) இந்த அடிப்படையில்தான் நமது தமிழ்ப்படங்கள் வருகின்றன. பரிசீலனை செய்து பார்க்கக் கூடியவர்கள், இந்தப் படங்களுக்குக் கதை எழுதுகிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இவர்கள் எழுதக்கூடிய கதைகள் இந்த அளவுக்கு இருக்கிறதா என்று ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. தரம் குறைந்து வருகிறது என்ற முறையிலே எல்லோருக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது.

**Sri S. B. ADITYAN**: வரியைப் போடுவதனாலே எப்படி தரம் உயரும் என்று கேட்கிறேன். ஆட்சேபகரமாக இருப்பதை வெட்டி விடலாமே. தணிக்கை செய்கிற அதிகாரம் அரசாங்கத்தின் கையில்தானே இருக்கிறது.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: வெட்டுகிறது என்றால், பூராவையும் வெட்டித்தான் ஆகவேண்டும். (சிரிப்பு.) 100 அடி, 200 அடி அல்லது 1,000 அடி என்றிருந்தால் வெட்டி விடலாம். கதை பூராவுமே அப்படி யிருக்கிறபொழுது என்ன செய்ய முடியும்? சர்க்காரே இந்தத் துறையை எடுத்துக் கொண்டால் கதை எழுதிக் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம் என்று கனம் அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள். இந்த அடிப்படையில் இருந்தால் சர்க்கார் நடத்தினாலும் பிரயோஜனம் இல்லை. இது எல்லாம் கட்சி நலனுக்குக் கூட பிரயோசனமாக இருக்கிறது, ஆகையால் இந்தத் துறையில் இருக்கிறோம் என்ற கருத்தையும் தெரிவித்தார்கள். இந்த அடிப்படையில் பத்திரிகை அதிகமாக விலைப் போகிறதே என்ற ஆசையிலே சிலர் ஆபாசமாகப் பிரசுரம் செய்கிறார்கள். (சிரிப்பு.) இந்த சினிமாக்கள் மூலமாக அதிலும் இளைஞர்கள், உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள் வந்து சேரவேண்டும் என்ற அடிப்படையிலே, சினிமா கதைகளும், சினிமா நடிப்பதும் இருக்குமேயானால், அது நம் நாட்டிற்கு கெடுதலைத்தான் விளைவிக்கும். இப்பொழுது வேண்டுமானால், இந்த மாதிரி நடத்துகிறவர்கள் ஒரு சிலர், இதன் மூலமாக அவர்கள் மனதைக் கவர்ந்தாலும் கவரலாம். நாம் விரும்புவது என்ன? நாடு உயரவேண்டும், நமது மக்கள் உயர வேண்டும், பண்பு உயரவேண்டுமென்று நினைக்கிறோம். கட்சி வளருவதற்காகவோ அல்லது நமக்கு அதிகமாகப் பணம் கிடைக்கிறதே என்ற அடிப்படையில்மட்டும் இந்தத் துறையில் ஈடுபடுவோமேயானால், கலைத்துறையில் ஈடுபடுவோமேயானால், நாடு வளம் பெறுவதற்குப் பதிலாக, நாடு நாசம் அடைந்துவிடும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். "தமிழ் நாடு, தமிழ் நாடு" என்று சொல்லுகிறார்கள், நம்முடைய பண்பு உயரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படியிருக்கும் பொழுது இந்த சினிமாத் துறையில் நமது பண்பு குறைந்துகொண்டு வருகிறது என்றுதான் எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இதிலே அவர்களுக்குத் தனிப்பட்ட பொறுப்பு இருக்கிறதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கலைகள் எல்லாம் நல்ல முறையில் வளரவேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். இந்த சபைக்கும் அதே அடிப்படையான நோக்கம் தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் இந்தக் கருத்துக்களை சபை முன்பு வைக்கவேண்டுமென்று எண்ணினேன். அந்த அடிப்படையில் தான் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் இந்தக் கருத்துக்களைச் சொன்னதினால், திராவிட முன்னேற்ற கழக அங்கத்தினர்கள் இதில் அதிகமாகப் பங்கு எடுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்குச் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். எனக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற முறையில் அல்ல. உண்மையிலேயே நம் நாடு நலம் பெறவேண்டும், நமது பண்பு பாழடைந்து போகாமல் இருக்கவேண்டும். தரம் குறையாமல் இருக்கவேண்டும், நம்முடைய வாலிபர்கள், மாணவ மாணவிகள், அவர்களுடைய நல்ல உணர்ச்சிகள் வளருகிற முறையில், முக்கியமாகக் கலைஞர்கள், நடிகர்கள், இன்னும் சினிமாத் துறையில் சேவை செய்கிறவர்கள் நடந்துகொள்ளவேண்டிய கடமை இருக்கிறது என்பதை வலியுறுத்திக்கொண்டு இந்த மசோதாவை சமர்ப்பிக்கிறேன்.



15th March 1958] [Sri C. Subramaniam]

**DEPUTY SPEAKER**: Motion moved—

'That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 7 of 1958)' be taken into consideration.

The Motion is before the House for discussion.

**Sri A. V. P. ASAITHAMBI**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, சினிமா, குதிரைப் பந்தயம் ஆகிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி அமைப்பு மசோதாவை சமர்ப்பிக்கின்ற நேரத்திலே, அமைச்சர் அவர்கள் சினிமாத் துறையில் இருக்கக்கூடிய பாதக சாதகங்களைப் பற்றி எல்லாம் நம்மிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். இந்த வரி விதிப்பை திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்க்கும் என்றும், அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தத் துறையில் அதிகமாக இருக்கிறார்கள் என்றும், நாட்டிலே ஒரு கருத்து இருந்து வந்தது. ஆனால் அதற்கு நேர்மாறாக, இந்த வரி விதிப்பை நாங்கள் எதிர்க்கவோ, அல்லது ஆட்சேபிக்கவோ இல்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் ஏதோ இந்த சினிமாத் துறை பூராவும் எங்கள் கையில் இருப்பது போலவும், இன்றைக்கு சினிமா உலக மானது. . .

**The Hon. Sri C. SUBRAMANIAM**: தயவுசெய்து கருத்தை தவறாக எடுத்துக்கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். சினிமா துறை பூராவும் "தி.மு.க." கையில் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. இங்கே உள்ளவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இதிலே அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள், மற்றக் கட்சியில் உள்ளவர்கள் அப்படியில்லை என்றுதான் சொன்னேன்.

**Sri A. V. P. ASAITHAMBI**: இங்கே இருக்கிறவர்களில் நாங்கள்தான் பங்கு கொண்டிருக்கிறோம். எனவே கலைத்துறையில் நாங்கள் இறங்கியிருப்பதினாலே சினிமா உலகம் கெட்டுவிட்டது போலவும் அமைச்சர் அவர்கள் பேசினார்கள். கலை உயரவில்லை, பண்பாடு உயரவில்லை என்றெல்லாம் பட முதலாளிகள் சொன்னதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் பேசினதிலிருந்து, சினிமாவினுடைய வரலாறே அவர்களுக்குத் தெரியாதபடி பேசுகிறார்கள் என்று நான் சொல்ல முடியும். (கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம் வாஸ்தவம்தான்.) தமிழ் நாட்டில் பேசப்படாத படம் வந்த காலத்திலிருந்து இன்று வரைக்கும் பட வளர்ச்சியை எடுத்துக்கொண்டால் தமிழ் படத்துறை ரொம்ப தூரம் முன்னேறியிருக்கிறது. இதை யாருமே மறுக்க முடியாது. மறுக்கலாம், ஆனால் நிரூபிக்க முடியாது. எதை வைத்துச் சொல்கிறேன் என்றால், ஒரு வேளை பொருளாதாரத் துறையில் உயராமல் இருக்கலாம். அதற்குக் காரணம் நம்முடைய அரசாங்கத்தின் அமைப்பு. இன்றைக்கு இதர மொழிப்படங்கள் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கலாம். காரணம் என்னவென்றால், பிற மொழிப் படங்களான ஹிந்திப் படங்களின் தரம் உயர்ந்திருக்கலாம், வருமானம் அதிகமாக இருக்கலாம். அவைகளுக்கு அகில இந்திய மார்க்கெட் இருக்கிறது. ஆங்கிலப் படங்கள் தரமும் உயர்ந்திருக்கலாம். அவைகளுக்கு உலக மார்க்கெட் இருக்கிறது. பொருளாதாரத் துறையில் அதிகமாக உயரவில்லை என்று சொன்னால், தமிழ்ப்படங்கள் தமிழ் நாட்டுக்குள்ளேதான் ஓட வேண்டியிருக்கிறது. தப்பித் தவறி இலங்கை, சிங்கப்பூர், மலேயா முதலிய இடங்களுக்குப் போவதாய் இருந்தாலும், அங்கேயிருந்து பணம் வருவதற்கு சிரமமாய் இருக்கிறது. நமது தமிழ்ப் படங்கள் மலையாளப் பகுதிகளிலே ஓரளவு ஓடிக்கொண்டு இருந்தன. இப்பொழுது அவர்களும் படம் எடுக்க ஆரம்பித்து விட்டார்கள். கன்னடப் பகுதியிலும் நம்முடைய படங்கள் அதிகமாக ஓடுவதில்லை. அவர்களும் படம் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். நம்முடைய படங்கள் அங்கெல்லாம் ஓட முடியாக

[Sri A. V. P. Asaithambi] [15th March 1958

நிலையிலே, பொருளாதாரத் துறையிலே கொஞ்சம் வருவாய் குறைந்திருக்கிறதே தவிர, மற்றப்படி படத்தின் தரம் உயரவில்லையென்று யாருமே நிரூபிக்க முடியாது.

சினிமாவினால் பண்பாடு கெட்டிருக்கிறது என்று சொன்னால் அது சரியாகாது. பத்து ஆண்டுகளுக்கு முன் சினிமா படங்களின் தரத்தையும் இப்பொழுது உள்ள தரத்தையும் பார்த்தால் நிச்சயமாக தரம் உயர்ந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். திராவிட முன்னேற்ற கழகம் இந்த சினிமா துறையில் புகுந்ததற்குப் பின்னால் சினிமாவின் தரம் உயர்ந்திருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பொதுவாக சினிமா படங்கள் நாட்டு மக்களின் நிலையை உயர்த்துவதாக இருக்க வேண்டும். பொழுது போக்காக மட்டும் இருக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. நன்றாக உண்டு, உடுத்து, உறக்கத்திலிருக்கின்ற மக்களுக்கு வேண்டுமானால் அது பொழுது போக்காக இருக்லாம், ஆனால் நம்முடைய நாட்டில் ஏழை மக்களுக்கு மத்தியானச் சாப்பாட்டுக்கு வழி இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகையால் நாட்டு மக்களின் நிலையை உயர்த்துவதற்கு ஏற்ற முறையில் சினிமா கலை பயன் பட வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சினிமா படங்கள் நாட்டு மக்களின் நிலையை உயர்த்தக் கூடிய நிலையில் இருந்தனவா என்று பார்த்தால் நிச்சயமாக கிடையவே கிடையாது. அந்தப் படங்களில் மூடக் கொள்கைகள்தான் புகுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் படங்கள் இதிகாசத்தையும் புராணத்தையும் ஒட்டின கதைகளாக இருந்தன. தமிழ் வசனமாவது நன்றாக இருந்ததா என்று பார்த்தால் அதுவும் நல்ல தமிழாக இருக்காது. மோசமான தமிழாகத்தான் இருக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் சினிமா துறையில் புகுந்த பிற்பாடு, சினிமா துறையிலேயே, கதைகள் அமைப்பிலேயே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம். எங்கள் கட்சித் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய "வேலைக்காரி" படத்திற்கு அப்புறம்தான் இந்த நாட்டின் படக் கதைகளிலேயே ஒரு மாற்றம் அடைந்தது என்று சொல்லலாம். வேலைக்காரி படம் கோயம்பத்தூரில் எடுக்கப்பட்டது. அதைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரிந்திருக்குமானால் பட உலகின் வளர்ச்சியைப்பற்றி அவ்விதம் சொல்லியிருக்க மாட்டார்கள். காங்கிரஸ் அரசாங்கம் சில நல்ல திட்டங்களை மக்களிடையே பரப்ப வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்குபோது நாங்கள் அந்த திட்டங்களை சினிமாவின் மூலம் பரப்ப பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். நாங்கள் பயன்படுத்திக் கொண்டது போல் காங்கிரஸ் அரசாங்கம் செய்தது கிடையாது, செய்து இருக்க முடியாது. உதாரணமாக மது விலக்கு திட்டத்தை எடுத்துக் கொள்வோம். இது ஒரு நல்ல திட்டம். நம் நாட்டில் குடிக்கிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் குடிக்காமல் இருக்க தகுந்த பிரசாரம் செய்ய வேண்டும். நாங்கள் இதற்காக சினிமாவை பயன் படுத்திக் கொண்டோம். அறிஞர் அண்ணா அவர்கள் மது விலக்கைப் பற்றி பிரசாரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், "நல்ல தம்பி" என்ற படத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பேசுவது போல் அரை அல்லது முக்கால் மணி நேரத்திற்கு காட்சிகளை அமைத்துக் கொடுத்தார். ஆகையால், சினிமா நாட்டு மக்களின் நிலையை உயர்த்துவதாக இல்லை, நல்ல பண்பாடுகளை எல்லாம் கொலை செய்யப்பட்டு வருகின்றன என்று சொல்வதற்கு காரணம் என்ன. திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்கள் சினிமாவில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களே என்ற பொறாமையாகத்தான் இருக்கும். (சிரிப்பு.)

**THE HON. SRI C. SUBRAMANIAM:** என்னைப் பொறுத்தவரை அந்த மாதிரி பொறாமை கிடையாது என்பதை உறுதியாகச் சொல்கிறேன். (சிரிப்பு.)

**SRI A. V. P. ASAITHAMBI:** உங்களுக்கு வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். ஆனால் உங்களோடு கூட இருக்கிறவர்களுக்காக நீங்கள் பேசலாமா. (பலத்த சிரிப்பு.)



15th March 1958] [Sri A. V. P. Asaithambi]

அது எப்படி இருந்த போதிலும் சினிமா எங்களால் உயர்ந்துவிட்டதா அல்லது தாழ்ந்து விட்டதா என்று ஆராய்ந்து பார்த்தால், அது எங்களால் உயர்ந்து இருக்கிறது என்பதை நிச்சயமாக சொல்ல முடியும், நிரூபிக்க முடியும்.

ஜமீந்தாரி ஒழிப்புக்காக ஒரு சட்டம் செய்திருக்கிறீர்கள். ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது. ஜமீந்தாரியை ஒழிக்க வேண்டிய அவசியம் பற்றி நாட்டு மக்களுக்கு பிரசாரம் செய்ய வேண்டும் என்கிற முறையில் "வேலைக்காரி" என்னும் படத்தில் வேதாசல முதலியார் என்னும் பாத்திரத்தை அண்ணா அவர்கள் சிருஷ்டி செய்து கொடுத்திருக்கிறார்கள். இதில் எந்த் விதமான துவேஷமும் கிடையாது.

பணக்காரர்கள் ஏழை மக்களை கொடுமைப்படுத்தி வட்டி கேட்கிறார்கள் என்பதை "வேலைக்காரி" என்னும் படித்தில் அழகாக அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதில் நம்முடைய பண்பாடு கொலை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லமுடியுமா? கதை என்றால் காதல் என்று இருக்கத்தான் இருக்கும். காதலில் கட்டுண்டு நாம் கல்யாணம் செய்துகொள்வதை தவறு என்று அமைச்சர் அவர்கள் சொல்வாரா என்பது எனக்குத் தெரியாது. பழைய கதைகளில் புராணக் கதைகளில் ஒருவருக்கு பல மனைவிகள் என்றெல்லாம் உண்டு. ஆனால் தற்பொழுது ஒருவருக்கு ஒருத்தி என்ற முறையில்தான் கதை அமைக்கப் படுகிறது.

"வேலைக்காரி" படத்தில் வசனங்கள் எல்லாம் நல்ல தமிழிலேயே இருக்கின்றன. அதற்குப்பிறகுதான் சினிமாவிலேயே நல்ல தமிழ், மறுமலர்ச்சித் தமிழ் உபயோகிப்பது என்று ஏற்பட்டது. அடுக்கு மொழிகள் உபயோகிக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. அடுக்கு மொழிகள் உபயோகிப்பதினால் தவறு ஒன்றும் இல்லை. அப்படி அவைகளை உபயோகிப்பதினால், தமிழில் எங்களுக்கு உள்ள திறமை, ஆர்வம், புலமை இவைகளைத்தான் காட்டுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அடுக்கு மொழி உபயோகிப்பது, அக்கிரமமான, பாவமான, தகாத காரியம் அல்ல. ஆகையால், நாங்கள் சினிமா துறையில் புகுந்த பிறகுதான் நல்ல கதைகளும், மறுமலர்ச்சித் தமிழும ஏற்பட்டதே தவிர அதற்கு முன்பு அல்ல என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஏதாவது ஒன்றிரண்டு ஆபாசமாக இருந்தால், அதை நீங்கள் தாராளமாக வெட்டி விடுங்கள். அதற்குத்தான் "சென்சார் போர்டு" இருக்கிறது. நாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை.

எத்தனையோ ஆங்கிலப்படங்கள் இருக்கின்றன. அவைகளை அந்த நாட்டின் பண்பாட்டோடு பார்த்தால் தான் ஆபாசம் என்று சொல்ல முடியாதே தவிர நம்முடைய பண்பாட்டின்படி பார்த்தால் ஆபாசமாகத் தான் தோன்றும். நம்முடைய பண்பாட்டிற்கு மீறி கதையில் ஏதாவது ஆபாசம் இருந்தால் அதை தாராளமாக "சென்சார் போர்டு" வெட்டி விடலாம். அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் "சென்சார் போர்டு" அப்படி ஒன்றும் செய்வதில்லை. படத்தில் ஏதாவது ஒரு நல்ல கருத்து சொல்லப்பட்டிருந்தால் அதை வெட்டி விடுகிறார்கள். உதாரணமாக நான் "சர்வாதிகாரி" படத்தில் ஒரு வசனம் எழுதினேன்.

"பாடுபடாத அதிகார வர்க்கத்திற்கு மாட மாளிகை—மாளிகையிலே ஒரு மஞ்சம்—மஞ்சத்தின்மேலே மலர்கள்—மலர்களின் மேலே மனோகரி,—அவள் கையிலே கிண்ணம்,—கிண்ணத்திலே மது,—மதுவிலே மயக்கம்,—மயக்கத்திலே இருவர், இருவரிடத்திலே இன்பம்,—எக்காளம்—இறுமாப்பு—இரக்கமற்ற சிந்தனை" என்று இருந்தது. இதில் என்ன தவறு இருக்கிறது? சிற்றின்பம் இருக்கிறதா? ஆனால் இந்த வசனம் அதிகார வர்க்கத்தை கண்டிக்கும் முறையில் இருக்கும் என்று சொல்லி இதை வெட்டிவிட்டார்கள். சில படங்களில் குளிக்கும் காட்சிகள் வருகின்றன. இதை வெட்டி எடுக்கலாம். யாரும் ஆட்சேபிக்கப் போவது கிடையாது.

[Sri A. V. P. Asaithambi] [15th March 1958

நான் 1, 2, கதைகள் எழுதியிருக்கிறேன், அண்ணா அவர்கள் 4, 5, கதைகள் எழுதியிருக்கிறார். கருணாநிதி அவர்கள் 7, 8, கதைகள் எழுதியிருக்கிறார். நாங்கள் இன்னும் ஒன்றிரண்டு கதைகள் எழுதிக் கொண்டிருக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினாலேதான் சினிமாவின் தரம் கெட்டுவிட்டது, நல்ல பண்பாடு போய்விட்டது என்று கூப்பாடு போடுவதில் அர்த்தம் கிடையாது.

பட உலகத்தை பிரசாரத்திற்கு பயன்படுத்திக் கொள்கிறோம் என்றால் அதில் ஒன்றும் தவறு கிடையாது. பதினைந்து வருஷங்களுக்கு முன்பாக, "தேச பக்தி" என்ற படத்தில் காலஞ் சென்ற பி.ஜி. வெங்கிடேசன் அவர்கள் தேசக் கொடியுடன் பாடிக்கொண்டு வருகிறார். இதை வெள்ளைக்காரர்கள் அனுமதித்தார்கள். நாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. "மாத்ருபூமி" என்ற படத்திலும் பிரசாரம் செய்யப்பட்டது. ஸ்ரீ மெய்யப்ப செட்டியார் தயாரித்த "நாம் இருவர்" என்ற படத்திலும் தேசிய கொடியை வைத்துக் கொண்டு நடனங்கள் ஆடும் காட்சிகள் இருந்தன. அதில் நமது தேசத் தலைவர்கள் படங்கள் எல்லாம் இருந்தன. காந்திஜி, ராஜாஜி, சிதம்பரம் பிள்ளை அவர்கள் படங்கள் எல்லாம் இருந்தன. நாங்கள் அதைப் பற்றி ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை.

அங்கே படங்களும் மாட்டியிருந்தன, ஆனால் காமராஜர் படம் மாட்டப் படவில்லை. அவருடைய ஒரு படத்தை மட்டும் ஏன் மாட்டவில்லை, அப்படி இருந்தால் ஒரு படத்தையும் மாட்டாமல் இருக்கலாமே என்றுதான் சொன்னார்கள். இம்மாதிரிதான் நாங்கள் சொல்லியிருக்கிறோமே தவிர படமே மாட்டக்கூடாது என்று சொல்லவில்லை. ஒரு தலைவருடைய படத்தை ஏன் மாட்டவில்லை என்று கேட்டோம். ஒரு தலைவருடைய படத்தை மாட்டுவதற்கு ஏன் பயப்பட வேண்டும். தலைவர்கள் நாட்டிலுள்ள பிரஜைகளில் ஒருவர் இல்லையா, அவருடைய படத்தை மாட்டுவதற்கு தகுதியில்லையா? அதைப்போல் எங்களுடைய தலைவர்களுடைய படங்களை மாட்டுவதற்கு என்ன ஆட்சேபணை? அவர்களும் இந்நாட்டின் பிரஜைகள் இல்லையா, அவர்களும் இந்நாட்டிற்கு வரி செலுத்தவில்லையா, அவர்களுடைய படத்தை மட்டும் ஏன் மாட்டக்கூடாது என்று சொல்ல வேண்டும்.

எங்கள் படங்கள் எங்களுடைய கட்சிப் பிரசாரத்திற்கு பயன்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அதனால் என்ன தப்பு இருக்கிறது என்று கேட்கிறேன். அந்தக் காலத்தில் அவர்களுடைய பிரசாரத்திற்கு சினிமாவை அவர்கள் உபயோகித்துக்கொள்ளவில்லையா? சினிமாக்கள் நாட்டு மக்களுடைய நிலையை நல்ல அளவில் உயர்த்தியிருக்கிறது. சினிமாக்கள் பொழுது போவதற்கு மட்டும் ஏற்பட்டது அல்ல, அதனால் மக்களிடத்தில் கலை உயருகிறது. இந்நாட்டில் படிக்காதவர்கள் அநேகம் இருக்கின்றார்கள். இலவசக் கல்வி கொடுத்தாலும், அவர்களுக்கு சிலேட், புத்தகங்கள் வாங்கி கொடுத்தாலும் அவர்கள் சரியானபடி படிக்க முடியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சினிமா எவ்வளவோ சௌகர்யமாக இருக்கிறது: போதிய வருமானம் இல்லாதவர்களுக்கு படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கும், உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்துகொள்வதற்கும் சினிமா எவ்வளவோ உதவியாக இருக்கிறது. வருமானம் இல்லாமல் நாலைந்து அணாவில் சகலவிதமான விஷயங்களையும் தெரிந்து கொள்வதற்கு சினிமா ஒரு சர்வகலாசாலையாக அவர்களுக்கு இருக்கிறது. குறைந்த செலவில் உலகத்திலுள்ள பல விஷயங்களை நாட்டு மக்களுக்கு உணர்த்துகிற, அறிவிக்கிற ஒரு பெரிய கலாசாலையாக சினிமா இருக்கிறது. ஆனால் சினிமா நாட்டு மக்களிடத்தில தீமையை பயக்குகிறது என்று குறை சொல்லுகிறார்கள். அந்த முறையில் மக்களிடத்தில் ஒரு அதிருப்தியை சினிமா சம்பந்தமாக உண்டாகக்கூடிய அளவில் பேசுவது சரியல்ல. அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை மக்களிடத்தில் உண்டு பண்ணுவதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார். சினிமாவின் மூலமாக நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை உயருகிறது. அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காகத்தான் இப்படிப்பட்ட சினிமாக்கள் இருக்கின்றன. இன்றைய தினம் சினிமாக்கள் எங்களுடைய கட்சிப் பிரசாரத்திற்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆம்,



15th March 1958] [Sri A. V. P. Asaithambi]

அதை நங்கள் ஆட்சேபிக்கவில்லை. நீங்களும் அப்படி உபயோகப்படுத்திக் கொள்ளுங்களேன், யார் வேண்டாம் என்று சொன்னது. ஒரு கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்கு சினிமாவை உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொன்னால் அதனால் தவறு இல்லை. ஆளும் கட்சியில் உள்ளவர்கள் இதற்கு முன்னதாக அப்படிச் செய்யவில்லையா என்று கேட்கிறேன். பிரசாரத்திற்கு எந்த அளவு செய்ய வேண்டுமோ அந்த அளவு செய்யப்பட்டுதான் வருகிறது. செய்து கொண்டுதான் வருகிறார்கள். அப்படி நாங்கள் உபயோகப்படுத்திக்கொண்டு வரும்போது எதாவது ஆட்சேபகரமாக இருந்தால் அதை வெட்டி விடுங்களேன், அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆட்சேபகரமாக இருந்தால் அதை ஏன் அனுமதிக்க வேண்டும்? அப்படி எதாவது இருந்தால் அதற்கு அரசாங்கம் தான் பொறுப்பாக இருக்கவேண்டும். நாங்கள் ஏதோ பத்திரிகையில் கதை எழுதியதைப்பற்றி குறை சொன்னார்கள். அப்படி எதாகிலும் வந்தால் நாங்கள் அதைக் கண்டிக்கிறோம். சினிமாவில் நாங்கள் காட்டும் ஆபாசம் என்ன இருக்கிறது. கதையை எடுத்துக்கொள்ளுங்கள். அவைகள் நல்ல முறையில் அமைந்து பல கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்றன. எங்கள் கதைக்குத்தான் அதிகப்படியான வசூல் ஆகிறது. எங்களுடைய கதையைத்தான் மக்கள் அதிகப்படியாக பார்க்கப் பிரியப்படுகிறார்கள். நல்ல முறையில் உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட கதைகள் தான் எங்களுடைய கதைகள். எங்களுடைய கதைக்குந்தான் நல்ல வசூலாகிறது. எங்களுடைய கதைதான் படிக்காத மக்களுக்கு பல்கலைக்கழகமாக அமைகிறது. ஏனென்றால் எங்களுடைய கதைதான் நன்றாக இருக்கும். எங்களுடைய கதைகளைப்பற்றி இதற்கு முன் கல்வி அமைச்சராக இருந்த அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கூட பாராட்டியிருக்கிறார். அதை யாரும் மறுக்க முடியாது. நாங்கள் எழுதுவதையும் அவர் பாராட்டியிருக்கிறார். அது நமது கல்வி அமைச்சருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன். அந்த அளவில் எங்கள் கதைகள் அமைந்து இருக்கின்றன. அதனால்தான் இந்நாட்டு மக்கள் எங்களுடைய கதைகளை ஆவலுடன் ஆதரிக்கிறார்கள். எங்களுடைய கதைகள்தான் திரம்பட ஓடுகிறது. எங்களுடைய கதைகளினால்தான் நாட்டு மக்களுடைய நிலை உயர்ந்திருக்கிறது. சினிமா கலை வளருகிறது, அறிவு வளருகிறது, சினிமாவினால் கலை எங்களால் கொலை செய்யப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. அப்படிச் சொல்வது தவறான கருத்தாகும் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

ஏழைகளுடைய கருத்துக்களை வளர்ப்பதற்கும், [illegible] உயர்த்துவதற்கும், அறிவை வளர்ப்பதற்கும் சினிமாதான் [illegible] கலாசாலையாக அமைந்திருக்கிறது. சினிமாவுக்கு இப்பொழுது பொழுதுபோக்கு என்று வரிபோடப்போவதாகச் சொல்லப்படுகிறது. வரி போடுங்கள் அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் வரியைப் [illegible] மக்களால் பொறுக்கக்கூடிய அளவில் போடவேண்டும். [illegible] பொது [illegible] கொடுக்கக்கூடிய அளவில்தான் போடவேண்டுமே [illegible] தொழிலாளிகள் [illegible] ஏழை மக்களை பாதிக்கக்கூடிய அளவில் போடக்கூடாது. பட [illegible] அப்படிப்பட்ட வரியைப் போடவேண்டும். படத்தை [illegible] அவர்களுக்குத்தான் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்று [illegible] அவர் வரி போட்டால் அவர் பத்தாயிரத்திற்கு [illegible] அவர்களுக்கு [illegible] வார்கள். அதனால் அவர்கள்தான் வரி [illegible] வாங்க லட்ச ரூபாய் இது வரையில் வாங்கி [illegible] டக்காரர்கள [illegible] தியேட்டர்காரர்களுக்குப் போடுவதன் மூலம் 75 [illegible] ஏனென்றால் சர்க்காருக்கு வரி கொடுக்க [illegible] அளவில் வரி போட வேண்டும். நடி[illegible] அவர்களுக்கு பத்தாயிரம் கொடுத்தால் [illegible] பொருட்டு தியேட்டர்காரர்கள் நடிகர்களுக்கு வரிப்பணம் [illegible] கொடுக்கும் அளவில் பணம் கொடுக்கும்படியாக வரி போட [illegible] அப்படிப்பட்டவர்களுக்கு அதாவது நடிகர்களுக்கு, [illegible] தியேட்டர்காரர்களுக்கு வரி போடுங்கள் அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் ஏழை மக்களை பாதிக்கும் அளவில் வரி போடக்கூடாது. ஏழை மக்கள் இந்த வரியைக் கொடுக்கும் அளவில் போட்டால் அவ

[Sri A. V. P. Asaithambi] [15th March 1958

அக்கிரமமான வரி என்றுதான் சொல்லவேண்டும். இப்பொழுது நாம் பொழுது போக்கிற்கு வரி போட்டு வருகிறோம் அது யாரிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது என்று பார்த்தால், அந்த வரி ஏழைகளிடத்திலிருந்து தான் வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக டிக்கட் இரண்டணா இருந்தது. அதற்கு நாம் காலணா வரி போட்டோம். அந்த வரியை தியேட்டர்காரர் கொடுக்கவில்லை. அந்த இரண்டாணாவிற்கு காலணா சேர்த்து இரண்டேகாலணாவாக வசூல் செய்து தான் இரண்டணா எடுத்துக்கொண்டு சர்க்காருக்கு காலணா வரி கொடுக்கிறார். அந்த வரியை தியேட்டர் சொந்தக்காரர் சர்க்காருக்கு வரி கலெக்டராக இருந்து பொது மக்களிடத்திலிருந்து வசூலித்து சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள். தியேட்டர்காரர்கள் சர்க்காருக்கு காஷாகக் கொடுக்கவில்லை வரி வசூலிக்கிறவர்களாகத்தான் இருக்கிறார்கள். இது என்ன நியாயம் ? இந்த வரியை தியேட்டர் முதலாளியினிடமிருந்து ஏன் வாங்கக்கூடாது அவர்களிடமிருந்து மூன்றில் ஒரு பங்கு வாங்குவதை ஏன் மூன்றில் இரண்டு பங்காக வாங்கக்கூடாது ? அப்படி வாங்கினால் சந்தோஷம் தான். ஆனால் பொது மக்களிடத்திலிருந்து வாங்கக்கூடாது. அப்படி வாங்கக்கூடாது என்று தியேட்டர் முதலாளிகளுக்கு சர்க்கார் கண்டிப்பாக ஒரு உத்தரவு போட வேண்டும். அந்த அளவில் இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மார்ச் மாதம் 31–ம் தேதி என்ன சார்ஜ் வசூலித்து வந்தார்களோ அதே சார்ஜ் தான் அதற்குப்பிறகும் வசூலிக்க வேண்டும் என்று கண்டிப்பாக அவர்களுக்கு உத்தரவு போட வேண்டும், அந்த அளவில் இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். மார்ச் மாதம் 31–ம் தேதியன்று வாங்கிய சார்ஜுக்கு அதிகமாக ஒரு தம்படி கூட வாங்கக்கூடாது என்று உத்தரவு போட வேண்டும். ஏற்கெனவே நாலணா வாங்கிக்கொண்டிருந்து வரி போட்டவுடன் அதை ஐந்தணாவாக உயர்த்தி விட்டால் ஐந்தணா வாங்கிக்கொண்டு தான் உள்ளே விடுவான். அந்த நிலைமை ஏற்படக்கூடாது.

படம் பிடிக்கிறவர்கள் இப்பொழுது பணம் வாங்குகிறார்கள். 100-க்கு 75 வீதம் வசூலிக்கிறார்கள். அப்படி இல்லாமல் அவர்கள் 100-க்கு 60 வாங்க வேண்டும் என்று சொல்லி பாக்கி 15 ஐ வரியாகக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் லட்ச ரூபாய் வசூல் செய்தால் சர்க்காருக்கு 15 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அந்த அளவில் வரியை வசூலிக்க சட்டத்தை அமைக்க வேண்டும். இப்பொழுது பொழுதுபோக்கு வரி என்று வசூலிக்கிறோம். ஆனால் பொது மக்கள் பொழுதுபோக்குக்காக அங்கே போகவில்லை, தங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்வதற்காகவும், கலையைத் தெரிந்துகொள்வதற்காகவும், உலக விஷயங்களை தெரிந்துகொள்வதற்காகவும் தான் சினிமா பார்க்கப்போகிறார்கள். ஒரு ரூபாய் வருமானம் வந்தால் அதில் பாதி ரூபாய் சினிமாவுக்குச் செலவு செய்கிறார்கள். காரணம் அதன் மூலம் அறிவு வளருவதனால்தான். அந்த அளவில் சினிமாவைப் பார்க்க தயாராக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பழக்கம் நாட்டு மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவர்களுடைய வருமானத்திற்குத்தக்கபடி அவர்களுக்கு வரி போட வேண்டும். அவர்கள் கொடுக்க முடியாத அளவுக்கு அவர்களுக்கு வரி போடுவது என்பது சரியல்ல. அப்படி. இந்தச் சட்டத்தில் இடம் இல்லை என்று நினைக்கிறேன். பொது மக்களை பாதிக்காத அளவில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். எங்களுடைய படங்களினால் தான் நாட்டில் கலை வளருகிறது, பொருளாதாரம் வளருகிறது. அறிவு வளருகிறது. ஒவ்வொரு கதையையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் நல்ல கருத்துக்களையுடையனவாகத்தான் இருக்கும். பல கதைகளில் பார்த்தால் காங்கிரஸ்காரர்கள் இது வரையிலும் நிறைவேற்றிய திட்டங்களை விளக்கக்கூடிய பிரசாரமாக இருந்திருக்கும். அப்படி சில கதைகள் இருப்பதைநான் நிரூபித்து காட்ட முடியும். அந்த அளவுக்கு நாங்கள் கதைகளை எழுதுகிறோம். நாட்டு மக்களை பாதிக்ககூடிய அளவில் நாங்கள் கதைகளை எழுதுவது இல்லை. எங்கள் கருத்து வளருகிறது என்று அவர்களுக்கு பயமாக இருக்கலாம். அதற்கு நாங்கள் என்ன செய்வது. அந்த அளவுக்கு நாங்கள் மக்களின் அறிவை வளர்க்கிறோம். நாட்டு மக்களை மாற்று



15th March 1958] [Sri A. V. P. Asaithambi]

கிறோம், அறிவை வளர்க்கிறோம், மக்களுடைய அறிவை வளர்ப்பதற்கு நாங்கள் பாடுபடுகிறோம். அதனால் எங்கள் கட்சி வளருகிறது என்று சொன்னால் அதில் என்ன தவறு இருக்கிறது. நீங்களும் அப்படிச் செய்து கொள்ளலாமே. தேர்தல் காலங்களில் அவர்கள் தான் படங்களைப் பிடித்து பிரசாரம் செய்து வந்தார்கள். ஆனால் நாங்கள் அப்பொழுது படம் பிடித்து பிரசாரம் செய்யவில்லை. அப்பொழுது படம் பிடிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் எவ்வளவோ எழுதி படம் பிடித்திருப்போம். படம் எடுக்கவே இல்லை. எங்களிடம் ஸ்டேஜ்கள் இருக்கின்றன, நடிகர்கள் நிறைய இருக்கின்றார்கள், ப்ரீயாக நடித்துக் கொடுப்பார்கள். அரசாங்கத்திலுள்ளவர்கள்கூட அப்படி எழுதித்தரும்படியாக எனக்கு எழுதியிருக்கிறார்கள். நாங்கள் எழுதிய கதைகளுக்குத்தான் அதிகப்படியான கூட்டம் வரும், எங்களுடைய சினிமாக்களுக்குத்தான் அதிகப்படியாக வசூலாகும். கலெக்ஷன் ஜாஸ்தியாக வரும். இந்த நாட்டில் எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. பேச்சை விலைப்படுத்தும் கட்சி இந்த நாட்டிலே தி.மு.க. கட்சிதான். கோகலே ஹாலில் நாங்கள் மீடிங் நடத்தினால் 0–8–0 டிக்கட் கட்டணம் வைத்தாலும் ரூ. 1,000 கிடைக்கிறது. காரணம் என்ன ? நாங்கள் என்ன அங்கே டான்ஸா ஆடுகிறோம் ? அங்கே என்ன இருக்கிறது ஏன் வருகிறார்கள் மக்கள் ? காரணம் என்ன ? அம்மாதிரி ரூ. 1,000 வசூலிப்பதற்கு மற்ற கட்சிகளால் முடியுமா ? பார்க்கலாம், நிச்சயமாக நடக்காது. அந்த அளவுக்கு நாட்டு மக்களுடைய உள்ளத்திற்கு நாங்கள் நல்லது செய்கிறோம். மக்கள் அந்த அளவுக்கு எங்களை விரும்புகிறார்கள். தேர்தல் காலத்தில் நாங்கள் ஏதாவது படம் பிடித்தோமா ? இல்லை. ஆனால் மற்றவர்கள் படம் பிடித்தார்கள். நல்ல படங்களை பிடிக்கும் எங்களைக்கூட கிண்டல் செய்தார்கள். அதை சென்ஸார் போர்டு எப்படி அனுமதித்தார்களோ தெரியாது. நான் அந்தப் படத்தை பார்க்கவில்லை. ஏதோ அந்தப் படத்தில் கருப்புச் சட்டை போட்டுக்கொண்டு ஒருவன் வருகிறான் என்று சொல்லப்படுகிறது. அவன் வீரன், சிங்கம் என்றெல்லாம் சொல்லுகிறானாம். ரோடிலே ஒரு மாடு வருவதைப் பார்த்து அவன் ஓடுகிறானாம். சிங்கம், வீரன் என்று சொல்லிவிட்டு மாட்டைப் பார்த்து ஓடுகிறானாம். "மாட்டுக் கட்சி" தான் ஜெயிக்கும் என்று காட்டுவதற்காக இந்தமாதிரி படம் பிடிக்கப்பட்டதாம். இதை எப்படி சென்ஸார் போர்டு 10–20 a.m.
அனுமதித்தார்களோ ? ரோடிலே மாடு வந்தால் மனிதனாக இருப்பவன் அதை எதிர்த்தா போவான் ? ஒதுங்கித்தான் போவான். இம்மாதிரி அவர்கள் படம் எடுத்தார்கள். ஆனால் நாங்கள் ஒன்றும் படம் எடுக்கவில்லை. அதே சமயத்தில் "தாய்க்குப் பின் தாரம்" என்ற படத்தில் எம்.ஜி.ஆர். நடித்தார். அந்தப் படத்தில் ஒரு முரட்டு மாடு குடும்பத்தைக் கெடுத்ததால் அந்த மாட்டையே குத்திக் கொன்றுவிட்டார். இந்த அளவிலே படம் எடுப்பது, படம் எடுக்கும் கட்சி நாங்கள் அல்ல, அது அரசாங்கம் தான். நாட்டு மக்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக கதை எழுதுதல், வசனம் எழுதுதல், சந்தர்ப்பம் ஏற்பட்டால் நடித்தல் ஆகியவைகளை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். நாங்கள் எல்லோரும்கூட ஒரு நாடகத்தில் நடிக்கப்போகிறோம். அதற்கு ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். எங்களாலே நாட்டினுடைய கலை உயர்வும், மக்களுடைய நிலை உயர்வும் ஏற்படுகிறது என்பதில் எள் அளவும் சந்தேகம் கிடையாது என்பதை மந்திரி அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் தயாரிக்கும் படங்களில் ஏதாவது சிறிய விஷயங்களில் ஆபாசங்கள் இருந்தால் அதை வெட்டித் தள்ளுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. மந்திரி அவர்களே சென்ஸார் போர்டில் வந்து உட்கார்ந்து வெட்டட்டும்; ஆட்சேபனையில்லை. ஆனால் நல்ல கருத்துக்களை மாத்திரம் தயவு செய்து வெட்டவேண்டாம் என்று சென்ஸார் அதிகாரிகளுக்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது நல்ல வரி, சர்க்காருக்கும் பணம் வேண்டும். ஆனால் இதை பொதுமக்களிடமிருந்து வாங்குவதைவிட படமுதலாளிகளிடமிருந்து, தியேட்டர் முதலாளிகளிடமிருந்து வாங்குவதற்கு வழி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இப்பொழுது பார்க்க முடியாவிட்டாலும், பின்னால் அமைச்சர் அவர்கள் இதை கவனித்து அந்த அளவுக்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடையபேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

[15th March 1958

* **Sri C. R. RAMASWAMI**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். ஏனென்றால் வெகு நாளாக நாங்கள் விடுத்துள்ள கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சென்னை நகரம் மட்டுமல்ல, சென்னை மாகாணம் பூராவும் உள்ள சங்கீத சபைகளின் சார்பாக, சங்கீத சபைகளின் தலைவர் என்ற முறையிலே ஒன்றிரண்டு தடவை மந்திரி அவர்களிடம் ஒரு தூதுகோஷ்டியை அழைத்துச் செல்லுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த சமயத்தில் நிதி அமைச்சர் அவர்களையும் நண்பர் வெங்கடராமன் அவர்களையும் சந்தித்தோம். நிரந்தரமாக வரி விலக்கு வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அதுபற்றி யோசனை செய்யலாம் என்று அவர்கள் சொன்னார்கள். வருஷாவருஷம் இம்மாதிரி வரி விலக்குக்கு நாங்கள் அவர்களிடம் சென்று கேட்டுக்கொண்டிருந்தோம். இப்பொழுது எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது பற்றி நான் மிகவும் பாராட்டுகிறேன். இது சங்கீத சபைகளின் வளர்ச்சிக்கு ஒரு பெரிய ஏதுவாக இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. ஏறக்குறைய 40, 50 சபாக்கள் தான் இப்பொழுது பணியாற்றிவருகின்றன. சங்கீத சபைகள், நாடகக்கலை இவைகளெல்லாம் வளருவதற்கு இந்த தமாஷா வரி ஒரு "இம்பெடிமெண்டாக" இருந்தது. இந்த தமாஷா வரியை இப்பொழுது எடுத்திருப்புது சென்னை நகரத்தில் மட்டுமல்ல, மற்ற இடங்களிலும் சங்கீத சபைகள், நாடக சபைகள் அதிகமாக ஏற்படுவதற்கு அனுகூலமாக இருக்கும். சங்கீத வித்வான்கள், நாடக நடிகர்கள் இவர்களெல்லாம் நவீன முறையில் முன்னேற்றம் அடைவதற்கு வசதியாக இருக்கும்.

இந்த வரி விலக்கு கொடுத்த அரசாங்கம் இன்னும் சில விஷயங்களை ஏன் கவனிக்கவில்லை என்று அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். "லாட்டரி, கிராஸ்வோர்டு புஸில்" இவைகளை தடை செய்த அரசாங்கம் ஏன் இன்னும் குதிரைப் பந்தயத்தை மட்டும் தடை செய்யவில்லை ? அதை நிரந்தரமாக வைத்துக்கொண்டிருப்பது நல்லது அல்ல. குதிரைப் பந்தயம் ஏறக்குறைய பெரிய குடும்பங்களுக்குத்தான் பொழுதுபோக்காக இருக்கிறது. இதில் ஈடுபடுபவர்கள் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான். அவர்கள் தான் "பெட்" செய்கிறார்கள். அதை தமிழில் சொல்லுவதற்கு எனக்குத் தெரியவில்லை. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக பணம் செலவழித்து குதிரைப் புந்தயத்தில் விளையாடுகிறார்கள். இம்மாதிரி பெரிய பொழுது போக்கை வைத்துவிட்டு, சிறிய பொழுதுபோக்காக இருந்த கிராஸ்வோர்டு பஸில், லாட்டரி இவைகளை தடை செய்தது, இரண்டிற்கும் முரண்பாடாக இருக்கிறது. குதிரைப் பந்தயத்தை இன்னும் எவ்வளவு நாள் நீடிக்க அனுமதிக்கவேண்டும், அதை வைத்திருப்பது நல்லதா, கெட்டதா என்பதை யோசித்து, கிராஸ்வோர்டு, லாட்டரி இவைகள் விஷயமாக ஒரு முடிவு செய்ததைப் போல் அதேமாதிரி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மசோதாவிலுள்ள ஓரிரண்டு ஷரத்துகளைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். செக்ஷன் 7-எ பிரகாரம் முதலாளிகள் ஒரு ரிடர்ன் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் ரிடர்ன் சமர்ப்பிக்காவிட்டால், அதிகாரிகள் தங்களுடைய மதிப்பை போட்டு, அதன் மீது வரி போடலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அதிகாரியின் உத்தரவிலிருந்து அப்பீல் செய்துகொள்வதற்கு ஒருவிதமான ஏற்பாடும் இல்லை. அப்பீலுக்கு வகை செய்யாமல் இம்மாதிரி ஒரு அதிகாரியின் கையில் அதிகாரத்தை விட்டுவைப்பது மிகவும் தவறு. ஆகவே, அரசாங்கமே இது சம்பந்தமாக ஒரு திருத்தம் கொண்டுவந்து அப்பீல் செய்துகொள்ளுவதற்கு வசதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, 6-வது பிரிவில் (1-எ) என்ற பிரிவு இருக்கிறது. அதே பிரிவில 7-எ பிரிவைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது, 7-எ ஷரத்தின் நோக்கம் வேறு. 1-எ ஷரத்தின் நோக்கம் வேறு. ஆகையால் அதை எடுத்துவிடவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறேன். நான் நிதி அமைச்சர் அவர்களிடத்திலும் இதைப் பற்றி சொல்லியிருக்கிறேன்.



15th March 1958] [Sri C. R. Ramaswami]

அடுத்தபடியாக 10-வது பிரிவைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன் இதை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். 10-வது செக்ஷன் பிரகாரம் 2 விதங்களில் வரியை வசூல் செய்யலாம் என்று போடப்பட்டிருக்கிறது. ஒன்று **'as if it were an arrear of land revenue'** என்று போடப்பட்டிருக்கிறது. அது எப்பொழுதும் வழக்கம். அம்மாதிரி வசூலிப்பதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். மற்றொன்று

'On application to any Magistrate by such Magistrate as if it were a fine imposed by him'

என்று போடப்பட்டிருக்கிறது. அதாவது அபராதம் என்று கருதி வரியை வசூல் செய்யலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒரு ஷரத்தை புதியதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது சரியான முறையல்ல என்று நான் நினைக்கிறேன். அபராதம் மாதிரி வரிகளை வசூல் செய்வது சரியல்ல. ஒரு மசோதாவில் இம்மாதிரி ஒரு ஷரத்தை சேர்க்க அனுமதித்துவிட்டால், எல்லா வரிகளையும் பிறகு அபராதம் மாதிரி வசூலிக்கும் முறை ஏற்பட்டுவிடும். ஆகையால் இந்த முறை கூடாது. அதை நீக்கிவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். சங்கீத சபைகளுக்கு தமாஷா வரியிலிருந்து விலக்குக் கொடுக்கும் புதிய நோக்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். முக்கியமாக சங்கீத சபைகளும் நாடகங்களும் நல்ல முறையில் நடப்பதற்கு இந்த வரிவிலக்கு ஹேதுவாக இருக்கும். அதற்காக சர்க்காருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri K. RAMACHANDRAN**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே, என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் நான் என்னுடைய ஆதரவை தெரிவித்துக்கொள்ளுகிறேன். சினிமா, குதிரைப் பந்தயம் இவை தவிர மற்ற சங்கீதம், நாடகம் முதலிய கேளிக்கைகளுக்கு இந்த தமாஷா வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஏனென்றால் நாடகங்களெல்லாம் இந்த வரிக்கு உட்பட்டு மிகவும் சங்கடமான நிலைமையில் இருந்துவந்தன. கிராமங்களிலே சினிமாக்கள் அதிகமாகி வரும் நிலைமையிலே நாடகங்களுக்கு ஆபத்து அதிகமாக இருந்தது. இப்பொழுது தமாஷா வரி நாடகங்களுக்கு இல்லை என்ற நிலைமையினால் நாடகங்களுக்கு அந்த ஆபத்து குறைந்தது அவைகள் நல்ல முறையில் நடப்பதற்கு வசதியாக இருக்கும். அதேசமயத்திலே ஒன்று மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குதிரைப் பந்தயம், சினிமா இரண்டையும் ஒரே அடிப்படையிலேவைத்து வரி வசூலிப்பது உண்மையிலேயே வரவேற்கக்கூடியது அல்ல. ஏனென்றால், குதிரைப்பந்தயத்தைப் பொறுத்த வரையில் அதை ஒழிக்கவேண்டுமென்ற ஒன்றுபட்ட கருத்து நிலவுகிறது. அதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. ஆனால், சினிமாவைப் பொறுத்த வரையில் நல்லதோ, கெட்டதோ இன்றைக்கு அது மக்களிடையே அதிகமாக வளர்ந்துகொண்டு வருகிறது. இன்றைக்கு மந்திரியின் அபிப்பிராயத்தில் அது கெட்டவிதமாக இருந்தாலும்கூட, அதை நல்ல விதமாக செய்து பயன்படுத்தமுடியும். மக்களிடத்திலே செல்வாக்கு பெற்று வரக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது அது. அதில் நல்ல கருத்துக்களைப் புகுத்தி மக்கள் பொருளாதாரத் துறையிலும் மற்றத் துறைகளிலும் முன்னேறுவதற்கு வகைசெய்யமுடியும். ஆகையால் அதையும் குதிரைப் பந்தயத்தையும் ஒரேமாதிரி மதித்து வரி விதிப்பது சரியல்ல. குதிரைப் பந்தயத்தில் ஏழை மக்கள் ஈடுபடுகிறார்கள் என்பதால் அதற்கு அதிகமான வரி விதித்தாலும் கவலைப்படுவதற்கில்லை. சினிமாவையும் அத்துடன் சேர்த்திருப்பது வரவேற்கத்தக்கது அல்ல என்று அபிப்பிராயப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மசோதாவிலுள்ள முக்கியமான அம்சங்களுக்கும் மசோதாவைப் பிரேரேபித்தபோது கனம் மந்திரி அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அதே மாதிரி மசோதாவின் பேரில் பேசியபோது திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் கூறிய விஷயங்களுக்கும் மசோதாவில் உள்ள முக்கியமான அம்சங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. சினிமா கெடுதலானதாக இருப்பதால் இந்த வரி உயர்வைக் கொண்டுவருவதாக கனம் அமைச்சர் கூறவில்லை. ஆனால் அதற்கு மாறாக, மசோதாவின்

[Sri K. Ramachandran] [15th March 1958

இறுதியில் இதைக் கொண்டுவருவதற்கான நோக்கங்களையும் காரணங்களையும் கூறும் பகுதியில், நிதிக் கமிஷனின் தீர்ப்புக்கும் பிறகு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து அதிகமான நிதி உதவியை ராஜ்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதற்கில்லை என்றும், ராஜ்ய அரசாங்கத்திற்கு பணம் தேவையாக இருப்பதால் இந்த வரி உயர்வு கொண்டுவரப்படுகிறது என்றும் அவர் கூறியிருக்கிறார். சினிமாத் துறைக்கு அதிகமான வருவாய் வந்துகொண்டிருப்பதால், சினிமாவிற்கு அதிகமான வரிபோட்டால் தங்களுக்கு வேண்டிய பணம் கிடைக்கும் என்று கருதித்தான் அரசங்கத்தார் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, மசோதாவைப் பொறுத்த வரையில், சினிமா நல்லதா அல்லது கெடுதலானதா என்ற பிரச்னையே எழவில்லை என்று நினைக்கிறேன். கனம் அமைச்சருடைய பிரசங்கத்திற்கும் மசோதாவிற்கும் சம்பந்தம் இல்லாதிருந்தபோதிலும், அவர் தம்முடைய பிரசங்கத்தால் மந்தமாக இருந்த சபையை சுறுசுறுப்படையச் செய்தார். சினிமா வரியினால் ஸ்தலஸ்தாபனங்கள் தான் பெரும்பாலும் பலனடைகின்றன என்பதால், இந்த வரி உயர்வைக் குறித்து நாங்கள் கவலைப்படுவதற்கில்லை.

முக்கியமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். விதிக்கப்படும் வரித் தொகையில் ஒரு பகுதியை பட விநியோகஸ்தர்களும் மற்றொரு பகுதியை படம் காட்டுபவர்களும் செலுத்திவருகிறார்கள். இப்போது, அவர்களுக்கு வரும் வருவாயில் 18 அல்லது 20 சதவிகிதம் வரியாகக் கொடுக்கப்படுகிறது. மசோதா அமலுக்கு வந்த பிறகு அந்தத் தொகை அதிகமாகும். அதிக வரி செலுத்த வேண்டியிருக்கும்போது படம் காட்டுபவர்கள் கட்டணங்களை உயர்த்தக்கூடும். உயர்ந்த கட்டணங்களாகிய 14 அணு, 1¼ ரூபாய், 2 ரூபாய் முதலிய கட்டணங்கள் உயர்த்தப்பட்டால் பரவாயில்லை, ஆனால் குறைந்த கட்டணங்களாகிய 3 அணு 5 அணு முதலிய கட்டணங்கள் உயர்த்தப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இந்தக் கட்டணங்களுள்ள டிக்கட்டுகளை வாங்கி சினிமாப் பார்க்கும் ஏழை மக்கள்தான் இப்போது அடிக்கடி சினிமாவுக்குச் செல்கிறார்கள் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் விஷயம். அந்தக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். கட்டணங்களை உயர்த்துவதைத்தடுப்பதற்கான ஷரத்து எதுவும் இந்த மசோதாவில் இல்லை. ஆகவே குறைந்த மதிப்புள்ள கட்டணங்கள் உயர்த்தப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கலெக்டர்களுக்கு அரசாங்கத்தார் உத்தரவு போடலாம். இன்று, சினிமாப் பட விநியோகஸ்தர்களும் படங்கள் காட்டுபவர்களும் தங்கள் வருமானத்தில் சுமார் 18 சத விகிதத்தை வரியாகக் கொடுத்துவந்தாலும் நல்ல லாபமடைந்துவருகிறார்கள். ஆகவே அவர்கள் வரி உயர்வினால் பாதிக்கப்பட்டால் பரவாயில்லை. வரி உயர்வு சினிமாக்காரர்களைத் தான் பாதிக்க வேண்டுமே தவிர, அது ஏழைமக்களின் தலையில் விழக்கூடாது. சட்டத்தில் வகை செய்தோ கலெக்டர்களுக்கு உத்தரவு போட்டோ, குறைந்த மதிப்புள்ள கட்டணங்கள் உயர்த்தப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மசோதாவில் டூரிங் சினிமாத் தியேட்டர்களுக்கு காட்சி வரி (ஷோ டாக்ஸ்) விதிப்பு இருக்கிறது. மசோதாவில் கண்டுள்ளபடி டூரிங் சினிமாத் தியேட்டர்க்காரர்கள் ஒரு காட்சிக்கு ஒரு ரூபாய் காட்சி வரி கட்டவேண்டும். டூரிங் தியேட்டர்களில் ஒரு நாளைக்கு இரண்டு காட்சிகள் நடக்கின்றன. ஆகவே ஒவ்வோரு டூரிங் தியேட்டரும் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் தான் காட்சி வரி கட்டவேண்டியிருக்கும். இப்போது டூரிங் தியேட்டர்கள் அதிகமாக ஆரம்பிக்கப்படுகின்றன. பர்மனென்ட் தியேட்டர்களை விட டூரிங் தியேட்டர்கள் தான் அதிகமாக இருக்கின்றன. டூரிங் தியேட்டர்களுக்கு ஆகும் "எஸ்டாப்ளிஷ்மெண்ட்" சார்ஜுகளும் மற்ற செலவுகளும், பெர்மனென்ட் தியேட்டர்களுக்கு ஆவதைவிட குறைவாகத் தான் இருக்கின்றன. ஆகவே டூரிங் தியேட்டர்களுக்கு காட்சி வரி விதிப்பதில் தவறில்லை. டூரிங் தியேட்டர்காரர்கள் நல்ல லாபம் அடைந்து வருகிறார்கள். ஆகவே



15th March 1958] [Sri K. Ramachandran]

அவர்களுக்கு கண்டிப்பாகக் காட்சி வரி விதிக்கலாம். காட்சி வரியினால் அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் கிடைக்கும். ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் வீதம் ஒவ்வொரு டூரிங்சினிமாத் தியேட்டரிடமிருந்தும் சர்க்கார் மாதம் 60 ரூபாய் பெற முடியும். ஆகவே காட்சி வரிக்கு எதிர்ப்பு இருந்தால் அதை சர்க்கார் பொருட்படுத்தக்கூடாது. அந்த எதிர்ப்பை சட்டை செய்யாமல் சர்க்கார் காட்சி வரி விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்த கட்டண டிக்கெட்டுகள் வாங்கி அடிக்கடி சினிமா பார்க்கும் ஏழை மக்கள் வரி உயர்வினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். சற்றுமுன் பேசிய கனம் அங்கத்தினர் குதிரைப் பந்தயங்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக வரி விதித்திருக்கக் கூடாதா என்றும், சினிமாக் காட்சிகளுக்கும் குதிரைப் பந்தயங்களுக்கும் ஏன் ஒரே மாதிரி வரி விதிக்க வேண்டுமென்றும் கேட்டார். நானும் அவ்வாறே கேட்க விரும்புகிறேன். நம் நாட்டில் குதிரைப் பந்தயங்கள் இல்லாமலிருக்க முடியாதா என்று எத்தனையோ பேர் எதிர்பார்ப்பது பொய் அல்ல. 1946–லிருந்து 1952 வரை இருந்த சட்டசபையில், குதிரைப் பந்தயங்களை எடுத்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டு, அது எடுக்கப்படவிருந்தபோது ஒரு தனிக் காரணத்தினால் அது கைவிடப்பட்டது. அந்தக் காரணத்தின் ஒரு பகுதியை மாத்திரம் நான் இங்கே சொல்லமுடியும். அதாவது, நல்ல ஜாதிக் குதிரைகள் இந்த நாட்டிற்கு அவசியம் என்றும் குதிரைப் பந்தயங்கள் இருந்தால் தான் நல்ல ஜாதிக் குதிரைகள் நம் நாட்டில் இருக்கும் என்றும், இல்லாவிட்டால் அவை மறைந்துவிடும் என்றும் அப்போது சொல்லப்பட்டது. அது வாஸ்தவம் என்று வைத்துக் கொண்டாலும் கூட, ஒன்று கேட்க விரும்புகிறேன். நல்ல ஜாதிக் குதிரைகள் நாட்டில் உற்பத்தியாக வேண்டுமென்பதற்காக, நாட்டில் ஏராளமான மக்கள் பந்தயம்கட்டி அதன் காரணமாக ஏராளமான குடும்பங்கள் சில சமயங்களில் நாசமாவது அவசியம்தானா ? மிகப் பணக்காரர்களாக இருப்பவர்கள் தான் குதிரைப் பந்தயங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லமுடியுமா ? எல்லா மக்களும் குதிரைப்பந்தயச் சூதாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். அறிவுள்ள சில மக்களுக்கு சூதாட்டத்தில் ஈடுபடுவதற்குத் தயக்கம் ஏற்படலாம். ஏராளமான சாதாரண மக்கள் குதிரைப்பந்தயச் சூதாட்டத்தில் ஈடுபடுவதில்லையா ? எத்தனையோ பேர் வீடுகளில் இருந்துகொண்டே குதிரைப்பந்தயம் சம்பந்தமான சூதாட்டத்தில் ஈடுபடுவதில்லையா ? நல்ல ஜாதிக் குதிரைகளை வளர்ப்பதற்கு வேறு வழி இல்லையா ? உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, நெல் விளைவிப்பர்களிடையே போட்டிமனப்பான்மையை உண்டுபண்ணும் பொருட்டு, அதிகமாக நெல் விளைவிப்பவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பதுபோல், நல்ல குதிரைகளை வளர்ப்பதற்கும் பரிசுகள் கொடுக்கக்கூடாதா ? அவ்வாறு செய்து நல்ல ஜாதிக் குதிரைகளை வளர்க்கக்கூடாதா ? அதைச் செய்வதற்கு கனம் மந்திரிகளுக்கு மனம் வராதா ? மேலும், இப்போது ஹோஸூர் கால்நடைப் பண்ணையில் நல்ல ஜாதிப் பசுக்களை உற்பத்தி செய்கிறோம். மிக உன்னதமான ஜாதிப் பசுக்கள் அங்கே தான் உற்பத்தியாகின்றன. நல்ல குதிரைகளை உற்பத்திசெய்வதற்கும், நல்ல குதிரைகளைப் பேணி வளர்ப்பதற்கும் அதே மாதிரி ஏற்பாடுசெய்யலாம். குதிரைகள் வேகமாக ஓடினால்தான் நல்ல உடலமைப்பையும் உடல் வலுவையும் பெறுகின்றன என்றால், குதிரைப் பந்தயங்களைத் தவிர்த்து வேறு ஏற்பாடுகளைச் செய்யலாம். குதிரைப் பந்தயங்களுக்கு இன்னும் அதிகமாக வரி விதிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். 10–30 a.m.

இந்த மசோதாவின் பேரில் பேசும்போது சினிமாப் படங்களின் தரத்தைப்பற்றியும் கலைகளைப்பற்றியும் பேசவேண்டிய அவசியமில்லை என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டபோதே அரசாங்கத்திற்கு பணம் தேவையாக இருக்கிறதென்றும், அதற்காக வரி போடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[Sri S. Nagaraja Monigar] [15th March 1958

ஆகவே அரசாங்கத்திற்குப் பணம் தேவையாக இருப்பதால் தான் சினிமாவின் மீது வரிபோடப்பட்டிருக்கிறது. எத்தனையோ பொருள்கள் பேரில் வரி போட முடியும். ஆனால் பணம் அரசாங்கத்திற்குத் தேவையாக இருக்கிறது என்ற காரணத்தால் எதன்மீதும் வரிபோட்டுவிடுவதா? நினைத்ததற்கெல்லாம் வரி விதிக்க முடியாது. எதன் பேரில் வரி விதிக்க வேண்டியது அவசியம் என்று பார்த்துத் தான் கனம் அமைச்சர் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார். கள்ளுக்கடையை எடுத்தது மக்களிடமிடம் பணம் சேரும் என்பதற்காக. அப்படிப் பணம் சேருவதற்குப் பதிலாக, சிலர் திருட்டுதனமாக கள்ளச்சாராயம் காய்ச்சிக் குடித்தாலும், அந்தப் பணம் சர்க்காருக்கு வருவது இல்லை, அந்தப் பணம் அவர்களுக்குள்ளேயே புழக்கம் ஆகி வாழ்க்கையில் உயர்ந்திருக்கிறார்கள் என்ற உண்மை ஒருபுறம் இருக்க, சினிமாக்களுக்கு கதை எழுதுகிறவர்களுக்கும் அந்தத் துறையிலே அதிகமாக பணம் வாங்கிச் சம்பாதிக்கிறவர்களுக்கும் ஏன் வரி போடக்கூடாது? தினம் தினம் போய்ப் பார்க்கிறவர்களுக்கு ஏன் வரி போடவேண்டும் என்ற ஒரு வாதம் சொல்லப்பட்டது. கள்ளுக்கடை இருந்தால் மக்கள் தங்களை நாசம் செய்து கொள்ளுவார்கள், ஆகவே, கள்ளுக்கடையை ஒழிக்கவேண்டும் என்று சிந்தித்த அரசாங்கம் பாமர மக்களைப்பற்றித்தான் முதலில் சிந்தித்தார்களேயல்லாது மற்றவர்களைப்பற்றிசிந்திப்பது அவ்வளவு உசிதம் ஆகாது என்று சர்க்கார் நினைக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

சினிமா மிக மிக அவசியம். வாழ்க்கையிலே மிகவும் கஷ்டப்பட்டுகிற பாட்டாளி தினமும் செல்லவேண்டுமா? மிக்க ஆனந்தமாக இருக்கவேண்டும் என்று நினைத்தால் ஏதோ ஒரு சில நாள் போகலாமேதவிர, அவனுக்கு ஒரு பக்கம் கிடைக்கும் வரும்படி இன்னொரு பக்கத்தில் தொலைந்துவிடக்கூடிய அளவுக்கு தினம் தினம் சினிமாவுக்குச் செல்லவேண்டிய அவசியம் கிடையாது. கதை எழுதி நிச்சயமாக அதிகமான பணம் சம்பாதிப்பதாயிருந்தால் வருமானவரி, உத்தியோக வரி போன்ற வரிகள் இருக்கின்றன. இன்னும் போடவும் சர்க்கார் பின்வாங்கமாட்டார்கள் என்பதிலே எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

சினிமாக்கள் நல்ல முறையில் இயங்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறியபோது உண்மை நிலையை நன்றாக உணர்ந்து இருக்கிறார் என்பது நன்றாக விளங்குகிறது. இந்த நாட்டுக்கு சினிமா ஒரு வகையிலே, அது தற்போது நல்ல வகையிலே இல்லாமல், சற்று விரும்பத்தகாத முறையில் இருப்பதாக நினைத்துக்கொண்டாலும், சினிமா சாதனம் இந்த நாட்டு மக்களுக்கு மிக அவசியம் என்பதை நிச்சயமாக உணருகிறோம்.

எட்டு சதவிகித மக்கள் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவும், பெரும்பாலனவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவும் இருக்கும் இந்த நாட்டிலே, பெரும்பகுதி மக்கள் கிராமங்களில் வாழும் இந்தப் பரத கண்டத்திலே முன்னேற்றம் இன்னது என்று தெரிந்துகொள்ளுவதற்கு இன்னும் எத்தனை தலைமுறைகள் காத்திருக்க வேண்டுமோ தெரியாது. நாட்டுப்புற மக்கள் அதைத் தெரிந்து கொள்ளுவதற்கு சினிமா ஒரு இராப்பள்ளிக்கூடம், முதியோர் கல்வி என்ற துறையிலே வெகு தூரம் உதவுகிறது என்பதை மறுக்க முடியாது. டெலிபோனில் பேசும்போது, சில ஆண்டுகளுக்கு முன் இது என்ன என்று வியப்பாக ஆச்சரியப்படக்கூடிய நிலை இருந்தது. அவனுடைய அந்தஸ்துக்கு மேற்பட்டு படம் எடுத்தால் அதையும் புரிந்துகொள்ளக்கூடாத நிலைமையில் இருந்து வந்தான். இப்பொழுது படிப்படியாக அவர்கள் நகர வாழ்க்கையின் அம்சங்களையெல்லாம் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் உலக வாழ்க்கையைப்பற்றி தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு இன்றைக்கு முதியோர் கல்வியாக அமைந்து வருகிறது. ஆகையால்தான் இந்தத் துறையிலே நாம் மக்களை முன்னேற்றும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாக அன்பர்கள் உழைக்கவேண்டுமே என்று கேட்டிருக்கிறார்களே தவிர வேறு அல்ல.



15th March 1958] [Sri S. Nagaraja Monigar]

"எங்கள் மூலம் தான் வசூல் அதிகம் ஆகிறது, நாங்கள் சிலர் அதில் இறங்கியது தப்பு அல்ல", என்ற வாதங்கள் சொல்லப்பட்டன. இருக்கலாம். நான் முன் சொன்ன பல காரணங்களினாலே மதுவிலக்கு போயிருப்பதால் மக்களுக்கு உல்லாச வாழ்க்கை கொடுக்கக்கூடிய அம்சமாக அமைந்துவிட்டால் நாடு முன்னேறிவருகிற பல விஷயங்களைப்பற்றி பாட்டாளி மக்கள் அகில இந்தியாவிலே பெரும் பகுதியைப்பற்றி தெரிந்துகொள்ளவும் உலகத்தைப்பற்றி புரிந்துகொள்ளவும் தினம் தினம் ஒரு அறிவு விளக்கக்கூடிய புதுக் காட்சிகளைக் கண்டு களிக்கக்கூடிய ஒரு அம்சமாக நிகழ்ந்துவருவதாலும் பணம் அதன்மூலம் அதிகம் வருகிறதே தவிர, வேறு அல்ல. ஆனால், அவர்கள மூலமாகத்தான் எல்லாப் பணமும் வருகிறது என்றால், நான் ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில் சொல்லியதுபோல, விளக்கெண்ணெய் என்றால் வேண்டாம் என்பதும், சர்க்கரை என்றால் வேண்டும் என்பதும் மனித இயல்பு. ஆதலால் சாதாரண கேளிக்கை விஷயங்களிலே மக்கள் மனம் செல்கிறது என்றாலும், அம்மாதிரி செல்கிற மனதை நீக்கி தாங்கள் பக்குவப்படுத்திக்கொண்டு, தங்களுக்கு வேண்டிய துறையிலே இழுத்துச்செல்வதற்கு சல்லிசான வகையில் அவர்களுக்கு ஒருவித இன பேதம், ஜாதி பேதம், கடவுள் இல்லை, புராண எதிர்ப்பு, இப்படி பல மக்களுக்கு அவர்களுடைய தத்துவத்தை போதிக்கிறார்கள். மிக உன்னதமான சாத்திரங்களுக்குத் தத்துவம் என்று பெயர். "என்ன தத்துவம் பேசுகிறாய்", என்று சொன்னால் புரியாத விஷயங்களைப் புரிய வைக்கக்கூடிய முறையில் சொல்ல சக்தி இல்லாததால், சாதாரணமாக நம்பக்கூடிய விஷயங்களிலிருந்து எங்களால்தான் புகுத்தக்கூடும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு யாராவது பேசினால் அது ஒரு வகையிலே வருந்தக்கூடியது. ஏதோ இம்மாதிரி பாணியிலே இழுத்துச் சென்றால் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "எங்கள் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கொள்; ஒரு பெண் கொடுக்கிறோம்; நீ எங்கள் ஜாதியிலே சேர்ந்துகொள்" என்று மத மாற்றம் செய்வதற்குப் பெண்ணை தானம் செய்தது உண்டு என்று சிலர் சொல்வது உண்டு. அப்படி ஏதோ ஒரு ஆசையைக் காட்டி சினிமாவிலும் கட்சியைப் புகுத்தலாம். ஒரு டீ டேபிலிலே உட்கார்ந்திருக்கும் போது, ஒருவன் பல் தேய்க்கவில்லையே, எப்படிக் காப்பி குடிப்பது? என்று கேட்டால், "சரி தான் தம்பி; பரவாயில்லை" என்று ஒரு படத்தில் வருகிறது என்றால், இந்த நாட்டுப் பண்பு இந்த நிலைமையிலேயா அழிக்கப்படவேண்டும்? என்று நான் கேட்கிறேன். இந்த வசனம் "பராசக்தி" என்னும் படத்திலோ அல்லது வேறு எந்தப் படத்திலோ வருவதாக எனக்கு ஞாபகம். அதைப் பார்த்தபோது, "அட தமிழ் மகனே, நீ இந்த கதிக்கா இறங்கிவிட்டாய்" என்று நான் குத்திக்கொண்டேன் மனதிலே.

அடுத்தாற்போல் சொன்னார்கள், என். எஸ். கிருஷ்ணன் அவர்களைப் பற்றி. கலைஞன் என்ற முறையில் அவர் நாட்டுக்கு நல்லது செய்திருக்கலாம். அவரைப்பற்றி நான் இழிவாகப் பேசவில்லை. அவர் நடித்த ஒரு காட்சியில் சொல்கிறார். வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு வீதியிலே போகும் ஒரு பெண்ணைப் பார்த்து "டி. டி." என்று சொல்வது ஒரு காட்சி. இதைப் படத்தில் பார்த்த வாலிபர்கள் என்ன நினைப்பார்கள்? தெருவிலே போகும் பெண்ணை இவ்விதமாகவா நடத்துவது? இதைப்பற்றி 33 பத்திரிகை விபரீதமாக எழுதி, படம்போட்டு, ஏராளமான பத்திரிகைகள் விலையாக்கிக்கொண்டிருப்பவரும், தானும் ஒரு பத்திராதிபன் என்று சொல்லிக்கொண்டால், இது நமது மக்களை எந்த அளவுக்கு கீழே இழுத்துச் சொல்லுகிறது என்பதைப்பற்றி வருந்தக்கூடியதாக இருக்கிறது. ஆகையால், கனம் அமைச்சர் அவர்கள் இது பற்றி பேசியதில் தவறு கிடையாது. அவர்கள் எந்தக் கட்சி சகோதரர்களுக்குச் சொன்னார்களோ அவர்கள் உன்னிப் பார்த்து நல்ல வகையிலே போகவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேசியத்தைப்பற்றி படத்தில் பிரசாரம் செய்யப்பட்டதே என்று சிலர் கேட்டார்கள். அது அவசியம். இந்தியா பூராவுக்குமாக ஏற்பட்ட ஒரு விஷயம். நாட்டைத் துண்டு போட்டு, கூறுபோடச் சொல்வது நல்லது அல்ல. எல்லோரும் இன்புற்று இருப்பதாக, "பெருவாழ்வு வாழவேண்டும்"

என்று பெரியவர்கள் வாழ்த்துவது உண்டு. " சிறுத்துப் போய், நாசமாகப் போ " என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அந்தப் பண்புக்கு இது மிகவும் உகந்தது ஆகையால், இந்த வார்த்தையுடன் நான் முடித்துக் கொள்கின்றேன்.

10-46 a.m * **Sri A. GOVINDASAMY :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தக் கேளிக்கை வரியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே முதலில் நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, இந்த வரி ஏழைகளைப் பாதிக்கக்கூடிய வகையில் அமையாது, எங்கள் கட்சியைச் சார்ந்த ஆசைத் தம்பி அவர்கள் குறிப்பிட்டதுபோல், ஒரு நாளைக்கு சினிமா காட்டினால் இவ்வளவு பணம் கொட்டகைக்காரர்கள் கொடுக்கவேண்டும் என்ற முறையைக் கொண்டுவந்தால், மிகவும் நலமாக இருக்கும். அதன் மூலம் ஒரு சிலரைத் தான் இந்த வரி பாதிக்கும். ஆனால், இப்பொழுது கொண்டு வந்திருக்கும் முறையைப் பார்த்தால், 20 பர்சண்ட் இதிலிருந்து 25 சத விகிதமாகவும், 25-லிருந்து 33-1/3 பர்சண்ட் ஆகவும் மாற்றப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஏழைகளை பாதிக்குமோ என்ற ஐயம் இருக்கத்தான் செய்கிறது. அதன் காரணமாகத்தான் காங்கிரஸ் தரப்பில் இருக்கும் ஒரு சிலர் கூட இந்த வரியை, நாங்கள் எதிர்பார்ப்பதற்கு அதிகமாக, எதிர்த்திருக்கிறார்கள், என்று தெரிகிறது.

பட்ஜெட் கூட்டத்தில் பேசும்போது நாங்கள் குறிப்பிட்டோம், சினிமா கூடாது என்றால் சினிமாவை ஒழிப்பதற்கு முதலில் வழி செய்யுங்கள் என்று. அப்படி ஒழிப்பதற்குப் பதிலாக " சினிமா கூடாது, சினிமா கூடாது " என்று பிரசாரம் செய்யும் அதே நேரத்தில், சினிமா கொட்டகைக்காரர்களுக்கு லைசன்சு கொடுக்கிறீர்களே, அது ஏன் ? என்று கேட்டேன். மதிப்பிற்குரிய திருமதி அனந்தநாயகி அம்மையார் சொன்னார்கள் : " சர்க்காருக்கு அதிக வருவாய் வரும் என்ற கருத்தினால்தான் அதிக சினிமாக் கொட்டைக்காரர்களுக்கு லைசன்சு வழங்குகிறோம் " என்று. பண்ணுருட்டி ஒரு சிறிய ஊர். ஒரு மேஜர் பஞ்சாயத்து. அந்த ஊரிலே மூன்று நிரந்தர சினிமாக் கொட்டகைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அத்தனை கொட்டகைகள் அவசியந்தானா ? விருத்தாசலம் ஒரு சிறிய பஞ்சாயத்து அங்கே இரண்டு, நிரந்தர சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. கள்ளக் குரிச்சியில் இரண்டு கொட்டகைகள் இருக்கின்றன. இப்படி பஞ்சாயத்து இருக்கும் ஊர்களிலெல்லாம் நிரந்தரக் கட்டிடங்களுக்கு லைசன்சு கொடுக்கப் பட்டிருப்பதற்கு அவசியம் என்ன ? ஏன் இவ்வளவு லைசன்சு கொடுத்திருக்கிறார்கள் ? என்று சர்க்காரைக் கேட்டால் அதற்குப் பதில் இல்லை. சினிமாக் கொட்டகை வைத்திருக்கும் அத்தனைபேரும்—நான் சொல்ல முடியும்—சினிமாக் கொட்டகைச் சொந்தக்காரர்களில் 75 பர்சண்ட் பேர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறவர்கள் என்பதை மறுக்க முடியாது. கதை எழுதுகிறவர்களும், நடிக்கிறவர்களும் அவர்கள் பக்கத்தில் இல்லை என்ற காரணத்தால் ஏற்பட்ட எரிச்சல் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் இழுக்கிறார்கள். அது அவர்கள் பேரில் ஏற்பட்டிருக்கும் பொறுமை உணர்ச்சி காரணமாகத்தான் சில பேர் ஆத்திரத்துடன் பேசுகிறார்கள். சில பேர் சினிமாவை ஒழித்துக் கட்டிவிடுகிறேன் என்று சபதம் செய்கிறார்கள்.

**Mr. SPEAKER :** இந்தச் சபையில் யாரும் செய்யவில்லையே.

**Sri A. GOVINDASAMY :** இந்தச் சபையிலே சபதம் செய்ததாக நான் சொல்லவில்லை. வெளியிலே அடிக்கடி சொல்லப்படுகிறது. எதற்காக இத்தகைய சபதம் வருகிறது ? அப்படி சபதம் வருவதற்குக் காரணமானவர்கள் அவர்கள் தரப்பிலே இருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும். அந்த எரிச்சலுக்குக் காரணம், எங்கள் தரப்பிலிருந்து கதை எழுதுகிறவர்கள் நல்ல முறையிலே, நல்ல தமிழிலே, இனிமையான முறையிலே எழுதுகிறார்கள் என்பதுதான். அவர்கள் ஏன் இதைப்பற்றி எரிச்சல் அடையவேண்டும் ? அவர்களும் தேசீய உணர்ச்சி ஊட்டக்கூடிய படங்களுக்குக் கதை எழுதி, அதில் திறமையானவர்களை நடிக்கச் செய்து அதன்மூலமாக நாட்டில் நல்ல பல கருத்துக்களைப் பரப்ப முடியும் என்று





சொல்லிக்கொள்ளுகிறேன். அப்படிச் சபதம் செய்யும் திருமதி குழந்தை யம்மாள் போன்றவர்கள் அவர்களுக்கும் தமிழ்ப் புலமை இருக்கிற காரணத்தால் அவர்களும் கதை வசனம் எழுதலாம். இதை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்திச் சொல்லிருக்கிறேன். சினிமா பார்ப்பதனால் கொலை அதிகரித்து வருகிறது என்ற குற்றச்சாட்டை 10-51 a.m.
நமது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சினிமா தாம் பார்ப்பது இல்லை யென்று சொல்லிவிட்டு, யாரோ சிலர் சொல்கிறார்கள் என்பதற்காக தாம் ஒரு வழக்கறிஞர் என்ற காரணத்தினால் அடிக்கடி வக்காலத்து பேசிப் பழக்கப்பட்டவர் என்ற முறையில் அந்த மாதிரியாக நமது அமைச்சர் அவர்கள் பேசினார்களோ என்னவோ தெரியவில்லை. சினிமாவைச் சென்று பார்த்துவிட்டு அந்த மாதிரியாக அவர் பேசியிருந்தால் என்னால் புரிந்து கொள்ள முடியும். தேசீய உணர்ச்சியை உண்டு பண்ணுவதற்கும், அபிவிருத்தித் திட்டங்களில் மக்களுக்கு உற்சாகம் உண்டாவதற்கும் சினிமா எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒவ்வொரு சினிமாப் படத்திலும் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பேசப்படுகிறது. தேசீயத் தலைவர்கள் எல்லாம் திரைப்படம் மூலமாகக் காட்சியளிக்கிறார்கள். இதில் கட்சி உணர்ச்சி இல்லையா என்று கேட்கிறேன். இன்றையதினம் சினிமாப் படங்களின் மூலமாக மிகவும் உன்னதமான நிலையில் இருக்கிற நேரு போன்ற தேசீயத் தலைவர்கள் தாம் அதிகமாகக் செய்திப் படங்களில் காட்சியளிக்கிறார்கள் என்பதை நான் பலர் எழுதி இருப்பதை படித்திருக்கிறேன்.

தமிழ் படத்தின் தரம் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள், அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தினால் திரையிடப்படுகிற படங்களின் தரம் வெகுவாகக் குறைந்திருப்பதாகக் குற்றம் சாட்டினார்கள். கருணாநிதி அவர்கள் எழுதிய திரும்பிப்பார் என்ற படத்தில் சென்சார் போர்டினால் ஐயாயிரம் அடிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. லெனின் என்ற வார்த்தையும், காந்தி என்ற வார்த்தையும் கருணாநிதி எழுதினால் அதில் ஏதோ இருக்கிறது என்கிற சந்தேகத்தில் வெட்டப் பட்டிருக்கிறது.

**Mr. SPEAKER :** சென்சார் போர்டு மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. அதற்கும் இந்த அரசாங்கத்திற்கும் சம்பந்தம் கிடையாது. ஆகவே சென்சார் போர்டு பற்றி இந்தச் சபையில் பேசவேண்டியதில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**Sri A. GOVINDASAMY :** நான் சென்சார் போர்டுபற்றிக் குறை கூறவில்லை. படத்தில் தவறு இருந்தால் ஆட்சேபகரமான வாசகங்கள் இருந்தால் அதைவெட்டி விடுவதற்கு அதிகாரம் இருக்கிறது. திட்டவட்டமாக அவர்கள் செய்துவிடலாம். ஆகவே படத்தின் தரம் குறைந்து விடுகிறது என்று சொல்வது சரியல்ல என்று சொல்ல வந்தேன்.

அதுமாத்திரம் அல்லாமல் நல்ல படங்களுக்குப் பரிசு, நல்ல நடிகர்களுக்குப் பரிசு என்பதாகவெல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக அண்மையில் பி. டி. இராஜன் தலைமையில் நல்ல படங்கள் எல்லாம் திரையிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அதோடு சிறந்த தேசீயத் தலைவர்கள் எல்லாம் சிறந்த நடிகர்களாக இருந்திருக்கிறார்கள். சினிமா துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகிற நேரத்தில் அவர்கள் இருந்திருந்தால் எத்தனை படங்களில் நடித்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. குறிப்பாக மதிப்புக்குறிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் மனோஹரா வேஷத்தில் நடித்திருக்கிற நடிப்பு மிகவும் சிறந்ததாக இருந்திருக்கிறது என்பதைப் பார்த்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்பேர்பட்ட சிறந்த நடிகர்கள் இந்த அமைச்சர் அவையிலும் இல்லாமல் இல்லை. கனம் மாணிக்கவேலு அவர்கள் முஸ்லீம் வேஷத்தில் வந்து எல்லோரையும் திணற அடித்திருக்கிறார்கள். இப்பேர்பட்டவர்கள் எல்லாம் சினிமாவில் நடிப்பது என்றால் சினிமாவின் தரம் வெகுவாக உயர்த்தப்படாதா என்று கேட்க விரும்புகிறேன். எங்கள் தலைவர் ஸ்ரீ அண்ணா அவர்கள்பேசியபோது சினிமாவை தேசீய மயமாக்கினால் எங்கள் கட்சியில் சார்பில் இலவசமாக முதல் ஐந்தாண்டு காலத்திற்குக் கதை எழுதித் தருவதாக சொன்னார்கள். அந்த மாதிரியான துணிவோடு

[Sri A. Govindasamy] [15th March 1958

இந்தச் சர்க்கார் சினிமாவின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். சவுக்கடி சந்திரகாந்தா என்ற படத்தின் மூலமாக நாட்டில் மதத்தின் பெயரால் காவி உடை தரித்துச் செய்யப்பட்டுவந்த எவ்வளவு அநீதிகள் நிறுத்தப்பட்டன, நாட்டில் விழிப்பு உணர்ச்சியை, பரபரப்பு உணர்ச்சியை உண்டாக்கியது என்பதை உணர்ந்திருந்தால் சினிமா கெடுதலை உண்டுபண்ணுவதாக சொல்லமுடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் எழுதப்படுகிற சினிமா கதைகளில் காதல், கத்திச்சண்டை, காமம், எல்லாம் இருப்பதாகச் சொன்னார்கள். புராணக் கதைகளில் காதல், காமம் கிடையாதா? கிருஷ்ணலீலா படத்தை எடுத்துக்கொண்டால் எத்தனை ஆயிரம் மனைவிகளைக் கொண்டுவந்து காட்டுகிறார்கள்? அது எத்தகைய உணர்ச்சியை உண்டுபண்ணுகிறது என்று கேட்க விரும்புகிறேன். கதை யாரால் எழுதப்பட்டது என்பதைக் கவனிக்காமல் அதில் உள்ள நல்ல கருத்துக்களை எல்லாம் ஊன்றி கவனிக்கவேண்டும். ஆங்கில படத்தின் தரம் குறையவில்லை என்பதாகவும், காதல் காட்சிகள் அழகாகச் சித்தரிக்கப்படுகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்கள். அவர் அதிகமான ஆங்கிலப் படத்தைப் பார்த்திருக்கக்கூடும். அவற்றில் தான் காதல் கட்டங்கள் அதிகமாக வரக்கூடும். அதுவும் தத்ரூபமாக காட்டப்படக்கூடாத காட்சிகள் அதிகம் வருகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் திரையிடப்படும் படங்களில் அப்படிப்பட்ட காட்சிகள் இருக்கின்றனவா? சினிமா உலகில் இந்தம் கட்சி மாத்திரம் இறங்கவில்லை கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக காலம் மாறிப்போச்சு என்ற படம் திரையிடப்பட்டிருக்கிறது. நல்ல கருத்துகள் எல்லாம் அதில் இருக்கின்றன. ஆகவே இந்தமுறையை எல்லாக் கட்சியும் கையாளலாம். ஒன்றே குலம் என்ற படத்தை முதல் அமைச்சர் அவர்கள் தான் ஆரம்பித்து வைத்தார்கள். அந்தப் படத்தை கூட சர்க்காரே வாங்கிக் கொள்ளப்போவதாகத் தெரிகிறது. அப்படியே கட்டபொம்மன் படத்தையும் சர்க்கார் வாங்கிக் கொள்ள முயற்சி செய்யவேண்டும். சினிமாவுக்கு வரி போடுவதைப் போலவே குதிரைப் பந்தயத்திற்கும் போடப்படும் என்று சொல்வதைப் பார்க்கும்போது குதிரைப் பந்தயத்தை ஒழிக்கும் உத்தேசமே சர்க்காருக்கு இருக்காதோ என்று நினைக்கிறேன். பெரிய பெரிய மிராசுதார்கள், பணக்காரர்கள் இவர்கள் தாம் குதிரைப்பந்தயத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்களைப் பார்த்து ஏழை மக்களும் ஏமாந்து போகிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த பலர் இன்று குதிரைப் பந்தயத்தில் ஒரேயடியாக ஈடுபட்டிருப்பதனால் தான் அதை ஒழிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லையோ என்று நினைக்கிறேன். எப்படியிருந்தாலும் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க சர்க்கார் முன்வரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது இராஜகோபாலாச்சாரியார் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் சினிமாப் பார்க்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்போது பட்டாபி இராமனைப் போன்றவர்கள் அஞ்சலி தேவிக்குப் பரிசு வழங்கினார்கள். சர்க்காருக்கு சினிமாவை வளர்ப்பதில் இஷ்டமில்லையென்றால் இப்படிச் செய்யலாமா என்று கேட்டதற்கு (இது என் யோசனை) என்று அவர் சொன்னார்கள். அப்படியே இப்போதும் ஸ்ரீ சுப்பிரமணியம் சொன்னவைகள் அவருடைய சொந்த யோசனையாக இருந்தால், ஏதோ அவர் எங்களுக்கு வழக்கமாக செய்கிற உபதேசங்களில் இதுவும் ஒன்று என எடுத்துக் கொள்கிறோம். இதுவே அரசாங்கத்தின் கொள்கையாக இருக்குமானால், இந்தத் தவறான காரியத்தைச் செய்யக்கூடாது என்று சொல்பவர்கள், இந்தத் தவறான வழியில் வரும் பணத்தைக் கொண்டு துண்டு விழுவதை ஈடுகட்ட முயற்சிப்பது சரியல்ல, தவறானது ஆகும் என்று சொல்லிக் கொள்கிறேன். சினிமா பார்ப்பது தவறு என்பதாகவும், அதற்குக் கதை எழுதக் கூடியவர்களைக் கண்டிக்க முன் வருகின்ற நிலையில் அந்தத் தவறான தொழில் மூலமாக வரக்கூடிய பணத்தையும் விட்டுவிடுவதற்கு முன்வரவேண்டும் என்று சொல்லி கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **Sri A. MARIAPPAN** : சர்க்கார் கொண்டுவந்திருக்கும் கேளிக்கை வரியை நான் ஆதரிப்பதோடு, இந்த வரியினால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக சௌகரியம் ஏற்படும் என்றும் சொல்ல விரும்பு



15th March 1958] [Sri A. Mariappan]

கிறேன். மேலும் இந்தச் சினிமா படங்களை திராவிட முன்னேற்றக் கழகம் தயாரிப்பதற்கு முன் வந்த பிறகுதான் அதன் தரம் உயர்ந்திருப்பதாகவும், கதை வசனம் உயர்ந்து தமிழ் வளர்ந்திருப்பதாகவும் பலர் குறிப்பிட்டார்கள். இது உண்மையா ? தரம் வளர்வதற்குப் பதில் குறைந்திருக்கிறது என்பதை மக்கள் உணர்வார்கள். மேலும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் படம் தயாரிக்கிறதா ? கட்சிக் கொள்கைக்காக காங்கிரஸின் சார்பில் நாம் இருவர் தயாரிக்கப்படவில்லையா என்றும் கேட்டார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் கொண்டிருந்த குறிக்கோள் என்ன ? சுதந்திரம் நமது பிறப்புரிமை என்ற கொள்கையில் நின்று அப்போது தயாரித்தார்கள். இப்போது திருடுவது எங்கள் பிறப்புரிமை, கொலை செய்வது எங்கள் பிறப்புரிமை என்கிற அடிப்படையில் . . .

**Mr. SPEAKER** : இந்தச் சபையைப் பொறுத்தவரையில் கொலை என்கிற வார்த்தையை உபயோகப்படுத்தாமல் இருப்பது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது.

**Sri A. MARIAPPAN** : இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால், சினிமாவின் தரம் மிகக் குறைந்திருக்கிறது. ஆசைதம்பி அவர்கள் பேசும்போது, அதிகாரிகளைப்பற்றி குறை சொன்னார்கள், அவர்கள் சிலவற்றை வெட்டி விடுவதாக சொன்னார்கள் என்னைப் பொறுத்த வரையில், என் தகவல்படி, அப்படி மோசமாக ஒரு அதிகாரியும் நடந்துகொள்வதில்லை. மக்களின் தரத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்கிற கதை ஆசிரியர்களும், நடிகர்களும் மிகவும் மோசமாக நடந்து வருகிறார்கள். ஆக, மக்கள் கதை ஆசிரியர்களும், நடிகர்களும் சொல்லக்கூடிய கருத்தை புரிந்துகொண்டு இப்படிச் சொல்கிற இவர்களின் நடத்தை மிகவும் மோசமாக இருக்கிறதே என்று நினைக்கிறார்கள். கதையாசிரியர்கள், இம்மாதிரி கதை எழுதுவதெல்லாம், மக்களிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற உத்தேசத்துடன் எழுதுகிறார்களே தவிர மக்கள் நல்வழிப்படவேண்டும் என்று அவர்கள் நினைப்பதில்லை. இவர்கள் ஏதோ பிரமாதமாக கதை எழுதுகிறார்களே தவிர, மக்களுக்கு உபதேசம் செய்வதில் ஆயிரத்தில் ஒரு பங்கு, அல்லது லட்சத்தில் ஒரு பங்காவது இவர்கள் கையாள்வார்களேயானால் நாடு முன்னேறும், தமிழகமும் முன்னேறும். ஆகவே எதற்கெடுத்தாலும் சர்க்காரை பழி சொல்வதை விட்டு விட்டு, இவர்கள் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ள முன்வந்தால், நாடும் முன்னேறும், அதிலும் குறிப்பாக தமிழகம் முன்னேறும், மக்களும் முன்னேறுவார்கள். ஆக, இவர்கள் கதை எழுதுவது தங்கள் வயிற்றை வளர்த்துக்கொள்ளவே தவிர மக்களின் வாழ்க்கை நல்ல முறையில் முன்னேற வேண்டும் என்ற கருத்தோடல்ல. சினிமாவின் தரம் இப்பொழுது நமக்கு அவமானம் விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. வேலைக்காரி என்ற படத்தை வைத்துக் கொண்டு அவர்கள் பெருமைப்படுகிறார்களே, அந்த வேலைக்காரி படத்தை வைத்துக்கொண்டே திராவிட முன்னேற்றம் கழகத்தின் தரம் என்ன என்று நாம் பார்க்க முடியும். அதில் வரும் அண்ணன், தங்கையின் நிலையைப் பார்த்தே அவர்களின் தரம் எப்படிப்பட்டது என்று தெரிந்து கொள்ள முடியும். நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் தேசியவாதிகள் கதை எழுதியதற்கும், இப்பொழுது இவர்கள் கதை எழுதுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. நான் மேலும் சொல்ல விரும்புவது என்னவென்றால், சர்க்கார் இதில் இன்னும் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டும். மக்களின் வாழ்க்கை பாதிக்கக்கூடிய முறையில் இருக்கும் படங்களை, மக்களுக்கு தவறான எண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய படங்களை, அல்லது மக்களை தவறான வழியில் இழுத்துச் செல்லக்கூடிய படங்களை அரசாங்கம் வெட்டியோ, அல்லது அப்படிப்பட்ட படங்களுக்கு தடை விதிக்க சர்க்கார் போதிய சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த வரியினால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிறைய வருமானம் வருகிறது. அந்த வருமானத்தைக்கொண்டு ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்ற சந்தர்ப்பம் இருக்கிறது என்று கூறிக்கொண்டு கதை ஆசிரியர்களும், நடிகர்களும் மக்களுக்குச் செய்யும் உபதேசங்களை

தங்கள் வாழ்க்கையிலும் ஓரளவாவது கடைப்பிடிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

11a.m. **SRI K. ANBAZHAGAN**: அவை தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்தில் கேளிக்கை வரி என்ற நல்ல தமிழ் பெயரோடு கூட ஒரு புது வரி விதிப்பதைக் குறித்து ஒரு தீர்மானம் வந்திருப்பதைப் பற்றி நான் பேசுவதற்காக இருக்கின்றேன். கேளிக்கை வரியின் குறிக்கோளை நான் மறுப்பதற்காக இங்கு எழுந்திருக்கவில்லை. ஆனால் இந்த கேளிக்கை வரியால் ஏற்படக்கூடிய விளைவுகள் சிலவற்றை அரசாங்கம் நல்ல முறையில் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிற முறையில்தான் நான் சில கருத்துக்களை இங்கு சொல்ல விரும்புகிறேன். தவிர, கேளிக்கை வரி கூடாதென்றோ அல்லது சினிமாவிற்கு வரி விதிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடல்ல. பொது மக்கள், இந்த கேளிக்கை வரியால், பாமர நிலையில் இருக்கும் மக்கள், மிக மிக தாழ்ந்த வரிய சூழ்நிலையில் உள்ளவர்கள் பாதிக்கப்படாமல் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். உண்மையிலே, அரசாங்கம் விதித்திருக்கும் இந்த வரி, சினிமாக் கொட்டகை நடத்துபவர்களோ அல்லது அதேபோன்று அந்த வாணிபத்தில் ஈடுபட்டிருப்பவர்களோ தரக்கூடிய வரியாக இந்த வரி அமைத்திருக்க வேண்டுமே தவிர இந்த வரி கடைத்தரத்தில் உள்ள ஏழை மக்கள் தரக்கூடிய நிலையில் இருக்ககூடாது. முதல் அல்லது இரண்டாம் வகுப்புக் கட்டணத்தை சினிமாக் கொட்டகைகள் வைத்திருப்பவர்கள் உயர்த்துவதற்கு இடம் இருந்தாலும் கடைத்தர வகுப்பு கட்டணத்தை அவர்கள் உயர்த்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முற்படவேண்டும். இந்த வரி சம்மந்தமாக, கொட்டகை நடத்துபவர்களோ அல்லது சினிமா முதலாளிகளோ அதில் நேரடி தொடர்பு கொள்ள வாய்ப்பில்லை. ஆகவே, நான் மீண்டும் வற்புறுத்திக்கேட்டுக் கொள்கிறேன், கடைத்தர வகுப்பு, 4, 5-ம் வகுப்புக் கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். படம் பார்ப்பவர்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்தோடு நான் சொல்வதாகவோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை மட்டும்தான் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற எண்ணத்தோடு பேசுவதாக அரசாங்கம் தவறாக நினைக்க வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர்களில் சற்று அதிகம் பேர்கள், இதில் திறமையுடயவர்கள் இந்தத் துறையில் இருக்கிறார்கள். பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த ஒருவரோ, இருவரோ இப்பொழுது கதை எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். வேறு கட்சியில் இருப்பவர்கள் கதை எழுத முயன்று முடியாமல் திரும்பியிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு இத்துறையில் வெற்றியடைய திறமை இல்லை. ஆனால் கதை எழுத திராவிட முன்னேற்றக்கழகக்காரர்கள் முன் வந்தால் அதை வைத்துக்கொண்டு பணம் சம்பாதிக்க காங்கிரஸ்காரர்கள் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, இதில் கட்சி வேறுபாட்டை மனதில் கொள்ளாமல், உண்மையில் பொது மக்கள் எந்தயிடத்தில் பாதிக்கப்படுகிறார்களோ அந்தயிடத்தில் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து நான் சொல்வேன், வரியை எதிர்க்காமல் இதைக் கேட்டுக் கொள்கிறேன், இந்த மசோதாவை நிறைவேற்றட்டும், ஆனால் அதற்காக மேல் வகுப்புக் கட்டணத்தை உயர்த்தினால் உயர்த்திக்கொள்ளட்டும், ஆனால் கடைத்தர வகுப்புகளில் கட்டணத்தை உயர்த்திவிடக் கூடாது, அப்படி உயர்த்தாமல் இருக்கவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஆனால் நாடகத்திற்கு இந்த வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. நாடகங்கள் நடத்துவது திராவிட முன்னேற்றக்கழகக்காரர்கள் மட்டுமல்ல. இப்பொழுது அரசியலில் எங்களுக்கு வேலையிருப்பதால் நாடகங்கள் நடத்த முடியாத நிலையில் இருக்கிறோம். மாறாக, காங்கிரஸ்காரர்களுக்கு ஓய்வு இருப்பதால் அவர்கள் நடிப்பதற்குக்கூட பழகலாம். அந்த வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிற படியால் நாடகங்களுக்கு இந்த வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அடுத்து,





இசைத்துறை இன்றைய தினம் வளர்ச்சி பெறுவதற்கு இசை நிகழ்ச்சிகளுக்கு எந்தவிதமான வரியும் இல்லாமல் செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். குதிரைப்பந்தயத்திற்கு வரி எப்போழுதும் போல் இருக்குமானால், அல்லது சிறிய அளவு மட்டும் உயர்த்தப்படுமானால் அது பயன்படாது. நாங்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லும் கருத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லும் கருத்தை இன்றைய தினம் திருவாளர் ராமசாமி அவர்களாலும் காங்கிரஸ் கட்சியை சார்ந்த நாகராஜ மணியகார் அவர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டது குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்ற கருத்து. இந்த அரசாங்கம் மறுபடியும் யோசிக்கவேண்டும், வரி வருகிறது என்பதற்காக குதிரைப் பந்தயத்தை நடத்துவது, லாபம் வருகிறது என்பதற்காக திருடுகிறேன் என்று சொல்வது போலவும் லாபம் வருகிறது, இதனால் ப்ளாக் மார்க்கெட் செய்கிறேன் என்று சொல்வது போலாகும். குதிரைகள் வேண்டும், அவைகள் நன்கு கொழுக்க வேண்டும் என்பதற்காகத் தான் குதிரைப்பந்தயம் நிறுத்தப்படவில்லை என்று அமைச்சர்கள் சொல்வார்களேயானால், அவர்கள் திறமையாக பேசுவதாகவோ அல்லது சிந்தித்துப் பேசுவதாகவோ மக்கள் நினைக்க மாட்டார்கள். குதிரைகள் வேண்டுமென்றால், அரசாங்கமே அவைகளை வளர்க்கட்டும், அப்படி வளர்த்தால் அக்குதிரைகளை அமைச்சர்கள்கூட பயன்படுத்தலாம். மாறாக, தனிப்பட்ட சிலர் குதிரைகளை வளர்ப்பதும், அதை வளர்ப்பதற்காக அவர்களுக்கு போட்டிப் பந்தயம் வைத்துத் தரவேண்டும் என்று சொல்வதும், அதைக் காண ஏழை மக்கள் உள்ளே புக வாய்ப்பு இருப்பதும், அதன் பலனாக பல குடும்பங்கள் சீரழிந்து போவதையும் தடுக்க வேண்டும். அதைத் தடுக்க முடியாவிட்டாலும் அந்த வரியை என்ட்ரன்ஸ் வரியை அதிகப்படுத்தவேண்டும். இப்பொழுது என்ட்ரன்ஸ் வரி ஐந்து ரூபாயாக இருக்குமானால் அதை 25 ரூபாயாக உயர்த்த வேண்டும். வேண்டுமானால் குதிரை வளர்ப்பதை பணக்காரர்களிடம் விட்டுவிடுங்கள், அரசாங்கம் அது இன்றியமையாதது என்று கருதுமானால். அதற்கு வேண்டுமானால் ஒரு சப்சிடி தரலாமே தவிர, குதிரையில் எந்தக் குதிரை நன்றாக ஓடுகிறது என்று பார்த்து அதில் சிறந்த குதிரைக்கு பரிசு கொடுக்கலாமே தவிர, அதாவது போட்டிப் பந்தயம் வைத்துக்கொள்ளலாமே தவிர, இந்த குதிரைப் பந்தய சூதாட்டத்தை அருள் கூர்ந்து நீக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் இந்தத் துறையில் சூதாடக் கூடாது என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உண்மையாகவே அந்த துறையைப்பற்றி பேசுவதாக இருந்தால், அந்த துறையில் இதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் நன்கு ஆராய்ந்துவிட்டு கருத்துக்களை கூறியிருந்தால் நான் அதை மிக மகிழ்ச்சியோடு வரவேற்று இருப்பேன். உண்மையிலே இதைப்பற்றி பேச வேண்டுமென்றால் இந்த கேளிக்கைத்துறையில் அல்லது படத்துறையில் சிறிதளவு பயிற்சி பெறவேண்டும். இந்த படத்துறைகளில் ஈடுபட்டு பொருள் ஈட்டியவர்கள் என்று கருதப்படுபவர்களில் ஒருவன் நான் அல்ல. ஏதோ ஒரு கதை எழுதிக்கொடுத்துவிட்டால் அது அப்படியே வருவதில்லை. கதை எழுதுபவர்களுடைய பகுதி ஒரு தனிப்பகுதியாகத்தான் படத்துறையில் இருக்கிறது. எழுதுகிறவர்களுடைய கதை அப்படியே படமாக்கப்பட்டு வருகிறது என்று கதை எழுதத் தெரியாதவர்கள் சொல்ல மாட்டார்கள். கனம் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுடைய நிலை அப்படித்தான் இருக்க முடியும் என்று நினைக்கிறேன். கதை எழுதுபவர்களுடைய கொள்கையை படத்தில் வரும்பொழுது மாற்றப்படுகிறது. மக்கள் விரும்புவதற்காக பல தவறான செய்திகளும் புகுத்தப்படுகிறது. இத்தனையும் கழித்து பார்த்தால் படம் எடுக்கின்ற முதலாளிகள் லாபத்தைத்தான் எதிர்பார்க்கிறார்களே தவிர அவர்களுக்கு லட்சியம் பெரிதாக தென்படுவதில்லை. ஆகவே தவறான படங்கள் தயாரிக்காமல் நல்ல சிறந்த படங்களை தயாரிப்பதற்கு அமைச்சர்களை போன்றவர்கள் கண்டித்து பேசுவதின் மூலம் படத்துறையை நல்ல முறையில் மாற்றிக்கொள்ள முடியும். இங்கேயுள்ள படங்களுக்கு அவைகள் எந்த கட்சியை சார்ந்திருந்தாலும் அவைகளுக்கு உரிமை தரக்கூடிய பொறுப்பை மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டிருந்தாலும், இந்த

[Sri K. Anbazhagan] [15th March 1958

அரசாங்கம் அந்த பொறுப்பை பெற்றுக்கொண்டு, நாட்டிலே தோன்றுகின்ற படங்கள் எப்படியிருக்கவேண்டும் என்று நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்று மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் அனுமதி அல்லது உரிமை கேட்கலாம். உரிமையை வைத்துக்கொண்டு நல்ல படங்களை நாட்டிலே கொண்டுவருவதற்கு ஆலோசனைகளை சொல்லி திருத்துங்கள். பெண்களுடைய மானம் போகிறது, அவர்களுடைய உடை கேவலமாக இருக்கிறது என்று சொல்லப்படுவதை எல்லாம் நீக்குவதற்கு, படங்களில் வருகின்ற பொழுது பெண்களின் உடையின் தரம் இப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்று நிர்ணயிங்கள். அதற்குரிய ஸென்ஸார் பொறுப்பை இந்த அரசாங்கம் பெறவேண்டும். இல்லை, அந்த உரிமை மத்திய அரசாங்கத்திற்கு இருந்த போதிலும்கூட இன்னின்ன முறையில் படங்கள் இருக்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் சட்டத்தை செய்யட்டும், அதற்குரிய வழிவகைகளை செய்யப்படும். இந்த நாட்டிலுள்ள படங்களின் தரம் குறைந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு காரணம் அரசாங்கத்தின் திறமை குறைவே தவிர வேறு ஒன்றுமில்லை. படங்களில் காணப்படும் குறைகளை எடுத்துவிடுவதற்கு ஸென்ஸார் போர்டுக்கு அதிகாரம் இருக்கிறது. ஸென்ஸார் போர்டு மத்திய அரசாங்கத்தை சார்ந்திருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றி குறிப்பிடுவது நியாமல்ல என்று தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் எல்லா காரியங்களிலும் தொடற்புடையதாக இருக்கிறது. இந்த அரசாங்கம் ஒரு ஆலோசனையை சொன்னால் மத்திய அரசாங்கம் கேட்கவேண்டும். அதே போன்று மத்திய அரசாங்கத்தினுடைய ஆலோசனைகளை இவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த முறையில் இந்த நாட்டிலுள்ள நன்மை தீமைகளைப்பற்றி எடுத்து சொல்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு உரிமையிருக்கிறது. ஸென்ஸார் போர்டு பொதுவாக கலை, நாகரீகம், பண்பாடு முதலியவைகளை காப்பாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அதற்கு வேண்டிய ஆலோசனைகளை இந்த சட்டசபை வழங்குவதற்கு உரிமை பெற்றிருக்கிறது என்று நான் கருதுகிறேன். நான் ஸென்ஸார் போர்டைப்பற்றி குறைக்கூற வில்லை.

**Mr. SPEAKER :** நான் ஸென்ஸார் போர்டைப்பற்றி குறை கூறக் கூடாது என்று தான் சொன்னேன், கருத்துக்களை சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை.

**Sri K. ANBAZHAGAN :** நான் குறை கூறவில்லை. இந்த அரசாங்கம் ஸென்ஸார் போர்டை கேட்டுக்கொள்ளலாம் என்கிற கருத்தைத்தான் சொன்னேன். இவ்விதம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் படங்களில் தாழ்ந்த தரம் இடம் பெற முடியாது. கனம் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது திராவிட முன்னேற்ற கழகத்தார் படங்களில் ஈடுபட்ட பிறகு தான் படத்துறையில் பண்பும் மாண்பும் தாழ்ந்துவிட்டது என்று குறிப்பிட்டார்கள். அதே நோக்கத்தோடு தான் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களும் கூறினார்கள். திராவிட முன்னேற்ற கழகத்தார் படத்துறையில் ஈடுபட்டதன் பின்னால் இந்நாட்டில் கலை கேவலமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி "கொலை செய்யப்பட்டிருக்கிறது" என்ற வார்த்தைகளையும் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே திராவிட முன்னேற்ற கழகத்தார் ஈடுபட்டதினால்தான் படத்துறையில் தாழ்ந்து விட்டது என்று சொல்லுகிறவர்கள், இன்னும் சரியாக கலையைப் புரிந்துக்கொண்டவர்களாக தெரியவில்லை. கலை என்றால் இலக்கியத்தைப்பற்றியும் கலையினுடைய தன்மைகளைப்பற்றியும் ஓரளவு தெரிந்தவர்கள், அல்லது அதில் ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் தான் கலையைப்பற்ற பேச முடியுமே தவிர கலை என்றால் விலை என்ன என்று கேட்கக்கூடியவர்கள் கலையைப்பற்றி உணர முடியாது.

**Sri S. LAZAR :** ஸர், பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்த சபை முன் இருக்கக்கூடிய மசோதாவைப் பற்றி இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் பேசுவதற்கு உரிமை இருக்கின்ற பொழுது, எல்லா அங்கத்தினர்களுக்கும்



15th March 1958] [Sri S. Lazar]

கலையைப்பற்றி பேசுவதற்கு உரிமை இருக்கின்ற பொழுது—அதே முறையில் தான் கனம் அங்கத்தினர் மாரியப்பன் அவர்கள் பேசினார்கள்—ஆனால் இதைப்பற்றி பேசினவர்கள் கலையைப் புரியாதவர்கள், கலையைப்பற்றி தெரியாதவர்கள், அறியாதவர்கள் என்ற முறையில் இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களை குறை கூறி பேசுவது இந்த சபைக்கு பொருத்தமா என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**Mr. SPEAKER : I rule the point out of order.**

**Sri K. ANBAZHAGAN :** கலையில் ஓரளவு பயிற்சி பெற்றவர்களுக்கு இதைப்பற்றி கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு திறமை இருக்க முடியும் என்ற முறையில் குறிப்பிடுகிறேன். கலை என்றால் என்ன என்பதைப்பற்றி ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னால் குறிப்பிடுகிற பொழுது திட்டவட்டமாக காலத்திற்கு காலம் வரையறுத்து எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அந்த முறையில் ஒரு காலத்தில் கலை என்பது கடவுளையும் சமய நெறியையும் வளர்ப்பதற்கு மட்டும் இருந்து வந்தது. "**Art is for God's sake and Religions sake**" என்று கூறப்பட்ட ஒரு காலம் இருந்தது. அதன் பின்னால் புராணங்களுக்கும், நாடகங்களுக்கும் கதை அம்சத்தை பயன்படுத்திக்கொண்டு இருந்தார்களே தவிர இசையின் தரத்தை படத்துறைகளில் பயன்படுத்தக்கூடாது என்று எண்ணிகொண்டிருந்தார்கள். ரஸ்கின் போன்றவர்கள் அந்த கருத்தை, பர்னாட்ஷா போன்றவர்கள் கலை என்பது கடவுளுக்கும் சமயத்திற்கும் மட்டும் உபயோகப்படுத்தக்கூடாது, கலை கலைக்கும் பயன்பட வேண்டும். **Art is for Art's sake** கலைத்துறையை பொதுமக்களுக்கு பயன்படுத்த வேண்டும். அதோடு பொதுமக்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதற்கான குறிக்கோளையும் கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். கடவுளுக்கு கலையை காணிக்கையாக செலுத்திவிடக்கூடாது, அது பொதுமக்களுக்கு பயன்பட வேண்டும், "**Art is for people's sake**" "**Art is for life's sake**" என்ற கருத்தை பர்னாட்ஷா போன்றவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே கலை மக்களுக்காக பயன்பட வேண்டும் என்று கருதக்கூடியவர்கள் காசை பெரிதாக கருத மாட்டார்கள். ஆனால் இன்று கலையைப்பற்றி நல்ல முறையில் புரிந்து கொள்ளாதவர்கள் கலையிலிருந்து காசைத்தான் எதிர்பார்க்கிறார்கள், கடவுளிலிருந்தும் காசைத்தான் எதிர்பார்க்கிறார்கள், "**Art is for business sake**" என்ற கருத்தில் கலை பயன்படுத்தப்படுகிறது. அந்த முறையில் இன்று காசுக்காக படத்துறையில் யார் யார் ஈடுபடுகிறார்கள் என்பதை கலையைப்பற்றி நன்கு உணர்ந்திருக்கிறவர்கள் யாரும் உண்மையிலேயே திராவிட முன்னேற்றகழகத்தாரை குறை சொல்ல மாட்டார்கள். படத்துறையில் திராவிட முன்னேற்ற கழகத்தார் ஈடுபட்டார்கள் என்றால் காசிற்காக அல்ல, படத்துறையைத் திருத்தம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். அந்த முறையில் திருத்தம் தேவை என்பதற்காகத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ஈடுபட்டார்களே தவிர ஈடுபட்டதற்கு காரணம் பிழைப்பதற்கு வேறு வழியில்லாமல் அல்ல. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வேண்டுமானால், திருத்தங்களை அண்ணாத்துரை அவர்களால் செய்ய முடிந்ததா என்று கேட்பார்கள். நான் அதற்கு பல சான்றுகள் தர முடியும். திருவாளர் கல்கி அவர்கள் கலையில் சிறந்தவர் என்று காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்குள்ள அத்தனை உறுப்பினர்களும் அறிவார்கள். கல்கி அவர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய "ஓர் இரவு" நாடகத்தைப் பார்த்துவிட்டு இந்த நாட்டில் இனிமேல் முன்னேற்றகரமான நாடகத்தை எழுதுவதற்கு இப்ஸன் பிறப்பானா, பர்னாட் ஷா பிறப்பாரா என்ற சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. அதை அண்ணாத்துரை அவர்கள் நீக்கிவிட்டார்கள் என்று தெரிவித்திருக்கிறார். காலம் சென்ற கல்கி அவர்களை தவறான கருத்துக்கு, அல்லது பொய் சான்றுக்காக குறிப்பிடுகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இது அவருடைய பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே வ. ரா. அவர்கள் அண்ணாத்துரை அவர்களுடைய நாடகததைப் பற்றி பாராட்டினார்கள். நாடக தந்தை பம்மல் சம்பந்த முதலியார்

[Sri K. Anbazhagan] [15th March 1958

அவர்கள் நாடகத்தைப் பார்த்துவிட்டு அண்ணாத்துரை எழுதக் கூடிய இந்த சமயத்தில் நடிப்பதற்கு நான் வாலிபனாக இருக்க முடியவில்லையே என்று குறிப்பிட்டு இருக்கிறார். இவ்விதம் பல பேர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இவ்விதமான சான்றுகளை தேடி சொல்ல வேண்டிய தேவையில்லை. அதுமட்டுமல்ல, அறிஞர் அண்ணா அவர்கள் கடவுளுக்கு எதிரான தவறான கருத்துக்களை கொண்டு வருகிறார்கள் என்று தவறாக கருதுகிறார்கள். அண்ணா எழுதிய முதல் படமாகிய "வேலைக்காரி" என்னும் படத்திலே "ஒன்றே குலம், ஒருவனே தெய்வம்" என்ற அரிய கருத்தினை எடுத்துக் காட்டினார்கள். கடவுள் ஒன்று என்ற கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் மறுப்பதில்லை. இதிலே மாறுபட்ட கருத்துக்களையுடையவர்கள் கூட இதை ஒப்புக் கொண்டிருப்பதைத் தெளிவுப்படுத்த முடியும். குன்றக்குடி அடிகளார் அண்ணா எழுதி ஓடிய "வேலைக்காரி" படத்தைப் பார்த்துவிட்டு புராணக் கடவுள்களைத்தான் மறுக்கிறாரே தவிர, உண்மைக் கடவுளை அண்ணாத்துரை மறுப்பது இல்லை என்று தெரிவித்தார். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், கடவுள் கொள்கையை மறுப்பவர்கள் இல்லை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதற்காகத்தான். திருக்குறள் நெறியை எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் பெருமிதத்தோடும், பூரிப்போடும் வள்ளுவர் காட்டிய வழியிலே மக்கள் வாழவேண்டும் என்று சொல்லுகிறோம். நான் பெருமையாகச் சொல்லுவேன், நான் கூட அந்த அளவுக்கு திருக்குறளைப் பயன்படுத்துவதில்லை. சினிமாவில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால், தோழர் கருணாநிதி அவர்களும், தோழர் ஆசைத்தம்பி அவர்களும் நான்கு தொடர்களுக்கு ஒரு முறை திருக்குறளைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் இது அவர்களுக்கு இருக்கிற ஆர்வத்தைக் காட்டுகிறதே தவிர, வேறு நோக்கத்தோடு அல்ல. எங்கள் கொள்கையில் குற்றம் காண முடியாது. பலாத்கார உணர்ச்சியைத் தோற்றுவிக்கக்கூடிய சில காட்சிகள் வரும் நேரத்தில் கூட, நியாயத்தைப் பெறுவதற்கு பலாத்காரம் முறையல்ல என்பதை "வேலைக்காரி" யில் தீட்டிக் காட்டினார். அவர்கள் "புத்தியைத் தீட்ட வேண்டுமேயொழிய, கத்தியைத் தீட்டக் கூடாது" என்று தெரிவித்திருக்கிறார். எங்கள் கொள்கையிலே தவறில்லை. பண்பை எடுத்துக் கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எழுதிய எந்தப் படத்தில் பண்பு குறைந்துவிட்டது, நெறி தவறி விட்டது, தமிழர் கொள்கை பாழ்படுத்தப்பட்டு விட்டது என்று எடுத்துக் காட்டினால், அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்படிச் சொன்னவர்கள் இல்லை. கட்சி மாறுபாட்டைக் கருதி—அந்தத் துறையில் முன்னேற்றக் கழகத்தினர் ஈடுபட்டிருப்பதால்—மாறுபாட்டைத் தோற்றுவிக்கலாமே தவிர, சிறந்த கருத்துக்களை இது வரையில் வேறு யாரும் சொன்னதில்லை. தமிழர் பண்பு தாழ்ந்து விட்டது என்று சொல்லும்போது, தமிழர் பண்பாட்டை எண்ணிப்பார்த்துச் சொல்ல வேண்டிய ஒரு கருத்து தமிழரது நெறியில் கற்பு நெறி சிறந்த நெறி. அதை இழிவு படுத்தும் முறையில்—திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—படத் துறையில் எழுதியதில்லை. அதே நேரத்தில் இந்த நாட்டுக்கு எந்தெந்த முற்போக்குக் கருத்துக்கள் தேவையோ அத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் படத்தின் தரம் தாழ்ந்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்றோ உயர்வாக இருந்தது, இன்று தாழ்ந்து விட்டது போலச் சொல்லுகிறார்களே, என்று உயர்ந்திருந்தது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வளர்ச்சியடையவில்லை என்று சொன்னேன்.

SRI K. ANBAZHAGAN : வளர்ச்சியடையவில்லை என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி வளர்ச்சியடையாமற் போனதற்குக் காரணங்கள் யாவை ? எப்படி வளர்ச்சி யடையவில்லை ? சினிமா என்று சொன்னாலேயே அதைப் பற்றி தூற்றிப் பேசுவதும், குறைபடுத்திப் பேசுவதும், அந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கண்ணியம், பெருமை கொடுத்து மதிக்காது ஒரு சூழ்நிலை இருக்கும்போது எப்படி வளரும் ? சினிமாவில் ஈடுபட்டிருப்பவர்கள் பொருள் சம்பாதிக்கத்தான் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்காகத்தான்



15th March 1958] [Sri K. Anbazhagan]

அன்றைக்கு அண்ணா சொன்னார்கள்—ஆட்சி பீடத்தில் இருக்கின்றவர்கள், சினிமாத் தொழிலை தேசிய மயமாக்கி, படம் எடுக்க முன் வந்தால், என்னுடைய கடமையென்று ஒன்று இருக்குமானால், அது கதை எழுதுவதாகும், அதைச் செய்ய நான் தயார் என்று சொன்னார்கள். பொருள் சம்பாதிப்பதற்காக மட்டும் நாங்கள் இதில் ஈடுபடவில்லை. எங்களுடைய கொள்கைகளை, லட்சியங்களை மக்களிடத்தில் எடுத்துச்சொல்ல, அவர்கள் கைக்கொள்ள வேண்டிய நெறியை எடுத்துச் சொல்லவே இதில் ஈடுபட்டிருக்கிறோம். கதை எழுதத் தயார் என்று சொன்ன நேரத்தில் நிதி அமைச்சர் அவர்கள் வரவேற்க முடியாமல் இருக்கிறது என்று சொன்னார். அண்ணா எழுதக் கூடிய கதைகளில் கட்சிக் கொள்கைகள் இல்லாமல்—எத்தனையோ கதைகள் இருக்கின்றன—அவைகளைக் கொடுக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் எழுதுவது காசு சம்பாதிப்பதற்காக அல்ல—எழுதுவது கலைக்காக, மக்களுக்காக, மொழிக்காக என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு துறையில் ஈடுபட்டவர்களுக்கு நல்ல மதிப்பு—மக்களால் பாராட்டப்படக் கூடிய ஒரு நிலை—ஏற்படுமானால், இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களின் கண்ணியம் உயர்ந்து போகும். இந்த நாட்டிலே இதிலே கூட "வடக்கு, தெற்கு" இருக்கிறது என்று நான் குறிப்பிடும்போது, நிதி அமைச்சர் அவர்கள் "வடக்கு, தெற்கு" என்று சொல்வதற்காக நான் இதைச் சொல்வதாக எண்ணவேண்டாம். நம் "ஜெமினி" பட அதிபர் வாஸன் அவர்கள் "சந்திரலேகா" என்ற படத்தை மிகச் சிறந்த முறையில்—ஹிந்தி பேசும் மக்களும் பாராட்டக் கூடிய விதத்திலே—எடுத்து, அந்தப் படத்தை வெளியிடுகின்ற நேரத்திலே, வட நாட்டிலே பல தியேட்டர்களில் அனுமதி தர மறுத்து விட்டார்கள் கட்டுப்பாடாக. அந்தக் கட்டுப்பாட்டை உடைத்து அவர் அனுமதி பெறுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்யவேண்டியிருந்தது. அந்த அளவுக்கு படத் துறையில் கூட மொழி வேற்றுமை உணர்ச்சியும், அந்த மொழி வேற்றுமை உணர்ச்சி காரணமாக வடநாட்டைச் சேர்ந்தவர்களுக்கு இருக்கிற நல்ல வாய்ப்பும், தென்னாட்டைச் சேர்ந்தவர்களுக்கு இருக்கிற வாய்ப்புக் குறைவும், இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையின் காரணத்தால், இங்கேயுள்ளவர்கள் மக்களிடையிலே தரத்தை உயர்த்தாவிட்டாலும் போட்ட பணத்தை எடுக்கவேண்டுமே என்று ஒரு அளவுக்கு தரத்தைத் தாழ்த்தி விடுகிறார்கள், படம் எடுப்பவர்களும், டைரக்டர்களும்—நடிப்பவர்கள் தங்களுக்கு இடம் கிடைக்கவேண்டுமே என்று இருக்கிற ஒரு ஆர்வத்தின் காரணமாக ஓரளவுக்கு ஆபாசமாக நடிக்கக் கூடத் தயாராக இருக்கிற காரணத்தினால்—அந்த அளவுக்கு ஆபாசத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இதில் இருக்கின்ற காரணத்தினால், இவர்கள் இதில் ஈடுபட்டதற்குப் பின்னால் தரம் உயரவில்லை, தாழ்ந்து விட்டது தரம் என்று சொல்வது சரியல்ல—அதோடு, இந்தப் படத்தின் தரத்தை உயர்த்துவது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றினால்தான் முடியும். ஏனென்றால், அவர்களிலே தான் இன்று சிறந்த எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்—நான் அதைப் பெறுமைக்காகச் சொல்லவில்லை—இன்றைய தினம் பேச்சுத் துறையை எடுத்துக் கொண்டாலும், எழுத்துத் துறையை எடுத்துக் கொண்டாலும், கவிதை புனைவதை எடுத்துக் கொண்டாலும், கதை எழுதுவதை எடுத்துக் கொண்டாலும், நடிப்பை எடுத்துக் கொண்டாலும்—தமிழ் மட்டுமல்ல—ஆங்கிலத்திலே கூட—இந்த அளவுத் திறமை உடையவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இருக்கிறார்கள்—இதனாலே தாங்கள் என்னை பெருமைபடுத்திக் கொள்வதாக நினைக்கவேண்டாம்—நான் ஒரு சாதாரண ஆசிரியன் மட்டும் தான்—மற்ற நண்பர்கள் திறமையுடயைவர்களாக இருக்கிறார்கள்—அவர்களுடைய திறமை நாட்டுக்குப் பயன்படுவதால் அதை எண்ணிப் பார்த்து—திறமை உடையவர்கள் கொள்கையோடு நடக்கிறார்கள் என்று, நம் கொள்கையோடு உடன்படவில்லையே, எல்லாவற்றிலும் இவர்கள் முற்போக்காகப் போகிறார்களே, நாம் செய்வது போதாது என்று சுட்டிக் காட்டுகிறார்களே என்ற எண்ணத்தை வைத்துக் கொண்டு—பண்பு குறைந்து விட்டது, தமிழ் நாட்டின் தரம் தாழ்ந்து விட்டது, தமிழ் நாட்டின் மரபு, நெறி எல்லாம் தவறி விட்டது என்று சொல்வது உண்மையாகாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[Sri K. Anbazhagan] [15th March 1958

கடைசியாக மற்றொன்று சொல்வேன். மேல் நாட்டில் ஆங்கிலப் படம், ஆபாசமாக இருந்தால், குழந்தைகள் பார்க்கக் கூடாது என்று "அடல்ட்ஸ் மட்டும்" என்று பாகுபாடு செய்து, முதிர்ந்தவர்கள் பார்க்கலாம், முதிராதவர்கள் பார்க்கக் கூடாது என்று வரையறை செய்திருக்கிறார்கள். அந்த முறையைப் பின்பற்றி இங்கேயும் ஏற்படுத்தலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எழுதுகிற படங்களைக் குழந்தைகள் பார்த்துக் கெட்டுப் போய் விடலாம் என்று நினைத்தால், பெரியவர்கள் பார்க்கத் தக்க படமாக அதை மாற்றலாம். பெரியவர்கள் படத்தைப் பார்க்கட்டும் நல்ல முறையில் பரிசீலிக்கட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தவறுதான் செய்கிறார்கள் என்று இன்னும் கருதினால், தயவு செய்து அவர்களும் கதை எழுதட்டும். தயவு செய்து அந்தத் துறையில் ஈடுபடட்டும். அமைச்சராக இருந்தால் கலைத் துறையில் ஈடுபடக் கூடாது என்று கருதிக் கொள்ள வேண்டாம். எத்தனையோ அரசியல் தலைவர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டைத் திருத்துவதற்கு கலைத் துறைக்கு வாருங்கள். இரண்டு பேரும் அங்கேயும் சந்திக்கலாம். பண்பு குறைவு இருக்குமானால், அந்தத் துறைக்கு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் வந்த பின்னர் பண்பு உயர்ந்து விடும்—அமைச்சர் பக்தவத்ஸலம் திரும்பிப் பார்த்தாலேயே பண்பு உயர்ந்து விடும்—முதலமைச்சர் காமராஜ் அந்தப் பக்கம் வந்து போனாலேயே தரம் உயர்ந்து விடும்—அதை விட்டு யாரிடத்திலோ ஒப்படைத்து விட்டது போலவும், அதனால் பண்பு உயரவில்லை போலவும் சொல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று எங்கள் இயக்கத்தில் இருக்கிற சாதாரண தோழர் ஒருவர் எழுதிய படம் "குல தெய்வம்". "குல தெய்வம்" படத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை. அந்த அளவு பாராட்டுதல்கள் கிடைத்திருக்கிறது. பரிசு பெற்ற படமும் கூட. உண்மையிலேயே எனக்கு படத்தில் அக்கரையில்லை. எனக்குப் பிடித்த கொள்கை சித்தரிக்கப்பட்டிருக்குமேயானால், அந்தப் படத்திற்குப் போய் சிறிது நேரம் இருந்து விட்டு வந்து விடுவேன். அதற்குப் போதுமான நேரமே எனக்குக் கிடைப்பதில்லை. நிதி அமைச்சர் அவர்களுக்குக் கிடைக்காமல் இருப்பதைப் பற்றி குறை கூற முடியாது. என்றாலும், "குல தெய்வம்" பாராட்டப்பட்டது என்றால் அதிலுள்ள சிறந்த கருத்தை நாடு மிக நன்றாக அறியும். நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருப்பதால் நேர்மை, தரம், குறையவில்லை—தாழவில்லை—அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் இருக்கிறது, அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri M. R. KANDASWAMY MUDALIYAR** : சபைத் தலைவர் அவர்களே, முன்னால் பேசிய நண்பர் அன்பழகன் அவர்கள், சினிமாவில் அனுபவம் உள்ளவர்கள் குறை சொல்லக் கூடாது என்று சொன்னார். பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு பதில் சொல்லவில்லை. அப்படி இருக்குமானால் அரசியல் துறையில் அனுபவம் இல்லாத காரணத்தினால், அரசியலைப் பற்றி அவர்களுக்குப் பேச யோக்கியதை கிடையாது. சபாநாயகர் அவர்கள் இதைப் பற்றித் தெளிவுபடுத்தவேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : சபாநாயகர் அவர்களே, சினிமாவைப் பற்றித் தெரிந்தவர்கள் தான் சினிமாவைப் பற்றிப் பேசவேண்டும். அரசியல் தெரிந்தவர்கள் தான் அரசியலைப்பற்றிப் பேசவேண்டும் என்ற இரண்டுமே தவறான கருத்து. அதைப் பற்றி விவாதிக்கவேண்டாம்.

**Mr. SPEAKER** : The hon. Member Sri Mudaliyar will please sit down.

**Sri K. ANBAZAGAN** : Sir, my speech is involved.

**Sri MARIAPPAN** rose.



15th March 1958]

**Mr. SPEAKER** : Let hon. Members resume their seats. I shall now give a ruling. It is true that there is some substance in the point of order raised by hon. Member Sri S. Lazar. But I did not allow it because the discussion as it was proceeding took a different turn and the hon. Members instead of confining their remarks to the Bill under discussion, have gone on discussing the merits of cinemas and the capacity of people to write about cinemas and other things. It is unfortunate no doubt. Now, at least hereafter, let us put a stop to such wide discussion and confine our remarks to the Entertainments Tax Bill. So, I make this appeal to hon. Members. I appeal to hon. Member Sri Lakshmipathi Raju, who will be the next speaker, to confine his remarks to the Bill. Others might have made a mistake in the beginning and the Chair also might have made a mistake. Let us forget all the mistakes committed till now including the mistake committed by the Chair. (An hon. Member: You have not committed any mistake, Sir.) No, no. I myself admit. Let us set an example at least hereafter. Let hon. Members not talk on the merits of cinemas but only on the Bill under discussion. In the light of this appeal of mine, I suppose hon. Members Sri Kandasami Mudaliar will not press his point.

* **Sri P. S. K. LAKSHMIPATHY RAJ** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த சினிமா வரி விதிப்பு மசோதாவை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் ஆதரிக்கிறேன். எனக்கு முன்னால் கனம் அங்கத்தினர்கள் இதைப் பற்றி விரிவான முறையிலே பேசி இருக்கிறார்கள். முதலில் இங்கு பேச வேண்டாமென்று தான் நினைத்தேன். ஆனால் இப்பொழுது பேசவேண்டுமென்ற ஆசை வந்துவிட்டது. ஏனென்றால், தமிழர் பண்பை உயர்த்தியிருக்கிறோம், நாங்கள் அந்தப் பண்பை கவிதையிலும், வசனத்திலும், நடைமுறையிலும்....

**Mr. SPEAKER** : கனம் அங்கத்தினர் நான் ஆங்கிலத்திலே சொன்னதைப் புரிந்து கொள்ளவில்லையென்று தான் நினைக்கிறேன். போனதெல்லாம் போகட்டும். இனிமேலாவது அப்படிப் பேசவேண்டாமென்று சொன்னேன். அதைத்தான் இப்பொழுது தமிழில் திரும்ப சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர் இந்த வரியைப் பற்றி மட்டும் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:

**Sri P. S. K. LAKSHMIPATHY RAJ** : வரி என்ற தலைப்பிலே தான் பேசுகிறேன். கலை, பண்பு உயர்ந்திருக்கிறது என்று சற்று முன்பாக பேசியதைக் கேட்டு எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. கலை, பண்பு, எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் கூற விரும்புகிறேன். சென்ற சில தினங்களுக்கு முன்பு மதுரை மாவட்டத்தில் உள்ள பழனியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகாநாடு நடைபெற்றது. இங்கே காட்சியளித்துப் பேசிய சில நண்பர்கள் அங்கு விஜயம் செய்திருந்தார்கள். மகாநாடு முடிந்ததும், தமிழர் தெய்வம் என்று கூறப்படுகிற தண்டபாணி கோவில் இருக்கும் மலையிலே, செருப்பை அணிந்துகொண்டு மேலே வந்துகொண்டிருந்தார்கள். என்னைப் போன்றவர்கள் அதைப் பார்த்திருந்தால் நடப்பது வேறாக இருந்திருக்கும். ஆனால் அங்கேயுள்ளவர்கள் அவர்களுக்கு புத்திமதி சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். தமிழர் பண்பு உயர்ந்திருப்பதற்கு இது ஒரு சான்று. (சிரிப்பு). மற்றுமொரு சமயம் கம்ப ராமாயண விரிவுரை நடந்து கொண்டிருந்தது. 11-30 a.m.

**Sri K. ANBAZHAGAN** : இப்பொழுது சொல்லப்படுகிற கருத்துக்கள் உண்மைக்கு மாறானவை என்று தெரிவித்துக் கொள்ள விரும்பு

கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தை சம்பந்தப் படுத்திப் பேசுவதனுல் இதனைச் சொல்ல வேண்டியிருக்கிறது. உண்மையல்லாததைச் சொல்லுவது புறம்பானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**SRI P. S. K. LAKSHMIPATHY RAJ:** அங்கே இருக்கிற ஒரு ஸ்தாபனத்தின் தலைவர் என்ற முறையில் இதைக் கூறுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. டிரஸ்டு போர்டு சேர்மன் என்ற முறையில் பேசுகிறேன். ஒரு ஸ்தாபனத்திற்கு பொறுப்புள்ளவன் என்ற முறையில் தான் பேசுகிறேன்.

**SRI A. GOVINDASAMY:** தலைவர் அவர்கள் வரியைப் பற்றிப் பேசவேண்டும் என்று ரூலிங் கொடுத்த பிறகும் பழனி மலையில் நடந்ததை எல்லாம் பேசலாமா? அதற்கும் வரிக்கும் என்ன சம்பந்தம்?

**MR SPEAKER:** நான் ரூலிங் கொடுக்கவில்லை. அப்பீல்தான் செய்தேன். அப்பீலுக்கு கேட்காமல் போனால் ரூலிங் கொடுக்கிறேன்.

**SRI P. S. K. LAKSHMIPATHY RAJ:** கம்பராமாயண விரிவுரை நடந்து கொண்டிருந்தது. அந்த இடத்திலே பல தமிழ்ப் புலவர்களும் இருந்தார்கள். பீ.ஏ., எம்.ஏ. படித்த சில பெரியவர்களும் வீற்றிருந்தார்கள். வெளியே சில கூச்சல்கள் கேட்டன. அதை நிறுத்திவிட்டு, சில நண்பர்கள் வெளியே வந்து பார்த்தோம். நாங்கள் கண்ட காட்சி வேறு ஒன்றுமில்லை. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினரின் கட்சியைச் சேர்ந்த சிலர் அந்தக் கட்சியின் சின்னத்தை அணிந்துகொண்டு "கோவிந்தா, கோவிந்தா" என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். மனதுக்கு வேதனையாக இருந்தது. கம்பராமாயண விரிவுரைப் பிரசங்கி என்னுடைய லட்சியம் பூர்த்தியாகிவிட்டது, எதற்காக நான் இங்கே விரிவுரை நிகழ்த்தினேனே, அதை ஒப்புக்கொண்டு "கோவிந்தா, கோவிந்தா" என்று சொல்லுகிறார்கள் என்றார். அந்த நல்ல பதத்தை அவர்கள் வாயிலிருந்து வரவழைத்தேனே என்று சொல்லி ஆனந்தப்பட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொண்ட கருத்துத்தான் உயர்ந்தது என்பதை பிறர் மதிக்க வேண்டும் என்பதற்காக எதை வேண்டுமானாலும் சொல்லுகிறார்கள், செய்கிறார்கள்.

சினிமாவிலே வருகிற சில நிகழ்ச்சிகளைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் சொன்னார்கள். "நாங்கள் சினிமாத் துறையில் தலையிட்ட பிறகு பண்பு வளர்ந்திருக்கிறது" என்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் சொன்னார்கள். சினிமாவுக்குப் போய் சில காட்சிகளைப் பார்க்கும்பொழுது, நமக்கே அருவருப்பாய் இருக்கிறது. கதையிலே சில கருத்துக்களைப் புகுத்தி, அதைக் கவிதையிலும் வசனத்திலும் விரச செய்கிறார்கள். எனக்கு முன் பேசிய கனம் ஆசைத்தம்பி அவர்கள் சர்வாதிகாரியைப் பற்றிப் பேசினார். ஒரு சினிமாவிலே "எந்தக் கழுதை நல்ல கழுதை" என்ற பாட்டு வருகிறது. இது தமிழ்ப் பண்பாட்டில் எப்படி உயர்ந்தது என்று எனக்குப் புரியவில்லை (சிரிப்பு). இன்னொரு சினிமாவிலே "எருமைக் கன்னுக்குட்டி" என்ற பாட்டு வருகிறது. இன்னொன்றிலே "பாருடப்பா, பாருடப்பா" என்ற பாட்டு வருகிறது. இதெல்லாம் எந்தப் பண்பாட்டின் அடிப்படையில் வருகிறது என்று எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு). பண்பிலே வளர்ந்து உயர்ந்திருக்கிறோம். நீளமாக இருக்கிறோம், அகன்று இருக்கிறோம் என்று சொன்னால், அதை எந்த "ஸ்கேலை" வைத்து அளந்து சொல்வது என்று புரியவில்லை.

**MR. SPEAKER:** இதோடு நிறுத்திவிட்டால் போதாதா. (சிரிப்பு). தயவுசெய்து நிறுத்திவிடுங்கள்.

* **SRI P. S. CHINNADURAI:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் சாமர்த்தியசாலி. சபையை அப்படியே பரவசத்தில் ஆழ்த்திவிட்டு, அந்த நேரத்திலே எப்படி



யாவது இந்த மசோதாவை நிறைவேற்றிவிடலாமென்ற கருத்தோடு, ஆரம்பத்திலே இந்த மசோதாவைப் பிரேரேபித்துப் பேசுகிற நேரத்திலே, இதிலே சம்பந்தப்படாத விஷயங்களை எல்லாம் உள்ளே இழுத்து வைத்திருக்கிறார். ஒரு வகையிலே அவர் எங்கள் ஜில்லாவாசி என்பதனால் பெருமைப்படுகிறேன். இருந்தபோதிலும், இந்த விஷயம் சம்பந்தமாக சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது கேளிக்கைக்கான வரி உயர்த்தப்படுகிறது. யாருக்கு உயர்த்தப் படுகிறது? சினிமாப் பார்க்கிறவர்களுக்கும் குதிரைப் பந்தயத்திற்குப் போகிறவர்களுக்கும். குதிரைப் பந்தயம் சம்பந்தப்பட்டமட்டில் நான் சென்ற ஆண்டிலேயே குறிப்பிட்டிருக்கிறேன், இது பாவப் பணம் என்றும் 14 லட்சம் ரூபாய் பாவப் பணத்திற்காக இதை அனுமதித்துக் கொண்டிருக்க வேண்டாமென்று சொன்னேன். அன்றைய கருத்தையேதான் இன்று மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறேன். குதிரைப் பந்தயத்தைப் பற்றி ஏற்கெனவே சட்டம் இயற்றி இருக்கிறோம். புதிதாகச் சட்டம் தேவையில்லை. அதனை அமல் நடத்தாமல் இந்த அரசாங்கம் இந்த வரி விதிப்பை சபை முன்னாலே கொண்டுவருவது சரியாகுமா என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது வரியை உயர்த்திவிட்டதினாலே, குதிரைப் பந்தயத்தை தடுத்து விட்டதாகவோ, குதிரைப் பந்தயத்தினால் ஏற்படுகிற கேடுகளை அகற்றிவிட்டதாகவோ கூறமுடியாது. குதிரைப் பந்தயம் கேடானது என்ற கருத்து இருந்ததனால்தான் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆண்டுகள் பல கடந்த பின்னும் இன்னும் இதை ஏன் அமல் நடத்தாமல் இருக்கிறார்கள் என்று கேட்க இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு. இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்காமல் இருப்பதற்கு முனையக் கூடாது. இந்தக் கேள்விக்குச் சரியான பதில் வேண்டும். பதில் வேண்டும் என்று சொல்லும்பொழுது, சாதாரண காரணங்களைக் கூறி, இன்னும் இதைத் தள்ளிப்போட்டுக் கொள்ளும் முயற்சியாக அந்த பதில் அமையக் கூடாது. திட்டவட்டமாக எந்த ஆண்டிலிருந்து அந்தச் சட்டத்தை அமல் செய்யப்போகிறோம் என்று சொல்லவேண்டும். இந்த ஆண்டிலே இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அமலுக்குக் கொண்டு வருவோம், அதனைக் குறித்துக் கவலைப்படாதீர்கள் என்று சொல்லுவார்களேயானால், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன். அடுத்தபடியாக சினிமா சம்பந்தப்பட்ட வரை வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. கடைசியில் யார் இந்த வரியை கொடுக்கிறார்கள் என்பதை எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் சூசகமாக குறிப்பிட்டார்கள். அதை இன்னும் விளக்கமாகச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். உண்மையில் இந்த வரியை கொடுக்கிறவர்கள் யார்? "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்று கிராமப்புறங்களில் ஒரு பழமொழி கூறுவது வழக்கம். இந்த சினிமா வரி சம்பந்தப்பட்ட வரையில் உழைப்பாளிகள் அந்த நிலைமையில் இருக்கிறார்கள். சாதாரணமாக தொழிலாளிகள், ஏழை மக்கள்தான் சினிமாவுக்கு அதிகமாகப் போகிறார்கள். அவர்களுக்கு சங்கீத கச்சேரிகளுக்கோ, நடனக் கச்சேரிகளுக்கோ போவதற்கு மனமும் கிடையாது, வாய்ப்பும் கிடையாது. கிராமப்புறங்களில், பஞ்சாயத்து, முனிசிபாலிடி பகுதிகளில், தொழிலாளர் பகுதிகளில் சங்கீதக் கச்சேரிகளோ நடனக் கச்சேரிகளோ ஏற்பாடு செய்வது கிடையாது. அவர்களுக்கு கலை உணர்ச்சி இல்லை என்று சொல்லமுடியாது. சங்கீத கச்சேரிகளுக்கும் நடனக் கச்சேரிகளுக்கும் போகக்கூடிய அளவுக்கு கலை உணர்ச்சி இல்லை. அவர்களுடைய கலை உணர்வு வேறு விதங்களில் இருக்கிறது. அவர்கள் நாடகங்களிலும், சினிமாக்களிலும் அதிக கவனம் செலுத்துகிறார்கள். சினிமாவினால் சமூகத்திற்கு கேடுகள் விளைகின்றன என்று சிலர் கூறினார்கள். அதை நான் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. சினிமாவினால் கேடுகள் விளைகின்றன, என்ற காரணத்திற்காக வரியை 'உயர்த்தி இருந்தால் அது மிகவும் வருந்தத்தக்கது.

ஆபாசக் காட்சிகளை பற்றிச் சிலர் சொன்னார்கள். நடனக் காட்சியிலே இந்த ஆபாசங்களை நேரில் பார்க்கும்போது, படத்தில் பார்த்ததால் அதிக கேடு ஒன்றும் ஏற்படப்போவதில்லை. அந்தக் கண்ணோட்டத்தோடு இந்த வரி உயர்வு கொண்டு வரப்பட்டிருந்தால் அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள

*வேண்டும் என்று நிதி அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன். சினிமா கதை எழுதி காசாக்குகிறவர்களின் நலன்களைப் பற்றியும், சினிமா கதை எழுதி காசாக்கி வசதி இல்லாதவர்களுடைய நிலைமை பற்றியும் இந்த சபையில் பேசப்பட்டது. அதோடு சினிமா எடுப்பவர்களின் நலன்களைப் பற்றியும், சினிமா காட்டுபவர்களின் நலன்களைப் பற்றியும் பேசப்பட்டது. உண்மையில் இந்த வரியினால் அவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவதில்லை. அந்த விஷயத்தை நாம் நிச்சயமாக கூர்ந்து கவனிக்க வேண்டும். சினிமா பார்ப்பவர்களில் பெரும்பான்மையோர் தொழிலாளர்கள்தான் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னை நகரம், மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி முதலிய தொழில் நகரங்களில்—சினிமா கொட்டகைகளை வைத்திருப்பவர்களைக் கேட்டால் தெரியும்—தொழிலாளிகளின் மூலமாகத் தான் அதிக வருமானம் வருகிறது என்பது தெரியும். கிராமப் புறங்களில் "டூரிங் டாக்கிஸ்" இருக்கிறது. விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும், ஏழை உழைப்பாளி மக்களும் தான் சினிமாவிற்குப் போகிறார்கள்.

மிகவும் வசதி படைத்தவர்கள் சங்கீத கச்சேரிகளுக்கும், நடனக் கச்சேரிகளுக்கும் போகிறார்கள். ஆனால் அவைகளுக்கு வரி இல்லை. ஆனால் கிராம வாசிகள், ஏழை உழைப்பாளிகள் சினிமாவிற்கு போவதற்கு மட்டும் வரியைப் போட்டு சுமத்துவது நியாயமா ? என்பதைக் கேட்க எனக்கு உரிமை உண்டு. இதை பாரபட்சம் என்று கூடச் சொல்லலாம்.

ஸ்ரீ ராஜம் ராமசாமி அவர்கள் பேசும்போது சங்கீத சபாக்கள் அதிகமாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார். சங்கீத சபாக்கள் குறைந்து போக வேண்டும் என்று நான் கூற வில்லை. கர்நாடக சங்கீதத்தின் தன்மையோ, பொலிவோ இழந்து விட வேண்டும் என்று நான் கூற வில்லை. வரி போடுகின்ற விஷயத்திலே கூட நாம் ஒரு சரியான கொள்கையை கடைப்பிடிக்க முடியவில்லை. சினிமா வரியை உயர்த்தியிருப்பது தொழிலாளிகளுக்கும், ஏழை மக்களுக்கும் இழைக்கப்பட்ட மற்றொரு அநீதி.

இந்த வரியில் பெரும் தொகையை ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்போவதாக சொல்கிறார்கள். இந்த வரியினால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானத்தை விட, இந்த சினிமா கொட்டகைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதை ஸ்தல ஸ்தாபனங்களே நடத்தினால், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் நன்மை, சர்க்காருக்கும் நன்மை. வரி விதிப்பதற்கு வேறு வழியே இல்லை என்று சொல்வது போல் வருமான ஊற்றுக்களை அடியோடு வற்றிவிட்டார்போல், இந்த சினிமா வரி போடப்பட்டிருக்கிறது. இந்த வரியினால் வரும் தொகை குறைவாக இருந்தாலும், உழைப்பாளிகள் ஏழைகள், இவர்களின்மேல் இந்த வரியை பாரபட்சமாக போடப்பட்டிருக்கிறதை நான் ஆட்சேபிக்கிறேன்.

1-40 a.m. **Sri M. KALYANASUNDARAM**: கனம் சபா நாயகர் அவர்களே, இங்கு இது வரை நடந்த விவாதம், மசோதாவில் கண்டுள்ள விஷயங்களுக்கு புறம்பாக இருந்தாலும் கூட, தினசரி கடுமையான விஷயங்களைப் பற்றி விவாதம் செய்த கொண்டிருப்பதைப் பார்க்கும் போது வரவேற்கத்தக்கது தான் என்பது என்னுடைய அபிப்பிராயம். நீங்கள் விடுத்த வேண்டுகோளின் படி மசோதாவில் கண்டு இருக்கும் விஷயங்களைப் பற்றிதான் நான் பேசப்போகிறேன். இருந்தாலும், முன்னமேயே விவாதத்தில் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டதே என்று வருந்துகிறேன்.

இந்த மசோதாவில் வரவேற்கத்தக்க அம்சம் அதிகமாக இருக்கிறது என்பதுதான் என் அபிப்பிராயம். ஏற்கனவே, பட்ஜட் உரையின் போது பேசும்போது கூட இதைப்பற்றி நான் குறிப்பிட்டேன். இந்த வரியை சினிமா முதலாளிகளோ, கதை எழுதுகிறவர்களோ அல்லது மற்றவர்களோ கொடுக்கப்போவதில்லை. இந்த வரி, ஏழை ஜனங்களின் மீதுதான் விழுகிறது என்று உண்மை இருந்தாலும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும்



ஸ்தல-ஸ்தாபனங்களுக்கும் அனுகூலம் இருக்கிறது என்ற காரணத்தால் இதை வரவேற்கிறேன். மொத்த வசூல் தொகையில் செலவு போக மீதத்தில் பெரும் பங்கு பஞ்சாயத்துகளுக்கும், ஸ்தல-ஸ்தாபனங்களுக்கும் அனுகூலமாக உபயோகப்படும் என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் இந்த வரி விதிப்பை நான் ஆதரிக்கிறேன்.

அடுத்தபடியாக குதிரை பந்தயத்தைப்பற்றி இந்த சபையில் கட்சி வித்தியாசம் இல்லாமல், எல்லா பக்கத்திலிருந்தும் ஆட்சேபணை இருந்து வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த சட்டத்தை அமல் நடத்தாமல் இருப்பது நியாயமா? என்று பலர் கேள்வி கேட்கிறார்கள். குதிரை பந்தயத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் தாட்சண்யத்தை தவிர வேறு காரணம் ஒன்றும் இருக்கமுடியாது. குதிரைப் பந்தயம்மட்டும் நடந்தால் ஆட்சேபணை இல்லை. கிராமங்களில் மாட்டு வேடிக்கை நடப்பதுபோல் இருந்தால் ஒருவிதமான ஆட்சேபணைக் கிடையாது. ஆனால் அப்படி இருந்தால் அந்த பந்தயத்திற்கு யாரும் போவது கிடையாது. அந்தக் குதிரைப் பந்தயமே இப்பொழுது ஒரு கம்பெனி நடப்பது போல் நடந்துகொண்டுவருகிறது. அவர்களுக்கு அதில் நிறைய லாபம் கிடைக்கிறது என்று அறிகிறேன். வெளியில் காட்டக்கூடிய லாபம் எவ்வளவு, லாபம் காட்டாமல் எவ்வளவு இருக்கிறார்கள் என்பது பெரிய விஷயமாக இருக்கிறது.

இதனால் பாதிக்கக்கூடிய மக்கள் யார் என்று சொன்னால் சாதாரணமான தொழிலாளர்களும், படித்து விட்டு சர்க்கார் உத்யோகங்களில் இருக்கக் கூடியவர்களும் தான். இவர்கள் தான் அங்கே கூட்டம் போடுகிறார்கள். பணக்காரர்கள்தான் அங்கே முன்னதாக உட்கார்ந்துகொள்ளுகிறார்கள். 100 அல்லது 200 என்று வைத்து விளையாடுகிறார்கள். அவர்கள் மட்டும் இதற்குப் போகிறார்கள் என்றால் அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் துரதிருஷ்டவசமாக ஏழை மக்களும் உத்யோகஸ்தர்களும் இதில் ஈடுபட்டு கஷ்டப்படுகிறார்கள். சாதாரணமாகப் பார்க்கலாம் குதிரைப் பந்தயத்தன்று பத்திரிகை ஆபீஸ்களின் வாசலில் எவ்வளவு கூட்டம் கூடிக் கொண்டிருக்கும் என்பதை. இம்மாதிரி சமூகத்தில் ஒரு சீர்கேடான முறையில் நாம் இருக்கிறோம். இதைப் போல வேறு மது எதுவும் கிடையாது. குதிரைப்பந்தயத்தின் மூலம் பத்து அல்லது பனிரெண்டு இலட்சம் ரூபாய் வருகிறது என்றாலும் அதை நடத்துவதை அனுமதிக்கக்கூடாது. ஆனால், சொல்லுவார்கள் குதிரையை பராமரிக்க இது அவசியமாக இருக்கிறது என்று. நல்ல குதிரைகள் இராஜ்ஜியத்தில் இருக்கவேண்டும் என்று நினைத்தால், மாட்டுப் பண்ணைகளை நாம் அமைத்துக்கொண்டிருப்பது போல் குதிரைப் பண்ணைகளையும் நாம் அமைத்துக்கொண்டு அதன் மூலம் குதிரைகளை பராமரிக்கலாம். அதனால் இரண்டு அல்லது மூன்று லட்சம் ரூபாய் செலவானாலும் பாதகம் ஏற்படப்போவதில்லை. இதைப்பற்றியும் கொஞ்சம் ஆலோசனை செய்யவேண்டும். இது ஜனங்களைக் கெடுக்கக் கூடியது, ஜனங்களுடைய பண்பாட்டைக் கெடுக்கக்கூடியது என்பது என்னுடைய அபிப்பிராயம். மதுவிலக்குக் கொள்கை எப்படி அவசியமோ, அதைப்போலவே குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதும் அவசியம்தான். ஆனால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதற்குப் போகிறார்களோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அதைப்போய் இதுவரையிலும் பார்த்தது இல்லை. ரேஸ் கோர்ஸ் எப்படி இருக்கும் என்றுகூட எனக்குத் தெரியாது. அதில் நுழைந்ததே கிடையாது. அங்குபோய் வரக்கூடியவர்கள் சில விவரங்களைப் பற்றி என்னிடம் சொல்வதால் அதைப்பற்றி எனக்குத் தெரியவருகிறது. துணி மணிகளைக்கூட அங்கு பரி கொடுத்து விட்டு வருவதையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சில லேவாதேவிக் காரர்கள் அங்கேபோய் பணத்தை கடன் கொடுத்து வருவதாகவும் தெரியவருகிறது. பணத்துடன் அங்கே உட்கார்ந்து கொண்டு பந்தயம் விளையாடுகிறவர்களுக்கு பணத்தைக் கொடுத்து அவர்களுடைய துணிமணிகளையும் மற்ற எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு விட்டு விடுவதாகவும் தெரிய வருகிறது. இதனால் பல குடும்பங்கள் அழிந்து போய்க் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இப்படிப்பட்ட பரிதாபகரமான நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. இப்படி மோசமாக

[Sri M. Kalyanasundaram] [15th March 1958

ஜனங்கள் அழிந்து போகக்கூடிய அளவில் நடத்தப்பட்டுவரும் ஐட்டத்தை ஒழிக்காமல் இருக்கலாமா? ஆகவே இப்படிபட்ட குதிரைப் பந்தியத்தை ஒழித்துக் கட்டி ஒரு முடிவு கட்டவேண்டும், அதற்கான தீவிரமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கெள்ளுகிறேன். அதற்கு யார் முட்டுக்கட்டையாக இருந்தாலும் அதனால் யார் பாதிக்கப் பட்டாலும் சரி, அதைப்பற்றி கவலை எடுத்துக்கொள்ளாமல் தயவு தாட்சண்யம் காட்டாமல் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி மற்ற அங்கத்தினர்களும் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொன்னதையே நானும் ஆதரித்து அதை ஒழிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் சினிமா வரி சம்பந்தப்பட்ட வரையில் ஏற்கெனவே நான் சொன்ன மாதிரி டூரிங் சினிமா சம்பந்தப்பட்ட மட்டில் அதற்கு விதி விலக்கு கொடுக்க முடியுமா என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் சபாநாயகர் அவர்களே, நானும், எங்கள் கட்சி சார்பாக இந்த தமாஷா வரிச் சட்டத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகளை மட்டும் சொல்ல விரும்பு கிறேன். முக்கியமாக அநேக அங்கத்தினர்கள் இதைப்பற்றி பேசினார் கள். இதற்கு முன்னதாக இந்தச் சபையில் விவாதம் நடந்தபோது நானும் இரண்டொரு வார்தைகளைச் சொன்னேன். அதையே இப்பொழு தும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சினிமாக்கள் பேரில் வரி வசூல் செய்வதைப்பற்றி நான் ஆட்சேபிக்க வரவில்லை. முக்கியமாக கடைசித்தர வகுப்பு டிக்கட்டுகள் வாங்கக்கூடியவர்களுக்கு இந்த வரி விலக்குக் கொடுக்கவேண்டும். இந்த வரியை சினிமா முதலாளிகளிட மிருந்துதான் வசூலிக்க வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எவ்வளவுக்கு எவ்வளவு முதலாளிகளிடமிருந்து வசூ லிக்க வேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு கீழ்ப்பட்ட வகுப்பிலுள்ளவர் களிடமிருந்து வசூலிக்காமல் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். கீழ்ப்பட்ட வகுப்பில் போகக்கூடியவர்களுக்கு இந்த விலக்குக் கொடுத்துவிட்டு முதலாளிகளிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்று நான் மறுபடியும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குதிரைப் பந்தயத்தைப்பற்றி நமது நண்பர் கலியாணசுந்தரம் அவர்கள் சொல்லி விட்டார், மற்றவர்களும் சொன்னார்கள். இதை நிறுத்துவதற்கு சர்க்கார் திட்டவட்டமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம் சர்க்கார் அநியாய வரி வாங்குவதாக இருக்கிறது. அவர் சொன்னமாதிரி நானும் குதிரைப் பந்தயத்திற்குப் போனது இல்லை. இருந்தபோதிலும் எனக்குத் தெரியும் "அநேகம் குடும்பங்கள் இதன் மூலம் கெட்டுப்போய் வருகின்றன என்பது. குதிரைப் பந்தயத் தன்று இரயில்வே ஸ்டேஷனில் திரள் திரளாக ஜனங்கள் போவதைப் பார்க்கலாம். திரும்பி வருவதற்கு பணம் இருக்குமோ இருக்காதோ என்று பந்தயத்திற்கு போகிறவர்களுக்கு ரிடர்ன் டிக்கட் கொடுக்கும் படியாகவும் ரயில்வே சர்க்கார் திட்டம் போட்டு கொடுத்தும் வருகிறார்கள். பந்தயத்திற்குப் போனால் நிச்சயமாக துணி மணிகளையும் இழந்து விட்டு பணமில்லாமல் போனால் என்ன செய்வது என்பதற்காக ஒருக்கால் இப்படி போகவர டிக்கட்களைக் கொடுக்க திட்டம் வகுத்திருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. அங்கு போனவர்களில் ஒருவராவது ஜெயித்த தாகத் தெரியவில்லை. அப்படி யாராவது ஜெயித்தாலும் அவர்களுடைய மனப்பான்மை எப்படி இருக்கிறது என்றால் மறுபடியும் சென்று கிடைத்த தையும் இழக்கத்தான் தோன்றுகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை அரசாங்கம் முக்கியமாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகப்படியாக வரி வருகிறது என்பதற்காக இதை ஒழிக்காமல் வைத்திருப்பது நல்லது அல்ல. ஆகவே இதை ஒழிப்பதற்கு சர்க்காரே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.



15th March 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

கலைகள் வளர வேண்டும் என்பதற்காகவும், தமிழின் இயல், இசை, நாடகம் போன்ற கலைகள் வளரவேண்டும் என்றும், அவைகளுக்கு விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். கர்நாடக சங்கீதம் வளர வேண்டும் என்று அதற்கு விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டு கிறேன். கர்நாடக சங்கீதங்கள் எல்லாம் இதுவரையிலும் புறக்கணிக்கப் பட்டு வந்தது. இப்பொழுதுதான் அவைகள் வளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறது. அதுவும் ரொம்பவும் கஷ்டத்துடன் வளர்ந்து கொண்டு வரு கிறது. அநேகமாக சங்கீத விழாக்கள் டிசம்பர் மாதத்தில் நடைபெறுகின் றன. மாதா மாதம்கூட சில சபாக்கள் கச்சேரிகளை நடத்திக்கொண்டு வருகின்றன. ஆனால் சினிமா பிரதிதினமும் நடந்துவருகிறது. கர்நாடக சங்கீதம் வளர்ச்சி அடையவேண்டும் என்று பிரமுகர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டுவருகிறார்கள். அதில் முக்கியமாக செட்டிநாடு இராஜா அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு அண்ணாமலை மன்றத்தை கட்டி வைத்து சங்கீதம் வளர்ச்சி அடைவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். இதைப்போலவே பல சபைகள் இருக்கின்றன. மியூசிக் அகாடமி, பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, இப்படிப்பட்ட ஒரு சில சபாக்கள் ஏற்படுத்தி அவை களின் மூலம் சங்கீதம் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருகிறது. எங்கேயெல்லாம் சங்கீதக் கச்சேரிகள் நடக்கின்றனவோ அங்கேயெல்லாம் அதை வளர்ப்பதற்கு நாம் பாடு படவேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளையும் சர்க்கார் செய்துகொடுக்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்திக்கொள்ளுகிறேன். அது என்னுடைய அபிப்பிராயம். ஒரு முக்கியமான கலைக்கு நான் டிரஸ்டியாக இருந்து கொண்டு வருகிறேன். அதனால் அதன் கஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். அது எப்படி இருந்தபோதிலும் கலை அபிவிருத்திக்கு, இவ்வளவு தூரம் சர்க்கார் விலக்குகள் கொடுத்ததற்கு அவர்களை நான் பாராட்டுகிறேன். இன்னும் கர்நாடகம், மற்ற சங்கீத நாடகங்களுக்கு வளர்ச்சி அடைவதற்கு சர்க்கார் உதவி கொடுக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொளுகிறேன்.

கடைசியாக ஒரு பினல் க்ளாஸ் இருக்கிறது. 10–வது செக்ஷனில் (பி) பிரிவில்

"(*b*) on application to any Magistrate, by such Magistrate as if it were a fine imposed by him."

என்ற ஒரு விதி கொடுத்திருக்கிறார்கள். இதை கண்டிப்பாக விலக்க வேண்டும், என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

"Any amount due on account of the tax under section 4 or 4-A or under both may, without prejudice to any other mode of collections, be recovered—

(*a*) as if it were any arrear of land revenue, or"

என்று இருப்பதுபோல் இருந்தால் போதும் என்று தோன்றுகிறது மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஒரு பவரை அனாவசியமாகக் கொடுத்ததன் காரணம் என்ன? இப்படிப்பட்ட ஒரு விதி இருப்பது கூடாது என்பதை சர்க்காருக்குத் தெரிவித்துக்கொண்டு மற்ற விதிகளுக்கு என்னுடைய பரிபூரண ஆதர வைக்கொடுத்து என்னுடைய வரார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: கனம் சபாநாயகர் அவர்களே, ரொம்பவும் ருசிகரமான விவாதம் நடைபெற்றது. அதிலே சின்னதுரை அவர்கள் சொன்னார்கள், கவனத்தை வேறு பக்கம் திருப்பி விட்டு, இந்த வரியை இந்தச் சபை ஏற்றுக்கொள்ளும்படி செய்தது ஒரு சூழ்ச்சியோ இது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் மனதில் அப்படி பட்டு அதையும் தெரிவித்தார்கள். அதேமாதிரி சூழ்ச்சி செய்துதான் இந்த சட்டத்தை இயற்றவேண்டுமென்ற நிலையில் நாங்கள் இல்லை. (குறுக்கீடு) நானும் வேடிக்கையாகத்தான் சொல்லுகிறேன். உண்மையிலேயே வரி

[Sri C. Subramaniam] [15th March 1958

வசூல் செய்யவேண்டுமென்ற அக்கரை நிதி மந்திரி என்ற முறையிலே எனக்கு இருந்தாலும், கலைகளெல்லாம் நல்ல முறையிலே வளர வேண்டும், அபிவிருத்தி அடையவேண்டும் என்பதிலே கல்வி மந்திரி என்ற முறையிலே எனக்கு அக்கரை இருக்கிறது. நான் முன்பே சினிமாவிலே இருக்கக்கூடிய குறைகளை நானே நேரில் பார்த்து சொல்லக்கூடியவன் அல்ல என்பதை அவர்களுக்கு தெரிவித்தேன். இருந்தாலும் கலைகள் நல்ல முறையிலே வளரவேண்டுமென்ற அக்கரை உள்ளவன் நான். இங்கே அதிலே பங்கு கொள்ளக்கூடியவர்கள், முயற்சி எடுத்துக் கொள்ளக்கூடியவர்கள் குறைகள் இருந்தால் அவைகளை சொல்ல முடியுமானால் அது நன்றாக இருக்கும் என்ற முறையில் சொன்னேன். அதிலே பங்கு கொள்ளக்கூடியவர்களுக்கு குறைகளை எடுத்துச் சொல்ல முடியும். அப்படியில்லாமல் இதில் பங்கு கொள்ளாதவரிடத்தில் இதைப் போய் சொல்லுவதில் அவ்வளவு பலன் இருக்காது என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன். அதனால்தான் முக்கியமாக தி.மு.க. அங்கத்தினர்கள் இதைப்பற்றி தங்கள் கருத்துக்களை தெரிவிக்கவேண்டுமென்று நான் சொன்னேன். அதன்பேரிலே இதைப் பற்றி விவாதம் நடந்தது. கலைஞர்கள்தான், கலையைப்பற்றி சொல்லமுடியும், கலையைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள்தான் இதுபற்றி பேசமுடியும் என்கின்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு சமயத்திலே இதுமாதிரி கருத்து தெரிவிக்கப்பட்டது எனக்கு ஞாபகம் வருகிறது. ஒரு புத்தகம் சரியாக இல்லை என்று நான் கூறினேன். அதற்குப் பதில் சுப்பிரமணியம் எத்தனை புத்தகங்கள் எழுதியிருக்கிறார் என்று கேட்டதாக கேள்விப்பட்டேன். ஒரு ஓட்டலில் போய் சாப்பிடும்பொழுது ரசம் நன்றாக இல்லை, தண்ணீர் மாதிரி இருக்கிறதே என்று கேட்டால், நீங்கள் எத்தனை தடவைகள் ரசம் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்பதா? அது அழகல்ல. அதேமாதிரி புத்தகம் நன்றாக இல்லை என்றால், எத்தனை புத்தகங்கள் சுப்பிரமணியம் எழுதியிருக்கிறார் என்று கேட்பதா? அதேமாதிரி சுப்பிரமணியம் எத்தனை சினிமா கதைகள் எழுதியிருக்கிறார் என்று கேட்கப்படுகிறது. கதை எழுதுபவர்கள்தான் குறை சொல்லவேண்டுமென்று சொன்னால் அர்த்தம் இல்லாமல் போய்விடுகிறது. கலை கலைஞர்களுக்காக இல்லை. மற்றவர்களுக்காக, மற்றவர்கள் அனுபவிப்பதற்காக, மற்றும் அதன் மூலம் கலை பெறுவதற்காக கலைகள் இருக்கின்றன, கலைஞர்கள் இருக்கின்றார்கள். அதிலே இருக்கக்கூடிய குற்றங் குறைகளை சாதாரணமாக என்னைப் போன்றவர்கள் எடுத்துச் சொல்லமுடியும் என்பதுதான் என்னுடைய கருத்து. அந்த அடிப்படையிலே நான் சொன்னேனே தவிர, கலைஞன் என்ற அடிப்படையில் நான் சொல்லவில்லை. தி.மு.க. கட்சியினர் அவர்களால் சினிமா கலை உயர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். உயர்ந்திருப்பதே இவ்வளவு தூரத்தில் இருந்தால், இன்னும் உயராமல் இருந்தால் எப்படி இருக்குமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலையை உயர்த்துவதற்கு அவர்கள், அந்தக் கலையில் பங்கு எடுத்துக்கொள்ளுகிறவர்கள், முயற்சி செய்யவேண்டுமென்று நான் சொன்னதாக எடுத்துக்கொண்டாலும் நான் அதை வரவேற்கிறேன்.

அதே சமயத்தில் இன்னொன்று சொன்னார்கள் அடுக்கு மொழியைப் பற்றி. அடுக்கு மொழியினால்தான் தமிழ் வளர்கிறது, தமிழுக்கு ஒரு புதிய அழகு உண்டாகிறது என்றெல்லாம் சொன்னார்கள். முன்புகூட பல பேர்கள் அம்மாதிரி நினைத்தார்கள். முன் காலத்தில் ராஜாக்கள், ஜமீன்தார்கள், மிராசுதார்கள் கடுக்கன், ஜரிகை தலைப்பாகை, முத்து ஹாரங்கள் ஆகியவை போட்டுக்கொண்டால்தான் அழகு என்று நினைத்தார்கள். நல்ல வேளையாக அந்தமாதிரி எண்ணங்கள் இப்பொழுது விலகி சாதாரணமாக நமக்கு சௌகரியமாக இருக்கும் ஆடையை அணிந்து போவதுதான் நாகரீகம், பண்பு என்று இப்பொழுது நினைக்கிறார்கள். அதுதான் மனிதனுக்கு சௌகரியம்கூட என்ற கருத்து இப்பொழுது வந்துவிட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக மொழியில்மட்டும் அடுக்கு வார்த்தைகள் இருந்தால்தான் அது அழகு, அதற்கு அர்த்தம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறார்கள். செயற்கையாக



15th March 1958] [Sri C. Subramaniam]

யோசனை செய்து அடுக்கு வார்த்தைகளாக இருக்கவேண்டுமென்று பொறுக்கி அடுக்கு வார்த்தைகளை பேசினால் அது மொழிக்கு அழகு கொடுக்காது என்பதில் சந்தேகமில்லை. அர்த்தமில்லாத ஒன்றுக்கு அழகு இருக்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அடுக்கு மொழியிலே எதுகை மோனை இருக்கவேண்டுமென்பதற்காக அர்த்தமில்லாத வார்த்தைகளை சேர்க்கிறார்கள். வார்த்தைக்கு அர்த்தமில்லாமல் அபத்தமாக இருந்தாலும் கூட எதுகை மோனைக்காக அதை சேர்த்துவிடுகிறார்கள். இயற்கையாகவே ஒரு வண்மை இருந்து எதுகை மோனை அமைந்தால் அது அழகாக இருக்கும். துரதிருஷ்டமாக அம்மாதிரி கலைஞர்கள் 100 அல்லது 200 வருடங்களுக்கு ஒரு முறை தான் தோன்றுகிறார்கள். அப்படியில்லாமல் ஏதோ தங்களை கலைஞர்கள் என்று நினைத்துக்கொண்டு அடுக்கு மொழி பேசுவதற்காக செயற்கையாக அர்த்தமில்லாத வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போனால் அது மொழிக்கு அழகு கொடுக்காது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இம்மாதிரி அடுக்கு மொழியினால் தமிழ் நல்ல முறையிலே வளரமுடியாது. அர்த்தம் அழுத்தமாக இருக்கக்கூடிய வார்த்தைகளை, உறுதியாக இருக்கக்கூடிய வார்த்தைகளை உபயோகிப்பதுதான் மக்கள் எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய மொழியாக இருக்கும். அதைவிட்டு சாதாரணமாகப் பழகி பேசும் பொழுது அடுக்கு மொழி பேசினால் அது எப்படி இருக்கும்? அன்றாட வாழ்க்கையில் நாம் பேசும் மொழியாக இருக்கவேண்டும். நான் என் மனைவியிடம் போய் அடுக்கு மொழி பேசினால் அது அழகாக இருக்குமா? நான் என் குழந்தைகளுடன் அடுக்கு மொழி பேசினால் எப்படி இருக்கும்? என் நண்பர்களிடம் அடுக்கு மொழி பேசினால் எப்படி இருக்கும்?

**SRI K. ANBAZHAGAN** : பாயிண்டு ஆப் எக்ஸ்ப்ளனேஷன், ஸார்.

**MR. SPEAKER** : பாயிண்டு ஆப் எக்ஸ்ப்ளனேஷன் கடைசியில் சொல்லிக்கொள்ளலாம்.

**SRI A. GOVINDASAMY** : பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். அமைச்சர் அவர்கள் வரியைப்பற்றி பேசாமல், ஆரம்பத்தில் செய்த தவறையே செய்துகொண்டிருப்பதை . . .

**MR. SPEAKER** : அமைச்சர் ஆனாலும் தவறு செய்தால் சொல்ல வேண்டும். அமைச்சர் தவறை ஆரம்பித்தார். அங்கத்தினர் அதை ஆமோதித்தார். இப்பொழுது அமைச்சர் அதற்கு பதில் சொல்லவேண்டாமா? (சிரிப்பு.) அவரைத் தவிர யாரும் இம்மாதிரி பேசவேண்டாம் என்று சொன்னேன்.

**SRI K. ANBAZHAGAN** : பாயிண்ட் ஆப் ஆர்டர், அமைச்சர் அவர்களின் விளக்கம் அவையிலுள்ளவர்களுக்கு புரியவேண்டுமென்ற காரணத்தினால் குறுக்கிடுகிறேன். கலை அழகைப்பற்றி அவர்கள் தெரிவித்தார்கள். கலைத்துறையில் மொழி அழகு வேறு. மக்கள் வாழ்க்கையிலே அன்றாடும் பேசுகின்ற மொழி அழகு வேறு. அமைச்சர் அவர்கள் இரு துறைகளிலும் உள்ள மொழி வேறுபாடு, தன்மை என்ன என்பது தெரியாமல் பேசுகின்றார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**MR. SPEAKER** : பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு வேறு ஏதாவது கேட்பது சரியல்ல. "பாயிண்டு ஆப் இன்பர்மேஷன்" என்றால் குறுக்கே கேட்கக்கூடாது. கடைசியிலே கேட்கவேண்டும்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : அதுதான் என்னுடைய அபிப்பிராயமும் கனம் அங்கத்தினர் கேட்டது ரொம்பவும் வாஸ்தவம். நாடகத்தை எடுத்துக்கொண்டால் சாதாரண மொழியை உபயோகப்படுத்தி நாடகத்தை நடத்தவேண்டும். பாட்டிலேயேகூட நாடகம் நடத்தலாம். அது ஒரு விஷயம். வாழ்க்கையை பிரதிபலிக்கக்கூடிய

சித்தரிக்கக்கூடிய சமூக நாடகங்கள் இருக்கின்றன. நானும் தமிழ் நாடகம் பார்த்திருக்கிறேன். இங்கிலீஷ் நாடகம் பார்த்திருக்கிறேன். மொழி புரியாவிட்டாலும், மற்ற இடங்களுக்குப் போகும்போது நாடகங்களை பார்த்திருக்கிறேன். எல்லா நாடகங்களும் சாதாரணமாக தமிழ் மொழியில் தான் நடத்தப்படவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் நாடகம் முழுவதும் அடுக்கு மொழியில் தான் நடத்தப்படவேண்டும், அதனால் தான் தமிழ் வளரும் என்று சொல்வதில் அர்த்தமில்லை. கதாநாயகன் அடுக்கு மொழியிலே பேசினால், கதாநாயகி அடுக்கு மொழியில் பதில் சொல்லவேண்டும். சாதாரண பாத்திரங்கள் கூட அர்த்தமில்லாமல் அடுக்கு மொழியிலே தான் பேசவேண்டுமென்பது சரியல்ல. அது அபத்தமானது. அதை நாம் வேண்டுமென்றால் சகித்துக்கொள்ளலாம். ஆனால் வெளியிலிருந்து வரக்கூடியவர்கள் இதுதான் தமிழ் பண்பு, தமிழ்க்கலை, தமிழனுடைய வாழ்க்கை என்று தெரிந்துகொள்வார்களே யானால், நம்மைப்பற்றிப் மோசமாக நினைப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. அடுக்கு மொழியை ஓரளவுக்கு கவிதை புனைவதிலே உபயோகப்படுத்தலாம். சாதாரணமாக பேசக்கூடிய இடத்தில் கூட அடுக்கு மொழியில் பேசினால் இதுதான் தமிழ் என்று மக்கள் நினைத்துக் கொள்ளக்கூடும். ஒரு சமயம் ஆசைத்தம்பி, அன்பழகன் இவர்களைப் போன்றவர்களுக்கு தெரியலாம். ஆனால் மற்றவர்கள் அடுக்கு மொழி தான் நம்முடைய தமிழ் போலிருக்கிறது என்று நினைத்து விட்டால் அது எப்படி இருக்கும்? அந்த முறையில் போவதை தடுக்கவேண்டும். கிராப் வைத்துக்கொண்டால் நன்றாக சீவிக்கொண்டால் அழகாகத்தான் இருக்கும். ஆனால் அதற்கு மேல் ஜடைபில்லையை வைத்துக்கொள்வது அவசியமில்லை. (சிரிப்பு.) பாரதியார் கவி பாடியிருக்கிறார்கள். அது கோர்வையா இல்லையா? அ—வில் ஆரம்பித்தால் மற்ற வார்த்தைகளும் அகர வரிசையிலே இருக்கவேண்டுமென்று, "சிந்திரி" என்றால் "முந்திரி; என்று இருந்தாகவேண்டுமென்று அர்த்தமில்லாத முறையில் இம்மாதிரி அடுக்கு வார்த்தைகள் வந்து விடுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே நாம் எல்லாத் துறைகளிலும் நல்லமுறையில் முன்னேற்றமடையும் வகையில் எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும். அவ்வாறு நாம் கலைத் துறையில் காரியங்களைச் செய்யும்போது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கலைகள் முன்னேற்ற மடையவேண்டும். அவைகளை இப்போதுள்ள தரத்தை விட இன்னும் சிறந்த தரத்தை அடையச் செய்ய வேண்டும். அதற்கு முயற்சி செய்தால் அதைச் செய்யமுடியும். நீங்கள் (திராவிட முன்னேற்றக் கழகத்தினர்) "கலைத் துறையில் நாங்கள் பிரமாதமாக பணியாற்றியிருக்கிறோம்" என்று சொன்னபடி பிரமாதமாகவே சேவை செய்திருந்தாலும் இன்னும் சிறந்த முறையில் கலைகளை அபிவிருத்தியடையச் செய்வதற்கு முயற்சிக்கவேண்டும். கலைத் துறைகளில் இப்போது ஒரு கேடு தோன்றியிருக்கிறது. அதாவது, கலைத் திறன் இல்லாதவர்கள் தங்களைக் கலைஞர்களாகக் கருதிக்கொண்டு கலைத் துறையில் சேவை செய்ய முன்வந்து விடுகிறார்கள். கலைத் திறன் இயற்கையாக இருக்கவேண்டும். சிலரிடத்தில்தான் கலைத்திறன் இயற்கையாக இருக்கும். இயற்கையான கலைத் திறன் இல்லாவிட்டால் யாரும் கலைஞராகவோ நடிகராகவோ ஆக முடியாது. இன்று கலைஞர்களாக இல்லாத சிலர் தங்களைக் கலைஞர்களாக கருதிக்கொண்டு கலைத் துறையில் பணியாற்ற முன் வருகிறார்கள். நடிகர்களாக இல்லாதவர்கள் தங்களை நடிகர்களாகக் கருதிக்கொண்டு நடிக்க முன் வருகிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சட்டமியற்ற முடியாது. அவரவர்கள் தங்கள் தங்கள் சக்தியை உணர்ந்துகொண்டு தங்களுக்குரிய காரியங்களைச் செய்யவேண்டும். பரீட்சைகளை வைத்து கலைஞர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது. ஆகவே, யார் வேண்டுமானாலும் தன்னைக் கலைஞன் என்று சொல்லிக்கொள்ளலாம். கலைஞன் என்ற பட்டம் சர்வகலாசாலைப் பட்டம் அல்ல. அந்தப் பட்டத்தை இன்னார்தான் வைத்துக்கொள்ளலாம் என்றும் மற்றவர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும் தடை விதிக்க முடியாது. ஆனால், கலைஞர்களாக இல்லாதவர்கள் கலைஞர் பட்டத்தைப் போட்டுக்கொள்ளாமல் பாாத்துக்கொள்ளவேண்டுமானால், அதற்கு ஒரு வழி இருக்கிறது. அதாவது, அவ்வாறு தகுதியில்லாதவர்கள் தாங்களாகவே தங்களுக்கு கலைஞர் பட்டத்தைச் சூட்டிக்



கொண்டால், அதைப் பார்த்து நாம் சிரிக்கலாம் அவ்வாறு சிரிப்பதன்மூலம் தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியுமே தவிர, சட்டம் போட்டுத் தீர்க்க முடியாது.

சினிமாக் கலை நல்ல முறையில் வளர வேண்டும். நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக அது இருக்கவேண்டும். முன்னேற்றக் கருத்துக்கள் கொண்ட சினிமாக் கதைகள்தான் எழுதப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. உயர்ந்த கருத்துக்கள் புகுத்தப்பட்ட கதையாக இருந்தாலும், அந்தக் கதையில் அக் கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்காக சொல்லப்படும் விஷயங்களும், விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளும் ஆபாசமானவையாக இருந்தால் அது நல்ல கதை ஆகாது. இநத சந்தர்ப்பத்தில், ரேய்னால்ட்ஸின் நாவல்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ரேய்னால்ட்ஸின் நாவல்களை எத்தனை பேர்கள் படித்திருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. நான் அந்த நாவல்களைப் படித்திருக்கிறேன். அவருடைய நாவல்கள் நல்ல கருத்துக்களுடன்தான் முடியும். உயர்ந்த கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்கு அவர் கூறும் கதைகளெல்லாம் மிருக உணர்ச்சியைத் தூண்டக்கூடியவையாக இருக்கும். அப்படிப்பட்ட கதைகளாக அடுக்கிக்கொண்டே வந்து, கடைசியில், அந்தக் கதைகளில் குறிப்பிட்டுள்ள காரியங்கள் தவறானவை என்று அவர் சொல்வார். அந்தக் கதைகளைப் படிப்பவர்கள் தத்துவ ஞானிகளாக இருந்தால், அவர்கள், சிற்றின்ப விளையாட்டுகளெல்லாம் மனிதனைக் கடைசியில் சோகப்படு குழியில்தான் தள்ளும் என்ற உண்மையை உணருவார்கள் என்பது வாஸ்தவம். ஆனால் சாதாரண மனிதர்களும் வாலிபர்களும் அந்தக் கதைகளைப் படித்தால், கதைகளின் முடிவில் கூறப்பட்டுள்ள உயர்ந்த கருத்துக்களை அவர்கள் மறந்துவிடுவார்கள்; கதைகளில் விவரிக்கப்பட்ட ஆபாசக் காட்சிகள்தான் அவர்கள் மனதில் நிற்கும். ஆகவே நல்ல உண்மைகளை உணர்த்துவதற்காகக் கூட சினிமாவில் ஆபாசக் காட்சிகளைக் காட்டக்கூடாது. "பின்னர் உயர்ந்த கருத்துக்களை நாங்கள் வலியுறுத்துகிறோம்" என்று சொல்வது சரியல்ல. அப்படிப்பட்ட படங்களை அறிஞர்கள் பார்த்தால், அவர்கள் ஆபாசக் காட்சிகளை மறந்துவிட்டு பின்னர் வலியுறுத்தப்படும் உயர்ந்த கருத்துக்களை மனதில் பதியவைத்துக்கொள்வார்கள். ஆனால், சாதாரண வாலிபர்கள் அப்படிப்பட்ட படங்களைப் பார்த்தால், அவர்களுடைய மனதில் உயர்ந்த கருத்துக்கள் பதியாமல் ஆபாசக் காட்சிகள் தான் பதிகின்றன. இதன் காரணமாக வாலிபர்களின் மனது கெட்டுவிடுகிறது. ஆகவே கெட்ட உணர்ச்சிகளை தட்டியெழுப்பக்கூடிய நிகழ்ச்சிகளை சினிமாப் படங்களில் புகுத்தக்கூடாது. அவ்வாறு செய்வது வாலிபர்களுக்கும் குழந்தைகளுக்கும் கெடுதலாக முடியும்.

இந்த மசோதாவின் பேரில் பேசும்போது, சினிமா வரியைப் பற்றி மட்டும் பேசாமல் கலைகள் உயருவதற்கு எவ்வாறு பாடுபட வேண்டுமென்பதைப் பற்றியும் நாம் பேச முடிந்தது. அவ்வாறு பேசும்போது பலர் தங்கள் கருத்துக்களைத் தெளிவாக்கினார்கள். தங்கள் கருத்துக்களைத் தெளிவாக்க வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டதால் அவர்கள் அப்படிச் செய்தார்கள். அந்த உணர்ச்சியே அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. கலைகள் நல்ல முறையில் வளர வேண்டுமென்று தங்கள் கருத்தைத் தெளிவாக்கியவர்கள் எவ்வாறு கலைகளை இன்னும் சிறந்த முறையில் வளர்க்கலாம் என்பதுபற்றி யோசித்து, உரிய முறையில் கலைத் துறைகளில் சேவை செய்வார்கள் என்று நம்புகிறேன். நாம் மசோதாவிற்குப் புறம்பாகப் பேசிவிட்டாலும், நம்மிடையே கருத்துத் தெளிவு ஏற்பட்டது குறித்து நாம் சந்தோஷப்பட வேண்டும். கருத்து விளக்கத்தின் விளைவாக நம்மிடையே கருத்து மேம்பாடு ஏற்பட்டு, நம் நாட்டிலுள்ள கலைகளும் மேம்பாடடையும் என்று நம்புகிறேன்.

தமாஷா வரியைப் பொறுத்தவரையிலும், அடிக்கடி சினிமாவிற்குச் செல்லும் ஏழைத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டது. இந்த வரி உயர்வைக் கொண்டுவரப்போவதாக சர்க்கார்

[Sri C. Subramaniam] [15th March 1958

தெரிவித்ததும், சினிமாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். " நீங்கள் வரியை உயர்த்தி விட்டீர்கள், சினிமாவிற்கு வருபவர்களிடமிருந்து நாங்கள் எப்படி பணத்தை வசூலிப்பது? டிக்கெட் கட்டணத்தை உயர்த்தினால் சினிமாப் பார்க்க வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும் " என்று அவர்கள் சொன்னார்கள். " நாங்கள் அதிகமாக வரியை உயர்த்திவிடவில்லையே ! ஏராளமான மக்கள் இப்போது சினிமாப் பார்க்கிறார்களே ! நீங்கள் டிக்கெட் கட்டணத்தை உயர்த்தினால் உங்களுக்கு பணம் கிடைத்து விடாதா ? " என்று நான் அவர்களைக் கேட்டேன். " படத்தை ஒரு தடவை பார்ப்பவர்களிடமிருந்து எங்களுக்கு அதிக வரும்படி கிடையாது. ஏழு, எட்டு தடவை படம் பார்ப்பவர்களிடமிருந்துதான் எங்களுக்கு நிறைய வரும்படி கிடைக்கிறது. டிக்கெட் கட்டணத்தை உயர்த்தினால் அவர்கள் அதிகத் தடவைகள் படம் பார்க்க மாட்டார்கள். அதாவது, டிக்கெட் கட்டணம் உயர்த்தப்பட்டால், அதற்குப் பிறகு, ஒரு படத்தை 15 தடவை பார்ப்பவர்கள் 10 தடவையுடனும், 25 தடவை பார்ப்ப வர்கள் 20 தடவையுடனும் நிறுத்திக் கொண்டுவிடுவார்கள். அப்போது எங்களுக்கு வரும்படி குறையும் " என்று அவர்கள் சொன்னார்கள். " மக்கள் அதிகமாக சினிமாப் பார்க்காமல் இருந்தால் நல்லது தானே?" என்று நான் கூறினேன். " மக்கள் அதிகமாக சினிமாப் பார்க்காம லிருந்தால் நல்லது . என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், அதனால் எங்களுக்கு கிடைக்கும் வரும்படி குறையும் " என்று சொல்லிவிட்டு அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

சாதாரணமாக, ஒரு தொழிலாளி இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சினிமாவிற்கு செல்கிறான் என்று வைத்துக்கொண்டால், அவன் வாங்கும் டிக்கெட்டின் கட்டணம் அரையணா உயர்த்தப்பட்டால், அவன் மாதத்திற்கு ஒரு அணாதான் அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கும். ஆனால் ஒரு படத்திற்கு 10—15 தடவை போகிறவர்களின் மூலம் வரும் பணம் குறையக்கூடும். ஒரு வேளை, படம் காட்டுபவர்கள் 10—15 தடவை ஒரு படத்தைப் பார்ப்பவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பார்களோ என்னமோ, தெரியாது. ஆகவே வரி உயர்வின் விளைவாக அதிகத் தடவை சினிமா விற்கு போகிறவர்களிடமிருந்து சினிமாப்படம் காட்டுபவர்களுக்கு வரும் பணம் குறையக்கூடும். டிக்கெட்டுகளுக்கு எவ்வளவு கட்டணம் வசூலித் தால் நிறையப் பேர் சினிமாப் பார்க்க வருவார்கள் என்பது படம் காட்டு பவர்களுக்குத் தெரியும். ஆகவே சினிமாப் பார்ப்பவர்களின் எண் ணிக்கை குறையாமல் இருக்க வேண்டுமானால், எந்த அளவிற்கு கட்ட ணங்களை உயர்த்தலாம் என்று அவர்களுக்குத் தெரியும். எவ்வளவு அதிகமாக வசூலிக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக அவர்கள் கட்டணம் வசூலித்துவிடுவார்கள். ஏழைகளின் பேரில் கருணை இருப்ப தால் அவர்கள் அதிக கட்டணம் விதிப்பதில்லை என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை நினைத்துக்கொண்டிருக்கிறார். அது தவறு. அவர்கள் கடைசி டிக்கெட்டிற்கு 4 அணாக் கட்டணம் வைத்திருக்கிறார்கள் என்றால், ஏழைகள்பேரில் உள்ள கருணையினால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அதற்கு 4 அணாவிற்கு மேலே கட்டணம் வைத்திருந்தால் வரும்படி குறையும் என்பதால் அப்படி அவர்கள் செய்திருக்கிறார்கள். நான்கு அணாவிற்கு மேல் அந்த டிக்கெட்டிற்கு கட்டணம் விதித்தால் வரும்படி குறையாது என்று தெரிந்திருந்தால் அவர்கள் 4 அணாவிற்குமேல் விதித்திருப்பார்கள். டிக்கெட்டுகளுக்கு எவ்வளவு எவ்வளவு கட்டணம் வைத்தால் எவ்வளவு பணம் வசூலாகும் என்று கணக்கிட்டுத்தான் அவர்கள் டிக்கெட்டுகளுக்குக் கட்டணம் நிர்ணயிக்கிறார்கள். தொழிலாளர் களுக்கு நன்மை செய்வதற்காக அவர்கள் கடைசி டிக்கெட்டிற்கு 4 அணா கட்டணம் விதித்திருக்கிறார்கள் என்றும் அவர்களை கருணை வள்ளல்கள் என்றும் ஸ்ரீ சின்னதுரை நினைத்துக்கொண்டிருக்கிறார். அது தவறு. நான்கு அணா அந்த டிக்கெட்டிற்கு விதித்தால் தான் நிறையப்பேர் படம் பார்க்க வருகிறார்கள் என்பதால் அவ்வாறு விதித்திருக்கிறார்கள். ஆகவே தமாஷா வரியை உயர்த்தினால், அவர்கள் சினிமா டிக்கெட்டுகளின் கட்டணங்களை ஒரேயடியாக உயர்த்திவிடுவார்கள் என்று நினைக்கவேண்



15th March 1958] [Sri C. Subramaniam]

டாம். எந்த அளவிற்கு மேல் கட்டணங்களை உயர்த்தக்கூடாது என்பதை அவர்களே உணருவார்கள். எனவே கட்டணங்கள் அநியாயமாக உயர்த்த படுவதைத் தடுப்பதற்கு சட்டம் போட வேண்டாம். எந்தக் கட்டணங்களை உயர்த்த வேண்டும், எந்தக் கட்டணங்களை உயர்த்தக்கூடாது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே ஏழை மக்கள் பாதிக்கப்படும் வகையில் கட்டணங்கள் உயர்த்தப்படாது. ஆகவே ஏழை மக்கள் அதிக மாக தமாஷா வரி கொடுக்க வேண்டியிருக்காது. ஒரு தடவைக்கு மேல் ஒரு படத்தைப் பார்ப்பவர்களிடமிருந்து அதிக வரி வசூலித்தால் கூட நல்லது. ஆனால், அதைச் செய்வது சாத்தியமல்ல.

அடுத்தப்படியாக, ஏன் குதிரைப் பந்தயங்களை எடுத்துவிடக்கூடாது என்று கேட்கப்பட்டது. இப்போது, சென்னையில் குதிரைப் பந்தயம் நடந்தால் சென்னையிலுள்ளவர்கள் மட்டும் பந்தயத்திற்குச் செல்வதில்லை. வெளியூர்களிலிருந்துதான் நிறையப் பேர் வருகிறார்கள். ஆகவே, ஒரு ஊரில் குதிரைப் பந்தயம் நடந்தால் வெளி ஊர்களிலுள்ளவர்களும் அதைப் பார்க்க வருகிறார்கள். இதற்குக் காரணம் என்ன ? மக்களிடையே சூதாட்ட மனப்பான்மை அதிகமாக இருக்கிறது. குதிரைப் பந்தயத்தை எடுத்து விட்டால், வேறு ஏதாவது பந்தயத்தை யாராவது நடத்து வார்கள். ஒரு இடத்தில் நத்தைப் பந்தயம் வைத்தார்கள். " நியூயார்க் காட்டன் பெட்டிங் " இருக்கவில்லையா ? பந்தயங்களுக்கெல்லாம் காரணம் மக்களிடையே சூதாட்ட மனப்பான்மை இருப்பது தான். இந்தப் பந்தயங்கள் ஆங்காங்கே இருக்கும் எல்லா சாதாரண மக்களையும் பாதிக்கின்றன.

